47

# தென்னிந்திய வரலாறு

(வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல்
விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிவரை)

(முதல் பகுதி)

913
திருச்சி Dt.
P. O.
913 TR. H. 11

ரி, எம்.ஏ.

மு. ரா. பெருமாள் முதலியார், எம்.ஏ., எல்.டி.,
முன்னாள் முதல்வர்,
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.
ஓய்வுபெற்ற இயக்குநர்,
தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—471

# தென்னிந்திய வரலாறு

(வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல்
விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிவரை)

(முதல் பகுதி

த
யில்,
பாடங்களை

ஆசிரியர்

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, எம்.
த் தேவையான
கழகம் ஆண்டு
பிட்டுச் சொல்ல

தமிழாக்கம்

மு. ரா. பெருமாள் முதலியார், எம்.ஏ., எத்தனையோ
முறையில்

முன்னாள் முதல்வர்,
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.

ஒய்வுபெற்ற இயக்குநர்,
தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1973

T.N.T.B.S. (C.P.) No. 471

© Tamil Nadu Text Book Society

# A HISTORY OF SOUTH INDIA (Part I)

*(From Prehistoric Times to the Fall of Vijayanagar)*

K. A. NILAKANTA SASTRI

by

MAL MUDALIAR

00

...anslation of 'A History of South India' is published by arrangement with Oxford University Press, Bombay.

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by—

Nanbargal Achagam,

Madras-18.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும், அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'தென்னிந்திய வரலாறு' (முதல் பகுதி) என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **471**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க்குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **506** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

## காணிக்கை

கவின்கலைகள், இலக்கியம் ஆகியவற்றின் புரவலரும்
மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் இந்திய இயல் துறையை
நிறுவியவரும் ஆகிய
மேதக்க மைசூர் மஹாராஜா

ஸ்ரீ ஜெயச்சாமராஜ வாடியார் பஹதூர்
G.C.B., G.C.S.I.

அவர்களுக்கு
அவர்களுடைய அன்பான இசைவுபெற்று
இந்த நூல்
காணிக்கை ஆக்கப்படுகிறது.

# மூன்றாம் பதிப்பின் முன்னுரை

இரண்டாம் பதிப்பிற்கும் இந்தப் பதிப்பிற்கும் இரண்டு முக்கியமான வேறுபாடுகள் இருக்கின்றன. ஒன்று, பழங்குடி மக்களும் அவர்களுடைய பண்பாடுகளும் என்னும் தலைப்புடைய மூன்றாம் அதிகாரம் மீண்டும் கவனமாகத் திருப்பிப் பார்க்கப்பட்டுத் திருத்தி எழுதப்பட்டுள்ளது. 1958ஆம் ஆண்டி லிருந்து, அதாவது சென்ற எட்டாண்டுக் காலத்தில், தென்னிந்தி யாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் செய்திகளை ஆராயும் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றந்தான் இதற்குக் காரணமாய் இருந்தது. இந்த அதிகாரத்தைத் திருத்தி எழுதும் பணியில் லோத்தால் என்னும் இடத்தில் அகழ்வாராய்ச்சிகளை நடத்திய வரும் இப்போது சென்னையில் தொல்பொருள் துறையின் கண் காணிப்பாளராய் இருப்பவரும் ஆகிய திரு. S. R. ராவ் அவர் களும், என்னுடைய நண்பரும் என்னுடன் முன்னர்ப் பணியாற்றியவரும் இப்போது மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவரும் ஆகிய டாக்டர் M. சேஷாத்திரி அவர்களும் மிகப் பெரிதும் உதவினார்கள். இரண்டு, ஒன்பதாம் நூற்றாண்டையும் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியையும் சேர்ந்த பல்லவ பாண்டியர் வரலாறு அவர்கள் ஆட்சி செய்த காலம் ஆகியவற்றைப்பற்றிய செய்திகள் கணிசமான அளவு திருத்தி எழுதப்பட்டுள்ளன. இந்தப் பணியில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் துறைப் பேராசிரியர் டாக்டர் T. V. மகாலிங்கம் அவர்கள் எனக்குப் பெருந்துணை புரிந்தார்கள். இந்தப் பொருள் பற்றி அவர்கள் 1962ஆம் ஆண்டில் ஆற்றிய மெயர் சொற்பொழிவுகளின் கையெழுத்துப் பிரதியை மனமுவந்து என்னிடம் கொடுத்து அதனைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்வதற்கு இசைவு

தந்தார்கள். வீர நாராயணனுடைய தளவாயக்ரஹாரச் செப் பேடுகளின் எழுத்துப் படி ஒன்றனை இந்திய அரசின் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் டாக்டர் G. S. கை அவர்கள் எனக்குக் கொடுத்து உதவினார்கள். அண்மைக் காலம் வரையில் தென்னிந்தியக் கோயில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருந்தவரும் இப்போது புது டில்லியில் தொல்பொருள் துறைத் துணை இயக்குநராய் பணியாற்றுபவரும் ஆகிய திரு. K. R. சீனிவாசன் கவின்கலைகளும் கட்டடக் கலையும் என்னும் அதிகாரத்தைத் திருத்தி எழுதுவதற்குச் சிறந்த யோசனைகள் பலவற்றைக் கூறியதோடு பல்லவர்களுடைய குடைவரைக் கோயில்கள் என்னும் பொருள் பற்றித் தாம் எழுதியுள்ள நூலின் அச்சுப் படியையும் தந்து உதவினார். மேலே குறிப்பிட்ட நண்பர்கள் அனைவர்க்கும் நான் நன்றி உடையவனாய் இருக்கிறேன். நூல் முழுவதுமே தேவையான இடங்களில் சிறுசிறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை,
1966

K.A.N.

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

கற்றறிந்தவர்களுடைய கருத்து வெளியீட்டுக் கருவிகளாய் இருக்கின்ற பருவ இதழ்கள், பொதுவாக, இந்த நூலின் முதற் பதிப்பைப் பாராட்டி வரவேற்றுள்ளன. அறிஞர்கள் தங்களுடைய மதிப்பாய்வுரைகளில் கூறியுள்ள யோசனைகளின் அடிப்படையில் நூலை நான் மீண்டும் பார்த்து, திருத்தங்கள் செய்து, இந்த இரண்டாம் பதிப்பை உருவாக்கியுள்ளேன். தென்னிந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய புதுச் செய்திகள் பல அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன. முக்கியமாக, இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் செய்த அகழ்வுகளின் பயனாக இந்தப் புதிய செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. எனவே, பழங்குடி மக்களையும் அவர்களுடைய பண்பாடுகளையும் பற்றிக் கூறுகின்ற மூன்றும் அதிகாரத்தின் பகுதிகள் பல இந்தப் பதிப்பில் திருத்தி எழுதப் பட்டுள்ளன; முதல் பதிப்பைவிட இந்தப் பதிப்பில் கேரள வரலாறும் பண்பாடும் அதிகமான கவனம் பெற்றுள்ளன. முதற் பதிப்பில் இடம் பெற்ற விளக்கப் படங்கள் சில நீக்கப்பட்டு, புது விளக்கப் படங்கள் சில இந்தப் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. மூன்றும் அதிகாரத்தைத் திருத்தி எழுதும் பணியில் மைசூர்ப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் M. சேஷாத்திரியும், இந்தியத் தொல்பொருள் துறையைச் சேர்ந்த டாக்டர் N. R. பானர்ஜியும் பெரிதும் உதவினார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரள வரலாற்றையும் பண்பாட்டையும் பற்றிய செய்திகளைத் திருத்தி எழுதும் பணியில் திரு. ஹரிஹர சாஸ்திரியும், சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. K. K. பிள்ளையும் பெருந்துணை புரிந்தார்கள். கன்னட இலக்கியம் பற்றிய பகுதியைத் திருத்தி எழுதுவதற்குப் பேராசிரியர் திரு. மாரியப்ப பட் உதவி செய்தார்.

இத்தகைய நூல்களை எழுதும்போது நாம் கையாளுகின்ற எழுத்துப் பெயர்ப்பு முறைகளும் ஒலி வேறுபாடுகளைக் காட்டுவதற்காக நாம் பயன்படுத்துகின்ற குறியீடுகளும் நமக்குத்

தொல்லே தருவது இயல்புதான். இந்த நூல் (வரலாற்று மாணவர்களுக்கு மட்டுமன்றி) பொது மக்களுக்கும் பெரிதும் பயன்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு எழுதப்பட்டுள்ளது. அடையாளக் குறியீடுகள் அவர்களுக்குக் குழப்பத்தையும் தடுமாற்றத்தையும் உண்டுபண்ணக்கூடும். மேலும், அவர்கள் படித்தும் கேட்டும் பழக்கப்பட்டுள்ள ஊர்கள், மக்கள், ஆறுகள் முதலியவற்றின் பெயர்களே அப்படியே எழுதுவது நல்லது. எனவே, அடையாளக் குறிகளே இயன்றவரையில் குறைத்தும், எழுத்துப் பெயர்ப்புக்கென்று வகுக்கப்பட்டுள்ள விதிகளேக் கடுமையாய்ப் பின்பற்ருமலும் நான் சில சலுகைகளே எடுத்துக் கொண்டு எழுதியிருக்கிறேன். அதனுல், ச என்னும் எழுத்துக் குறிக்கின்ற ஒலியைக் காட்டுவதற்கு ஆங்கிலத்தில் *c* என்னும் எழுத்தை மட்டுமன்றி *ch* என்னும் எழுத்துகளேயும் இடத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்தியிருக்கிறேன். அதுபோலவே, ஷ என்னும் எழுத்துக் குறிக்கின்ற ஒலியைக் காட்டுவதற்கு *s* என்றும் *sh* என்றும் இருவகையாயும் எழுதியிருக்கிறேன்.

இந்தப் பதிப்பு அச்சில் இருக்கும்போது டாக்டர் T. V. மஹாலிங்கம் பயனுள்ள ஆலோசனைகள் பலவற்றைக் கூறி எனக்கு உதவி செய்தார். பொருட்குறிப்பு அகராதியைத் திரு. S. கிருஷ்ணமூர்த்தி உருவாக்கினர். அவ்விருவருக்கும் நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னே,
1958

K.A.N.

# முதற் பதிப்பின் முன்னுரை

இந்த நூலின் நோக்கம், இதில் இடம்பெறுகின்றசெய்திகள், அவற்றை எழுதுவதற்கு நான் வகுத்துக்கொண்ட திட்டம் ஆகியவை யெல்லாம் நூலின் முதல் அதிகாரத்திலுள்ள முகவுரைப் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நூலை எழுதுவதற்கு மற்றவர்கள் எனக்குச் செய்த உதவியைக் குறிப்பிடுவதற்காகத்தான் நான் இந்த முன்னுரையை எழுது கிறேன். இந்த நூலில் இடம்பெற வேண்டிய அதிகாரங்கள், அந்த அதிகாரங்களின் பலவேறு பகுதிகளிலும் விளக்கப்பட வேண்டிய செய்திகள் ஆகியவற்றைப் பற்றிய திட்டத்தை வகுக்கத் தொடங்கியபோதுதான் இந்தப் பணியை ஆற்றுவதற்கு எனக்கிருந்த தகுதிக் குறைவையும் மற்றவர்களிடமிருந்து நான் பெறவேண்டிய ஒத்துழைப்பின் மிகுதியையும் உணர்ந்தேன். ஆனால், எனக்குத் தேவையான இந்தப் பேருதவியைத் தாராளமாய் வழங்குவதற்குப் பலர் முன்வந்தனர். அவர்களுள் பல்கலைக் கழகத்தில் என்னுடைய துறையோடு தொடர்புடைய துறைகளில் பணியாற்றும் தோழர்களை முக்கியமாய்க் குறிப்பிட வேண்டும். அதனால்தான் மேற்கொண்ட பணியை இடர்ப் பாடுகள் பலவற்றுக்கு இடையிலும் தொடர்ந்து செய்வதற்கும் ஓராண்டுக்குச் சிறிதே அதிகமான காலத்தில் முடிப்பதற்கும் என்னால் இயன்றது.

தென்னிந்தியாவின் வரலாற்றோடு தொடர்புடைய நில இயல் செய்திகளை இந்த நூலின் இரண்டாம் அதிகாரத்தில் காணலாம். அவற்றை எழுதுவதற்கு நிலநூல் துறையைச் சேர்ந்த திரு. K. V. கல்யாண சுந்தரம் பேருதவி செய்தார். நில இயல் செய்திகளை வரலாற்றுச் செய்திகளோடு தொடர்பு படுத்தும் பணியில் ஆராய்ச்சி மாணவர் திரு. R. திருமலை அவருக்குத் துணை புரிந்தார். மேலும், இந்த நூலில் இடம்பெறு கின்ற நாட்டுப் படங்களையும் அவ்விருவரும் வரைந்து தந்தனர். அதுபோலவே, மூன்றும் அதிகாரத்திலுள்ள வரலாற்றுக்கு

முற்பட்ட காலச் செய்திகளை எழுதுவதற்கு மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் திரு. T. பாலகிருஷ்ண நாயர் பெரிதும் உதவினார். நான்கு முதல் பதின்மூன்று வரையிலும் உள்ள அதிகாரங்களில் தென்னிந்திய அரசியல் வரலாற்றின் அடிப்படைச் செய்திகளும் சமுதாய, பொருளாதார நிலைமைகளைப் பற்றிய செய்திகளும் எழுதப்பட்டுள்ளன. பதினைந்தாம் அதிகாரத்தில் சமயம் மெய்யுணர்வு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. இந்தச் செய்திகளுக்கு இதுவரையில் வெளிவந்துள்ள நூல்கள் முதன்மையான ஆதாரங்களாய் இருக்கின்றன. அந்த நூல் களின் பெயர்களை ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதியிலும் தரப் பட்டுள்ள பார்வைநூற் பட்டியலில் காணலாம். ஆனால், இன்னும் நூல்வடிவம் பெறாமலும் வெளியிடப்படாமலும் இருக் கின்ற செய்திகளும் அந்த அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தச் செய்திகள் நானும் என்னுடைய மாணவர்களும் சென்ற பதினேழாண்டுகளுக்கு மேலாகப் பல்கலைக் கழகத்தில் செய்து வந்த ஆராய்ச்சிகளின் பயனாய்த் திரட்டப்பட்டவை. அதனால் இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த கருத்துகளுக்கு மாறான சில கருத்துகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. இலக்கியம் பற்றிக் கூறுகின்ற பதினான்காம் அதிகாரத்தில் பல மொழிகளையும் அவற்றின் பல துறைகளையும் பற்றிய செய்திகள் எழுதப்பட்டுள்ளன. அதனால் அவற்றை எழுதுவதற்கு நான் பெற்ற உதவியின் அளவும் மிகப் பெரியதாய் இருக்கின்றது. வடமொழித் துறையைச் சேர்ந்த டாக்டர் V. ராகவன் அவர் களும் காலஞ்சென்ற டாக்டர் T. R. சிந்தாமணி அவர்களும் வட மொழி இலக்கியம் பற்றி எழுதுவதற்கும், திரு. M. மாரியப்ப பட் கன்னட இலக்கியம் பற்றி எழுதுவதற்கும், டாக்டர் N. வேங்கட ரமணையாவும் ஆராய்ச்சி மாணவர் S. காமேஸ்வர ராவும் தெலுங்கு இலக்கியம் பற்றி எழுதுவதற்கும், ஆராய்ச்சியாளர் திரு. K. கனகசபைப் பிள்ளையும் மலையாள மொழித் துறையைச் சேர்ந்த திரு. P. கிருஷ்ண நாயரும் மலையாள இலக்கியம் பற்றி எழுதுவதற்கும், திரு. S. வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியம் பற்றி எழுதுவதற்கும் துணைபுரிந்தார்கள். தென்னிந்தியக் கட்டடக் கலையின் வரலாற்றுச் சுருக்கத்தை எழுதும் பணி அந்தப் பொருள்பற்றிப் பெர்சி பிரவுன் எழுதியுள்ள நூலின் துணையால் மிகவும் எளிதாய்விட்டது. அது ஒரு சிறப்பு மிக்க பெரிய நூல். அதற்கு முன்னர் அந்தப் பொருள்பற்றி எழுதப் பட்டிருந்த நூல்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அது மிகவும் உயர்ந்த நூலாய் இருக்கிறது.

அறிஞர் பலர் மனமுவந்து அளித்த ஒத்துழைப்பை நான் பயன்படுத்திக் கொண்டேன் என்ருலும், இந்த நூலில் நான் வெளியிட்டுள்ள கருத்துகளுக்கு அவர்கள் எவ்வகையிலும் பொறுப்பாளிகள் ஆகமாட்டார்கள் என்பதை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

விளக்கப் படங்களைத் தந்து உதவியவர்கள் யார் யார் என்பதை அந்தப் படங்களின் பட்டியலில் காணலாம். அவற்றை இந்த நூலில் சேர்த்துக் கொள்வதற்கு இசைவு தந்தமைக்காக அவர்களுக்கு நான் நன்றியுடையவனும் இருக்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம்,<br>10—8—1947

K. A. N.

# பொருளடக்கம்


பக்கம்

1. ஆதாரங்களை ஆராய்தல் ... 1
2. நிலத்தின் இயல்புக்கும் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு ... 55
3. பழங்குடி மக்களும் அவர்கள் வாழ்க்கை முறைகளும் 77
4. வரலாற்றின் தொடக்கம்: தென்னிந்தியா ஆரிய மயமாதல் ... 110
5. மௌரியப் பேரரசின் காலம் ... 132
6. சாதவாகனர்களும் அவர்களுக்குப் பின் வந்த அரசர்களும் ... 147
7. சங்க காலமும் அதற்குப் பிறகும் ... 183
8. மூப் பேரரசுகளின் மோதல் ... 230
9. எஞ்சி நின்ற இரு பேரரசுகள் ... 270
10. நான்கு ராஜ்யங்கள் ... 330
11. பாமினியரசும் விஜயநகரத்தின் தோற்றமும் ... 353
12. விஜயநகரப் பேரரசு ... 413

கலைச்சொற்கள் ... 492

பொருட்குறிப்பு அகராதி ... 506

# நாட்டுப் படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தென்னிந்தியா (இயற்கை அமைப்பு) | ... 55 |
| 2. | தென்னிந்தியா : கி.மு. 300 முதல் கி.பி. 500 வரை | ... 139 |
| 3. | தென்னிந்தியா : கி.பி. 500 முதல் கி.பி. 850 வரை | ... 232 |
| 4. | தென்னிந்தியா : கி.பி. 850 முதல் கி.பி. 1200 வரை | ... 317 |
| 5. | பரந்த இந்தியா | ... 318 |
| 6. | தென்னிந்தியா : கி.பி. 1200 முதல் கி.பி. 1325 வரை | ... 332 |
| 7. | தென்னிந்தியா : விஜயநகரப் பேரரசின் காலத்தில் | ... 415 |

# தென்னிந்திய வரலாறு

(முதல் பகுதி)

# 1. ஆதாரங்களை ஆராய்தல்

**1. நோக்கெல்லை : தென்னிந்திய வரலாறு புறக்கணிக்கப் பட்டமை—தென்னிந்திய வரலாற்றின் கவர்ச்சியும் பொதுப் போக்கும்—விளக்க வேண்டிய முற்கோளும் பெறவேண்டிய படிப்பினையும் இன்மை—வட இந்திய வரலாற்றிலிருந்தே தென்னிந்திய வரலாற்றை அணுகவேண்டிய நிலை—அரசியல் வரலாறும் பண்பாட்டு வரலாறும்—அவற்றுக்குள்ள தொடர்பு.**

**2. ஆதாரங்கள் : பொறிப்புகள் : கல்வெட்டுகளும் செப்பேடு களும்—நாணயங்கள்—உள்நாட்டு வெளிநாட்டு நூல்கள்.**

முன்னுரை—தென்னிந்திய வரலாற்றுச் சுருக்கம்

பண்டைக் காலத்திலிருந்து கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் தென்னிந்தியாவின் பொது வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவதே இந்த நூலின் நோக்கமாகும். 17ஆம் நூற்றாண்டின் இடையில் விஜயநகரப் பேரரசு அழிந்தது. அழிந்த அந்தப் பேரரசின் ஆட்சியில் இருந்த நாடுகளை, பீஜப்பூர் சுல்தானும் கோல்கொண்டா சுல்தானும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள். இந்தியத் தீபகற்பக் கடற்கரையில் பல இடங் களில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வாணிக நிலையங்களை நிறுவியது. மேற்கூறிய காரணங்களால் தென்னிந்திய வரலாற்றில் ஒரு புதிய காலம் தொடங்கியது.

விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதி அனைத்தையும் சேர்த்துக் குறிப்பதற்கு நாம் தென்னிந்தியா என்னும் பொதுப் பெயரையே பயன்படுத்துகிறோம். இப் பகுதி பொதுவாகத் தக்காணம் என்று வழங்கப்படுகிறது. கடந்த அறுபதாண்டுக் காலத்தில் தொல்பொருள் துறை, இலக்கியத் துறை ஆகிய வற்றிலிருந்து நமக்குப் பல புதிய ஆதாரங்கள் கிடைத்திருப் பதால், தென்னிந்திய வரலாற்றின் அறிவு பெரிதும் வளர்ந்திருக் கிறது. இந்தப் புதிய செய்திகளில் பெரும்பாலானவை இந்தியத்

தொல்பொருளாராய்ச்சித் துறையினர் அவ்வப்பொழுது வெளியிட்ட அறிக்கைகளிலும், ஐதராபாத், மைசூர், திருவிதாங்கூர் போன்ற முக்கிய 'இந்திய அரசுகளின்' தொல்பொருள் ஆராய்ச்சி அறிக்கைகளிலும் புதைந்து கிடக்கின்றன. அவை எளிதாக நமக்குக் கிடைப்பதில்லை. அந்தச் செய்திகளை ஆராய்ந்து அவற்றிற் காணும் உண்மைகளை எடுத்துரைப்பதற்கு வரலாற்றறிஞர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எண்ணிக்கை குறைவாயிருப்பது மட்டுமன்றி, அவர்கள் எழுதியுள்ள நூல்களும், குறிப்பிட்ட சில அரச வமிசங்களையும், நிலப்பகுதிகளையும், பொருள்களையும் பற்றியவையாகவே இருக்கின்றன. அவைகள் சிறந்த நூல்களே ஆயினும், அவைகள் தென்னிந்தியாவின் பொது அரசியல் பண்பாட்டு வரலாற்றினை விளக்குவதற்காக எழுதப்பெற்றவை அல்ல. அதனால், அவற்றுள் எதனையும் தென்னிந்திய வரலாற்று நூல் என்று சொல்ல இயலாது. 1895–ல் ஆர். ஜி. பந்தார்க்கர் எழுதிய 'முன்னைய தக்காண வரலாறு' என்னும் நூல் மட்டும் தென்னிந்தியப் பொது வரலாறு என்று சொல்வதற்கேற்ற பல தன்மைகளைக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தச் சிறந்த நூலும் காலத்தால் பழையதாகிவிட்டது. மேலும், அது தமிழகத்தைப்பற்றிக் கூறவில்லை. டாக்டர் எஸ். கே. ஐயங்கார் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியிருக்கிறார். ஆனால், அவற்றைத் தென்னிந்தியாவின் பொது வரலாற்று நூல்கள் என்று சொல்ல இயலாது. 1929-ல் பி. டி. சீநிவாச ஐயங்கார் எழுதிய 'தமிழர் வரலாறு' என்னும் நூல் தமிழகத்தைப்பற்றியே கூறுவதாயுள்ளது. தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளின் வரலாறு அதில் இடம் பெறவில்லை.

இந்தியப் பொது வரலாற்று நூல்களில் தென்னிந்திய வரலாறு மிகச் சிறிய அளவே கூறப்பட்டிருக்கிறது. 'இது வரையில் பண்டை இந்தியாவின் வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் தென்னிந்தியா என்னும் ஒரு பகுதி இருப்பதாகவே நினைக்கவில்லை போலும்' என்று வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார். இந்த நிலைக்குக் காரணங்கள் யாவை என்பதையும் விளக்குகையில் அவர், 'வரலாற்று நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, இயல்பாகவே வரலாற்றாசிரியர் கவனம் முதலில் வட இந்தியாவின்மீது செல்கிறது; அதன் பின்புதான் அது தக்காணப் பீடபூமிக்கும் அதற்கும் தெற்கிலுள்ள பகுதிக்கும் செல்கிறது' என்று எழுதுகிறார். மேலும், அவர், 'தென்னிந்திய வரலாற்றுக்குக் கிடைக்கும் சான்றுகள் மிகக் குறைபாடுடையவை. வட இந்திய வரலாற்றுச் சான்றுகள், அந்த அளவிற்குக் குறைபாடுடையவை

அல்ல. தென்னிந்திய அரசுகளைப்பற்றிக் கி.பி. 6ஆம் நூற்றுண்டு வரையில் நமக்குக் கிடைத்துள்ள சான்றுகள் மிகமிகச் சில. ஆனுல், கி.மு. 6ஆம் நூற்றுண்டிலிருந்தே வட இந்தியாவின் வரலாற்றை நாம் அறிய முடிகிறது. பழைய சான்றுகள் உண்மையிலேயே பழமையானவையாக இருக்க வேண்டும். அத்தகைய சான்றுகள் மிகமிகக் குறைவாக இருப்பதால், தென்னிந்திய வரலாற்றை எழுத இயலவில்லை. அதனுல், இந்திய வரலாற்றில் காணும் அந்த மிகப் பெரிய வெற்றிடத்தை நிரப்ப இயலாது' என்று கூறுகிருர். தென்னிந்தியாவின் பண்டை வரலாற்றைப்பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் செய்திகள் மிகக் குறைவாக இருந்தாலும், நிலைமை வின்சென்ட் ஸ்மித் நினைப்பது போல அவ்வளவு மோசமாக இல்லை. நாம் போகப்போக இவ்வுண்மையை உணரலாம்.

எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், தென்னிந்திய வரலாறு, இந்திய வரலாற்றின் ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது. மேலும், அது எந்த வகையிலும் கவர்ச்சியற்ற பகுதி என்று கூற இயலாது. உலகில் மக்கள் வாழத் தொடங்கிய மிகப் பழைய பகுதிகளுள் தக்காணமும் ஒன்று. அங்கு வாழ்ந்த மக்களைப்பற்றிய வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மைச் செய்திகளும், அந்த நிலப் பகுதிக்கும் அண்டை நிலப் பகுதிகளுக்கும் நமக்குத் தெரிந்த அளவில் நிகழ்ந்த தொடர்புகளும் உலக நாகரிக வரலாற்றில் முக்கியப் பகுதிகளாக விளங்குகின்றன. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலுமே ஆரியர் வாழ்க்கை முறைகளும், அவர்களுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளும் கலந்தபோதுதான் இந்தியப் பண்பாடு உருவாகத் தொடங்கியது. அந்தக் கலப்போ, பல்வேறு பகுதிகளில் பல்வேறு நிலைமைகளிலும் பல்வேறு விகிதங்களிலும் நிகழ்ந்தது. தென்னிந்தியாவின் மொழிகளிலும், இலக்கியங்களிலும், அமைப்புகளிலும் ஆரியர்க்கு முற்பட்ட இந்தியாவின் இயல்புகளை வேறெங்கும் காண இயலாத அளவில் நாம் காண்கிறோம். மேற்குத் தக்காணத்தில் வாழும் மராட்டியர்களே இந்தோ-ஆரிய மொழி பேசுகின்ற மக்கள் அனைவரினும் மிகவும் தெற்கே வசிப்பவர்கள். அந்தப் பகுதிக்குத் தெற்கிலும் கிழக்கிலும் வசிக்கின்ற மக்கள் எல்லாருமே திராவிட மொழிகளைப் பேசுபவர்கள். அந்தத் திராவிட மொழிகள் அனைத்திலும் தமிழ் மொழி ஒன்றே மிகப் பழைய இலக்கிய மரபை யுடையது. அந்த இலக்கிய மரபின் மிகத் தொன்மையான பகுதிகளோ, மிகக் குறைத்துக் கணக்கிட்டாலும், கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்றுண்டுகளைச் சேர்ந்தவை என்று உறுதியாகக் கூறலாம்.

அப் பண்டைய தமிழ் இலக்கியத்தின் அடிப்படையில் நாம் காண்கின்ற சமுதாய அமைப்பும் அரசியல் கூறுகளும், நம் உள்ளத்தைக் கவர்பவையாக இருப்பது மட்டுமன்றி, ஆரியர்கள் வாழ்க்கை முறைகளும், அவர்களுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைகளும் எவ்வாறு முதலில் கலந்தன என்னும் கேள்விக்கு ஓரளவு விடை காண்பதற்கும் உதவுகின்றன. ஆரியர்கள் முதலில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குடியேறி அவற்றை ஆரிய மயமாக்கினர்கள். பின்னர் அவர்கள் வங்காள விரிகுடாவுக்கு அப்பாலுள்ள கீழை நாடுகளிலும் குடியேறினர்கள். அதன் விளைவாக அங்கும் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்றுண்டுகளில் இந்து அரசுகள் தோன்றின. இந்த இயக்கம் முதலில் இந்தியாவின் தென் பகுதியில் தொடங்கியது. அதனுடைய தொடர்ச்சியையும் விரிவையுந்தான் நாம் கீழை நாடுகளில் காண்கிறோம். விந்திய மலைக்குத் தெற்கில் குடியேறியபோது ஆரியர்கள் எத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியிருந்ததோ அத்தகைய பிரச்சினைகளைத்தான் அவர்கள் பின்பு குடியேறிய இந்தோனேசியாவிலும் இந்தோ சீனுவிலுங் கண்டார்கள். தென்னிந்தியாவில் அவர்கள் குடியேறிபோது அந்தப் பிரச்சினைகளுக்கு எந்த முறையில் தீர்வு கண்டார்களோ, ஏறக்குறைய அதே முறையில் கீழை நாடுகளில் கண்ட பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டார்கள். இவ்வாறு பல்வேறுநாடுகளில் முதலில் நிகழ்ந்த பண்பாட்டுத் தொடர்புகளின்விளைவுகளில் காணும் ஒற்றுமைகளை யாரும் இதுவரையில் போதுமான அளவில் ஆராயவில்லை. அந்த ஆராய்ச்சிக்கு இந்த நூலில் இடமில்லை. ஆனல், நெடுங்காலமாக இந்திய நாட்டு வரலாற்றைப் படிப்பவர்களும் எழுதுபவர்களும் பெரும்பாலும் மற்ற நாட்டு வரலாறுகளோடு தொடர்புபடுத்தாமலே எழுதியும் படித்தும் வந்திருக்கிறார்கள் என்பதையும், கடல் கடந்து சென்று குடியேறிய இந்தியர்களின் வரலாற்றில் கவனம் செலுத்தவில்லை என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. சாதவாகனர்கள், 'மூன்று பெருங் கடல்களுக்கும் அதிபர்கள்' என்று பாராட்டப்படுகிறார்கள். அவர்கள் கடல் கடந்த வாணிகத்திற்கும் குடியேற்றத்திற்கும் ஆதரவு தந்தார்கள் என்றும் அறிகிறோம். அவர்கள் காலத்தில் புத்தமதக் கவின் கலைகள் ஒப்பற்ற அழகையும் செப்பத்தையும் அடைந்தன. மேற்கு இந்தியாவிலுள்ள குகைக் கோயில்களிலும், கிருஷ்ணு நதியின் பள்ளத்தாக்கிலுள்ள அமராவதி, கோலி, நார்கார்ஜுன கொண்டா முதலிய இடங்களில் இன்னும் அழியாமலிருக்கும் தூபிகளிலும் இன்றைக்கும் அந்தக் கலைச் சின்னங்களைக் காண்கிறோம். சாதவாகனர்கள் வீழ்ச்சிக்குப் பின்னரும் அந்தக் கலை மரபு, கிழக்குத் தக்காணத்திலும்

மேற்குத் தக்காணத்திலும் நெடுங்காலம் நிலைத்து நின்றது. தக்காணத்தில் பிற்பட்ட சாதவாகனர் ஆட்சி செய்த காலத்தில் தமிழகத்தில் சங்ககாலம் நடந்து கொண்டிருந்தது. அதே காலத்தில்தான் இந்தியாவுக்கும் ரோமுக்கும் இடையில் சிறப்பான வாணிகம் நடந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலும் அதற்குப் பின் வந்த காலப் பகுதியிலும் தக்காணத்தில் உயர்வு பெற்றிருந்த குழைமக் கலைப் பாணியில் கிரேக்க-ரோமானியக் கலைப் பாணியின் இயல்புகள் ஓரளவு இருந்தன என்று நினைப்பதற்குப் போதிய சான்று இருக்கிறது.

சங்க காலத்துக்குப் பின், ஏறக்குறைய கி.பி. 300ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 600ஆம் ஆண்டு வரையில் தமிழகத்தைப் பற்றிய செய்தி எதுவுமே நமக்குத் தெரியாதென்று சொல்லலாம். ஏறத்தாழக் கி.பி. 300ஆம் ஆண்டிலோ அதற்குச் சிறிது பின்னரோ கொள்ளைக் கூட்டத்தின் இயல்புகளைக்கொண்ட களப்பிரர் படையெடுப்பால் தமிழகம் முழுவதும் குழப்பத்திற்குள்ளாயிற்று. அவர்கள் தமிழ் நாட்டு 'அதிராஜர்' பலரை வீழ்த்தியவர்கள் என்றும் கொடுங்கோலர்கள் என்றும் வருணிக்கப்படுகிறார்கள். தமிழகம் முழுதும் அவர்கள் ஆட்சிக்குள் சென்றது. கி.பி. ஆறும் நூற்றாண்டின் இறுதியில் அவர்கள் பிடியிலிருந்து தமிழகம் விடுதலை பெற்றது. அதன் பின் பல்லவர்களும் பாண்டியர்களும் தமிழகத்தில் உயர்வடைந்தார்கள். தமிழகம் இருளில் ஆழ்ந்து கிடந்த காலத்தில், (களப்பிரர் காலத்தில்) தக்காணத்தில் பல புதிய அரச வமிசங்கள் தோன்றின. அவ்வரசர்கள் சாதவாகனப் பேரரசுக்குட்பட்டிருந்த நாடுகளைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு, சாதவாகனர்களுடைய நிருவாக முறைகளைப் பின்பற்றியும் அரசியலமைப்புகளைப் பாதுகாத்தும் வந்ததோடு நில்லாமல், அவர்களுடைய கவின்கலை மரபுகளுக்கும் பண்பாட்டு இயல்புகளுக்கும் ஆதரவளித்து, அவை மேலும் வளர்வதற்கு உதவினார்கள். அவர்களுள் மிகவும் முக்கியமானவர்கள்: வடமேற்கில் ஆட்சி செய்த ஆபீரர்கள், திரிகூடர்கள்; பீராரில் ஆட்சி செய்த வாகாடர்கள்; கிழக்குத் தக்கணத்தில் ஆட்சி செய்தி இச்சுவாகுகள், சாலங்காயனர்கள், விஷ்ணு குண்டினர்கள்; தக்காணத்தின் தென் பகுதியில் ஆட்சி செய்த சுட்டுகள், கடம்பர்கள், கங்கர்கள், பல்லவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புத்தமதமும் சமணமதமும் மிகவும் முன்னேறின. பௌத்தத்தின் செல்வாக்கை அஜாந்தா, ஆந்திரா, இலங்கையிலிருக்கும் சிகிரியா ஆகிய இடங்களிலுள்ள சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காண்கிறோம். மேற்குத்

தக்காணத்திலும் தமிழகத்திலும் ஆட்சி செய்த அரசர்கள் சமணமதத்தைத் தழுவி அதற்குத் தங்களுடைய ஆதரவை அளித்தார்கள். அவர்களுடைய குடிமக்களிலும் குறிப்பிடத் தக்க எண்ணிக்கையினர் சமணமதத்தைத் தழுவினுர்கள் என்று நம்பலாம். இந்தக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் பலவற்றை பர்மா, மலேசியா, ஜாவா, போர்னியா, இந்தோசீனு ஆகிய நாடுகளில் இன்றும் காண்கிறேம். அந்தக் கல்வெட்டு களே அந்த நாடுகளில் முதல்முதலில் பொறிக்கப்பட்டவை. அக் கல்வெட்டுகள் அந்த நாடுகளில் ஆரியர் குடியேறியதற்கும் அவை ஆரிய மயமானதற்கும் தக்காணமும் தென்னிந்தியாவும் எவ்வளவு மிகுதியாய் உதவின என்பதற்குச் சான்று பகர்கின்றன.

அடுத்த வரலாற்றுக் காலமாகிய கி.பி. 600 முதல் கி.பி. 950 வரையில் தென்னிந்தியாவில் பல பெரிய அரசுகள் தோன்றிப் போரிலும் அமைதிக்கால ஆட்சியிலும் புகழ் பெற்று விளங்கின. தக்காணத்தில் முதலில் பாதாமிச் சாளுக்கியர்கள் தலையெடுத்து இரு கடலுக்கும் இடையிலுள்ள தக்காணம் முழுவதிலும் ஆட்சி புரிந்தார்கள். கிழக்குக் கடற்கரையிலிருந்த தெலுங்கு நாடும், வடமேற்குத் தக்காணத்திலிருந்த 'லாட்டா' என்ற மாகாணமும் பாதாமிச் சாளுக்கியர்களுடைய ஆட்சியில் இல்லாவிட்டாலும், அவை முழு உரிமையுடன் சாளுக்கியக் கிளை மரபினருடைய ஆட்சியிலிருந்தன. எனவே, தக்காணம் முழுதுமே சாளுக்கியர் களுடைய ஆட்சியில் இருந்தது என்று பொதுவாகக் கூறலாம். அவர்கள் ஹர்ஷவர்த்தனருடைய படையெடுப்பைத் தடுத்து, அவர் விந்திய மலைக்குத் தெற்கே வரமுடியாமற் செய்தார்கள். வடக்கிலிருந்த ஏனைய அரசர்களோடும் அவர்கள் போரிட்டு வெற்றி பெற்ருர்கள். தெற்கில் பல்லவர்களோடும் அவர்கள் போர் புரிந்து வென்ருர்கள். அவர்கள் பல குகைக் கோயில் களையும் ஏனைய கற்கோயில்களையும் கட்டினுர்கள். அவற்றை நாம் ஐஹோல், பாதாமி, பட்டடக்கல் ஆகிய இடங்களிற் காண்கிறேம். அவைகள் சாளுக்கியர்களுடைய மதப்பற்றையும் கலையார்வத்தையும் காட்டுகின்றன. அஜாந்தாவிலுள்ள சில குகைகளும் ஓவியங்களும் இந்த வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்தவை என்பதில் ஐயமில்லை. 8ஆம் நூற்றுண்டின் இடையில் சாளுக்கியர்களுடைய வலிமை குறைந்தது. அவர் களுக்கு அடங்கியிருந்த சிற்றரசர்கள் பலருள் ராஷ்டிரகூடர்கள் என்ற அரச மரபினர் தங்கள் வலிமையைப் பெருக்கி, 'மான்ய கேட்டா' என்னும் நகரைக் கோநகராய்க் கொண்டு புதியதொரு பேரரசை நிறுவினுர்கள். ராஷ்டிரகூடர்கள், நிருவாகத்

துறையிலும், தெற்கிலும் வடக்கிலும் இருந்த அரசுகளுடன் வைத்துக்கொண்ட தொடர்புகளிலும் பாதாமிச் சாளுக்கியர் களையே பின்பற்றினார்கள் என்று பொதுவாகக் கூறலாம். ஆனால், அவர்கள் கிழக்குத் தக்காணத்தில் வேங்கியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த கிழக்குச் சாளுக்கியர் களோடு தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோராவிலிருக்கும் ஒப்பற்ற குகைக் கோயிலாகிய கைலாச நாதர் கோயில் அவர்களுடைய கலையார்வத்திற்குச் சிறந்த சான்றாக விளங்குகிறது.

தெற்கில் பல்லவர்களும் பாண்டியர்களும் தமிழகத்தைப் பங்கிட்டுக்கொண்டு ஆட்சி நடத்தினார்கள். அவர்களுக்குள் அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருந்ததால், அவர்களுடைய ராஜ்ய எல்லைகள் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தன. ஆனால், அந்த நாடுகளுக்கிடையில் காவிரியாறு எல்லையாக இருந்தது என்று பொதுவாகக் கூறலாம். பல்லவர்கள் வடக்கில் சாளுக் கியர்களோடும் தெற்கில் பாண்டியர்களோடும் போர் புரிய வேண்டியிருந்ததால், அவர்களுடைய நிலை கடுமையாகவே இருந்தது. சங்க காலத்தில் மிகப் புகழுடன் விளங்கியவர்களும் பல்லவ—பாண்டியர் காலத்திற்குப் பின் வரலாற்றில் மிகச் சிறந்த புகழ்பெற்றதொரு பேரரசை நிறுவியவர்களுமான சோழர்கள் முற்றும் மறைந்துவிட்டார்கள். அவர்களைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஆந்திராவிலுள்ள கொடை மாவட்டங்களில் அப்போது ஆட்சி செய்துவந்த ரேநாட்டுத் தெலுங்குச் சோடர்களுக்கும் தமிழகச் சோழர்களுக்கும் உண்மையில் எத்தகைய உறவு இருந்தது என்பதும் நமக்குத் தெரியவில்லை. இந்த ரேநாட்டுத் தெலுங்குச் சோடர்கள் தங்களைச் சங்ககாலப் புகழ்பெற்ற கரிகாலசோழன் பரம்பரை யைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டது மட்டும் நமக்குத் தெரிகிறது.

பாண்டிய—பல்லவர் காலத்தில் சமயத் துறையிலும் இலக்கியத் துறையிலும், கவின் கலைத்துறையிலும் மிகக் குறிப் பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது; வடமொழி மதிப்புமிக்க இடத்தைப் பெற்றிருந்தது. அதுவே உயரிலக்கியத்திலும் பண்பாட்டுத் துறையிலும் பயின்ற மொழியாக இருந்தது. கங்க வமிசத்தைச் சேர்ந்த துர்விநீதன் என்னும் அரசன் வடமொழி, கன்னடம் ஆகிய இரண்டிலும் நூல்களை இயற்றினான். பல்லவ அரசனான மகேந்திரவர்மன் நூலாசிரியனாயும், இசைப் புலவனாயும், ஓவியனாயும், கட்டடக் கலைஞனாயும் இருந்தான்.

அதனால், அவன் 'விசித்திர சித்தன்' என்னும் பெயர் பெற்றான். அப்போது செல்வாக்குடனிருந்த சமண பௌத்த மதங்களுக்கு அவனுடைய காலத்திலோ சிறிது பின்னரோ எதிர்ப்புக் கிளம்பியது. அந்த எதிர்ப்பே சைவத்திலும் வைணவத்திலும் புதியதொரு பக்தி மார்க்க இயக்கத்திற்குக் காரணமாயிற்று. அந்த இயக்கத் தலைவர்கள் நாயன்மார்கள் என்றும் ஆழ்வார்கள் என்றும் பெயர் பெற்றார்கள். அவர்கள் தமிழக முழுவதிலும் சுற்றுப் பயணஞ் செய்து சைவத்தையும் வைணவத்தையும் பரப்பினார்கள். அவர்கள் சென்ற இடங்களிலிருந்த கோயில்கள் எல்லாவற்றிலும் இறைவனை வழிபட்டார்கள். அப்போது அவர்கள் பாடிய பாடல்கள் மிகப் பலவாகும். பிற்காலத்தில் வந்தவர்கள் அவற்றைத் தேவாரம் என்றும், திவ்வியப் பிரபந்தம் என்றும் தொகுத்து வைத்தார்கள். தேவாரமும் திவ்வியப் பிரபந்தமும் ஒப்பற்ற பக்திப்பாடல்கள். இலக்கியத் துறையிலும் அவை தலைசிறந்து விளங்குகின்றன. அந்தக் காலத்தில்தான் குமாரிலபட்டரும் அவரைவிடச் சிறந்தவரான சங்கராச் சாரியரும் வாழ்ந்து தங்கள் கொள்கைகளைப் பரப்பினார்கள். குமாரிலபட்டர் வேதங்களுக்கு விளக்கங் கூறி, வேள்வியை அடிப்படையாகக் கொண்ட மதத்திற்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். சங்கரர் அத்வைத வேதாந்தக் கொள்கைகளை ஒப்புயர்வற்ற முறையில் விளக்கினார். அந்தக் காலத்தில் கட்டப் பெற்ற கோயில்களும் செதுக்கப்பெற்ற சிற்பங்களும் தென்னிந்தியாவில் அந்தக் கலைகளில் ஏற்பட்ட முழுச் செப்பத்தையும் காட்டுகின்றன. அந்தக் கலைகளின் முழு அழகையும் மாமல்லபுரத்திலும் காஞ்சீபுரத்திலும் நாம் இன்றுங் கண்டுகளிக்கலாம்.

9ஆம் நூற்றாண்டின் இடையில் சோழர்கள் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கினார்கள். விஜயாலய சோழன்தான் சோழர் குலத்துக்குப் புத்துயிரளித்தான். மிக விரைவில் சோழர்கள் தங்கள் தலைநகருக்கு வடக்கில் எஞ்சியிருந்த பல்லவ ஆதிக்கத்தை அழித்தார்கள். அதுபோலவே தெற்கில் பாண்டியர்களையும் மேற்கில் சேரர்களையும் அவர்கள் வென்றதோடு இலங்கைமீதும் படையெடுத்தார்கள். ஆட்சித் தொடக்கத்தில் சோழர்கள், ராஷ்டிரகூடர்களது பகைமையைச் சமாளிக்க வேண்டியிருந்தது. முக்கியமாக ராஷ்டிரகூட அரசனான மூன்றாம் கிருஷ்ணனால் சோழ ஆதிக்கத்துக்குப் பேராபத்து நேரும் போலிருந்தது. ஆனால், ராஷ்டிரகூடர்கள் தங்கள் நாட்டிலிருந்து மிகவும் தொலைவில் போரிடவேண்டியிருந்ததால், சோழர்களை எதிர்த்து நிலையான வெற்றியைப் பெற முடியவில்லை. ராஷ்டிரகூடர்களுடைய எதிர்ப்போ சோழ ஆதிக்கம்

பெருகுவதைச் சிறிதுகாலம் தடைசெய்தது. இதைத் தவிர அந்த எதிர்ப்பினால் சோழர்களுக்கு எந்தவித இடையூறும் நேரவில்லை. ஆனால், ராஷ்டிரகூட வேந்தன் மூன்றாம் கிருஷ்ணன் சோழர்களோடு செய்த போர்களினால், ராஷ்டிரகூட ஆட்சிக்கே ஆபத்து வந்தது. தெற்கில் செய்த போர்களினால் வலிவிழந்த நிலையிலிருந்த ராஷ்டிரகூடர்களைச் சாளுக்கிய அரசனான இரண்டாம் தைலன் எளிதில் தோல்வியடையுமாறு செய்து விட்டான்.

கிருஷ்ணனுடைய படைகள் திரும்பிச் சென்றபின் சோழ ஆதிக்கம் விரைவாக வளர்ந்தது. 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி செய்த சோழ அரசர்களான முதலாம் ராஜராஜன், அவனுடைய மகன் ராஜேந்திரன் ஆகியவர்கள் காலத்தில் சோழப் பேரரசு உச்ச நிலையை அடைந்தது. அந்தச் சமயத்தில் வட இந்தியாவில் பேரரசு என்று சொல்லக்கூடிய அரசு எதுவுமில்லை. அங்குப் பல சிறிய ராஜ்யங்கள் இருந்தன. தமக்குள் போரிட்டுக் கொண்டிருந்தால், அவை வலிவிழந்தன. அந்த நேரத்தில், முஸ்லிம்கள் வட இந்தியாமீது மீண்டும் மீண்டும் படையெடுத்து வந்தார்கள். அதனால் அவை மேலும் வலிவிழந்தன. வட இந்தியாவில் இந்த நிலை இருந்தபோது ராஜராஜ சோழனும் ராஜேந்திர சோழனும் தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்து, முதல் முறையாகத் தென்னகத்தில் அரசியல் ஒருமைப்பாட்டை நிறுவினார்கள். அதுமட்டுமன்றி, அவர்கள் தங்கள் கடல் வலிமையையும் பெருக்கி, இந்துமாக் கடலின் போக்குவரவு வழிகள் எல்லாவற்றையும் சோழ ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து, படையெடுப்பு, ராஜதந்திரம் ஆகியவற்றின் மூலம் ஸ்ரீவிஜயப் பேரரசின் அலுவல்களையும் தங்கள் விருப்பப்படி நெறிப் படுத்தும் நிலையை எய்தினார்கள். அவர்கள் சோழ நாட்டின் நிருவாக முறைகளையும் சீர்திருத்தி, மைய அரசின் அதிகாரத்தின் கீழ் உரிமையோடு செயல்படக் கூடிய கிராமச் சபைகளை நிறுவினார்கள். கிராமத் தன்னாட்சி முறை சோழர் காலத்தில் தான் முதன்முதலாக வழக்கிற்கு வந்தது. தஞ்சைப் பெரிய கோயிலை ராஜராஜன் கட்டினான். அது தென்னிந்தியக் கட்டடக் கலையின் மிகத் தூய்மையான சின்னமாகவும், ஒப்பற்ற அழகுடைய கோயிலாகவும் விளங்குகிறது. அவனுடைய மகன் அதே போன்ற ஒரு கோயிலை—அதன் உருவ நேர்படியை—திருச்சி மாவட்டத்தின் காடுகளுக்கிடையிற் கட்டினான்; பின்னர்க் கோயிலைச்சுற்றி ஒரு புதிய நகரத்தையும் அமைத்து, அதற்குக் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் பெயரைச்

சூட்டினன். கங்கை கொண்ட சோழனுடைய பெயரைத் தாங்கிய அந்த நகரம் சோழ மன்னர்களுடைய பெருமையை மற்ற அரசர்கள் நன்கு உணர்வதற்கு ஏற்றதொரு விளம்பர மாயிற்று. பல்லவர் காலத்தில் தொடங்கிய சமய மறுமலர்ச்சி சோழர் காலத்தில் மேலும் உரம் பெற்றது. இந்தக் காலத்தைச் 'சமய மறுமலர்ச்சியின் வெள்ளிக் காலம்' என்று சொல்லலாம். முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் காவிரிக் கரையில் வாழ்ந்த வேங்கட மாதவர் ரிக்குவேதத்திற்கு ஒரு புதிய விளக்கவுரை எழுதினர். முற்பட்ட நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடியருளிய பக்திப் பாடல்கள் இப்போது தொகுக்கப்பட்டன. தேவாரத் திருமுறைகளுக்கும் திவ்வியப் பிரபந்தத்துக்கும் அன்று தொகுப்பாசிரியர்கள் கொடுத்த தொகுப்பு வடிவம் இன்றும் மாருமல் அப்படியே இருக்கின்றது. தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் நடராஜப் பெருமானுடைய திருவுருவத்தைச் சிற்பிகள் ஒப்பற்ற அழகுடைய சிலைகளாக வடித்தார்கள். அந்த வெண்கலச் சிலைகள் தொழில் நுட்பத் துறையிலும் கவின்கலைத் துறையிலும் ஈடும் எடுப்பும் இன்றி உலகப் புகழ்பெற்று விளங்கு கின்றன.

ராஷ்டிரகூடப் பேரரசை அழித்துவிட்டுத் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியவர்களாகிய கல்யாணிச் சாளுக்கியர்கள் சோழர் காலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பதினென்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சோழர்களுக்குப் பகைவர்களாய் இருந்தார்கள். அவர்களிடையே பல போர்கள் நடந்தன. அவற்றில் சில மிகுந்த கடுமையும் கொடுமையும் நிறைந்தவை. அடிக்கடி போர் நடந்ததால் அந்த இரண்டு அரசுகளுக்கும் இடையிலிருந்த எல்லை துங்கபத்திரா நதியையொட்டி அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. கிழக்குச் சாளுக்கியர் ஆட்சியிலிருந்த வேங்கி நாடுதான் சோழர்களுக்கும் கல்யாணிச் சாளுக்கியர் களுக்கும் பகைமை தொடர்வதற்குக் காரணமாயிருந்தது. கிழக்குச் சாளுக்கியர்கள் மேற்குச் சாளுக்கியர்களுடைய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த ஓர் உள்நாட்டுப் போரின் விளைவாகக் கிழக்குச் சாளுக்கிய அரச பரம்பரையினர் வேங்கியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அப்போது அவர்களுக்குச் சோழர்கள் உதவி செய்தார்கள். அதனல், அவர்கள் மீண்டும் வேங்கியில் அரசுரிமை பெற்ருர்கள். அதையடுத்து நடைபெற்ற பல திருமணங்களால் சோழர்களும் வேங்கிச் சாளுக்கியர்களும் உறவினர்களாய் விட்டார்கள். 1070ஆம் ஆண்டில் சோழர்களின் அரியணை ஏறுவதற்குரிய

ஆண் வாரிசு இல்லாமற்போகவே, வேங்கி நாட்டரசனே சோழப் பேரரசனானான். அவன்தான் முதலாம் குலோத்துங்கன்.

அவனை எதிர்த்த சாளுக்கியப் பேரரசன் ஆறாம் விக்கிரமாதித்தன் ஆவான். முதலாம் குலோத்துங்கனுக்கும் ஆறாம் விக்கிரமாதித்தனுக்கும் பகைமை 50 ஆண்டுகள் தொடர்ந்து நிலவியது. அதனால், ஏற்பட்ட அழிவுகளினால் அவர்களுக்குப் பின் வந்த வலிமை குறைந்த அரசர்கள் காலத்தில் அவ்விரண்டு ராஜ்யங்களுமே வலிவிழந்துவிட்டன. அதனால், கல்யாணிச் சாளுக்கியப் பேரரசின்கீழ்ச் சிற்றரசர்களாயிருந்த துவார சமுத்திர ஹொய்சளர்களும், தேவகிரி யாதவர்களும், வாரங்கல் காகதீயர்களும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுயேச்சையடைந்து, சாளுக்கியப் பேரரசின் ஆட்சியிலிருந்த நாடுகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு ஆளத்தொடங்கினார்கள். சோழப் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட நாட்டிற்கு அடுத்த நிலப்பகுதியை ஆண்டுவந்த ஹொய்சளர்கள், சோழர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிலவற்றைப் பிடித்துக்கொண்டது மட்டுமின்றித் தமிழக அரசியல் நிகழ்ச்சிகளிலும் தலையிட்டார்கள். சோழப் பேரரசின் சிற்றரசர்கள் அவ்வப்போது சோழ அரசர்களையே எதிர்த்தார்கள். அந்தச் சமயங்களில் எல்லாம் ஹொய்சளர்கள் சோழ அரசர்களுக்கு உதவி செய்தார்கள். பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பாண்டியர்களுடைய வலிமை பெருகத் தொடங்கியது. அதே சமயத்தில் சோழப் பேரரசின் வடபகுதில் பல்லவர் வழித்தோன்றல் என்று சொல்லிக்கொண்ட கோப்பெருஞ்சிங்கன் என்ற சிற்றரசன் தன் வலிமையை மேலும் மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கிளர்ச்சி செய்துகொண்டே இருந்தான். ஹொய்சளர்களுடைய உதவியால் சோழர்கள் சிறிதுகாலம் தாக்குப்பிடித்தார்கள். ஆனால், பதின்மூன்றாம் நூற்றாண்டின் இடையில் தமிழக முழுதுமன்றிக் கிழக்குக் கடற்கரையில் நெல்லூர் வரையிலுமிருந்த நாடுகளில் எல்லாம் பாண்டியர் ஆட்சி பரவிவிட்டது. அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ஹொய்சளர் செய்த முயற்சிகள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியடையவில்லை. தெலுங்குச் சோடர்களுடைய முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

இந்த வரலாற்றுக் காலத்தில் வடமொழிக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. அதே சமயத்தில் தாய்மொழி வளர்ச்சிக்கும் அரசர்கள் ஊக்கமளித்தார்கள். சாளுக்கியர்களும் ஹொய்சளர்களும் கன்னடத்தை வளர்த்தார்கள். கிழக்குச் சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள், காகதீயர்கள், தெலுங்குச் சோடர்கள்

ஆகியவர்கள் ஆட்சியில் தெலுங்கு மொழி வளர்ந்தது. தமிழகச் சோழர்களும் பாண்டியர்களும் தமிழின் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வங்காட்டினார்கள். இந்த மூன்று மொழிகளிலும் புகழ் பெற்ற புலவர்கள் ராமாயணத்தையும் மகாபாரதத்தையும் இயற்றினார்கள். இக்காலத்தில் பக்தி இலக்கியம் மேலும் வளர்ந்து பெருகியது; சமய வாத நூல்கள் பலவும் இயற்றப் பட்டன. இவ்வாறு சமய இலக்கியம் பல்கிப் பெருகியது. அதே சமயத்தில் முக்கியமான அரசர்கள் எல்லாரும் அரசவைப் புலவர் களை நியமிக்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்தார்களாதலால், சமயச் சார்பற்ற இலக்கியமும் வளர்ந்தது. அத்தகைய நூல்கள் வரலாற்றுச் செய்திகள், கற்பனையியல்புகள் ஆகியவற்றின் கலப்பாய் இருந்தன. அரசியல் துறையிலும் சட்டத் துறை யிலும் பல நூல்கள் தோன்றின. அவற்றுட் சில புதிதாக எழுதப்பட்டவை. மற்றவை யாக்ஞவல்கியம் போன்ற நூல் களின் விரிவுரைகளாய் இருந்தன. உபநிடதங்கள் கூறுகின்ற பிரமத்தைப் பற்றிய தத்துவத்தையும், வைணவ ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் போதித்த கடவுட் கோட்பாட்டையும் ஒன்றாக இணைப்பதற்கு ராமானுஜர் முயன்றார். அதன் பயனாக அவர் விசிஷ்டாத்வைதக் கொள்கையைத் தர்க்க ரீதியாக நிறுவினார். ராமானுஜர் கொள்கையைப் பலவகைகளில் ஒத்ததும் அதே சமயத்தில் சில முக்கிய விஷயங்களில் அதனின்று வேறு பட்டதுமான கடவுட் கோட்பாடொன்றனை நிம்பார்க்கர் நிறுவினார். அவருடைய கோட்பாட்டின்படி நாராயணன், இலக்குமி ஆகியவர்களுக்குப் பதிலாகக் கண்ணனும் ராதையும் வழிபடு தெய்வங்களானார்கள். இந்த வரலாற்றுக் காலத்தில் அரசோச்சிய எல்லா அரசர்களும் கோயில் கட்டுவதை ஒரு சிறந்த திருப்பணியாகக் கருதினார்கள். அதனால் நாடு முழுதும் பல கோயில்கள் கட்டப்பட்டன. கட்டடக்கலையும் சிற்பக்கலையும் அவற்றோடு தொடர்புடைய ஏனைய கவின்கலைகளும் மிகுந்த ஆதரவு பெற்றன. அதன் பயனாக அந்தக் கலைகள் புதிய அழகையும் பொலிவையும் பெற்றன. சோழர்களும் சாளுக்கியர் களும் ஆட்சி செய்த காலம் (900–1200) தென்னிந்திய வரலாற்றில் பலவகையிலும் சிறந்த ஒப்பற்ற காலமாக விளங்கியது.

பதின்மூன்றும் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் நான்கு இந்து அரசுகள் இருந்தன. தெற்கில் பாண்டியர்களும் ஹொய்சளர்களும் ஆதிக்கஞ்செலுத்தினார்கள்; வடக்கில் யாதவர் களும் காகதீயர்களும் ஆட்சி செய்தார்கள். அந்த அரசுகளின் மேலாதிக்கத்தின்கீழ் இந்த நாட்டு வழக்கம்போலப் பல சிற்றரசு களும் இருந்தன. அந்த நான்கு முக்கிய அரசுகளும், அவற்

றிற்கு முன்னிருந்த இரண்டு பேரரசுகளின் (சோழப் பேரரசு, சாளுக்கியப் பேரரசு) ஆட்சியிலிருந்த நாடுகளில் தங்கள் ஆட்சியை நிறுவியதோடு அந்தப் பேரரசுகளின் நிருவாக முறைகளையும் ஏனைய மரபுகளையும் அப்படியே பின்பற்றின. அந்த ஆட்சி முறைக்குப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளியிலிருந்து வந்த பகையினால் அதிர்ச்சி ஏற்பட்டது. டில்லியில் தங்களுடைய ஆட்சியை நிலைநிறுத்தியபின் கில்ஜி சுல்தான்கள், தக்காணத்தின் மீது தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள். அவர்களுக்குப் பின் வந்த துக்ளக் வமிச சுல்தான்களுடைய கவனமும் தென் திசையில் திரும்பியது. முதலில் அவர்கள் தென்னிந்தியாவின் செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போவதையே நோக்கமாய்க் கொண்டிருந்தார்கள். ஆனால், அதற்குப்பின் நாடு பிடிப்பதும் இஸ்லாம் சமயத்தைப் பரப்புவதும் அவர்கள் நோக்கங்களாயின. தென்னிந்தியாவின் பலபகுதிகள் பெயரளவில் டில்லியின் ஆதிக்கத்துக்குள் புகுந்தன. முதலில் மதுரையில் ஒரு முஸ்லிம் ஆளுநன் டில்லி சுல்தானால் நியமிக்கப் பெற்றான். ஆனால், அவன் சிறிது காலத்திற்குப்பின் கலகஞ்செய்து டில்லி ஆதிக்கத்தைப் புறக்கணித்து விட்டான். அதனால், மதுரை ஒரு தனி முஸ்லிம் அரசாயிற்று. முஸ்லிம் போர் வீரர்களும் படைத்தலைவர்களும் நாட்டின் பல பகுதிகளிலும் குடியேறி அவற்றை ஆட்சி புரியலானார்கள். கோயில்களின் செல்வங்களைக் கொள்ளையடித்தது மட்டுமன்றி அவற்றை இடிக்கவும் தொடங்கினார்கள். பள்ளி-வாசல்கள் பலவற்றைக் கட்டினார்கள். இவ்வாறு இந்து சமுதாயம் ஒரு புதிய ஆபத்துக்குள்ளாகியது. ஆனால், இந்த நெருக்கடி நீண்டகாலம் நிலைக்கவில்லை. முஸ்லிம்களின் தலைநகராயிருந்த டில்லி, வடக்கே மிகவும் தொலைவிலிருந்தது. படைவலிமையால் ஒரு பேரரசைக் கட்டிக் காப்பது பொதுவாக எளிதான செயல் அன்று. மேலும் மக்களும் அந்த ஆதிக்கத்தை எதிர்த்தார்கள். அதனால் தென்னிந்தியாவில் இந்து மதம் பிழைத்தது. முகமது பின் துக்ளக்கின் பேரரசு சிதைவதற்குக் காரணமாயிருந்த பல கலகங்களின் விளைவாகத் தக்காணத்தில் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் குல்பர்காவிலும் விஜயநகரிலும் இரண்டு புதிய அரசுகள் தோன்றின.

குல்பர்காவைத் தலைநகராகக் கொண்ட முஸ்லிம் அரசுக்கு பாமினி அரசு என்பது பெயர். அதனுடைய ஆட்சி எல்லை வடக்குத் தக்காணம் முழுதும் பரவியது. கிழக்கிலும் மேற்கிலும் வங்கக்கடலும் அரபிக் கடலும் அதற்கு எல்லைகளாக இருந்தன, தெற்கிலிருந்த இந்துப் பேரரசுடன் அதற்கு எவ்வளவு

பகைமை இருந்ததோ அவ்வளவுக்குச் சிறிதுங்குறையாமல் வடக்கிலிருந்த முஸ்லிம் அரசுகளுடனும் அது பகை கொண்டிருந்தது. பாமினி அரசர்களுடைய வரலாறு படிக்கச் சுவையுடையது அன்று. 1347-க்கும் 1518-க்கும் இடையில் 14 சுல்தான்கள் ஆட்சிப்பீடத்திலிருந்தார்கள். அவர்களுள் நால்வர் கொலையுண்டனர்; இருவர் முடியிழந்தது மட்டுமன்றிக் கண்களையும் இழந்தனர். அவர்கள் அனைவருமே கொடியவர்கள்; கொலைக்கஞ்சா மத வெறியர்கள்; மட்டில்லா மதவெறியிலும் மாதர் மையலிலும் ஆழ்ந்து கிடந்தவர்கள். 'அவர்களுடைய ஆட்சியால் நாட்டிற்கு என்ன நன்மை கிடைத்தது என்று குறிப்பிடுவது கடினம்' என்று தற்கால வரலாற்றாசிரியர் ஒருவர் கூறுகிறார். இது கடுமையான தீர்ப்புத்தான்; ஆனால், நியாயமானது. எனினும், அவர்களிடத்திலும் சில நல்லியல்புகள் இருந்தன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்கள், பாரசீகத்திலிருந்து வந்த புலவர்களுக்கும் கட்டடக் கலைஞர்களுக்கும் ஆதரவளித்தார்கள். பஞ்சகாலம்போன்ற சில சமயங்களில் அவர்கள் தங்கள் ஆட்சிக்குள்ளிருந்த முஸ்லிம் குடிகளின் நலத்தில் நாட்டமுடையவர்களாய் இருந்தார்கள். பதினாறும் நூற்றாண்டில் பாமினியரசு ஐந்து தனித்தனி முஸ்லிம் அரசுகளாகப் பிரிந்தது. அவற்றுள் பிஜப்பூரும் கோல்கொண்டாவும் மிகவும் முக்கியமானவை. அவைகளெல்லாமே தமக்குள் போரிட்டுக்கொண்டிருந்தனவெனினும், விஜயநகரத்தோடும் தொடர்ந்து பகைமை பாராட்டி வந்தன. முடிவில், பதினேழாம் நூற்றாண்டில், அவை ஒவ்வொன்றாக முகலாய ஆதிக்கத்தின்கீழ்ப் புகுந்துவிட்டன.

பாமினி அரசு தோன்றுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன் தோன்றிய விஜயநகர அரசு, புத்துயிர் பெற்ற இந்து மதத்திற்கு மையமாயிற்று. விஜயநகர அரசு இஸ்லாமிய ஆதிக்கத்தை நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் காணாத அளவிற்கு வெற்றியுடன் எதிர்த்து நின்றது. ஆனால், அதற்காக அந்த அரசு நீண்டகாலம் விழிப்புடனிருக்க வேண்டியதாயிருந்தது. அந்தப் பெரும் பணியைச் செய்வதற்கேற்ற வகையில் ஆட்சி முறையினை அது அமைத்துக்கொண்டது. அதனை ஒரு தனியரசு என்று சொல்வதற்கு மாறாகப் படை வலிமையை அடிப்படையாகக் கொண்ட கூட்டரசு என்று சொல்வதே பொருந்தும். அந்தப் பேரரசிலிருந்த பல தலைவர்களுள் மிகவும் திறமையானவன் பேரரசனாய் இருந்தான் என்றும், அவனோடு மற்றத் தலைவர்களாகிய சிற்றரசர்கள் ஒத்துழைத்தார்கள் என்றும் சொல்ல வேண்டும். அதனால்தான் அரசாள்வதற்குப் பிறப்பினால் உரிமை பெற்றிருந்தவர்கள் திறமையற்றவர்களாய் இருந்த போதெல்லாம்

அவர்களுக்குப் பதிலாக மிகத் திறமையுடைய படைத் தலைவர்களே பட்டங் கட்டிக்கொண்டு ஆட்சி புரிந்தார்கள். விஜய நகரத்தின் தோற்றத்திற்குக் காரணமாயிருந்த பெரும் பணியைத் திறமையற்ற அரசர்கள் ஆற்ற முடியுமா? இவ்வாறெல்லாம் விழிப்புடனிருந்தாலும், நெருக்கடியான நிலைமைகளைச் சமாளிப்பதற்காக விஜயநகரப் பேரரசு, சில சமயங்களில் தன் குதிரைப் படைக்கும் பீரங்கிப் படைக்கும் வெளி நாட்டினரையும் முஸ்லிம்களையுங்கூட நியமித்தது. படைத் திறமையும் வலிமையும் பெற்றதாயிருந்தால்தானே நாட்டையும் மதத்தையும் காப்பாற்ற முடியும்? இத்தகைய செயல்கள் பல தொல்லைகளுக்குக் காரணமாகும் என்பது வெளிப்படை. எனினும், விஜயநகரம் ஏறக்குறைய மூன்று நூற்றுண்டுகள் தன் பணியை வெற்றியுடன் ஆற்றியது என்னும் உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. அவ்வளவு காலம் அது எதிர்த்து நின்ற சக்திகளுக்கு முடிவில் அது பணிய நேர்ந்ததென்ருலும், அதற்குள் சமாளிக்க முடியாத எத்தனையோ புதிய சக்திகள் இந்தியாவில் தோன்றிவிட்டன என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். ஐரோப்பியர்கள் தங்கள் வாணிகக் கம்பெனிகளை இந்தியாவில் நிறுவியபின் இந்திய வரலாற்றில் ஒரு புதிய காலமே தோன்றியது. உண்மையில் விஜயநகரப் பேரரசு அழிந்துபடுவதற்கு முன்னரே போர்ச்சுகீசியர்கள் தங்கள் கடலாதிக்கத்தை நிறுவி, அதன்மூலம் கொள்ளையடிக்கும் இயல்புடைய தங்களுடைய கடல் கடந்த பேரரசை நிறுவிவிட்டார்கள். அது பதினாரும் நூற்ருண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தது. அவர்கள் விஜயநகரப் பேரரசின் மேலாதிக்கத்திலிருந்த சிற்றரசுகளுடன் — முக்கியமாக, மேற்குக் கடற்கரையில் — அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டிருந்தாலும், மைய அரசுடன் நட்புறவான தொடர்புகளை வைத்துக்கொள்வதில் கவனஞ் செலுத்தினுர்கள். அதனுல், அவர்களால் விஜயநகரப் பேரரசுக்குப் பேராபத்து ஒன்றும் ஏற்படவில்லை. அவர்கள் செல்வமிகுந்த இந்துக் கோயில்களைக் கொள்ளையடிப்பதற்குச் செய்த முயற்சிகளும், 'முத்துக் குளிக்கும் கடற்கரையில்' வாழ்ந்த மக்களைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றுவதில் ஏசு பாதிரிமார்களும் ஏனைய பாதிரிமார்களும் அடைந்த சில வெற்றிகளும் இந்து மதத்திற்கு ஆபத்தை உண்டுபண்ணின. ஆனுல், விரைவில் விஜயநகர அரசர்களும் அவர்களுக்கு அடங்கிய தலைவர்களும் தலையிட்டு, அந்த ஆபத்தைத் தடுத்துவிட்டார்கள்.

இவ்வாறு இந்து சமுதாயத்திற்குப் பல திசைகளிலிருந்தும் வந்து கொண்டிருந்த அபாயங்களை அகற்றி அதனை அழிவினின்று காப்பது விஜய நகரத்தின் பணியாயிற்று.

அதனால், அபாயம் நிறைந்த அந்தக் காலத்தில் தென்னகத்தில் வாழ்ந்த இந்துக்கள், தங்கள் மத – சமுதாயப் பழக்க வழக்கங் களினின்று சிறிதும் வழுவாமல் நடக்க முயன்றது நமக்கு வியப்பைத் தரவில்லை. அதனால், அவர்கள் ஒருவிதக் குறுகிய மனப்பான்மையை வளர்த்துக் கொண்டதோடு வளைந்து கொடுக்கும் இயல்பையும் இழந்து விட்டார்கள். அந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியமும் கவின் கலைகளும் அந்தக் குறுகிய மனப்பான்மையும் குறிப்பிட்ட சில பழக்கவழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் இயல்பும் மேலும் வளர்வதற்கு எல்லா வகையிலும் உதவின. சாயனரும் மாதவரும் வேறு பலரும் ஆற்றிய இலக்கியப் பணிகளின் விளைவாக வேதங் களுக்கும் பராசரஸ்மிருதிக்கும் எழுதப்பட்ட புதிய விரிவுரை களும், 'சர்வ தர்சன சங்கிரகம்' என்னும் தத்துவக் கோட்பாடு களின் தொகுப்பு நூலும் அந்த இலக்கிய வகையைச் சேர்ந்தவை.

அரசர்களும் பிரபுக்களும் இந்து தர்மத்தை நிலைநாட்டு வதற்கும் காப்பதற்கும் வேண்டிய எல்லாப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். அவர்கள் நாட்டிலிருந்த முக்கியமான கோயில்கள் எல்லாவற்றிலும் புதிய மண்டபங்களையும் (காட்சி மாடங்கள், நூற்றுக்கால் ஆயிரக்கால் மண்டபங்கள்) கோபுரங்களையும் கட்டுவதற்கு உதவினார்கள்; சமய வழி பாட்டில் மக்களின் ஈடுபாட்டைப் பெருக்கும் பொருட்டுக் கோயில் களுக்கும், அறிஞர் பெருமக்களும் அளவற்ற பொருள்களை அன்பளிப்பாக அள்ளி வழங்கினார்கள். இந்தச் செய்தி களெல்லாம். நாடெங்கும் காணும் கல்வெட்டுகள், செப் பேடுகள் முதலியவற்றின் மூலம் நமக்குத் தெரிகின்றன. அந்தக் காலத்தில் ஓவியம், இசை, நாடகம் முதலிய கவின் கலை களெல்லாம் நல்ல ஆதரவு பெற்றன. அரசவைகளிலும் கோயில்களிலும் கல்வி கேள்விகளிற் சிறந்த அறிஞர்களும் கவின் கலை வல்லுநர்களும் மிகுதியாய் இருந்தார்கள்.

ஆனால், நாம் மேலே கூறியவாறு மக்கள் பழைய மரபுகளைக் கண்மூடித் தனமாய்ப் பின்பற்றியதாலும், வளைந்து கொடுக்கும் தன்மையை இழந்து விட்டதாலும் ஏற்பட்ட விளைவுகளை நாம் இன்றும் காண்கிறோம். இந்து மதத்திலும் சமுதாயத்திலும் முக்கியமான பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை நாம் உணர்கிறோம். ஆனால், அவற்றைச் செய்வது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பதையும் நாம் உணர்கிறோம்.

அந்த வரலாற்றுக் காலத்தில் இன்னொரு குறைபாட்டையும் நாம் காண்கிறோம். கிராம மக்கள் தங்கள் சொந்த முயற்சியால் தங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்ளும் பயிற்சியை இழந்து விட்டார்கள். அதற்கு மாறாக மைய அரசினரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் கிராமத்திற்குத் தேவையான நன்மைகளைச் செய்வார்களென்று கிராம மக்கள் எதிர்பார்த்தார்கள். கிராமத் தன்னாட்சி முறை சோழர் காலத்தில் வழக்கிற்கு வந்தது என்பதையும், அது மிகச் சிறந்த ஆட்சி முறை என்பதையும், சோழர் வீழ்ச்சிக்குப் பின்னும் அந்த முறை நெடுங்காலம் நீடித்திருந்ததென்பதையும் நாம் அறிவோம். அந்தக் கிராமத் தன்னாட்சி முறை விஜயநகரப் பேரரசின் காலத்தில் ஏறக்குறைய மறைந்து விட்டதென்றே கூறலாம். அதற்குக் காரணம் விஜயநகர அரசர்களும் அவர்களுக்குக்கீழ் ஆட்சி செய்து வந்த நாயக்கர்களும் படை வலிமைக்கு முக்கியத்துவம் அளித்ததுதான். அவர்களுடைய கவனம் முழுவதும் படைகளைப் பெருக்குவதிலும் அவற்றை எப்போதும் ஆயத்த நிலையில் வைத்திருப்பதிலும் சென்றது. ராணுவத் தேவைகளுக்குச் சிவில் நிருவாகம் பலியாயிற்று.

பண்டைக்காலத் தென்னிந்தியாவின் அரசியல் பண்பாட்டு வரலாற்றை இங்கு நான் சுருக்கமாக எழுத முயல்கிறேன். ஆனால், நான் விளக்க வேண்டிய முற்கோளும் இல்லை, பெற வேண்டிய படிப்பினையும் இல்லை என்பதை இப்போதே சொல்லி விடுகிறேன். படிப்பினைகள் எவையேனும் இருந்தால், அவற்றைப் படிப்பவர்களே தெரிந்து கொள்ளுமாறு விட்டுவிடுவேன். என்னுடைய பணி, உறுதியாகத் தெரிகிற செய்திகள் எல்லாவற்றையும் தொகுத்து இயன்ற அளவு எளிமையும் தெளிவு முடைய ஒரு வரலாற்று நூலை எழுதுவதேயாகும். இந்த வரலாறு, படிப்பவர்க்கு நன்றாகப் புரியவேண்டும் என்னும் நோக்கத்தோடுதான் சில இடங்களில் என் கருத்துகளைத் தெரிவிக்கிறேன். அந்த இன்றியமையாத அளவுக்குமேல் என் சொந்தக் கருத்துகளை இந்த நூலில் நான் புகுத்தவில்லை. மிக முக்கியமான செய்திகள், மனிதர்கள், போக்குகள் ஆகியவற்றைத் தவிர வேறு பொருள்களைப் பற்றி இந்த நூலில் நான் எழுத விரும்பவில்லை. சிறிய செய்திகளையும் விவரங்களையும் எழுதினால் படிப்பவர்களுடைய கவனம் முக்கியமான செய்திகளிலிருந்து திசை மாறிவிடும். அதனால், நாம் எதிர்பார்க்கிற பயன் கிட்டாமற் போகும்.

தென்னிந்திய வரலாற்றைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடக்க நிலையில் இருக்கிறது. அதனால், வரலாற்று நிகழ்ச்சிகளின் இயல்புகளை அறிந்து கொள்வதிலும் விளக்குவதிலும் மிகுந்த கருத்து வேறுபாடுகளுக்கு இடமிருக்கிறது. ஒன்றுக்கொன்று முரண்படும் கருத்துகளை விரிவாக ஆராய்வதற்கும் அவ்வாறு முரண்படும் அறிஞர்களுடைய நூல்களிலிருந்து நீண்ட மேற்கோள்களை எடுத்துக்காட்டுவதற்கும் இந்த நூலில் இடமில்லை. அதனால், விவாதத்திற்குரிய செய்திகளைக் கூறும்போது நான் என் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ற முறையில் கொள்ளுவதும் தள்ளுவதும் செய்வதாகப் படிப்பவர்கள் நினைத்துவிடக் கூடாது. இது போன்ற நிலைகளில் மிகவும் ஏற்புடையனவாகத் தோன்றுகின்ற கருத்துகளைத் தெரிந்தெடுத்துக் கொள்வதே என்னுடைய முயற்சியாய் இருந்திருக்கிறது. ஆனால், நான் இவ்வாறு தெரிந்தெடுத்துள்ள எல்லாக் கருத்துகளும் இந் நூலைப் படிக்கும் எல்லார்க்கும் ஏற்புடையனவா யிருக்குமென்று நான் நினைக்கவில்லை. நான் இந்த நூலில் ஏற்றுக் கொண்டிருக்கும் பல முடிவுகள் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன என்பதை ஒவ்வோரதிகாரத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டிருக்கும் நூல்களின் பட்டியலே எடுத்துக் காட்டும்.

'வட இந்தியாவைப் பற்றியும், வடமொழி நூல்களைப் பற்றியும், இந்தோ ஆரியக் கருத்துகளைப் பற்றியுமே நாம் மிக நீண்ட காலமாகக் கவனத்தைச் செலுத்திவிட்டோம். இப்போது செய்திகளைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கவேண்டிய நேரம் வந்து விட்டது' என்று வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார். வின்சென்ட் ஸ்மித்துக்கு முன்னரே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இதைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்: 'இந்திய வரலாற்றை ஆராய்ந்த அறிஞர் அனைவரும் நீண்ட காலமாக—மிக நீண்டகாலமாக—தம்முடைய ஆராய்ச்சியைக் கங்கைச் சமவெளியில் தொடங்கி நடத்தினர். ஆனால், அறிவியல் முறையில் ஆராய்ச்சி செய்ய விரும்பும் வரலாற்றாசிரியர்கள் இனிமேல் தங்களுடைய ஆராய்ச்சியைக் கிருஷ்ணை, காவிரி, வையை ஆகிய ஆறுகளின் சமவெளிகளில் தொடங்கவேண்டும்.'

இது புரட்சியான கருத்து; ஆனால், தர்க்க ரீதியானது. எனினும், இந்த ஆராய்ச்சி முறையை இப்போது கையாள முடியாது. எதிர்காலத்திலேனும் இதனைக் கையாள முடியுமா என்பதும் ஐயத்திற்கிடமானதே. இதற்கு ஆராய்ச்சியாளர்களின் தயக்கம் காரணமன்று. இந்தியப் பண்பாட்டின்

தோற்றத்திலும் வளர்ச்சியிலும் ஆரியரல்லாத மக்களின் வாழ்க்கை முறைகள் முக்கியமான பங்கு பெற்றிருக்கின்றன என்பதை அவர்கள் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள். ஆனுல், பேராசிரியர் சுந்தரம்பிள்ளையே எடுத்துரைக்கின்ற ஒரு நிலே மேற் சொன்ன ஆராய்ச்சி முறையைப் பின்பற்று வதற்குத் தடையாயிருக்கிறது. விந்திய மலேக்குத் தெற்கி லிருக்கும் பகுதிதான் உண்மையான இந்தியா என்றும், அங்கு வாழும் மக்களில் மிகப் பெரும்பாலோர் ஆரியர்க்கு முற்பட்ட இயல்புகளையும் மொழிகளையும் சமுதாய அமைப்புகளையும் தெளிவாகத் தெரிகிற வகையில் இன்னும் பாதுகாத்து வைத்திருக் கின்றனர் என்றும் எடுத்துக்கூறுகிற அவரே, ‘ஆனுல், இங்கேயும் மக்கள் வாழ்க்கையில் ஆரிய இயல்புகள் மிக அதிக மாய்ப் புகுந்துவிட்டதால், அவ்வியல்புகளும் ஆரியர்க்கு முற்பட்ட மக்களியல்புகளும் ஊடிழையும் பாவும்போற் கலந்துவிட்டன. உள்ளூர்ப் பாவையும் வெளிநாட்டு ஊடிழை யையும் இப்போது தனித்தனியாகப் பிரித்துக் காண்பது எளிதன்று. ஆனுல், இந்தியாவில் எந்தப் பகுதியிலாவது அப்படிப் பிரித்துப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பிருக்குமானுல், அது தென்னிந்தியாவில் தானிருக்கிறது. தெற்கே போகப் போக இந்த வாய்ப்பு அதிகமாகிறது’ என்றும் கூறுகிருர். இந்தியப் பண்பாட்டில் ஒன்ருக இணைந்துவிட்ட ஆரிய இயல்புகளையும் ஆரியத்துக்கு முற்பட்ட இயல்புகளையும் தனித்தனியே பிரித்துக் காண்பதற்காகத் தற்கால அறிஞர்கள் இதுவரையில் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போய் விட்டன. ‘திராவிட’ இயல்புகளைப் பிரித்தெடுப்பதற்காக வலிந்து செய்யப்பட்ட முயற்சிகள் சில விசித்திர விளைவு களுக்குக் காரணமாயின. எடுத்துக்காட்டாக ‘ஹனுமான்’ என்னும் சொல் ‘ஆண் மந்தி’ என்னுந் தொடரிலிருந்து வந்தது என்று சிலர் கருதினர். இது தமிழ் மொழி மரபுக்கே முரணுனது. அதுபோலவே ‘பூஜை’ என்னும் வடசொல், ‘பூ’ (மலர்), ‘செய்’ என்னும் இரு தமிழ்ச் சொற்களின் கூட்டு என்றே, ‘பூசு’ (நறுமணத் தைலத்தை அல்லது பலியிடும் உயிர்க்குருதியைப் பூசு) என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்து வந்தது என்றே சொல்லுவதும் பொருந்தாது. சிந்து நதிப் பள்ளத்தாக்கு அகழ்வுகள் எத்தனை பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டனவோ அவற்றைவிட அதிகமான புதிய பிரச்சினைகளைக் கிளப்பியிருக்கின்றன. அங்குக் கிடைத்திருக்கும் ஏராளமான முத்திரைகளிலிருக்கும் எழுத்துகளைப் படித்துப் பொருள் காணும் வரையில் அந்த நாகரிகம் இந்தோ ஆரியர்களுடைய நாகரிகத்தோடும் ‘திராவிடர்கள்’ என்று சொல்லப்படுகிறவர்

களுடைய நாகரிகத்தோடும் எவ்வகையில் தொடர்புடையது என்பதைத் தீர்மானிப்பது எளிதன்று.

இந்த நாட்டில் முதல்முதலில் வாழ்ந்த மக்கள் யார் என்றும், அவர்களுடைய நாகரிகம் எத்தகையது என்றும் அறிவதற்கு நமக்கு உதவியாக இருப்பவை, அந்த நாகரிகத்தினுடைய எஞ்சியிருக்கும் சின்னங்களாக இருக்கக் கூடும் என்று நாம் கருதுகிற சின்னங்களும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய தொல் பொருளாராய்ச்சி முடிவுகளும் ஆகும். அந்தச் சான்றுகளால் நமக்குக் கிடைக்கும் செய்திகளைச் சுருக்கமாக நான் இந்த நூலின் மூன்றும் அதிகாரத்திற் கூறுவேன். ஆனால், அந்தச் செய்திகளெல்லாம் சரியானவையே என்று உறுதி கூறமுடியாது. அவை இப்போதைக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்று சொல்லலாம். ஆனால், தென்னிந்திய வரலாற்றுக்கு முற்பட்ட காலச் செய்திகளை முறையாக ஆராயும் முயற்சி இப்போதுதான் தொடங்கியிருக்கிறது என்பதையும், இன்றிருக்கும் நிலையில் தென்னிந்திய நாகரிகத்தின் வரலாற்றை இன்னும் வட இந்திய வரலாற்றின் மூலந்தான் அணுகவேண்டுமென்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

பொதுவாக வரலாறென்பது, குறிப்பாக இந்திய வரலாறு, அரசர்களைப்பற்றியும் அவர்கள் செய்த எண்ணற்ற போர்களைப் பற்றியும் கால வரிசைப்படி கூறுகிறதே அல்லாது, பொது மக்களைப் பற்றியும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பல துறைகளிலும் உருவாக்கிய பண்பாட்டு இயக்கங்களைப் பற்றியும் கூறுவதில்லையென்று பலர் அடிக்கடி குறை கூறுகின்றனர். ஆனால், இப்போதெல்லாம் வரலாறு என்பதற்கு நாம் முன்னிருந்த குறுகிய பொருளைக் கொள்வதில்லை. அரசியல் துறையிலும் நிருவாகத் துறையிலும் ஏற்படுகின்ற மாறுதல்கள், பொருளாதார—சமுதாய அமைப்புகளின் வளர்ச்சி, சமயத் துறையிலும் கவின் கலைத் துறையிலும் காணும் போக்குகள் முதலிய எல்லாவற்றையும் முன்னெப்போதும் இல்லாத அளவில் இப்போது வரலாற்றாசிரியன் கவனத்தைக் கவர்கின்றன. ஆனால், உடம்புக்கு எலும்புக்கூடு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது வரலாற்றுக்குக் கால வரிசை முறை. அரச வமிசங்களைப்பற்றியும் அவர்கள் செய்த போர்கள், அவர்களடைந்த வீழ்ச்சி முதலியவற்றைப்பற்றியும் போதுமான அளவு தெரியாவிட்டால் நம்பத் தகுந்த ஒரு கால வரிசை முறையை நாம் நிறுவ முடியாது. அந்த வரலாற்றிலேயே பல பகுதிகளைப்பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டிருக்

கிறது; பல செய்திகளைப்பற்றி இன்னும் கருத்து வேறுபாடுகளிருக்கின்றன. ஆதலால், படிப்பவர்களுக்குப் புரியும்படி வரலாற்றாசிரியன் எழுத வேண்டுமானால் அரச வமிசங்களைப் பற்றிய செய்திகளை அதிகமாக எழுதித்தான் ஆகவேண்டும். மேலும், நம் கவனத்தை இவ்வளவு அதிகமாகக் கவரும் மன்னர்களும் சிற்றரசர்களும் தங்கள் குடிமக்களையும் நாட்டையும் பல்வேறு அபாயங்களிலிருந்து காத்தவர்களாய் மட்டுமன்றிப் பண்பாட்டுக்கும் கவின் கலைகளுக்கும் மிகச் சிறந்த ஆதரவளித்து அவற்றைப் பல வழிகளிலும் வளர்த்தவர்களாயும் இருந்தார்கள். கிடைக்கின்ற ஆதாரங்கள் எல்லாவற்றையும் சரியாக ஆராய்ந்து போதுமான அளவில் அவர்களுடைய வரலாற்றை எழுதினால், அதுவே பொதுமக்களுடைய உண்மை வாழ்க்கை வரலாறாகவும் இருப்பதை, அத்தகைய வரலாறு எழுதப்பெறவில்லையே என்று ஏங்குபவர்களும் இப்போது எழுதப்பட்டிருக்கிற வரலாற்று நூல்கள் கவர்ச்சியற்றவை என்று குறை கூறுபவர்களும் உணர்வார்கள். எனவே, கால வரிசை முறைப்படி அரச வமிசங்களுடைய கதையை எழுதுவது இந்திய வரலாற்றில் தவிர்க்க முடியாதது மட்டுமன்றி அவசியமானதும் ஆகும்.

வரலாற்றாசிரியர்கள் பல காலமாக வட இந்திய வரலாற்றை ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால், தென்னிந்திய வரலாறு அண்மையில்தான் ஆராய்ச்சியாளர் கவனத்தைக் கவர்ந்தது. மேலும், தென்னிந்திய வரலாற்றை ஆராய்கின்ற அறிஞர்களின் எண்ணிக்கையும் சிறிய அளவிலே இருக்கிறது. ஆதாரங்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால், அவற்றை ஆராய்ந்து விளக்கந் தரும் வேலை நாம் விரும்புகிற அளவுக்கு வேகமாக நடைபெறவில்லை. இன்னும் ஆராய்ச்சியிலிருக்கும் செய்திகளை விட்டுவிட்டு ஏறக்குறைய ஏற்றுக்கொள்ளப்பெற்ற செய்திகள் மட்டுமே இந்த நூலில் இடம்பெறுகின்றன. ஆனால், தென்னிந்திய வரலாற்றின் பொதுச் செய்திகளே இன்னும் பலருக்குத் தெரியாமலிருப்பதால், அவற்றை ஓரளவு விரிவாக எழுதிய பின்புதான் அந்தப் பகுதியின் பண்பாட்டியக்கங்களைப் பற்றி நாம் கூற முடியும்.

இந்திய வரலாற்றுக்கு—சிறப்பாகத் தென்னிந்திய வரலாற்றுக்கு—பொறிப்புகள் மிகவும் உண்மையான ஆதாரங்களாக இருக்கின்றன. மேலும், அவை எண்ணற்றனவாகவும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் மிகப் பழமையானவை பிராமி எழுத்திலுள்ள அசோகருடைய கட்டளைக் கல்வெட்டுகள். அவை மைசூரிலுள்ள சித்தபுரம், ஜதிங்க ராமேஸ்வரம், பிரமகிரி

ஆகிய இடங்களிலும், ராயச்சூர் மாவட்டத்திலுள்ள மாஸ்கி என்னுமிடத்திலும், கர்நூல் மாவட்டத்திலுள்ள எரகுடி, ராஜுலமந்தகிரி ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன. அவை மௌரியப் பேரரசு தெற்கில் எவ்வளவு தொலைவு பரவியிருந்தது என்பதைக் காட்டுகின்றன. ஆனால், அவற்றின் வாசகம் இந்தியப் பொது வரலாற்றைச் சேர்ந்ததாக இருக்கிறதே தவிரச் சிறப்பாகத் தென்னிந்திய வரலாற்றுடன் தொடர்புடையதாக இல்லை. தமிழகத்திலிருக்கும் இயற்கைக் குகைகளில் காணப்படும் கல்வெட்டுகள் வேறு வகையானவை. அந்தக் குகைகளில் கற்படுக்கைகள் பலவற்றைக் காண்கிறோம். அங்கே காணப்படும் எழுத்துகளில் சில பெயர்கள் இருக்கின்றன. அவைகள் அந்தப் படுக்கைகளைச் செதுக்கியவர்களுடைய பெயர்களாகவோ அவற்றில் படுத்துறங்கியவர்களின் பெயர்களாகவோ இருக்கக்கூடும். எழுத்துகள் அசோகர் காலத்து பிராமி எழுத்துகளினின்று சிறிது மாறுபட்டவையாக இருந்தாலும், அவை பிராமி எழுத்துகள் என்பது உறுதி. அவற்றில் பயன்படுத்தப் பட்ட மொழியோ கல்வெட்டாராய்ச்சியில் இதுவரையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மிகப் பழைய தமிழ் மொழியின் வடிவமே என்பது தெரிகிறது. தமிழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டுகள் இருபது முப்பதுக்குமேல் இல்லை. ஆனால், இலங்கையில் இத்தகைய கல்வெட்டுகள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. இந்தக் கல்வெட்டுகளிற் காணும் செய்திகள் சுருக்கமாக இருந்தாலும் அவற்றின் பொருள் இன்னும் ஓரளவு தெளிவற்றதாகவே இருக்கிறது. எனினும், கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னைய நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சமணத் துறவிகள் இருந்தார்களென்பதை இந்தக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. அந்தக் கற்படுக்கைகளில் படுத்துறங்கியவர்கள் அனைவருமே சமணத் துறவிகள் என்று சொல்ல முடியாது; பௌத்தத் துறவிகளும் சிலர் இருந்திருக்கக்கூடும். இந்த வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த வேறு பல பொறிப்புகளும் தென்னிந்தியாவில் கிடைத்திருக்கின்றன. கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கிலுள்ள 'பட்டிப்ரோலு' என்னுமிடத்தில் திருச்சின்னப் பேழை ஒன்று கிடைத்திருக்கிறது. அந்தப் பேழைமீது சில எழுத்துகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் பழங்காலத்திலேயே புத்த மதம் பரவியிருந்தது என்பதை இது காட்டுகிறது. மேற்குத் தக்காணத்தில் கன்ஹேரி, கார்லே, நாசிக் முதலிய இடங்களிலுள்ள மிக அழகிய குகைக் கோயில்களின் சுவர்களிலும் தூண்களிலும் சாதவாகன வமிச அரசர்களுடைய பழைய கல்வெட்டுகள் இருக்கின்றன. அந்தத் தொல்பொருட் சின்னங்களிலுள்ள மொழி அவ்வப் பகுதிகளில்

வழங்கிய பிராக்கிருத வகையைச் சேர்ந்தது. அப்போது பொது மக்கள் பேசிய சமஸ்கிருதத்தோடு தொடர்புடைய மொழி களெல்லாமே பிராக்கிருதம் என்ற பெயரால் குறிக்கப்பட்டன. எழுத்துகளில் இடத்தாலும் காலத்தாலும் ஏற்பட்ட சில மாறுதல்களிருந்தாலும், அவையெல்லாமே கல்லிற் பொறிக்கப் பெற்ற பிராமி எழுத்துகளே ஆகும்.

சாதவாகனர்களுக்குப் பின் வந்த அரசர்கள் காலத்தில் கல்வெட்டுகளோடு செப்பேடுகளும் வழக்கிற்கு வந்தன. சில வமிசங்களைப்பற்றி மிகச் சில சான்றுகளே கிடைத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பிரிஹத்பலாயன வமிசத்தைப்பற்றி ஒரே செப்பேடு மட்டும் கிடைத்திருக்கிறது. ஏறக்குறையக் கி.பி. நான்காம் நூற்றாண்டு வரையில் பிராக்கிருதம் வழக்கிலிருந்தது. அதன்பின் இரண்டு மூன்று நூற்றாண்டுக் காலம் கடம்பர்கள், கங்கர்கள், பல்லவர்கள் ஆகியவர்கள் வடமொழியையே தங்கள் அலுவல் பதிவுகளில் பயன்படுத்தினார்கள். அதற்குப் பின் அவர்கள் வடமொழியோடு அவ்வப் பகுதி மக்கள் பேசிய மொழி களாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றையும் பயன் படுத்தினார்கள். இவ்வாறு இரு மொழியாட்சி வழக்கிற்கு வந்தது. இருமொழிக் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பொதுவாக வடமொழியைத் தொடக்கத்திலும் இறுதியிலும் காண்கிறோம்; இடையில் மக்களுடைய தாய்மொழியாகிய கன்னடமோ தெலுங்கோ தமிழோ இருக்கிறது. சிறப் பாகக் கோயில்களுக்கும் கல்விமான்களுக்கும் வழங்கப்பெற்ற கொடைகள், நிலங்களின் எல்லைகள் முதலியவற்றை விவரமாக எழுதுவதற்குத் தாய்மொழியே பயன்பட்டது. ஏறக்குறைய கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து தாய்மொழியிலேயே எழுதிய ஆவணங்கள் மிகுதியாக வழக்கிற்கு வந்தன. எனினும், வடமொழியும் அரசாங்க அலுவலில் தொடர்ந்து பயன்பட்டது. முழுதும் வடமொழியில் எழுதியவையும் தாய்மொழியும் வட மொழியும் கலந்து எழுதியவையுமான அந்தக் காலத்தைச் சேர்ந்த ஆவணங்கள் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. மேலும், நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வடமொழி பெரு மதிப்பைப் பெற்றிருந்தது. அதுவே பண்பாட்டுத் தொடர்புக்கு மிகவும் ஏற்ற மொழியாகக் கருதப்பட்டது.

எழுத்துகளின் வரிவடிவம் பல மாறுதல்களையடைந்தது. இன்றைய கன்னட எழுத்துகள், தெலுங்கு எழுத்துகள் ஆகியவற்றிற்கு முன்னோடியான ஓர் எழுத்து வடிவம் தக்கா ணத்தில் வழக்கிற்கு வந்தது. தமிழகத்தில் நிகழ்ந்த மாறுதல்கள்

வேறு வகையானவல்ல. அம் மாறுதல்களின் பயனாக முதலில் கிரந்த எழுத்துகள் தோன்றின. அவற்றைக் கி.பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த பல்லவர்களின் பொறிப்புகளிற் காண்கிறோம். அவற்றுக்குப் பிற்பட்ட பொறிப்புகளிலுள்ள எழுத்துகள் அப்போது வழக்கிலிருந்த இருவகைப்பட்ட தமிழ் எழுத்துகளோடு சேர்ந்து மாறுதலடைந்தன. இந்த இரு வரிவடிவங்கள்—தமிழெழுத்து, வட்டெழுத்து—எவ்வாறு தோன்றின என்ற கேள்விக்கு இன்னும் முடிவான விடை கிடைக்கவில்லை. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் வடநாட்டில் வழக்கிலிருந்த ஓர் எழுத்து வடிவிலிருந்து தமிழ் எழுத்துகள் முதலில் தோன்றியிருக்கலாம் என்றும், பின்னர்த் தமிழகத்தில் வடமொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட கிரந்த எழுத்துகளின் சேர்க்கையால் அவை மாறுதலடைந்திருக்கலாமென்றும் பூலர் என்பவர் கூறுகிறார். வட்டெழுத்து என்பது வட்டமான எழுத்து. அது வேகமாக எழுதுவதற்கேற்ற நேரொழுக்கான எழுத்தாக இருக்கலாம் என்பது பூலர் கருத்தாகும். அந்த எழுத்துக்கும் இன்னொரு வகைத் தமிழெழுத்துக்கும் உள்ள தொடர்பு மராட்டியர்கள் பயன்படுத்தும் மோடி என்னும் எழுத்து முறைக்கும் பால்போத் என்னும் எழுத்து முறைக்கும் உள்ள தொடர்பையும், டோக்ரா மக்கள் பயன்படுத்தும் தாக்கரி என்னும் எழுத்து முறைக்கும் சாரதா என்னும் எழுத்து முறைக்கும் உள்ள தொடர்பையும் போன்றது என்று பூலர் மேலும் கூறுகிறார். மோடி, தாக்கரி ஆகிய எழுத்துகளை வடஇந்திய வாணிகர்களும் எழுத்தர்களும் பயன்படுத்துகிறார்கள். ஏறக்குறையப் பத்தாம் நூற்றாண்டில் வட்டெழுத்து வழக்கொழிந்தது. ஆனால், அது மேற்குக் கடற்கரையில் அதற்குப் பின்னும் நெடுங்காலம் வழக்கிலிருந்தது.

பழைய பல்லவ கிரந்த எழுத்திற்கும் தெலுங்கு, கன்னட எழுத்துகளுக்கு முன்னோடியான தட்சிண எழுத்துக்கும் அதிக வேறுபாடு தோன்றாத நிலையில் கடல் கடந்து சென்று குடியேறிய இந்துக்கள் அந்தப் பல்லவ கிரந்த எழுத்தை மேற்கு ஜாவா, போர்னியோ, இந்தோசீனா ஆகிய நாடுகளில் நுழைத்தார்கள். அந்த எழுத்தை அந்த நாடுகளிலுள்ள பல கல்வெட்டுகளிற் காண்கிறோம். அந்தக் கல்வெட்டுகளில் மிகப் பழமையானவை ஏறத்தாழக் கி.பி. 300ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. அக் கல்வெட்டுகளில் பயின்றுள்ள மொழி சமஸ்கிருதம்.

ஆறும் நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. எனினும், வரலாற்றாசிரிய

னுக்குப் பெரிதும் உதவுபவை செப்பேடுகளாகவே இருக்கின்றன. இந்த நிலை இன்னுஞ் சில நூற்றாண்டுக் காலம் தொடர்கிறது. செப்பேடுகளை எந்த வரலாற்றாசிரியனும் புறக்கணிக்க முடியாது. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையில் ஆட்சி செய்த பாண்டிய அரசர்களின் வரலாற்றை அறிவதற்கு மிகப் பெரிதும் உதவுபவை இரண்டு நீண்ட செப்பேட்டு ஆவணங்கள். அவை வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் எழுதப்பெற்றவை. வடமொழிக்குக் கிரந்த எழுத்தும் தமிழுக்கு வட்டெழுத்தும் பயன்பட்டிருக்கின்றன. அது போலவே, சிம்மவிஷ்ணு வமிசத்தைச் சேர்ந்த பல்லவ அரசர்களுடைய வரலாற்றுக்கும் கல்வெட்டுகளைக் காட்டிலும் செப்பேடுகளே மிகுந்த சான்றுகளைத் தருகின்றன. கிழக்குச் சாளுக்கியர்களின் வரலாற்றில் ஏறக்குறைய எல்லாச் செய்திகளையும், பாதாமிச் சாளுக்கியர் வரலாற்றுச் செய்திகளில் பெரும் பகுதியையும் செப்புப் பட்டயங்களிலிருந்துதான் அறிகிறோம். சோழர் காலத்துச் செப்பேடுகளிற் பல நீளமானவை. பெரிய பெரிய வளையங்களிற் கோக்கப்பட்ட பெரிய பெரிய தகடுகளில் வாசகங்கள் செதுக்கப்பெற்றிருக்கின்றன. அந்தத் தகடுகள் நன்றாக வார்க்கப்பட்டவை. அந்த வளையங்களின்மீது வட்டமான பெரிய முத்திரையும் பற்றவைக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் மிகவும் முக்கியமானவை பின்வருவன:

1. லெயிடன் பட்டயம்: அது ராஜராஜனுடைய 21ஆம் ஆண்டைச் சேர்ந்தது. டச்சுக்காரர்கள் கையில் சிக்கியதால் அது லெயிடன் நகரத்துப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. அதனால்தான் அதற்கு லெயிடன் பட்டயம் என்று பெயர் வந்தது.

2. திருவாலங்காட்டுச் செப்பேடு; 3. கரந்தைச் செப்பேடு: இவை இரண்டும் முதலாம் ராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்தவை.

4. சாரலாச் செப்பேடு: இது வீர ராஜேந்திரனுடைய ஏழாம் ஆண்டைச் சேர்ந்தது. அதிற் காணும் நீண்ட வடமொழி முகப்புரை (ப்ரசஸ்தி) அதே அரசன் காலத்தைச் சேர்ந்த கன்னியாகுமரிக் கல்வெட்டின் நேர்படியாக இருக்கிறது.

விஜயநகர அரசர்களுடைய செப்பேடுகளில் காணும் வடமொழி பெரும்பாலும் நந்திநாகரி எழுத்தில் இருக்கிறது. நாகரி எழுத்தில் நந்திநாகரி என்பது ஒரு வகை.

பிற்காலத்தைச் சேர்ந்த சில பட்டயங்கள் வெள்ளித் தகடுகளில் செதுக்கப்பெற்றிருக்கின்றன. இப்படி வெள்ளித் தகடு

களில் பொறிப்பது எப்போதாவது அருமையாகக் கையாளப்பட்ட முறையேயாகும். பொதுவாக எல்லாப் பட்டயங்களும் செப்புத் தகடுகளால் ஆனவையே. அதுதான் விதி. அதனால், மிகப் பெரிய அரசர்களும் தங்கள் பட்டயங்களைச் செப்புத் தகடுகளில் தான் பொறித்து வைத்தார்கள். டச்சுக்காரர்களுக்கு 1658-ல் தஞ்சை விஜயராகவ நாயக்கர் அளித்த பட்டயமும், 1676-ல் ஏக்கோஜி அளித்த பட்டயமும் வெள்ளித் தகடுகளிற் பொறிக்கப்பட்டிருக்கின்றன. முதற் பட்டயம் தெலுங்கிலும் இரண்டாவது பட்டயம் தமிழிலும் பொறிக்கப்பட்டவை. அவைகள், முன்னர் பட்டேவியா என்று வழங்கிய ஜாக்கர்த்தாவின் பொருட்காட்சிச்சாலையில் இருக்கின்றன.

சொத்துகளுக்கு உரிமை கொண்டாடுவதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் போலிச் செப்பேடுகளை உருவாக்கியதும் உண்டு. ஆனால், ஆராய்ச்சி வல்லுநர்கள் இத்தகைய போலி ஆவணங்களை எளிதிற் கண்டுபிடித்துவிடுகிறார்கள் என்று பொதுவாகக் கூறலாம். போலிச் செப்பேடுகள் மிக அதிகமாக இருப்பதால், கங்கவமிச அரசர்களுடைய வரலாற்றை ஆராயப் புகுந்த வரலாற்றாசிரியர்கள் பெருங் குழப்பத்திற்கு ஆளானார்கள். உண்மையான ஆவணங்கள் இப்போது கிடைத்திருப்பதால், அந்தக் குழப்பம் குறையத் தொடங்கியிருக்கிறது.

செப்பேடுகள் நூற்றுக்கணக்கிலேதான் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால், கல்வெட்டுகளோ பல்லாயிரக் கணக்கில் கிடைத்திருக்கின்றன. அவையெல்லாமே வரலாற்று முக்கியம் வாய்ந்தவை அல்ல. அவற்றுள் மிகப்பல கோயில்களுக்குச் சிறிய அளவில் தானமாகக் கொடுக்கப்பட்ட விளக்குகள், ஆடுகள், நிலங்கள் முதலியவற்றைப் பற்றியவை. பெருங் கொடைகளைப் பற்றிய பதிவுகள் நமக்கு மிக முக்கியமானவை. அத்தகைய கொடைகள் அரசர்களால், குறிப்பாக ஆட்சியிலிருக்கும் அரசர்களால், அளிக்கப்படும்போது அவை வரலாற்றாசிரியர் கவனத்தை மிகவும் கவர்கின்றன; ஏனெனில் அத்தகைய ஆவணங்களிலே அந்தக் கொடைகளைப் பற்றிய விவரங்கள் மட்டுமன்றி அவற்றைப் பெற்றவர்களுக்கு என்னென்ன வரிகள் விலக்கப்பட்டன, என்னென்ன தனியுரிமைகள் அளிக்கப்பட்டன, அந்தக் காலத்திய அரசியல் கொள்கைகளும் நிருவாக முறைகளும் எத்தகையவாயிருந்தன என்பவை போன்ற பல்வேறு செய்திகளையும் நாம் காண்கிறோம். முதலாம் ராஜராஜன் தஞ்சைப் பெரிய கோயிலின் சுவர்களில் பொறித்துள்ள தமிழ்க் கல்வெட்டுகள் மிகவும் முக்கியமானவை. அவற்றைப் பொறித்த

வர்களின் தொழில் நுட்பத்திறன் மிகச் சிறந்தது. தான் நிறுவிய பேரரசின் புகழுக்கும் பெருமைக்கும் சின்னமாக ராஜராஜன் கட்டிய அந்தக் கோயிலின் பொருளாதார நிலையைப் பற்றிய எல்லா விவரங்களையும் அந்தக் கல்வெட்டுகளில் நாம் காண்கிறோம். சோழர் காலத்தைச் சேர்ந்த இன்னும் பல பெரிய கல்வெட்டுகளிலிருந்து மக்கள் வாழ்க்கையைப் பற்றிய பல்வேறு கவர்ச்சிமிக்க செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அப்போதிருந்த கிராம சபைகள் எவ்வாறு அமைந்தன, அவற்றின் பணிகள் யாவை என்னும் செய்திகளும், வாணிகச் சங்கங்களும் கைவினைக் கழகங்களும் பொருளாதாரத் துறையிலும் கவின் கலைத் துறையிலும் எத்தகைய பணிகளை ஆற்றின என்னும் செய்திகளும், முக்கியமான கல்வி நிலையங்களில் எத்தனை ஆசிரியர்களும் மாணவர்களும் இருந்தார்கள், அங்கு என்னென்ன துறைகளில் கல்வி கற்பிக்கப்பட்டது என்னும் செய்திகளும், இன்னும் இவை போன்ற பல செய்திகளும் நமக்கு அந்தக் கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கின்றன. வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த திருமுக்கூடல் கல்வெட்டோ தனிப் பெருமை வாய்ந்தது. அந்த ஊரிலிருந்த மருத்துவமனையில் என்னென்ன மருந்துகள் இருந்தன என்னும் பட்டியலை அந்தக் கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம். காகதீய வமிசத் தரசனான கணபதியின் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு அந்தக் காலத்திய கடல் வாணிகத்தின் நிலைமையைத் தெரிவிக்கிறது. இத்தகைய ஆவணங்கள் மிகச் சிலவே இருக்கின்றன.

ஒரு பெயரை மட்டுமோ சிறியதொரு கொடையையோ குறிக்கின்ற மிகச் சிறிய கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் தவிர, ஏனைய பொறிப்புகளெல்லாம் ஒரே வகையான கட்டுரை முறையைக் கடைப்பிடித்திருக்கின்றன. தொடக்கத்தில் மங்கல வாசகம் இருக்கிறது. சில பொறிப்புகளில் அந்த மங்கல வாசகம் உரை நடையிலும் மற்றவற்றில் செய்யுள் நடையிலும் இருக்கிறது. சில பொறிப்புகளில் ஒரே செய்யுளும் சிலவற்றில் பல செய்யுள்களும் இருக்கின்றன. சில பொறிப்புகளில் யாதேனும் ஒரு தெய்வ வழிபாட்டு வாசகமும், சிலவற்றில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல தெய்வங்களை வழிபடும் வாசகங்களும் இருக்கின்றன. அதற்குப் பின் முகப்புரை (பிரசஸ்தி) வருகிறது. குறிப்பிட்ட கல்வெட்டோ செப்பேடோ பொறிக்கப்பெற்ற காலத்து அரசன் அவனுடைய முன்னோர்கள் ஆகியவர்களுடைய பெயர்களும், அவர்களுடைய அருஞ் செயல்களும் முகப்புரையில் குறிப்பிடப்படுகின்றன. ஓர் அரசன் காலத்தில் பொறிக்கப்பட்ட பலவேறு செப்பேடுகளிலும்

கல்வெட்டுகளிலும் இந்த முகப்புரை ஒன்றுகவே இருப்பதும் உண்டு. அரசு வரலாற்றை ஆராயும் அறிஞர்களுக்கு இந்தப் பகுதிதான் மிக முக்கியமானது. இது மெய்க்கீர்த்தி என்று பெயர் பெறும். நன்கொடையளிப்பவர்கள் அரசர்களைத் தவிர வேறு மனிதர்களாக இருந்தால், அவர்களுடைய பெயர்களும் அவர்களுடைய முன்னோர்கள் பெயர்களும் அவர்களுடைய அருஞ் செயல்களும் கட்டுரையின் அடுத்த பகுதியாக இருக்கும். நன்கொடையைப் பெறுகிறவர் தனி மனிதராயிருந்தால் அவருடைய பெயர், அவருடைய முன்னோர்களுடைய பெயர்கள், அவர்களைப் பற்றிய செய்திகள் ஆகியவை கட்டுரையின் அடுத்த பகுதியிற் சுருக்கமாகக் குறிக்கப்படும். அறக்கொடையாதேனும் ஒரு குழுவிற்கோ கோயிலுக்கோ கொடுக்கப்படும்போது அதனைப் பற்றிய செய்திகள் ஓரளவு விவரமாகக் குறிக்கப்படும். தானமாகக் கொடுக்கப்பட்ட பணம், கால்நடைகள், வரிவிலக்குப் போன்ற விவரங்கள் அதற்கு அடுத்த பகுதியில் இடம் பெறும். பெரும்பாலும் நிலக்கொடையைப் பற்றிய பட்டயங்கள் மிகுதியாய் இருக்கின்றன. அத்தகைய பட்டயங்களில், தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் துல்லியமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த பகுதியில் நன்கொடை எவ்வாறு கொடுக்கப்பட்டது என்னும் செய்தி இடம் பெறுகிறது. பொதுவாக, கொடுப்பவர் தம் கையில் நீரை எடுத்துப் பெறுபவர் கையில் ஊற்றுவதுதான் கொடுக்கும் முறை. இதனை, 'நீர் வார்த்துக் கொடுத்தான்' எனப் பல சாசனங்கள் கூறுகின்றன. நன்கொடை பெற்றவர் அதனை எவ்வித வில்லங்கமும் இல்லாமல் என்றென்றும் அநுபவிக்க வேண்டுமென்ற கூற்றுடன் இந்தப் பகுதி முடிகிறது. இறுதியில், இந்தக் கொடைக்கு ஊறு செய்பவர்கள் என்னென்ன துன்பத்திற் காளாவார்களென்றும், அதனைப் பாதுகாப்பவர்கள் என்னென்ன இன்பங்களைப் பெறுவார்களென்றும் குறிப்பிடும் வாசகத்தோடு பட்டயங்கள் முடிவடைகின்றன.

நீண்ட பொறிப்புகளிற் சில, நினைவூட்டு சாசனங்களாகவும் சமர்ப்பணச் சாசனங்களாகவும் இருக்கின்றன. அவற்றில் அரச மரபுகளைப் பற்றிய நீண்ட முகப்புரைகள் உள. இத்தகைய பொறிப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குபவை இரண்டாம் புலிகேசன் காலத்திய ஐஹோல் பொறிப்பும், கடம்பர் காலத்திய தாலகுண்டத்துத் தூண் பொறிப்பும் ஆகும். ஆனால், மூன்றும் ராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த திருவந்திபுரத்துப் பொறிப்பைப் போலக் கலப்பில்லாத வரலாற்றுப் பதிவாக விளங்கும் பொறிப்புகளைக் காண்பது

மிகவும் அருமையானது. இந்தப் பொறிப்பில் அந்த அரசன் அடைந்த துன்பங்களும் ஹொய்சளர்களுடைய உதவியால் அத் துன்பங்கள் ஒழிந்த விதமும் ஒளிவு மறைவின்றி அப்படியே எழுதப்பட்டிருக்கின்றன. அதுபோலவே, இன்னும் இரண்டு பொறிப்புகள் நமது கவனத்தை முக்கியமாகக் கவர்கின்றன. அவற்றுள் ஒன்று புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள குடுமியா மலையி லிருக்கிறது. ஒரு பாறையின் முகப்பில் ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த அலங்காரமான பல்லவகிரந்த எழுத்தில், அந்தச் சாசனம் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. ருத்திராச்சாரியர் என்பவரின் மாணவனான ஓர் அரசன் தன்னுடைய மாணவர்கள் படிப்பதற்காக இசைக் குறியீடுகளின் பல தொகுதிகளை அந்தக் கல்லில் எழுதி வைத்திருக்கிறான். அவன் தன்னை மாகேஸ்வரன் (சிவனை வழிபடுபவன்) என்று குறிப்பிடுகிறான். இரண்டாம் பொறிப்புத் தஞ்சை மாவட்டத்தி லுள்ள திருவிடைவாயில் என்னும் ஊரிலிருக்கிறது. அதில் அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் கடவுளைப் பற்றித் திருஞானசம்பந்தர் பாடியருளிய ஒரு முழுப் பதிகமேயிருக்கிறது. அந்தப் பதிகம் வேறெங்கும் காணப்படாதது. திருஞான சம்பந்தர்க்கேயுரிய பக்தி யியல்புகளையும் கவிதையியல்புகளையும் அந்தப் பதிகத்தில் காணலாம்.

பழைய பொறிப்புகளெல்லாமே அந்தந்த அரசர்களின் ஆட்சியாண்டுகளை மட்டும் குறிக்கின்றன. தொல்லெழுத்துக் கலையின் உதவியால்தான் அவற்றின் காலத்தை நிர்ணயிக்க முடியும். சமகால நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பொறிப்புகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. அத்தகைய சமகால இணைப்பைக் காட்டும் பொறிப்புகள் கிடைக்கும்போது, நமது வேலை மிக எளிதாகிவிடுகிறது. முதலாம் புலிகேசனுடைய பாதாமிக் கல் வெட்டில்தான் சக வருடம் முதன் முதலில் குறிக்கப்பெறுகிறது. அந்த அரசன் வாதாபி மலைக்குச் சகவருடம் 465-ல் (கி.பி. 543-ல்) அரண் அமைத்த செய்தியை அந்தக் கல் வெட்டு நமக்குத் தெரிவிக்கிறது. ஆனால், அந்தக் கல்வெட்டு வரலாற்றாசிரியர் பார்வைக்கு வந்தது 1941-ல்தான். பிற் காலத்திய பொறிப்புகளில் சக ஆண்டு குறிக்கப் பெற்றாலும் இல்லாவிட்டாலும் வானநூற் செய்திகள் பல இடம் பெறு கின்றன. ஆனால், அவற்றின் உதவியால் பொறிப்புகளின் காலத்தை நிர்ணயிப்பது எளிதன்று. சில பொறிப்புகளில் காணும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரண்படுவதால், நாம் சரியான காலத்தை நிர்ணயிக்க முடிவதில்லை. அத்தகைய நிலையில் சரியாக இருக்கக்கூடும் என்று நமக்குத் தோன்றுகின்ற

காலத்தை வைத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. முதலாம் பராந்தக சோழன் காலத்தைச் சேர்ந்த ஒரு பொறிப்புத் தென்னார்க்காட்டு மாவட்டத்தில் கிடைத்திருக்கிறது. அதில் கலியுகம் தோன்றி எத்தனை நாள் கழிந்தபின் அந்த ஆவணம் பொறிக்கப்பெற்றதென்பது கூறப்படுகிறது. அந்தக் கணக்குப் படி அந்த ஆவணத்தின் காலத்தை நாம் சரியாக நிர்ணயிக்க முடிகிறது. அரசர்களுடைய ஆட்சியாண்டுகளைக் குறிப்பிடு கின்ற பாண்டியப் பொறிப்புகள் பலவற்றில் ஓராண்டுக் கெதிராக இன்னேராண்டும் குறிக்கப் பெறுகிறது. இதன் காரணம் நமக்குச் சரியாகப் புரியவில்லை. ஆனல், கல்வெட் டாராய்ச்சி அறிஞர்கள் அந்த ஈராண்டுகளையும் கூட்டி அதனல் வருகின்ற தொகையை அந்தச் சாசனம் வழங்கப்பெற்ற ஆண்டாக வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பொறிப்புகளெல்லாம் உண்மையைக் கூறுகின்றன என்று சொல்ல முடியாது. முழு உண்மையையும் குறிக்கின்ற பொறிப்புகள் மிகவும் அரியனவாகும். பொறிப்புகள் கூறு கின்ற செய்திகளுள் பல கற்பனைக் கதைகளும் உயர்வு நவிற்சியும் கலந்தவை. அவற்றை எளிதிற் கண்டுபிடித்து விடலாம். ஆனல், எப்போதும் போரிட்டுக் கொண்டிருக்கிற அரச வமிசங்களைப் பற்றிய ஒருசார்பான கூற்றுகளை ஆராய்ந்து அவற்றில் எது மெய் என்றும் எது பொய் என்றும் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். ஒரு போரில் ஈடுபட்ட இரு சாராரும் தாமே வெற்றி பெற்றதாகக் கூறும் பொறிப்புகள் எண்ணற்றவை. சில சமயங்களில் அத்தகைய கூற்றுக்கு ஏதாவதொரு வகை ஆதாரமிருப்பதையும் நாம் அறிகிறேம். பொறிப்புகளிற் காணும் பொருளாதாரச் செய்திகளையும் சமுதாயச் செய்தி களையும் ஆராய்ந்து பார்த்து முடிவுகட்டும் வேலை இன்னும் சரி யானபடி நடைபெறவில்லை. அதற்கு முக்கியமான காரணம் கல்வெட்டாராய்ச்சித் துறையினர் கல்வெட்டுகளின் படிகளைப் போதுமான விரைவில் வெளியிடாததாகும்.

நாணயங்களிற் காணும் சிறிய பொறிப்புகள் நமக்குத் தருகின்ற சான்று கல்வெட்டுகளின் மூலமும் செப்பேடுகளின் மூலமும் நமக்குக் கிடைக்கின்ற வரலாற்றுச் சான்றுகளோடு நெருங்கிய தொடர்புடையது. ஆனல், வடஇந்திய நாணயங்களை ஆராய்வதைவிடத் தென்னிந்திய நாணயங்களை ஆராய்வது, மிகக் கடுமையாயிருப்பது மட்டுமன்றித் தென்னிந்திய நாணயங்களை ஆராய்வதால் வரலாற்றுசிரியர் அடையும் பயனும்

குறைவாயிருக்கிறது. உண்மையிலேயே பழைய நாணயங்கள் தென்னிந்தியாவில் அதிகமாக இல்லை. அவற்றிலுள்ள எழுத்துகளும் அதிகமான செய்திகளைத் தருவதில்லை. பெரும்பாலும் அவற்றில் அரசர்களுடைய பெயர்கள் அல்லது பட்டப் பெயர்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றின் வெளியீட்டாண்டுகளும் அவற்றிற் குறிக்கப் பெறவில்லை. மேலும் அவற்றிற் காணும் எழுத்துப் பொறிப்பும் செப்பமற்றதாயும் தெளிவற்றதாயும் இருக்கின்றது. கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட நூற்றுண்டுகளில் நீண்ட சதுர வடிவையும் அடையாளத் தொளைகளையுமுடைய மட்ட வெள்ளி நாணயங்கள் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வழக்கிலிருந்தன. அவை தாம் தர்மசாஸ்திரங்கள் கூறுகின்ற 'புராண' நாணயங்கள். அது போலவே அடையாளத் தொளைகளையுடைய செப்பு நாணயங்களும் வழக்கில் இருந்தன. ஆனால் அந்த நாணயங்கள் ஏறக்குறையக் கி.பி. 200ஆம் ஆண்டில் வழக்கொழிந்து போயின. பிற்காலத்தில் வெளியிடப்பட்ட முக்கியமான தென்னிந்திய நாணயங்கள் பொன்னாலானவை; சில்லறை நாணயங்கள் மட்டும் செப்பாலானவை. தங்க நாணயங்களில் வராகன் என்றும் பணம் என்றும் இருவகை நாணயங்களிருந்தன. சாளுக்கிய மன்னர்களின் பன்றிக் கொடிச் சின்னத்திலிருந்து வராகன் என்னும் பெயர் வந்திருக்கலாம் (வராகம்—பன்றி). இந்த வராகன் நாணயத்திற்குப் பொன் என்றும், ஹூன் என்றும், பகோடா என்றும், பர்தாவோ என்றும் பல பெயர்கள் வழங்கின. வராகன் பொதுவாக ஒரு கழஞ்சு எடையுடையது. பணம் என்பது வராகனில் பத்தில் ஒரு பங்கு. அது ஒரு மஞ்சாடி அல்லது இரு குன்றிமணி எடையுடையது. தென்னிந்தியாவில் வழக்கிலிருந்த மிகப் பழைய தங்க நாணயங்கள் சிறு கோள வடிவில் இருந்தன. அவற்றில் மிக மிகச் சிறிய தொளையிடப்பட்டிருந்தது. வேறு சின்னம் எதுவும் அவற்றில் இல்லை. பின்பு பத்ம தங்கம் என்னும் தங்க நாணயம் வழக்குக்கு வந்தது. அது தகட்டில் செய்த சிறிய கோப்பை வடிவில் இருந்தது. முதலில் பத்ம தங்கத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் அடையாளப் பொறிப்பு இருந்தது. பின்னர் இரு பக்கத்திலும் அடையாளப் பொறிப்புகளைக் கொண்ட நாணயங்கள் வழக்கிற்கு வந்தன. முதலாம் ராஜேந்திர சோழன், முதலாம் ராஜாதிராஜ சோழன், கிழக்குச் சாளுக்கிய மன்னனான முதலாம் ராஜராஜன் ஆகியவர்களுடைய தங்க நாணயங்கள் தௌளேஸ்வரத்தில் (1946-ல்) கண்டுபிடிக்கப் பட்டன. அவற்றிலெல்லாம் ஒரு பக்கத்தில்தான் அடையாளப் பொறிப்பு இருக்கிறது. இறுதியாக வார்ப்புருவத் தங்க

நாணயங்கள் வழக்கிற்கு வந்தன. சிறிய கெட்டியான விஜய நகரப் பகோடா, வார்ப்புருவத் தங்க நாணயங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கின்றது. சிறிய நாணயங்களை மக்கள் பெரிதும் விரும்பினார்கள். கள்ளிக் கோட்டையில் வழக்கிலிருந்த 'தாரஸ்' என்னும் வெள்ளி நாணயம் தென்னிந்திய நாணயங்களில் மிகச் சிறியவற்றிற்கு எடுத்துக் காட்டாகும்.

கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிற்கும் ரோமானியப் பேரரசுக்கும் நடைபெற்ற வாணிகத்தின் பயனாக எண்ணற்ற ரோமானியத் தங்க, வெள்ளி நாணயங்கள் இங்கு வந்து சேர்ந்தன. அவை தென்னிந்தியாவில் தடையேதுமின்றிச் செலாவணியில் இருந்தன. ரோமானியச் சின்னங்களும் எழுத்துகளும் பொறித்த சிறிய செப்பு நாணயங்களும் தென்னிந்தியாவில் செலாவணியில் இருந்தன. ஆனால், அவைகள் வெளிநாட்டிலிருந்து வந்து தங்கிய வணிகர்கள் இங்கேயே அடித்து வெளியிட்டவையாக இருக்கலாம். சாதவாகனர்கள் தங்கள் நாணயங்கள் பலவற்றை ஈயத்தாற் செய்தார்கள். அவர்களுடைய நாணயங்களிற் பொறிக்கப் பட்டிருக்கும் அரசர்களின் பெயர்களும் புராணங்களிற் கூறப் பெற்றுள்ள சாதவாகன அரசர்களுடைய பெயர்களும் ஒத்திருக் கின்றன. அவர்களுடைய நாணயங்கள் சிலவற்றின் முன் புறத்தில் இரண்டு பாய்மரமுடைய கப்பலின் உருவம் இருக்கிறது. ஆந்திரர்கள் கடற்பயணஞ் செய்தவர்கள் என்பதை அது காட்டுகிறது. அதே வகையான நாணயங்கள் அதே காலத்திலோ அதற்குச் சிறிது பின்னரோ தமிழகத்திலும் வழக்கிலிருந்தன.

முதல் முதலில் பத்மதங்க நாணயங்களை வெளியிட்டவர்கள் கடம்பர்களே என்று நினைக்க ஆதாரம் இருக்கிறது. ஆனால், மிக உறுதியாகக் கால நிர்ணயம் செய்யக்கூடிய ஒரு நாணயம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அது மட்ட வெள்ளியாலானது. அதன் முன்புறத்தில் ஒரு சிங்கத்தின் உருவமும் விஷமசித்தி என்னும் பட்டப் பெயரும் இருக்கின்றன. அது விஷ்ணு வர்த்தனனால் வெளியிடப்பட்டதென்பது தெளிவாகத் தெரிகிறது. கி.பி. 615 முதல் கி.பி. 633 வரையில் ஆட்சி செய்த அந்த அரசன் தான் கிழக்குச் சாளுக்கிய அரசை நிறுவியவன். செப்பு வெள்ளி நாணயங்களில் மிகச் சிறு தொளையிடும் வழக்கம் நின்று போன பின்னும் தங்க நாணயங்களில் அவ்வாறு செய்யும் வழக்கம் நெடுநாள் வரையில் இருந்தது. நெல்லூரில் ஆட்சி செய்த

தெலுகுச் சோடர்கள் பதின்மூன்றும் நூற்றாண்டில் வெளியிட்ட நாணயங்களின் ஒரு பெருங்குவியல், கோடூர் என்னும் இடத்தில் 1913-ல் கண்டுபிடிக்கப்பட்டது. அவற்றை ஆராய்ந்து பார்த்ததில் பத்மதங்க நாணயங்கள் நீண்ட வரலாறுடையவை என்பதையும், அவற்றில் பலவேறு கிளைவகைகள் இருந்தன என்பதையும், நாம் அறிகிறோம். காகதியர்களுடைய நாணயங்களில் பொதுவாக நாகரி எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை, பொதுவாக முடிவு பெறாதவைகளாய் இருக்கின்றன. விஜயநகர நாணயங்களிலும் அத்தகைய எழுத்துகளைக் காண்கிறோம். அவை கோவாவில் ஆட்சி செய்த கடம்ப அரசர்களுடைய நாணயங்களிலும் சோழ அரசர்களுடைய நாணயங்களிலுங்கூட இருக்கின்றன. ஏனைய அரச வமிசங்களின் நாணயங்களிற் காணும் எழுத்துகள் அவை வெளியிடப் பெற்ற இடங்களுக் கேற்றவாறு தமிழிலோ, தெலுங்கிலோ, கன்னடத்திலோ இருக்கின்றன.

பல நாணயங்கள், போரில் கண்ட வெற்றிகளைக் காட்டும் முறையில் அமைந்திருக்கின்றன. சோழ நாணயங்கள் சிலவற்றில் மையத்தி லிருக்கிற ஒரு விதானத்தின் கீழே அமர்ந்திருக்கிற ஒரு புலியையும், பக்கத்தில் ஒரு மீனையும், அடியில் ஒரு வில்லையும் காண்கிறோம். சோழர்களின் சின்னமான புலியின் உருவம் பெரிதாகவும் சேரரது வில், பாண்டியரது மீன் ஆகியவற்றின் உருவங்கள் சிறியனவாகவும் இருக்கின்றன.

விஜய நகர அரசர்கள் வெளியிட்ட பகோடா நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. அவை சிறியவை; தடித்தவை. அரைப் பகோடா, கால்பகோடா நாணயங்களையும் அவர்கள் வெளியிட்டார்கள். தொடக்கத்தில் அந்த நாணயங்கள் சிலவற்றில் கன்னட எழுத்துகளும் சிலவற்றில் நாகரி எழுத்துகளும் இடம் பெற்றன. ஆனால், பிற்கால நாணயங்கள் எல்லாவற்றிலும் நாகரி எழுத்தே இடம் பெற்றது.

மதுரையிற் சிறிதுகாலம் ஆட்சி செய்த முஸ்லிம்களும் தங்களுடைய நாணயங்களை வெளியிட்டார்கள். அவர்களுடைய நாணயங்களில் இருவகைகள் இருந்தன; செப்பு நாணயங்கள்; முதல் வகையைச் சேர்ந்தவை. தங்கம் வெள்ளியாகிய உலோகங்களோடு மட்ட உலோகங்களும் சேர்ந்த கலப்புலோக நாணயங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. அந்த நாணயங்களுக்கும் டில்லியில் ஆண்ட சுல்தான்களின் நாணயங்களுக்கும் அதிக வேறுபாடில்லை. மதுரை நாணயங்களில் இருந்த எழுத்து

களின் உருவம் டில்லி நாணயங்களில் இருந்த எழுத்துகளின் வடிவத்திலிருந்து சிறிதளவு மாறுபட்டிருந்தது. அவ்வளவு தான் வேறுபாடு. பாமினி சுல்தான்களுடைய தங்கம் வெள்ளி நாணயங்கள் டில்லி முறையைப் பின்பற்றியவை. முதலில் வெளிவந்த நாணயங்களில் வெள்ளி நாணயங்களுக்கும் தங்க நாணயங்களுக்கும் சிறிது வேறுபாடு இருந்தது. ஆனால் பின்னைய அரசர்கள் இரண்டு வகை நாணயங்களையும் ஒன்று போலவே அடித்து வெளியிட்டார்கள். முதலில் வந்த செப்பு நாணயங்கள் டில்லிச் செப்பு நாணயங்களைப் போலவே இருந்தன. ஆனால், அவை வெகு விரைவில் புதிய முறையையும் உருவையும் பெற்றன. மேலும் அவற்றின் உருவமும் முறையும் அடிக்கடி மாறிக்கொண்டேயிருந்தன. பாமினியரசு சிதைந்த பின் அதனிடத்தில் தோன்றிய ஐந்து முஸ்லிம் அரசுகளும் தத்தம் நாணயங்களை வெளியிட்டன. ஆனால், அவை அவ்வளவு செப்பமுடையவை யல்ல.

பொறிப்புகளுக்கும் நாணயங்களுக்கும் அடுத்தபடியாக முக்கியமான ஆதாரமாக இருப்பது இலக்கியச் சான்றாகும். இந்தச் சான்று நம் நாட்டு நூல்களிலிருந்தும் வெளிநாட்டு நூல் களிலிருந்தும் நமக்குக் கிடைக்கின்றது. வரலாற்று நூலென்றே எழுதப்பட்ட இந்திய நூல்கள் இல்லை என்றே கூறி விடலாம். கோயில்களைப் பற்றிய கால வழிச் செய்திக் கோவைகள் சில இருப்பது உண்மையே. எடுத்துக் காட்டாக 'மதுரைத் தல வரலாறு,' 'சீரங்கக் கோயிலொழுகு' ஆகிய வற்றைக் கூறலாம். ஏறத்தாழக் கி.பி. 1200ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ந்தவையும் வரலாற்றாசிரியருக்குப் பயனுள்ளவையுமான பல அண்மைக்காலச் செய்திகள் அவற்றிலிருக்கின்றன வெனினும், நமக்குத் தேவையான பண்டைக்காலத்தைப் பற்றிய குறிப்பு களெல்லாம் பல வேறு கட்டுக் கதைகளின் கதம்பமாக இருக்கின்றன. அவற்றிற் பல செய்திகள் தவறானவை; இன்னும் பல செய்திகள் மிகவும் திரித்துக் கூறப்பட்டவை. அதனால், வேறு நம்பத்தக்க ஆதாரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் அச் செய்திகளை வரலாற்றாசிரியர் பயன்படுத்த இயலாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கர்னல் மெக்கன்ஜியின் ஆணைப்படி எழுதப்பெற்ற அறைகுறை வரலாற்று நூல்களில் நமக்கு வேண்டிய செய்திகள் இல்லை. அண்மைக்காலச் செய்திகளே அவற்றில் இருக்கின்றன. 'கொங்குதேச ராஜாக்கள் சரித்திர'த்தில் நம்பத்தக்க வரலாற்றுச் செய்திகள் இல்லை. அதுபோலவே பல திருத்தங்களுக்குட் பட்ட 'கேரளோற்பத்தி' என்னும் நூலும் வரலாற்றாசிரியருக்குப்

பயன்படவில்லை. ஏராளமாக இருக்கின்ற தல புராணங்களும் அத்தகையவையே. அவையெல்லாம் பொதுமக்களிடையில் பரவியுள்ள கட்டுக் கதைகளின் புத்துருவங்களே. 'ராமப் பையன் அம்மானை' போன்ற கதைப் பாட்டுகள் ஓரளவு பயனுடையவை. ஆனால், பண்டைக் காலத்தைப் பற்றிய அத்தகைய கதைப் பாட்டுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

மேலே கூறியவற்றிலிருந்து வரலாற்றாசிரியனுக்கு நேரடியாக உதவக் கூடிய இந்திய நூல்கள் இல்லை என்பது விளங்கும். ஆனால், அவற்றால் கிடைக்கும் மறைமுக உதவியை நாம் குறைத்துக் கூறமுடியாது. வரலாற்றில் இடம் பெறுகின்ற மக்கள் எத்தகைய சமுதாயச் சூழ்நிலையிலும் சமயச் சூழ்நிலையிலும் வாழ்ந்தார்கள் என்பதை அறிவதற்கு அந்த நூல்கள் பேருதவியாயிருப்பதோடு, அவற்றிலுள்ள பாயிரம், முடிவுரை, பின்னணியுரை முதலியவற்றின் மூலம் அந்த நூல்களை எழுதிய புலவர்கள், அவர்களுக்கு ஆதரவளித்த அரசர்கள், அவர்களுடைய முன்னோர்கள் முதலியவர்களைப் பற்றிய முக்கியமான விவரங்களை நாம் அறிகிறோம். பொறிப்புகளின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற தொடர்பற்ற செய்திகளிலுள்ள பல குறைகளை நிரப்புவதற்கு அந்தச் செய்திகள் உதவுகின்றன.

சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் தென்னிந்தியாவில் தோன்றிய சிறந்த நூல்களைப் பற்றி இலக்கியம் என்னும் தலைப்புடைய அதிகாரத்தில் எழுதுவேன். இங்கு மிக முக்கியமான சில பொதுச் செய்திகளை மட்டும் குறிப்பிடப்போகிறேன்.

பிற்காலத்தில் இயற்றப்பட்ட வேதத்தைச்சார்ந்த நூல்களும் இதிகாசங்களும் வட இந்தியாவில் தோன்றியவை. அந்தப் பகுதிச் செய்திகளே அவற்றில் மிகுதியாக இடம் பெறுகின்றன. எனினும், தென்னிந்தியாவில் வட இந்தியச் செல்வாக்கு எவ்வாறு பரவியது என்பது பற்றிய தெளிவான குறிப்புகளை அவற்றில் நாம் காண்கிறோம். இந்தப் பண்பாட்டு இயக்கத்திற்கு அவற்றைத் தவிர வேறு ஆதாரங்கள் இல்லை. தமிழகத்தின் மிகப் பழைய நூல்களாகிய சங்க நூல்களில் அந்தப் பண்பாட்டு இயக்கத்தின் விளைவுகளைத் தெளிவாகக் காண்கிறோம். தமிழகத்தின் பண்பாட்டியல்புகளோடு தெற்கு நோக்கிப் பரவிக்கொண்டிருந்த வட இந்தியப் பண்பாட்டியல்புகளில் பல முரண்பாடின்றி ஒருங்கிணைந்ததன் பயனாக நல்ல

வளர்ச்சி பெற்ற ஒரு நாகரிகத்தின் தன்மைகளைச் சங்க நூல்கள் நமக்குக் காட்டுகின்றன. அந்த இரண்டு பண்பாட்டியல்புகளும் எவ்வாறு ஒருங்கிணைந்தன என்பதைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. அதனால் மனித வரலாற்றில் மிகக் கவர்ச்சியுடைய ஒரு பகுதி நமக்குத் தெரியாமலே போய் விட்டது. சங்க நூற்களிற் காணும் சொல்லாட்சி, தெளிவும் ஆற்றலும் வாய்ந்தது. சங்கப் புலவர்கள் வாழ்க்கையின் இயல்பு களையும் உள்ளத்தின் எழுச்சிகளையும், உண்மையும் பொலிவும் செறிந்த ஒப்பற்ற முறையில் விளக்குகிறார்கள். இது சங்க இலக்கியத்திற்கே உரிய தனித் தன்மை. அவ்விலக்கியத்தில் பயிலும் மொழியின் அமைப்பு வேறெந்த மொழியின் அமைப்பையும் சார்ந்ததன்று. அதிற் பயிலும் சொற்களுள் மிகப் பெரும்பாலானவை தமிழுக்கே உரிய தனித்தன்மை வாய்ந்தவை. சங்க இலக்கியத்திற் காணும் அமைப்புகள், மரபுகள் ஆகியவற்றிற் பல தமிழகத்திற்கே உரியவை. இவை களெல்லாம் தெளிவாகத் தெரியும் செய்திகள். ஆனால், வடமொழியினின்றும் வடஇந்தியாவினின்றும் வந்த சொற்களும் கருத்துகளும் பழக்கவழக்கங்களும் சங்க இலக்கியத்தின் உள்ளீடாகச் செறிந்திருப்பதை யாரும் காணாமலிருக்க முடியாது. வட வாரியப் பண்பாடும் தென்றமிழர் பண்பாடும் ஒருங்கிணைந்த செய்தியைப் பற்றி மக்கள் நம்பிய மரபு வழிக் கதைகள் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழி களின் இலக்கியத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. மரபு வழிக் கதையை வரலாறு என்று சொல்ல முடியாது. எனினும், மக்களினங்களின் பழைய வரலாற்று நிகழ்ச்சிகளின் நினைவுகள் கவர்ச்சியும் ஊகிக்க வேண்டிய மறை பொருளும் உடைய மரபு வழிக் கதைகளாக உருவெடுக்கும் போது, அவற்றை வரலாற் றாசிரியர் அறவே புறக்கணிக்க முடியாது.

கலம்பகம், உலா, பரணி, கோவை போன்ற சிற்றிலக்கியங் களில் வரலாற்று நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன. முக்கியமாக, அரசவைப் புலவர்கள் தங்கள் புரவலரான அரசர்களையே பாட்டுடைத் தலைவர்களாக வைத்துப் பாடிய சிற்றிலக்கியங்களில் அந்தச் செய்திகள் மிகுதியாக இடம் பெறுகின்றன. 'இறையனார் அகப்பொருள்' என்னும் புகழ் பெற்ற களவியல் இலக்கண நூல் 'பாண்டிக் கோவை' என்னும் நூலிலிருந்து பல செய்யுள்களை மேற்கோளாகக் காட்டுகின்றது. கடுங்கோன் வழி வந்த பாண்டிய அரசர்கள் செய்த பல போர்களை அப் பாண்டிக் கோவை குறிப்பிடுகிறது. ஆனால், ஒரே அரசன் அந்தப் போர்கள் எல்லாவற்றையும் செய்தான் என்பதற்கு மாறாக

அந்த மரபைச் சேர்ந்த பல அரசர்கள் செய்த போர்களையும் அடைந்த வெற்றிகளையும் புலவர் பாட்டுடைத் தலைவனாகிய ஓர் அரசன்மேல் ஏற்றிக் கூறுகிறார் என்று கொள்வது பொருத்த மாகும். அப்படிக் கூறுவது தமிழிலக்கிய மரபு. அதனால், அத்தகைய நூல்களை ஆராயும் போது மிகுந்த எச்சரிக்கையுட னிருக்க வேண்டும். இல்லா விட்டால் தவறு நேர்ந்துவிடும். பல்லவ அரசனான மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய நூலான 'நந்திக் கலம்பகம்' பாண்டிக் கோவையைவிட அதிகமான நம்பிக்கைக்கு உரியதாயிருப்பதால் அதனுடைய வரலாற்றுப் பயனும் அதிகமாயிருக்கிறது. ராஜராஜன் வழிவந்த சோழர் களுடைய காலத்தைச் சேர்ந்த சிற்றிலக்கியங்கள் பாதி வரலாறும் பாதிக் கற்பனையும் கலந்தவை. அதனால், அவற்றில் வரலாற்றுச் செய்திகளை அதிகமாகக் காண்கிறோம். அவற்றுள் முக்கியமானவை இவை: 1. முதலாம் குலோத்துங்க சோழ னுடைய படைகள் கலிங்கத்தின் மீது சென்று வென்றதைப் பாடுகின்ற 'கலிங்கத்துப் பரணி.' அதை எழுதியவர் ஜெயங் கொண்டார் என்னும் புலவர். 2. ஒருவர் பின் ஒருவராக அரியணையேறிய விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன் இரண்டாம் ராஜராஜன் ஆகிய மூன்று சோழ அரசர்களைப் பற்றி ஒட்டக்கூத்தர் பாடிய 'மூவருலா.'

அதுபோலவே, ஏனைய மொழிகளிலும் சில நூல்கள் இருக் கின்றன. கன்னடத்தில் 'பம்ப பாரதம்' என்னும் நூலும் 'கதாயுத்தா' என்னும் நூலும் முக்கியமானவை. அவை மகா பாரத நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பற்றிய நூல்களாக இருந்தாலும் அவற்றில் சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் ஆகியவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன. அவற்றைப் பாடிய புலவர்கள், தங்கள் புரவலர்களை மகா பாரதப் பாத்திரங்களாகக் கற்பனை செய்துகொண்டு பாடியதால், அவர்கள் நன்குத் தெரிந்த பல வரலாற்றுச் செய்திகளைத் தங்கள் நூல்களில் நுழைத்து விட்டார்கள். வடமொழியில் பில்ஹணன் எழுதிய காவிய மாகிய 'விக்கிரமாங்கதேவ சரிதம்' வரலாற்றாசிரியர்களுக்கு மேலே சொன்ன தமிழ் கன்னட நூல்களைப் போல அவ்வளவு பயன்படுவதில்லை.

விஜயநகர வரலாற்றுக்கு இருக்கிற இலக்கியச் சான்றுகள் எண்ணற்றவை. அந்தக் காலத்தைச் சேர்ந்த பல நூல்களை ஆராய்ந்து, வரலாற்று ஆதாரங்களைத் திரட்டிச் சென்னைப் பல்கலைக் கழகம் இரண்டு தொகுதிகளாய் வெளியிட்டிருக்கிறது. அந்த வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த நூல்களில் 'கால

ஞானங்கள்' என்னும் வகையைச் சேர்ந்த நூல்களும் இருக்கின்றன. வருவதுரைக்கும் முறையில் ஞானிகள் சொன்னதாகக் கூறப்படும் பல செய்திகள், அந் நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன. அவையெல்லாவற்றையும் வரலாற்றுச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும், பாமினி அரசையும் அதற்குப்பின் அதிலிருந்து பிரிந்து வந்த ஐந்து முஸ்லிம் அரசுகளையும் சேர்ந்த முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ள ஒரு சார்பான செய்திகளை அறிந்து மறுப்பதற்குக் கால ஞான வகையைச் சேர்ந்த நூல்கள் உதவுகின்றன.

வரலாறு எழுதும் பழக்கம் இந்துக்களிடம் இல்லை என்றே சொல்லலாம். ஆனால், முஸ்லிம்களிடத்தில் அந்தப் பழக்கம் இருந்தது. அதனால், தக்காண முஸ்லிம் அரசர்களுடைய ஆதரவைப் பெற்ற அறிஞர் பலர், பாரசீக மொழியில் வரலாற்று நூல்கள் பலவற்றை எழுதினார்கள். அவற்றில் பல அழிந்து போயின; வேறு சில இன்னும் வெளிவரவில்லை. பெரிஷ்டா என்பவர், தாம் எழுதிய வரலாற்று நூலுக்கு ஆதாரமாயிருந்த பல நூல்களின் பெயர்களைக் கூறுகிறார். ஆனால், அவை நமக்குக் கிடைக்கவில்லை. நமக்குக் கிடைத்துள்ள வரலாற்று நூல்களில் மிக முக்கியமானவற்றை இப்போது நாம் கவனிப்போம். பாமினி அரசர்கள் தக்காணத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலேயே எழுதப் பெற்ற நூல்களுள் இப்போது நமக்குக் கிடைத்திருப்பது இசாமி என்பவர் எழுதிய 'புட்டு-உஸ்-ஸலத்தின்' என்பதாகும். 1327ஆம் ஆண்டில் சிப்ப சலர் இசாமி என்பவரை டில்லியை விட்டுவிட்டுத் தௌலதாபாத்துக்குப் போய் விடுமாறு முகமதுபின் துக்ளக் வற்புறுத்தினர். அவ்வாறே சிப்ப சலர் இசாமி தம் பேரப்பிள்ளையாகிய இசாமியுடன் தௌலதாபாத்துக்குப் புறப்பட்டார். வழியில் அவர் இறந்து விட்டார். சின்ன இசாமி தௌலதாபாத்துக்கு வந்து குடியேறினர். இசாமி பாமினி அரசின் முதல் சுல்தானுடைய ஆதரவைப் பெற்று, 1358-ல் தம் நூலை எழுதத் தொடங்கி அடுத்த ஆண்டில் அதனை முடித்தார். அவருடைய நூல், பர்தௌசி எழுதிய 'ஷாநாமா' என்னும் நூலைப் பின்பற்றி எழுதப் பட்டது. நூல் முழுதும் தெளிவான செய்யுள் நடையில் இருக்கிறது. டில்லி சுல்தான்களைப் பற்றிய வரலாற்றை முகமது பின் துக்ளக் காலம் வரையில் எழுதி முடித்தபின், தக்காணத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையை இசாமி மிக நன்ருக வருணிக்கிருர். அதன்பின் பாமினி அரசின் தோற்றத்தையும் அதனுடைய முதல் சுல்தானுடைய குண நலன்கள், ஆட்சி முறை முதலியவற்றையும் பற்றி இசாமி எழுதியிருக்கிருர். அதுமட்டுமன்றி, முஸ்லிம்கள்

எவ்வாறு தக்காணத்தையும் தென்னிந்தியாவையும் வென்று தம்முடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தார்கள். என்பது பற்றிய சரியான தகவல்கள் பல அந்த நூலில் இருக்கின்றன. அவை வரலாற்றுசிரியருக்கு மிகப் பயனுடையவை.

பாமினி அரசைப்பற்றிய ஏனைய வரலாற்று நூல்களெல்லாம் அவ் வரசு அழிந்த பின் எழுதப் பெற்றவை. அந்த அரசு இருந்த இடத்தில் ஐந்து புதிய முஸ்லிம் அரசுகள் தோன்றின என்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றில் எந்த அரசின் ஆதரவோடு ஒரு நூல் எழுதப்பெற்றதோ அந்த அரசை மையமாக வைத்து அதனுடைய பெருமையைக் கூறும் வகையில்தான் அந்த நூல் எழுதப்பட்டிருக்கும் என்பது தெளிவு. அவ்வாறு எழுதப் பெற்ற நூல்களில் பாரசீகத்திலிருந்து வந்த அலி பின் அஜீஸ் உல்லா டப டபாய் என்பவர் எழுதிய 'புர்ஹான்-இ-அமாசிர்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. அவரைவிடப் புகழ்பெற்ற பெரிஷ்டாவின் காலத்திலேயே அவரும் வாழ்ந்தார். பெரிஷ்டாவைப் போலவே அவரும் தொடக்கத்தில் அகமது நகரத்தைத் தலைநகராகக் கொண்ட நிஜாம் ஷாஹி அரசருடைய சபையில் இருந்தவர். எனினும், டப டபாயின் வாழ்க்கையைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. அவர் 1591-ல் தமது வரலாற்று நூலைத் தொடங்கி ஐந்தாண்டில் முடித்தார். அந் நூல் நிஜாம் ஷாஹி வமிசத்தின் வரலாறு. அதனுடைய முன்னுரையில் பாமினி அரசின் வரலாறு எழுதப்பட்டிருக்கிறது. அவர் தம்மை ஆதரித்த நிஜாம் ஷாஹி வமிச அரசர்களைப் பற்றி ஒருசார்பான முறையில் புகழ்ந்து எழுதியிருக்கிறார். எனினும், சில விஷயங்களில் அவருடைய கூற்றுகள் பெரிஷ்டாவின் கூற்றுகளைவிட உண்மையாக இருப்பதோடு நாணயங்கள் தரும் சான்றுகளோடு அதிகமாக ஒத்திருக்கின்றன.

ஆனால் பெரிஷ்டாவே அந்தக் காலத்து முஸ்லிம் வரலாற்றுசிரியர்களில் தலை சிறந்தவர் என்பதில் ஐயமில்லை. அவருடைய வரலாற்று நூல் இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியைப் பற்றிய பொது நூலாக இருக்கிறது. அவர் பல நூல்களை ஆராய்ந்த பின் தம் நூலை எழுதினார். முஸ்லிம் ஆட்சியைப்பற்றி எண்ணற்ற செய்திகள் அந் நூலிற் காணக் கிடக்கின்றன. எந்தெந்தச் செய்தியை எந்தெந்த இடத்தில் எந்தெந்த முறையில் விளக்கவேண்டும் என்பதை அவர் நன்றாய் அறிந்திருந்தார். அதனால், அவருடைய நூல், சிறப்புமிக்க நூலாக இருக்கிறது. அவர் பல்வேறு செய்திகளை எழுதியுள்ளார். அவற்றுள் பல அவர் பிறர் கூற்றுகளின் மூலம் தெரிந்து கொண்டவை.

அதனல் அவருடைய நூலிற் சில தவறுன செய்திகளும் இருக்கின்றன. பிஜப்பூர் அரசனை இரண்டாம் இப்ராஹிம் அடில்ஷா என்பவருடைய சபையில் இருந்து கொண்டு அவருடைய ஆதரவுடன் பெரிஷ்டா தம் நூலை எழுதினராதலால் தக்காண வரலாற்றினைக் குறிப்பிடுகையில் அடில் ஷாஹி வமிசத்தைப்பற்றி அவர் உயர்வாக எழுதியதில் வியப்பொன்றுமில்லை. அவர் 1606-ல் தமது நூலை எழுதி முடித்தார். இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியைப்பற்றி எழுதப்பட்ட நூல்கள் எல்லாவற்றிலும் பெரிஷ்டாவின் வரலாற்று நூலே மிகச் சிறந்தது. அவர் பாரசீகத்தில் பிறந்தவர். முகமது காசிம் இந்து ஷா பெரிஷ்டா என்பது அவருடைய முழுப் பெயர். அவர் 1582-ல் தம்முடைய பன்னிரண்டாம் வயதில் தம் தந்தையாரோடு அகமது நகருக்கு வந்தார். தந்தையார் நிஜாம்ஷாஹி இளவரசனுக்கு ஆசிரியராய் நியமிக்கப்பட்டார்; ஆனல், தந்தையார் குறுகிய காலத்திற்குள் இறந்து போனர். எனவே பெரிஷ்டா ராணுவத்திற் சேர்ந்து அரசனுடைய மெய்காப்பாளர்களின் தலைவரானர். அரண்மனையில் நடந்த ஒரு புரட்சியின் விளைவாக அவர் அப் பதவியை இழந்துவிட்டார். அவர் ஷியா மதத்தைச் சேர்ந்தவர். அகமது நகரில் அவருக்கு நண்பர்களும் இல்லை. அதனல் அவர் பிஜப்பூருக்குச் சென்று ராணுவத்தில் ஒரு வேலை தேடிக்கொண்டார். அவர் எப்போது வாள் முனைக்குப் பதிலாகப் பேனு முனையைப் பயன்படுத்தத் தொடங்கினர் என்பது நமக்குத் தெரியவில்லை.

பிஜப்பூரை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இன்னெரு வரலாற்று நூல் 'தஜ்கிரட் - உல் - முலுக்' என்பது. அதனை எழுதியவர் பாரசீகத்திலுள்ள ஷிராஜ் என்னும் ஊரிலிருந்து இந்தியாவுக்கு வந்த வணிகர் ஷிராஜி என்பவர். வாணிகத்திற்காக அவர் கிருஷ்ணு நதிக்கரையிலிருந்த சாகர் என்னுமிடத்திற்குக் கி.பி. 1560-ல் வந்தார்; பின்னர், 1574-ல் அடில் ஷாஹி அரசில் அலுவலராகச் சேர்ந்தார். கி.பி. 1608 முதல் கி.பி. 1610 வரையில் அவர் தம் நூலை எழுதினர். பாமினி அரசின் வரலாற்றை அறிவதற்கு அந்த நூல் பயன்படாவிட்டாலும், பிஜப்பூர் நாட்டில் தமது காலத்திலேயே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றை ஷிராஜி தம் நூலில் எழுதியிருப்பதால், அது முக்கியமான நூலாக இருக்கிறது. நமக்கு வேறெந்த வகையிலும் தெரியாத செய்திகள் பல அந்த நூலில் இருக்கின்றன.

நாம் இதுவரையில் கவனித்த நான்கு வரலாற்று நூல்களுள் மூன்றை எழுதியவர்கள் நேராகப் பாரசீகத்திலிருந்து வந்த

வர்கள். எல்லாருமே பாரசீக மொழியில்தான் எழுதினார்கள். இந்துமுஸ்லிம் பண்பாட்டில் பாரசீகப் பண்பாட்டின் செல்வாக்கு எவ்வளவு அதிகமாக இருந்தது என்பதைக் காட்டுவதற்கு இது ஒரு சான்று. பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரசீகத்தில் வாழ்ந்த எழுத்தாளர் அபுத் அல்லா ஷிராஜிவாசப் என்பவருக்கு அந்த நேரத்தில் தமிழகத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பிருந்தது. அதனால், அவர் அப்போது பாண்டி நாட்டில் நடந்த உள்நாட்டுப் போரைப் பற்றியும் அப்போது வாணிகத்திற்குத் தமிழகத்தில் எத்தகைய வாய்ப்புகள் இருந்தன என்பதைப் பற்றியும் முக்கியமான பல விவரங்களை எழுதி வைத்திருக்கிறார்.

தென்னிந்தியாவைப்பற்றி வெளிநாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ள குறிப்புகள் நமக்குப் பல செய்திகளைத் தெரிவிப்பதோடு கவர்ச்சியுடையனவாகவும் இருக்கின்றன. கிரேக்க ரோமானிய ஆசிரியர்கள் எழுதிய குறிப்புகளே தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டார் எழுதியுள்ள குறிப்புகளுள் மிகவும் பழமையானவை என்று பொதுவாகக் கூறலாம். அவர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரையில் எழுதிய குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தொடக்கத்தில் அந்தக் குறிப்புகள் விரிவாக இல்லை; சில தவறான செய்திகளும் அவற்றில் இடம்பெற்றன. ஆனால், போகப்போக அந்தக் குறிப்புகள் விரிவடைந்தபோது தவறுகள் குறைந்து சரியான செய்திகள் அதிகமாக இடம்பெற்றன. அடுத்தபடியாக, சீனப் பயணிகளும் வரலாற்று நிகழ்ச்சிகளை எழுதிய சீன எழுத்தாளர்களும் வரைந்த குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து அரபு வணிகர்கள், பயணிகள், வரலாற்றாசிரியர்கள், நிலநூல் வல்லுநர்கள் ஆகியவர்கள் எழுதிய குறிப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சீனக் குறிப்புகளும் முன்னிருந்ததைவிட அதிகமாவதோடு அவற்றிலுள்ள வரலாற்றுச் செய்திகளும் உறுதியானவையாக இருக்கின்றன. பெஞ்சமின், மார்க்கபோலோ போன்ற ஐரோப்பியர்கள் எழுதிய குறிப்புகளும் சில இருக்கின்றன. ஆனால், பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிற்கு வந்த வெளிநாட்டுப் பயணிகள், எழுத்தாளர்கள் ஆகியவர்களுடைய தொகை வேகமாய் அதிகரித்தது. முதலில் போர்ச்சுகீசியர்களும் இத்தாலியர்களும் அதிகமாக வந்தார்கள். பின்பு டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் ஏனையோரும் மிகுதியாக வரத் தொடங்கினார்கள்.

கிரேக்க ரோமானியக் குறிப்புகளில் மெகஸ்தனிஸ் எழுதிய குறிப்புகளே முதல் முதலில் தமிழகத்தை நேரடியாகக் குறிப்பிடு கின்றன. பாண்டிய நாட்டைப்பற்றி அவர் எழுதியுள்ள குறிப்பு விசித்திரக் கவர்ச்சிமிக்கது. அவர் பாண்டி நாட்டை ஹெராக்லிஸ் என்பவருடைய மகள் பண்டையா என்பவள் ஆண்டு வந்தாள் என்றும், அவளுக்கு ஹெராக்லிஸ் இந்தி யாவின் தென்பகுதியில் கடல் வரையில் பரவியிருந்த நாட்டை அளித்தார் என்றும், அந்த நாடு 365 கிராமங்களாகப் பிரிக்கப்பட் பட்டிருந்தது என்றும், ஒரு நாளைக்கு ஒரு கிராமம் என்ற கணக்கில் கிராமங்கள் அவளுக்குக் கப்பங் கட்டவேண்டும் என்றும் அவ்வாறு கட்டத் தவறிய கிராமங்களின் கப்பத்தை வசூல் செய்வதற்கு மற்றக் கிராமங்கள் உதவ வேண்டும் என்றும் எழுதியுள்ளார்.

கிரேக்கர் காலத்தில் தென்னிந்தியாவுக்கும் எகிப்திக்கும் வாணிகத் தொடர்பிருந்தது. பின்னர் வந்த ரோமானியப் பேரரசின் காலத்தில் அந்த வாணிகம் பெருகியது. அந்த வாணிகத்தை மேலும் பெருக்கும் நோக்கத்தோடு ஏடனையும் இந்தியாவுக்குச் செல்லும் செங்கடல் வழியையும் ரோமானிய ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்காக காலஸ் என்பவர் தலைமையில் அகஸ்டஸ் (கி.மு. 25) ஒரு படையை அனுப்பினுர் என்றும், அந்தப் படை வெற்றியடைந்தது என்றும், தம் காலத்திய ரோமானியர்கள் இந்தியாவைப் பற்றிய பல செய்தி களைத் தெரிந்துவைத்திருந்தார்கள் என்றும் ஸ்ட்ராபோ எழுதி வைத்திருக்கிருர்.

பெரிப்ளஸ் என்னும் நூலை எழுதியவரும், மூத்த பிளினியும் (ஏறக்குறையக் கி.பி. 75), டாலமியும் (கி.பி. 130) எழுதி வைத்துள்ள குறிப்புகளால் ரோமானியர்கள் கீழை நாடுகளைப் பற்றி ஸ்ட்ராபோ காலத்தில் அறிந்திருந்த செய்திகளைவிட அதிக மான செய்திகளைத் தெரிந்திருந்தார்கள் என்பதைக் காண் கிருேம். பிளினியும், டாலமியும் ஏனைய ஆசிரியர்கள் எழுதிய குறிப்புகளிலிருந்து தாம் எழுதிய செய்திகளைத் தெரிந்து கொண்டார்கள். ஆனுல், பெரிப்ளஸ் ஆசிரியரோ நேரில் சென்று மேற்கிந்தியத் துறைமுகங்கள் பலவற்றைப் பார்த்து அங்கெல்லாம் வாணிக நிலைமை எவ்வாறிருந்தது என் பதைத் தெரிந்துகொண்டார். ஆனுல், அவருக்கு இந்தியாவின் கிழக்குக் கடற்கரையைப்பற்றி அதிகமாகத் தெரியவில்லை. டாலமிக்குக் கிழக்குக் கடற்கரை நாடுகள் மட்டுமன்றி அவற் றிற்கு அப்பாலிருந்த தூர இந்தியாவைப் பற்றியும் தெரியு

மென்பதை அவர் எழுதிய சில நூல் நமக்குக் காட்டுகிறது. புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு என்னும் இடத்திலும் இந்தோ-சீனுவிலுள்ள மேக்காங் நதியின் கழிமுக நடு அரங்கில் இருக்கிற ஆக்-இயோ என்னும் இடத்திலும் அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சிகள், இந்துமாக் கடலில் ரோமானியர்கள் நடத்திய கடல் வாணிபத்தைப் பற்றி ரோமானிய ஆசிரியர்கள் எழுதியுள்ள குறிப்புகள் சரியானவையே என்பதற்குப் போதுமான ஆதாரங்களைத் தருகின்றன. டாலமிக்குப் பின்வந்தவர்களில் காஸ்மாஸ் (ஏறக்குறையக் கி.பி. 550) என்னும் பைஜாண்டியத்தைச் சேர்ந்த கிறிஸ்துவப் பாதிரியார் மிகவும் குறிப்பிடத்தக்கவர். அவர் விசித்திரமான மனப்போக்குடையவர். அவர் 'பாய்மரக் கப்பலைச் செலுத்தி இந்தியாவுக்குச் சென்றவர்' என்னும் பெயரைப் பெற்றவர். தம் வாழ்வின் தொடக்கத்தில் அவர் ஒரு வணிகராக இருந்தார். பாரசீக வளைகுடாவிலும் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலும் இருந்த பல இடங்களுக்கு அவர் போயிருக்கிருர். இலங்கை வரையிலும் அவர் சென்ருர் என்று தெரிகிறது. அவர் எழுதிய நூலின் பெயர் 'கிறிஸ்துவ இடக் கிடப்பியல்' என்பது. அந் நூலை வரலாற்ருசிரியர்கள் 'மண்கண்டம்' என்று கேலியாக வருணிக்கிருர்கள். எனினும், அந்த மண்கண்டத்திலிருந்து 'குறிப்பிடத்தக்க அளவு கவர்ச்சியுடைய புதை படிவங்கள் சிலவற்றைப் பிரித்தெடுக்க முடியும்' என்று அந்த நூலின் பயனைப் பற்றி அதே ஆசிரியர்கள் கூறுகிருர்கள்.

சீனுவுக்கும் தென்னிந்தியாவுக்கும் கி.மு. இரண்டாம் நூற்ருண்டிலேயே கடல் வழித் தொடர்பு இருந்தது. கச்சியில் ஒரு சீனத் தூதரகம் இருந்தது என்ற குறிப்பும், மைசூரைச் சேர்ந்த சந்திரவல்லி என்னும் இடத்தில் ஏறக்குறையக் கி.மு. இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த ஒரு சீன நாணயம் கண்டெடுக்கப்பட்ட செய்தியும் அதனை உறுதி செய்கின்றன. கி.பி. மூன்ரும் நான்காம் ஐந்தாம் நூற்ருண்டைச் சேர்ந்த சீன வரலாற்று நிகழ்ச்சிப் பதிவுகளில் காணும் குறிப்புகளிலிருந்து இந்தோ-சீனுவிலும் அதனை அடுத்த தீவுக் கூட்டங்களிலுமிருந்த இந்து அரசர்கள் ஒருபக்கம் சீனுவுடனும், மறுபக்கம் தென்னிந்தியாவுடனும் தொடர்பு கொண்டிருந்தார்களென்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் வைடூரியம், சந்தனக் கட்டை, முத்து ஆகியவற்றைச் சீன அரசர்களுக்குப் பலமுறை பரிசுப்பொருள்களாக அனுப்பினர்கள் என்ற குறிப்புகளும் இருக்கின்றன. அந்தப் பொருள்களெல்லாம் தென்னிந்தியாவில் கிடைக்கும் பொருள்கள். பாஹியன் தென்னிந்தி

யாவைச் சுற்றிப் பார்க்கவில்லை. அவர் டாம்லுக் என்ற துறை முகத்திற் கப்பலேறி இலங்கைக்குப் போய்விட்டார். அதனால், அவர் தக்காணத்தைப் பற்றியும் 'புரு மடத்தைப்' பற்றியும் எழுதியுள்ள குறிப்புகளை ஓர் உயர்தர வம்பளப்பு என்று தள்ளி விடலாம். புத்த மதத் துறவிகள் பலர் தென்னிந்தியாவி லிருந்தும் இலங்கையிலிருந்தும் கடல் வழியாகச் சீனுவுக்குச் சென்று, அங்கேயே தங்கிப் புத்தமத நூல்களைச் சீனத்தில் மொழி பெயர்ப்பதற்கும், அந்த நாட்டில் புத்த மதத்தைப் பரப்புவதற்கும் உதவினார்கள். பட்டுத் துணியை ஏற்றிக்கொண்டு சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தன என்று காஸ்மாஸ் கூறுகிறார். புகழ் பெற்ற புத்த தர்ம வல்லுநரான ஹுவான் சுவாங் இந்தியாவுக்கு வந்து இந் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். ஏனைய சீனப் பயணிகள் இந்திய நாட்டில் அவ்வளவு அதிகமாகச் சுற்றுப் பயணஞ் செய்யவில்லை. மேலும், ஏனைய சீனத் துறவி களைப்போல் அவர் உலகத்திலிருந்து அவ்வளவு அதிகமாக ஒதுங்கி வாழ்ந்தவருமல்லர். தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் அவர் பல மாதங்கள் தங்கியிருந்தார் (கி.பி. 641-2). அங்கே மதத் துறையிலும் சமுதாயத் துறையிலும் அவர் கண்டவற்றைப் பற்றிக் கவர்ச்சி மிக்க குறிப்புகளை எழுதியிருக்கிறார். அப்படி யிருந்தும், அவருடைய குறிப்புகள் தற்கால வரலாற்று மாணவர் களின் வேட்கையைத் தணிப்பதற்குப் போதுமானவைகளாய் இல்லை. 'அவரிடத்தில் போதுமான அளவு உற்று நோக்கும் ஆற்றலில்லை; பார்த்தவற்றை விழிப்புடன் அலசி ஆராயும் பயிற்சியும் இல்லை; மனங்கொண்ட செய்திகளை உளநிறைவு தரும் முறையில் எழுதிவைக்கும் திறனும் இல்லை; அதனால், சொல்லவேண்டிய செய்திகள் பலவற்றை அவர் சொல்லாமல் விட்டுவிட்டார்' என்று அவரைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இட்சிங் இந்தியாவிற்கு வந்து ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். ஆனால், அவர் தென்னிந்தியாவுக்கு வரவில்லை. அதனால் அதைப் பற்றி அவர் தருகின்ற நேரடித் தகவல் ஒன்றுமில்லை. ஆனால், அவருடைய குறிப்புகளிற் காணும் பயண விவரங்கள், வெவ்வேறு நாடுகளில் இருந்த பௌத்தர்களின் கோட்பாடு களிலும் நடைமுறையிலும் அவர் கண்ட வேறுபாடுகள் முதலிய செய்திகளைக் காண்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர் இந்தியாவில் தங்கியிருந்தபோது அங்கு வந்த ஏறத்தாழ அறுபது துறவிகளுடைய வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாக எழுதி வைத்திருக்கிறார். இக் காரணத்தால் அவருடைய நூல் வரலாற்று மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும், எட்டாம் நூற் றாண்டில் பல்லவ அரசும் சீன அரசும், பதினொன்றும்

நூற்றாண்டில் சோழ அரசும் சீன அரசும் தூதர் பரிமாற்றம் செய்துகொண்டன என்று சீன வரலாற்று நிகழ்ச்சிப் பதிவுகள் குறிப்பிடுகின்றன. அடுத்து வந்த நூற்றாண்டுகளில் சீனாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் குறிப்பிடத்தக்க அளவு வாணிகம் நடந்தது என்றும், தட்டையான அடிப்பாகமுடைய சீன மரக் கலங்கள் இந்தியாவுக்குத் தடையின்றி வந்து சென்றன என்றும் நாம் அறிகிறோம். சீனாவில் வெளிநாட்டு வாணிக ஆய்வாளராக இருந்த சா-ஜு-குவா என்பவர் கி.பி. 1225-ல் எழுதிய நூலில் அந்தக் காலத் தென்னிந்தியாவைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. அவை நமக்கு மிகவும் பயன்படுகின்றன. மங்கோலியப் பேரரசனான குப்ளாகான் தென்னிந்திய அரசுகளுக்குத் தன் தூதர் பலரை அனுப்பினான் என்றும், அவர்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அவற்றைத் தம் விருப்பப்படி மாற்ற முயன்றார்கள் என்றும் அறிகிறோம். ஆனால், அம் முயற்சிகளின் விளைவு என்ன என்பது தெரியவில்லை. 1330ஆம் ஆண்டிற்கும் 1349ஆம் ஆண்டிற்கும் இடையில் வாணிபத்திற்காகப் பல வெளி நாடுகளுக்குச் சென்ற சீன வணிகரான வாங்-டா-யுஆன் என்பவர் 'டவோ-இ-சி-லியோ' (தீவுகளில் வாழும் காட்டு மிராண்டிகள்) என்னும் நூலை எழுதினார். நூலின் நடை அவ்வளவு நன்றாக இல்லை; எனினும் அவருடைய பரந்த கல்வி யறிவையும் தத்துவ விசாரணையில் ஈடுபாடு கொண்ட அவருடைய மனப்பாங்கையும் அந்த நூல் நமக்குக் காட்டுகிறது. அவர் சென்ற தொண்ணூற்றொன்பதுக்குக் குறையாத நாடுகள், துறை முகங்கள், குறிப்பிடத்தக்க இடங்கள் ஆகியவற்றைப் பற்றி தாமே நேரிற் கண்டவற்றை எழுதியிருப்பதால், அந்த நூல் நமக்கு முக்கியமான சான்று நூலாக விளங்குகிறது. கொழும்பு, மாலத்தீவு, காயங்குளம், எலி, கள்ளிக்கோட்டை ஆகியவை அவர் குறிப்பிட்ட இடங்களுள் சிலவாகும். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனாவில் ஆட்சி செய்த மிங் வமிசத்தின் மூன்றாம் பேரரசர் சீனாவின் புகழையும் மீயுயர்வையும் நிலைநாட்டுவதற்காகப் பல மிகப் பெரிய கப்பற் படைகளைப் பிறநாடுகளுக்கு அனுப்பினார். அதன் விளைவாக வெளி நாட்டரசர் பலர் சீன அரசவைக்குத் தங்கள் தூதர்களை அனுப்பி வைத்தார்கள். புகழ் பெற்ற செங்ஹோ என்பவனுடைய தலைமையில் படையெடுப்புக்காக சீனக் கப்பற் படை ஏழு முறைக்குக் குறையாமல் தென்னிந்தியாவுக்கு வந்தது. அவனுடன் பெயி-ஹிசின் என்பவனும் மா-ஹுவான் என்பவனும் வந்தார்கள். அவர்கள் தாங்கள் சென்ற நாடுகளைப் பற்றிய குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார்கள். பெயி-ஹிசினுடைய ஹிசிங்-சா-ஷெங்லான் அல்லது விண்மீன் மிதவையின் வருணனை

(1436) என்னும் நூலும் மா-ஹுவான து 'இங்-யாய்-ஷெங்-லான்' அல்லது பெருங் கடற்கரைகளின் வருணனை (1451) என்னும் நூலும் மிகவும் பயனுள்ளவை. அந்த நூல்கள் இபன் பதுதாவின் பயணத்திற்கும் போர்ச்சுகீசியர் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை, கொச்சி, கள்ளிக்கோட்டை ஆகிய இடங்கள் எவ்வாறிருந்தன என்றறிவதற்கு மிகவும் உதவுகின்றன.

ஒன்பதாம் நூற்றுண்டிலிருந்து அரபுப் பயணிகளும் சில நூல் வல்லுநரும் எழுதி வைத்த குறிப்புகள் நமக்கு மிகவும் உதவு கின்றன. மிகப் பழங்காலத்திலிருந்தே இந்தியப் பெருங்கடலில் நடைபெற்ற வாணிபத்தின் பெரும்பகுதி அரேபியர் கையில்தான் இருந்தது. இஸ்லாத்தின் தோற்றத்துக்குப்பின் சமயம், அரசியல் ஆகிய துறைகளில் மட்டுமன்றி வாணிகத் துறையிலும் அறிவியல் துறையிலும் அரபு மக்களின் முயற்சிகள் வேகமாக விரிவடைந்தன.

முகமது நபியே ஒரு வணிகராக இருந்ததால் முஸ்லிம் வணிகர்களுக்கு மக்கள் அதிக மதிப்புக் கொடுத்தார்கள். ஏழாம் நூற்றுண்டின் இறுதிக்குள் அரபு வணிகர்கள் இலங்கையில் தங்களுடைய குடியிருப்பு ஒன்றை நிறுவிவிட்டார்கள். கான்டன் நகரில் 758-ல் ஆர்ப்பாரவாரம் ஒன்றைக் கிளப்பி அதனுல் தோன்றிய குழப்பத்தின் மூலம் பயனடையக்கூடிய அளவுக்கு அங்குக் குடியேறியிருந்த அரபு வணிகர்கள், பாரசீக வணிகர்கள் ஆகியவர்களுடைய எண்ணிக்கை பெரிதாயிருந்தது. பாரசீக முஸ்லிமான இபன் குர்தாத்பே என்பவர்தாம் இக் குறிப்பை எழுதி வைத்தவர். அவர் பண்டைப் பாரசீக குருமார்கள் வமிசத்தில் வந்தவர். அவர் எழுதிய நூலின் பெயர் 'வழி களேயும் ராஜ்யங்களேயும் பற்றிய நூல்' என்பது. அவர் 844-க்கும் 848-க்கும் இடையில் எழுதிய அந்த நூலே மீண்டும் மீண்டும் திருத்தி யெழுதினுர். 885ஆம் ஆண்டிற்கூட அந் நூலே அவர் திருத்தி யெழுதிக் கொண்டிருந்தார். அந் நூலில் எண்ணற்ற செய்திகள் இருக்கின்றன. ஆனுல், அவற்றை அவர் எழுதி யிருக்கும் முறை கவர்ச்சியற்றதாக இருப்பதோடு பல செய்திகள் அறைகுறையாக இருக்கின்றன. அடுத்தபடியாக, பாரசீக வளேகுடாப் பகுதியைச் சேர்ந்த சிராப் என்னும் ஊரில் வாழ்ந்த அபுஜைது ஹாசன் என்பவருடைய குறிப்புகள் முக்கியமானவை. அவர் வெளிநாடுகளுக்கு அதிகமாகச் செல்லவில்லே யெனினும், அவ்வாறு சென்று திரும்பிய பலரை அவர் கண்டு பேசினுர். அவர் கண்டு பேசியவர்களுள் புகழ்பெற்ற மசூதியும் ஒருவர். இந்தியா

வையும் சீனவையும் பற்றி முன்னரே எழுதப்பட்ட ஒரு நூலிற் கண்ட செய்திகளோடு தாம் படித்தும் கேட்டும் அறிந்த பல செய்திகளையும் சேர்ப்பதுதான் தமது நூலின் நோக்கம் என்று அபுஜைது 916-ல் கூறியுள்ளார். அவ்வாறு முன்னரே இருந்த நூலை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. சுலைமான் என்னும் வணிகரே (851) அதனை எழுதியவர் என்று ஆராய்ச்சியாளர் பலர் கருதினர். ஆனால், சுலைமானைப்போல இன்னும் எத்தனையோ பேர் சொன்ன செய்திகள் அந்தப் பழைய நூலில் இருக்கின்றன. அதே பழைய நூலிற் கண்ட செய்திகள் பலவற்றைப் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த இபன்-அல்-பக்கீ என்பவரும் தம் நூலிற் சேர்த்துள்ளார்.

அவர் அபுஜைதுக்கும் மசூதிக்கும் சிறிது முன் வாழ்ந்தவர். உண்மையில், ஒருவர் நூலிலுள்ள செய்திகளை எடுத்து இன்னொருவர் தம் நூலில் சேர்த்துக்கொள்வது அரபு எழுத்தாளர்களுடைய பொதுவான வழக்கமாயிருந்தது. ஆனால், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஏனையோர் பலர் எழுதிய குறிப்புகளைக் கவனிக்காமல் விட்டுவிடுவதால் நமக்கும் நட்டமில்லை; அந்த எழுத்தாளர்களுக்கும் குறையில்லை. புகழ்பெற்ற அல்பரூனி (கி.பி. 1030) தென்னிந்தியாவைப்பற்றி ஒன்றும் எழுதவில்லை. பலரும் பாராட்டும் வரலாற்றாசிரியரும் நில நூல் வல்லுநருமான அபுல்பேடா (1273—1331) எழுதியுள்ள நூல்களிலும் இந்தியாவைப்பற்றிய புதிய செய்திகள் இல்லை. சலிப்பில்லாமல் பயணம் செய்துகொண்டேயிருந்த நில நூல் வல்லுநர் இபன்சைது (1214—1286) கூற்றுகள் பலவற்றை அபுல்பேடா மேற்கோள் காட்டுகிறா ரெனினும், அவர் தென்னிந்தியாவைப்பற்றி எழுதியுள்ள செய்திகள் சுருக்கமானவையாயும் தெளிவற்றவையாயும் இருப்பதோடு அவையெல்லாம் அவர் மற்றவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டவையாகவும் இருக்கின்றன. நாம் கடைசியாக—ஆனால் மிகமுக்கியமாக—குறிப்பிடத்தக்கவர் இபன் பதூதா ஆவார். அவர் தளராது அடிக்கடி ஆய்வுப் பயணம் செய்தவர். அவர் எழுதிவைத்த குறிப்புகள் ஏனையோருடைய குறிப்புகளைப் பார்க்கிலும் மிகவும் முக்கியமானவை. அவர் வடமேற்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த அரபுக் கலப்பினரான மூர் இனத்தைச் சேர்ந்த இஸ்லாமியர். டாஞ்சியரில் ஏறக்குறைய 1300-ல் பிறந்தவரான இபன் பதூதா தம் இருபத்திரண்டாம் வயதிலிருந்து ஐம்பத்திரண்டாம் வயதுவரை ஓயாமல் பல நாடுகளிலும் பயணஞ் செய்துகொண்டே யிருந்தார். முடிவில் பெஜ் என்னுமிடத்தில் அவர் 1377-ல் இறந்தார். அவர் முகமது பின் துக்ளக்கின் முட்டாள்தனமான கொடுங்கோன்மையினல்

மாகாண ஆளுநர்களெல்லாம் கலகஞ்செய்ததின் விளைவாகப் பல புதிய அரசுகள் தோன்றிய காலத்தில் இந்தியாவில் இருந்தார். அவர் முகமதியச் சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றில் வல்லுநர்; வசதியான வாழ்க்கையில் விருப்பமுடையவர்; மனிதர்களையும் அவர்களுடைய செயல்களையும் கூர்ந்து நோக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவருடைய குறிப்புகளில் பெரும்பகுதி, அவருடைய தென்னிந்தியப் பயணங்களையும் அவற்றின் மூலம் அவரடைந்த அநுபவங்களையும் விவரிப்பதாய் அமைந்துள்ளது. அரசியல், சமுதாயம், சமயம் ஆகிய துறைகளில் அப்போதிருந்த நிலைமையைப் பற்றி அவர் குறிப்புகள் சரியான செய்திகள் பலவற்றை நமக்குத் தருகின்றன.

இறுதியாக, நாம் காஸ்மாஸ் என்பவருக்குப்பின் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியப் பயணிகளைப்பற்றிக் கவனிப்போம். அவர்களுள் நாம் முதலில் குறிப்பிடத்தக்கவர் பெஞ்சமின் இவர் ஸ்பெயினில் டியூடலா என்னும் ஊரைச் சேர்ந்த யூதர். இவர் (கி.பி. 1170) எழுதிவைத்த குறிப்புகளில் கொல்லத்தைப் பற்றிய சில கவர்ச்சி மிக்க செய்திகள் இருக்கின்றன. எனினும், இந்தியாவுக்கு வந்தாரா என்பதிலேயே ஐயப்பாடு இருக்கிறது. ‘இடைக்கால உலகப் பயணிகளின் இளவரசர்’ என்று போற்றப் பட்ட மார்க்கபோலோவின் காலத்தோடு ஐரோப்பாவுக்கும் கீழை நாடுகளுக்கும் ஏற்பட்ட நேரடித் தொடர்புகளின் ஒரு புதுயுகமே தொடங்கியது. மூன்றரை யாண்டுக் காலம் பல அபாயங்களுக் கிடையில் ஆசியாவைக் கடந்து சென்ற மார்க்கபோலோ கடைசியில் குப்ளாகானின் அரசவையை அடைந்தார். குப்ளாகான் அவரிடம் தனியன்பு காட்டினர். அதனல், அவர் குப்ளாகானின் அவையில் பதினேழாண்டு தங்கினர். அவர் பல முக்கியமான சமயங்களில் குப்ளாகானின் தூதராகச் சில வெளிநாடுகளுக்கும் சென்று, அந்த மங்கோலியப் பேரரசனுக்குத் தொண்டாற்றினர். முடிவில், குப்ளாகானுடைய குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரி ஒருத்திக்கும் பாரசீக மன்னனுக்கும் திருமணம் உறுதியானபோது, குப்ளாகான் அந்த இளவரசியைப் பாரசீகத்துக்கழைத்துக் கொண்டு போகும்படியான பணியை மார்க்கபோலோவுக்கு அளித்தான். அதனல் 1292-ல் சீனவை விட்டுப் புறப்பட்ட அவர் இந்தியக் கடல்களில் ஒன்றரையாண்டு பயணஞ்செய்தபின் பாரசீகத்தையடைந்தார். அங்கிருந்து அவர் கான்ஸ்டான்டிநோப்பிலுக்குச் சென்று, முடிவில் 1295-ல் வெனிஸ் நகரத்திற்குத் திரும்பினர். பாரசீகத்துக்குப் போன போது வழியில் அவர் தென்னிந்தியாவின் பகுதிகளைக் கடந்து, சென்றார். அப்போது அவர் திரட்டிய எண்ணிறந்த செய்தி

களின் தொகையைக் கண்டு, இத்தனை செய்திகளையும் அவர் எப்படித்தான் திரட்டினாரோ என்று நாம் வியப்படைகிறோம். அவர் திரட்டிய செய்திகள் உண்மையானவையா, அவற்றைப் பற்றி அவர் கூறிய கருத்துகள் நியாயமானவையா என்று முன்பெல்லாம் வரலாற்றாசிரியர்கள் ஐயப்பட்டார்கள். ஆனால், இப்போது அந் நிலை மாறிவிட்டது. அவர், தென்னிந்திய மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், நடைமுறைகள், கடல் வாணிகம் ஆகியவற்றைப் பற்றிப் பல செய்திகளைக் கூறுகிறார். குப்ளாகான் நாட்டிலிருந்து பாரசீக வளைகுடா, செங்கடல் ஆகியவற்றின் கரைவரையிலும் இந்திய வாணிகம் ஒரு மிக நீண்ட சங்கிலித் தொடர்போல் பரவியிருந்தது என்றும், இந்தியக் கடலின் கரைகளிலும் தீவுகளிலும் இயற்கை வளங்கொழித்துச் செழித்திருந்தது என்றும் மார்க்கபோலோ கூறுகிறார். மேலும் அவர் இந்தியாவில் தாம் கண்ட புட்பராகம், செவ்வந்திக்கல், மரகதம் ஆகியவற்றைப் பற்றியும் இலங்கை நீலமணி, கோல்கொண்டா வைரம் ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளின் இனிய தன்மைகளைப்பற்றி வெனிஸ் வணிகர் மார்க்கபோலோ தெரிவிக்கிறாரென்றால், அவற்றின் இனிமையற்ற தன்மைகளை அவருக்குப் பின்வந்த மூன்று துறவிகளின் குறிப்புகளில் காண்கிறோம். அவர்களுள் முதலில் குறிப்பிடத்தக்கவர் மான்டிகார்வினோவைச் சேர்ந்த பிரான்ஸிஸ் மார்க்கத் துறவியான ஜான் ஆவார். அவர் 1292–93-ல் இந்தியா வழியாகச் சீனாவுக்குச் சென்றார். கிறிஸ்துவரல்லாதவர்களும் அவர்களைவிட எவ்வகையிலும் உயர்ந்தவர்கள் என்று அவரால் கருதமுடியாத [1]நெஸ்டாரியர்களும் வாழ்ந்த அந்தப் பெரிய நாட்டில், கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்புவது அந்தத் துறவியின் நோக்கம். அவருக்கு இந்திய மக்களின் பழக்க வழக்கங்கள் பிடிக்கவில்லை. இந்தியர்களுடைய வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும் கிறிஸ்துவப் பாதிரிகள் பலர் குறை கூறியிருக்கின்றனர். ஆனால், அவர்களுடைய கூற்றுகள் அறிவார்ந்தவை என்றோ பெருந்தன்மையானமை என்றோ சொல்ல முடியாது. இவ்வாறு குறைகூறும் பழக்கத்தைப் பிரான்ஸிஸ் மடத்துறவி ஜான்தான் தொடங்கிவைத்தார் என்று சொல்லலாம். அதன்பின் ஏறக்குறைய முப்பதாண்டுக்குப்பின் பார்டனோன் என்னும் ஊரைச் சேர்ந்த

[1] நெஸ்டாரியர்கள் நெஸ்டாரியஸ் என்பவரின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள். இயேசுநாதர் தெய்விகத் தன்மையும் மனிதத் தன்மையும் வெவ்வேறாகக் கொண்டிருந்தவர் என்பது நெஸ்டாரியஸ் கொள்கை.

துறவியான ஒடோரிக் என்பவர் இந்தியாவுக்கு வந்தார். 1321-ல் வந்த அவர் இந்தியாவின் மேற்குக் கடற்கரை நாடுகளில் பயணஞ் செய்து, இலங்கைக்குப் போய்விட்டு, அதன்பின் மயிலாப்பூருக்கு வந்து செயின்ட் தாமஸ் மாதா கோயிலைப் பார்த்தார். இந்தியப் பழக்கவழக்கங்களை அவர் நேரிற் பார்த்து எழுதியிருக்கிறார் என்பதை அவருடைய குறிப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன. கடைசியாக ஜார்டனஸ் என்னும் துறவியின் குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர், ஒடோரிக் என்பவர் வருவதற்குச் சிறிது காலத்துக்கு முன் இந்தியாவுக்கு வந்தார். அவர் எழுதிய கடிதங்களுள் இரண்டு இந்தியாவிலிருந்து 1321, 1324 ஆகிய ஆண்டுகளில் எழுதப்பட்டவை. இந்தியாவில் கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு அளவுகடந்த வேலை இருப்பதாக அந்த இரு கடிதங்களிலும் ஐரோப்பியப் பாதிரிமார்களுக்கு அவர் தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் வாழ்ந்த பார்சிகள் பிணங்களைக் கழுகு தின்னுமாறு வெட்டவெளியில் வைத்துவிடுகிறார்கள் என்றும் அவர் எழுதியுள்ளார். அந்தச் சமூகத்தைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய குறிப்புகளில் ஜார்டனஸ் பாதிரியார் எழுதிய குறிப்பும் ஒன்றாகும். 1328-ல் அவர் கொலம்பம் (கொல்லம்) பிஷப்பாக நியமிக்கப் பெற்றார். ஆனால் அந்தப் பதவியை அவர் ஏற்று நடத்தினாரா என்பது நமக்குத் தெரியவில்லை. பிளாரன்சைச் சேர்ந்த மரிக்னெல்லி ஜான் என்பவர் நமது கவனத்தைச் சிறிது கவரும் இன்னொரு துறவி. அவர் போப் பாண்டவரின் பிரதிநிதியாகக் குப்ளாகான் அரசவைக்குப் போனார். அவரும் மார்க்கபோலோவைப் போல் தரைவழியாகவே சீனாவுக்குச் சென்றவர். 1346ஆம் ஆண்டில் அவர் புகழ்பெற்ற சீனத் துறைமுகமான ஜெயிட்டன் துறைமுகத்தில் கப்பலேறிக் கொல்லத்துக்கு வந்து சேர்ந்தார்; அங்குச் சிறிதுகாலந் தங்கியபின் செயின்ட் தாமஸ் மாதா கோயிலைத் தரிசிப்பதற்காகச் சோழ மண்டலக் கடற்கரைக்கு வந்தார். அவர் இலங்கையிலும் சிலநாள் தங்கியிருந்தார். அங்கு அவர் கண்ட புத்தமதத் துறவிகளைப் பற்றிக் கவர்ச்சியான தகவல்களை எழுதிவைத்திருக்கிறார்.

பதினான்காம் நூற்றாண்டில் விஜயநகர அரசு தோன்றியது. அதற்குச் சிறிது காலத்துக்குப்பின் கீழை நாடுகளில் போர்ச்சுகீசிய ஆதிக்கம் தோன்றியது. அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் பல வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வரக்காரணமாயின. அதனால், தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் எழுதிவைத்துள்ள செய்திகள் அளவிலும், வகையிலும், கவர்ச்சியிலும் மிகுந்தன. அந்தச் சான்றுகள் அனைத்தையும் நாம் இப்போது கவனிக்க முடியாது. நமக்கு வேண்டிய மிகவும் முக்கியமான செய்திகளை

மட்டும் இங்குக் கவனிப்போம். விஜய நகரத்துக்கு வந்த வெளி நாட்டினர் குறிப்புகளுள் நமக்குக் கிடைத்திருப்பவைகளில் மிகவும் பழையவை நிக்கலோகான்டி என்னும் இத்தாலியருடைய குறிப்புகளாகும். அவர் 1420 அல்லது 1421-ல் விஜயநகரத்துக்கு வந்தார். அவராக எதையும் எழுதவில்லை. அவர் தம்முடைய அனுபவங்களைப் போப்பாண்டவருடைய செயலாளர் ஒருவருக்கு எடுத்துச் சொன்னார். அந்தச் செயலாளர் அவற்றை லத்தீன் மொழியில் எழுதிப் போப்பாண்டவருக்குக் கொடுத்தார். பின்னர் அந்தக் குறிப்புகள் போர்ச்சுகீசிய மொழியில் பெயர்த்தெழுதப் பட்டன. அதன்பின் அவை போர்ச்சுகீசிய மொழியிலிருந்து இத்தாலிய மொழியில் பெயர்த்தெழுதப்பட்டன. முதலில் லத்தீன் மொழியில் எழுதிய குறிப்புகள் இப்போது கிடைப்ப தில்லை. விஜயநகர அரசவை, அங்கு நடந்த விழாக்கள், அந்த அரசின் நாணயச் செலாவணி முதலிய பல செய்திகளை நிக்கலோ கான்டி விவரித்துள்ளார். ஏறக்குறைய அதே காலத்தில் பாரசீக அரசரான ருக்ஷா ஒரு முக்கியமான காரியத்திற்காக ஜாமோரீன் சபைக்கு அனுப்பிய தூதர் அப்துர் ரஜாக் என்பவரும் விஜய நகருக்கு வந்தார். அவர் 1442-ல் ஆர்மஸ் என்ற துறைமுகத்தி லிருந்து கிளம்பிக் கள்ளிக்கோட்டையை அடைந்தார். அந்த நகரம் அவருக்குப் பிடிக்கவில்லை. அங்கு அவர் வெகுநாள் இருக்க வில்லை. உடனே அவரை விஜயநகருக்கு அனுப்பி வைக்கவேண்டு மென்று விஜயநகர அரசர் கள்ளிக்கோட்டைக்குச் செய்தி யனுப்பினர். அதன்படி அப்துர் ரஜாக் மங்களூர் வழியாகப் பயணஞ்செய்து விஜயநகரை அடைந்தார். அங்கு அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. அவர் வந்துசேர்ந்த சமயம் விஜயநகரில் மகா நவமி விழா நடந்துகொண்டிருந்தது. சிறிது காலத்துக்குப் பின் ஆர்மஸ் என்னும் ஊரிலிருந்து வந்த வணிகர் சிலர், அவர் மீது பொறாமைகொண்டு உண்மையில் அவர் பாரசீக மன்னரின் தூதர்தானு என்பதில் ஐயத்தைக் கிளப்பிவிட்டனர். அதனுல் விஜயநகர அரசவையில் அவருக்கிருந்த மதிப்புக் குறைந்தது. எனவே, அங்கிருக்கப் பிடிக்காததால் அவர் 1443-ல் மங்களூருக்குச் சென்றுவிட்டார். அடுத்த ஆண்டில் அவர் அங்கிருந்து பாரசீகத் துக்கே திரும்பிச் சென்றுவிட்டார். அவருடைய குறிப்புகள் பயிற்சி பெற்ற ஓர் அரசு அலுவலர் நிர்வாகத்தைப் பற்றியும் சமுதாய நிலையைப் பற்றியும் உரிய முறையில் எழுதிவைத்த அறிக்கைகள் எப்படியிருக்குமோ அப்படியிருக்கின்றன.

அதனேசியஸ் நிக்கிட்டின் என்னும் ரஷ்ய நாட்டு வணிகர் ஏறத்தாழ 1470ஆம் ஆண்டிலிருந்து சில ஆண்டுக் காலம் தக்காணத்திலிருந்தார். சால் என்னும் ஊர் வழியாக அவர்

பாமினி ராஜ்யத்திற்குச் சென்று, அங்குப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். பாமினி அரசவை, அரசனுடைய படைகள், இந்த ராஜ்யத்தில் வாழ்ந்த மக்களுடைய நிலைமை முதலிய வற்றைப் பற்றிய விவரங்களை அவருடைய குறிப்புகளிற் காண்கிறோம். இத்தாலி நாட்டைச் சேர்ந்த போர் வீரரும் பண்பாளருமான லுடோவிக்கோ டி வர்த்தெமா என்பவர் 1502 முதல் 1508 வரையில் இந்தியாவில் சுற்றுப் பயணஞ் செய்தார். பிற்காலத்தில் போர்ச்சுகீசிய அரசு அவருக்கு வீரத்திருத்தகைப் பட்டத்தை அளித்தது. அவர் இந்தியாவில் தாம் பெற்ற அநு பவங்களை மிக விளக்கமாக எழுதி வைத்திருக்கிறார். அவருடைய குறிப்புகள் நம்பத்தக்கவைதானா என்பதில் வரலாற்றாசிரியர்கள் நெடு நாள் ஐயப்பட்டார்கள். ஆனால், அந்த ஐயம் தவறானது என்பதை அவர்கள் இப்போது உணர்ந்து விட்டார்கள். கோவா, கள்ளிக்கோட்டை முதலியமேற்குக்கடற்கரைத் துறைமுகங்களைப் பற்றியும், போர்ச்சுகீசியர் வருகையால் அந்தத் துறைமுகங்களில் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றியும் அவர் எழுதி வைத்திருக்கிறார். மேலும், அவர் விஜயநகர அரசைப் பற்றியும் அதன் தலைநகரான விஜயநகரைப் பற்றியும் பல குறிப்புகளை எழுதிவைத்துள்ளார். அவற்றுள் பல செய்திகள் பயனும் கவர்ச்சியும் உடையவை.

டுவார்ட்டே பார்போசா என்னும் போர்ச்சுகீசியர் இந்தியாவில் போர்ச்சுகீசிய அரசின் அலுவலராக 1500 முதல் 1516 வரையில் பணியாற்றினவர். அவர் 'மலையாளிகளைவிட நன்றாக மலையாளம் பேசும்' ஆற்றலுடையவர். 1502-ல் அவர் கண்ணனூர் வாணிக நிலையத்தில் தரகு வணிகராக இருந்தார். 1503-ல் அவர் கண்ணனூர் அரசருக்கும் பிரான்ஸிஸ் கோ ஆல்புக்கர்க்குக்கும் இடையே மொழிபெயர்ப்பாளராக இருந்தார். அவருடைய எழுத்துத் திறமையை காஸ்பர் கொரியா என்பவர் பாராட்டினார். கொச்சி, கண்ணனூர் ஆகிய துறைமுகங்களைப் புறக்கணித்து விட்டுப் போர்ச்சுகீசிய அரசு கோவாவின் முன்னேற்றத்தில் கவனஞ் செலுத்தியது பார்போசாவுக்குப் பிடிக்கவில்லை. எனினும், அவருடைய திறமையை அறிந்திருந்த ஆல்புக்கர்க்கு அவரைத் தம்மிடத்தில் வேலைக்கு வைத்துக் கொண்டார். பார்போசா 1517க்கும் 1518க்கும் இடையில் போர்ச்சுகலுக்குத் திரும்பினார். அதன்பின், அவர் முன்னர் எழுதி வைத்திருந்த குறிப்புகளைத் திருப்பிப் பார்த்துச் செப்பஞ் செய்தார். அரசு அலுவலர் என்ற முறையில் அவர் எழுத வேண்டிய குறிப்புகளைவிட மிக அதிகமான செய்திகளை அவர் எழுதிவைத்திருக்கிறார். விஜயநகரைப் பற்றிய விவரங்களை அவர் குறிப்புகளில் நாம் காண்கிறோம்.

ஏனைய போர்ச்சுகீசிய எழுத்தாளர்களுடைய குறிப்புகளும் பதினாறும் நூற்றாண்டின் வரலாற்றை எழுதுவதற்கு மிகவும் உதவுகின்றன. அத்தகைய மூன்று பேர் தரும் சான்றுகளின் முக்கியத்துவத்தைத் தாம் எழுதிய 'மறந்துபோன பேரரசு' (1900) என்னும் நூலில் சீவல் என்பவர் வற்புறுத்திக் கூறுகிறார். அவர்களுள் டாமிங்கோ பேயிஸ் என்பவர் ஏறக்குறைய (1520–22) எழுதிய வரலாற்றுக் குறிப்புகளும், விஜய நகரில் மூன்றுண்டு வசித்த குதிரை வணிகரான பெர்னாவோ நூனிஸ் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளும் ஆகியவற்றின் மொழிபெயர்ப்பை சீவல் தம் நூலிற் சேர்த்திருக்கிறார். மேலும், மானுவேல் பராடாஸ் என்பவர் கொச்சியிலிருந்து 1616 டிசம்பர் 12ஆம் நாள் எழுதிய ஒரு கடிதத்தின் ஒரு பகுதியினுடைய மொழிபெயர்ப்பையும் சீவல் தம் நூலில் சேர்த்திருக்கிறார். அந்தக் கடிதத்தில் அப்போது விஜயநகர ராஜ்யத்தில் நடந்துகொண்டிருந்த உள்நாட்டுப் போரைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன.

தலைக்கோட்டைப் போருக்குப்பின் இரண்டாண்டுகள்கழித்து விஜயநகருக்கு வந்த சீசர் பிரடரிக்கும் 1583ஆம் ஆண்டிலிருந்து 1591ஆம் ஆண்டு வரையில் இந்தியாவிலிருந்த ரால்ப் பிட்சும், பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவிலிருந்த ஏசு சங்கத் துறவிகளின் பணிகளை மேற்பார்வையிட வந்த நிக்கலஸ் பீமென்டாவும், 1583-ல் இந்தியாவுக்கு வந்த டச்சுப் பயணியான ஜான் ஹியூகன் வான் லின்ஸ்சோட்டனும் ஆகியோர் அந்தக் காலத்து இந்திய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற செய்திகள் பலவற்றை எழுதி வைத்திருக்கிற ஏனைய ஐரோப்பியர்கள் ஆவார்கள். இந்தியாவிலிருந்த ஏசு சங்கத் துறவிகள் எழுதிய கடிதங்களில் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளும் இடையிடையே இடம் பெறுகின்றன. டச்சுத் தரகு வணிகரான ஷோராவும் (1615) ஆங்கிலத் தரகு வணிகரான வில்லியம் மெத்வோல்டும் (1618 – 22) ஆகியவர்களும் ஏறக்குறைய அதே காலத்தில் இந்தியாவிலிருந்த பெயர் தெரியாத டச்சுக்காரர் ஒருவரும் கோல்கொண்டா ராஜ்யத்தின் அரசியல் நிகழ்ச்சிகள், வாணிகம் முதலியவற்றைப் பற்றிய செய்திகளையும், மசூலிப் பட்டினத் துறைமுகத்தைப் பற்றிய செய்திகளையும் விளக்கமாக எழுதி வைத்திருக்கிறார்கள். அவை எல்லாவற்றையும் மோர்லண்டு ஆராய்ந்து திருத்தமாகப் பதிப்பித்திருக்கிறார்.

இறுதியாக, பீட்ரோ டெல்லா வாலே என்பவருடைய குறிப்புகளுடன் இந்தப் பகுதியை முடித்துக் கொள்வோம்.

அவர் வாணிகம், அரசு அலுவல் என்ற காரணங்களுக்காக அன்றி இன்பத்திற்காகவே பயணஞ் செய்தவர்களுள் தலைசிறந்தவர் என்றும், செய்திகளைத் தெரிந்து கொள்வதில் மிகுந்த நுண்ணறிவுடையவர் என்றும், கண்டவற்றை விளக்கமாக எழுதுவதில் உண்மையினின்று ஒரு சிறிதும் வழுவாதவர் என்றும் பாராட்டப்படுகிறார். அவர் 1586-ல் ரோம் நகரில் பிறந்தார்; 1623-ல் பந்தர் அபாஸ் என்னும் துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டார். இந்தியாவில் அவர் காம்பே, அகமதாபாத், சால், கோவா, இக்கேரி, மங்களூர், கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களைப் பார்த்து விட்டு, 1624 நவம்பரில் கோவாவிலிருந்து மஸ்காட்டுக்குப் புறப்பட்டார். பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்ச்சுகீசியரது ஆட்சியிலிருந்த இந்தியப் பகுதிகளிலும், அவற்றுக்கு அண்மையிலிருந்த சுதேச ராஜ்யங்களிலும் வாழ்ந்த மக்களைப் பற்றியும் அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றியும் அவருடைய கடிதங்களில் உள்ளவற்றை உள்ளவாறு விளக்கமாக நம் மனக்கண்முன் நிறுத்துகின்றன.

## BIBLIOGRAPHY


C. J. Brown : 'The Coins of India' (London, 1922)

Sir T. Desikachari : 'South Indian Coins' (Trichinopoly, 1933)

K. A. N. Sastri : 'Foreign Notices of South India' (Madras, 1939)
-and H. S. Ramanna : 'Historical Method in relation to Indian History' (Madras, 1956)

V. A. Smith : 'Oxford History of India' (Oxford, 1923)




தென்னிந்தியா (இயற்கை அமைப்பு)

# 2. நிலத்தின் இயல்புக்கும் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு

***வடக்கும் தெற்கும்—தீபகற்பம்—மேற்குத் தொடர்ச்சிமலை—கணவாய்களும் வாணிக வழிகளும்—கிழக்குத் தொடர்ச்சிமலை—தட்சிண பீடபூமி—மழையும் இயற்கைத் தாவரமும்—கடற்கரைச் சமதள நிலையில் மாற்றங்கள்—வடிகால்கள்—கோதாவரி—கிருஷ்ணாவும் பீமாவும் துங்கபத்திராவும்—காவிரி—நர்மதை—தபதி—துறைமுகங்கள்—மேற்குக் கடற்கரைப் பகுதி—கிழக்குக் கடற்கரை—ஆறுகளின் கழிமுக நடு அரங்கங்கள்—சோழ மண்டலக்கரை.***

வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும் பின்னைய அதிகாரங்களுக்கு அடிப்படையாக இருப்பதற்கு ஏற்ற முறையில், இந்த அதிகாரத்தில் தென்னிந்தியாவின் நில இயல்புகளைப் பொதுவான முறையில் விவரிக்க விரும்புகிறோம். இப்போது நமது கவனத்திற்குரியது விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பகுதிதான். அது கரடு முரடான மலைப்பகுதி. அது சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் இருப்பதோடு அதன் அகலமும் ஆங்காங்கு வேறுபடுகிறது. கிழக்கு மேற்கில் அது ஏறக்குறையக் கடக ராசியை ஒட்டி அமைந்திருக்கிறது. வடக்குப் பக்கத்தில் அது சிறிதுசிறிதாகத் தாழ்ந்து செல்கிறது. அந்தப் பக்கத்தில் நன்றாகத் தெரிகிற வகையில் அமைந்த பக்க மலைகளோ ஆழமான பள்ளத்தாக்குகளோ இல்லை. ஆனால், தெற்குப் பக்கத்தில் அது செங்குத்தாகச் சரிகிறது. அதனால், அங்கு விந்திய மலைத்தொடர், காடுகள் நிறைந்த பக்கமலைகளுடன் நர்மதைப் பள்ளத்தாக்கை நோக்கி உயர்ந்து நிற்கிறது. அந்தக் குறுகிய பள்ளத்தாக்குக்குத் தெற்கெல்லையாகச் சாத்பூரா, மகாதேவ, மெய்க்கல் மலைகளின் தொடர்கள் இருக்கின்றன. சாத்பூரா மலையின் தெற்குச் சரிவில் இரண்டு நதிகள் ஓடுகின்றன. அவற்றுள் தபதி நதியானது நர்மதை நதிக்கு இணையாக மேற்கு நோக்கி ஓடுகிறது. ஆனால், மகாநதி கிழக்கு

நோக்கி ஓடி வங்கக்கடலில் விழுகிறது. இந்த இரண்டு மலைச் சுவர்களும் வட இந்தியச் சமவெளியையும், தட்சிண தீபகற்பத் தையும் இரண்டாகப் பிரித்து விடுகின்றன. எனினும், இந்தச் சுவர்கள் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையி லுள்ள தொடர்புகளுக்கு என்றுமே கடக்க முடியாத இடையூருக இருந்ததில்லை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரையில் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் அரசியல் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் தொடர்பில்லாத காலமே கிடையாது. அதனுல் ஒன்றன் செல்வாக்கு இன் னென்றன்மீது எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. ஆங்கி லேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் குறைந்தது மூன்று சமயங்களிலாவது வட இந்தியாவும், தென்னிந்தியாவும் சேர்ந்து ஏறக்குறைய இந்திய நாடு முழுதும் ஒரே பேரரசின் ஆதிக்கத்தில் இருந்தது.

**தீபகற்பம்**

தீபகற்பம் வங்கக்கடலுக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் நீண்டு குறுகிச் சென்று இறுதியில் கன்னியாகுமரி முனையில் முடிகிறது. குமரி முனையிலிருந்து தீபகற்பத்தின் மேற்குக்கரை வடமேற்காக ஏறத்தாழ ஆயிரம் மைல் நீண்டு கிடக்கிறது. இதனை மலையாளக் கடற்கரை என்பர். கிழக்குக் கரை முதலில் வடக்காகவும், பின்னர் வடகிழக்காகவும் ஆயிரல் மைல் நீண்டு செல்கிறது. இதனைச் சோழமண்டலக்கரை என்பர். இந்த இரண்டு கரைகளிலுமே நல்ல இயற்கைத் துறைமுகங்கள் இல்லை. ஆனுல், மேற்குக் கரையானது கிழக்குக் கரையைவிட இந்த வகையில் ஓரளவு சிறந்ததாய் இருக்கிறது. அங்கே கொச்சி, கோவா, பம்பாய் ஆகிய இடங்கள் கப்பல்கள் நிற்பதற்கு ஓரளவு வசதி அளிக்கின்றன. மத்தியதரைக் கடலிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் சீனுவுக்குச் செல்லும் கடல் வாணிக வழியின் பாதித் தொலைவில் இந்தியா இருப்பதால், இரு பக்க நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கடல் வாணிகம் ஓரளவு மிகுதி யாகவே நடந்துவந்தது. வங்கக் கடலுக்குக் கிழக்கிலுள்ள நாடுகளில் இந்தியர்கள் குடியேறுவதற்குப் பெருமளவு வசதியும் ஏற்பட்டது. தென்னிந்திய அரசர்கள் கடற்படையின் முக்கியத் துவத்தை உணர்ந்திருந்தார்கள். தென்னிந்தியாவில் ஆட்சி செய்த அரச மரபினர் அனைவருமே கடற்படையை வைத்திருந் தனர் என்று சொல்ல முடியாது. ஆனுல், அவர்களுள் சிலரேனும் வலிமைமிக்க கப்பற்படையை வைத்திருப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர் என்பது உண்மை. சாதவாகனர்,

பல்லவர், சோழர் ஆகியவர்களை அத்தகையவர்களென்று சொல்லலாம். மலையாளக் கரையைச் சேர்ந்த மாலுமிகள் கடற்கொள்ளைக்காரர்கள் என்ற பெயர் பெற்றிருந்தார்கள். அந்தக் கெட்ட பெயர் பல நூற்றாண்டுக்காலம் நிலைத்திருந்தது. ஆனால், சோழ மண்டலக்கரை மாலுமிகள் இந்தியப் பெருங் கடலிற் கப்பலோட்டுவதில் வல்லுநர்கள் என்ற பெயரைப் பெற்றார்கள். அவர்களுடைய திறமையை இடைக்கால அரேபிய நிலநூல் வல்லுநர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தீபகற்ப இந்தியாவின் துறைமுகங்கள், கடல் வாணிகம் ஆகிய வற்றைப் பற்றிய பழங்காலச் செய்திகள் பெரிப்ளஸ் என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளன.

**மேற்குத் தொடர்ச்சி மலை**

முக்கோண வடிவில் அமைந்த மிகப் பழைய பாறைப் பாளம் ஒன்று தீபகற்ப இந்தியாவின் மையக் கருவாக இருக்கிறது. அந்தப் பாளம் சத்மாலா—அஜந்தா மலைகளில் தொடங்கித் தெற்கே நீலகிரி வரையில் தீபகற்ப இந்தியாவின் பெரும் பகுதியிற் பரவியிருக்கின்றது. அந்தப் பகுதி பீட பூமிக்குரிய எல்லா இயல்புகளையும் பெற்றிருக்கிறது. அதன் மேற்கு விளிம்பில் செங்குத்தாக உயர்ந்து நிற்கும் மேற்கு மலைத் தொடர் இருக்கிறது. அந்தத் தொடரின் மேற்குப் பக்கத்தில் கரடுமுரடான, குறுகிய, ஈரமிக்க தாழ்நிலம் உள்ளது. அதுதான் மேற்குக் கடற்கரை. பீடபூமி கிழக்கே சிறிது சிறிதாகத் தாழ்ந்து செல்கிறது. அதன் விளிம்பில் அவ்வளவு உயரமில்லாத கிழக்கு மலைத் தொடர் இருக்கிறது. அந்த மலைத் தொடருக்கும் சோழ மண்டலக் கரைக்கும் இடையில் உள்ள தாழ்நிலம் கர்நாடகச் சமவெளி என்னும் பெயர் உடையது. அது மேற்குக் கடற்கரையைக் காட்டிலும் அகலமானது; ஈரங்குறைந்தது; அதைப்போல் கரடு முரடானதும் அன்று.

மேற்கிலிருந்து பார்த்தால் மேற்குத் தொடர்ச்சி மலை ஒரு மிகப் பெரிய சுவரைப் போலக் காட்சியளிக்கிறது. கடற்கரை யிலிருந்து அது பல இடங்களில் படிப்படியாக உயர்கிறது. அதனால்தான் அது 'காட்' (படிக்கட்டு) என்னும் பெயர் பெற்றது. மேற்கு மலைத் தொடர் வடகோடியில் ஏறக்குறைய 2000 அடி உயரந்தான் இருக்கிறது. ஆனால், தெற்கே போகப் போக அது உயர்ந்துகொண்டே போகிறது. பம்பாய்க்கு நேராக வரும்போது அது 4000 அடி உயரமிருக்கிறது; நீலகிரியை

அடையும்போது 8000 அடிக்கு மேலே உயர்கிறது. நீலகிரியி லிருக்கும் தொட்டபெட்டா சிகரம் 8760 அடி உயரமுள்ளது. கிழக்குப் பக்கத்தில் பீடபூமியின் விளிம்பில் தெற்கு நோக்கி வரும் கிழக்குத் தொடர்ச்சி மலை, நீலகிரியில் மேற்குத் தொடர்ச்சி மலையோடு சேர்கிறது. அதற்குத் தெற்கில் உள்ள கோயம்புத் தூருக்கு அருகில்தான் பாலக்காட்டுக் கணவாய் இருக்கிறது. அதைத் தவிர மேற்குத் தொடர்ச்சி மலையின் இந்தப் பகுதியில் வேறு இடைவெளியே கிடையாது. கணவாய் தெற்கு வடக்காய் ஏறக் குறைய 20 மைல் அகலமுள்ளது. அதன் உயரம் ஏறக்குறைய 1000 அடி. இது மேற்குக் கடற்கரைத் தாழ் நிலத்தையும், கர்நாடகத் தாழ் நிலத்தையும் இணைக்கிறது. கொச்சி, கள்ளிக்கோட்டை முதலிய துறைமுகங்களையும், கர்நாடகச் சமவெளியையும் இணைக்கின்ற இந்த எளிய சாலை, பலவேறு வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முக்கியமான காரணமாய் இருந்தது. கணவாய்க்குத் தெற்கில் மேற்குத் தொடர்ச்சி மலை இன்னும் உயரமாயிருக்கிறது. அங்குள்ள ஆனை முடியின் உயரம் 8841 அடி. அதற்குப்பின் அந்த மலை, தெற்குத் தென் கிழக்காகத் திரும்பித் தீபகற்ப இந்தியாவின் இறுதியிலுள்ள குமரிமுனையில் முடிகிறது. அரபிக்கடலுக்கும் மலைத் தொடருக்கும் இடையிலுள்ள தாழ் நிலம் பொதுவாக 50 முதல் 100 மைல் வரையில் அகலமுள்ளது. ஆனால், சில இடங்களில் அது 5 மைல் அகலத்திற்கு மேல் இல்லை. அதனால், சில இடங் களில் பக்கவரைகள் கடல் மீது கவிந்து நிற்கும் செங்குத்தான பாறைகளாகக் காட்சியளிக்கின்றன.

கோவாவுக்கு வடக்கில் மேற்கு மலைத் தொடரின் மேற் பரப்பைத் திண்ணிய எரிமலைப் பாறைகள் மூடியிருக்கின்றன. பம்பாய்க்கு நேராக இருக்கும் பகுதியில் அந்த எரிமலைக் குழம்புப் பாறைகள் மற்றப் பகுதிகளில் இருப்பதைவிட மிகக் கெட்டியாய் உள்ளன. பலகோடி ஆண்டுகளாக மழை, வெயில், காற்று ஆகிய இயற்கை ஆற்றல்களின் தாக்குதலுக்குட்பட்ட அந்தப் பாறைகள் இயற்கை அரண்களாகவும், கோட்டைகளாகவும் உருமாறியிருக்கின்றன. மராட்டியருடைய வலிமை ஓங்கியிருந்த காலத்தில் அவ்விடங்களை அவர்கள் தங்கள் தானை நிலையங்களாகப் பயன்படுத்தினார்கள். பூனாவுக்கருகில் உள்ள உயர் நிலங்களில் எரிமலைக் குழம்பு மண் படிந்திருப்பதால் அவை பருத்திப் பயிருக்கு ஏற்ற நிலங்களாய் இருக்கின்றன. செழிப்பில் அந்த மண் நருமதை தபதி நதிகளின் பள்ளத்தாக்குகளிலுள்ள வண்டல் மண்ணுக்கு இணையாய் இருக்கிறது. கோவாவுக்குத் தெற்கில் மேற்குத் தொடர்ச்சிமலையின் பல பகுதிகள் படிகம்,

களிமம், அபிரகம் முதலியவை கலந்த அடுக்குப் பாறைகளாலும் கொடுவரிப் பாறைகளாலும் ஆனவை.

**கணவாய்களும் வாணிக வழிகளும்**

பம்பாய்க்குத் தெற்கில் மேற்கு மலைத் தொடரின் மேற்குச் சரிவுகளில் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் கணவாய்களும் இல்லை. ஆனால், பம்பாய்க்கு வடக்கில் மேற்குக் கடற்கரைச் சமவெளியை உள்நாட்டுப் பீடபூமியோடு இணைக்கின்ற வரலாற்றுப் புகழ்வாய்ந்த பல சாலைகள் இருக்கின்றன. திரிம்பக் கணவாய் அவற்றுள் ஒன்று. அது கோதாவரி ஆறு உற்பத்தியாகும் இடத்திற்கு அருகில் இருக்கிறது. வைத்தர்ணு ஆறு மட்டுமே அந்தப் பகுதியில் அரபிக் கடலில் விழுகின்ற குறிப்பிடத்தக்க ஆறு. அது கோதாவரி நதி உற்பத்தியாகிற இடத்துக்கு ஏறக்குறைய நேர் எதிரிலிருக்கும் ஓரிடத்தில் உற்பத்தியாகிறது. கோதாவரியாறு உற்பத்தியாகிற இடத்தின் புனிதத் தன்மையும் அந்த ஆற்றுப் பள்ளத்தாக்கின் முக்கியத்துவமும், அக் கணவாயை மேலைக் கடற்கரையையும் வட தக்காணத்தையும் இணைக்கும் மிகப் பழைய வாணிக வழிகளில் ஒன்ருய்ச் செய்துவிட்டன. மேலும், அவ்வாற்றுப் பள்ளத்தாக்கின் கீழ்ப் பகுதிகளின் அழகைக் கண்ட ஆரியர்கள் மிகப் பழங்காலத்திலேயே அங்கே குடியேறினர்கள். தால்காட் என்பது வரலாற்றுப் புகழ் பெற்ற மற்ருெரு கணவாய். அங்கிருந்து செல்லும் சாலை பம்பாயையும் ஆக்ராவையும் இணைக்கிறது. இப்போது மேற்கு ரயில்வேயின் வடக்குக் கிளையும் அந்த வழியாகத்தான் செல்கிறது. பிம்பிரிக்கணவாய் வழியாகப் பழைய சாலை யொன்று சொப்பாராவையும், கல்யாணியையும், நாசிக்கையும் இணைக்கிறது. நாணக் கணவாய் கொங்கணக் கரையையும் ஜுன்னுரையும் இணைக்கிறது. அந்த வழியைக் காப்பதற்கு ஜுன்னுரில் ஒரு கோட்டை இருக்கிறது. இந்தப் பகுதியில் சக்கன் என்னும் இடமும், பீமா நதி உற்பத்தியாகும் இடத்திற்கு அருகிலுள்ள பீமசங்கர் என்னுமிடமும் வரலாற்றுப் புகழ் பெற்றவை. கணவாய்களுள் எல்லாம் மிகவும் புகழ் பெற்றது ‘போர்காட்’ அல்லது கண்ட்லாக் கணவாயாகும். அதன் அகலம் ஏறக்குறைய 2000 அடி. அதன் வழியாகத்தான் பம்பாய்—பூனு சாலையும் மேற்கு இருப்புப் பாதையின் தென் கிளையும் தக்காணத்துக்குள் நுழைகின்றன. இந்தப் பழங்கால ராணுவச் சாலை தக்காணத்தின் சாவி என்று எல்லாக் காலத்திலும் கருதப்பெற்ற ஒன்ருகும். அந்தச் சாலையிலும் அதன் அருகிலும் கோண்டேன், கார்லே, பாஜா, பெட்ஸா ஆகிய

வரலாற்றுப் புகழ் வாய்ந்த குகைகள் இருக்கின்றன. இரத்தின கிரியையும் கோலாப்பூரையும் இணைக்கும் அம்பாக் கணவாய், வெங்குர்லாவையும் பெல்காமையும் இணைக்கும் கணவாய், கார்வாரையும் தார்வாரையும் இணைக்கும் கணவாய் போன்ற வற்றைப் பற்றி நாம் அதிக கவனஞ் செலுத்த வேண்டியதில்லை. செங்கோட்டைக் கணவாயும், ஆரல்வாய்மொழிக் கணவாயும், திருவிதாங்கூரையும் பாண்டி நாட்டையும் இணைக்கும் தென் கோடியில் உள்ள கணவாய்கள்.

செங்குத்தாக நிற்கும் சதுர வடிவப் பாறைகள் மேற்குமலைத் தொடருக்கு விசித்திரமான முறையில் இயற்கை அழகை அளிக் கின்றன. 'மாறுபடுகின்ற அளவுகளில் எதிர்ப்பாற்றலையுடைய கிடைநிலை நில அடுக்குப்படிவங்கள் மேற்பரப்புப்பாறை நீக்கத் துக்குட்படும் இடங்களிலெல்லாம் மலைகள் இத்தகைய வடிவங்களைப் பெறுகின்றன. மேற்கு மலைத்தொடரின் பல பகுதிகளில் இந்த விசித்திர வடிவங்களை மீண்டும் மீண்டும் காண்கிறோம்.'

தென்னிந்தியாவிலுள்ள மேற்கு மலைத் தொடரின் பகுதியில் ஆனைமலையானது நம் கருத்தை மிகவும் கவர்கின்ற பகுதியாகும். மலையின் உயர்ந்த பகுதிகளில் 7000 அடி உயரமுள்ள பீடபூமி களும், 8000 அடி உயரமுள்ள சிகரங்களும் இருக்கின்றன. அவற்றின் சரிவுகளிலும் ஆழமான பள்ளத்தாக்குகளிலும் பசுமை மாறாத அடர்ந்த காடுகள் கண்ணைக் கவரும் வனப்புடன் விளங்குகின்றன. மேற்குப் பக்கத்திலிருக்கின்ற தாழ்ந்த பகுதிகள் 3000 அடி முதல் 4000 அடி வரையில் உயரமுள்ளவை. அங்குள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் காப்பிப் பயிரிடப் படுகிறது. தேக்கு மரம் வளர்கின்ற பகுதியும் அங்குத்தான் இருக்கிறது. பொதுவாக, ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு பருவத்தில் இலையுதிர்கின்ற இயல்பையும், அந்த உயரத்தில் வளரும் இயல்பையும் உடைய பல வகைக் கட்டடத் தச்சுவேலைக் குரிய மரங்களும் அங்கே இருக்கின்றன. மலைச் சரிவுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் பல வகைக் காட்டு விலங்குகள் இருக் கின்றன. அவற்றுள் யானைகளும் மிகுதியாக இருக்கின்றன. அதனால்தான் அந்த மலைக்கு ஆனைமலை என்னும் பெயர் வந்தது. ஆனைமலையில் காடர், முதுவர், புலையர் ஆகிய பழங்குடி மக்கள் வாழ்கிறார்கள்.

**கிழக்குத் தொடர்ச்சி மலை**

கிழக்குத் தொடர்ச்சிமலை, ஒழுங்கான அமைப்பையும் ஒழுங்கற்ற மேற்பரப்பையும் உடைய மேற்கு மலைத் தொடரைப்

போல் அவ்வளவு அழகுடையது அன்று. கிழக்கிலுள்ள மலைகள் பல இடங்களில் தொடர்பற்றுச் சிதறிக்கிடக்கின்றன. அவற்றின் உயரமும் குறைவானது. ஆனால், மண்ணூல் ஆராய்ச்சிச் சான்றுகளின்படி அவை மேற்குத் தொடர்ச்சி மலைகளைவிடப் பழமையானவை. ஒரிசாவில் தொடங்குகின்ற அந்த மலைகள் கடற்கரைக்கு இணையாகத் தெற்கே சென்று ஆந்திராவை அடைகின்றன. அதுவரையிலுள்ள கடலோரத் தாழ்நிலம் ஏறக்குறைய 50 மைல் அகலமுள்ளது. இவ்வாறு 16° அட்சரேகை வரையில் வந்தபின், மலைத்தொடர் கடற்கரையி லிருந்து தள்ளிப் போய் விடுகிறது. அதன்பின் சென்னைக்கு நேராக வந்தவுடன் மலைத்தொடர் தென்மேற்காகச் சென்று தக்காணப் பீடபூமியின் தெற்கெல்லையை வரையறுத்த பின்னர், நீலகிரியில் மேற்குத் தொடர்ச்சி மலையுடன் சேர்ந்து விடுகிறது.

கிழக்குத் தொடரைச் சேர்ந்த மலைகள் பல இடங்களில் தொடர்பறுந்திருப்பதாலும், அவற்றின் உயரமும் குறைவாக இருப்பதாலும் கடற்கரைக்கும் பீடபூமிக்கும் இடையில் போக்கு வரவுக்கு மேற்கு மலைத் தொடரைப் போல அவை அவ்வளவு பெரிய தடையாக இல்லை. மேலும், முக்கியமான ஆறுகளெல்லாம் மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, கிழக்கு நோக்கிப் பாய்ந்து, கிழக்குத் தொடர்ச்சி மலைகளை அறுத்துக் கொண்டு போய் வங்கக் கடலில் விழுகின்றன. அந்த ஆறுகள் போக்குவரவு வசதியை மேலும் பெருக்க உதவுகின்றன.

### தட்சிண பீடபூமி

தட்சிண பீடபூமி பொதுவாக 2000 அடி உயரமுள்ளது. ஆனால், அது கிழக்கிலும் மேற்கிலுமுள்ள மலைத் தொடர்களை அணுக அணுக உயர்ந்துகொண்டே போவதுடன், அதன் மேற் பரப்பும் அதிகக் கரடுமுரடாக மாறுகிறது. பீடபூமியின் தென் கோடியிலுள்ள நீலகிரியில் இரு தொடர்களும் ஒருங்கிணையும் போது பீடபூமியின் உயரம் உச்ச நிலையை அடைகிறது. ஆதலால், தக்காணத்தின் ஏனைய பகுதிகளைவிட மைசூர்ப் பீடபூமியின் சராசரி உயரம் அதிகமாய் இருக்கிறது. பீடபூமி தென்கிழக்காகச் சரிகிறது என்று பொதுவாகக் கூறலாம். கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய பெரிய நதிகள் ஓடுகின்ற திசையிலிருந்து நாம் அதனை அறியலாம். மேற்குத் தொடரின் பக்க வரைகளும் ஏனைய இயல்புகளும் பீடபூமி சலிப்பூட்டுகின்ற அளவுக்குத் தட்டையாக இல்லாமல் பார்த்துக் கொள்கின்றன. அந்த இயல்புகளுள் இரண்டை இங்குக் குறிப்பிடலாம்.

அவற்றுள் ஒன்று கோதாவரி, பீமா ஆகிய ஆறுகளுக்கிடையில் இருக்கின்ற நீர்பிரிமேடு. அது முக்கோண வடிவமான பீடபூமி. அதன் இருபக்கங்களில் இரண்டு மலைத் தொடர்கள் இருக்கின்றன. அங்கேதான் அகமது நகரம் இருக்கிறது. மற்றொன்று கிருஷ்ணு நதிக்கும் பீமா நதிக்கும் இடையிலுள்ள நீர்பிரிமேடு. இது மகாதேவ மலைத்தொடரால் உண்டாகும் நீர்பிரி மேடாகும். கிழக்குத் தொடர்ச்சி மலையோடு நெருங்கிய தொடர்புடைய மலைத்தொடர் ஒன்றும் இருக்கிறது. அதன் பல்வேறு பகுதிகளுக்குப் பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் நல்ல மலை என்பது ஒன்று. அது வடக்கே கிருஷ்ணு நதியின் கரையில் தொடங்கித் தெற்கே வடபெண்ணைப் பள்ளத்தாக்கு வரையில் செல்கிறது. படிகக்கல்லால் ஆன அந்த மலையின் மேற்பரப்பில் கடப்பைக்கல் படர்ந்திருக்கிறது. சராசரி 2000 அடி உயரமுள்ள அந்த மலையின் அதிக உயரம் 3000 அடி. அந்த மலைப் பகுதியில் பல பீடபூமிகளிருக்கின்றன. ஆனால், தண்ணீர் மிகவும் குறைவாயிருப்பதால் அங்கே குடியேறுவதற்கு மக்கள் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. பழங்காலத்தில் கர்நூல் மாவட்டத்திலிருக்கும் ஸ்ரீசைலத்தில் மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதற்கு அங்கே இப்போது நாம் காணும் கோட்டைகள், கோயில்கள், கிணறுகள், நீர்த்தேக்கங்கள் முதலியவற்றின் இடிபாடுகள் சான்று பகர்கின்றன. இப்போது அங்கே செஞ்சு மக்களைத் தவிர வேறு யாரும் வாழ்வதில்லை. மழை குறைவாக இருப்பதால், அங்குள்ள காடுகள் சிறியவை; அவை அடர்த்தியானவையும் அல்ல. பாறைகளில் ஆழமான பிளவுகளிருப்பதால் அவற்றில் ஈரம் தங்குவதில்லை. அதனால், பெரிய மரங்கள் வளர்வதற்கு வழியில்லை. நல்லமலைக்கு மேற்கில் கர்நூல் மாவட்டத்திலுள்ள எரமலையையும் ஏனைய சிறிய மலைகளையும் நாம் கவனிக்க வேண்டுவதில்லை.

தட்சிண பீடபூமியின் தென்கிழக்குப் பகுதியிலும், மற்றப் பகுதிகளைவிட உயரமான தென் மைசூர்ப் பீடபூமியிலும் கருங்கற் பாறையின் தோற்றமுடைய அடுக்குப் பாறைகள் (படிகம், களிமம், அபிரகம் முதலியவை கலந்த பாறைகள்) செறிந்திருக்கின்றன. வடக்கில் காணும் ஒரே மட்டமான சதுர வடிவ எரிமலைக் குழம்புப் பாறைகளாலான மலைத் தொடருக்கு மாருகத் தெற்கில் கவிகை மாடம் போன்ற அழகிய உருண்டை வடிவம் உடைய பெரிய குன்றுகளும், சிறிய குன்றுகளும் இருக்கின்றன. இந்த உருண்டை வடிவமான அல்லது ஏறக்குறைய உருண்டை வடிவமான குன்றுகள், சுற்றிலுமுள்ள அடுக்குப்பாறைச் சமவெளிகளிலிருந்து செங்குத்தாக எழுந்து

நிற்கின்றன. அவற்றின் ராணுவ முக்கியத்தை அறிந்த அரசர்கள் அவற்றில் பரப்புமிக்க கோட்டைகளைக் கட்டினர்கள். அந்தக் கோட்டைகளிற் சில பகைவரால் கைப்பற்ற முடியாதவையாய் இருந்தன.

**மழையும் இயற்கைத் தாவரமும்**

அரபிக்கடல் வழியாக வீசுகின்ற தென்மேற்குப் பருவக் காற்றின் குறுக்கே மேற்குமலைத் தொடர் நிற்பதால், அந்தத் தொடரின் இரு புறத்திலும் பெய்கின்ற மழையில் மிக அதிக மான வேறுபாட்டைக் காண்கிறோம். மலைத் தொடரின் செங்குத்தான மேற்குப் பக்கம் ஈரக் காற்றைத் தடுத்து விடுவதால், அங்கு மிகுந்த மழை பெய்கிறது. ஆனல், அதன் கிழக்குப் பக்கத்தில் மழை குறைவாக இருப்பது மட்டுமன்றி ஆண்டுக்கு ஆண்டு அதன் அளவும் வேறுபடுகிறது. அந்தப் பக்கத்தை 'மழைமறை பகுதி' என்று கூறுகிறோம். மேற்குப் பக்கத்தில் மழை உண்மையிலேயே கொட்டுகிறது. அதனல், மேற்குக் கடற்கரையில் பெய்கின்ற மழையின் சராசரியளவு 80 அங்குலமாகும். கடற்கரைச் சமவெளியிலிருந்து உயர்ந்து செல்லச் செல்ல மழையின் அளவும் மிகுகிறது. மகாபலேசுவரம் போன்ற இடங்களில் 300 அங்குல மழை பெய்கிறது. ஆனல், மலைத் தொடருக்குக் கிழக்கில் பெய்கிற மழையின் அளவு பெரும் பாலான இடங்களில் 40 அங்குலத்திற்கு மேல் இல்லை. அதனல், மலைத் தொடரின் இரு பக்கங்களிலும் வளர்கின்ற இயற்கைத் தாவரங்களிலும் வேறுபாடு இருக்கிறது. கடற்கரைச் சமவெளி யிலும் மலைத்தொடரின் மேற்குப் பக்கத்திலும் மிகுதியாகப் பெய்கின்ற கோடைமழையின் பயனுக அங்குப் பசுமை மாருத அடர்ந்த காடுகள் நிறைந்திருக்கின்றன. அந்தக் காடுகளில் மிகுந்த வருவாய் தரக்கூடிய பலவகைப் பெரிய மரங்கள் வளர் கின்றன. மூங்கிலும், தேக்கும், கருங்காலியும், கோங்கும் அங்குக் கணக்கற்று வளர்ந்திருக்கின்றன. கடற்கரையில் தென்னை மரங்கள் செழித்து வளர்கின்றன. சமவெளியில் வெற்றிலைத் தோட்டங்களும், தாளிப் பனந்தோப்புகளும் நிறைய இருக்கின்றன. நிலவாகையும் ஏலக்காயும் காடுகளில் நன்ருக வளர்கின்றன. அதுபோலவே, மிளகு வளர்வதற்கு ஏற்ற இயற்கைச் சூழ்நிலையையும் நாம் அங்கே காண்கிறோம்.

மழை வளங்குறைந்த தக்காணப் பீடபூமியில் பசுமை மாருத உயர்ந்த மரங்கள் வளர வழியில்லை. ஆனல், அங்கு ஆண்டு தோறும் குறிப்பிட்ட பருவத்தில் இலையுதிர்கின்ற மரவகைகள்

மிகுதியாக இருக்கின்றன. நீர் வசதி அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் ஆங்காங்கே தேக்கு மரம் வளர்கிறது. மலையில் காப்பி பயிர் செய்வதைப் போலத் தக்காணத்தின் ஒருசில பகுதி களில், மக்கள் தேக்கையும் இலாபகரமான முறையிற் பயிர் செய்கிறார்கள். மைசூரிலும் அதற்கு அடுத்த மாவட்டங்களிலும் சந்தன மரம் மிகுதியாக வளர்கிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் செங்குத்தான சரிவுகளிலும் பசுமை மாறாத மரங்கள் வளர்கின்றன. ஆனால், அங்கு மழை குறைவாயிருப்பதால், அவை மலையாள நாட்டு மரங்களைப்போல அவ்வளவு உயரமாக வளர்வதில்லை.

சோழமண்டலக் கரையின் நிலப்பகுதிகளில் வரலாற்றுக் காலத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பல் வளமும் பெற்று வாணிகச் செழிப்பு மிகுந்திருந்த கொற்கையும் காயலும் கடற்கரையிலிருந்து பல மைல் தொலைவு உள்ளே தள்ளி யிருக்கிற மணல் மேடுகளுக்கு அடியில் இன்று மறைந்து கிடக் கின்றன. ஆனால், கொற்கைக்கும் காயலுக்கும் வடக்கில் கடலரிப்பினால் ஏற்பட்ட மாறுதல்களின் விளைவாக ஒரு காலத்தில் மிகச் சிறப்புடனிருந்த பூம்புகார், மாமல்லபுரம் ஆகிய துறை முகங்களின் பெரும்பகுதிகள் கடல் நீருக்குள் மூழ்கிவிட்டன. புகாரைக் கடல் கொண்ட செய்தி மக்கள் நினைவில் இன்றும் இருக்கிறது. ஆனால், அந்தக் கடல் கோள் எப்போது நிகழ்ந்தது என்பதை அறிந்துகொள்ள வழியில்லை. இவை போன்ற மாறுதல்கள் காம்பே வளைகுடாவிலும் அதன் அருகிலுள்ள பகுதி களிலும் நிகழ்ந்திருக்கின்றன.

தீபகற்ப இந்தியாவின் பெரிய நதிகளெல்லாம் பொதுவாகக் கிழக்கு நோக்கியே ஓடுகின்றன. நர்மதையும் தபதியும் இந்த நிலைக்கு மாறாக மேற்கே ஓடுகின்றன. அவை ஆழமான குறுகிய பள்ளத்தாக்குகளின் வழியாக மேற்கு நோக்கியோடி, வேகமாக ஆழங்குறைந்து வருகின்ற காம்பே வளைகுடாவில் விழுகின்றன. மேற்குமலைத் தொடர் பொது நீர்பிரிமேடாகப் பயன்படுகிறது. அங்கிருந்துதான் மேற்கு நோக்கியோடும் ஆறுகளும் கிழக்கு நோக்கியோடும் ஆறுகளும் தொடங்குகின்றன. இந்த நீர் பிரிமேட்டின் முகடு மேற்குக் கடற்கரைக்கு அண்மையில் இருக் கிறது. ஆனால், தீபகற்ப இந்தியாவின் முக்கிய ஆறுகள் அடர்ந்த காடுகள் நிறைந்த மேற்குமலைச் சரிவுகளில் உற்பத்தியாகி, தீபகற்ப நிலப்பகுதி முழுவதையும் கடந்து, கிழக்கிலுள்ள வங்கக் கடலில் விழுகின்றன. அதனால், இந்தப்

பகுதி மிகப் பழைய நிலப்பகுதி யொன்றின் எஞ்சி நிற்கும் சின்னம் என்று நிலநூல் வல்லுநர் கருதுகின்றனர். இந்தக் கருத்துக்கு ஆதாரமாக அவர்கள் அரபிக் கடலில் விழும் நதிகளுக்கும் வங்கக்கடலில் விழும் நதிகளுக்கும் உள்ள வேறு பாடுகளைக் காட்டுகின்றனர். அரபிக் கடலில் விழும் நதிகள் நீளமில்லாதவை. அவைகள் ஓடைகளையும் சிற்றாறுகளையும் போல மிக விரைந்து பாய்ந்து கடலில் விழுகின்றன. அவற்றின் நீரோட்டம் செவ்விறக்க விரை நீரோட்டம். ஆனால், வங்கக் கடலில் விழும் நதிகள் தட்டையான படுகைகளையுடைய அகல மான பள்ளத்தாக்குகளின் வழியாக மெதுவாக நடக்கின்றன. அந்த நதிகள் பாய்கின்ற பரந்த நிலவெளி ஏறக்குறையச் சம நிலமாகவோ, சிறிது சிறிதாகச் சரிகின்ற அலையலையான மேடு பள்ளங்களை உடையதாகவோ இருக்கிறது. அவைகள் சிற்றாறு களாகத் தொடங்கும் இடங்களில் அவற்றின் கரைகள் செங்குத்தாக இருப்பதும், சிறு தொலைவு ஓடியதும் அவை ஆழமாகி அவற்றிற் பாயும் நீர் பின்னோக்கித் தொடக்க இடத் திற்குச் செல்ல முயல்வதும் இதுவரையில் தக்கவாறு அமையாத ஒரு சரிவு வாட்டத்தைக் காட்டுகின்றன.

பீடபூமியில் ஓடும் நதிகளுள் கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய மூன்றும் மிக முக்கியமானவை. அவற்றோடு மகாநதி யையும் சேர்த்துக் கொள்ளலாம். அவற்றைவிடச் சிறிய நதிகளில் வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை, வைகை, தண்பொருநை (தாமிரபரணி) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொடக்கத்தில் இந்த ஆறுகள் பாறை செறிந்த ஆழமான பள்ளத்தாக்குகளின் வழியாக வேகமாக ஓடுகின்றன. அப்போது அவை நிலத்திற்கு நீரூட்டுவதற்கு மாறாக அதிலுள்ள நீரை உறிஞ்சி எடுத்துக்கொண்டோடும் வடிகால்கள் போல இருக் கின்றன. ஆனால், அவை கடற்கரைச் சமவெளியை அணுகும் போது, அவற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகள் அவற்றின் நீரைத் தேக்கி வைக்கின்றன. அந் நீர், பாசனத் திற்குப் பயன்படுகிறது. கோதாவரி, கிருஷ்ணா, காவிரி ஆகிய வற்றின் கழிமுக நடு அரங்குகள் பயிர்த் தொழிலுக்கு மிகச் சிறந்த இடங்களாகத் திகழ்கின்றன.

புனிதத் தன்மையிலும், மக்களுக்குப் பயன் தருவதிலும், இயற்கை யழகிலும் கோதாவரி மிகவும் புகழ்பெற்ற நதியாக இருக்கிறது. பரத கண்டத்திலேயே கங்கைநதி, சிந்துநதி ஆகிய இரண்டும் மட்டுமே கோதாவரியைவிடச் சிறந்தவை என்று சொல்லலாம். நாசிக் மாவட்டத்தில் திரிம்பகத்திற்குப்

பின்னுலுள்ள குன்றுகளில் கோதாவரி உற்பத்தியாகிறது. அங்கிருந்து அரபிக் கடலுக்கு 50 மைல் தொலேவுதானிருக்கும். ஆனுல், வங்கக் கடலில் விழுவதற்குமுன் அது 900 மைல் ஓடு கிறது; 1,12,000 சதுரமைல் பரப்புள்ள நிலப் பகுதிக்கு வடிகாலாக உதவுகிறது. நாசிக்குக்கு மேற்கில் அது செங்குத்தான பாறை களுக்கிடையில் பாய்கிறது. அங்கு அதன் அகலம் மிகக் குறைவு. கிழக்கே வரும்போது அதன் கரைகளின் உயரம் குறைகிறது. அவற்றில் பாறைகளுக்கு மாருக மண்ணே அதிகமாகக் காண் கிருேம். சிரோன்சாவுக்குக் கீழே இடப்பக்கத்திலிருந்து வருகின்ற பிரான்வஹிதா நதி அதனுடன் கலக்கிறது. அதற்கு முன்னரே சாத்பூரா, நாகபுரி ஆகியவற்றின் சமவெளிகளி லிருக்கும் நீர் முழுவதையும் திரட்டிக் கொண்டுவருகின்ற வார்தா, வெயின்கங்கா ஆகிய நதிகள் பிரான்ஹிதாவில் கலக் கின்றன. இன்னுஞ் சிறிது கிழக்கே வரும்போது பஸ்டாரிலும் அதன் அண்மையிலுள்ள பகுதிகளிலும் இருக்கின்ற கிழக்குத் தொடர்ச்சி மலேயின் அடர்ந்த காடுகளிலுள்ள நீரைத் திரட்டிக் கொண்டு வருகிற இந்திராவதி நதியானது கோதாவரியில் கலக்கிறது. அதற்குப்பின் கோதாவரி பெரும்பாலும் தென் கிழக்காக ஓடி வங்கக் கடலில் விழுகிறது. உற்பத்தியிடத்தி லிருந்து பாதிதூரம் ஓடியபின் கோதாவரி நதி ஆந்திரமாநிலத்தில் நுழைகிறது. அங்கு அதன் அகலம் ஒரு மைல் முதல் இரண்டு மைல் வரையில் இருக்கிறது. படுகையும் மணற்பாங்காக மாறுகிறது. இரண்டே இடங்களில்தான் பாறைகள் குறுக்கிடு கின்றன. மேடுபள்ளமும் கவர்ச்சியும் அற்ற இந்தப் பகுதியில் அமைதியாக ஓடியபின், அது கிழக்கு மலேத்தொடரைப் பிளந்து கொண்டு மறுபடியும் சம நிலத்தில் நுழைகிறது. மலேயைத் தாண்டுகின்ற இடத்தில் அதன் அகலம் 200 கஜத்திற்கும் குறைவாக இருக்கிறது. ஆனுல், அங்கு அதன் ஆழம் மிக அதிகம். அதன் இருமருங்கிலும் மரங்கள் அடர்ந்த அழகிய மலேச் சரிவுகள் ஏறக்குறையச் செங்குத்தாக உயர்ந்தோங்கி நிற்கின்றன. அதற்குப்பின் கோதாவரி மீண்டும் அகலமாகி விடுகிறது. ஆற்றுப் பரப்பின் இடையில் 'லங்கை' என்று வழங்கும் வண்டல் மண் தீவுகள் பல இருக்கின்றன. ராஜ மகேந்திரத்தைக் கடந்ததும் அது கிழக்கே கௌதமி கோதாவரி என்றும் மேற்கே வசிட்ட கோதாவரி என்றும் இரு கிளேகளாகப் பிரிகிறது. அந்தக் கிளே நதிகளும் அவற்றினின்று பிரியும் சிறு கிளே யாறுகளும் விசிறி வடிவில் விரிந்து கிடக்கும் வண்டல் மண் கழிமுக நடு அரங்கத்தில் பாய்கின்றன. ராஜமகேந்திரத் திற்குக் கீழே தவளேசுவரம் என்னுமிடத்திற் கட்டப்பட்டுள்ள அணேயிலிருந்து உயர்மட்டக் கால்வாய்கள் பல, ஆற்று நீரை

எடுத்துக்கொண்டு போய் மிகப்பரந்த நிலத்திற்குப் பாசன வசதியளிக்கின்றன. அந்தக் கால்வாய்களில் முக்கியமானவை போக்குவரவுக்கும் பயன்படுகின்றன.

கோதாவரியைவிடக் கிருஷ்ணாநதி 100 மைல் நீளங் குறைவானது. அதுவும் புனித நதி என்று மக்கள் கருதினாலும் அவர்கள் காவிரி, கோதாவரியைப்போல அதனை அவ்வளவு உயர்ந்த புனிதத் தன்மையுடையதென்று மதிக்கவில்லை. ஆனால், அதனுடைய வடிகால் நிலத்தின் பரப்புக் காவிரி, கோதாவரி ஆகியவற்றின் வடிகால் நிலத்தின் பரப்பைவிட மிகுதியானது. அரபிக்கடலுக்கு 40 மைல் தொலைவில் மகாபலேசுவரத்துக்குச் சிறிது வடக்கில் உற்பத்தியாகும் கிருஷ்ணாநதி மேற்குமலைத் தொடரின் கிழக்குப் பக்கவரைகளின் ஓரமாகத் தெற்கு நோக்கிப் பாய்கிறது. பெரும்பாலும் மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகிற பல துணை நதிகள் அதனுடன் கலக்கின்றன. குருந்தவாதை என்னுமிடத்தைத் தாண்டியபின் அது கிழக்கே திரும்பித் தென் மராட்டியத்தின் வழியாக ஓடி, மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் நுழைகிறது. மலைகளுக்கு அருகில் கிருஷ்ணாநதி பாறைகளின் மீது ஓடிவருகிறது. அதன் வேகம் அதிகமாயிருப்பதால் அங்கு அது போக்குவரவுக்குப் பயன்படுவதில்லை. ஆனால், அதனுடைய நீர் சதாரா மாவட்டத்திலும் தென் கிழக்கிலுள்ள திறந்த நிலத்திலும் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது. பெல்காம், பிஜப்பூர் ஆகிய மாவட்டங்களில் ஓடும்போது கிருஷ்ண நதியின் கரைகளில் கருமண்ணும் செவ்வண்ண இரும்பகக் களிமண்ணும் கலந்திருக்கின்றன. அக் கரைகளின் உயரம் 20 அடி முதல் 50 அடி வரையிலிருக்கிறது. தென்கரை வடகரையைவிட உயரமானது. மைசூரையடைந்ததும் கிருஷ்ணாநதி தட்சிண மேட்டுச் சமவெளியை விட்டுக் கீழே இறங்குகிறது. குறுக்கே நீண்டு உயர்ந்து நிற்கும் கம்பீரமான பாறை விளிம்புகள் பலவற்றைக் கடந்தபின், அது வண்டல் மண்ணாலான ராயச்சூர் இடைத்துறை நிலத்திற்கு வந்து சேர்கிறது. பாறைகளைக் கடக்கும்போது அதன் வேகம் மிக அதிகமாக இருக்கிறது.

அங்குள்ள நிலம் 3 மைல் தொலைவிற்குள் 400 அடிக்கு மேல் சரிகிறது. அகமது நகரம், பூனா, சோலாப்பூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நீரைத் திரட்டிக் கொண்டுவருகிற பீமாநதி, முதலில் அதனுடன் கலக்கிறது. அதன்பின், மைசூர்ப் பீடபூமியின் வடபகுதி நீரையும் பெல்லாரி, கர்நூல் ஆகிய மாவட்டங்களின் நீரையும் திரட்டிக்கொண்டு வருகிற துங்கபத்திராநதி

கிருஷ்ணுவுடன் கலக்கிறது. அதற்குப் பிறகு வெகு தொலேவுக்கு அது பாறைகள் நிறைந்த ஆழமான படுகையில் பாய்ந்தோடு கிறது. அங்கு நிலம் வேகமாகச் சரிகிறது. அதற்குப் பின்னர் அது நல்ல மலேக்குக் குறுக்கே வடமேற்காக ஓடுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலேயையடைந்தபின் அது திடீரென்று தென்கிழக்கே திரும்பி நேராகக் கடலே நோக்கி ஓடுகிறது. அது கடலிற் கலக்குமுன் இரு கிளேகளாகப் பிரின்றது. கடலிலிருந்து 45 மைல் தொலேவிலுள்ள விஜயவாடாவுக்கு அருகில் அது அடுக்குப் பாறைகளாலான குன்றுகளுக்கிடையில் ஓடுகிறது. அந்த இடைவெளி 1300 கஜத்திற்கு மேல் அகலமில்லே. அதற்குச் சிறிது கீழே கட்டப்பட்டிருக்கும் அணே கிருஷ்ண நதியின் நீர், பாசனத்திற்குப் பயன்பட உதவுகிறது. அணேக்குக் கீழேயுள்ள நீர்மட்டம் சுற்றியுள்ள சமவெளியை விடச் சிறிது உயரமாயிருக்கிறது.

துங்கபத்திரா நதிதான் கிருஷ்ண நதியின் முக்கியமான துணே நதி. மைசூரின் மேற்குப் பகுதியிலுள்ள பாபாபுடான் மலேயில் உற்பத்தியாகிற துங்கா நதியும் பத்திரா நதியும் 'கூடலி' என்னுமிடத்தில் ஒன்ருகக் கலக்கின்றன. இவ்வாறு ஒருங் கிணேந்த துங்கபத்திரை நதி மைசூர் வழியாக வடகிழக்கே பாய்ந்து, கொடைமாவட்டங்களின் எல்லேயில் ஓடி, கர்நூல் நகரைத் தாண்டியபிறகு கிருஷ்ண நதியோடு சேர்கிறது. துங்கா நதி, பத்திராநதி ஆகிய இரு நதிகளும் பாய்கின்ற பகுதிகள் பாறை நிறைந்தவையாய் இருக்கின்றன. அதுபோலவே ஒருங் கிணேந்த துங்கபத்திரா நதி பாய்கின்ற நிலப்பகுதியும் பாறை செறிந்ததாக இருக்கிறது. அதன் இரு கரைகளிலும் இருக்கிற நிலப்பகுதிகள் வேகமாக உயர்ந்துகொண்டே போகின்றன. அதனுல், அதன் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவது கடினமாயிருக்கிறது. அது வற்ருத ஜீவநதி. மழைக்காலத்தில் அடிக்கடி அதில் வெள்ளம் வருகிறது. விஜயநகர அரசர்கள் ஹம்பிக்கு அருகில் அதற்கு ஓர் அணேகட்டி அதன் உதவியால் விஜயநகர அரண்மனேக்கும் பூங்காக்களுக்கும் தேவையான நீரை யெடுத்துக் கொண்டார்கள்.

துங்கபத்திரா நதி பல நூற்ருண்டுக் காலம் விஜய நகரத்திற்கு இயற்கையரணுகப் பயன்பட்டிருக்கிறது. அதற்கு வடக்கில் ஆட்சி செய்த பாதாமிச் சாளுக்கியர், ராஷ்டிரகூடர், கல்யாணிச் சாளுக்கியர் ஆகியோரும், அதற்குத் தெற்கில் ஆட்சி செய்த பல்லவர், சோழர், கங்கர் ஆகியோரும் தங்களுடைய ஆட்சி எல்லேயைத் துங்கபத்திரா நதிக் கப்பாலும் விரிவடையச் செய்வ

தற்கு மேற்கொண்ட பல முயற்சிகளும் தோல்வியடைந்தன. வரலாற்றுப் புகழ்பெற்ற விஜயநகரமும் அதற்கு முற்பட்ட கம்பிலி நகரமும் துங்கபத்திராவின் தென் கரையில் தோன்றி வளர்ந்தன. அதற்கும் கிருஷ்ணு நதிக்கும் இடையில் உள்ள ராயச்சூர் இடைத்துறை நிலத்தை 'தக்காணத்தின் போர்க்களம்' என்று சொல்லலாம்.

தென் கங்கை யென்று பெயர்பெற்ற காவிரியாறு 475 மைல் நீளமுள்ளது; புனிதத் தன்மைக்கும், பாசனத்திற்கும் ஒருங்கே புகழ்பெற்றது. அதன் தோற்றத்தைப் பற்றித் தமிழிலக்கியத்தில் மரபு வழிக்கதைகள் பல இடம் பெற்றுள்ளன. மக்களுக்கு வாழ்வளிக்கும் அவ் வாற்றைத் தமிழ்ப் புலவர்கள் பக்தியுடன் பாடியிருக்கிறுர்கள். அது குடகு நாட்டில் தலைக்காவேரி என்னுமிடத்திற்கு அருகில் உள்ள பிரமகிரியில் உற்பத்தியாகி, பொதுவாகத் தென் கிழக்காக ஓடிப் பீடபூமியைக் கடக்கிறது. கிழக்கு மலைத்தொடரைத் தாண்டும்போது பல இடங்களில் அது அருவியாக வீழ்கிறது. அதன்பின் அது கர்நாடகத் தாழ்நிலத்தில் திருச்சி நகரத்தைத் தாண்டி, தஞ்சை மாவட்டத்தில் பல கிளைகளாகப் பிரிந்து வங்கக் கடலில் விழுகிறது. காவிரியாறு குடகு நாட்டில் இரு மருங்கிலும் அடர்ந்த காடுகளையுடைய உயர்ந்த கரைகளுக்கிடையில் பாறைகளின்மீது வளைந்து வளைந்து செல்கிறது. அதன்பின் அது மைசூர் மாநிலத்தை அடைந்து ஒரு குறுகிய மலைச் சந்தில் நுழைந்து 60 முதல் 80 அடி உயரத்திலிருந்து கீழே விழுகிறது. அந்த இடத்திற்குச் சுஞ்சன்கட்டே என்று பெயர் வழங்குகிறது. அதற்குப் பிறகு அதன் அகலம் அதிகமாகிறது.

மைசூர் மாநிலத்தில் காவிரியாறு இரண்டு முறை இரு கிளைகளாகப் பிரிகிறது. ஆனால், ஒவ்வொரு முறையும் அக் கிளைகள் மீண்டும் இணைந்து விடுகின்றன. அதனால், அங்குச் சீரங்கப்பட்டணம், சிவசமுத்திரம் என்று இரண்டு தீவுகளிருக்கின்றன. அத் தீவுகளுக்கு இடையில் உள்ள தொலைவு 50 மைல் ஆகும். சிவசமுத்திர அருவியின் உதவியால் உற்பத்தியாகிற மின்னுற்றல் 100 மைலுக்கு அப்பாலுள்ள கோலாரில் இருக்கும் தங்க வயலுக்குப் பயன்படுகிறது. அந்த அருவியே இந்தியாவில் முதல்முதலாக மின்னுற்றல் உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டது. அது 1903ஆம் ஆண்டில் நடந்தது. உயர் வோல்டேஜ் மின்னுற்றலை அந்தக் காலத்தில் அவ்வளவு தொலைவு கொண்டு போனது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். காவிரியாறு மைசூர் மாநிலத்தில் ஓடும்போது அதில் பல துணை நதிகள் கலக்

கின்றன. அவற்றுள் முக்கியமானவை கபினி, ஹேமாவதி, அக்கிராவதி என்பவை. சமவெளிக்கு வந்ததும் அது நிலத்தின் இயற்கைமைப்பை ஒட்டி நேராகவும் திடீரென்று திரும்பியும் ஓடுகிறது. பவானியாறு அதனுடன் கலந்தபின் காவிரியாறு தெற்கு நோக்கி ஓடுவதற்கு மாருகத் தென்கிழக்காக ஓடுகிறது. அதன்பின் கிழக்குத் தென் கிழக்குத் திசையில் ஓடி மூன்ரும் முறையாக இருகிளைகளாகப் பிரிகிறது. அவ்விரு கிளைகளுக்கும் இடையில் திருச்சிராப்பள்ளியின் அருகே சீரங்கம் என்னும் தீவு இருக்கிறது. இச் சீரங்கத்தைத் தாண்டியவுடனே காவிரி என்றும், கொள்ளிடம் என்றும் காவிரியாறு இருகிளைகளாகப் பிரிகிறது. அதன்பின் காவிரியாறு தஞ்சை மாவட்டக் கழிமுக அரங்கத்தில் மீண்டும் மீண்டும் பல கிளைகளாகப் பிரிந்து ஓடுகிறது. காவிரி நீர் மைசூர் மாநிலத்திலும், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களிலும் பல பகுதிகளில் பாசனத்திற்குப் பயன் படுகிறது. ஆனல், தஞ்சை மாவட்டத்தில்தான் அது மிக அதிக மாகப் பாசனத்திற்குப் பயன்படுகிறது. மழைக்காலத்தில் காவிரியில் வரும் பெருவெள்ளத்தைப் பாசனத்திற்குப் பயன் படுத்தும் முயற்சியில் மிகப் பழங்காலத்திலிருந்தே சோழ மன்னர் பலர் ஈடுபட்டனர். தங்கள் முயற்சியில் அவர்கள் ஓரளவு வெற்றியும் கண்டார்களெனினும், தற்காலத் தொழில் நுட்பப் பொறியியல் முன்னேற்றத்தின் உதவியோடு செய்யப் பெறும் முயற்சிகளைப்போல் பழங்கால முயற்சிகள் அவ்வளவு பயன் தராததில் வியப்பில்லை.

அவ்வளவாக முக்கியத்துவம் பெருத நதிகளைப்பற்றி நாம் இப்போது பேசாமல் தாமிரபரணி என்னும் தண்பொருநை யாற்றைச் சிறிது கவனிப்போம். மேற்கு மலைத்தொடரின் தென் பகுதியில் காடுகளடர்ந்த இடத்தில் உற்பத்தியாகிற இந்த ஆறு தென்மேற்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவக்காற்று ஆகிய இரண்டாலும் பயனடைகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் பயிர்த் தொழிலுக்குத் தண்பொருநை நீர் உயிர் நாடியாக இருக்கிறது. அது கடலொடு கலக்கிற இடமாகிய மன்னர் வளைகுடாவில்தான் வெளிநாட்டுப் பயணிகள் விவரிக்கின்ற முத்துகள் கிடைக்கின்றன.

அரபிக்கடலில் விழுகின்ற ஆறுகளைப்பற்றி நாம் இப்போது கவனிப்போம். நர்மதையும் தபதியும் ஓடுகின்ற நேரான பள்ளத் தாக்குக்குகள், அவற்றின் இருமருங்கிலுமுள்ள உயர்ந்த கரைகள், அவைகள் ஓடும் திசை ஆகிய எல்லாமே மண்ணியலில் ஏற்பட்ட ஒரு தற்செயல் நிகழ்ச்சியின் விளைவுகளாகும்.

நர்மதை நதியைப் பெரிப்ளஸ் 'நன்மாடியோஸ்' என்றும் டாலமி 'நமாடோஸ்' என்றும் குறிப்பிடுகின்றனர். புனிதத் தன்மை வாய்ந்தவை என்று இந்தியர் கருதும் ஏழு நதிகளில் அதுவும் ஒன்று. அது அமரகண்டகப் பீடபூமியின் உச்சியிலுள்ள சாத்பூரா மலையின் வடகிழக்கு முகட்டில் உற்பத்தியாகிறது. இந்த இடம் மத்திய இந்தியாவில் உள்ள ரேவாவில் இருக்கிறது. தொடங்கிய இடத்திலிருந்து 801 மைல் ஓடியபின், அது 17 மைல் அகலமுள்ள ஓதம் பொங்கும் கழிமுகத்தின் வழியாகக் காம்பே வளைகுடாவில் விழுகிறது. அந்தக் கழிமுகத்துக்குச் சற்று மேலேதான் பழங்காலத்தில் பாருகச்சா என்று புகழ் பெற்ற புரோச் இருக்கிறது. நர்மதை நதி அதற்குத் தெற்கிலுள்ள 36,000 சதுர மைல் பரப்புள்ள நிலத்தின் வடிகாலாக இருக்கிறது. அந்த வடிகால் நிலத்தில் முக்கியமானது சாத்பூரா பீடபூமியின் வடபகுதி. அந்த நதி பாறைமீது ஓடுவதாலும் அதில் அடிக்கடி வேகமான வெள்ளப் பெருக்கு ஏற்படுவதாலும் அதைப் போக்கு வரவுக்குப் பயன்படுத்த இயலாது. அது போலவே, அதன் கரைகள் மிகவும் உயரமாக இருப்பதால் அதனைப் பாசனத்திற்கும் பயன்படுத்த இயலவில்லை. கடல்முகத்திலிருந்து 30 மைல் தொலைவி லிருக்கும் புரோச் வரையிலும் அதில் சிறு படகுகள்போகலாம்.

தபதி நதி 436 மைல் நீளமுள்ளது. அது சாத்பூரா பீடபூமியில் முல்டாய் என்னும் இடத்திற்கு அருகில் உற்பத்தியாகி, செங்குத்தான கரைகளுக்கிடையே நேராக ஓடுகிறது. ஆங்காங்கே, பள்ளத்தாக்கின் அகலம் அதிகமாகிறது. அந்த இடங்கள் எல்லா வற்றிலும் வண்டல் மண் சமநிலம் இருக்கிறது. முடிவில் அது ஓதம் பொங்கும் கழிமுகத்தின் வழியாகக் காம்பே வளைகுடாவில் விழுகிறது. அதன் கரைகள் 30 அடி முதல் 60 அடி வரையில் உயரமாக இருப்பதால், அந்த ஆற்றின் நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்த இயலாது. ஆங்காங்கே பாறைகள் குறுக்கிடுவதால் கடைசி 30 மைல் நீளந்தவிர ஆற்றின் ஏனைய பகுதிகள் போக்கு வரவுக்குப் பயன்படுவதில்லை. தபதிப் பள்ளத்தாக்கின் நடுவி லுள்ள காண்டேஷ் சமவெளி தக்காணத்தின் மிக வடக்கிலுள்ள பகுதி. அந்தச் சமவெளி கிழக்கு மேற்காக 150 மைல் நீளம் இருக்கிறது. அங்குச் செழிப்பு மிக்க கரிய வண்டல் மண் செறிந்திருக்கிறது. அதனால், அங்கே வளமிக்க பெரிய நகரங்கள் பல இருக்கின்றன. அந்தச் சமவெளி கிழக்கேயுள்ள நாகபுரிச் சமவெளியோடு இணைந்திருக்கிறது. ஆற்றுக்கு அருகில் குன்றுகள் நிறைந்த கரடுமுரடான காட்டுப் பகுதியில் ஏறக் குறைய 17ஆம் நூற்றாண்டு வரையில் எண்ணற்ற யானைகள் இருந்தன.

அரபு மாலுமிகள் காம்பே வளைகுடாவுக்கு அடிக்கடி வந்தார்கள். புரோச்சைவிட சூரத் நல்ல துறைமுகமாயிருந்தாலும், தொடக்கநாள் காலத்தில் புரோச்சுக்குத்தான் மாலுமிகளும் வணிகர்களும் மிகுதியாக வந்தார்கள். நர்மதைக் கழிமுகத்தில் சேற்றுப்படிவு அதிகமான பின்னரும் நன்னம்பிக்கை முனை வழியாக ஐரோப்பிய வணிகர் வரத் தொடங்கிய பின்னரும்தான் சூரத் முக்கிய துறைமுகமாயிற்று. மேற்குக் கடற்கரையில் ஆற்றுக் கழிமுகங்களைத் தவிரப் பல நல்ல தீவுத்துறைமுகங்களும் இருந்தன. எடுத்துக்காட்டாக டையூ, டாமன், பம்பாய் ஆகியவற்றைக் கூறலாம்.

தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரையில் டாமனிலிருந்து திருவனந்தபுரம் வரையிலும் இயற்கையமைப்பு முறையும் தட்ப வெப்ப நிலையும் ஒரேவிதமாக இருக்கின்றன. நிலத்தின் புடைப்பியலை அடிப்படையாகக் கொண்டு மேற்குக் கரையைக் கொங்கணக் கரை என்றும் மலையாளக் கரை என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். தமனகங்கா நதியின் தெற்கிலிருந்து வடகன்னடம் வரையில் இருக்கும் பகுதி கொங்கணம் எனப்படும். அந்த நீண்ட நிலப்பகுதியின் அகலம் 20 மைல் முதல் 50 மைல் வரையில் இருக்கிறது. மேற்கு மலைத் தொடரைச் சேர்ந்த குன்றுகளும் பாறைகளும் கொங்கணக் கரையின் இடையிற் புகுந்து ஆங்காங்கே கடல் வரையிலும் செல்கின்றன. மேற்கு மலைத்தொடரில் தோன்றி அரபிக் கடலில் விழுகின்ற பல சிற்றாறுகள் கொங்கணக் கரையின் குறுக்கே ஓடுகின்றன. மழைக் காலத்தில் அவற்றில் வெள்ளம் பெருகி வேகமாகப் பாயும். ஏனைய பருவங்களில் அவற்றில் நீர் இருப்பதே அருமை. அவற்றில் ஆண்டுதோறும் வருகின்ற வெள்ளம் நிலத்தை அரித்தரித்து ஆழமான கடற்கழிகளை உண்டாக்கி இருக்கின்றது. அவைகள் போக்குவரவுக்கு நல்ல வழிகளாக இருக்கின்றன. இவ்வாறு மேற்கு நோக்கிப் பாயும் சிற்றாறுகள் தெற்கே போகப் போக நீளமாகின்றன. அவற்றில் ஒன்றான ஷாராவதியாறு மலைத்தொடரிலிருந்து 850 அடி கீழே விழுகிறது. அந்த இடத்தில் அதற்குக் கெர்சப்போ அருவி என்பது பெயர். எனவே, கொங்கணக் கரையில் போக்குவரவு மிகவும் கடினமாக இருக்கிறது. ஆனால், சமநிலமாக இருக்கும் பகுதிகளிலெல்லாம் நெற்பயிர் செழிப்பாக வளர்கிறது.

கொங்கணக் கரையிலிருந்து மலையாளக் கரை பலவகையில் வேறுபடுகிறது. மலையாளக் கரை அகலமாக இருக்கிறது. கணவாய்கள் இல்லாததால் கொங்கணக் கரை தீபகற்பத்தின்

ஏனைய பகுதிகளிலிருந்து ஏறக்குறைய முழுதும் பிரிந்திருக்கிறது. ஆனால், பாலக்காட்டுக் கணவாயானது மலையாளக் கரைக்கும் கர்நாடகச் சமவெளிக்கும் இடையில் போக்குவரவை எளிதாக்குகிறது. பம்பாய்க்கு அருகிலுள்ள கடற்கரை நீளமாகவும் நேராகவும் இருக்கிறது. ஆனால், மலையாளக் கரை பல இடங்களில் உடைந்திருக்கிறது. அதனால், அங்குக் கடற் கூம்புகளும் உப்பங்கழிகளும் கணக்கற்றுக் கிடக்கின்றன. அவைகளெல்லாம் மலையாளக் கரைக்கே உரிய தனி அழகைத் தருகின்றன. கடற்கழிகள் கரைக்கு இணையாக நெடுந்தூரம் நீண்டு செல்வதால் மலையாளக் கரையின் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையில் அவை எளிய இயற்கைப் போக்குவரவு வழிகளாக உதவுகின்றன. மேற்கு மலைத் தொடரில் கடலை நோக்கிச் சரிகின்ற பகுதிகளில் தேயிலை, காப்பி, ஏலம், சின்கோனா ஆகிய பயிர்கள் நன்றாக வளர்கின்றன. பொருளாதார வளத்தைப் பெருக்குகின்ற கருங்காலி, தேக்கு முதலிய மரங்களும் மூங்கிலும் அங்கே தனிச் செழிப்புடன் வளர்கின்றன.

கத்தியவார் நிலக் கூம்பிலிருந்து குமரிமுனை வரையில் நீண்டு கிடக்கின்ற மேற்குக் கடற்கரை இடைக்காலத்தில் செல்வச் செழிப்புள்ளதாயும், வலிமை பொருந்தியதாயும் இருந்தது. இந்தியாவின் செல்வத்திலும், பலத்திலும் பெரும்பகுதி அந்தக் கரையில்தான் அப்போது இருந்ததென்று கூறலாம். இன்றைக்கும் அது நிலவளஞ் செறிந்த பகுதியாக இருக்கிறது. அரேபியர்களும், போர்ச்சுகீசியர்களும், டச்சுக்காரர்களும் வந்திறங்கிய பழைய துறைமுகங்களும், அவர்களுடைய வாணிக நிலையங்களும் மேற்குக் கடற்கரையில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. மேலை நாடுகளின் வாணிகத்திற்கு இந்தியாவின் மேற்குக் கடற்கரை மையமாய் இருந்த காலத்தைச் சேர்ந்த சின்னங்கள் பலவற்றை நாம் மலையாளத் தென்னந் தோப்புகளில் இன்றும் காண்கிறோம். மேற்குக் கடற்கரை இந்தியாவின் ஏனைய பகுதிகளோடு அதிகமான தொடர்பு கொள்ளாமலிருந்தபோது, அது அரேபியா, ரோம், சீனா, போர்ச்சுகல் முதலிய வெளிநாடுகளுடன் கடல் மூலமாக மிகுந்த தொடர்பு கொண்டிருந்தது. இது இந்திய வரலாற்றில் நாம் காண்கின்ற குறிப்பிடத்தக்க முரண்பாடு.

கிழக்கு மலைத்தொடருக்கும் வங்கக் கடலுக்கும் இடையிலுள்ள தாழ்நிலம் மகாநதியிலிருந்து குமரிமுனை வரையிலும் தன்னுடைய முக்கிய இயல்புகளில் மிகுந்த வேறுபாடின்றி நீண்டு கிடக்கிறது. அதன் அகலம் மட்டும் ஆங்காங்கு

வேறுபடுகிறது. தொடக்கத்தில் அதன் அகலம் 50 மைல் முதல் 100 மைல் வரையில் இருக்கிறது. ஆனால், ஏறத்தாழ 16° அட்ச ரேகைக்குப் பக்கத்தில் கிழக்கு மலைத் தொடர் உள்நாட்டை நோக்கித் திரும்புவதால், அங்கிருந்து அதன் அகலம் மிகுகிறது. கடலின் ஓரத்திலெல்லாம் குறுகிய மணற்கரை இருக்கிறது. அதற்கு அப்பால் தென்னந் தோப்புகளும், பரந்த நெல் வயல் களும் இருக்கின்றன. அவற்றிற்குப் பின்னணியாகக் காடடர்ந்த குன்றுகள் இருக்கின்றன. தெற்கே போகப்போக அந்தக் குன்றுகள் உள்ளே தள்ளிப் போகின்றன. இவ்வாறு ஒரே வகையான இயற்கைக் காட்சியைக் காணும் நமக்குச் சலிப்புத் தட்டாதவாறு மொட்டையான உயர்நிலக் கூம்புகளும், மணல் திட்டுகளால் பிரிக்கப்பட்ட ஏரி போன்ற உப்பு நீர்க் கழிகளும் ஆங்காங்கே இருக்கின்றன. ஆற்றுக் கழிமுக நடுஅரங்குகளில் நீரடி மணல் திட்டுகளும், சேற்றுப் படிவும் மிகுதியாக இருப்பதால், அங்கெல்லாம் கடல் ஆழம் குறைந்திருக்கிறது. அதனால், கரை யருகில் கப்பல் வருவதற்கு அவை தடையாக இருக்கின்றன. அத்தகைய சேற்றுப்படிவு இல்லாத இடங்களில் கப்பல்கள் கரை யோரத்திற்கு வந்து வசதியாக நங்கூரம் பாய்ச்சி நிற்பதற்கேற்ற தங்கு துறைகளிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கூடலூரையும், காக்கிநாடாவையும் கூறலாம். அது போலவே, சென்னையும், விசாகப்பட்டினமும் வசதி மிகுந்த செயற்கைத் துறைமுகங் களாக மாறுவதற்கு முன் அங்கு வந்த கப்பல்களுக்குத் தங்கு துறைகளாகப் பயன்பட்டன.

வட சர்க்கார்க் கடற்கரை என்று வழங்கும் வரலாற்றுப் புகழ் மிக்க கோல்கொண்டாக் கடற்கரை மேற்குக் கடற்கரையின் இயல்புகள் பலவற்றையுடையதாய் இருக்கிறது. அதுவும் கடலுக்கு இணையாக நீண்டு செல்கின்ற குறுகலான சமவெளி தான். அங்கும் மலைத் தொடரின் கிழக்குச் சரிவிலிருந்து ஆங்காங்கே கிளைக்கின்ற பக்கமலைகள் சமவெளியின் குறுக்கே சென்று நிலக்கூம்புகளாகக் கடலருகில் முனைந்து நிற்கின்றன. எடுத்துக்காட்டாக, விசாகப்பட்டினத்திலுள்ள 'கடற்பன்றி மூக்கைச்' சொல்லலாம். மலைப் பகுதியில் ஓரளவு அடர்ந்த காடுகளும், அதற்குக் கீழிருக்கும் தட்டையான தாழ் நிலத்தில் புதர் நிறைந்த சிறு காடுகளும் இருக்கின்றன. நீளங்குறைந்த பல சிற்றாறுகள் மலைத்தொடரிலிருந்து இறங்கி நேராகக் கடலை நோக்கிப் பாய்கின்றன. சில்கா ஏரியும், கோதாவரி, கிருஷ்ணா ஆகிய ஈராறுகளின் கழிமுக நடு அரங்குகளையும் ஒன்றாக இணைத்துக்கொண்டிருக்கும் கொல்லேரியும் இந்தக் கரையிலுள்ள முக்கிய இடங்கள்.

சிற்றாறுகளுக்கு மிக அண்மையில் உள்ள பகுதிகளைத் தவிர, கிழக்குக் கரையின் ஏனைய பகுதிகளில் நிலத்தின் மேற்பரப்பில் செவ்வண்ணச் சரளைக் கல்லும் களிமண்ணும் கலந்திருப்பதால், அங்கே பயிர்த் தொழில் நன்றாக நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால், தெற்கிலுள்ள கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் கழிமுக நடு அரங்கத்தில் நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. அங்கே நீருக்குப் பஞ்சமில்லை; வேண்டிய அளவுக்கும் மிக அதிகமாக இருக்கிறது; அதனால் நிலமும் ஒப்பற்ற வளமுடையதாய் உள்ளது. மேற்குமலைத் தொடரின் எரிமலைக் குழம்பு மண்ணை அங்கிருந்து புறப்படுகிற ஆறுகள், எத்தனையோ நூறாயிரமாண்டுகளாகக் கரைத்துக் கொண்டு வந்து கோதாவரி, கிருஷ்ணா நதிகளின் கழிமுக நடு அரங்கப் பகுதியில் நிறைத்திருக்கின்றன.

300 சதுர மைல் பரப்புள்ள கொல்லேரித் தாழ் நிலத்தைச் சுற்றியிருக்கின்ற 10 லட்சம் ஏக்கர் நிலத்தில் இந்த வண்டல் மண் படிந்திருக்கிறது. அந்தப் பகுதி உண்மையிலேயே ஒரு நெற் களஞ்சியந்தான். நெல்லைத் தவிர, மிகுந்த வருவாய் தருகின்ற பருத்தி, புகையிலை, கரும்பு போன்ற பயிர்களும் அங்கே செழித்து வளர்கின்றன. ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு வந்த தொடக்கக் காலத்தில் அந்தக் கழிமுக நடு அரங்கத்தின் கரையில் பல வாணிக நிலயங்களை நிறுவினார்கள். டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய எல்லாருமே அங்கே வந்தார்கள். ஆற்றங்கரை யூர்களிலிருந்து அந்த நிலயங்களுக்குப் போய் வர உதவிய கால்வாய்கள் இப்போது பெரும்பாலும் தூர்ந்துபோய் விட்டன.

கொல்லேரி பாதி ஏரியாகவும் பாதிச் சதுப்பு நிலமாகவும் இருக்கிறது. ஆந்திரக் கடற்கரையில் அதுவொன்றுதான் இயற்கையாய் உண்டாகிய பெரிய நன்னீர் ஏரி. முதலில் அது கடலின் ஒரு பகுதியாயிருந்தது. பின்னர், கோதாவரி, கிருஷ்ணா நதிகள் ஓயாமல் அடித்துக்கொண்டு வந்த வண்டல் மண்ணால் அவற்றின் கழிமுக நடு அரங்கங்கள் கடலுக்குள் நீண்டு வளர்ந்து கொண்டே போயின. இறுதியில் ஒரு கழிமுகத்தின் வடகோடியோடு இன்னொரு கழிமுகத்தின் தென்கோடி இணைந்து விட்டது. எனவே, கொல்லேரித் தாழ் நிலத்திற்கும் கடலுக்கும் இடையில் கழிமுக இணைப்பு ஒரு சுவர் போல் வளர்ந்து விட்டது. கொலனு என்ற பெயரில் வரலாற்றில் இடம்பெற்ற கோல்லேரி நாட்டில் ஆட்சி செய்த சரோநாத வமிசத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஆந்திர வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறார்கள்.

சோழ மண்டலக் கடற்கரையில் கிழக்குமலைத் தொடர் உள்நாட்டுப் பக்கம் திரும்பி நீல்கிரியில் மேற்கு மலைத் தொடரோடு சேர்ந்து விடுகின்றதென்பதை முன்னரே கண்டோம். சவ்வாது மலை, சேர்வராயன் மலை, பச்சைமலை முதலியவை கிழக்குத் தொடர்ச்சி மலையின் பக்கக் கிளைகள். அவற்றில் பீடபூமியின் இயல்புகள் சிலவற்றைக் காண்கிறோம். கர்நாடகச் சமவெளி தெற்கே செல்லச் செல்ல அகன்று கொண்டே போகிறது. காவிரி நடை பயிலும் நிலத்தில் அதன் அகலம் சுமார் 170 மைல் ஆகும். ஏனைய கடற்கரைச் சமவெளிகள் தட்சிணப் பீடபூமி ஆகியவற்றினின்று காவிரிச் சமவெளி நிலக் கிடப்பியல், தட்ப வெட்ப நிலை, வரலாறு ஆகியவற்றில் மிகவும் வேறுபடுகிறது. உண்மையிலேயே இந்தியாவின் தென் பகுதி என்று இதைத்தான் சொல்லவேண்டும். பழங்காலத் தென்னிந்தியப் பேரரசுகளின் தலைநகர்கள் எல்லாம் இங்கேதான் இருந்தன. இந்தத் தமிழ்நாடு, 'எண்ணிலாக் கோயில்களையும், சொந்த மண்ணில் தோன்றி வளர்ந்த கலைகளையும், ஏறக்குறைய வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டவை என்று சொல்லக்கூடிய கைத்தொழில்களையும்' உடையது. மிகமிகப் பழங்காலத்தி லிருந்தே தமிழ்நாட்டில் செயற்கைமுறை நீர்ப்பாசனம் வழக் கத்தில் இருந்தது. கரூருக்கும் தஞ்சாவூருக்கும் இடையிலுள்ள செழிப்பான பகுதியில் எப்போது பயிர்த் தொழில் தொடங் கியதோ அப்போதே செயற்கைமுறை நீர்ப்பாசனமும் தொடங்கி யிருக்கவேண்டுமென்று சொல்லலாம்.

## BIBLIOGRAPHY

S. L. Hora: 'Outlines of Field Sciences of India' (Science Congress Association)

'The Imperial Gazetteer of India,' Vols. I-IV (Oxford, 1909)

L. W. Lyde: 'The Continent of Asia' (Macmillan)

Sir J. H. Mackinder: 'The Sub-Continent of India' ('Cambridge History of India' Vol. I)

D. N. Wadia: 'Gelogy of India' (Macmillan)

# 3. பழங்குடி மக்களும் அவர்கள் வாழ்க்கை முறைகளும்

***எடுத்துக்கொண்ட பொருளின் இயல்பும் சான்றுகளும்—பழங்கற் காலம்—அதன் பிற்பகுதி—இடைக் கற்காலமும் நுண் கற்கருவிகளும் —புதுக் கற்காலம்—பாறை ஓவியங்கள்—பெருங்கற்களும் அவற்றின் காலமும்—ஆதிச்ச நல்லூர்—நீலகிரி—இனங்கள் : நெக்ரிட்டோ; ஆஸ்திரேலிய இன ஆதி முன்னோர்; மத்திய தரைக் கடல் இன ஆதி முன்னோர்; மத்திய தரைக் கடல் இனம்; ஆல்பைன்—ஆர்மீனிய இனம்; நார்டிக் இனம். மொழிகள்: இந்தோ-ஆரியம்; திராவிடம்; ஆஸ்தி ரேலிய ஆசியம்-மேற்காசியாவில் திராவிடமொழி உறவுகள்—மேற் காசியாவுக்கும் தென்னிந்தியாவுக்கு இருந்த பண்பாட்டுறவு— திராவிட இனத்தைப் பற்றி ஹைமண்டார்ப் கருத்து.***

தென்னிந்திய மக்களிடம் தெளிவாக வரையறுக்கப்பட்ட இன இயல்புகள் இல்லை. அவர்கள் பல்வகைப்பட்ட உடற் கூறுடைய பல இன மக்களின் கலப்பியல்புகளையுடையவர்களாக இருக்கிறார்கள். நினைவுக்கு எட்டாத மிகப் பழங்காலத்தி லிருந்தே அவர்கள் பல இனக் கலப்புடையவர்கள். அந்தப் பல்வேறு இனக்கூறுகளைத் தனித்தனியே பிரித்துக் காண் பதற்குத் தற்கால அறிஞர்கள் முயன்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குக் கிடைத்துள்ள சான்றுகள் சிக்கலானவைகளாகவும் தெளிவற்றவைகளாகவும் இருக்கின்றன. அதனால், அந்த அறிஞர் கருத்துகள் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் அல்ல. எனவே, இந்த அதிகாரத்தில் நாம் உறுதியான, மறுப்பிற்கு இடமற்ற கருத்துகளைச் சொல்ல இயலாது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் இன இயல்புகளையும் நாகரிகத் தன்மைகளையும் பற்றிய சான்றுகள் மூன்று வகைப்படும். ஒன்று : இன்று இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களின் உடற்கூறுகளையும் வேற்று நாடு களில் வாழ்கின்ற மக்களிடம் காணப்படும் அவை போன்ற இயல்பு

களையும் கவனமாக ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் பழங்கால மக்களின் தோற்றம், இடப்பெயர்வு முதலியவற்றைப் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள உதவக் கூடிய தடையங்கள் கிடைக்கலாம். இரண்டு : பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் பலவேறு மொழிகளைப் பேசுகிறார்கள். அந்த மொழிகளுக் கிடையில் பல உள்ளியைபுகள் இருக்கின்றன. இனவியல்பு களுக்கும் மொழிகளுக்கும் தெளிவான தொடர்புகள் இல்லை யென்பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. எனினும், பண்பாட்டு வரலாற்றை அறிந்து கொள் வதற்குத் தெளிவான மொழிச்சான்று பெரிதும் உதவுகிறது என்பதை யாரும் ஒப்புக்கொள்வர். மூன்று : தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் நிலத்தைப் பல இடங்களில் அகழ்ந்து பார்த்திருக்கிறார்கள். அந்த அகழ்வுகளால் பல்வேறு காலங் களிலும் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய கருவிகளும் கலங்களும் கிடைத்திருக்கின்றன. அவற்றின் உருவ அமைப்பு எவ்வாறு இருக்கிறது, அவற்றுள் எத்தனை வகைகள் இருக்கின்றன, அவை நிலத்துக்கு அடியில் எந்தெந்த மட்டத்தில் கிடைத்தன என்னும் செய்திகள் பண்டைக் கால மக்கள் இடம் பெயர்ந்து சென்றதையும் அவ்விடப் பெயர்வுகளின் காலத்தையும் அந்த இடங்களில் நிலவிய பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன. அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ள பொருள்களுள் மட்பாண்டங்கள் மிக முக்கியமானவை. அவற்றின் பலவகை உருவங்களும் பிறஇயல்புகளும் பண்டை மக்கள் பண்பாடுகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவு கின்றன. பண்டைத் தொடுகுழிகளிற் காணப்படும் எலும்புக் கூடுகள், அந்த இடங்களில் வாழ்ந்த மக்களுடைய இன இயல்புகளை உய்த்துணர்ந்து கொள்வதற்குச் சில சமயங்களில் உதவுகின்றன. மேலே கூறிய ஒவ்வொரு வகைச் சான்றையும் தனித்தனியே ஆராய்ந்து பார்த்துச் சரியான முடிவுகளைச் செய்வது கடினமானது என்பதும், அந்த முடிவுகளை ஒருங் கிணைப்பது அதைவிடக் கடினமானது என்பதும் தெளிவு. அத்தகைய ஆராய்ச்சியும் ஒருங்கிணைப்பும் மிக அண்மையில்தான் தொடங்கியிருக்கின்றன. அதனால், எல்லாச் செய்திகளையும் விவரமாகச் சொல்வதற்கு மாறாக, இதுவரையில் அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சியின் விளைவுகளைப் பொதுவாகக் கூறுவது தான் இப்போதுள்ள நம் பணியாகும்.

**பழங்கற்காலம்**

தென்னிந்தியாவை மனிதன் எப்போது தன்னுடைய குடி யிருப்பாகக் கொண்டு வாழ்ந்தான் என்பது நம்முடைய முதற்

கேள்வியாகும். கோதாவரி, நர்மதை ஆகிய ஆறுகளின் படுகைகளிலுள்ள நில அடுக்குகளிலும் சிவாலிக் மலைப் பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விலங்குகளின் புதைபடிவங்களும் செப்பமுறாத கற்கருவிகளும் மேற்கண்ட வினாவிற்கு விடையை உய்த்துணர்வதற்கு உதவுகின்றன. இந்தச் சான்றுகளின்படி மனிதன் 3,00,000 ஆண்டுகட்கு முன்னரே அந்தப் பகுதிகளில் வாழ்ந்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது. ஆனால், அங்கு வாழ்ந்த மனிதர்கள் நெடுங்காலம் பழங்கற்கால வாழ்க்கையைத் தான் நடத்தி வந்தார்கள். அவர்கள் பயன்படுத்திய கருவிகள் கரடு முரடான கற்கருவிகள். தங்களுக்குத் தேவையான உணவு வகைகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்வதற்கு மாறாக அவர்கள் கிடைத்த உணவை உண்டு வந்தார்கள். அவர்கள் கைக்கோடரி, வெட்டுக்கத்தி ஆகிய மிக எளிய கற்கருவிகளைப் பயன்படுத்தினார்கள். முதலில், கிளாக்டோனியன் லெவலாய்சியன் சிம்புகளும், பின்னர் வெட்டுவாய்ப்பகுதிகளும், செதுக்கு கருவிகளும் நாளடைவில் வழக்கிற்கு வந்தன. பழங்கற்காலக் கருவிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: 1. வடநாட்டைச் சேர்ந்த வெட்டுக்கத்தி (சோஹான் மரபு) 2. தென்னாட்டைச் சேர்ந்த அபிவிலே அச்சியூலியன் கைக்கோடரி (மதராஸ் மரபு) 3. இந்த இருவகையுங் கலந்த மரபு. இந்தப் பிரிவுகளின்படிதான் தக்காணத்தின் எல்லாப் பகுதிகளிலும் பழங்கற்காலக் கருவிகள் பயன்பட்டன என்று வரையறுத்துக் கூற இயலாது. மிர்சாபூருக்கு அருகில் உள்ள சிங்கராலி வடிநிலம் (உத்திரப் பிரதேசம்), பெட்வா நதியின் வடிநிலத்திலுள்ள ஜான்சி மாவட்டத்தைச் சேர்ந்த தேவகர் (உத்தரப் பிரதேசம்), சம்பல் பள்ளத்தாக்கிலுள்ள சித்தூர்கர், கோட்டா ஆகிய மாவட்டங்கள் (ராஜஸ்தான்),மயூர் பஞ்சு, மஹி, சபர்மதிப் பள்ளத்தாக்குகள் (குஜராத்),கிருஷ்ணா, துங்கபத்திரா பள்ளத்தாக்குகள் ஆகிய இடங்கள் எல்லாவற்றிலும் சோஹான் கருவி மரபுகளும் மதராஸ் கருவி மரபுகளும் கலந்து காணப்படுகின்றன. கர்நூலிலும் நாகார்ஜுனகொண்டாவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இருமுகப்புடைய கைக்கோடரிகள் கூழாங்கற்களால் செய்யப்பட்டவை. சோஹான் கைக்கோடரிகள் கற்சிம்புகளால் செய்யப்பட்டவை. கூழாங்கற் கருவிகள் சிம்புக் கருவிகளைவிடப் பழமையானவை என்பது தெரிகிறது. மேலும், அவை இந்தியாவின் பல்வேறு இடங்களில் பரவலாக வழக்கில் இருந்தன என்பதையும் அறிகிறோம்.

பழங்கற்காலம், முற்பட்ட பழங்கற்காலம் என்றும் பிற்பட்ட பழங்கற்காலம் என்றும் இரு பிரிவை உடையது என்பர். இந்தி

யாவில் பிற்பட்ட பழங்கற்காலம் என்று ஒன்று இருந்ததோ என்பதே ஐயத்திற்கு இடமானது. 'வளர்ச்சியடைந்த சோஹான் கருவிகள்' இந்தியாவில் பிற்பட்ட பழங்கற்காலம் இருந்ததைக் காட்டுகின்றன என்று மோவியஸ் கருதுகிறுர். தென்னிந்தியாவில் காணப்படும் நுண் கற்கருவிகள் பிற்பட்ட பழங்கற்காலத்தோடு இணைந்தவை அல்ல என்றும், அவை லெவலாய்சியின் சிம்புக் கருவிகளின் அடிப்படையில் தோன்றி யிருக்கலாம் என்றும், அதனுல் பிற்பட்ட பழங்கற்காலம் இந்தி யாவில் இருந்திருக்காது என்றும் சேஷாத்திரி கருதுகிறுர். தென்கிழக்குக் கடலோரப் பகுதியிலுள்ள மணல் தேரிகளையும், அங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருவிகளையும், புரூஸ்புட் கண்டுபிடித்த கர்நூல் குகைகளையும் மேலும் ஆராயவேண்டும். அதன்பின்னரே பிற்பட்ட பழங்கற்காலம் இந்தியாவில் இருந்ததா என்னும் கேள்விக்கு விடை கிடைக்கலாம்.

ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிற்பட்ட பழங்கற் காலக் கருவிகளில் மெல்லிய வெட்டலகுகள் இருக்கின்றன. கல்லிலிருந்து சிம்புகளை அழுத்திப் பெயர்த்தும் குத்திப் பெயர்த்தும் அந்த அலகுகள் செய்யப்பட்டன. அத்தகைய திட்டவட்டமான கருவித் தொகுதி இந்தியாவிற் கிடைக்க வில்லை. மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ரேவா மாவட்டத்தில் இட்டார்பஹார் என்னும் இடத்தில் இருக்கின்ற மணற்பாறைக் குகைகளையும் பாறை ஒதுக்கிடங்களையும் எஸ். ஆர். ராவ் அண்மையில் ஆராய்ந்து பார்த்து, கருவியுற்பத்தி மையங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தார். மெல்லிய உள்ளணுத் துகளுடைய சால்சிடானி, அகேட், ஜாஸ்ப்பர் போன்ற மணிக் கற்களாலும் சக்கிமுக்கிக்கல் போன்ற படிகக்கற்களாலும் செய்யப்பட்ட அலகுகள், அலகு முனைகள், சுரண்டு கருவிகள், தொளைக்கருவிகள் ஆகியவையும் சில அம்புமுனைகளும் அங்கே கிடைத்தன. அதற்கு முன்னர் மகாராஷ்டிரம், மாளவம், ஆந்திரம் ஆகிய பகுதிகளில் செய்த அகழ்வுகளின் பயனுக அடியில் தட்டு முட்டுப் பொருள்களை யுடைய நில அடுக்குகளும் மேலே கைக் கருவிகளையுடைய நில அடுக்குகளும் இருப்பது தெரிந்தது. அந்த மேலடுக்குகளிலிருந்த கருவிகளும் இட்டார்பஹாரில் கிடைத்த கருவிகளும் உருவிலும் பயனிலும் ஒத்திருக்கின்றன. இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்ட கருவிகளுக்கு அவற்றைக் கண்டு பிடித்த வர்கள், புது ஆசியக் கருவிகள் தொகுதி 2' என்றும், 'இடைப் பழங்கற்காலக் கருவிகள்' என்றும் இன்னுஞ் சில பெயர்களையும் கொடுத்திருக்கிறுர்கள். அண்மையில் இதைப்பற்றிக் கலந்து பேசிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அந்தக் கருவிகளுக்கு

'இடைக்கற்காலக் கருவிகள்' என்னும் பெயரைக் கொடுப்பதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருவிகள் ஒரு புறம் பழங்கற்காலக் கருவிகளினின்றும் வேறுபடுவது போலவே, மறுபுறம் புதுக் கற்கால நுண்கற் கருவிகளினின்றும் வேறுபடுகின்றன. பிற்பட்ட பழங்கற்காலம் என்ற ஒன்று இந்தியாவில் இருந்தது என்பதற்குத் தெளிவான சான்று எதுவும் இது வரையிற் கிடைக்கவில்லை. ஆதலால், இந்தக் கருவிகளைப் பழங்கற்காலத்தின் நடுக்காலக் கருவிகள் என்று சொல்வது பொருந்தாது.

இடைக் கற்கால மக்கள் ஆற்றங்கரைகளிலும் பாறை ஒதுக்கிடங்களிலும் வாழ்ந்தார்கள். அங்கேதான் கைக்கருவிகளைச் செய்வதற்கேற்ற கற்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அவர்கள் வேட்டையாடித் தங்களுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொண்டார்கள். அந்த வாழ்க்கை முறையே நெடுங்காலம் நீடித்தது. ஆனால், நாளாக நாளாக அவர்கள் பயன்படுத்திய வில், அம்பு, வேல் ஆகிய கருவிகளின் தரம் உயர்ந்தது என்பதை அவர்கள் உபயோகித்த முனை புதைந்த அம்பு போன்றவை காட்டுகின்றன. மழை குறைவாயிருந்ததால் அடர்ந்த காடுகள் அங்கு இல்லை.

ஐரோப்பாவில் இருந்ததைப் போலத் தெளிவாக வரையறுக்கப்பட்ட இடைக் கற்காலம் இந்தியாவில் இருந்ததாகத் தெரியவில்லை. பிற்பட்ட கற்காலக் கருவிகள் என்று இப்போது பெயர் பெற்றுள்ள நுண்கற்கருவிகள் வடமேற்கில் பெஷாவர் மாவட்டத்திலுள்ள ஜமால்காரியிலிருந்து தெற்கில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சாயர்புரம் வரையிலும், மேற்கில் சிந்து நாட்டிலுள்ள கராச்சியிலிருந்து கிழக்கில் பீகார் மாநிலத்திலுள்ள செரைக்கலா வரையிலும் இருக்கின்ற பரந்த பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை புதுக்கற்காலக் கருவிகளோடும் உலோகக் கருவிகளோடும் சேர்ந்து கிடைப்பதால், அவற்றை உண்மையான இடைக் கற்காலக் கருவிகள் என்று சொல்ல முடியாது. எனினும், அவற்றின் உருவ அமைப்பு, இடைக்காலத்தைச் சேர்ந்த மேற்குக் காஸ்பிய நாட்டுக் கருவிகளின் உருவ அமைப்பைக் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்திருக்கிறது என்று வி. டி. கிருஷ்ணசாமி கருதுகிறார். பர்மாவில் இன்னும் இடைக்கற்காலக் கருவிகள் கிடைக்கவில்லை. அதனால், அந்தக் கருவிகள் மேற்கத்திய மரபைப் பின்பற்றிச் செய்யப்பட்டவையாக இருக்கலாம் என்பது தோன்றுகிறது. அவற்றைச் செய்வதற்கு ஜாஸ்ப்பர், அகேட், கார்னீலியன், சால்சிடானி,

படிகக்கல், சக்கிமுக்கிக்கல், சக்கிமுக்கிக்கல் போன்ற இன்னொரு படிகக்கல் ஆகிய மணிக்கற்களைப் பயன்படுத்தினார்கள். அந்தக் கருவிகளில் முக்கியமானவை அலகு, ஊசுதண்டு, முக்கோண முனை, பிறைவடிவக் கருவி, வளைந்த உளி, சுரண்டி ஆகியவை. அந்த நுண் கருவிகளின் பயனை அதிகரிப்பதற்காக மரம் அல்லது எலும்பால் செய்த பிடியில் தனித் தனியாகவோ இரண்டு மூன்றை ஒன்றாகச் சேர்த்தோ இணைத்து, அவற்றை அம்பு முனைகளாகவும் கருக்கு அரிவாள்களாகவும் பயன்படுத்தினார்கள்.

திருநெல்வேலியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நுண் கற் கருவிகள் தேரி என்று வழங்கும் கல்லாயுறைந்த மணற் குன்றுகளின் உள்ளே புதைந்து காணப்படுகின்றன. தேரிகளின் உள்ளேயிருக்கும் மண்ணில் இரும்புக் கலவை இருப்பதால், இரும்புத் துருவோடு சேர்ந்து நெடுங்காலம் கிடந்த கருவிகள் சிவப்பு நிறம் பெற்றிருந்ததை புரூஸ்புட் கண்டார். தூத்துக் குடிக்கு அருகில், மிகப் பழங்காலத்தில் உருவானது என்று மண்ணியல் ஆராய்ச்சியாளர் கருதுகின்ற ஒரு நிலப்பகுதியில், 1949-ல் ஜொய்னர் என்பவர் பல நுண்கற் கருவிகளைக் கண்டு பிடித்தார். எனவே, அந்தக் கருவிகளும் மிகப் பழங்காலத்தைச் சேர்ந்தவை என்று கூறலாம். இந்தச் சான்றுகளும், நந்திக் கணமா என்னும் இடத்திலும் கந்திவிலி என்னும் இடத்திலும் கிடைத்திருக்கிற இவை போன்ற வேறு சான்றுகளும் கி.மு. 8000ஆம் ஆண்டிற்கும் கி.மு. 6000ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் நுண்கற் கருவிகள் முதலில் உபயோகத்திற்கு வந்திருக்க வேண்டும் என்னும் ஒரு கருத்தை உருவாக்கிஉள்ளன.

இந்தியாவில் கிடைத்துள்ள நுண்கற்கருவிகள் இரு பிரிவு களுள் அடங்கும்: 1. மட்பாண்டத்திற்கு முற்பட்ட கருவிகள்; 2. மட்பாண்டங்களோடு வழக்கிலிருந்த கருவிகள். நுண்கற் கருவிகள் இந்தியாவில் கிடைக்கும் இடங்களைப் பற்றிய ஒரு நீண்ட பட்டியலை கார்டன் நமக்குத் தந்திருக்கிறார். அந்தப் பட்டியலில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களையும் நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும். குஜராத் மாநிலத்தில், முக்கியமாக லாங்நாஜ் என்னும் இடத்தில், கண்டுபிடிக்கப் பட்டுள்ள நுண்கற் கருவிகளைப்பற்றி ஜொய்னரும் சங்காலி யாவும் சிறப்பு ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். மைசூர் மாநிலத்தில் கிடைத்துள்ள நுண்கற்கருவிகளைப்பற்றிச் சேஷாத்திரி தனி ஆராய்ச்சி செய்திருக்கிறார். மைசூரிலும் ஏனைய இடங்களிலும் கிடைத்துள்ள சான்றுகளிலிருந்து சில நுண்கற் கருவிகள் உலோகக் காலத்தைச் சேர்ந்தவை என்பது

ஏறக்குறைய உறுதியாகத் தெரிகிறது. இந்திய நுண்கற் கருவிகளுக்கும் தென் ஆப்பிரிக்கா பாலஸ்தீனம் ஆகிய நாடுகளின் நுண்கற் கருவிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்வது மிகக் கவர்ச்சியான பணியாக இருக்கும். ஆனால், இன்னும் அவ்வேலை தொடங்கவில்லை. நுண்கற்கருவிகளைக் கடற்கரையோரக் கருவிகள் என்றும் உள்நாட்டுக் கருவிகள் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் பிரிக்க முயன்றிருக்கிறார்கள். முதற் பிரிவைச் சேர்ந்த கருவிகள் உள்நாட்டுக் கருவிகளைவிடப் பழமையும் எளிமையும் உடையவை என்றும், அவ்வளவாகச் செப்பமுறாதவை என்றும் கூறலாம். மேலும், அவற்றின் உருவமைப்பு வேறுபட்டதாயிருப்பதோடு அவை பெரியவையாகவும் இருக்கின்றன. உள்நாட்டில் கிடைத்த செதுக்குகருவி மட்டும் கடற்கரையில் கிடைக்கவில்லை. கருவிகளின் பயனை அடிப்படையாக வைத்து அவற்றை வேட்டைக் கருவிகள் என்றும் உழவுக் கருவிகள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

1954–'55-ல் கத்தியவாரிலுள்ள ரங்பூரில் எஸ். ஆர். ராவ் நடத்திய அகழ்வாராய்ச்சிகளின் பயனாக நுண்கற்கருவிகள் வழக்கிலிருந்த காலத்திலே எந்தக் கட்டத்தில் மட்பாண்டங்கள் வழக்கிற்கு வந்தன என்பதை நிர்ணயிப்பதற்கு வழி ஏற்பட்டது. அவ்வாறு செய்வதற்கு அதற்குமுன் சான்று கிடைக்கவில்லை. ஜாஸ்ப்பர், அகேட் ஆகியவற்றால் செய்த முக்கோணம், ஊசு தண்டு, தொளைக் கருவி, சுரண்டி, அம்புமுனை ஆகிய கருவிகள் நிலத்துக்கு அடியிலிருந்த சரளைப்படுகை அடுக்கொன்றில் கிடைத்தன. அந்த அடுக்குக்கு மேல் எவ்விதத் தொல்பொருட் சின்னமும் இல்லாத வண்டல் மண்பாளம் ஒன்று இருந்தது. அதற்கும் மேலே ஹரப்பா காலத்து மக்கள் வாழ்ந்த சுவடுகள் இருந்தன. அடுக்கியல் ஆய்வுப்படி ரங்பூர் நுண்கற் கருவிகள் கி.மு. 3000 ஆண்டைச் சேர்ந்தவை என்பது தெரிகிறது. இந்த அடிப்படையில், மட்பாண்டத்துக்கு முற்பட்ட நுண்கற் கருவிக் காலம் கி.மு. 6000-க்கும் கி.மு. 3000-க்கும் இடைப்பட்டதாய் இருக்கவேண்டும்.

நுண்கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் ஆற்றுநீர் பாய்ந்து ஏரியாக நீர்கோத்து நின்ற இடங்களுக்கு அருகிலிருந்த மணற்குன்றுகளின்மீது வாழ்ந்தவர்கள் என்பது லாங்நாஜ தருகின்ற சான்றுகளிலிருந்து தெரிகிறது. அந்தப் பகுதி இப்போதிருப்பதைவிட அந்தக் காலத்தில் அதிக ஈரமுடையதாக இருந்தது. அதற்கு முற்பட்ட காலத்தில் அந்தப் பகுதி வறண்டு கிடந்தபோது அந்த மணற்குன்றுகள் உருப்பெற்றன. அங்கு

வாழ்ந்த மக்களின் முக்கியத் தொழில் வேட்டையாடுவதும் மீன் பிடிப்பதுமாகும். அவர்கள் ஆடுமாடுகள், மான், காண்டா மிருகம், கீரி, பன்றி, எலி, மீன் ஆகியவற்றை உணவுக்குப் பயன் படுத்தினர்கள். அவர்கள் அலகுகளையும், முனைகளையும், உளி களையும் தனித்தனியாகவும் இணைத்தும் வேட்டையாடவும், மீன் பிடிக்கவும், விலங்குகளைத் துண்டு துண்டாக வெட்டவும் பயன்படுத்தினர்கள். லாங்நாஜில் தோண்டியெடுக்கப்பட்டுள்ள மனித எலும்புக்கூட்டின் நீண்ட, பருமன் குறைந்த, கால்களைப் பார்க்கும்போது அங்கு வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும் மீன் பிடித்தும் வாழ்ந்தவர்கள் என்பதை உணரலாம். அவர்கள் பிணங்களை நன்ருக மடக்கிப் பொதுவாகத் தென் வடலாகக் கிடத்தினர்கள். அவர்கள் உயரமானவர்கள் என்றே கூறலாம். அவர்களுக்கு நீண்ட மண்டையும் சிறிது துருத்திக் கொண் டிருக்கும் அடியுதடும் இருந்தன. அவர்களுடைய உடற்கூறுகள், எகிப்தைச் சேர்ந்த ஹாமிட்டிக் மக்களுடைய உருவமைப்பை நினைவூட்டும் வண்ணமிருந்தன. அவர்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர்கள். அவர்களுக்குப் பயிர்த் தொழில் தெரியாது. இயற்கையாகவே வளர்ந்த தானிய வகைகளைக்கூட அவர்கள் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் நுண்கற்கருவி களைப் பயன்படுத்தியது கற்காலத்தின் பிற்பகுதியில்தான் என்பது தெரிகிறது.

தேய்த்து வழவழப்பாக்கிய கற்கோடரிகளோடு நுண்கற் கருவிகளும் ஒருங்கே கிடைப்பது குறிப்பிடத்தக்கது. பிரம கிரியில் கவனமாகச் செய்யப்பட்ட அகழ்வாரய்ச்சிகள், இந்தத் தொடர்புக்குச் சான்று தருகின்றன. தேய்த்து வழவழப்பாக்கிய கற்கருவிகாலத்திலிருந்து வரலாற்றுக்காலம் வரையிலும் மக்கள் அந்த இடத்தில் தொடர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்பதை அந்த அகழ்வாராய்ச்சிகள் காட்டுகின்றன. இந்தியாவில் பழங் கற்காலம் இடைக்கற்காலம் புதுக்கற்காலம் என்ற பண்பாட்டுத் தொடர், இடையில் அறுந்துபோனதா அல்லது அறுந்து போகாமல் நீண்டு வந்ததா என்பது ஐயத்திற்குரியது. கவனமாக இன்னும் ஆராய்ச்சி செய்த பின்னரே அது பற்றிய முடிவுக்கு நாம் வர இயலும். ஐரோப்பாவிலும் ஏனைய இடங்களிலும் இந்தத் தொடர், இடையில் அறுந்துபோகாமல் நீண்டு வந்தது. அங்கெல்லாம் இடைக்கற்காலம் என்று சொல்லப்பட்ட காலம் புதுக்கற்காலத்தோடு இணைந்துகலந்து தெரிகிறது. புது கற்காலத் தில் கற்கருவிகளைத் தேய்த்து வழவழப்பாக்கும் கலையும் விலங்கு களைப் பழக்குதல், பயிர்த் தொழில் செய்தல் ஆகிய கலைகளும் ஒருங்கு வளர்ந்தன. முதலில், கிடைத்த உணவையுண்ட மக்கள்

காலப்போக்கில் தாமே உற்பத்தி செய்த உணவை உண்ணத் தொடங்கினர்கள். இந்த நிலையை அவர்கள் எய்துவதற்கு நெடுங்காலம் பிடித்தது. இது புதுக்கற்காலத்தில் ஏற்பட்ட ஒரு பெரும் புரட்சி. நுண்கருவிகள் புதைத்த எலும்புக் கருக்கு அரிவாள் பாலஸ்தீனத்தில் கிடைத்திருக்கிறது. புல்லையும் ஏனைய செடி கொடிகளையும் அறுப்பதனுல் உண்டாகிற தனிப் பளபளப்பை அந்தக் கருக்குகளிற் காண்கிறேம்.

இந்தியப் புதுக்கற்காலத்தைப் பற்றிய செய்திகளைத் திரட்டி அக் காலத்தில் இருந்த மக்களுடைய வாழ்க்கை முறையின் முழுத்தோற்றத்தையும் அறிந்துகொள்வது மிகவும் கடினம். இந்த நிலைமையை ஜொய்னர் என்பவர் ஏற்புடைய முறையில் விளக்கியிருக்கிருர். இதுவரையில் நாம் அகழ்ந்து பார்த்த பகுதி களில் வாழ்ந்த புதுக்கற்கால மக்கள் காட்டுப் பயிர்களை நாட்டுப் பயிர்களாக்கியதற்குப் போதிய சான்று கிடைக்கவில்லை. அந்த இடங்களிற் கிடைக்கின்ற புதைபடிவங்களை ஆராய்ந்து தாமே வளர்ந்த தாவரங்களையும் பயிர் செய்த தாவரங்களையும் தனித் தனியாகப் பிரித்துக் காணமுடிந்தால், நாம் தேடுகின்ற சான்று கிடைக்கலாம். தக்காணத்தில் பெல்லாரி, மைசூர், ஐதராபாத் முதலிய பகுதிகளில் புதுக்கற்காலக் குடியிருப்புகள் என்று சொல்லப்படுகின்ற இடங்களில் செய்த அகழ்வாராய்ச்சிகளின் பயனுகக் கோடரிகள், உளிகள், வாய்ச்சிகள் ஆகியவை நமக்குக் கிடைத்திருக்கின்றன. அந்தக் கருவிகளைச் செய்வதற்கு ஏற்ற கற்கள் படிகக் கற்பாறை மேடுகளிற் கிடைப்பதால் புதுக்கற்கால மனிதர் குடியேற்றங்கள் அந்த மேடுகளுக்கு அருகில் இருந்தன. இதுவரையில் ஒரு சில முக்கியமான இடங்களில் மட்டும் அகழ் வாராய்ச்சிகள் நடந்திருக்கின்றன. சங்கனக்கல்லு, மாஸ்கி, பிரமகிரி (வடமைசூர்), தி. நரசிப்பூர் (தென்மைசூர்), உட்டுனூர், பிக்லிஹல், நாகார்ஜுனகொண்டா (ஆந்திரா), புர்ஜஹாம் (காஷ்மீரம்) ஆகியவை அந்த இடங்கள். பிரமகிரியில் நடந்த அகழ்வாராய்ச்சியின் பயனுக எவ்விதத் தொல்பொருளும் இல்லாத பாளமொன்று நிலத்திற்கடியிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவ்வாறு இடையிலுள்ள இந்தப் பாளம் அந்த இடத்தில் இரண்டு மக்கள் கூட்டத்தினர் இருவேறு காலங்களில் வாழ்ந்திருக்கக் கூடுமென்பதைக் காட்டுகிறது. மேலும், அங்கே கிடைத்துள்ள மட்பாண்டங்களும் இருவகைப் பட்டவையாக இருக்கின்றன. எனவே, வழவழப்பான கற்கோடரிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த புதுக்கற்காலப் பண்பாட்டின் இருபடிகளை அங்கு நாம் காண்கிறேம். அந்த மக்கள் புதுக்கற்காலக் கோடரிகளையும் நுண்கருவிகளையும் பயன்படுத்தியதோடு, செம்பையும் வெண்

கலத்தையும் பயன்படுத்தவும் ஓரளவு தெரிந்திருந்தார்கள். பிரமகிரியிலும் சங்கனக்கல்லிலும் கிடைத்துள்ள மட்பாண்டங்களின் ஆராய்ச்சி இந்தியாவின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மக்கள் வாழ்க்கை முறையைத் தெரிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படுகிறது. சங்கனக்கல்லில் கிடைத்துள்ள கற்கோடரிகளும் செப்பமான நுண்கற்கருவிகளும் வெளிறிய சாம்பல் நிறமான மட்பாண்டங்களும் பிரமகிரி மக்கள் வாழ்க்கை முறையோடு தொடர்புடையவையாக இருந்தாலும், பிரமகிரியிற் கிடைத்துள்ள அத்தகைய தொல்பொருள்களைவிடப் பழமையானவை என்று உறுதியாகக் கூறலாம். அவை கி.மு. 1000 ஆண்டுக்கு முற்பட்டவை. அவையே 'உண்மையான புதுக்கற் காலப் பொருள்கள்' என்று சுப்பராவ் சொல்லுகிறார்.

நாகார்ஜுனகொண்டா பள்ளத்தாக்கில் வாழ்ந்த புதுக்கற்கால மக்கள் பழைய முறையிலான ஒருவகைப் பயிர்த் தொழிலைச் செய்தார்களென்பதை அங்குக் கிடைத்துள்ள கோடரிகள் முதலிய கருவிகள் காட்டுகின்றன. அந்தப் பகுதியின் புதுக்கற்கால வாழ்க்கை முறையும், சங்கனக்கல்லு-பிரமகிரிப் பண்பாட்டின் பிற்பகுதியும் சமகாலத்தவை. அங்கு நடந்த அகழ்வுகளிலும் தரைமட்டத்திலும் கே. வி. சவுந்தரராஜன் கண்டு பிடித்துள்ள கருவிகளில் கோடரி, பூண்போட்ட களைக் கொட்டு, ஆப்பு, வாய்ச்சி, குந்தாலி, உளி, சுத்தி முதலியவை இடம்பெறுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது இரட்டை வெட்டு வாயுடைய களைக்கொட்டு அல்லது கொத்துளியாகும். அந்தப் பள்ளத்தாக்கில் புதுக்கற்காலம் எத்தனை ஆண்டு தொடர்ந்திருந்தது என்பதைச் சொல்வது இயலாது. எனினும், அங்கு நடந்த அகழ்வுகளின் மேல் மட்டங்களில் புதுக்கற்காலக் கருவிகளோடு இரும்புக்கட்டிகளும் கிடைத்திருக்கின்றன. அதனால், பிரமகிரியில் நிகழ்ந்தது போலவே இங்கும் புதியதொரு பண்பாடு இடையிற் புகுந்திருக்கவேண்டுமென்பதையும், அந்தப் புதுப்பண்பாடு பெருங்கல் பண்பாடாக இருக்கவேண்டுமென்பதையும் உய்த்துணரலாம்.

மைசூர் மாநிலத்திலுள்ள தி. நரசிப்பூர் அகழ்வுகளில் புதுக்கற்காலத்தைச் சேர்ந்த முக்கியமான பொருள்கள் சில கிடைத்திருக்கின்றன. அவற்றுள் தேய்த்துப் பளபளப்பாக்கிய தடித்த சாம்பல்நிற மட்பாண்டங்களும் தேய்த்து வழவழப்பாக்கிய கோடரிகளும் குறிப்பிடத் தக்கவை. அந்தக் கோடரிகள் படிகக் கல்லால் ஆனவை. அவற்றின் ஒரு முனையில் தட்டையான வெட்டுவாயிருக்கிறது; மறுமுனை கூராக இருக்கிறது. இந்தப்

புதுக்கற்கால வாழ்க்கை முறையின் இடையில் செப்பு-கற்காலப் பண்பாடு நுழைந்தது என்பதை அங்கு நடந்த அகழ்வுகள் காட்டுகின்றன. அந்த அகழ்வுகளில் புதுக்கற்காலப் பொருள்களோடு மெலிந்த சாம்பல்நிற மட்பாண்டங்களும் கிண்டிகளும் கிடைத்திருக்கின்றன. மட்பாண்டங்களின் விளிம்பில் செங்காவி பூசியிருக்கிறது. தேய்த்துப் பளபளப்பாக்கப்பட்ட அம் மட்பாண்டங்கள் புஹாலிற் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களைப்போல இருக்கின்றன. கிண்டிகள், நெவாசாவில் கண்டுபிடிக்கப்பட்ட கிண்டிகளைப்போல இருக்கின்றன. ஆனால், நரசிப்பூர் அகழ்வுகளில் செப்புப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அங்கே ஒரு புதைகுழியும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஓர் உடல் கீழ்மேலாகக்கிடத்தப்பட்டிருந்தது. அதன் கைகள் வயிற்றின்மேல் வைக்கப்பட்டிருந்தன. புதைகுழியில் கையால் செய்த பாலேட்டு நிறமுள்ள சட்டிகளும் மூக்குள்ள கிண்ணம் ஒன்றும் இருந்தன.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் புதுக்கற்கால மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குக் காஷ்மீரத்திலுள்ள புர்ஜஹாம் என்னும் இடம் சான்று தருகிறது. அங்கு வாழ்ந்த மக்கள் குழிகளில் குடியிருந்தார்கள். அந்தக் குழிகள் இருவகைப்பட்டவை என்று கஜாஞ்சி கண்டுபிடித்திருக்கிறார். காலத்தால் முற்பட்ட குழிகள் மேலே குறுகியும் அடியில் அகன்றும் இருக்கின்றன. அவற்றுக்குள் இறங்குவதற்குப் படிகள் இருக்கின்றன. அந்தப் படிகள் இடையிலே நின்று விட்டதால் சில சமயங்களில் ஏணிகளையும் அம் மக்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். தரை சமமாக இருந்தது. சுவர்கள் மண் பூசப்பெற்றவை. வெப்பமான நாள்களில் அம் மக்கள் திறந்த வெளிகளில் வாழ்ந்தார்கள் என்பதைத் தரைமட்டத்தில் உள்ள அடுப்புகளும் சேமிப்புக்குழிகளும் காட்டுகின்றன. சில குழிகளில் விரைவில் அழியக்கூடிய பொருள்களாகிய மேற்கட்டுமானப் பகுதியும் இருந்தது. காலத்தால் பிற்பட்ட குழிகள் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை. அவற்றைக் குழிகள் என்று சொல்ல முடியாது; ஏனெனில், அந்தக்காலப் பிற்பகுதியில் வாழ்ந்த மக்கள் குழிகளை மூடி அவற்றைத் தரையாக மாற்றிவிட்டார்கள். விரைவில் அழியக்கூடிய பொருள்களான மேற்கட்டுமானம் இருந்ததென்பதை அந்தத் தரையில் கம்பம் நடுவதற்குப் பயன்பட்ட குழிகள் காட்டுகின்றன. அந்தக் காலத்தின் இரண்டு பகுதிகளிலும் அங்கு வாழ்ந்த மக்கள் தேய்த்து வழவழப்பாக்கிய கோடரி, கருக்கு அரிவாள், மெருகேற்று கருவி, உலக்கை, உளி முதலிய கற்கருவிகளைத் தவிர, எலும்பாலும் மான் கொம்பாலும்

ஆகிய குத்துவாள், தமருசி, தைய லூசி, மண்டா (கயிறு கட்டிய எறிபடை) முதலியவற்றையும் பயன்படுத்தினுர்கள். புதுக் கற்காலத்திற்குப்பின் அந்தப் பகுதியில் பெருங்கல் பண்பாடு நுழைந்தது.

கரியம் 14 சோதனைகளின் மூலம் உட்டுனூர்ப் புதுக் கற்காலப் பொருள்கள் கி.மு. 2000 ஆண்டைச் சேர்ந்தவை என்றும், புர்ஜஹாம் பொருள்கள் கி.மு. 1700ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்றும் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த அடிப்படையில் பிரமகிரிக் கற்கோடரிக் காலம் கி.மு. 1000-க்கு முற்பட்டது என்று கூறலாம். மேலும், புதுக்கற்கால மக்களுக்கும் ஹரப்பா காலத்திற்குப்பின் வடதக்காணத்தில் வாழ்ந்த செம்பு-கற்கால மக்களுக்கும் தொடர்பிருந்ததென்பதும் உறுதியாகத் தெரிகிறது.

'தோட் கோடரி'ப் பிரச்சினையைக் 'கூர்நுனிக் கோடரி'ப் பிரச்சினையோடு குழப்பக் கூடாது. இந்தோசீனுவிலும் மலேயா தீபகற்பத்திலும் வாழ்ந்த மக்களினப் பண்பாட்டுடன் தொடர்புடைய ஒருவகை ஆஸ்டிரிக் மக்கள்மட்டும் தோட் கோடரிகளைப் பயன்படுத்தினுர்கள் என்று கருதலாம்.

தீபகற்ப இந்தியாவிலுள்ள பாறை ஓவியங்கள் கற்காலத்தை சேர்ந்தவை என்று ஒரு காலத்தில் ஆராய்ச்சி வல்லுநர் கருதினர். ஆனுல், அண்மையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள், எல்லா மக்களும் இரும்பைப் பயன்படுத்தத் தெரிந்துகொண்ட ஒரு பிற்காலத்தில் அந்த ஓவியங்கள் தீட்டப்பட்டன என்பதைக் காட்டுகின்றன. மகாதேவ மலைப்பகுதிகளில் கிழக்கே டாமியாவி லிருந்து மேற்கே சியோனி-மாளவத்தின் தென் பகுதி வரை யிலும் எண்ணற்ற பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. அவற்றுள் மிகவும் கடைசிக்காலத்தில் தீட்டப்பட்டவை கி.பி. 10ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தவை என்றும், மிக முற்பட்டவை கி.மு. 7ஆம் நூற்றுண்டிற்கு முன் தீட்டப்பட் டிருக்க இயலாது என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ரேவா மாவட்டத்திலுள்ள இட்டார்பஹார்ப் பாறை ஒதுக் கிடங்களை ஆராய்ந்து பார்த்த எஸ். ஆர். ராவ், அவற்றுள் மூன்றிடங்களில் மக்கள் வாழ்ந்த சுவடுகள் கலையாமல் அப்படியே இருப்பதைக் கண்டார். அந்த மூன்று இடங்களிலும் வரிப்பள்ளக் கருக்களையும், இணை நீள்பக்க அலகுகள் பலவற்றையும், முனை, அம்புத்தலை ஆகியவற்றையும் அவர் கண்டுபிடித்தார். அப்படிக் கிடைத்த கருவிகளெல்லாமே ஜாஸ்ப்பர், சால்சிடானி என்ற

மணிக் கற்களாலானவை. பாறை ஓவியங்களில் காட்டுக்கழுதை, காட்டெருமை, குதிரை, காண்டாமிருகம், மான், நாய் ஆகியவற்றின் உருவங்கள் இருக்கின்றன. மனித உருவங்களில் ஆண் மக்கள் சிலர் தோலாலாகிய துண்டை உடுத்திருக்கிறார்கள். பழைய முறையிலான ஆடைகளும் அங்கே கிடைத்த நுண் கற்கருவிகளும், அந்தப் பாறை ஓவியங்கள் நுண் கற்கருவிக் காலத்தில் தீட்டப்பட்டிருக்க வேண்டுமென்பதைக் காட்டுகின்றன என்று எஸ். ஆர். ராவ் கருதுகிறார். மத்திய பிரதேசத்திலுள்ள சிங்கன்பூர், காபராபஹார் ஆகிய இடங்களிலுள்ள பாறை ஓவியங்கள் மகாதேவ மலையிலுள்ள முன்னைய ஓவியங்களோடு தொடர்புடையவை. ஓவியங்களும் அவற்றின் அண்மையிலுள்ள நுண்கற்கருவிகளும் சமகாலத்தவை போலத் தோன்றுகின்றன. சான் பள்ளத்தாக்கிலுள்ள ஒதுக்கிடங்கள், ஓவியங்கள், நுண் கற்கருவிகள் ஆகியவற்றுக்கும் மேலே கண்ட கூற்றுப் பொருந்தும்.

தி. நரசிப்பூரிலும் (மைசூர்) பிக்லிஹலிலும் (ஆந்திரா) கற்காலப் பண்பாட்டின் இடையில் ஒரு செப்பு-கற்காலப் பண்பாடு நுழைந்திருக்க வேண்டுமென்பதை அங்குக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள கறுப்பு மட்பாண்டங்களும் வெண் புள்ளி தீட்டப்பட்ட சிவப்பு மட்பாண்டங்களும் காட்டுகின்றன. இத்தகைய மட்பாண்டங்கள் குஜராத் மாநிலத்திலுள்ள லோத்தால், ரங்பூர் ஆகிய இடங்களிலும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் மேம்பாடு இழந்த ஹரப்பா மட்பாண்டங்களின் இயல்புகளைக் காண்கிறோம். அந்த மட்பாண்டத் தொழில் நர்மதை, தபதி, கோதாவரிப் பள்ளத்தாக்குகளில் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும். தெற்கிலிருந்த புதுக் கற்காலக் குடியிருப்புகளில் செப்புக் கலங்களும் வண்ணம் பூசிய மட்பாண்டங்களும் புகுந்த பின்னரும் கற்கோடரியும் தேய்த்துப் பளபளப்பாக்கிய மட்பாண்டங்களும் வழக்கில் இருந்தன.

முடிவாக, தென்னிந்தியாவில் கிடைத்துள்ள பெருங்கற் சின்னங்கள் இன்னும் சரியான விடை கிடைக்காத பல பிரச்சினைகளைக் கிளப்பி விட்டிருக்கின்றன. நூறுண்டுகளுக்கு முன்பே அவையிருப்பது தெரியவந்தது. இந்த நூற்றுண்டின் தொடக்க ஆண்டுகளில் ஆதிச்சநல்லூர் (திருநெல்வேலி), பெரும்பேர், நீலகிரி ஆகிய இடங்களில் ஓரளவு ஆராய்ச்சியும் நடைபெற்றது. ஆனால், அந்த வேலை தொடர்ந்து நடக்கவில்லை. 1945-க்குப் பின்புதான் இந்தியத் தொல்பொருளாராய்ச்சித் துறையினர் இந்தப் பழங்காலச் சின்னங்களைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றின்

தன்மைகளை ஆராய்வதிலும் முறையான வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலும் அதற்கு அருகிலுள்ள இடங்களிலும், புதுக்கோட்டை, கொச்சி ஆகிய இடங்களிலும் நிலமேற்பரப்பைக் கவனமாக ஆராய்ந்து பார்த்ததன் பயனாகச் சில பெருங்கல் சின்னங்கள் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவைகளெல்லாம் ஒரே வகையான பெருங்கல் மரபைப் பின்பற்றியவை என்பது தோன்றுகிறது. பிணங்களை வெட்ட வெளியில் இட்டு, அவற்றிலுள்ள சதை முதலிய பொருள் களெல்லாம் நீங்கிய பின்னர், எலும்புகளில் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து, அவற்றைத் தாழிகளிலோ காலுடைய சுடுமண் பேழைகளிலோ போட்டுப் புதைத்து விடுவது வழக்கமாய் இருந்தது. இல்லாவிட்டால் கற்குழிகளிலோ சின்னஞ்சிறு பந்தல் போன்ற கற்கிடைக் கல்லறைகளிலோ எலும்புகளை வைத்துப் புதைப்பதும் உண்டு. மேலைக் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் எலும்புகளைப் புதைப்பதற்கு வட்ட வடிவமான குடைவரைக் கல்லறைகளைப் பயன்படுத்தினார்கள். இக் குடைவரைக் கல்லறையின் மையத்தில் ஒரு தூண் இருப்பதும் உண்டு. சில குடைவரைக் கல்லறைகளில் இத்தகைய தூண்கள் காணப்பட வில்லை. இவ்வாறெல்லாம் எலும்புகளைப் புதைப்பது அந்தக் காலத்துப் பொது வழக்கமாக இருந்தது. இவ் வேறுபாடுகள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறாமல், இந்தப் பழங்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் இரும்புக் கருவிகளும் பளபளப்பான கறுப்பு சிவப்பு மட் பாண்டங்களும் பொதுவாகக் காணப்படுகின்றன என்று மட்டும் குறிப்பிடுகிறேன். 'இத்தகைய பெருங்கற் சின்னங்கள் எல்லாம் பயிர்த் தொழிலுக்குப் பயன்படாத மேட்டுப்பாங்கான பாறை நிலத்திலேயே இருந்தாலும், அவற்றுக்கு மிக அண்மையிலேயே ஒரு குன்றும் பாசன ஏரியும் விளைநிலமும் இருக்கும்' என்று சீநிவாசனும் பானர்ஜியும் கூறுகிறார்கள். நீர்ப்பாசனத்தின் உதவியால் நெல்லைப் பயிர் செய்யும் வழக்கத்தின் தொடக்கத்தை இது காட்டுகிறது என்று கருதலாம்.

மைசூரிலுள்ள பிரமகிரி, ராயச்சூர் மாவட்டத்திலுள்ள மாஸ்கி, கேரளத்திலுள்ள பொற்களம், செங்கற்பட்டு மாவட்டத் திலுள்ள சானூர், அமிர்த மங்கலம், குன்றத்தூர் ஆகிய இடங் களிற் கிடைத்துள்ள சான்றுகளை ஆராய்ந்து பார்த்ததன் விளைவாகச் சுமார் கி.மு. 300-க்கும் கி.பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் இரும்புக் கருவிகளைப் பயன் படுத்திய ஒரு மக்கட் கூட்டத்தினர் இந்த வாழ்க்கை முறையை அந்தப் பகுதிகளில் புகுத்தியிருக்கக் கூடும் என்று

சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இத்தகைய பண்பாடுடைய மக்கள் கி.மு. 800-க்கு முன் பிரமகிரியில் குடியேறியிருக்க முடியாது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், அவர்கள் நிர்ணயிக்கிற காலத்துக்கு முன்னரே தென்னிந்தியாவில் பெருங்கல் பண்பாடு தொடங்கியிருக்க வேண்டும். கி.மு. 700-க்கும் கி.மு. 400-க்கும் இடையில் இந்தப் பண்பாடு தொடங்கியிருக்க வேண்டும் என்று கார்டன் கருதுகிறார். அதற்கும் முன்னரே அது தொடங்கிருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

தென்னிந்தியப் பெருங்கற்கள் உலகின் ஏனைய நாடுகளிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பெருங்கற் சின்னங்களைப் பல வகையிலும் ஒத்திருக்கின்றன. அவற்றிற்கு இடையில் நெருங்கிய உறவு இருக்கக் கூடும் என்று நினைக்கும் அளவிற்கு அந்த ஒற்றுமை இருக்கிறது. இத்தகைய பெருங்கற் சின்னங்கள் மத்திய தரைக் கடல் நாடுகளிலும், அட்லாண்டிக் பெருங்கடலை ஒட்டிய நாடுகளிலும்,காக்கேசிய மலைப்பகுதியிலும், ஈரானிலும் கிடைத்திருக்கின்றன. ஐரோப்பியத் தொல் பொருட் சின்னங்களுக்கு அருகில் கிடைத்துள்ள கற்காலக் கருவிகளை ஆராய்ந்து பார்த்தவர்கள், அந்தச் சின்னங்கள் ஏறத்தாழக் கி.மு.2000-த்தைச்சேர்ந்தவை என்றும் காக்கேசிய மலைப்பகுதியிற் கிடைத்துள்ள சின்னங்கள் ஏறக்குறையக் கி.மு. 1500-ஐச் சேர்ந்தவை என்றும் கருதுகிறார்கள். இந்தியாவிற்கும் ஈரானுக்கும் இடையில் உள்ள நீண்ட நிலப்பகுதியில் பெருங்கற் சின்னங்கள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலை நாட்டுச் சின்னங்கள் கடற்கரையோரத்தில் இருக்கின்றன. ஆனால், ஏனைய இடங்களில், முக்கியமாக இந்தியாவில், அவை கடற்கரையிலிருந்து மிகவும் தொலைவிலுள்ள உள்நாட்டுப் பகுதிகளிலும் இருக்கின்றன. மேலும், அங்குப் பொதுவாக, இரும்புக் கருவிகளும் கிடைத்திருக்கின்றன. காலத்தாலும், இடத்தாலும் ஒன்றுக்கொன்று மிகத் தள்ளியிருந்தாலும், ஈரானிலுள்ள "சியால்க் B" புதை குழிகளின்மூலம், காக்கேசியாவிலும் பாலஸ்தீனத்திலும் உள்ள பெருங்கல் சின்னங்களோடு இந்தியாவிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்கிடைக் கல்லறைகளை இணைக்க முடியும் என்று கார்டன் சைல்டு கருதுகிறார். இந்தியாவில் உள்ள இந்தப் பெருங்கற் சின்னங்களில் பக்கப் புழைகள் இருப்பது இந்தக் கருத்துக்கு ஆதரவாய் இருப்பதாகக் கார்டன் கருதுகிறார். ஆனால், அவை இந்தியத் தீபகற்பத்தின் தெற்குப் பகுதியில் மிகுதியாய் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கும் ஈரானுக்கும் தரை வழியாகத் தொடர்பு ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால், கடல்

வழியாகத் தொடர்பு ஏற்படுவதற்கு அந்தக் காலத்தில் நல்ல வாய்ப்பிருந்தது. ஆதலால், மேற்கு நாடுகளின் மரபைத் தென்னிந்தியப் பெருங்கல் மரபு பின்பற்றியிருந்தால், அதற்குக் காரணமாயிருந்த தொடர்பு கடல் வழியாகத்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது கார்டன் கருத்தாகும்.

இறந்தவர்களை எரிக்கும் பழக்கமுடையவர்களும் பெருங்கல் மரபை விரும்பினர்கள் என்பதற்குக் கத்தியவாரிலுள்ள அம்ரேலி சான்று பகர்கிறது. 1953ஆம் ஆண்டில் அம்ரேலிப் பகுதியை அகழ்ந்தாராய்ந்த எஸ். ஆர். ராவ் சுட்ட எலும்புகளைப் புதைத்த குழிகள் பலவற்றைக் கண்டார். அந்தக் குழிகளைச் சுற்றியும் செப்பஞ்செய்யாத கற்களின் குவியல்கள் இருந்தன. அவை தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வட்ட இடு குழிகளை ஒத்திருக்கின்றன. இறந்தவர்களின் எலும்புகளைப் பாதுகாத்து வைப்பதற்குப் பெருங்கல் சின்னத்தை ஏற்றவாறு மாற்றிப் பயன்படுத்தும் வழக்கத்தை இங்கு முதல் முறையாகக் காண்கிறோம். இந்தக் குழிகள் கி.பி. இரண்டாம் மூன்ரும் நூற்ருண்டுகளைச் சேர்ந்தவை. இரும்பின் பயனை அறிந்தவர்களும் பெருங்கற் சின்னங்களைத் தோற்றுவித்தவர்களும் ஆகிய இந்திய-ஈரானிய எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களிடமிருந்து அம்ரேலி மக்கள் இந்த முறையைத் தெரிந்து கொண்டார்களா அல்லது தென்னிந்திய மக்களிடமிருந்து தெரிந்து கொண்டார்களா என்று இப்போது சொல்வது கடினம். அம்ரேலிக் கற்கிடைகளில் பளபளப்பான சிவப்பு மட்பாண்டங்களும், இரும்புக்கத்திகளும், அம்பு முனைகளும். சங்கு வளையல்களும், வெந்து கருகிய மனித எலும்புகளும் கிடைத்தன.

பிணத்தைத் தாழியில் வைத்துப் புதைக்கும் வழக்கத்தை நாம் ஆதிச்சநல்லூரிற் காண்கிறோம். அங்கு ஏனைய இடங்களில் காணும் கல்வட்டங்களோ பிற பெருங்கற் சின்னங்களோ இல்லை. அதனல், அவற்றைப் பெருங்கல் சின்னங்களோடு தொடர்புபடுத்த முடியாது. எனினும், அங்கும் இரும்புக்கருவிகளும், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களும் கிடைத்திருக்கின்றன. மேலும், எலும்புக் கூட்டின் ஒரு பகுதியை மட்டும் புதைக்கும் வழக்கத்தையும் நாம் அங்குக் காண்கிறோம். எனவே, ஆதிச்சநல்லூரில் காணும் ஈமத்தாழிகள் ஏதோ ஒரு வகையில் ஏனைய பெருங்கற் சின்னங்களோடு தொடர்புடையவை என்று தோன்றுகிறது. அவ்விரண்டிற்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் இல்லாமல் இல்லை.

ஆதிச்சநல்லூர் மட்பாண்டங்கள் ஏனைய பகுதிகளிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டங்களைவிடப் பழைய முறையில் இருப்பவை. அதாவது, அவை முதிராப் பண்புடையவை. மேலும், ஆதிச்ச நல்லூரில் வெண்கலச் சாமான்களும், தங்க. மகுடமும், வாய்ப்பூட்டு அலகும் கிடைத்திருக்கின்றன. அவை தென்னிந்தியாவின் வேறு பகுதிகளிற் கிடைக்காதவை. ஆனால் அவை போன்ற பொருள்கள் பாலஸ்தீனம், சிரியா, சைப்பிரஸ் ஆகிய இடங்களில் கிடைத்திருக்கின்றன.

அவை ஏறக்குறைய கி.மு. 1200ஐச் சேர்ந்தவை. அந்தக் காலத்தில்தான் சாலமன் பாலஸ்தீனத்தில் ஆட்சி புரிந்தான். அதனை முன்னைய இரும்புக் காலம் என்பர். அந்தக் காலத்தைச் சேர்ந்த கல்லறைகளுள் ஒன்றில் இரும்புத் திரிசூலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், இதைப் போன்ற பல திரிசூலங்கள் ஆதிச்ச நல்லூரில் கிடைத்திருக்கின்றன. பெருங்கல் மரபு யாதேனும் ஓரிடத்தில் முதலில் தோன்றிப் பின்னர் வேறிடங்களுக்கும் பரவியது என்பது உண்மையானல், அது கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதிகளில்தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும் என்பது கார்டன் சைல்டின் கருத்து. ஆனல், பக்கப் புழையுடைய கற்கிடைக்கல்லறை மரபும் ஈமத்தாழி மரபும் எப்போது தென்னிந்தியாவிற்கு வந்தன என்பதும் அவற்றுள் எது முதலிலும் எது பின்னரும் வந்தது என்பதும் நமக்கு உறுதியாகத் தெரியாத செய்திகள். ஆனல், புதுக் கற்காலப் பண்பாட்டிலிருந்து இரும்பு உபயோகப் பண்பாடு தோன்றவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

தமிழ் மக்கள் வாழ்க்கையில் மிகப் பழங்காலத்திலிருந்தே பரவலாக விரவியிருந்த முருகன் அல்லது வேலன் வழிபாடு அந்தக் காலத்திலேயே நடைமுறையிலிருந்ததை ஆதிச்ச நல்லூர் அகழ்வுகள் காட்டுகின்றன. வேற்படையே முருகப் பெருமானுக்கு மிகவும் உகந்த போர்க்கருவி. அப் பெருமானுடைய கொடியிலுள்ள சின்னம் காட்டுக் கோழி. இரும்புத் திரிசூலங் களைத் தவிர இரும்புக் கொடிக் கம்பங்களும் வெண்கலத்தால் செய்யப்பட்ட காட்டுக்கோழிப் படிமங்களும் ஆதிச்சநல்லூரில் கிடைத்திருக்கின்றன. பழனி ஆண்டவனுக்குக் காவடி எடுக்கும் பக்தர்கள், வாய்ப்பூட்டலகை மாட்டிக்கொள்வதை நாம் இன்றும் காண்கிறோம். அந்தப் பழக்கம், வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தமிழ் மக்களிடமிருந்து வழிவழியாக வந்த பழக்கமாகும்.

ஆதிச்சநல்லூரில் வாழ்ந்த மக்கள் நெல்லைப் பயிர் செய்தார்கள். அங்கே கண்டு எடுக்கப்பட்ட சட்டிகளில் நெல்லுமியும் வெண்கலப் பாத்திரங்களில் அரிசியும் இருந்தன.

நீலகிரியிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்குவியற் கல்லறைகளும் புதைமேட்டுச் சவக்கிடைகளும் அமைப்புமுறையில் சமவெளியிற்கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெருங்கற் சின்னங்களினின்று வேறுபட்டவை. அங்கே கிடைத்திருக்கும் மட்பாண்டங்களும் வேறுவகையாய் இருக்கின்றன. அங்கே கிடைத்த வெண்கலக் கிண்ணிகளும் குடுவைகளும் 'ஊர்' என்னும் இடத்தில் உல்லி என்பவர் கண்டுபிடித்த தங்கக் கிண்ணத்தோடு தொடர்புடையன என்று ரிச்சர்ட்ஸ் கருதுகிறார். இதைப் போன்ற வேறு பல ஒற்றுமைகளையும் முன்னர் அகழ்வுப் பணியில் ஈடுபட்ட தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால். அவர்களுடைய கருத்துகளை மீண்டும் சரிபார்க்க வேண்டும். அந்த ஆராய்ச்சி மேலுந் தொடரவேண்டும். அதுவரையில் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்துள்ள தடையங்களையும் தெளிவற்ற செய்திகளையும் நம்பி இறுதியான முடிவு எதையுஞ் செய்துவிடக்கூடாது.

இப்போது தென்னிந்திய மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கவனிப்போம். செங்கற்பட்டுக்கருகிலுள்ள அத்திரம்பாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முன்கால் எலும்பைத் தவிரத் தென்னிந்தியாவின் பழங் கற்காலத்தைச் சேர்ந்த மனித எலும்புக்கூடு எதுவும் இதுவரைக்கும் கிடைக்கவில்லை. எனவே, அந்தக் காலத்து மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கண்டுபிடிப்பதற்குச் சான்று எதுவும் இல்லை. பரோடாவில் உள்ள வத்நகர் என்னும் இடத்தில் 1935-ல் ஒரு மிகு குட்டை மனிதனுடைய (பிக்மியினுடைய) எலும்புக் கூட்டின் புதைபடிவம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த மனிதனுடைய உயரம் 30 அங்குலம். இந்தியாவில் நிக்ரிட்டோ இனத்தினர் இருந்தனர் என்பதைக் காட்டுகின்ற முதல் அறிகுறியாக நாம் அந்த எலும்பைக் கூட்டைக் கருதலாம். நிக்ரிட்டோக்கள் நீக்ரோக்களினும் மிகுகுட்டை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களும் நீக்ரோக்களைப்போல ஆப்பிரிக்காவில் தோன்றியவர்களே. அவர்கள் இந்தியா வழியாகக் கீழை நாடுகளுக்குப் போனார்கள். அவர்களுடைய சந்ததியார்களுள் சிலரை நாம் இன்று அந்தமான் தீவில் காண்கிறோம். அவர்கள் கற்காலத்திற்கும் முந்தியதொரு நிலையிலேயே இருக்கிறார்கள், பழங்கற்காலத்தில் தீபகற்ப இந்தியாவின் பல பகுதிகளில்

அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள் என்று நினைப்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பரம்பிக்குளத்தில் இருக்கின்ற காடர்களும் அதற்கு அருகில் இருக்கும் ஆனைமலையில் உள்ள புலையர்களும் ஏறக்குறைய உருண்டை வடிவான மண்டையையும் செம்மறியாட்டு ரோமம் போன்ற தலை மயிரையும் உடைய குறளர்களாக இருக்கிறார்கள். நிக்ரிட்டோ இனத்தினர் தென்னிந்தியாவில் இருந்தார்கள் என்பதற்கு இவர்களைச் சான்றாகக் கொள்ளலாம். மலேயாவில் வாழ்கின்ற நிக்ரிட்டோ இனத்தைச் சேர்ந்த செமாங்கு என்னும் மக்கள் பயன்படுத்துகிற மூங்கிற் சீப்புகளில் காணப்படும் உருவங்கள், காடர் இனப் பெண்கள் பயன்படுத்துகிற சீப்புகளிலுள்ள உருவங்களைப் போலவே இருக்கின்றன. ஆதலால், காடர்களும் செம்மாங்குகளும் ஆதியில் ஒரே வகை வாழ்க்கை முறையைப் பின்பற்றியவர்கள் என்றும், ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், பின்னர் இந்தியாவுக்கு வந்த நீள் மண்டையினத்தவர் கலப்பினால் காடர்களுடைய உடலமைப்பில் மாறுதல்கள் நிகழ்ந்தன என்றும் நாம் கருதலாம்.

பிரமகிரிப் பகுதியில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான மக்கள் இந்தியாவிலேயே தோன்றிய ஆஸ்திரேலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சிலர் சித்தியா - ஈரானிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெருங்கற் சின்னங்கள் காட்டுகின்றன. பின்னைய இனத்தவர்கள் நடுத்தர உயரமும், நீளமும் சப்பையும் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட மண்டையையும், அதிக மேடாகவும் அதிக தட்டையாகவும் இல்லாத நெற்றி மேட்டையும், சப்பை மூக்கையும், பலமான மேல் - கீழ்த்தாடைகளையும், வலிமை பொருந்திய உடலையும் உடையவர்கள். கற்கோடரிக் காலத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையின் மண்டையோடு அங்குக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழந்தை இந்தியாவிலேயே தோன்றிய ஆஸ்திரேலிய இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று அந்த மண்டையோடு காட்டுகிறது.

லோத்தால் என்னும் இடத்தில் ஆஸ்திரேலியா இனத்தவரும் ஆர்மீனிய இனத்தவரும் கலந்த ஒரு மக்கள் தொகுதி வாழ்ந்தது. அதனால், கத்தியவாரில் சிந்துவெளி நாகரிகத்தைப் புகுத்தியவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று உறுதியாகச் சொல்ல இயலாது.

அடுத்து, ஆஸ்திரேலிய இனத்தின் ஆதி முன்னோர் வகையைச் சேர்ந்த மக்களைப் பற்றிக் கூறுவோம். அவர்கள்

நீண்ட மண்டையும், துருத்திக் கொண்டிருக்கும் முகமும் அகன்ற சப்பையான மூக்கும், உயர்ந்த புருவ மேடுகளும் உடையவர்கள். இத்தகைய மக்கள் இந்தியாவில் வாழ்ந் தார்கள் என்பதற்குப் பழைய சான்று கிடைக்கவில்லை. இந்த இடத்தில் கூறத் தேவையில்லாத அளவுக்குச் சிக்கலான சான்று அண்டை நாடுகளிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்த மக்கள் இந்தியாவில் இருந்தார்கள் என்பதற்கு அந்தச் சான்று வலிவுள்ள ஆதாரமாய் இருக்கிறது. நாட்டியப் பெண்ணொருத்தி யின் வெண்கலச் சிலை மொஹஞ்சோதாராவில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. அந்தப் பெண்ணின் தோற்றத்தில் தெரிகின்ற ஆஸ்திரேலிய இனத்தின் ஆதி முன்னோர் உடற்கூறுகளை நாம் காணுமலிருக்க முடியாது. அவளுடைய முடியழகு முறை மத்திய இந்தியக் காடுகளிலும் தக்காணக் காடுகளிலும் வாழ் கின்ற பெண்களின் தலையலங்காரத்தை நினைவூட்டுவதாய் இருக் கிறது. இந்தப் பெண்கள், ஆஸ்திரேலிய இனத்தின் ஆதி முன்னோர் வகையைச் சேர்ந்தவர்கள். தென்னிந்தியாவில் வெளிச் சாதியினர் என்று வழங்குகிற காடுவாழ் பழங்குடி மக்க ளாகிய செஞ்சு, மலையர், காடர், குறும்பர், எருவர் என்னும் வகுப்புகளைச் சேர்ந்தவர்களுடைய உடலமைப்பில் ஆஸ்தி ரேலிய இனத்தின் ஆதி முன்னோர்களுடைய உடற்கூறுகள் இருக்கின்றன.

மூன்றாவதாக, மத்திதரைக்கடல் இனத்தின் ஆதி முன்னோர் வகையைச் சேர்ந்த மக்களைப்பற்றிக் கூறுவோம். அவர்கள் நீண்ட அகலமற்ற மண்டையையும் முகத்தையும் உடையவர்கள். அவர்களுடைய மூக்கு நீளமானதும் அன்று; குட்டையானதும் அன்று. அது நேராகவோ கழுகின் அலகைப்போல வளைந்தோ இருக்கும். அவர்களுடைய தலைமயிர் கரும் பழுப்புநிற முடையது. இன்று, தென்னிந்தியாவில் திராவிட மொழிகளைப் பேசும் மக் களுள் மிகப் பெரும்பாலோர் அந்த வகையைச் சேர்ந்தவர்கள்.

இடைக் கற்காலமும் புதுக் கற்காலமும் இடைமுறிவின்றித் தொடர்ந்து நடந்தவை என்று தெரிவதால், புதுக்கற்கால மக்கள் மத்தியதரைக் கடற்பகுதி மக்களின் ஆதி முன்னோர் வகையைச் சேர்ந்தவர்கள் என்று முடிவு செய்வது தவறாகாது. ஆதிச்ச நல்லூரிலும், தக்காண இரும்புக் காலக் கற்கிடைகளிலும் கிடைத்துள்ள சின்னங்கள் அந்த வகை மக்கள் அங்கு வாழ்ந் தார்கள் என்பதைக் காட்டுகின்றன.

நான்காவதாக, மத்தியதரைக்கடல் இன மக்களைப்பற்றிக் கூறுவோம். சிந்துவெளி மக்களில் மிகப் பெரும்பாலோர்

அந்த இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் நடுத்தர உயரமும், பருமனில்லாத உடற்கட்டும், நீண்ட மண்டையும், சிறிய புருவ மேடும், முட்டை வடிவமான முகமும், கூர்மையான முகவாய்க் கட்டையும் உடையவர்கள். இத்தகைய உடற்கூறுகளை இன்று நாம் பெரும்பாலும் கள்ளர் இனத்திலும் தெலுங்குப் பார்ப்பனரிலும் காண்கிறோம். இந்த இனக் கூறுகள் இந்தியாவிலேயே இருந்த மத்தியதரைக்கடல் இன மக்களின் ஆதி முன்னோர்களிடமிருந்து வரவில்லை என்பதும், அவை வெளியிலிருந்து வந்த ஒரு மக்கட் கூட்டத்தின் இனக் கூறுகள் என்பதும் உண்மையாயிருந்தால், அத்தகைய மக்கள் புதுக்கற்காலத்தின் பிற்பகுதியில் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

தென்னிந்தியாவின் சில பகுதிகளில் நீண்ட மண்டையையுடைய மத்தியதரைக்கடல் 'இனத்தின் ஆதிமுன்னோர்கள், மத்தியதரைக்கடல் இன மக்கள் ஆகியவர்களுடைய அடிப்படை உடற்கூறுகளோடு பின்னர் வந்த குறுகிய மண்டையினத்தினரின் உடற்கூறுகள் கலந்திருக்கின்றன. இந்தக் கலப்பு இனத்தினர் பெரும்பாலும் மராட்டிய நாட்டில் இருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் மைசூர் வழியாகத் தமிழகத்திற்கும் வந்தார்கள். ஆந்திர தேசத்தில் அந்தக் கலப்பு இன இயல்புகளை மிகமிகச் சிறிய அளவில் காண்கிறோம். கேரளத்தில் அவ்வியல்புகளைக் காண இயலவில்லை. இந்தக் குறுகிய தலையின மக்களுள் ஆல்பைன் பிரிவினர் என்றும் ஆர்மீனியப் பிரிவினர் என்றும் இரு பிரிவினர் இருக்கின்றனர். ஆர்மீனிய வகை என்பது ஆல்பைன் வகையைச் சேர்ந்த ஒரு சிறப்புப் பிரிவு. ஆல்பைன் வகையினர் உட்குழிந்த அல்லது நேரான மூக்கையும், சதுரமான தாடையையும், உருண்டை மண்டையையும் உடையவர்கள். அவர்கள் சிந்துவெளியில் செம்பு - கற்காலத்தில் வாழ்ந்தவர்கள். இப்போது குஜராத், மராட்டியம், குடகு, கர்நாடகம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களிடத்தில் ஆல்பைன் மக்களின் உடற்கூறுகளைக் காணலாம்.

ஆர்மீனிய வகையினர் குறுகிய மண்டையையும், குறிப்பிடத்தக்க முறையில் புறங்குவிந்த மூக்குத்தண்டையும், பிடரியிலிருந்து செங்குத்தாக எழுகின்ற உயர்ந்த தலையையும் உடையவர்கள். இந்த வகை மக்கள் தென்மேற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிகிறது. பாமீர் பீடபூமி, இமயத்தின் மேற்குப் பக்கம் ஆகிய இடங்களிலிருந்து அனட்டோலியா மலைவரையிற் பரவியுள்ள மலைப்பாங்கான நிலப்பகுதியில்

வாழ்கின்ற மக்களிடத்தில் ஆர்மீனிய மக்களின் உடற்கூறுகள் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவில் முக்கியமாகத் தமிழ்மொழி பேசுகின்ற மக்களிடத்தில்தான் ஆர்மீனிய இன உடற்கூறுகள் காணப் படுகின்றன. ஆனால், ஆர்மீனிய மக்கள் தென்னிந்தியாவில் தோன்றியிருக்க முடியாது. அவர்கள் இப்போது வாழ்கின்ற இடமாகிய பாமீர் முதல் லெவாண்டு வரையிற் பரவியுள்ள ஆசியப் பகுதியிலிருந்துதான் வந்திருக்கவேண்டும். ஈரான் (பாரசீகம்) அல்லது பாரசீக வளைகுடாவின் கரையோரமாக இருக்கும் அதன் அண்டை நாட்டிலிருந்து வாணிகத்திற்காக நெடுங்காலத்திற்கு முன் இந்தியாவுக்கு வந்த ஆர்மீனிய இன மக்கள், இந்தியாவில் அதற்கு முன்னரேயிருந்த மக்களோடு கலந்ததால், தமிழ்மொழி பேசும் தென்னிந்திய மக்களிடத்தில் இப்போது நாம் ஆர்மீனிய இன உடற்கூறுகளைக் காண்கிறோம் என்று கீத் என்பவர் கூறுகிறார். தமிழ் மக்களிடையே காணப் படும் உருண்டை மண்டை இயல்பின் சுவடுகளைத் தக்காணத்தின் வழியாகக் குஜராத்துக்கும், குஜராத்தின் வழியாகச் சிந்து நாட்டுக்கும், சிந்து நாட்டின் வழியாக ஈரானியப் பீடபூமிக்கும் பின்பற்றிச் செல்லலாம். கடைசியாகச் சொன்ன இடத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உருண்டை மண்டையினர் இருக்கின்றனர். அத்தகையோர் ஈரான் சமவெளியில் இருப் பதைவிட அந் நாட்டின் பீடபூமிப் பகுதியில் அதிகமாக இருக் கின்றனர். ஈரான் பீடபூமியில் வாழ்கிற உருண்டை மண்டை யினத்தினருக்கும் திராவிட மொழிகளைப் பேசுகின்ற இந்திய மக்களுக்கும் தொடர்பு இருந்ததாக அறிஞர் சிலர் கருது கின்றனர். ஈரான் பீடபூமியில் வாழ்ந்த மிகப் பழங்குடி மக்களான காஸ்பியர்களுடைய பண்பாட்டுக்கும் திராவிடமொழி களைப் பேசும் மக்களுடைய பண்பாட்டுக்கும் உள்ள ஒற்றுமைகள், அந்தத் தொடர்புக்குச் சான்று பகர்வதாக அந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

கேரளாவில் உருண்டை மண்டையினவியல்புடைய மக்கள் இல்லை என்பதும், ஆந்திராவில் அத்தகைய மக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாயிருக்கிறது என்பதும், ஆல்பைன் - ஆர்மீனிய இனவியல்புடைய மக்கள் சிந்து, குஜராத், மராட்டியம், தென்கிழக்கு மைசூர் வழியாகத் தமிழகத்திற்கு வந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இந்தியாவின் மக்கள் தொகையில் உருண்டை மண்டையின இயல்புடைய மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு; நீண்ட மண்டையின

இயல்புடைய மக்கள் மிகப் பெருந்தொகையினரா யிருக்கிருர்கள். எண்ணிக்கையின் அடிப்படையில் காலத்தை நிர்ணயஞ் செய்வது தவருகாது என்ருல், மத்தியதரைக்கடல் இன மக்களுடைய ஆதி முன்னோர்கள் மத்தியதரைக்கடல் இன மக்கள் ஆகியவர்கள் முதலில் இந்தியாவுக்கு வந்தார்கள் என்றும், அதன் பின்னர் ஆல்பைன் ஆர்மீனிய மக்கள் இந்தியாவுக்கு வந்தார்கள் என்றும் முடிவு செய்வது தவருகாது. ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற இன அடுக்கியற் படிகளும் இந்த முடிவை ஆதரிக்கின்றன.

கடைசியாக, வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலோ அதற்கும் முற்பட்ட ஆதி காலத்திலோ தென்னிந்தியாவுக்கு வந்த வேருெரு நீள் மண்டையினத்தினரான நார்டிக் இன மக்களைப் பற்றிப் பார்ப்போம். மத்தியதரைக்கடல் இனமும் நார்டிக் இனமும் ஒரே பழைய இனத்திலிருந்து தோன்றியவை. ஆதலால், அந்த இரண்டு இன மக்களுக்கும் மண்டையின் இயல்புகள் ஒத்திருக்கின்றன. ஆனுல், மத்தியதரைக்கடல் இனத்தவர் மண்டை சிறியது. நார்டிக் இனத்தவர் மண்டையோ மிகப் பெரியது. தமிழ் நாட்டில் வாழ்கின்ற கொங்கணஸ்தப் பார்ப்பன மக்களிடத்தில் இந்த நார்டிக் இயல்புகளை மிகுதியாகக் காண்கிருேம். தமிழ்மொழி பேசும் பார்ப்பனர்களுக்குள்ளும் இந்த இயல்புகள் சிறிதும் இல்லை என்றும் சொல்லிவிட முடியாது.

ஆல்பைன்—ஆர்மீனிய உருண்டை மண்டையிலிருந்து வேருனதும் மங்கோலிய உருண்டைத் தன்மையை ஒத்ததும் ஆகிய உருண்டை மண்டையையுடைய மக்களும் தென்னிந்தியாவில் இருக்கிருர்கள் என்பதைக் கூறவேண்டும். ஆனுல், அவர்களுடைய தொகை மிகமிகச் சிறியது. அவர்களைக் கிழக்கில் ஒரிசாவிலும் மேற்கில் மலையாள நாட்டிலும் காண்கிருேம். இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கடல் வழியாக நிகழ்ந்த இடப்பெயர்வு ஒன்றின் விளைவாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிருர்கள்.

மொழிக் கூறுபாடுகளும் பல பண்பாடுகளின் நெருக்கத்தை முடிவுகட்டுவதற்கு உதவி செய்யும். ஆதலால் தென்னகத்தில் வழங்கும் மொழிக்கூறுகளை இங்குக் காண்போம். தென்னிந்திய மொழிகள் மூன்று பெரும் பிரிவுகளுள் அடங்கும். 1. இந்தோ—ஆரியம்: இப்போது வழக்கிலிருக்கும் மராட்டிய மொழி அந்தப் பிரிவைச் சேர்ந்தது; 2. திராவிடம்: இன்று வழக்கிலிருக்கும்

வாழ்கின்ற மக்களிடத்தில் ஆர்மீனிய மக்களின் உடற்கூறுகள் காணப்படுகின்றன.

தென்னிந்தியாவில் முக்கியமாகத் தமிழ்மொழி பேசுகின்ற மக்களிடத்தில்தான் ஆர்மீனிய இன உடற்கூறுகள் காணப் படுகின்றன. ஆனால், ஆர்மீனிய மக்கள் தென்னிந்தியாவில் தோன்றியிருக்க முடியாது. அவர்கள் இப்போது வாழ்கின்ற இடமாகிய பாமீர் முதல் லெவாண்டு வரையிற் பரவியுள்ள ஆசியப் பகுதியிலிருந்துதான் வந்திருக்கவேண்டும். ஈரான் (பாரசீகம்) அல்லது பாரசீக வளைகுடாவின் கரையோரமாக இருக்கும் அதன் அண்டை நாட்டிலிருந்து வாணிகத்திற்காக நெடுங்காலத்திற்கு முன் இந்தியாவுக்கு வந்த ஆர்மீனிய இன மக்கள், இந்தியாவில் அதற்கு முன்னரேயிருந்த மக்களோடு கலந்ததால், தமிழ்மொழி பேசும் தென்னிந்திய மக்களிடத்தில் இப்போது நாம் ஆர்மீனிய இன உடற்கூறுகளைக் காண்கிறோம் என்று கீத் என்பவர் கூறுகிறார். தமிழ் மக்களிடையே காணப் படும் உருண்டை மண்டை இயல்பின் சுவடுகளைத் தக்காணத்தின் வழியாகக் குஜராத்துக்கும், குஜராத்தின் வழியாகச் சிந்து நாட்டுக்கும், சிந்து நாட்டின் வழியாக ஈரானியப் பீடபூமிக்கும் பின்பற்றிச் செல்லலாம். கடைசியாகச் சொன்ன இடத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உருண்டை மண்டையினர் இருக்கின்றனர். அத்தகையோர் ஈரான் சமவெளியில் இருப் பதைவிட அந் நாட்டின் பீடபூமிப் பகுதியில் அதிகமாக இருக் கின்றனர். ஈரான் பீடபூமியில் வாழ்கிற உருண்டை மண்டை யினத்தினருக்கும் திராவிட மொழிகளைப் பேசுகின்ற இந்திய மக்களுக்கும் தொடர்பு இருந்ததாக அறிஞர் சிலர் கருது கின்றனர். ஈரான் பீடபூமியில் வாழ்ந்த மிகப் பழங்குடி மக்களான காஸ்பியர்களுடைய பண்பாட்டுக்கும் திராவிடமொழி களைப் பேசும் மக்களுடைய பண்பாட்டுக்கும் உள்ள ஒற்றுமைகள், அந்தத் தொடர்புக்குச் சான்று பகர்வதாக அந்த அறிஞர்கள் கூறுகிறார்கள்.

கேரளாவில் உருண்டை மண்டையினவியல்புடைய மக்கள் இல்லை என்பதும், ஆந்திராவில் அத்தகைய மக்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாயிருக்கிறது என்பதும், ஆல்பைன் - ஆர்மீனிய இனவியல்புடைய மக்கள் சிந்து, குஜராத், மராட்டியம், தென்கிழக்கு மைசூர் வழியாகத் தமிழகத்திற்கு வந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இந்தியாவின் மக்கள் தொகையில் உருண்டை மண்டையின இயல்புடைய மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு; நீண்ட மண்டையின

இயல்புடைய மக்கள் மிகப் பெருந்தொகையினரா யிருக்கிறார்கள். எண்ணிக்கையின் அடிப்படையில் காலத்தை நிர்ணயஞ் செய்வது தவறாகாது என்றால், மத்தியதரைக்கடல் இன மக்களுடைய ஆதி முன்னோர்கள் மத்தியதரைக்கடல் இன மக்கள் ஆகியவர்கள் முதலில் இந்தியாவுக்கு வந்தார்கள் என்றும், அதன் பின்னர் ஆல்பைன் ஆர்மீனிய மக்கள் இந்தியாவுக்கு வந்தார்கள் என்றும் முடிவு செய்வது தவறாகாது. ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற இன அடுக்கியற் படிகளும் இந்த முடிவை ஆதரிக்கின்றன.

கடைசியாக, வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலோ அதற்கும் முற்பட்ட ஆதி காலத்திலோ தென்னிந்தியாவுக்கு வந்த வேறொரு நீள் மண்டையினத்தினரான நார்டிக் இன மக்களைப் பற்றிப் பார்ப்போம். மத்தியதரைக்கடல் இனமும் நார்டிக் இனமும் ஒரே பழைய இனத்திலிருந்து தோன்றியவை. ஆதலால், அந்த இரண்டு இன மக்களுக்கும் மண்டையின் இயல்புகள் ஒத்திருக்கின்றன. ஆனால், மத்தியதரைக்கடல் இனத்தவர் மண்டை சிறியது. நார்டிக் இனத்தவர் மண்டையோ மிகப் பெரியது. தமிழ் நாட்டில் வாழ்கின்ற கொங்கணஸ்தப் பார்ப்பன மக்களிடத்தில் இந்த நார்டிக் இயல்புகளை மிகுதியாகக் காண்கிறோம். தமிழ்மொழி பேசும் பார்ப்பனர்களுக்குள்ளும் இந்த இயல்புகள் சிறிதும் இல்லை என்றும் சொல்லிவிட முடியாது.

ஆல்பைன்—ஆர்மீனிய உருண்டை மண்டையிலிருந்து வேறானதும் மங்கோலிய உருண்டைத் தன்மையை ஒத்ததும் ஆகிய உருண்டை மண்டையையுடைய மக்களும் தென்னிந்தியாவில் இருக்கிறார்கள் என்பதைக் கூறவேண்டும். ஆனால், அவர்களுடைய தொகை மிகமிகச் சிறியது. அவர்களைக் கிழக்கில் ஒரிசாவிலும் மேற்கில் மலையாள நாட்டிலும் காண்கிறோம். இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கடல் வழியாக நிகழ்ந்த இடப்பெயர்வு ஒன்றின் விளைவாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மொழிக்கூறுபாடுகளும் பல பண்பாடுகளின் நெருக்கத்தை முடிவுகட்டுவதற்கு உதவி செய்யும். ஆதலால் தென்னகத்தில் வழங்கும் மொழிக்கூறுகளை இங்குக் காண்போம். தென்னிந்திய மொழிகள் மூன்று பெரும் பிரிவுகளுள் அடங்கும். 1. இந்தோ–ஆரியம்: இப்போது வழக்கிலிருக்கும் மராட்டிய மொழி அந்தப் பிரிவைச் சேர்ந்தது; 2. திராவிடம்: இன்று வழக்கிலிருக்கும்

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திருந்திய மொழிகளைத் தவிர, கோண்டு மொழியும் வேறு சில கிளை மொழிகளும் இந்தப் பிரிவில் அடங்கும்; 3. ஆஸ்திரேலிய - ஆசியம்: தக்காணத்தின் வடகிழக்குப் பகுதிகளில் வழங்கும் [1]முண்டா மொழிகளான கரியா, ஜுவாங், சவரா, கடபா ஆகியவையும், மத்தியப் பிரதேசத்தின் வடமேற்கு மாவட்டங்களில் வழங்கும். குர்க்கு என்னும் மொழியும் இந்தப் பிரிவில் அடங்கும். இந்தோ - ஆரியத்தில் முண்டா மொழிச் சுவடுகளின் செல்வாக்குக் காணப்படினும் திராவிடத்திலிருந்து இந்தோ - ஆரியம் கடன் வாங்கியுள்ள சொற்களே மிக அதிகமாக இருக்கின்றன. அதனால், ஆஸ்திரேலிய - ஆசிய மொழிகள் அல்லது முண்டா மொழிகள் திராவிட மொழிகளுக்கு முன்னரே தென்னிந்தியாவில் வழக்கிலிருந்தன என்பது தவிர்க்க இயலாத முடிபாக இருக்கிறது. எனவே, அம் முண்டா மொழிகள் திராவிடத்திற்கு முற்பட்டவை என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.

இமயமலையின் அடிவாரத்தில் பஞ்சாப் முதல் வங்காளம் வரையிலுள்ள பகுதிகளில் இன்று வழங்குகின்ற கலப்பு மொழிகள் பலவற்றிற்கு முண்டா மொழிதான் அடிப்படையாக இருக்கிறது. அதனால், ஒரு காலத்தில் முண்டா மொழிகள் வட இந்தியா முழுவதிலும் வழக்கிலிருந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், இன்னும் அழியாமலிருக்கும் திராவிட மொழிச் சின்னங்களை வடமேற்கு இந்தியாவில் நாம் காண்கிறோம். பலூச்சிஸ்தானத்திலுள்ள பிராஹுயை இந்தோ - ஆரியப் பெருங்கடலில் காணக்கிடக்கின்ற ஒரு தீவு என்று கூறலாம். அதனால், இந்தோ ஆரியர்கள் வடமேற்கு இந்தியாவுக்கு வந்தபோது திராவிடமொழிகள் அங்கு வழக்கிலிருந்தன என்பது தெரிகிறது. இந்தக் கருத்துச் சரியானது என்றால், இந்தியாவின் மிகப்பெரும்பகுதியில் முதலில் ஆஸ்திரேலிய–ஆசிய மொழிகளும் அதன்பின் திராவிட மொழிகளும் வழக்கத்திலிருந்தன என்றும், கடைசியாக இந்தோ-ஆரியம் இந்தியாவுக்கு வந்தது என்றும் கூறலாம். ஆனால், பியூரர் ஹைமண்டார்ப் என்பவர் இந்தக் கருத்தை மறுக்கிறார். அவர், திராவிட மொழிகள் இப்போது வழக்கத்தில் இருக்கின்ற பகுதிகளைத் தவிர இந்தியாவின் ஏனைய

[1] திராவிடம் என்றால் திராவிட மொழிக் குடும்பத்தைக் குறிக்கும்.
தமிழ், தெலுங்கு, கன்னடம, மலையாளம், துளுவம், ஆகியவை அந்தக்
குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள். அது போலவே, முண்டா மொழிகள் என்றால்
கரியா, ஜுவாங், சவரா, கடபா, குர்க்கு ஆகிய முண்டாமொழிக் குடும்பத்
தைச் சேர்ந்த மொழிகளையும் குறிக்கும். இந்த மொழிக் குடும்பத்தை
ஆஸ்திரேலிய-ஆசியம் என்றும் கூறுவர்.

பகுதிகளில் என்றும் வழக்கத்திலிருந்தது கிடையாது என்றும், திராவிட மொழி பேசிய யாரோ மேல்நாட்டுக்காரர்கள் தரை வழியாகவோ, கடல் வழியாகவோ வந்து பலூச்சிஸ்தானத்திற் குடியேறியதன் விளைவாக பிராஹி மொழி பலூச்சிஸ்தானத் திற்கு வந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்.

மத்தியப் பிரதேசத்திலுள்ள மகாதேவ மலைப் பகுதிகளில் முண்டா மொழிகள் இன்றும் அழியாமல் இருக்கின்றன. தெற்கில் அவை கோதாவரி நதி வரையிலும் இன்றும் வழக்கில் இருக்கின்றன. பிலி மொழியிலும் முண்டா மொழிகளின் செல்வாக்கை நாம் காண்கிறோம். எனவே, ஒரு காலத்தில் அவை தக்காணம் முழுவதிலும் வழக்கில் இருந்திருக்க வேண்டும். அவை இன்னும் தெற்கிலும் வழக்கிலிருந்தனவா என்பதை இன்றைய நிலையில் உறுதியாகக் கூற முடியாது. மிகவும் தெற்கில் இருக்கிற திருவிதாங்கூர்ப் பகுதியில் வாழ்கின்ற கக்கலர்கள் போன்ற சில பழங்குடி மக்கள், அவர்களுக்கே உரிய சில மொழிகளைப் பேசுகிறார்கள் என்பது கூறப்படுகிறது. ஆனால், அம் மொழிகளில் முண்டா மொழிச் சொற்கள் இருக் கின்றனவா என்பதும், அப்படியானால் அவை எந்த விகிதத்தில் இருக்கின்றன என்பதும் இப்போது நமக்குத் தெரியாத செய்திகள்.

ஆஸ்டிரோ-ஆசிய மொழிகளை எந்த இனத்தினர் இந்தியா வில் நுழைத்தனர் என்பதில் அறிஞர்களுக்குள் கருத்து வேறு பாடுகள் இருக்கின்றன. ஆஸ்திரேலிய இனத்தின் ஆதி முன்னோர்கள் அந்தப் பணியைச் செய்தார்கள் என்று சிலரும், மங்கோலிய இனத்தினர் அதனைச் செய்தார்கள் என்று சிலரும், மத்தியதரைக்கடல் இனத்தின் ஆதி முன்னோர்கள் அதனைச் செய் தார்கள் என்று சிலரும் கருதுகின்றனர். வரலாற்றுக்கு முற் பட்ட கால இனச் செய்திகளையும், வரலாற்றுக்கு முற்பட்ட கால மொழிச் செய்திகளையும் இணைத்துக் காண்பதன் மூலம் நாம் தாற்காலிகமான சில பொது முடிவுகளுக்கு வர முடியும். இந்தோ-ஆரியந்தான் மிகக் கடைசியாக இந்தியாவிற்குள் புகுந்த மொழிக் குடும்பம். இந்தியாவிற்கு வந்த கடைசி இனத்தினராகிய நார்டிக் இனத்தினரே அந்த மொழியை இந்தியாவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டுமென்பது ஏற்புடையதாகத் தோன்றுகிறது. ஆனால், இந்தியாவுக்கு வந்த நார்டிக் மக்கள் தூய நார்டிக் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் வந்த வழியிலிருந்த பாமீர் பீட பூமியிலும் அதற்கு அருகிலும் வாழ்ந்த ஆல்பைன் இனத்தினரின்

மரபுக் கூறுகளுள் பல, நார்டிக் இன இயல்புகளோடு கலந்திருக்கும். அது போலவே, இந்திய மக்களிடம் உருண்டை மண்டையியல்பு தோன்றுவதற்கு முதற்காரணமாயிருந்த ஆர்மீனிய இனத்தினர் பேசிய மொழி திராவிட மொழியாக இருக்கவேண்டும் என்றும், மத்தியதரைக்கடல் இன மக்கள் பேசிய மொழி ஆஸ்டிரிக் மொழியாக இருக்கவேண்டும் என்றும் நாம் கூறலாம். இந்தியாவில் வாழ்ந்த ஏனைய இனத்தினர் பேசிய மொழிகளைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது.

அனட்டோலிய மேட்டு நிலம், ஆர்மீனியா, ஈரான் ஆகிய பகுதிகளிலேதான் ஆர்மீனிய இனப் பிரிவைச் சேர்ந்த மக்கள் இன்று பெரும்பாலும் வாழ்கிருர்கள். ஆகவே, திராவிட மொழியும் பண்பாடும் அங்கிருந்து வந்தவைகள் என்று கூறலாம். சிந்துவெளியில் அகழ்ந்தெடுத்த முத்திரைகளிலுள்ள எழுத்துகளை இதுவரையில் ஐயமில்லாத வகையில் யாரும் படித்துப் பொருள் கூறவில்லை. அதனுல், ஆரியர்க்கு முற்பட்ட இந்திய நாகரிகம் எத்தகையது என்பதைப்பற்றிய கேள்விக்குக் கிடைக்கும் விடைகளெல்லாம் ஓரளவு ஐயத்திற்குட்பட்டவையாகவே இருக்கின்றன. எனினும், கி.மு. 3000–த்திலிருந்து கி.மு. 1000–வரையில் மத்தியதரைக்கடல் முதல் சிந்துவெளி வரையிலும் பரவியிருந்த பலநிறக் கூட்டொருமைப் பண்பாட்டுக்கும் தென்னிந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாட்டுக்கும் தொடர்பு இருந்ததென்பதைக் காட்டுகின்ற அறிகுறிகள் இல்லாமற் போகவில்லை. ஆசியாமைனரில் வாழ்ந்த லைசியர்கள் தங்களைத் 'த்ரிம்லைகள்' என்று கூறிக் கொண்டார்கள் என்பதை அவர்களின் பொறிப்புகளிலிருந்து நாம் அறிகிரும். 'த்ரிம்லை' என்னும் சொல்லுக்கும் 'திரமிளம்' (தமிழ்) என்னும் சொல்லுக்கும் அதிக வேறுபாடு இல்லை. மொழியமைப்பு முறையில் சுசியத்திற்கும் திராவிடத்திற்கும் தொடர்பு இருக்கிறதென்பதைக் கால்டுவெல் சுட்டிக்காட்டியிருக்கிருர். ஆப்கானிஸ்தானம், ஈரான் மேட்டு நிலம், யூப்ரடிஸ் டைக்ரிஸ் நதியின் சமவெளிகள் ஆகிய இடங்களிலும் பொதுவாக மெசபட்டோமியாவிலும் வழங்குகின்ற பல ஊர்ப் பெயர்கள் திராவிட மொழி உருவங்களை ஒத்திருக்கின்றன. அந்தப் பகுதிகளில் வரலாற்றுக் காலத்துக்கு முன் வாழ்ந்தவர்களும் ஆரிய இனத்தையோ செமிட்டிக் இனத்தையோ சேராதவர்களும் ஆகிய மக்கள் திராவிட மொழி பேசினுர்கள் என்று அறிஞர்கள் முடிவு செய்திருக்கிருர்கள். ஹுரியன் மொழியும் காசைட்டு மொழியும் திராவிட மொழியோடு தெளிவாக எடுத்துக்காட்டக் கூடிய இயைபுடையவைகள். எலமைட்டு மொழியையும்

பிராஹி மொழியையும் அறிஞர் ஒருவர் இணைத்துக் காட்டுகிறார். இந்த மொழிகளுக்குள் ஒருவகை இனத் தொடர்பு இருக்கிறது என்னும் முடிவு தவிர்க்க முடியாதது என்பது தோன்றுகிறது. மேற்கு ஆசியா, எலமைட்டு மொழியின் தாயகமாய் இருப்பதால், திராவிட மொழி அல்லது திராவிட மொழியின் ஆதி உருவமும் அந்த மொழியைப் பேசிய மக்களும் உலகத்தின் அந்தப் பகுதியிலிருந்துதான் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும் என்று சொல்வது தவறாகாது.

மொழியியல்புகளின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ள இந்த முடிவைப் பண்பாட்டியைபுகளும் நன்றாக ஆதரிக்கின்றன. எலமைட்டுக் கிளைதான் வரலாற்றுக் காலத்தில் முதல்முதலில் நம் கவனத்தைக் கவர்கிற காஸ்பிய இனக்கிளை யாகும். மருமக்கள் தாயம் திராவிட இந்தியாவில் இன்றும் நடைமுறையில் இருக்கின்ற ஒரு வழக்கம். இந்த வழக்கம் எலமைட்டு மக்கள் சமுதாயத்திலும் இருந்தது. திராவிட இந்தியாவில்தான் பாம்பை வழிபடும் மரபு இன்றைக்கும் மிகுதியாக இருக்கிறது. இந்த வழக்கமும் மேற்கு ஆசியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே இருந்தது என்பதைப் பெர்சிப்போலிஸ் என்னும் நகரில் நடந்த அகழ்வாராய்ச்சிகள் காட்டுகின்றன. 'ஊர்' என்னுமிடத்தில் 'மலைமகள்' என்று வழங்கிய இறைவியை மக்கள் வழிபட்டார்கள். அந்த இறைவிக்கும் நிலாக் கடவுளுக்கும் ஆண்டுதோறும் அங்குத் திருமண விழா நடைபெற்றது. கடவுளைத் தாயாக வழிபடும் அந்த மரபிற்கும், பார்வதியை (மலைமகளை) பல்வேறு வடிவங்களில் இந்திய மக்கள் வழிபடும் மரபிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. தென்னிந்தியச் சிவன் கோயில்களில் ஆண்டுதோறும் பார்வதிக்கும் பரம சிவனுக்கும் திருமணப் பெருவிழா நடைபெறுவதை அறியாதார் யாரும் இலர். இந்தப் பண்பாட்டுத் தொடர்பு மிக நெருங்கியதாக இருக்கிறது. மேற்கு ஆசியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இந்தத் துறையில் தொடர்பிருந்ததென்று காட்டும் நேரடியான சான்று ஒன்றும் இல்லாவிட்டாலும் மேலே சொன்ன பண்பாட்டுத் தொடர்பு தற்செயல் நிகழ்ச்சி என்று சொல்ல முடியாது. மேலும், பண்டைய சுமேரியாவில் இருந்த கோயில்களில் நடைபெற்ற வழிபாட்டு முறைகளுக்கும், தென்னிந்தியாவில் இன்று வரைக்கும் வழக்கிலிருக்கும் வழிபாட்டு முறை, கோயிலின் அமைப்பு முறை ஆகியவற்றிற்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. (புலால் உண்ணும் பழக்கத்தின்மீது உயர் வகுப்பு இந்தியர்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு நாளடைவில் வளர்ந்துகொண்டே வந்தது என்பதையும், அதனால் கோயில்

வழிபாட்டு முறைகளிலும் அதற்கேற்ற மாறுதல்கள் ஏற்பட்டன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.) வியனூர்டு உல்லி என்பவர் பண்டைய சுமேரியாவில் நடைபெற்ற கோயில் வழி பாட்டைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'வழிபாட்டு முறையில் வேள்வி இன்றியமையாத உறுப்பு. சமைத்த இறைச்சியைத் தெய்வமும், பூசாரியும், பக்தனும் சேர்ந்து உண்பது சடங்கு. அதனால், மடைப்பள்ளி, கோயிலின் ஒரு முக்கியமான பகுதியாய் இருந்தது. நாள் முழுதும் அங்கே வேலை நடந்துகொண்டே இருக்கும். அடுப்பு எரிந்துகொண்டே இருக்கக் கசாப்புக்காரர்களாகவும் சமையற்காரர்களாகவும் அடுக்களைச் சிற்றாள்களாகவும் வேலை செய்து கொண்டிருந்த அடிமைகளைப் பூசாரிகள் மேற்பார்வை செய்தவண்ணம் இருப் பார்கள். இடைக்காலத் தென்னிந்தியப் பொறிப்புகள் பல, அந்தக் காலத்தில் எண்ணிறந்த மக்கள் கோயில்களில் அடிமை களாகப் பணியாற்றவும் தங்கள் சந்ததியார்களையும் அந்த அடிமைத் தொழிலில் ஈடுபடுத்தவும் ஆவலோடு முன் வந்த செய்தியைக் கூறுகின்றன. தென்னிந்தியாவில் பொதுவாக வழக்கத்திலிருந்த தேவதாசி முறை பண்டைய சுமேரியாவிலும் வழக்கத்தில் இருந்தது. இந்தியக் கோயில்களில் இன்று 'ராஜோபசார' வழிபாட்டு முறை வழக்கில் இருக்கிறது. அந்தச் சடங்கையும் அதன் அடிப்படைத் தத்துவத்தையும் உல்லி என்பவர் மிக நன்றாக விளக்குகிறார். சுமேரியக் கோயில் வழி பாட்டைப்பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'கடவுளே அரசனாகவும் திருக்கோயிலும் அரசும் ஏறக்குறைய ஒரே அமைப் பின் இரு பெயர்களாகவும் இருந்த காலத்தில் மறுமையைவிட இம்மையே முக்கியத்தவம் பெற்றது இயல்புதானே? மானிடத் தலைவன் ஒருவனுக்காக முறைப்படி பணிபுரிகின்ற மக்கள் அதற்குக் கைம்மாறாகத் தாங்கள் நீண்ட நாள் வாழ்வதற்கும் உலக இன்பங்களைத் துய்ப்பதற்கும் தேவையான உதவிகளை அந்தத் தலைவன் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதுபோலக் கடவுளும் அத்தகைய நன்மைகளைத் தங்களுக்குச் செய்ய வேண்டுமென்று சுமேரியர்கள் எதிர்பார்த்தார்கள். அதனால், நிலாக்கடவுளினுடைய செல்வமெல்லாம் தங்களுடைய நலன்களை உறுதிசெய்யும் பிணையப் பொருள் என்று அவர்கள் நம்பி னார்கள்.' 'கோயில்' என்னும் தமிழ்ச் சொல்லும் 'ப்ராசாதம்' என்னும் வடசொல்லும் கோயிலையும் மன்னன் மாளிகையையும் குறிப்பவை. கோயில் வழிபாடு பழைய வேத மதத்தின் ஒரு பகுதி அன்று என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட செய்தி.

திராவிடப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக முன்பெல்லாம் செய்த முயற்சிகளுக்கு அடிப்படையாயிருந்த மேலே கூறிய சான்றுகளெல்லாம் தெளிவற்றவை என்பதையும், நேர்ச் சான்றுகள் அல்ல என்பதையும், அவை சூழ்நிலைக் கேற்ற பொருத்தங்காட்டுபவை என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். மேலும், அவை ஏற்புடைய காலவரிசை முறையையும் தருவதில்லை. ஆனால், அண்மையில் பியூரர் ஹைமண்டார்ப் கூறியுள்ள கருத்துகள் அத்தகையவை அல்ல. வாதவகையில் அவை நேர்மையாகத் தோன்றுகின்றன. இரும்பின் பயனை அறிந்திருந்த பெருங்கல் பண்பாடுடைய ஒரு மக்கள் தொகுதி மேற்கிலிருந்து கடல்வழியாக இந்தியாவுக்கு வந்தது என்றும், அத் தொகுதியைச் சேர்ந்த மக்கள் தாங்கள் வந்த வழியிலிருந்த கடற்கரைப் பகுதிகளில் ஆங்காங்கே குடியேறினார்கள் என்றும், இறுதியாக அவர்கள் தென்னிந்தியாவுக்கு வந்தார்கள் என்றும், அவர்களே திராவிட மொழி பேசிய பண்டைத் தென்னிந்திய மக்கள் என்றும் அவர் கூறுகிறார். பலூச்சிஸ்தானத்திலுள்ள பிராஹியிலும் சிந்து நாட்டிலுள்ள கராச்சியிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பெருங்கற்சின்னங்கள் அந்த வெளி நாட்டினர் இடம் பெயர்ந்த காலத்தில் அந்த பகுதிகளிலும் குடியேறினார்களென்பதைக் காட்டுகின்றன என்று ஹைமண்டார்ப் கூறுகிறார். திராவிட மொழி பேசிய வெளிநாட்டினர் ஏறக்குறையக் கி. மு. 500-ல் தென்னிந்தியாவுக்கு வந்து குடியேறியிருந்தால்தான் அவர்களுக்குச் சங்க இலக்கியத்தை உருவாக்குவதற்குப் போதுமான 'அவகாசம்' இருந்திருக்கும் என்று அவர் கருதுகிறார். ஆனால், இதை ஒத்துக்கொள்வது கடினமானது. மேலும், அசோகருடைய கல்வெட்டுகள் தமிழகத்தில் நன்றாகச் செயல்பட்ட நான்கு ராஜ்யங்கள் இருந்தன என்று குறிப்பிடுவதால் திராவிடமொழி பேசிய வெளிநாட்டினர் இன்னும் சிறிது காலத்திற்கு முன்னரே தென்னிந்தியாவுக்கு வந்திருக்கவேண்டும் என்பது தோன்றுகிறது. ஹைமண்டார்ப் கருத்தை ஏற்றுக்கொள்வதாயிருந்தால் தென்னிந்தியத் திராவிட நாகரிகம் நாம் இதுவரை நினைத்ததைவிடக் காலத்தால் மிகவும் பிற்பட்டது என்றும், வடக்கில் ஆரியர்களும் தெற்கில் திராவிடர்களும் ஏறக்குறைய ஒரே காலத்தில் குடியேறினார்கள் என்றும் நாம் முடிவு செய்யவேண்டியிருக்கும். 'தக்காணத்தின்மீது படையெடுப்பதற்காக முதலில் தென்றிசை நோக்கி வந்த ஆரியர்கள் அப்போது மராட்டிய நாட்டில் வாழ்ந்த பெருங்கல் மரபு இரும்புக் கால மக்களோடுதான் மோதியிருக்க வேண்டும்' என்று ஹைமண்டார்ப் கூறுகிறார். வாதாபியை (பாதாமி) மையமாகக் கொண்டு புனையப்பெற்ற அகத்தியர் கதை ஹைமண்டார்ப் கருத்

துக்கு ஓரளவு ஆதரவு தருகிறது. அதைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் காண்போம். ஆனால், இந்தப் பிரச்சினையைப்பற்றி விரிவாக ஆராயவேண்டுமென்பது தெளிவு. ஹைமண்டார்ப் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளலாமா அல்லது இனங்களைப் பற்றியும் பண்பாடுகளைப் பற்றியும் நாம் இதுவரையில் எடுத்துக்கூறிய செய்திகளின் அடிப்படையில் அந்தக் கருத்தை ஏற்றவாறு மாற்றிக்கொள்ள வேண்டுமா' என்பதை இப்போதே முடிவு செய்தல் இயலாது.

## BIBLIOGRAPHY


A. Aiyappan : 'Mesolithic Artefacts from Sawyerpuram in Tinnevelly Dt., S. India' (Spolia Zeylania, Vol. 24, Pt. 2, 1945)

B. Alchin : 'The Indian Middle Stone Age' (Bulletin of the institute of Archaeology, University of London, No. 11 1959)

F. R. Alchin : 'The Neolithic Stone Industry of North Karnataka Region' (Bulletin of the School of Oriental and African studies, Vol. XIX. No. 2, 1957)

—: 'Excavations at Piklihal' (Hyderabad, 1960)

—: 'Utnoor Excavations' (Hyderabad, 1961)

J. C. Brown : 'Catalogue of Prehistoric Antiquities in the Indian Museum, Calcutta' (Simla, 1917)

Bp. Caldwell : 'Comparative Grammar of the Dravidian Languages' (London, 1913)

L. A. Cammiade : 'Pygmy Implements of the Lower Godavari' (Man in India, IV)

—: 'Prehistoric Man in India and the Karnul Bone Caves' (Man in India, VII, Nos. 1-12)

L. A. Cammiade and M. G. Burkitt : 'Fresh Light on the Stone Ages in South-east India' (Antiqutiy, Vol. IV, 1930)

S. N. Chakravarti : 'The Prehistoric Periods in India' (Journal of the University of Bombay, Vol. X, Pt. I, July 1941)

—: 'An Outline of the Stone Age in India' (JRASB Letters, Vol. X, Pt. I, 1944)

V. Gordon Childe : 'Megaliths' (Ancient India No. 4, July 1947-January 1948)

H. De Terra and T. T. Patterson : 'Studies in the Ice Age in India and Associated Human Cultures' (Carnegic Institute of Washington, Pub. No. 493, Washington, 1939)

—: 'The Siwaliks of India and Early Man' (Early Man, 1939)

R. B. Foote: 'The Foote Collection of India, Prehistoric and Protohistoric Antiquities, Catalogue Raisonne' (Govt. Museum, Madras, 1914)

—: 'Notes on Their Ages and Distribution' (Govt. Museum, Madras, 1916)

D. H. Gordon: 'Early Use of Metals in India and Pakistan' (Journal of the Royal Anthropological Institute, 1952)

—: 'The Stone Industries of the Holocene in India and Pakistan' (Ancient India, No. 6, Jan. 1950)

—: 'The Prehistoric Backfround of Indian Culture' (Bombay, 1958)

B. S. Guha: 'Racial Elements in the Population' (Bombay, 1944)

Christopher Von Fuerer-Haimendorf: 'When, How and From Where did the Dravidians Come to India?' (The Indo-Asian Culture, Vol. II, No. 3, January 1954, pp. 238-47)

—: 'New Aspects of the Dravidian Problem' (Tamil Culture, Vol. II, No. 2, 1953)

E. Herzfeld and A. B. Keith: 'Iran as a Prehistoric Centre' in A. U. Pope's Survey of Persian Art, Vol. I, Ch. II (Oxford)

J. H. Hutton: 'Census of India,' 1931, Vol. I, Pt. I.

R. V. Joshi: 'Pleistocene Studies in the Malaprbha Basin' (Poona, 1955)

V. D. Krishnaswami: 'Megalithic Types of South India' (Ancient India, No. 5, Jan. 1949)

—: 'Progress in Pre-history' (Ancient India, Special Jubilee Number 9, 1953)

—: 'Environmental and Cultural Changes of Prehistoric Man near Madras' (Journal of the Madras Geographical Associ--ation, Vol. XIII, pp. 58-90, 1938)

—: 'Prehistoric Manround Madras' (Indian Academy of Sciences, Madras Meeting, 1938)

—: 'The Neolithic Pattern in India' (Presidential address of the Anthropology Section of the Indian Science Congress, 1956)

B. B. Lal: 'Protohistoric Investigation' (Ancient India, No. 9, 1953)

H. L. Movius (Jr.): 'Early Man and Pleistocene Stratigraphy in Southern and Eastern Asia (Peabody Museum Paper XIX, No. 3, 1-25)

Stuart Piggott: 'Prehistoric India to 1000 B. C.' (London, 1950)

L. V. Ramaswami Aiyar: 'Dravidic Place-names in the Plateau of Persia' (QJMS, Vol. XX, Bangalore, 1929-30)

S. R. Rao: 'Excavations at Lothal' (Lalit Kala Nos. 3 & 4, Bombay, 1956-57)

H. D. Sankalia: 'Investigations into the Prehistoric Archaeology of Gujarat' (Sri Pratapa Simha Maharaj Rajyabhisheka Grantha Mala, Memoir IV, Baroda State Press, 1946)

—: 'History of Prehistory at Nevasa' (Poona, 1960)

—: 'Indian Archaeology Today' (Bombay, 1962)

H. D. Sankalia and S. B Dev: 'Excavations at Nasik and Jorwe (Poona, 1955)

H. D. Sankalia and I. Karve: 'The Second Gujarat Prehistoric Expedition' (New Indian Antiquary, Vol. IV, No. 4)

—: 'Preliminary Report on the Third Gujarat Prehistoric Expedition and Human Remains Discovered So Far' (Times of india Press, 1945)

H. D. Sankalia, B. Subba Rao and S. B. Dev: 'Evcavations at Maheshwar and Navdatoli' (Poona and Baroda, 1958)

Y. D. Sarma: 'Rock Cut Caves of Cochin' (Ancient India,' No. 12, 1956)

—: 'Exploration of Historical Sites' (Ancient India No. 9, 1953)

K. A. N. Sastri: 'Southern India, Arabia and Africa' (New Indian Antiquary, Vol. I, 1938)

M. Seshadri: 'Microlithic Industries of Mysore' (Annual Report of the Institute of Archaeology, London, 1953)

—: 'New Light on Megalithic Dating in India' (Journal of the Mysore University [Arts], 1956)

—: 'Prehistoric and Protohistoric Mysore' (London, 1956)

—: 'The Paleolithic Industry of Kibbanahalli' (Mysore State) (Artibus Asiae, 1955, xviii, pp. 271–87)

—: 'Megalithic Excavations at Jadigenahalli' (Mysore, 1960)

K. R. Srinivasan: 'The Megalithic Burials and Urn Fields of South India in the light of Tamil Literature and Tradition' (Ancient India, No. 2, 1946)

K. R. Srinivasan and N. R. Banerjee: 'Survey of South Indian Megaliths' (Ancient India, No. 9, 1953)

B. Subba Rao: 'The Personality of India' (Baroda, 1958)

B. K. Thapar : 'Porkalam 1948 : Excavation of a Magalithic Urn–burial' (Ancient India, No. 8, 1952)

—: 'Maski 1954–A Chalcolithic Site of the Southern Decan, (Ancient India No. 13, Jan. 1957)

K. R. U. Todd : 'Prehistoric Man round Bombay' (Proceedings of the Prehistoric Society of East Anglia, Vol. VII, Ipswich, 1932)

—: 'Paleolithic Industries of Bombay' (Journal of the Royal Anthropological Institute, Vol. LXIX, London, 1939)

— : 'The Microlithic Industries of Bombay' (Ancient India, No. 6, Jan. 1950)

R. E. M. Wheeler : 'Brahmagiri and Chandravalli, 1947' (Ancient India, No. 4, July 1947–January 1948)

— : 'Early India and Pakistan' (London, 1959)

F. E. Zeuner : 'The Microlithic Industry of Langhnaj, Gujarat' (Man, article No. 182, September 1952)

F. E. Zeuner and Bridget Alchin : 'The Microlithic Sites of Tinnevelly Distrit. Madras State' (Ancient India, No. 12, 1956)

Indian Archaeology – A Review : Annual Publication of the Archaeological Survey of India, New Delhi, 1953–54 on wards.

# 4. வரலாற்றின் தொடக்கம்: தென்னிந்தியா ஆரியமாதல்

*சான்றுகள் — ஆரியவர்த்தம் — விந்தியமும் பாரியாத்திரையும்— விதர்ப்பம்—வட இந்திய நூல்களில் தென்னிந்தியச் செய்திகள் மிகுதல்—பாணினி—காத்தியாயனர்—கௌடில்யர்—கிரேக்கக் குறிப்புகள்—அசோகர் கல்வெட்டுகள்.*

*அகத்தியரைப் பற்றிய கதைகளும் அவற்றின் உட்பொருளும்—மலையாளக் கரையும் பரசுராமரும்—ஆரியப் பண்பாடு பரவியவிதம்—மொழிச்சான்று—பின்னைய எதிர் விளைவுகளும் கருத்துகளும்—தென்திசை செல்லும் வழிகள்—மேல்நாடுகளுடன் தொடர்பு—கீழ்நாடுகளுடன் தொடர்பு.*

வடஇந்தியாவைப்போலவே தென்னிந்தியாவிலும் ஆரியர் வருகைக்குப் பின்புதான் வரலாறு தொடங்குகிறது. ஆரியப் பண்பாடு தென்னிந்தியாவில் பரவியதைப்பற்றிய செய்திகள் இலக்கியத்திலும் புராணத்திலும் இருக்கின்றன. வட இந்தியாவில் ஏறக்குறையக் கி.மு. 600 வரையில் தோன்றிய நூல்களில் விந்திய மலைக்குத் தெற்கிலிருந்த இந்தியாவைப் பற்றிய செய்திகளில்லை. ஆனால், நூற்றாண்டுகள் செல்லச் செல்ல வடஇந்திய நூல்களில் தென்னிந்தியச் செய்திகள் மேலும்மேலும் இடம் பெற்றன. அகத்தியரை மையமாக வைத்துப் புனையப்பெற்ற கட்டுக்கதைகள், இதிகாசங்களிலும் புராணங்களிலும் இடம் பெற்றன. ஆரிய வாழ்க்கை முறையைத் தென்னிந்தியாவில் பரப்புவதற்காக ஒரு பேரியக்கம் தொடங்கியது. அகத்தியரைச் சுற்றியெழுந்த இதிகாச புராணக் கதைகள் அந்த முக்கியமான இயக்கத்தைப் பற்றிய நினைவுகளைத் தொன்மை நலங்கனிந்த முறையில் கூறுகின்றன. அதன் பின்பு பரசுராமரை மையமாகக் கொண்ட கட்டுக்கதைகள் தோன்றின. அவை கேரள நாட்டின் தனித்தன்மை வாய்ந்த பழக்க வழக்கங்களைப் பற்றியவை.

ஆரியர் வாழ்ந்த நாட்டிற்குத் தெற்கெல்லையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது விந்திய மலைத் தொடர். இமயமலை, விந்திய மலை, மேலைக் கடல், கீழைக்கடல் ஆகிய எல்லைகளுக்குட்பட்ட நிலப் பகுதிதான் ஆரிய வர்த்தம் என்று மனு தெளிவாகக் கூறுகிறார். சம்பல் நதியும் பெட்வா நதியும் தோன்றுகின்ற இடமாகிய விந்தியத்தின் வடமேற்குப் பகுதிக்கு ஆரியர்கள் 'பாரியாத்திரை' என்னும் பெயரைக்கொடுத்ததாகவும், அவர்களுடைய தொடர்பு அந்தப் பகுதியோடு நின்றுவிட்டதை அப் பெயர் காட்டுவதாகவும் பந்தர்க்கர் கருதுகிறார். ரிக் வேதத்திற் காணப்படும் ஒரு பிற்காலப் பாடல் ஆரியர் கூட்டத்திலிருந்து விலக்கப்பட்ட ஒருவன் தென்றிசை நோக்கிச் சென்றதாகக் கூறுகிறது, ஐத்திரேய பிராமணம் விதர்ப்பம் (பேரார்) என்ற நாட்டைப் பற்றியும், அதன் அரசனான பீமனைப் பற்றியும் குறிப்பிடுகிறது. சுனஹ்செப தேவராட்டன் என்பவன்மீது பொறாமை கொண்ட தம்முடைய ஐம்பது புதல்வர்களையும் விஸ்வாமித்திரர் ஆரிய வர்த்தத்தின் எல்லைக்கு அப்பால் துரத்திவிட்டார் என்றும், அவர்களுடைய சந்ததியார்களே ஆந்திரர், புந்தரர், சபரர், புலிந்தர், மூட்டிபர் போன்ற தஸ்யுக்கள் என்றும் ஐத்திரேய பிராமணமும் சாங்காயன சிரௌத்த சூத்திரமும் கூறுகின்றன. இந்த நூல்கள் தோன்றிய காலத்தில் வடஇந்தியா முழுவதும் ஆரிய மயமாகிவிட்டது என்றும், விந்தியத்திங்கு அப்பால் ஆரியப் பண்பாடு பரவவில்லை என்றும் நாம் அறிகிறோம். தென்னிந்தியாவில் நிலையாய் இருந்த ராஜ்யங்களுள் விதர்ப்பம் ஒன்றுதான் ஆரிய ராஜ்யமாயிருந்தது என்பதும், தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளில் ஆரியர்க்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்தார்கள் என்பதும் அக்கால நூல்களிலிருந்து தெளிவாகத் தெரிகிற செய்திகளாகும். ஆனால், துணிவுமிக்க ஆரியர் சிலர் தென்றிசை சென்று, அங்கு வாழ்ந்த மக்களோடு பழகி, அவர்களுடைய பெண்களை மணந்துகொண்டார்கள் என்பதையும், அந்தக் கலப்பு மணங்களால் தோன்றிய கலப்பின மக்களை வடக்கே இருந்த 'தூய' ஆரியர்கள் தாழ்வாக நினைத்தார்கள் என்பதையும் விஸ்வாமித்திரர் கதையிலிருந்து நாம் ஊகிக்கலாம். இந்த நிலை எந்தக் காலத்தில் ஏற்பட்டதென்பதைச் சரியாகக் கூற முடியாது. எனினும், ஏறக்குறையக் கி. மு. 1000 அளவில் அந்த நிலை தோன்றியிருக்கக்கூடும் என்று கருதலாம்.

அதற்கு அடுத்த நிலையைச் சேரபாதர்கள் என்பவர்களைப் பற்றி ஐத்திரேய ஆரண்யகம் கூறும் செய்திகளிலிருந்து ஊகிக்கலாம். பழைய கட்டுப்பாடுகளை மீறிய மூவகை மக்களுள் சேரபாதர் ஒரு வகையினர் என்று அந்த ஆரண்யகம்

கூறுகிறது. ஆனால், அந்தச் செய்திகளைக் குறிக்கின்ற வாசகம் தெளிவற்றதாய் இருக்கிறது. அதனால் அதன் பொருளை உறுதியாகக் கூற இயலாது. ஆனால், அந்த வாசகம் சேரர்களைத்தான் குறிக்கிறது என்று நாம் ஏற்றுக்கொண்டால் மலையாளக்கரை மக்களின் பழக்க வழக்கங்களானவை, மிகப் பழங்காலத்திலேயே ஏனைய மக்களின் பழக்க வழக்கங்களிலிருந்து வேறுபடத் தொடங்கிவிட்டன என்பதற்கு அதனைச் சான்றாகக் கொள்ளலாம். அதைத் தவிரப் பழைய சான்று எதுவும் கிடைக்கவில்லை.

ஏறக்குறையக் கி.மு. 600-ல் வாழ்ந்த வடமொழி இலக்கணப் புலவராகிய பாணினி கிழக்கில் கலிங்க நாட்டை மட்டும் குறிப்பிடுகிறார். மேற்கில் அஸ்மிக நாட்டைத் தவிர வேறெந்த நாட்டைப்பற்றியும் அவர் குறிப்பிடவில்லை. அந்நாடு நர்மதைக்குத் தெற்கிலிருந்த பகுதியில் கோதாவரி நதியின் பிறப்பிடத்திற்கு அருகில் இருந்தது. 'சுத்த நிபாதா' என்னும் பௌத்த நூலானது கோசல நாட்டிலிருந்து தென்றிசைச் சென்ற பாவரி என்னும் ஓர் ஆசிரியரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. பாவரி கோசல நாட்டை விட்டுத் தட்சிண பாதத்தைச் சேர்ந்த அசக நாட்டில் கோதவரிக் கரையிலிருந்த ஒரு கிராமத்தில் குடியேறினார். அவரிடம் பயின்ற மாணவர்கள், புத்தரைக் காண்பதற்காக வடக்கே சென்றார்கள். அவர்கள் முலக நாட்டைச் சேர்ந்த பட்டித்தானம் (பைத்தான்), நர்மதை நதிக் கரையிலிருந்த மாஹிஷ்மதி (மாந்தாத்தா), உஜ்ஜைனி ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லவேண்டியதாயிற்று. பாவரி வேதங்களைக் கற்றவர்; அந்த வேதங்கள் கூறும் வேள்விகளைச் செய்தவர். இந்தச் செய்திகளெல்லாம் சுத்த நிபாதாவில் இருக்கின்றன. பாவரி தென்னிந்தியாவில் ஆரியப் பண்பாட்டைப் பரப்ப முனைந்த ஆசிரியர்களுள் ஒருவராக இருக்கலாம். இதனால் தென்னகத்தில் ஆரியர் குடியேற்றம் மெதுவாகவும் அமைதியாகவும் நிகழ்ந்ததையும், அதுபோலவே ஆரியப் பண்பாடும் மெதுவாகவும் அமைதியாகவும் புகுந்து பரவியதையும் அந்த இயக்கத்தில் பல அறிஞர்கள் கலந்து கொண்டதையும் பாவரியின் கதை நமக்குக் காட்டுகிறது போலும். தண்டகாரணியத்திலிருந்த முனிவர்களுடைய ஆசிரமங்கள் பலவற்றை வருணிக்கும் வால்மீகி ராமாயணக் குறிப்புகள், பாவரியின் கதையினின்று நாம் ஊகிக்கின்ற கருத்துக்கு ஆதரவு தருகின்றன.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழி இலக்கணப் புலவரான காத்தியாயனர் பாணினியின் வடமொழி

இலக்கணத்தை அக்கால வழக்குக்கு ஏற்றவாறு செய்யும் பொருட்டுத் தாமே பல சூத்திரங்களை இயற்றி, பாணினியின் சூத்திரங்களோடு சேர்த்திருக்கிறார். இக் காத்தியாயனர் தென்னாட்டைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். இவருடைய சூத்திரங்களில் இந்தியாவின் தென்கோடியில் உள்ள சேர சோழ பாண்டிய நாடுகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த நாடுகளைப் பற்றிக் கௌடில்யர் நன்றாக அறிந்திருந்தார். அசோகர் கட்டளைக் கல்வெட்டுகளும், இந்த நாடுகளை மட்டுமன்றி தம்பப்பன்னி என்ற பெயரில் இலங்கையையும் குறிப்பிடுகின்றன. பாண்டிய நாட்டு முத்தையும் மென்றுகிலையும் பற்றிக் கௌடியர் எழுதிவைத்துள்ளார். பாண்டியர் தலைநகரமான தென் மதுரையானது வடக்கே யமுனைக் கரையிலுள்ள மதுராவை நினைவூட்டுகிறது. ஹெராக்கிலிஸ் என்பவன் தென்கடலின் கரையிலிருந்த நாட்டை ஆள்வதற்குத் தன் மகள் புண்டையா என்பவளை நியமித்தான் என்ற கதை கிரேக்க நூல்களில் இருக்கிறது என்பதை நாம் முன்னரே கண்டோம். வட மதுரையை உளத்திற் கொண்டு சிந்தித்தால் ஹெராக்கிலிஸ் என்னும் பெயர் கிருஷ்ணன் என்ற பெயரைக் குறிக்கக் கூடும் என்று சூழ்நிலைப் பொருத்தத்தை நோக்கிக் கருதலாம்.

இலங்கையிலும் ஜாவாவுக்கு அருகிலும் வேறு மதுரைகள் இருந்தன. ஆரிய இயக்கம், வடக்கிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்து பரவியது மட்டுமன்றிக் கடல்கடந்தும் சென்றதை இந்த மதுரைகள் காட்டுகின்றன. தர்ம சாஸ்திரங்களை எழுதியவர்களுள் முற்பட்ட காலத்தைச் சேர்ந்த போதாயனர் தாம் எழுதிய 'தர்ம சூத்திரம்' என்னும் நூலில் தக்காண மக்களுக்கே உரித்தான ஐந்து வழக்கங்களைக் குறிப்பிடுகிறார். அவையாவன: 1. தீக்கை பெறாதவரோடு சேர்ந்துண்ணல், 2. பெண்களோடு சேர்ந்துண்ணல்; 3. முன்னாள் இரவு சமைத்த உணவை மறுநாள் உண்ணல்; 4. தாய் மாமன் மகளை மணந்து கொள்ளல்; 5. அத்தை மகளை மணந்து கொள்ளல். தென்னிந்திய மக்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்கள் எல்லாரிடையிலும் இறுதியிற் சொன்ன இரு பழக்கங்களும் இன்றும் வழக்கில் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். மேலே சொன்ன வழக்கங்களைப் பற்றிய போதாயனர் கூற்று மிகப் பழங்காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். ஏனெனில், அவர் வட இந்தியர் மட்டுமே கடல் கடந்த பயணத்தை மேற்கொள்ளலாம் என்கிறார். அந்தக் கூற்று கிருஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் பொய்யாகி விட்டது என்பதை நாம் உறுதியாக அறிகிறோம். (அதற்கு முன்னரே

அக் கூற்றுப் பொய்யாகியிருக்கக் கூடும். ஆனால், அதை நாம் உறுதியாகக் கூறமுடியாது.)

இவ்வாறு, ஆரியர்களின் தென்றிசை இயக்கம் ஏறத்தாழக் கி.மு. 1000-த்தில் தொடங்கி, இடையில் நின்றுவிடாமல் ஒரே சீராகவும் அமைதியாகவும் முன்னேறி, தமிழகந் தவிர ஏனைய இந்தியா முழுவதையும் தன்னுள் அடக்கிய மௌரியப் பேரரசு தோன்றுவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பே முடிவு பெற்றது என்பது விளங்குகிறது. தெற்கே உள்ள கர்நூல், மைசூர் ஆகிய இடங்களில் பிராமி எழுத்திலும் பிராக்கிருத மொழியிலும் பொறிக்கப்பட்ட அசோகக் கட்டளைக் கற்றூண்கள் காணப்படுகின்றன. இதனால் அங்கெல்லாம் பிராமி எழுத்தையும் பிராக்கிருத மொழியையும் அறிந்த மக்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பது தெரிகிறது. மேலும், தம்முடைய பேரரசின் எல்லைக்கு அப்பாலிருந்த தென்னகத்து அரசுகளுடன் அசோகர் அரசியல் உறவு வைத்துக் கொண்டிருந்தார் என்பதும் தெரிகிறது. இதிகாசங்களிலும் புராணங்களிலும் மட்டுமன்றி, தமிழிலக்கியத்திலும் அகத்தியக் கட்டுக் கதைகள் சிறப்பிடம் பெறுகின்றன. எனவே, வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் இக் கதைகள் புனையப்பட்டவை என்பதைச் சிறிதளவு சிந்தித்தாலும் நாம் தெரிந்து கொள்ளலாம். தென்னிந்தியாவை ஆரிய மயமாக்கி ஆரிய நாகரிகத்தை அங்குப் பரப்பிய பேரியக்கமே அக் கதைகளிற் காணப்படும் வரலாற்று உண்மையாகும். அகத்தியர் ஒரு குடத்திலிருந்து தோன்றினார் என்னும் கட்டுக்கதையைப் பற்றி ரிக்கு வேதத்தில் ஒரு சிறு குறிப்புக் காணப்படுகிறது. மற்றபடி அவர் வரலாற்றில் இடம் பெறுகிற ஓர் உண்மை மனிதனாகவே இருக்கிறார். அவர் வழிபாட்டுப் பாடல்களைப் புனைந்தார். அவருக்கு மனைவியும் உடன்பிறந்தாரும் இருந்தார்கள். ஒரு வேளை அவருக்கு ஒரு மகனும் இருந்திருக்கலாம். அவர் இல்லறத் துறவியாய் இருந்தவர் என்று பாராட்டப்படுகிறார். மகா பாரதத்தில் அவருடைய கதை விரிவடைந்திருக்கிறது. அவருக்கும் தென்னாட்டிற்கும் இருந்த தொடர்பானது முக்கியத்துவம் பெறுகிறது. அவர் விதர்ப்ப நாட்டின் இளவரசியான லோபாமுத்திரையை மணந்து கொண்டார். லோபாமுத்திரையோ அகத்தியர் தன்னிடமிருந்து மனைவியின் உரிமையை அடைவதற்கு முன் தன் தந்தையின் அரண்மனையில் தான் அணிந்திருந்தவை போன்ற அணிகலன்களையும் நுகர்ந்திருந்த சுகபோகங்களையும் அவர் தம் துறவைக் கைவிடாமலே தேடித்தர வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தாள். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அரசர்களிடம் சென்று

யாசிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியல்லை. எனவே, அவர் ஆரிய அரசர் மூவரை அணுகித் தமக்குத் தேவையான பொருள் தருமாறு வேண்டினார். ஆனால், அவர்களால் அவ்வளவு பெருஞ் செல்வத்தை நன்கொடையாகத் தர இயலவில்லை. ஆதலால், அகத்தியரும் அந்த மூன்று ஆரிய அரசர்களுடன் மணிமதியில் ஆட்சி செய்த தைத்திய (அசுர) அரசனான இல்வலனிடம் சென்றார். இல்வலனோ பார்ப்பன குலத்தையே வெறுத்தவன். இல்வலன் தனக்கு இந்திரனுக் கிணையான ஒரு மகன் பிறக்க வேண்டுமென்று விரும்பினான். அந்த விருப்பம் நிறைவேறு வதற்கு அவன் ஒரு பார்ப்பனனுடைய உதவியை நாடினான். ஆனால், அந்தப் பார்ப்பனன் அந்த உதவியைச் செய்ய மறுத்து விட்டதே அந்த வெறுப்புக்குக் காரணம். பார்ப்பனரைப் பழிவாங்கும்பொருட்டு அவன் ஒரு விசித்திர முறையைக் கையாண்டான். யாரேனும் பார்ப்பனன் இல்வலனிடம் வந்தால் அவன் தன் தம்பி வாதாபியை ஓர் ஆட்டுக்கிடாயாய் மாற்றி, அந்த ஆட்டை அறுத்துச் சமைத்து, வெந்த இறைச்சியைச் பார்ப்பனனுக்குப் படைப்பான். பார்ப்பனன் இறைச்சியை உண்டபின் இல்வலன் தன் தம்பி பெயரைச் சொல்லி அழைப்பான். இல்வலன் கூப்பிடுகிற ஆள் எமனுலகில் இருந் தாலும் வந்தே தீரவேண்டும். ஆதலால், வாதாபி பார்ப்பனன் வயிற்றைக் கிழித்துத் தன் சொந்த உருவத்தோடு சிரித்துக் கொண்டே வெளிவருவான. இவ்வாறு எத்தனையோ பார்ப்பனர் களை வாதாபியும் இல்வலனும் கொன்றுவிட்டார்கள். அகத்தி யரையும் அவருடன் வந்த மூன்று ஆரிய அரசர்களையும் கண்ட இல்வலன் தன் வழக்கமான வேலையைத் தொடங்கினான். அவன் தம்பி வாதாபியை ஆட்டுக்கிடாயாக மாற்றி அதன் இறைச்சி யைச் சமைத்து நான்கு விருந்தினர்க்கும் படைத்தான். அரசர் மூவரும் அதைக் கண்டு வருந்தினார்கள். ஆனால், அகத்தியரோ அந்த இறைச்சி முழுவதையும் தின்றுவிட்டார். பின்னர் வழக்கம்போல் இல்வலன் வாதாபியை அழைத்தான். ஆனால், வாதாபிக்குப் பதிலாக அகத்தியர் வயிற்றிலிருந்து ஏப்பந்தான் வந்தது. வாதாபி அகத்தியர் வயிற்றில் செரித்துப் போனான். அதன்பின், நொந்த உளத்தினனான இல்வலன், 'நான் உமக்கு வேண்டிய பொருள் தருகிறேன். நீர் எனக்கு என்ன கொடுப்பீர்?' என்று அகத்தியரைக் கேட்டான். அவர் வாதாபியை வரவழைத்துக் கொடுப்பதாகச் சொல்லி, அவ்வாறு செய்தும் காட்டினார். அதன்பின் தமக்குத் தேவையான பொருளை யெல்லாம் பெற்றுக்கொண்டு ஆரிய அரசர் மூவருடனும் விதர்ப்ப நாட்டுக்குத் திரும்பினார். வாதாபி என்பது மேற்குத் தக்காணத்தில் ஆட்சி செய்த பழைய சாளுக்கிய அரசர்களுடைய

தலைநகரம். இப்போது அதற்குப் பாதாமி என்னும் பெயர் வழங்குகிறது. அந்த அசுர அரசர்களுடைய தலைநகரம் தக்காணத்தின் அந்தப் பகுதியில் இருந்தது என்பது உண்மை யானால் உண்மையாகத்தான் தோன்றுகிறது—இந்தக் கதை அகத்தியருக்கும் தென்னிந்தியாவுக்கும் ஏற்பட்ட தொடர்பின் தொடக்கத்தைக் காட்டுகிறது என்று கருதலாம்.

கடலுக்கடியில் ஒளிந்து கொண்ட பகைவர்களை அழிக்க முடியாமல் திண்டாடிய தேவர்களுக்கு உதவி செய்வதற்காக அகத்தியர் கடல் நீர் முழுவதையும் குடித்துவிட்டதாகவும், ஏதோ ஒரு வேலையாக விந்திய மலையைக் கடந்து தெற்கே போன அகத்தியர் தாம் திரும்பி வருகிற வரையில் வளராமலிருக்குமாறு அந்த மலையைக் கேட்டுக் கொண்டதாகவும் அதற்கு அந்த மலை இணங்கியதாகவும் மகாபாரதம் கூறுகிறது. ஆனால், தெற்கே போன அகத்தியர் மீண்டும் வடக்கே திரும்பவில்லை. அதனால், மலையும் அதே உயரத்திலிருக்கிறது! பரமசிவனுக்கும் பார்வதிக்கும் நடந்த திருமணத்தைக் காண்பதற்காகத் தேவர் களும் முனிவர்களும் ஒருங்கு திரண்டுவிட்டதால் வடதிசை தாழ்ந்து தென்றிசை உயர்ந்துவிட்டதென்றும், அதனால் உலகை மீண்டும் சமநிலைக்குக் கொண்டுவருவதற்காக அகத்தியர் ஒருவரைமட்டும் சிவனார் தென்றிசைக்கு அனுப்பினார் என்றும் பிற்காலத் தமிழ்ப் புராணக்கதை தெரிவிக்கிறது.

அகத்தியர் விந்திய மலையுடன் செய்துகொண்ட ஒப்பந்தமும் கடல் நீர் முழுவதையும் குடித்த அற்புதமும் ஆரியப்பண்பாடு முதலில் தக்காணத்திலும் பின்னர் மலேயாத் தீவுக் கூட்டங் களிலும் இந்தோ - சீனாவிலும் பரவிய வாலாற்றுச் செய்திகளைக் குறிக்கும் உருவகக் கதைகள் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். அந்தக் கட்டுக்கதைகளுக்கு இவ்வாறு பொருள் கொள்வது, அந்தக் கதைகளின் உள்ளார்ந்த இயல்புகளை நோக்கும்போது தவறாகாது. மேலும், அகத்தியரைப்பற்றியும் அவர் வாழ்ந்த இடத்தைப்பற்றியும் கூறப்படுகிற ஏனைய செய்திகள் இந்தக் கருத்தை ஆதரிக்கின்றன.

அகத்தியர் ஒரு கொடிய பேயை அழித்து உலகத்தை மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாகச் செய்தார் என்னும் கதையை அகத்தியருடைய ஆசிரமத்திற்குப் போகும் வழியில் ராமர் லட்சுமணர்க்குச் சொன்னார். மேலும், அவர் வாதாபியின் சாவைப் பற்றிய கதையையும் லட்சுமணர்க்குச் சொன்னார். மகாபாரதக் கதையிலிருந்து இந்தக் கதை சில இயல்புகளில் வேறுபடுகிறது.

ஆனால், அந்த வேறுபாடுகள், அவ்வளவாக முக்கியமானவை அல்ல. அசுரர்களை எதிர்த்து அகத்தியர் வெற்றி அடைந்ததன் பயனாகத் தண்டகாரண்யம் மனிதர் (ஆரியர்) வாழ்வதற்கேற்ற இடமாக மாறியது என்பதுதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அரிய செய்தியாகும். அசுரர்களையும் அரக்கர்களையும் அகத்தியர் எதிர்த்து மோதிய செய்திகள் ராமாயணத்தில் வேறு பகுதிகளிலும் உள்ளன. தண்டகாரண்யப் பகுதியில் குடியேறியிருந்த ஆரியர்களைத் தாடகை துன்புறுத்திய தற்குரிய காரணத்தை விஸ்வாமித்திரர் ராமபிரானுக்கு விளக்கினார். தாடகையின் கணவனான சுந்தன் என்பவனை அகத்தியர் கொன்றுவிட்டார். அதனால் தாடகையும் அவள் மகன் மாரீசனும் அகத்தியரைத் தாக்கினார்கள். அதனால் அகத்தியர் அவர்களைச் சபித்துவிட்டார். அதன் விளைவாக மாரீசன் ஓர் அரக்கனாகவும் தாடகை அருவருக்கத்தக்க அரக்கியாகவும் மாறிவிட்டார்கள். அதிலிருந்து ராமன் கையாற் சாகும் வரையிலும் தாடகை ஆரியர்களைப் பழிவாங்கும் எதிரியாக இருந்தாள்.

அகத்தியர் பற்றிய கட்டுக்கதைகளை ஆராய்ந்த தற்கால அறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்: 'அகத்தியர் பற்றிய கட்டுக்கதைகள் வரலாற்று நினைவுகளின் அடிப்படையில் எழுந்தவை என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. தக்காணத்தில் முதலில் குடியேறி, அங்கு அதற்கு முன்னிருந்த மக்களோடு போர் செய்த ஆரியர்களைக் குறிக்கும் ஓர் இனக் குறிப்புச் சின்னமாக அகத்தியரைக் கருதவேண்டும். அகத்தியர் அறிஞர்களுக்குள் மிகவும் முற்பட்டவரென்றும், முனிவர்களுக்குள் மிகவும் புனிதமானவரென்றும் தக்காண மக்கள் இன்றும் நம்புகிறார்கள். ஆரிய வாழ்க்கை முறையைத் தென்னிந்தியாவில் முதலில் பரப்பிய 'திருத்தூதராகிய' அகத்தியரைப் பிற்கால மக்கள் ஒரு புனிதத்துறவியாக மாற்றிவிட்டார்கள். அவர் வீரமும் வலிமையும் செறிந்தவரென்றும், போர்புரிவதிலும் வேட்டையாடுவதிலும் வல்லவரென்றும், காட்டுமிராண்டித்தனமான எதிரிகள் பலரை வென்றவரென்றும் நாம் கூறலாம். அகத்தியருடைய இயல்புகளையும் செயல்களையும் பலவாறு உருத்திரித்துக் கூறும் கட்டுக்கதைகளில் அவருடைய உண்மையான அடிப்படை இயல்புகளை நாம் காணமுடிகிறது. வேட்டையாடுவதிலும் போர்புரிவதிலும் புகழ்பெற்றவரும் ஹெர்க்குலிசைப் போலவே உண்பதிலும் குடிப்பதிலும் இணையற்றவரும் ஆகிய அதே அகத்தியர் ஆங்கிலப் புதினமாகிய ஐவன்ஹோவில் வரும் பாதிரியாரான 'டக்' என்பவரை ஓரளவு ஒத்த புனித மனிதராகவும் இருந்தார்.'

அகத்தியருடைய ஆசிரமம் எங்கிருந்த தென்பதைப் பற்றிப் பல கருத்துகள் இருக்கின்றன. இமயத்திலிருந்து குமரிவரையில் பல இடங்களை அந்த ஆசிரமம் இருந்த இடமாகப் பலர் கூறுகின்றனர். வேறுசிலர் வெளிநாட்டிற் பல இடங்களை அகத்தியர் ஆசிரமம் இருந்த இடமென்று கூறுகிறார்கள். ஆனால், மேற்கு மலைத்தொடரின் தென்பகுதிகளுள் மிகக் கடைசியில் இருக்கின்ற பகுதியான மலைய மலையில் இருந்ததாகக் கூறப்படும் ஆசிரமம்தான் மிகவும் புகழ்பெற்றது. இவ்வாறு பல வேறிடங்களில் இருந்ததாகக் கூறப்படும் பல்வேறு ஆசிரமங்களும் பவனங்களும் அகத்தியர் என்று ஒருவர் உண்மையில் இருந்ததில்லை என்பதையும் அவர் முழுதும் கற்பனையான ஒரு கதைப்பாத்திரம் என்பதையும் காட்டுகின்றன என்று சிலர் கருதுகின்றனர். அகத்தியர் என்ற ஒரு குலத்தைச் சேர்ந்த பல கிளைமரபுகள் மேலே சொன்ன பல்வேறிடங்களிலும் பரவி ஆரியத்தைப் பரப்பின என்று வேறு சிலர் கருதுகின்றனர். ஆனால், இதுவோர் ஆதாரமற்ற ஊகம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். எனவே, வேதப் பாடல்கள் சிலவற்றைப் பாடியவரும், லோபா முத்திரையை மணந்து கொண்டவரும், தென்னிந்தியாவில் ஆரியப் பண்பாடும் குடியேற்றமும் பரவுவதற்குப் பெரிதும் உதவியவரும் ஆகிய ஓர் அகத்தியர் உண்மையிலேயே இருந்தார் என்றும், அவர் காலத்துக்குப் பின்னரும் ஆரிய வாழ்க்கை முறையும் குடியேற்றமும் தென்னிந்தியாவில் தொடர்ந்து முன்னேறின என்றும், அதன் பலவேறு நிலைகளைக் காட்டுகின்ற பல கட்டுக்கதைகள் அகத்தியர் பெயரோடு சேர்ந்துவிட்டன என்றும் கருதுவது பொருத்தமுடையது.

இவ்வாறு அகத்தியர் பெயருடன் ஒட்டிக்கொண்ட கதைகளுள் ஒன்றை இப்போது கவனிப்போம். அது பெரும்பாலான பிற கதைகளைவிடக் காலத்தாற் பிற்பட்டது. அந்தக் கதையை அகத்தியரே ராமனுக்குச் சொன்னதாகச் சில ராமாயணங்கள் கூறுகின்றன. பார்க்கவ முனிவர் சாபத்தால் தண்டகாரணியம் விந்தியமலைக்குத் தெற்கே நூறு யோசனை தொலைவு காட்டு விலங்குகள் ஊளையிடும் பாழ்நிலமாக மாறிவிட்டது. அதனால் அங்கு மனிதர் வாழ முடியாமற் போய்விட்டது.

ஆனால் ஒரு சமயம் இமய மலையிலிருந்து அந்தப் பக்கமாக வந்த அகத்தியர் அந்தப் பாழ் நிலத்தில் மழை பெய்யுமாறு செய்து அதனை மீண்டும் மக்கள் வாழத்தக்க செழிப்புடைய நிலமாய் மாற்றினார். அதன் பயனாகப் பல ஆரிய மக்கட் கூட்டங்கள் அங்கே குடியேறின.

ராமாயணத்தின் பழைய பிரதிகளில் இந்தக் கதை இடம் பெறவில்லை. உரையாசிரியர்களும் இந்தக் கதையைக் குறிப்பிட வில்லை. எனவே, இது திறமை நயமில்லாப் பிற்கால இடைச் செருகல் என்று கொள்ளலாம். ஆனால், இந்தக் கதைக்கும், பரசுராமர் கேரள நாட்டை உண்டாக்கியதாகக் கூறும் பிற்காலக் கதைக்கும் ஓரளவு தொடர்பிருப்பதை நாம் அறிகிறோம்.

பரசுராமர் தம் தந்தை ஜமதக்னி முனிவரின் ஆணைப்படி தம் தாயாரைக் கொன்று விட்டார். அவர், அந்தப் பாவத்திற்குக் கழுவாயாகப் பார்ப்பனர்களின் பகைவர்களான சத்திரியர்களைப் பூண்டோடு அழித்துவிடுவதாகச் சபதம் செய்து அதை நிறை வேற்றும்பொருட்டு இருபத்தொரு தலைமுறைச் சத்திரியர்கள் மீது படையெடுத்துச் சென்று அவர்களோடு போர் புரிந்து தம் சபதத்தை நிறைவேற்றிவிட்டார். அதன்பின், தாம் சத்தியரிட மிருந்து வென்ற உலகம் முழுவதையும் விசுவாமித்திரர் வேண்டு கோட்கு இணங்கிப் பார்ப்பனர்களுக்குத் தானமாகக் கொடுத்து விட்டார். அதனால் அவருக்குச் சொந்தமாக இடம் எதுவும் இல்லாமற் போய்விட்டது. எனவே, அவர் முருகப் பெருமானை நோக்கித் தவஞ் செய்து, அக் கடவுளின் அருளால் கடற்கடவு ளான வருணனிடமிருந்து தமக்குக் குடியிருப்பதற்கான நிலத் தைப் பெற்றார்; பரசுராமர் தம் படைக் கருவியாகிய பரசை (கோடரி) எவ்வளவு தொலைவு எறிய முடியுமோ அவ்வளவு தொலைவுள்ள நிலத்தைக் கடலிலிருந்து எடுத்துக்கொள்ளுமாறு வருணபகவான் கூறினார். அதற்கிணங்கப் பரசுராமர் குமரி முனையிலிருந்து எறிந்த பரசு கோகர்ணத்திற்போய் விழுந்தது. அந்தப் பகுதிதான் பரசுராமருக்கு உரிய நாடாயிற்று. அங்குக் குடியேறுவதற்காக அவர் வெளியிலிருந்து பார்ப்பனர்களை அழைத்து வந்தார். அவர்கள் அறுபத்துநான்கு கிராமங்களில் குடியேறினர்கள். அவர்களுக்கும், அதே சமயத்தில் அங்கு வந்து குடியேறிய வேறு மக்களுக்கும் தேவையான சட்ட திட்டங் களைப் பரசுராமரே வகுத்துத் தந்தார். இந்தக் கதையும் பிற்காலத்தில் தோன்றியதுதான். உண்மையான புராணங் களில் இது இடம் பெறவில்லை. ஆனால், கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சில கன்னட சாசனங்கள் கேரளத் திற்கு வடக்கேயுள்ள கொங்கணத்தைப் பரசுராமர் மேற்கூறிய வாறு உண்டாக்கியதாகக் கூறுகின்றன.

ஆரியப் பண்பாடும் குடியேற்றமும் இந்தியாவில் பரவிய விதத்தையும் அதன் விளைவுகளையும் அறிந்து கொள்வதற்கு இன்றைய இந்தியாவில் எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த மொழி

வழங்குகின்றது என்று பார்ப்பது உதவியாக இருக்கும். ஆனல், மொழி வேறுபாடுகள் இன வேறுபாடுகளை உணர்த்துவதில்லை என்பதையும் பண்பாட்டு வேறுபாடுகளை மட்டும் உணர்த்துகின்றன என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். வட இந்தியாவிலும் தக்காணத்திலுள்ள மராட்டிய நாட்டிலும் இன்று பல மொழிகள் வழக்கிலிருக்கின்றன. அவையெல்லாமே வடமொழியிலிருந்தோ அதனேடு நெருங்கிய தொடர்புடைய ஒரு மொழி மரபிலிருந்தோ வந்த கிளை மொழிகளே. ஆரியர் வருகைக்கு முன் அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குச் சொந்தமான மொழிகளைப் பேசினர்கள். அங்கு வந்து குடியேறிய ஆரியர்கள் தங்கள் மொழியான சமஸ்கிருதத்தையும் தங்களுக்கேயுரிய பண்பாட்டையும் அங்கே புகுத்தினர்கள். அந்த வலிமை மிக்க மொழி, பண்பாடு ஆகியவற்றின் முன் நிற்க முடியாத பழைய மொழிகளும் பண்பாடும் அழியத் தொடங்கின. அங்கு வாழ்ந்துவந்த மக்கள் தங்களுக்குச் சொந்தமில்லாத சமஸ்கிருதத்தைப் பேசத் தொடங்கினர்கள். அதனுல் அங்கு இன்று நாம் காணும் கிளை மொழிகள் தோன்றி வளர்ந்தன. அந்தக் கிளை மொழிகளில் சமஸ்கிருதத்தில் இல்லாத சொற்களும் ஒலிகளும் அளவிறந்து கிடக்கின்றன. அவையெல்லாம் அந்த மக்கள் பேசிய பழைய மொழிகளிலிருந்து வந்தவை என்பதில் ஐயமில்லை. இவ்வாறு வட இந்தியாவிலும் மேற்குத் தக்காணத்திலும் ஆரிய நாகரிகமும், சமஸ்கிருதமும் பரவிக் கொண்டிருந்தபோது, கீழைக் கடற்கரையிலும் அதனிலிருந்து தள்ளியிருக்கும் தென்பகுதியிலும் ஆரியர் செய்த முயற்சிகளின் விளைவுகள் வேறு விதமாய் இருந்தன. அந்தப் பகுதிகளிலும் தங்கள் நாகரிகத்தைப் பரப்புவதற்குப் போதிய எண்ணிக்கையில்தான் ஆரியர்கள் அங்கே நுழைந்தார்கள். ஆனல், 'அந்தப் பகுதி மக்களை ஆரியர்கள் தங்கள் சமுதாயத்தில் முற்ற முழுக்க இணைத்துக்கொள்ள இயலவில்லை; அவர்களுடைய மொழிகளையும் தனியியல்பு வாய்ந்த அவர்களுடைய பண்பாட்டையும் அடியோடு அழிக்கவும் முடியவில்லை.' அந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்களுள் மிகப் பெரும்பாலோர் தங்களுடைய மொழியையும் பழக்க வழக்கங்களையும் கைவிடாது பேணினர்கள். அதே சமயத்தில் அந்த மொழிகளும் பழக்க வழக்கங்களும் வடவாரிய மொழி, பண்பாடு ஆகியவற்றின் தொடர்பால் செப்பமும் வளமும் பெற்றன. வடக்கிலிருந்து வந்த ஆரியர்கள் தங்கள் மொழியை வளர்த்ததோடு தென்னிந்திய மொழிகளையும் கற்க வேண்டிய கட்டாயத்துக்குமுள்ளானர்கள். மேலும், அவர்கள் தென்னிந்தியப் பழக்க வழக்கங்களையும் பின்பற்ற வேண்டியிருந்ததால், அவ்விரு வேறு வாழ்க்கை முறை

களும் இணைந்த ஒரு புதிய சமுதாயம் தென்னகத்தில் உருவாகியது. அன்றியும், தென்னிந்திய மக்கள் வழிபட்ட பல் வேறு சிறு தெய்வங்களுக்கும் ஆரியர்கள் தங்களுடைய நெகிழ் திறம் பெற்ற பல கடவுட் கோட்பாட்டில் இடமளிக்க வேண்டிய தாயிற்று. இத்தகைய புதிய சமுதாயம் எவ்வாறு நாளடைவில் உருவாயிற்று என்பதைப்பற்றிய தெளிவான விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. தமிழிலக்கியந்தான் இதைப்பற்றி நமக்குக் கூறக் கூடிய மிகப் பழைய சான்று. புதிதாக வந்த மொழியையும் பண்பாட்டையும் தென்னிந்திய மக்கள் வரவேற்றார்கள் என்பதும், அவற்றைத் தங்கள் வாழ்க்கை முறையில் ஆர்வத் தோடு இணைத்துக் கொண்டார்கள் என்பதும், அவ்வாறு ஏற்பட்ட மாறுதல்கள் அமைதியாகவும் ஒழுங்காகவும் நிகழ்ந்தன என்பதும் தமிழிலக்கியத்தைப் படித்தபின் நம் மனத்தில் ஏற்படும் கருத்துகளாகும். ஆரியர்கள் தென்னிந்தியாவுக்கு வரத் தொடங்கியபோதே தமிழிலக்கியம் உருப்பெறவில்லை என்றும், அவர்கள் வந்தபோது தென்னிந்திய மக்கள் அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள் என்றும், அந்தத் தொடக்கக் கொந்தளிப்புக்குப் பின் அமைதி ஏற்பட்ட சமயத்தில்தான் தமிழிலக்கியம் உருவாகியிருக்க வேண்டும் என்றும், அதனால் தான் ஆரிய வாழ்க்கை முறை அமைதியான முறையில் பரவிய தென்னும் எண்ணத்தைத் தமிழிலக்கியம் நம் மனத்தில் உண்டாக்குகிறது என்றும் நாம் கருதலாம். ஆனால், வட இந்தியாவிலும் கடல் கடந்த கீழை நாடுகளிலும் ஆரியப் பண்பாடு பரவிய தன்மையைப்பற்றி நமக்குக் கிடைத்திருக்கும் சில சான்றுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது வடவாரி யர்களுக்கும் தென்னிந்தியர்களுக்கும் இடையில் பகைமையும், எதிர்ப்பும், போரும் நிகழ்ந்திருக்கும் என்று நினைப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை. எனினும், ஆரிய முனிவர்கள் செய்த வேள்விகளை அரக்கர்கள் வெறுத்ததாயும், வேள்விச் சாலைகளில் அடிக்கடி நுழைந்து ஆசிரமங்களையும் அங்கு நடந்த வேள்விகளையும் அழித்துக் குழப்பத்தையும் நிலைகுலைவையும் உண்டாக்கியதாயும், அவர்களுடைய வரம்புகடந்த அட்டூழியங் களுக்கு முடிவுகண்டு ஆரிய இருடிகளையும் அவர்களுடைய வேள்விச் சாலைகளையும் காக்கவேண்டியது ராமருடைய தலையாய கடமையாய் இருந்ததாயும் ராமாயணம் கூறுகிறது. இந்தச் செய்திகளுக்கு வரலாற்றடிப்படை உண்டா என்பது பெரிதும் ஐயத்திற்கு இடமானதே. அப்படி வரலாற்று அடிப்படை ஏதேனும் இருக்குமானல், தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்கள் வடவாரியர் வருகையையும் அவர்களுடைய மொழி, பண்பாடு

ஆகியவற்றையும் தொடக்கத்தில் எதிர்த்துப் போரிட்டார்க ளென்பதைக் காட்டும் சான்ருகவே அது இருக்கும்.

அகத்தியர் தமிழின் தந்தை என்றும், தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலை அவர் இயற்றினுர் என்றும், பரமசிவனும் பார்வதியும் முதல் அரசனும் அரசியுமாயிருந்த புகழ்பெற்ற பாண்டியர் வழிவந்த அரசர்களுக்கு அகத்தியர் குலகுருவாய் இருந்தார் என்றும் புராணக்கதைகள் கூறுகின்றன.

பத்துப்பாட்டு எட்டுத்தொகையாகிய நூல்களில் அகத்திய முனிவரைப் பற்றியும் அவருடைய வீரச் செயல்களைப் பற்றியும் திட்டவட்டமான குறிப்பு எதுவுமேயில்லை. ஒரே இடத்தில், மட்டும் அகத்திய நட்சத்திரத்தோடு 'பொதியில் முனிவன்' என்னும் சொற்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பொதியில் என்பது மேற்கு மலைத்தொடரின் தென்கோடியிலிருக்கும் மலை.

டாலமி அதனைத்தான் பெட்டிகோ என்று தம் நூலிற் குறித் திருக்கிருர். இதிலிருந்து அகத்தியக் கட்டுக்கதைகள் அந்தக் காலத் தமிழ்மக்களுக்குத் தெரியாதவை அல்ல என்று ஊகிக்க லாம். அகத்தியருடைய அற்புதப் பிறப்பு அவருக்கும் வசிட்ட முனிவருக்கும் இருந்த தொடர்பு ஆகிய செய்திகள் மணிமேகலை யில் இடம் பெறுகின்றன. அகத்தியர் சோழ அரசனுன காந்தன் என்பவனுக்கு நண்பர் என்றும், அவனுடைய வேண்டுகோட்கு இணங்க அவர் தம் கமண்டலத்தில் அடங்கியிருந்த காவிரி யாற்றை வெளியே ஓடும்படி செய்தார் என்றும், அவர் மலையமலையில் வாழ்ந்தார் என்றும், புகாரில் ஆண்டுதோறும் இந்திர விழா எடுக்கவேண்டுமென்று புராணக் கதை வழி அறியும் சோழனை தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியனுக்கு அவர் அறிவுரை கூறினுர் என்றும் அதே மணிமேகலை மேலுங் கூறுகிறது. தென்னகத்தின் தென் கோடியில் ராவணன் கொடுங்கோலாட்சி புரிந்ததாயும், அவன் ஒரு சமயம் பொதிகைக்குச் சென்றபோது தென்னகத்தை விட்டு இலங்கைக்குப் போய்விடுமாறு அவனுக்கு அகத்தியர் அறிவுரை கூறியதாயும் அதற்கிணங்க அவன் இலங்கைக்குப் போய் விட்டதாயும் தாம் கேள்விப்பட்ட ஒரு பழஞ் செய்தியை ஏறத் தாழக் கி.பி. 14-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த நச்சினுர்க்கினியர் எழுதி வைத்திருக்கிருர்.

அகத்தியர் இயற்றிய இலக்கண நூலைப்பற்றிய குறிப்புகள் மிகப் பிற்கால நூல்களில்தான் இடம்பெறுகின்றன. அத்தகைய

குறிப்பை இறையனூர் அகப்பொருளுரையில் முதல்முதலில் காண்கிறோம். அந் நூல் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. 4440-ஆண்டுகள் தொடர்ந்து நடந்த முதற் சங்கத்திலும், 3700-ஆண்டுகள் நடந்த இடைச் சங்கத்திலும் அகத்தியர் உறுப்பினராயிருந்தார் என்றும், அவருடைய இலக்கண நூலான அகத்தியம் முதற் சங்கத்தின் இலக்கண நூலாக இருந்தது என்றும், அகத்தியத்தோடு தொல்காப்பியமும் வேறு மூன்று இலக்கண நூல்களும் இடைச் சங்க நூல்களாய் இருந்தன என்றும் இறையனூர் அகப்பொருளுரை கூறுகிறது. இது மலைப்பையும் திகைப்பையும் தரும் கட்டுக்கதையாய் இருக்கிறது.

'அகத்தியர் ஓர் இலக்கண நூலை இயற்றினரா? அவர் இயற்றியிருந்தால் அது நமக்கு இன்று கிடைத்திருக்கும் மிகப் பழைய இலக்கண நூலான தொல்காப்பியத்தோடு எத்தகைய தொடர்பு கொண்டிருந்தது?' – என்பன போன்ற கேள்விகளைத் தமிழகத்தின் பெரிய உரையாசிரியர்களெல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்களுள் பேராசிரியரும் ஒருவர். அவர் ஏறக்குறைய 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தொல்காப்பியர் அகத்தியத்தைப் பின் பற்றாமல் மறைந்துபோன வேறு இலக்கண நூல்களைப் பின்பற்றித் தமது நூலை இயற்றினரென்று தம் காலத்து அறிஞர்கள் கருதினர்கள் என்றும் அது தவறான கருத்து என்றும் அவர் கூறுகிறார்.

தம்முடைய கருத்துக்கு ஆதாரமாக அவர் செவிவழிச் செய்திகளையும் பண்டை நூல்களையும் மேற்கோள் காட்டுகிறார். அப்படி அவர் காட்டும் நூல்களில் இறையனூர் அகப்பொருளுரை முக்கியமானது. அகத்தியரே தமிழ்மொழியையும் இலக்கணத்தையும் தோற்றுவித்தவர் என்றும், அவருடைய பன்னிரண்டு மாணவர்களுள் தொல்காப்பியர் தலைசிறந்தவர் என்றும், அகத்தியமே முதல்நூல் என்றும், தொல்காப்பியர் அந் நூலைப் பின்பற்றித் தம் நூலை எழுதினர் என்றும் தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனர் கூறுகிறபடி தமிழ் கூறும் நல்லுலகம் வடவேங்கடம் தென்குமரி என்ற எல்லைகளுக்குள் சுருங்கிப் போவதற்குமுன்—அதாவது கடல் கோளால் தமிழகம் மூழ்கிப் போவதற்குமுன்—அகத்தியம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும் பேராசிரியர் கூறுகிறார்.

எதிர்க்கட்சியினரும் சளைக்கவில்லை. தொல்காப்பியர் அகத்தியருடைய மாணவர் என்ற நம்பிக்கை வலிமையாக

அவர்கள் தொல்காப்பியர் பிற்காலத்தில் அகத்தியருடன் பகைத்துக் கொண்டதாகக் கூறுகிறார்கள். அவர்கள், அந்தப் பகைமைக்கு அகத்தியருடைய பொறாமையும் முன் கோபமும் காரணமாயிருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். நச்சினார்க்கினியர் அந்தப் பகையைப் பற்றி எழுதி வைத்திருக்கின்ற கதை இது: அகத்தியர் தென்னகத்தில் குடியேறிய பின்னர் வடக்கே இருந்த தம் மனைவி லோபாமுத்திரையை அழைத்து வருவதற்காகத் தம்முடைய மாணவர் திரணதூமாக்கினியை (தொல்காப்பியரை) அனுப்பினார். ஆனால், பயணம் செய்யும் போது அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் நெருங்கி நடக்காமல் குறிப்பிட்ட இடைவெளியில் நடந்து வரவேண்டும் என்று அவர் தொல்காப்பியருக்குக் கட்டளை யிட்டிருந்தார். ஆனால் வையையைக் கடந்து கொண்டிருந்தபோது அதில் வெள்ளம் வந்து விட்டது. அதனால் லோபாமுத்திரை அம்மையார் முழுகிப் போவார் போலத் தோன்றியது. அப்போது தொல்காப்பியர் ஒரு மூங்கில் கழியின் ஒரு முனையைப் பிடித்துக்கொண்டு லோபாமுத்திரை அம்மையார் அதன் மறுமுனையைப் பிடித்துக் கொள்ளுமாறு செய்து, அவ்வம்மையாரைக் கரையேற்றினார். அப்போது லோபாமுத்திரைக்கும் தொல்காப்பியருக்கும் இடையில் இருந்த தூரம் குறைந்துவிட்டது. இவ்வாறு தம் கட்டளை மீறப்பட்டதை அறிந்த அகத்தியர் 'நீங்கள் இருவருமே இறந்தபின் மேலுலகம் அடைய மாட்டீர்கள்' என்று சாபங் கொடுத்து விட்டார். தொல்காப்பியர் அதே போன்ற சாபத்தை அகத்தியருக்குக் கொடுத்துவிட்டார். இந்தச் சிறு பிள்ளைத்தனமான கதை நெடுங்காலமாக இருந்துவந்த ஒரு முக்கியமான விவாதத்தின் இறுதி நிலையைக் காட்டுகிறதென்று குறிப்பிடலாம். ஆனால், அது முடிவற்ற விவாதம்! இன்றைக்கும் அந்த விவாதம் முடிந்து விட்டதென்று கூறமுடியாது.

அகத்தியர் தமிழ் மொழியின் தந்தையார் என்றும் அகத்தியமே தொல்காப்பியத்துக்கு முதல் நூல் என்றும் கூறும் வாதமும் உண்டு. இக் கருத்துகள் தவறானவை என்னும் எதிர் வாதமும் உண்டு. இவ்விரண்டும் வடமொழியும் ஆரிய வாழ்க்கை முறையும் தமிழகத்தில் நுழைந்ததைப் பற்றி மக்கள் என்ன நினைத்தார்களென்பதைக் காட்டும் அறிகுறிகளாக இருக்கின்றன. உண்மையில், தொல்காப்பியத்திலும் பனம்பாரனார் பாயிரத்திலும் அகத்தியரைப் பற்றிய குறிப்பே இல்லை. அகத்தியரைப் பற்றிய முதற் குறிப்பு, நாம் முன்னரே பார்த்தபடி கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில்தான் இடம் பெற்றது. அந்தக் காலத்திற்முன் பாண்டிய மன்னர்கள்

அகத்தியரைத் தங்கள் குலத்தின் முன்னோராகக் கூறிக் கொள்ளும் பட்டயங்கள் வெளிவரத் தொடங்கின. பாண்டியர்கள் சங்கங் கண்டு தமிழ் வளர்த்தவர்கள். அவர்களே நமக்கு நன்றாகத் தெரிகின்ற வரலாற்று காலத்தில் அண்டை நாடுகளை வென்று முதல்முதலில் ஒரு பேரரசை நிறுவிய தமிழ் மன்னர்கள். பெரும்பாலும் எல்லாக் கதைகளும் அகத்தியருக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை ஆதரிக்கின்றன. தொல்காப்பியர் கதை பிற்காலத்தில் விரிவடைந்திருக்க வேண்டும். ஆனால், தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சியில் அகத்தியருக்கு முதலிடம் அளிப்பதற்காகச் செய்த முயற்சிகள் எதிர்ப்பைக் கிளப்பின. ஆரிய மொழியும் வாழ்க்கை முறையும் ஆரவாரம் அற்ற வகையிலும் எளிதில் புலனாகாத முறையிலும் தமிழகத்தில் ஊடுருவித் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் ஓசைப்படாமல் புரட்சி செய்து கொண்டிருந்தவரையில், எல்லாம் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டிருந்தன நெடுங்காலத்துக்கு முன்னரே தொடங்கிவிட்ட அந்தப் புரட்சியைத் தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை என்பது மட்டுமன்றி ஆரியர் வருகையால் ஏற்பட்ட மாறுதல்களை ஏற்றுக்கொள்ளவும் செய்தார்கள். அதனால், தமிழ் நாட்டில் இப்போது காணும் கூட்டியல் பண்பாட்டில் கலந்து மறைந்து விட்ட ஆரியத் தன்மைகளையும் தமிழகத் தன்மைகளையும் தனித்தனியே பிரித்துக் காண்பது முடியாமல் போய்விட்டது. ஆனால், தமிழ்மொழி ஒரு பேச்சு மொழியாக இருப்பதற்கும் அதனுடன் சேர்ந்து தமிழ்ப் பண்பாடு முழுதும் இறந்திருப்பதற்கும் வடக்கே இருந்துவந்த வேத விற்பனர் ஒருவர் காரணமானவராயிருந்தார் என்று காட்டுவதற்காக ஒரு கதையைச் சிலர் கட்டி அதனைக் கோட்பாடாகப் பரப்புவதற்கு முயன்ற போது, அதற்கு எதிர்ப்புக் கிளப்பியதும் மறுப்புக் கட்டுக்கதைகள் பல தோன்றி வளர்ந்ததும் இயல்பே. இப்போது போலவே அப்போதும், கட்டுக்கதைகளைப் பலர் தங்கள் வாதத்திற்குச் சான்றாகப் பயன் படுத்தினர்.

ஆரிய வாழ்க்கை முறை தென்னிந்தியாவில் மிக மெதுவாகத் தான் பரவியது. அதனால், தென்னகம் ஆரிய மயமாவதற்குப் பல நூற்றாண்டுகள் ஆயின. ஏறக்குறையக் கி.மு. 1000-த்தில் தொடங்கிய அந்த ஆரியமய இயக்கம் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கணப் புலவர் காத்தியாயனருடைய காலத்திற்கு முன் முடிவுற்றதாக நம்பலாம். அவர் தென்னகத்தின் தென் கோடியில் இருந்த தமிழ் நாடுகளின் பெயர்களைத் தம் நூலிற் குறிப்பிட்டிருக்கிறார். வடக்கிலிருந்து

வந்து தென்னிந்தியாவில் தங்கள் குடியேற்றங்களை நிறுவிய ஆரியர்கள் எந்த வழியாக வந்தார்கள் என்று காண்போம். விந்திய சாத்பூரா மலைகளும் நர்மதை நதியும் தெற்கே போவதற்குத் தடையாய் இருந்ததால், ஆரியர்கள் கீழைக் கடற் கரை வழியாகத்தான் தென்னகத்திற்கு வந்திருக்க வேண்டு மென்று காரண காரிய முறையில் வாதிடுகிற அறிஞர்கள் கருது கிறார்கள். ஆனால், உண்மையில் ஆரியர்கள் தங்கள் இயக்கத்தை முதலில் வடமேற்கில் தொடங்கி, பிறகு கிழக்கிலும் தெற்கிலும் நகர்ந்தார்கள் என்றுதான் முடிவு கட்டவேண்டும். ஆரியர்கள் முதலில் வட இந்தியாவின் மேற்குப் பகுதிகளிற் குடியேறினார்கள். நாளடைவில்தான் அவர்கள் கிழக்கே நகர்ந் தார்கள். அப்படியும் மேற்குப் பகுதிகள் ஆரிய மயமான அளவுக்குக் கிழக்குப் பகுதிகள் ஆரிய மயமடையவில்லை. கலிங்க நாட்டைப் பற்றிய குறிப்பு, பாணினியின் நூலில் இடம் பெறுகிறதென்பது உண்மையே. எனினும், ஆரியர்கள் உண்மையில் கிழக்குக் கடற்கரை வழியாகத்தான் தென்னிந்தி யாவுக்கு வந்தார்கள் என்று நம்ப முடியவில்லை. பிராமணங் களிலும் ராமாயணத்திலும் பௌத்தத் திருமுறையிலும் இருக்கின்ற சான்றுகள், விந்திய மலையை ஆரியர்கள் வசதியான இடங்களில் தாண்டிய பின் நர்மதை நதியையும் சாத்பூரா மலையையும் கடந்து தெற்கே சென்றார்கள் என்பதைக் காட்டு கின்றன. பழைய நாடுகளைப் பற்றிய குறிப்புகளில் விதர்ப்பமும் இடம் பெறுகிறது. ராமருடைய வனவாசத்தோடு தொடர் புடைய இடங்களில் ஒன்றையேனும் நாகபுரிக்குக் கிழக்கே யாரும் இதுவரையில் தேடவில்லை. அந்த இடங்களெல்லாம் மேற்குத் தக்காணத்தில் இருப்பதாகவே பலர் நினைக்கின்றனர். அந்தப்பகுதியில் உள்ள இடங்களுள், நாசிக்கும், அதற்கு அருகிலுள்ள இடங்களுமே ராமருடைய வனவாசத்தோடு தொடர்புடைய இடங்களாக அறிஞர் பலர் கருதுகின்றனர். பாவரியின் மாணவர்கள் அஸ்மகாவிலிருந்து மகதத்திற்குப் போன வழி ஆரியர்கள் வழக்கமாக வட நாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வருவதற்குப் பயன்படுத்திய வழியின் எதிர்த் திசையா இருந்திருக்க வேண்டும். ஆரியர்கள் வழக்கமாக அவந்தி நாட்டின் வழியாக நர்மதை நதிக் கரையிலிருந்த மாந் தாதாவை அடைந்து, அதன் பின் ஆற்றையும் அதனை அடுத்துள்ள மலையையும் தாண்டித் தென்னிந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். விதர்ப்ப நாட்டிற்குப்பின், பைத்தானை முக்கிய நகராகக்கொண்ட முலக நாட்டில் ஆரியர்கள் குடியேறினார்கள் என்றும் அதற்குப் பின் அவர்கள் அஸ்மக நாட்டிற் குடியேறினார்கள் என்றும் நாம் கருதலாம். அதற்கும் தெற்கே போவதற்கு ஆரியர்கள் எந்த

வழியைப் பயன்படுத்தினார்களென்பதை உறுதியாகக் கூற முடியாது. தென்னிந்தியப் பார்ப்பனரில் ஒரு கூட்டத்தினர்க்குப் பிருகச் சரணர் என்னும் பெயர் வழங்குகிறது. பிருகச் சரணம் என்னும் சொற்றொடர்க்குப் 'பெரிய இடப் பெயர்வு' என்பது பொருளாகும். அதனால், ஆரியர்கள் தென் திசை சென்ற ஓர் இடப்பெயர்வின் நினைவை அந்தச் சொற்றொடர் பாதுகாத்து வைத்திருப்பதாக நாம் நம்பலாம். இந்தக் கருத்து உண்மையானால், இடம் பெயர்ந்து சென்ற ஆரியர்கள் அண்மையிலிருந்த மேட்டு நிலங்களின் ஓரத்திலேயே தென் திசைக்குச் சென்றார்கள் என்றும் முதலில் மைசூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய பகுதிகளின் மேற்குப் பக்கத்தில் குடியேறினார்கள் என்றும், அதன் பின்னரே அவர்கள் தென்னிந்தியாவின் ஏனைய பகுதிகளுக்குச் சென்றார்கள் என்றும் நாம் கருதலாம். பிருகச் சரண கோத்திரத்தின் ஒரு கிளையான மலநாடு என்னும் கோத்திரம் கண்டரமாணிக்கம், மாங்காடு, சத்தியமங்கலம் என்று மேலும் மூன்று சிறு கிளைகளாகப்பிரிந்து காணப்படுவதும், மேலே சொன்ன மூன்று பெயர்களும் மேற்கு மலைத் தொடரை ஒட்டியுள்ள மூன்று கிராமங்களின் பெயர்களாக இருப்பதும் மேற்சொன்ன கருத்துக்கு ஆதரவளிப்பதாகக் கருதலாம். ஆனால், இந்த முடிவுகளெல்லாம் ஊகங்களே தவிர அவற்றிற்குத் தகுதியான நேர்ச் சான்று எதுவும் இல்லை. விந்திய மலையைத் தாண்டித் தென்திசை சென்றது போலவே ஆரியர்கள் வேறு வழிகளிலும் சென்றிருக்கலாம். எடுத்துக்காட்டாக, சிந்து நதியின் கடல் வாய்களிலிருந்து தெற்கே குஜராத்துக்கும் வட பம்பாய்க் கரைக்கும் செல்லும் கடல் வழி ஒன்றிருந்தது. சிறிது காலத்திற்குப்பின் கலிங்கத்திலிருந்து தெற்கே செல்வதற்கான கீழ்க் கடல் வழியும் வடக்கிற்கு வந்தது. வட இந்தியவிலிருந்து கடல் வழியாகச் சென்ற ஆரியர்கள்தாம் இலங்கையிற் குடியேறினார்களென்ற கருத்துக்கு அந்த நாட்டில் வழங்கும் இந்தோ ஆரிய மொழியான சிங்களம் சான்றாக இருக்கிறது.

தென்னிந்தியா ஆரிய மயமாவதற்கு ஏழெட்டு நூற்றாண்டுகள் ஆயின. அந்த நீண்ட காலத்தில் ஆரிய வாழ்க்கை முறை சிறிது சிறிதாக வேரூன்றியதன் பயனாகத் தென்னிந்தியாவில் ஒரு புதிய பண்பாடு தோன்றி வளர்ந்தது. கீழை மேலை நாடுகளோடு தென்னிந்தியா வைத்திருந்த பழங்காலத் தொடர்புகளுக்கு மேலே சொன்ன காலத்தில் எந்த வித இடையூறும் நேரவில்லை யென்பதைத் தொல்பொருளியற் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் காட்டுகின்றன. அதைப் பற்றி இப்போது சிறிது கவனிப்போம்:

சாலமனைக் காண்பதற்காகத் தன்னுடைய ‘பரிவாரங்களோடு ஜெரூசலத்துக்குச் சென்ற ஷீபாராணி அளவு கடந்த பொன்னையும் மணியையும் கொண்டு போனாள். மேலும், அவள் பல நறுமணப் பொருள்களை ஒட்டகங்களின்மீது ஏற்றிக் கொண்டு சென்றாள்.’ ஹீராமினுடைய கடற்படை, ‘ஓபீரிலிருந்து பொன்னையும் மணியையும் மட்டுமன்றி மிக அதிகமான அகிற் கட்டைகளையும் கொண்டு போயிற்று.’ மன்னன் சாலமன் ‘தந்தத்தால் ஒரு பெரிய அரியணையைச் செய்து அதன் மீது மிக உயர்ந்த பொற்றகடு போட்டான்.’ ‘ஹீராமின் (Hiram) கடற்படையோடு சாலமன் தன்னுடைய கடற்படையையும் தர்ஷிஷ் என்னும் இடத்தில் வைத்திருந்தான். மூன்றாண்டுக்கு ஒரு முறை தர்ஷிஷ் கடற்படையானது பொன், வெள்ளி, தந்தம், குரங்கு, மயில் முதலியவற்றுடன் திரும்பிச் சென்றது.’ ஹீராம், டயர் என்னும் இடத்தில் ஆட்சி செய்த பினீஷிய அரசனோடு சாலமன் செய்துகொண்ட உடன்பாடு, அந்த நாள் ஜெரூசலத்தின் செல்வச் செழிப்புக்கு ஒரு முக்கிய காரணமாய் இருந்தது. ஹீராம் சாலமனுடைய ராஜ்யத்தைச் செங்கடலுக்குச் செல்வதற்கு ஏற்ற ஒரு பெருஞ் சாலையாகப் பயன்படுத்தினான். அங்கு அவன் கட்டிய கப்பல்கள், வாணிபத்தை வளர்த்து, ஜெரூசலத்தின் செல்வப் பெருக்குக்குப் பெரிதும் உதவின. ஓபீர் என்பது ஆபீர நாடாக இருக்கலாம். அதனுடன் இணைந்திருந்த தர்ஷிஷ் என்னும் இடமும் அண்மையிலேயே இருந்திருக்க வேண்டும். சாலமனுக்குப் போய்ச் சேர்ந்த மயிலும் அகிலும் தென்னிந்தியப் பொருள்களே. வெள்ளி இந்தியப் பொருளன்று. ஆனால், ஜெரூசலத்துக்குச் சென்ற தந்தத்தில் ஒரு பகுதி இந்தியாவிலிருந்து சென்றிருக்கலாம். யானையைக் குறிக்கும் ஹீப்ரு, எகிப்து, கிரேக்கப் பெயர்களெல்லாம் ‘இபா’ என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து வந்தவை. பாரசீக வளைகுடாவின் தென் கரையிலிருந்த டெடன் என்னும் துறைமுகத்திலிருந்து வந்த வணிகர்கள் அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து கருங்காலி மரத்தைப் பாலஸ்தீனத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அசீரியப் பேரரசும் பாபிலோனியப் பேரரசும் பாரசீக வளைகுடாவில் தங்களுக்குச் சொந்தமான துறைமுகங்களிலிருந்து இந்தியாவுடன் வாணிகஞ் செய்துவந்தன. பொன்னும், கிராம்பும் போன்ற நறுமணப் பொருள்களும் அகில் போன்ற நறுமன மரங்களும் இந்தியாவிலிருந்து அந்த நாடுகளுக்குச் சென்றன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் கடல் வழியாக இறக்குமதியானவையும் பாபிலோனில் இல்லாதவையுமான அரிசி, மயில், சந்தனமரம் முதலிய எல்லாப் பொருள்களும் திராவிட மொழிப் பெயர்களையே

தாங்கிவந்தன. அவை வடமொழிப் பெயர்களைத் தாங்கி வரவில்லை. பாபிலோனியாவின் கட்டளையளவை அடிப்படையாகக் கொண்டு பொறித்த நாணய முறை ஒன்றைக் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் மேல்நாட்டு வணிகர்கள் தென் சீனாவில் புகுத்தினார்கள். பாபிலோனியாவுக்கும் சீனாவுக்கும் நடந்த கடல் வாணிகம் இந்தியாவையும் உள்ளடக்கியதாகத்தானே இருந்திருக்கும்? கி.மு. 604 முதல் கி.மு. 562 வரையில் ஆட்சிசெய்த நெபுக்கட்நஜாருடைய அரண்மனையிற் கிடைத்துள்ள இந்தியச் செவ்வகில் விட்டமும், 'ஊர்' என்னுமிடத்தில் நிலாக்கடவுள் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட, ஏறக்குறைய அதே காலத்தையோ சிறிது பிற்பட்ட காலத்தையோ சேர்ந்த தேக்கு மரத்துண்டுகளும், முதல்முதலாக மயிற்பறவை ஒன்றைக் கடல் வழியாக பாபிலோனியாவுக்குக் கொண்டுபோன இந்திய வணிகர் சிலருடைய அனுபவங்களைக் கூறுகின்ற பாவெறு ஜாதகக் கதையும் தென்னிந்தியாவுக்கும் அதற்கு அண்மையில் இருந்த மேலை நாடுகளுக்கும் கடல் வாணிகம் சுறுசுறுப்பாக நடைபெற்றதென்பதை உறுதிப்படுத்துகின்றன. கி.மு. ஏழாம் ஆறும் நூற்றாண்டுகளில் பாபிலோனியா சிறப்பின் உச்ச நிலையில் இருந்தது. அப்போது அது உலகத்தின் மிகப் பெரிய வாணிக நிலையமாய் விளங்கியது. அதன் கடைத் தெருக்களிற் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் எந்த நேரத்திலும் காணப்பட்டார்கள். அவர்கள் கூட்டத்தில் தென்னிந்திய வணிகர்களும் இருந்தார்களென்பதை நாம் உறுதியாக நம்பலாம். பாபிலோனியாவின் வீழ்ச்சிக்குப்பின் அந்த வாணிகம் மௌஜா, ஏடன், கேன் ஆகிய இடங்களிலிருந்த அரபு வணிகர் கைக்கு மாறியது. ஹிப்பாலஸ், பருவக்காற்றின் தன்மைகளைக் கண்டுபிடித்த காலம்வரையில் கப்பல்கள் கரையோரமாகவே இந்தியாவுக்குச் சென்றன என்றும், அவை சிறிய கப்பல்களாய் இருந்தன என்றும், பெரிப்ளஸ் நூல் கூறுகிறது. ஆனால், பாரசீக வளைகுடாவையும் இந்தியாவையும் இணைத்த வழக்கமான வாணிக வழி கெட்ரோசியாவின் வசதியும் வளமும் இல்லாத கடற்கரையோரமாக அமைந்திருக்க முடியாது. கி.மு. 512-ல் டாரியஸ் மன்னரின் ஆணைப்படி சிந்து நதியின் கடல்வாயிலிருந்து ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட மாலுமிகளும், அதே வகையான ஒரு பயணத்தை ஏறக்குறைய இருநூறாண்டுகளுக்குப்பின் அலக்சாண்டருடைய ஆணைப்படி மேற்கொண்ட மாலுமிகளும் அந்தவழி அபாயம் நிறைந்தது என்பதையும், அந்த வழியில் போவதற்கு அதிக காலம் பிடிக்கும் என்பதையும் அறிந்தார்கள். மேலும், அது அவர்களுக்குப் பழக்கமில்லாத புது வழியென்பதையும் அந்தப் பயணங்கள் காட்டின. மிகப்

பழங்காலத்திலிருந்தே இந்தியா, அரேபியா, பாரசீகம் ஆகிய நாட்டு மாலுமிகளுக்குப் பருவக்காற்றின் இயல்புகள் நன்ருகத் தெரிந்திருக்கவேண்டும். கி.மு. ஏழாம் நூற்ருண்டில் சீனுவுக்குச் சென்ற மாலுமிகள் நடுக்கடலில் கப்பல் விடுவதற்கு அஞ்சியிருக்கமாட்டார்கள். பருவக்காற்றின் தன்மைகளை ஹிப்பாலஸ் கண்டு பிடித்தது (ஏறக்குறைய கி.பி. 45) உண்மையாயிருந்தால், அதனுல் பயன்பெற்றவர்கள் கிரேக்க-ரோமானிய மாலுமிகளாகத்தான் இருக்கவேண்டும்.

கி.மு. ஏழாம் நூற்ருண்டிலேயே வணிகர்கள் இந்தியப் பொருள்களைக் கடல்வழியாகச் சீனுவுக்குக் கொண்டுபோனுர்கள் என்ற செய்திக்குச் சீன வரலாற்றில் ஆதாரம் இருக்கின்றது. அந்தச் செய்தி உண்மையாயிருக்க முடியாதென்றே மக்கள் பொதுவாக நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனுல், பிலிப்பைன் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற இரும்புக் காலக் கருவிகள், தென்னிந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற இரும்புக் காலக்கருவிகளை மிகவும் ஒத்திருக்கின்றன. அவற்றின் காலம் ஏறக்குறையக் கி.மு. ஆயிரம் முதல் கி.மு. ஒன்று வரையில் ஆகும். கி.மு. ஏழாம் நூற்ருண்டிலேயே சீனுவுக்கும் இந்தியாவுக்கும் கடல் வாணிகம் நடைபெற்றதென்பதற்கு இச் செய்தி குறிப்பிடத்தக்க சான்ருக இருப்பது மட்டுமன்றி இதைப் பற்றிய சீன வரலாற்றுக்குறிப்பும் உண்மையானதென்பதை உறுதி செய்கிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களில் கத்தி, கோடரி, குத்துவாள், ஈட்டிமுனை ஆகியவையும், அகேட் கார்னீலியன் அமித்திஸ்ட் படிகம் ஆகிய மணிக்கற்களால் செய்யப்பெற்ற உருள்மணிகளும், நீலநிறமும் பச்சை நிறமும் உடைய கண்ணுடி வளையல்கள், உருள்மணிகள் ஆகியவையும் இருந்தன. பழைய இரும்புக்காலப் பாளங்களில் இரும்பின் கலப்பால் நிறம் பெற்ற பச்சைக் கண்ணுடிப் பொருள்கள் மட்டும் கிடைத்தன. பின்னைய இரும்புக்காலப் பாளங்களில் தாமிரக் கலவையால் நிறம் பெற்ற நீலக் கண்ணுடிப் பொருள்களும் கிடைத்தன. பிலிப்பைன் தீவுகளில் கிடைத்த 'இரும்புக் கருவிகள் கண்ணுடிப் பொருள்கள் அனைத்தும், தென்னிந்தியாவில் கிடைத்தவையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையும் ஆகிய இரும்புக் கருவிகளையும் கண்ணுடிப் பொருள்களையும் ஒத்திருக்கின்றன. அவற்றுள் சில ஒன்று போலவே இருக்கின்றன. தென்னிந்தியாவில் பல நூருயிரக் கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற கல்திட்டைக் கல்லறைகளிலும் இடுகுழிகளிலும் அந்தப் பொருள்கள் கிடைத்தன. அந்தக் கல்திட்டைக் கல்லறைகளும் இடுகுழிகளும் கிறிஸ்து

சகாப்தத்தின் தொடக்கத்திலோ அதற்கு முன்னரோ வரலாற்றில் இடம்பெற்ற சேர சோழ பாண்டிய அரசுகளுக்கும் முற்பட்டவை. தென்னிந்தியாவிலும் பிலிப்பைன் தீவுகளிலும் கிடைத்திருக்கிற கண்ணுடி வளையல்களையும் உருள்மணிகளையும் போன்ற பொருள்கள் அண்மையில் மலேயா தீபகற்பத்திலும், போர்னியோவிலும், ஜாவாவிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கி.மு. ஆயிரத்திற்கும் கி.மு. ஒன்றிற்கும் இடைப்பட்ட காலத்தின் முற்பகுதியிலேயே தென்னிந்தியாவுக்கும் வட பிலிப்பைனுக்கும் வாணிகத் தொடர்பு இருந்ததென்பது தவிர்க்க இயலாத முடிவாக இருக்கிறது. கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்றுண்டுகளில் தென்னிந்தியாவுக்கும் சுமாத்திரா, ஜாவா, இந்தோ–சீஞ ஆகிய நாடுகளுக்கும் இருந்த தொடர்பு நமக்கு நன்ருகத் தெரிந்த ஒன்று. ஆனுல், அந்தத் தொடர்பு ஆரம்பத் தொடர்பு அன்று என்பதையும், அதற்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே வட பிலிப்பைன் வரையிலிருக்கும் கீழை நாடுகளோடு ஏற்பட்ட ஒரு பழந் தொடர்பின் இறுதியிலேதான் அதுவென்பதையும் இப்போது கிடைத்துள்ள புதுச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன என்று சொல்லலாம்.'

## BIBLIOGRAPHY

D. R. Bhandarkar : 'Lectures on the Ancient History of India from 650 to 325 B. C.' (Calcutta, 1919)

R. G. Bhandarkar : 'Early History of the Dekkan' (Bombay, 1895)

R. B. Dixon : 'Recent Archaeological Discoveries in the Philippines' (Proceedings of the American Philosophical Society, Vol. 69, 1930)

P. T. Srinivasa Iyengar : 'History of the Tamils' (Madras, 1929)

J. Kennedy : 'The Early Commerce of Babylon with India' (FRAS, 1898)

W. Logan : 'Malabar', Vol. I (Madras 1887)

W. H. Schoff (ed.) : 'The Periplus of the Erythraean Sea' (New York, 1912)

# 5. மௌரியப் பேரரசின் காலம்

*தென்னிந்தியாவில் நந்தர் ஆட்சி—சந்திரகுப்த மௌரியரின் முடிவைப்பற்றிச் சமண நூல்கள் கூறுவது—பொறிப்புகள்—வட இந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் நடைபெற்ற வாணிகத்தைப் பற்றி அர்த்தசாத்திரம் கூறுவது—பாண்டியரைப்பற்றி மெகஸ்தனிஸ் கூறுவது—அசோகர் கற்றூண் கட்டளைக் கல்வெட்டுகளில் தமிழக அரசுகள்—சத்திய புத்திரர்—தக்காணத்தில் அசோகர் பேரரசு—தமிழக அரசுகளின் கூட்டிணைவு—தென்னிந்திய அரசியலில் மௌரியர் கவனம் செலுத்துதல்—மலை முழைஞ்சுகளிலுள்ள பிராமிப் பொறிப்புகளும் அவற்றின் பொருளும்.*

கி.மு. நான்காம் நூற்றாண்டில் நந்தர்களுடைய ஆட்சியில் மகதப் பேரரசின் எல்லைகள் பெரிதும் விரிந்தன. நந்தர்களை மக்கள் அவ்வளவாக விரும்பவில்லையென்றாலும் அவர்கள் மிகவும் வலிமை பெற்ற அரசர்களா யிருந்தார்கள். தங்களுக்குப் போட்டியாக இருந்த எல்லா அரசர்களையும் அவர்கள் வென்று இந்தியா முழுவதையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அவர்களுடைய ஆட்சி தென்னிந்தியாவில் எவ்வளவு தொலைவு பரவியிருந்தது என்று சொல்வது எளிதன்று. கலிங்கநாடு அவர்களுடைய ஆட்சி எல்லைக்குள் இருந்ததென்பது, கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் அங்கே ஆட்சி செய்த காரவேலனுடைய ஹாத்திக்கும்பா கல்வெட்டிலிருந்து தெரிகிறது. கால்வாய்ப்பாலம் ஒன்றைக் கட்டிய ஒரு நந்த அரசனைப்பற்றிய குறிப்பை அந்தக் கல்வெட்டில் காண்கிறோம். போரில் வெற்றியடைந்த நந்த அரசன் ஒருவன் கலிங்க மன்னர்களுக்குச் சொந்தமான ஜினருடைய உருவச் சிலை ஒன்றையும் ஏனைய பரம்பரையுடைமைகள் சிலவற்றையும் வெற்றிச் சின்னங்களாய் எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்று அதே கல்வெட்டில் இன்னொரு குறிப்பும் காணப்படுகிறது. மைசூரிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கி.பி. பத்தாம் பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னடப் பொறிப்புகள் நந்தர்கள் குந்தள

நாட்டில் ஆட்சி செய்ததைப்பற்றிய மங்கிய நினைவுகளைப் பாது காத்துவைத்திருக்கின்றன. ஆனால், இந்த மரபுவழிச் செய்தியை உறுதிப்படுத்தும் சான்று ஒன்றும் இல்லை. கோதாவரியின் மேல் நிலத்திலிருக்கும் நாண்டர் என்னுமிடத்தை நவநந்ததேரா என்னும் பழம்பெயரோடு தொடர்புபடுத்தி, அது தக்காணத்தில் நந்தர்களுடைய ஆட்சியின் எல்லையை குறிக்கிறதென்று சிலர் கூறுகின்றனர். வட இந்தியாவில் மட்டுமன்றி, தக்காணத்திலும் தமிழகத்திலும் இலங்கையிலும் பரவலாகக் கிடைத்துள்ள அடையாளத் தொளையிட்ட புராண நாணயங்கள் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இருந்த பழங்காலத் தொடர்புகளைக் காட்டும் தெளிவான சான்றுகளாகும். ஆனால், அத் தொடர்புகளின் விவரங்கள் இப்போது நமக்குத் தெரியவில்லை. வடஇந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இருந்த வாணிகத் தொடர்புகளை உய்த்துணர்வதற்கு அந்த நாணயங்கள் உதவுகின்றன; ஆனால், நந்தப்பேரரசின் தெற்கு எல்லையை நிர்ணயிப்பதற்கு அவை பயன்படவில்லை. தக்காணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அசோகர் கல்வெட்டுகளின் அடிப்படையில் மௌரியப் பேரரசின் தெற்கெல்லையை நாம் நிர்ணயிக்கலாம். அந்த எல்லைக்குள்ளேதான் நந்தர்களுடைய ஆட்சிக்குட்பட்ட குந்தள நாடு இருந்தது. அதுவே அவர்களுடைய பேரரசின் தெற்கு எல்லை என்று கொள்ளலாம்; ஏனெனில், மௌரிய அரசர்கள் நாடு பிடிப்பதற்காகத் தென்னிந்தியாவின்மீது படையெடுத்தார்களென்று நினைப்பதற்குரிய தெளிவான சான்று எதுவும் இல்லை. நந்தர்களை வீழ்த்திய மௌரியர்கள் அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட வட இந்தியப் பகுதிகளுக்கு அரசரானது போலவே நந்தர்களுடைய ஆட்சியிலிருந்த தென்னாட்டுப் பகுதிகளுக்கும் அரசரானார்கள் என்று நாம் கொள்வோமானால், கன்னடப் பொறிப்புகளிற் காணும் மரபு வழிச் செய்தி உண்மையாகத்தான் இருக்க வேண்டும். நந்தர்கள் ஈட்டிய பெருஞ்செல்வத்தைப்பற்றிப் பழந்தமிழ் மக்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். உண்மையில் அது நாடறிந்த செய்தியாய் இருந்தது. தலைவனைப் பிரிந்த தலைவி பின்வருமாறு தன் தோழியிடங்கூறி வருந்தியதாக மாமூலனார் என்னும் சங்ககாலப் புலவர் கூறுவதிலிருந்து இவ்வுண்மையை நன்கறியலாம். இதோ மாமூலனார் கூற்று :

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ
..........................................
செந் நுதல் யானை வேங்கடந் தழீஇ

வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர்
நம்மினும் வலிதாத் தூக்கிய பொருளே''.

—அகநானூறு : 265—பாலை.

'என் தலைவர் என்னைப் பிரிந்து இத்தனை நாள் வெளியூரில் இருப்பதற்கு என்ன காரணம் இருக்கக்கூடும்? போரில் வல்லவர்களும் வளமிக்க பாடலிபுரத்தில் ஆட்சி செய்பவர்களும் ஆகிய நந்தர்கள் ஈட்டிக் கங்கை நீருக்கடியில் ஒளித்து வைத்திருக்கும் பெருஞ்செல்வத்தை என்னைவிட உயர்வாகக் கருதி அதனை அடைவதற்காக அங்கு நின்றுவிட்டாரோ?' என்பது மேற்குறித்த செய்யுளின் பொருள்.

சுருதவேலிகள் என்று பெயர் பெற்ற சமண முனிவர்களுள் கடைசியில் வாழ்ந்தவரான பத்திரபாகு என்பவர் பன்னீராண்டுப் பஞ்சம் ஒன்று வரப்போவதாக முன்கூட்டியே அறிந்து சொன்னதால், சந்திரகுப்த மௌரியர் தம்முடைய அரசைத் துறந்துவிட்டு, பத்திரபாகு முனிவருடனும் அவருடைய மாணவர்களுடனும் சேர்ந்து தென்திசைச் சென்றுவிட்டதாகச் சமண சமயமரபு செய்திகள் கூறுகின்றன. மைசூரிலுள்ள சிரவண பெல்கோலாவில் சந்திரகுப்த மௌரியர் சமணத் துறவியாகப் பல ஆண்டுகள் வாழ்ந்ததாகவும், இறுதியில் சல்லேகனம் செய்து (பட்டினியிருந்து) உயிர் துறந்ததாகவும் மரபுவழிக் கதைகளும் கூறுகின்றன. அதற்குப் பன்னிரண்டாண்டுகட்கு முன்னரே சந்திரகுப்தரோடு வந்த பத்திரபாகு முனிவர் இறந்து போனார். சிரவணபெல்கோலாவிலும் அதற்கருகிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பொறிப்புகள் பத்திரபாகு முனிவரையும் சந்திரகுப்த முனீந்திரரையும் குறிப்பிடுகின்றன. கி.பி. 600–ஐச் சேர்ந்ததென்று சொல்லத்தக்க பழைய பொறிப்பு ஒன்று அவ்விருவர் பெயரையும் குறித்து, அவர்கள் 'தர்மத்தைக்' கடைப் பிடித்தவர்கள் என்று குறிப்பிடுகிறது.

அதற்கும் முற்பட்ட—ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிற்படாததென நினைக்கத்தக்க—இன்னொரு பொறிப்பில் மேலே சொன்ன எல்லாக் கதைகளின் கூறுபாடுகளையும் காண்கிறோம். இந்தப் பொறிப்பில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன: 'பத்திரபாகு முனிவர், உஜ்ஜைனியிலிருந்தபோது பன்னீராண்டு தொடர்ந்து துன்பந்தரக்கூடிய கடும் பஞ்சம் வரப் போவதாகச் சொன்னாராம். உடனே, சமண சங்க உறுப்பினர் அனைவரும் தென்திசைச் செல்ல முடிவுசெய்து பத்திரபாகு முனிவருடைய தலைமையில் புறப்பட்டுவிட்டார்கள். அவர்கள்

மக்கள் நெருக்கமும் வளமும் மிகுந்த ஒரு நாட்டில் (மைசூர்) உள்ள கடவப்பிரா (சந்திரகிரி) என்னும் மலையையடைந்தபோது, தம்முடைய வாழ்நாள் விரைவில் முடியப்போவதை உணர்ந்திருந்த பிரபாச்சந்திரர் என்னும் ஆச்சாரியர் சமண சங்க உறுப்பினரனைவரையும் போகச் சொல்லிவிட்டு, ஒரே ஒரு மாணவரை மட்டும் தமக்குத் தொண்டு செய்ய வைத்துக் கொண்டு, தவஞ்செய்து தம் 'உடற்கூட்டினின்று விடுதலை பெற்றார்.'

சீரங்கப்பட்டணத்திலும் அதற்கருகிலும் ஏறத்தாழக் கி.பி. 900–ஐச் சேர்ந்த இரண்டு பொறிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை, சந்திரகிரி மலையின் கீழுள்ள சிரவணபெல்கோலாவில் பத்திரபாகு, சந்திரகுப்த முனிபதி ஆகிய இருவருடைய அடிச்சுவடுகளும் பதிந்திருந்ததாகக் கூறுகின்றன. சிரவணபெல்கோலாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பன்னிரண்டாம் நூற்றாண்டையும் பதினைந்தாம் நூற்றாண்டையும் சேர்ந்த பிற்காலப் பொறிப்புகளிலும் இந்தக் கதையைச் சில மாறுதல்களுடன் திரும்பவும் காண்கிறோம்.

இலக்கியங்களிலும் இந்தக் கதை இடம் பெறுகிறது. அத்தகைய நூல்களுள் முதலில் எழுதப்பெற்ற நூல் ஹரிசேனர் (கி.பி. 931) எழுதிய 'பிரிஹத் கதாகோசம்' என்பதாகும். சந்திரகுப்த மௌரியர் உண்மையில் எவ்வாறு இறந்தார் என்பதைப் பற்றிய தெளிவான சான்று ஒன்றும் இல்லாத நிலை அவருடைய முடிவைப்பற்றிய கதைகள் உண்மையாக இருக்கக்கூடும் என்னும் எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. ஆனால், கதைகளின் இயல்புகளே அவை உண்மையில் நடக்க இயலாதவை என்பதைக் காட்டுகின்றன. எனவே, பொறிப்புகள் கூறும் சந்திரகுப்த முனிவர் யாரென்பதே ஐயத்திற்கிடமின்றித் தெரியவில்லை.

மௌரியப் பேரரசின் தொடக்கக் காலத்தில் வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் நடந்த வாணிகத்தைப்பற்றிச் சில முக்கியமான செய்திகளைக் கௌடில்யர் இயற்றிய அர்த்த சாத்திரம் கூறுகிறது. கௌடில்யர் அந் நூலில், 'யானை, குதிரை, தந்தம், தோல், பொன், வெள்ளி, நறுமணப் பொருள் ஆகிய விலையுயர்ந்த பொருள்களெல்லாம் வடக்கே கிடைப்பதால், தரை வழிகளுள் தட்சிணபதத்திற்குச் செல்லும் வழியைவிட இமயத்திற்குச் செல்லும் வழிதான் சிறந்ததென்று என் ஆசிரியர் கூறுகிறார்' என்று குறிப்பிடுகிறார். ஆனால், அவரே தம்

முடைய ஆசிரியரின் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு மாறான தம்முடைய கருத்தைக் கூறி விளக்குகையில், 'தட்சிண பதத்தில் கம்பளித் துணி, தோல், குதிரை முதலியவை இல்லை யென்றாலும், அங்கே வைரம் முதலிய விலையுயர்ந்த மணிக் கற்களும், பொன்னும், முத்தும், சங்கும் அளவற்றுக் கிடக் கின்றன. மேலும், தென் திசைச் செல்லும் வணிக வழியிற் கனிப்பொருள் மிக்க சுரங்கங்கள் பல இருப்பது மட்டுமன்றி அளவிறந்த வாணிகப் பொருள்களும் கிடைக்கின்றன. பல வணிகர்கள் அடிக்கடி அந்த வழியைப் பயன்படுத்துகிறார்கள். அது பயணம் செய்வதற்கு எளிதாகவும் இருக்கிறது. ஆதலால், அதுவே மிகச் சிறந்த வழி' என்று குறிப்பிடுகிறார். நந்த மௌரியப் பேரரசுகள் தோன்றியதன் விளைவாக வட இந்தியா வுக்கும் தென்னிந்தியாவுக்கும் பெரு வாணிகம் தொடங்கி நடக்கும் நிலை ஏற்பட்டதென்பதை கௌடில்யருடைய கூற்று நமக்குக் காட்டுகிறது. கௌடில்யருடைய ஆசிரியர் விரைவாக மறைந்து கொண்டிருந்த பழைய நிலையை விளக்கியுள்ளார் என்பதையும், கௌடில்யர் புதிய சூழ்நிலையில் தென்னிந்தியா வோடு வாணிகம் செய்வதுதான் இலாபந்தரக்கூடியது என்ற நிலையை விளக்கியுள்ளார் என்பதையும் நாம் தெளிவாக உணர் கிறோம். வைரம் முதலிய விலை மதிப்புள்ள மணிக் கற்கள், முத்து, பொன் முதலியவற்றைப்பற்றிய குறிப்பும், தென் திசைச் சென்ற வழியைப் பல வணிகர்கள் பயன்படுத்தியதைப்பற்றிய குறிப்பும், அந்த வழி கடத்தற்கு எளிதாக இருந்தது என்ற குறிப்பும் நம் கவனத்தை முக்கியமாகக் கவர்கின்றன. மேலும், அரச கருவூலத்திற்குச் சென்ற பொருள்களில் பாண்டிய கவாடத்துத் தண்பொருநையாற்று முத்துகளையும் கேரள நாட்டுச் சூரண நதியின் முத்துகளையும் கௌடில்யர் குறிப்பிடு கிறார். பாண்டிய கவாடம் என்பது பாண்டிய நாட்டு மலைய கோடி மலையைக் குறிப்பதாக உரையின் வாயிலாக அறிகிறோம். அன்றியும் அவர் மதுரையிலிருந்து வந்த மெல்லிய ஆடைகளைக் குறிப்பிடுவதோடு, தென்திசையிலிருந்து வந்த பல வண்ண வைடூரியக் கற்களையும், பலவகைச் சந்தன மரங்களையும் குறிப்பிடுகிறார்.

பாண்டிய நாட்டை ஹெராக்கிலிஸ் என்பவன் மகளான பண்டையா என்பவள் ஆட்சி செய்தாளென்று மெகஸ்தனிஸ் கூறிய கற்பனைச் செய்தியைப்பற்றி நாம் முன்னரே கூறினோம். அந்தக் கட்டுக் கதை பாண்டிய அரசின் தோற்றத்தைப்பற்றிக் கூறுகிறது என்றும், மெகஸ்தனிஸ் காலத்திலிருந்த உண்மை நிலையைக் கூறவில்லை என்றும் கருதுவது பொருத்தமாக

இருக்கும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்த குடிமக்கள் அரசின் கருவூலத்துக்குத் தங்கள் திறையைக் கொண்டு வந்ததாக மெகஸ்தனிஸ் கூறுகிறார். நாடோறும் அரச மாளிகைக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கிராம மக்கள் தவறாது கொண்டு வந்து கொடுத்தார்களென்று நாம் மெகஸ்தனிஸ் கூற்றுக்குப் பொருள் கொள்வது பொருத்தமா யிருக்கலாம். இதைப்போன்ற செய்தி சிலப்பதிகாரத்தில் (கி.பி. 600) கூறப்படுகிறது. அது மதுரையை அடுத்திருந்த ஆயர்பாடியில் வாழ்ந்த குறிப்பிட்ட ஆயர் குடும்பம் குறிப்பிட்ட நாளில் அரண்மனைக்குத் தேவையான நெய்யை முறைப்படி கொண்டுபோய்க் கொடுத்த செய்தியே ஆகும்.

'மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்
காலை முரசம் கனைகுரல் இயம்புமாகலின்
நெய்ம் முறைநமக் கின்றாமென்(று)
ஐயை தன் மகளைக் கூஉய்க்
கடைகயிறும் மத்துங் கொண்(டு)
இடை முதுமகள் வந்து தோன்றுமன்.'

—சிலப்பதிகாரம்: ஆய்ச்சியர் குரவை.

அசோகருடைய இரண்டாம் கட்டளைக் கல்தூணிலும் பதின் மூன்றாம் கட்டளைக் கல்தூணிலும் தென்னிந்திய அரசுகளும் இலங்கையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பதின்மூன்றாம் கல் வெட்டில் இருப்பதைவிட அதிகமான செய்திகள் இரண்டாம் கல்வெட்டில் இருக்கின்றன. அதில் சேர, சோழ, பாண்டிய, சத்தியபுத்த, கேரளபுத்த, தம்பப்பன்னி (இலங்கை) ஆகிய அரசு பெயர்கள் இடம்பெறுகின்றன. அந்த நாடுகள் அனைத்துமே அசோகப் பேரரசின் எல்லைகளுக்கு அப்பால் இருந் தவை என்பதை அந்தக் கல்வெட்டுகள் தெளிவாகக் கூறுகின்றன. அசோகர், அந்த நாடுகளுடன் மிக நெருங்கிய நட்புறவு கொண் டிருந்தாராதலால் அங்கெல்லாம் அவர் மக்களுக்கும் விலங்கு களுக்கும் தேவையான மருத்துவ உதவியைச் செய்வதற்கும், மருந்துக்குப் பயன்படும் செடிகளையும் மூலிகைகளையும் வெளியி லிருந்து கொண்டுவந்து தேவையான இடங்களில் அவற்றைப் பயிர் செய்ய உதவுவதற்கும் முன்வந்தார். மேலும், அவர் புத்த மதக் கொள்கைகளின் சாரத்தை (தர்மத்தை) எடுத்துச் சொல் வதற்காக அந்த நாடுகளுக்கு பௌத்தத் துறவிகளையும் அனுப்பி வைத்தார். இவ்வாறு அவர் அந்த நாட்டு மக்களின் உடல் நலத்தை மட்டுமன்றி ஆன்ம நலத்தையும் நன்னெறியையும் பேணுவதிலும் ஆர்வங்காட்டினார். அசோகக் கல்வெட்டுகள்

இத்தகைய செய்திகளைக் குறிப்பிடுவது ஒன்றே அக்காலத் தென்னிந்திய மக்களின் பொதுவான பண்பாடும் நாகரிகமும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன என்பதற்குப் போதிய சான்ருகும். நிலைத்ததோர் அரசியல் சமுதாய அமைப்பும் ஒழுங்காகச் செயல் பட்ட நிர்வாகமும் நீண்டகாலமாகத் தமிழகத்திலும் இலங்கை யிலும் இருந்ததால்தான் அசோகர் அந்த நாடுகளோடு அத்தகைய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார் என நாம் உறுதியாக நம்பலாம்.

சத்தியபுத்த நாடு எது என்பதை நிர்ணயிப்பது எளிதன்று அதைப்பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. 'சத்திய புத்திரர்' என்னும் வடமொழித் தொடர்தான் 'சத்திய புத்த' என்று மருவியது என்றும், அது ஒரு குலமரபு குழுவின் பெயரென்றும், 'உண்மை பேணுவோர்' கூட்டம் என்று அது பொருள்படும் என்றும் அண்மைக்காலம் வரையில் அறிஞர் கருதினர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்களும் போரில் பேராண்மை மிக்கவர்களுமான கோசர் என்ற மரபின ரைப்பற்றிப் பண்டைச் சங்க இலக்கியத்தில் நாம் படிக்கிருேம். அந்தப் பண்டை இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிறப்பு களுக்கு உரிய மரபினர் கோச மரபினரே ஆவர். இந்தக் கோச மரபினருக்கே சத்திய புத்திரர் என்னும் பெயர் பொருத்தமாக இருக்கும். இவர்கள் இன்றைய சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் வாழ்ந்தவர்கள். அந்தக் காலத்தில் அந்தப் பகுதிக்குக் கொங்குநாடு என்ற பெயர் வழங்கியது. இவர்கள் மேற்குக் கடற்கரையில் இருந்த துளுவ நாட்டைக் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்க நூற்ருண்டுகளில் வென்ருர்கள். அவர்கள் சங்க இலக்கியத்தில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கிருர்கள். எனவே, தமிழக ராஜ்யங்களைக் குறிப்பிடு கின்ற மிகப் பழைய ஆதாரமான அசோகக் கல்வெட்டில் சேர சோழ பாண்டி நாடுகளுக்கு அடுத்தபடியாகக் கொங்குநாடும் இடம் பெற்றது நியாயமே. ஆதலால், கோசர்களே சத்திய புத்திரர்கள் என்றும் கொங்கு நாடே சத்திய புத்திரர் நாடு என்றும் அறிஞர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்றைய மராட்டிய நாட்டிலுள்ள 'சத்புத்தே' வகுப்பினர் தமிழகத்தி லிருந்து வடக்கே சென்று குடியேறிய சத்திய புத்திரர்களுடைய சந்ததியாரென்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனுல், சத்திய புத்தா என்னும் சொற்ருெடர் அதிகமான் என்றும் அதிகைமான் என்றும் வழங்குகிற அதியமானைக் குறிக்கிறதென்று நினைப்பது மேலே சொன்ன கருத்தைவிட ஏற்புடையதாயிருக்குமென்று நான் நினைக்கிறேன். இந்தக் கருத்தை முதலிற் சொன்னவர்

கே. ஜி. சேஷய்யர். டி. பரோ என்பவர் தக்க மொழியியல் ஆதாரங்களைக் காட்டி அந்தக் கருத்துக்கு வலியூட்டுகிறார்.[1]




**தென்னிந்தியா கி.மு. 300 – கி.பி. 500**

ஏறத்தாழக் கி. மு. 260-ல் அசோகர் கலிங்கத்தை வென்றார். அவருடைய ஆட்சிக் காலத்தைப் பற்றிய செய்திகள் எல்லா

[1] See 'Bulletin of the School of Oriental and African Studies' (London) XII (1948). pp. 136-137 and 145-147.

வற்றுள்ளும் அதுவே மிக நன்ருகத் தெரிந்த செய்தி. கலிங்கப் போர் அவருடைய வாழ்க்கையில் மிக முக்கியமான திருப்ப மாயிற்று. அவருடைய கட்டளைக் கல்வெட்டுகள் மகா நதிக்கழிமுக நடு அரங்கத்திலிருக்கும் தௌளியிலும் கஞ்சம் மாவட்டத்திலிருக்கும் ஜௌகடாவிலும் காணப்படுகின்றன. கஞ்சம் அந்தக் காலத்தில் கலிங்கத்தின் ஒரு பகுதியா யிருந்ததென்பதில் ஐயமில்லை. அந்தக் காலத்தில் கலிங்கத்தின் தலைநகரமாயிருந்த தோசாலி என்பதே இப்போது தௌளி என வழங்குகிறதென்று நம்பலாம். பம்பாய்க் கருகில் சொப்பாரா என்னுமிடத்தில் கிடைத்துள்ள அசோகக் கட்டளைக் கல்வெட்டி னுடைய உடைந்துபோன ஒரு பகுதி, வடகிழக்குத் தக்காணத் தைப் போலவே வடமேற்குத் தக்காணமும் மௌரியப் பேரரசின் எல்லைக்குள் இருந்ததென்பதைக் காட்டுகிறது. இன்னும் தெற்கில் மைசூரிலுள்ள ராயச்சூர், சித்தல துர்க்கம் ஆகிய மாவட்டங்களிலும் ஆந்திரத்திலுள்ள கர்நூல் மாவட்டத்திலும் அசோகர் கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. இன்னும் தெற்கிலும் மௌரியப் பேரரசு பரவியிருந்ததா என்பதைக் குறிப்பாகத்தான் சொல்லமுடியும். தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதி மௌரியப் பேரரசில் சேர்ந்திருக்கக் கூடுமென்பது தோன்றுகிறது. காஞ்சிபுரத்தில் ஆட்சி செய்த பழைய அரசர் களுள் அசோகவர்மனும் ஒருவனென்று கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த பல்லவச் செப்பேடு (வேலூர்ப் பாளையச் செப்பேடு) ஒன்று கூறுகிறது. பாடலிபுத்திரத்தில் நடைபெற்ற மூன்ரும் புத்தமதக் கூட்டத்திற்குப் பின்னர், 'தம்மத்தை' வெளிநாடுகளிற் பரப்புவதற்காக அனுப்பப்பெற்ற தொண்டர் களைப்பற்றிக் கூறுகின்ற இலங்கைக் கால்வழிச் செய்திக் கோவை யாகிய மகாவமிசத்தில் தக்காண ராஜ்யங்களைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக இடம்பெறுகின்றன. மகாதேவர் என்பவர் மகிஷ மண்டலத்திற்கும் (மைசூர்) ரகிதர் என்பவர் வனவாசிக்கும் (பிற்காலத்தில் கடம்ப நாட்டின் தலைநகர்), யோனதம்மரகிதர் என்பவர் (கிரேக்கத்துறவியாக இருக்கலாம்) அபரந்தகத்திற்கும் (பம்பாய்க் கடற்கரையின் வடபகுதி), மகாரகிதர் என்பவர் மராட்டிய நாட்டிற்கும் அனுப்பப் பெற்றனர் என்ற செய்திகளெல்லாம் மகாவமிசத்திலிருக்கின்றன. தம்மத்தை இலங்கையில் பரப்புவதற்காகச் சென்ற ஐவரில் அசோகருடைய மகன் மகிந்தனும் ஒருவன். அந்த நிகழ்ச்சி களெல்லாம் நடந்து ஏழெட்டு நூற்றுண்டுகளுக்குப் பின்னரே மகாவமிசம் எழுதப்பெற்றது. அப்படியிருந்தும், மகாவமிசம் கூறுகின்ற செய்திகளெல்லாம் அசோகக் கல்வெட்டுகளிற் காணும் செய்திகளை ஒத்திருக்கின்றன. எனவே, மகாவமிசம்

ஏறக்குறைய உண்மையான மரபுவழிச் செய்திகளையே பாது காத்து வைத்திருக்கிறதென்று நம்பலாம். மகாவமிசத்திற் குறிக்கப்பட்டுள்ள தக்காண ராஜ்யங்களெல்லாம் அசோகப் பேரரசின் எல்லைக்குட்பட்டவையே.

வட தக்காணத்திலிருந்த ராதிகர்களும் போஜர்களும் தென் தக்காணத்திலிருந்த ஆந்திரர்களும் பரதர்களும் அசோகப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டவர்களெனினும், கணிசமான அளவில் அவர்கள் தன்னுட்சி பெற்றவர்களாயிருந்தார்கள். பிட்டனிக்கர் என்பவர்களும் அதே நிலையில்தான் இருந்தார்கள். ஆனல், அவர்கள் தக்காணத்தின் எந்தப் பகுதியில் ஆட்சி செய்தார்களென்பது இன்னும் நிர்ணயிக்கப் பெறவில்லை. அவர்கள் சுய ஆட்சி பெற்ற அரசர்களாய் இருந்திருக்க இயலாது; ஏனெனில், அவர்களெல்லாம் அசோகருடைய ஆட்சிக்குட்பட்ட நாட்டிலிருந்தவர்களென்று அவருடைய கல்வெட்டுகள் அறுதி யிட்டு உறுதியாகக் கூறுகின்றன. மௌரியப் பேரரசில் தக்காணம் ஒரு முக்கியமான பகுதியாய் இருந்தது. அங்கு மௌரியப் பேரரசின் அரசப் பிரதிநிதிகள் இருவர் இருந்தனர். ஒருவர் தோசாலியிலும் (தௌளி), மற்றவர் கனககிரி என வழங்கும் சுவர்ணகிரியிலும் இருந்தனர். சுவர்ணகிரி ஆந்திரத்தில் ஹம்பிக்கும் மாஸ்கிக்கும் இடையிலிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பு மகாமாத்திரர்களிடம் விடப்பட்டிருந்தது. அவர் களுள் சிலர் அரசப் பிரதிநிதிகளுக்கு உதவி செய்தனர்; சிலர் மாவட்ட நிருவாகப் பொறுப்பை ஏற்றிருந்தனர். சிலர் நீதிபதி களாயிருந்தனர். அந்த 'மகாமாத்திரர்' என்ற அலுவல் பெயருடைய ஊழியர்களும் இருந்தார்கள். அவர்களுள் சிலர் பாதுகாப்புத் துறையில் பணியாற்றினர்; வேறு சிலர் பிற்பட்ட வகுப்பினரிடையில் சமயப் பணி செய்தனர்.

வட இந்திய அசோகக் கல்வெட்டுகளிற் காணும் எழுத்து களுக்கும், மைசூரிலும் கர்நூலிலும் கிடைத்துள்ள கல்வெட்டு களிற் காணும் எழுத்துகளுக்கும் பற்பல வேறுபாடுகள் இருக் கின்றன. தென்னிந்திய எழுத்துகள் பிராமி எழுத்து முறையில் ஒரு தனி வகையைச் சேர்ந்தவை. தென்னிந்தியாவில் ஒரு தனி வகை பிராமியெழுத்து வழக்கிற்கு வரவேண்டுமானல், அதற்குச் சிலகாலம் பிடித்திருக்குமென்பதும், அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே தென்னிந்திய மக்கள் எழுதவும் படிக்கவும் அறிந் திருந்தார்களென்பதும் சொல்லாமலே விளங்கும். எனவே, தென்னிந்தியர்கள் படிக்கத் தெரிந்தவர்கள் என்பது மட்டுமன்றி வடநாட்டாருக்கு இணையான பண்பாட்டையும் உளப்பாங்

இனையும் உடையவர்களாய் இருந்தார்களென்பதும் தெளிவு. கிருஷ்ணாநதியின் கழிமுக நடு அரங்கத்திலிருக்கும் பட்டிப் புரோலு என்னுமிடத்திலுள்ள தூபியிற் கிடைத்திருக்கிற நினைவுத் திருச்சின்னக் கற்பேழையின்மீது பொறிக்கப்பெற்றுள்ள எழுத்துகள், அசோகர் கல்வெட்டுகளுக்கு ஒருசில பத்தாண்டு களே பிற்பட்டவையாகத் தோன்றுகின்றன. எழுத்துகள் தென்பிராமி வகையைச் சேர்ந்தவை. ஆனால், மொழியில் உள்ளூர் வழக்கின் தனித் தன்மைகள் பல இருக்கின்றன. அந்தப் பொறிப்புகள் குபிரகன் என்னும் அரசனொருவனைக் குறிப்பிடு கின்றன. அவன் தந்தையின் பெயரிருந்த பகுதி சிதைந்து போய் விட்டது.

புகழ்பெற்ற காரவேலனுடைய ஹாத்திகும்பா கல்வெட்டு (கி.மு. இரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது) தமிழக ராஜ்யங்களின் கூட்டிணைவினால் கலிங்க நாட்டிற்கு ஆபத்து நேரலாம் என்றும், அந்தக் கூட்டிணைவு அந்தக் கல்வெட்டைப் பொறிப்பதற்கு 113 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியது என்றும் கூறுகிறது. அந்தப் பழங்காலத்திலேயே தமிழக ராஜ்யங்கள் நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் ஒப்பந் தங்களைத் தமக்குள் செய்துகொள்ளவும், தமக்கு அண்மை யிலும் சேய்மையிலும் இருந்த பிற நாடுகளோடு அடிக்கடி மாறாத தன்மையுடைய அரச தந்திர நெறியைக் கடைப்பிடித் தொழுகவும் தேவையான ஆற்றல் பெற்றிருந்தன என்பதை இந்தக் கல்வெட்டு நமக்குக் காட்டுகிறது.

நந்தர் திரட்டி வைத்த செல்வக் குவியலைப்பற்றிப் புலவர் மாமூலனார் கூறும் செய்தியை நாம் முன்பே குறிப்பிட்டோம். அவர் மேலுஞ் சில செய்திகளையும் குறிப்பிட்டிருக்கிறார். கோசர்கள் தங்கள் பகைவர்மீது போர் தொடுத்து அவர்களிற் பலரைத் தோல்வியுறுமாறு செய்துவிட்டார்கள் என்றும், மோகூர்த் தலைவனை அவர்களால் அடக்க இயலாத காரணத்தால் அவர்களுக்கு உதவி செய்வதற்காக வீரம்மிகுந்த வடுக முன்னணிப் போர் வீரர்களைக் கொண்ட பெருஞ்சேனையை வைத்திருந்த மோரியர்கள் ஒரு படையைத் தென்னாட்டுக்கு அனுப்பினார்கள் என்றும் மாமூலனார் கூறுகிறார். மௌரியப் பேரரசின் வீழ்ச் சிக்குப் பின் நானூறாண்டு கழித்து மாமூலனார் தம்முடைய செய்யுளை இயற்றினார். அவர் கூறும் 'வம்ப மோரியர்' என்னும் தொடருக்குப் புதியதாக எழுந்த மௌரியர் என்று பொருள் கொண்டால். மௌரியப் பேரரசு வலிமை மிகுந் திருந்த காலத்தில்தான் கோசர்களுக்கு உதவ ஒரு படையை அது

அனுப்பியது என்பது உறுதியாகிறது. மௌரியர்கள் இவ்வாறு தமிழகத்தின் அரசியலில் தலையிட்டார்களென்பது இதுவரையில் வரலாற்றாசிரியர் கவனத்துக்கு வாராத செய்தியாகும். ஆனால், மாமூலனார் கூற்றுத் தெளிவாக இருக்கிறது. எனவே, மௌரியர் காலத்தில் இந்திய அரசியல் ஒருமைப்பாடு உண்மையிலேயே ஏற்பட்ட ஒன்று என்பதும், பாடலிபுத்திர அரசு தீபகற்ப இந்தியாவின் தென்கோடியில் நடைபெற்ற அரசியல் நிகழ்ச்சி களிலும் அக்கறையுடையதாயிருந்ததென்பதும் நமக்கு விளங்கு கின்றன. வடுகர் என்னும் சொல் வடதிசை மக்கள் என்று பொருள் படும். தமிழகத்தின் வடக்கு எல்லையான வேங்கடத் திற்கு அப்பால் வாழ்ந்த மக்களையே சங்க நூல்கள் பொதுவாக வடுகர் என்று குறிப்பிட்டுள்ளன. அவர்கள் இப்போது அங்கு வாழ்கின்ற கன்னடியர் தெலுங்கர் ஆகியவர்களுடைய முன்னோர்கள். அந்த வடுகர் வாழ்ந்த தக்காணம் மௌரியப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்ததால், வடுக வீரர்கள் மௌரியச் சேனையின் முன்னணிப் படையில் இருந்தார்களென்பது நமக்கு நன்றாக விளங்கும் செய்தியாக இருக்கிறது.

பேரரசருக்கும் சக்கரத்துக்கும் உள்ள தொடர்பைப்பற்றிப் புராணங்கள் கூறும் கருத்துகளினுடைய சாயல்களை மௌரிய அரசர்களைப்பற்றி மாமூலனாரும் ஏனைய புலவர்களும் கூறுகின்ற வேறு செய்திகளில் காண்கிறோம். ஆனால், அவற்றைப்பற்றி நாம் இப்போது கவலைப்பட வேண்டியதில்லை. மேலும், அந்தக் கற்பனைக் கருத்துகள் மாமூலனார் கூறும் தெளிவான வரலாற்றுச் செய்திகளின் தரத்தைக் குறைக்கவில்லை. மௌரியர்கள் தென்னிந்தியாவின்மீது படையெடுத்துப் பொதிகைமலை வரை யிலுஞ்சென்றார்களென்று பலர் கூறும் கருத்துகளுக்கு மேற் சொன்ன புலவர்களின் பாடல்களில் எவ்வித ஆதாரமும் இல்லை என்பதை நாம் மனத்திற்கொள்ள வேண்டும்.

தென்னகத்தின் இயற்கை மலை முழைஞ்சுகளில் சிறிய பிராமிப் பொறிப்புகள் பல கிடைத்திருக்கின்றன. அத்தகைய அளவற்ற பொறிப்புகள் இலங்கையிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்விரு நாட்டுப் பொறிப்புகளுக்கும் பல ஒற்றுமைகளிருக்கின்றன. நாம் ஓரளவு உறுதியாகக் கால நிர்ணயம் செய்யக்கூடிய தமிழகத்துப் பழம் பொறிப்புகளில் மேலே சொன்ன மிகப் பழம் பொறிப்புகளையும் சேர்த்துக் கொள்ளலாம். அவற்றிலுள்ள எழுத்துகள் பட்டிப்புரோலு என்னுமிடத்திற் கிடைத்துள்ள கல்வெட்டுகளிற் காணும் எழுத்துகளை ஒத்திருக்கின்றன. அவை கி.மு. இரண்டாம்

நூற்ருண்டைச் சேர்ந்தவை என்று சொல்லலாம். கோயம்புத்தூர் மாவட்டத்திலிருக்கிற அரிக்கலூர்க் குகையில் உள்ள கல்வெட்டைப் போன்ற ஏனைய கல்வெட்டுகள் கி.மு. மூன்ரும் நூற்ருண்டைச் சேர்ந்தவை என்று கூறலாம். அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த மட்பாண்டங்களின் மீதுள்ள சுரண்டுவரி பிராமி எழுத்துகளும் மேற்சொன்ன பொறிப்பு வகையைச் சேர்ந்தவையே என்று நம்பலாம். இப்போது நம் கவனத்திலிருக்கும் குகைக் கல்வெட்டுகளின் இடைக்காலத்தைச் சேர்ந்தவையான அரிக்கமேட்டு மட்பாண்டங்கள் கி.பி. 50ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று உறுதியாகக் கூறலாம். இந்தக் குகைக் கல்வெட்டுகளின் பொருள் இன்னும் சரியாக விளங்கவில்லை. எனினும், அவை நன்கொடைகளைப்பற்றிய சிறு குறிப்புகளாகவோ அங்கு வாழ்ந்த துறவிகளின் பெயர்களாகவோ இருக்க வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய முழைஞ்சுகளில் ஒன்று 'கழுகு மலை' என்னும் பெயரையுடையதாக இருக்கிறது. புத்தமத வரலாற்றில் புனிதமாகக் கருதப்படும் 'கிரிதர கூடம்' என்னும் தொடரின் தமிழ் வடிவந்தான் கழுகு மலை. அதனுல், அந்தத் தொல்பொருட் சின்னங்கள் எல்லாமே புத்த மதத்தோடு தொடர்புடையவை என்று பலர் கருதுகின்றனர். ஆனுல், இந்த விஷயத்தில் ஐயத்திற்கிடமில்லாத முடிவுகளைச் செய்வதற்கு இது சரியான நேரமென்று தோன்றவில்லை. நெல்லூர் மாவட்டத்திலுள்ள மாலகொண்டாவிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கைக் குகையையும் சற்று முன்னர்க் கூறிய அரிக்கலூர்க் குகையையும் போலப் பிராமிப் பொறிப்புகள் உள்ள பல முழைஞ்சுகள் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பணி இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது. புத்த மதம் தென்னிந்தியாவுக்கு வந்த சமயத்திலேயே சமண மதமும் வந்ததென்பது உறுதியான மரபு வழிச் செய்தியாகும். உண்மையில் சமணந்தான் முதலில் வந்ததென்று கருதுவாரும் உளர். எனவே, மேற்சொன்ன தொல்பொருட் சின்னங்கள் புத்த மதத்தை மட்டும் சார்ந்தவை என்ரே சமண மதத்தை மட்டும் சார்ந்தவை என்ரே உறுதியாகக் கூற முடியாது. அவற்றுட் சில புத்த மதத்தையும் சில சமண மதத்தையும் சார்ந்தவை என்று கருதுவது பொருத்தமாகும்.

மேலே குறித்த பொறிப்புகளுள் அரிக்கமேட்டில் கிடைத்துள்ள இரு பொறிப்புகள் பிராக்கிரத மொழியில் இருக்கின்றன. அவை மட்பாண்டங்களின்மீது காணப்படும் சுரண்டுவரிப் பொறிப்புகள். ஏனைய பொறிப்புகள் பிராமி (தென்னக பிராமி வகை) எழுத்தில் இருந்தாலும், அவற்றிலுள்ள மொழி தமிழ்

மொழி என்பது உறுதியாகத் தெரிகிறது. ஆனால், அந்த மொழி அப்போது தொடக்க நிலையில் இருந்ததென்பது தெரிகிறது. எழுத்துகள் நெடுங்கணக்கு முறையைச் சேர்ந்தவை. ழ, ள, ற, ன ஆகிய திராவிடத்திற்கே உரிய ஒலிகளும் அப்போதே வழக்கில் இருந்தன. பொறிப்புகளில் தளர்வுறழ்வான மெய் யெழுத்துகள் இல்லவே இல்லை. மூச்சொலி கலந்த மெய் யெழுத்துகளும் [1](थ, ध ஆகியவற்றைத் தவிர) நடைமுறை யைப் பொறுத்தவரையில் இல்லையென்றே சொல்லிவிடலாம். முன்னைய பொறிப்புகளில் மேலே சொன்ன இயல்புகளைத் தவிர வேறு இரண்டு குறிப்பிடத்தக்க இயல்புகளும் இருக்கின்றன. அவை யாவன:

ஒன்று, இரட்டுவதே கிடையாது. இரண்டு, குரல் நாள அதிர்வொலி இல்லாத மெய்யெழுத்துக்கு முன் வருகின்ற அகரம் ஆகாரமாக மாறுதல். (தண்டையென்பது தாண்டையாதல் போல). இந்த இயல்புகளும் இங்கே குறிப்பிடாத வேறு மாறுதல்களும் பல தலைமுறைக் காலத்தில் ஏற்பட்ட அனுபவத் தின் பயனாகத் தோன்றியவையாக இருக்கவேண்டும்.

பொறிப்புகளின் உண்மைப் பொருள் இன்னமும் சரியாக விளங்கவில்லை. ஆனால், இப்பொழுது செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் பயனாகச் சில செய்திகளை நாம் அறிகிறோம். எடுத்துக்காட்டாக, பொறிப்புகளிற் கூறப்பட்டுள்ள நகரங்களில் மதுரையும் கருவூரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; கொடையாளி களுள் ஈழத்துக் 'குடும்பிகன்' (உழவன்) ஒருவனும், பெண் ணொருத்தியும், வணிகர்களும், கரணிச் சாதியைச் சேர்ந்தவர்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்; பொன் வாணிகன், கூலவாணிகன், கைக்கோளன் ஆகியவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள்; நிகா மத்தார் (தொழிற்சங்க உறுப்பினர்) என்னும் சொல் ஒரு முறை கொடையாளியாகவும் இன்னொரு முறை அன்பளிப்பைப் பெற்றவர்களாகவும், இரு முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோன் (அரசன்) என்னும் சொல் பொறிப்புகளில் காணப்படு கிறது; சமயச் சார்பான சொற்களாகிய அதிட்டானம் (இருப் பிடம்), தம்மம் (தர்மம்), அறத்தார் (அறவழி நடப்போர்), தானம் (கொடை), உபாசகன் (வழிபடுவோன்), பாழி (சமணர் அல்லது பௌத்தர் வழிபடும் பள்ளி), யகரு (யட்சன்), குவிரன் (குபேரன்) என்னும் சொற்களும் காணப்படுகின்றன. இந்தச் சிறிய பொறிப்புகளிலிருந்து அந்தக் காலத்தில் காடுகளிலும் மலை

[1] இந்த ஒலிகளுக்குரிய வரிவடிவம் தமிழ் நெடுங்கணக்கில் இல்லை. அதனால் அவை இங்கு நாகரியில் எழுதப்பட்டுள்ளன.

களிலும் தனியேயிருந்து தவஞ்செய்த துறவிகளுக்கு எல்லா வகுப்புகளையும் சேர்ந்த பொது மக்கள் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்தார்கள் என்பது தெரிகிறது. எனினும், பொதுமக்களுடைய சமய வாழ்விலும் சமுதாய வாழ்விலும் இந்தத் துறவிகள் உண்மையிலேயே முக்கியமானதோர் இடத்தை வகித்ததாய் உறுதியாகக் கூற முடியாது. அந்தப் பழங்காலத்திலேயே தமிழ்ச் சமுதாயம், பொதுவாக, சமண மதத்தையும் புத்த மதத்தையும் ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்வதற்குச் சான்று ஒன்றும் இல்லை. அந்தக் காலத்துக்கு அடுத்த காலமாகிய சங்க காலத்தில் பொது மக்களும் அவர்களுடைய அரசர்களும் வேள்வியை அடிப்படையாகக் கொண்ட வேத மதத்தைப் பின்பற்றினார்கள். மேலும், பொது மக்கள் விரும்பிப் பின்பற்றிய பல்வேறு இந்து மதப் பிரிவுகளும் அந்தக் காலத்தில் இருந்தன.

## BIBLIOGRAPHY


K. Gopalachari : 'Early of the Andhra Country' (Madras, 1941)

G. Jouveau–Dubreuil : 'Ancient History of the Deccan' (Pondicherry, 1920) Proceedings of the Third All-India Oriental Conference (1924) pp. 275 ff.

B. L. Rice : 'Mysore and Coorg from Inscriptions' (London, 1909)

R. Shama Sastri (ed.) : 'Arthasastra of Kautilya' (Mysore 1909)

P. T. Srinivasa Iyengar : 'History of the Tamils' (Madras, 1929)

# 6. சாதவாகனர்களும் அவர்களுக்குப் பின்வந்த அரசர்களும்

*சாதவாகனர் காலமும் அவர்களுடைய ஆட்சியின் எல்லையும்—சாதவாகனரும் ஆந்திரரும்—சாதவாகன ஆட்சியின் தோற்றமும் விரிவும்—ஹாலா—சகவெற்றிகள்—கௌதமிபுத்திர சாதகர்ணி, அவன் மகன் ஆகியவர் காலத்தில் சாதவாகனர் மீண்டும் வலிமையடைதல்—யக்ஞ சாதகர்ணி—பின்னைய சாதவாகனர்கள்—சாதவாகன அரசியல்—சமுதாயம்—நகரங்கள்—துறைமுகங்கள்—வாணிகம்—சமயம்.*

*சாதவாகனர்களுக்குப் பின்வந்த அரச மரபுகள்—ஆபீரர்கள்—சுட்டுகள்—இச்சுவாகுகளும் அவர்களுடைய நிருவாகமும்—பிரிகத் பலாயனர்கள்—பல்லவர்களும் அவர்களுடைய நிருவாக முறைகளும்.*

*சாலங்காயனர்கள்—கலிங்கத்து மாத்திரர்கள்—விஷ்ணு குண்டினர்கள்—ஆனந்த கோத்திர அரசர்கள்.*

*பிரார் வாகாடகர்கள்—பனவாசிக் கடம்பர்கள்—கங்கவாடிக் கங்கர்கள்.*

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தக்காணத்தில் சாதவாகனர் ஆட்சி தொடங்கியது. கி.மு. 230-ஆம் ஆண்டில் தொடங்கிய அவ்வாட்சி 450 ஆண்டுகள் நீடித்திருந்தது. அது மிகவும் வலிமை பொருந்தியிருந்த காலத்தில் அதனுடைய எல்லை தக்காணம் முழுதும் மட்டுமன்றி வட இந்தியாவிலும் நெடுந் தொலைவு பரவியிருந்தது. மகதம் வரையிலும் கூட அது பரவியிருந்திருக்கலாம். ஆனால் அதனை உறுதியாகச் சொல்ல முடியாது. கி.பி. முதல் நூற்றாண்டிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் குஜராத்தில் ஆட்சிசெய்த சகவமிச அரசர்களோடு சாதவாகனர் செய்த நீண்ட போர்களின் விளைவாக அவர்களுடைய ஆட்சிக்கு அழிவு ஏற்படத் தொடங்கியது. இறுதியில், கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாதவாகனப் பேரரசு மறைந்தது. பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல சிற்றரசுகள் சுதந்திரம் அடைந்துவிட்டன. அதனால் பல சிறிய அரச மரபுகள் ஆட்சிக்கு வந்தன.

புராணங்கள் கூறுகிற அரச மரபுகளின் பட்டியலில் இடம் பெறுகின்ற ஆந்திர வமிசம் அல்லது ஆந்திர பிரித்திய வமிசமே சாதவாகன குலம் என்பதில் ஐயமில்லை. அவர்கள் ஆந்திர இனத்தைச் சேர்ந்தவர்களாதலால், ஆந்திரர் என்னும் பெயர் பெற்றனர். புராணங்களிற் காணும் பட்டியல் உருவான காலத்தில் அவர்களுடைய ஆட்சி ஆந்திரநாட்டின் எல்லைக்குள் அடங்கியிருந்தது என்று நம்பலாம். ஆந்திர பிரித்தியர் என்னும் சொல்லுக்கு ஆந்திரப் பணியாட்கள் என்பது பொருள். சாதவாகனர்களுடைய முன்னோர்கள் மௌரியப் பேரரசில் ஊழியஞ் செய்தவர்களென்றும், அசோகருக்குப் பின் அப் பேரரசு சிதைந்தபோது அவர்கள் மேற்குத் தக்காணத்திற்குச் சென்று அங்குத் தங்கள் சொந்த ஆட்சியை நிறுவினார்களென்றும் நினைப்பதற்கு ஆந்திர பிரித்தியர் என்னும் பெயர் இடந்தருகிறது. கிழக்குத் தக்காணத்திலிருந்த ஆந்திர நாட்டில் மதில் சூழ்ந்த முப்பது நகரங்களும் கணக்கற்ற கிராமங்களும் இருந்ததாகவும் அங்கு ஆட்சி செய்த அரசனுடைய சேனையில் 1,00,000 காலாட் படைவீரர்களும், 2000 குதிரை வீரர்களும், 1000 யானைகளும் இருந்ததாகவும் பிளினி எழுதிவைத்திருக்கிறார். ஆந்திர வமிசத்தைச் சேர்ந்த முப்பது அரசர்கள் 460 ஆண்டு ஆட்சி செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. நமக்கு இப்போது கிடைத்திருக்கிற ஆதாரங்களை வைத்துக்கொண்டு அத்தனை அரசர்களுடைய ஆட்சியைப் பற்றித் தொடர்ச்சியாகவும் ஒழுங்காகவும் எழுதுவது இயலாது. புராணங்கள் கூறுகின்ற பழைய ஆந்திர அரசர்களுடைய பெயர்கள் மேற்குத் தக்காணத்தில் நாசிக், கார்லே, நானேகாட் என்னும் இடங்களிற் கிடைத்திருக்கிற பொறிப்புகளிலும் நாணயங்களிலும் காணப்படுகின்றன. கீழைக் கடற்கரையில் இருந்த ஆந்திர நாட்டில் மேலே சொன்ன பழைய அரசர்களைப்பற்றி எவ்விதச் சான்றும் இல்லை. மேலும், சாதவாகன அரசனான சாதகர்ணியின் ராஜ்யம் தன்னுடைய நாட்டிற்கு மேற்கில் இருந்ததாகக் கலிங்கத்துக் காரவேலன் தெளிவாகக் கூறுகிறான். அன்றியும் பிரதிஷ்டானம் (பைத்தான்) என்னும் நகரம் சாதவாகன வமிசத்தோடு தொடர்புடையது என்பதை நாம் மரபுவழிச் செய்திகளின் வாயிலாக அறிகிறோம். எனவே, சாதவாகனர்கள் முதலில் பிரதிஷ்டானத்தை மையமாகக் கொண்ட மேற்குத் தக்காணப் பகுதியில் தங்கள் ஆட்சியை நிறுவினார்களென்றும் பின்னர் அதைப் பல திசைகளிலும் விரிவுபடுத்தினார்களென்றும் நாம் முடிவு செய்யலாம். தொடக்கத்தில் அவர்கள் மராட்டியத்தின் வடக்கு தெற்குப் பகுதிகளையும், மாளவத்தின் கிழக்கு மேற்குப் பகுதிகளையும், இப்போது மத்தியப் பிரதேசம் என்று வழங்கும் பகுதியையும்

வென்றார்கள். இந்தப் பணியில் அவர்களுக்கு ராதிகர்களும் போஜர்களும் உதவி செய்தார்கள். அதனால், சாதனவாகனர்கள் அவர்களுக்குப் பெரும் பதவிகளையும் விருதுகளையும் வழங்கிய தோடு அவர்களோடு திருமண உறவுகளையும் ஏற்படுத்திக் கௌர வித்தார்கள்.

சாதவாகன ஆட்சி எப்போது தொடங்கியது என்று உறுதி யாகச் சொல்ல முடியாது. ஆனால், புராணப் பட்டியல்களின்படி ஏறக்குறையக் கி.மு. 230-ல் முதல் சாதவாகன அரசனான சிமுகன் ஆட்சிக்கு வந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இந்தக் கருத்தைச் சிமுகனுக்குப் பின் அரியணை ஏறிய கன்ஹன் (கிருஷ்ணன்) என்பவன் காலத்தைச் சேர்ந்த நாசிக் நகரத்துக் கல்வெட்டு உறுதிசெய்கிறது. அந்தக் கல்வெட்டு, 'கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சிசெய்த கடைசி மௌரியர்கள் அல்லது முதல் சுங்கர்கள் காலத்தைச் சேர்ந்ததென்று கருதலாம்' என்று பியூலர் கூறுகிறார். 23 ஆண்டு அரசுசெய்த சிமுகன் நாளடைவில் மிகவும் கொடிய வனாய் மாறிவிட்டதாகவும், அதனால் அவன் அரச பதவியி லிருந்து நீக்கப்பட்டுப் பின்னர்க் கொல்லப்பட்டதாகவும் சமண நூல்கள் கூறுகின்றன. அவனுக்குப் பின் அவனுடன் பிறந்த கன்ஹன் (கி.மு. 207–189) பட்டத்திற்கு வந்தான். அவன் தன்னுடைய ஆட்சி எல்லையை மேற்கில் நாசிக் வரையில் விரிவு படுத்தினான். அதற்கு மேலுள்ள பகுதிகளையும் அவன் வென்றிருக்கக்கூடும். ஆனால், அதனை உறுதியாகச் சொல்ல முடியாது. கன்ஹனுக்குப்பின் முதலாம் ஸ்ரீசாதகர்ணி பட்டத் திற்கு வந்தான். அவனுடைய உருவமும், மராட்டியப் பெண்ணான அவனுடைய மனைவி நாகனிகாவின் உருவமும், அவனுடைய தந்தை சிமுகனுடைய உருவமும் மூன்று அரச குமாரர்களின் உருவமும் புடைப்போவியங்களாக நானே– காட்டில் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவன் மேற்குமாளவத்தை வென்றான். அவனுடைய மனைவி பொறித்துவைத்த ஒரு கல்வெட்டானது அவன் செய்வித்த பல பெரிய வேள்விகளையும், அவற்றைச் செய்த புரோகிதர்களுக்கு அவன் கொடுத்த பல்லாயிரம் பசுக்கள், ஆயிரக்கணக்கான குதிரைகள், பல யானைகள் பல முழுக் கிராமங்கள், பல்லாயிரம் கார்ஷாப் பணம் முதலிய செல்வங்களையும் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. சாதகர்ணி இருமுறை அசுவமேத யாகஞ் செய்து தன்னுடைய மேலாதிக்கத்தை விளம்பரம் செய்தான். வட இந்தியாவில் ஆண்டுவந்த சுங்கப் பேரரசர்களின் வலிமை சாதகர்ணியின் காலத்தில் மிகவும் குறைந்து விட்டதென்பதை அந்த யாகங்கள்

காட்டுகின்றன. மாளவிகாக்கினிமித்திரம் என்னும் நாடகத்தில் சுங்கர்கள் ஆந்திரர்களைப் போரில் வென்ற செய்தியைக் காளிதாசர் கூறுகிறார். ஆந்திரர்கள் சுங்கர்களோடு நீண்ட காலம் போர் செய்தார்களென்றும், காளிதாசர் கூறும் நிகழ்ச்சி அந்த நீண்ட காலத்தில் நடந்த போர்கள் பலவற்றுள் ஒன்றைக் குறிப்பதாகவும், இறுதியில் ஆந்திரர்களே வெற்றி பெற்ற தாகவும் நாம் கருதவேண்டும். சாதவாகனர்கள் முதலில் பிரதிஷ்டானத்தில் தங்கள் ஆட்சியை நிறுவியதாகவும், பின்னர் உஜ்ஜைனியை வென்றதாகவும், அதன்பின் அவர்களுடைய ஆட்சியின் எல்லை விதிசா வரையில் நீண்டதாகவும் நமக்குக் கிடைத்த கல்வெட்டுகள், நாணயங்கள் ஆகியவற்றிலிருந்து அறிகிறோம். முதலாம் சாதகர்ணியை 'தட்சிணபதத்தின் தலைவன்' என்றும், 'தடுக்க முடியாத ஆணைச் சக்கரத்தை யுடையவன்' என்றும் அவனுடைய மனைவியின் கல்வெட்டு வருணிக்கிறது. அந்த மரபின் ஆறும் அரசனை இரண்டாம் சாதகர்ணி (166-ல் அரியணை ஏறியவன்) அந்த மரபின் அரசர்கள் அனைவரினும் மிக நீண்ட காலம் (56 ஆண்டு) ஆட்சி செய்தவன். அவன் சுங்கர்களிடமிருந்து மாளவத்தைப் பறித்துக்கொண்டான். கலிங்கத்துக் காரவேலன் தன்னுடைய ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் யானை, குதிரை, தேர், காலாட்படையாகிய நால்வகைப் படைகளையும் கொண்ட ஒரு பெருஞ்சேனையை மேற்கிலிருந்த அரசன் ஒருவனோடு போர் செய்யும்பொருட்டு அனுப்பிய தாகவும் அவனுடைய கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம். அந்த அரசன் இந்த இரண்டாம் சாதகர்ணியாகத்தான் இருக்க வேண்டும். இந்தக் கலிங்கத்துக் காரவேலன் இரண்டு ஆண்டு கட்குப் பின்னர் மராட்டிய நாட்டின் அதிபர்களான ராதிகர் களையும் பேரார் நாட்டின் அதிபர்களான போஜர்களையும் போரில் தோல்வியுறச் செய்ததாகக் கூறிக்கொள்கிறான். அவ்விரு மரபினரும் பிரதிஷ்டானத்தில் ஆட்சிசெய்த ஆந்திர அரசனுடைய மேலாதிக்கத்திற்குப்பட்ட சிற்றரசர்கள் ஆவர். இவ்வாறு தக்காணத்திலிருந்த முதன்மை அரசான சாதவாகன அரசைக் காரவேலன் எதிர்த்தானெனினும், தன்னுடைய நாட்டிற்கு ஆபத்து வரக்கூடிய அளவுக்கு அவ்வெதிர்ப்பை அவன் தொடர்ந்து நடத்தவில்லை. இரண்டாம் சாதகர்ணி மத்திய பிரதேசத்தையும் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்திருக்கலாமென்பது அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த ஆபீலகன் என்னும் அரசனுடைய நாணயம் ஒன்று மத்திய பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் கிடைத்ததிலிருந்து ஊகிக் கலாம். சாதவாகன வமிசத்தின் பதினேழாம் அரசனை ஹாலன் (ஏறத்தாழ கி.பி. 20–24) மகாராஷ்டிரப் பிராக்கிருத மொழியில்

ஆரியா யாப்பில் இயற்றப்பட்ட 700 காதற் பாக்கள் அடங்கிய 'சப்த சதி' என்னும் தொகை நூலை வெளியிட்டு இலக்கிய உலகில் புகழ் பெற்றவன். அந்தத் தொகைநூலின் இன்றைய உருவத்தைப் பார்க்கும்போது, அதிற் காணும் மொழி இயல்புகள், இரண்டு அல்லது மூன்றும் நூற்றுண்டையோ அதற்குஞ் சிறிது பிற்காலத்தையோ சேர்ந்தவை என்று சொல்லலாம்.

பெருகிக்கொண்டே போன சாதவாகன ஆதிக்கத்திற்குத் தடையாக மேற்கில் ஒரு புதிய அரசு தோன்றியது. ஏறக்குறைய கி.மு. 75ஆம் ஆண்டில் சீஸ்தானைச் சேர்ந்த சகர்கள், சிந்துநதிக் கழிமுக நடு அரங்கத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அதிலிருந்து அந்தப் பகுதியை இந்திய நூலாசிரியர்கள் சாகத்தீவு என்றும், கிரேக்க நில நூலாசிரியர்கள் இந்தோ-சித்தியா என்றும் வழங்கத் தொடங்கினர்கள். உஜ்ஜைனி வரலாற்றிற் காணப்படுகின்ற ஒரு கிளைக் கதை சகர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் ஏற்பட்ட நீண்ட பகைமையின் தொடக்கத்தைக் குறிப்பிடுவதாகக் கருதலாம். மேலும், சகர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் நடந்துவந்த போரில் வெற்றி தோல்விகள் மாறிமாறி வந்தன. இப்படி மாறிமாறி வந்த வெற்றி தோல்விகளைச் சிறிது பிற்காலத்தைச் சேர்ந்த பொறிப்புகளில் நாம் தெளிவாகக் காண்கிறேம். அந்தக் கதை இது: காலகர் என்னும் சமண முனிவரை உஜ்ஜைனி அரசன் கருதபில்லன் என்பவன் மரியாதைக் குறைவாக நடத்தினன். அதனல் சினமடைந்த காலகர் உஜ்ஜைனிமீது படையெடுத்துத் தமக்கு ஏற்பட்ட பழியைத் துடைக்குமாறு சகர்களைக் கேட்டுக்கொண்டார். அவ் வேண்டுகோளைச் சகர்கள் ஏற்று உஜ்ஜைனியின்மீது போர் தொடுத்தார்கள். அப்படி நடந்த போரில் உஜ்ஜையினி அரசனை கருதபில்லன் தோற்றுத் தன்னுடைய நாட்டையும் இழந்தான். சில ஆண்டுகளுக்குப்பின் அவனுடைய மகன் விக்கிரமாதித்தியன் (வீரதீரத்தில் சூரியனுக்கு இணையானவன்) பிரதிஷ்டானத்திலிருந்து ஒரு படையுடன் கிளம்பி உஜ்ஜைனியைப் பிடித்திருந்த சகர்களைத் தோல்வியடையச் செய்து துரத்திவிட்டுத் தன் வெற்றியின் நினைவாகக் கி.மு. 57-ல் ஒரு புதிய சகாப்தத்தை நிறுவினன். இந்த மரபுவழிச் செய்திகளெல்லாம் ஆந்திர வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்தவையாக இருக்கவேண்டுமென்று நாம் கருதலாம். ஆனல், மேற்கிலிருந்து சக ஆதிக்கத்துக்கு முடிவுகட்டியவனும் ஒரு விக்கிரமாதித்தியன்தான். அவன் குப்த வமிசத்தைச் சேர்ந்த இரண்டாம் சந்திரகுப்தன் (கி.பி. 380–414). அந்தச் சந்திரகுப்த விக்கிர

மாதித்தியனையும், பழைய விக்கிரமாதித்தியனையும் வேறுபடுத்திக் காண்பதற்கு உஜ்ஜைனிக் கதை தவறிவிட்டது.

ஹாலனுக்குப்பின் ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்துக்கு வந்த நான்கு அரசர்களும் சேர்ந்து 12 ஆண்டுகளுக்கும் குறைவாகத்தான் ஆட்சி செய்தார்கள். அப்போது நாட்டில் குழப்பம் மிகுந்திருக்கவேண்டுமென்பது தோன்றுகிறது. ஏறக்குறைய அதே சமயத்தில் 'மேற்கு சத்திரப்பர்கள்' (சகர்கள்) வலிமை பெற்று முன்னேறத் தொடங்கினார்கள். அவர்களுள் முதலில் வந்த அரசன் பூமகன் என்பவன். ஆனால், நாகபாணன் என்பவன்தான் மிகப் பெரிய வெற்றி வீரனாய் விளங்கினான். அவனுடைய ஆட்சி எல்லைக்குள் குஜராத், கத்தியவார், வட மராட்டியம். கொங்கணம் ஆகிய நாடுகளெல்லாம் இருந்தன. தென் மராட்டியமும் சில காலம் அவனுடைய ஆட்சியில் இருந்தது. பெரிப்ளஸ் என்னும் நூல் மம்பானஸ் (நாகபாணன்) அரசனுடைய ராஜ்ய எல்லை அரியாக்கே என்னுமிடத்தில் (வராகமிகிரர் கூறும் ஆரியகம்) தொடங்கியதென்றும், சாதவாகனத் துறைமுகமாகிய கல்யாணிக்கு வந்த கிரேக்கக் கப்பல்கள் பாரிகாஜா (புரோச்) துறைமுகத்திற்குத் திருப்பிவிடப்பட்டன என்றும் கூறுகிறது. மின்னகரம் என்பது நாகபாணனுடைய தலை நகரமாய் இருந்தது. மின்னகரம் என்பது உஜ்ஜைனிக்கும் புரோச்சுக்கும் இடையிலுள்ள டோஹாடு என்னும் இடமாக இருக்கலாம். சாதவாகனர்களுடைய நலிவுக்குக் காரணமாயிருந்த சக ஆதிக்கப் பெருக்கம் ஏறக்குறைய கி.பி. 40-க்கும் கி.பி. 80-க்கும் இடையில், ஏறக்குறையப் பெரிப்ளஸ் நூலின் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஏறக்குறையக் கி.பி. 80 முதல் கி.பி. 104 வரையில் ஆட்சி செய்த கௌதமிபுத்திர சாதகர்ணியின் (ஏறக்குறையக் கி.பி. 80–104) தலைமையில் சாதவாகனர் மீண்டும் வலிமை பெற்றார்கள். சகர், பல்லவர், யவனர் ஆகியவர்களை அழித்தவனென்று சாதகர்ணி வருணிக்கப்படுகிறான். அவன் நாகபாணனைத் தோல்வியுறச்செய்து அவனுடைய வெள்ளி நாணயங்கள் பலவற்றை மீண்டும் அச்சடித்து வெளியிட்டான்; அவன் சகர்களை வென்று அவர்களிடமிருந்து வட மராட்டியம், கொங்கணம், நர்மதைப் பள்ளத்தாக்கு, சௌராஷ்டிரம், மாளவம், மேற்கு ராஜபுதனம் ஆகிய நாடுகளை மீட்டான். தெற்கில் பனவாசியும் விதர்ப்பமும் அவனுடைய ஆட்சி எல்லைக்குள் இருந்தன. அவ்வெல்லை ஆந்திர தேசத்திற்குள்ளும் சென்றது என்பதற்குச் சான்று இல்லை. ஆனால், அது கலிங்கம் வரை எட்டியிருக்கலாம். அவனுடைய

மகனும் அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவனுமான இரண்டாம் புலுமாயி என்பவனுடைய ஆட்சியின் பத்தொன்பதாம் ஆண்டில் கௌதமிபுத்திர சாதகர்ணியின் தாயார் கௌதமி பலஸ்ரீயின் ஆணைப்படி நாசிக்கில் செதுக்கப்பட்ட கல்வெட்டில் கௌதமிபுத்திர சாதகர்ணியின் அருஞ்செயல்கள் மிக உயர்ந்த புகழையும் பாராட்டையும் பெறுகின்றன. இதிலிருந்து சகர்கள் தாங்கள் தோற்ற இடங்களைச் சிலகாலம் வரையில் மீட்க முடியவில்லை என்பது தெரிகிறது. இரண்டாம் புலுமாயி 24 ஆண்டுகள் ஆட்சிசெய்தான். அவனுடைய நாணயங்கள் கோதாவரி, குண்டூர் மாவட்டங்களிலும் சோழமண்டலக் கரையில் தெற்கே கடலூர் வரையிலும் உள்ள பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவனுடைய கவனம் கீழ்த்திசையில் திரும்பியிருந்த சமயத்தில் சகர்கள் தாங்கள் இழந்திருந்த பகுதிகளில் மேற்கு ராஜபுதனம் மாளவம் ஆகியவற்றை ஏறத்தாழ கி.பி. 126ஆம் ஆண்டுக்கும் 131ஆம் ஆண்டுக்கும் இடையில் மீட்டுக் கொண்டார்கள். இந்த மீட்சி இயக்கத்தைத் தடுப்பதற்காகப் புலுமாயிக்குப் பின் பட்டத்துக்கு வந்த ஒரு சாதகர்ணி மகாசத்திரப்ப ருத்திரதாமனுடைய மகளை மணந்து கொண்டான். ஆனால், அந்த சக அரசன் அடுத்து வந்த சந்தவாகனஅரசனை 'நேர்மையான போரில்' இரண்டு முறை தோல்வியடையச் செய்து அபராந்தத்தையும் (வட கொங்கணம்) அனூபத்தையும் (நர்மதைப் பள்ளத்தாக்கு) பிடித்துக்கொண்டான்.

சாதவாகன அரசர்களுக்குள் ஸ்ரீயக்ஞ சாதகர்ணி என்பவன்தான் (ஏறக்குறையக் கி.பி. 170–199) மிகவும் புகழ் பெற்ற அரசன் என்று சொல்லலாம். அவன் சகர்களோடு மீண்டும் போர் தொடுத்துத் தன்னுடைய முன்னோர்கள் இழந்த பகுதிகளுள் சிலவற்றை மீட்டிருக்கவேண்டும். அவன் சில அரிய வெள்ளி நாணயங்களை வெளியிட்டான் அவை, சத்திரப்ப நாணயங்களைப் பின்பற்றி அச்சடிக்கப்பட்டவை. அவன் புதிதாக வென்றவையும் அதற்குமுன் சத்திரப்பர்களின் ஆட்சியில் இருந்தவையுமான மாவட்டங்களில் பயன்படுவதற்காக அந்த நாணயங்களை அச்சடித்திருக்கவேண்டும். அவன் வெளியிட்ட கலப்பு உலோக நாணயங்களுள் சில மத்திய பிரதேசத்திலுள்ள சந்தா மாவட்டத்தில் கிடைத்திருக்கின்றன. வெண்கல, ஈய நாணயங்களுள் பல கிழக்கு மாநிலங்களிற் கிடைத்திருக்கின்றன. இன்னுஞ் சில நாணயங்களில் கப்பலின் உருவம் காணப்படுகிறது. அவைகளும் ஸ்ரீயக்ஞ சாதகர்ணி வெளியிட்டவையாகத்தானிருக்கவேண்டும். அவை அவனுடைய கடல் வலிமையைக் காட்டுகின்றன. அவனுடைய ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த

பொறிப்புகள் மேற்கில் கன்ஹேரி நாசிக் ஆகிய இடங்களிலும் கிழக்கில் சின்ன கஞ்சத்திலும் கிடைத்திருக்கின்றன. நமக்குத் தெரிந்த வரையில் ஸ்ரீயக்ஞ சதகர்ணிதான் மேற்கு கிழக்கு ஆகிய இருபகுதிகளையும் தன்னுடைய ஆட்சியில் வைத்திருந்த கடைசிச் சாதவாகன அரசன் என்று சொல்லலாம்.

அவனுக்குப் பின்வந்த அரசர்களில் முதல்வன் விஜயன் என்பவன். அவனுடைய நாணயங்கள் மராட்டிய நாட்டிலுள்ள அகோலாவில் கிடைத்திருக்கின்றன. அடுத்தவனான ஸ்ரீசந்திரனுடைய நாணயங்கள் கோதாவரி கிருஷ்ணா மாவட்டங்களிற் கிடைத்திருக்கின்றன. அவனுடைய பொறிப்புகளில் ஒன்று கலிங்கத்தில் கிடைத்திருக்கிறது. கடைசி அரசன் புலுமாயி என்பவன். அவனுடைய பொறிப்புகளில் ஒன்று பெல்லாரி மாவட்டத்திற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கர்ணன், கும்பன், ருத்திர சாதகர்ணி என்னும் அரசர்கள் கிழக்குத் தக்காணத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் ஆட்சி செய்த சாதவாகன அரசர்களென்பது அவர்களுடைய நாணயங்களிலிருந்து தெரிகிறது. ஆனால், அவர்களுடைய பெயர்கள் புராணப் பட்டியலில் இல்லை. அந்தப் பட்டியல் உருவான பின்பு அவர்களுடைய ஆட்சி தொடங்கியிருக்கவேண்டும். சாதவாகன அரச வமிசத்தைச் சேர்ந்த வேறு சிலரும் தக்காணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்த சிறிய ராஜ்யங்களில் ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால், தலைமைச் சாதவாகன மரபினர் எவ்வாறு வீழ்ச்சியடைந்தார்களென்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை.

சாதவாகனப் பேரரசு மிகப் பெரிதாயிருந்தாலும் அதன் ஆட்சி முறை மிக எளிதாகவே இருந்தது. உள்ளூராட்சி பெரும்பாலும் ஆங்காங்கே இருந்த பண்ணைக் குடியுரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அரசு அலுவலர்களின் பொது மேற்பார்வையில் தங்கள் நிருவாகப் பணிகளை ஆற்றினார்கள். அரசுரிமை, தந்தைக்குப் பின்பு மகன் என்னும் பரம்பரை முறையில் ஆண்களுக்கே இருந்துவந்தது. ஆனால், தாயார் பெயரைத் தங்களுடைய பெயருக்கு முன்னே இணைத்துக் கொள்ளும் வழக்கத்தைப் பின்பற்றிய அரசர்களும் பிரபுக்களும் இருந்தார்கள். மக்கள் ஏற்றுக்கொண்டிருந்த சமுதாய அமைப்பைக் காப்பதற்கு அரசன் கடமைப்பட்டிருந்தான். அவன் நியாயமான வரிகளை விதித்து நியாயமான முறையில் அவற்றை வசூலிக்க வேண்டும் என்றும், பணக்காரர் மட்டுமன்றி

ஏழை மக்களும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கு ஏற்ற முறையில் அவன் அரசோச்ச வேண்டும் என்றும் மக்கள் எதிர் பார்த்தார்கள். பண்ணைக் குடியுரிமை பெற்ற தலைவர்கள் மூவகைப்பட்டவர்கள். ஒரு வகையினர் தங்கள் பெயரிலேயே நாணயங்களை அச்சடித்து வழங்கும் உரிமை பெற்ற அரசர்கள். மற்றொரு வகையினர் மகாபோஜர்கள், மகாராத்திகள் ஆவார்கள், மேற்குத் தக்காணத்திலிருந்த ஒருசில குடும்பங்களே இந்தத் தகுதியைப் பெற்றிருந்தன. மகாராத்திகள் சாதவாகன அரச குடும்பத்தோடு திருமண உறவுடையவர்கள். மூன்றும் வகையினர் மகா சேனாபதிகள் ஆவார்கள். சாதவாகனப் பேரரசின் ஆட்சியின் பிற்பகுதியில்தான் மகா சேனாபதிப் பதவி தோன்றியது. பின்னர் வந்த வேறு அரச வமிசத்தினர் காலத்திலும் அந்தப் பதவி தொடர்ந்து வழக்கில் இருந்தது. மகா சேனாபதிகளுள் சிலர் எட்டியிருந்த மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பை வகித்தார்கள்; வேறு சிலர் மைய அரசின் நிருவாகத் துறைகள் சிலவற்றின் பொறுப்பை ஏற்றிருந்தார்கள்.

ஆஹரங்கள் என்று வழங்கிய பல நிர்வாகப் பகுதிகளாய் நாடு பிரிக்கப்பட்டிருந்தது. அத்தகைய பகுதி ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமாத்தியர் (அமைச்சர்) பொறுப்பில் இருந்தது. ஆஹரம் ஒவ்வொன்றிலும் பல கிராமங்களிருந்தன. ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு தலைவன் (கிராமிகன்) இருந்தான். கருவூல அதிகாரிகளும் கண்காணிப்பவர்களும் பொற்கொல்லரும், நாணயம் செய்பவர்களும், நிருவாகிகள் (மகாமாத்திரர்), ஆவணக் காப்பாளர்கள், வாயில் காப்பாளர்கள், தூதுவர்கள் ஆகியவர்களும் பொறிப்புகள் குறிப்பிடுகின்ற ஏனைய அலுவலர்கள் ஆவார்கள். மக்கள் செய்த தொழில்களின் அடிப்படையில் புதிய துணைச் சாதிகள் தோன்றின. எடுத்துக் காட்டாக, இடையர்களையும் (கொலிக்கர்) உழவர்களையும் (ஹாலிக்கர்) கூறலாம். அதைவிடக் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் சகர், யவனர் ஆகிய வெளிநாட்டினர் உள்ளூர்ச் சமுதாயத்தில் இரண்டறக் கலந்துவிட்டதேயாகும். அவர்களுள் சிலர் பௌத்தர்களாய் மாறினர்; வேறு சிலர் ஓரளவு தரங்குறைந்த க்ஷத்திரியர்களாயினர். அவர்களுடைய பெயர்களெல்லாம் முற்ற முழுக்க இந்தியப் பெயர்களாகவே மாறின. எடுத்துக்காட்டாக, தர்மதேவன், ரிஷபதத்தன், அக்கினிவர்மன் ஆகிய பெயர்களைக் கூறலாம். சக வமிசத்தைச் சேர்ந்த ரிஷப தத்தன் என்பவன் பர்னச நதியின் கரையிலிருந்த புஷ்கரத்துக்கு யாத்திரை செய்து பசுக்களையும் கிராமங்களையும் பார்ப்பனர்க்குத் தானங் கொடுத்ததாக அறிகிறோம். மேற்குத் தக்காணத்தில்

கி.பி. இரண்டாம் நூற்றுண்டுக்குப் பின் இந்து வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்த வெளிநாட்டினர் இருந்ததாகத் தெரியவில்லை. சகர், பல்லவர், யவனர் ஆகியவர்களை அழித்தவன் என்று பெயர்பெற்ற கௌதமி புத்திரன் அந்த அழிவு வேலையை மிக நன்ருகச் செய்துவிட்டான் போலும். கிழக்குத் தக்காணத்தின் வரலாற்றில் யவனர்களைப்பற்றிய குறிப்பு எதுவுமில்லை. ஆனால், அமராவதியிலும் கிருஷ்ணு நதிப் பள்ளத்தாக்கின் ஏனைய இடங்களிலும் கட்டப்பெற்ற தூபிகளில் கிரேக்க ரோமானியக் கலையியல்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அதுபோலவே, அல்லூரில் கிடைத்திருக்கும் ஒரு பொறிப்பு கிரேக்க (யவன) விளக்குகளைக் குறிப்பிடுகின்றன.

சமுதாயத்தில் பெண்கள் முன்னணியில் இருந்ததையும் அவர்கள் சொந்தமாகவே உடைமைகள் வைத்திருந்ததையும் அவர்களுடைய தாராளமான தான தருமங்களைக் குறிப்பிடுகின்ற பொறிப்புகளின் மூலம் அறிகிருேம். அவர்கள் புத்த மதத் திருச் சின்னங்களை வழிபடுவதையும் கூட்டங்களிற் கலந்து கொள்வதையும், விருந்தினர்களைப் பேணுவதில் தங்கள் கணவன்மார்களுக்குத் துணையாக நிற்பதையும் அந்தக் காலத்தில் செதுக்கிய ஓவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. குறைந்த ஆடைகளையும் மிகுந்த நகைகளையும் அணிந்து கொள்வதில் பெண்களுடன் ஆண்களும் போட்டியிட்டனர். ஓரளவு சுகபோகப் பொருள்கள் என்று கருதத்தக்க ஜாடிகள், கூஜாக்கள், நாற்காலிகள், முக்காலிகள், மேஜைகள், கட்டில்கள் முதலிய அழகான தட்டுமுட்டுப் பொருள்கள் குடிசைகளிலும் இருந்தன.

நகரங்களைச் சுற்றிலும் உயர்ந்த மதிற்சுவர்கள் இருந்தன. அந்தச் சுவர்களில் உயர் மேடைகளும் வாயில்களும் இருந்தன. அவைகளெல்லாம் பெரும்பாலும் செங்கல்லாலும் காரையாலும் கட்டப்பட்டவை. சாதாரண வாயில்களைத் தவிர, சாஞ்சியிலிருப்பவை போன்ற தோரண வாயில்களும் இருந்தன. போரிற் காலாட் படைஞர்கள் முன்னணியிற் சென்று தாக்குதலைத் தொடங்கினர். அவர்கள் பகைவர்களைத் தாக்குவதற்கேற்ற குட்டை வாள்களையும் அவர்களிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள வட்டக் கேடயங்களையும் வைத்திருந்தார்கள். எதிரிகளின் வாள் வயிற்றிற் பாயாதவாறு வயிற்றைச் சுற்றிலும் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டார்கள். காலாட் படையின் ஒரு பக்கத்தில் குதிரைப் படையும், மற்றொரு பக்கத்தில் யானைப் படையும் சென்றன. இந்த மூவகைப் படையினருக்கும் பின்னால்

வில் வீரர்கள் சென்றார்கள். நீண்ட ஈட்டியும், போர்க் கோடரியும், மரச் சம்மட்டியும் போர்வீரர் பயன்படுத்திய ஏனைய படைக்கலன்கள். காலாட் படையினர்க்குத் தலைப்பாகை கிடையாது; ஆனால் குதிரை வீரர்களும் யானைப் பாகர்களும் தலைப்பாகை அணிந்திருந்தார்கள்.

மேற்குக் கடற்கரையிலும் கிழக்குக் கடற்கரையிலும் பல துறைமுகங்கள் இருந்தன. அங்கெல்லாம் நல்ல வாணிகம் நடைபெற்றது. 'மைசோலியா'வில் (கோதாவரிக் கழிமுக நடு அரங்கத்திற்கும் கிருஷ்ணா நதிக் கழிமுக நடுஅரங்கத்திற்கும் இடைப்பட்ட பகுதி) இருந்த பலதுறைமுகங்களின் பெயர்களை டாலமி குறிப்பிடுகிறார். அவற்றுள் ஒன்றிலிருந்து 'தங்கக் கிரைசே'யிக்கு (மலேயாத் தீபகற்பமும் அதனையடுத்த கிழக்குத் தீவுக் கூட்டங்களும்) போக வேண்டிய கப்பல்கள் புறப்பட்டதாக அவர் கூறுகிறார். மேற்குத் தக்காணத்தின் துறைமுகங்களுள் மிக வடக்கிலிருந்தது பாரிகாஜா (புரோச்); மிகப் பண்டையது சொப்பாரா; மிகப் பெரியது கல்யாணி, பைத்தான், டகரா, ஜுன்னார், கரஹாட்டகா, நாசிக், வைஜயந்தி ஆகியவை உள்நாட்டு வாணிக நகரங்களுள் முக்கியமானவை. கிழக்குத் தக்காணத்திலிருந்த தானியக்கடகா, விஜயபுரம், நரசெலா ஆகிய வாணிக நகரங்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. கூலவாணிகர், கன்னார், நெசவாளர், இரும்பு வணிகர், பூ விற்போர், எழுத்தர் முதலியவர்களுக்கெல்லாம் அவரவர்க்குரிய தொழிற்குழுச் சங்கங்கள் இருந்தன. ஒவ்வொரு சங்கத்துக்கும் ஒவ்வொரு தலைவர் இருந்தார்கள். அத் தலைவருக்குச் சேத்தி என்று பெயர் வழங்கியது. சங்கத்திற்கென இருந்த அலுவலகத்திற்கு நிகமசபை என்று பெயர் வழங்கியது. அந்த அலுவலகமே வங்கியாகவும் பயன்பட்டது. வணிகர்கள் தங்கள் பணத்தை அங்கே சேமித்து வைத்தார்கள்; வேண்டும்போது கடனும் வாங்கிக் கொண்டார்கள். சுகபோகப் பொருள்களாகிய மது, மிக மெல்லிய துணிகள், உயர்ந்த நறுமணத் தைலங்கள், கண்ணாடிப் பொருள்கள், குங்குலியம், கால்நடைத் தீனிக்குரிய மணப் புல் வகைகள் முதலியவை இறக்குமதி செய்யப்பட்டன. சாதாரணத் துணி வகைகள், கார்னிலியன் என்னும் மணிக்கல், மஸ்லின் துணி, பூவேலைத் துணி முதலியவை ஏற்றுமதியான பொருள்கள். கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் மிகவும் செலாவணியிலிருந்த நாணயங்கள் வாணிக வளர்ச்சிக்குப் பேருதவியாயிருந்தன. ஆனால், நல்ல சாலைகள் இல்லாதது ஒரு பெருங் குறையாய் இருந்தது. அந்தக் காலத்தில் கிழக்குத் தக்காணம், தொழிலிலும் வாணிகத்திலும் வேகமாக முன்னேறத் தொடங்

கியது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அம் முன்னேற்றம் உச்ச நிலையை அடைந்தது.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குள் புத்த மதம் நிலைபெற்று விட்டது. சாதவாகனர் ஆட்சிக் காலம் முழுவதிலும் அதற்கு நல்ல ஆதரவு இருந்தது. கிறிஸ்து சகாப்தத்தின் முதலிரண்டு நூற்றாண்டுகளில் புத்தமதம் தக்காணத்தில் மிக உன்னத நிலையில் விளங்கியது. அமராவதியிலிருந்த தூபி பெரிதாக்கப் பட்டதோடு கூடுதலான சிற்ப வேலைப்பாடுகளாலும் அழகு செய்யப்பட்டது. அல்லூரு, கும்மடிதூரு, கண்டசாலா, குடிவாடா, கோலி ஆகிய இடங்களில் புதிய தூபிகள் அமைக்கப் பட்டன. பழைய தூபிகள் பெரிதாக்கப்பட்டன. நாசிக், கார்லே, கன்ஹேரி ஆகிய இடங்களில் புதிய குடைவரைகள் வெட்டப் பெற்றன. மேலும், அவற்றுக்கு அதிகமான மானியங்கள் தரப்பட்டன. அந்தக் காலத்தைச் சேர்ந்த பொறிப்புகளில் புத்த மதத்தின் பல உட்பிரிவுகளின் பெயர் களும், அந்த மதத்தைப் பின்பற்றியவர்களுக்கு அதனுடைய கோட்பாடுகளை விளக்கும் பணியில் ஈடுபட்டுச் சமயக் கல்வியிலும் மதிப்பிலும் சிறந்து விளங்கிய பல படித்தரமான துறவிகளின் பெயர்களும் இருக்கின்றன. தூபிகள், புனித மரம், புத்தர் திருவடிச் சுவடுகள், திரிசூலம், தர்ம சக்கரம், திருச் சின்னங்கள், புத்தர் சிலைகள் ஏனைய புனித ஆசிரியர்களின் சிலைகள், நாகராஜர்களுடைய சிலைகள் எல்லாமே வழிபாட்டுக் குரிய புனிதப் பொருள்களாயின. அந்த நாளைய செதுக்கு ஓவியங்கள் சாதாரணமாகக் கைகூப்பியோ மண்டியிட்டோ நிலத்தில் விழுந்தோ வழிபடுகிற மக்களைக் காட்டாமல் மெய்ம் மறந்த இன்ப நிலையில் ஆழ்ந்து நிற்கிற பக்தர்களான ஆடவர் களையும் மகளிரையும் நம் கண் முன் நிறுத்துகின்றன.

பிராமண மதமும் அந்தக் காலத்தில் முன்னேற்றமடைந்தது. சாதவாகன அரசர்களுள் பெரும்பாலார் பிராமண மதத்தைப் பின் பற்றினர். அந்தச் சாதவாகன மரபின் மூன்றாம் அரசன் வேத வேள்விகள் பலவற்றைச் செய்தான். தன் மகனுக்கு வேதிஸ்ரீ என்னும் பெயரையும் வைத்தான். ஹாலன் தொகுத்த 'சப்தசதி' என்னும் நூல் சிவபெருமானை வழுத்துகின்ற ஒரு பாடலோடு தொடங்குகிறது. கௌதமபுத்திர சாதகர்ணி பார்ப்பனர்க்குப் பேராதரவு தந்தான். அவன் ராமன், கேசவன், அர்ச்சுனன் முதலிய இதிகாசத் தலைவர்களைப் பின்பற்ற முயன்றான், அந்தக் கால இந்து மதத்தில் இந்திரன், வாசுதேவன், சூரியன், சந்திரன், சிவன், விஷ்ணு, கிருஷ்ணன், கணேசன், பசுபதி

ஆகிய தெய்வங்கள் இடம் பெற்றன. கௌரி கோயிலும், நீர்-நெருப்பு விரதமும் சப்தசதியில் குறிக்கப்பட்டுள்ளன.

சாதவாகனப் பேரரசு வீழ்ச்சியடைந்த போது அதன் எல்லைக்குள்ளிருந்த நாடுகளை ஆபீரர்களும், சுட்டுகளும், இச்சுவாகுகளும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள். இச்சுவாகுகள் ஆந்திர தேசத்தையும், சுட்டுகள் தென் பகுதிகளையும், ஆபீரர்கள் வட மேற்குப் பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள். கி.பி. மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் ஆபீரர்கள் கீழ்க் கிருஷ்ணைப் பள்ளத்தாக்கிலுள்ள நாகார்ஜுன கொண்டாவிலும் ஆட்சி செய்தது தெரிகிறது. மத்தியப் பிரதேசம் சாதவாகனருடைய சந்ததியார்களின் ஆட்சியிலேயே இருந்தது. தென் கிழக்குப் பகுதியில் பல்லவர்கள் தங்கள் ஆட்சியை நிறுவினார்கள். இவ்வாறு நந்தர் காலத்திலிருந்து ஆறு நூற்றாண்டுகள் நிலைத்துநின்ற தக்காண அரசியல் ஒருமைப்பாடு இறுதியில் சிதைந்தது.

ஆபீரர்கள் வெளிநாட்டினரென்பது உறுதியாகத் தெரிகிறது. மகா பாஷ்யத்தில் அவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆபீரர்கள் மேற்கு இந்தியாவில் ஆட்சிசெய்த சகசத்திரப்பர்களுடைய சேனைத் தலைவர்களாய்ப் பணிபுரிந்தார்கள். சாதவாகனருக்குப் பின் பத்து ஆபீரர்கள் 67 ஆண்டு ஆட்சி செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. நாசிக்கில் கிடைத்துள்ள ஒரு பொறிப்பு, சிவதத்தனுடைய மகனை மாதாரிபுத்த ஈசுவரசேனன் என்னும் ஆபீர அரசனைக் குறிப்பிடுகிறது. அந்தப் பொறிப்பு, அது செதுக்கப்பட்ட ஆண்டைக் குறிப்பிடுகிற வகையிலும் இன்னும் பல வகைகளிலும் சாதவாகனப் பொறிப்புகளை ஒத்திருக்கிறது. ஈசுவர சேனன் ஆபீர வமிச ஆட்சியைத் தொடங்கியவனாக இருக்கலாம். கி.பி. 248–249-ல் அந்த வமிசம் 'காலசூரி' என்னும் ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது என்பதைத் தவிர அதைப்பற்றி வேறு செய்தி எதுவும் தெரியவில்லை. பிற்காலத்தில் அந்தச் சகாப்தம் சேதி சகாப்தம் என்று பெயர் பெற்றது. ஆபீர அரசன் வாசுசேனன் என்பவனுடைய ஆட்சியின் முப்பதாம் ஆண்டில் (கி.பி. 279) செதுக்கப்பெற்ற ஒரு பொறிப்பு அண்மையில் நாகார்ஜுன கொண்டாவில் கிடைத்தது.

மராட்டியத்திலும் குந்தளத்திலும் ஆட்சிசெய்த சுட்டு வமிசத்தைப் பற்றியும் அதிகச் செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. மைசூரிலுள்ள வட கன்னடம் சித்தலதுர்க்கம் ஆகிய

இடங்களிற் கிடைத்துள்ள நாணயங்களிலும், கன்ஹேரி, பனவாசி, மலவல்லி ஆகிய இடங்களிலுள்ள சில பொறிப்பு களிலும் நாம் சுட்டு மரபைப் சேர்ந்த அரசர்கள் சிலருடைய பெயர்களை அறிகிறோம். அனந்தப்பூர், கடப்பை மாவட்டங்களில் சுட்டு அரசர்களுடைய நாணயங்கள் சில கிடைத்திருக்கின்றன. அவற்றில் குதிரையின் உருவமும் 'ஹாரீட்டி' என்னும் எழுத்துகளும் இருக்கின்றன. ஹாரீட்டி என்பது சுட்டு அரசர் களுடைய மரபுபெயரின் ஒரு பகுதி. சுட்டு மன்னர்கள் சாத வாகன மரபின் ஒரு கிளையைச் சேர்ந்தவர்கள் என்று சிலரும் அவர்கள் நாக வமிசத்தைச் சேர்ந்தவர்கள் என்று வேறு சிலரும் கருதுகின்றனர். கடம்பர்கள் சுட்டு மன்னர்களை வீழ்த்திவிட்டுத் தங்களுடைய ஆட்சியை நிறுவிக்கொண்டார்கள்.

இச்சுவாகு வமிசத்தினர் கிருஷ்ணு குண்டூர்ப் பகுதிகளில் ஆட்சிசெய்தனர். புராணங்கள் இச்சுவாகு அரசர்களை ஸ்ரீபார்வதீயர்கள் (ஸ்ரீ பர்வதத்தை ஆள்பவர்கள்) என்றும், ஆந்திர பிரித்தியர்கள் (ஆந்திரரின் ஊழியர்கள்) என்றும் குறிப் பிடுகின்றன. அம் மரபினைச் சேர்ந்த ஏழு அரசர்கள் மொத்தத்தில் 57 ஆண்டுகள் ஆட்சி செய்தார்களென்று கூறப் பட்டாலும், அவர்களுள் சிலருடைய பெயர்களை மட்டும் பொறிப்புகள் குறிப்பிடுகின்றன. முதலில் அவர்கள் சாத வாகன ஆட்சியின்கீழ்ப் பண்ணைக் குடியுரிமை பெற்ற தலைவர் களாக இருந்தார்கள். அப்போது அவர்கள் 'மகாத்தலவரா' என்னும் பட்டப் பெயர் பெற்றிருந்தார்கள். அந்த வமிசத்தின் ஆட்சியை நிறுவிய வாசித்தீ புத்த ஸ்ரீசாந்தமூலன் அசுவமேத யாகத்தையும் வாஜபேய யாகத்தையும் செய்தான். அவனுடைய மகன் வீரபுரி சதாத்தன் (ஏறக்குறையக் கி.பி. 275) காலத்தில் புத்தமதம் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. மேலும், அவன் கையாண்ட அரச தந்திர முறைகள் மிகவும் புகழ் பெற்றவை. அவன் உஜ்ஜைனியிலிருந்த சக அரச குடும்பப் பெண் ஒருத்தியை மணந்து கொண்டான்; தன் மகளைச் சுட்டு வமிச இளவரசனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஏறக் குறைய எல்லாருமே புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். வீரபுரி சதாத்தனுடைய அத்தை ஒருத்தி நாகார்ஜுன கொண்டாவில் புத்தர் நினைவுத் திருச் சின்னங்களை வைப்பதற்காக ஒரு பெரிய தூபியையும், திருக்கோயிலில் உள்ள ஒதுக்கிடத்தின் வடிவ முடைய கோயில்களையும், விகாரங்களையும், மண்டபங்களையும் கட்டினாள். அவளை அரச குடும்பப் பெண்கள் மட்டுமன்றி ஏனைய பெண்களும் பின்பற்றினார்களென்பது போதிஸ்ரீ என்னும்

ஒரு குடிமகளைப் பற்றிய குறிப்பின்மூலம் நாம் அறிகிறோம். வீரபுரி சதாத்தனுக்குப் பின் இச்சுவாகு ஆட்சியைச் சிறிது காலம் (கி.பி. 275–280) ஆபீரர்கள் கைப் பற்றிக் கொண்டார்கள். அதன்பின் வீரபுரி சதாத்தனுடைய மகன் எகுவுல சாந்தமூலன் பட்டத்திற்கு வந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் ஒரு தேவி விகாரமும், ஒரு தூபியும், இரண்டு ஒதுக்கிட வடிவக் கோயில்களும் கட்டி முடிக்கப்பட்டன. அவன் காலத்தில் சீஹல விகாரம் ஒன்றும் கட்டப்பட்டதை அறிகிறோம். அது சிங்களர் நிறுவிய பெண் துறவியர் மடமாக இருக்கக் கூடுமென்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அது சிங்களத் துறவிகள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட மடமென்று சொல்வது அதிகப் பொருத்தமாக இருக்குமென்று வேறு சிலர் கருது கின்றனர். அதே காலத்தில் தம்பபன்னி (இலங்கை) தேரியர் களின் (தோழமைக் குழுவினர்) உபயோகத்திற்காக ஒரு சைத்தியக் கூடம் அர்ப்பணிக்கப்பட்டது. இவ்வாறு இலங்கைப் புத்தமதம் ஆந்திரப் புத்தமதத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததை நாம் அறிகிறோம். சக வமிசத்தில் பிரிகத் பலாயன கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை எகுவலன் திருமணம் செய்து கொண்டான். அவனுடைய இன்னொரு மனைவியான வாசிஷ்டி என்பவளுக்குப் பிறந்த ருத்திர புருஷ தத்தன் சுமார் பதினோராண்டு ஆட்சி செய்தான். நாகார்ஜுன கொண்டாவிலுள்ள செதுக்கு ஓவியங்களில் பல பெரிய புத்தர் சிலைகள் இருக்கின்றன. அந்த ஓவியங்கள் எல்லாவற்றிலும் கிரேக்கக் கலை மரபின் செல்வாக்கையும் மகாயான பௌத்தத்தின் போக்குகளையும் தெளிவாகக் காண்கிறோம். ஆனால், அதற்கு முன்னைய நூற்றாண்டைச் சேர்ந்த கலைச் சின்னங்களில் நாம் கண்ட பக்திப் பரவசத்தில் ஆழ்ந்துநிற்கும் மக்கட் கூட்டத்தை இந்தக் கலைச் சின்னங்களில் காணவில்லை.

நிர்வாகத்துறையிலும் சமுதாய வாழ்விலும் சாதவாகன மரபுகள் தொடர்ந்தன. ஆனால், மாறுதல்களைக் காட்டும் அறிகுறிகளும் இல்லாமலில்லை. எடுத்துக் காட்டாக, அரசு ஊழியர்களின் அலுவற் பெயர்கள் சாதவாகன காலத்தில் வழங்கிய பெயர்களாகவே இருந்தன. அந்தக் காலத்தில் பல அலுவலர்கள் தனித்தனியாகச் செய்த பணிகளை இச்சுவாகு ஆட்சியில் ஒரே அலுவலர் செய்யும் முறை வழக்கிற்கு வந்தது. அரசர்கள் தங்கள் பெயரோடு தங்கள் தாய்மார்களின் பெயர் களைச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் இன்னமும் இருந்தாலும், தந்தை பெயரைச் சேர்த்துக்கொள்ளும் முறையும் இப்போது வழக்கிற்கு வந்தது. இன்னுஞ் சிறிது பிற்காலத்தில் ஆட்சி

செய்த கடம்ப அரசர்கள் தங்கள் தாய்மார் பெயர்களையும் தங்கள் தந்தையர் கோத்திரப் பெயர்களையும் தங்கள் பெயரோடு சேர்த்துக்கொள்ளத் தொடங்கினார்கள். இவ்வாறு, சாதவாகனர் காலத்தில் தொடங்கிய ஒரு வழக்கம் இச்சுவாகு வமிசத்தினர், கடம்ப வமிசத்தினர் ஆகியவர்கள் காலத்தில் சிறிது மாறுதலடைந்து, இறுதியில் பல்லவர் காலத்தில் தன் முழு உருவத்தைப் பெற்றது. ஆஹரர் நாளடைவில் ராஷ்டிரர் என்னும் பெயரைப் பெற்றார்கள்; ராஜா என்னும் பட்டம் மகாராஜா என்று மாறியது.

ஆந்திர நாட்டில் இச்சுவாகு மரபு அரசர்களுக்குப் பின் பிரிகத்பலாயன கோத்திரத்தைச் சேர்ந்த அரசர்கள் ஆட்சி செய்தார்கள். அவர்களில் ஜெயவர்மன் என்னும் அரசனைத் தவிர ஏனையோருடைய பெயர்கள் தெரியவில்லை. அந்த வமிசத்தினரைப்பற்றித் தெரிந்துகொள்ள உதவுவது ஒரே ஒரு செப்புப் பட்டயம். ஜெயவர்மனுடைய ராஜ்யம் பல ஆகரங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் ஆகரமும் வாபடம் என்னும் அலுவற் பெயருடைய நிர்வாக அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. மேலே சொன்ன செப்புப் பட்டயம் அந்த அரசன் பார்ப்பனர்க்குக் கொடுத்த ஒரு தானத்தைப்பற்றிக் கூறுகிறது. இத்தகைய தானங்களில் அதுவே முதல் தானமாய் இருக்கலாம். அந்த வழக்கம் பிற்காலத்தில் மிகவும் பரவியது. பிற்கால அரசர்கள் பார்ப்பனர்களுக்கு எண்ணற்ற பிரமதேயங்கள் அல்லது நன்கொடைகளை வழங்கினார்கள். ஜெயவர்மன் காலத்திலேயே புத்த மதமும் சமண மதமும் வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டதை அவன் பார்ப்பனர்க்களித்த நன்கொடை காட்டுகிறது.

சாதவாகனப் பேரரசின் தென்கிழக்குப் பகுதியிலிருந்த பல்லவர்களுக்குக் காஞ்சிபுரம் தலைநகரமாயிற்று. அவர்கள் பஹ்லவர் என்ற வெளிநாட்டு மக்களின் சந்ததியார்களென்று சிலர் கருதுகிறார்கள். இரண்டாம் நந்திவர்மன் பல்லவ அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, யானைத் தலையின் உச்சி வட்டத் தோல் போன்ற வடிவமுடைய முடியை அவன் சூடிக்கொண்டான். அந்த முடி இந்தோ-கிரேக்க மன்னனான டெமிட்ரியஸ் அணிந்துகொண்ட முடியை நினைவூட்டியது. எனவே, பல்லவர்களும் டெமிட்ரியசைப்போல் வெளி நாட்டினர்கள் என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஆனால், சுட்டு மரபினர், கடம்ப மரபினர் ஆகியவர்களைப்போல் பல்லவர்களும் வடநாட்டில் தோன்றிய அரச மரபினர்கள் என்றும், அவர்கள் தென்னாட்டிற்கு

வந்தபோது அந் நாட்டுப் பழக்க வழக்கங்களைத் தங்களுக்கேற்ற முறையில் மாற்றியமைத்துக்கொண்டார்கள் என்றும் கருதுவது தான் பொருத்தமாக இருக்கும். அவ்வாறுதான் பனவாசியில் ஆட்சிசெய்த சுட்டு வமிச அரசனான சாதகர்ணி என்பவன் மலவல்லி என்னும் தெய்வத்தை வழிபட்டதோடு, அத் தெய் வத்தின் கோயிலுக்கும் மானியம் அளித்தான். அவனுக்குப் பின் வந்த கடம்ப அரசனும் அவ்வாறே செய்தான். சிறிது காலத் திற்குப் பின் கடம்ப அரசர்கள், கடம்ப மரத்தையும் மகாசேனன் (சுப்பிரமணியன்) என்னும் கடவுளையும் வழிபட்டார்கள். சுப்பிரமணியக் கடவுள் கடம்ப மரத்தில் உறைந்ததாகத் தமிழ்மக்கள் நம்பினார்கள். அது போலவே, பல்லவர்களும் தமிழில் தொண்டை என்றும், பிராக்கிருத சமஸ்கிருதத்தில் பல்லவம் என்றும் வழங்குகின்ற தொண்டைக் கொடியிலிருந்து தங்கள் மரபுபெயரைப் பல்லவர் என்று வைத்துக் கொண்டதாக நினைப்பது பொருத்தமாயிருக்கும். தொண்டை என்பது கொடியை மட்டுமன்றித் தொண்டை நாட்டையும் குறிக்கிறது.

பல்லவ வரலாறு, கொடையைக் குறிக்கும் மூன்று செப்புப் பட்டயங்களோடு தொடங்குகிறது. அந்த மூன்றுமே பிராக் கிருத மொழியில் இருக்கின்றன. முதல் பட்டயம் ஸ்கந்தவர்மன் இளவரசனாயிருந்த காலத்தைச் சேர்ந்தது. மற்றவை இரண்டும் அவன் அரசனான பின்பு கொடுத்தவை. அவன் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன்; அவன் அக்னிஷ்டோம, வாஜபேய, அசுவமேத வேள்விகளைச் செய்து, 'தர்மத்துக்குத் தன்னை ஆட்படுத்திக்கொண்ட மீயுயர் அரசர்க்கரசன்' என்னும் பட்டத் தைச் சூடிக் கொண்டான். அவன் காலத்தில் பல்லவ ராஜ்யத் திற்குக் காஞ்சீபுரம் தலைநகராயிருந்தது. அவன் காலத்துப் பல்லவ நாடு வடக்கே கிருஷ்ணா நதி வரையிலும் மேற்கே அரபிக் கடல் வரையிலும் பரவியிருந்தது. பல்லவ அரசு எவ்வாறு அவ்வளவு பெரிய பேரரசாக வளர்ந்தது என்பது நமக்குத் தெரிய வில்லை. மூன்றும் நந்திவர்மனுடைய ஆட்சியின் ஆறும் ஆண்டில் வெளியிடப்பட்டதும், ஒன்பதாம் நூற்றாண்டில் வழங்கிய மரபு வழிச் செய்திகளைப் பதிவு செய்து வைத்திருப்பதும் ஆகிய வேலூர்ப்பாளையச் செப்பேட்டில் வீர கூர்ச்சன் என்னும் புகழ் பெற்ற முற்காலப் பல்லவன் ஒருவன் நாகமன்னனுடைய அரச விருதுகளை மட்டுமன்றி அவனுடைய மகளையும் பறித்துக் கொண்ட செய்தியைக் காண்கிறோம். சாதவாகனப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் சிறிது காலம் அப் பேரரசின் மேற்குப் பகுதியில் ஆட்சி செய்த சுட்டு மரபினரைப் பல்லவர்கள் தோல்வியுறச்

செய்ததை நாம் அறிவோம். அந்தச் செய்தியைத்தான் வேலூர்ப் பாளையச் செப்பேடு இவ்வாறு கூறுவதாக நாம் கருதலாம். வீரகூர்ச்சனுக்கு ஸ்கந்த சிஷ்யன் என்னும் ஒரு மகன் இருந்தான் என்றும், அவன் சத்தியசேனன் என்னும் அரசனிடமிருந்து பார்ப்பனர்க்குச் சொந்தமான கடிகையை வென்றானென்றும் நாம் அறிகிறோம். ஆனால், அந்தச் செய்தியைப்பற்றிய விவரங்கள் இப்போது நமக்குத் தெரியவில்லை. ஸ்கந்த சிஷ்யனுடைய மகன் குமாரவிஷ்ணு பல போர்களில் வெற்றி பெற்றுக் காஞ்சீபுரத்தையும் பிடித்துக்கொண்டான் என்று அறிகிறோம். ஆனால், அவன் காஞ்சீபுரத்தை யாரிடமிருந்து கைப்பற்றினான் என்பது தெரியவில்லை.

பழைய பிராகிருதச் செப்பேடுகளை இப்போது மீண்டும் கவனிப்போம். ஸ்கந்தவர்மனுடைய தந்தையின் பெயர் தெரியவில்லை. ஆனால், ஸ்கந்தவர்மன் காஞ்சீபுரத்தில் ஆட்சிசெய்த பல்லவ மரபின் முதல் அரசன் அல்லன் என்பது தெளிவு. பட்டயத்திற் காணும் 'யுவராஜன்' என்னும் பட்டம் இதைத் தெளிவாக்குகிறது. சிம்மவர்மன் அவனுடைய தந்தையாக இருக்கலாமென்று அண்மையில் குண்டூரில் கண்டுபிடிக்கப்பட்ட பிராக்கிருதக் கல்வெட்டிலிருந்து நாம் ஊகிக்கலாம். அவனுக்குப் பின்வந்த அரசர்கள் அவனுடைய மகன் யுவராஜன் என்னும் பட்டத்தையுடைய புத்தவர்மனும், அவனுக்கும் அவனுடைய மனைவி சாருதேவிக்கும் பிறந்த மகனான புத்தயாங்குரனும் ஆவார்கள். ஸ்கந்தவர்மன் காலத்தில் வெளியிடப்பெற்ற செப்பேடுகள் மூன்றுமே கி.பி. நான்காம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவை என்று கொள்ளலாம். அந்தக் காலத்தில் இளவரசனை (யுவராஜனை)த் தவிர ஏனைய அரச குமாரர்களும் நிர்வாகத்திற் பங்கு பெற்றார்கள். நிர்வாகத்தில் பல துறைகளிருந்தன; ராஜ்யத்தில் பல பிரிவுகளிருந்தன. அந்தப் பிரிவுகளிலும் துறைகளிலும் பல்வேறு அலுவலர்கள் குறிப்பிட்ட பல்வேறு பணிகளைச் செய்தார்கள். அவர்களுடைய அலுவலின் பெயர்களையும் கடமைகளையும் பொறிப்புகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

பல்லவர்கள் பிராமண மதத்தைப் பின்பற்றியவர்கள். அவர்கள் கோயில்களுக்கு மானியங்களையும், பார்ப்பனர்களுக்கு நன்கொடைகளையும் வழங்கினார்கள். அவர்கள் அவ்வாறு செய்வதன்மூலம் போரில் வெற்றி பெற இயலும் என்றும், நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் அடையக்கூடும் என்றும் நம்பினார்கள்.

ஸ்கந்தவர்மனுடைய செப்பேடுகளுக்குப் பின் பல்லவர்களைப் பற்றிய செய்தி எதனையும் தெரிந்துகொள்ள இயலாத இருள் சூழ்ந்து கொண்டது. அந்த இருளைக் கிழித்துக்கொண்டு வருகிற ஒளிக்கீற்றுப்போல் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இடைக்காலத்தைச் சேர்ந்த அலகாபாத்துத் தூண் பொறிப்பில் சமுத்திரகுப்தனுடைய தென்னாட்டுப் படையெடுப்பைப்பற்றிய செய்தி விளங்குகிறது. சமுத்திரகுப்தன் காஞ்சி யரசனான விஷ்ணுகோபனோடு அந்த நகருக்கு வடக்கில் ஏதோ ஓரிடத்தில் போர் புரிந்தானென்றும், ஆனால், அவன் காஞ்சியை அடைய வில்லையென்றும் அந்தப் பொறிப்பிலிருந்து நாம் அறிகிறோம். சமுத்திரகுப்தனோடு பொருத இன்னோர் அரசன் நெல்லூர் மாவட்டத்தில் ஏதோ ஒரு பகுதியிலிருந்த பாலக்கா என்னு மிடத்தில் ஆட்சிசெய்த உக்கிரசேனன் என்பவன். ஆனால், அவன் விஷ்ணுகோபனுடைய ஆட்சியின் கீழிருந்த பண்ணைக் குடியுரிமைத் தலைவன் (சிற்றரசன்) என்பது தோன்று கிறது.

பல்லவ வரலாற்றின் அடுத்த நிலையை அறிந்து கொள் வதற்குப் பன்னிரண்டு செப்பேடுகளும் உடைந்துபோன பதின் மூன்றாம் செப்பேட்டுத் துண்டு ஒன்றும் நமக்கு உதவுகின்றன. அவையெல்லாமே வடமொழியில் இருக்கின்றன. ஆனால், அவற்றுள் சில உண்மையான மூலச் செப்பேடுகள்தாமா என்பது ஐயத்திற்குரியது. அவையெல்லாமே அரசர்களுடைய ஆட்சி யாண்டுகளை மட்டுமே குறிப்பிடுகின்றன. அவை பொதுவான ஒரு சகாப்தத்தைக் குறிப்பிடவில்லை. அதனால், பல்லவர் காலத் தைச் சரியானபடி நிர்ணயிப்பதற்கு நாம் வேறு ஆதாரத்தைத் தான் தேடவேண்டும். அண்டப் படைப்புக் கோட்பாட்டை விளக்குவதற்காக எழுதப்பெற்ற 'லோக விபாகா' என்னும் சமண நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சக சகாப்தத் தேதியொன்று நாம் தேடுகின்ற ஆதாரத்திற்கு உதவுகிறது. அந் நூலின் கையெழுத் துப் பிரதி சிம்மவிஷ்ணு ஆட்சியின் 22ஆம் ஆண்டில், கி.பி. 458 ஆகஸ்டு மாதம் 25ஆம் தேதிக்குச் சரியான நாளில் எழுதி முடிக்கப்பெற்றது. இந்தத் தேதியை கங்க வமிச அரசர் களுடைய பட்டயங்கள் உறுதி செய்கின்றன. இந்த ஆதாரங் களின்படி நாம் கீழே காணும் பல்லவ அரசர்களுடைய மரபு வழிப் பட்டியலை உருவாக்கலாம்.

### 1. பிராக்கிருதப் பட்டயங்கள்

முதலாம் சிம்மவர்மன் (கி.பி. 275—300)
↓
(சிவ) ஸ்கந்தவர்மன்
↓
புத்தவர்மன்
↓
புத்தயாங்குரன்

### 2. சமஸ்கிருதப் பட்டயங்கள்

முதலாம் குமார விஷ்ணு (350–370)
↓
ஸ்கந்தவர்மன் (370–385)
↓
வீரவர்மன் (385–400)
↓
இரண்டாம் ஸ்கந்தவர்மன் (400–436)
↓

- முதலாம் சிம்மவர்மன் (436–460)
  ↓
  மூன்றாம் ஸ்கந்தவர்மன் (460–480)
  - நந்திவர்மன் (480–510)
  - இரண்டாம் குமார விஷ்ணு (510–530)
    |
    புத்தவர்மன் (530–540)
    ↓
    மூன்றாம் குமார விஷ்ணு (540—550)
- யுவமகாராஜா விஷ்ணு கோபவர்மன்
  ↓
  இரண்டாம் சிம்மவர்மன்
  ↓
  இரண்டாம் விஷ்ணு கோபவர்மன்

மேலே காணும் பட்டியல், செப்பேட்டுப் பட்டயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அந்தப் பட்டயங்களெல்லாம் அரசர்கள் கொடுத்த மானியங்களை மட்டுமே குறிப்பிடுகின்றனவன்றிக் கி.பி. 350ஆம் ஆண்டிற்கும் கி.பி. 500ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தின் அரசியல் வரலாற்றை நமக்குத் தெரிவிக்கவில்லை. சமுத்திரகுப்தனை எதிர்த்த விஷ்ணுகோபனும், முதலாம் குமார விஷ்ணுவும் ஒரேகாலத்தில் வாழ்ந்தவர்களென்றும், ஒருவேளை அவ்விருவரும் உடன்பிறந்தவர்களாக இருக்கலாமென்றும், யுவமகாராஜா முதலாம் விஷ்ணுகோபவர்மன் அரசனாவதற்கு முன்னரே இறந்து போயிருக்கக் கூடுமென்றும், இரண்டாம் சிம்மவர்மன் பல்வேறு மானியங்களை வழங்கியிருப்பதால் அவனுடைய ஆட்சி வளமிக்கதாயிருந்தது என்றும் நாம் உய்த்துணரலாம். இரண்டாம் சிம்மவர்மனுக்குப் பின் என்ன நடந்ததென்பது தெளிவாகத் தெரியவில்லை. தங்களுடைய ஆட்சியெல்லையைத் தென்திசையில் விரிவுபடுத்தும் பொருட்டுப் பல்லவர்கள் தென்றமிழ் நாட்டு மன்னர்களோடு போர் செய்வதில் ஈடுபட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 'சோழப் பெரும்படைக் கடலில் நீரடி நெருப்பாக' புத்தவர்மன் இருந்தானென்று வேலூர்ப் பாளையச் செப்பேடு கூறுகிறது. சிம்மவிஷ்ணுவின் தந்தையாகிய சிம்மவர்மன்தான், கி.பி. ஆரும் நூற்றுண்டின் இறுதியில், புகழ் பெற்ற பல்லவ ஆட்சியைத் தொடங்கியவன். ஆனல், நாம் உருவாக்கிய பட்டியலில் அவன் இடம் பெறவில்லை. எனவே, அது பல்லவ அரசர் கால்வழி வரிசையில் நிரப்ப முடியாத மற்றும் ஓர் இடைவெளியாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் பல்லவ நிர்வாகத்தில் மேலும் ஒரு முன்னேற்றம் நிகழ்ந்தது. அரசன் 'பட்டாரகன்' என்னும் இன்னுமொரு பட்டத்தைத் தன் பெயரோடு சேர்த்துக்கொண்டான். பட்டத்திற்கு வருகின்ற உரிமையுடைய இளவரசன் 'யுவமகாராஜா' என்று அனைவரும் ஏற்றுக்கொண்ட பதவியை வகித்தான். ஏனைய அரசகுமாரர்கள் ஆட்சித் துறையில் முன்போலவே பல அலுவல்களைக் கவனித்தார்கள். ஆனல், அவர்களில் ஒவ்வொருவரும் என்னென்ன அலுவல்களைக் கவனித்தார்களென்பது சரியாகத் தெரியவில்லை. வலிமை பொருந்திய சேனையும் காவல் (போலீஸ்) படையும் இருந்தன என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. கட்டாய வேலை முறையும் வழக்கில் இருந்திருக்கக்கூடும். உப்பு உற்பத்தித் தொழில் அரசனுடைய ஏகபோகத் தனியுரிமையாய் இருந்தது. சில சமயங்களில் சர்க்கரை உற்பத்தித் தொழிலும் அவ்வாறுதான் இருந்தது.

அரசனுடைய அலுவலர் கிராமங்களில் சுற்றுப் பயணம் செய்யும் போது, ஆங்காங்கேயிருந்த கிராமமக்கள் அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் பணம் வாங்காமல் செய்து தரவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆனால், தங்களுக்கு மானியமாகக் கிடைத்த நிலங்களுக்குப் பார்ப்பனர் வரிகட்ட வேண்டியதில்லை. அத்தகைய பதினெட்டு விடுபாட்டுரிமைகள் பார்ப்பனர்க்கு இருந்தன. அவ்வெல்லா உரிமைகளுமே நடைமுறையில் இருந்தனவா, அவற்றுள் ஒருசில கொள்கையளவில்மட்டும் இருந்தனவா என்று சொல்வது கடினம். சாதவாகனர்களைப் போலவே பல்லவ அரசர்களும் பார்ப்பன மதத்தைப் பின்பற்றிச் சிவனையும் திருமாலையும் வழிபட்டது மட்டுமன்றி வேள்விகளையுஞ் செய்தார்கள். ஆதலால், சாதவாகனர் காலத்தில் தோன்றிய பார்ப்பனரைப் பேணும் வழக்கம் நாளடைவில் வேரூன்றி நன்றாக வளர்ந்துவிட்டது என்று சொல்லலாம்.

தமிழகத்தில் நிலைபெற்றிருந்த எல்லா அரசுகளையும் கவிழ்த்த களப்பிரர்களால் பல்லவ அரசுக்கும் ஆபத்து வந்தது. ஆதலால், பல்லவ வரலாற்றின் அடுத்தபடி கி.பி. ஆறும் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர்களைத் தோல்வியுறச் செய்வதற்காகச் சிம்மவர்மன் மகனான சிம்மவிஷ்ணு செய்த முயற்சியோடு தொடங்குகிறது.

அதைப்பற்றிக் கூறுமுன் நாம் மீண்டும் ஆந்திர நாட்டுக்குச் செல்வோம். தென்னிந்தியாவின்மீது படையெடுத்த சமுத்திர குப்தனை எதிர்த்த இன்னோரரசன் வேங்கி நாட்டை ஆண்ட ஹஸ்திவர்மன் (சுமார் கி.பி. 350) என்பவன். கிருஷ்ணா மாவட்டத்தில் ஏலூருக்கருகில் இப்போது இருக்கிற பெத்தவேகி என்னும் ஊர்தான் அந்தக் காலத்தில் வேங்கி என்று வழங்கியிருக்கவேண்டும். சாலயங்காயன கோத்திரத்தைச் சேர்ந்த ஹஸ்திவர்மனுடைய முன்னோர்கள் பிரிகத்பலாயனர்களுடைய ஆட்சியை அழித்துவிட்டுத் தங்களுடைய ஆட்சியை நிறுவியிருக்கவேண்டும். சாலங்காயனர்களால் பல்லவ அரசுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கலாமென்று நினைக்க இடமிருக்கிறது. சாலங்காயனர்களில் நமக்குத் தெரிந்த முதலரசன் தேவவர்மன் என்பவன். அவன் பட்டாரகன் என்ற பட்டப் பெயரைப் பெற்றானதலால் அவன் முழு உரிமை பெற்ற அரசனாகத்தான் இருக்கவேண்டும். தேவவர்மன் ஹஸ்திவர்மனுக்கு முன் ஆட்சி செய்தவன் என்பது உறுதியாகத் தெரிந்தாலும் அவ்விருவர்க்கும் என்ன உறவு என்பது நமக்குத் தெரியவில்லை. தேவவர்ம

னுடைய பொறிப்பு ஒன்றே ஒன்று கிடைத்திருக்கிறது. அது பொறிக்கப்பெற்ற மாதமும் திதியும் அதில் இருக்கின்றன. அவ்வாறு திதியின் பெயரால் தேதியைக் குறிக்கும் முறையைப் பிற்கால அரசர்களும் பின்பற்றினர்கள். ஆனால், அது சாத வாகனர் பின்பற்றிய முறையினின்றும் வேறுபட்டது. அவர்கள் ஓர் ஆண்டை மூன்று பருவங்களாகப் பிரித்துத் தங்களுடைய பொறிப்புச் செதுக்கப்பெற்றபோது நடப்பிலிருந்த பருவத்தின் பெயரையும் அப்போது தேய்பிறைக் காலமா வளர்பிறைக் காலமா என்ற செய்தியையும் குறிப்பிடுவது வழக்கம்.

சமுத்திரகுப்தனுடைய படையெழுச்சியால் ஹஸ்திவர்ம னுக்கு அதிகத் தொல்லையுண்டானதாகத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் கிழக்குத் தக்காணம் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து கிடந்தது. அவை பின்வருவன: இன்றைய மாவட்டங்களான ரைப்பூர், பிலாஸ்பூர், சம்பல்பூர், கஞ்சத்தின் ஒரு பகுதி ஆகிய வற்றைத் தன் எல்லைக்குள் கொண்ட கோசலம்; கொல்லேரியைச் சுற்றியுள்ள பகுதியிலிருந்த குராலம்; கஞ்சம் மாவட்டத்தில் கொட்டூரா, ஏரண்டபல்லா ஆகிய நகர்களை மையமாகக் கொண்ட இரு சிறு ராஜ்யங்கள்; விசாகப்பட்டின மாவட்டத்தில் தேவராஷ்டிரம் (இன்றைய எலமஞ்சிலி); பாலக்கா, குஸ்தலபுரம் ஆகிய நகர்களை மையமாகக் கொண்ட இரு சிறு ராஜ்யங்கள். இந்த ராஜ்யங்களைப் பற்றிய செய்திகள் நமக்குத் தெரியவில்லை. அவை ஒன்றோடொன்று எத்தகைய தொடர்பு வைத்திருந்தன என்பதும் நமக்குத் தெரியாது.

ஹஸ்திவர்மனுக்குப்பின் அவன் மகன் முதலாம் நந்திவர்மன் (சுமார் கி.பி. 375) பட்டத்திற்கு வந்தான். கிருஷ்ணாநதியின் இரு கரைகளிலுமிருந்த குத்திரஹாரமும் அவனுடைய ஆட்சியில் இருந்தது. தென்கரையிலிருந்த பகுதியைச் சிறிது காலத் திற்குப் பின் பல்லவர்கள் பிடித்து அதற்கு வேங்கிராஷ்டிரம் என்னும் பெயரைக் கொடுத்தார்கள். முதலாம் நந்திவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் இரண்டாம் ஹஸ்திவர்மன் பட்டத்திற்கு வந்தான். பின்னர் அவனுடைய மகன் ஸ்கந்தவர்மன் அரியணை யேறினன். அதன்பின் முதலாம் நந்தவர்மனுடைய இரண்டாம் மகன் சந்தவர்மன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் நந்திவர்மன் (சுமார் கி.பி. 430) அரசனானன். அவன்தான் சாலங்காயன மரபில் நமக்குத் தெரிந்த கடைசி அரசன்.

பல்லவர்களைப் போலவே சாலங்காயனர்களும் நந்தியைத் தங்கள் கொடியாகக் கொண்டிருந்தார்கள். அவ்விரு மரபினரும்

நெருங்கிய உறவுடையவர்களா என்று தெரிந்துகொள்வதற்கு அதைத் தவிர வேறு சான்று இல்லை. அப்படி அவர்கள் உறவினர்களாயிருந்ததால்தான் வலிமை மிகுந்த பல்லவர்கள் சாலங்காயனர்களுக்குத் தொல்லை தராமலிருந்தார்களென்று கருதுவதற்கும் வேறு சான்று கிடையாது. சாலங்காயனர் களுடைய நிர்வாக முறை அதே காலத்திலிருந்த பல்லவர் களுடைய நிர்வாக முறையைப் பெரிதும் ஒத்திருந்தது. 'முத்துதா' என்னும் அலுவற் பெயருடையவன் கிராமத் தலைவனாய் இருந்தான். அந்தப் பெயர் வேறெங்கும் வழங்காத ஒன்று. கதிரவன் சாலங்காயனருடைய குலதெய்வம். அவர்கள் சிவனையும் திருமாலையும் வணங்கினார்கள். அவர்களுடைய பட்டயங்களிலுள்ள எழுத்துகள் இந்தோ-சீனாவிலும் மலேசியா விலும் நிறுவப்பெற்ற மிகப் பழைய இந்து ராஜ்யங்களின் பொறிப்புகளிலுள்ள எழுத்துகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இந்துக்கள் கீழை நாடுகளுக்குச் சென்று குடியேறுவதற்காகத் தோன்றிய இயக்கத்தில் தெலுங்கு நாட்டுக்கு முக்கியமான பங்கிருந்ததென்று நாம் கருதலாம்.

சமுத்திரகுப்தனுடைய படையெடுப்புக்குப் பின் கலிங்க நாட்டில் மாத்தர குலத்தைச் சேர்ந்த அரசர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அந்த மரபின் அரசர்களுடைய செப்பேடுகளி லிருந்து 'வர்மன்' என்று முடிகின்ற பெயருடைய ஏழு அரசர்கள் ஆட்சி செய்தார்களென்று நாம் அறிகிறோம். ஆனால், அவர்களுடைய குலமரபு வரிசை நமக்குத் தெரியவில்லை. அவர் களுடைய கொடைகளைப் பதிவு செய்திருக்கிற செப்பேடுகள் பிஷ்டபுரம், சிம்மபுரம், வர்த்தமானபுரம் முதலிய நகர்களில் வெளியிடப்பட்டவை. அவ்வரசர்களுள் சிலர் தங்கள் பெய ரோடு தங்கள் தாய்மார்களின் பெயரையும் சேர்த்துக் கொண்டனர். தங்கள் செப்பேடுகளில் தேதியைக் குறிப்பிடு வதற்கு அவர்கள் பழைய சாதவாகன முறையைக் கடைப்பிடித் தார்கள். ஆனால், மற்ற இயல்புகளில் அவர்களுடைய பட்ட யங்கள் பிற்காலப் பட்டயங்களைப் பெரிதும் ஒத்திருந்தன. பொறிப்புகள் வடமொழியில் எழுதப்பெற்றவை. அரசர்கள் கலிங்காதிபதி, பரமமாகேசுவரன் என்னும் பட்டப் பெயர்களை வைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஆட்சி கி.பி. 375ஆம் ஆண்டிலிருந்து கி.பி.500ஆம் ஆண்டு வரையில் நீடித்ததென்று குறிப்பாகச் சொல்லலாம். அதன்பின் வட கலிங்கத்தில் கங்கர் களுடைய ஆட்சி ஏற்பட்டது. தென் கலிங்கம் வேங்கி நாட்டோடு சேர்ந்துவிட்டது.

வேங்கியில் சாலங்காயனர்களுக்குப்பின் விஷ்ணு குண்டினர்கள் ஆட்சி செய்தார்கள். ஸ்ரீபர்வதசாமி அவர்களுடைய குலதெய்வம். அந்த அரசர்களுடைய மரபு வரிசையைப்பற்றிப் பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. அந்த விவாதத்தில் இறங்காமல் அந்த அரசர்களின் மரபு வரிசையைப் பின்வருமாறு குறிப்பிடலாம். இன்றைய நிலையில் அதுதான் மற்றக் கருத்துகளைக் காட்டிலும் ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

முதலாம் மாதவவர்மன் (440—60)

- தேவ வர்மன்
  - மாதவ வர்மன் (48 ஆண்டு)
- முதலாம் விக்கிரமேந்திரவர்மன் (460–80)
  - இந்திரபட்டாரகன் (480–515)
    - இரண்டாம் விக்கிரமேந்திரன் (515–35)
      - கோவிந்த வர்மன் (535–56)
        - இரண்டாம் மாதவ வர்மன் (556–616)
          - மஞ்சன பட்டாரகன்

முதலாம் மாதவவர்மன் பதினோர் அசுவமேத வேள்விகளையும் கணக்கிலடங்காத அக்னிஷ்டோமங்களையும் செய்தவனென்று புகழப்படுகிறான். இரண்டாம் மாதவவர்மனைப் பற்றியும் அதே செய்தி சொல்லப்படுவதால், நாம் அந்தச் செய்தியை அப்படியே நம்பவேண்டுவதில்லை. முதலாம் மாதவர்மனுடைய மகன் முதலாம் விக்கிரமேந்திரன் விஷ்ணுகுண்டின மரபு, வாகாடக மரபு ஆகிய இரண்டையும் சேர்ந்தவனென்று கூறப்படுவதால், முதலாம் மாதவவர்மனுடைய பட்டத்தரசி வாகாடக வமிசத்து இளவரசியாக இருக்கவேண்டும். இந்திரபட்டாரகன் பல போர்களில் வெற்றி கண்டவன் என்றும், ஒரு சமயம் தன்னுடைய உறவினன் ஒருவனையும் தோல்வி யடையச் செய்தவன் என்றும் நாம் அறிகிறோம். அவ்வாறு அவனிடம், தோல்வியடைந்தவன் இந்திரபட்டாரகனுடைய தாயாதியான மாதவவர்மனாக இருக்கலாம். அவன் திரிகூடத்தின் அதிபதியாய் இருந்தான்.

இந்திரபட்டாரகன் கிழக்குக் கங்க நாட்டையாண்ட இந்திர வர்மனோடு பொருது அவனுடைய ராஜ்யத்தில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். கோவிந்தவர்மன் 'விக்கிர மாசிரயன்' (வீரத்தின் புகலிடம்) என்னும் பட்டப் பெயரை வைத்துக்கொண்டான். அவனுடைய மகன் இரண்டாம் மாதவ வர்மன்தான் அந்த மரபின் மிகப் புகழ்பெற்ற அரசன். பிற்காலத்தில் அவனைப் பற்றிப் பல கட்டுக்கதைகள் எழுந்தன. அவன் 'ஜனுசிரயன்' (குடிமக்களின் புகலிடம்) என்னும் பட்டப் பெயரை வைத்துக்கொண்டான். அவன் 'இரணிய கர்ப்பம்' செய்தான். அவனுடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் விஷ்ணு குண்டினர்களுக்கும் கங்கர்களுக்கும் பகை தொடர்ந்து இருந்து வந்ததென்று அறிகிறோம். அதனால், அவன் கோதாவரியைக் கடந்து கங்கநாட்டின் கிழக்குப் பகுதியைப் பிடித்துக் கொண்டான். பாதாமிச சாளுக்கியனான இரண்டாம் புலிகேசன் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிழக்குத் தக்காணத்தின் மீது படையெடுத்த காலத்திலும் வேங்கி நாட்டையும் அதன் அண்மையிலிருந்த பகுதிகளையும் விஷ்ணுகுண்டினர்களே ஆண்டு வந்தார்கள்.

வடக்கே விஷ்ணுகுண்டினருடைய ராஜ்யத்திற்கும் தெற்கே பல்லவ ராஜ்யத்திற்கும் இடையில் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆனந்த கோத்திர அரசர்கள் ஒரு சிறு ராஜ்யத்தை நிறுவினார்கள். அந்த அரசர்களின் வரிசையில் முதலில் வந்த கண்டரன் என்பவன் தன் மகளை ஒரு பல்லவ அரச குமாரனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அவன் கிருஷ்ண நதியின் கரையில் விஷ்ணு குண்டினர்களோடு போரிட்டு அவர்களிடமிருந்து 'திரிகூடபர்வதத் தலைவன்' என்னும் பட்டத்தைப் பறித்துக்கொண்டான். அவனுடைய ராஜ்யம் மிகச்சிறியது. இன்றைய குண்டூர், தெனாலி ஆகிய தாலுக்காப் பகுதிகள் மட்டும் அவனுடைய ஆட்சியிலிருந்ததாய் அறிகிறோம். அந்த வமிசத்தின் ஏனைய அரசர்களில் தமோதரவர்மனும் அத்திவர்மனும் பெயர் தெரிந்தவர்கள். தாமோதரவர்மனுடைய தந்தை பல வேள்விகளைச் செய்தவன். கண்டரனுடைய பெயரன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் நமக்குத் தெரியாவிட்டாலும் அவனுடைய கல்வெட்டொன்று செசர்லாவில் கிடைத்திருக்கிறது. அது ஆறாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதியைச் சேர்ந்ததென்று கூறலாம். ஆனந்தகோத்திர அரசர்களின் தலைநகரான கண்டரபுரத்தைப் பொறிப்புகள் குறிப்பிடுகின்றன. அது கண்டரன் நிறுவிய நகராக இருக்கவேண்டும். அந்த மரபின் அரசர்களெல்லாம், பொதுவாக, சைவசமயத்தைப்

பின்பற்றினார்கள். ஆனால், தாமோதரவர்மன் புத்தமதத்தைப் பின்பற்றியவன். சமயத்தைப்பற்றிய அவர்களுடைய சொந்தக் கருத்து எதுவாக இருந்தாலும் அவர்களனைவரும் எல்லாச் சமயங்களுக்கும் ஒரே வகையான ஆதரவு தந்தார்கள்.

கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் மத்தியப் பிரதேசத்தில் ஆட்சிசெய்த வாகாடகர்கள் தக்காணத்தின் அரசியலிலும் பண்பாட்டிலும் முக்கியமான ஓரிடத்தை வகித்தார்கள். அவர்கள் காலத்தில் ஆட்சி செய்த குப்தர்கள், விஷ்ணுகுண்டினர்கள், கடம்பர்கள் போன்ற எல்லாப் பெரிய அரச குடும்பங்களோடும் அவர்கள் திருமணத் தொடர்புகளையும் அரசியற்றொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அஜாந்தாவில் முன்பே இருந்த சிற்பங்கள் ஓவியங்கள் ஆகியவற்றோடு இன்னும் பல சிற்பங்களைச் செதுக்குவதற்கும் ஓவியங்களை வரைவதற்கும் வாகாடகர்கள்பேராதரவு தந்தார்கள்.

வாகாடகர் என்னும் பெயர் பண்டல் கண்டிலுள்ள 'பகத்' என்னும் சிறிய கிராமத்தோடு தொடர்புடையதென்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் அது ஆந்திர நாட்டோடு தொடர்புடையதென்று கருதுகிறார்கள். சாதவாகன மரபைச் சேர்ந்த கடைசி அரசனுடைய ஆட்சி மத்தியப் பிரதேசத்தில் முடிவுற்ற சமயத்தில், சாதவாகனர்களோடு தொடர்ந்து செய்த போர்களில் மேற்குச் சத்திரப்பர்களும் பலமிழந்த நிலையிலிருந்தார்கள். அந்த நேரத்தில் வாகாடகர்கள் தங்களுடைய ஆட்சியை நிறுவினார்கள். விந்தியசக்தி என்பவன் முதல் வாகாடக அரசன் என்றும், பேராரிலுள்ள புரிகா என்னும் ஊர் அவர்களுடைய முதல் தலைநகர் என்றும், அவர்களுடைய ஆட்சி வடக்கில் விதிசா வரையில் பரவியதென்றும் புராணங்கள் கூறுகின்றன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதியில் வாகாடகர்கள் தங்களுடைய ஆட்சியை நிறுவினார்களென்பது தெரிகிறது.

விந்திய சக்திக்குப்பின் அவன் மகன் முதலாம் பிரவரசேனன் (சுமார் கி.பி. 280–340) பட்டத்திற்கு வந்தான். அவன் நாற்றிசையிலும் படையெடுத்துப் பல இடங்களை வென்றான். அந்த மரபின் அரசர்களில் அவன் ஒருவனுக்குத்தான் சாம்ராட் (பேரரசன்) என்னும் பட்டப் பெயர் இருந்தது. அவனுக்கு நான்கு மக்கள் இருந்தார்கள். அவர்களை அவன் புதிதாக வென்ற மாகாணங்களுக்குத் தலைவர்களாக்கினான். மூத்த மகன் கௌதமிபுத்திரன் தன் தந்தைக்கு முன்பே இறந்து போனான். இன்னொரு மகன் சர்வசேனன் என்பவன் தென் பேராரையும் ஐதராபாத்தின்

வடமேற்குப் பகுதியையும் ஆட்சி செய்தான். மேற்குத் தக்காணத்தில் 304ஆம் ஆண்டிற்கும் 345ஆம் ஆண்டிற்கும் இடையில் ஆட்சி செய்த சக அரசர்கள் மகா சத்திரப்பர் என்னும் பட்டப் பெயரை வைத்துக் கொள்ளவில்லை. அன்றியும், 342ஆம் ஆண்டுக்கும் 348ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த சக நாணயம் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. எனவே, வாகாடகர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் சக ராஜ்யத்திலும் நிலைநாட்டினர்களென்பது தோன்றுகிறது. நான்கு அசுவமேதங்களையும் ஒரு வாஜ்பேயயாகத்தையும் செய்து பிரவரசேனன் தன்னுடைய வெற்றிகளைக் கொண்டாடினன். கௌதமிபுத்திரனுடைய மகனை முதலாம் ருத்திரசேனன் தன்னுடைய பாட்டனர் பிரவரசேனனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தபோது, அதுவரையில் அரசப் பிரதிநிதிகளாயிருந்த அவனுடைய சிற்றப்பன்மார்கள் அவனுக்கு எதிராகக் கிளம்பித் தாங்கள் சுயேச்சை அரசர்களென்று விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். தன்னுடைய தாய்வழிப்பாட்டனும் மத்திய இந்தியாவில் பத்மாவதி என்னுமிடத்தில் ஆட்சிசெய்தவனும் ஆகிய பவநாகன் என்பவனுடைய துணையோடு ருத்திரசேனன் தன் சிற்றப்பன்மார் இருவரை வென்றன். ஆனல், மூன்றும் சிற்றப்பனை சர்வசேனன் சுயேச்சை அரசனுகவே இருந்தான்.

ருத்திரசேனன் குப்த மரபினரோடு நட்பாய் இருந்தான். அதனல், சமுத்திரகுப்தனுடைய படையெடுப்பினல் அவனுடைய ராஜ்யத்திற்கு எவ்விதத் துன்பமும் ஏற்படவில்லை. சக அரசர்கள் மீண்டும் வலிமை பெறத் தொடங்கி, கி.பி. 346ஆம் ஆண்டிலிருந்து மகாசத்திரப்பர் என்னும் பட்டப் பெயரை மீண்டும் வைத்துக்கொண்டார்கள். ருத்திரசேனனுடைய மகன் முதலாம் பிரித்திவிசேனன் (365–90) தென் மராட்டியத்திலிருந்த குந்தள நாட்டின் ஒருபகுதியை வெல்வதற்குத் தன் உறவினரான சர்வசேன குடும்பத்தினர்க்குத்' துணைபுரிந்தான். இரண்டாம் சந்திரகுப்தனுடைய மகளான பிரபாவதி குப்தாவைத் தன் மகன் (இரண்டாம்) ருத்திரசேனனுக்கு மணமுடித்து வைத்தது, அவனுடைய ஆட்சியில் மிகவும் பெரியதொரு நிகழ்ச்சியாகும். சகர்களை அடக்குவதற்குக் தாங்கள் தீட்டியிருந்த திட்டத்தை நிறைவேற்ற அந்தத் திருமணத் தொடர்பு உதவுமென்று குப்தர்கள் நினைத்திருக்கக்கூடும். ஆனல், ஐந்தே ஆண்டு ஆட்சி செய்தபின் இரண்டாம் ருத்திரசேனன் ஆண்மக்களிருவரை விட்டுவிட்டு மிக இளவயதிலேயே இறந்து போனன். அதனல், கைம்பெண்ணுன பிரபாவதி வயது வாராத தன் பிள்ளைகளுக்காக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டாள். பாசிம் என்னுமிடத்தில்

ஆட்சி செய்த தாயாதிகள் இந்த ஏற்பாட்டை எதிர்க்கத் துணிய வில்லை. அவளுடைய ஆட்சிக் காலத்தில்தான் அவளுடைய தந்தையான இரண்டாம் சந்திர குப்தன் குஜராத்தையும் கத்திய வாரையும் வென்றான். அவனுக்குப் பிரபாவதி பேருதவியா யிருந்தாள். அவள் ஆட்சிப் பொறுப்பேற்றுப் பதின்மூன்றாண்டு கழிந்தபோது அவளுடைய முதல் மகன் திவாகரசேனன் இறந்து விட்டான். எனவே, (பிற்காலத்தில் இரண்டாம் பிரவரசேனன் என்னும் பெயர் பெற்ற) தாமோதரசேனன் என்னும் தன் இரண்டாம் மகனுடைய பெயரில் அவள் ஆட்சிப் பொறுப்பைத் தொடர்ந்து 410ஆம் ஆண்டு வரையில் வகித்தாள். இரண்டாம் பிரவரசேனன் (கி.பி. 410–445) போரைவிட அமைதியையே மிகுதியாக விரும்பியவன்; இலக்கியத்திலும் கவின்கலைகளிலும் மிகுந்த ஈடுபாடுடையவன். அவன் திருமாலின்மீது மிக்க பக்தி யுள்ளவன்; ஆதலால் அவன் ராமபிரானுடைய புகழ்மிக்க வீரச் செயல்களை வர்ணிக்கின்ற சேதுபந்தம் என்னும் பிராக்கிருதச் செய்யுள் நூலை இயற்றினான். அந் நூலைக் காளிதாசர் படித்துப் பார்த்துத் திருத்திக் கொடுத்ததாக ஒரு மரபுவழிச் செய்தி தெரிவிக்கிறது. தன்னுடைய ஆட்சிக் காலத்தின் இரண்டாவது பிற்பாதியில் அவன் பிரவரபுரம் என்னும் இடத்திற்குத் தன் தலை நகரை மாற்றிக்கொண்டு சென்றுவிட்டான். அவனுடைய மூத்த மகன் நரேந்திரசேனன் கடம்பநாட்டு இளவரசி ஒருத்தியை மணந்துகொண்டான். அவள் காகுத்தவர்மன் என்பவனுடைய மகள்.

நரேந்திரசேனனுடைய (445–65) ஆட்சியின் தொடக் கத்தில் அவனுக்குப் பல துன்பங்கள் நேர்ந்தன. 'பஸ்டார் நாட்டை' ஆண்ட பவதத்தவர்மன் என்னும் நளமரபு அரசன் வாகாடக நாட்டின்மீது படையெடுத்து அதனைப் பிடித்துக் கொண்டான். அந்தச் சமயத்தில் ஹூணர்களுடைய படை யெடுப்பால் குப்தப் பேரரசும் அபாயத்துக்குள்ளாயிருந்தது. அதனால், நரேந்திரசேனனுடைய பாட்டனுடன் பிறந்த குமார குப்தனும் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. எனினும், நரேந்திரசேனன் தானிழந்த வலிமையை விரைவிலேயே மீண்டும் பெற்றுப் பவதத்தவர்மனை வென்று தன்னுடைய நாட்டை மீட்டுக்கொண்டான். மாளவம், மேகலம், கோசலம் ஆகிய நாடு களும் சிறிது காலம் நரேந்திரசேனனுடைய ஆட்சியில் இருந்தன. அவனுடைய மகன் இரண்டாம் பிரித்திவிசேனன். அவனே வாகாடக மரபின் முதன்மைக் கிளையைச் சேர்ந்த அரசர்களுள் கடைசியானவன். அவன் இரண்டுமுறை தன்னுடைய நாட்டைப் பகைவர்களிடமிருந்து மீட்டான். நளமரபைச் சேர்ந்த

அரசர்கள் அவனுடைய பகைவர்கள். தென் குஜராத்தில் ஆட்சி செய்த திரிகூடர்களும் அவனுடைய பகைவர்களாய் இருந்திருக்கலாம்.

பாசிம் என்னுமிடத்தில் ஆட்சிசெய்த வாகாடகக் கிளை மரபின் வரலாற்றை இப்போது கவனிப்போம். சர்வசேனனுக்குப் பின் அவன் மகன் விந்தியசேனன் அல்லது விந்தியசக்தி பட்டத்துக்கு வந்தான். அவன்தான் தன் தாயாதியாகிய முதலாம் பிரித்திவிசேனனுடைய உதவி பெற்றுத் தென் மராட்டியத்தை வென்றவன். அவனுடைய மகன் இரண்டாம் பிரவரசேனன் பதினைந்து ஆண்டு அமைதியாக ஆட்சி செய்தபின் எட்டே வயதான தம் மகனிடத்தில் ஆட்சியை விட்டுவிட்டு மாண்டு போனான். அவனுடைய அமைதியான ஆட்சி பல்லாண்டு நீடித்திருந்தது. அவனுடைய மகன் தேவசேனன் (சுமார் 460–80) இன்பப் பிரியன்; எனவே, ஆட்சிப் பொறுப்பைத் தன்னுடைய அமைச்சன் ஹஸ்திபோஜனிடம் ஒப்படைத்துவிட்டு இன்பத் துறையில் ஆழ்ந்துவிட்டான். அவனுக்குப் பின் அவனுடைய மகன் ஹரிசேனன் சுமார் (480–515) பட்டத்துக்கு வந்தான். அவன்தான் அந்தக் கிளைமரபில் மிகவும் வலிமை வாய்ந்த அரசன். முதன்மைக் கிளையைச் சேர்ந்த இரண்டாம் பிரித்திவிசேனனுக்குப்பின் அவன் அந்த நாட்டிற்கும் அரசனானான். அவன் குஜராத், மாளவம், தென் கோசலம், குந்தலம் ஆகிய மாகாணங்களையும் வென்று தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தானென்று அவனுடைய அஜந்தாப் பொறிப்புகள் கூறுகின்றன. எனவே, அவன் காலத்தில் வாகாடப் பேரரசின் பரப்பு முதலாம் பிரவரசேனன் காலத்திலிருந்ததைவிடப் பெரிதாயிருந்தது. வாகாடகர்களுடைய வீழ்ச்சி 515-க்கும் 550-க்கும் இடையில் நிகழ்ந்தது. அந்தக் காலத்தில் சத்திஸ்கார்ப் பகுதியைச் சோம வமிசத்தினரும், தென் மராட்டியத்தைக் கடம்பர்களும், வட மராட்டியத்தைக் காலசூரிகளும், மாளவத்தையும் மத்திய பிரதேசத்தின் வட பகுதியையும் யசோதர்மனும் பிடித்துக் கொண்டார்கள். இறுதியில் 550-ல், பாதாமிச் சாளுக்கியர்கள் வாகாடகர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

சமுத்திரகுப்தன் படையெடுப்பினால் பல்லவர்கள் வலிமையிழந்திருந்த நிலைமையில், தென்மேற்குத் தக்காணத்தில், நான்காம் நூற்றாண்டின் இடையில், கடம்பர்கள் தங்கள் பலத்தைப் பெருக்கிக்கொண்டார்கள். கடம்பர்களுடைய மிகப் பழைய பொறிப்பு பிராக்கிருத மொழியிலிருக்கிறது. அந்தப் பொறிப்பு, ஒரு தூணிலுள்ள சுட்டு வயிசத்தினரின் சிறு பொறிப்

பொன்றின் கீழே இருக்கிறது. கடம்பர்கள் மானவிய கோத்திரத்தைச் சேர்ந்த பார்ப்பனர்கள். அவர்கள் வேதம் ஓதுவதற்கும் வேள்வி செய்வதற்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். கடம்ப அரசன் மயூரசர்மன் வேதங்களை முழுவதையும் படிக்கும் நோக்கத்துடன் காஞ்சியிலிருந்த கடிகையில் (கல்லூரியில்) சேர்ந்தான். ஆனால், பல்லவக் காவலனை குதிரை வீரன் ஒருவனுடன் அவன் ஒரு நாள் கடுமையாகச் சண்டைபோட நேர்ந்தது. அதனால் ஏற்பட்ட தைரியத்தில் அவன் படிப்பை விட்டுவிட்டுப் போர்த் தொழிலில் இறங்கினான். முதலில் அவன் பல்லவ எல்லைக் காவலர்களை வென்றான்; பின்னர், பல்லவர்களின் ஆதிக்கத்திலிருந்த பிருந்தாவனர்கள் முதலியவர்களிடம் திறை பெற்றுக்கொண்டு ஸ்ரீபர்வதத்தைச் சுற்றியிருந்த அடர்ந்த காடுகளில் தங்கித் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டான். அவனை அடக்குவதற்காகப் பல்லவர்கள் அனுப்பிய படைகளுக்கு அவன் தீராத தொல்லை கொடுத்தான். கடைசியில், மேற்குக் கடலுக்கும், பிரேஹரத்திற்கும் இடையிலுள்ள நாடு அனைத்திற்கும் அவனே அரசன் என்று பல்லவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் பின்னரே அமைதியேற்பட்டது. 'பிரேஹரம்' என்பது துங்கபத்திரை அல்லது மலப்பிரபா என்று வழங்கியிருக்கக் கூடும். சந்திரவல்லியிலிருக்கிற ஒரு சிறு கல்வெட்டு ஒரு குளத்தையும், ஆபீரம், சகஸ்தானம், சயிந்தகம், புன்னாட்டம், மொகரி முதலிய பெயர்களையும் மயூரவர்மனோடு தொடர்புபடுத்துகிறது. அந்தப் பொறிப்பின் பொருள் சரியாக விளங்கவில்லை.

அந்தக் காலத்துக் கடம்ப அரசர்களுடைய மரபு வரிசையையும் தோராயமான கால வரிசையையும் கீழே காணலாம். பிற்காலத்தில் மயூரசர்மன், மயூரவர்மன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டான். அவனைப் பற்றித் தோன்றிய பிற்காலக் கட்டுக் கதை ஒன்று, அவன் பதினெட்டு அசுவமேதங்களைச் செய்தான் என்றும், பல கிராமங்களைப் பார்ப்பனர்களுக்கு வழங்கினான் என்றும் கூறுகிறது. ஆனால், கடம்ப அரசர்களுடைய பழைய பொறிப்புகள் இந்தச் செய்தியைக் குறிப்பிடவில்லை. பாசிம் என்னுமிடத்தில் ஆட்சிசெய்த வாகாடகக் கிளையைச் சேர்ந்த விந்தியசேனன் குந்தலத்தைக் கடம்பர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டானென்றும், கடம்ப அரசன் கங்கவர்மன் அவனுடைய படையெடுப்பை ஓரளவு வெற்றிகரமாகவே எதிர்த்தானென்றும் நாம் அறிகிறோம். வைஜயந்தி (பனவாசி) கடம்பர்களுடைய தலைநகர். பாலாசிகம் (ஹால்சி) என்பது துணைத் தலைநகராக இருந்தது.

**கடம்ப மரபுவரிசை**

- மயூரசர்மன் (345–60)
  - கங்கவர்மன் (360–85)
    - பகீரதன் (385–410)
      - ரகு (410–25)
      - காகுத்தவர்மன் (425–50)
        - சாந்தி வர்மன் (450–75)
          - மிரிகேசவர்மன் (470–88)
            - ரவிவர்மன் (500–38)
              - ஹரிவர்மன் (538–50)
            - பானுவர்மன்
            - சிவரதன்
        - குமார வர்மன்
          - மாந்தாத்திரி வர்மன் (488–500)
        - முதலாம் கிருஷ்ண வர்மன்
          - விஷ்ணு வர்மன்
            - சிம்ம வர்மன்
              - இரண்டாம் கிருஷ்ண வர்மன் (550–65)
                - அஜவர்மன்
          - தேவ வர்மன்

கடம்ப வமிசத்தின் பெரிய அரசர்களுள் காகுத்தவர்மனும் ஒருவன். அவனுடைய ஆட்சி வளமுடையதாயிருந்தது. அவன் தன்னுடைய பெண்களுக்குக் குப்த வமிசம் முதலிய பல பெரிய அரச குடும்பங்களில் திருமணஞ் செய்துவைத்தான். அவனுடைய மகன் சாந்திவர்மனும் ஒரு பெரிய அரசன். அவனுடைய நடையுடை பாவனைகள் மிகக் கவர்ச்சியானவை. அவன் மூன்று முடிகளைச் சூடியிருந்தான்; 'பகைவர்களுடைய செல்வத்தையும் தன்னிடம் ஈர்த்துக்கொண்டான்.' இவையெல்லாம் அவனைப் பற்றிக் கூறப்படும் செய்திகள். பல்லவர்களால் அவனுக்கு ஆபத்து நேரவிருந்த சமயத்தில் தன்னுடைய தம்பி கிருஷ்ணவர்மனுக்குத் தன்னுடைய ராஜ்யத்தின் தென் பகுதியின் ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து அந்த ஆபத்தைத் தடுத்துக்கொண்டான். இந்தச் செயல் நாட்டையே இரண்டாகப் பிரித்து விட்ட

தென்பது கிருஷ்ணவர்மன் நடத்திய அசுவமேதம் நமக்குக் காட்டு கிறது. அரசனொருவனுக்கு அடங்கிய தலைவர் யாரும் அந்த வேள்வியைச் செய்தது கிடையாது. பல்லவர்களோடு செய்த போரில் கிருஷ்ணவர்மன் உயிர் துறந்தது மட்டுமன்றி அவனுடைய மேலாதிக்கத்திலிருந்த கேகய நாடும் அழிந்தது. (அவனுடைய மனைவி பிறந்தது கேகய நாட்டில்தான்.) மேலும், அந்தப் போரின் விளைவாக, அவனுடைய மகன் விஷ்ணுவர்மன் பல்லவர்களிடமிருந்து தன் அரசபட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அந்தப் பல்லவர்கள் நானக்காசன், சாந்தி வரன் என்பவர்கள். அந்தப் பெயர்களை வேறு எந்தச் சமயத் திலும் நாம் கேள்விப்பட்டதில்லை. சாந்திவர்மனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் மிரிகேசவர்மன் கங்கர் களோடும் பல்லவர்களோடும் போர் செய்தான். ஆனால், அவன் வெற்றி பெறவில்லை. யானையேற்றத்திலும் குதிரையேற்றத் திலும் அவன் வல்லவன்; கல்வி கேள்விகளிற் சிறந்த புலவன்; தன்னுடைய தந்தையின் நினைவுச் சின்னமாகப் பாலாசிகம் என்னு மிடத்தில் ஒரு சமணக் கோயிலைக் கட்டி அதற்குத் தாராளமாக மானியம் அளித்தான்.

ரவிவர்மன் விஷ்ணுவர்மனையும் வேறு சில அரசர்களையும் போரில் கொன்று, ‘காஞ்சித் தலைவன்’ என்னும் பட்டப்பெய ருடைய சண்டதண்டன் என்பவனைத் துரத்திவிட்டுப் பாலா சிகத்தைப் பிடித்துக்கொண்டான். காஞ்சித் தலைவன் என்றால் பல்லவன் என்றுதான் இந்த இடத்திற் பொருள் கொள்ள வேண்டுமே தவிரக் காஞ்சியின் அரசன் என்று பொருள் கொள்ளக் கூடாது. விஷ்ணுவர்மனுக்கு முடிசூட்டி வைத்த பல்லவனை சாந்திவரன் என்பவனைப்பற்றிச் சற்று முன் கூறினோம். அவன் பல்லவ மரபின் கிளை மரபுகளில் ஒன்றைச் சேர்ந்தவனாய் இருக்கவேண்டும். சண்டதண்டனும் அதே கிளை மரபைச் சேர்ந்தவனென்று நாம் கருதலாம். ரவிவர்ம னுடைய வெற்றிகள் கடம்ப ராஜ்யத்தின் பழைய ஒருமைப் பாட்டையும் பரப்பையும் நிலைநாட்டின.

ரவிவர்மனுக்குப் பின் ஹரிவர்மன் (538–50) அரியணை யேறினன். அவன் அமைதியை விரும்பியவன். அவனுடைய ஆட்சியில் கடம்பர்கள் தங்களுடைய ராஜ்யத்தின் வடபாதியை இழந்தார்கள். முதலாம் புலிகேசன் 545-ல் பாதாமியில் ஒரு வலிமை மிக்க மலையரணைக் கட்டிச் சாளுக்கிய ஆட்சியை நிறுவினன். கடம்பர்கள் என்றுமே ஒற்றுமையாய் இருந்ததில்லை. அவர்களுடைய வலிமையும் அவ்வளவாக உயர்ந்ததுமன்று.

கடம்ப மரபின் மூத்த கிளைக்கும் இளைய கிளைக்கும் இருந்த பகைமையை இரண்டாம் கிருஷ்ணவர்மன் பெரிதாக்கி, வைஜயந்தியின்மீது படையெடுத்து, அங்கே ஆட்சிசெய்து கொண்டிருந்த ஹரிவர்மனைத் தோல்வியடையச் செய்தான். அவன்தான் மூத்த கிளையில் நமக்குத் தெரிந்த கடைசி அரசன். சாளுக்கிய அரசன் முதலாம் புலிகேசனுடைய மகனை கீர்த்தி வர்மன் பனவாசியின்மீது படையெடுத்து வெற்றி கொண்ட சமயத்தில், இரண்டாம் கிருஷ்ணவர்மனோ அவனுடைய மகன் அஜவர்மனோ அங்கு ஆட்சி செய்த அரசனாக இருக்க வேண்டும்.

மேற்கில் கடம்ப நாட்டிற்கும் கிழக்கில் பல்லவ ராஜ்யத்திற்கும் இடையிலிருந்த இன்றைய மைசூர் மாநிலத்தின் தென் பகுதியில் கங்க ராஜ்யம் இருந்தது. கங்கர்களுடைய நீண்ட தொடர்பால் அது கங்கவாடி என்று பெயர் பெற்றது. கங்கர்களுடைய ஆட்சியின் முற்பகுதியைப்பற்றிப் பல கட்டுக்கதைகள் வழங்குகின்றன. அன்றியும், அந்தக் காலத்துக் கங்கர்களுடைய பெயரைத் தாங்கிக்கொண்டிருக்கின்ற பொறிப்புகளுள் பல உண்மையானவையல்ல. அத்தகைய போலிச் செப்பேடுகள் வேறெங்கும் காணமுடியாத எண்ணிக்கையில் இருக்கின்றன. ஆதலால், கங்க வமிசத்தின் பழைய வரலாறு தெளிவற்றதாக இருக்கிறது. கங்க வமிசத்தின் முதல் அரசன் கொங்கணி வர்மன் என்னும் பெயருடையவனென்றும், அவன் ஜானவேய குலத்தில் (கங்க மரபில்) காண்வாயன கோத்திரத்தில் பிறந்தவன் என்றும் அவன் காலத்தைச் சேர்ந்த உண்மையான பொறிப்பு களிலிருந்து அறிகிறோம். அவன் பல போர்களில் வெற்றி பெற்று ஒரு பெரிய ராஜ்யத்தை நிறுவினான். அவனுடைய பட்டப் பெயரான 'தர்ம மகாதிராஜன்' என்பது தொடக்கத்தில் கங்கர்கள் சுயேச்சையரசர்களாக இருந்தார்களென்பதைக் காட்டுகிறது. ஆனால், விரைவிலேயே அவர்கள் அந்த நிலையை இழந்து விட்டார்கள். அவர்களுடைய நீண்ட வரலாற்றில், தென்னிந்தியாவிலிருந்த வலிமை மிக்க பேரரசுகளில் ஏதாவது ஒன்றின் மேலாதிக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில்தான் இருந்தார்கள். கொங்கணி வர்மன் 400ஆம் ஆண்டைச் சேர்ந்தவனென்று சுமாராகச் சொல்லலாம். அவனுடைய தலைநகரின் பெயர், பொறிப்புகளில் இல்லை. ஆனால், பிற்காலத்தில் மரபுவழிச் செய்திகள் முதலில் குவளாள புரமும் (இன்றைய கோலார்), பின்னர்த் தலைக்காடும் அவனுடைய தலைநகராய் இருந்தன என்று கூறுகின்றன. தலைக் காடு கடம்ப ராஜ்யத்தின் எல்லைக்கு அருகில் இருந்தது.

கடம்பர்களோடு போரிடுவதில் கொங்கணி வர்மன் பல்லவர் களுக்குத் துணைநின்ருன்.

கொங்கணிவர்மனுக்குப்பின் அவன் மகன் மகாதிராஜன் முதலாம் மாதவன் (சுமார் 425) பட்டத்திற்கு வந்தான். அவன் அரசியலில் வல்லவன். அவன் 'தட்டக சூத்திரம்' என்னும் காம நூல் ஒன்றிற்கு உரையெழுதினனென்று பிற்காலத்து மரபுவழிச் செய்தியொன்று கூறுகிறது. அவனுக்குப் பின் அவன் மகன் அய்யவர்மன் (சுமார் 450) அரியணையேறினன். அவனும் சாஸ்திரங்களிலும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் வல்லவன். காஞ்சியிலாட்சி செய்த பல்லவ மன்னன் முதலாம் சிம்மவர்மனல் அய்யவர்மனுக்கு முடி சூட்டப்பட்டது. இதிலிருந்து அவனுக்கும் அவனுடைய தம்பி கிருஷ்ண வர்மனுக்கும் யார் அரசுரிமையடைவது என்பதைப் பற்றி நேர்ந்த சச்சரவில் அவன் பல்லவ மன்னனுடைய உதவியை நாடி யிருக்கக் கூடுமென்று நினைக்க இடமேற்படுகிறது. பிற்காலப் பொறிப்புகளில் அவன் பெயர் ஹரிவர்மன் என்று குறிக்கப் பட்டிருக்கிறது. அவன் தலைக்காட்டைத் தன்னுடைய தலை நகராக்கிக் கொண்டானென்பது அந்தப் பொறிப்புகளிலிருந்து தெரிகிறது. அரசுரிமைபற்றி உடன்பிறந்தார்களுக்குள் ஏற்பட்ட சச்சரவின் விளைவாக கங்கவாடி இரண்டு ராஜ்யங் களாய்ப் பிரிந்துவிட்டது போலும்! பல்லவ மன்னன் அத்தகைய தீர்ப்பை வழங்கியிருக்கக் கூடும். அவனுக்கு நன்றி காட்டும் வகையிலும் அவனேடு அவர்களுக்கிருந்த அரசியல் தொடர்பைக் காட்டும் வகையிலும் உடன்பிறந்தார் இருவரும் தங்களுடைய மக்களுக்குச் சிம்மவர்மன் என்ற பெயரையே வைத்து விட்டார்கள். அப்போது ஏற்பட்ட ராஜ்யப் பிரிவு அடுத்த தலைமுறையிலும் தொடர்ந்தது என்பது தெரிகிறது. இல்லா விட்டால் கங்கவாடியில் சிம்மவர்மன் என்ற இரண்டாம் மாதவனும் இன்னெரு சிம்மவர்மனும் ஒரே சமயத்தில் ஆட்சி செய்திருக்க முடியுமா? இரண்டாம் மாதவனுக்குப் பல்லவ மன்னன் ஸ்கந்தவர்மன் முடிசூட்டினன். அவன் கடம்ப மன்னன் முதலாம் கிருஷ்ணவர்மனின் உடன்பிறந்தாளை மணஞ்செய்து கொண்டான். அத் திருமணத்தின் பயனுகப் பிறந்த அவிநீதன் என்பவனுக்குக் குழந்தையாக இருக்கும்போது முடிசூட்டப் பெற்றதென்று (சுமார் 500) பிற்காலப் பட்டயங்களிலிருந்து நாம் அறிகிறோம். கங்கவமிச அரச வரிசை பின்வருமாறு இருந் திருக்கும் என்று நாம் கருதலாம்.

- கொங்கணிவர்மன் (400)
  - முதலாம் மாதவன் (425)
    - அய்யவர்மன் (450)
      - இரண்டாம் மாதவன் என்ற சிம்மவர்மன் (475)
        - அவிநீதன் (500)
    - கிருஷ்ணவர்மன் (450)
      - சிம்மவர்மன் (475)
      - வீரவர்மன் (யுவராஜன்)

கடம்ப நாட்டிலும் கங்கவாடியிலும் சமுதாய, நிர்வாக, சமயத் துறைகளில் அப்போது நிலவிய கருத்துகளும் வழக்கிலிருந்த முறைகளும், அதே காலத்தில் பல்லவ ராஜ்யத்தில் நிலவிய கருத்துகளையும் வழக்கிலிருந்த முறைகளையும் மிகப் பெரிதும் ஒத்திருந்தன.

## BIBLIOGRAPHY

'Epigraphia Indica,' Vols. 20, 21, 29, 33 and 34 for Ikshvaku inscriptions.

K. Gopalachari : 'Early History of the Andhra Country' (Madras 1941)

G. Jouveau-Dubreuil : 'Ancient History of the Deccan' (Pondicherry, 1920)

T. V. Mahalingam : 'Kanchipuram in Early South Indian History' (Meyer lectures, 1963 Madras.)

K. A. N. Sastri : 'The New History of the Indian People' Vol. VI, ch. 12, South India (Lahore 1946 : Banaras, 1954)

D. C. Sircar : 'Successors of the Satavahanas' (Calcutta, 1939)

# 7. சங்ககாலமும் அதற்குப் பிறகும்

கலிங்கமும் தமிழக அரசுகளும்—சங்க இலக்கியம்—அதன் காலம்—சேரர்—ஆய்—பாரி—அதிகைமான் அஞ்சி—சோழர், கரிகாலன்—இளந்திரையன்—பாண்டியர்—தலையாலங் காலனத்துச் செரு வென்ற பாண்டியன்—அவனுடைய முன்னோர்கள்—சோழ நாட்டில் உள் நாட்டுப் போர்—சங்க காலத்தின் முடிவு; அரசியல் மாறுதல்கள்.

சமுதாய வாழ்க்கை—கலப்புப் பண்பாடு—நாடு—மக்கள்—அரசு—சபையும் மன்றமும்—வருவாய்—படை—போர்—இலக்கியத்திற்கும் கவின்கலைக்கும் அரசராதரவு—இயல், இசை, நாடகம்—பொழுது போக்கு—வீடுகள்—பொதுமக்கள் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்—உள்நாட்டு வெளி நாட்டு வாணிகம்—சமயமும்—நன்னெறியும்—சங்க காலத்திற்குப் பின்வந்த இருண்ட காலம், களப்பிரர்கள்.

அசோகக் கல்வெட்டுகளுக்குப் பின் தமிழகத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்ற மிகப் பழைய பொறிப்பு, காரவேலனுடைய ஹத்திகும்பாக் கல்வெட்டுதான். காரவேலன் கி.மு. இரண்டாம் நூற்றுண்டின் முற்பாதியில் கலிங்க நாட்டையாண்டான். அவன் பட்டத்திற்கு வந்த பதினோராம் ஆண்டில் (சுமார் கி.மு. 155) 'திரமிர தேச சங்காத்தம்' என்று அவன் பொறிப்புக் குறிப்பிடுகின்ற தமிழக வேந்தர்களின் கூட்டணியை முறியடித்தான். அந்தக் கூட்டணி 113 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதென்றும் அதனுல் கலிங்க நாட்டுக்கு ஊறு விளையு மென்று அவன் கருதியதாகவும் அவனுடைய பொறிப்புக் கூறுகிறது. மேலும், பாண்டி நாட்டிலிருந்து பலநூறு முத்துகளை அவனுடைய ஆள்கள் கலிங்கத்திற்குக் கொண்டு வந்தார்களென்றும் அந்தப் பொறிப்பின் மூலம் நாம் அறிகிறோம். அவற்றைத் தவிர அணிமணிகளையும் குதிரை, யானை முதலிய வற்றையும் அவனுடைய ஆள்கள் கலிங்கத்திற்குக் கொண்டு வந்திருக்கலாமென்றும் தெரிகிறது. அந்தப் பொறிப்பின் பொருள்களைத் தெரிந்துகொள்வதே எளிதன்று. அன்றியும் அந்தப் பதிவில் பல வெற்றிடங்கள் இருப்பதோடு பல இடங்

களில் எழுத்துகள் தேய்ந்து மறைந்தும் போய்விட்டன. எனவே, பொறிப்பின் பொருளை அறிந்துகொள்வது மேலும் கடினமாகி விட்டது. தமிழக வேந்தர் கூட்டணியின் தன்மைகளையும், அது எவ்வாறு கலிங்கத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாயிருந்த தென்பதையும், அந்த ஆபத்தைக் களைவதற்குக் காரவேலன் என்னென்ன நடவடிக்கை எடுத்தானென்பதையும், பாண்டியர் களோடு அவன் எத்தகைய புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டானென்பதையும் நமக்குத் தெரிவிக்கக்கூடிய வேறு ஆதாரம் எதுவுமில்லை.

சங்ககாலந்தான் நமக்கு நன்றாகத் தெரிகிற காலமாக இருக்கிறது. அந்தக் காலத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு உதவுகின்ற மிகப் பழைய தமிழிலக்கியம் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று நான்கு நூற்றாண்டுகளில் எழுதப்பட்டது. சங்க நூல்கள் எட்டுத் தொகையென்றும் பத்துப் பாட்டென்றும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை எட்டுத் தொகை நூல்கள் ஆகும். திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பவை பத்துப் பாட்டு நூல்கள் ஆகும்.

இந்தப் பதினெண் மேற்கணக்கு நூல்களில் சிறியவையும் பெரியவையுமான 2279 பாடல்கள் இருக்கின்றன. மிகச் சிறியது மூன்றடியுடையது; மிகப் பெரியது 800-க்கும் மேற்பட்ட அடிகளை யுடையது. அவற்றைப் பாடிய புலவர்களுள் பெயர் தெரிந்தவர் 473 பேர்; (அவர்களுள் பெண்பாற் புலவர்களும் இருக்கின்றனர்). பெயர் தெரியாத புலவர்கள் எழுதிய பாடல்கள் 102. ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் அதனைப் பாடிய புலவர் பெயர், அது எந்தச் சூழ்நிலையில் பாடப்பெற்றது என்பனபோன்ற செய்திகள் இருக்கின்றன. பாடல்களைத் தொகுத்தவர்களே அந்தச் செய்திகளை எழுதியவர்களென்றும் அவர்கள் தருகின்ற செய்திகள் சரியானவையாகத்தான் இருக்குமென்றும் கருதலாம். ஆனால், அதிலும் சில தொல்லைகள் இல்லாமல் இல்லை.

இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் மேலே சொன்ன காலத்தைச் சேர்ந்ததுதான்.

அந்த மிகப் பழங்காலத்தில் எழுதப்பட்ட நூல்களுள் ஒரு பகுதிதான் நமக்குக் கிடைத்திருக்கின்றது என்பதிலும் மிகப் பல நூல்கள் காணமற் போய்விட்டன என்பதிலும் ஐயமில்லை. பழைய பாண்டிய மன்னர்களின் அருஞ்செயல்களைப்பற்றிப் பேசுகின்ற, கி.பி. பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த பொறிப்பு ஒன்றின் மூலம் அவர்கள் மகாபாரதத்தை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்தார்களென்றும் தமிழ்ச் சங்கம் ஒன்றை மதுரையில் நிறுவினார்களென்றும் அறிகிறோம். அந்த மொழி பெயர்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், எட்டுத்தொகை நூல்களுள் ஆறு நூல்களின் தொடக்கத்தில் 'பாரதம் பாடிய' பெருந்தேவனாருடைய பாடல்கள் கடவுள் வாழ்த்தாக அமைந் திருக்கின்றன. பெருந்தேவனார் என்னும் புலவர் ஒருவர் பாடிய பாரதத்தின் பாடல்கள் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால், இந்தப் பெருந்தேவனார் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மனுடைய காலத்தில் வாழ்ந்தவர். ஆதலால், சங்க நூல்களின் முகப்பி லுள்ள கடவுள் வாழ்த்தைப் பாடிய பெருந்தேவனார் வேறொருவ ராக இருக்கவேண்டும்.

மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கமிருந்ததென்பதும், அதனைச் சேர்ந்த புலவர்களுக்குப் பாண்டிய மன்னர்கள் ஆதரவளித்தார் களென்பதும் உண்மையாகத்தான் இருக்கவேண்டும். சுமார் கி.பி. 750ஆம் ஆண்டைச் சேர்ந்த நூலான இறையனார் அகப் பொருளுரையின் பாயிரத்தில்தான் அதைப்பற்றிய முதல் செய்தியை நாம் அறிகிறோம். ஆனால், அதில் கூறப்படுகின்ற மரபுவழிச் செய்தி நம்ப முடியாத ஒரு கட்டுக்கதையில் புதைந்து கிடக்கிறது. நீண்ட இடைவெளிகளையுடைய மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்றும், மொத்தத்தில் அவை 9,900 ஆண்டுகள் இயங்கின என்றும், சைவ சமயத்தைச் சேர்ந்த சில தெய்வங்களுட்பட அவற்றில் மொத்தம் 8,598 புலவர்கள் இருந் தார்கள் என்றும், 197 பாண்டிய மன்னர்கள் அந்தச் சங்கங் களின் புரவலர்களாக இருந்தார்கள் என்றும் அந்தப் பாயிரம் கூறுகிறது. கடுங்கோன், உக்கிரப் பெருவழுதி போன்ற அரசர்கள் புலவர்களுடைய பெயர்கள் பொறிப்புகளிலும் வேறு உண்மையான ஆவணங்களிலும் இருக்கின்றன. அதனால், சில உண்மை நிகழ்ச்சிகள் பல கற்பனைக் கதைகளோடு கலந்து விட்டன என்றும் தோன்றுகிறது. அவற்றின் அடிப்படையில் நாம் பயன் தரும் முடிவு எதனையும் செய்துவிட இயலாது.

பாடல்களின் இறுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற சமகால நிகழ்ச்சிகளையும் ஒரே காலத்தில் வாழ்ந்த அரசர், குறுநில

மன்னர், புலவர் ஆகியவர்களைப்பற்றிய செய்திகளையும் ஆராய்ந்து பார்த்தால், அந்த நிகழ்ச்சிகளெல்லாம் தொடர்ச்சியாக வந்த நான்கைந்து தலைமுறைகளில், அதாவது 120 முதல் 150 ஆண்டுக் காலத்திற்குள்ளேதான், நடைபெற்றிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. சேரர்களைப்பற்றிய செய்திகள் மட்டும் அவ்வரசர்களின் மரபு வரிசையை ஓரளவு அறிந்து கொள்வதற்குத் துணைசெய்கின்றன. சேர அரச மரபில் இரு கிளைகள் இருந்தன என்றும், அக் கிளைகளுக்கிடையில் திருமண மூலமாகவோ வேறு வகையாகவோ உறவு இருந்தது என்றும் அறிகிறோம். மொத்தத்தில் மூன்று நான்கு தலைமுறைச் சேரர்களைப்பற்றித்தான் இத்தகைய செய்திகள் கிடைத்திருக்கின்றன. சங்ககாலத்தின் ஏனைய செய்திகளெல்லாம் தொடர்பில்லாத பெயர்களையே குறிப்பிடுவதால் அந்தக் காலத்தைப்பற்றிய தொடர்ச்சியான ஒரு வரலாற்றை எழுத இயலவில்லை. எனவே, புகழ்பெற்ற அரசர் குறுநில மன்னர் போன்ற பெருமக்களைப் பற்றியும் அவர்களுடைய குணங்கள், செயல்கள் முதலியவற்றைப்பற்றியும் புலவர்கள் பாடுகின்ற செய்திகளைத் தெரிந்து கொள்வதோடு நாம் மனநிறைவடைய வேண்டியதுதான்.

தமிழகத்தில் சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர் மூவரைத் தவிரக் குறுநில மன்னர் பலர் இருந்தனர். அந்தந்தச் சமயத்தில் நிலவிய அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ற வாறு அந்தக் குறுநில மன்னர்கள் மூவேந்தருள் ஒருவருக்கு அடங்கிய சிற்றரசர்களாகவோ, அவர்களுள் ஒருவரோடு சேர்ந்து மற்றவரோடு போர் புரிபவர்களாகவோ, முழு உரிமை பெற்ற அரசர்களாகவோ இருந்தார்கள். அவர்களுள் எழுவர் புலவர்களால் மிகவும் பாராட்டப்பெற்றவர்கள்; அவர்கள் புலவர்க்கும் பாணர்க்கும் விறலியர்க்கும் பொருநர்க்கும் கூத்தர்க்கும் வரையாது வழங்கிய வள்ளல்கள்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறிய பிராமிப் பொறிப்புகள் தமிழில் செதுக்கப் பெற்றவை என்பதையும், அந்தத் தமிழ்மொழி அப்போதுதான் வளர்ந்து கொண்டிருந்தது என்பதையும், வடமொழியிலிருந்து வந்தவை என்று தெளிவாகத் தெரிந்த சொற்கள் அந்தப் பொறிப்பு மொழியிற் கலந்திருந்தன என்பதையும் நாம் முன்பு கண்டோம். சங்க நூல்களில் பயில் கின்ற தமிழ்மொழி நன்கு வளர்ந்து செப்பமடைந்த மொழி; இலக்கியக் கருத்துகளைச் சொல்வதற்கு ஏற்ற ஆற்றலும் எழிலும் பெற்ற மொழி. அதற்குள்ளாகவே அது வடமொழியி லிருந்து பல கருத்துகளையும் சொற்களையும் ஏற்று அவற்றைத்

தன்னியலாக்கிக் கொண்டது. சமுதாய வாழ்க்கையை இலக்கியத்தில் வர்ணிப்பதற்கு ஏற்ற நுட்பமும் விரிவுமுடைய மரபுகள் அப்போதே வழக்கிற்கு வந்துவிட்டன என்பதைச் சங்க நூல்களில் காண்கிறோம். அத்தகைய மரபுகள் உருவாகி முதிர்வதற்குச் சில தலைமுறைக்காலம் பிடித்திருக்க வேண்டும் என்பது தெளிவு.

(இலங்கைக் கயவாகு வாழ்ந்த காலத்தில் செங்குட்டுவன் சேர மன்னனாக இருந்தான்.) செங்குட்டுவன் சேரர்களை மட்டும் பாடுகின்ற பதிற்றுப்பத்து என்னும் தொகை நூலில் இடம் பெற்றுப் புகழ் பெற்றவன். கயவாகு மன்னனின் ஆட்சிக் காலம் கி.பி. 173–195 என்று சுமாராகச் சொல்லலாம். அந்தக் காலத்தில் செங்குட்டுவனும் வாழ்ந்தானென்று தெரிவதால் கி.பி. 100-க்கும் 250-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சங்க காலம் என்று சொல்லலாம்.

ஆனால், கயவாகு மன்னனும் சேரன் செங்குட்டுவனும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்னும் செய்தி சங்கத் தொகை நூல்களில் இல்லை. சிலப்பதிகாரத்தில்தான் அந்தச் செய்தியை நாம் காண்கிறோம். சிலப்பதிகாரம் மக்கள் ஆர்வமாக நம்பிய கட்டுக்கதையான கோவலன் கண்ணகி கதையைக் கூறும் ஒரு சிறந்த இலக்கியம். கண்ணகி வழிபாடு தமிழகத்திலும் இலங்கையிலும் தோன்றிய செய்தியைச் சிலப்பதிகாரம் விவரிக்கிறது. சிலப்பதிகாரத்தின் இன்றைய உருவைப் பார்க்கும்போது அது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியிருக்க முடியாது என்று கூறலாம். அது இன்னும் மிகப் பிற்காலத்தைச் சேர்ந்த நூலென்று கூறுவாரும் உளர். அந்தக் கதையில் இடம்பெறும் சமயக் கருத்துகள் அதனைப் பாதிச் சமய நூலாகச் செய்து விடுகின்றன. மேலும் அது கண்ணகி வழிபாட்டின் தொடக்கத்தை விவரிக்கிறது. இந்த இரு காரணங்களாலும், செங்குட்டுவனும் கயவாகு மன்னனும் சமகால அரசர்களென்ற வரலாற்று உண்மையைப்பற்றிய மக்கள் நினைவைச் சிலப்பதிகாரம் பாதுகாத்து வைத்திருக்கிறதென்று சொல்வது தவறாகாது. இது வரையில், சங்க இலக்கியத்தின் காலத்தை நிர்ணயம் செய்வதற்கு உதவுகின்ற இரண்டு சான்றுகளைக் கவனித்தோம். அவை யாவன: (1) கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிப் பொறிப்புகள். (2) கயவாகு மன்னனும் சேரன் செங்குட்டுவனும் சமகால அரசர்கள் என்னும் சிலப்பதிகாரச் செய்தி. அவற்றைவிட வலிமை வாய்ந்த மூன்றாம் சான்றை இப்போது பார்ப்போம். தமிழ் மக்களுக்கும் யவனர்களுக்கும்

(ரோமானியரும் கிரேக்கரும்) இருந்த வாணிகத் தொடர்புகளையும் ஏனைய தொடர்புகளையும் பற்றிச் சங்க நூல்களில் நாம் காணுஞ் செய்திகள் [1]ஸ்ட்ராபோவும் டாலமியும் கூறுகிற செய்திகளைக் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்திருக்கின்றன.

நூல்கள் கூறும் செய்திகளைத் தொல்பொருள் ஆராய்ச்சி உறுதி செய்கிறது. தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் ரோமானியர்களுடைய பொன் வெள்ளி நாணயங்கள் கிடைத்திருக்கின்றன. அவை கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் ஆட்சிசெய்த ரோமானிய அரசர்கள் வெளியிட்ட நாணயங்கள். புதுச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு (அருகன் மேடு—சமண மேடு) என்னுமிடத்தில் அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சியின் பயனாக அங்கே கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானியத் தொழிற்கூடமொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொல்பொருட் சான்றுகள் நாம் நிர்ணயம் செய்த சங்ககாலம் சரியானதுதான் என்பதை உறுதி செய்கின்றன.

சங்ககாலத் தமிழகத்தின் அரசியல் நிலைமையை இப்போது நாம் கவனிப்போம். சேர, சோழ, பாண்டிய மரபுகள் நினைவுக்கு எட்டாப் பழங்காலத்தில் தோன்றியவை என்று பிற்கால மக்கள் நம்பினார்கள். அம் மூன்று மரபினரும் பாண்டவர்க்கும் கவுரவர்க்கும் நடந்த பாரதப் போரோடு தங்களை இணைத்துக்கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டினார்களென்பதைச் சங்கச் செய்யுட்கள் சிலவற்றில் நாம் காண்கிறோம். நமக்குத் தெரிந்த முதற் சேர மன்னனான உதியஞ்சேரல் (சுமார் கி.பி. 130) குருச்சேத்திரத்தில் போர் செய்த இரு திறத்துப் படைகளுக்கும் உணவு தந்து 'பெருஞ்சோற்றுதியன்' என்னும் பெயர் பெற்றான் என்று சங்க இலக்கியம் பேசுகிறது. அவனுடைய முன்னோர் யாரோ செய்த ஓர் அருஞ்செயலை அவனே செய்ததாகக் கூறும் இலக்கிய மரபையொட்டி இந்தச் செய்யுள் எழுந்ததென்று சொல்வதுதான் பொருத்தமாயிருக்கும். பாண்டியரும் சேரரும் இதே அருஞ்செயலைச் செய்து புகழ் பெற்றார்களென்று வேறு செய்யுள்கள் கூறுகின்றன.

உதியஞ்சேரலின் மகன் நெடுஞ்சேரல் ஆதன் என்பவன். அவனைப்பற்றிப் பின் வரும் செய்திகளைச் சங்க இலக்கியத்திலிருந்து நாம் அறிகிறோம். மலபார்க்கரையருகில் நடந்த ஒரு கடற்

[1] பெரிப்ளஸ் என்னும் நூலைத் தம் பெயர் போடாமல் எழுதியவர்.

போரில் அவன் ஒரு பகைவனைத் தோல்வியுறச் செய்தான். யவன வணிகர் சிலரைப் பிடித்துச் சிறையில் அடைத்துச் சிறிது காலம் துன்புறுத்தியபின் அவர்களிடமிருந்து ஒரு பெருந் தொகையை மீட்புப்பணமாகப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு விடுதலையளித்தான். அவன் பல போர்களில் ஈடுபட்டுப் பல ஆண்டு களைப் பாசறையிலே கழித்தான்; முடியுடை வேந்தர் எழுவரை வென்று, 'அதிராஜன்' என்னும் பட்டம் பெற்றான்; இந்தியா முழுவதையும் வென்றபின் அவன் இமயமலை வரையிலுஞ்சென்று அம் மலையில் தன் விற்கொடியைப் பொறித்தான்; அதனால் அவன் 'இமய வரம்பன்' என்னும் பெயரைப் பெற்றான். (சங்க இலக் கியத்தில் இத்தகைய உயர்வு நவிற்சிகள் பல இருக்கின்றன.) அவனுடைய தலைநகரம் மரந்தை என்பது. அவன் சோழ மன்னனோடு செய்த போரில் இருவருமே இறந்துபட்டனர். அதனால், அவர்களுடைய பட்டத்தரசிகள் தீக்குளித்தார்கள்.

ஆதனுடைய தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன். அவன் கொங்குநாட்டை வென்றான். அவனுடைய ஆட்சி எல்லை சிறிது காலம் மேற்குக் கடல் முதல் கிழக்குக் கடல் வரையிற் பரவி யிருந்ததென்று அறிகிறோம். ஆதனுக்கு இரு புதல்வர்கள் இருந் தார்கள். அவர்கள் ஆதனுடைய இருவேறு மனைவிகளுக்குப் பிறந்தவர்கள். ஒருவன் பெயர் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரன் என்பது. அவன் சூடிக்கொண்ட முடியில் பனைநாரும் களங்காய்த் தொங்கலும் இருந்தன. அதனால் அந்த முடி பெரு மைக்குரியதன்று என்று நினைத்துவிடக் கூடாது; ஏனெனில், அந்த முடியில் தங்கச் சட்டங்களும் அவற்றில் தொங்கிய முத்து மாலைகளுங்கூட இருந்தன. ஆனால், அவ்வரசன் எதற்காக அத் தகையதொரு விசித்திரமான முடியினை அணிந்து கொண்டா னென்பது நமக்குத் தெரியவில்லை. அவன் தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சியைத் தோல்வியுறச் செய்தா னென்றும், மலபாருக்கு வடக்கில் துளுவ நாட்டிலிருந்த நன்னன்மீது படையெடுத்தானென்றும் அறிகிறோம். நன்னனும் ஏழு முடிகளாலான மாலையை அணிந்த அதிராஜன் என்பது தெரிகிறது.

ஆதனுடைய மற்றொரு மகன் செங்குட்டுவன் (செம்மையான அல்லது நேர்மையான குட்டுவன்). அவன் ஏறக்குறையக் கி.பி. 180ஆம் ஆண்டைச் சேர்ந்தவன். அவனைப் பரணர் பாடியிருக் கிறார். அவர் மிகவும் புகழ்பெற்ற சங்கப் புலவர்களுள் ஒருவர். அவர் ஏனைய புலவர்களைவிட மிக நீண்ட காலம் வாழ்ந்தவர். செங்குட்டுவனுடைய வாழ்க்கை, அவனுடைய அருஞ்செயல்கள்

ஆகியவற்றைப்பற்றிப் பிற்காலத்தில் பல கட்டுக்கதைகள் தோன்றின. ஆனால், அவன் காலத்திலேயே அவனைப் பாராட்டிய பாடல்களாகிய பதிற்றுப்பத்திலும் புறநானூற்றுச் செய்யுளிலும் அந்தக் கதைகள் கூறும் செய்தி எதுவுமில்லை. அவனுடைய மோகூர் வெற்றி ஒன்றைத்தான் அப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அவன் கடற்போர்களிலும் அதிகமாக ஈடுபட்டான் என்று கூறுகின்ற பரணர் அவற்றைப் பற்றிய விவரம் எதனையும் தரவில்லை. அவன் பெற்ற 'கடல் பிறக்கோட்டிய' செங்குட்டுவன் என்னும் பட்டம், கடல் அரணை நம்பியிருந்த அவனுடைய பகைவர்களுக்கு அவ்வரண் பயனில்லாது போகுமாறு அவன் செய்தானென்ற பொருளைத் தருகிறது என்று கருதலாம். அவ்வாறாயின் அவனிடம் ஒரு கப்பற்படை இருந்திருக்கவேண்டும். அவன் யானையேற்றத்திலும் குதிரையேற்றத்திலும் வல்லவன் என்பதும், அதிராஜன் என்னும் பட்டத்திற்கேற்றவாறு அவன் ஏழு முடிகளைக் கொண்ட மாலையினை அணிந்திருந்தானென்பதும், கோட்டைகளை முற்றுகையிடுவதில் வல்லுநன் என்பதும், அவன் சிறந்த வீரன் என்பதும், கவின் கலைகளின் புரவலன் என்பதும் நாம் அவனைப் பற்றித் தெரிந்து கொள்கிற வேறு செய்திகள்.

பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்துச் சேரன் செங்குட்டுவனைப் பாடுகிறது. அந்தப் பத்தின் இறுதியிலுள்ள பதிகத்தில் அவனைப் பற்றிய பல புதிய செய்திகள் இருக்கின்றன. செங்குட்டுவன் நன்னனுடைய நாட்டிலிருந்த [1]வியலூரை அழித்ததும், கொங்கு நாட்டிலிருந்த கொடுகூரை எறிந்ததும், சோழர் குடிக்குரியோர்க்குள் எழுந்த சண்டையில் அவன் தலையிட்டு அவர்களுள் ஒன்பதின்மரை வீழ்த்திப் பத்தாமவன் ஒருவன் அரியணையேற உதவியதும் பதிகத்தில் நாம் காணும் சில செய்திகள். ஆனால், பத்தினிக் கடவுளான கண்ணகிக்குக் கோயில் கட்டியதுதான் அதிற்காணும் மிக முக்கியமான செய்தி. செங்குட்டுவன் வடநாடு சென்று, ஓர் ஆரிய மன்னனைத் தோல்வியுறச்செய்து, கண்ணகியின் சிலைக்குரிய கல்லை எடுத்துக்கொண்டு வந்து, அதனைக் கங்கையில் நீராட்டி, அதன் பின்னர் அதனைத் தன் நாட்டிற்குக் கொண்டுவந்தான். இந்தச் செய்திகள் எல்லாவற்றையும் பல நுண்ணிய ஒப்பனைகளோடு சிலப்பதிகாரம் காவிய அழகுடன் பாடுகிறது. ஆனால், பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தின் இறுதியிலிருக்கும் பதிகத்திலிருந்து சிலப்பதிகாரம் இந்தச் செய்திகளை எடுத்துக் கொண்டதா சிலப்பதிகாரத்திலிருந்து அந்தப் பதிகம் எடுத்துக்கொண்டதா என்பதை நாம் கூற

[1] அங்குக் கிளம்பிய ஒரு கிளர்ச்சியை அடக்குவதற்காக அவ்வாறு செய்திருக்கலாம்.

முடியாது. கோவலன் கண்ணகி கதை மிகப் பழமையானது என்பதற்கும், அது மக்கள் மனத்தில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தது என்பதற்கும், சிலப்பதிகாரத்திற்கு முன்னரே அந்தக் கதையைச் சிலர் பாடியிருந்தார்கள் என்பதற்கும் போதிய சான்றுகள் இருக்கின்றன. எனவே, பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் வழிபாட்டைப் பரப்புகின்ற முயற்சியில் ஈடுபட்ட செங்குட்டுவன் அந்த முயற்சிக்குச் சிலப்பதிகாரங் கூறுவது போலச் சோழ பாண்டிய மன்னர்களின் ஆதரவை மட்டுமன்றி இலங்கை மன்னனின் ஆதரவையும் பெற்றானென்று நினைப்பது தவறாகாது.

உதியஞ்சேரலின் வழியில் வந்த மூன்று தலைமுறையைச் சேர்ந்த மொத்தம் ஐந்து மன்னர்களைப் பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகிறது. அவர்களனைவருஞ் சேர்ந்து மொத்தம் 201 ஆண்டுகள் ஆட்சிசெய்தார்களென்றும், கிளை மரபில் வந்த வேறு மூன்று அரசர்கள் மொத்தம் 58 ஆண்டுகள் ஆட்சி செய்தார்களென்றும் பதிற்றுப்பத்தின்மூலம் நாம் அறிகிறோம். இந்த இரு மரபுகளையும் சேர்ந்த அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக ஆட்சி செய்திருக்கமுடியாது. எனவே, அவர்களுள் சிலர் சமகால அரசர்களாக இருந்திருக்கவேண்டுமென்று நாம் கருதலாம். சேர அரசு ஒரு குடும்பத்தின் பொதுச் சொத்துப்போல இருந்ததென்றும், வயது வந்த ஆண்களுக்கெல்லாம் அந்தச் சொத்தில் பங்கும் அதனைக் காப்பதில் ஆர்வமும் இருந்தன என்றும் நாம் நினைக்கலாம். அத்தகைய அமைப்பைக் 'குலச்சங்கம்' என்று கௌடியல்யர் கூறுகிறார். அது ஒரு மிகச் சிறந்த அரசியலமைப்பு என்றும் அவர் கருதுகிறார். சோழ பாண்டிய நாடுகளிலும் அத்தகையதொரு குலமரபாட்சி அந்தக் காலத்தில் நடைபெற்றிருக்கக்கூடும். சோழ நாட்டில் அத்தகைய ஆட்சி முறை வழக்கிலிருந்ததென்பது உண்மையாயிருந்தால்தான் செங்குட்டுவன் சோழநாட்டில் கிளம்பிய அரசுரிமைப் போராட்டத்தில் தலையிட்டு, ஒன்பது அரசகுமாரர்களைக் கொன்று, கடைசியில் பத்தாவது இளவரசன் ஒருவனுக்குப் பட்டங்கட்டினான் என்னுங் கூற்றுப் பொருத்தமுடையதாயிருக்கும். அத்தகைய ஆட்சியமைப்பு வழக்கிலில்லாவிட்டால் சங்க நூல்களில் வருகின்ற அத்தனை அரசர்கள் பெயர்களையும் நான்கைந்து தலைமுறைக்குள் அடக்கமுடியாது. அத்தகைய ஆட்சி முறைதான் அந்த நிலைமைக்கு இயல்பான விளக்கமாகத் தோன்றுகிறது. பதிற்றுப்பத்தின் ஏழு எட்டு ஒன்பது பத்துகளில் பாடப்பெறுகிற அரசர்கள் உதியஞ்சேரல் வழியில் வந்த அரசர்கள் ஆண்டகாலத்திலேயே ஆட்சி செய்தவர்களென்று நாம் கொள்ளவேண்டும். அவர்களில் முதலில் நம்

கவனத்துக்கு வருகிறவர்கள் அந்துவனும் அவனுடைய மகன் செல்வக்கடுங்கோவாழியாதனும் ஆவார்கள். அவர்களுடைய வீரத்தையும் வள்ளன்மையையும் புலவர்கள் பொதுப் படையாகப் பாராட்டுகிருர்கள். தந்தை கல்வி கேள்விகளிற் சிறந்தவனென்றும் மகன் பல வேள்விகளைச் செய்தவனென்றும் புலவர்கள் பாடுகிருர்கள். அவர்கள் காலத்திலிருந்த குறு நில மன்னர்களுள் ஆயும் பாரியும் மிகவும் புகழ் பெற்றவர்கள். அவர்களைப் புலவர் பலர் பாடியிருக்கின்றனர். உறையூரைச் சேர்ந்த ஒரு பார்ப்பனப் புலவருக்கு ஆய் ஆதரவளித்தான். இன்னெரு பார்ப்பனப் புலவரான கபிலருக்குப் பாரி ஆதரவளித்தான். பாரி இறந்த பிறகே கபிலர் சேர்மன்னர்களின் ஆதரவை நாடினூர். அந்துவனுடைய மகன் அவரை வரவேற்று அவருக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்தான். அவர் பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தைப் பாடி அவனைப் பாராட்டினூர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆட்சிசெய்த வேளிர் குலக் குறுநில மன்னர்களுள் ஆயும் ஒருவன். வட நாட்டு முனிவர் ஒருவர் செய்த வேள்வித் தீயிலிருந்து தங்களுடைய முன்னோர்கள் தோன்றினூர்களென்றும், திருமாலுடனும் அகத்தியருடனும் அவர்கள் தொடர்புடையவர்களென்றும், தவஞ் செய்து கொண்டிருந்த ஒரு முனிவரைத் தாக்கவந்த ஒரு புலியைத் தங்கள் முன்னோர்களில் ஒருவர் கொன்றுரென்றும் அந்தக் குறுநில மன்னர்கள் கூறிக்கொண்டார்கள். இந்தக் கட்டுக் கதைகள் பிற்காலத்து ஹொய்சாள வமிச அரசர்களைப்பற்றிய கட்டுக்கதைகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. ஆய் பொதிய மலையின் அண்மையிலிருந்த நாட்டை ஆண்டு வந்தான். 'அய்யோய்' என்பவன் குமரிமுனையையும் பெட்டிகோ மலையையும் உள்ளடக்கிய ஒரு பகுதியை ஆண்டுவந்தான் என்று டாலமி கூறுகிருர். ஆய் என்பது மரபுப் பெயர். அந்த மரபில் வந்த அரசர்கள் தங்களுடைய சொந்தப் பெயரின் முன்னே 'ஆய்' என்ற மரபுபெயரையும் சேர்த்துக்கொண்டார்கள். உறையூர்ப் பார்ப்பனப் புலவரை ஆதரித்த அண்டிரன் 'ஆய்' என்ற பெயரையும் வைத்துக்கொண்டான். அண்டிரன் என்னும் வடசொல் வீரன் என்னும் பொருளுடையது. அவனுடைய நாடு வளமிக்கது. அங்கே யானைகள் மிகுதியாய் இருந்தன. அவற்றை அவன் தான் நயந்த பலர்க்கும் தாராளமாக வழங்கினுன். நாகர் தலைவன் நீலன் என்பவன் தனக்குக் கொடுத்த மிக நல்ல ஆடை ஒன்றை ஆய் சிவபெருமானுக்கு அளித்து விட்டான்.

அண்டிரன் அமைதியை விரும்பியவன் போலும். அவனுடைய நாட்டின் வளத்தையும் அவனுடைய வள்ளன்மையையும் பல பாடல்கள் பாராட்டுகின்றன. ஆனால், அவனுடைய போர் வன்மையைப் பற்றி ஒரே செய்தி மட்டும் நமக்குத் தெரிகிறது. வேறுபல செய்திகளைக் கூறுகின்ற ஒரு பாடலில் அவன் கொங்கரை மேற்குக் கடல் வரையில் துரத்திச் சென்ற செய்தியும் இடம் பெறுகிறது. அண்டிரன் இறந்தபின் தேவருலகுக்குச் சென்றபோது இந்திரன் மாளிகையிலிருந்த முரசு முழங்கி அவனை வரவேற்றதென்று புலவர் பாடுகிறார்.

வேள் பாரி வீரத்திலும் கொடையிலும் மிகவுஞ் சிறந்தவன். அவன் இறக்கும் வரையில் கபிலர் அவனுடைய அவையிலேயே தங்கியிருந்தார். அவன் பாண்டி நாட்டில் பிரான்மலை என்றும் கொடுங்குன்றம் என்றும் வழங்கும் மலையைச் சூழ்ந்த பகுதியில் ஆட்சிசெய்து வந்தான். அவனுடைய வள்ளன்மையைப் பிற்காலத்திலிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப் பாரிலை' என்று பாராட்டுகிறார்.

பாரியின் ஆட்சியில் முந்நூறு ஊர்கள் இருந்தன. அவற்றின் மையத்தில் அவனுடைய அரண் பெற்ற மலை இருந்தது. பாரியின் வள்ளன்மையையும், அவனுடைய மலையரணின் வலிமையையும், அவனுடைய நாட்டின் வளத்தையும் கபிலர் மட்டுமன்றி வேறு புலவர்களும் மிகவும் இனிய பாடல்கள் பலவற்றில் பாராட்டியிருக்கிறார்கள். பாரியின் இன்பத்திலும் துன்பத்திலும் கபிலர் பங்கு கொண்டார். முடியுடைய வேந்தர் மூவரும் பாரியின் பறம்பை[1] முற்றுகையிட்டபோது கபிலர் அவனுடனிருந்து அவனுக்குதவி செய்தார். முற்றுகையிட்ட வேந்தர் பாசறைகளுக்கப்பாலிருந்த புலங்களிலிருந்து தானிய மணிகளைக் கொண்டு வருவதற்கேற்ற வகையில் கிளிகளுக்குப் பயிற்சியளித்து, அவ்வுபாயத்தின்மூலம் பாரி பறம்பிலிருந்த குடிமக்களுக்கும் போர் வீரர்களுக்கும் அவர் நெடுநாள் உணவளித்தார் என்று புலவர் சிலர் பாடியிருக்கின்றனர். ஆனால், முடிவில் மூவேந்தர்கள் பாரியின் பறம்பைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பாரியும் மாண்டான். அவனுடைய மகளிர் இருவரும் அவனுடைய பிரிவை ஆற்றாது பின்வருமாறு பாடினார்கள்:

> அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவில்
> எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர்கொளார்

[1] பறம்பு என்பது பாரியின் மலை.

இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையு மிலமே!

'வென்றெறி முரசு' என்பது அங்கதப் பொருளில் வந்தது. முடியுடை வேந்தர் மூவரும் நேருக்கு நேர் நின்று பொருது பாரியைக் கொல்லவில்லை; அவனை வஞ்சத்தாற் கொன்று விட்டனர்!

பாரியின் சாவுக்குப் பின் பாரிமகளிர் இருவருக்கும் மண முடித்து வைக்கக் கபிலர் முயன்றார். ஆனால், அம் முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. பின்னர் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். பாரியின் சாவுக்குப் பின் அவனுடைய மக்களைப் பார்ப்பனரிடம் ஒப்படைத்துவிட்டுக் கபிலர் வடக்கிருந்து செத்துப்போனார் என்று புறநானூற்றுச் செய்யுளொன்றின் அடிக்குறிப்புக் கூறுகிறது. ஆனால், கி.பி. பதினொன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த சோழப் பொறிப்பொன்று மேலே சொன்ன செய்திக்கு முற்றிலும் மாறான மரபுவழிச் செய்தி ஒன்றைக் கூறுகிறது. பாரிக்கு ஒரே மகள்தான் இருந்தாளென்றும், கபிலர் அவளை மலையமானுக்கு மணமுடித்து வைத்துவிட்டுத் தீக்குளித்து மாண்டுபோனார் என்றும் அந்தச் செய்தி கூறுகிறது. முள்ளூர் நாட்டையாண்ட மலையமான் திருமுடிக்காரியைப்பற்றிக் , கபிலர் பாடிய பாடல்கள் பல இருக்கின்றன. அவனுடைய நாடு மிகச் சிறப்பு வாய்ந்தது என்றும், பகைவரிடமிருந்து அதனைக் காப்பது மிக எளிதென்றும், அவன் புலவர்க்கும் பாணர்க்கும் வரையாது வழங்கிய வள்ள லென்றும் கபிலர் அவனைப் பாராட்டுகிறார். மேலும், காரி ஓரியைக் கொன்று அவனுடைய கொல்லிமலையைச் சேரர்க்கு ஈந்தான் என்றும் கபிலர் பாடுகிறார்.

பாரி மகளிர் (அல்லது மகள்) திருமணத்தைப் பற்றிய செய்திகள் எப்படி யிருந்தாலும் தன்னைப் புரந்த வள்ளலான பாரி இறந்தவுடனே கபிலர் தீக்குளித்தோ வடக்கிருந்தோ சாகவில்லை என்பது மட்டும் உறுதி. அந்துவஞ் சேரலினுடைய மகனான செல்வக்கடுங்கோ வாழியாதன் பாரியைப் போலவே உயர் குணங்களெல்லாம் பெற்றிருந்தான் என்று கேள்விப் பட்டிருந்த கபிலர் அவனுடைய அவைக்குச் சென்று, அவனைப் புகழ்ந்து பாடிப் பெரும் பரிசில் பெற்றார்.

ஆதனுடைய மகன் பெருஞ்சேரல் இரும்பொறை (சுமார் கி.பி. 190) என்பவன். அவன் அதிகமானுடைய தலைநகரான

தகடூரை வென்றவன். (தகடூர் இப்போது தருமபுரி என வழங்கப்படுகிறது). அவன் ஆயர் தலைவனை கழுவுள் என்பானை வென்று அவனுடைய கோட்டையைப் பிடித்துக் கொண்டா னென்பதும் தெரிகிறது. அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; பல வேள்விகளைச் செய்தவன்; தனக்குப்பின் நாடாளுந் தகுதி யுடைய வீரமக்களைப் பெற்றவன். அவனுடைய அறிவுச் சிறப்பையும் குணச்சிறப்பையும் பார்த்து அதனால் மெய்யுணர் வடைந்த அவனுடைய புரோகிதனே உலகப்பற்றை அறுத்துத் துறவை மேற்கொண்டான்.

இரும்பொறையின் பகைவனும் தகடூர்த் தலைவனுமான அதியமான் நெடுமான் அஞ்சி கடையெழு வள்ளல்களுள் ஒருவன். புகழ் பெற்ற சங்ககாலப் புலவரான ஒளவையாரை அவன் மிகவும் உயர்வாக மதித்துப் பேணினான். ஒளவையார் அவனைப் பற்றிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். அவன் மகன் பொகுட் டெழினியைப் பற்றியும் அவர் சில பாடல்களைப் பாடியிருக்கிறார். தொடக்கத்தில் அதியமானுக்கும் ஒளவையாருக்கும் அவ்வளவாக நெருங்கிய உறவு இருந்திருக்க முடியாது என்பதைப் புறப்பாட்டு 206-ன் மூலம் அறிகிறோம். அது அதியமான் பரிசில் நீட்டித்த போது ஒளவையார் பாடிய பாட்டு. ஆனால், விரைவிலேயே புலவருக்கும் புரவலருக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விட்டது. அதியமானுடைய வீரத்தையும் அவனுடைய வெற்றி களையும் ஒளவையார் பலவாறு புகழ்ந்து பாடினார். அவனுக்காக அவர் தொண்டைமானிடம் தூது போனார். அதியமானும் ஒளவையாரை மிகவும் அன்பாகவும் பெருமையாகவும் நடத் தினான்; அவருக்கு எத்தனையோ பரிசுகளை வழங்கினான். ஆனால், மூப்புத் துன்பங்களை அகற்றி நீண்ட நாள் வாழ்வதற்கு உதவக் கூடிய நெல்லிக்கனி ஒன்றினை அடைந்த அதியமான் அதனைத் தானுண்ணாது ஒளவையார்க்கு அளித்த அருஞ்செயல் அதிய மானுக்கு ஒளவையார் மீதிருந்த அன்பினையும் மதிப்பினையும் உலகறியச் செய்கின்றது. தெய்வங்களுக்குப் பூசையும் வேள்வியுஞ் செய்தவர்களும், மேலுலகிலிருந்து இனிய கரும்பினை நிலவுலகுக்குக் கொண்டுவந்தவர்களும், உலகை நெடுங்காலம் திறமையோடு ஆட்சி செய்தவர்களுமாகிய அரசர்களின் மரபில் தோன்றியவன் அதியமானென்று ஒளவையார் கூறுகிறார். தன்னை எதிர்த்த ஏழு அரசர்களை வென்று, கோவலூர் முதலிய இடங்களை அதியமான் கைப்பற்றினான். தகடூர்மீது சேரர்கள் படையெடுத்த செய்தி ஒளவையார் பாடல்களில் இல்லை. தம் நண்பனுக்கு நேர்ந்த அத் துன்ப நிகழ்ச்சியை அவர் பேச விரும்ப வில்லை போலும்! ஆனால் அச் செய்தியைப் பிற்காலத்தில்

தோன்றிய தகடூர் யாத்திரை என்னும் நூல் விவரமாகக் கூறியது. அந் நூல் இப்போது கிடைக்கவில்லை. வேறு நூல்களிலுள்ள மேற்கோள்களின் மூலந்தான் அந் நூலைப்பற்றிய செய்திகளை நாம் தெரிந்துகொள்கிறோம். சேர மன்னனை எதிர்ப்பதற்குப் பாண்டியரும் சோழரும் அதியமானுக்கு உதவினர். ஆனாலும் சேரனே வென்றான். அதன் விளைவாக அதியமான் சேரமன்னருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான். சிறிது காலஞ் சென்றபின் சேர அரசனுக்காக அதியமான் நன்னனுடைய தலைநகரான பாழியின்மீது படையெடுத்து அவனுடைய படைகளுக்கு மிகுந்த சேதத்தை உண்டாக்கினான். ஆனால், அதியமானையும் சேரனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்த மற்றொரு தலைவனான ஆய் எயினன் என்பவனையும் நன்னனுடைய தானைத் தலைவனான ஞிமிலி (அப் பெயர் மிஞிலி என்றும் வழங்கியது) கொன்றுவிட்டான். அதியமான் இறந்த செய்தி அறிந்த ஔவையார் மனம் வருந்திப் பாடிய பாடல் ஒன்றில் (புறம் 232),

'இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே'

என்று புலம்புகிறார். அதியமான் எவ்வாறு இறந்தான் என்று ஔவையார் சொல்லவில்லை யெனினும், அவனுக்காகக் கல் நாட்டிய செய்தியை அந்தப் பாட்டிற் கூறுவதால் அவன் போரில்தான் மடிந்தான் என்பது உறுதியாகிறது.

பதிற்றுப்பத்திற் பாடப்பெறும் கடைசிச் சேரமன்னன் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை என்பவன். அவன் ஏறக்குறையக் கி.பி. 190ஆம் ஆண்டைச் சேர்ந்தவன். அவன் இருபெரு வேந்தரையும் (சோழ பாண்டியர்), விச்சியையும் வென்று, ஐந்து கற்கோட்டைகளைப் பிடித்து, பொத்தி ஆண்ட பெருஞ்சோழனையும் வித்தை யாண்ட இளம் பழையன் மாறனையும் வென்று, பெரும் பொருளை வஞ்சி மூதூருக்குக் கொண்டு வந்தான் என்று ஒன்பதாம் பத்தின் பதிகம் கூறுகிறது.

வானியாறு சேரத் தலைநகருக்கு அருகில் ஓடியது என்னும் கூற்று, கருவூர்தான் வஞ்சி என்பதைக் காட்டுகிறது. அவ்வூருக்கு அருகில கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஏராளமான ரோமானிய நாணயங்களும், உள்நாட்டு நகரான கொரூரா என்பது சேரநாட்டின் தலைநகர் என்று டாலமி எழுதி வைத்திருப்பதும் இந்தக் கருத்தை வலியுறுத்துகின்றன. ஆனால், வஞ்சி என்ற நகரம் எங்கிருந்தது என்பது சென்ற சில ஆண்டு

களாகப் பெருஞ் சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கிறது. சில வரலாற்று ஆசிரியர்கள் கேரளக் கரையிலிருக்கிற திருவஞ்சைக் களந்தூன் (கொச்சி) பழைய வஞ்சி நகரம் என்று உறுதியாகக் கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் அந்தக் கருத்துக்குத் தெளிவான ஆதாரம் எதையுங் காட்டவில்லை.

சேர அரசர்களுள் நம் கவனத்தைக் கவர்கிற இன்னோர் அரசன் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவன். அவன் ஏறத்தாழக் கி.பி. 210ஆம் ஆண்டைச் சேர்ந்தவன். அவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனிடம் தோற்றுப்போனான். அதனால், அந்தப் பாண்டிய அரசனான நெடுஞ்செழியன் அவனைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டான். ஆனால், அவனுடைய நாட்டிலிருந்த பகைவர்கள் அவனை அரச பதவியில் இருந்து நீக்குவதற்குச் செய்த முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு முன்பே அவன் விடுதலை அடைந்து நாடு திரும்பிவிட்டான்.

சோழர்களுள் கரிகாலன் (சுமார் கி.பி. 190) மிகவும் புகழ் பெற்றவன்.

> 'நளியிரு முந்நீர் நாவா யோட்டி
> வளிதொழி லாண்ட உரவோன் மருக'

என்று காற்றையும் தன் விருப்பப்படி வீசச் செய்த ஓர் அரசனுடைய கால்வழியில் வந்தவன் என்று கரிகாலனை ஒரு புலவர் பாராட்டுகிறார் (புறம் 66). இது சோழர்களுடைய பண்டைக் கடல் வலிமையைக் காட்டுகின்ற ஒரு கூற்றாக இருக்கலாம். கரிகாலனுடைய தந்தை சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்பவன். அவன் வீரத்திலும் தீரத்திலும் மிக்கவன். கரிகாலன் என்றால் கரிந்த காலை யுடையவன் என்பது பொருள். இளமையில் கரிகாலனுக்கு ஏற்பட்ட ஒரு விபத்தை இது குறிக்கிறது. ஆனால், பிற்காலத்தில் அந்தப் பெயருக்குப் பல புதிய பொருள்கள் கூறப்பட்டன. அது ஒரு வடமொழித் தொடர் என்றும் 'கலிக்குக் காலன்' என்றும், 'கரிக்கு (யானைக்கு) காலன்' என்றும் அத் தொடர் பொருள்படுமென்று கூறுவாருமுளர். அவனுடைய பகைவர்கள் அவனை இளமையிலேயே அரச பதவியில் இருந்து இறக்கிச் சிறையில் இட்டனர். அவன் சிறையில் இருந்து தப்பி மீண்டும் அரியணை ஏறிய துணிகரச் செயலைப் பட்டினப்பாலையின் ஆசிரியர் மிக நன்றாக விளக்குகிறார். பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலை சோழர்

தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய ஒரு நீண்ட பாட்டு. வெண்ணியில் நடந்த பெரும் போரில் கரிகாலன் பெற்ற வெற்றி தொடக்கத்தில் அவன் ஆற்றிய அருஞ் செயல்களுள் ஒன்ருகும். தஞ்சைக்குக் கிழக்கே 15 கல் தொலைவிலுள்ள அந்த இடம் இப்போது 'கோவில் வெண்ணி' என்று வழங்கப்படுகிறது. இந்த வெற்றியைப் புலவர் பலர் பாடியிருக்கின்றனர். அந்தப் போரில் அரசரும் வேளிருமான பதினெரு பேர்கள் தங்கள் முரசுகளை இழந்தார்கள்; பாண்டியனுஞ் சேரனும் தங்கள் புகழை இழந்தார்கள். சேரன் புறப்புண் பட்டான். ஒரு வீரனுக்கு அதைவிட மானக்கேடு வேருென்றும் இல்லையாதலால் அவன் அதற்காக நாணி வாளுடன் வடக்கிருந்து செத்தான் (புறம் 65). எனவே, வெண்ணிப்போர் கரிகாலன் வாழ்க்கையில் ஒரு திருப்பமாயிற்று. அவனுக்கு எதிராக உருவாகி இருந்த பெரிய கூட்டணி ஒன்று வெண்ணிப் போரில் அழிந்தது. அவன் செய்த இன்னெரு பெரும் போர் வாகைப் பறந்தலையில் நடந்தது. அதில் ஒன்பது குறுநில மன்னர்கள் தங்கள் குடையை இழந்து கரிகாலனுக்குப் பணிந்தார்கள். கரிகாலன் பெற்ற வெற்றிகளின் பயனுக ஒளி நாட்டினர் தாழ்ந்து தம் வீரங் குறைந்தனர்; அருவா நாட்டினர் கரிகாலன் ஏவலைச் செய்தனர்; வடவர் வாடினர்; குடவர் கூம்பினர். வெற்றிப் பெருமிதத்தில் இருந்த கரிகாலன் சினத்தால் சிவந்த தன் கண்களைப் பாண்டி நாட்டின் பக்கம் திருப்பினுன். அதனுல் தென்னவன் திறல் கெட்டது. மேலும், அவன் ஆயர்குலத் தலைவர்களைக் கிளையோடு அழித்த பின்னர், இருங்கோவேளின் குல முழுவதையும் சாய்ந்துவிட்டான். அருவா நாடென்பது பொன்னிவள நாட்டுக்கு வடக்கிலிருக்கும் பெண்ணையாற்றுக் கீழ்ப் பள்ளத்தாக்கு. தன்னுட்டினர் வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்து செல்வதைக் கரிகாலன் தடுத்து நிறுத்தினுன். அங்கேயே இருப்பதற்குத் தேவையான வசதிகள் எல்லாவற்றையும் அவர்களுக்குச் செய்துகொடுத்திருப்பான் என்று நாம் கருதலாம்.

கரிகாலனுடைய வெற்றிகள் தமிழகத்தின் முடியுடை வேந்தர்களுக்குள் ஒருவகையான கூட்டு ஆட்சியை நிறுவுவதற்கு உதவின. அந்தக் கூட்டாட்சியில் அவன் முதல் தலைவனுக இருந்தான். அவனுடைய நேர் ஆட்சியிலிருந்த நாட்டின் எல்லையும் ஓரளவு விரிவடைந்தது. காவிரிப்பூம்பட்டினத்தையும் அதனுடைய முன்கரையையும் பட்டினப்பாலை மிகவும் விளக்கமாக வருணிக்கிறது. அதிலிருந்து அந்தக் காலத்துச் சோழ நாட்டின் தொழில்வாணிக நிலைமையை நாம் நன்ருகத் தெரிந்து கொள்கிருேம். கரிகாலன் 'காடு கொன்று நாடாக்கிக் குளந்

தொட்டு வளம் பெருக்கி’ஞன். அவன் வேத மதத்தைப் பின்பற்றிப் பல வேள்விகளைச் செய்தானென்றும் உலக இன்பங்கள் அனைத்தையும் நன்ருய்த் துய்த்து வாழ்ந்தான் என்றும் அவனைப் பற்றிய பாடல்களிலிருந்து நாம் அறிகிரேம்.

பிற்காலத்தில் கரிகாலன் பெயரை மையமாகக் கொண்ட பல மரபுவழிக் கதைகளும் கட்டுக்கதைகளும் தோன்றின. அவற்றை நாம் சிலப்பதிகாரத்திலும் பதினென்று பன்னிரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த இலக்கியங்களிலும் பொறிப்புகளிலும் காண்கிரேம். கரிகாலன் குமரியிலிருந்து இமயம் வரையிலுள்ள இந்தியா முழுவதையும் வென்ருன் என்றும், தன்னுடைய மேலாதிக்கத்திலிருந்த குறுநில மன்னர்களின் உதவியோடு காவிரியின் கரைகளை உயர்த்தி வெள்ளப்பெருக்கால் உண்டாகும் அழிவைத் தவிர்த்தான் என்றும் அந்தக் கதைகள் கூறுகின்றன. திருமங்கை ஆழ்வார் பாசுரங்கள் புகழ்கின்ற வீரர்கள் நிறைந்த நாங்கூர் என்னுமிடத்தைச் சேர்ந்த வேளிர் குலப் பெண்ணெருத்தியைக் கரிகாலன் மணந்துகொண்டான் என்று நச்சிஞர்க்கினியர் கூறுகிருர். அவர் கூற்று உண்மையான மரபு வழிச் செய்தி ஒன்றின் அடிப்படையில் எழுந்ததாகத்தான் இருக்க வேண்டும். ஆஞல், சிலப்பதிகாரத்தில் வருகின்ற ஆதிமந்தி, ஆட்டன் அத்தி ஆகியவர்களைப் பற்றிய கதை உண்மை யாயிருக்குமா என்பது ஐயத்திற்கிடமானது. அவர்களைப் பற்றிய பழைய பாடல்கள் அத்திக்கும் ஆதிமந்திக்கும் இருந்த உறவையும் அவர்கள் வாழ்க்கையில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளையும் கூறுகின்றனவே தவிர, ஆதிமந்தி கரிகாலனுடைய மகளென்ரே அத்தி சேர அரச மரபைச் சேர்ந்தவனென்ரே கூறுவதில்லை. பழைய பாடல்களின்படி, அவ்விருவரும் நாட்டியத்தைத் தங்கள் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்கள் என்பது தெரிகிறது. ஆட்டன் என்ற சொல்லுக்கு நாட்டியக்காரன் என்பது பொருள்.

காஞ்சிபுரத்தில் ஆட்சிசெய்த தொண்டைமான் இளந்திரையன் கரிகாலன் காலத்தில் வாழ்ந்தவன். இவன் பத்துப் பாட்டிலுள்ள நான்காம் பாட்டாகிய பெரும்பாணுற்றுப் படையின் தலைவன். பட்டினப்பாலையைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணஞரே பெரும்பாணுற்றுப் படையையும் பாடிஞர். இளந்திரையன் திருமாலின் மரபில வந்தவனென்றும் கடலின் அலைகள் (திரைகள்) அளித்த திரையர் குலத்தைச் சேர்ந்தவனென்றும் புலவர் கூறுவர். அவன் கரிகாலனுடைய உறவினன் என்றும் சோழ அரசுக்கு அடங்கிய சிற்றரசன் என்றும் நினைப்பதற்கேற்ற

ஆதாரம் எதுவும் எந்த நூலிலும் இல்லை. அதியமானுடைய தூதராக ஔவையார் சென்றது இந்தத் தொண்டைமானிடந் தானு அல்லது அவனுடைய மரபைச் சேர்ந்த வேறொரு தொண்டைமானிடமா என்பதும் தெரியவில்லை. தொண்டைமானே ஒரு புலவன். அவன் பாடிய நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று அரசன் தன் சொந்த வாழ்க்கையில் நன்னெறியைக் கடைப்பிடித்தால்தான் குடிமக்களுக்கு அவன் நன்மை செய்ய முடியும் என்று கூறுகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் என்று புகழ்பெற்ற நெடுஞ்செழியன் ஏறக்குறையக் கி.பி. 210-ல் ஆட்சிசெய்தவனென்று கருதலாம். மாங்குடிகிழார் என்றும் மாங்குடி மருதனுர் என்றும் பெயர் பெற்ற நல்லிசைப் புலவர் நெடுஞ்செழியன்மீது மதுரைக் காஞ்சி என்னும் நூலைப் பாடினுர். மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் என்னும் புகழ் பெற்ற புலவர் நெடுஞ்செழியன்மீது பாடிய பாடல் நெடுநல் வாடை என்னும் பெயருடையது. இவ்விரு பாடல்களும் பத்துப் பாட்டு என்னும் தொகை நூலைச் சேர்ந்தவையே. அவர்கள் அதே பாண்டியனைப் பாடிய வேறு பாடல்கள் அகநானூறு, புறநானூறு ஆகிய தொகை நூல்களிலும் இருக்கின்றன.

நெடுஞ்செழியனுடைய முன்னேர்களுள் மூவரைப் பற்றிய சில செய்திகளை நமக்கு மதுரைக் காஞ்சி தெரிவிக்கிறது. அவர்களில் முதல்வனை நெடியோன் என்பவன் புராணங்களில் வருகின்ற கற்பனைப் பாத்திரங்களை ஒத்தவன். அவனுடைய அருஞ் செயல்கள், திருவிளையாடற் புராணத்திலும் பாண்டிய மன்னரைப் பற்றிய மரபுவழிச் செய்திகளைக் கூறுகின்ற வேள்விக்குடி சின்னமனூர்ச் செப்பேடுகளிலும் இடம்பெறுகின்றன. அவன் பஃறுளியாற்றை உண்டாக்கினனென்றும் கடல் வழிபாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்தானென்றும் அந்தச் செய்திகளின் மூலம் நாம் அறிகிறோம். அடுத்தவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. வேள்விக்குடிச் செப்பேட்டில் வருகிற முதலரசன் இவனுகத்தான் இருக்க வேண்டும். இவனைப் பற்றிய பாடல்கள் பல இருக்கின்றன. இவன் நெடியோனைப் போலக் கற்பனைப் பாத்திரமாகத் தோன்றவில்லை. முதுகுடுமி சிறை பிடித்த மக்களைக் கொடுமையாக நடத்தினன்; பல வேள்விகளைச் செய்து 'பல்யாகசாலை முதுகுடுமி' என்னும் பெயரைப் பெற்றுன். நெடியோனுக்குப் பின் எத்தனையாண்டு கழித்து முதுகுடுமி பட்டத்திற்கு வந்தான் என்பதும் அவர்களுக்குப்பின் எத்தனை ஆண்டு கழித்து மற்ற அரசர்கள் பட்டத்திற்கு வந்தார்கள்

என்பதும் தெரியவில்லை. மதுரைக் காஞ்சி பேசுகின்ற மூன்றும் அரசன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன். இவனுடைய ஆட்சியில்தான் கோவலன் கொலையுண்டான். கோவலன் கள்வனல்லன் என்று தெரிந்தவுடனே 'யானே கள்வன்' என்று கூறிக்கொண்டு அவ்வரசன் கீழே விழுந்து இறந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அவன் பாடியதாகக் கூறப் படும் ஒரு செய்யுள் குலத்தையும் செல்வத்தையும் விடக் கல்வியே உயர்ந்தது என்று கூறுகிறது (புறம் 183).

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இளமையிலேயே பட்டத்திற்கு வந்தான். அப்படியிருந்தும் அவன் தன்னை எதிர்த்த சேர சோழ அரசர்களையும் ஐந்து குறுநில மன்னர்களையும் ஒருங்கே தோல்வியுறச் செய்தான். போருக்குப் புறப்படுமுன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறியதை விவரிக்கும் பாடல் (புறம் 72) ஒப்பற்ற அழகும் உள்ளத்தை தொட்டிழுக்கும் ஆற்றலுமுடையது. நெடுஞ்செழியன் இளைய னாதலால் அவனை வெல்வது எளிதென நினைத்து அவனுடைய பகைவர்கள் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து அதன் மையத்திற்கே சென்றுவிட்டனர். ஆனால், அந்த நிலையிலும் அஞ்சாத நெடுஞ்செழியன் தன் படையுடன் சென்று, பகை வரைச் சோழ நாட்டின் எல்லைக்குள் துரத்திக்கொண்டுபோய்த் திருவாரூர்க்கு எட்டுக் கல் தொலைவிலுள்ள தலையாலங்கானம் என்னும் இடத்தில் அவர்களொடு பொருது பெரு வெற்றி பெற்றான். அந்தப் போரில்தான் யானைக்கட்சேய் இரும்பொறை என்ற சேரன் சிறைப்பட்டான். அந்த வெற்றியால் நெடுஞ் செழியன் தன்னாட்டையும் தன் பதவியையும் காத்துக் கொண்டது மட்டுமன்றித் தமிழகத்திலேயே தலைசிறந்த அரசனுமானான். மேலும், அவன் எவ்வி என்பவனுக்கும் வேளிர் தலைவன் ஒருவனுக்கும் சொந்தமான மிழலை, முத்தூறு என்னும் இரு கூற்றங்களையும் போர்செய்து கைப்பற்றினான். பாண்டி நாட்டையும் மதுரையையும் பற்றிய நீண்டதொரு வருணனை மதுரைக் காஞ்சியில் இருக்கிறது. நெடுஞ்செழியனுடைய ஆட்சி இந்தியா முழுதும் பரவ வேண்டுமென்று மாங்குடி மருதனார் விரும்புகிறார். [1]முது வெள்ளிலை என்னும் இடத்தில் வாழ்ந்த உழவர்களும் வணிகர்களும் பல தலைமுறையாகப் பாண்டிய மன்னர்பால் உண்மையான பற்றுடையவர்களாய் இருந்தார்களென்று அவர் குறிப்பிடுகிறார். அவர் ஆலங்கானப் போரையும் குறிப்பிடுகிறார். நெடுஞ்செழியனைக் கொற்கைக்

[1] இது எங்கிருந்த இடமென்பது தெரியவில்லை.

குரியோனென்றும் தென் பரதவர் போரேறு என்றும் புலவர் வருணிக்கிறார். இதனால் முத்து விளையும் தென் கடல் துறையினர் நெடுஞ்செழியனுடைய படையில் முக்கிய வீரர்களா யிருந்தனர் என்பது தெரிகிறது.

நெடுஞ்செழியன் காலத்தில் வாழ்ந்த சேர சோழ அரசர்கள், அவ்வரசர்களையும் அவர்களுடைய அருஞ் செயல்களையும் பாடுகின்ற புலவர்கள் ஆகியவர்களைப்பற்றி இப்போது பேச நேரமில்லை. ஆனால், சோழ நாட்டில் நீண்டநாள் நடைபெற்ற ஓர் உள்நாட்டுப் போரை இப்போது நாம் கவனிப்போம். அந்தப் போரைக் கோவூர்கிழாரும் வேறு சில புலவர்களும் குறிப்பிடுகிறார்கள். இந்தப் போரில் சேட்சென்னி என்னும் நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் மாறுபட்டு நின்றனர். நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையில் ஒளிந்துகொண்டான். அதனை நலங்கிள்ளியின் தம்பியான மாவளத்தான் என்பவன் வளைத்துக் கொண்டான். நெடுங்கிள்ளி வெளியே வந்து போரிடவில்லை. முற்றுகை நீடித்தது. அதனால், கோட்டைக்குள்ளிருந்த மக்கள் பெருந் துன்பமடைந்தார்கள். அப்போது கோவூர்கிழார் நெடுங்கிள்ளியைக் கண்டு, 'நீ அறவழியில் நடக்கிறவனானால் இந்தக் கோட்டைக் கதவைத் திறந்து நலங்கிள்ளிக்குக் கொடுத்துவிட்டு வெளியேறு; வீரனானால் வெளியே சென்று போர் செய். இரண்டுஞ் செய்யாது கதவை அடைத்துக்கொண்டு உள்ளேயிருத்தல் நாணத் தக்கதாகும்' என்று இடித்துரைத்தார் (புறம் 44). இன்னொரு முறை, உறையூர்க் கோட்டையிலிருந்த நெடுங்கிள்ளியை நலங்கிள்ளி முற்றுகையிட்டான். அப்போதும் கோவூர்கிழாரே அவர்களிடையில் அமைதியை நிலைநாட்ட முயன்றார். 'நீங்கள் மாறுபட்டுப் போர் செய்தால் சோழ நாட்டிற்குத்தான் அழிவு உண்டாகும். உங்களில் யார் தோற்றாலும் சோழர் குடிதான் தோற்கும். இருவரும் வெற்றியடைதல் இயற்கைக்கு முரணானது. நீங்கள் உங்களுக்குள்ளேயே போர் செய்து கொள்வதால் உங்களைப்போன்ற அரசர்கள் உங்கள் நிலை கண்டு எள்ளி நகையாடுகிறார்கள். அதனால், உங்கள் போரை நிறுத்திக் கொள்ளுங்கள்' என்று கோவூர் கிழார் அறிவுரை கூறினார் (புறம் 45). இளந்தத்தர் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியிடமிருந்து நெடுங்கிள்ளியிடம் சென்றார். அவர் ஒற்றர் என்று நினைத்த நெடுங்கிள்ளி அவரைக் கொன்றுவிட முடிவு செய்தான். அப்போது கோவூர் கிழார், 'தம்முடைய வல்லமைக்கு ஏற்றவாறு பாடிப் பரிசல் பெற்று வாழும் புலவர்கள் பிறர்க்குத் தீங்கு நினைப்பவரல்லர்' என்று நெடுங்கிள்ளிக்கு எடுத்துக்கூறி இளந்தத்தரைக் காப்பாற்றினார் (புறம் 47).

உறையூர் அரச குடும்பத்தில் ஏற்பட்ட உட்பூசலைப்பற்றி இன்னொரு செய்யுளிலிருந்து நாம் அறிகிறோம். அந்த உட்பூசலை அறிந்த நலங்கிள்ளியின் படை வீரர்கள் தீக்குறிகளையும் பொருட் படுத்தாது உறையூர் நோக்கிப் போருக்கு விரைந்தார்கள். அந்தச் சமயத்தில் சோழ அரச மரபினர்க்குள் எப்போதும் பகைமை புகைந்துகொண்டேயிருந்தது என்பதை நாம் மேலே காட்டிய சான்றுகள் உறுதி செய்கின்றன. அதற்கு முன் ஒரு சமயத்தில் சோழர்களுக்குள் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் செங் குட்டுவன் தலையிட்டான் என்பதை நாம் முன்னரே கூறினோம்.

இன்னும் இரண்டு சோழ மன்னர்களைப்பற்றிப் பேசிய பிறகு நாம் சங்ககாலத் தமிழ் நாட்டின் அரசியல் நிலை பற்றிய கருத்துகளை முடித்துக் கொள்ளலாம். அவ்விருவரும் சேர அரசர்களுக்குப் பகைவர்கள். அவர்களுள் ஒருவனை நெய்தலங்கானல் இளஞ் சேட் சென்னி என்பவன் சேர மன்னரோடு பொருது செருப்பாழி, பாமுளூர் என்னும் கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டான். சிவ வழிபாட்டிற் புகழ் பெற்ற சோழன் செங்கணான் சேரமான் கணைக்காலிரும் பொறையோடு 'போர்ப்புறம்' என்னும் இடத்தில் பொருது சேரனை வென்று சிறையிலிட்டான். சிறையிலிருந்த சேரன் தண்ணீர் கேட்டான். காவலாளி அதனை உடனே கொடுக்காமல் சிறிது காலந்தாழ்த்திக் கொடுத்தான். அதனைப் பொறுத சேரன் அந் நீரைக் குடிக்காமல், தான் அடைந்த அவமானத்தை ஒரு பாட்டில் எழுதி வைத்து விட்டு உயிர் நீத்தான் (புறம் 74). ஆனால், சேரமானுடைய நண்பரான பொய்கையார் என்னும் புலவர் செங்கணானுடைய வெற்றியைக் களவழி நாற்பது என்னும் பாடலில் பாராட்டி, சேரமானைச் சிறையிலிருந்து விடுவித்தார் என்னும் ஒரு கதையும் வழங்கு கிறது. சோழன் செங்கணான் சேரமானுடைய தலைநகரான கருவூருக்கருகிலிருந்த கழுமலம் என்னும் ஊரில் அவனோடு பொருதான் என்று களவழி நாற்பது கூறுகிறது. பிற்காலத்தில் செங்கணான் பெயரை மையமாகக் கொண்டு பல பக்திக் கதைகள் தோன்றின. செங்கணான் 70 அழகிய சிவன் கோயில் களைக் கட்டினான் என்று திருமங்கையாழ்வார் பாடியிருக்கிறார். எனவே, அவன் இன்னும் சிறிது பிற்காலத்தில், அதாவது கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டில், வாழ்ந்தவனாக இருக்க வேண்டும்.

பத்துப்பாட்டுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையைப் படித்துப் பார்த்தால், அஃது எழுதப் பெற்ற காலத்தில் தமிழக அரசியல் நிலைமையில் ஒரு முழு மாறுதல் ஏற்பட்டது என்றும்

உண்மையில் ஒரு வரலாற்றுக் காலம் முடிவடைந்ததென்றும் நாம் அறிகிறோம். அப் பாட்டை எழுதியவர் நத்தத்தனார் என்னும் நல்லிசைப் புலவர். பாட்டின் தலைவன் நல்லியக்கோடன் என்னும் குறுநிலமன்னன். அவன் சங்க கால இறுதியில் வாழ்ந்தவன் என்று நாம் உறுதியாக நம்பலாம். அவன் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் கிடங்கில் (திண்டிவனத்துக் கருகிலுள்ள ஓர் ஊர்), எயிற் பட்டினம் (இன்றைய மரக்காணம்), ஆமூர், வேலூர் ஆகிய ஊர்கள் இருந்தன. அவ்வூர்களனைத்துமே தென்னார்க்காட்டில் இருப்பவை. அவன் ஏறக்குறையக் கி.பி. 275ஆம் ஆண்டைச் சேர்ந்தவன் என்று நாம் கருதலாம். அவனுடைய காலத்தில் முடியுடை வேந்தர் மூவருடைய தலை நகர்களும் வறியவாயின என்றும் புலவர், பாணர் முதலியவர்களை ஆதரித்த பழைய வள்ளல்களெல்லாம் மாய்ந்து போயினர் என்றும் நத்தத்தனார் கூறுகிறார். அவருடைய கூற்று ஓரளவு உயர்வுநவிற்சியாக இருக்கலாம். எனினும் வஞ்சி, உறையூர், மதுரை யாகிய நகர்கள் தங்கள் உச்ச நிலையை எய்திய பின் அப் புலவர் காலத்தில் அவற்றின் வளமும் வலமும் இறங்கு முகமாக இருந்தன என்று நாம் கருதலாம்.

சங்க காலத் தமிழகத்தின் சமுதாய, பொருளாதார நிலைமையைப் பற்றியும், மக்கள் ஏற்றுக் கொண்டவையும் பேணியவையுமாகிய பண்பாட்டுக் கருத்துகள் குறிக்கோள்கள் ஆகியவற்றைப் பற்றியும், அவற்றை வளர்க்கவும் நிலைநிறுத்தவும் தமிழ் மக்கள் தோற்றுவித்த அமைப்புகள், அவர்கள் ஆற்றிய பணிகள் ஆகியவற்றைப் பற்றியும் சங்க இலக்கியம் உண்மையானதும் பொதுவாக எதிர்பார்க்க முடியாததுமாகிய ஓர் ஒப்பற்ற ஓவியத்தை நம் கண்முன் நிறுத்துகிறது. அந்த ஓவியத்தின் மிகக் குறிப்பிடத்தக்க இயல்பாக இருப்பது அதனுடைய கலப்பியல் பண்புதான். பண்டைக் காலத்தில் தனித்தனியாக இருந்த தமிழ்ப் பண்பாடும் ஆரியப் பண்பாடும் ஒருங்கிணைந்த இனிய கலவையே சங்க காலத் தமிழ்ப் பண்பாடு என்பது தெளிவாகத் தெரிகின்ற உண்மை. அந்த இரு பண்பாடுகளின் தூய தனியியல்புகளைப் பிரித்துக் காண்பது எளிதன்று. அந்தக் கலப்பியற் பண்பாட்டின் சில கூறுகள் வட இந்தியாவில் தோன்றியவை என்றும், தென்னிந்தியா ஆரியமயமான காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழகத்திற்குள் நுழைந்தவை என்றும் நாம் கூறமுடியும். ராமாயணம் மகா பாரதம் ஆகிய இதிகாசங்களைத் தமிழ்ப் புலவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். அவற்றிற் கூறப்பெறும் நிகழ்ச்சிகள் சிலவற்றை அவர்கள் தங்கள் பாடல்களில் சேர்த்துக்

கொண்டார்கள். குருச்சேத்திரப் போர் நடந்த சமயத்தில் பாண்டவர் படைகளுக்கும் கவுரவர் படைகளுக்கும் உணவளித்த தாக முடியுடை வேந்தர் மரபுகள் மூன்றும் கூறிக் கொள்வதை நாம் முன்பே சொன்னோம். சிவபிரான் திரிபுரமெரித்த கதையும், சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறுவின் உயிரைக் காப்பதற்காகத் தன்னுடைய தசையை அறுத்துக் கொடுத்தக் கதையும், பகலவனைத் தத்தம் பக்கம் சேர்த்துக் கொள்வதற்காகத் தேவரும் அசுரரும் செய்த சண்டையும் தமிழ்ப் புலவர் பாடல்களில் இடம் பெறுகின்றன. கடலுக் கடியில் பெரு நெருப் பெரிகிற தென்பதும், உத்தரகுரு என்னும் நாட்டில் இடையீடில்லா இன்பந்துய்க்கலாமென்பதும், மனிதன் பிறக்கும்போதே மூன்று கடன்களோடு பிறக்கிறான் என்பதும், சகோரப் பறவை மழைத் துளிகளை மட்டும் உண்ணுமென்பதும், குறிப்பிட்ட சில நிலைகளில் அம் மழைத் துளிகள் முத்துகளாக மாறுகின்றன என்பதும் வடமொழியிலிருந்து அப்படியே எடுத்துக் கொண்ட கருத்துகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். வடமொழி ஐந்திரத்தைப் பார்த்துத்தான் தொல்காப்பியமே எழுதப்பட்ட தென்று சிலர் கூறுவர்.

தமிழ் நாட்டில் திருமணத்தை ஒரு புனிதச் சடங்காக மாற்றியவர்கள் ஆரியர்களே என்று தொல்காப்பியர் தெளிவாகக் கூறுகிறார். வடமொழியிலுள்ள மிகப் பழைய நீதிநூல்கள் எண்வகைத் திருமணங்களைக் கூறுகின்றன. ஆரியர் பழக்க வழக்கங்களும் அவர்களுக்கு முன் வட இந்தியாவில் வாழ்ந்த மக்களுடைய பழக்க வழக்கங்களும் ஒன்றாக இணைந்ததன் பயனாகத்தான் அந்த எண்வகைத் திருமண முறைகள் தோன்றின. அந்த எண்வகை மண முறைகளையும் தொல் காப்பியமும் வேறு நூல்களும் குறிப்பிடுகின்றன. அந்த முறை களைத் தமிழர் மண முறைகளோடு இசைவுபடுத்துவதற்காகத் தமிழறிஞர்கள் செய்த முயற்சிகள் நல்ல புனைவுத் திறனும் கூர் மதியும் வாய்ந்தவை. தமிழர் மண முறைகள் எளியவை. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்வது இயல்பானது என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். காட்சியிலும் கூட்டத்திலும் காணப்பட்ட வேறுபாடுகள் அவரவர் வாழ்ந்த நில இயல்புகளின் அடிப்படையில் தோன்றியவை என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவ் வேறுபாடுகளை அவர்கள் ஐந்து திணைகளில் அடக்கினார்கள். (ஒருபாற்காமத்தைக் கைக் கிளை என்றும் பொருந்தாதக் காமத்தைப் பெருந்திணை என்றும் அவர்கள் வழங்கினார்கள்.) இந்த எளிய அமைப்புக்குள் ஆரியருடைய எண்வகை மணமுறைகளைப் புகுத்தி அவை

எல்லாவற்றையும் ஒருங்கிணைப்பதற்காக அவர்கள் செய்த முயற்சி அவ்வளவாக இனியபயன் தந்ததென்று சொல்லமுடியாது. பண்பாடுகளின் ஒருங்கிணைப்பால் நேர்ந்த தொல்லைகள் ஒரு பக்கமிருக்க, தமிழும் ஆரியமும் ஒன்றையொன்று தழுவியதன் பயனாகத் தமிழ் மொழி வளமும் செழிப்பும் வனப்பும் பெற்றது. அதன் விளைவாகத் தோன்றிய இலக்கியம் ஒப்புக் கொண்ட மேம்பாடுடைய இலக்கியத்தின் எழிலையும் தாய் நில மொழியின் ஆற்றலையும் வலிமையையும் ஒருங்கே பெற்றது. அதுதான் சங்க இலக்கியம். அதுதான் நமக்குக் கிடைத்திருக்கிற மிகப் பழைய தமிழிலக்கியம். அதுவே பல வழிகளில் தலை சிறந்த தமிழிலக்கியம்.

தமிழ் நாடு நிலவளம் பெற்றது. அங்கே தானியமும், இறைச்சியும், மீனும், ஏராளமாயிருந்தன. சேர நாடு எருமைக்கும் பலாப் பழத்திற்கும் மிளகுக்கும் மஞ்சளுக்கும் பெயர்பெற்றது. பொன்னி வள நாட்டில் ஒரு பிடி யானை படுப்பதற்குப் போதுமான இடத்தில் ஏழு களிறுகளுக்குப் போதுமான உணவு உற்பத்தியாயிற்று என்றும், ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல் விளைந்தது என்றும் புலவர் பாடியிருக்கின்றனர். பாரியின் பறம்பில் மூங்கிலரிசியும் பலவின் கனியும் வள்ளிக் கிழங்கும் தேனும் ஏராளமாகக் கிடைத்தன என்று நாம் அறிகிறோம். கரும்பு, கேழ்வரகு ஆகியவற்றைப் பயிர் செய்தல், கரும்பைப் பிழிந்து சர்க்கரை செய்தல், கதிர்களை அறுத்தல் உலர்த்தல் போன்ற கிராமத் தொழில்கள் பலவற்றையும் சங்கப் பாடல்கள் இயற்கையாகவும் மிக விளக்கமாகவும் விவரிக்கின்றன.

கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் அவரவர் செய்த தொழிலுக்கேற்பத் தனித்தனிப் பகுதிகளில் வசித்தார்கள். ஆனால், அந்தப் பகுதிகளெல்லாம் ஒன்றினின்றொன்று தொலைவில் தள்ளியிராமல் நெருக்கமாகவே இருந்தன. மேலும், ஓர் ஊரில்-நகரில்—வாழ்ந்த மக்களனைவரிடையிலும் சமுதாய ஒருமைப்பாட்டுணர்வு ஊடுருவி நின்றது. பொருளாதார நிலையிலும் சமுதாயப் படிநிலையிலும் இருந்த வேறுபாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமுதாய அமைப்பின் இயல்புகள் என்று மக்கள் நினைத்தார்கள். மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்ததாகவோ எதிர்த்துப் புரட்சிசெய்ததாகவோ நினைப்பதற்கு எத்தகைய சான்றும் இல்லை. தமிழகத்தின் வட எல்லையில் ஆறலைகள்வராயிருந்த எழுத்தறிவில்லா மழவரையும், வேட்டையாடி வாழ்ந்தவர்களான எயினரையும்,

அவர்களுடைய குடிசைகளையும், அவற்றிலிருந்த வில் அம்பு கேடயம் ஆகியவற்றையும், ஆயர்களையும் அவர்கள் வீட்டில் விற்பனைக்காக வைத்திருந்த பால் தயிர் நெய் முதலியவற்றையும், வேத விற்பனரான பார்ப்பனரையும், வேட்டல், விருந்தோம்பல் போன்ற அவர்கள் ஆற்றிய அன்றாடக் கடமைகளையும் புலவர்கள் ஒரேவகையாக நோக்கி நெருங்கிய பழக்கத்தால் ஏற்பட்ட அனுபவ அறிவுடன் பாடியிருக்கிறார்கள். பார்ப்பனர் கள்குடித் தனர் என்றும் இறைச்சி தின்றனர் என்றும் சங்க இலக்கி யத்தின் வாயிலாக நாம் அறிகிறோம். அதனை இழுக்கென்று அவர்களுங் கருதவில்லை; மற்றவரும் நினைக்கவில்லை. 'துடியன் பாணன் பறையன் கடம்பனென் றிந்நான் கல்லது குடியுமில்லை' என்று நான்கே சாதிகள் அந்த நாள் தமிழகத்திலிருந்தன என்றும்,

'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே''

என்று வீரக்கல்லை வணங்குவதே தக்கதென்றும் புறப்பாட்டு 335 கூறுகிறது. இந்தச் சாதிகளும் இந்த வழிபாட்டு முறையும் மிகப் பழமையானவை. அவை தமிழகத்தில் ஆரியர் புகுவதற்கு முன்பே இருந்தவையாக இருக்கலாம். போரில் உயிர் துறந்த வீரர்களுக்குக் கல் நாட்டி, அந்த வீரக் கற்களுக்கு நெல்லும் பூவுமிட்டு வழிபடும் முறை சங்க காலத்தில் மட்டுமன்றி அதற்குப் பிறபட்ட பல நூற்றாண்டுக் காலத்திலும் தொடர்ந்து வழக்கிலிருந்தது.

தொண்டி, முசிறி, புகார் முதலிய துறைமுகங்களில் யவனர் பலர் வாழ்ந்தனர். அவர்கள் வாணிகத்துக்காக வெளி நாட்டி லிருந்து வந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் பேசத் தெரியா தெனினும், அவர்கள் மதுரையில் அரண்மனைக் காவலர்களாகவும் தெருக் காவலர்களாகவும் பணியாற்றினார்கள். யவனர் கொண்டு வந்த வாணிகப் பொருள்களில் மதுப் புட்டிகளும் ஒப்பனை விளக்குகளும் இருந்தன என்பது நமக்குப் புதுமையாக இருக்கிறது.

அரசுரிமை மரபுவழி வந்தது. அரசுரிமைப் போர்களும் நிகழ்ந்தன என்பதையும் அவற்றால் மக்கள் சில சமயங்களில் பெருந் துன்பமடைந்தார்க ளென்பதையும் நாம் முன்பே கண்டோம். அரசன் அடிப்படையில் கட்டுப்பாடில்லா அதிகாரங்

களையுடையவனாக இருந்தான். ஆனால், அந்தத் தனி வல்லாட்சியின் கடுமையைக் குறைப்பதற்குச் சில சமயங்களில் அமைச்சர்களும் நண்பர்களும் புலவர்களும் உதவினார்கள். மேலும், ஆன்றவிந்தடங்கிய சான்றோர் மூதுரைகளை மன்னன் மதித்து நடக்க வேண்டுமென்று பொதுவாக மக்கள் எதிர் பார்த்தார்கள். அன்றியும், மக்கள் வாழ்க்கையில் அரசின் தலையீடு குறைவாயிருந்ததாலும் அந்தக் காலத்து மக்கள் சமுதாயம் பழைய வழக்காறுகளை மிகப் பெரிதும் மதித்து அவற்றைப் பின் பற்றி நடந்ததாலும் அரசன் எவ்வளவுதான் கெட்ட குணமுடைய வனாயிருந்தாலும் அதிகமான தீமையைச் செய்துவிட முடியாது. அந்தக் காலத் தமிழ் மக்கள் உண்மையிலேயே மன நிறைவுடன் வாழ்ந்தார்கள் என்பதும், தங்களுடைய மன்னர் களைப் பற்றி அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள் என்பதும், அவர்களிடத்தில் அன்பாகவும் உண்மையாகவும் நடந்தார்கள் என்பதுமே சங்க இலக்கியத்தைப் படித்த பின்பு நம் மனத்தில் நிற்கின்ற பொதுவான எண்ணங்கள். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்னும் கருத்து அந்தக் காலத்தில் நிலவிய ஒன்றாதலால் அரசன் தன் சொந்த வாழ்க்கையில் உயர்ந்த நெறிகளைப் பின்பற்றுவது கடமையாயிற்று. குடி மக்களையாளும் அரசன் முதலில் தன் உணர்ச்சிகளை அடக்கியாளுதல் இன்றியமையாதது என்று பல பாடல்கள் அறிவுறுத்துகின்றன. சமயம், இலக்கியம், கவின் கலைகள் ஆகியவற்றிற்கு அரசன் தாராளமாக உதவ வேண்டுமென்று அந்தக் காலச் சமுதாயம் எதிர்பார்த்தது. அரசன் தன் குடிமக்களுக்குத் தந்தையைப்போல் இருக்க வேண்டும். குறிப்பிட்ட சிலர்க்குச் சலுகை காட்டாமல் அனைவரையும் ஒன்றாகவே நடத்தவேண்டும். ஒவ்வொரு நாளும் அரசவை கூடும். அதற்கு நாளவை என்பது பெயர். அப்போது அரசன் குடிமக்கள் குறைகளைக் கேட்டு அவர்களுக்கு முறை செய்ய வேண்டும். அரசனுடைய கடமைகள் கடுமையானவை. அவனுடைய பொறுப்பு மிகப் பெரியது. கடற்கரையிலிருந்து உப்பு மூட்டை ஏற்றிய வண்டியை உள்நாட்டு உயர்நிலத்திற்கு இழுத்துச் செல்லும் எருதுகளை அரசனுக்கு உவமையாக ஒரு புலவர் கூறுகிறார். 'நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்று வேறொரு புலவர் பாடுகிறார். ஆட்சித் துறையில் பார்ப்பனர் முக்கியமான இடத்தை வகித்தனர். அரசன் தன் அன்றாடக் கடமைகளை ஆற்றுவதற்கு அவனுக்கு உதவிய 'சுற்றத்தில்' பார்ப்பனர் முக்கியமாக இருந்தனர். பார்ப்பனர்க்குத் துன்பம் தரக்கூடிய எந்தச் செயலையும் அரசன் செய்யவில்லை என்பதுதான் அவன் பெறக்கூடிய மிகப் பெரிய பாராட்டு. நாட்டுக்கு வலிமை

தருவது உழவுத் தொழில். அதுவே போரில் வெற்றி பெறு வதற்கும் அடிப்படை. 'செங்கோல் மன்னன் ஆணைப்படி பருவங்களும் நடக்கும்.' போரில் வெற்றிபெறுகிற மன்னன் சிறந்தவன் என்னும் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதன்படியே அரசரும் நடக்கமுயன்றனர். அரசர் எழுவரை வெல்லும் மன்னன் மிக உயர்ந்த அரசனாகிறான். அந்தத் தகுதிக்கு அடையாளமாக அவன் தோற்றுப்போன அரசர்களின் முடிகளைக் கோத்து மாலையாக அணிந்து கொள்வது வழக்கம். மிகவும் வலிமை பொருந்திய அரசர்கள் 'திக்விஜயம்' செய்யவேண்டுமென்று சமுதாயம் எதிர் பார்த்தது. அத்தகைய அரசர்கள் இந்தியா முழுவதிலும் வலம் வந்து எதிர்த்த அரசர்களைத் தோல்வியுறச் செய்யவேண்டும். 'சக்கரவர்த்தி' திக்விஜயம் செய்யும்போது அவனுக்கு முன்னால் பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட மறைபொருளான சக்கரம் ஒன்று காற்றில் மிதந்து செல்லும் என்னும் ஒரு குறிப்பைப் புறப் பாட்டொன்றில் காண்கிறோம். அரசன் ஒருவன் இறந்தபோது அவனுடைய தோழர்களெல்லாம் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று இன்னொரு புறப் பாட்டுக் கூறுகிறது. வேளைக்காரர், கருடர், சகவாசிகள், ஆபத் துதவிகள் என்று பல பெயர்களில் வழங்கிய மெய்காப்பாளர் களை வைத்துக்கொள்வது பிற்கால அரசர்களுடைய வழக்கமா யிருந்தது. அந்த வழக்கத்திற்குப் புறநானூறு கூறும் செய்தி முன்னோடியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

தலைநகரிலிருந்த அரசவை அல்லது மன்றம் நீதித்துறையில் உச்சநிலையைப் பெற்றிருந்தது. மலையமானுடைய மக்கள் உறையூர் மன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். வழக்கை விசாரித்த சோழன் அவர்களுக்கு மரண தண்டனை அளித்தான். ஆனால் கோவூர்கிழார் தலையீட்டின் விளைவாக அவர்கள் விடுதலை யடைந்தார்கள். கோப்பெருஞ்சோழன் இறந்தபின் அவன் இல்லாத அந்த உறையூர் மன்றத்தைக் காணவே கண் கலங்கிய தென்று அவனுடைய நண்பரான பொத்தியார் பாடுகிறார் (புறம் 220). முறை செய்வதில் அரசனுக்குதவ மன்றத்திற்கு வரும் சான்றோர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை மனத்தி னின்று களைந்துவிட வேண்டுமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களும் அவ்வாறே செய்தார்களென்று நாம் நம்பலாம். பொதுப்படையான விஷயங்களைக் கலந்தாலோசிப்பதற்கும் மன்றத்தை அரசன் பயன்படுத்தினான் என்று நாம் உய்த்துணர லாம். சங்ககாலத்திற்குப் பின்வந்த நூலென்று தெளிவாகத் தெரிகிற திருக்குறள், அரசவை எல்லாப் பொது விஷயங்களையும்

ஆராய்வதற்காகச் செயற்பட்ட ஓர் அமைப்பு என்று திட்ட வட்டமாகக் கூறுகிறது. கிராமத்தில் செயற்பட்ட மன்றம் கிராம மக்களின் சமுதாய வாழ்விலும் சமய வாழ்விலும் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்திருந்ததாதலால் கிராமத்தோடு தொடர்புடைய எல்லா விஷயங்களுமே அங்கு ஆலோசிக்கப் பெற்றன. கிராமத்தில் பொது இடம் ஒன்று இருந்தது. அது பெரும்பாலும் ஒரு பெரிய மரத்தின் அடியில் இருந்தது. கிராமத்தின் ஆண் பெண் குழந்தைகள் அனைவரும் அங்கே கூடி, கிராமத்திற்குப் பொதுவான எல்லாப் பணிகளையுஞ் செய்தார்கள். ஆடல் பாடல்களும் விளையாட்டுகளும் அங்கேதான் நடந்தன. அத்தகைய கூட்டங்களில் வயது வந்தோர் அரசியல் செய்தி களையும் ஆராய்ந்திருக்கக்கூடும். அந்த வித்திலிருந்து முளைத்து வளர்ந்ததுதான் சோழர் காலத்தில் மிக நன்றாக அமைந்து செயற்பட்ட கிராம நிர்வாகம்.

பயிர்த்தொழிலும் வாணிகமும் அரசனுடைய வருவாய்க்கு முக்கிய ஆதாரமாயிருந்தன. விளைநிலத்தை மா என்றும் வேலி என்றும் அளந்து கணக்கிட்டார்கள். ஆனால், விளைவில எத்தனை யில ஒரு பங்கு அரசனுக்குரியது என்பது எங்கும் துல்லியமாகக் கூறப்படவில்லை. வெளிநாட்டு வாணிகம் முக்கியமானது. சுங்க வரியின் வாயிலாக அரசன் மிகுந்த வருவாய் பெற்றான். புகாரில் பணியாற்றிய சுங்கவரி அதிகாரிகளின் அலுவல்களைப் பட்டினப் பாலை மிக நன்றாக விளக்குகிறது. சரக்குகளின் புடைபெயர்ச் சிக்கு உள்நாட்டுச் சுங்க வரி விதிக்கப்பெற்றது. அதன் வாயி லாகவும் அரசனுக்கு வருமானங் கிடைத்தது. கள்ளக் கடத் தலைத் தவிர்ப்பதற்காகப் போர் வீரர்கள் இரவும் பகலும் சாலை களில் காவலிருந்தனர். அளவுக்கு மீறிய வரிகளை விதிக்கக் கூடாதென்று புலவர்கள் அரசர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அவர்கள் கூற்று உண்மையாயிருந்தால், போரில் கைப்பற்றிய பொருள்கள் அரச வருவாயில் ஒரு கணிசமான பங்காக இருந்தன என்று நாம் கூறலாம். சங்க காலத்தில் வலிமையான காவ லுடைய் கருவூலம் ஒன்று குடந்தையில் இருந்ததென்று தெரி கிறது. அது சோழர்க்குச் சொந்தமானது.

கைப்பந்தம் ஏந்திய இரவுக் காவலர்கள் தலைநகரின் தெருக் களைச் சுற்றிசுற்றி வந்து காவல் புரிந்தார்களென்றும், நிருவாகத்தில் சிறைத்துறையும் இடம் பெற்றிருந்ததென்றும் நாம் அறிகிறோம்.

அரசன் படை வலிமையில் மிகுந்த கவனஞ் செலுத்தினான். அவனுடைய படையில் போரையே தொழிலாகக்கொண்ட

வீரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தேவையான படைக் கலங்கள் போதுமான அளவில் இருந்தன. பகையும் பூசலும் மிகுந்த அந்தக் காலத்தில் படை வீரர்களுக்கு வேலைக்குப் பஞ்ச மில்லை. (ஏனாதி என்பது படைத்தலைவர்களின் பதவிப் பெயர். சடங்கொடு நிகழ்ந்த விழாவில் அரசன் படைத்தலைவனுக்கு ஏனாதி என்னும் பட்டத்தையும் அந்தப் பதவிக்குரிய மோதிரம் முதலிய விருதுகளையும் வழங்கினான். அரசனிடம் யானைப் படை, குதிரைப்படை, [1]தேர்ப்படை, காலாட்படை என்று நால் வகைப் படைகளும் இருந்தன. வில், அம்பு, வாள், வேல், ஈட்டி, கேடயம் ஆகிய படைக் கலங்கள் எதிரிகளைத் தாக்குவதற்கும் தற்காப்புக்கும் பயன்பட்டன. போர் வீரர் புலித்தோல் கவசத் தையும் முன்கை உறையையும் அணிந்தனர். கேடயம் முக்கிய மான தற்காப்புக் கருவி. பகைவர் முரசத்தை முழக்கி வீரரைப் போருக்கு அழைத்தனர். போர்க்களத்தில் முரசும் சங்கும் செய்தி யனுப்பும் சமிக்கைக் கருவிகளாகப் பயன்பட்டன. அரசரும் குறுநில மன்னரும் வைத்திருந்த போர் விருதுகளில் முரசம் முக்கிய இடம் பெற்றது. அந்த முரசத்தை அவ்வப்போது குளிப்பாட்டி, அதற்கு மந்திரஞ் சொல்லிப் பூசை செய்வது அந்த நாள் வழக்கம். முரசத்தைக் காப்பது வீரர்களின் முக்கியமான கடமை. போருக்குரிய காரணங்கள் அடிக்கடி தோன்றிக் கொண்டுதான் இருந்தன. மகட்கொடை மறுத்தல் போருக் கொரு முக்கிய காரணமாயிருந்ததெனினும் அத்தகைய போர்கள் புலவர்கள் பாடியுள்ள அளவுக்கு அடிக்கடி நடந்தன என்று நாம் நினைக்க இயலாது. ஆநிரை கவர்தல் போரின் தொடக்கத் திற்கு அறிகுறியாயிருந்தது. போருக்குச் செல்ல விரும்பும் அரசன் சில வேளைகளில் பார்ப்பனத் தூதன் ஒருவன் மூலம் ஓலை யனுப்புவதும் உண்டு. பாசறையமைப்பு நுட்பமாகவும் விரிவாக வும் செய்ய வேண்டிய ஒரு முக்கியப் பணி. பாசறையில் சாலை களும் தெருக்களும் இருந்தன. அரசன் தங்குவதற்கு ஒரு தனிப் பகுதி இருந்தது. அதனைப் பெண்கள் காவல் புரிந்தார்கள். இரவில் நாழிகை வட்டில்களின் (நீர்க் கடியாரங்களின்) உதவி யால் காவல் நேரத்தை அறிவித்தனர். வைகறைப் பொழுதில் முரசு முழங்கும். நண்பகலை அறிவிக்கக் கதிர்மணிப் பொறி பயன்பட்டது. இரவில் போர் வீரர் தீ மூட்டிக் குளிர் காய்வர். பாசறையின் முக்கியமான இடங்களில் அமைந்த பார்வை மாடங் களிலிருந்த வீரர்கள் எதிரியின் திடீர்த் தாக்குதல்களை அறிந்து கொள்வதற்காக அல்லும் பகலும் காவலிருந்தார்கள். போரில் மடிவது வீரர்களுக்குப் புகழ் தந்தது. வீரர்களின் தாய்மார்களும்

[1] தேர்களை எருதுகள் இழுத்தன;

தங்கள் மக்கள் போரில் மடிவதையே விரும்பினார்கள்; ஏனெனில், அவ்வாறு மாண்ட வீரர்கள் நேராகச் சொர்க்கத்திற்குச் செல்வார்களென்று அவர்கள் நம்பினார்கள். போரில் மடியாமல் வீட்டிலிருந்தபடியே சாதலை வீரர்கள் பேரிழுக்காகக் கருதினார்கள். குறுநில மன்னர் குடும்பத்தினர் அவ்வாறு செத்துப் போய் விட்டால் அவர்களுடைய உடலை வாளால் வெட்டி, தர்ப்பைப் புல்லின்மீது கிடத்தி, மந்திரஞ் சொல்லிப் புதைப்பது மரபு. அவ்வாறு செய்தால்தான் அவர்கள் வீர சொர்க்கத்துக்குச் செல்ல முடியும் என்று அந்த நாள் மக்கள் நம்பினார்கள். போரில் மடிந்த வீரர்களின் இடுகுழிமீது வீரக்கல் நாட்டி அதனையே தெய்வமாக வணங்குவதும் வழக்கமாயிருந்தது. அந்தக் கல்லில் மாண்ட வீரனுடைய பெயர். அவனுடைய அருஞ்செயல்கள் முதலியவை பொறிக்கப்படும். விழுப்புண் பட்ட வீரர்களின் காயங்களைக் கழுவி, மருந்திட்டு, தேவையானால், அவற்றைத் தைப்பதும் வழக்கமாயிருந்தது.

அரசனே களத்தில் இறங்கிச் சண்டை செய்வதுண்டு. அவ்வாறு சாதாரண வீரர்களோடு சேர்ந்து போரிட்டு வெற்றி பெற்று மகிழ்வதை அரசர்கள் பெரிதும் விரும்பினார்கள். ஆனால், அரசன் சண்டையில மாண்டு போனாலும் கடுமையாகக் காயமடைந்தாலும் அவனுடைய படை வீரர்கள் உடனே எதிரியிடம் சரணடைந்து விடுவார்கள். வெற்றி பெற்ற அரசர்களுள் பெரும்பாலார் தோல்வியுற்ற அரசனை மிகவும் தாழ்வாக நடத்தி அவன் மானத்தைக் கெடுப்பது வழக்கமாயிருந்தது. அதனால், தோல்வியுற்ற அரசன் வெற்றி பெற்ற அரசனைப் பழி வாங்குவதற்குக் காலம் பார்த்துக் காத்துக் கிடப்பான். எனவே, எப்போதும் புகைந்து கொண்டிருக்கிற பகை திடீரென்று கொழுந்து விட்டெரியும். அதனால், மீண்டும் போர் மூளும். தோல்வி கண்ட அரசனுடைய மணிமுடியைக் கழலாகச் செய்து வெற்றி பெற்ற அரசன் தன் காலில் மாட்டிக் கொள்வான். அதுவே வீரக் கழல். தழையாடையையும் பெண்கள் அணியும் சிலம்பையும் அணிந்து கொள்ளுமாறு தோல்வியுற்ற வேந்தன் வற்புறுத்தப்படுவான். அவனுடைய காவல் மரத்தை வெட்டி அதன் அடிமரத்தை முரசு செய்வதற்கு வெற்றி பெற்ற அரசன் பயன்படுத்துவான். தோல்வியடைந்த வேந்தனுடைய ஊர்களை வெற்றி பெற்ற அரசன் அழித்து விடுவதுமுண்டு. சில சமயங்களில் விளைநிலங்களும் அத்தகைய அழிவுக்குள்ளாகும்.

களவழி நாற்பது என்னும் நூலில் பண்டைத் தமிழகத்தின் போர்க்களங்களைப்பற்றிய மிக விவரமான வருணனையைக் காண

கிறோம். போகிற போக்கில் அந் நூல் போர் முறைகளைப்பற்றிய கவர்ச்சியான பல செய்திகளைத் தருகிறது. காலாட் படையினர் குதிரைப் படையினர் உட்பட்ட எல்லா வீரர்களும் காலில் தோல் செருப்பை அணிந்திருந்தார்கள். இளவரசர்களும் உயர் குலச் சீமான்களும் யானை மீதேறிப் போர்க்களஞ் சென்றார்கள். படைத்தலைவர்கள் தங்கள் கொடியைத் தாங்கிய தேர்களில் ஊர்ந்து சென்றார்கள். கழுமலப் போரில் உயிரிழந்த தங்கள் கணவன்மார்களின் உடல்மீது விழுந்து பெண்கள் அழுதார் களென்று பொய்கையார் (களவழி நாற்பதின் ஆசிரியர்) பாடு கிறார். அது புலவர் கையாண்ட வெறும் அணியிலக்கண மரபு அன்று என்றால், பெண்களும்—முக்கியமாக உயர்குலப் பெண் களும்—போருக்குச் சென்ற தங்கள் கணவன்மாரோடு போய்ப் பாசறையில் தங்கினார்களென்று நாம் கருதலாம்.

அரசன் ஆட்சித் தலைவனும் போர்த் தலைவனுமாயிருந்தது மட்டுமன்றிச் சமுதாயத்திலும் அவனே முதலிடம் வகித்தான். அவன் இலக்கியத்துக்கும் கவின்கலைகளுக்கும் ஆதரவு அளித்த தோடு செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பண்பை யும் பெற்றிருந்தான். அதனால் அவனுடைய வாயிற் கதவு அடையாத நெடுங்கதவாயிருந்தது. போரும் காதலுமே உயர் குலத்தினரின் முன்னீடுபாடாக இருந்தன. எஞ்சியிருந்த நேரத்தை அவர்கள் கள்ளுண்டு களிப்பது, இசையின்பத்தை நுகர்வது, ஆடலைக் கண்டு மகிழ்வது ஆகிய பொழுதுபோக்கு களிற் செலவிட்டார்கள். அரசனும் அவனுடைய ஏனாதிகளும் அவர்களுடைய பரிவாரங்களும் சேர்ந்து சமுதாயத்தின் உச்ச நிலையில் அமர்ந்து வாழ்க்கை இன்பங்கள் அனைத்தையும் துய்த்தார்கள்.

சமயம் நேர்ந்தபோதெல்லாம் உண்டாட்டும் களியாட்டும் நிகழ்ந்தன. அந்த இன்ப நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்ட புலவர்கள் அவற்றை ஏற்பாடு செய்த அரசர்களையும் தலைவர் களையும் மிகப் புகழ்ந்து பாராட்டினார்கள். 'வெந்து ஆறியதும் அடித்த பஞ்சு போல மென்மையானதுமான இறைச்சிக் கொழுந் துண்டங்களைத் தின்பதற்கும், பெருங்கலத்தில் தேறலை ஊற்றிக் குடிப்பதற்கும் விரும்பி நான் உன்னிடம் வந்தேன்' என்று ஒரு புலவர் புரவலனிடம் கூறினார். கரிகாலனுடைய மாளிகையில் அணிகளைப் பூண்ட அழகிய இளம் பெண்கள் புன்முறுவலோடு தங்கக் கலத்தில் ஊற்றிக் கொடுத்த மதுவின் இனிமையைப்பற்றி இன்னொரு புலவர் பாடுகிறார். பெண் பன்றியோடு சேர

விடாமல் பல நாள் வைத்திருந்த [1]கொழுத்த பன்றியின் இறைச்சியும், பாலில் நனைந்த ஆப்பமும், ஆமையிறைச்சியும், குறிப்பிட்ட சில மீன் வகைகளும் அருஞ்சுவைப் பொருள்களாகக் கருதப் பட்டன. (மதுபான வகைகளில் பச்சைப் புட்டிகளில் வந்த வெளி நாட்டு மதுவும், இளநீர் பனஞ்சாறு கருப்பஞ்சாறு ஆகியவை கலந்த முநநீரும், மூங்கிற் குழாய்களில் ஊற்றி நிலத்துக்கடியில பல நாள் வைத்து முதிர்ந்தபின் எடுத்த தேறலும் சிறப்பிடம் பெற்றன.)

வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்ளும் பழக்கம் சங்ககாலத்திற்குப் பின்னர் தோன்றியதாய் இருக்கலாம். போரில் தம் கணவன்மாரை இழந்த பெண்கள் கீரை தின்பதையும் குளிர்ந்த நீரில் குளிப்பதையும் விட்டுவிடுவார்கள். கைம்பெண்களின் வாழ்க்கை கடுமையானது. அவர்கள் தங்கள் தலைமயிரை வெட்டிவிடவேண்டும்; அணிகலன்களை அகற்றிவிடவேண்டும்; மிக எளிய உணவையே உட்கொள்ள வேண்டும். அதனால்தான் உடன்கட்டையேறி அதனால் வரும் புகழைப் பெறுவது கைம் பெண்ணின் கடினமான வாழ்க்கையைவிட மேலானது என்று சில பெண்கள் நினைத்தார்கள் போலும்! கைம்பெண் தலையை மொட்டையடிப்பது, மணப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதைப் போலவே' ஆரியர் வருகைக்கு முற்பட்ட தமிழகத்தின் வழக்கமென்றும், அந்த வழக்கம் ஆரியர் வருகைக்குப் பின்னும் பின்பற்றப்பட்டதென்றும் இந்த இடத்தில் சொல்லிவிட வேண்டும்.

அந்த நாள்களில் வாழ்ந்த உயர்குல மக்களின் பண்பட்ட பொழுதுபோக்குகள் கவிதையும் இசையும் (முக்கியமாக வாய்ப்பாட்டு) கூத்துமாகும். பெரும்பாலும் ஆடலும் பாடலும் ஒருங்கே நிகழ்ந்தன. புலவர்கள் சமுதாயத்தின் எல்லா வகுப்புக்களையும் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். அவர்களுள் பெண்களும் இருந்தார்கள். அந்தந்தச் சமயத்திற்கேற்ற கவிகளை அவர்கள் இயற்றினார்கள். அந்த இயற்றமிழ்ப் பாட்டைக் கேட்ட புரவலர்கள் அவர்களுக்குத் தாராளமாகப் பரிசில் வழங்கினார்கள். (பட்டினப் பாலையைப் பாடியதற்காகக் கடியலூர் உருத்திரங் கண்ணனாருக்குக் கரிகால் பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் கழஞ்சுப் பொன் பரிசில் வழங்கினான்.) புலவர்கள் பாடிய பாடல்கள் (முக்கியமாகச் சிறுபாடல்கள்) வாழ்க்கையின் உண்மை

[1] விருந்துக்காகப் பன்றி, மான் முதலியவற்றைத் துண்டுதுண்டாக வெட்டாமல் முழுமையாகச் சமைத்தல் வழக்கமாயிருந்தது.

நிலையை அப்படியே எடுத்துக்காட்டும் இயல்பையும் ஒப்பற்ற வனப்பையும் பெற்றவை. புலவர்களுடைய உலக அனுபவத்தையும் உள்ளத்துணர்ச்சிகளையும் பளிச்சென்று காட்டும் திண்மையும் செறிவும் ஆற்றலும் வாய்ந்த சொற்றொடர்கள் அந்தப் பாட்டுகளில் மலிந்து கிடக்கின்றன. வாழ்வின் பல துறைகளையும் அந்தப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. நீளமில்லாத சிறிய உணர்ச்சிப் பாடல்கள் மட்டுமன்றி, நீடுயர் எழுச்சிப் பாடல்களையும் சமய வழிபாட்டுப் பாடல்களையும் சங்ககாலப் புலவர்கள் பாடினார்கள். அந்த காலத்து யாப்பு எளிமையானது; ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் இயல்புடையது. வடமொழிப் பாட்டியல்புகள் தமிழகத்தில் அப்போது வழக்குக்கு வரவில்லை.

புலவர்களுள் சிலர் அரசர்களோடும் குறுநில மன்னர்களோடும் அவர்களுடைய மாளிகையிலேயே வாழ்ந்தனர். மற்றவர்கள் புரவலரைத் தேடி ஊரூராகச் சென்றார்கள். பாரிக்கும் கபிலருக்கும், ஔவையாருக்கும் அதியமானுக்கும், பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனுக்கும் இருந்த தொடர்பு புலவர்க்கும் புரவலர்க்கும் இருந்த நட்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள். பரிசில் நீட்டித்த மன்னர்களும் மிகக் குறைந்த பரிசில்களைக் கொடுத்த தலைவர்களும் அந்தக் காலத்தில் இருக்கத் தான் செய்தார்கள். ஆனால், அஞ்சா நெஞ்சமுடைய புலவர்கள் அவர்களைத் தங்களுடைய பாடல்களில் இகழ்ந்து பேசத் தயங்கவில்லை. தம்மை நேரிற் பார்க்காமல் ஆள் மூலம் ஓர் அரசன் கொடுத்தனுப்பிய பரிசிலை ஒரு புலவர் ஏற்க மறுத்துவிட்டார். பொன்னாலான தாமரை, அல்லி ஆகிய மலர்களையும், தேரையும், பரியையும், நிலத்தையும் புரவலர் புலவர்க்குப் பரிசிலாகத் தந்தனர். கரிகாலன் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு அளித்ததாகச் சொல்லப்படும் பரிசு உயர்வு நவிற்சியாக இருக்கலாம். ஆனால், ஒரு புலவன் தன்னைப் பாடிவந்த புலவருக்கு ஒரு யானையைப் பரிசில் தந்ததாக நாம் ஒரு பாட்டில் படிக்கிறோம். (யானையை வைத்துக் கொண்டு புலவர் என்ன செய்தாரென்பது வேறு கேள்வி.)

அவ்வப்போது வந்த பாணர்களும் விறலிகளும் தங்களுடைய ஆடல் பாடல்களால் அரசவைக்கு மகிழ்ச்சியூட்டினார்கள். பாணர்கள் பாடினார்கள்; இசைக் கருவிகளையும் இசைத்தார்கள். விறலிகள் ஆடினார்கள். அவர்கள் எந்த இடத்திலும் நிலையாகத் தங்கியவர்களாக இல்லை; அவர்கள் ஊரூராகச் சுற்றிக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் பழமை நலங்கனிந்த இசைக் கருவிகளைத் தங்களுடன் கொண்டு சென்றார்கள். அவர்கள் பண்டைக்

காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த இனமரபுக் குழுக்களின் பிரதிநிதிகளாக இருக்கலாம். அந்தப் பண்டை மக்களின் மரபுவழிப் பாடல்களையும் ஆடல்களையும் இசைக்கருவிகளையும் அவர்கள் பாதுகாத்து வைத்திருந்தார்கள் என்றும் நாம் நம்பலாம். அவர்கள் மிகுந்த வறுமையினால் உழந்த அன்றாடங்காய்ச்சிகளென்பதையும், நல்குரவு அவர்களை நிழல்போல் தொடர்ந்ததென்பதையும் நாம் சங்ககாலப் பாடல்களின் வாயிலாக அறிகிறோம். அவர்கள் தாராளமாகப் பரிசிலை வழங்கினர். ஒரு புரவலன் பரிசில் வழங்கியபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய சுவை மிகுந்த ஒரு செய்தியைக் கீழ்வருமாறு அறிகிறோம்: 'சோழன் அழகிய விலையுயர்ந்த அணிகளை எங்களுக்கு வாரி வழங்கினான். அவற்றை என்ன செய்வதென்றே எங்களுக்குத் தெரியவில்லை. எப்போதுமே வறுமையில் வாடிய எங்கள் பெண்கள், கையில் அணிய வேண்டிய அணிகளைக் காதில் அணிந்து கொண்டார்கள்; காதில் பூட்ட வேண்டிய அணிகளை விரலில் பூட்டிக் கொண்டார்கள்; இடையில் அணியவேண்டிய நகைகளைக் கழுத்திலும் கழுத்தில் அணிய வேண்டியவற்றை இடையிலும் அணிந்து கொண்டார்கள். இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனபோது சீதை கழற்றியெறிந்த அணிகலன்களைக் கண்ட குரங்குகள் அவற்றை எடுத்து எவ்வாறு இடம் மாற்றித் தாறுமாறாகப் பூட்டிக் கொண்டனவோ அவ்வாறுதான் எங்கள் பெண்களும் அன்று செய்தனர். அதனால் உண்டான சிரிப்புக்கு அளவேயில்லை' (புறம்–378). விறலிகளும் பாணர்களும் பரிசில் பெற்ற முறைகளைப்பற்றி ஆற்றுப்படை என்னும் நூல் மரபு ஒன்று சங்ககாலத்திலேயே உருவாகியிருந்தது.

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்'

என்பது தொல்காப்பியம்.

இசையும் கூத்தும் மிக உயர்ந்த வளர்ச்சி பெற்றிருந்தன. அவற்றை மக்கள் பெரிதும் விரும்பினார்கள். பலவகைப் பட்ட இசைக்கருவிகளைச் சங்க இலக்கியம் விவரிக்கிறது. யாழ் என்பது ஒரு நரம்புக் கருவி. சங்ககாலத்தில் பலவகை யாழ்கள் இருந்தன. அதுபோலவே அதிர்வுக் கருவிகளிலும் பலவகைப் பட்ட முழவுகள், முரசுகள் முதலியவை இருந்தன. கரிகாலன்

'ஏழிசை வல்லவன்' என்று வருணிக்கப் [1]பெறுகிறான். 'செந் தீயால் செய்த கருந்தொளைகளையுடைய குழல்' என்று வேய்ங் குழல் வருணிக்கப் பெறுகிறது. ஒவ்வோர் பண்ணையும் எந்தெந்த நேரத்திலும் எந்தெந்தச் சந்தத்திலும் பாடவேண்டுமென்னும் இசை மரபு அந்தக் காலத்திலேயே வேரூன்றியிருந்தது. விறலிகள் சில சமயங்களில் தீப்பந்த ஒளியில் இரவில் ஆடினார்கள்.

அவர்கள் ஆடிய பாணிக்கும் பிடித்த முத்திரைகளுக்கும் 'நாட்டிய சாஸ்திரத்தில்' பரத முனிவர் குறிப்பிடுவதுபோலத் தமிழ் நூல்களிலும் தனித்தனிப் பெயர்கள் வழங்கின. ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஆடிய ஆட்டங்களும் வழக்கில் இருந்தன. ஆடல் துறையில் ஆரியர் வருகைக்கு முற்பட்ட தமிழர் கலையியல்புகளையும் ஆரியர் வந்தபின் அவர்களுடன் வடக்கேயிருந்து வந்த கலையியல்புகளையும் ஒருங்கிணைத்துப் புதியதொரு கலைப்பாணியை உருவாக்குவதற்காக முறையான முயற்சிகள் செய்யப்பெற்றன. அம் முயற்சிகளின் பயனாக உருவான ஆடல் பாடற் கலையின் முழு உருவத்தையும் நாம் அடுத்த காலத்தைச் சேர்ந்த சிலப்பதிகாரத்திற் காண்கிறோம். சிக்கல் மிகுந்த இத் துறையின் நுண்ணியல்புகளை வல்லுநர்களே நன்றாக அறிவார்களாதலால் இந்த நூலில் நாம் இதற்குமேல் எதுவும் கூறவில்லை.

நாயையும் முயலையும் வேட்டையாடுதல் பொழுது போக்காக இருந்தது. வீரர்கள் மற்போரிலும் குத்துச் சண்டையிலும் ஈடுபட்டார்கள். முதியோர் பகடையாடினார். பெண்களும் சிறுமிகளும் மாடமீதேறிப் பந்தும் கழங்கும் ஆடினார்கள் சங்க நூல்களில் நீர் விளையாட்டு, மனைப்புற விருந்து ஆகியவைபற்றிய குறிப்புகள் இருக்கின்றன. சிறுவர்கள் மன்றத்திற்கூடி, சிறு வில்லையும் அம்புகளையும் வைத்து விளையாடினார்கள். சிறுவரும் சிறுமியரும் ஒன்றாகச் சேர்ந்து ஆற்றிலும் குளத்திலும் நீந்தி விளையாடினார்கள். ஆடல் மகளிர் ஆடவரின் காதலைப் பெறுவதில் இல்லத் தலைவிகளோடு போட்டியிட்டார்கள். இந்தப் போட்டியே சிலப்பதிகாரக் கதையின் அடிப்படையாக இருக்கிறது. வாத்சியாயனருடைய காம சூத்திரங் கூறுவதுபோலச் சங்ககாலத்திற்கு அடுத்த காலத்தில் தோன்றிய மணிமேகலை

[1] 'Master of the seven notes of music' என்று ஆங்கில மூலத்தில் வருகின்ற தொடரை 'ஏழிசை வல்லவன்' என மொழிபெயர்த்திருக்கிறேன். ஆனால், கரிகாலனுக்கு இத்தகையதொரு பட்டம் இருந்தது என்பதற்கு எனக்குத் தெரிந்த அளவில் இலக்கிய ஆதாரம் எதுவும் இல்லை. பொருநராற்றுப் படையில் 63ஆம் அடியில் காணும் 'ஏழின் கிழவ' என்னும் தொடர் கரிகாலனைக் குறிப்பதன்று; ஆற்றுப் படுத்தப்பெறும் பொருநனைக் குறிப்பது.

என்னும் காப்பியமும் பரத்தையர் பெற்ற தொழிற் பயிற்சியைக் கூறுகிறது. அவர்கள் அரசவையாடல், பொதுமக்கள் விரும்பிய ஆடல், வாய்ப்பாட்டு, குழல் போன்ற இசைக்கருவிகளை வாசித்தல், சமையல் செய்தல், நறுமணக் கலவைகளைத் தயாரித்தல், ஓவியந்தீட்டல், பூக்கட்டல் முதலிய பல நுண்கலைகளையும் பலகாலம் பயின்று தங்களை ஆடவர் விரும்பும் ஆரணங்குகளாகச் செய்து கொண்டார்கள்.

செல்வந்தர் செங்கல்லாலும் காரையாலும் கட்டிய வீடுகளில் வசித்தனர். சுவர்களில் தெய்வங்கள், விலங்குகள் முதலியவற்றின் படங்கள் வரையப் பெற்றிருந்தன. மன்னன் மாளிகை அழகிய பூங்காவின் மையத்தில் அமைந்திருந்தது. வீடுகள் சாத்திரங்களில் கண்ட விதிகளுக்கிணங்கக் கட்டப்பட்டன. முன்னரே கணித்த நல்லோரையில் கட்டுமான வேலைதொடங்கியது. நெடுஞ்செழியன் மாளிகையிலிருந்த பெண்கள் பகுதியையும் பள்ளியறைகளையும் நெடுநல்வாடை மிக விவரமாக வருணிக்கிறது. அவற்றின் அழகிய சுவர்கள், தூண்கள், யவனர் செய்த எழில் விளக்குகள், தந்தக் கட்டில்கள், உயர்ந்த விரிப்புகள் முதலியவற்றைப் பற்றிய செய்திகளை நெடுநல்வாடை கூறுகிறது. அந்த மிகப் பழங்காலத்திலேயே செல்வச் சீமான்கள் பலவகைச் சுகபோகப் பொருள்களையும் பயன்படுத்தினர்களென்பது நன்ருகத் தெரிகிறது. குடும்பத்தில் மனைவிக்கு நல்ல மதிப்பிருந்தது. அவளே இல்லத்தின் ஒளி. பொதுமக்கள் சாதாரண வீடுகளில் வசித்தார்கள். சாதி நீக்கம் செய்யப் பெற்றவரும் காடுவாழ் மக்களும் சிறிய குடிசைகளில் வாழ்ந்தார்கள். அந்தக் குடிசைகளைப் புலவர்கள் வருணித்திருக்கிருர்கள். புலையர்கள் கயிற்றுக் கட்டில் செய்து விற்ருர்களென்றும் விலங்குகளின் தோலை விரித்து அதன்மீது படுத்துறங்கினர்களென்றும் நாம் அறிகிருேம். புகாரில் இருந்த பரதவருடைய வாழ்க்கையையும் அவர்களுடைய ஓய்வு நேரப் பொழுது போக்குகளையும் பட்டினப்பாலை மிக விளக்கமாகக் கூறுகிறது.

மக்களுடைய நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் பற்றிய முக்கியமான செய்திகள் சங்ககாலப் பாடல்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. சோதிடத்திலும் சகுனங்களிலும் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை சாவதற்கு முன் தோன்றிய தீக்குறிப்பைப்பற்றிப் புறப்பாடல் 229 கூறுகிறது. கலைந்த கூந்தலோடு எதிரே வருகின்ற பெண்ணைத் தீக்குறியாக மக்கள் கருதினர்கள். குறி சொல்

வோர்க்கு நல்ல வருவாய் கிடைத்தது. குழந்தைகளுக்குத் தாயத்துக் கட்டினுல் அவர்களுக்குத் தீங்கு நேராமல் தடுக்கலா மென்று பெற்ருேர் நம்பினர். பேயோட்டுவதற்கும், மழையை வருவிப்பதற்கும், இன்னும் பல நலன்களை அடைவதற்கும் பல சடங்குகள் வழக்கில் இருந்தன. ஆல மரத்தில் தெய்வங்கள் வசித்ததாயும் பகலவனையும் நிலவையும் பாம்பு விழுங்கியதால் கிரகணம் ஏற்பட்டதாயும் மக்கள் நம்பினுர்கள். காக்கை கரைந்தால் விருந்தினர் வருவரென்றும், முக்கியமாக, வேற்றூர் சென்றிருந்த தலைவன் பிரிவாற்ருது வருந்திய தலைவியிடம் திரும்பி வருவானென்றும் சங்ககால மக்கள் நம்பினுர்கள். மன்னன் மாளிகையின் முன்னுல் நாள்தோறும் காக்கைகளுக்குச் சோறுபோட்டார்கள். குடிமக்கள் வீடுகளிலும் அவ்வாறே செய்திருப்பார்களென்று நாம் நம்பலாம். வறியோரைக் கூட்டமாக அமர்த்திச் சோறு போடும் வழக்கமும் அந்தக் காலத்தில் இருந்தது.

உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டு வாணிகமும் மிக நல்ல முறையில் நடந்தன. சங்ககாலம் முழுவதும் சுறுசுறுப்பாக நடந்த இந்த வாணிகத்தைப் பற்றிய செய்திகளைத் தமிழ் நூல்களும், கிரேக்க ரோமானிய நூல்களும், தொல்பொருட் சின்னங்களும் நமக்கு மிக நன்ருக எடுத்துக்காட்டுகின்றன. தமிழகத் துறைமுகங்கள் வெளிநாட்டு வாணிகத்தின் பெரிய மையங்களாக இருந்தன. பெரிய கப்பல்கள் பாய் இறக்காமலே புகார்த் துறைமுகத்திற்குள் வந்து வெளிநாடுகளிலிருந்து ஏற்றி வந்த அரிய பொருள்களைக் கரையில் இறக்கின என்று நூல்கள் கூறுகின்றன. அந்தப் பெரிய மாநகரின் நீண்ட தெருக்களில் பல அறைகளையும் வாயில்களையும் திண்ணைகளையும் நடைக்கூடங் களையும் உடைய உயர்ந்தோங்கிய மாடமாளிகைகள் இருந்தன. செல்வந்தர்களுடைய மாளிகைகளின் கீழ்ப் பகுதிகள் வாணிகத் திற்கும் மாடிகள் குடியிருப்பதற்கும் பயன்பட்டன. துறை முகத்தில் நின்ற கப்பல்களிற் பறந்த கொடிகளைத் தவிர வாணிகப் பொருள்களை விளம்பரம் செய்வதற்கான கொடிகளும் நீர்த்தேறல் கடைகளில் (மதுக் கடைகளில்) பறந்த கொடிகளும் காற்றில் அசைந்தாடின. பாண்டிய நாட்டில் சாலியூரும் சேர நாட்டில் பந்தரும் மிக முக்கியமான துறைமுகங்கள் என்றும் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. பாண்டி நாட்டுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தேவையான குதிரைகளெல்லாம் வெளிநாட்டி லிருந்து கப்பல்களில வந்திறங்கின. கலங்கரை விளக்கங்களும் வெளிநாடு சென்று வந்த கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கேற்ற வசதிகளும் இருந்தன. துறைமுக நகரங்களில் பல நாட்டு

மக்களும் இருந்தார்கள். அதனால் அந்த நகரங்களில் வாழ்க்கை முறையை அகலுலகக் குடிமை முறை என்று கூறலாம். யவனர்கள் பொன்னைக் கொண்டுவந்து முசிறியில் இறங்கிவிட்டுச் சேரநாட்டின் மிளகு முதலிய அரும் பொருள்களைத் தங்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டு போனார்கள். இந்தச் செய்திகளையெல்லாம் நாம் சங்ககால இலக்கியத்தின் வாயிலாக அறிகிறோம்.

பெரிப்ளஸ் என்னும் நூலை எழுதிய ஆசிரியர் (சுமார் கி.பி. 75) இந்தியாவுக்கும் ரோமுக்கும் நடந்த வாணிகத்தைப் பற்றிப் பல முக்கியமான செய்திகளைக் கூறுகிறார். அவர் நவுரா (கண்ணனூர்), டிண்டிஸ் (சங்க நூல்களில் தொண்டியென்றும் இன்று பொன்னானி என்றும் வழங்கும் ஊர்), முஜிரிஸ் (சங்க நூல்களில் முசிறி என்றும் இன்று கொடுங்கோளூர் என்றும் வழங்கும் ஊர்), நெல்கிந்தா (கோட்டயத்துக்கருகிலுள்ள ஊர்) ஆகியவை மேற்குக் கடற்கரையில் மிக முக்கியமான துறைமுகங்கள் என்று குறிப்பிடுகிறார். கிரேக்கர்களும் அரேபியர்களும் அனுப்பிய சரக்குகளைச் சுமந்து வந்த கப்பல்கள் முசிறியில் ஏராளமாக இருந்தன என்று அவர் கூறுகிறார். நெல்கிந்தா பாண்டிய ஆட்சியில் இருந்தது. பக்கேரே (புறக்காடு) என்பது அதே கரையிலிருந்த மற்றொரு துறைமுகம். அங்கெல்லாம் நடைபெற்ற வாணிகத்தைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்: 'மேற்குக் கடற்கரையில் கிடைக்கின்ற ஏராளமான மிளகு, மலபத்திரம் ஆகிய பொருள்களை ஏற்றிக்கொண்டு வருவதற்காக (மத்திய தரைக் கடலிலிருந்து) பல கப்பல்கள் அங்குச் சென்றன. அந்தத் துறைமுகங்களில் (அரபிக்கடல் துறைமுகங்களில்) ஏராளமான நாணயங்களும், ஓரளவு மெல்லிய துணியும், புட்பராகமும் இறக்குமதியாகின்றன. அவற்றைத் தவிர, பூ வேலைப்பாடுடைய நார்மடி, அஞ்சனக் கல், பவழம், செப்பமுறாத கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம் முதலிய பொருள்களும், ஓரளவு, அதாவது பாரிகாஜாவில் இறக்குமதியாகிற அளவு, மதுவும் இறக்குமதியாகின்றன. அன்றியும், செந்தாளகம், அரிதாரம் ஆகிய பொருள்களும், வெளிநாட்டு மாலுமிகளுக்குத் தேவையான அளவு கோதுமையும் இறக்குமதியாகின்றன. (இந்தத் துறைமுக நகர்களிலிருந்த வணிகர்கள் கோதுமை வியாபாரம் செய்யவில்லை.) இங்கிருந்து மிளகு ஏற்றுமதியாகிறது. அது கொட்டனாரா என்னுமிடத்தில்தான் மிகுதியாக விளைகிறது. அதைத் தவிர, நல்ல முத்து, தந்தம், பட்டுத் துணி, கங்கை வெளியிலிருந்து கொண்டுவந்த இலாமிச்சை, உள்நாட்டி

லிருந்து கொண்டு வந்த மலபத்திரம், பலவகைப் பட்ட மணிக் கற்கள் (முக்கியமாக, கோயம்புத்தூரிலிருந்து வந்த இளம் பச்சைக் கல்—அதனை ரோமானியர்கள் பெரிதும் விரும்பினர்கள்.) வைரம், நீலமணி, ஆமையோடு, கிரைசேத் தீவிலும் தமரிக்கக் கரையி லிருந்த தீவுகளிலும் கிடைத்த பொருள்கள் ஆகியவையெல்லாம் ஏராளமாக ஏற்றுமதியாயின. [1]ஹிப்பாலஸ் என்னும் எகிப்திய மாலுமி பருவக் காற்றின் தன்மைகளைக் கண்டுபிடித்த பின்னர் இந்த வாணிகம் மிகவும் பெருகியது. அவர் குறிப்பிடுகின்ற ஏனைய தென்னிந்தியத் துறைமுகங்களை அவர் எழுதியிருக்கிற வரிசையிலேயே கீழே தருகிறோம். பலிட்டா (வர்க்கலை)—கரை யோரத்தில் ஒரு நல்ல துறைமுகத்தையுடைய கிராமம்; கொமரி—ஒரு நல்ல துறைமுகம், யாத்திரையிடம்; கொல்சி (கொற்கை)—அங்கேதான் பாண்டிய நாட்டைச் சேர்ந்த முத்துக் குளிக்கும் இடமிருக்கிறது; தண்டனை பெற்ற குற்றவாளிகள் முத்தெடுத்தார்கள்; கமரா (காவிரிப் பூம்பட்டினம்); பொதுக்கா (புதுச்சேரி—அரிக்கமேடு); சொபட்மா (மரக்காணம்). கீழ்க்கடற் கரையில் வழக்கிலிருந்த நாவாய்கள் மூன்று வகைப்படும்: கீழ்க் கடற்கரை நாடுகளைச் சேர்ந்தவையும் கரையோரமாகவே சென்றவையுமான கப்பல்கள்; தனித்தனி மரத் துண்டுகளை ஒன்ருகப் பிணித்துச் செய்யப்பட்டவையும் சங்கரா என்று பெயர் பெற்றவையுமான பெரிய கப்பல்கள்; கொலந்தியா என்று பெயருடையவையும் கங்கைக்கும் கிரைசேயிக்கும் சென்று வந்த வையுமான மிகப் பெரிய கப்பல்கள். அவர் உறையூரையும் (அர்கரு) குறிப்பிடுகிருர். கீழ்க் கடற்கரையில் எடுத்த முத்தெல்லாம் அந்த ஊருக்குத்தான் சென்றன. அங்கே அர்கரிட்டிக் என்னும் மஸ்லின் துணி ஏற்றுமதியாகியது. கீழ்க் கடற்கரைத் துறைமுகங்களைப் பற்றி அவர் மேலும் பின்வருமாறு கூறுகிருர்: 'தமிரிக்காவில் உற்பத்தியாகும் எல்லாப் பொருள் களும் இத் துறைமுகங்களில் இறக்குமதியாகின்றன. எகிப்தி லிருந்து எந்தச் சமயத்தில் எத்தனை பொருள்கள் வந்தாலும் அவற்றில் மிகப் பெரும் பகுதி இந்தத் துறைமுகங்களுக்குத்தான் வருகின்றன.' மசாலியா (ஆந்திரா)வில் ஏராளமான மஸ்லின் துணி உற்பத்தியாயிற்றென்றும், அதற்கு வடக்கிலிருந்த தொசரனே என்னும் இடத்தில் கிடைத்த பொருள்களுள் தந்தம் தனிச் சிறப்புடையதென்றும் அவர் கூறுகிருர். (தொசரனே என்பது ஒரிசாவிலுள்ள தசார்ண என்னும் இடமாகும்.)

[1] அதற்குமுன், சிறிய கப்பல்கள் கரையோரமாகச் சென்றன. அப்படியும் அவை பல இன்னல்களுக்குட்பட்டன. பருவக் காற்றின் இயல்புகள் தெரிந்த பின்னர்ப் பெரிய கப்பல்கள் நடுக் கடலில் பயணஞ் செய்தல் எளி தாயிற்று.

நீரோ[1] ஈறாக ஆட்சி செய்த எல்லா ரோமானியப் பேரரசர்களும் அடித்து வெளியிட்ட ஏராளமான பொன் வெள்ளி நாணயங்கள் தமிழகத்தின் உள்நாட்டுப் பகுதிகள் பலவற்றிலும் கிடைத்திருப்பதிலிருந்து தமிழகத்துக்கும் ரோமுக்கும் நடைபெற்ற வாணிகம் எவ்வளவு விரிவாக இருந்த தென்பதையும் தமிழகத்தில் ரோமானியர் பலர் அந்தக் காலத்தில் வாழ்ந்து வந்தார்களென்பதையும் நாம் அறிகிறோம். மேலும், அந்த வாணிகம் எப்போது தொடங்கியது, எப்போது உச்சநிலையடைந்தது, எப்போது குறையத் தொடங்கியது என்பன போன்ற செய்திகளையும் நாம் அந்த நாணயங்களின் வாயிலாக அறிகிறோம். அந்த வாணிகம் அகஸ்டஸ் காலத்திற்கு முன்னரே தொடங்கியிருக்கக் கூடுமெனினும், வியக்கத் தக்க முறையில் ஏராளமாக நமக்குக் கிடைத்திருக்கிற அந்தப் பேரரசனுடைய நாணயங்கள் அவன் காலத்தில் அந்த வாணிகம் நடைபெற்றது என்பதை உறுதிசெய்கின்றன. அதுபோலவே டைபீரியஸ் காலத்து நாணயங்களும் நமக்குக் கிடைக்கின்றன. அகஸ்டஸ் காலத்தில் பாண்டி நாட்டுத் தூதர் ரோம் நகரிலிருந்தனர். ஆனாலும் அப்போது நடைபெற்ற வாணிகம் அவ்வளவு விரிவானதன்று; பொருளாதாரத் துறையிலும் அது அவ்வளவு முக்கியமானதன்று. வெகுவிரைவில் அவ் வாணிகம் எதிர்பாராத அளவில் பெருகியது. மேலும், சுகபோகப் பொருள்களில் மட்டும் முன்பு அவ்வாணிகம் நடைபெற்றதற்கு மாறாக, வேறு பல பொருள்களும் அதில் இடம் பெற்றன. அதுவரையில் தமிழ் நாட்டின் எல்லைக்குள் அடங்கியிருந்த அந்த வாணிகம் நீரோவின் மறைவுக்குப் பின் இந்தியக் கடற்கரை முழுதும் சமமாகப் பரவத் தொடங்கியது. அன்றியும், பணம் கொடுத்துப் பொருள்களை வாங்கலும் விற்றலும் செய்வதற்கு மாறாகப் பண்டமாற்று முறை வழக்கிற்கு வந்தது. இந்தச் செய்தியை நீரோவுக்குப் பின்வந்த பேரரசர்களின் நாணயங்கள் அவ்வளவாகக் கிடைக்காததிலிருந்து நாம் அறிகிறோம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில், ரோமானியப் பேரரசின் அதிகாரத்திற்குட்பட்ட எகிப்திய கிரேக்கர்கள் இந்தியாவுடன் செய்துவந்த வாணிகம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சுருங்கியது. அது வரையில் அவர்கள் கையிலிருந்த அந்த வாணிகம் அரேபியர் கைக்கும், அதைவிட முக்கியமாக, கிழக்காபிரிக்க மக்களான ஆச்சுமைட்டுகள் கைக்கும் மாறியது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டாண்டி நோப்பிலில் முன்னணிக்கு வந்த போது ஒரு புதுக் காலமே தொடங்கியது. ரோமானிய

[1] நீரோ கி.பி. 54 முதல் 68 வரையில் ஆட்சி செய்த ரோமானியப் பேரரசன்.

நாணயங்கள் மீண்டும் தென்னிந்தியாவுக்கு வந்தன. ஏனைய நாட்டுத் தூதர்களோடு மாலத்தீவு இலங்கையாகிய நாடுகளின் தூதர்களையும் கான்ஸ்டன்டைன் தன் அவைக்கு வரவேற்றான். அந்த நேரத்தில் இந்தியப் பெருங்கடல் வாணிகத்தில் இலங்கை முக்கியமான இடத்தைப் பெறத் தொடங்கியது. ஆனால், பைஜாண்டிய காலத்தில் நடைபெற்ற வாணிகம் மிக விரிவானது. அப்போது ரோமானியப் பேரரசின் செல்வத்தில் பெரும்பகுதி இந்தியாவுக்கு வந்துவிட்டது. அதனால், அந்த வாணிகத்தை ரோமில் அப்போது பணங் கொடுக்கல் வாங்கல் செய்த வணிகர் மட்டுமன்றி அறநெறி வகுத்த சான்றோரும் எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். 'பழைய ரோமானியப் பேரரசின் வாணிகம் பல கிளையுடையது. வணிகர்களோடு சேர்ந்து திரை கடலோடியவர்களுள் பலர் புதிய நாடுகளைக் கண்டுபிடிப் பதற்கான ஆய்வுப் பயணத்தை மேற்கொண்டனர். மேலும், பலர் புதிய நாடுகளிற் குடியேறும் நோக்கத்துடன் அந்தப் பயணங்களில் சேர்ந்து கொண்டனர். இவ்வாறு வாணிகம் புதிய நாடுகளைக் கண்டுபிடித்தல், அங்குக் குடியேறுதல் முதலிய பல நோக்கங்கள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. ஷாப் என்பவர் பின்வருவாறு கூறுகிறார். 'கிறிஸ்து சகாப்தத் திற்கு முன்னும் பின்னும் பலமுறை இடம் பெயர்ந்த இந்தியர்கள் இந்தோ சீனாவுக்குச் சென்று குடியேறியது, தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த பல துறைமுகங்கள் தூரக் கிழக்கு நாடுகளோடு நடந்த வாணிகத்தின் மையங்களாக இருந்தன என்னும் கருத்துக்குப் போதுமான சான்றாக இருக்கிறது. அந்த வாணிகம் எகிப்துடன் நடந்த வாணிகத்தைவிட விரிவானது. எகிப்திலிருந்து வந்த கப்பல்களைவிட அதிகமான கப்பல்கள் அந்தத் துறைமுகங்களில் இருந்தன. மேலும் அவை எகிப்தியக் கப்பல்களைவிடப் பெரியவையாகவும் இருந்தன. இந்த உண்மையைப் பெரிப்ளஸ் கூற்றும் வலியுறுத்துகிறது.' நீண்ட காலம் அடங்கியிருந்த சோழர்கள் மீண்டும் கி.பி. பத்து பதினொன்றாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் தலைசிறந்த இடத்தை வகித்தார்கள். கூம்பியிருந்த தமிழர்களுடைய கடற் பயண ஆற்றல்கள் மீண்டும் மலர்ந்தன. அப்போதிருந்த சாதகமான சூழ்நிலையில் தமிழ் மக்கள் முன்பு என்றும் செய்யாத அருஞ் செயல்களைச் செய்து மீண்டும் தங்கள் கடல் வாணிகத்தையும் ஆதிக்கத்தையும் நிலை நாட்டினார்கள்.

சங்ககாலத்தில் உள்நாட்டு வாணிகமும் ஓங்கியிருந்தது. வணிகர்கள் தங்களுடைய வண்டிகளிலும் பொதிமாடுகளின்மீதும் பொருள்களை ஏற்றிக்கொண்டு கூட்டங் கூட்டமாகச் சாலைகளிற்

சென்ற வண்ணம் இருந்தார்கள். அவர்கள் ஊரூராகவும் சந்தை சந்தையாகவும் சுற்றித் தங்கள் சரக்குகளை விற்பனை செய்தார்கள். உப்பு முக்கியமான வாணிகப் பொருளாய் இருந்தது. உப்பு வாணிகர்கள் உப்பு மூட்டைகளையும் தங்கள் குடும்பத்தினரையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு ஊரூராகச் சென்றார்கள். வழியில் அச்சு முறிந்துவிட்டால் பயன்படக்கூடிய மாற்று அச்சுகளையும் கையோடு எடுத்துச் சென்றார்கள். பண்டமாற்றுமுறை பெரு வழக்காயிருந்தது. எடுத்துக்காட்டாக, தேனையும் கிழங்கையும் கொடுத்து மீன் எண்ணெயையும் கள்ளையும் வாங்கிக் கொள்ளலாம். அதுபோலவே, கரும்பையும் அவலையுங் கொடுத்து மானிறைச்சியையும் சாராயத்தையும் வாங்கிக் கொள்ளலாம். (முசிறியில் நெல்லை வாங்கிக் கொண்டு மீனை விற்றார்கள்.) பயிர்த் தொழிலே நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய இடத்தை வகித்தது. அந்தத் தொழிலின் மிகப் பெரும்பாலான பணிகளைப் பெண்கள் செய்தார்கள். அவர்கள் கடைசியர் என்ற பெயருடையவர்கள். கடைசியர் என்றால் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கள் என்பது பொருள். அடிமைகளுக்கும் அவர்களுக்கும் வேறுபாடில்லை என்றே கூறலாம். நாட்டின் விளைநிலத்தில் மிகப் பெரும் பகுதி வேளாளர்களுக்குச் சொந்தமாய் இருந்தது. பயிர்த் தொழிலாளர் என்னும் தொடர் அவர்களுக்குத்தான் பொருந்தும். அவர்கள் சமுதாயத்தின் உயர்ந்த படியில் இருந்தார்கள். அவர்களுள் பணக்காரராயிருந்தவர்கள் தாங்களே நிலத்தை உழுவதற்கு மாறாகக் கூலியாட்களை வைத்து எல்லா வேலைகளையும் செய்துகொண்டார்கள். நிலக்கிழார்களாக இருந்ததோடு அவர்கள் நிருவாகத்திலும் படைத்துறையிலும் அரசு அலுவலர்களாகப் பணியாற்றினார்கள். சோழ நாட்டில் அவர்கள் வேள், அரசு ஆகிய பட்டங்களையும் பாண்டி நாட்டில் காவிதி என்னும் பட்டத்தையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் அரச குடும்பத்தினரோடு திருமணத் தொடர்பு உடையவர்களாயிருந்தது மட்டுமன்றி, அரசனோடு போருக்குச் செல்லும் கட்மையையும் அவனோடு வேட்டைக்குச் செல்லுதல், விருந்துண்ணல் முதலிய உரிமைகளையும் உடையவர்கள். செல்வச் சிறப்பில்லாத வேளாளர்கள் நிலத்தில் வேலை செய்வதைக் குறைவாகக் கருதவில்லை. கூலிக்குப் போகாமல் அவர்கள் தங்களுடைய நிலங்களிலேயே உழைத்தார்கள். உழவர்கள் ஏனைய நாடுகளிலும் அப்படித்தானே செய்கிறார்கள்? நூற்றலும் நெய்தலும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. பட்டு நெசவும் அத்தகைய நிலையில் இருந்திருக்கக் கூடும். இன்று போலவே அன்றும் 'நூல் நூற்றல் பெண்களின் வேலையாய் இருந்தது. வீட்டு வேலை

களோடு அவர்கள் அந்த வேலையையும் செய்தார்கள். சிக்கலான ஒப்பனை முறைகளில் நெய்த நூலாடையையும் பட்டாடையையும் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. உறையூர் நூலாடைக்கு மிகப்பெரியமையமாக இருந்தது என்று பெரிப்ளஸ் குறிப்பிடுகிறது. பாம்புரி போன்ற துணியும் பாலாவி போன்ற துணியும் நெய்யப்பட்டன என்றும், துணிமிக மெல்லியதாயிருந்ததால் நூலிழை கண்ணுக்குத் தெரியவில்லை என்றும் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. கத்தரிக்கோலையும் தையல் ஊசியையும் சங்ககால மக்கள் பயன்படுத்தினார்கள். அவற்றை மயிர் வெட்டுவதற்கும் ஆடை தைப்பதற்கும் உபயோகித்தார்கள். தகரம் என்ற ஒருவகை நறுமண மயிர்ச்சாந்தையும் அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சமயத் துறையிலும் நன்னெறியிலும் வட நாட்டுக் கருத்துகளின் செல்வாக்கை மிக அதிகமாகக் காண்கிறோம். விருந்தினர் விடைபெற்றுச் செல்லும் போது அவர்களோடு சிறு தொலைவு நடந்து அவர்களை வழியனுப்பும் வழக்கம் அந்தக் காலத்தில் இருந்தது. தன்னிடம் விடைபெற்றுச் சென்ற ஒரு விருந்தினருடன் கரிகால் பெருவளத்தான் ஏழடி நடந்து சென்று பால் வெள்ளை நிறமுடைய நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் ஏறுமாறு அவரை வேண்டினான். பசுவைக் கொல்வது, கருவைச் சிதைப்பது, பார்ப்பானைக் கொல்வது ஆகிய செயல்களை மிகப் பெரிய பாவமாக மக்கள் கருதினார்கள். நன்றி மறத்தலை அவற்றைவிடக் கொடிய பாவமாகக் கருதினார்கள்.

இறந்து போனவர்களுடைய உடலைப் புதைப்பதும் உண்டு; சுடுவதுமுண்டு. சாம்பலையும் உடலையும் தாழியிலிட்டுப் புதைப்பதும் உண்டு; அப்படியே புதைப்பதும் உண்டு. தன்னுடைய கணவன் உடலைப் புதைப்பதற்கு முன்னே தருப்பைப் புல்லின் மீது கிடத்தப்பட்ட அந்த உடலுக்கு மனைவி சோற்றுண்டை ஒன்றைப் படைப்பது வழக்கம். ஈமச் சடங்கில் புலையனுக்கும் பங்கிருந்தது. உடன்கட்டையேறும் பழக்கமும் இருந்தது. ஆனால், எல்லாப் பெண்களும் அவ்வாறு செய்யவில்லை. உடன்கட்டையேறும் பெண்ணின் கற்பையும் மனத் திண்மையையும் ஊரார் பாராட்டினர் என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்த வழக்கத்திற்கு ஊக்கமளிக்கவில்லை. அதனால், அதனை வற்புறுத்தவில்லை என்பது சொல்லாமலே விளங்கும். மிக நல்ல மனைவி குளிர்ந்த நீரையுடைய குளத்தில் குளிப்பதற்கு இறங்குவதைப்போல ஈம எரியில் புகுவாள்!

சங்ககாலத்து அரசர்கள் ஏராளமான பொருளைச் செலவு செய்து பல வேள்விகளைச் செய்தார்களென்பதைச் சங்க நூல் களிற் காண்கிறோம். அதனால், வேத மதம் தமிழகத்தில் அந்தக் காலத்திலேயே வேரூன்றி விட்டதென்பது தெளிவாகத் தெரி கிறது. வேதமோதுவதிலும் மதச் சடங்குகளைச் செய்வதிலும் தம் காலத்தைச் செலவிட்ட பார்ப்பனர் தமிழகச் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தார்கள். சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவனுடைய வாழ்க்கையைப்பற்றிய பல விவரங்களை ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் புறப்பாட்டு 166-ல் குறிப்பிடுகிறார். வேத மதத்தைப் பின்பற்றியவர்கள் வேறு சமயங்களைச் சேர்ந்தவர் களோடு அடிக்கடி வாதஞ்செய்ய வேண்டியதாயிருந்தது. அத்தகைய வாதங்களில் ஈடுபட்டோர் தத்தம் கொடிகளைப் பறக்கவிட்டுக் கைகளை ஆட்டியாட்டிப் பேசிய செய்திகள் பலவற்றை நாம் சங்க நூல்களில் படிக்கிறோம். வேறு சமயங்கள் யாவை என்பது கூறப்படவில்லையெனினும், அவை புத்த மதமும் சமண மதமுமாகத்தான் இருக்க வேண்டும். அடுத்த காலத்தில் அந்த இருமதங்களும் தமிழகத்தில் நல்ல செல்வாக்கைப் பெற்றன. இந்து மதந்தான் சங்ககாலத்தில் தலையாய நிலையைப் பெற்றிருந்தது. சுப்பிரமணியன் என்று வழங்கிய முருகக் கடவுளின் வழிபாட்டையும், அந்தக் கடவுளின் அருஞ்செயல்களைப்பற்றிய புராணக் கூற்றுகளையும் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. சிவன், பலராமன், திருமால், கிருஷ்ணன், அர்த்தநாரீசுவரன், அனந்தசுவாமி ஆகிய இந்துக் கடவுள்களைப் பற்றியும் சங்க நூலகள் குறிப்பிடுகின்றன. துளசியும் மணியும் கொண்டு திருமாலை வழிபட்ட விவரங்களைப் பதிற்றுப்பத்தில் காண்கிறோம். கடவுளின் அருளைப் பெறுவதற் காகக் கோயிலில் அமர்ந்து பட்டினியிருக்கும் வழக்கமும் சங்க காலத்தில் இருந்தது. பெண்கள் தங்கள் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு மாலையில் கோயிலுக்குச் சென்று கும்பிட் டார்கள். துறவிகளுக்கு நல்ல மதிப்பிருந்தது. திரிதண்டித் துறவிகளைப்பற்றிய பல குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இருக்கின்றன. முருக வழிபாடு தமிழகத்தில் மிகப் பழமை யானது. பழந்தமிழ் மக்களின் மரபுவழி வந்த வேலனாடல் என்னும் களிவெறியாட்டமும் அந்தக் காலத்தில் வழக்கில் இருந்தது. புகாரில் ஆண்டுதோறும் இந்திரவிழா நடந்தது. மிகப் பழங்காலத்திலிருந்தே ஆடலும் பாடலும் மதச் சடங்கு களோடு பின்னிப் பிணைந்திருந்தன என்பதைச் சங்ககாலத்திற் குப் பிறபட்ட காலத்தைச் சேர்ந்த காப்பியங்களின் வாயிலாக

[1] சிலப்பதிகாரத்தில் வருகின்ற வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை ஆகியவற்றைக் காண்க.

அறிகிறோம். வேடர் செய்த கொற்றவை வழிபாடும், ஆய்ச்சியர் செய்த கிருஷ்ண வழிபாடும், குறவர் செய்த முருகர் வழிபாடும் இந்தக் கருத்துக்கு வலிமையான ஆதாரங்களாக இருக்கின்றன. ஒரு சரஸ்வதி கோயிலையும் சைவ சமயத்தின் ஒரு பிரிவினரான காபாலிகரையும் மணிமேகலை குறிப்பிடுகிறது. இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருதல், வினையின் பயன், ஊழின் வலி ஆகிய கோட்பாடுகள் இந்தியாவில் தோன்றிய எல்லா மதங்களுக்கும் பொதுவான அடிப்படையாக இருக்கின்றன. தமிழ் மக்களும் அவற்றை ஏற்றுக் கொண்டார்களென்று பொதுவாகக் கூறலாம். உலக இன்பங்கள் அனைத்தையும் நன்றாகத் துய்த்து வாழ்வது விரும்பத் தக்கது என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையைச் சங்க நூல்களில் நாம் காண்கிறோம். ஆனால் நாளடைவில் அந்த நம்பிக்கை நலிந்து தமிழ் மக்கள் மனத்தில் சோர்வு வாதம் இடம்பெறத் தொடங்கியது. அதற்குக் காரணம் புத்த மதந்தான் என்பது தெளிவு. உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்றும் அந்தத் துன்பத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமானால் வாழ்க்கையின் மீதிருக்கிற ஆசையை அறுக்க வேண்டும் என்றும் அந்த மதம் வற்புறுத்தியது. துன்பந் தோய்ந்த இந்த மனநிலையைச் சங்க காலத்தின் இறுதியில் தோன்றிய சில பாடல்களிலேயே நாம் காண்கிறோம். அந்த மனப்பான்மை மணிமேகலையில் முழு உருவமும் உரமும் பெற்றது. ஒவ்வொருவருக்கும் உறுதியாக வரவிருக்கிற சாவின் கொடிய தன்மையை உணர்ந்து உள்ளத்தைத் தியானத்தில் ஈடுபடுத்தாமல் நிலையில்லாத உலகந்தருகிற சிற்றின்பத்தில் கண்மூடித்தனமாகக் காலத்தைக் கழிக்கும் கசடர்களை மணிமேகலை மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

சங்ககாலத்திற்குப்பின் தமிழக வரலாற்றில் இருள் கவிந்தது. அந்த இருள் மூன்று நூற்றாண்டுக்குமேல் தொடர்ந்திருந்தது. அந்த நீண்ட இரவிற்குப் பின், கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில், தமிழக வரலாற்றில் மீண்டும் ஒளி தோன்றியது. கண்ணைக் கசக்கிக்கொண்டு நமது பார்வையை நம்மைச் சுற்றிலும் ஓட்டும்போது ஒரு கசப்பான உண்மை நமக்குப் புலனாகிறது. களப்பிரர் என்ற ஒரு மக்கட் கூட்டத்தினர் தமிழகத்தைக் கைப்பற்றி அங்கே நெடுங்காலமாய் நிலைத்திருந்த அரசியல் அமைப்பை அழித்துவிட்டார்கள் என்றும், யாரென்றே தெரியாத அவர்கள் தமிழ் நாட்டின் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் பகைவர்களாய் இருந்தார்கள் என்றும் நாம் அறிகிறோம். இறுதியில் அவர்களைப் பாண்டியர்களும் பல்லவர்களும் பாதாமிச் சாளுக்கியர்களும் எதிர்த்தார்கள். அதனால் ஏற்பட்ட போர்களில் களப்பிரர் தோற்றழிந்தனர். அதன் பிறகுதான் தமிழ

கத்தில் மீண்டும் பழைய அரச மரபுகள் தலையெடுத்தன, தமிழ் மக்களின் ஆட்சி மறுமலர்ச்சி பெற்றது. களப்பிரரைப்பற்றி நமக்குத் தெளிவான செய்தி ஒன்றுந்தெரியாது. களப்பிர குலத்தைச் சேர்ந்த அச்சுதவிக்கந்தன் என்ற ஓர் அரசன் காலத்தில் புத்த மடங்களுக்கும் புத்தமத நூலாசிரியர்களுக்கும் சோழ நாட்டில் நல்ல ஆதரவு கிடைத்ததென்று புத்தமத நூலகள் சிலவற்றின் வாயிலாக நாம் அறிகிறோம். பிற்காலத்தில் தோன்றிய நூல்களிலுள்ள மரபுவழிச் செய்திகள் சேர சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்களையும் அந்த அரசன் சிறையிலடைத்து வைத்திருந்தான் என்று கூறுகின்றன. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் சமண மதத்தைச் சேர்ந்தவருமாகிய அமிதசாகரர் என்பவர் எழுதிய தமிழிலக்கணத்தில் அச்சுதனைப் பற்றிய சில பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன. அச்சுதனே புத்த மதத்தைச் சேர்ந்தவனாக இருக்கக்கூடும். தமிழகத்தில் நடந்த அரசியல் புரட்சி மதவேறுபாட்டினால் ஏற்பட்ட பகைமையின் அடிப்படையில் தோன்றியிருக்கலாம். எது எப்படியிருந்தாலும், களப்பிரர்கள் கொடுங்கோலர்கள் என்றும், அவர்கள் பல அதிராஜர்களை அழித்துவிட்டார்கள் என்றும், பிரமதேய உரிமைகள் பலவற்றை ரத்து செய்து விட்டார்கள் என்றும் வெகுவாகத் தூற்றப்படுகிறார்கள். தமிழகத்தில் புகுந்த களப்பிரர்களுக்கும் அவர்கள் பிடித்துக் கொண்ட இடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் எவ்விதமான இனிய தொடர்பும் ஏற்படவில்லை. அதற்கு மாறாகத் தீராத பகைமையே வளர்ந்தது. அந்த அரசியல் தகர்வில் சோழர்கள் தமிழ் நாட்டிலிருந்து ஒரேயடியாக மறைந்துவிட்டார்கள். ஆனால், அந்தக் காலத்தின் இறுதியில் சோழ மரபின் ஒரு கிளையைச் சேர்ந்த தெலுகுச் சோடர்கள் ராயலசீமையில் ஆட்சி செய்து வந்தார்களென்பது தெரிகிறது. அவர்களுடைய ராஜ யத்தைப்பற்றிக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார்.

சோழ அரச மரபை அழித்த அந்த அரசியல் புரட்சியினால் சோழ நாட்டிற்கும் தீமை ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் அதைப்பற்றி நாம் தெரிந்து கொள்வதற்குச் சான்றேதும் கிடைக்கவில்லை. ஆனால், பிற்காலத்தில் எழுதப்பெற்ற 'கேரளோற்பத்தி,' 'கேரள மகாத்மியம்' என்னும் நூல்களில் சோழர்களைப்பற்றிய சில கட்டுக் கதைகள் இருக்கின்றன. அந்தக் கதைகளின்படி கேரள நாட்டை ஆள்வதற்கு அண்டை நாடுகளிலிருந்து அரசர்களைக்கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டதென்றும், அந்த அரசர்கள் 'பெருமாள்' என்னும்

பட்டப் பெயரை வைத்துக்கொண்டார்களென்றும் அறிகிறோம். வைணவ மதப் பெரியாரான குலசேகர ஆழ்வார் அத்தகைய பெருமாள்களில் ஒருவராக இருக்கக்கூடும். அவருடைய பாடல்களில் தாம் சேர சோழ பாண்டிய நாடுகளுக்கும் கொங்கு நாட்டிற்கும் கொல்லி மலைக்கும் அரசர் என்று அவரே கூறிக் கொள்கிறார். அவர் வாழ்ந்த காலத்தை உறுதியாக நிர்ணயிக்க இயலாது. எனினும், ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட எந்தக் காலத்திலும் சோழ பாண்டிய நாடுகள் அவருடைய ஆட்சியிலிருந்திருக்க மாட்டா என்னும் காரணத்தால் அவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில்தான் வாழ்ந்திருக்க வேண்டுமென்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். ஆனால், குலசேகர ஆழ்வார் கூற்று வெறும் செய்யுள் மரபைச் சேர்ந்த ஒரு கூற்று என்றும், அவர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்றும் கருதுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

புத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்த அந்த இருண்ட காலத்தில் (அந்தக் காலத்தில் சமண மதமும் செல்வாக்குடன் இருந்திருக்கலாம்) பல தமிழ் நூல்கள் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மிகப் பெரும்பாலானவை அந்தக் காலத்தில் எழுதப்பட்டவை. அது போலவே, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களும் அப்போது தோன்றியவையே. அந்த நூல்களை எழுதிய ஆசிரியர்களுள் பலர் புத்த சமண மதங்களைச் சேர்ந்தவர்.

## BIBLIOGRAPHY

K. Gopalachari : 'The Early History of the Andhra Country' (Madras, 1941)

B. L. Rice : 'Mysore and Coorg from Inscriptions' (London, 1909)

'Sanga Ilakkiyam' (in Tamil) Madras 1940.

K. A. N. Sastri: 'Foreign Notices of South India' (Madras, 1939)

K. A. N. Sastri : 'The Colas', Vol, I (Madras, 1936)

R. E. M. Wheeler, A. Ghosh and Krishna Deva : 'Arikamedu : an Indo-Roman Trading-Station on the East Coast of India' (Ancient India, No. 2, July 1946)

# 8. முப் பேரரசுகளின் மோதல்

பொது இயல்புகள்—சாளுக்கியர்கள் : முதலாம் புலிகேசன், முதலாம் கீர்த்திவர்மன், மங்களேசன், இரண்டாம் புலிகேசனும் அவனுடைய வெற்றிகளும்—பல்லவர்கள் : சிம்ம விஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன்—சாளுக்கிய பல்லவப் போர்கள்—முதலாம் நரசிம்ம வர்மன், மாமல்லன்—இரண்டாம் புலிகேசனுடைய சாவும் அதற்குப் பின் ஏற்பட்ட குழப்பமும்—மாமல்லனுடைய அருஞ் செயல்கள்—இரண்டாம் மகேந்திரவர்மன், பரமேசுவரவர்மன்—பாண்டியர் : கடுங்கோன், மாறவர்மன், அவனி சூளாமணி, சேந்தன், அரிகேசரி மாறவர்மன்—இரண்டாம் விக்கிரமாதித்திய சாளுக்கியன்—அரேபியர் படையெடுப்பைத் தடுத்தல்—பல்லவப் போர் மீண்டும் மூளுதல், இரண்டாம் நரசிம்மவர்ம ராஜசிம்மன், இரண்டாம் பரமேசுரவர்மன், இரண்டாம் நந்திவர்மன்—பாண்டியன் கோச்சடையன்; முதலாம் மாறவர்ம ராஜசிம்மனும் இரண்டாம் நந்திவர்மனோடு அவன் செய்த போரும்—இரண்டாம் விக்கிரமாதித்தியன் காஞ்சியின்மீது படையெடுத்தல் - முதலாம் ராஜசிம்ம பாண்டியன் இரண்டாம் கீர்த்தி வர்மனைத் தோல்வியுறச் செய்தல்—சாளுக்கியர் வீழ்ச்சியும் ராஷ்டிர கூட வமிச தந்தி துர்க்கன் உயர்வும்—பாண்டிய ஆதிக்கத்தைக் கட்டுக்குள் நிறுத்தும் முயற்சியில் இரண்டாம் நந்திவர்மன் தோல்வி—முதலாம் வரகுணன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்—தந்திவர்மன்—ராஷ்டிரகூட முதலாம் கிருஷ்ணன், இரண்டாம் கோவிந்தன், துருவன், மூன்றும் நந்திவர்மனும் அவன் செய்த போர்களும்—நிருபதுங்கன்—ஸ்ரீமாற பாண்டியனுடைய ஆட்சியின் முடிவு—ராஷ்டிரகூட வமிச முதலாம் அமோக வருஷன்—சேரர் வரலாறு—கலிங்கத்துக் கங்கர்கள்.

ஆட்சியமைப்பு—பொது இயல்புகள்—கிராம சமுதாயம் : சபை, மன்றம்—பெரிய நிருவாகப் பகுதிகள்—மாகாணங்களும் அலுவலர்களும்—நீதி, அரசன், அரசுரிமை—அரச அதிகாரத்தின்மீது கட்டுப்பாடுகள்.


கி.பி. ஆறும் நூற்றாண்டின் இடையிலிருந்து முந்நூறு ஆண்டுக் காலம் பாதாமிச் சாளுக்கியர்களும் காஞ்சிப் பல்லவர்களும் மதுரைப் பாண்டியர்களும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டே யிருந்தார்கள். அவர்கள் ஒருவர் நாட்டை ஒருவர் பிடிப்பதற்காகச் செய்த முயற்சிகளும் அவற்றால் ஏற்பட்ட

மோதல்களுமே அந்த மூன்று நூற்றாண்டுகளின் தென்னிந்திய வரலாற்றேடுகளை நிரப்புகின்றன. அந்த மூன்று பேரரசுகளும் ஆறாம் நூற்றாண்டில்தான் உயர்நிலை யடைந்தன. ஆனால், அவற்றுள் சாளுக்கியப் பேரரசு முதலில் வீழ்ந்தது. ஏனைய இரண்டு பேரரசுகளும் அதற்குப்பின் ஏறக்குறைய நூறு ஆண்டுகள் நிலைத்திருந்தன. தென்னிந்திய அரசியலில் சாளுக்கியர் வகித்த இடத்தை எட்டாம் நூற்றாண்டின் இடையிலிருந்து மானியக்கேட ராஷ்டிரகூடர்கள் பிடித்துக்கொண்டார்கள். அதனால், தென்னிந்திய அரசியல் உலகில் சாளுக்கிய ஆட்சிக் காலத்திலிருந்த நிலையே ஏறக்குறைய மாறுதலில்லாமல் நீடித்தது. பாதாமியில் ஆட்சிசெய்த சாளுக்கிய முதன்மைக் கிளையைத் தவிர அந்த மரபின் இரு வேறு கிளைகள் ஏறக்குறையச் சுயேச்சையாக லாட்டாவிலும் வேங்கியிலும் ஆட்சி செய்தன. வேங்கியில் ஆட்சிசெய்த கிழக்குச் சாளுக்கியர்களும் மைசூரில் ஆட்சி செய்த கங்கர்களும் பேரரசுகள் மூன்றுக்கும் இடையில் நடைபெற்ற போர்களில் சமயத்துக்கேற்றவாறு யாதேனும் ஒரு பேரரசுக்குத் துணை செய்வதன்மூலம் ஏனைய பேரரசுகளோடு போர் செய்தார்கள். அவர்களுடைய துணை வலிமை பல வெற்றிகளுக்குக் காரணமாயிற்று. தமிழ் நாட்டில் சோழர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்களென்று கூறலாம். ஆனால், இப்போது ராயல்சீமா என வழங்கும் தெலுங்கு நாட்டில் சோழ வமிசத்தின் பெயரைத் தாங்கியவர்களும் உறையூரோடு தங்களுக்குத் தொடர்பிருந்தது என்று கூறிக் கொண்டவர்களுமான தெலுகுச் சோடர்கள் ஆட்சி செய்து வந்தார்கள்.

அரசியல் மோதல்கள் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தடையாக நிற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்து மதத்தில் ஒரு பெரிய மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது. அஃதோர் பன்முக வளர்ச்சி இயக்கம். புத்தம், சமணம் ஆகிய மதங்கள் மக்களிடையில் பரவுவதை அது தடை செய்தது. உள்ளத்தையுருக்கும் ஒப்பற்ற பக்திப் பாடல்கள் பல்லாயிரக்கணக்கில் தோன்றின. தத்துவ விசாரணையில் தலைசிறந்த நூல்கள் எழுதப்பட்டன. அந்தப் பக்தி இயக்கத்தின் விளைவாகக் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை முதலியகலின் கலைத்துறைகளில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அந்த இயக்கம் கடல் கடந்த இந்துக் குடியேற்ற நாடுகளுக்கும் பரவியது.

சாளுக்கிய வமிச அரசை நிறுவியவன் முதலாம் புலிகேசன் என்பவன். புலிகேசன் என்னும் சொல்லுக்கு அரியேறு என்று

பொருள் கூறலாம். கி.பி. 543–44-ல் அவன் பாதாமிக்கு அருகி லிருந்த குன்றை ஒரு வலிமைமிக்க அரணாக மாற்றினான். அதன்




**தென்னிந்தியா : கி.பி. 500–800**

பின் அவன் அசுவமேத யாகஞ் செய்து தன் சுயேச்சையை விளம்பரப்படுத்தினான். அந்தக் கோட்டை மலப்பிரபாநதியி லிருந்து மூன்று மைல் தொலைவில் எதிரிகளின் தாக்குதலைச் சமாளிப்பதற்கு ஏற்ற ஓர் உயர்ந்த இடத்தில் அமைந்திருந்தது.

அதற்குக் கிழக்கிலிருக்கும் குன்றுகளில் மகாகூடமும் ஒன்று. அதே திசையில் இன்னுமோர் ஐந்து கல் தொலைவில், மலப்பிரபா நதியின் கரையில், பட்டடக்கல் இருக்கிறது. இன்னுமோர் எட்டு மைல் தொலைவில், அதே நதியின் கரையில், ஐஹோளே என்னும் இடம் இருக்கிறது. அந்த இடங்கள் எல்லாவற்றிலும் சாளுக்கிய ஆதிக்கத்தைக் காட்டுகின்ற கோயில்களும் பொறிப்பு களும் இருக்கின்றன.

முதலாம் புலிகேசனுடைய மகன் முதலாம் கீர்த்திவர்மன் (566–67) பனவாசிக் கடம்பர்களோடும், கொங்கணத்து மௌரியர் களோடும், பஸ்டார் ஜெயப்பூர் முதலிய பகுதிகளில் ஒரு பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்தவர்கள் என்று வரலாற்றாசிரியர்கள் நம்புகிற நள மரபினரோடும் போர்செய்து தன்னுடைய ராஜ்யத் தைப் பெரிதாக்கினான். கொங்கண வெற்றியால் அங்கிருந்த முக்கியமான துறைமுகமாகிய ரேவதித் தீவு (இன்றைய கோவா) வளர்ந்து கொண்டேபோன சாளுக்கிய ராஜ்யத்தின் எல்லைக்குள் வந்தது.

கீர்த்திவர்மன் 597–98-ல் இறந்தான். அப்போது அவ னுடைய மகன் இரண்டாம் புலிகேசன் மிக இளவயதினனாய் இருந்ததால், அவனுடைய சிற்றப்பன் மங்களேசன் என்பவன் அவனுக்காக ஆட்சி செய்தான். ராஜ்யத்தின் எல்லைகளை விரிவாக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்ட மங்களேசன் குஜராத், காண்டேஷ், மாளவம் ஆகிய பகுதிகளில் ஆட்சி செய்துவந்த காலசூரி வமிச அரசன் புத்த ராஜன் மீது படையெடுத்தான். அந்தப் படையெடுப்பும் பெரும்பாலும் சூறையாடும் இயல்புகளைப் பெற்றிருந்தது. ஆனால், அந்தப் படையெடுப்பால் ஏராளமான கொள்ளைப் பொருள்கள் கிடைத்தனவேயன்றி நாட்டின் எல்லை விரிவடைந்த தென்று கூறமுடியாது. ரேவதித் தீவு ஆளுநன் செய்த கலகத்தை மங்களேசன் அடக்கிக் கொங்கணத்தில் மீண்டும் சாளுக்கிய ஆட்சியை நிறுவினான். புலிகேசன் அரசாளும் பருவத்தை அடைந்தபோது மங்களேசன் அவனிடம் அரசாட் சியை ஒப்படைக்காமல் தன்னுடைய மகனையே அரசனாக்கும் நோக்கத்துடன் காலங்கடத்தினான். அதனால் புலிகேசன் பாதாமியிலிருந்து வெளியேறி, தன் சொந்த முயற்சியாலும் உண்மையான நண்பர்களுடைய துணையாலும் ஒரு படையைத் திரட்டி, மங்களேசனோடு போரிட்டு, அவனைக் கொன்று, 609–10-ல் தானே அரசன் என்று விளம்பரப்படுத்தினான். அந்த உள்நாட்டுப் போரின் விளைவாக, சாளுக்கிய அரசின் வலிமை

குறைந்தது; பகைவர்கள் பல திசைகளிலும் கிளம்பினர்கள். ஆனால், இரண்டாம் புலிகேசன் சாளுக்கிய மரபின் மிகச் சிறந்த அரசர்களுள் ஒருவன் என்பதை வெகு விரைவில் மெய்ப்பித்தான். கலகஞ் செய்தவர்களுள் ஒருவனை ஆப்பாயிகன் என்பவனை பீமரதி நதிக்கரையில் நடந்த போரில் புலிகேசன் வென்றான். ஆப்பாயிகனுக்குத் துணைநின்ற கோவிந்தன் புலிகேசனிடம் சரணடைந்தான். பின்னர்ப் புலிகேசன் கடம்பர் தலைநகரான பனவாசிமீது படையெடுத்து வெற்றிபெற்றான். தென்கன்னடத்தில் ஆட்சிசெய்த ஆலுபர்களும் மைசூரில் ஆட்சி செய்த கங்கர்களும் புலிகேசனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். கங்க மன்னன் துர்விநீதன் தன் மகளைப் புலிகேசனுக்கு மணஞ் செய்துவைத்தான். அவளுடைய மகன்தான் முதலாம் விக்கிரமாதித்தியன். வடகொங்கணத்தில் ஆட்சிசெய்த மௌரியர்களுடைய தலைநகரான புரியின்மீது புலிகேசன் படையெடுத்து வெற்றிபெற்றான். அதனால், அவர்கள்மீண்டும் சாளுக்கிய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். (புரி என்னும் ஊர் எலிபெண்டாத் தீவில் இருந்தது. அதற்கு 'மேற்குக் கடலின் திருமகள்' என்ற பெயர் அந்தக் காலத்தில் வழங்கியது.) இவ்வாறு புலிகேசனுடைய படை வலிமையின் புகழ் ஓங்கியது. அதே சமயத்தில் வட இந்தியாவில் அவனுடைய வலிமை பெருகிக் கொண்டு வந்தது. ஹர்ஷனுடைய வலிமைக்கு அஞ்சிய லாடர்களும், மாளவர்களும், குர்ஜரர்களும் தங்களுடைய தற்காப்புக்காக ஒருவர்பின் ஒருவராகப் புலிகேசனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். இவ்வாறு சாளுக்கிய ராஜ்யத்தின் வடஎல்லை ஒரே மூச்சில் மஹீநதி வரையில் சென்று விட்டது. ஹர்ஷன் தக்காணத்தின் மீது படையெடுத்தபோது, புலிகேசன் அவனை நர்மதை நதிக்கரையில் எதிர்த்துப் பெரு வெற்றிபெற்றான். அதன் பயனாக ஹர்ஷனுடைய யானைகள் பலவற்றைப் புலிகேசன் பிடித்துகொண்டான். இந்த ஒன்றுதான் ஹர்ஷன் கண்ட தோல்வி. இத்தனை அருஞ் செயல்களையும் புலிகேசன் தன்னுடைய முதல் மூன்று நான்கு ஆண்டுகளில் செய்துவிட்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின் புலிகேசன் தன்னுடைய தம்பி விஷ்ணுவர்த்தனனுக்கு இளவரசு பட்டங் கட்டி, அவனிடம் தலைநகரை ஒப்படைத்துவிட்டு, கிழக்குத் தக்காணத்தின் மீது ஒரு நீண்ட படையெடுப்பைத் தொடங்கினான். தென்கோசலமும், கலிங்கமும் முதலில் அவனுக்குப் பணிந்தன. அதன்பின் புலிகேசன் பிஷ்டபுரத்தைத் தாக்கி அதனை அடக்கினான். குனாலா ஏரியின் (கொல்லேரி) கரையில் நடந்த கடுமையான போரில் புலிகேசன்

விஷ்ணு குண்டினர்களைத் தோல்வியுறச் செய்தான். அதன் பின்னர் அவன் பல்லவர்களை எதிர்த்தான். சாளுக்கிய பல்லவப் பகையைப் பற்றிக் கூறுமுன், நாம் பல்லவர்கள் எவ்வாறு உயர்வடைந்தார்கள் என்பதைப் பார்ப்போம்.

களப்பிரர்கள் தமிழகத்தில் நுழைந்ததால் ஏற்பட்ட அரசியல் குழப்பம் கி.பி. ஆறும் நூற்றுண்டின் கடைசிக் கால்பகுதியில் தீர்ந்தது. களப்பிரர் ஆட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்த அரசர்கள் காஞ்சிப் பல்லவன் சிம்மவிஷ்ணுவும் மதுரைப் பாண்டியன் கடுங்கோனும் ஆவார்கள். சிம்மவிஷ்ணு சிம்மவர்மனுடைய மகன். சிம்மவர்மனுடைய ஆட்சியின் ஆறும் ஆண்டை சேர்ந்த ஒரு செப்பேடு அண்மையில் கிடைத்திருக்கிறது. அது சமண நிறுவனம் ஒன்றுக்குக் கொடுக்கப்பட்ட மானியத்தைக் குறிப்பிடுகிறது.[1] அந்தச் செப்பேட்டில், அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த சிம்மவர்மனைப் பற்றிய வரலாற்றுச் செய்தி ஒன்றும் இல்லை. ஆனால் அவனுடைய மகன் சிம்மவிஷ்ணுவினுடைய அருஞ்செயல்கள் அதில் இடம் பெறுகின்றன. சிம்மவிஷ்ணு அப்போது இளவரசனுக (யுவ ராஜனுக) இருந்திருக்க வேண்டும். அதனுல் அவன் தான் பல்லவ ஆதிக்கத்தை அந்தக் காலத்தில் உண்மையில் நிறுவியவன் என்று நாம் நம்பலாம். அந்தச் செப்பேட்டின்படி சிம்மவிஷ்ணு இன்னொரு சிம்மவிஷ்ணுவையும் 'பிராஜிஷ்ணு' வமிசத்தையும் அழித்தான் என்பது தெரிகிறது. அந்தச் சிம்மவிஷ்ணு தெலுகுச் சோட மரபைச் சேர்ந்தவனுக இருக்கக்கூடும். பிராஜிஷ்ணு வமிசம் என்றுல் 'ஒளிவிடும் மரபு' என்று பொருள்படும். எனவே, அவர்கள் ஒளியர்களாக இருக்கக்கூடும். சிம்மவிஷ்ணு, களப்பிரர்களை அடக்கியதோடு அமையாமல் காவிரி வரையிலிருந்த நாடு முழுவதையும் கைப்பற்றி, பாண்டியர்களோடும் இலங்கை மன்னனோடும் மோதினுன். அவன் திருமாலின் பக்தன். அவனிசிம்மன் (உலகத்தின் அரியேறு) என்னும் படத்தை அவன் சூடிக்கொண்டான். அவனுடைய உருவமும் அவனுடைய மகன் முதலாம் மகேந்திர வர்மனுடைய உருவமும் மாமல்லபுரத்திலுள்ள வராகக் குகையில் புடைப்போவியங்களாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவன் கி.பி. 560–க்கும் 580–க்கும் இடையில் ஆட்சி செய்தான் என்று நாம் கருதலாம்.

[1] அதே காலத்தைச் சேர்ந்த கங்க மன்னர்களின் செப்பேடு ஒன்று சிம்ம விஷ்ணுவின் தாயார் சமணர்களுக்கு அளித்த மானியம் ஒன்றைக் குறிப்பிடுகிறது.

சிம்ம விஷ்ணுவுக்குப்பின் முதலாம் மகேந்திரவர்மன் பட்டத்திற்கு வந்தான். அவன் ஒரு பல துறை மேதை. போரில் மட்டுமன்றி அமைதியான ஆட்சியிலும் அவன் சிறந்தவன். அவனுக்கு, மத்தவிலாசன், விசித்திர சித்தன், குணபரன் என்பவை போன்ற பல பட்டப் பெயர்கள் இருந்தன. அவன் பல கட்டடங்களைக் கட்டினான்; கவிஞனாயும் இசையறிஞனாயும் அவன் விளங்கினான். அவன் முதலில் சமணனாய் இருந்தான். ஆனால், பின்னர் அவன் சைவசமயத்தைத் தழுவினான். அந்த மனமாற்றத்திற்கு அப்பர் காரணமாயிருந்திருக்கக் கூடும். அவன் கி.பி. 580 முதல் கி.பி. 630 வரையில் ஆட்சி செய்தான். அவனுடைய தந்தையின் ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போல அவனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் பல்லவ ஆதிக்கம் வடக்கில் கிருஷ்ணா நதி வரையிலும் பரவியிருந்தது. அதற்குச் சிறிது வடக்கிலும் பல்லவ ஆதிக்கம் பரவியிருக்கக்கூடும் என்று சொன்னால் அது தவறாக இருக்காது. அந்த வட எல்லையில் கண்டரர், விஷ்ணுகுண்டினர் ஆகியவர்களுடைய ஆட்சி நடைபெற்றது.

கண்டரர், விஷ்ணுகுண்டினர் ஆகியவர்களைத் தோல்வியுறச் செய்தபின் இரண்டாம் புலிகேசன் தன்னுடைய வலிமைக்குப் போட்டியாக வலிமை பெற்றிருந்த முதலாம் மகேந்திர வர்மனோடு பலப்பரிட்சையில் இறங்கினான். அவனுடைய படைகள் பல்லவ நாட்டில் வெகுதூரம் முன்னேறின. காஞ்சிக்குப் பதினைந்து கல் தொலைவிலிருந்த புல்லலூரை அடையும் வரையில் சாளுக்கியப் படைகளை மகேந்திரவர்மன் எதிர்க்கவில்லை. அந்த இடத்தில் சாளுக்கிய, பல்லவப் படைகள் நெருங்கி மோதிக் கைக்கலந்தன. அந்தச் சண்டையின் பயனாக மகேந்திரவர்மன் காஞ்சிபுரத்தைக் காப்பாற்றினான். ஆனால், பல்லவ ராஜ்யத்தின் வட மாகாணங்கள் சாளுக்கியர் கைக்குச் சென்றுவிட்டன. இதுவே சாளுக்கியர்க்கும் பல்லவர்க்கும் ஏற்பட்ட நீண்ட பகைமையின் தொடக்கம்.

சுமார் 621–ல் புலிகேசன் பாதாமிக்குத் திரும்பினான். அதன் பின் அவன் விஷ்ணு வர்த்தனனை ஆந்திர நாட்டின் அரசப் பிரதிநிதியாக நியமித்து ஆந்திர நாடு முழுவதையும் சாளுக்கிய ஆட்சியின் கீழ்க்கொண்டு வரும் வேலையை முடிக்குமாறு பணித்தான். அவனும் கி.பி. 631–க்குள் அப்பணியை முடித்தான். அதன் பின் தன் அண்ணன் இசைவு பெற்று, அவன் கிழக்குச் சாளுக்கிய வமிசத்தை நிறுவினான். அம் மரபினர் சுமார் ஐந்நூறாண்டு தெலுங்கு நாட்டில் ஆட்சி செய்தனர்.

புலிகேசன் 625–26-ல் பாரசீக மன்னனை இரண்டாம் குஸ்ரு என்பவனுடைய அவைக்குத் தன் தூதன் ஒருவனை அனுப்பினான். பாரசீக மன்னனும் புலிகேசன் அவைக்குத் தன்னுடைய தூதனை அனுப்பியிருக்கக்கூடும்.

புகழார்வத்தால் தூண்டப்பட்ட புலிகேசன் பல்லவர்கள்மீது முழு வெற்றியடையும் நோக்கத்துடன் மீண்டும் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தான். அப்போது மகேந்திரவர்மனுடைய மகன் முதலாம் நரசிம்மவர்மன் (மாமல்லன்) பல்லவ நாட்டை ஆண்டுவந்தான் (கி.பி. 530 - 668). பல்லவ ஆதிக்கத்திற்கு அடங்கிய சிற்றரசர்களாக ராயல சீமையில் ஆண்டு வந்த பாணர் களைத் தாக்கியதன்மூலம் புலிகேசன் தன் படையெடுப்பைத் தொடங்கினான். அவர்களைத் தோல்வியடையச் செய்தபின் அவன் பல்லவர்களுடைய நேர் ஆட்சியிலிருந்த நாட்டில் நுழைந்து மீண்டும் காஞ்சீபுரத்துக்கு அருகில் வந்துவிட்டான். ஆனால், நரசிம்மவர்மன் சாளுக்கியர்களைப் பல சண்டைகளில் வென்றான்; அப்படி நடந்த சண்டைகளுள் ஒன்று காஞ்சிக்குக் கிழக்கே இருபது கல் தொலைவிலுள்ள மணிமங்கலத்தில் நடந்தது. அந்தச் சண்டைகளில் இலங்கை அரச மரபைச் சேர்ந்த மானவர்மன் என்பவன் நரசிம்மவர்மனுக்குப் பெருந்துணையா யிருந்தான். (பின்னர் மானவர்மன் இலங்கையின் அரசனாவ தற்கு நரசிம்மவர்மன் உதவி புரிந்தான்.) இவ்வாறு புலிகேச னுடைய படையெடுப்புப் படுதோல்வியடைந்தது. மேலும், பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்துடன் நரசிம்மவர்மன் சாளுக்கிய நாட்டின்மீது படையெடுத்து, வேகமாக முன்னேறி, பாதாமி யைத் தன் வசமாக்கிக் கொண்டான். 'வாதாபி கொண்டான்' என்று நரசிம்மவர்மன் வைத்துக்கொண்ட பட்டப் பெயரும், பாதாமியில் இருக்கிற மல்லிகார்ஜுன தேவர் கோயிலுக்குப் பின் புறமுள்ள [1]ஒரு பாறையில் செதுக்கப்பட்டுள்ள வாசகமும் நரசிம்மவர்மன் சாளுக்கியத் தலைநகரான பாதாமியைக் கைப் பற்றிக் கொண்ட செய்தியை உறுதி செய்கின்றன.

பாதாமியில் நடந்த போரில் புலிகேசன் இறந்துபோனான் என்று நாம் கருதலாம். அதுவே சாளுக்கிய வரலாற்றில் மிக நெருக்கடியான காலம். சாளுக்கியர்களுக்கு அதுவரையில் அடங்கியிருந்த சிற்றரசர்கள் சுயேச்சை பெற்றார்கள். அரசப் பிரதிநிதிகளாக ஆட்சி செய்துவந்த புலிகேசனுடைய

[1] இக் கல்வெட்டு நரசிம்மவர்மனுடைய ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டைச் சேர்ந்தது.

இரண்டு மக்களுங்கூடச் சிற்றரசர் வழியிலேயே முயன்றார்கள். ஆனால், புலிகேசனுடைய இன்னொரு மகனான விக்கிரமாதித்தியன் தன்னுடைய தாய்வழிப் பாட்டன் (கங்க வமிச துர்விநீதன்) உதவியோடு பல்லவர்களைத் தன்னுடைய நாட்டினின்று வெளியேற்றித் தன் தந்தையின் பேரரசு சிதையாமல் காக்கும் முயற்சியில் ஈடுபட்டான். அவன் முதலில் நரசிம்மவர்மனை பாதாமியிலிருந்து வெளியேற்றினான். பின்பு, சாளுக்கியப் பேரரசைத் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ள முயன்ற தன் உடன்பிறந்தார்களையும் சிற்றரசர்களையும் தோல்வியடையச் செய்தான். அதன்பின். கி.பி. 654—55-ல், அவன் தன்னைச் சாளுக்கியப் பேரரசன் என்று விளம்பரப் படுத்தினான். தன்னிடம் உண்மையாயும் தனக்குப் பெருந்துணையாயும் இருந்த தன்னுடைய தம்பி ஜெயசிம்மவர்மனுக்கு நன்றி பாராட்டும் முறையில் அவனை லாட்டாவுக்கு (தென்குஜராட்) அரசப் பிரதிநிதியாக்கினான்.

கி.பி. 642-க்குப்பின் வெகு விரைவில் நரசிம்மவர்மன் தன் தலைநகருக்குத் திரும்பியிருக்கவேண்டும். அதன்பின் அவன் மானவர்மனுக்கு உதவுவதற்காக இலங்கைக்கு இரண்டுமுறை தன் படைகளை அனுப்பினான். இரண்டாம் முறை சென்ற படையின் உதவியோடு மானவர்மன் தனக்குப் போட்டியாய் இருந்த அரசனைக் கொன்றுவிட்டு அனுராதபுரத்தைக் கைப்பற்றினான். ஆனால், மீண்டும் அவன் அவன் தோல்வியுற்று நாட்டை விட்டு வெளியேற வேண்டிய தாயிற்று. எனவே, அவன் மீண்டும் காஞ்சிபுரத்தில் அடைக்கலம் புகுந்தான். ஆனால், அதற்குள் நரசிம்மவர்மன் இறந்து விட்டான் போலும்.

நரசிம்மவர்மன் சோழர், சேரர், களப்பிரர் ஆகியவர்களை மட்டுமன்றிப் பாண்டியர்களையும் வென்றதாய்ப் பேசப்படுகிறான். ஆனால், அவர்களோடு அவன் செய்த போர்களைப் பற்றிய விவரமொன்றும் நமக்குத் தெரியவில்லை. எனினும், சிம்மவிஷ்ணு காலத்தில் (560–80) தொடங்கிய பல்லவ மறுமலர்ச்சிக் காலத்தில் நரசிம்மவர்மன் ஆட்சிக்காலந்தான் மிகச்சிறந்த பகுதி என்று கூறலாம். பல்லவர் புகழும் வலிமையும் அதற்குமுன் என்றுங் கண்டிராத உயர்வை அவன் காலத்தில் எய்தின. அவன் பல கட்டடங்களைக் கட்டினான். பல்லவ ராஜ்யத்தின் முக்கியத் துறைமுகமாகிய மாமல்லபுரம், அவன் காலத்தில் பல புதிய ஒப்பனைகளைப் பெற்றது. அவன் பாதாமியின்மீது படையெடுப்பதற்குச் சிறிது காலத்திற்குமுன் சாளுக்கிய நாட்டிலும் பல்லவ நாட்டிலும் சுற்றுப் பயணம் செய்த ஹுவான்சுவாங் தாம் கண்ட

வற்றையும் கேட்டவற்றையும் பற்றிக் கவர்ச்சி மிக்க குறிப்புகளை எழுதிவைத்திருக்கிறார்.

நரசிம்மவர்மன் சுமார் 668-ல் இறந்து போனான். அதற்குப் பின் அவனுடைய மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் பட்டத்திற்கு வந்தான். அவன் சிறிது காலமே ஆட்சி செய்தான். ஆனால், அதற்குள்ளாகவே அவன் முதலாம் விக்கிரமாதித்தியனோடு போர் செய்ய வேண்டியதாயிற்று. மகேந்திரவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் முதலாம் பரமேசுவரவர்மன் பட்டத்திற்கு வந்தான். அவன் காலத்தில் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தியன், அப்போது பாண்டி நாட்டில் ஆட்சி செய்துவந்த அரிகேசரி பராங்குசமாறவர்மன் (670–700) என்னும் அரசனுடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டு பல்லவர்களை எதிர்த்தான்.

இப்போது. பாண்டியர்கள் தங்களுடைய வலிமையைப் பெருக்கிக் கொண்டதைப் பற்றிச் சில சொற்கள் கூறவேண்டும். பாண்டியர்களும் பல்லவர்கள் வலிமைப்பெறத் தொடங்கிய காலத்திலோ அதற்குச் சிறிது பின்னரோ வலிமைபெறத் தொடங்கினார்கள். ஆனால், அம் மறுமலர்ச்சிக் காலத்தின் முதல் இரண்டு அரசர்களான கடுங்கோனையும் (590–620) அவனுடைய மகன் மாறவர்மன் அவனிசூளாமணியையும் (620–45) பற்றி நமக்கு அதிகமான செய்திகள் தெரியவில்லை. ஆனால், அவர்கள் களப்பிரர்களை அழித்துப் பாண்டி நாட்டில் பாண்டியர் ஆட்சியை மறுபடியும் நிறுவினார்கள் என்பதைப் பற்றி எவ்வித ஐயமும் இல்லை. மூன்றாம் அரசனான சேந்தன் (ஜெயந்தவர்மன்) [1]சேரலத்தை வென்று அங்கும் தன் ஆட்சியை நிறுவி, வானவன் என்னும் பட்டப் பெயரைச் சூடிக்கொண்டான். தமிழிலும் வட்டெழுத்திலுமுள்ள அவனுடைய கல்வெட்டொன்று 1959-ல் கண்டு பிடிக்கப்பட்டது. அவன் மலையடிக் குறிச்சியில் (திருநெல்வேலி மாவட்டம்) ஒரு குடைவரைக் கோயிலைச் செதுக்கச் செய்தான் என்று அந்தக் கல்வெட்டுக் கூறுகிறது. அவனுடைய மகன் அரிகேசரிமாறவர்மன் (670–700) ஒரு பெரிய வீரன். அவன் பாண்டியர் வலிமையைப் பெருக்குவதற்காகப் பல போர்களைச் செய்தான். அவற்றில் சில அப்போது காஞ்சியில் ஆட்சி செய்த பல்லவ மன்னனோடு செய்தவையாகும். பல்லவர் பகைவனான சாளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தியனோடு ஓர் உடன்பாடு செய்துகொண்டு அவன் பல்லவர்களை எதிர்த்தான் என்று நாம் கருதலாம்.

[1] சேரலம் – சேரநாடு.

விக்கிரமாதித்தியன் முதலாம் நரசிம்மவர்மன் படையெடுப்பிலிருந்து சாளுக்கிய நாட்டை விடுவித்துத் தன்னுடைய வலிமையை நிலைநாட்டிக் கொண்டபிறகு, தன்னுடைய தந்தையின் தோல்விக்கும் சாவுக்கும் பழிவாங்கும் பணியில் ஈடுபட்டான். இரண்டாம் மகேந்திரவர்மனுடைய காலத்திலேயே மீண்டும் போர் மூண்டது. அவன் கங்க நாட்டில் ஏதோ ஓர் இடத்தில் விக்கிரமாதித்தியனிடம் தோற்றுப்போனான். அந்தச் சண்டையில் அவன் இறந்துபோனான் என்றும் நாம் கருதலாம். பரமேசுவரவர்மன் ஆட்சியின் தொடக்கத்தில் விக்கிரமாதித்தியன் பல்லவ நாட்டின்மீது மீண்டும் படையெடுத்துக் காஞ்சிபுரத்தை நெருங்கியபோது, பரமேசுவரவர்மன் தன் தலைநகரை விட்டுத் தெற்கே ஓடிவிட்டான். ஆனால், விக்கிரமாதித்தியன் அவனைத் துரத்திக்கொண்டு காவிரிக்கரைவரையில் சென்று உறையூரில் தன் பாசறையை அமைத்துக்கொண்டு தங்கினான். அவனுடைய படையும் அவனுடைய நண்பனான பாண்டியனுடைய படையும் அங்கு ஒன்று சேர்ந்திருக்கக்கூடும். தலைநகருக்கு வெளியில் இருந்துகொண்டே பரமேசுவரவர்மன் ஒரு பெரும் படையைத் திரட்டி, விக்கிரமாதித்தியனின் நண்பனான கங்க மன்னன் பூவிக்கிரமனோடு விளந்தை என்னுமிடத்தில் போரிட்டான். ஆனால், அதில் அவன் தோல்வியே கண்டான், அதனால், அவன் 'உக்கிரோதயம்' என்னும் மணி பதித்த விலையுயர்ந்த குடும்ப அணியொன்றை இழந்தான். அப்போதும் தன் ஊக்கத்தை இழக்காத பரமேசுவரவர்மன் தன்னுடைய பகைவர்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்புவதற்காகச் சாளுக்கிய நாட்டின்மீது ஒரு படையை அனுப்பினான். அதன்பின் அவன் தன் நாட்டின்மீது படையெடுத்து வந்திருந்த பகைவர்களை உறையூருக்கு வடக்கே இரண்டுகல் தொலைவிலிருந்த பெருவளநல்லூரில் எதிர்த்தான். அங்கு நடந்த போரில் அவன் பெருவெற்றியடைந்தான். அதனால் விக்கிரமாதித்தியன் பல்லவ நாட்டை விட்டுத் தன்னுடைய நாட்டுக்குத் திரும்பினான். அதற்குள் சாளுக்கிய நாட்டிற்குச் சென்றிருந்த பரமேசுவரவர்மனுடைய படை, விக்கிரமாதித்தியனுடைய மகன் வினயாதித்தியனையும் பேரன் விஜயாதித்தியனையும் தோல்வியுறச் செய்து ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு பல்லவ நாட்டிற்குத் திரும்பியது.

வினயாதித்தியன் கி.பி. 681 முதல் 696 வரையில் ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சி, பொதுவாக, அமைதியாயும் வளமாயும் இருந்தது. அப்போது பல்லவர்க்கும் சாளுக்கியர்க்கும் இடையிலும் அமைதி நிலவியது. வினயாதித்தியன் ஒரு முறை

வடநாட்டின் மீது படையெடுத்தான். அப்போது அவனுடைய மகன் விஜயாதித்தியன் தன் போர்த் திறமையைக் காட்டிப் பெரும் புகழ் பெற்றான். அதற்கு மேல் அந்தப் படையெடுப்பால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. விஜயாதித்தியன் கி.பி. 696 முதல் 733 வரையில் ஆட்சிசெய்தான். அதுவே பாதாமிச் சாளுக்கிய அரசர்களுடைய ஆட்சியில் மிகவும் நீளமானது. மேலும், அவ்வாட்சிக் காலந்தான் பாதாமிச் சாளுக்கிய வரலாற்றில் மிக அமைதியானதாயும் மிக வளமானதாயும் இருந்ததென்று கருதலாம். அந்தக் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டன. அதற்குப் பின் விஜயாதித்தனுடைய மகன் இரண்டாம் விக்கிரமாதித்தியன் பட்டத்துக்கு வந்தான் (733–744). அவனுடைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் முன்னரே சிந்து நாட்டையும் அதன் அண்மையிலிருந்த பகுதிகளையும் வென்று தம் வசப் படுத்திக் கொண்டிருந்த அரேபியர்கள் தக்காணத்தின் மீது படையெடுத்தார்கள். ஆனால், அவர்கள் முன்னேற்றத்தைப் புலிகேசன் என்னும் சாளுக்கியன் தடுத்து நிறுத்தினான். தன் அண்ணனை முதலாம் விக்கிரமாதித்தியனுக்கு எல்லா வகையிலும் உதவிசெய்து அதன் பயனாக அரசப் பிரதிநிதிப் பதவியைப் பெற்ற ஜெயசிம்மவர்மனுடைய மகன்தான் அந்தப் புலிகேசன். புலிகேசனுடைய தொண்டினால் மிகப் பெரிதும் மகிழ்ந்த இரண்டாம் விக்கிரமாதித்தியன் அவனுக்குப் பல பட்டங்களை அளித்தான். அவற்றில் ஒன்று 'அவனிஜனாசிரயன்' என்பது. உலக மக்களின் புகலிடம் என்பது அதன் பொருள். சாளுக்கிய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்த சிற்றரசர்களும் அரேபியப் படையெடுப்பை எதிர்ப்பதில் உதவி செய்தார்கள். அவர்களுள் ஒருவனான ராஷ்டிரகூடனான நந்திவர்மன் என்பவன் விக்கிரமாதித்தியனுடைய பெரும் பாராட்டைப் பெற்றான்.

இரண்டாம் விக்கிரமாதித்தியனுடைய ஆட்சிக் காலத்தில் சாளுக்கியர் மீண்டும் பல்லவர்களோடு போர் தொடுத்தனர். அந்தப் பகைமைதான் அவனுடைய ஆட்சியில் நம் கவனத்தைக் கவரும் முக்கியச் செய்தியாகும். அவன் காஞ்சீபுரத்தை மூன்று முறை பிடித்தான் என்று நாம் அறிகிறோம். அதைப் பற்றிப் பேசுமுன் நாம் பல்லவர் வரலாற்றை மீண்டும் பார்ப்போம்.

முதலாம் விக்கிரமாதித்தியனை வென்றபின் பரமேசுவர வர்மன் காஞ்சியில் தன்னுடைய ஆட்சியைத் தொடர்ந்து நடத்தினான். அவன் சுமார் 700ஆம் ஆண்டில் இறந்துபோனான். அதன் பின் அவன் மகன் இரண்டாம் நரசிம்மவர்ம ராஜசிம்மன் (700–728) பட்டத்திற்கு வந்தான். அவனுடைய ஆட்சி, அவன்

காலத்தில் ஆட்சி செய்த சாளுக்கிய அரசன் ஆட்சியைப் போலவே, வளமும் அமைதியும் வாய்ந்ததாய் இருந்தது. அவன் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலையும் காஞ்சீபுரத்துக் கைலாசநாதர் கோயிலையும் போன்ற பல அழகிய கோயில்களைக் கட்டினன். மேலும், அவனுடைய ஆட்சிக் காலத்தில் பல சிறந்த நூல்கள் எழுதப்பெற்றன. அணியிலக்கணப் புலவர் தண்டி அவனுடைய அவையில் பல ஆண்டுக் காலம் தங்கி யிருந்தார் என்று நாம் நம்பலாம். ராஜசிம்மன் சீனவுக்கு தன் தூதர்களை அனுப்பினன். வெளிநாட்டு வாணிகம் அவன் காலத்தில் மிகவும் ஓங்கியிருந்தது, அவனுடைய மகனன மூன்ரும் மகேந்திரவர்மன் அவனுக்கு முன்பே இறந்து போனன். அவன் உயிரோடிருந்தபோது காஞ்சிக் கைலாசநாதர் கோயிலைக் கட்டும் பணியில் தன் தந்தைக்கு உதவியாக இருந்தான். கி.பி. 713ஆம் ஆண்டைச் சேர்ந்த மேற்குக் கங்கப் பொறிப்பில் கூறப் படும் பல்லவ 'யுவராஜன்' அவனகத்தான் இருக்க வேண்டு மென்பது தோன்றுகிறது. அவனுக்கு ஜெயபல்லவாதிராஜன் என்றும் விருத்தி பல்லவாதிராஜன் என்றும் இரு மக்கள் இருந் தார்களென்று அந்தப் பொறிப்பிலிருந்து நாம் அறிகிரும். ராஜ சிம்மனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் பரமேசுவரவர்மன் (728–731) பட்டத்திற்கு வந்தான். அவன் திருவடி என்னும் இடத்தில் ஒருசிவன் கோயிலைக் கட்டினன் என்று நாம் கருதலாம். அந்தக் கோயிலில் அவனுடைய ஆட்சியின் மூன்ரும் ஆண்டில் செதுக்கிய ஒரு பொறிப்பு இருக்கிறது. ஆனல், அக் கோயில் பலமுறை பழுது பார்க்கப்பட்ட ஒன்று.

பரமேசுவரவர்மனுடைய குறுகிய ஆட்சிக் காலத்தின் இறுதி யாண்டுகளில் சாளுக்கிய நாட்டின் அரசுரிமை பெற்ற இளவரசன் விக்கிரமாதித்தியன் காஞ்சீபுரத்தின்மீது படையெடுத்தான். கங்கநாட்டு இளவரசன் எறயப்பன் என்பவன் அவனுக்குத் துணை செய்தான். எறயப்பன் ஸ்ரீ புருஷனுடைய மகன். பல்லவன் எதிரி களுக்குப் பெரும் பொருள் கொடுத்துத் தன் தலைநகரைக் காப்பாற்றினன். ஸ்ரீ புருஷன் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் பரமேசுவரவர்மன் அவன்மீது போர் தொடுத்தான். ஆனல், விளந்தை என்னும் இடத்தில் நடந்த சண்டையில் ஸ்ரீ புருஷன் அவனை வென்று கொன்றுவிட்டான். மேலும், அவன் பல்லவ னுடைய குடையையும் 'பெருமானடி' என்னும் பட்டத்தையும் பறித்துக்கொண்டான்.

பரமேசுவரவர்மன் சாவு பல்லவ நாட்டில் ஒரு நெருக்கடி நிலையை உண்டாக்கியது. அவனுக்குப் பின் பட்டத்திற்கு வரும்

உரிமை பெற்ற நேர் வாரிசு யாரும் இல்லை. எனவே, தலைநகரிலிருந்த அரசு அலுவலர்கள் [1]கடிகையைச் சேர்ந்த பார்ப்பனரையும் பொது மக்களையும் கலந்து பேசிய பின்னர், பல்லவக் கிளை மரபு ஒன்றைச் சேர்ந்த இரணியவர்மன் என்பவனுடைய மகனை இரண்டாம் நந்திவர்மனைப் பல்லவ அரசனாகத் தெரிந்தெடுத்தார்கள். இந்தச் செய்தியைக் காஞ்சீபுரத்திலிருக்கின்ற வைகுந்தப்பெருமாள் கோயிலிற் செதுக்கப் பெற்றுள்ள சுவர்ச் சிற்ப முகப்புக் கூறுகளின் விவரக் குறிப்புகளின் வாயிலாக அறிகிறோம். அந்தச் சிற்பங்கள் பல்லவ வரலாற்றை அந்த மரபின் புராணக் கட்டுக் கதைத் தன்மை வாய்ந்த தொடக்கத்திலிருந்து நந்திவர்மன் அரியணையேறியகாலம் வரையில் கூறுகின்றன. நந்திவர்மனுடைய தாய் வழி—தந்தை வழிக் குலத் தூய்மையின் அடிப்படையில் அவன் அரசனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான் என்று அந்த வரலாற்றின் வாயிலாக நாம் அறிகிறோம். அரசுரிமைக்குப் போட்டியிட வேறு அரச குமாரர்களும் இருந்தார்களென்பது தெளிவு. எடுத்துக்காட்டாக, நாம் முன்னரே கூறிய மூன்றாம் மகேந்திரவர்மனுடைய இரண்டு மக்கள் இருந்தார்கள். அத்தகைய அரச குமாரர்களுள் ஒருவன் காஞ்சீபுரத்துக்குள் நந்திவர்மன் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில் உயிரிழந்தான். சித்திரமாயன் என்னும் மற்றொருவன் பல்லவ நாட்டிலேயே ஓரளவு ஆதரவு பெற்றதுடன் பாண்டிய அரசனுடைய ஆதரவையும் பெற்றான் என்று வேறு சில பொறிப்புகளின் வாயிலாக நாம் அறிகிறோம். கோவிஜய ஸ்கந்தசிஷ்ய விக்கிரம வர்மன் என்னும் இன்னுமோர் அரசகுமாரனும் போட்டியிட்டான் என்பதை அவனுடைய ஆட்சியின் பதினொன்காம் ஆண்டைச் சேர்ந்த ராயக் கோட்டைச் செப்பேட்டின் வாயிலாக அறிகிறோம். அவன் அந்தக் காலத்தைச் சேர்ந்தவன்தான் என்பது உறுதியாகத் தெரிகிறது. அவன்தான் சித்திரமாயன் என்றும், விக்கிரவர்மன் என்னும் அவனுடைய பட்டப் பெயர், அவனுக்கு இரண்டாம் விக்கிரமாதித்தியனுடைய ஆதரவு இருந்ததென்பதைக் காட்டுகிறதென்றும் நினைப்பதற்கு நம் மனம் விரும்பத்தான் செய்கிறது. நந்திவர்மன் பட்டத்திற்கு வருமுன்னர் நடந்த புரட்சியைப் பற்றி வைகுந்தப் பெருமாள் கோயில் பொறிப்புகள் ஒருசார்பான செய்திகளைத்தான் கூறுகின்றன என்பது உறுதி. மேலும், அவற்றில் பெரும்பகுதி இன்னும் சரியானபடி விளக்கப் பெறவில்லை. நந்திவர்மன் அடர்ந்த காடுகளையும் மலைகளையும் (கடலையும்?) தாண்டி, பல இன்னல்களுக்கிடையில் நெடுநாள் பயணஞ் செய்த பின்னர்க் காஞ்சியை

[1] கடிகை என்பது கற்றறிந்த பார்ப்பனர் கல்லூரி என்று பொருள்படும்.

அடைந்தான் என்றும் நாம் அறிகிறோம். ஆனால், அவன் தன் தந்தையாகிய இரணியவர்மனோடு எந்த இடத்தில் வாழ்ந்து வந்தான் என்பதும், எங்கிருந்து தன் பயணத்தைத் தொடங்கினான் என்பதும் நமக்குத் தெரியவில்லை.

பாண்டி நாட்டில் அரிகேசரி பாராங்குசனுக்குப் பின் அவன் மகன் கோச்சடையன் (சுமார் 700–730) பட்டத்திற்கு வந்தான். அவனுக்கு ரணதீரன் என்னும் பெயரும் இருந்தது. அவன் அண்டை நாடுகளுடன் பொருது, கொங்கு நாட்டிலும் பாண்டியன் ஆட்சியை நிறுவினான். திருநெல்வேலிக்கும் திருவிதாங்கூருக்கும் இடையிலுள்ள மலைநாட்டின் தலைவனான ஆய் என்பவன் செய்த கலகத்தை அடக்கி, அந் நாட்டையும் கோச்சடையன் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். அவனுடைய ஆட்சி சுமார் 730-ல் முடிவடைந்தபோது அவனுடைய மகன் முதலாம் மாறவர்ம ராஜசிம்மன் பட்டத்திற்கு வந்தான். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே ராஜசிம்மன் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தியனோடு உடன்பாடு செய்து கொண்டு, சித்திரமாயனை ஆதரித்து, நந்திவர்ம பல்லவ மல்லனோடு போர் தொடுத்து அவனைப் பல இடங்களில் தோல்வியுறச் செய்தபின் நந்திகிராமம் (கும்பகோணத்துக்கு அருகிலுள்ள நந்திபுரம்) என்னும் இடத்தில் அவனை முற்றுகையிட்டான். ஆனால் பாண்டியப் படைகளோடு பல இடங்களில் போரிட்டவனும் மிகவும் திறமை வாய்ந்தவனுமான பல்லவத் தானைத் தலைவன் உதயசந்திரன் நந்திகிராமத்தை வளைத்திருந்த படைகளை வென்று, சித்திரமாயனுடைய தலையையும் கொய்துவிட்டான். அதனால் பல்லவமல்லன் காஞ்சி மன்னனாவதற்கு இருந்த தடைகளெல்லாம் நீங்கின. மேலும், அவன் பல்லவ மல்லனுடைய மற்றப் பகைவர்களாகிய சபர அரசன் உதயணனையும் நிஷாதத் தலைவன் பிரித்திவி வியாக்கிரனையும் வென்றான். அவ்விருவரும் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தியனோடு சேர்ந்து பல்லவர்களை எதிர்த்தவர்களாக இருக்கலாம்.

சுமார் 735-ல் நிகழ்ந்த விக்கிரமாதித்தியனுடைய படையெடுப்புத்தான் உண்மையிலேயே பல்லவ மல்லனுடைய ஆட்சிக்குப் பேராபத்தை உண்டாக்கியது. விக்கிரமாதித்தியனோடு கங்க மன்னன் ஸ்ரீபுருஷனும் சேர்ந்துகொண்டான். ஆனால், விக்கிரமாதித்தியன், பொதுவாக, பரிவுடன் நடந்துகொண்டான். அவன் நந்திவர்மனைத் தோல்வியடையச் செய்து காஞ்சீபுரத்தைப் பிடித்துச் சில காலம் அங்கேயே தங்கி

யிருந்தான். எனினும், அவன் அந்த நகரத்துக்கு எவ்விதச் சேதத்தையும் விளைவிக்கவில்லை. மேலும், அவன் கைலாச நாதர் கோயிலிலும் ஏனைய கோயில்களிலும் கொள்ளையடித்த பெரும் பொற் குவியல்களை அந்தக் கோயில்களுக்கே திருப்பிக் கொடுத்தது மட்டுமன்றிக் காஞ்சி மக்களுக்கும் தாராளமாய்ப் பல நன்கொடைகளை அளித்து அவர்களை மகிழ்வித்தான். இந்தச் செய்திகள் அனைத்தையும் அவன் கைலாச நாதர் கோயிலில் ஒரு தூணில் கன்னட மொழியில் பொறித்து வைத்தான். இவ்வாறு, முதலாம் நரசிம்மவர்மன் பாதாமியைப் பிடித்ததால் சாளுக்கியர்களுக்கு உண்டான பழியைத் துடைத்தபின், பாண்டிய மன்னனோடு தொடர்ந்து போர்செய்து தன்னுடைய நாட்டைக் காத்துக் கொள்ளுமாறு பல்லவ மல்லனை விட்டுவிட்டு, இரண்டாம் விக்கிரமாதித்தியன் தன்னுடைய தலைநகருக்குத் திரும்பிப் போய்விட்டான். பல்லவ மல்லன் தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்தில் தன்னுடைய நாட்டிற்கு வடக்கிலும் தெற்கிலும் தன் பகைவர்களோடு செய்த போர்களின் கால வரிசையைச் சரியானபடி நிர்ணயிப்பதற்கு நமக்குச் சான்று யாதும் கிடைக்கவில்லை. விக்கிரமாதித்தியன் தன்னுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் தன் மகன் கீர்த்திவர்மன் தலைமையில் மீண்டும் ஒரு படையைப் பல்லவ நாட்டின்மீது அனுப்பினான். கீர்த்திவர்மன் பல்லவ நாட்டை வெற்றியுண்டாகுமாறு தாக்கி, ஏராளமான பொன்னையும் அணி மணிகளையும் யானைகளையும் கைப்பற்றிக் கொண்டு சென்றான்.

விக்கிரமாதித்தியன் பல புதிய கோயில்களைக் கட்டினான். அந்தப் பணியை அவனுக்குப் பின் 744–45-ல் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் இரண்டாம் கீர்த்தி வர்மன் தொடர்ந்து செய்துவந்தான். பாண்டிய மன்னனை முதலாம் மாறவர்ம ராஜசிம்மன் தன்னுடைய ஆதிக்கத்தைக் கொங்கு நாட்டுக்கும் அதற்கப்பாலும் பரப்பிக்கொண்டிருந்தான். அவனோடு கீர்த்தி வர்மனும் அவன் மேலாதிக்கத்திலிருந்த கங்க மன்னன் ஸ்ரீ புருஷனும் மோதினார்கள். ராஜசிம்மன் காவிரியைக் கடந்து, தஞ்சாவூர் மாவட்டத்துக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக்கும் இடையில் எல்லைப் பகுதியிலிருந்த மழகொங்கம் என்னும் ஊரைப் பிடித்தபின், வெண்பி என்னும் இடத்தில் கீர்த்திவர்மனையும் கங்க மன்னனையும் தோல்வியடையச்செய்து அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, தன் மகனுக்குக் கங்கமன்னனுடைய மகளையும் மண முடித்து வைத்தான் (சுமார் 750).

பாதாமிச் சாளுக்கிய அரச மரபில் இரண்டாம் கீர்த்தி வர்மன்தான் கடைசி அரசன். கி.பி. 742-ல் எல்லோராவில் ஆட்சி செய்துவந்த ராஷ்டிரகூட அரசன் தந்திதுர்க்கனுடைய செயல்களால் சாளுக்கிய ராஜ்யம் தொடர்ந்து வலிமை இழந்து கொண்டுவந்தது. ஆனால் தந்திதுர்க்கன் முதலில் மஹீ, நர்மதை, மகாநதி ஆகிய ஆறுகளின் கரைகளிலுள்ள இடங்களில்தான் நாடு பிடிக்கும் வேலையைத் தொடங்கினன். அவன் மாளவத்து குர்ஜரர்களையும், கோசலம் கலிங்கம் ஆகிய நாடுகளின் அரசர்களையும், ஸ்ரீசைல நாட்டில் ஆண்டுவந்த தெலுகுச் சோடர்களையும் வென்றான். முக்கியமாக, அவன் பல்லவ நாட்டிற்குச் சென்று காஞ்சீபுரத்தில் தன் படை வலிமையைக் காட்டி, நந்திவர்ம பல்லவ மல்லனேடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, அவனுக்குத் தன் மகள் ரேவா என்பவளை மணமுடித்து வைத்தான். இவ்வாறு கீர்த்திவர்மனுடைய ராஜ்யத்தில் எட்டியிருந்த மாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டு தன்னுடைய, அரசியல் நிலைமையையும் உறுதியாக்கிக் கொண்டபின், தந்திதுர்க்கன் கடைசியாக, 752 அல்லது 753-ல், தக்காணத்தின் அரசன் என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொண்டான். கீர்த்திவர்மன் ஏதோ அரசன் என்ற பெயரில் அதன்பின் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆட்சிசெய்தான். ஆனால், பிற்காலத்திய பொறிப்புகள் கூறுகிறவாறு 'அவனுடைய ஆட்சிக் காலத்தில் சாளுக்கியர்களுடைய ராஜலட்சுமி இந்த உலகத்திலிருந்து மறைந்து விட்டாள்.'

இப்போது இரண்டாம் நந்திவர்மன் வரலாற்றை மீண்டும் பார்ப்போம். அவன் கங்க நாட்டின்மீது படையெடுத்து ஸ்ரீபுருஷனை வென்று, 'உக்கிரோதய' மணி பதித்த மாலையையும் மீட்டுக் கொண்டான். அன்றியும், அவன் கங்க நாட்டின் ஒரு பகுதியைப் பிடித்துத் தன்னுடைய மேலாதிக்கத்திலிருந்த பாணத் தலைவன் ஜெயந்திவர்மனுக்குக் கொடுத்துவிட்டான். இது நடந்தது சுமார் 760-ல் என்று சொல்லலாம். மேலும், அவன் முதலாம் வரகுண மகாராஜா (765–815) என்று பெயர் பெற்ற ஜடில பராந்தக நெடுஞ்சடையன் என்னும் பாண்டிய அரசனேடும் போர்செய்தான். வரகுணன் முதலாம் ராஜசிம்மனுடைய மகன். காவிரி யாற்றின் தென் கரையில் உள்ள பெண்ணகடம் என்னும் இடத்தில் சுமார் 767-ல் இரண்டாம் நந்திவர்மனுடைய படைகள் தோல்வியடைந்தன.

வளர்ந்து கொண்டே சென்ற பாண்டிய வலிமையை அடக்குவதற்காகப் பல்லவ மல்லன் ஒரு கூட்டணியை அமைத்தான்.

அதற்காக அவன் கொங்கு [1]சேரலம் ஆகிய நாடுகளின் அரசர்களுடனும் தகடூரில் ஆட்சிசெய்த அதியமானுடனும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். ஆனால், பாண்டியன் இந்த உடன்படிக்கைகளுக்காக அஞ்சவில்லை. அவன் தன் பகைவர்களோடு பல முறை பொருது பல வெற்றிகளைப் பெற்றான். அவற்றின் விளைவாக அதியமான் ஓட்டம் பிடித்தான். மேல் கொங்கின் அரசன் தன்னுடைய யானைகள் பலவற்றை இழந்தது மட்டுமன்றி, பாண்டியனால் சிறைபிடிக்கவும்பட்டான். அவனைப் பாண்டியன் மதுரையில் அடைத்து வைத்துவிட்டு, கொங்கு நாடு முழுவதையும் தன்னுடைய ஆட்சிக்கீழ்க் கொண்டு வந்தான். அப்போது நடைபெற்ற போர்களில் பாண்டியன் பல்லவ நாட்டுக்குள் நெடுந்தூரம் ஊடுருவித் தஞ்சை மாவட்டத்தின் மையத்திலுள்ள இடவை என்னும் இடத்தில் தன் பாசறையை அமைத்துக்கொண்டான். இவ்வாறு பாண்டியனுக்கெதிராக அமைந்த கூட்டணி அடியோடு அழிந்தது; பாண்டிய ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த நந்திவர்மன் செய்த முயற்சி தோல்வியடைந்தது.

முதலாம் வரகுணன் இன்னும் பல வெற்றிகளையும் பெற்றான். அவன் வேணாட்டின் (தென் திருவிதாங்கூர்) மீது படையெடுத்து, அரண் மிகுந்த விழிஞம் என்னும் துறைமுகத்தைத் தாக்கி, அந்த நாட்டைத் தன்னுடைய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். மேலும், அவன் பாண்டி நாட்டுக்கும் வேணாட்டுக்கும் இடையிலிருந்த மலைநாட்டுத் தலைவனான ஆய் என்பவனைத் தாக்கி, அவனையும் வென்றான். ஆய் வேணாட்டு மன்னனுக்கு நண்பனாக இருந்திருக்கக்கூடும். இந்தச் சண்டைகளின் பயனாகப் பாண்டியர் ஆட்சி திருச்சிராப்பள்ளியைத் தாண்டித் தஞ்சை, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களிலும் பரவியது. அவற்றிற்குத் தெற்கிலிருந்த பகுதிகள் அனைத்தும் பாண்டிய ஆட்சியில்தான் இருந்தன. வரகுணனுக்குப்பின் அவனுடைய மகன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (815–862) பட்டத்துக்கு வந்தான். அவனும் பாண்டியரது ஆட்சி எல்லையை விரிவுபடுத்தும் வேலையைத் தொடர்ந்துசெய்தான். அவன் இலங்கை மீது படையெடுத்து, வடமாகாணத்தைச் சூறையாடி, தலைநகரையும் கொள்ளையடித்தான். அப்போது இலங்கை அரசனாயிருந்த முதலாம் சேனன் (831–851) பாண்டியனோடு சமாதானம் செய்துகொண்டான். அதன் பின் பாண்டி நாட்டுப் படைகள் திரும்பி வந்துவிட்டன. அடுத்து, ஸ்ரீமாறன் பல்லவர்

[1] சேரலம்—கேரளம்.

தலைமையில் அமைந்த ஒரு வலிமை மிக்க கூட்டணியை எதிர்க்க வேண்டியதாயிற்று. இப்போது நாம் மீண்டும் பல்லவ வரலாற்றில் கவனத்தைச் செலுத்துவோம்.

வரகுணனைத் தோல்வியுறச் செய்த முயற்சிகளில் தோல்வி யடைந்த பல்லவ மல்லன் 796 வரையில் ஆட்சிசெய்தான். அவன் திருமால் பக்தன்; கல்விக்குப் பேராதரவு தந்தவன். அவன் பழைய கோயில்களைப் புதுப்பித்துப் பல புதிய கோயில் களையும் கட்டினான். அவ்வாறு அவன் கட்டிய புதிய கோயில் களில் வைகுந்தப்பெருமாள் கோயிலும் ஒன்று. அந்தக் கோயிலில் செதுக்கப் பெற்றுள்ள சுவர்ச் சிற்ப முகப்புக் கூறு களையும், அவற்றிலுள்ள விவரக் குறிப்புகளையும்பற்றி நாம் முன்னரே கூறினோம். வைணவ ஆழ்வார்களுள் ஒருவரான திருமங்கை ஆழ்வார் பல்லவ மல்லன் காலத்தில் வாழ்ந்தவர்.

நந்திவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் தந்திவர்மன் (சுமார் 796–847) பட்டத்துக்கு வந்தான். முதலாம் வரகுணன், அவனுடைய மகன் ஸ்ரீமாறன் ஆகிய அரசர்கள் காலத்தில் பாண்டிய எல்லை வடக்கு நோக்கி விரிவடைந்ததன் விளைவாகத் தந்திவர்மன் தன்னுடைய நாட்டின் தென் பகுதிகள் பலவற்றை இழந்தான். அன்றியும், அவன் வலிமை பெற்றுக்கொண்டிருந்த ராஷ்டிரகூடர்களுடைய பகைமையையும் சமாளிக்க நேர்ந்தது. இப்போது நாம் ராஷ்டிரகூடர் வரலாற்றைப் பார்ப்போம்.

தந்திதுர்க்கன் சுமார் 756-ல் இறந்து போனான். அவனுக்குப் பிள்ளையில்லாததால் அவனுடைய சிற்றப்பன் முதலாம் கிருஷ்ணன் அவனுக்குப் பின்பட்டத்துக்கு வந்தான். அவன் எஞ்சியிருந்த சாளுக்கிய ஆட்சியை அழித்துவிட்டு, ராஷ்டிர கூடர் ஆட்சியை எல்லாத் திசைகளிலும் பரப்பினான். அவன் தென் கொங்கணத்தை வென்று, சிலார வமிசத்தைச் சேர்ந்த ஒருவனை அங்கே தனக்கு அடங்கிய சிற்றரசனாக்கினான். அவன் 768-ல் கங்க நாட்டின்மீது படையெடுத்து, ஸ்ரீபுருஷனை வென்று, தன்னுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தான். பின்னர், வேங்கியைத் தலைநகராகக்கொண்ட கிழக்குச் சாளுக்கிய நாட்டின்மீது பட்டத்து இளவரசன் இரண் டாம் கோவிந்தன் தலைமையில் ஒரு படையைக் கிருஷ்ணன் அனுப்பினான். அப்போது வேங்கியில் ஆட்சிசெய்த முதலாம் விஜயாதித்தியன் (752–73) போர் செய்யாமலே 769–70-ல் கோவிந்தனுக்குப் பணிந்துபோனான். கிருஷ்ணன் தான் எல்லோரா விலுள்ள புகழ் பெற்ற குடைவரைக் கோயிலான கைலாச

நாதர் கோயிலைக் கட்டியவன். அவனுக்குப்பின் 772-க்கும் 775-க்கும் இடையில் இரண்டாம் கோவிந்தன் அரசனானான். 777–778-ல் கங்க நாட்டில் ஸ்ரீபுருஷனுடைய மக்களாகிய இரண்டாம் சிவமாரனுக்கும் துக்கமார எறயப்பனுக்கும் அரசுரிமைப் போர் நடந்தது. அந்தப் போரில் கோவிந்தனும் பல்லவ மல்லனும் சேர்ந்து இரண்டாம் சிவமாரனுக்கு உதவி செய்து அவனைக் கங்க நாட்டின் அரசனாக்கினார்கள். கோவிந்தன் சொகுசான வாழ்க்கையை விரும்பியவன். எனவே, அவனுடன் பிறந்தவனும் பேராவல் உடையவனுமான துருவன் என்பவன் தானே அரசனாக வேண்டுமென்று திட்டமிட்டான். கோவிந்தன் பல்லவர், கங்கர், கிழக்குச் சாளுக்கியர், மாளவர் ஆகியவர்களுடைய உதவியை நாடினான். துருவன் அவர்கள் அனைவரையும் வென்று ராஷ்டிரகூட அரசனானான். கோவிந்தனுடைய வாழ்வு எவ்வாறு முடிந்தது என்பது நமக்குத் தெரியவில்லை. துருவன் சுமார் 780-ல் அரசனான். கோவிந்தனுக்கு உதவி செய்தவர்களை ஒறுப்பது அவனுடைய முதல் வேலையாயிற்று. அவன் இரண்டாம் சிவமாரனைப் பிடித்துச் சிறையிலடைத்தான்; பல்லவ மல்லனிடமிருந்து பல யானைகளைத் திறையாகப் பெற்றான். (783–784); விந்தியமலையைத் தாண்டிச் சென்று, மாளவத்தில் ஆட்சிசெய்த குர்ஜர மன்னன் வத்சராஜனைப் பாலைவனத்துக்குத் துரத்தினான்; பின்னர் அவன் வேங்கி நாட்டின்மீது படையெடுத்தான். அங்கு ஆட்சிசெய்த நான்காம் விஷ்ணுவர்த்தனன் தன்னுடைய நாட்டில் சில பகுதிகளைக் கொடுத்ததோடு, தன் மகள் சீலமகாதேவியையும் துருவனுக்கு மணமுடித்து வைத்தான். மாளவத்தில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து துருவன் கங்கை யமுனை ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுத்தான். அங்கே அவன் வங்க மன்னனான தர்மபாலனை வென்றான். இறுதியில் துருவன் அரச பதவியைத் தானாகவே துறந்து தன் மக்களுள் மிகவும் திறமைசாலியான மூன்றாம் கோவிந்தனுக்கு முடிசூட்டி வைத்தான். ஆனால், 793–94-ல் துருவன் இறந்தபின் மூன்றாம் கோவிந்தனுக்குத் தொல்லை ஏற்பட்டது. அரசுரிமை இழந்த அவன் உடன்பிறந்தவர்கள் அவனை எதிர்த்தார்கள். முக்கியமாக, துருவனுடைய முதல்மகன் கம்பன் அவனைக் கடுமையாக எதிர்த்தான். இரண்டாம் சிவமாரன் தனக்குத் துணை புரிவானென்று நம்பிய கோவிந்தன் அவனைச் சிறையிலிருந்து விடுவித்தான். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக அவன் கம்பனுடன் சேர்ந்துகொண்டான். எனினும், ஊக்கமிகுந்த கோவிந்தன் தனியாகவே நின்று அரசர் பன்னிருவர் கூட்டணியை முறியடித்தான். அவ்வாறு வெற்றிபெற்றபின் அவன் யாரையும் கொடுமைப் படுத்தவில்லை. தன்னுடைய முக்கிய எதிரியாகிய கம்பனுக்கு

அவன் முன்னர் வகித்த பதவியாகிய கங்கவாடியின் அரசப் பிரதிநிதிப் பதவியை மீண்டும் அளித்தான்; தனக்குத் துணையாக நின்ற தன் தம்பி இந்திரனுக்கு நன்றிபாராட்டும் வகையில் அவனை லாட்டா மாகாணத்தின் அரசப் பிரதிநிதி யாக்கினான்; ஆனால், இரண்டாம் சிவமாரனை மட்டும் அவன் மீண்டும் சிறையிலடைத்து விட்டான். இவ்வாறு தன்னுடைய ராஜ்யத்தில் தோன்றிய எதிர்ப்பை அடக்கிய பிறகு மூன்றாம் கோவிந்தன் வட இந்தியாவின்மீது படையெடுத்தான். மாளவத்தில் ஆட்சி செய்த குர்ஜர அரசனை இரண்டாம் நாகபட்டனோடும் அவனுக்குத் துணைநின்ற [1]சந்திரகுப்தனோடும் கோவிந்தன் போரிட்டுப் பெரு வெற்றி பெற்றான். அதன்பின் மாளவம் சிறிது காலம் லாட்டாவோடு இணைக்கப்பட்டது. கோவிந்தன் இன்னும் வடக்கே சென்று கன்னோசியை ஆண்டுவந்த சக்கராயுதன் என்பவனைத் தாக்கினான். அவனும் அவனுக்கு ஆதரவாயிருந்த தர்மபாலனும் கோவிந்தனுக்குப் பணிந்தார்கள். 802–ல் அவன் வட இந்தியாவிலிருந்து திரும்பி நர்மதை நதியின் கரையிலிருந்த ஸ்ரீபவனம் என்னும் இடத்தில் தன் பாசறையை அமைத்தான். அங்கே அவனுக்கொரு மகன் பிறந்தான். அவன்தான் பிற்காலத்தில் அரசோச்சிய முதலாம் அமோகவருஷன். ஸ்ரீ பவனத்திலிருந்து அவன் தக்காணத்தை வேகமாகத் தாண்டி 803–804-ல் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான். அங்கு அவன் தந்திவர்மனை வென்று, அவனுடைய தலைநகரான காஞ்சிக்குச் சென்று தங்கினான். அவன் அங்கிருந்தபோது இலங்கையிலிருந்து வந்த தூதன் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான். அதன்பின் கோவிந்தன் துங்கபத்திரை நதிக் கரைக்குச் சென்று ராமேசுவர தீர்த்தம் என்னும் இடத்தில் தன் பாசறையை அமைத்துக் கொண்டான். கோவிந்தனுடைய வலிமையை வேங்கி நாட்டரசன் நான்காம் விஷ்ணுவர்த்தனனும் அவனுக்குப் பின் பட்டத்திற்கு வந்த இரண்டாம் விஜயாதித்தியனும் (808) உணர்ந்தார்கள். விஜயாதித்தியன் ஒரு பெரிய வீரன்; நரேந்திர மிருகராஜன் (அரசர்க்குள் அரியேறு) என்னும் பட்டம் பெற்றவன். அவனுடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தான் பீமசலுக்கி என்பவன் வேங்கிநாட்டுக்கு அரசுரிமை கொண்டாடினான். அவனை ஆதரித்ததன் மூலம் கோவிந்தன் விஜயாதித்தியனுக்குத் தொல்லைகொடுத்தான். ராஷ்டிரகூட மரபின் மிகச் சிறந்த அரசர்களுள் கோவிந்தனும் ஒருவன். அவனுடைய அருஞ்செயல்களைப் புகழ்ந்து பாடிய அவனுடைய அவைப் புலவர்கள், கண்ணன் பிறந்தபின் யாதவ குலம்

[1] இந்தச் சந்திரகுப்தன் யாரென்று தெரியவில்லை.

எவ்வாறு யாராலும் வெல்ல முடியாத உயர்ந்த நிலை எய்தியதோ அவ்வாறே கோவிந்தன் பிறந்தபின் ராஷ்டிரகூட வமிசமும் யாராலும் தாக்க முடியாத மீயுயர் நிலையை அடைந்தது என்று பாராட்டினார்கள். அது நியாயமாகத்தான் தோன்றுகிறது.

இப்போது நாம் மீண்டும் தென்னிந்தியாவுக்கு வருவோம். பல்லவ அரசன் தந்திவர்மன் நீண்ட காலம் ஆட்சி செய்தான். அவன் காலத்திலும் பல்லவ நாட்டைத் தெற்கிலிருந்து பாண்டியர்களும் வடக்கிலிருந்து ராஷ்டிரகூடர்களும் தாக்கினார்கள். பாண்டியர்களை வெல்லவோ, ராஷ்டிரகூடர்களை வரம்புக்குள் வைத்திருக்கவோ அவனால் முடியவில்லை. பல ஆண்டுக் காலம் அவன் பெயரளவில்மட்டும் அரசனாக இருந்தானென்பது தோன்றுகிறது. அவனுடைய ஆட்சியாண்டு இருபத்தொன்றிலிருந்து நாற்பத்தொன்பது வரையில் அவனுடைய பொறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. அண்மையில் நமக்குக் கிடைத்த ஒரு பாண்டியச் செப்பேட்டைப் பார்க்கும்போது, தொண்டை மண்டலம் பொத்தப்பி மரபைச் சேர்ந்த தெலுகுச் சோட அரசன் ஸ்ரீ காந்தனுடைய ஆட்சியின்கீழ்ச் சென்றிருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது. ஸ்ரீகாந்தன் பாண்டியர்களோடு சேர்ந்துகொண்டு பல்லவர்களை எதிர்த்தான் போலும். அவனுடைய மகள் அக்கலநிம்மதி என்பவளை ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் மணந்து கொண்டான். அவளுக்குப் பிறந்தவன்தான் ஸ்ரீ மாறனுடைய இரண்டாம் மகன் பராந்தக வீரநாராயணன்.

தந்திவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் மூன்றும் நந்திவர்மன் (846–69) பட்டத்திற்கு வந்தான். அவன் தன் தந்தையை விட மிகவும் வல்லவன். தந்திவர்மனுடைய ஆட்சியின் இறுதி யாண்டுகளில் நந்திவர்மன், பாண்டிய மன்னன் ஸ்ரீ மாறனுக்கும் அவனுடைய மாமனார் ஸ்ரீ காந்தனுக்கும் எதிராக ஒரு வலிமை மிக்க கூட்டணியை உருவாக்கி, அவர்களோடு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசிக்கு அருகிலிருக்கின்ற தெள்ளாறு என்னும் இடத்தில் கடுமையாகப் போரிட்டு வென்றான். அவன் அமைத்த கூட்டணியில் கங்கர், தமிழகச் சோழர் ஆகியவர்கள் மட்டுமன்றி ராஷ்டிரகூடர்களும் இருந்தார்கள்.

போர் தெள்ளாற்றில் நடந்தது என்பதே பாண்டியர்கள் பல்லவ நாட்டிற்குள் எவ்வளவு தொலைவு வந்து தங்கள் ஆட்சியை நிறுவியிருந்தார்களென்பதை நமக்குக் காட்டுகிறது. நந்திவர்மன் மற்ற அரசர்களுடைய துணையைப் பெறுவதற்கு அதுவே உதவி செய்தது. தெள்ளாற்று வெற்றி பல்லவ

வரலாற்றில் ஒரு திருப்பமாயிற்று. 'தெள்ளாறெறிந்த' நந்திவர்மன் என்னும் பட்டப் பெயர் பெற்ற பல்லவன் போரைத் தொடர்ந்து நடத்தி, மேலும் பல வெற்றிகளைப் பெற்றான். அவற்றின் விளைவாய்ப் பாண்டியப் படைகள் பின்வாங்கிச் சென்றன. அவற்றை நந்திவர்மன் வையைக் கரை வரையில் துரத்திக்கொண்டு சென்றான்.

ஆனால், சிறிது காலத்தில் தன் வலிமையை மீண்டும் பெற்ற ஸ்ரீ மாறன் நந்திவர்மனையும் அவனுடைய துணைவர்களையும் 859-ல் கும்பகோணத்துக்கு அருகில் வென்றான்.

மிகப் பெரிய அரசனான மூன்றாம் நந்திவர்மன் அந்தத் தோல்வியால் மனமுடைந்து போகவில்லை. எனவே, அவன் பல்லவப் பேரரசின் புகழை மீண்டும் நிலைநாட்டினான். அவன் இலக்கியத்துக்கும், பொதுவாக, கவின்கலைகள் அனைத்திற்கும் ஆதரவளித்தான். அவன் ஒரு வலிமையுடைய கப்பற் படையை வைத்திருந்தான். சயாமில் தக்குவ—பா என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு தமிழ்ப் பொறிப்பு அவனிநாரணம் என்ற பெயருடைய ஒரு திருமால் கோயிலையும் குளத்தையும் குறிப்பிடுகிறது. அவனிநாரணம் என்பது நந்திவர்மனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்றோடு தொடர்புடையது. நந்திவர்மனுக்குப் பின் அவனுடைய மகன் நிருபதுங்கன் பட்டத்துக்கு வந்தான். அவனுடைய தாய் ராஷ்டிரகூட மரபைச் சேர்ந்த சங்கை என்பவள். அவன் சுமார் 860ஆம் ஆண்டிலேயே இளவரசன் (யுவராஜன்) என்னும் பட்டம் சூட்டப் பெற்றவன். நந்திவர்மனுக்கு வேறு மனைவிகளின் மூலம் பிறந்த அபராஜிதன், கம்பவர்மன் என்ற வேறு இரண்டு மக்கள் இருந்தார்கள். பட்டத்திற்கு வந்த சிறிது காலத்திலேயே நிருபதுங்கன் பாண்டியர்களை அரிசிலாற்றங்கரையில் தோல்வியுறச் செய்து, தன் தந்தை கும்பகோணத்தில் அடைந்த தோல்வியால் ஏற்பட்ட பழியைத் துடைத்தான். அரிசிலாறு, காவிரியின் கிளை நதிகளுள் ஒன்று. அது காரைக்காலில் கடலொடு கலக்கிறது.

ஸ்ரீ மாறன் அரிசிலாற்றங்கரையில் அடைந்த தோல்வியைப் போல் இன்னும் ஒரு தோல்வியையும் அடைந்தான். அவன் செய்த பல போர்களும் அவற்றில் அவன் அடைந்த வெற்றிகளும் அவனுக்கு 'பரசக்கர கோலாகலன்' என்னும் பட்டப் பெயர் வருவதற்குக் காரணமாயின. அதனால், அண்டை நாட்டரசர்கள் அவன்மீது பகைமை பாராட்டியது இயல்புதானே? அவ்வாறு பகைமை பாராட்டியவர்களுள் ஒருவனான இலங்கை மன்னன்

இரண்டாம் சேனன் (851–85) பல்லவர்களோடும் பாண்டிய அரச குமாரன் ஒருவனோடும் இணைந்து ஸ்ரீமாறனை எதிர்த்தான். இரண்டாம் சேனன், முதலாம் சேனனுடைய சகோதரன் மகன்; அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன். அவனோடு கூட்டுச் சேர்ந்த பாண்டிய அரசகுமாரன் ஸ்ரீமாறனுடைய மக்களுள் ஒருவனென்றும், அவனுடைய உரிமையை மதிக்காமல் அவனுடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தான் வீரநாராயணனுக்குச் சுமார் 860-ல் இளவரசப் பட்டம் சூட்டியதால் மனக் கசப்படைந்தவன் என்றும் நாம் கருதலாம். அரிசிலாற்றங்கரையில் சண்டை நடந்த அதே சமயத்திலோ அதற்குச் சிறிது பின்னரோ சேனன் ஒரு படையைப் பாண்டி நாட்டின்மீது செலுத்தினான். அந்தப் படையெடுப்பு முழு வெற்றி யடைந்தது. பகைவர்கள் மதுரையைக் கொள்ளையடித்தார்கள். ஸ்ரீமாறன் விழுப்புண் பட்டு மாண்டான். அவனுக்குப் பதிலாக அவனுடைய மகன் இரண்டாம் வரகுணவர்மனை இலங்கைத் தளபதி அரியணையேற்றினான் (862). வரகுணவர்மன் நிருபதுங்கனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான்.

ராஷ்டிரகூட ராஜ்யத்தில் மூன்றும் கோவிந்தனுக்குப்பின் அவனுடைய இளவயது மகன் அமோகவருஷன் பட்டத்திற்கு வந்தான் (814). அவனுக்கு நிருபதுங்கன் என்னும் இன்னொரு பெயரும் இருந்தது. இளைஞனை அமோகவருஷனுடைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் அவனுக்குப் பல இன்னல்கள் வந்தன. ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த அரசு அலுவலர்கள் கலகம் செய்தார்கள். அவர்களுக்குக் கிழக்குச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விஜயாதித்தியனும் கங்க மன்னன் முதலாம் ராசமல்லனும் உதவி செய்தார்கள். ஆனால், அமோக வருஷனுக்கு அவனுடைய சிற்றப்பன் மகனும் லாட்டாவில் ஆட்சி செய்தவனுமான கர்க்கன் எல்லா வகையிலும் உதவி செய்தான். அவன் துணைபெற்ற அமோக வருஷன் 821ஆம் ஆண்டுக்குள் கலகங்கள் அனைத்தையும் அடக்கித் தன் பதவியை உறுதிப்படுத்திக்கொண்டான். அவன் 66 ஆண்டு ஆட்சி செய்தான். ஆனால், அவனுடைய பரந்த ராஜ்யத்தில் எப்போதும் ஏதாவது ஓரிடத்தில் கலகமும் சண்டையும் நடந்துகொண்டுதான் இருந்தன. சுமார் 850ஆம் ஆண்டில் கிழக்குச் சாளுக்கியர், அமோகவருஷன்மீது போர் தொடுத்தனர். அப்போது கிழக்குச் சாளுக்கிய நாட்டில் அரசனாக இருந்தவன் மூன்றும் குணக விஜயாதித்தியன் என்பவன். அவன் இரண்டாம் விஜயாதித்தியனுடைய பேரன். அவன் கிழக்குச் சாளுக்கிய மரபில் மிகவும் திறமை வாய்ந்த அரசர்களுள் ஒருவன். எப்படி

யாவது வேங்கியை ராஷ்டிரகூட மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவன் பெருமுயற்சி செய்தான். ஆனால், கர்நூல் மாவட்டத்திலுள்ள ஸ்தம்பபுரி (கம்பம்) என்னும் இடத்திற்கு அருகிலிருந்த வீங்காவல்லி என்னுமிடத்தில் நடந்த சண்டையில் அமோகவருஷன் பெரு வெற்றியடைந்தான். அந்தச் சண்டையில் மிகப் பலர் உயிரிழந்தனர். தோல்வியடைந்த குணக விஜயாதித்தியன் அமோக வருஷனுக்குப் பணிந்து போனதோடு அவனுடைய் ஆட்சிக்காலம் முழுவதிலும் அவனிடம் உண்மையாகவும் நடந்துகொண்டான். ஆனால், வெகு விரைவில் கங்க நாட்டரசன் எறயன் என்பவன் (837–870) கலகம் செய்தான். அவனுக்கு நீதிமார்க்கன், ரண விக்கிரமன் என்னும் வேறு பெயர்களும் இருந்தன. அவன் முதலாம் ராசமல்லனுடைய மகன். அவனோடு மற்றச் சிற்றரசர்களும் சேர்ந்துகொண்டார்கள். அமோக வருஷனுடைய தானைத் தலைவன் பாங்கேசன் என்பவன் அந்தக் கலகத்தை அடக்கினான். ஆனால், அவன் முழு அமைதியையும் நிலைநாட்டுவதற்கு முன்னரே அவனை அமோக வருஷன் தலைநகருக்கு அழைத்துக்கொண்டான்; ஏனெனில், அதற்குள்ளாகத் தலைநகரிலேயே கலகம் மூண்டுவிட்டது. அந்தக் கலகத்தில் பட்டத்து இளவரசன் கிருஷ்ணனும் லாட்டாவில் ஆட்சிசெய்த முதலாம் துருவனும் சேர்ந்துகொண்டார்கள். தொடக்கத்தில் அமோகவருஷனுக்கு மிகத் திறமையாக உதவிசெய்த கர்க்கனுடைய மகன்தான் முதலாம் துருவன். பாங்கேசன் சண்டையில் முதலாம் துருவனைக் கொன்றுவிட்டு, அவனுடைய மகன் அகாலவருஷனோடும் பேரன் இரண்டாம் துருவனோடும் போரைத் தொடர்ந்தான். அதற்குள் துருவனுக்குப் பின்பக்கத்திலிருந்து ஆபத்து வந்துவிட்டது. குர்ஜர மன்னன் மிஹிரபோஜன் துருவனை எதிர்த்துக் கலகஞ் செய்தான். மேலும், அவனுடைய சுற்றத்தார் சிலரும் அவனுக்கு எதிராய்க் கிளம்பினார்கள். ஆதலால், 860ஆம் ஆண்டில் துருவன் அமோக வருஷனோடு சமாதானஞ் செய்துகொண்டான். பின்னர் அவன் மிஹிரபோஜனையும் தனக்கெதிராகக் கிளம்பிய சுற்றத்தார்களையும் அடக்கி, 867ஆம் ஆண்டுக்குள் மீண்டும் தன் அரியணையில் உறுதியாக அமர்ந்துகொண்டான்.

பாங்கேசன் தலைநகருக்குத் திரும்பிய பின்னர், கங்க நாட்டுக் கலகத்தை அடக்கும் வேலை குணக விஜயாதித்தியனிடம் ஒப்படைக்கப்பட்டது. கங்க மன்னனோடு நொலம்பநாட்டு வேந்தன் முதலாம் நொலம்பாதி ராஜனும் சேர்ந்து கலகஞ் செய்தான். அவனுக்கு மங்கி என்னும் வேறு பெயரும் இருந்தது.

குணக விஜயாதித்தியன் முதலில் நொலம்பநாட்டின் மீது படையெடுத்து, மங்கியைச் சண்டையில் கொன்ருன். அந்தச் சண்டை கங்கவாடிக்குச் செல்லும் வழியைத் திறந்துவிட்டது. அதனுல் குணக விஜயாதித்தியன் எளிதாகக் கங்கவாடிக்குள் நுழைந்து கங்கப் படையைத் தோல்வியுறச் செய்தான். வேறு வழியின்றி நீதிமார்க்கன் சமாதானஞ் செய்துகொண்டான்.

அமோகவருஷன் இயல்பாகவே சமயப் பற்றுடையவன் அவனுக்குப் போரைவிட இலக்கியத்தில் விருப்பம் அதிகம். பல சமயங்களில் அவன் தன் அவைக்களத்தை விட்டுவிட்டுச் சமணத் துறவிகளுடன் காலங் கழித்தானென்று நாம் அறிகிருேம். 'பிரச்சிருேத்தர ரத்தின மாலிகா' என்னும் ஒரு சிறிய சமண சமய விஞவிடை நூல் அவன் எழுதியதுதான் என்று சிலர் கூறுகின்றனர். எனினும், அவன் இந்து மதத்தைக் கைவிட்டுச் சமண மதத்தில் முறையாகச் சேர்ந்துகொண்டாஞ என்பது ஐயத்திற்கிடமானது. அவனே ஒரு நூலாசிரியன். அதனுல், அவன் நூலாசிரியர் பலரை ஆதரித்து அவர்களுக்குத் தாராளமாக நன்கொடைகளை அளித்தான். இந்திரனுடைய நகரைவிட அழகான ஒரு நகரை அமைக்க வேண்டுமென்று விரும்பிய அமோகவருஷன் மானியக்கேட நகரத்தைக் கட்டிப் புகழ் பெற்ருன். அவனுடைய மாளிகை ஒப்பனை மிகுந்தது. அதில் அரச மகளிர் தங்குவதற்கென்று மிகப்பெரிய அந்தப்புரம் ஒன்று இருந்தது. மாளிகையிலேயே ஒரு குளமும் இருந்தது. அமோகவருஷனுக்குப்பின் அவன் மகன் இரண்டாம் கிருஷ்ணன் பட்டத்துக்கு வந்தான் (880).

அந்தக் காலத்தைச் சேர்ந்த சேரர்களின் வரலாறு இன்னும் தெளிவற்றதாகவே இருக்கிறது. சேரநாடு இன்னும் பெருமாள் மரபினர் ஆட்சியிலேயே இருந்தது என்பது தோன்றுகிறது. பல்வேறு மரபுகளைச் சேர்ந்த அரசர்கள் சேரலத்தை வென்றதாகக் கூறிக்கொள்கிருர்களெனினும் அந்தக் கூற்றுகளை உறுதி செய்வதற்கேற்ற தெளிவான சான்றுகள் இல்லை. பல்லவ அரசன் முதலாம் நரசிம்மவர்மனும் பாண்டிய அரசன் சேந்தனும் சேரலத்தை வென்றதாகக் கூறிக்கொள்வதை நாம் முன்னரே கண்டோம். இரண்டாம் நந்திவர்மப் பல்லவமல்லன் தன்னுடைய பகைவஞன பாண்டிய மன்னன் முதலாம் வரகுணனை எதிர்ப்பதற்காகச் சேரமன்னனைத் துணையாகச் சேர்த்துக்கொண்டான். சிம்மவிஷ்ணு, மூன்ரும் நந்திவர்மன் ஆகிய பல்லவ அரசர்களும் சேர மன்னர்கள் தங்களுக்கடங்கிய சிற்றரசர்களாக இருந்தார்களென்று சொல்லிக்கொண்டார்கள். பல்லவ அரசவைக்கும்

சேர நாட்டிற்கும் பண்பாட்டுத் தொடர்பு இருந்தது என்பதற்குப் போதிய சான்று இருக்கிறது. மகேந்திரவர்மன் எழுதிய 'மத்த விலாச' நாடகத்தை மலபாரைச் சேர்ந்த பரம்பரை நடிகர்களான சாக்கைக்கூத்தாடிகள் விரும்பி நடித்தார்கள். தண்டி எழுதிய 'அவந்தி சுந்தரி கதாசாரம்' என்னும் நூலில் சேரநாட்டைப் பற்றிய மிகத் தெளிவான செய்திகள் பல இருக்கின்றன. மேலும், அவர் பல்லவ அரசவையில் இருந்த காலத்தில் சேர நாட்டிலிருந்து காஞ்சீபுரத்துக்கு வந்த கற்றறிந்த பார்ப்பனர் பலரைப்பற்றி அந்த நூலில் எழுதியிருக்கிறார். பாண்டியர் குலத்திலும் சேந்தன் மட்டுமன்றி ஏனைய அரசர்களில் ஏறக் குறைய ஒவ்வொருவருவருமே சேரநாட்டை வென்றதாகக் கூறிக்கொண்டார்கள். அதுபோலவே பாதாமிச் சாளுக்கியர் களில் இரண்டாம் புலிகேசன், முதலாம் விக்கிரமாதித்தியன், இரண்டாம் விக்கிரமாதித்தியன், இரண்டாம் கீர்த்திவர்மன் ஆகியோரும், ராஷ்டிரகூடர்களில் தந்திதுர்க்கன், மூன்றும் கோவிந்தன், மூன்றும் கிருஷ்ணன் ஆகியோரும் சேரலத்தை வென்றதாகக் கூறிக்கொண்டார்கள்.

பெருமாள் மரபில் கடைசி அரசர்களுள் ஒருவரான சேரமான் பெருமாள் எட்டாம் நூற்றுண்டின் இறுதியிலும் ஒன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். அவரைப் பற்றிப் பல கட்டுக் கதைகள் தோன்றியிருக்கின்றன. அவற்றுக்கு அடியில் அவருடைய உண்மையான வரலாறு மறைந்து கிடக்கிறது. அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவினுர் என்றும் மெக்காவுக்கு யாத்திரை போனுர் என்றும் கூறுகிற கதைகள் உண்மையல்ல என்று நாம் நம்பலாம். அவரை முஸ்லிம்கள் மட்டுமன்றிச் சமணர்களும், கிறிஸ்துவர்களும் சைவர்களும் தங்கள் தங்கள் சமயத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவதிலிருந்து அவர் சமயப் பற்று மிகுதியாய்ப்பெற்ற ஒரு சிறந்த மனிதர் என்று நாம் கூறலாம். சுந்தரமூர்த்தி நாயனுருக்கும் அவருக்கும் இருந்த தொடர்பை நாம் பின்பு கவனிப்போம். அவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டிருக்கக் கூடும். அவ்வாறு செய்வதற்கு முன் அவர் தம்முடைய ராஜ்யத்தைத் தம்முடைய சுற்றத்தார், சிற்றரசர் முதலியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்திருக்கலாமென்று நாம் கருதலாம், அவர் கி.பி. 825ஆம் ஆண்டில் திடீரென்று மறைந்து விட்டார். அந்த ஆண்டி லிருந்துதான் கொல்லம் ஆண்டு தொடங்குகிறது. அவ்வாறு தொடங்கிய புதிய சகாப்தம் சேரமான் பெருமான் சேரலத்தைப் பங்கு போட்டுக் கொடுத்த நிகழ்ச்சியைக் குறிக்கிறதா அல்லது சேர நாட்டின் மீது சங்கராச்சாரியார் தம்முடைய மதக் கட்டளை

களைச் சுமத்தியதைக் குறிக்கிறதா அல்லது கொல்லத்தில் யூத வாணிகர்கள் குடியேறிய நிகழ்ச்சியைக் குறிக்கிறதா[1] என்பதை நாம் உறுதியாகக் கூறமுடியாது. அந்தச் சகாப்தத்தைக் கொல்லத்தின் தோற்றத்தோடு தொடர்புபடுத்துகிற சில பொறிப்புகளும் அதன் அழிவினோடு தொடர்புபடுத்துகிற சில பொறிப்புகளும் இருக்கின்றன.

இந்தக் காலத்தின் அரசியல் வரலாற்றை முடிக்குமுன் கலிங்கத்தைப் பற்றிச் சில சொற்கள் கூறவேண்டும். இந்தக் காலம் முழுவதிலுமே கலிங்கம் கிழக்குக் கங்கர்களுடைய ஆட்சியில் இருந்தது. இந்தக் கங்கர்களுக்கும் மைசூரில் ஆட்சி செய்த கங்கர்களுக்கும் நமக்குத் தெரிந்த வரையில் எவ்விதத் தொடர்பும் இல்லை. கிழக்குக் கங்கர்கள் தங்கள் பொறிப்புகளில் தங்களுக்கே உரிய ஒரு சகாப்தத்தைச் சேர்ந்த ஆண்டுகளை எழுதிவைத்திருக்கிறார்கள். அந்தச் சகாப்தம் கி.பி. 498-ல் தொடங்கியது. அவர்கள் மற்ற ராஜ்யங்களோடு அதிகமாகத் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. ஆனால், கலிங்கத்துக்குத் தெற்கிலிருந்த தெலுங்கு நாட்டை ஆண்ட விஷ்ணுகுண்டினர்கள், அவர்களுக்குப் பின் வந்த கிழக்குச் சாளுக்கியர்கள் ஆகியவர்களுடைய அரசியல் நடவடிக்கைகள் சில சமயங்களில் கலிங்க நாட்டிலும் சில விளைவுகளைத் தோற்றுவித்தன. சுமார் 620-ல் இரண்டாம் புலிகேசன் கிழக்குத் தக்காணத்தின்மீது படையெடுத்த போது கலிங்கம் அவனுக்குப் பணிந்தது. அது போலவே, சுமார் 750-ல் ராஷ்டிரகூட அரசனை தந்திதுர்க்கனுக்கும் கலிங்கம் பணிந்திருக்கக்கூடும். ஆனால், கலிங்கர்கள் பொதுவாக அமைதியாய் வாழ்ந்தார்களென்றும், அண்டை நாட்டினர்க்கு அவர்கள் எவ்விதத் தொல்லையும் கொடுக்கவில்லை என்றும், மற்ற நாட்டினரும் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கவில்லை என்றும், நாம் அவர்களுடைய பொறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

இந்தக் காலத்தின் ஆட்சியமைப்பைப்பற்றிக் கூறுமுன் பண்டைக்கால இந்தியர்களுடைய அரசியற் கருத்துகளின் தன்மைகளை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த அடிப்படை இயல்புகளைத் தெரிந்து கொண்டாலொழிய இந்தப் பொருள் பற்றிய உண்மையான அறிவை நாம் பெற முடியாது. முதலில், அவர்கள் அரசினிடமிருந்து அதிகமாக

[1] கொல்லம் ஆண்டை வேறு சில நிகழ்ச்சிகளோடும் சிலர் தொடர்புபடுத்துகின்றனர்.

எதையும் எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். வழக்கிலிருந்த சமுதாய அமைப்பைக் காப்பது அரசன் கடமை. அந்த அமைப்புக்கு உள்நாட்டுக் கலகங்களாலும் வெளிநாட்டுப் படையெடுப்புகளாலும் ஊறு நேராமல் அரசன் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வேலைக்குக் கூலியாக அரசன் குடிகளிடத்தில் வரி வசூல் செய்து கொள்ளலாம். வரிகளில் முக்கியமானது நிலவரி. விளைவில் ஆறில் ஒரு பங்கை அரசன் எடுத்துக் கொள்ளலாம். வழக்கிலிருந்த சமுதாய அமைப்புக்கு அடிப்படையானவை ஸ்ருதி, ஸ்மிருதி, ஆசாரம் என்பவையாகும். குடிமக்களுடைய சமுதாய, பொருளாதார, சமய வாழ்க்கையில் அரசன், பொதுவாகத் தலையிடமாட்டான். அத் துறைகள் அவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை என்றே கூறலாம். ஆனால், அத் துறைகளில் குடிமக்களுக்குள் ஏற்படுகிற சச்சரவுகள் அரசின் கவனத்திற்கு வரும்போது அவனும் அவனுடைய நீதி மன்றங்களும் விசாரணை செய்து நீதி வழங்கவேண்டும். குடிமக்களுடைய அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் கவனித்துக் கொள்வதற்குப் பிறர் கட்டுப்பாடில்லாமல் இயங்கிய பலவேறு குழுக்களும் சங்கங்களும் இருந்தன. அவைகள் தொழில், சாதி, சமயம், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்து செயற்பட்டவை. அந்தக் குழுக்களும் சங்கங்களும் பழங்காலத்திலிருந்து வழி வழி வந்த மரபுகளை நடைமுறைக் கோட்பாடுகளாக ஏற்றுக் கொண்டன. ஆனால், தேவையான போது, அவை புதிய நடைமுறைகளையும் பின்பற்றுவதற்குத் தயங்கவில்லை.

குழுக்களும் சங்கங்களும் தத்தமக்குரிய விதிகளின்படி அமைந்தவை. அந்த விதிகளை, பொதுவாக, உறுப்பினர் அனைவரும் நன்றாக அறிந்திருந்தனர். அவை அவ்வப்போது தோன்றும் புதிய நிலைமைகளுக்கேற்றவாறு நெகிழ்ந்து கொடுக்கும் திறம் பெற்றவை. பொதுவாக, சங்கத்தின் அமைப்புவிதிகளின்படி ஒரு பொதுச் சபையும் ஒரு செயற்குழுவும் இருந்தன. பொதுச் சபை ஆண்டுக்கொருமுறை, யாதேனும் ஒரு விழாவின் போதோ வேறு முக்கியமான நிகழ்ச்சி நடைபெறும் போதோ கூடும். சங்கத்தின் அன்றாட அலுவல்களைச் செயற்குழு கவனித்துக் கொள்ளும். விதிக்கப்பட்ட சில தகுதிகளை உடையவர்களே செயற்குழுவின் உறுப்பினராக முடியும். திருவுளச் சீட்டுப் போட்டு அவர்களைத் தேர்ந்தெடுப்பது பொது வழக்கம். பெரும்பான்மை அடிப்படையில் முடிவுகளைச் செய்வதும் உண்டு. என்றாலும், இயன்றவரையில் எல்லா முடிவுகளையும் ஏகமன

தாகச் செய்வதற்கே உறுப்பினர் முயன்றனர். உறுப்பினரின் நலன்களைப் பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டபோதெல்லாம் அவற்றின் பலவேறு தன்மைகளையும் விவாதித்து, ஒருங்கிணைந்த கருத்துகளை ஏற்று, ஏகமனதான முடிவுக்கு வருவதற்கு அனை வரும் முயன்றனர். நானாதேசிகள் சங்கம், மணிக்கிராமம், ஐய வோல், ஐந்நூறு போன்ற வாணிகச் சங்கங்களும், கன்னார் செக்கார் நெசவுக்காரர் போன்ற தொழிலாளிகள் சங்கங்களும், மாணவர் துறவிகள் புரோகிதர் கோயிற் பணியாள்கள் போன்ற வர்களுடைய சங்கங்களும் அரசின் தலையீடின்றி ஏறக்குறையச் சுயேச்சையாகச் செயற்பட்டன. அதுபோலவே, ராஜ்யத்தின் நிர்வாகப் பிரிவுகளான கிராம சபையும் கோட்டச் சபையும் ஏறக் குறையச் சுயேச்சையாகவே செயற்பட்டன.

இரண்டாவதாக, வழக்கிலிருந்த சமுதாயத்தைக் காக்கும் கடமை, கொள்கையடிப்படையில், க்ஷத்திரியர்களைச் சேர்ந்த தெனினும், ஒரு குறிப்பிட்ட பகுதியில் அந்தப் பணியைச் செய் வதற்குத் தகுதியும் விருப்பமும் உடைய ஒருவன் தானாகவே முன்வந்து, அந்தப் பணியை மேற்கொண்டால், அந்தப் பகுதியின் மக்கள் அவனையே அரசனாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். எனவே, துணிச்சலும் ஆவலும் உடைய எவனும் போரில் வெற்றி பெறுவதன் வாயிலாக அரசனாக முடியும். அவ்வாறு அரசனானபின் அவன் குடிமக்களுடைய மதிப்பைப் பெறுவதற்கான செயல்களில் ஈடுபடுவான். பொது மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் தாராள மான மானியங்களையும் நன்கொடைகளையும் கொடுத்தும், இலக்கியத்திற்கும் கவின்கலைகளுக்கும் ஆதரவளித்தும், தன்னையும் தன் குடும்பத்தையும் புகழ்ந்துபாடுமாறு புலவர்களை ஊக்கியும் அவன் குடிமக்களுடைய அன்பையும் மதிப்பையும் பெறுவான். மேலும், நாடு பிடிப்பது அரசனுடைய ஏற்றுக் கொள்ளப்பட்ட கடமைகளுள் ஒன்றாய் இருந்தது. அதனால், போர் அடிக்கடி நடந்துகொண்டேயிருந்தது. அந்தப் போர்களில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வந்ததால் அரசர்களுக்குள் யார் பெரியவர், யார் சிறியவர் என்ற நிலைமையும் அடிக்கடி மாறிக் கொண்டேயிருந்தது.

முடிவாக, அரசியல் மாறுதல்கள் இந்திய மக்களின் சமுதாய அமைப்புகளிலும் நாகரிக வளர்ச்சியிலும் ஏனைய நாடுகளில் நிகழ்ந்தவை போன்ற அவ்வளவு பெரிய விளைவுகளை உண்டாக்கி விடவில்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். மேலே நாம் கண்ட இயல்புகளே அதற்குக் காரணமென்பது

தெளிவு. எனினும், நீண்ட காலம் நிலைத்து நிற்கும் ஒரு வளமும் வலிமையும் மிக்க பேரரசின் ஆட்சிக் காலத்தில் மக்கள் முயற்சிகள் மிகச் சிறந்த பயன் விளைக்கும் என்பதையும் இலக்கியமும் கவின் கலைகளும் சிறந்த வளர்ச்சி பெறும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தன்னாட்சியும் தன்னிறைவும் பெற்ற கிராமந்தான் மக்களுடைய வாழ்க்கை முறையும் மரபுகளும் தொடர்ந்து வழக்கிலிருப்பதற்கும், சமுதாய அமைப்புச் சிதைந்து போகாமலிருப்பதற்கும், அரசியல் உலகில் நடைபெற்ற புரட்சிகளாலும் குழப்பங்களாலும் சமுதாய வாழ்க்கைக்கும் தனி மனித வாழ்க்கைக்கும் ஊறு நேராமல் தடுப்பதற்கும் உதவிய அமைப்பு. அதுதான் அரசியல் அமைப்பாகிய உடலுக்கு மூல உயிரணு. நாடு முழுதும் பரவிக்கிடக்கும் நூற்றுக்கணக்கான பொறிப்புகள் கிராமத்தின் பல்வேறு நிர்வாக அமைப்புகளின் உள்ளுரத்திற்குச் சான்று பகர்கின்றன. பொதுவாக, ஒவ்வொரு கிராமத்திலும் பல குடும்பங்கள் இருந்தன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியான வீடு இருந்தது. வீடுகளெல்லாம் கிராமத்தின் குடியிருப்புப் பகுதியில் இருந்தன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமான தனித்தனியான விளைநிலங்கள் இருந்தன. கிராமக் குடும்பங்கள் அனைத்திற்கும் பொதுவான தரிசு நிலங்களும் இருந்தன. அவற்றில் கிராம மக்கள் தங்கள் கால்நடைகளை மேய்த்துக் கொள்ளலாம். கிராமத்திற்கு அருகிலிருந்த காடுகளும் கிராம மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றில் அவர்கள் தங்களுக்குத் தேவையான விறகை வெட்டிக் கொள்வார்கள். பல்லவப் பொறிப்பொன்று ஒரு கிராமத்தில் அரசனுக்குச் சொந்தமான நிலம் ஒன்றைக் குறிப்பிடுகிறது. பண்டை இந்தியாவில் நிலம் முழுதும் அரசனுக்கே சொந்தமாயிருந்தது என்று சிலர் கூறும் கருத்துக்கு இந்தச் செப்பேடு நேர் முரணான சான்று தருகிறது. கிராமத்தின் எல்லைகளையும் தனிப்பட்டவர் நிலங்களையும் சரியானபடி அளந்து அவற்றைப்பற்றிய குறிப்புகள் ஒழுங்காகப் பதிவு செய்து வைக்கப்பட்டிருந்தன. பொது நலன்களைப் பற்றிக் கலந்து பேசவும், வழக்குகளை விசாரிக்கவும், நீதி வழங்கவும் கிராம மக்கள் அவ்வப்போது ஒன்றுகூடினார்கள். முதலில், அவ்வப்போது நேர்ந்த தேவைகளுக்கு ஏற்ப, முன்னேற்பாடின்றித் தாற்காலிகமாக அமைந்து, ஒருவகை அச்சமும் ஐயமும் கலந்த முறையில் செயற்பட்ட கிராமக் கூட்டங்கள் நாளடைவில் நிரந்தர வாரியங்களையும் அலுவர்களையும் பெற்ற சிறந்த நிர்வாகச் சபைகளாக வளர்ந்தன. பத்து பதினொன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த சோழப் பொறிப்புகள் இத்தகைய நுட்ப உறுப்புகள்

நிறைந்த சிக்கலான கிராம நிர்வாகத்தைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. இத்தகைய வளர்ச்சி தென்னிந்தியா முழுவதிலும் பொதுவாக நிகழ்ந்த ஒன்றுதானெனினும், தமிழகத்தில்தான் அது மிக முற்போக்கான இயல்புகளைப் பெற்றது. கிராமத் தலைவனுக்கு முதுதன், கிழான், கிராமபோஜகன் என்னும் பல பெயர்கள் வழங்கின. அவன் கிராம மக்களுக்காக அரசுடன் பேசும் இடையீட்டாளனாகவும் இருந்தான். அவன் எவ்வாறு அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டான், அந்தப் பதவி பரம்பரையாக வந்ததா என்பவற்றை நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. கிராமத் தலைவனையும், கிராம சபையையும் தவிர, கிராமத்துப் பெரிய மனிதர்களும் (மூத்தோர்) பொறிப்புகளில் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.

எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ப் பொறிப்புகள் மூவகைக் கிராம சபைகளைக் குறிப்பிடுகின்றன. அவை, ஊர், சபை, நகரம் என்பவை. ஊர் என்பது கிராமத்தில் நில உடைமை பெற்றிருந்த அனைவர்க்கும் பொதுவானது. சபை என்பது பார்ப்பனர்க்கு மானியமாகத் தரப்பட்ட கிராமங்களிலிருந்தது. அத்தகைய கிராமங்களிலிருந்த நிலம் முழுவதும் பார்ப்பனர்க்கே சொந்தம். சபையில் பார்ப்பனரைத் தவிர வேறு யாரும் உறுப்பினராயிருக்க இயலாது. அந்த இரண்டு அமைப்புகளின்றும் வேறுபட்டது நகரம் என்ற அமைப்பு. அது வணிகர்கள் அதிகமாக இருந்த ஊர்களில் செயற்பட்டது. சில ஊர்களில் அந்த மூன்று அமைப்புகளும் ஒருங்கே இருந்தன. தேவையான போதெல்லாம் அவை தமக்குள் கலந்து பேசியது மட்டுமன்றி அங்கே இருந்த தொழிலாளர் சங்கம் போன்ற ஏனைய சங்கங்களையும் கலந்து பொதுவான முடிவுகளைச் செய்தன. மொத்தத்தில், அந்த அமைப்புகள் செய்த முடிவுகள் எல்லாருடைய நலன்களையும் கருத்திற்கொண்டு செய்யப்பட்டவையாக இருக்க வேண்டுமென்பது முக்கியமானது. கிராம சபைகள் நீர்ப்பாசன உரிமைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், அறக்கட்டளைகளை நிர்வகிப்பதற்கும், ஏரிகளையும் சாலைகளையும் பராமரிப்பதற்கும், கோயிற் பணிகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் தேவையான எல்லா வேலைகளையும் செய்தன. அந்த வேலைகளை அவை நேராகவோ தம் கீழ்ப் பணிபுரிந்த வாரியங்கள் நிர்வாக அலுவலர்கள் வாயிலாகவோ செய்தன. கிராமச் சபைகள் செயற்படுவதற்குத் தேவையான நடைமுறை விதிகளைத் தாமே இயற்றிக்கொண்டன.

தக்காணத்தில் கிராம நிர்வாகம் நடைபெற்ற முறைகளைப் பற்றிய பல குறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கிராமத்

தலைவனை 'காமுண்டனு'டைய தலைமையில் கிராமப் பணிகளைச் செய்த 'மகாஜனங்களை'ப் பற்றி அந்தக் குறிப்புகள் கூறுகின்றன. அங்கெல்லாம் அரசு அலுவலர்கள் கிராம சபைகளோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தார்கள். ஆனால், தன்னாட்சி உரிமையை அதிக அளவில் பெற்றிருந்த தமிழகக் கிராம சபைகள் அரசு அலுவலர்களோடு அவ்வளவு நெருங்கிய தொடர்பை வைத்துக்கொள்ளவில்லை.

தனி விலக்குப் பெறாத கிராமங்களில் உப்பைத் தோண்டி யெடுக்கவும், சர்க்கரையை உற்பத்திசெய்யவும், குற்றவாளி களைக் கைது செய்யவும், அரசு அலுவலர்களுக்கு உரிமை இருந் தது. அரசு அலுவலர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது அவர் களுக்குத் தேவையான இருப்பிடம், படுக்கை, புழுங்கலரிசி, பால், தயிர், காய்கறி, விறகு, புல் முதலிய பொருள்களை கிராம மக்கள் தரவேண்டும். மேலும், வண்டி இழுப்பதற்குத் தேவையான எருதுகளையும் அவர்களே கொடுக்கவேண்டும்; அவற்றைத் தவிரக் கிராம மக்கள் குறிப்பிட்ட சில பொதுப் பணிகளைச் செய் வதற்கு ஊதியமில்லாத உழைப்பையும் தரவேண்டும். நில வரி செலுத்துவதையும் அரசு அலுவலர்களுக்குத் தேவையான வசதி களை அவ்வப்போது செய்து தருவதையும் தவிரக் கிராம மக்கள் வேறுபல நேர்முக வரிகளையும் மறைமுக வரிகளையும் கட்டினார்கள். வீட்டு வரி, தொழில் வரி, சந்தை வரி, வாணிகப் பொருள்களின் புடை பெயர்ப்புமீது விதிக்கப்பட்ட சுங்க வரி முதலியவற்றையும் குடிமக்கள் செலுத்தினார்கள். மேலும், நீதி மன்றக்கட்டணத் தையும் அபராதத் தொகையையும் அவர்கள் செலுத்தினார்கள். அரசருடைய கருவூலத்தை நிரப்புவதற்காக இந்திய மக்கள் பல வரிகளைச் செலுத்தினார்கள் என்று இந்தியாவின் மேற்குப் பகுதியை நன்றாக அறிந்திருந்த அராபிய நூலாசிரியர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இவ்வாறு மைய அரசுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கட்டாயமாகச் செலுத்திய பல வரிகளோடு கோயில், குளம், அன்ன சத்திரம், கல்வி நிலையம், மருத்துவமனை போன்ற பொது நிறுவனங்களைப் பராமரிப்பதற்காகக் குடிமக்கள் தாங்களாகவே முன்வந்து கொடுத்த நன்கொடைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். இத்தகைய நன்கொடைகளைப் பெரும்பாலும் வணிகர்கள் கொடுத்தார்கள்.

நிர்வாகத் துறையில் கிராமத்திற்கு மேற்படியில் ஆஹாரம், ராஷ்டிரம், நாடு, கோட்டம், விஷயம் என்று பல வேறிடங்களில் பல்வேறு காலங்களில் வழங்கிய பிரிவுகள் இருந்தன. பல இடங் களில் ராஷ்டிரம் ஒரு பிரிவையும் விஷயம் வேறொரு பிரிவையும்

குறித்தன என்றும், ராஷ்டிரம் விஷயத்தைவிடப் பெரியது என்றும் அறிகிறோம். தமிழகத்தில் பெரிய பிரிவு பொதுவாக வளநாடு அல்லது மண்டலம் என்று வழங்கியது. இத்தகைய பெரிய பிரிவுகளின் பரப்பு பல சமயங்களில், வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் தற்செயலாக அமைந்ததாய் இருந்தது. எடுத்துக்காட்டாக, பாதாமிச் சாளுக்கியர் காலத்துப் பாணராஜ விஷயத்தைக் குறிப்பிடலாம். இத்தகைய பிரிவுகளின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு மூத்தோர் குழுவும், தேசபோஜகன் நாட்டுக்கோன் போன்ற பல பெயர்களில் வழங்கிய நிர்வாக அலுவலரும் இருந்தார்கள்.

மாகாண நிர்வாகத்திற்குப் பெரும்பாலும் அரசகுமாரர்கள் தலைவர்களாய் இருந்தார்கள். அரச குடும்பத்தில் ஒற்றுமை நிலவியபோது இந்த ஏற்பாடு நல்லதாகத்தான் இருந்தது. ஆனால், அரச குடும்பத்தினர்க்குள் பூசல் தோன்றியபோது அதனால் பல தொல்லைகள் நேர்ந்தன. பல சமயங்களில் அந்த ஏற்பாடு கலகத்துக்கும் உள்நாட்டுப்போருக்கும் காரணமாயிற்று. எடுத்துக்காட்டாக, இரண்டாம் புலிகேசன் சாவுக்கும் முதலாம் விக்கிரமாதித்தியன் அரியணையேறியதற்கும் இடையில் நிலவிய குழப்பத்தைக் கூறலாம். அமைதியைக் காப்பதற்கும் குடிமக்களுடைய உயிரையும் உடைமையையும் காப்பதற்குமெனத் தனியாக நியமிக்கப்பெற்ற அலுவலர் குழாங்கள் இருந்தன. அவர்களுக்கு வெவ்வேறு ராஜ்யங்களில் வெவ்வேறு பெயர்கள் இருந்தன. உள்ளூர்க் காவலைக் கிராம அலுவலர்கள் ஓரளவு கவனித்துக் கொண்டார்கள். அமீனுக்கள் ஊரூராகச் சென்று அரசின் ஆணைகளையும் நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு அந்தக் காலத்தில் சாசன சங்காரிகள் என்பது பெயர். அவர்களுக்கு உதவி செய்வதற்கு படர்கள் என்ற கான்ஸ்டபில்களும் இருந்தார்கள். கோசாத்யட்சர் என்ற அலுவல் பெயர் பெற்ற கருவூலக் கண்காணிப்பாளர்களும், விளை நிலங்களை அளந்து கணக்கிட்டுப் பதிவு செய்த நிலக்களத்தார், அதிகாரி என்ற அலுவல் பெயருடைய அரசு ஊழியர்களும் அந்தக் காலத்தில் இருந்தார்கள் என்று நாம் அறிகிறோம். இறுதியாக, வாயில் கேட்பார் என்றும் ரகசியாதிகிரித்தர் என்றும் வழங்கிய அலுவர்களிருந்தார்கள். அரசன் பிறப்பித்த வாய்மொழி ஆணையைக் கேட்டு அதனை விளம்பரப் படுத்துவது அவர்களுடைய வேலை. அவர்கள் இந்தக் காலத்துச் செயலாளர் போன்றவர்கள். அரசனுக்கு அருகிலிருந்து, அவன் பிறப்பிக்கின்ற வாய்மொழிக் கட்டளைகளைக் கேட்டுப் பின்னர் அவற்றை உரிய முறையில் எழுதித் தக்க நடவடிக்கை எடுப்பதற்

காக அவற்றை உரிய அலுவலர்களுக்கு அனுப்புவது அவர்களுடைய கடமை. அத்தகைய ஆணைகள் சாளுக்கியர் காலத்திலும் ராஷ்டிரகூடர் காலத்திலும் ராஜசிராவிதம் என்று வழங்கின. கிராம நீதி மன்றங்கள், சாதித் தொழில் பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றைத் தவிர, வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவதற்காக மைய அரசின் அதிகாரத்தில் இயங்கிய அதிகரணம் அல்லது தர்மாசனம் என்று வழங்கிய நீதி மன்றங்களும் இருந்தன. அந்த நீதி மன்றங்களுக்கு அரசு ஊழியர்கள் தலைமை தாங்கினார்கள். அவர்களுக்குச் சட்டத்தின் நுட்பங்களை எடுத்துக் கூறுவதற்காக தர்மாசன பட்டர் என்னும் ஆலோசகரும் இருந்தனர். நீதி மன்றங்கள் ஊழலில்லாதவை என்று சொல்ல முடியாது என்பதை மகேந்திரவர்மன் எழுதிய மத்த விலாச நாடகத்தில் வருகிற ஒரு காட்சியின் வாயிலாக அறிகிறோம்.

நந்திவர்ம பல்லவமல்லன் அரியணையேறுவதற்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மந்திரி மண்டலத்தார் கலந்து கொண்டனர் என்பதை நாம் அறிவோம். எனினும், முறையாக அமைக்கப்பெற்ற அமைச்சரவை இருந்தது என்று கூறுவதற்குத் தெளிவான சான்று எதுவும் இல்லை.

அரசன் நாட்டுக்குத் தலைவன்; அவனே மேதகைமையின் ஊற்றுக்கண்; அவன் தான் நீதிபதியும் போர்த்தலைவனும் ஆவான். இந்தக் காலத்துக்கு முற்பட்ட காலத்தில் சமணமும், புத்தமும் உயர்ந்த நிலையில் இருந்தன. ஆதலால் இந்தக் காலத்தின் தொடக்கத்தில் அரசோச்சிய வேந்தர்கள் அந்த மதங்களுக்கு எதிராக வேத தர்மத்தை ஆதரித்து அதன் வளர்ச்சிக்கான பணிகள் எல்லாவற்றிலும் ஈடுபட்டார்கள். அவ்வாறு செய்தமைக்கு அடையாளமாக அவர்கள் 'தர்ம மகாராஜாதி ராஜர்' என்னும் பட்டப் பெயரை வைத்துக்கொண்டார்கள். ஆனால் சமண அரசர்களும்—முக்கியமாக கங்க வமிசத்தில்—இருந்தார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அரசர்கள் தாங்கள் பின்பற்றிய சமயங்களுக்குத் தனிச் சலுகை காட்டினார்கள். ஆனால், அந்த மதத்தை மற்றவர்மீது சுமத்துவதற்கு அவர்கள் முயலவில்லை. எல்லா மதங்களுக்கும் ஆதரவு தருவதை அவர்கள் ஒரு நடைமுறைக் கோட்பாடாக வைத்துக்கொண்டார்கள் என்பது பொருத்தமாக இருக்கும். அரசியல் புரட்சி நடந்தால், அது முடிந்த பிறகு அரியணையேறும் புதிய அரசன் குடிமக்களின் உடைமைகள் அறக்கட்டளைகள் முதலியவற்றில் முன்பிருந்த உரிமைகளை மதித்து நடக்கப்போவதாக வெளிப்படையாகவும் தெளிவாகவும் விளம்பரப்படுத்துவதன் மூலம்

நாட்டின் பொருளாதார சமுதாய அமைப்புகள் அழிந்து போகாமல் காத்தான்.

அரசுரிமை, பொதுவாக, பரம்பரையாக வந்தது. ஆண் மக்களுள் மூத்தவன் அரசனுவது மரபு. அந்தக் காலத்தில் வழக்கிலிருந்த மிக உயர்ந்த தரமான கல்விப் பயிற்சியை அரச மக்கள் பெற்ருர்கள். அவர்கள் இலக்கியம், சட்டம், தத்துவம் (மெய்யறிவு) முதலிய துறைகளில் பயிற்சி பெற்ருர்கள். உயர் தரப் போர்த்துறைப் பயிற்சியையும் பெறுவது அவர்களுக்கு இன்றியமையாதது என்பது தெளிவு. மேலும், அவர்களுடைய ஈடுபாடுகளுக்கும் திறன்களுக்கும் ஏற்ற பதவிகளை வகிப்ப தற்குத் தேவையான நிர்வாகப் பயிற்சியும் அவர்கள் பெற்ருர்கள். இரண்டாம் புலிகேசனுடைய அரசுரிமையை நிரந்தரமாகப் பறித்துக் கொள்வதற்காக மங்களேசன் செய்த முயற்சி தோல்வி யுற்றதற்கு ஒரு முக்கியமான காரணம் பொதுமக்கள் புலிகேசனை ஆதரித்ததுதான். அது போலவே, இரண்டாம் புலிகேசன் இறந்த பிறகு சாளுக்கிய ராஜ்யம் அழிந்து போகாமற் காப் பாற்றிய முதலாம் விக்கிரமாதித்தியனைப்பற்றியும் நாம் முன்னர்ப் பேசினேம். விக்கிரமாதித்தியன் புலிகேசனுடைய முதல் மகன் அல்லன் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அன்றியும், பல்லவ வமிசத்தின் முதன்மைக் கிளையில் அரியணையேறும் உரிமைப்பெற்ற ஆண் மகன் இல்லாமற்போகவே பல்லவக் கிளை மரபினனை இரண்டாம் நந்திவர்மன் அரசனுகத் தேர்ந்தெடுக்கப் பட்டதையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும். ஸ்ரீமாற பாண்டியன் தன் இளைய மகனுக்கு முதன்மையளித்ததையும், பாண்டி நாட்டின்மீது வெளியார் படையெடுத்ததையும், அதனுல் அந் நாட்டுக்கு ஏற்பட்ட சேதத்தையும், அந் நாடு சில காலம் பல்லவர்க்கு அடங்கியிருந்ததையும் நாம் அறிவோம். ராஷ்டிரகூட வமிசத்திலும் கிழக்குச் சாளுக்கிய வமிசத்திலும் பல அரசுரிமைப் போட்டிகள் ஏற்பட்டன. அதனுல், பல உள் நாட்டுப் போர்கள் நடந்தன. கிழக்குச் சாளுக்கிய வமிசத்தில் நடந்த அரசுரிமைப் போட்டிகளால் உண்டான தீங்கு, ராஷ்டிர கூடர் தலையீட்டால் அதிகமாயிற்று. துருவன் தன் மூத்த மகன் கம்பனுடைய உரிமையை மறுத்துத் தன்னுடைய இளைய மகன் மூன்ரும் கோவிந்தனுக்கு அரசுரிமை வழங்கியதால் உள்நாட்டுப் போர் மூண்டது. ஆனுல், பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் துருவன் செய்தது சரியென்று மெய்ப்பித்தன.

அரச மரபினர் தமக்கே உரிய கொடியையும் முத்திரையை யும் வைத்திருந்தார்கள். அவர்களுடைய பொறிப்புகளில் அவை

முக்கிய இடம் பெறுகின்றன. அரச மாளிகை மிகவும் ஆடம்பர மாக இருந்தது. போரில் கைப்பற்றிய யானைகளும் குதிரை களும் அரண்மனை வாயிலில் பலரும் பார்க்குமாறு கட்டி வைக்கப்பட்டன. அரசனோடு அரசிகளும் சரிநிகர் சமானமான இடத்தை வகித்தார்கள். துருவனுடைய பட்டத்து அரசி யான சீல பட்டாரிகை என்பவள் பரமேசுவரி, பரம பட்டாரிகை என்னும் பேரரசு பட்டங்களைப் பெற்றிருந்தாள்; தன் விருப்பப் படி நில மானியங்களை அளித்தாள்; நிர்வாக அலுவலர் பின் பற்றுவதற்கான ஆணைகளைத் தானே பிறப்பித்தாள். பல்லவ அரசன் ராஜசிம்மனுடைய மனைவியான ரங்கபடாகா என்பவள் கைலாசநாதர் கோயிலைக் கட்டும் பணியில் ஈடுபட்டாள். கொள்கையளவில், அரசன் தனி வல்லாட்சி செய்யும் வரம் பில்லாத அதிகாரம் பெற்றிருந்தான். ஆனால், நடைமுறையில் அவனுக்குச் சில தடைகள் இருந்தன. அரச குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் அனைவரும் அரசியல் நிர்வாகத்தில் பங்கு பெற்றூர்களாதலால், அவனுடைய நடைமுறைக் கோட்பாடுகளை உருவாக்குவதில் அவர்கள் கருத்துக்கும் இடமிருந்தது. நிர்வா கத்தை நடத்துவதில் அரசனுக்கு உதவ உயர் பதவி வகித்த ஊழியர் பலர் இருந்தனர். அந்தப் பதவிகளிற் பலவற்றின் உரிமை பரம்பரையாக வந்தது. ஊழியர்களில் பலர் உயர் குலத்தில் தோன்றியவர்கள்; திறமையும் நற்குணமும் உடைய வர்கள். ஆதலால், அரசன் அவர்களை மிகவும் மதித்தான். அன்றியும் நாட்டில் பல சிற்றரசர்கள் இருந்தார்கள் என்பதையும், சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்காக ஏற்பட்ட பல சங்கங்களும் சபைகளும் இருந்தன என்பதையும் நாம் அறிவோம். இந்தக் காரணங்களால் திறமையற்ற அல்லது நெறி தவறிய அரசனுடைய ஆட்சியால் ஏற்படக்கூடிய விளைவுகளின் தீமைகள் மிகவும் குறைந்துபோயின.

## BIBLIOGRAPHY

A. S. Altekar: 'The Rastrakutas and their Times' (Poona, 1934)
H. W. Codrington: 'A Short History of Ceylon' (London, 1929)
J. F. Fleet: 'Dynasties of the Kanarese Districts' (Bombay Gazetteer, Vol. 1, Pt. II, Bombay, 1896)
R. Gopalan: 'Pallvas of Kanchi' (Madras, 1928)
'Indian Archaeology Annual Review' (Arch, Survey of India)
G. Jouveau-Dubreuil: 'The Pallavas' (Pondicherry, 1917)
C. Minakshi: 'Administration and Social Life under Pallavas' (Madras, 1938)
B. L. Rice: 'Mysore and Coorg from Inscriptions' (London, 1909)
K. A. N. Sastri: 'Pandyan Kingdon' (London, 1929)

**பாதாமிச் சாளுக்கியர்**

முதலாம் ஜெயசிம்மன்
- ரண ராகா
  - முதலாம் புலிகேசன் (533/4–566)
    - முதலாம் கீர்த்திவர்மன் (566/7–597/8)
      - இரண்டாம் புலிகேசன் (609/10–642)
        - சந்திராதித்தியன்
        - ஆதித்திய வர்மன்
        - விக்கிரமாதித்தியன் (654/5–681)
          - வினயாதித்தியன் (681-696)
            - விஜயாதித்தியன் (696–733/34)
              - இரண்டாம் விக்கிரமாதித்தியன் (733/34–744/45)
                - இரண்டாம் கீர்த்திவர்மன் (744/45-755)
        - ஜெயசிம்மன்
        - அம்பரன்
      - விஷ்ணுவர்த்தனன்
      - ஜெயசிம்மன்
    - மங்களேசன் (597/8–609/10)

## பல்லவர்

1. சிம்மவர்மன் (550–560)

2. சிம்ம விஷ்ணு (560–80)
3. முதலாம் மகேந்திர வர்மன் (580–630)
4. முதலாம் நரசிம்மவர்மன் (630–668)
5. இரண்டாம் மகேந்திரவர்மன் (668 670)
6. முதலாம் பரமேசுவரவர்மன் (670–700)
7. இரண்டாம் நரசிம்மவர்மன் (700–728)

மூன்றும் மகேந்திவர்மன் (யுவராஜன் 720–728)

8. இரண்டாம் பரமேசுவர வர்மன் (728–731)

பீமவர்மன்

புத்தவர்மன்

ஆதித்தியவர்மன்

கோவிந்தவர்மன்

இரணியவர்மன்

9. இரண்டாம் நந்திவர்மன் (731–796)
10. தந்திவர்மன் (796-847)
11. மூன்றும் நந்திவர்மன் (846 – 869)

12. நிருபதுங்க வர்மன் (859 899)
13. அபராஜிதன் (885-903)
14. கம்பவர்மன் (870–912?)

**பாண்டியர் (590–920)**

1. கடுங்கோன் (590–620)
2. மாறவர்மன் அவனி சூளாமணி (620–645)
3. சேந்தன் (654–670)
4. அரிகேசரி மாறவர்மன் (670–700)
5. கோச்சடையன் (700-730)
6. முதலாம் மாறவர்ம ராஜசிம்மன் (730–765)
7. ஜடில பராந்தக நெடுஞ்சடையன் (756–815)
8. ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் (815–862)

9. இரண்டாம் வரகுணவர்மன் (862–885)

10. பராந்தக வீரநாராயணன் (860–905)

11. இரண்டாம் மாறவர்ம ராஜசிம்மன் (905–920)

# 9. எஞ்சி நின்ற இரு பேரரசுகள்

*பொது இயல்புகள்: விஜயாலய சோழன், முதலாம் ஆதித்தியன்—திருப்புறம்பியப் போர்—அபராஜித பல்லவன் வீழ்ச்சி—முதலாம் பராந்தகனும் அவன் வெற்றிகளும்—ராஷ்டிரகூட இரண்டாம் கிருஷ்ணன்—வல்லாளப் போர்—மூன்றாம் இந்திரன், நான்காம் கோவிந்தன், மூன்றாம் அமோக வருஷன், மூன்றாம் கிருஷ்ணன்—சோழ நாட்டின் மீது படையெடுப்பு—தக்கோலப் போர்—விளைவுகள்—வேங்கியும் மாளவமும்—கொட்டிகன்—இரண்டாம் தர்க்கன்—சாளுக்கிய இரண்டாம் தைலன் வலிமை பெறுதல்—முதலாம் பராந்தகனுக்குப் பின் சோழ நாட்டு நிலை—முதலாம் ராஜ ராஜனும் அவன் பணிகளும்—இரண்டாம் தைவனும் பரமாரர்களும்—சத்தியாசிரயன்—வேங்கியின் நிலை—சாளுக்கிய சோழப் போர்—ராஜராஜனுடைய ஆட்சியின் முடிவு—முதலாம் ராஜேந்திரன்—ஐந்தாம் விக்கிரமாதித்தியன், இரண்டாம் ஜெயசிம்மன்—ஜெயசிம்மனும் வேங்கியும்; அவனுக்கும் ராஜேந்திரனுக்கும் நடந்த போர்—ஸ்ரீவிஜயத்தின் மீது சோழப் படையெடுப்பு—ராஜேந்திரனுடைய ஆட்சியின் முடிவு—முதலாம் சோமேசுவரன்—அவனும் வேங்கியும்; அவன் சோழ அரசர்கள் முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், வீர ராஜேந்திரன் ஆகியவர்களுடன் பொருதல்—முதலாம் சோமேசுவரன் முடிவு—இரண்டாம் சோமேசுவரன்—இளவரசன் ஆறாம் விக்கிரமாதித்தியனுடைய புகழார்வம்—வீரராஜேந்திரன் இறப்பு—அதிராஜேந்திரன் புரட்சி; முதலாம் குலோத்துங்கனும் விக்கிரமாதித்தியனும் அரியணையேறல்—இலங்கையில் சோழ ஆதிக்கம் முடிவடைதல்—பாண்டிய சேரநாடுகளில் தோன்றிய கலகத்தை அடக்குதல்—சீனாவுக்குத் தூதர் குழாம் செலுத்தல்—வேங்கி—விக்கிரமாதித்தியன் ஹொய்சளர் கலகத்தை அடக்குதல்—அவன் வேங்கியைப் பிடித்தல்—முதலாம் குலோத்துங்கன் ஆட்சியின் மதிப்பீடு—விக்கிரம சோழன்—மூன்றாம் சோமேசுவரன்—இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் குலோத்துங்கன்—இரண்டாம் ராஜாதிராஜன்—பாண்டிய நாட்டில் உள்நாட்டுப் போர்—அதில் சோழரும் சிங்களரும் தலையிடுதல்—மூன்றாம் குலோத்துங்கன்; அவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தல்—இரண்டாம் ஜெகதகமல்லன், மூன்றாம் தைலன் காலத்தில் ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் வலிமை பெறுதல்—காகதீயர்கள்—கால சூரிய பிஜ்ஜலன்—நான்காம் சோமேசுவரன்—யாதவரும் ஹொய்சளரும் சாளுக்கிய ஆட்சியை அழித்தல்—தெலுங்கு நாட்டில் மூன்றாம் குலோத்துங்கனுடைய போர்கள்—ஆட்சியமைப்பு—*

*முடியரசு—அரச குடும்பம்—அரசு அலுவலர்—நிர்வாகப் பிரிவுகள்—வரிகள்—கிராமத் தன்னாட்சி—நீதி—காவல்—மக்களுடைய நிலைமை.*

ஏறக்குறைய 300 ஆண்டுக் காலம் இருளில் மறைந்து கிடந்த சோழ மரபின்மீது மீண்டும் சுமார் 850ஆம் ஆண்டிலிருந்து ஒளி வீசத் தொடங்கியது. அவ்வாறு ஒளி பெற்ற சோழர்கள் ஒரு பேரரசை நிறுவினார்கள். அவர்கள் முதலில் துங்கபத்திரை நதிக் கப்பாலிருந்த ராஷ்டிரகூடர்களோடும், பின்னர் வரலாற் றரங்கில் அவர்களுடைய இடத்தைப் பிடித்துக்கொண்ட கல்யாணிச் சாளுக்கியர்களோடும் போர் புரிந்தார்கள். அந்த மோதல்களும் பகைமையும் சுமார் 350 ஆண்டுக் காலம் (கி.பி. 850–1200) தொடர்ந்தன. சோழப் பேரரசின் சிறப்பும், அவர்கள் ராஷ்டிரகூடர் சாளுக்கியர்களோடு செய்த போர்களுமே அந்த வரலாற்றுக் காலத்தின் முக்கிய இயல்புகளாய் இருந்தன.

துங்கபத்திரை நதிக்குத் தெற்கே இருந்த பகுதி முழுவதுமே இரண்டு நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக ஒரே நாடாகக் காட்சியளித்தது. முதலாம் ராஜேந்திரன் முதலில் கங்கைநதி வரையில் படையெடுத்து வெற்றியும் புகழும் பெற்றான். பின்னர் அவன் ஸ்ரீவிஜயனுடைய கடலாதிக்கப் பேரரசை அதற்கு முன் யாருங் கண்டிராத ஒரு பெரிய கடற்போரில் தோல்வியடையச் செய்தான். அவன் பல முறை தன் தூதர்களைச் சீனாவுக்கு அனுப்பினான். இவ்வாறு, புதிதாகத் தோன்றிய சோழப் பேரரசின் வலிமையை, அவன் உலகின் கீழை நாடுகள் அனைத்திலும் விளம்பரப்படுத்தினான். சோழர்கள் துங்கப் பத்திரை நதியின் வடக்கிலிருந்த தங்கள் பகைவர்களோடு செய்த போர்களில், பொதுவாக அவர்கள் கிழக்குச் சாளுக்கிய அரசர் களின் துணையைப் பெற்றார்கள். அவர்கள் சோழர்களுக்கு அடங்கிய சிற்றரசர்கள். அவர்களுக்கும் சோழர்களுக்கும் இருந்த நட்பு நாளடைவில் மிக நெருக்கமாயிற்று. அந்த நெருக் கத்திற்கு அவர்களிடையே நடைபெற்ற திருமணங்கள் முக்கிய காரணமாயின. இறுதியில், கி.பி. 1070ஆம் ஆண்டில், சோழ வேங்கி நாடுகள் இரண்டும் ஒரே அரசனுடைய ஆட்சியின்கீழ் வந்தன. அந்த இணைப்பின் விளைவாக, சோழர்கள்மீது சாளுக் கியர்கள் கொண்டிருந்த பகைமைத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. சோழர்களும் மேற்குச் சாளுக்கியர்களும் தொடர்ந்து செய்த போர்களால் இருவருடைய வலிமையும் குறைந்தது. அதனால் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அவர்களுடைய ஆதிக்கம் இறங்குமுகமாக இருந்தது. அந்த நேரத்தில், அவர்களுக்கு அதுவரையில் அடங்கியிருந்த சிற்

றரசுகள் தலைதூக்கத் தொடங்கின. அவை சோழர் சாளுக்கியர் மேலாதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு சுயேச்சையான ராஜ்யங்களாய் மாறுவதற்குரிய தருணம் வந்து விட்டது. அந்த நிலைக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருந்த அரச மரபினர் தென் கோடியிலிருந்த பாண்டியரும், மைசூரிலிருந்த ஹொய்சளர்களும், வட தக்காணத்திலிருந்த யாதவர்களும், காகதீயர்களும் ஆவார்கள்.

சோழர்களுடைய ஆட்சிமுறை மிகவும் குறிப்பிடத்தக்க சிறந்த இயல்புகளைப் பெற்றிருந்தது. வலிமை மிக்க மையக் கட்டுப்பாடும், அதிக உரிமை பெற்ற உள்ளூராட்சியும் சோழ ஆட்சி முறையில் ஒருங்கிணைந்திருந்தன. தஞ்சாவூரிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும், தாராசுரத்திலும், திரிபுவனையிலும் இருக்கின்ற பெரிய கோயில்கள் மட்டுமன்றி ஏனைய இடங்களில் இருக்கின்ற பல சிறிய கோயில்களும் சோழர் காலத்துக் கட்டடக் கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் உயர்வுக்கும் சிறப்புக்கும் சான்று பகர்கின்றன. ஓவியம், ஆடல், பாடல் போன்ற மற்றக் கவின் கலைகளுக்கும் சோழ மன்னர்கள் நல்ல ஆதரவளித்தார்கள். இதற்கு முன் எப்போதும் காணாத அளவில் இலக்கியம் வளர்ந்தோங்கியது.

சுமார் 850ஆம் ஆண்டில் விஜயாலயன் தஞ்சாவூரைக் கைப்பற்றி அங்கு நிஷும்ப சூதினி (துர்க்கை) கோயில் ஒன்றைக் கட்டினான். அதுதான் சோழ ஆதிக்கத்தின் தொடக்கம். அவன் பல்லவர்க்கு அடங்கிய ஒரு சிற்றரசன் என்றும், பல்லவ மேலாதிக்கத்தை உதறிவிட்டுப் பாண்டிய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்த முத்தரைய மரபினரிடமிருந்து அவன் தஞ்சையைப் பறித்துக் கொண்டான் என்றும் நாம் கருதலாம். தெள்ளாற்றுப் போருக்குப் பின் இரண்டாம் வரகுணவர்மன் சிங்களர் உதவியோடு பாண்டிய அரியணையேறும் வரையில் பல்லவர்க்கும் பாண்டியர்க்கும் தொடர்ந்து மோதல் நிகழ்ந்து கொண்டிருந்த சமயத்தில் விஜயாலயன் ஓசைபடாமல் தஞ்சாவூரைப் பிடித்துக் கொண்டான் என்று தோன்றுகிறது. ஆனால், வரகுணன் பல்லவ மேலாதிக்கத்தின் கீழ்வந்த பின்னர், பல்லவர்கள் விஜயாலயனுடைய செல்வாக்கு வளர்வதைக் கண்டு பொறாமை கொண்டு, அவனை அடக்குமாறு வரகுணனைப் பணித்தார்கள். வரகுணனும் அதற்கிணங்கச் சோழ நாட்டின்மீது படையெடுத்தான். தொடக்கத்தில் எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியாற்றின் வடகரையிலுள்ள இடவை என்னும் இடம் வரையிற் சென்ற பாண்டியன்,

அதன்பின் மேலும் வடக்கே சென்று, பெண்ணையாற்றங் கரையில் அரசூர் என்னும் இடத்தில் தன் பாசறையை அமைத்தான். தன்னுடைய புரவலனை பல்லவ நிருபதுங்கனுக்குத் துணைபுரிவதற்காக வரகுணன் பல ஆண்டுக் காலம் வடக்கே தங்கிவிட்டான் என்பது தோன்றுகிறது.

அதற்குள், 869-ல் மூன்றாம் நந்திவர்மன் இறந்து போனான். அப்போது நிருபதுங்கனுக்கும் அவனுடைய ஒன்றுவிட்ட உடன் பிறந்தான் அபராஜிதனுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அபராஜிதன் தானே பல்லவ நாட்டிற்கு அரசனாக வேண்டுமென்று விரும்பினான் என்றும், அதுவே அச் சச்சரவுக்குக் காரணம் என்றும் நாம் கருதலாம். இருவரும் துணை தேடினர். நிருபதுங்கனுக்கு வரகுணன் தொடர்ந்து ஆதரவளித்தான். அபராஜிதன், கங்க மன்னன் முதலாம் பிரிதிவீபதியின் துணையைப் பெற்றான். விஜயாலயன் இறந்தபின், சுமார் கி.பி. 871-ல் பட்டத்துக்கு வந்த முதலாம் ஆதித்தியனுடைய துணையும் அபராஜிதனுக்குக் கிடைத்திருக்கக்கூடும். இரு தரப்புப் படைகளும் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள திருப்புறம்பயம் என்னும் இடத்தில் கி.பி. 885-ல் மோதின சண்டையில் முதலாம் பிருத்திவீபதி உயிரிழந்தான். ஆனால், அதற்குள் அவன் தன் துணைவன் அபராஜிதனுக்கு வெற்றி தேடித் தந்துவிட்டான். அத்தோடு நிருபதுங்கன் ஆட்சி முடிவு பெற்று அபராஜிதன் ஆட்சி தொடங்கியது. அடுத்த பதினைந்தாண்டுக் காலத்தில், அதாவது நிருபதுங்கனுடைய இருபத்தாறும் ஆண்டிலிருந்து நாற்பத்தொன்றாம் ஆண்டு வரையில், அவனுடைய பொறிப்பு ஒன்றுமே இல்லை. அந்தக் காலத்தில்தான் அபராஜிதன் பல்லவ அரசனாய் இருந்தான்.

ஆனால், உடன்பிறந்தார்க்குள் நடந்த இந்தச் சண்டையில் உண்மையிலேயே பயனடைந்தவன் முதலாம் ஆதித்தியன் தான். தோல்வியடைந்த வரகுணன் வாழ்க்கையில் பற்றிழந்துவிட்டான். அவன் மணிவாசகப் பெருமானோடு சேர்ந்து துறவியாய் மாறினான். அவனுடைய சகோதரன் வீரநாராயணன் எதிர்ப்பின்றி மதுரை மன்னனானான். முன்னரே விஜயாலயன் முத்தரையர்களிடமிருந்து பிடித்துக்கொண்ட நாடுகளோடு, பாண்டிய ராஜ்யத்தின் சில பகுதிகளையும் சேர்த்து, நன்றி மறவா அபராஜிதன் முதலாம் ஆதித்தியனுக்குக் கொடுத்து விட்டான். ஆனால், ஆதித்தியன் அபராஜிதனுடைய மேலாதிக்கத்தில் சிற்றரசனாக இருக்க விரும்பவில்லை. எனவே, சரியானபடி திட்டமிட்டு ஆயத்தம் செய்த பின்பு தொண்டை மண்டலத்தின் மீது படையெடுத்தான். அங்கு நடந்த சண்டையில் யானைமீதமர்ந்திருந்த

அபராஜிதனைக் கண்ட ஆதித்தியன், திடீரென அவன் மீது பாய்ந்து கொன்றுவிட்டான். அதனுடன் பல்லவ ஆதிக்கம் தொண்டை நாட்டில் மறைந்தது. பல்லவ ஆட்சியிலிருந்த நாடு முழுதும் சோழ ராஜ்யத்துடன் இணைந்தது. அதனால் சோழ எல்லை 903-ல் ராஷ்டிரகூட எல்லையைத் தொட்டது. நிருபதுங்கன் சுமார் 899ஆம் ஆண்டிலேயே இறந்து போனான். பல்லவ ராஜ்யத்தின் மேற்குப் பகுதியில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் போர் வீரர் தலைவனாக ஒரு சிறிய பதவியில் ஒளி யின்றி வாழ்ந்து வந்த கம்பவர்மனும் (நிருபதுங்கனின் உடன் பிறந்தவன்) ஏறக்குறைய அதே சமயத்திலோ, அதற்குச் சிறிது பின்னரோ இறந்து போனான்.

முதலாம் பிரித்திவீபதியின் பேரன் இரண்டாம் பிரித்திவீபதி விரைவிலேயே ஆதித்தியனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டான். அடுத்து, ஆதித்தியன் கொங்கு நாட்டையும் வென்றான். அதனை வரகுணவர்மனுடைய தம்பியும் பாண்டிய நாட்டை 860 முதல் 895 வரையில் ஆட்சி செய்தவனுமாகிய பராந்தகவீர நாராயணனிடமிருந்து ஆதித்தியன் வென்றிருக்கலா மென்பது தோன்றுகிறது. ஆதித்தியன் அப்போது [1]சேரலத்தில் ஆட்சி செய்த ஸ்தாணுரவி என்னும் அரசனோடு நட்பா யிருந்தான். அவனுடைய மகளைத் தன் மகன் பராந்தக சோழ னுக்கு மணமுடித்து வைத்தான். காவிரியின் இரு கரையிலும், சகியாத்திரியிலிருந்து கடற்கரை வரையிலும், ஆதித்தியன் பல உயரமான கற்கோயில்களைச் சிவபெருமானுக்காகக் கட்டினான் என்றும் சிலர் கூறுவர். அவன் தொண்டை நாட்டில் காளஹஸ் திக்கு அருகில் இறந்து போனான். அவனைப் புதைத்த இடத்தில் அவன் மகன் பராந்தகன் ஒரு கோயிலைக் கட்டினான். பராந்தகன் 907-ல் பட்டத்திற்கு வந்து 48 ஆண்டுகள் ஆட்சிசெய்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தின் பெரும் பகுதியில் அவனுக்கு வெற்றியும் வளமும் மேலும்மேலும் குவிந்தன. ஆனால், இறுதியில் அவனுக்குத் தொல்லையும் துன்பமும் நேர்ந்தன. அதற் குக்காரணம் ராஷ்டிரகூடர்களின் பகைமைதான். தொடக்கத்தி லிருந்தே அப் பகைமை இருந்து வந்தது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பராந்தகன் பட்டத்துக்கு வந்த மூன்றாண்டுக்குள்ளேயே அவன் பாண்டிய நாட்டின்மீது படை யெடுத்து, 'மதுரை கொண்டான்' என்னும் பட்டத்தைச் சூடிக் கொண்டான். அப்போது பாண்டிய மன்னனாக இருந்த வன் இரண்டாம் மாறவர்ம ராஜசிம்மன் (905—920). அவன்

[1] சேரலம்—கேரளம்.

பராந்தக வீர நாராயணனுடைய மகன். அவன் அப்போது இலங்கையை ஆண்டுவந்த ஐந்தாம் கசப்பனுடைய துணையை நாடினான். அவனும் பாண்டியனுக்கு உதவ ஒரு படையை அனுப்பினான். ஆனால், பராந்தகன் ஒருங்கிணைந்த பாண்டிய சிங்களப் படைகளை வெள்ளூர் என்னுமிடத்தில் வென்றான். ராஜசிம்மன் சிங்களத்துக்கு ஓடிவிட்டான். அதன் பின் பாண்டி நாடு முழுதும் விரைவில் சோழ ஆதிக்கத்துக்குள் வந்தது. சில ஆண்டுக்காலம் சிங்களத்திலிருந்த பிறகு ராஜ சிம்மன் தன் முடியையும் செல்வத்தையும் விட்டுவிட்டுத் தன் தாயின் ஊராகிய சேரலத்திற்குச் சென்றுவிட்டான். சில ஆண்டுகளுக்குப் பின், நான்காம் உதயன் (940–953) சிங்களத் தின் அரசனாயிருந்தபோது, பராந்தகன் பாண்டிய மன்னனுடைய முடிமுதலிய விருதுகளைக் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சி தோல்வியுற்றது. ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின் பராந்தகன் மரபில் வந்த முதலாம் ராஜேந்திரன் அந்தத் தோல்வியை மனத்தில் வைத்துக்கொண்டிருந்து, பராந்தகன் செய்ய முயன்று தவறிய செயலைச் செய்து முடித்துவிட்டான்.

பராந்தகன் பாண்டி நாட்டை வென்றுகொண்டிருந்த சமயத் தில் ராஷ்டிரகூட மன்னன் இரண்டாம் கிருஷ்ணன் சோழ ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். இப்போது அவனுடைய வரலாற்றைச் சிறிது பார்ப்போம்: அவன் அமோகவருஷனுக்குப் பின், 880ஆம் ஆண்டில், ராஷ்டிரகூட அரியணை யேறியவன். தன் னுடைய ஆதிக்கத்திற்குட்பட்டு லாட்டாவில் ஆட்சி செய்துவந்த உறவினன் உதவியோடு கிருஷ்ணன் ராஷ்டிரகூட நாட்டின்மீது படையெடுத்த குர்ஜர மன்னன் முதலாம் போஜனை வென்றான். அதற்குப்பின், வெகுவிரைவில், அவன் லாட்டா அரசப் பிரதி நிதிப் பதவியை நீக்கிவிட்டு, லாட்டாவைத் தன்னுடைய நேர் ஆட்சியின்கீழ் வைத்துக்கொண்டான். அதன்பின் அவன் வேங்கி மன்னன் மூன்றாம் குணக விஜயாதித்தியனை அடக்குவதற்காகப் படையெடுத்தான். ஆனால் வலிமை வாய்ந்த விஜயாதித்தியன் கிருஷ்ணனைத் தோல்வியடையச் செய்தான். அதனால்,கிருஷ்ணன் தன் மாமனார் (சேதி நாட்டில் ஆட்சி செய்த கக்கலன்) ஊரில் அடைக்கலம் புகுந்தான். ஆனால், கிழக்குச் சாளுக்கியப் படைத் தலைவன் பண்டரங்கன் அவனை அங்கேயும் துரத்திக்கொண்டு சென்றான். இறுதியில், கிருஷ்ணன் விஜயாதித்தியனுடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டதனால், அவனுடைய ராஜ்ய மும் தலைநகரமும் அவனுக்குத் திருப்பித் தரப்பட்டன. விஜயாதித்தியன் 892-ல் இறந்து போனான். அவனுக்குப்பின் அரசுரிமைபெற்ற அவனுடைய தம்பி மகன் முதலாம் பீமன் தன்

னுடைய முடிசூட்டு விழாவை நடத்துவதற்குள் கிருஷ்ணன் மீண்டும் வேங்கியின்மீது படையெடுத்து, பீமனை வென்று சிறை பிடித்தான். ஆனால், பீமன் விரைவில் விடுதலையடைந்து, கிழக்குச் சாளுக்கிய நாட்டிலிருந்த ராஷ்டிரகூடர்களைத் தோல்வி யடையச் செய்து துரத்திவிட்டு முடிசூடிக் கொண்டான். சில ஆண்டுகளுக்குப்பின் கிருஷ்ணன் வேங்கியைப் பிடிப்பதற்கு மீண்டும் முயன்றான். ஆனால், அவன் நிரவத்யபுரம், பெருவங்கூரு என்னும் இடங்களில் தோல்வி யடைந்து திரும்பினான்.

கிருஷ்ணனுடைய பெண்மக்களுள் ஒருத்தி சோழ மன்னன் முதலாம் ஆதித்தியனை மணந்து கன்னரதேவன் என்னும் மகனைப் பெற்றாள். ஆதித்தியன் இறந்த பிறகு பராந்தகன் பட்டத்திற்கு வந்தான். ஆனால், கிருஷ்ணன் தன் பேரனை கன்னரதேவன்தான் சோழ அரியணை யேற வேண்டுமென்றுகூறி• பாணர்கள் வைதும்பர்கள் ஆகியவர்களுடைய துணையோடு சோழநாட்டின்மீது படையெடுத்தான். பராந்தகன் கங்க மன்னனை இரண்டாம் பிரித்திவீபதியின் துணையைப் பெற்றான். இரு தரப்புப் படைகளும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இன்று திருவலம் என வழங்கும் வல்லாலா என்னும் இடத்தில் மோதின. சண்டையில் பராந்தகன் பெருவெற்றி யடைந்தான். பாணர்கள் தங்களுடைய நாட்டை இழந்தார்கள். பராந்தகன் அதனைப் பிரித்திவீபதிக்குக் கொடுத்துவிட்டான். வைதும்பர்களும் இழப்புக்காளானார்கள். இந்தச் சண்டை 916-க்கு முன் நடைபெற்றது.

சுமார் 940-க்குப்பின் பராந்தகன் தன்னுடைய நாட்டைக் காத்துக்கொள்வதில் தொடர்ந்து தொல்லைக்குள்ளானான். அவனுக்கு உண்மைத் துணைவனாக இருந்த இரண்டாம் பிரித்திவீபதி இறந்து போனான். அவனுக்குப் பின் கங்க அரியணையேறிய இரண்டாம் பூதுகன் ராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணனுடைய சகோதிரி ஒருத்தியை மணந்து கொண்டிருந்தான். அதனால், கங்கர்களுக்கும் ராஷ்டிரகூடர்களுக்கும் இருந்த தொடர்பு மிகவும் நெருக்கமாயிற்று. சோழ மன்னனிடம் தோல்வியடைந்த பாணர்களும் வைதும்பர்களும் ராஷ்டிரகூடர் பக்கமிருந்தார்கள். இவ்வாறு தன்னுடைய ராஜ்யத்தின் வடமேற்கெல்லையில் வளர்ந்து கொண்டிருந்த அபாயத்தைச் சமாளிப்பதற்காகப் பராந்தகன் தன்னுடைய மூத்த மகன் ராஜாத்தியனை ஒரு சேனையோடு அங்கு அனுப்பி வைத்தான். அந்தச் சேனையில் யானைப் படை ஒன்றும் இருந்தது. அன்றியும், அதில் சில குதிரை வீரர்களும் இருந்தார்கள். ராஜாதித்தியனுக்குத் துணையாகப் பராந்தகன் தன்னுடைய இன்னொரு மகன் அரிகுல

கேசரியையும் அனுப்பி வைத்தான். அவர்கள் வடமேற்கெல்லையில் படைகளோடு தங்கிக் காவல் புரிந்தார்கள்.

இப்போது நாம் மீண்டும் ராஷ்டிரகூட வரலாற்றைப் பார்ப்போம். இரண்டாம் கிருஷ்ணனுக்குபின் அவனுடைய பேரன் மூன்றும் இந்திரன் சுமார் 915-ல் பட்டத்திற்கு வந்தான். அவன் இளவரசனுக இருந்தபோதே ராஷ்டிரகூட ராஜ்யத்தின்மீது படையெடுத்துவந்த பரமார வமிசத்தைச் சேர்ந்த மாளவ அரசனை உபேந்திரனைத் தோல்வியுறச் செய்தான். இரண்டாம் கிருஷ்ணன் கவனம் முழுவதும் சோழர்களோடு செய்த போரில் திரும்பியிருந்த நேரத்தில் உபேந்திரன் ராஷ்டிரகூட ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். இந்திரன் அவனை வென்று அவன் ராஷ்டிரகூட மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தான். இந்திரன் அரசனை பிறகு, கன்னோசியில் (913 முதல் 943 வரையில்) ஆட்சிசெய்த பிரதிஹார அரசன் முதலாம் மஹிபாலனைத் தோற்கடித்தான். அதனுல் மஹிபாலன் தன்னுடைய ராஜ்யத்தை இழந்தான். பின்னர் அவன் சந்தல அரசன் ஹர்ஷதேவனுடைய துணையுடன் தன்னுடைய ராஜ்யத்தை மீட்டுக்கொண்டான். வேங்கியைப் பொறுத்த வரையில் அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த அரசனுகிய முதலாம் அம்மனுக்கு எதிர்ப்பைக் கிளப்பிவிடுவதன் மூலம் ராஷ்டிரகூடர்களுடைய வழக்கமான நடைமுறைக் கோட்பாட்டை இந்திரன் பின்பற்றினுன். ஆனுல் அம்மன் அந்த எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு, ஏழாண்டுக் காலம் (926 வரையில்) ஆட்சிசெய்தான். ஆனுல் அம்மன் இறந்தபின் வேங்கியில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டியின் விளைவாக அங்குக் குழப்பம் ஏற்பட்டது. அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட இந்திரன் வேங்கி நாட்டை ஏழாண்டுக்காலம் தன்னுடைய அலுவலர்கள் தனக்கடங்கியிருந்த பிரபுக்கள் ஆகியவர்களுடைய ஆட்சியில் வைத்திருந்தான். இந்திரனுக்குப்பின் அவன் மகன் இரண்டாம் அமோகவருஷன் 927-ல் அரியணையேறினுன். ஆனுல் அவன் மூன்றே ஆண்டுகள் பதவியில் இருந்தான். அதற்குள் அவனுடைய தம்பி நான்காம் கோவிந்தனுடைய சூழ்ச்சியால் அவன் உயிரிழந்தான். நான்காம் கோவிந்தன் பராந்தக சோழன் மகள் வீரமாதேவியை மணஞ் செய்து கொண்டிருந்தான். அவன் அதிகார ஆர்வமுடையவன்தான் என்றுலும், திறமையற்றவனுகவும் ஒழுக்கங்கெட்டவனுகவும் இருந்தான். அதனுல், சிற்றரசர்கள் அவனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவனுடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தான் மூன்றும் பட்டக அமோகவருஷனை அரசனுக்கினுர்கள். கோவிந்தன் சோழநாட்டில்

அடைக்கலம் புகுந்தான். மூன்றும் அமோகவருஷன் அமைதியை விரும்பிய கனிவுடைய அரசன். ஆனால், அவனுடைய மகன் மூன்றும் கிருஷ்ணன் அப்படிப்பட்டவன் அல்லன். அவன் இளமையும் ஆற்றலும் பெற்றவன். அவனை அமோகவருஷன் இளவரசனாக்கினான். கிருஷ்ணன் ராசமல்லனுடன் போர் செய்து, தன்னுடைய மைத்துனன் இரண்டாம் பூதுகன் கங்க மன்னனாவதற்குத் துணைசெய்தான். 939-ல் அமோகவருஷன் இறந்தபின் கிருஷ்ணன் ராஷ்டிரகூட அரசனானான். அதன்பின் அவன் முன்பு தன் மரபினர்களுக்கு ஏற்பட்ட பழியைத் துடைப்பதற்காகச் சோழர்களோடு போரிட விரும்பினான். அந்த விருப்பத்தைப் பாணர்களும் வைதும்பர்களும் மேலும் தூண்டிவிட்டார்கள். அவனுடைய மைத்துனன் இரண்டாம் பூதுகனும் அவனை ஊக்கியிருக்கக்கூடும். எனவே, பூதுகனும் கிருஷ்ணனும் சேர்ந்து படைதிரட்டிக் கொண்டு சோழப் பேரரசின் மீது சென்றார்கள். அரக்கோணத்திற்குத் தென்கிழக்கில் ஆறு கல் தொலைவிலுள்ள தக்கோலம் என்னும் இடத்தில் நடந்த சண்டையில் சோழர் தோற்றனர். யானை மீதில் அமர்ந்திருந்த இராஜாதியத்தனை பூதுகன் நன்றாகக் குறிபார்த்து எய்த அம்பு ஒன்று கொன்றுவிட்டது. ஆனால் அந்தச் சண்டையோடு சோழர்களுடைய எதிர்ப்பு மறைந்து விடவில்லை. சில ஆண்டுக் காலம் தொடர்ந்து போர் புரிந்த பின்னரே கிருஷ்ணன் ராஷ்டிரகூட ஆதிக்கத்தைத் தென்னாட்டில் நிறுவினான். இறுதியில் சோழப் பேரரசின் வடபாதியில் கிருஷ்ணன் ஒரு பெரிய பகுதியைப் பிடித்துக்கொண்டான். அதில் ராஷ்டிரகூட அலுவலர்கள் ஆட்சிசெய்தார்கள். கச்சியையும், தஞ்சையையும் வென்றவன் என்ற பட்டத்தைக் கிருஷ்ணன் சூடிக் கொண்டான். இவ்வாறு பராந்தக சோழனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் சோழப் பேரரசு ஒரு பேரதிர்ச்சிக்குள்ளாயிற்று. உண்மையில் சோழப் பேரரசு மறைந்துபோயிற்று என்றே சொல்லலாம். ஏனெனில், வடக்கில் ஏற்பட்ட அழிவைக் கண்டு, தெற்கிலிருந்த சிற்றரசர்களும் தங்களுடைய சுயேச்சையை விளம்பரப்படுத்திவிட்டார்கள்.

தனக்குமுன் ஆட்சி செய்த மற்ற ராஷ்டிரகூட மன்னர்களைப் போலவே மூன்றும் கிருஷ்ணனும் வேங்கி நாட்டில் பிளவை உண்டாக்கியதன்மூலம் அங்கு ஆட்சி செய்த இரண்டாம் அம்மனுக்குத் தொல்லை கொடுத்தான். அவனுக்கு எதிராக அவனுடைய ஒன்றுவிட்ட அண்ணன் தானார்ணவனையும், கிளை மரபு ஒன்றைச் சேர்ந்த பாதப்பன், இரண்டாம் தாழன் என்னும் அரசகுமாரர்களையும் கிருஷ்ணன் ஆதரித்தான். பல இடையூறு

களைச் சமாளித்துக்கொண்டு அம்மன் 970 வரையில் வேங்கி மன்னனாக இருந்தான். அந்த ஆண்டில் நடந்த சண்டையில் தானார்ணவன் அவனைக் கொன்றுவிட்டான்.

தன்னுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில், சுமார் 963ஆம் ஆண்டில், கிருஷ்ணன் மாளவத்தின்மீது படையெடுத்து, அங்கே ஆட்சி செய்துவந்த பரமார மன்னன் ஹர்ஷசீயகன் மீண்டும் ராஷ்டிரகூட மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளு மாறு செய்தான். அந்தப் படையெடுப்பில் கங்க மன்னன் மாரசிம்மன் (இரண்டாம் பூதுகனுடைய மகன்) கிருஷ்ணனுக்குப் பெருந்துணையாயிருந்தான். கிருஷ்ணன் திறமைமிக்க போர் வீரனாகவும் தாராளமாக உதவும் நண்பனாகவும் இருந்தான். என்றாலும், அவன் ராஜதந்திரம் அற்றவன் என்றே கூற வேண்டும். ஏனெனில் அவனுடைய செயல்களால் அவனுக்குப் பின் வந்த ராஷ்டிரகூட அரசர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. அவன் கங்கர்களுக்குத் தேவைக்கு அதிகமான அளவில் ஊக்கமளித்தான். அவனால் பரமாரர்களை ஒரே யடியாய் அழிக்க முடியவில்லை. ஆனால், அவர்கள்மீது இருமுறை படையெடுத்ததன் மூலம் அவர்களுடைய வெறுப்பை வளர்த்தான். தன்னுடைய படைத்தலைவர்களுக்கு முன் னாலோசனையில்லாத வகையில் நிலமானியங்களை வழங்கினான். எடுத்துக்காட்டாக அவன், 965-க்குச் சிறிது காலத்திற்குமுன், சத்தியாசிரய வமிசத்தைச் சேர்ந்த ஆகவமல்ல தைலப்பரசனுக்கு ராஷ்டிரகூடப் பேரரசின் இதயம் போன்ற தருதவாடி மாகாணத்தை 'அணுக ஜீவிதமாக' (மானியமாக) வழங்கினான்.

மூன்றாம் கிருஷ்ணனுக்குப்பின் அவனுடைய ஒன்றுவிட்ட உடன் பிறந்தான் கொட்டிகன் என்பவன் 967ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பட்டத்துக்கு வந்தான். அவனுடைய ஆட்சியில் பரமார அரசன் ஹர்ஷசீயகன் ராஷ்டிரகூடப் பேரரசின்மீது படையெடுத்து, ராஷ்டிரகூடப் படைகளை நர்மதைக்கரையில் வென்று, தலைநகரான மானியகேடத்தை (மால்கெட்) 972–73-ல் கொள்ளையடித்தான். கங்கமன்னன் இரண்டாம் மாரசிம்மன் பரமாரப் படைகள் திரும்பிப் போனபிறகு தலைநகரை மீண்டும் கைப்பற்றுவதற்கு ராஷ்டிரகூடர்களுக்குத் துணைசெய்தான். பரமாரப் படையெடுப்பு நிகழ்ந்த சிறிது காலத்தில் கொட்டிகன் இறந்து போனான். அவனுக்குப்பின் அவனுடன்பிறந்தவன் மகன் இரண்டாம் கர்க்கன் பட்டத்துக்கு வந்தான் (973). ஆனால், மூன்றாம் கிருஷ்ணனிடமிருந்து தருதவாடியை மானிய மாகப் பெற்ற சாளுக்கியனான இரண்டாம் தைலன் ராஷ்டிர

கூடர்களை வீழ்த்துவதற்குத் தருணம் பார்த்துக்கொண் டிருந்தான். எனவே, இரண்டாம் கர்க்கன் ராஷ்டிரகூட மன்னனான சில மாதங்களுக்குள் அவன் கர்க்கனை எதிர்த்து அவனைப் பதவியிலிருந்து துரத்திவிட்டான். பிற்காலக் கட்டுக் கதைகள் தைலனைக் கண்ணபிரானுடைய அவதாரம் என்றும் ரத்த ராக்கதர்களுடன் 108 சண்டைகளைச் செய்து அவர்களிட மிருந்த 88 கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டான் என்றும் கூறுகின்றன. தைலனுடைய வெற்றி கல்யாணிச் சாளுக்கியர் களுடைய பேரரசுக்கு அடிகோலியது. இரண்டாம் மாரசிம்ம னுடைய சகோதரி ஒருத்தி மூன்றாம் கிருஷ்ணனை மணந்து ஒரு மகனைப் பெற்றிருந்தாள். அவனை நான்காம் இந்திரன் என்று விளம்பரப்படுத்தி மீண்டும் ராஷ்டிரகூட ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு மாரசிம்மன் முயன்றான். ஆனால், அந்த முயற்சியில் தோல்வியடைந்த மாரசிம்மன் 975ஆம் ஆண்டில் பட்டினியிருந்து (சல்லேகனம்) இறந்துபோனான். அவனுக்கு அடங்கிய சிற்றரசனான பாஞ்சாலதேவன் என்பவன் கிருஷ்ணா நதிக்குத் தென்பாலிருந்த நாடு முழுவதற்கும் தானே அரசன் என்று விளம் பரப்படுத்திக் கொண்டான். அவனையும் இரண்டாம் தைலன் சண்டையில் வென்று கொன்றுவிட்டான். 982-ல் நான்காம் இந்திரனும் சல்லேகனம் செய்து உயிர் துறந்தான்.

பராந்தகன் இறந்தபின் முப்பதாண்டுக் காலம் (955–985) சோழர்களுடைய வலிமை மிகவும் குறைந்திருந்தது. நாட்டில் குழப்பம் மிகுந்திருந்தது. பராந்தகனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் கண்டராதித்தியனும் அவனுடைய மனைவி செம்பியன் மாதேவியும் அரசியலைவிடச் சமயத்துறையில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். கண்டராதித்தியன் 957-ல் இறந்தபோது சோழப்பேரரசு ஒரு சிற்றரசாய்ச் சுருங்கியிருந்தது. தொண்டை மண்டலம் அப்போதும் மூன்றாம் கிருஷ்ணனுடைய ஆதிக்கத்தில்தான் இருந்தது. கண்டராதித்தியனுடன் பிறந்த அரிஞ்சயன் சிறிது காலமே ஆட்சி செய்தான் (956–57). அவனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் சுந்தர சோழ பராந்தகன் பட்டத்திற்கு வந்து 957 முதல் 963 வரையில் ஆட்சி செய்தான். அவனுடைய இளவயது மகன் இரண்டாம் ஆதித் தியன் இரண்டாம் பராந்தகனுடைய ஆட்சியின் தொடக்கத்தி லேயே இளவரசன் ஆனான். அப்போது பாண்டி நாட்டில் ஆட்சி செய்த வீரபாண்டியன் ஒரு சோழ அரசனைத் தோல்வி யுறச் செய்ததால் தானே பாண்டியநாட்டின் முழு உரிமை பெற்ற அரசன் என்று விளம்பரப்படுத்தி யிருந்தான். (அவ்வாறு அவனிடம் தோல்வியடைந்த சோழ மன்னன் கண்டராதித்

தியனாக இருக்கலாம் என்று நாம் கருதலாம்.) எனவே, சுந்தர சோழன் தன் கவனத்தைப் பாண்டிய நாட்டின் மீது திருப்பினான். வழக்கம் போல இலங்கை மன்னன் (நான்காம் மஹிந்தன்) வீரபாண்டியனுக்குத் துணை செய்தான். பின்னர் நடந்த போரில் சுந்தர சோழன் வீரபாண்டியனை இரண்டு சண்டைகளில் தோல்வியுறச் செய்தான். இரண்டாம் முறை நடந்த சண்டையில் இரண்டாம் ஆதித்தியன் வீரபாண்டியனைக் கொன்றுவிட்டான். 959-ல் சுந்தரசோழன் இலங்கை மீது படையெடுத்தான். இவ்வாறு தென்னாட்டில் சோழர்கள் செய்த போர்களால் அங்கே அவர்களுடைய ஆதிக்கம் மீண்டும் நிலை பெற்றது என்று கூறமுடியாது. ஆனால், வடக்குப் பகுதியில் சுந்தர சோழன் செய்த போர்கள் நல்ல பயனை அளித்தன என்று கூறலாம். வடக்குப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த போரை அவன் மேற்பார்வை செய்து கொண்டிருந்த சமயத்தில், 973-ல் காஞ்சீபுரத்தில் தன்னுடைய தங்கமாளிகையில் இறந்து போனான். சுந்தர சோழனுடைய இறுதிக் காலம் துன்பம் நிறைந்ததாய் இருந்தது. கண்டராதித்தியனுடைய மகனான உத்தம சோழன் இளவரசன் இரண்டாம் ஆதித்தியனைச் சூழ்ச்சியால் கொன்றுவிட்டான். அதன்பின் நியாயமாக ஆதித்தியனுடைய தம்பி அருண்மொழி (பிற்காலத்தில் முதலாம் ராஜராஜன்) இளவரசப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், மகனை யிழந்த துன்பத்தில் உழந்துகொண்டிருந்த சுந்தர சோழனை வற்புறுத்தி, உத்தமசோழன் தானே அரசுரிமை பெற்ற இளவரசன் என்ற பதவியைப் பெற்றான். அதனால், சுந்தர சோழன் 973-ல் இறந்தபோது உத்தமசோழன் அரசனானான். அதற்குள் தொண்டை மண்டலத்தின் பெரும் பகுதி சோழ ஆட்சிக்கு மீண்டு விட்டது; ராஷ்டிரகூட ஆட்சி மறைந்துவிடச் சாளுக்கிய ஆட்சி தோன்றிவிட்டது. சுமார் 980-ல் உத்தமசோழனை ஒரு சண்டையில் வென்றதாய் இரண்டாம் தைலன் கூறிக்கொண்டான்.

985ஆம் ஆண்டின் இடையில் அருண்மொழிவர்மன் ராஜராஜன் என்னும் பெயருடன் சோழ நாட்டின் அரியணையேறினான். அப்போதிருந்துதான் சோழர்களுடைய வலிமை உண்மையிலேயே வளரத் தொடங்கியது. ராஜராஜன் பட்டத்திற்கு வந்த நேரத்தில் சோழர் ஆட்சியிலிருந்த ராஜ்யம் சிறியதாயிருந்தது. அப்போதுதான் அது ராஷ்டிரகூடப் படையெடுப்பின் விளைவுகளிலிருந்து மீண்டுகொண்டிருந்தது. ராஜராஜன் ஆட்சி செய்த முப்பதாண்டுக் காலத்தில் அது ஒரு பேரரசாக வளர்ந்தது. அந்தப் பேரரசிலிருந்த மாகாணங்களெல்லாம் ஒருங்கிணைந்து மைய

அரசின் உறுதிமிக்க கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. பேரரசு சிறந்த அமைப்பையும் நல்ல நிர்வாக முறையையும் தேவையான வளங்களையும் பெற்றிருந்தது. அதற்கு நிலையான தரைப் படையும் கப்பற்படையும் இருந்தன. களம்பல கண்ட அவற்றின் துணிவாண்மையும் தறுகண்மையும் புடம் போட்ட பொன் போல் ஒளிர்ந்தன.

பாண்டியர், சேரர், சிங்களர் ஆகியவர்களுடைய கூட்டணியை முறிப்பதில் ராஜராஜன் தன் கவனத்தை முதலில் செலுத்தினன். அவன் காந்தளூரையும் விழிஞத்தையும் தாக்கிப் பாண்டியர்களின் வலிமையையும் சேரர்களின் செருக்கையும் அழித்து அவர்களை வென்றான். பின்னர், அவன் சிங்களத்தின்மீது தன் கடற் படையைச் செலுத்தினன். ராஜராஜன் வலிமையை எதிர்த்து நிற்க முடியாத ஐந்தாம் மஹிந்தன் சிங்களத் தீவின் தென் கிழக்கிலுள்ள மலைப்பகுதிக்கு ஓடியொளிந்தான். அனுராதபுரம் அழிந்தது. பொலனுருவா சோழ மாகாணத்தின் தலை நகராயிற்று.

அடுத்து, ராஜராஜன் தன் கவனத்தை மைசூரின்மீது திருப்பினன். அந்தக் காலத்தில் அங்கிருந்த இடங்களான கங்கபாடி, நொலம்பபாடி, தடிகைபாடி ஆகிய இடங்களெல்லாம் சோழ ஆட்சிக்குள் வந்தன. அதனல், புதிதாக வலிமை பெற்ற சாளுக்கிய நாட்டரசன் இரண்டாம் தைலன் சோழர்மீது கொண்டிருந்த பகை அதிகமாயிற்று. சாளுக்கிய சோழப்படை களின் முதல் மோதல் 992-ல் நிகழ்ந்தது. அதில் சோழர் தோற்றனர். ஆனல், தைலனைவிட அவனுடைய மகனும் அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவனும் ஆன சத்தியாசிரயன் தான் ராஜராஜனுடைய முக்கிய எதிரியாய் இருந்தான். அவ்விரு வரும் செய்துகொண்ட பலப்பரிட்சையைக் கூறுமுன் நாம் சாளுக்கியர்களுடைய வரலாற்றைச் சிறிது கூறவேண்டும்.

மானியகேடா என்னும் தலைநகரில் ஆட்சிசெய்த இரண்டாம் தைலன் ராஷ்டிரகூடர்களைத் தோல்வியுறச் செய்தபின், மேற்குத் தக்காணத்தில் வடக்கே நர்மதை நதியிலிருந்து தெற்கே துங்கபத்திரை நதி வரையில் இருந்த எல்லாப் பகுதிகளிலும் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டும் பணியில் பல ஆண்டு களைக் கழித்தான். வடக்கிலிருந்து படையெடுத்த மாளவ மன்னன் பரமார முஞ்சனைத் தைலன் வென்று சிறையிலிட்டான். சிறையிலிருந்தபோது அவன் தைலனுடன் பிறந்த மிரிணலவதி என்பவளுடன் கள்ளக் காதல் கொண்டான். அதனல், தைலன்

அவனைப் பல வகையிலும் துன்புறுத்தித் தாழ்வாக நடத்தியபின் சில ஆண்டு கழித்துக் கொன்றுவிட்டான். தைலன் செய்த போர்கள் எல்லாவற்றிலும் அவனுடைய மூத்தமகன் சத்தியா சிரயன் அவனுக்குப் பெருந்துணை புரிந்தான். 997-ல் தைலன் இறந்தபின் அவன் பட்டத்திற்கு வந்தான். அவன் தன் தந்தையைப் போலவே அண்டை நாடுகளின்மீது படையெடுத்து அவற்றை அடக்கும் வேலையில் ஈடுபட்டான். அப்போது ராஜ ராஜன் வேங்கி நாட்டில் தலையிட்டுக் கிழக்குத் தக்காணத்தில் தன்னுடைய வலிமையைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் முனைந்திருந்தான்.

வேங்கி மன்னன் தானார்நவன் பல தொல்லைகளுக்கிடையில் மூன்று ஆண்டு ஆட்சிசெய்தபின் அவனைத் தெலுகுச் சோடச் சிற்றரசன் ஜடாசோடபீமன் என்பவன் 973-ல் சண்டையில் வென்று கொன்றுவிட்டான். அவன் சாளுக்கிய அரசன் இரண்டாம் பீமனுடைய பேரனாக இருக்கலாம் என்று நாம் கருதலாம். அவன் வேங்கி நாட்டை 973 முதல் 1000 வரையிலும் இருபத்தேழு ஆண்டுகள் ஆட்சி செய்தான். அந்தக் காலத்தை உரிய அரசன் இல்லாக் காலம் என்று பிற்காலத்துக் கிழக்குச் சாளுக்கியப் பொறிப்புகள் கூறுகின்றன. அப்போது தானார்நவனுடைய மக்கள் சோழ நாட்டில் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். பீமன் வைதும்பர்கள்மீதும் கலிங்கத்தில் ஆட்சி செய்த கிழக்குக் கங்கர்கள் மீதும் தன் மேலாதிக்கத்தைச் சுமத்தினான். தானார்நவனுடைய மக்களுள் இளையவனுக்கு ராஜராஜன் தன்னுடைய மகள் குந்தவையை மணமுடித்து வைத்ததோடு மூத்தவனான முதலாம் சக்தி வர்மனுக்கு வேங்கி நாட்டை மீட்டுத்தருவதாக வாக்களித்திருந்தான். அதனால் சினமடைந்த ஜடாசோடாபீமன் தொண்டை மண்டலத்தின் மீது படையெடுத்தான். ஆனால், ராஜராஜன் அவனைத் தோல்வியடையச் செய்து சிறையிலிட்டான். இவ்வாறு சக்தி வர்மன் வேங்கி நாட்டரசனாவதற்கிருந்த தடை நீங்கியது. அவன் சோழர்க்கு அடங்கிய சிற்றரசனாக வேங்கியின் அரியணையேறினான்.

சோழ ஆதிக்கம் கிழக்குத் தக்காணத்தில் வளர்வதைப் பொறாத சத்தியாசிரயன் 1006-ல் வேங்கியின்மீது படையெடுத்தான். அவனுடைய தளபதியான பாயலநம்பி தானியகடகம் (தாரனிக் கோட்டா), யனமடலம் ஆகிய கோட்டைகளைத் தரைமட்டமாக்கியபின் குண்டூர் மாவட்டத்தில் செப்ரோலு என்னும் இடத்தில் தங்கி, அங்கு மேற்குச் சாளுக்கிய ஆட்சியை

நிறுவினுன். தாக்குதலே மிகச் சிறந்த பாதுகாப்பு என்னும் கோட்பாட்டின்படி ராஜராஜன் ஒரு பெரும் படையைத் தன் மகன் ராஜேந்திரன் தலைமையில் மேற்குச் சாளுக்கிய நாட்டின் மீது அனுப்பினுன் (1007). ராஜேந்திரன் பீஜப்பூர் மாவட்டத்தி லிருந்து தொனூர் வரையிற் சென்று, 'அந்தப் பகுதி முழுவதிலும் கொள்ளையடித்து, அங்கிருந்த பெண்கள், குழந்தைகள், பார்ப் பனர்கள் ஆகியவர்களைக் கொன்று குவித்தான்' என்று ஒரு சாளுக்கியப் பொறிப்புக் கூறுகிறது. அவன் மேலும் சென்று, பனவாசியையும் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின் பெரும் பகுதி யையும் கைப்பற்றியபின் மானியகேடா நகரையும் கொள்ளை யடித்தான். அதே சமயத்தில் வேங்கிக்கு அருகிலிருந்து கிளம்பிய சோழப்படை ஒன்று ஐதராபாத்துக்கு வடமேற்கில் 45கல் தொலைவிலிருந்த கொள்ளிப்பாக்கையைத் (குல்பக்) தாக்கி அங்கிருந்த கோட்டையைக் கைப்பற்றியது. இவ்வாறு இரு முனைத் தாக்குதலுக்குள்ளான சத்தியாசிரயன் தன் படைகளை வேங்கியிலிருந்து திருப்பியழைத்துக் கொண்டான். அதன்பின் அவன் மிகவும் முயன்று தன்னுடைய நாட்டைச் சோழப் படை களிடமிருந்து காத்தான். ஏராளமான கொள்ளைப் பொருள் களுடன் சோழப் படை துங்கபத்திரையின் தென் கரைக்குத் திரும்பியது.

தன்னுடை ஆட்சியின் இறுதிக் காலத்தில் ராஜராஜன் மாலத் தீவுகளை வென்று அவற்றில் தன்னுடைய ஆட்சியை நிறுவினுன். அவன் 1012-ல் ராஜேந்திரனுக்கு முறையாக இளவரசப் பட்டம் சூட்டியபின் 1014-ல் இறந்தான். அவன் 1010-ல் கட்டி முடித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் (ராஜராஜேஸ்வரம்) அவனுடைய ஆட்சியின் பெருஞ்சிறப்பைத் தக்கவாறு நினை வூட்டுகிற சின்னமாகத் திகழ்கிறது. வங்காள விரிகுடாவுக் கப்பால் ஸ்ரீவிஜயத்திலும் கடாரத்திலும் ஆட்சிசெய்த சைலேந்திர மன்னன் ஸ்ரீமார விஜயதுங்கனை நாகப்பட்டினத்தில் ஒரு புத்த விகாரம் கட்டுமாறு ராஜராஜன் ஊக்கினுன். அவ்வாறு அவன் கட்டிய விகாரம் அவனுடைய தந்தையின் நினைவாகச் 'சூடாமணி விஹாரம்' என்னும் பெயரைப் பெற்றது.

பேரரசன் ராஜராஜனுக்கு ஏற்ற மகன் முதலாம் ராஜேந்திரன். அவனுடைய ஆட்சியில் சோழப் பேரரசு அந்தக் காலத்திலிருந்த இந்து அரசர்களுக்குள் மிகவும் பெரியதாகவும், மிகவும் மதிக்கப் பெற்றதாயும் இருந்தது. அவ்வாறு அது உயர் வடைவதற்கு ராஜேந்திரனுடைய முயற்சியே காரணமாயிற்று. தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே (1018ஆம்

ஆண்டில்) முதலாம் ராஜேந்திரன் தன்னுடைய மகன் முதலாம் ராஜாதிராஜனுக்கு உரிய முறையில் இளவரசப் பட்டங் கட்டினன். அவன் சிங்களத்தின்மீது படையெடுத்துத் தன் தந்தை தொடங்கிய பணியை முடித்தான். தீவு முழுவதையும் கைப்பற்றியபின் ராஜேந்திரன் ஐந்தாம் மஹிந்தனைச் சிறை பிடித்துச் சோழ நாட்டுக்குக் கொண்டுவந்தான். அங்கு அவன் 12 ஆண்டிருந்தபின் இறந்து போனன். அதன்பின் அவனுடைய மகன் கசப்பன் சிங்களர்க்குத் தலைமை தாங்கித் தமிழர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்தான். அவன் தொடங்கிய போர் ஆறு மாதம் நடந்தது. அதில் பல தமிழ் வீரர்கள் உயிர் துறந்தார்கள். இறுதியில் கசப்பன் சிங்களத்தின் தென் பாதியைக் கைப்பற்றி, 1029ஆம் ஆண்டிலிருந்து முதலாம் விக்கிரமபாகு என்னும் பெயருடன் பன்னீராண்டு ஆட்சி செய்தான்.

ராஜேந்திரன் பாண்டி நாட்டின் மீதும் சேரநாட்டின் மீதும் வெற்றியுறப் படையெடுத்து, அந் நாடுகளைத் தன்னுடைய ஆட்சியில் இணைத்து, அவை இரண்டுக்கும் தன் மகன் ஒருவனை அரசப் பிரதிநிதியாக்கினன். மதுரையைத் தலைநகராகக் கொண்ட அந்த அரசப் பிரதிநிதி சோழ பாண்டியன் என்னும் பட்டப் பெயர் பெற்றான். சுமார் 1020–21-ல் ராஜேந்திரன் மீண்டும் தன் கவனத்தை மேற்குச் சாளுக்கிய ராஜ்யத்தின்மீது திருப்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

சத்தியாசிரயனுக்குப்பின், 1008-ல் அவனுடைய சகோதரன் மகன் ஐந்தாம் விக்கிரமாதித்தியன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய குறுகிய ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை. அவனுக்குப்பின் அவனுடன் பிறந்த இரண்டாம் ஜெயசிம்மன் 1015-ல் அரியணை யேறினன். அவன் பலமுனைகளில் போரிட நேர்ந்தது. மாளவத்துப் பரமார மன்னன் போஜன் தனக்கு முன்னிருந்த முஞ்சன் அடைந்த பழியைத் துடைப்பதற்காகச் சாளுக்கிய ராஜ்யத்தின் வடபகுதியின்மீது படையெடுத்து லாட்டாவையும் கொங்கணத்தின் சில பகுதிகளையும் சில ஆண்டுக் காலம் தன்னுடைய ஆட்சியில் வைத்திருந்தான். ஜெயசிம்மன் தன் கீழிருந்த சிற்றரசர்களின் துணையுடன் போஜனை எதிர்த்துக் கடுமையாகப் பொருத பின்னர் அவன் கைப்பற்றியிருந்த பகுதிகளை மீட்டான். ஆனல் ராஜேந்திரன்தான் ஜெயசிம்மனுடைய மிகப் பெரிய பகைவனய் இருந்தான். ராஜேந்திரன் சிங்களத்தை வெல்வதிலும் பாண்டி நாட்டையும் சேர நாட்டையும் அடக்குவதிலும் தன் கவனத்தைச் செலுத்தியிருந்த சமயத்தில், ஜெயசிம்மன்

சத்தியாசிரயன் இழந்த நாடுகளை மீட்கும் முயற்சியில் ஈடு பட்டான். அந்த நேரம் அவனுக்குச் சாதகமாக இருந்தது. வேங்கியில் முதலாம் சக்திவர்மனுக்குப் பின் 1011-ல் பட்டத் துக்கு வந்த விமலாதித்தியன் 1018-ல் செத்துப்போனான். (அவனே அரசப் பதவியிலிருந்து விலகி விட்டான் என்றும் சிலர் கூறுவர்.) அவனுக்குப்பின் அவனுக்கும் குந்தவைக்கும் பிறந்த ராஜராஜனுக்கு எதிராக அவனுடைய இன்னொரு மகனை ஏழாம் விஜயாதித்தியன் வேங்கியரசனாவதை ஆதரிப்பது என்று ஜெயசிம்மன் தீர்மானித்தான். அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்காக அவன் தன் படையுடன் துங்கபத்திரை நதியைக் கடந்து பெல்லாரியைப் பிடித்துக்கொண்டான். கங்கவாடியின் ஒரு பகுதியையும் அவன் பிடித்திருக்கலாம். வேங்கி நாட்டில் விஜயாதித்தியன் விஜயவாடாவைப் பிடித்துக்கொண்டு ராஜ ராஜன் முடிசூட்டிக்கொள்ள முடியாத நிலையை உண்டாக் கினான். ஆனால் விரைவிலேயே ராஜேந்திரன் தன் கவனத்தை ஜெயசிம்மன் பக்கம் திருப்பி ஒரே சமயத்தில் இரண்டு படைகளை இரு வேறு திசைகளில் அனுப்பினான். அவற்றுள் ஒன்று ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது சென்றது. மற்றொன்று ராஜராஜனுக்குத் துணை செய்வதற்காக வேங்கியை நோக்கிச் சென்றது. மேற்கே சென்ற படை ஜெய சிம்மனை மாஸ்கி என்னும் இடத்தில் தோல்வியுறச் செய்தது; அதற்கு மேல் அந்தப் படை ஜெயசிம்மனுடைய நாட்டின்மீது செல்லவில்லை. துங்கபத்திரை நதியே இரண்டு ராஜ்யங் களுக்கும் இடையில் எல்லையாக இருக்க வேண்டுமென்பதை இரு தரப்பாரும் வெளிப்படையாகச் சொல்லாமல் ஏற்றுக் கொண் டார்கள். வேங்கிக்குச் சென்ற படை விஜயாதித்தியனைப் பல சண்டைகளில் தோற்கடித்து, நாட்டைப் பிடித்து, ராஜராஜ னுக்குக் கொடுத்து விட்டது. அதன் பின் அந்தப் படை விஜயா தித்தியனைப் பல சண்டைகளில் தோல்வியுறச் செய்து, நாட்டைப் பிடித்து, ராஜராஜனுக்குக் கொடுத்து விட்டது. அதன்பின் அந்தப் படை விஜயாதித்தியனுக்கு ஆதரவு தந்த கிழக்குக் கங்க மன்னனை ஒறுப்பதற்காகக் கலிங்கத்தின்மீது சென்றது. கலிங்க மன்னன் மதுகாமார்ணவனை (1019–1038) வென்றபின் சோழப் படை தன்னுடைய பெருவலிமையை வடநாட்டார்க்கு உணர்த்தும் நோக்கத்துடன் கங்கை நதி வரையில் சென்றது. ஆனால் சோழப்படை வடக்கே சென்றதும் தெலுங்கு நாட்டில் எதிரிகள் மீண்டும் தலை தூக்கினார்கள். அதனால் வடக்கே சென்ற சோழப் படைக்கும் தெற்கே இருந்த சோழ நாட்டிற்கும் தொடர்பு துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டது. அந்த அபா யத்தை நீக்குவதற்கும் வடக்கே சென்ற சோழப் படை மீண்டும்

தென்னகத்தை அடைவதற்கு உதவுவதற்கும் ராஜேந்திரன் ஒரு பெரிய படையை நடத்திக்கொண்டு சென்று, கோதாவரி நதியின் கரையில் பாசறை அமைத்து அங்கே தங்கினன். அதன்பின் அவன் 1022 ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதியன்று தன் உடன் பிறந்தாள் மகனாகிய ராஜராஜனுக்கு ஆடம்பரமாக முடி சூட்டினன். அதற்குப் பின், வெகு விரைவில், வடக்கே சென்று வெற்றியுடன் திரும்பிய சோழப் படை அவனுடன் சேர்ந்து கொண்டது. பின்னர் அனைவருமாகச் சேர்ந்து திருச்சிக்கு அருகில் வளர்ந்துகொண்டிருந்த புதிய தலைநகரமாகிய கங்கை கொண்ட சோழபுரத்திற்குத் திரும்பினர்கள்.

அதன் பின் வெகு விரைவில் ராஜேந்திரன் கடல் கடந்த ஸ்ரீவிஜய ராஜ்யத்தின்மீது ஒரு கப்பற்படையை அனுப்பினன். ஸ்ரீவிஜயம் ஒரு வலிமைமிக்க ராஜ்யம். அந்த ராஜ்யத்தில் மலேயா தீபகற்பம், ஜாவா, சுமத்திரா, அவற்றிற்கு அண்மையிலிருந்த தீவுகள் ஆகிய அனைத்தும் அடங்கியிருந்தன. இந்தியாவையும் சீனவையும் இணைத்த கடல் வழிகள் அந்த ராஜ்யத்தின் கட்டுப்பாட்டிலிருந்தன. ஸ்ரீவிஜயத்திற்கும் சோழப் பேரரசுக்கும் ராஜராஜன் காலத்திலும் ராஜேந்திரனுடைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளிலும் நல்ல உறவு இருந்தது. அந்த நாள்களில் ராஜேந்திரனுடைய நட்பைக் காம்பூஜ அரசனும் விரும்பினன். சோழ அரசர்கள் அரச தந்திரத் தொடர்புகளையும் வாணிகத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் சீனவுக்குத் தங்கள் தூதர் குழாங்களை அனுப்பினர்கள். அந்தத் தூதர்கள் 1016, 1033, 1077 ஆகிய ஆண்டுகளில் சீனவை அடைந்தார்கள். ராஜேந்திரன் 1025-ல் ஸ்ரீவிஜயத்தோடு போர்செய்தான். சோழ நாட்டிற்கும் சீனவுக்கும் ஏற்பட்ட தொடர்பை ஸ்ரீவிஜய அரசன் விரும்பாததால் அந்தப் போர் நடந்ததா அல்லது ராஜேந்திரன் தன்னுடைய திக்விஜயத்தைக் கடல் கடந்த நாடுகளிலும் தொடர வேண்டும் என்ற பேரார்வத்தால் அது ஏற்பட்டதா என்பதை நாம் கூற முடியாது. காரணம் எதுவாயிருந்தாலும் சோழப் படையெடுப்பு முழு வெற்றியடைந்தது. சோழப் படைகள் கடாரத்தையும், தலைநகராகிய ஸ்ரீவிஜயத்தையும், பிடித்துக்கொண்டன. மாரவிஜய துங்கவர்மனுக்குப் பின் பட்டத்திற்கு வந்து அப்போது ஸ்ரீவிஜயத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த சங்கராம விஜயதுங்கவர்மன் சிறை பிடிக்கப்பட்டான். ஆனல், ஸ்ரீவிஜயத்தின் அரசன் சோழ மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டதும், போரும் நின்றுவிட்டது என்றும் அவனுடைய ராஜ்யம் அவனுக்கே திருப்பித் தரப்

பட்டது என்றும் நாம் நம்பலாம். சோழ நாட்டிற்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் பல தலைமுறைக் காலம் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை, சுமத்திராவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 1008ஆம் ஆண்டைச் சேர்ந்த சிதைந்துபோன தமிழ்ப் பொறிப்பு ஒன்றினுடைய ஒரு பகுதியின் மூலம் நாம் அறிகிறோம்.

பாண்டி நாட்டிலும் சேர நாட்டிலும் தோன்றிய கலகங்களை அடக்குவதற்காக இளவரசன் ராஜாதிராஜன் ஒரு படையுடன் அந்த நாடுகளுக்குச் சென்று, பல சண்டைகளைச் செய்து, அந்த நாடுகளில் மீண்டும் சோழ ஆட்சியை நிலைநிறுத்தினான். அந்தச் சண்டைகளில் சேர பாண்டிய மரபுகளைச் சேர்ந்த பல அரச குமாரர்கள் உயிரிழந்தார்கள். பலர் நாட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். சிங்களத்திலும் சோழர்களுக்குத் தொல்லை ஏற்பட்டது. அங்கு விக்கிரமபாகு தொடர்ந்து தமிழர்களைத் துன்புறுத்திவந்தான். அதனால், ராஜாதிராஜன் ஒரு படையுடன் 1041-ல் சிங்களத்துக்குச் சென்றான். ஏறக்குறைய அதே சமயத்தில் விக்கிரமபாகு இறந்து போனான். அதன்பின் சிங்களத்தில், சோழ ஆட்சிக்கு வெளியிலிருந்த பகுதிகளில் கலகங்களும் குழப்பமும் ஏற்பட்டன. அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு துணிச்சல் மிக்க சிங்கள வீரர்களும், பாண்டி நாட்டிலிருந்து ஓடிப்போய் அங்கே தங்கியிருந்த அரசகுமாரர்களும் மிகவும் தொலைவிலிருந்த கன்னோசியிலிருந்து அங்கே, சென்றிருந்த ஜகதிபாலன் என்ற ஒருவனும் சிங்களத் தீவின் சில பகுதிகளில் தங்கள் ஆட்சியை நிறுவிக் கொண்டார்கள். அவர்கள் அனைவருமே ஒரு விஷயத்தில் ஒருவரையொருவர் ஒத்திருந்தார்கள். அவர்களெல்லாரும் சோழர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். அவர்கள் எல்லாருமே அதற்குரிய தண்டனையையும் அடைந்தார்கள்.

ராஜேந்திரனுடைய ஆட்சியின் இறுதியாண்டுகளில் சோழர்க்கும் மேற்குச் சாளுக்கியர்க்கும் மீண்டும் போர் மூண்டது. வழக்கம்போல வேங்கி நாடும் அந்தப் போருக்கு ஒரு காரணமாயிற்று. சாளுக்கிய ராஜ்யத்தில் இரண்டாம் ஜெயசிம்மனுக்குப்பின் அவனுடைய மகன் முதலாம் சோமேசுவர ஆகவமல்லன் 1042-ல் பட்டத்துக்கு வந்தான். அவன் மானியகேடாவுக்குப் பதிலாகக் கல்யாணியைத் தன்னுடைய தலைநகராக்கி, அந்த நகரத்தில் பல புதிய கட்டடங்களைக் கட்டி அதனை அழகுபடுத்தியதோடு, புதிய வசதிகள் பலவற்றையும் அவன் அங்கு ஏற்படுத்தினான். தன் தந்தையின் காலத்தில் தொடங்கிய மாளவப் போரை அவன் தொடர்ந்து நடத்தி, மாளவத்

தலைநகர் தாராவைத் தாக்கினான். போஜன் ஆகவமல்லனுக்கு அடங்கினான். அதன்பின் ஆகவமல்லன் விதர்ப்பம், மத்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதி, கோசலம், கலிங்கம் ஆகிய நாடுகளையும் வென்று, சக்கரக்கூடத்தில் ஆட்சிசெய்துவந்த நாக வமிச அரசனான தாராவருஷனையும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தான். காகதீய வமிச அரசன் முதலாம் புரோலனும் அவனுடைய மகன் பெட்டனும் சோமேசுவரன் செய்த போர்களில் அவனுக்குத் துணைபுரிந்தார்கள். அதற்குக் கைம்மாறாக அவர்களுக்கு அனுமகொண்டவிஷயத்தை சோமேசுவரன் மானியமாகக் கொடுத்தான்.

சோமேசுவரன் வேங்கியைத் தாக்கி, அதன்மூலம் சோழ ஆதிக்கத்திற்கும் அறைகூவல்விட்டான். 1022-ல் முடிசூடிக் கொண்டதிலிருந்து வேங்கி மன்னன் ராஜராஜனுக்கு அமைதியேயில்லை. அவனுடைய ஒன்றுவிட்ட உடன்பிறந்தான் விஜயாதித்தியன் வேங்கி நாட்டின் அரியணையேறுவதற்குத் தன்னுடைய உரிமையை மீண்டும் நிலைநாட்ட முயன்றான். அந்த முயற்சியில் அவனுக்குச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் ஜெயசிம்மனுடைய துணை கிடைத்திருக்கக்கூடும். அவ்வாறு வலிமை பெற்ற விஜயாதித்தியன் ராஜராஜனை வேங்கியிலிருந்து துரத்திவிட்டு, 1031-ல் ஏழாம் விஷ்ணுவர்த்தன விஜயாதித்தியன் என்னும் பெயரோடு பட்டங்கட்டிக் கொண்டான். ஆனால், 1035-க்குள் ராஜராஜன் வேங்கிநாட்டை மீட்டுக்கொண்டான். அதனால், விஜயாதித்தியன் மேற்குச் சாளுக்கிய அரசவையில் அடைக்கலம் புகுந்தான். அங்கு அவனுக்கு நல்ல வரவேற்பும் உயர்ந்த மதிப்பும் கிடைத்தன. அவனுடைய உரிமையை மீட்டுக் கொடுப்பதற்காகச் சண்டைக்குப் போவதாக அறிவித்த சோமேசுவரன் வேங்கியின்மீது படையெடுத்தான். அந்தச் செய்தி மிக விரைவில் முதலாம் ராஜேந்திரன் காதுக்கு எட்டியது. முதுமையடைந்திருந்த ராஜேந்திரன் தானே போர்க்களத்துக்குப் போகும் நிலையில் இல்லை. அவனுடைய மகன் ராஜாதிராஜன் பேரரசின் தென் பகுதியில் போர் செய்து கொண்டிருந்தான். எனவே, நம்பிக்கையுள்ள ஒரு பார்ப்பனன் தலைமையில் ராஜேந்திரன் ஒரு படையை ராஜராஜனுக்கு உதவி செய்ய அனுப்பினான். அந்தப் பார்ப்பனத் தானைத் தலைவனுக்குத் துணையாகத் திறமை மிக்க மூன்று தளபதிகளையும் அனுப்பினான். இவ்வாறு வடக்கே சென்ற சோழப் படைக்கும் அங்கே இருந்த சாளுக்கியப் படைக்கும் 'கலிதிண்டி' என்னும் இடத்தில் சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் மிகப் பலர் உயிரிழந்தனர். எனினும், யார் வென்றனர் என்றும் யார்

தோற்றனர் என்றும் சொல்ல இயலவில்லை. அதற்குள் முதலாம் ராஜேந்திரன் இறந்துபோனான். அவனுக்குப் பின் 1044-ல் பட்டத்துக்கு வந்த முதலாம் ராஜாதிராஜன் வேங்கியில் சோழ ஆதிக்கத்தை நிலைநாட்டப் பெரிதும் விரும்பினான். எனவே, மிக விரைவில் அவனே ஒரு படையை நடத்திக்கொண்டு வடக்கே சென்றான். கிருஷ்ணா நதியின் கரையில் தன்னடம் (தானியக் கடகம்) என்னும் இடத்தில் நடந்த சண்டையில் ராஜாதிராஜன் வெற்றி பெற்றான். சாளுக்கியப் படை படு தோல்வியடைந்தது. சோமேசுவரனுடைய மகன் விக்கிரமாதித்தியனும் ராஜராஜனுக்குப் போட்டியாயிருந்த விஜயாதித்தியனும் சின்னாபின்னமான சாளுக்கியப் படையோடு பின் வாங்கினார்கள். அதன்பின் ராஜாதிராஜன் மேற்குச் சாளுக்கிய ராஜ்யத்திற்குள் புகுந்து கொள்ளிப்பாக்கை (குல்பக்) என்னும் முக்கியமான கோட்டையைத் தீக்கிரையாக்கினான். இந்த வெற்றிகளின் பயனாக வேங்கியரசன் ராஜராஜன் சிறிது காலம் தொல்லையின்றி இருக்க முடிந்தது. அதற்குப் பின் சாளுக்கிய ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து சோழப் படை அதனுடைய மேற்குப் பகுதிக்குச் சென்று போரைத் தொடர்ந்தது. அங்கு அந்தப் படை பல தளபதிகளையும் சிற்றரசர்களையும் சிறைபிடித்து, கம்பிலி நகரிலிருந்த சாளுக்கிய மாளிகையைத் தகர்த்தெறிந்தது. பின்னர், கிருஷ்ணா நதியின் கரையில் புந்தூர் என்னும் இடத்தில் இருதரப்பினரும் நெருங்கிக் கைகலந்து செய்த சண்டையில் சாளுக்கியர் தோற்றனர். அதன்பின் சோழர்கள் கிருஷ்ணா நதியைக் கடந்து சென்று யடகிரி (யத்கிர்) என்னுமிடத்தில் தங்கள் பாசறையை அமைத்து, அங்கே புலிக் கொடி பொறித்த ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டினார்கள். அதன் பின்னும் போர் தொடர்ந்து நடந்தது. இறுதியில் சாளுக்கியத் தலைநகர் கல்யாணியும் வீழ்ந்தது. ராஜாதிராஜன் அங்கு வீராபிஷேகம் செய்துகொண்டான்; விஜய ராஜேந்திரன் என்னும் பட்டத்தையும் சூடிக்கொண்டான். தஞ்சை மாவட்டத்தில் தாராசுரம் என்னும் இடத்திலுள்ள கோயிலின் வாயிலில் இருந்ததும் இப்போது தஞ்சைக் கலை மண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளதும் ஆகிய ஓர் அழகிய துவாரபாலகச் சிலையில், 'கலியாணபுரத்தைத் தீக்கிரையாக்கியபின் உடையார் ஸ்ரீவிஜயராஜேந்திர தேவர் கொண்டுவந்த துவாரபாலகர்' என்னும் தமிழ்ப் பொறிப்பு இருக்கிறது.

1050ஆம் ஆண்டுக்குள் சோமேசுவரன் சாளுக்கிய நாட்டிலிருந்த சோழப் படைகளைத் துரத்திவிட்டான். வேங்கியிலும் அவன் தன்னுடைய செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டி ராஜ

ராஜன் தன்னுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தான். கடைசியாக அவன் சோழ நாட்டின்மீது தன் படையொன்றைச் செலுத்தினன். அந்தப் படை காஞ்சீபுரம் வரையில் வேகமாக முன்னேறியபின் சாளுக்கிய நாட்டிற்குத் திரும்பியது. சாளுக்கிய வெற்றிகளால் ராஜாதிராஜன் கலக்கமடையவில்லை. அதற்கு மாருக அவைகள் அவனுடைய போர் ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. ஆனல், என்ன காரணத்தாலோ அவன் வேங்கியிலும் கலிங்கத்திலும் சோமேசுவரன் நிறுவியிருந்த சாளுக்கிய ஆதிக்கத்தைக் களைந்து சோழ ஆதிக்கத்தை மீண்டும் ஏற்படுத்த முயலவில்லை, அதற்கு மாருக, அவன் சாளுக்கிய ராஜ்யத்தின் மேற்குப் பகுதியின்மீது மீண்டும் படையெடுத்தான்.

அந்தப் படையெடுப்பில் அவனுக்கு அவனுடைய தம்பியும் இளவரசனுமான இரண்டாம் ராஜேந்திரன் துணைபுரிந்தான். கிருஷ்ணு நதியின் கரையில் இயற்கை யரண் மிகுந்த கொப்பம் என்னுமிடத்தில் சோழ சாளுக்கியப் படைகள் மோதின. கடுமையாக நடந்த அந்தச் சண்டையில் ராஜாதிராஜன் விழுப்புண் பட்டு உயிர் துறந்தான். அந்தச் சண்டையில் மூலபலப் படையின் தலைவனுயிருந்த ராஜேந்திரன் சாளுக்கியர்களைத் தாக்கிச் சோழர் தோல்வியை வெற்றியாக மாற்றினன். அதன் பின் அவன் சாளுக்கிய தளபதிகள் பலரைக் கொன்முன். சின்னு பின்னமாகப் புறமுதுகிட்டு ஓடிய சாளுக்கிய வீரர்கள், பல யானைகளையும் ஏராளமான செல்வத்தையும் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அவையெல்லாவற்றையும் சோழப்படை கைப்பற்றிக் கொண்டது. மேலும் அரசிகள் உள்படப் பெண்கள் பலர் சோழ வீரர்களிடம் சிறைப்பட்டனர். அந்தப் போர்களத்திலேயே இரண்டாம் ராஜேந்திரன் சோழப் பேரரசனுக முடிசூடிக் கொண்டான். அதன்பின் அவன் கொல்லாபுரம் வரையிலும் சென்று அங்கு ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டிவிட்டுத் தன் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்திற்குத் திரும்பினன்.

கொப்பத்தில் கண்ட தோல்வியால் ஏற்பட்ட மானக் கேட்டைத் துடைப்பதற்காகச் சோமேசுவரன் மீண்டும் போர் தொடங்க விரும்பினன். வேங்கியில், 1061-ல் ராஜராஜன் இறந்த பின்னர், சோமேசுவரன், ஏழாம் விஜயாதித்தியனுடைய மகன் இரண்டாம் சக்திவர்மனை வேங்கி நாட்டின் அரியணையேற்றி, அவனுக்குத் துணைபுரிவதற்காகச் சாமுண்டராஜன் என்பவனுடைய தலைமையில் ஒரு படையையும் அனுப்பினன். அதன் பின், அவன் சோழ ஆதிக்கத்திலிருந்த கங்கவாடியின்மீது தன்னுடைய மக்கள் விக்கிரமாதித்தியன், ஜெயசிம்மன் என்பவர்

களுடைய தலைமையில் ஒரு படையை அனுப்பினான். இவ்வாறு இரு முனைகளிலுமிருந்து வந்த அறைகூவலை இரண்டாம் ராஜேந்திரன் ஏற்றுக்கொண்டான். அவனுக்கு அவனுடைய மகன் ராஜமகேந்திரனும், தம்பி வீரராஜேந்திரனும் துணை நின்றனர். வேங்கியில் நடந்த சண்டையில் சாமுண்டராஜனும் இரண்டாம் சக்திவர்மனும் உயிரிழந்தார்கள். கங்கவாடியின் மீது படையெடுத்திருந்த சாளுக்கியப் படைகளைச் சோழர்கள் பின்வாங்கி ஓடுமாறு செய்து, மைசூரில் துங்கா நதியும், பத்திரா நதியும் ஒன்றுசேர்கின்ற கூடலி என்ற கூடற்சங்கமத்தில் கடுமையாகத் தாக்கித் தோல்வியுறச் செய்தார்கள். இவ்வாறு, சோமேசுவரன் கொப்பத்தில் பெற்ற தோல்வியைத் துடைப்பதற்காகச் செய்த முயற்சிகள் 1061–62-ல் தோல்வியடைந்தன. அதன்பின், மிக விரைவில் இளவரசன் ராஜமகேந்திரனும், அரசன் இரண்டாம் ராஜேந்திரனும் இறந்து போனார்கள். வீரராஜேந்திரன் 1063-ல் சோழப் பேரரசனானான்.

இரண்டாம் ராஜேந்திரன் இறந்தபின், சிறிதுகாலம் சோழ சாளுக்கியப் பகையில் அமைதி நிலவியது. ஆனால், சோழர்கள் மீண்டும் போரைத் தொடங்குவார்கள் என்பதை நன்றாக உணர்ந்திருந்த சோமேசுவரன் தேவையான ஆயத்தங்கள் எல்லாவற்றையும் செய்துகொண்டிருந்தான். கிழக்கில் அவன் தன்னுடைய சிற்றரசர்களாயிருந்த நாகவமிச தாராவருஷன், கிழக்குக் கங்கவமிச மூன்றாம் வஜ்ஜிரஹஸ்தன் ஆகியவர்களுடைய உதவியை எதிர்ப்பார்த்ததோடு தன்னுடைய ஊழியத்தில் இருந்த பரமார அரசகுமாரன் ஜனநாதனுடைய தலைமையில் ஒரு வலிமை மிகக் படையை விஜயவாடாவில் நிறுத்தி வைத்தான். மேற்கில், சோழ ஆதிக்கத்திலிருந்த பகுதிகளின்மீது விஜயாதித்தியன் தலைமையில் ஒரு படையை அனுப்பிவைத்தான்.

எதிர்பார்த்தபடியே வீரராஜேந்திரன் விரைவில் போர்க்களம் புகுந்தான். வேங்கி நாட்டில் சாளுக்கியப் படைகள் சில சிறிய தோல்விகளையடைந்தன. ஆனால், தொடக்கத்தில் சோழர்கள் பெரிய வெற்றி எதுவும் பெறவில்லை. மேற்கில் சோமேசுவரனுடைய படைகள் 1066-ல் ஒரு நதிக்கரையில் (துங்கபத்திரையாக இருக்கலாம்) நடந்த சண்டையில் படுதோல்வியடைந்தன. ஆனால், சோமேசுவரன் தன்னுடைய படைகளை மீண்டும் ஒன்றுதிரட்டிக் கூடல் சங்கமத்தில் தன்னைச் சந்திக்குமாறு வீரராஜேந்திரனுக்கு அறைகூவல் விட்டான். அந்த அறைகூவலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட வீரராஜேந்திரன் தன்னுடைய படைகளுடன் கூடல் சங்கமத்திற்குச்

சென்று காத்திருந்தான். ஆனால், அவ்விடத்திற்குத் தன் படைகளை மட்டும் அனுப்பிவிட்டு, சோமேசுவரன் வாராமல் நின்று விட்டான். இவ்வாறு ஒரு மாதம் காத்திருந்த வீர ராஜேந்திரன் இறுதியில் சாளுக்கியப் படைகளைக் கடுமையாய்த் தாக்கி, தோல்வியடையச் செய்தபின்பு துங்கபத்திரை யாற்றின் கரையில் ஒரு வெற்றிக்கம்பத்தை நாட்டினான். அதன்பின் அவன் தன்னுடைய படைகளை நடத்திக்கொண்டு வேங்கி நாட்டுக்குச் சென்றான். அதற்கு முன்னரே சாளுக்கியப் படைகளைத் தற்காப்புக்கு ஆயத்தம் செய்வதற்காக விஜயாதித்தியன் அங்கே சென்றிருந்தான். விஜயவாடாவுக்கருகில் நடந்த ஒரு பெரிய சண்டையில் சாளுக்கியப் படைகள் தோல்வியடைந்தன. அதன்பின் வீரராஜேந்திரன் கிருஷ்ணா நதியைத் தாண்டிக் கலிங்கத்துக்குள் தன் படைகளைச் செலுத்தினான். அங்கேயும் அருகிலிருந்த நாக வமிசச் சிற்றரசான சக்கரகூடத்திலும் பல சண்டைகள் நடந்தன. அந்தச் சண்டைகளுள் விஜயாத்தித்தியனையும் மூன்றாம் ஹஸ்தவர்மனுடைய மகன் ராஜராஜனையும் தவிர, சோமேசுவரனுடைய மகன் விக்கிரமாதித்தியனும், சாளுக்கியப் படைத்தலைவர்களுள் ஒருவனாக இருந்தான். பிற்காலத்தில் முதலாம் குலோத்துங்கன் என்னும் பெயரைப் பெற்ற ராஜேந்திரன் சோழர் படைத் தலைவர்களுள் ஒருவனாக இருந்தான். இதற்கிடையில் நோய்வாய்ப் பட்டதால், சூளுரைத்தபடி வீரராஜேந்திரனைப் போர்க்களத்தில் சந்திக்க இயலாத சோமே சுவரன் அது வரையிலும் நோய் நீக்கம் பெறாததால் வெறுப் புற்று, 1068 மார்ச்சு மாதம் 29ஆம் தேதியன்று துங்கபத்திரை யாற்றில் குருவத்தி என்னும் இடத்தில் நீரில் மூழ்கித் தற்கொலை (பரமயோகம்) செய்துகொண்டான். இவ்வாறு சாளுக்கிய வமிசத்தில் மிகவும் பெரிய அரசர்களுள் ஒருவனான சோமேசுவரன் அரசியல் அரங்கத்திலிருந்து மறைந்தான். ஏறக்குறைய அவனுடைய ஆட்சிக்காலம் முழுவதிலுமே வேங்கிநாடு அவனுடைய ஆதிக்கத்தில் இருந்தது. வட இந்தியாவில் இரண்டு பெரிய ராஜ்யங்களில் ஆட்சி செய்துவந்த பரமாரர்களையும் பிரதிஹாரர்களையும் சில காலம் அவன் தன்னுடைய ஆதிக்கத்தின்கீழ் அடக்கி வைத்திருந்தான். எத்தனையோ தோல்விகள் ஏற்பட்டபோதிலும் மனந்தளராமல் அவன் சோழர்களோடு தன் இறுதி மூச்சுவரையிலும் போர் செய்து கொண்டே இருந்தான். அவனுடைய போர் வன்மையைவிட அவனுடைய அரச தந்திர ஆற்றல் சிறந்ததாய் இருந்தது. இல்லாவிட்டால் போரில் பல தோல்விகளையடைந்தும், அவ்வளவு நீண்டகாலம் அத்தனை ராஜ்யங்களில் அவன் தன் செல்வாக்கை நிலைநிறுத்தியிருக்க இயலாது. அவன் தன்னுடைய வலிமையில் மிகுந்த நம்பிக்கையுடையவன். அந்த


நம்பிக்கையை அவன் தன்னுடைய திறமைமிக்க தளபதிகளுக்கும் தன்னுடைய புகழ்பெற்ற மகன் விக்கிரமாதித்தியனுக்கும் ஊட்டுவதிலும் வெற்றியடைந்தான். அவன் அமைதியையும் அதனுல் ஏற்படக்கூடிய நன்மைகளையும் அறியாதவன் அல்லன். அழகிய நகரமான கல்யாணி அவனுடைய படைப்பு.

முதலாம் சோமேசுவரனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் சோமேசுவரன் பட்டத்துக்கு வந்தான். ஆனுல், அவனுடைய தம்பி விக்கிரமாதித்தியனுக்கு அதிகாரத்திலிருந்த பேராவல் விரைவிலேயே வெளிப்படத் தொடங்கியது. சோமேசுவரன் பட்டத்திற்கு வந்ததும் வராததுமாக, வீர ராஜேந்திரன் சாளுக்கிய ராஜ்யத்தின்மீது படையெடுத்து, குத்தியை முற்றுகையிட்டு, கம்பிலியையும் தாக்கினுன். இவ்வாறு தன் தமையனுக்கு ஏற்பட்ட அபாயத்தை விக்கிரமாதித்தியன் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான். சாளுக்கிய ராஜ்யத்திலிருந்த சிற்றரசர்களின் மனத்தை மயக்கி, அவர்களைச் சோமேசுவரன் பக்கம் சேரவிடாமல், தன் பக்கம் இழுத்துக் கொண்டான். அதன்பின் அவன் வீரராஜேந்திரனேடு பேரம் பேசத் தொடங்கினுன். அதன் விளைவாக, அரச தந்திரத் தொடர்புகளில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. சாளுக்கியப் பேரரசைப் பல அரசர்கள் தமக்குள் பங்கிட்டுக்கொண்டனர் என்று சொல்லக்கூடிய நிலையும் ஏற்பட்டது. விஜயாதித்தியன் வீரராஜேந்திரனுக்குப் பணிந்து சோழ ஆதிக்கத்திற்குட்பட்ட சிற்றரசனுக வேங்கி நாட்டை ஆள்வதற்கு ஒப்புக்கொண்டான். வீரராஜேந்திரனுடைய மக்களுள் ஒருத்தியை விக்கிரமாதித்தியனும், இன்னெருத்தியைக் கலிங்கநாட்டு கங்க இளவரசன் ராஜராஜனும் மணந்துகொண்டார்கள். சாளுக்கிய ராஜ்யத்தின் தென் பாதியில் ஆளும் விக்கிரமாதித்தியன் யுவராஜன் (இளவரசன்) என்ற பட்டத்தோடு ஏறக்குறைய சுயேச்சையாக ஆட்சி செய்தான். இவ்வாறு, சாளுக்கியர்களுக்கும் சோழர் களுக்கும் இருந்த முடிவில்லாப் பகைமை இறுதியில் முடிவு பெற்றது என்று கூறக்கூடிய நிலை ஏற்பட்டது.

ஆனுல், 1069-ல், வீரராஜேந்திரன் இறந்தபின் நிலைமை மீண்டும் மாறிவிட்டது. அதைப்பற்றிப் பேசுமுன் வீரராஜேந்திர னுடைய ஆட்சியைப்பற்றிய சில செய்திகளைக் கூறுவது பொருத்தமாக இருக்கும். இலங்கையிலிருந்த சிங்கள அரசன் முதாலம் விஜயபாகு அங்கு நிலைபெற்றிருந்த சோழ ஆட்சியை அழிப்பதற்குப் பெரிதும் முயன்று கொண்டிருந்தான். அதனுல் வீரராஜேந்திரன் 1067-க்குச் சிறிது முன்னர் ஒரு சோழப்

படையை இலங்கைக்கு அனுப்பினன். விஜயபாகு தோற்று, வாட்டகிரி (கெகல மாவட்டத்திலுள்ள வக்கிரகலா) என்னும் இடத்தில் ஒளிந்துகொண்டான். அவன் மனைவியைச் சோழர் சிறைபிடித்தனர். சிறிது காலத்துக்குப்பின் விஜயபாகு தன் முயற்சியில் வெற்றிபெற்றான் என்பதைப் பின்னர்க் காண்போம். தன்னுடைய துணையை நாடிக் கடாரத்திலிருந்து வந்திருந்த ஓர் அரசகுமாரனுக்கு உதவுவதற்காக வீரராஜேந்திரன் ஒரு கப்பற் படையைக் கடாரத்திற்கு அனுப்பினன் (1068).

வீரராஜேந்திரன் இறந்த பிறகு, சோழர்களுடைய கூட்டுத் தனக்கு நன்மை பயப்பதற்கு மாறாகத் தொல்லை தருவதை விக்கிரமாதித்தியன் உணர்ந்தான். அவன் தன் தமையனுக்கும் தனக்கும் இருந்த மாறுபாடுகளால் தனக்கு இன்னல் விளையாமல் காத்துக்கொள்ளும் பணியில் ஈடுபடுவதோடு தன்னுடைய இளவயது மைத்துனனை அதிராஜேந்திர சோழனைக் கிழக்குச் சாளுக்கிய அரசகுமாரன் இரண்டாம் ராஜேந்திரனுடைய சூழ்ச்சிகளிலிருந்து பாதுகாக்கவேண்டிய பணியிலும் தன் கவனத்தைச் செலுத்தவேண்டிய நிலையில் இருந்தான். இரண்டாம் ராஜேந்திரன்தான் பிற்காலத்தில் முதலாம் குலோத்துங்கன் என்று பெயர் பெற்ற அரசன். சோழர்களுக்கும் வேங்கி நாட்டுக் கிழக்குச் சாளுக்கியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட திருமண உறவுகளையும் அந்த இரு மரபுகளிலும் ராஜேந்திர குலோத்துங்கன் வகித்த இடத்தையும் கீழே காணும் அட்டவணையில் பார்க்கலாம்.



வீரராஜேந்திரன் வேங்கி நாட்டுக்கு ஏழாம் விஜயாதித்தியனை அரசனாக்கினான் என்பதை முன்பு கூறினோம். அதனால், வேங்கிநாட்டிற்கு உண்மையிலேயே அரசுரிமை பெற்றிருந்த ராஜேந்திரன் (குலோத்துங்கன்) அந் நாட்டின் அரியணை ஏறும் வாய்ப்பை இழந்தான். எனவே, வீர ராஜேந்திரன் இறந்ததும் திறமைசாலியான குலோத்துங்கன் வேங்கி நாட்டுக்கு மட்டுமன்றிச் சோழநாட்டுக்கும் அரசுரிமை கொண்டாடினான். விக்கிரமாதித்தியன் காஞ்சீபுரத்துக்குச் சென்று, அங்குத் தோன்றிய ஒரு கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிட்டுத் தன் மைத்துனன் அதிராஜேந்திரனை கங்கை கொண்ட சோழபுரத்தில் அரியணையேற்றிவிட்டுத் துங்கபத்திரை நதியின் கரைக்கு மீண்டான். ஆனால், பொது மக்கள் செய்த கிளர்ச்சியில் தன் மைத்துனன் அதிராஜேந்திரன் உயிரிழந்தான் என்றும், வேங்கி நாட்டரசன் ராஜேந்திரன் காலியாயிருந்த சோழ அரியணையைக் கைப்பற்றிக்கொண்டான் என்றும் விரைவிலேயே விக்கிரமாதித்தியன் கேள்விப்பட்டான். எனவே, வீரராஜேந்திரன் இறந்த சிறிது காலத்துக்குள் ராஜேந்திரன் வேங்கிநாட்டிலிருந்து விஜயாதித்தியனைத் துரத்திவிட்டுத்தானே அந் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டதோடு நில்லாமல் சோழ நாட்டின் அரியணையையும் கைப்பற்றிக்கொண்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வாறு விக்கிரமாதித்தியன், சாளுக்கிய நாட்டுச் சோமேசுவரன், வேங்கி—சோழநாட்டு முதலாம் குலோத்துங்கன் ஆகிய இரு பகைவர்களுக்கு இடையில் மாட்டிக்கொண்டான். இந்த இக்கட்டான நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கு விக்கிரமாதித்தியன் அடுத்த ஆறாண்டுகளில் முயன்று வெற்றி பெற்றான். தன் தமையன் சோமேசுவரனுடைய வலிமையைக் குறைப்பதற்காக அவன் தொடர்ந்து சூழ்ச்சி செய்தான். அதற்காக அவன் சாளுக்கிய ராஜ்யத்துச் சிற்றரசர்களைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ள முயன்றான். அவர்களுள் விஜயாதித்தியனும், விக்கிரமாதித்தியனுடைய தம்பியான ஜெயசிம்மனும் முன்னரே விக்கிரமாதித்தியனுடன் சேர்ந்து கொண்டிருந்தவர்கள். அவர்களைத்தவிர, கொங்கணத்தில் ஆட்சிசெய்த கடம்ப மன்னன் ஜெயகேசி, அப்போதுதான் முன்னுக்கு வந்துகொண்டிருந்த ஹொய்சள வமிச அரசன் வினயாதித்தியன், அவனுடைய மகன் எறயங்கன், உச்சங்கியிலிருந்த பாண்டிய மன்னன் ஆகியவர்களும் விக்கிரமாதித்தியன் பக்கம் சேர்ந்துகொண்டார்கள். தொலைவிலிருந்த தேவகிரியில் ஆட்சி செய்த யாதவ மன்னன் இரண்டாம்

சியுனனும் விக்கிரமாதித்தியனை ஆதரித்தான். இவ்வாறு பல தொல்லைகளுக்குட்பட்ட போதிலும் தன்னிடம் உண்மையாய் நடந்துகொண்ட தளபதிகள் சிலருடைய துணையுடன் சாளுக்கிய அரியணையை விடாது பற்றிக் கொண்டிருந்த சோமேசுவரன் முதலாம் குலோத்துங்கனோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். இரு தரப்பினரும் அரச தந்திரத் துறையிலும் போர்த் துறையிலும் செய்த ஆயத்தங்கள் 1075ஆம் ஆண்டுக்குள் முடிவுற்றன. அப்போது முதலாம் குலோத்துங்கனுடைய படைகளும் விக்கிரமாதித்தியனுடைய படைகளும் கோலார் மாவட்டத்திலிருக்கிற நங்கிலி என்னும் இடத்தில் மோதின. அந்தச் சண்டையில் விக்கிரமாதித்தியன் தோற்றான். அவனைச் சோழப் படைகள் வழிநெடுகச் சண்டை செய்துகொண்டே துங்கபத்திரை நதிவரையில் துரத்திச் சென்றன. குலோத்துங்கன் கங்கவாடியைத் தன்னுடைய ஆட்சிக்குள் சேர்த்துக் கொண்டான். ஆனால், குலோத்துங்கனுடன் ஒத்துழைத்து விக்கிரமாதித்தியனைப் பின்னாலிருந்து தாக்கிய சோமேசுவரன் விக்கிரமாதித்தியனிடம் சிக்கிக்கொண்டான். விக்கிரமாதித்தியன் அவனைச் சிறையில் அடைத்துவிட்டு, 1076-ல் தானே மேற்குச் சாளுக்கிய அரசன் என்று விளம்பரப்படுத்திக்கொண்டான். அவன் அரியணையேறிய நிகழ்ச்சியை நினைவூட்டும் வகையில் சாளுக்கிய விக்கிரம சகாப்தம் என்னும் ஒரு புதிய சகாப்தத்தையும் தொடங்கினான்

குலோத்துங்கன் விக்கிரமாதித்தியனோடு போர் செய்து கொண்டிருந்த சமயத்தில், 1072–73-ல், திரிபுரியில் ஆட்சி செய்து வந்த ஹைஹய வமிச அரசன் யசகர்ணதேவன் வேங்கியின்மீது படையெடுத்தான். ஆனால், அந்த நிகழ்ச்சியால் அரசியல் துறையிலும் போர்த்துறையிலும் நிரந்தரமான விளைவு எதுவும் ஏற்படவில்லை. எனினும், இன்னொரு திசையில் சோழ ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த ஒரு பகுதியைக் குலோத்துங்கன் நிரந்தரமாக இழந்தான். சிங்களத்தில் தமிழர் ஆதிக்கத்தை அழிப்பதற்காக விஜயபாகு தன் முயற்சிகளை மீண்டும் தொடங்கினான். அவன் அந்தத் தீவின் தென்கோடியிலிருந்து மூன்று படைகளை ஒரே சமயத்தில் வடதிசை நோக்கிச் செலுத்தினான். 1070-ல் பொலனருவா வீழ்ந்தது; அனுராதபுரம் பணிந்தது. ஆனால், அங்கு நடந்த ஒரு கலகத்தின் காரணமாக விஜயபாகு உடனே இலங்கை மன்னன் என்று முடிசூட்டிக்கொள்ளவில்லை. 1072–73-ல்தான் அவனுடைய முடிசூட்டு விழா நடந்தது. குலோத்துங்கன் வேறுவழியில்லாததால், அந்த இழப்பைத் தாங்கிக்கொண்டான். ஆனால் அந்த நிகழ்ச்சியால் மிகவும் மகிழ்ந்த விக்கிரமாதித்தியன் விஜய

பாகுவைத் தன்னுடைய இயற்கையான துணைவனாக ஏற்றுக் கொண்டு அவனுடைய அவைக்கு ஒரு தூதுகுழாத்தைப் பல பரிசில்களோடு அனுப்பினான். அது இயல்புதானே! ஆனால் தமிழகத்திலேயே நடைபெற்ற பாண்டிய சேரக் கிளர்ச்சிகளைப் பார்த்துக் கொண்டு குலோத்துங்கன் வாளாவிருக்கவில்லை. எனவே, அந்தக் கிளர்ச்சிகளை அடக்குவதற்காக அவன் ஒரு பெரும் படையுடன் சென்று, செம்பொன்மாரி, கோட்டாறு, விழிஞம், சாலை ஆகிய இடங்களில் எதிரிகளுடன் கடுமையாகச் சண்டையிட்டு, பாண்டிய சேரநாடுகளில் மீண்டும் சோழ ஆதிக்கத்தை நிலை நாட்டினான். அவனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த பாண்டிய சேர அரசகுமாரர்கள் அனைவரும் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்த இரு நாடுகளிலும் இருந்த முக்கியமான சாலைகளில் அவன் போர்வீரர் குடியிருப்புகள் பலவற்றை நிறுவினான். ஆனால் முதலாம் ராஜராஜன், ராஜேந்திரன் ஆகியவர்களுடைய காலத்தில் அந்த நாடுகளில் அமைந்திருந்த ஆட்சிமுறையைக் குலோத்துங்கன் மீண்டும் நிலை நாட்டவில்லை. அதற்கு மாறாக, உள்ளூர் நிர்வாகத்தை ஆங்காங்கே இருந்த சிற்றரசர்கள் கையிலேயே விட்டு விட்டான்.

இலங்கையரசன் விஜயபாகு தன்னுடைய துணைவனை ஆளும் விக்கிரமாதித்தியனுடைய அவைக்கு அனுப்பிய தூதர்களின் கைகால்களைக் குலோத்துங்கனுடைய ஆட்கள் வெட்டி விட்டார்கள். அதனைக் கேள்விப்பட்ட விஜயபாகு 1084–85-ல் குலோத்துங்கனோடு போர் தொடங்குவதாக அறிவித்தான். அதற்கான ஆயத்தங்களை அவன் செய்துகொண்டிருந்த சமயத்தில், கூலிக்காக அவனுடைய வேளைக்காரப் படையிற் சேர்ந்திருந்த தமிழ்வீரர்கள் தங்களுடைய இனத்தினரான தமிழ்மக்களோடு சண்டை செய்ய மறுத்து, கலகஞ் செய்து, அரச மாளிகையைத் தீக்கிரையாக்கினார்கள். அதனால் விஜயபாகு வக்கிரிகலைக்கு ஓடிவிட்டான். எனினும், சிறிது காலத்தில் அவன் அங்கிருந்து திரும்பி வந்து, வேளைக்காரர் கலகத்தை அடக்கித் தன்னுடைய தளபதிகளைக் கொன்றவர்களின் முக்கியமான தலைவர்கள் அனைவரையும் பிடித்து, அந்தத் தளபதிகளின் சடலங்களைச் சுடுவதற்காக மூட்டிய ஈமத்தீயில் தள்ளி, அவர்களையும் தீக்கிரையாக்கினான். அதற்குப் பிறகு வேளைக்காரர்கள் விஜயபாகுவுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்கவில்லை. மேலும், அவனுடைய ஆட்சியின் இறுதியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று வேளைக்காரர்கள் புத்தரின் பற்கோயிலைக் காப்பதாக வாக்குறுதியளித்தார்களென்று கூறுகிறது. அந்தக் கல்வெட்

டைப் பொலனருவாவில் இன்னும் காணலாம். குலோத்துங்க னுடைய மக்களில் ஒருத்தியான சுத்தமல்லி என்பவள் சிங்கள அரசகுமாரன் வீரப்பெருமாள் என்பவனை மணந்து கொண்டாள். அதனால், குலோத்துங்கனும் விஜயபாகுவுடன் சமாதானம் செய்துகொண்டான் என்பது தெளிவு.

சோழநாட்டிலிருந்து சென்ற தூதுகுழு ஒன்று 1077-ல் சீனாவை அடைந்தது. அந்தக் குழுவில் 72 வணிகர் இருந்தனர். அவர்கள் தங்களுடன் 'கண்ணாடிச் சாமான்கள், கருப்பூரம், சரிகை வேலைப்பாடுடைய துணிகள், காண்டாமிருகக் கொம்புகள், தந்தம், சாம்பிராணி பன்னீர், படிகாரம், வாசனை வேர், பெருங் காயம், கிராம்பு முதலிய பொருள்களைக் கொண்டு சென்றார்கள். அவற்றிற்கு ஈடாக அவர்கள் 81,800 செப்பு நாணயக் கோவை களைப் பெற்றார்கள்.' ஸ்ரீவிஜயத்தோடும் தமிழர்கள் நல்ல வாணிகம் செய்து வந்தார்கள். அத்தகைய நெருங்கிய தொடர்பு களின் பயனாக ஸ்ரீவிஜய அரசன் நாகப்பட்டினத்தில் தன் முன்னோர் கட்டிய புத்த விகாரங்களின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஒரு தூது குழுவைக் குலோத்துங்கன் அவைக்கு அனுப்பினான்.

1076-ல் ஏழாம் விஜயாதித்தியன் இறந்த பிறகு வேங்கி நாட்டின் ஆட்சியைக் கவனித்துக் கொள்வதற்காகக் குலோத் துங்கன் தன் மக்களை அரசப் பிரதிநிதிகளாக அனுப்பிவைத்தான்; ராஜராஜ மும்முடிச் சோழன் (1076–78); வீரசோடன் (1078–84); ராஜராஜ சோடகங்கன் (1084–89); (மீண்டும்) வீரசோடன் (1089–92); விக்கிரம சோழன் (1092–1118). கொலனுவில் ஆட்சி செய்துவந்த சிற்றரசன் கலிங்கத்தில் அப்போது ஆட்சி செய்து வந்த அனந்தவர்ம சோடகங்கனுடன் சேர்ந்துகொண்டு வேங்கி நாட்டின் அரசப் பிரதிநிதிக்கு எதிராகச் சுமார் 1097-ல் கலகஞ் செய்தான். அந்தக் கலகத்தை அடக்கும் பணியில் விக்கிரம சோழனுக்குத் துணை செய்தவர்களுள் தமிழகத்தின் தென் கோடியில் சோழ மேலாதிக்கத்தில் ஆட்சி செய்துவந்த பராந்தக பாண்டியனும் ஒருவன். சோழப் படைவீரர்கள் கொலனுவைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். அதன்பின் அவர்கள் தென் கலிங்கத்தின் மீதும் படையெடுத்தார்கள். கொலனுத் தலைவன் சரணடைந்தான். அதன்பின் அனந்தவர்மனும் அவ்வாறே செய்தான். சில ஆண்டுகளுக்குப்பின், சுமார் 1110-ல் அனந்தவர்மன் சோழர்களுக்குத் திறை செலுத்துவதை நிறுத்தி விட்டான். அதனால் சோழப்படை மீண்டும் கலிங்கத்தின்மீது சென்றது. அந்தப் படைக்குப் புகழ் பெற்ற கருணாகரத்

தொண்டைமான் தலைமை வகித்தான். கலிங்கத்தில் நுழைந்த சோழப் படை கலிங்கம் முழுதும் சூறையாடிற்று. அனந்த வர்மன் சண்டையில் தோற்று ஓடினான். வெற்றி பெற்ற சோழப் படை ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு திரும்பியது. அந்தப் படையெடுப்பால் நிலையான பயன் எதுவும் விளையவில்லை. எனினும் அது கலிங்கத்துப் பரணி என்னும் அற்புத நூல் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. அதை இயற்றியவர் ஜெயங்கொண்டார் என்னும் புலவர்.

குலோத்துங்கன் காலத்தில் சோழர்கள் இலங்கையை இழந்துவிட்டார்கள் என்பது உண்மையே. எனினும் சோழப் பேரரசின் புகழும் பெருமையும் மங்காமல் 1115 வரையில் இருந்தன. அப் பேரரசில் கிருஷ்ணா துங்கபத்திரா ஆகிய நதிகளின் தெற்கிலிருந்த பகுதிகள் அனைத்தும் அடங்கியிருந்தன. கிழக்கில் அதனுடைய எல்லை கோதாவரி நதி வரையில் பரந்திருந்தது. அதற்கு அப்பாலும் சில சமயங்களில் அது நீண்டு சென்றது. குலோத்துங்க சக்கரவர்த்தி, வடக்கே மிகவும் தொலைவிலிருந்த கன்னோசி நாட்டோடும், காம்போஜம் (கம்போடியா), இந்தோசீனா ஆகிய நாடுகளோடும், பேகன் நாட்டை 1084 முதல் 1112 வரையில் ஆட்சி செய்த கியன்ஜித்தன் என்பவனோடும் அரச தந்திரத் தொடர்புகளை வைத்திருந்தான். ஆனால், குலோத்துங்கனுடைய ஆட்சியின் இறுதிக்காலத்தில் சாளுக்கிய விக்கிரமாதித்தியன் மீண்டும் தன் பகை நடவடிக்கைகளைத் தொடங்கியதால் வேங்கியிலும் மைசூரிலும் சோழர்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. இப்போது நாம் விக்கிரமாதித்தியனுடைய வரலாற்றைச் சிறிது கவனிப்போம்.

விக்கிரமாதித்தியன் அரியணையேறிய பின் அவனும் அவனுடைய பெரும் பகைஞன் குலோத்துங்கனும் தத்தம் வலிமையையும், வலிமையின்மையையும் நன்றாக உணர்ந்திருந்தார்களாதலால், ஒருவரோடொருவர் போரிடுவதை நிறுத்தி வைத்திருந்தார்கள். விக்கிரமாதித்தியனுடைய ஆட்சி பெரும்பாலும் அமைதியாக இருந்தது. அவனுடைய அவையை பில்ஹணன், விக்ஞானேசுவரன் போன்ற பெரும் புலவர்களும் அறிஞர்களும் அலங்கரித்தார்கள். ஆனால், சுமார் 1083-ல் அவனுடைய தம்பி ஜெயசிம்மன் அவனுக்கெதிராகக் கலகஞ் செய்தான். விக்கிரமாதித்தியன் அவனை ஒரு கடுமையான சண்டையில் வென்று சிறைபிடித்தான். ஜெயசிம்மன் குலோத்துங்கனுடைய துணையை நாடினான். ஆனால், குலோத்துங்கன் அவனுக்கு உதவி செய்யவில்லை.

விக்கிரமாதித்தியனுக்கு ஜெயசிம்மனுல் உண்டான ஆபத்தை விடப் பெரிய அபாயம் ஹொய்சளர்களிடமிருந்து வந்தது. விக்கிரமாதித்தியன் குலோத்துங்கனேடு செய்த போரில் ஹொய்சள வினயாதித்தியனும் அவனுடைய மகன் எறயங்கனும் அவனுக்கு உதவி செய்தார்களென்பதை நாம் முன்பு கண்டோம். வினயாதித்தியனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த எறயங்கன் இரண்டாண்டுகளுக்கும் குறைவாகத்தான் ஆட்சிசெய்தான். அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த முதலாம் வல்லாளன் 1100 முதல் 1110 வரையில் ஆட்சி செய்தான். அந்த அரசர்களெல்லாம் சாளுக்கிய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டதாகச் சொன்னுர்களெனினும் அவர்கள் தொடர்ந்து தங்கள் வலிமையைப் பெருக்குவதிலும் ஆட்சியெல்லையைப் பரப்புவதிலும் ஈடுபட்டார்கள். ஹொய்சளர்களுடைய இத்தகையை நடவடிக்கைகளின் விளைவுகளை நாம் வல்லாளனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய தம்பி பிட்டிகனுடைய ஆட்சியில் காண்கிருேம். (அவனுக்கு விஷ்ணுவர்த்தனன் என்ற பெயரும் இருந்தது. உண்மையில் அவனை அந்தப் பெயரின் மூலந்தான் நாம் நன்ருக அறிகிருேம்.) போர்த் திறமை மிக்க அவன் பேராவலும் உடையவன். அவன் சோழ மாகாணமான கங்கவாடியைத் தாக்கினுன். தலக்காடு என்னுமிடத்தில் ஆட்சி செய்த சோழ ஆளுநன் அதிகமான் என்பவனை வென்றபின், 1116-ல் விஷ்ணுவர்த்தனன் அந்த மாகாணத்தைத் தன்னுடைய ஆட்சியில் சேர்த்துக்கொண்டான். அதன்பின் அவன் விக்கிரமாதித்தியனையே எதிர்த்தான். தொடக்கத்தில் அவன் பல வெற்றிகளையும் பெற்ருன். அவன் உச்சங்கியில் ஆட்சிசெய்த பாண்டியனையும், கோவாவில் ஆட்சிசெய்த கடம்ப மன்னன் இரண்டாம் ஜெயகேசியையும் தன் பக்கம் இழுத்துக்கொண்டான். அதன்பின் அவன் வடக்கே கிருஷ்ணு நதி வரையில் முன்னேறினுன். ஆனுல் விக்கிரமாதித்தியன் தன்னிடம் உண்மையாக இருந்த சிற்றரசர்களின் துணையோடு விஷ்ணுவர்த்தனனைக் கடுமையாக எதிர்த்தான். அவ்வாறு அவனுக்குத் துணை செய்தவர்களுள் எல்பர்காவில் ஆட்சி செய்த இரண்டாம் சிந்த ஆசுகி என்பவன் முக்கியமானவன். தான் பிடிக்க நினைத்த சாளுக்கியப் பகுதியிலிருந்து விஷ்ணுவர்த்தனன் துரத்தியடிக்கப்பட்டான். அதன்பின் விக்கிரமாதித்தியன் கோவாவைத் தாக்கிக் கொள்ளையடித்தான்; பாண்டியனையும் துரத்திக் கொண்டு போய் அவனை மிகவும் அதிகமாக நெருக்கினுன். விஷ்ணுவர்த்தனன் தன்னுடைய சொந்த நாட்டிலிருந்த மலைக் கோட்டைகளில் தஞ்சம் புகுந்தான். ஆனுல் விக்கிரமாதித்தியனுடைய படைகள் அவனை அங்கும் துரத்திக்கொண்டு

சென்றன. நீண்டகாலம் பல சண்டைகள் நடந்தன. இறுதியில் 1122–23-ல் விஷ்ணுவர்த்தனன் விக்கிரமாதித்தியனுக்குப்பணிந்து அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான்.

ஹொய்சளர்களை அடக்குவதில் ஈடுபட்டிருந்த அதே சமயத்தில் விக்கிரமாதித்தியன் தன் கவனத்தைக் குலோத்துங்கன் மீதும் திருப்பினன். ஹொய்சளர் கங்கவாடியைப் பிடித்த நிகழ்ச்சி விக்கிரமாதித்தியன் குலோத்துங்கனை எதிர்ப்பதற்கு ஊக்கமளித்திருக்கக் கூடும். கொலனுவில் நடந்த கலகத்தையும் கலிங்க நாட்டின்மீது சோழர் இருமுறை படையெடுப்பதற்குக் காரணமாயிருந்த அனந்தவர்மனுடைய கீழ்ப்படியாத நிலையையும் விக்கிரமாதித்தியன் தூண்டிவிட்டானு என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அவன் 1115ஆம் ஆண்டிலிருந்து வேங்கி நாட்டில் தலையிடத் தொடங்கியது உண்மை. அந்தத் தலையீடு இளவரசப் பட்டம் சூட்டுவதற்காக விக்கிரமனை 1118-ல் குலோத்துங்கன் தமிழகத்திற்கு அழைத்துக்கொண்ட பின்னர் அதிகமாயிற்று.

விக்கிரமாதித்தியனுடைய புகழ்பெற்ற தளபதியான அனந்தபாலன் 1118-ல் வேங்கி மன்னனுய்இருந்தான். இன்னும் பல சாளுக்கிய தளபதிகள் தெலுங்கு நாட்டில் இன்னும் பல பகுதிகளில் ஆட்சி செய்தார்கள். அதன்பின் பல ஆண்டுக்காலம் வேங்கி நாட்டிலிருந்து சோழ ஆதிக்கம் மறைந்தே போய் விட்டது.

இவ்வாறு குலோத்துங்கன் தன்னுடைய பேரரசிலிருந்த இன்னுமோர் பகுதியை இழந்தான். எனவே, அவனுடைய இறுதிக் காலத்தில் சோழ ஆதிக்கம் தமிழ்நாட்டோடும் அதன் எல்லையிலிருந்த தெலுங்கு நாட்டின் ஒரு சிறிய பகுதியோடும் நின்றுவிட்டது. அப்படியிருந்தும் குலோத்துங்கன் பெரிய சோழ அரசர்களுள் ஒருவனென்றே நாம் கருதவேண்டும். அவனுடைய நீண்ட ஆட்சியின் பெரும் பகுதியில் சோழப் பேரரசு வளமிக்கதாயும் சோழப்படை வெற்றியுடையதாயும் விளங்கின. தவிர்க்க வேண்டிய போர்களை அவன் தவிர்த்தான்; தன்னுடைய வலிமைக்கும் வளத்தின் ஆதாரங்களுக்கும் ஏற்ற முறையில் தன் நோக்கங்களை அமைத்துக்கொண்டான். தன்னுடைய சொந்தப் பெருமையை உயர்த்திக் கொள்ளுவதற்கேற்ற செயல்களைவிட மக்கள் நலத்திற்கான செயல்களை அவன் அதிகமாக விரும்பினன். மதிநுட்பம் மிக்க அவனுடைய கோட்பாடுகளின் விளைவுகளை நாம் அவனுக்குப் பின்வந்த அரசர்கள் காலத்தில் பார்க்கிறோம். அவனுக்குப்பின் சுமார் ஒரு நூற்றுண்டுக் காலம், அதாவது 1216-ல் மூன்றும் குலோத்துங்க

னுடைய ஆட்சி முடிவடைகிற வரையில், சோழப் பேரரசு உயர்ந்த நிலையிலேயே இருந்தது. பதினொன்றாம் நூற்றாண்டில் இருந்ததைப் போல அது அவ்வளவு பெரிதாக இல்லையெனினும், பன்னிரண்டாம் நூற்றாண்டு முழுவதிலும் அது சிதையாமல் நெருங்கிணைந்து நின்றது. மேலும், குலோத்துங்கனுக்கு முற்பட்ட காலத்தில் ஓயாமல் போர் நடந்துகொண்டேயிருந்தது என்பது நமக்குத் தெரியும். ஆனால் குலோத்துங்கன் காலத்தில் அவை பெரிதும் குறைந்து போயின என்று பொதுவாகக் கூறலாம். பொறிப்புகள் மட்டுமன்றி மரபுவழிச் செய்திகளும் அவனை 'சுங்கந்தவிர்த்த சோழன்' என்று வர்ணிக்கின்றன. ஆனால், அந்தச் சீர்திருத்தத்தின் இயல்புகள் யாவை என்பது நமக்குத் தெரியவில்லை.

முதலாம் குலோத்துங்கன் 1122 வரையில் உயிரோடிருந்தானெனினும், விக்கிரமசோழனுடைய ஆட்சி 1118ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டதாக அவன் பொறிப்புகளிலிருந்து நாம் அறிகிறோம். அவன் பதினேழாண்டு ஆட்சிசெய்தான். அந்தக் காலம் முழுவதும் அமைதி நிலவியது என்று பொதுவாக நாம் கூறலாம். அவன் சிதம்பர நடராஜர் கோயிலில் பல புதிய பகுதிகளைக் கட்டினான். முதலாம் பராந்தகன் காலத்திலிருந்து தில்லைச் சிற்றம்பலத்துக் கோயிலில் சோழர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அதற்கு முன்னிருந்த சோழர்களும் அந்தக் கோயிலில் ஓரளவு தம் கவனத்தைச் செலுத்தினார்கள். அது போலவே திருவரங்கப் பெருமான் கோயிலிலும் சோழர்களுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. 1126-ல் ஆறாம் விக்கிரமாதித்தியன் இறந்தபின் அவனுடைய மகன் மூன்றாம் சோமேசுவரன் பட்டத்துக்கு வந்தான். அவன் பொதுவாகப் போரில் விருப்பமில்லாதவன் என்று நாம் கூறலாம். அதனால் விக்கிரம சோழன் வேங்கியில் மீண்டும் சோழ ஆதிக்கத்தை நிலைநாட்டுவது எளிதாயிற்று. ஆனால், அந்த வேலையை அவன் ஒரேயடியாக முடித்து விடாமல், சிறிதுசிறிதாகச் செய்தான். 1127-ல் தொடங்கிய அந்த வேலை 1133-ல்தான் முடிவுற்றது. அந்த ஆண்டில் கோதாவரிக் கரையில் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் ஒரு சண்டை நடந்தது. அதில் சோமேசுவரனும் இருந்தான். சோழர் பக்கத்தில் போர் செய்த இரண்டாம் கொன்கவெலனான்டிச்சோடன் மேற்குச் சாளுக்கிய படைவீரர்களையும் அவர்களுக்குத் துணைநின்ற கலிங்க மன்னன் அனந்தவர்மனையும் படுதோல்வி யடையச்செய்து பல முக்கியமான தளபதிகளைச் சிறைபிடித்து, ஏராளமான தங்கத்தையும் யானை குதிரைகளையும் கைப்பற்றிக்கொண்டான். விக்கிரம சோழன்

கங்கவாடியைச் சோழ ஆட்சிக்கு மீட்பதற்காகச் செய்த முயற்சிகள் அவ்வளவாகச் பயன்தரவில்லை. கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த சில பகுதிகளை மட்டும் அவன் மீட்டான்.

அவனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்தான். 1133-ல் அவன் முறையாக முடிசூடிக்கொண்டான். அவன் 1150 வரையில் அமைதியாக ஆட்சி செய்தான். 1146ஆம் ஆண்டிலிருந்தே குலோத்துங்கன் தன்னுடைய மகன் இரண்டாம் ராஜராஜனை நாட்டின் நிர்வாகத்தில் தன்னோடு பங்கு பெறுமாறு செய்தான். தன்னுடைய தந்தையின் காலத்தில் தில்லையில் தொடங்கிய கோயில் திருப்பணியை இரண்டாம் குலோத்துங்கன் தொடர்ந்து செய்தான். அவ்வாறு செய்துகொண்டிருந்த சமயத்தில் அவன் கோவிந்தராஜப் பெருமாளுடைய சிலையை அங்கிருந்து அகற்றிக் கடலில் எறிந்து விட்டான். அதனை ராமானுஜர் கண்டுபிடித்து எடுத்துக் கொண்டு போய்த் திருப்பதியில் வைத்தார் என்று சிலர் கூறுகின்றனர். அது எப்படி யிருந்தாலும் அந்தச் சிலை தன்னுடை பழைய இடத்துக்கு வந்து சேருவதற்கு விஜயநகரப் பேரரசன் ராமராயன் காலம் வரையில் காத்திருக்க வேண்டியதாயிற்று.

இரண்டாம் ராஜராஜன் 1173 வரையில் ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சி, பொதுவாய் அமைதியாக இருந்தது. அவனுக்கு ஆண்மகன் இல்லாததால், விக்கிரம சோழனுடைய மகள் வயிற்றுப் பேரனை இரண்டாம் ராஜாதிராஜன் தனக்குப் பின் அரசுரிமை பெறவேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அவனுக்கு 1166-ல் இளவரசப் பட்டம் சூட்டினான். இரண்டாம் ராஜராஜன் காலத்தில் சோழப் பேரரசில் தெலுங்கு நாட்டில் தாட்சாராமா (திராட்சாராமா) வரையில் இருந்த பகுதிகள் முழுவதும், கொங்கு நாட்டின் பல பகுதிகளும். கங்கவாடியின் கிழக்குப் பகுதியும் அடங்கியிருந்தன. ஆனால், எட்டி நின்ற பகுதிகளில் மைய அரசின் அதிகாரம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியது. மைய ஆட்சியும் தன்னுடைய வலிமையை இழக்கத் தொடங்கியது என்பதைக் காட்டும் சின்னங்கள் தோன்றத் தொடங்கின. பேரரசின் எல்லா பகுதிகளிலும் சிற்றரசர்கள் தங்களுடைய நிலையை வலுவாக்கிக்கொள்ள முயன்று கொண்டிருந்தார்கள்.

இரண்டாம் ராஜாதிராஜன் பட்டத்திற்கு வந்த சிறிது காலத்திற்குள் பாண்டி நாட்டில் கடுமையான அரசுரிமைப் போட்டி ஒன்று தொடங்கியது. அந்தப் போட்டியில் சிங்களர்களும்

சோழர்களும் கலந்துகொண்டு ஆளுக்கொரு கட்சியை ஆதரித்தார்கள். அதனால், அவ்விரு அரசுகளுக்கும் தீங்குதான் உண்டாயிற்று. உள்நாட்டுப் போர் முடிந்தபின் தோன்றிய பாண்டிய அரசு, நாளடைவில் வலிமை பெற்று, சிங்களர்களையும் சோழர்களையும் ஒருங்கே அழித்தது. முதலாம் குலோத்துங்கன் பாண்டி நாட்டை வென்றபின் பாண்டிய மரபைச் சேர்ந்த அரசகுமாரர்கள் சோழ மேலாதிக்கத்தில் தங்கள் விருப்பம்போல் ஆட்சிசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், அந்த மேலாதிக்கத்தின் அதிகார வரம்பு தெளிவற்றதாக இருந்தது. விக்கிரம சோழன் செய்த முதல் கலிங்கப் போரில் பராந்தக பாண்டியன் சோழர்களுக்குத் துணைநின்றான் என்பதை நாம் முன்பு கண்டோம். ஆனால், முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சிக்குப் பிற்பட்ட காலத்துச் சோழப் பொறிப்புகளைப் பாண்டி நாட்டில் காண்பது அரிதாயிருக்கிறது. சுமார் 1166-ல் குலசேகர பாண்டியனுக்கும் மதுரை அரியணையில் வீற்றிருந்த பராக்கிரம பாண்டியனுக்கும் அரசுரிமை காரணமாகப் போர் தொடங்கியது. குலசேகரன் மதுரையை வளைத்துக் கொண்டான். பராக்கிரம பாண்டியன் சிங்கள மன்னன் முதலாம் பராக்கிரமபாகு (1153–1186) என்பவனைத் தன்னுடைய துணைக்கு வருமாறு அழைத்தான். ஆனால், சிங்களத்திலிருந்து உதவி வருவதற்குள் குலசேகரன் மதுரையைப் பிடித்து, பராக்கிரம பாண்டியனையும் அவனுடைய பட்டத்தரசியையும் அவர்களுடைய மக்களுள் சிலரையும் கொன்றுவிட்டான். எனினும் பராக்கிரம பாண்டியனுடைய வழியில் வந்த யாரேனும் ஓர் அரசகுமாரனுக்கு மதுரையைப் பிடித்துக் கொடுக்கும் வரையிலும் போரைத் தொடர்ந்து நடத்துமாறு தன் தளபதியான இலங்காபுரனுக்குப் பராக்கிரமபாகு சொல்லியனுப்பினான். குலசேகரன் சிங்களப் படைகளை வன்மையாக எதிர்த்தான். போர் நீண்ட காலம் தொடர்ந்து நடந்தது. அதனால், இலங்காபுரன் சிங்களத்திலிருந்து புதிய படைகளைத் தனக்குத் துணைசெய்வதற்காக அழைக்கவேண்டியதாயிற்று. அதைக் கண்ட குலசேகரன் சோழர்களுடைய துணையை நாடினான். சோழ மன்னனும் பல்லவராயன் என்னும் தளபதியின் தலைமையில் ஒரு பெரிய படையை அனுப்பினான். ஆனாலும் குலசேகரனுடைய நிலை அபாயம் நிறைந்ததாகவே இருந்தது. ராமநாதபுர மாவட்டத்தில் நடந்த பல சண்டைகளில் அவன் தோற்றான். அதனால், இலங்காபுரன் விக்கிரம பாண்டியன் மக்களுள் ஒருவனான வீரபாண்டியனை மதுரை அரியணையில் அமர்த்தினான். எனினும், பல்லவராயனுடைய தலைமையில் வந்திருந்த சோழப்படை விரைவில் தன் வலிமை

யைக் காட்டத் தொடங்கியது. சிங்களப்படை தோல்வி யடைந்தது. சோழமன்னன் ஆணையிட்டிருந்தபடி சிங்களப் படையின் தலைவன் இலங்காபுரன் உட்பட, சிங்களத் தளபதிகள் அனைவருடைய தலைகளையும் சோழர்கள் வெட்டி மதுரை நகரின் வாயிற் கதவுகளில் மாட்டி விட்டார்கள். குலசேகரன மீண்டும் மதுரை மன்னன் ஆனான். இவ்வாறு பாண்டி நாடு சிங்கள ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக மாறவிருந்த அபாயம் நீங்கியது.

மீண்டும் பாண்டி நாட்டின்மீது படையெடுப்பதற்குப் பராக்கிரமபாகு திட்டமிட்டுக் கொண்டிருந்த செய்தியை அறிந்த பல்லவராயன் பராக்கிரமபாகுவுக்கு எதிராகச் சிங்கள அரசுரிமை கொண்டாடிய ஸ்ரீவல்லபன் என்பவனை ஆதரித்து, அவனுடைய தலைமையில் ஒரு சோழப் படையைச் சிங்களத்திற்கு அனுப் பினான். அந்தப் படை சிங்களத்தில் பல இடங்களைப் பிடித்து அவற்றை அழித்தது. பராக்கிரம பாண்டியனையும் அவன் வழியில் வந்தவர்களையும் ஆதரித்ததால் தனக்குக் கேடுதான் உண்டாயிற்று என்பதை உணர்ந்த பராக்கிரமபாகு குலசேக ரனையே பாண்டி மன்னனாக ஏற்றுக் கொண்டு, சோழர்களுக்கு எதிராக அவனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். பராக்கிரமபாகு குலசேகரனுக்கு அனுப்பிய பரிசுப் பொருள் களையும் கடிதங்களையும் பல்லவராயன் கைப்பற்றியபோது குலசேகரனுடைய துரோகம் வெளியாயிற்று. உடனே சோழர் களுடைய நடைமுறைக் கோட்பாடு மாறியது. பல்லவராயன் குலசேகரனையே எதிர்த்துப் போர் தொடங்கினான். பல சண்டைகள் நடந்தன. அவற்றுட் சில சோழ மண்ணிலேயே நடைபெற்றன. இறுதியில் வெற்றியடைந்த பல்லவராயன் குலசேகரனை நாட்டிலிருந்து துரத்திவிட்டு வீரபாண்டியனை மதுரையின் அரியணையில் அமர்த்தினான். இவ்வாறு மீண்டும் பராக்கிரமபாகு வகுத்த திட்டங்கள் தோல்வியடைந்தன. அவன் ஆதரித்த பாண்டியர் யாரும் மதுரை மன்னராதல் இல்லாமல் போயிற்று. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் 1169-க்கும் 1177-க்கும் இடையில் நடந்தவை என்று நாம் கருதலாம். ஆனால், 1177ஆம் ஆண்டோடு அந்த மோதல்கள் முடிந்துவிட்டன என்று கூறமுடியாது.

இரண்டாம் ராஜராஜனுடைய ஆட்சிக் காலத்தில் மைய அரசின் கட்டுப்பாடு தளர்ந்துகொண்டு வந்தது என்பதையும், அதனால் சிற்றரசர்கள் தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்ளத் தொடங்கினார்கள் என்பதையும் நாம் முன்பு

கண்டோம். அந்த அபாயம் ராஜாதிராஜன் காலத்தில் மேலும் வளர்ந்தது. சோழப் பேரரசின் வடபாதியில் ஆட்சி செய்த சிற்றரசர்களான சம்புவராயன், காடவராயன் மலையமான், தெலுங்குச் சோடமன்னன்(நெல்லூர்) ஆகியவர்கள் மைய அரசுக்கு அறிவிக்காமலே தங்களுக்குள் சண்டையும் சமாதானமும் செய்து கொண்டனர்.

இரண்டாம் ராஜாதிராஜனுக்குப்பின் மூன்றும் குலோத் துங்கன் அரசனானன். அவன் சோழ மரபின் முதன் மைக் கிளையோடு எவ்வாறு தொடர்புடையவன் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. 1182 வரையில் ராஜாதி ராஜன் உயிரோடுதான் இருந்தான். எனினும், குலோத்துங்கன் தன்னுடைய ஆட்சியை 1178 ஜூலையிலேயே தொடங்கிவிட்டான். அவன் மிகவும் திறமை வாய்ந்தவன். அதனால் சோழப் பேரரசு அழிந்து போகாமல் அவன் ஒரு தலைமுறைக் காலம் காப்பாற் றினன். புகழ் மிக்க பெரிய சோழ அரசர்களுள் அவன்தான் கடைசியானவன். அதுபோலவே, சோழக் கட்டடக்கலையின் வரலாற்றில் அவனுடைய ஆட்சிக் காலந்தான் இறுதிப் பெருங் காலமாகும் என்று கூறலாம்.

பாண்டி நாட்டு நிலை குலோத்துங்கனுடைய கவனத்தை முதலில் கவர்ந்தது. தோல்விகளால் தளர்ச்சி யடையாத பராக்கிரமபாகு சோழர்களை எதிர்ப்பதில் மீண்டும் முனைந்தான். தன்னுடன் சேர்ந்து சோழர்களை எதிர்ப்பதற்கு அவன் வீரபாண்டியனையே இசைய வைத்தான். அவர்களோடு வேணாட்டுத் தலைவனும் சேர்ந்திருக்கலாம் என்பது தெரிகிறது. இதற்கிடையில் குலசேகரன் இறந்துவிட்டான் போலிருக்கிறது. எனவே, அவனுடைய உறவினனாக இருக்கக்கூடும் என்று வரலாற்றாசிரியர் கருதுகிற விக்கிரமபாண்டியன் என்பவன் வீரபாண்டியனுக்கு எதிராகக் குலோத்துங்கனுடைய துணையை நாடினன். அதன் விளைவாகச் சோழப்படை ஒன்று பாண்டி நாட்டின்மீது சென்றது. பின்னர் நடந்த சண்டையில் சிங்கள பாண்டியப் படைகள் தோற்றன; வீரபாண்டியன் நாட்டிலிருந்து துரத்தப்பட்டான்; விக்கிரமபாண்டியன் அரியணையில் அமர்த்தப் பட்டான். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் 1182–க்கு முன் நடந்திருக்க வேண்டும். நாடு கடத்தப்பட்ட வீரபாண்டியன் தன்னுடைய கூட்டாளிகளின் துணையோடு பாண்டி நாட்டைக் கைப்பற்ற மீண்டும் ஒருமுறை முயன்றான். ஆனல், அம் முயற்சி தோல்வி யடைந்தது. நெட்டூர் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் வீரபாண்டியனும் அவனுடைய கூட்டாளிகளும் படுதோல்வி

யடைந்தனர். வீரபாண்டியன் சிங்களத்திற்கு ஓடிவிட்டான். அதன்பின் சண்டை எதுவும் நடக்கவில்லை. வீரபாண்டியனும் வேணாட்டுத் தலைவனும் குலோத்துங்கனுக்குப் பணிந்து போவது என்று முடிவு செய்து விட்டார்கள். அவ்வாறே அவர்கள் மதுரையில் குலோத்துங்கன் வீற்றிருந்த அவையில் அவனை வெளிப்படையாக மண்டியிட்டு வணங்கினார்கள். அதே அவையில் குலோத்துங்கன் சிங்கள அரசனுடைய 'முடிமீது தன் அடியை வைத்தான்.' என்று சோழப் பொறிப்புகள் சில கூறுகின்றன. இது உயர்வு நவிற்சியாக இருக்கலாம். இந்த நிகழ்ச்சிகள் 1189-க்குச் சிறிது முன்னர் நடந்தவை. வீரபாண்டியன் எதிர்பார்த்ததைவிடக் குலோத்துங்கன் அவனை நன்றாக நடத்தினான். அவனைக் குலோத்துங்கன் கொல்லாமல் விட்டதுமன்றி அவனுடைய புதிய நிலைக்கு ஏற்றவாறு சில நிலங்களையும் செல்வத்தையும் அளித்தான்.

இரண்டாம் பாண்டியப் போருக்குப் பின் குலோத்துங்கன் ஹொய்சளர்களை அடக்குவதற்காகக் கொங்கு நாட்டின்மீது படையெடுத்தான். தகடூரில் ஆட்சி செய்த அதிகமான் மரபினர் சோழ மேலாதிக்கத்தை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு செய்த பின், குலேகத்துங்கன் சேர மன்னன் ஒருவனை வென்று கருவூரில் 1193-ல் 'விஜயாபிஷேகம்' செய்துகொண்டான். அதற்குப் பின்னர் ஹொய்சளருக்கும் சோழர்களுக்கும் நல்லுறவு ஏற்பட்டதென்பது தோன்றுகிறது. ஹொய்சள மன்னன் இரண்டாம் வல்லாளன் சோழ அரசகுமாரி ஒருத்தியை மணந்து கொண்டான்.

பாண்டி நாட்டில் விக்கிரம பாண்டியனுக்குப்பின் ஜடாவர்ம குலசேகரன் என்பவன் 1190-ல் அரசனானான். சிறிது காலத்துக்குப் பின் அவன் சோழ மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தான். அதனால், சுமார் 1205-ல் குலோத்துங்கன் மீண்டும் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து, மதுரையைச் சூறையாடி, பாண்டியர் முடிசூடிக்கொள்ளும் மண்டபத்தையும் தகர்த்தெறிந்தான். அவ்வாறு செய்தது சோழர்கள் சிறிது சிறிதாக வலிமையிழந்து வருகிறார்களென்று அவன் உணர்ந்திருந்ததைக் காட்டுகிறது போலும். போரின் முடிவில் குலசேகரனே மதுரை மன்னனானான். எனவே, குலோத்துங்கனுடைய படையெடுப்பு முழு வெற்றியைத் தரவில்லை. அதற்கு மாறாகத் தன் பழியைத் துடைத்துக் கொள்வதற்காகப் பாண்டியன் சோழர்களோடு மீண்டும் போர் தொடங்குவான் என்பது மட்டும் உறுதியாயிற்று.

பாண்டியர் மீண்டும் போர் தொடங்குவதற்குமுன் குலோத்துங்கன் சோழப் பேரரசின் வடபகுதியில் மேலும் சில போர்களைச் செய்தான். அதன்பின் குலோத்துங்கனுடைய ஆட்சியின் இறுதியில், பாண்டியப் போர் மூண்டது. அதனால் பெருந்துன்பத்துக்குள்ளான குலோத்துங்கனுக்கு ஹொய்சளர் தலையீடு ஓரளவு துணைசெய்தது. இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் நன்றாக அறிந்துகொள்ளவேண்டுமானால் சோழப் பேரரசுக்கு வெளியில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாதது.

நாம் கல்யாணியில் ஆட்சிசெய்த மேற்குச் சாளுக்கியர் வரலாற்றுடன் தொடங்கலாம். மூன்றாம் சோமேசுவரன் அமைதியை விரும்பிய அரசன். அவன் காலத்தில் ஹொய்சள விஷ்ணுவர்த்தனன் சாளுக்கிய மேலாதிக்கத்தை உதறிவிட்டது மட்டுமன்றி அவர்களுடைய ஆதிக்கத்தில் இருந்த நாடுகளையும் கைப்பற்றித் தன்னுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்தினான். அவ்வாறு அவன் கைப்பற்றிய பகுதிகளில் நொலம்பவாடி, பனவாசி, ஹங்கல், ஆகிய நாடுகளைக் கூறலாம். சோமேசுவரனுக்குப்பின் சாளுக்கிய அரசர்களாக இருந்த அவனுடைய மக்கள் இரண்டாம் ஜகதலமல்லன் (1138–51) மூன்றாம் தைலன் (1150–56) ஆகியவர்கள் காலத்திலும் விஷ்ணுவர்த்தனன் நாடு பிடிக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்தினான். 1149ஆம் ஆண்டுக்குள் விஷ்ணுவர்த்தனன் தார்வாரிலுள்ள பங்காபுரத்தைப் பிடித்துக்கொண்டான். தன் தலைநகரான துவார சமுத்திரத்தைக் காக்கும் பொறுப்பைத் தன்னுடைய மகன் நரசிம்மனிடம் ஒப்படைத்துவிட்டு விஷ்ணுவர்த்தனன் பங்காபுரத்திலேயே தங்கினான். சாளுக்கியப் பேரரசு சிதையத் தொடங்கிவிட்டது. ஆனால், மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு அது இன்னும் வலிமையுடையதாகவே தோன்றியது. ஹொய்சளர்களும் அவ்வப்போது சாளுக்கிய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டதுபோலக் காட்டிக்கொண்டார்கள். மூன்றாம் சோமேசுவரன் காலத்தில் சாளுக்கியப் பேரரசின் இதயம் போன்ற தருதவாடியை மானியமாகப் பெற்று அங்குத் தங்கள் ஆட்சியை நடத்திவந்த காலசூரிகளும் வலிமை பெறத் தொடங்கினார்கள். ஆறாம் விக்கிரமாதித்தியனிடமிருந்து சப்பி ஆயிரம் என்னும் பகுதியை மானியமாகப் பெற்ற காகதீயர்கள் அதற்கு முன்னரே தாங்கள் மானியமாகப் பெற்றிருந்த அனுமக்கொண்டாவுடன் சாளுக்கியப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்த வேறு பகுதிகளையும் சேர்த்துத் தங்களுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்வதில் முனைந்தார்கள். இரண்டாம் தைலன் காலத்திலிருந்து சாளுக்

கியர்களிடம் உண்மையாக இருந்த யாதவர்களும் இப்போது தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்றார்கள். மூன்றாம் தைலன் வலிமையும் திறமையும் அற்றவன். தருதவாடியில் ஆட்சிசெய்து வந்த காலசூரியத்தலைவன் பிஜ்ஜலன் அவனைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டு, வெகுவிரைவில் தன்னுடைய வலிமையையும் அதிகாரத்தையும் பெருக்கிக் கொண்டான. 1157ஆம் ஆண்டுக்குள் அவன் பேரரசர்க்குரிய பட்டப் பெயர்களை வைத்துக்கொண்டான். அப்போதிருந்த வரலாற்றில் ஒரு புதுக்காலம் தொடங்கியது என்று நாம் கருதலாம். ஆனால், ஏறக்குறைய தன்னுடைய ஆட்சியின் இறுதிக் காலம் வரையில் தைலன் பெயரளவில் பேரரசனாகவே இருந்தான். வலிமை பொருந்திய ஹொய்சள முதலாம் நரசிம்மன் போன்ற மன்னர்களும் அவ்வப்போது தைலனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். தைலன் காகதீய வமிச அரசனை இரண்டாம் புரோலனோடு போர் தொடுத்து அனுமக் கொண்டாவைத் தாக்கினான். புரோலன் அவனை வென்று சிறைபிடித்தான். ஆனால், அவன் இரக்கத்தாலும் ராஜபக்தியாலும் தூண்டப்பட்டுத் தைலனை விடுதலை செய்தான். எனினும், புரோலன் இறந்த பின்னும் காகதீயர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் இருந்த பகைமை தொடர்ந்தது. புரோலனுக்குப்பின் அவனுடைய மகன் ருத்திரன் பட்டத்திற்கு வந்தான். ருத்திரனை எதிர்த்து நிற்க முடியாத தைலன் 'அந்த அச்சத்தால் ஏற்பட்ட சீதபேதியால் இறந்து போனான்' (1163) என்று சிலர் கூறுகிறார்கள்.

காலசூரி வமிசத்தின் அதிகாரம் வளர்ந்து கொண்டே சென்றது. பிஜ்ஜலன் சாளுக்கியத் தலைநகரையே தன்னுடைய தலைநகரமாக்கிக் கொண்டான். அவன் ஹொய்சள முதலாம் நரசிம்மனோடு போர்செய்து பனவாசியைப் பிடித்துக்கொண்டான். அவன் 1168ஆம் ஆண்டு வரையில் ஆட்சிசெய்தான். ஆனால், அதே சமயத்தில் மூன்றாம் ஜெகதகமல்லன் என்னும் ஒருவனும் பேரரசர்க்குரிய பட்டங்களோடு ஆட்சிசெய்து வந்தான் என்பதை நாம் அறிகிறோம். புதிதாகத் தோன்றிய லிங்காயத்துகளை பிஜ்ஜலன் சமய வேறுபாடு காரணமாகக் கொடுமைக்குள்ளாக்கினான் என்றும், அவர்களுடைய பகைமை அவன் அழிவுக்குக் காரணமாயிற்று என்றும் ஐயத்திற்கிடமான சில கட்டுக்கதைகள் கூறுகின்றன. பிஜ்ஜலனுடைய மக்களுள் மூவர் ஒருவர்பின் ஒருவராக 1183 வரையில் ஆட்சிசெய்தார்கள். ஆனால், அவர்களுள் யாருக்கும் தம்முடைய தகப்பன் தகாத வழியில் கைப்பற்றிக்கொண்ட அரச பதவியை நிர்வகித்துத்

தங்கள் அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ளும் ஆற்றலில்லை. அவர்கள் ஹொய்சள அரசன் முதலாம் நரசிம்மனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் இரண்டாம் வல்லாள னுடன் தொடர்ந்து சண்டையிட்டுச் சில வெற்றிகளையும் பெற்றார்கள் என்பது உண்மையே. எனினும், 1183-ல், மூன்றாம் தைலனுடைய மகன் நான்காம் சோமேசுவரன் கால சூரிகளை அழித்து, அரியணையேறி, அவர்கள் ஏற்படுத்திய குழப்பத்திற்கு முடிவு கண்டான். அவனுக்கு இந்தப் பணியில் உதவிசெய்தவன் பிரமன் அல்லது பர்மிதேவன் என்னும் தளபதி. அவன் காலசூரிகளிடம் அலுவல் பார்த்தவன். அவர்களை விட்டு விட்டுச் சோமேசுவரனுடன் அவன் சேர்ந்துகொண்டான். சாளுக்கியர்களுக்கடங்கிய சிற்றரசர்களுள் யாதவ பில்லமன் தான் (1187–91) நான்காம் சோமேசுவரனுடைய வலிமையற்ற நிலையை முதலில் உணர்ந்து அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டவன். அதன் வடமாவட்டங்களை 1189-க்கு முன் கைப்பற்றிக்கொண்டான். ஆனால், அதற்கு முன் சாளுக்கியத் தலைநகரைக் கைப்பற்றி ஆட்சிசெய்த காலசூரி மரபு அரசர்களை ஏனைய சிற்றரசர்கள் எவ்வாறு தங்களுக்கு மேம் பட்டவர்கள் என்று ஏற்றுக்கொள்ளவில்லையோ அவ்வாறே முன்பு தங்களைப் போலவே சாளுக்கியர்க்கு அடங்கிய சிற்றரசர் களாய் இருந்த யாதவர்களுடைய மேலாதிக்கத்தையும் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ரட்டர், சிலாஹாரர், கடம்பர், ஆகியவர்கள் யாதவர்களுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளவேயில்லை. யாதவர்களுடைய வெற்றியைக் கண்ட ஹொய்சளர்களும் தங்களுடைய வலிமையைப் பெருக்கிக் கொள் வதற்கு மீண்டும் முயற்சி செய்தார்கள். பில்லமன் தான் கைப் பற்றிய பகுதிகளில் தன்னுடைய ஆட்சியைச் சரியானபடி நிறுவுவதற்காக அங்கேயே சில ஆண்டுக் காலம் தங்கியிருந்தான். அவனால் ஏற்பட்ட தொல்லையைத் தாங்கமுடியாத சோமேசு வரனும் அவனுடைய தளபதி பிரமனும் தங்களுடைய தலை நகரை பனவாசிக்கு மாற்றிக் கொண்டார்கள். கல்யாணியை யாதவர் பிடித்துக்கொண்டனர். இதற்கிடையில், இரண்டாம் வல்லாளனும் தன்னுடைய வலிமையைப் பெருக்கும் முயற்சியில் சோமேசுவரனோடு போர் தொடுத்து அவனையும் பிரமனையும் பல சண்டைகளில் வென்றான். அவற்றுள் கடைசிச் சண்டை 1190-ல் நடந்தது. அதனுடன் சாளுக்கிய ஆதிக்கம் முடிவுற்றது. சோமேசுவரன் எங்கோ ஒரு மூலையில் இன்னுமொரு பத்தாண்டு உயிர் வாழ்ந்தான். அப்போது சாளுக்கியப் பேரரசைப்பிடித்துக் கொள்ளும் முயற்சியில் பில்லமனும் இரண்டாம் வல்லாளனும் மோதிக்கொண்டது இயல்புதானே? அவர்களுக்குள் பல

சண்டைகள் நடந்தன. இறுதியில் கடக் என்னும் ஊருக்கருகில் சொரத்தூர் என்னும் இடத்திலும் லக்குண்டி என்னும் இடத்திலும் நடந்த சண்டையில், 1191-ல் பில்லமன் தோல்வியடைந்தான். வல்லாளன் தன்னுடைய ராஜ்யத்தின் வடவெல்லையை மலப்பிரபா, கிருஷ்ணு ஆகிய நதிகள் வரையில் நீட்டிக் கொண்டான். அந்த எல்லைக்கு வடக்கேயிருந்த பகுதிகளில் பெரும்பாலானவை யாதவர்கள் கையிலேயே நின்றுவிட்டன. பில்லமன் தேவகிரி எனனும் நகரை நிறுவி அதனைத் தன் தலை நகராக்கிக் கொண்டான். சாளுக்கியப் பேரரசு இறுதியாக அழிந்த நேரத்தில் காகதீயர்களும் சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

இரண்டாம் வல்லாளன் வடக்கே பெற்ற வெற்றிகளின் பயனை அமைதியாக அனுபவிக்க முடியவில்லை, பில்லமனுக்குப் பின் அவனுடைய மகன் ஜயதுகி என்பவன் அரசனுனன். அவன் காகதீய அரசன் ருத்திரன்மீது படையெடுத்து அவனைக் கொன்று, அவனுடைய தம்பி மகன் கணபதியைச் சிறை பிடித்தான் (1196). ருத்திரனுக்குப் பின் அவன் தம்பி மகாதேவன் காகதீய அரசனுனன். அவன் ஆட்சிசெய்த குறுகிய காலத்தில் அவனுக்கு எதிராக ஒரு கலகம் நடந்தது, காகதீயர்களுக்கும் யாதவர்களுக்கும் மீண்டும் ஒரு போரும் அந்தக் காலத்தில் நடந்திருக்கலாம் என்பது தோன்றுகிறது. 1199-ல் மகாதேவன் இறந்தபின் ஜயதுகி மகாதேவனுடைய மகன் கணபதியைச் சிறையிலிருந்து விடுதலைசெய்து காகதீய அரியணையில் அமர்த்தினன். ஜயதுகிக்கும் பின் அவனுடைய மகன் சிங்கணன் பட்டத்துக்கு வந்தான். அதன்பின், பத்தாண்டு கழித்து 1210-ல் அவன் ஹொய்சளர்களோடு போர் தொடங்கினன். அந்தப் போரில் அவன் சில ஆண்டுகளாகப் பல்லவனை எதிர்த்து நின்ற சிற்றரசர்களான கடம்பர் முதலியவர்களுடைய துணையைப் பெற்றுன். சிங்கணனுடைய வெற்றிகளின் விளைவாக நான்காம் சோமேசுவரனேடும் பில்லமனேடும் போர் புரிந்து வென்ற நாடுகளில் ஏறக்குறைய அனைத்தையுமே வல்லாளன் இழந்து விட்டான். (1216).

வேங்கி நாட்டில் இரண்டாம் ராஜராஜனுடைய ஆட்சி முடிவுற்றபின் வெலநாட்டுச் சோடர்கள் தங்களுடைய சுயேச்சையை விளம்பரப் படுத்திக்கொண்டார்கள். அதற்குப்பின், நெல்லூரில் ஆட்சிசெய்த 'தெலுகுச் சோடர்களும் சுயேச்சை பெற்றுர்கள். தெலுகுச் சோடர்களுடைய அந்தக் கிளைமரபின் ஆட்சியைத் தொடங்கியவன் விக்கிரம சோழன் ஆட்சியில் சிற்றர

சனகவிருந்த பெட்டன் என்பவன். நெல்லூரிலும் வடசர்க்கார் மாவட்டங்களிலும் இரண்டாம் ராஜராஜனுடைய ஆட்சி பரவியிருந்தது என்பதைக் காட்டும் ஆதாரம் எதுவுமில்லை. ஆனால், மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் தெலுங்கு நாடு மீண்டும் சோழ ஆதிக்கத்திற்குள் வந்தது. குலோத்துங்கனுடைய மேலாதிக்கத்தை 1187 முதல் தெலுகுச் சோட அரசர்களான நல்ல சித்தனும் அவனுடன் பிறந்த தம்மு சித்தனும் ஏற்றுக் கொண்டார்கள். எனினும், 1192–1193-ல் நல்ல சித்தன் காஞ்சியைப் பிடித்துக்கொண்டான். அவனை 1196-ல் மூன்றும் குலோத்துங்கன் வென்று அங்கிருந்து துரத்திவிட்டான் எனவே, மீண்டும் தெலுகுச் சோடர்கள் குலோத்துங்கனுடைய மேலாதிக்கத்தை அவனுடைய ஆட்சிக் காலத்தின் இறுதி வரையிலும் ஏற்றுக்கொண்டார்கள். குலோத்துங்கனுடைய ஆட்சியின் இறுதியாண்டுகளில் சோழநாடு பாண்டியர் படையெடுப்புக்கு உள்ளாகியது. அந்தச் சமயத்தில் தெலுகுச் சோடர்கள் சோழ மேலாதிக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக மீண்டுமொரு முறை முயன்று வெற்றி பெற்றுர்கள். அதைப் பற்றி நாம் அடுத்த அதிகாரத்தில் கூறுவோம். குலோத்துங்கன் மீண்டும், 1208ஆம் ஆண்டில், வடவர்களோடு போர்செய்தான். அந்தப் போரில், அவன் வேங்கியை அடக்கியதாகவும், காகதீய தலைநகரான வாரங்கல்லுக்குள் நுழைந்ததாகவும் கூறிக் கொள்கிறுன். ஆனால், இது உயர்வு நவிற்சியாகவும் இருக்கலாம். ஏனெனில், அப்போது வாரங்கல்லில் வலிமை மிகுந்த காகதீயன் கணபதி ஆட்சிசெய்து கொண்டிருந்தான்.

இந்தக் காலத்துச் சேரர் வரலாற்றை அறிந்துகொள்வதற்கேற்ற தொடர்ச்சியான சான்றுகள் கிடைக்கவில்லை. ஒன்பதாம் நூற்றுண்டில் அங்கு ஆட்சிசெய்த அரசர்களுள் பலருடைய பொறிப்புகள் இருக்கின்றன. அவர்களுள் முக்கியமான அரசன் முதலாம் ஆதித்தியன் காலத்தில் ஆட்சி செய்தவன் ஸ்தாணுரவி என்பவன். அவனைப் பற்றிய சில செய்திகளை முன்னமே கூறினேம். அவன் ஒன்பதாம் நூற்றுண்டின் கடைசிக் கால் பகுதியில் ஆட்சி செய்தான், கோட்டயத்து சிரியக் கிறிஸ்துவச் செப்பேடுகள் அவனேடு தொடர்புடையவை என்று வரலாற்றுசிரியர்கள் கருதுகிறுர்கள். இந்தச் செப்பேடுகள், கொல்லத்தில் இசோ தபிர் என்பவன் ஒரு மாதா கோயிலைக் கட்டுவதற்கு உதவிய தொழிலாளிகளைப் பற்றிக் கூறுகின்றன. அந்தக் கோயிலின் பெயர் தரிசா பள்ளி என்பது. அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தவன் விஜயராக தேவனுக இருக்கலாம்.

கோட்டயச் செப்பேடுகளில் அவன் 'கோயில் அதிகாரிகள்' (இறைவன் கோயிலேயோ, அரசன் மாளிகையையோ மேற் பார்வை செய்த அலுவலன்) என்றும், திருவொற்றியூர்க் கல் வெட்டில் 'கேரள ராஜா' என்றும் வர்ணிக்கப் படுகிருன். அவனுக்குப் பின் வந்த அரசர்களில் பாஸ்கர ரவிவர்மன் (சுமார் 1047–1116) குறிப்பிடத்தக்கவன். வேணுட்டில் ஆட்சிசெய்த ஸ்ரீவல்லபன் கொடை என்பவனும், கோவர்த்தன மார்த்தாண்ட வர்மனும் அவன் காலத்தைச்சேர்ந்தவர்கள். பாஸ்கர ரவிவர்மன் வெளியிட்ட செப்பேடு ஒன்று இப்போது கொச்சியில் வாழும் யூதர்களிடம் இருக்கிறது. அதில் இசுப்பு இரப்பன் (ஜோசப் ரப்பன்) என்பவனுக்கு அரசன் அளித்த மானியத்தைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன. அவனுக்கு அஞ்சுவண்ணத்து உரிமைகளும், சுங்கம் முதலிய வரிகளை வசூலிப்பது போன்ற 72 வேறு உரிமைகளும், அவனும் அவனுக்குப் பின் வருபவர்களும் எப்போதும் பல்லக்கில் ஏறிச்செல்லும் உரிமையும் அளிக்கப் பட்டதாக அச் செப்பேடு கூறுகின்றது. பாஸ்கர ரவி வர்மனுடைய கல்வெட்டுகள் தெற்கே சங்கனுச்சேரியில் தொடங்கி வடக்கே வயனுடு வட்டத்திலுள்ள திருநெல்லி எனுமிடத்தில் இருக்கிற கோயில் வரையில் பரவலாகக் காணப் படுகின்றன. முதலாம் ராஜராஜன், அவனுக்குப் பின்வந்த அரசர்கள் ஆகியவர்களுடைய காலத்தில் சேர நாட்டின் பெரும் பகுதி சோழ ஆட்சியில் இருந்தது. முதலாம் குலோத்துங்கன் பட்டத்திற்கு வருவதற்குமுன் நிலவிய குழப்பத்தில் சேர நாடு சோழ ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது. அதன் பின் குலோத்துங்கன் சேரநாட்டை மீண்டும் வென்று, முக்கியமான சாலைகளில் போர் வீரர் குடியிருப்புகளை நிறுவினுன் என்பதை நாம் முன்பே பார்த்தோம். வேணுட்டை ஆண்டுவந்த மன்னர்கள் பன்னிரண்டாம் நூற்றுண்டில் செதுக்கிய பொறிப்புகள் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. வேணுடு என்பது சேரநாடு என்று சிலரும், கூபக தேசம் என்று சிலரும் கருதுகின்றனர். வேணுட்டு மன்னர்களில் ஒருவனே விக்கிரம சோழனுடைய மேலாதிக்கத்திலிருந்த சிற்றரசனுன பராந்தக பாண்டியன் வென்றுன்.

இதற்கு முன்னைய காலத்தைப் போலவே இந்தக் காலத்திலும் முடியரசுதான் வழக்கிலிருந்தது. அரசுரிமையும் முன்போல் பரம்பரையாகத்தான் வந்தது. ஆனல் முன்னைய காலத்தில் அரசர்கள் கடைப்பிடித்த எளிய தனியாட்சி முறைக்கும் இந்தக் காலத்தில் வழக்குக்கு வந்த ஆடம்பரமான ஆட்சிமுறைக்கும் மிகுந்த வேறுபாடு இருந்தது. பைஜாண்டிய,

ரோமானிய அரசர்களைப் போலவே தென்னிந்திய அரசர்களும் மிக ஆடம்பரமான வாழ்க்கையை நடத்தினார்கள். அவர்களுக்குப் பல மாளிகைகள் இருந்தன. ஆட்சித் துறைகளில் உதவி செய்வதற்கு ஏராளமான அரசு அலுவலர்கள் இருந்தார்கள். அரசனுடைய அவை, சடங்கு நிறைந்ததாய் இருந்தது. பரப்பு மிகுந்த பேரரசுகளின் வளமெல்லாம் தலைநகரங்களில் கம்பீரமாகக் காட்சியளித்தன. முடிசூட்டு விழா ஒரு கவர்ச்சி மிகுந்த முக்கியமான சடங்காக இருந்தது. விழாவின்போது அரசன் தாராளமான மானியங்களை ஏராளமாக வழங்கினான். சாளுக்கியர்கள், வழக்கமாக, பட்டடக்கல் என்னும் ஊரில் முடிசூடிக்கொண்டார்கள். பட்டடக்கல் என்பதன் சொற்பொருள் முடிசூட்டுகல் என்பதாகும். சோழர்களுடைய முடிசூட்டுவிழா தஞ்சாவூர், கங்கை கொண்ட சோழபுரம், சிதம்பரம் ஆகிய பல இடங்களில் நிகழ்ந்தது, சில சோழ மன்னர்கள் காஞ்சீபுரத்திலும் முடிசூடிக் கொண்டார்கள். அரசுரிமைப்போட்டி அந்தக் காலத்தில் நடைபெறாத ஒன்றன்று ஆனால், பொதுவாக, அரசனுடைய ஆண் மக்களுள் மூத்தவன் பட்டத்திற்கு வரவேண்டும் என்ற மரபை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அரசன் தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே தன்னுடைய மூத்த மகனுக்கு இளவரசு பட்டம் கட்டும் வழக்கம் அரசுரிமைப் போட்டியைத் தவிர்ப்பதற்குப் பெரிதும் உதவியது. இரண்டாம் ஆதித்திய சோழனை அவனுடைய சிற்றப்பனான உத்தம சோழன் கொலை செய்ததும் அதன்பின் அவன் அரசுரிமை கொண்டாடியதும் வழக்கத்திற்கு மாறுபட்ட கடுமுனைப்பான அரசியல் பேராவலைக் காட்டும் நிகழ்ச்சிகள். நியாயமாக, அப்போது அரசனாயிருந்த இரண்டாம் பராந்தகனும், அவனுடைய மகன் முதலாம் ராஜராஜனும், உத்தமசோழனை ஒழித்துக் கட்டியிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அளவுக்கு மீறிய கனிவுடன் நடந்து கொண்டார்கள். பேராவலும், அதற்கு ஏற்ற திறமையும் உடையவனான ஆறாம் விக்கிரமாதித்தியன் தன்னுடைய தமையன் சீர்கேடான ஆட்சி நடத்தினான் என்று பொய்க்குற்றம் சாட்டிய பின்னரே, அவனோடு பொருது அவனை அரச பதவியிலிருந்து நீக்கினான்.

கல்வெட்டுகளைச் செதுக்கும் முறையில் முதலாம் ராஜராஜ சோழன் ஒரு புதிய வழியை வகுத்தான். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்து நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்ட ஒரே வகையான சொற்களில் அவன் விளக்கினான். அவ்வப்போது செதுக்கிய கல்வெட்டுகளில் அதுவரையில் நடைபெற்ற புதிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பேரரசனுக்கும்

சிற்றரசர்களுக்கும் இருந்த உறவு காலத்துக்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு மாறியது. சோழப் பேரரசின் ஆட்சி முறையில் மைய அரசுக்கு அதிக அதிகாரம் இருந்தது. மைய அரசின் கட்டுப்பாடு கண்டிப்பானதாயும் இருந்தது. ஆனால், சாளுக்கியர்கள் அத்தனை அதிகாரங்களை மையத்தில் குவித்து வைக்கவில்லை; மைய அரசின் கட்டுப்பாடும் அவ்வளவு கண்டிப்பாக இல்லை. அவர்கள் பேரரசனுக்கும், பேரரசின் பல்வேறு பகுதிகளிலிருந்த சிற்றரசர்களுக்கும் இடையில் தொடர்பு அதிகாரிகளாகப் பணியாற்றுவதற்காகச் சிறந்த பயிற்சி பெற்ற அரசதந்திர அலுவலர் பலரை வைத்திருந்தார்கள். பேரரசின் முக்கியமான பகுதிகளில் அரசகுமாரர்கள் அரசப்பிரதிநிதிகளாய்ப் பணிபுரிந்தார்கள்.

அரச மாளிகையில் ஏராளமான பணியாட்கள் இருந்தார்கள். அவர்களில் பேருக்கேற்ற சீரில்லாத மெய்காவலரும் இருந்தனர். முடிசூட்டுவிழா மண்டபத்திலும், மடைப்பள்ளியிலும் பெரும்பாலும் பெண்களே பணியாட்களாய் இருந்தார்கள். சோழ அரண்மனைப் பணியாட்கள் 'வேளங்க'ளாகப் பிரிக்கப்பட்டுத் தலைநகரில் அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் குடியிருந்தார்கள். பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த சௌ-ஜூ-குவா என்னும் சீன நூலாசிரியர் சோழ ராஜ்யத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதி வைத்திருக்கிறார்: 'அரசாங்க விருந்துகளில் இளவரசனும் நான்கு அமைச்சர்களும் அரியணையின் அடியில் நின்று சலாம் செய்வார்கள். அதன்பின், அங்கே கூடியிருப்பவர் அனைவரும் ஆடல் பாடல்களில் ஈடுபடுவார்கள். அரசன் மது அருந்துவதில்லை; ஆனால் இறைச்சி தின்கின்றான். உள்ளூர் வழக்கப்படி அவன் நூலாடை அணிகிறான்; மாவடை தின்கின்றான். அவனுடைய விருந்துகளில் பணிபுரிவதற்கும், உடன் செல்வதற்கும் அரசன் ஏராளமான நாட்டியக்காரிகளை வைத்திருக்கிறான். அத்தகைய 3000 பேர்கள் ஒரு நாளைக்கு இத்தனை பேர் என்ற முறைப்படி அரசனுக்குப் பணி புரிகிறார்கள்.' சாளுக்கிய அரச மாளிகையில் மனவர்கடே (உள்படு கருமத்தலைவன்) என்னும் அலுவலனும் பாணசவர்கடே (மேலாளன்) என்னும் அலுவலனும் இருந்தார்கள். அவர்களைத் தவிர ஏனைய பல ஊழியர்களும் இருந்தார்கள். அரச குடும்பத்திலும் பிரபுக்கள் குடும்பத்திலும் அவரவர் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற, மேலே சொன்ன அலுவலர் பொன்ற, பல பணியாட்கள் இருந்தார்கள்.


அரசன் வாய்மொழி ஆணைகளைப் பிறப்பிப்பதன் வாயிலாகத் தன் கடமைகளை ஆற்றினான். ஆனால், அத்தகைய ஆணைகளைப்

பெறுவதற்கும், நிறைவேற்றுவதற்கும்முன் நுட்பமான நடைமுறைகள் பல பின்பற்றப்பட்டன. சோழப் பேரரசன் அருகில்




**தென்னிந்தியா : கி.பி. 850–1200**

'உடன் கூட்டமும்', 'ஓலையும்' எப்போதும் இருந்தன. உடன் கூட்டத்தில் முக்கிய நிர்வாகத் துறைகளைக் கவனித்த அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது அவனுக்கு ஆலோசனை கூறினார்கள். ஓலை என்பது பதிவேடகம். சாளுக்கியப் பேரரசிலும் அத்தகைய அரசு அலுவலர்கள் இருந்தார்கள்.



சைனன்
இந்திரபுரம்
சக்கரம்
சம்பா
அமராவதி
கம்போஜம்
அங்கோர்
கடாரம்
மதமாலிங்கம்
பங்குகா
புனம்
போர்னியோ
ஜாவா
பாலி
மதுரை
ஸ்ரீவிஜயம்
மலையூர்
பண்ணை
இலாமுரிதேசம்
மாநக்கவாரம்
துவரவதி
கங்கைநதி
மகாநதி
வேங்கிபுரம்
கோதாவரி நதி
காஞ்சி
நாகப்பட்டினம்
அநுராதபுரம்
பாலாறு
காவிரியாறு
அளவு (மைல்களில்)
0 50 100 150 200 250 300

சோழ அரசியல் நிர்வாகம் நுட்பமும் சிக்கலும் மிகுந்த பணித்துறையினிடம் இருந்தது. அந்தப் பணித்துறையில் பலதரப்பட்ட அலுவலர் இருந்தனர். அவர்களுள் 'பெருந்தனம்' என்ற உயர்நிலை ஊழியர்களும், 'சிறுதனம்' என்ற தாழ்நிலை ஊழியர்களும் இருந்தார்கள். அரசு அலுவலர்கள் சமுதாயத்தில் ஒரு தனி வகுப்பினராக இருக்க முயலும் இயல்பினராக இருந் தார்கள். அலுவல் பதவிகள் நாளடைவில் பரம்பரைப் பதவி களாக மாறின. இராணுவப் பணிக்கும் சிவில் ஊழியத்துக்கும் தெளிவான வேறுபாடில்லை. அரசு அலுவலர்கள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டார்கள், பதவி உயர்வுக்கு அடிப்படையான தகுதிகள் யாவை என்பவற்றைப்பற்றி நமக்கு எதுவும் தெரிய வில்லை. அரசு அலுவலர்கள் பெரும்பாலும் ரொக்க ஊதியத் துக்கு மாறாக, தத்தம் தகுதிக்கேற்ற நில மானியம் பெற்றார்கள். பட்டங்கள், விருதுகள் ஆகியவையும், சண்டையிற் கொள்ளை யடித்த பொருள்களில் தத்தம் தரத்துக்கேற்ற பங்கும் அவர்கள் பெற்ற பிற கைம்மாறுகும்.

சோழப் பேரரசில் பல்வேறு நிர்வாகப் பிரிவுகள் இருந்தன. மிகப் பெரிய பிரிவுகளுக்கு 'வளநாடு' அல்லது 'மண்டலம்' என்பது பெயர். ஒவ்வொரு வளநாட்டிலும் பல நாடுகள் இருந்தன. நாடு பல 'கூற்றங்களாகப்' பிரிக்கப்பட்டிருந்தது. பெரிய நகர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கூற்றமாக இருந்தது. அதற்குத் 'தனியூர்' அல்லது 'தன் கூற்றம்' என்பது பெயர். நிலவரி அரசின் வருமானத்திற்கு அடிப்படையாய் இருந்தது. அதனால், நிலவுரிமையும் வசூலிக்க வேண்டிய வரியின் அளவும் மிகக் கவனமாகப் பதிவு செய்யப்பட்டன. நிலமெல்லாம் சரியானபடி அளக்கப்பட்டு, வரி செலுத்தவேண்டிய நிலங்கள் என்றும், இறையிலி நிலங்கள் என்றும் பிரிக்கப்பட்டன. நகர் களிலும், கிராமங்களிலும் மக்கள் வசித்த பகுதி (ஊர், நத்தம்), கோயில், குளம், கிராமத்தின் வழியாகச் சென்ற கால்வாய், பறையர் வசித்த பகுதி (பறைச்சேரி), கைவினைஞர் வசித்த பகுதி (கம்மாளச்சேரி), சுடுகாடு ஆகியவை இறையிலி நிலங்களாக இருந்தன. அவையெல்லாவற்றையும் அளந்து, அவற்றைக் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பிலிருந்து கழித்த பிறகு எஞ்சிய நிலத்திற்கு வரி விதிக்கப்பட்டது. நிலத்தின் இயற்கை வளத் திற்கும் அதில் விளைந்த பயிருக்கும் ஏற்றவாறு வரி ஏறியோ குறைந்தோ இருந்தது. விடுபாட்டுரிமையும் விதிவிலக்கும் பெற்ற தனி மனிதர்கள் நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் மிகக் கவனமாகப் பதிவு செய்யப்பட்டன. கிராமம் முழுவதற்கும் விதிக்கப்பட்ட வரியனைத்தையும் செலுத்துவது கிராம மக்களின்

பொதுப் பொறுப்பாக இருந்தது. வரிவசூல் செய்த அதிகாரிகள் சில சமயங்களில் இரக்கமற்ற முறைகளைக் கையாண்டார்கள். சோழப் பேரரசு மிக நன்றாக இயங்கிய காலத்திலும் கிராம மக்கள் வரிவசூல் அதிகாரிகளின் கொடுமைக்கு உள்ளானார்கள். மைய அரசின் கட்டுப்பாட்டின் உறுதி தளர்ந்தபோது உள்ளூர் அதிகாரிகளின் கொடுமை அதிகமாகியது. மாவட்டம் முழுவதிலு மிருந்த கிராம மக்கள் ஒன்றுகூடி, வழக்கத்திற்கு மாறானவையும், மனம்போன போக்கில் விதிக்கப்பட்டவையும் ஆகிய வரிகளை எதிர்ப்பதற்கு ஏற்ற கூட்டு நடவடிக்கை எடுப்பதுபற்றி முடிவு செய்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. வரி பணமாகவோ தானியமாகவோ வசதிக்கேற்றவாறு வசூலிக்கப் பட்டது. நிலவரியைத் தவிர, வாணிகப் பொருள்களின் புடை பெயர்வுச் சுங்கவரி, தொழில் வரி, வீட்டு வரி, திருமணம் போன்ற சடங்குகளின்மீது விதிக்கப்பட்ட வரி ஆகிய வரிகளும் வழக்கில் இருந்தன. அவற்றைத் தவிர நீதிமன்றங்கள் விதித்த குற்றத்தொகையும் (அபராதம்) அரசாங்கத்தின் வருமானத்தில் பொது வரிகளைத் தவிர, சமுதாயத்தின் குறிப்பிட்ட சில பணிகளுக்காகத் தாங்களாகவே முன்வந்து சில வரிகளைச் செலுத்தினார்கள்.

கிராம நீதிமன்றங்களையும், சாதிப் பஞ்சாயத்துகளையும் தவிர, அரசினர் முறையாக அமைத்த நீதிமன்றங்களும் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கின. வழக்காறுகளையும், ஆவணங்களையும், வாய்மொழிச் சாட்சியையும் நீதிமன்றங்கள் சான்றுகளாக ஏற்றுக்கொண்டன. மனிதர்கள் அளிக்கக்கூடிய சான்று எதுவும் இல்லாதபோது கடுஞ்சோதனை முறை கையாளப் பட்டது. சொத்துரிமையை மெய்ப்பிப்பதற்காகத் தீக்குளிக்கும் முறையையும் சிலர் கையாண்டனர். ராஜ துரோகக் குற்றத்தை அரசனே விசாரித்து நீதி வழங்கினான். மரண தண்டனையைத் தவிர, உடைமைகளைப் பறிமுதல் செய்வதும் அந்தக் குற்றத் திற்குத் தண்டனையாக இருந்தது. தண்டம் (அபராதம்) விதிப் பதும், சிறைவாசமும் சாதாரணக் குற்றங்களுக்குப் பொதுவாக விதிக்கப்பட்ட தண்டனைகள். சௌ–ஜு–குவா பின்வருமாறு கூறுகிறார் : 'யாரேனும் குற்றம் செய்தால் அமைச்சர்களில் ஒருவர் அதனை விசாரித்துத் தண்டனை தருகிறார். குற்றம் சிறியதாக இருந்தால், குற்றவாளியைத் தொழுவில் மாட்டி ஐம்பது, எழுபது அல்லது நூறு பிரம்படி கொடுப்பது வழக்கம். பெருங் குற்றங்கட்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்ற வாளியின் தலையை வெட்டியோ யானையை விட்டு மிதிக்கச் செய்தோ அந்தத் தண்டனையை நிறைவேற்றுவது வழக்கம்.'

தன்னாட்சியுரிமை பெற்ற கிராமச் சங்கங்கள் சோழர் காலத்தில் மிகுந்த ஊக்கத்தோடும், திறமையோடும் செயற்பட்டன. அதுதான் சோழ ஆட்சிமுறையின் மிகக் குறிப்பிடத் தக்க இயல்பாக இருந்தது. உள்ளூர் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்காக 'வாரியம்' என்ற மிக முன்னேற்றமடைந்த குழுமுறை பின்பற்றப்பட்டது. முதலாம் பராந்தகன் காலத்தில் உத்திரமேரூர் சபை தன்னுடைய அமைப்பை இருமுறை திருத்தியமைத்துக்கொண்டது. முதல்முறை செய்த திருத்தம் முழு மனநிறைவு தாராததால் விரைவிலேயே இரண்டாம் திருத்தம் நடைபெற்றது. உத்திரமேரூர் சபை ஒன்றுதான் அவ்வாறு செய்தது என்று நாம் நினைத்துவிடக்கூடாது. அது ஓர் எடுத்துக் காட்டுதான். தமிழகத்திலிருந்த கிராம சபைகள் எல்லாமே நிர்வாகம் நன்றாக நடைபெறவேண்டும் என்பதற்காகத் தம்முடைய அனுபவத்தின் அடிப்படையில் அத்தகைய சீர்திருத்தங்களையும், மாறுதல்களையும் செய்வதற்கு முயன்றன என்று நாம் கருதுவதுதான் பொருத்தமாயிருக்கும். கிராமத்தின் வழக்கமான அலுவல்களைக் கிராம அதிகாரிகள் கவனித்துக்கொண்டார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வாழ்ந்த மக்களின் உயிரையும் உடைமையையும் காக்கும் பொறுப்பை அந்தப் பகுதியிலிருந்த ஒரு தலைவனோ, வலிமை மிக்க அரசு அலுவலன் ஒருவனோ சிறப்புமுறையில் ஏற்றுக்கொள்வது வழக்கம். அதற்குக் கைம்மாறாக அவர்கள் 'பாடிகாவல் கூலி' பெற்றுக்கொள்வார்கள். மைய ஆட்சியின் வலிமை குறைந்தபோது இந்த ஏற்பாட்டின் முக்கியத்துவம் அதிகரித்தது.

உள்ளூர் ஆட்சி முறையைப் பற்றி மேலே கூறிய விவரங்களெல்லாம் சோழ ஆட்சி முறைக்கே சிறப்பாகப் பொருந்தும். எனினும், தென்னிந்தியா முழுவதிலும் நடைமுறையில் இருந்த உள்ளூராட்சி முறை, பொதுவாக, சோழ ஆட்சிமுறையை ஒத்திருந்தது. அமைப்புகளையும் பணிகளையும் குறித்த ஆட்சிச் சொற்கள் மட்டும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகையாக இருந்தன.

இடைக்கால ஆட்சி முறை சமுதாயத்தின் உயர்நிலையிலிருந்த மக்களுடைய நன்மைக்கும், வசதிக்கும் ஏற்ற தனியியல்புகளைக் கொண்டதாகவும், பொதுமக்களுடைய நலன்களைப் புறக்கணிப்பதாகவும் தோன்றுகிறது என்று பொதுவாகக் கூறலாம். அந்த ஆட்சிமுறை வரம்பு கடந்த தீய விளைவுகளை உண்டாக்கக்கூடிய இயல்புகளைக் கொண்டிருந்தது என்பது உண்மையே. ஆனால், அக்காலத்தில் செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தைப் பயன்

படுத்திய முறை அத்தகைய தீமைகள் விளையாமல் தடுத்தது. அது தானாகவே இயங்கும் பொறியைப்போல், அதற்கென்று யாரும் தனி முயற்சி செய்யாமலே, ஒரு சார்பான ஆட்சி முறையினால் ஏற்படக்கூடிய தீமைகள் ஏற்படாமல் தடுத்தது. செல்வந்தர்கள் தங்களுக்குள் போட்டியிட்டுக்கொண்டு கோயில்களுக்கும், ஏழைகளுக்கும் தொண்டு செய்வதன்மூலம் தங்களுடைய புகழைப் பெருக்கிக்கொள்ள முயன்றார்கள். அவர்கள் கோயில்களைக் கட்டுவதிலும், மடங்களுக்கு மானியங் கொடுப்பதிலும், கல்வி நிலையத்தையும் மருத்துவ மனையையும் நிறுவுவதிலும், காட்டையழித்து விளைநிலமாக்குவதிலும், தங்கள் பொருளைச் செலவழித்தார்கள். அவ்வாறு செய்வதுதான், சமுதாயத்தின் மதிப்பையும் பொதுமக்களுடைய பாராட்டையும் பெறுவதற்கு அக்காலத்தில் ஏற்ற முறையாக இருந்தது. பொதுமக்களுடைய உழைப்பினால் உற்பத்தியான பொருள்களிலும் செல்வத்திலும் பெரும்பகுதி பல்வேறு வழிகளில் கோயில்களுக்கும், பிரபுக்களுக்கும், அரசனுக்கும் போய்ச் சேர்ந்தது. ஆனால், அவ்வாறு சென்ற செல்வத்தில் பெரும்பகுதி பொதுமக்களுடைய நன்மைகளுக்கு ஏற்ற வழியில் செலவழிக்கப்பட்டதால் அது மீண்டும் அவர்களிடமே வந்து சேர்ந்தது என்று கூறலாம். அந்தக் காலச் சமுதாயத்தில் அற்புதமான ஒருமைப்பாடு நிலவியது. அந்த ஒருமைப்பாடு தனிமனிதர்களுடைய சமத்துவத்தின் அடிப்படையிலோ பல்வேறு வகுப்புகளின் சமத்துவத்தின் அடிப்படையிலோ தோன்றியதன்று. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்மீதும் ஒருவர்பால் ஒருவர் கொண்டிருந்த நல்லெண்ணத்தின்மீதும் எழுந்து வளர்ந்த அந்த ஒருமைப்பாடு சமுதாய வாழ்வின் அடிப்படை இயல்புகளில் வேரூன்றியிருந்தது.

## BIBLIOGRAPHY


H. W. Codrington : 'A Short History of Ceylon' (London, 1929)

J. D. M. Derrett : 'The Hoysalas' (Oxford University Press, 1957)

J. E. Fleet : 'Dynasties of the Kanarese Districts' (Bombay Gazetteer, Vol. I, Pt. ii, 1896)

F. Hirth and W. W. Rockhill: Chau Fu-kua' (St. Petersburg, 1912.)

H. C. Ray : 'Dynastic History of Northern India', 2 Vols. (Calcutta, 1931, 1936)

K. A. N. Sastri : Colas, Vols. I and II (Madras 1935, 1937) Second edition 1955.

N. Venkataramanayya: 'The Eastern Chalukyas of Vengi' (Madras 1950)

**கல்யாணிச் சாளுக்கியர்கள்**

1. இரண்டாம் தைலன் + பொந்தாதேவி (கி.பி. 973–97)

2. சத்தியாசிரய இறிவபடங்கன் (997–1008) — தசவர்மன் + பாக்கியவதி

மகாதேவி + இறிவ நொலம்பாதிராஜன்

3. ஐந்தாம் விக்கிரமாதித்தியன் (1008–1015) — 4. அய்யணன் (1015?) — அக்காதேவி — 5. இரண்டாம் ஜெய சிம்மன் (1015–42)

6. முதலாம் சோமேசுவரன் (1042–68) — ஆவல்லதேவி + மூன்றாம் சியுன பில்லமன்

7. இரண்டாம் சோமேசுவரன் (1068 76) — 8. ஆறாம் விக்கிரமாதித்தியன் (1076–1126) — மூன்றாம் ஜெய சிம்மன்

ஜெயகர்ணன் — 9. மூன்றாம் சோமேசுவரன் (1126–38)

10. இரண்டாம் பெரம ஜெகதக மல்லன் (1138–55) — 11. மூன்றாம் தைலப்பன் (1149/50–63) — 12. மூன்றாம் ஜெகதக மல்லன் (1163–83)

13. நான்காம் சோமேசுவரன் (1184–1200)

## கிழக்குச் சாளுக்கியர்கள்

1. குப்ஜவிஷ்ணுவர்த்தனன் (624–641)

2. முதலாம் ஜெயசிம்மன் (641–673)

3. இந்திரபட்டாரகன் (673)

4. இரண்டாம் விஷ்ணு வர்த்தனன் (673–682)

5. மங்கியுவராஜன் (682–706)

6. இரண்டாம் ஜெயசிம்மன் (706–718)

8. மூன்றும் விஷ்ணுவர்த்தனன் (719–755)

7. கொக்கிள்ளி (719)

9. முதலாம் விஜாதித்தியன் (755–772)

10. நான்காம் விஷ்ணுவர்த்தனன் (772–808)

11. இரண்டாம் விஜயாதித்தியன் (808–847)

பீமசலுகி

நிருபருத்திரன்

12. ஐந்தாம் கலி விஷ்ணுவர்த்தனன் (847–849)

13. மூன்றும் குணக விஜயாதித்தியன் (849–892)

முதலாம் விக்கிரமாதித்தியன்

முதலாம் யுத்தமல்லன்

14. முதலாம் சாளுக்கிய பீமன் (892–921)

18. முதலாம் தாழன் (928)

## கிழக்குச் சாளுக்கியர்கள் (தொடர்ச்சி)

| 14

- 15. நான்காம் விஜயாதித்தியன் (921)
  - 16. முதலாம் அம்மன் (921–27)
    - 17. ஐந்தாம் பெட்ட விஜயாதித்தியன் (927–15 நாள்)
    - 20. இரண்டாம் பீமன் (928)
  - 22. இரண்டாம் சாளுக்கிய பீமன் (935–37)
    - 25. தானார்நவன் (970–73)
      - 26. முதலாம் சக்திவர்மன் (1000–1011)
      - 27. விமலாதித்தியன் (1011–1018)
        - 28. ராஜராஜ நரேந்திரன் (1019–1061)
          - இரண்டாம் ராஜேந்திரன் (குலோத்துங்கன்)
        - 29. ஏழாம் விஜயாதித்தியன்
          - இரண்டாம் சக்திவர்மன்
    - 23. இரண்டாம் அம்மன் (947–970; இடையீடுகளோடு)
- 19. இரண்டாம் விக்கிரமாதித்தியன் (927–28–11 மாதம்)

| 18

- 21. இரண்டாம் யுத்தமல்லன் (928–35)
  - பாதப்பன்
  - 24. இரண்டாம் தாழன்

## சோழர்

- விஜயாலயன் (சுமார் 850–871)
  - முதலாம் ஆதித்தியன் (871–907)
    - முதலாம் பராந்தகன் (907–955)
      - ராஜாதித்தியன் (949)
      - கண்டராதித்தியன் (949–957)
        - மதுராந்தக உத்தம சோழன் (970–985)
      - அரிஞ்சயன் (956–957)
        - இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன் (957–993)
          - இரண்டாம் ஆதித்தியன் கரிகாலன்
          - முதலாம் ராஜராஜன் (985–1016)
            - முதலாம் ராஜேந்திரன் (1012–1044)
              - ராஜாதி ராஜன் (1018–1054)
              - இரண்டாம் ராஜேந்திர தேவன் (1052 1063)
              - வீரராஜேந்திரன் (1063–1069)
              - அம்மங்காதேவி + ராஜராஜ நரேந்திரன்
            - குந்தவை + விமலாதித்தியன்

## சோழர் (தொடர்ச்சி)

இரண்டாம் ராஜேந்திர தேவன் (1052–1063) | வீரராஜேந்திரன் (1063–1069) | அம்மங்காதேவி + ராஜராஜ நரேந்திரன் (கிழக்குச் சாளுக்கியன்)


ராஜமகேந்திரன் (1063-ல் இறந்து போனான்) | அதிராஜேந்திரன் (1067–1070)

மதுராந்தகி + ... ... ... முதலாம் குலோத்துங்கன் (1070–1122)

ராஜராஜன் | மும்மடிச் சோழன் | வீரசோழன் | விக்கிரம சோழன் (1118–1135)

இரண்டாம் குலோத்துங்கன் (1133–1150)

இரண்டாம் ராஜராஜன் (1146–1173)


ராஷ்டிரகூடர்கள்
நந்திவர்மன்
முதலாம் இந்திரன்
முதலாம் கோவிந்தராஜன்
முதலாம் கர்க்கன்
இரண்டாம் இந்திரன்
1. முதலாம் தந்தி துர்க்கன் (சுமார் 752–756)
ரேவா+நந்திவர்ம பல்லவமல்லன்
தந்திவர்ம பல்லவன்
2. முதலாம் கிருஷ்ணன் (756–775)
3. இரண்டாம் கோவிந்தன் (775–780)
4. துருவன் (780–792)
கம்பன்
கர்க்க சுவர்ண வருஷன்
5. மூன்றும் கோவிந்தன் (792–814)
இந்திர ராஜன்
6. முதலாம் அமோக வருஷன் (814–880)
7. இரண்டாம் கிருஷ்ணன் (880–915)
அப்பலபே+முதலாம் பூதுகன் (கங்கன்)
சங்கை+மூன்றும் நந்திவர்ம பல்லவன்

## ராஷ்டிரகூடர்கள் (தொடர்ச்சி)

சங்கை + மூன்றும் நந்திவர்ம பல்லவன்
|
நிருபதுங்க பல்லவன்

7. இரண்டாம் கிருஷ்ணன் (880–915)
|
சேதிநாட்டு லட்சுமி + ஜகதுங்கன் + சேதிநாட்டு கோவிந்தம்பாள்

8. மூன்றும் இந்திரன் (915–927)
11. மூன்றும் அமோக வருஷன் (935–939)

9. இரண்டாம் அமோக வருஷன் (927–930)
10. நான்காம் கோவிந்தன் (930–934/5)

12. மூன்றும் கிருஷ்ணன் (939–966)
|
மகன்
|
15. நான்காம் இந்திரன்

13. கொட்டிகன் (967–997)

நிருபமா
|
14. கர்க்கன் (927–973)

# 10. நான்கு ராஜ்யங்கள்

*பொது இயல்புகள்—மாறவர்ம சுந்தர பாண்டியன் காலத்தில் பாண்டியன் மீண்டும் வலிமை பெறுதல்—பாண்டியனையும், காடவக் கோப்பெருஞ் சிங்கனையும் சோழன் மூன்றும் ராஜராஜன் எதிர்த்தல்; அவனுக்கு ஹொய்சளர் துணைபுரிதல்—மூன்றும் ராஜேந்திரன் காலத்தில் சோழர் மீண்டும் பெற்ற வலிமை சிறிது காலமே நிலைத்திருந்தது—ஜடாவர்ம சுந்தர பாண்டியனும் அவன் புரிந்த போர்களும்—மாறவர்ம குலசேகரனும் ஹொய்சளர்களும்—பாண்டியர் சிங்களத்தை வெல்லுதல்—குலசேகரனுடைய ஆட்சி முடிவடைதல்—ஹொய்சளர்: ராமநாதன், மூன்றும் நரசிம்மன், மூன்றும் வல்லாளன்—சேரலம்—யாதவர்; சிங்கணன், கிருஷ்ணன், மகாதேவன், ராமச்சந்திரன்—காகதியர்: கணபதி, ருத்திராம்பாள், இரண்டாம் பிரதாபருத்திரன்—கலிங்க நாட்டுக் கங்கர்கள்.*

*மார்க்கபோலோ: மா'பார், காயல், குதிரை வாணிகம், முத்துச் சலாபம், சமுதாயநிலை ஆகியவை பற்றியும், சிங்களம் மேற்குக் கடற்கரை ஆகியவை பற்றியும் மார்க்கபோலோ கூறுவது.*

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சாளுக்கியப் பேரரசு மறைந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழப்பேரரசு ஆட்கொண்டது. அவ்விரு பேரரசுகளின் சிதைவினால் வலிமை பெற்ற நான்கு ராஜ்யங்களும், அவற்றுக்குள் ஏற்பட்ட பகைமையும் பூசலும் அடுத்த நூற்றாண்டுத் தென்னிந்திய வரலாற்றேடுகளை நிரப்புகின்றன. அந்த நான்கு ராஜ்யங்கள் தெற்கிலிருந்த பாண்டிய ராஜ்யமும் ஹொய்சள ராஜ்யமும், வடக்கிலிருந்த காகதீய ராஜ்யமும் யாதவ ராஜ்யமும் ஆகும். நெல்லூரில் ஆட்சி செய்த தெலுகுச் சோடர் போன்ற சிற்றரசர்கள் பலரும் அந்தக் காலத்தில் இருந்தார்கள். ஆனால், அவர்கள் அந்த நான்கு ராஜ்யங்களுக்கும் அவ்வப்போது துணை புரிபவர்களாய் இருந்தார்களே தவிர, முழு உரிமை பெற்ற அரசர்களாய் இருக்கவில்லை. அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும் அந்தக் காலத்தில் குறிப்பிடத்தக்க புதுமை எதுவும் தோன்றவில்லை. ஆனால், தொழிலும், வாணிகமும், கவின்

கலைகளும் தங்களுடைய வழக்கமான ஊக்கத்துடன் வளர்ந்து சிறப்புற்றன. 1292–93-ல் நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்த மார்க்கபோலோ அப்போது தென்னிந்தியாவில் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் மிக விளக்கமாக எழுதி வைத்திருக்கிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லிம்கள் தென்னிந்தியாவின்மீது படையெடுத்தார்கள். அந்தப் படையெடுப்புகள் நாம் மேலே கூறிய நான்கு ராஜ்யங்களையும் நிலைகுலையச் செய்தன. அதனால் நாட்டில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. பதினான்காம் நூற்றாண்டின் இரண்டாம் கால்பகுதியில் தோன்றி வளர்ந்த பாமினி, விஜயநகர் ஆகிய ராஜ்யங்கள் அந்தக் குழப்பத்திற்கு முடிவு கண்டன.

1205ஆம் ஆண்டில் மூன்றாம் குலோத்துங்கன் ஜடாவர்ம குலசேகர பாண்டியனை மிகத் தாழ்வாக நடத்தினான் என்பதை நாம் முன்னர்க் கண்டோம். அவனுக்குப்பின், 1216-ல், அவனுடைய தம்பி மாறவர்ம சுந்தரபாண்டியன் மதுரையில் அரியணையேறினான். தன் தமையனுக்கு மட்டுமன்றித் தனக்கும் ஏற்பட்ட மானக்கேட்டிற்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் பட்டத்திற்கு வந்த சிறிது காலத்திற்குள் சுந்தரன் சோழநாட்டின் மீது படையெடுத்தான். குலோத்துங்கனுக்கு வயதாகிவிட்டது. அன்றியும், சுந்தரபாண்டியன் சோழநாட்டின்மீது மிகவேகமாகப் பாய்ந்தான். அதனால், சோழர்கள் பாண்டியப் படையை எதிர்த்து நிற்க முடியவில்லை. உறையூரையும் தஞ்சாவூரையும் கைப்பற்றி, அவற்றைக் கொள்ளையடித்தபின், சுந்தரன் பேரரசன் குலோத்துங்கனையும் இளவரசன் மூன்றாம் ராஜராஜனையும் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு, சோழர் முடிசூடிக் கொள்ளும் மண்டபத்தில் ‘வீராபிஷேகம்’ செய்து கொண்டான். (அந்த மண்டபம் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆயிரத்தளி என்னுமிடத்தில் இருந்தது.) அதன்பின், அவன் சிதம்பரத்திற்குச் சென்று நடராஜப் பெருமானை வழிபட்டான். திரும்புகையில் அவன் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள பொன்னமராவதியில் பாசறையமைத்துத் தங்கினான். அதற்குள், குலோத்துங்கன் ஹொய்சள மன்னன் இரண்டாம் வல்லாளனுடைய துணையை நாடியிருந்தான். அவனும் உடனே தன் மகன் நரசிம்மனுடைய தலைமையில் சீரங்கத்துக்கு ஒரு படையை அனுப்பினான். எனவே, சுந்தரபாண்டியன் சமாதானம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. பொன்னமராவதியில் குலோத்துங்கனும் ராஜராஜனும் சுந்தரபாண்டியனுக்குப் பணிந்து அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதனுடன் இரண்டாம் பாண்டியப் பேரரசு தோன்றிற்று என்று கூறலாம்.

ஆனல், சோழ ஆதிக்கம் இன்னும் அடியோடு அழிந்து போக வில்லை.




தென்னிந்தியா: கி.பி. 1200-1325

மூன்றும் குலோத்துங்கன் 1218-ல் இறந்து போனன். அவனுடைய மகன் மூன்றும் ராஜராஜன் திறமையற்றவன். அவனுடைய ஆட்சிக் காலத்திற்கு முன்னரே நாட்டில் தோன்றி யிருந்த குழப்பம் அவன் அரசனனபின் மேலும் அதிகமாயிற்று.

அதனால், சோழர்களுடைய அழிவின் வேகம் அதிகமாயிற்று. யாருக்கும் தெரியாமல், ஒட்டர் (ஒரியர்) படையொன்று சுமார் 1223-ல் சோழநாட்டின் மையத்திற்கே வந்து, சீரங்கத்தைப் பிடித்து, அங்குக் குழப்பம் விளைவித்தது. ஆனால், 1225-ல் சுந்தரபாண்டியன் அந்தப் படையை வென்று வெளியேற்றினான். ஹொய்சளர்கள் இன்னும் காஞ்சீபுரத்தில் இருந்தார்கள். அங்கிருந்து கொண்டே அவர்கள் நெல்லூரில் ஆட்சி செய்த தெலுங்குச் சோடர்களையும், அவர்கள்மீது மேலாதிக்கம்செலுத்திய காகதீயர்களையும் சண்டைக்கு இழுத்துக் கொண்டிருந்தார்கள் போலும். காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனுடைய வலிமை மிகுந்துகொண்டே சென்றது. அவன் சோழர்களுக்கும் அவர்களுக்குத் துணைநின்ற ஹொய்சளர்களுக்கும் எதிராகச் சுந்தர பாண்டியனுடன் சேர்ந்துகொண்டான். தன்னுடைய வலிமையின்மையை உணராத மூன்றும் ராஜராஜன் சுந்தரபாண்டியனுக்குச் செலுத்த வேண்டிய திறையைச் செலுத்தாமல் அவனோடு போருக்குச் சென்றான். வலிமை குறைந்த சோழப் படையைச் சுந்தரபாண்டியன் தோல்வியுறச் செய்து, அதனைத் துரத்திக்கொண்டு சோழநாட்டிற்குள் புகுந்தான். அங்கு நடந்த சண்டையில் ராஜராஜன் தோற்றுப் போனதோடு தன்னுடைய செல்வத்தில் பெரும் பகுதியை இழந்தான். அவனுடைய பட்டத்தரசியும் சிறைபட்டாள். சுந்தர பாண்டியன் முடிகொண்ட சோழபுரத்தில் (ஆயிரத்தளியில்) வெற்றிவிழா (விஜயாபிஷேகம்) நடத்தினான். ராஜராஜன் தன்னுடைய துணைவனான ஹொய்சளத் தலைவன் இரண்டாம் நரசிம்மனோடு சேர்ந்துகொள்வதற்காகத் தன்னுடைய படையுடன் வடக்கே சென்றான். ஆனால், அவனைக் கோப்பெருஞ்சிங்கன் தடுத்து நிறுத்தி, தெள்ளாற்றில் நடந்த சண்டையில் வென்று, சிறைபிடித்து, சேந்தமங்கலக் கோட்டையில் அடைத்து விட்டான்.

சோழனுக்கு நேர்ந்த தோல்விகளைக் கேள்விப்பட்ட இரண்டாம் நரசிம்மன் அவனுடைய துணைக்குப் போனான். கோப்பெருஞ்சிங்கனுடைய துணைவனான மகரநாட்டு (சேலம், தென்னார்க்காடு) அரசனைத் தாக்கி வென்றபின்பு நரசிம்மன் சீரங்கத்துக்குச் சென்றான். அங்கிருந்து அவன் தளபதிகளாகிய அப்பண்ணன், கோப்பையன் ஆகியவர்களுடைய தலைமையில் ஒரு படையை அனுப்பி, கோப்பெருஞ்சிங்கனுடைய நாட்டைத் தாக்கி அழித்தபின், சோழமன்னனை மீண்டும் அரியணையேற்றுமாறு ஆணையிட்டான். தளபதிகளும் அவனுடைய ஆணையை ஒரு சிறிதும் பிசகாமல் நிறைவேற்றினார்கள். அவர்கள் கோப்

பெருஞ்சிங்கனுடைய ஆட்சியிலிருந்த பல முக்கியமான இடங்களைக் கைப்பற்றி, பெரம்பலூரில் நடந்த சண்டையில் வெற்றி பெற்று, தொழுதூர் வழியாகச் சிதம்பரத்திற்குச் சென்றார்கள். போகும் வழியில் சோழர்களுடைய பகைவர்களோடு சேர்ந்திருந்த சோழ அலுவலர் சிலரையும், சிங்கள அரசகுமாரன் பராக்கிரமபாகு என்பவனையும் பிடித்துத் தண்டித்தார்கள். தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் இறைவனை வழிபட்டபின் அவர்கள் கெடில நதிக்குத் தெற்கிலும் சேந்தமங்கலத்துக்குக் கிழக்கிலும் இருந்த நாடுகள் அனைத்தையும் அழித்தார்கள். இறுதியில், அவர்கள் சேந்தமங்கலக் கோட்டையை வளைக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்த நேரத்தில், கோப்பெருஞ்சிங்கன் சோழமன்னனுக்கு விடுதலையளித்து, அவனை மீண்டும் அரியணையேற்றுவதற்கு இசைவதாக நரசிம்மனுக்குச் செய்தியனுப்பினான். நரசிம்மன் அச் செய்தியைத் தன்னுடைய தளபதிகளுக்குத் தெரிவித்தான். அதன்பின் அவர்கள் சோழப் பேரரசனைச் சிறப்பாக வரவேற்று, 1213-ல், அவனையழைத்துக் கொண்டு சோழநாட்டிற்குச் சென்றார்கள்.

அதற்குள் நரசிம்மனே சுந்தரபாண்டியனை எதிர்த்து, காவிரிக் கரையிலுள்ள மகேந்திர மங்கலத்தில் நடந்த சண்டையில் தோல்வியடையச் செய்தான். அதனால் ராஜராஜன் மீண்டும் சோழ அரியணையேறுவதைச் சுந்தரபாண்டியன் ஏற்றுக் கொண்டான். ஹொய்சளர் காடவரோடு இன்னும் சில ஆண்டுக் காலம் தொடர்ந்து போர் புரிந்தனர். ஆனால், இறுதியில் ஹொய்சளரும், பாண்டியரும், சோழரும் சமாதானம் செய்து கொண்டார்கள். அதனை உறுதி செய்வதற்காக அவர்கள் திருமண உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இரண்டாம் நரசிம்மனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் சோமேசுவரனை (1233–34) சுந்தரபாண்டியன், ராஜராஜன் ஆகிய இருவருக்கும்பின் பட்டத்திற்கு வந்த அரசர்கள் 'மாமா' (மாமடி) என்று அழைத்து உறவு கொண்டாடினார்கள்.

ராஜராஜன் 1256 வரையில் தொடர்ந்து ஆட்சி செய்தான். பாண்டிநாடு நீங்கலாக அவனுடைய ராஜ்யத்தின் எல்லை பெயரளவில் அவனுடைய ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் இருந்தது போலவே இருந்தது. எனினும், ராஜத்துரோகமும் குழப்பமும் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே சென்றன. சிற்றரசர்கள் தற்காப்புக்காகத் தங்களுக்குள் உடன்பாடு செய்து கொண்டார்கள். அவ்வாறு உடன்பாடு செய்துகொள்ள அவர்கள் ராஜராஜனுடைய இசைவைப் பெறவில்லை. மேலும்,

தெளிவாக வெளியிடப்பட்ட ஆணைகளையும் அவர்கள் மதித்து நடக்கவில்லை. 1220-க்கும் 1245-க்கும் இடைப்பட்ட காலத்தில் சோழநாட்டில் மட்டுமன்றிப் பாண்டி நாட்டிலும் ஹொய்சளர் களுடைய செல்வாக்குப் பெருகிக்கொண்டே சென்றது. அந்தக் காலத்தைத் தென்னாட்டில் ஹொய்சளர் தலைமை நிலைபெற்றிருந்த காலம் என்று கூறலாம். சோமேசுவரன் கையாண்ட உபாயம் அதற்கு முக்கியமான காரணமாயிருந்தது. தன்னுடைய நாட்டின் நிர்வாகத்தைத் தன்னுடைய அமைச்சர் களிடம் விட்டுவிட்டு, அவன் தென்னாட்டிலேயே தங்கி, அங்கே ஹொய்சள ஆதிக்கத்தை நிலைநாட்டும் பணியில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினான்.

மூன்றும் ராஜராஜனைவிட 1246-ல் இளவரசப்பட்டம் சூட்டப் பெற்ற மூன்றும் ராஜேந்திரன் மிகவும் திறமை வாய்ந்தவன். அவன் சோழ ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்குக் கடுமுயற்சி செய்தான். அந்த முயற்சியில் அவன் ஓரளவு வெற்றி பெற்றான். சோமேசுவரனுடைய தலையீடு இல்லாமலிருந் திருந்தால் அவன் இன்னும் அதிகமாக வெற்றிபெற்றிருப்பான். ராஜேந்திரன் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து இரண்டு பாண்டிய அரசகுமாரர்களை வென்றான். அவர்களுள் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனும் (1238) ஒருவன். சோழ ஆதிக்கம் மீண்டும் முழுமையாக நிலைபெறுவதை விரும்பாத சோமேசுவரன் இப்போது பாண்டியர்களோடு சேர்ந்துகொண்டு ராஜேந்திரனை ஒரு சண்டையில் தோல்வியடையும்படி செய்து, அதன்பின் அவனுடன் சமாதானம் செய்துகொண்டான். வட புலத்தில், நெல்லூரில் ஆட்சி புரிந்துவந்த தெலுகுச்சோட மன்னனான திக்கன் (அவனுக்குக் கண்டகோபாலன் என்னும் ஒரு பெயரும் வழங்கிற்று) ராஜேந்திரனுக்கு உதவியாக இருந்தான். 1240-ல் அவன் சோமேசுவரனுடைய தாக்குதலுக்கு உட்பட் டவன். அதனால் அவன் சோமேசுவரன்மீது பகைமை பூண்டி ருந்தான். திக்கன் செய்த போர்களால் சம்புவராயர், காடவ ராயர் ஆகியவர்களுடைய வலிமை குறைந்தது. அதனால் ராஜேந்திரனுடைய வலிமை மிகுந்தது. திக்கன் பின்னர் சோமேசுவரனோடு போரிட்டுக் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டான். ஆனால் அதனை ராஜேந்திரனுக்குக் கொடுக்காமல் தன்னுடைய உதவிக்குக் கைம்மாருகத் தானே வைத்துக் கொண்டான். மேலும், அவன் ஹொய்சளர்களுடைய பகைவர் களான காகதீயர்களுடைய அரசன் கணபதியோடும் நட்புறவு கொண்டிருந்தான்.

1251-ல் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் பாண்டி நாட்டின் அரியணையேறினன். அவன் மிகச் சிறந்த வீரன். அவனுடைய போர்வன்மை அவனுக்குப் பல வெற்றிகளைத் தேடித்தந்தது. தென்னிந்தியாவின் மிகச் சிறந்த அரசர்களுள் ஒருவன் என்று அவன் புகழப் பெற்ருன். அவன் காலத்தில் பாண்டிய மரபினுடைய பெருமையும் புகழும் உச்சநிலை எய்தின. அவனுடைய திறமையை அறிந்திருந்த சோமேசுவரனும் மூன்ரும் ராஜேந்திரனும் தங்களுக்குள் மேலும் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக்கொண்டார்கள். சுந்தரன் தன்னுடைய ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் பல போர்களைப் புரிந்து விரைவில் தன்னுடைய ஆட்சி எல்லையை நெல்லூருக்கும் அதற்கப்பாலும் நீட்டினன். சிங்களத்திலும் அவன் தன்னுடைய ஆட்சியை நிறுவினன். ஹொய்சளர் மைசூர்ப் பீடபூமியில் அடைபட்டனர். காஞ்சீபுரம் பாண்டி நாட்டின் இரண்டாம் தலைநகராயிற்று. சிங்களம் மட்டுமன்றி, சேரலமும் அவனுடைய உறுதியான ஆட்சியில் சிலகாலம் இருந்தது. அவன் செய்த போர்களில் பாண்டிய மரபைச் சேர்ந்த ஏனைய அரசகுமாரர்கள் அனைவரும் அவனுக்கு உண்மையாக உதவினர்கள். அவர்களுள் மிக முக்கியமானவன் ஜடாவர்ம வீரபாண்டியன் (1253) என்பவன்.

சுந்தரபாண்டியன் ஒரு சிறு படையுடன் சென்று மலைநாட்டைச் சூறையாடியபின், சேர மன்னனை வீரரவி உதயமார்த்தாண்டவர்மனை வென்று கொன்றுவிட்டான். அவன் போர்வன்மை மிக்க ராஜேந்திர சோழனைப் பணியவைத்துத் தன்னுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு கப்பங்கட்டுமாறு செய்தான். அவன் சிங்களத்தின்மீது படையெடுத்து, அங்கிருந்த அரசனைத் தோல்வியுறச்செய்து பல யானைகளையும் ஏராளமான முத்தையும் திறையாகப் பெற்ருன். அதன்பின் அவன் ஹொய்சளர்களைக் காவிரி பாயும் பகுதியில் தாக்கிக் கண்ணனூர்க் கொப்பக் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். அங்கு நடந்த சண்டையில் ஹொய்சள தளபதிகளுள் பலர் உயிரிழந்தனர். அவ்வாறு இறந்தவர்களுள் சிறந்த வீரனை சிங்கணனும் ஒருவன். பாண்டியர் மிகப் பல யானைகளையும் குதிரைகளையும் பிடித்துக் கொண்டதோடு ஏராளமான செல்வத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். மேலும், அவர்கள் பெண்கள் பலரையும் சிறைபிடித்தார்கள். சோமேசுவரன் பின்வாங்கி மைசூர்ப் பீடபூமிக்குச் சென்ற பிறகுதான் சுந்தரன் போரை நிறுத்தினன். ஆனல், வெகு விரைவிலேயே சோமேசுவரன் மீண்டும் போரைத் தொடங்கினன். அதில்

சுந்தரன் சோமேசுவரனைக் கொன்றுவிட்டான் (1262). அதன் பின் சுந்தரன் செல்வச் செழிப்புமிக்க சேந்தமங்கலக் கோட்டையைத் தாக்கிப் பல சண்டைகளைச் செய்தான். அதனால், 'காடவன் (கோப்பெருஞ்சிங்கன்) மனத்தில் பேரச்சம் உண்டாயிற்று.' இவ்வாறு காடவனுடைய நாட்டையும், படைகளையும் செல்வத்தையும், கைப்பற்றிக்கொண்டபின் சுந்தரன் காடவனுக்கு அவனுடைய நாட்டைத் திருப்பிக்கொடுத்துவிட்டுச் சிதம்பரத்திற்குச் சென்று நடராஜப் பெருமானை வழிபட்டான். அதன்பின் அவன் சீரங்கத்திற்குச் சென்றான். 'அங்கே அவன் வெற்றிமாலை சூடி, துலாபாரம் பலவற்றைச் செய்தான். அவையனைத்தையும் கண்ட மக்களின் கண்ணும் மனமும் மிகவும் மகிழ்ந்தன. கல்வி கேள்விகளிற் சிறந்த புலவர்கள் அவனை வாழ்த்தினார்கள்.' அவன் அரங்கன் கோயில் கூரைக்குப் பொன் வேய்ந்தான். பின்னர் அவன் அந்தக் கோயிலில் மிக அழகிய அரியணையின்மீது தங்க மகுடந்தரித்து தன் மனைவியுடன் 'மலை முடியில் உதிக்கின்ற காலைக் கதிரவனைப் போல' அமர்ந்திருந்தான்.

சுந்தரபாண்டியன் வென்ற நாடுகளுள் மகதையும் (பாணநாடு) கொங்கு நாடும் சேர்ந்திருந்தன. அவற்றை அவன் ஹொய்சளரோடும் கோப்பெருஞ்சிங்கனோடும் போர் செய்த சமயத்தில் கைப்பற்றியிருக்கவேண்டும். இறுதியாக அவன் வடதிசைச் சென்று கண்ட கோபாலனைச் சண்டையில் கொன்றுவிட்டுக் காஞ்சியைப் பிடித்துக்கொண்டான். மேலும் காகதீய அரசன் கணபதியோடும் அவனுடைய சிற்றரசர்களோடும் அவன் மோதினான். தெலுங்கர் படையொன்றை அவன் முடுகூரில் (நெல்லூர் மாவட்டம்) தோல்வியடையச் செய்தான். பாணத் தலைவன் ஒருவனை நாட்டை விட்டுத் துரத்தினான். கடைசியில் அவன் நெல்லூரில் 'வீராபிஷேகம்' செய்துகொண்டான். சிங்கள அமைச்சன் ஒருவன் உதவிக்காகச் செய்த விண்ணப்பத்தின் பேரில், ஜடாவர்ம வீரபாண்டியன், 1262-க்கும் 1264-க்கும்இடையில் சிங்களத்தின்மீது படையெடுத்து, சிங்கள அரசகுமாரன் ஒருவனைச் சண்டையில் வென்று கொன்றான். இன்னுமோர் அரசகுமாரன் வீரபாண்டியனுக்குப் பணிந்தான். மேலும், மலேயா தீபகற்பத்தின் அரசனாயிருந்த சந்திரபானுவினுடைய மகனும், சிங்களத்தின் வடபகுதியில் ஒரு சிறு நாட்டில் ஆட்சி செய்தவனும் ஆகிய சிற்றரசன் ஒருவனும் வீரபாண்டியனுக்குப் பணிந்தான். பாண்டியர்களுடைய இரண்டு படையெடுப்புகளும் சிங்கள அரசன் இரண்டாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தன. அவன் இலங்கைத் தீவின் வட பகுதியை என்றுமே தன்னுடைய ஆட்சியின்கீழ் உறுதியாக வைத்

திருந்தான் என்று சொல்லமுடியாது. அதனுடைய தலை யெழுத்தை நிர்ணயிக்கும் பணியை உள்ளூரிலிருந்த துணிச்சல் உள்ளவர்களுக்கும் வெளியிலிருந்து படையெடுத்துவந்த வீரர் களுக்கும் விட்டுவிட்டான்.

சுந்தரபாண்டியன் புரிந்த பல போர்களில் அவனுக்குக் கிடைத்த ஏராளமான செல்வத்தைச் சிதம்பர நடராஜர் கோயிலையும் திருவரங்கப் பெருமான் கோயிலையும் புதுப்பித்து அழகுபடுத்துவதிலும் மானியம் வழங்குவதிலும் சமமாகச் செலவழித்தான்.

வடக்கிலும் தெற்கிலும் இருந்த தன்னுடைய பகைவர்களின் நெருக்குதலுக்குட்பட்ட சோமேசுவரன், தான் இறப்பதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு, தன்னுடைய ராஜ்யத்தின் வடபாதியைத் தன் மகன் மூன்றும் நரசிம்மன் பொறுப்பிலும் தென்பாதியிலிருந்த தமிழ் மாவட்டங்களைத் தன் இளைய மகன் ராமநாதன் பொறுப்பிலும் விட்டுவைத்தான். அதிலிருந்து ஹொய்சள ராஜ்யம் நடைமுறையில் இரண்டாகப் பிரிந்துவிட்ட தென்று கூறலாம். சோமேசுவரன் இறந்தபின் ராமநாதன் கண்ணனூரை மீட்டு, சுந்தரபாண்டியனுடைய தாக்குதலைச் சமாளித்தான். சுந்தரன் 1268-ல் இறந்தபின் இரண்டாம் மாறவர்ம குலசேகரன் பட்டத்துக்கு வந்தான். அவனும் ஒரு பெரிய அரசன்தான்.

இந்தக் காலத்தில் பாண்டி நாட்டின் ஆட்சியதிகாரத்தை அரச குடும்பத்தைச் சேர்ந்த பல அரசகுமாரர்கள் தங்களுக்குள் பிரித்துக்கொண்டு, தங்களில் ஒருவன் முதன்மை நிலையை வகிப் பதற்கு இசைவு தந்து, நாட்டின் ஆட்சி நல்ல முறையில் நடப்ப தற்குத் துணைபுரிந்தார்கள். இத்தகைய ஆட்சிமுறை, பாண்டிய நாட்டில் நெடுங்காலமாக வழக்கிலிருந்த ஒன்று என்று தோன்று கின்றது. முதலாம் குலோத்துங்கனே பாண்டிய அரசகுமாரர் ஐவரை ஒருங்கே தோல்வியுறச் செய்தான் என்று நாம் அறிகிறோம்.

குலசேகரன் ராமநாதனோடு போர் தொடுத்தான். ராமநாதன் மூன்றும் ராஜேந்திர சோழனோடு நெருக்கமான நட்புறவு கொண்டிருந்தான். அவர்கள் இருவரையும், 1279-ல், குலசேகரன் ஒருங்கே வென்றான். அதன்பின் மூன்றும் ராஜேந்திரனையும் சோழர்களையும் பற்றிய எந்தச் செய்தியும் நமக்குத் தெரிய வில்லை. குலசேகரனுடைய ஆட்சி எவ்விதத் தடையுமின்றிச் சோழ நாட்டிலும் ஹொய்சள ராமநாதன் வசத்திலிருந்த தமிழ்

மாவட்டங்களிலும் நிலைபெற்றது. அவன் திருவிதாங்கூரிலும் போர் செய்தான். அங்கு நடந்த உள்ளூர்க் கலகம் ஒன்றை அடக்குவதற்காக அவன் அங்கே சென்றிருக்கக்கூடும். அதன் பின், இலங்கையில் நேர்ந்த ஒரு பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு, குலசேகரன் தன்னுடைய படையொன்றைத் தன்னுடைய அமைச்சன் ஆரியசக்கரவத்தி என்பவன் தலைமையில் அங்கே அனுப்பினான். இலங்கைக்குச் சென்ற ஆரிய சக்கரவர்த்தி 'அந்த நாட்டை எல்லாத் திசைகளிலும் சூறையாடி', சுபகிரிக் கோட்டைக்குள் (யாபஹூ) நுழைந்து, 'பக்திக்குரிய புத்தபிரான் பல்லையும் அங்கிருந்த ஏராளமான செல்வத்தையும்' பாண்டி நாட்டுக்குக் கொண்டுபோனான். இந்த நிகழ்ச்சி சிங்கள மன்னன் முதலாம் புவனைக்கபாகுவினுடைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் நடந்தது. அப்போது முதல், சுமார் இருப தாண்டுக் காலம், சிங்களம் பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாய் இருந்தது. பின்னர், 1303ஆம் ஆண்டில், சிங்கள அரியணையேறிய மூன்றும் பராக்கிரமபாகு அமைதியான முறைகளைக் கடைப்பிடித்தான். அவன் பாண்டிய அரசவைக்கு நேரில் சென்று, குலசேகரனிடம் பேசிப் புத்தபிரானுடைய பல்லைப் பெற்றுக் கொண்டு, இலங்கைக்குத் திரும்பினான். குலசேகரன் இறந்தபின் ஏற்பட்ட உள்நாட்டுப் போர், முஸ்லிம் படையெடுப்பு ஆகியவற்றுக்குப் பின்னர்த்தான் இலங்கை மீண்டும் தன்னுரிமை பெற்ற நாடாயிற்று (1308–1309). குலசேகரனுடைய ஆட்சியின் இறுதி யாண்டுகளில் அவனுடைய மக்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டதால் அவன் மனக்கசப்படைந்தான். தனக்கு மிகவும் பிடித்தமான காமக்கிழத்தி ஒருத்திக்குப் பிறந்த வீரபாண்டியன் தனக்குப்பின் பட்டத்துக்கு வரவேண்டுமென்று அவன் விரும்பினான். அவன் இளையவன். எனவே, குலசேகரன் இறந்தபின் மூத்த மகனான சுந்தரபாண்டியன் போர் தொடங்கினான். அந்த போருக்குச் சுந்தரனே காரணம் என்று சிலர் கூறுகின்றனர். போரில் வீரபாண்டியன் வென்றான். அதனால் சுந்தரன் தென்னாட்டின்மீது படையெடுத்துவந்த மாலிக்கபூரின் உதவியை நாடினான் (1310).

தன்னுடைய பொறுப்பிலிருந்த தமிழ் மாவட்டங்களை இழந்தபின் ராமநாதன் தன்னுடைய தமையன் மூன்றும் நரசிம்மனோடு உள்நாட்டுப் போரைத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் நரசிம்மனுடைய பகைவர்களாகிய தேவகிரி யாதவர்களும் வாரங்கல் காகதீயர்களும் அவனை நெருக்கிக் கொண்டிருந்தார்கள். அதனால் ராமநாதன் நரசிம்மனுடைய ஆட்சியிலிருந்த பெங்களூர், கோலார், தும்கூர் ஆகிய சில இடங்களைப்

பிடித்துக்கொள்வது எளிதாயிற்று. குந்தானி என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு ராமநாதன் அந்தப் பகுதியில் தன்னுடைய ஆட்சியைத் தொடங்கினான். மூன்றும் நரசிம்மன் 1292-ல் இறந்தான். அதன்பின் அவன் மகன் மூன்றும் வல்லாளன் அரசனானான். அவன் பட்டத்துக்கு வருவதை ராமநாதன் எதிர்க்கவில்லை. எனினும், மூன்றாண்டுக்குப்பின் தான் சாகும் வரையில் ராமநாதன் வல்லாளனைப் பகைத்துக் கொண்டுதான் இருந்தான். அதுபோலவே, அவனுடைய மகன் விசுவநாதனும் வல்லாளனிடம் பகைமை பாராட்டிக் கொண்டேயிருந்தான். இறுதியில் அவனும் மறைந்தான். எனவே, வல்லாளன் மீண்டும் ஐக்கியமடைந்த ஹொய்சள ராஜ்யத்திற்கு அரசனானான். இந்த நிலை 1300-க்கு முன் ஏற்பட்டது. அதன் பின் குலசேகரனுடைய சாவைத் தொடர்ந்து பாண்டி நாட்டில் தோன்றிய உள்நாட்டுப் போரைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கு அரசுரிமை பாராட்டிய இருவருள் ஒருவருக்குத் துணை செய்வதன்மூலம் தன்னுடைய வலிமையைப் பெருக்கி, முன்னர் ஹொய்சள ஆட்சியிலிருந்த தமிழ் மாவட்டங்களை மீண்டும் கைப்பற்றுவதற்கு வல்லாளன் முயன்றான். ஆனால், அவன் தென்னாட்டின் மீது தன் கவனத்தைச் செலுத்தியிருந்த சமயத்தில் வடக்கிலிருந்து மாலிக்கபூர் மூலம் அவனுக்கே ஆபத்து வந்தது.

இப்போது நாம் சேரலத்தின் வரலாற்றைச் சிறிது பார்ப்போம். பதின்மூன்றும் நூற்றாண்டில் வேணாட்டில் ஆட்சி செய்த அரசர்கள் சிலர் அளித்த கொடைகளைப் பற்றிய பதிவுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவைதாம் நமக்கு முக்கிய ஆதாரமாயிருக்கின்றன. தாங்கள் யதுகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், சங்ககாலத்து ஆய் அண்டிரனுடைய மரபில் வந்தவர்களென்று கூறிக்கொண்ட எட்டாம் நூற்றாண்டு ஆய் அரசர்களுடைய சந்ததியார்களென்றும் வேணாட்டு மன்னர்கள் கூறிக்கொண்டார்கள். பதின்மூன்றும் நூற்றாண்டின் கடைசிக் கால் பகுதியில் தன்னைக் கேரள நாட்டின் பேரரசன் என்று கூறிக் கொண்ட ரவிவர்ம குலசேகரன் திடீரென்று தமிழகத்தின் பல பகுதிகளின் மீது படையெடுத்தான். அவ்வாறு அவன் தாக்கிய நாடுகளில் பாண்டிய நாடும் தொண்டை நாடும் இருந்தன. அவன் பெரும் படைகள் காஞ்சீபுரத்தைத் தாண்டிப் பூவிருந்தவல்லி வரையிலும் வந்துவிட்டன. அந்தப் படை யெடுப்பால் அவன் பெரும் புகழடைந்தான். அவன் ஆட்சித் துறையில் மிகவும் வல்லவன்; இலக்கியத்துக்குத் தாராளமாய் ஆதரவளித்தவன்.

கொல்லம் அவனுடைய தலைநகராயிருந்தது. அடுத்த அதிகாரத்தில் அவனுடைய வரலாற்றை மீண்டும் பார்ப்போம். அவனுடைய காலத்துக்கு அண்மைக் காலத்தில் இருந்த இன்னொரு சேரல அரசன் வீரராகவ சக்கரவர்த்தி என்பவன். அவனுடைய கோட்டயச் செப்பேடுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இரவிகொற்றன் என்பவனுக்கு 'மணிகிராமம்' என்னும் பட்டத்தையும் வேறு சிறப்புகளையும் வீரராகவ சக்கரவர்த்தி அளித்தான் என்று அந்தச் செப்பேடுகள் கூறுகின்றன. அந்தக் கொடைக்குச் சாட்சியாக இருந்தவர்களில் வேணடு, ஒடநாடு, எரநாடு, வள்ளுவநாடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இருந்தார்கள். அந்த நாடுகளெல்லாம் சேரலத்தின் முக்கியமான பகுதிகள்.

அந்தக் காலத்துக்குப்பின் சேரலத்தின் வரலாறு எப்போதும் போலவே தொடர்ச்சியற்றதாகவும் தெளிவற்றதாகவும் மாறி விடுகிறது. மேலும், போர்ச்சுகீசியர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் உண்டான போட்டிகளிலும் பின்னர் டச்சுக்காரர் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் ஆகியவர்களுக்குள் ஏற்பட்ட போட்டிகளிலும் சேரல வரலாற்று நிகழ்ச்சிகள் கலந்துவிட்டதால் சேரல வரலாறு தன் தனித்துவத்தை இழந்து விடுகிறது. இந்திய வரலாற்று இடைக்காலத்தையும், புதுக் காலத்தையும் இணைக்கின்ற அந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுவதற்கு இந்த நூலில் இடம் இல்லை. எனவே, இனிவரும் அதிகாரங்களில், சேரல வரலாறு, (முக்கியமாக, கொச்சிக்கும் கள்ளிக் கோட்டைக்கும் நடந்த சண்டைகள், ஐரோப்பிய வாணிக நிறுவனங்கள், அவற்றால் நேர்ந்த விளைவுகள் ஆகிய செய்திகள்) இடம் பெறா.

இப்போது தக்காணத்தின் வடபகுதிக்கு நம் கவனத்தைத் திருப்புவோம். யாதவ மன்னன் ஜயதுகிக்குப்பின் அவன் மகன் சிங்கணன் அரசனானான் (1200–47). அவனுடைய ஆட்சியில் யாதவ ராஜ்யம் தன்னுடைய மிகப் பெரிய பரப்பை எய்தியது. அவன் இரண்டு முறை, 1231–32லும் 1237–38லும், குஜராத்தின் மீது படையெடுத்தான். தெற்கில் அவன் முதலில் ஹொய்சள மன்னன் இரண்டாம் வல்லாளனோடு போர் செய்து, கிருஷ்ணா நதிக்கும் மலப்பிரபா நதிக்கும் தெற்கில் கணிசமான ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டான். இரண்டாம் நரசிம்மன் காலத்திலும் அவன் ஹொய்சளரோடு கொண்டிருந்த பகைமையைத் தொடர்ந்தான். அவனை எதிர்த்து நிற்க முடியாத நரசிம்மன் சாகர் தாலுக்காவையும் பெல்லாரி மாவட்டத்தையும் சிங்கண

னுக்குக் கொடுத்துவிட்டான். ஆனால், அவனுக்குப்பின் ஹொய்சள அரசனான சோமேசுவரன் யாதவரைத் தாக்கி, ஹொய்சளர் முன் இழந்த சில பகுதிகளை மீட்டான். அதனால் அவன் வடக்கே பண்டரிபுரம் வரையிலும் சென்று அங்கே, 1236-ல், தன், பாசறையை அமைத்துக் கொண்டான். பண்டரி புரத்து விட்டலன் கோயிலுக்கு அவன் ஒரு கிராமத்தை மானிய மாக வழங்கினான். ஆனால், 1239-ல் சிங்கணனுடைய படைத் தலைவனும் தென் மாகாணத்தின் ஆளுநனும் ஆகிய வீசனன் சோமேசுவரனைத் தோல்வியடையச் செய்து, அவனைத் துரத்திக் கொண்டுபோய் ஹொய்சள ராஜ்யத்தில் புகுந்து, காவிரியாறு வரையில் தன் படையைச் செலுத்தினான். உண்மையில், சோமேசுவரன் யாதவர்களைத் தாக்கியதன் விளைவாகத் தன் முன்னோர் இழந்த நாடுகளைவிட அதிகமான நாடுகளை இழந்தான். ஆனால், வீசனன் அடைந்த வெற்றிகளின் பயனாக யாதவ அரசன் சிங்கணனுடைய பேரரசு மிகவும் விரிவடைந்தது. அது, முன்பு மேற்குச் சாளுக்கியர் ஆதிக்கத்திலிருந்த மையப் பகுதியையும், மேற்குப் பகுதியையும், தென் மேற்குப் பகுதியையும் தன்னுள் கொண்டதாக இருந்தது. சிங்கணன் காகதீய அரசன் கணபதி யோடும் மாளவத்தின் அரசனோடும் போர் செய்தான். ஆனால், அந்தப் போர்கள் முடிவான வெற்றியைத் தரவில்லை.

சங்கதேவர் என்பவர் சிங்கணனுடைய தலைமைச் சோதிடராக இருந்தார். அவருடைய தந்தையார் லட்சுமீதரர் முதலாம் ஜயதுகியின் முதன்மைப் பண்டிதராக இருந்தவர். லட்சுமீதரருடைய தந்தையார் புகழ்பெற்ற வானநூல் வல்லு நரான பாஸ்கராச்சாரியார். சங்கதேவர் தம்முடைய பாட்டனார் எழுதிய 'சித்தாந்த சிரோமணி' என்னும் நூலையும் ஏனைய நூல் களையும் கற்பிப்பதற்காகப் பட்டனவில் ஒரு கல்லூரியை நிறுவினார்.

சிங்கணனுடைய மகன் இரண்டாம் ஜயதுகி தன் தந்தை உயிரோடிருந்தபோதே இறந்து விட்டதால் சிங்கணனுக்குப்பின் அவனுடைய பேரன் கிருஷ்ணன் யாதவ அரசனானான் (1247–60) தென்மேற்கு ஆந்திர தேசத்தில் யாதவருக்குச் சொந்தமான சில பகுதிகளைக் காகதீய மன்னன் கணபதி பிடித்துக் கொண்டான். எனினும், கிருஷ்ணன் பட்டத்திற்கு வந்தபோது யாதவர் ஆட்சியிலிருந்த நாடுகளில் ஏறக்குறைய எல்லாமே அவன் இறந்தபோதும் இருந்தன என்று பொதுவாகக் கூறலாம். அவனுடைய ஆட்சியில் இலக்கிய வளர்ச்சிதான் முக்கியமானதாய் இருந்தது. அவனுடைய அமைச்சனாகவும் படைத் தலைவனாகவும்

இருந்த ஜல்ஹணன் வடமொழிப் பாடல்களின் தொகுப்பு ஒன்றை வெளியிட்டான். அமலானந்தருடைய 'வேதாந்த கல்பதரு' என்னும் நூலும் கிருஷ்ணன் காலத்தைச் சேர்ந்தது தான். கிருஷ்ணன் மதப்பற்று மிகுந்தவன். அவன் பல வேள்வி களைச் செய்தான்.

கிருஷ்ணனுக்குப் பின் அவனுடைய தம்பி மகாதேவன் பட்டத்துக்கு வந்தான். (1260–71). அவன் காகதீய அரசி ருத்திராம்பாளோடு போர்செய்து, அவளுடைய யானைகளையும் விருதுகள் சிலவற்றையும் கைப்பற்றிக்கொண்டான். ஆனால், அவள் பெண்ணாக இருந்ததால் அவளைக் கொல்லாமல் விட்டு விட்டான். அவன் வட கொங்கணத்தின்மீது படையெடுத்து, அங்கு ஆட்சிசெய்த சிலார அரசன் சோமேசுவரனை ஒரு கடற் சண்டையில் வென்று, அவனுடைய நாட்டை யாதவ ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டான். புகழ்பெற்ற ஹேமாத்திரி மகாதேவ னுக்கும் அவனுக்குப் பின்வந்த அரசர்களுக்கும் அமைச்சராக (ஸ்ரீகரணதிபர்) இருந்தார். தாமே பல நூல்களை இயற்றிய ஹேமாத்திரி மற்ற ஆசிரியர்களுக்கும் ஆதரவளித்து இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். அவர் மிகப் பல கோயில் களைக் கட்டினார். ஆதலால், கட்டடக்கலைப் பாணி ஒன்று அவருடைய பெயரோடு சேர்ந்து வழங்கியது.

மகாதேவனுக்குப் பின் அவனுடைய மகன் ஆமனன் அரசனாக முயன்றான். ஆனால், கிருஷ்ணனுடைய மகன் ராமச் சந்திரன் அவனுடன் போரிட்டு, அவனைத் தோல்வியடையச் செய்து தன்னுடைய உரிமையை நிலைநாட்டி, அரியணையேறினான். ராமச்சந்திரன் மாளவ அரசனோடும், ருத்திராம்பாளுக்குப் பின்னர்க் காகதீய அரசனான இரண்டாம் பிரதாப ருத்திர னோடும் போர்செய்தான். ஆனால், அந்தப் போர்களில் எந்தக் கட்சிக்கும் வெற்றி ஏற்பட்டதாகச் சொல்ல இயலாது. சுமார் 1276–77-ல் ராமச்சந்திரனுடைய புகழ்பெற்ற படைத் தலைவனான சாளுவ திக்கமன் ஹொய்சள நாட்டின்மீது படையெடுத்து, அதன் தலைநகரான துவாரசமுத்திரத்தை முற்றுகையிட்டான். அந்தச் சண்டையில் திக்கமன் ஏராளமான பொருள்களைக் கைப் பற்றிச் சென்றான். ஆனால் ஹொய்சள நாட்டை அதனுடைய அரசனான மூன்றாம் நரசிம்மனிடமே திருப்பிக் கொடுத்து விட்டான். நரசிம்ம வர்மனுடைய தம்பி , ராமநாதனுடைய நாட்டின்மீது யாதவர் படையெடுத்தனர். ஆனால் அந்தப் போரில் முடிவான வெற்றி ஏற்படவில்லை. யாதவர்க்கும் ஹொய் சளர்க்கும் இருந்த பகைமை ஹொய்சள அரசன் மூன்றாம்

வல்லாளனுடைய ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்தது. அவன் வடதிசையில் தன்னுடைய ராஜ்யத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் யாதவ ராஜ்யத்தைத்தாக்கினான். அதற்குள் முஸ்லிம்கள் தக்காணத்தின்மீது படையெடுத்ததால் யாதவ அரசன் ராமச்சந்திரன் தன் போர் நடவடிக்கைகளை மிகவும் குறைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. மராட்டிய ஞானியான ஞானேசுவரர் அவனுடைய காலத்தில் இருந்தவர். கோதாவரிக் கரையில் வாழ்ந்த அவர் அந்தக் காலத்தில்தான் கீதைக்குத் தாம் கண்ட விளக்க உரையை எழுதி முடித்தார்.

இப்போது நாம் காகதீய வரலாற்றைச் சிறிது கவனிப்போம். கணபதியே அந்த வமிசத்து அரசர்களுள் மிகவும் புகழ் பெற்றவன். அவனைத்தான் ஜயதுகி சிறையிலிருந்து விடுவித்துக் காகதீய அரியணையேற்றினான். அவன் 60 ஆண்டுக்குமேல் (1199–1262) ஆட்சிசெய்து, நிர்வாகத்தில் வல்லவன் என்று பெயர் பெற்றான். ஆந்திர நாட்டில், 1186-க்குப்பின் வெலநாட்டுச் சோடர்களின் ஆதிக்கம் அழிந்தது. அதன்பின் அந்த நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த நாட்டின் வளமிக்க நிலத்தையும், அங்குக் கிடைத்த இரும்பு வைரம் போன்ற பொருள்களையும், அதனுடைய துறைமுகங்களையும் கைப்பற்றிக்கொள்ள விரும்பிய கணபதி அதன்மீது படையெடுத்தான். 1209-க்கும் 1214-க்கும் இடையில் நடந்த அந்தப் படையெடுப்பு அவனுக்கு முழு வெற்றியைத் தந்தது. நெல்லூரில் ஆட்சி செய்த தெலுங்குச் சோடர்கள் கணபதியின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் காஞ்சியைக் கைப்பற்றியபின் மூன்றும் குலோத்துங்கனுடன் செய்த போர்களினால் கணபதிக்கும் சோழர்களுக்கும் பகைமை உண்டாயிற்று என்பதை நாம் முன்பே கண்டோம். கலிங்கத்தை வடக்கே ஆட்சிசெய்த முஸ்லீம்களும் தும்மனத்தில் ஆட்சிசெய்த சேதி வமிச அரசர்களும் மிகவும் நெருக்கிக்கொண்டிருந்த சமயத்தில், கணபதி அதன்மீது படையெடுத்தான். அப்போது அங்கே மூன்றும் அங்கம பீமன் (1211–1238) ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் 1231-ல் யாதவர்களோடு மீண்டும் சண்டை செய்தான். அந்தச் சண்டையிலும் எந்தக் கட்சிக்கும் வெற்றி தோல்வி ஏற்பட்டதாகக் கூற இயலாது ஆனால், கடப்பையிலும் கர்நூலிலும் ஆட்சிசெய்த காயஸ்த வமிசத்தைச் சேர்ந்த கங்கைய சாஹினி என்பவனோடும் அவனுடன் பிறந்தவன் மக்களாகிய திரிபுராந்தகன், அம்பதேவன் ஆகியவர்களோடும் அவன் செய்த போர் அவனுக்கு முழு வெற்றியைத் தந்தது. அதன்பின், மிக விரைவில், அவன் தன்மகள் ருத்திராம்பாள்

தனக்குப்பின் அரியணையேறும் உரிமையுடையவள் என்று விளம்பரப்படுத்தினான். அவளுக்கு ருத்திரதேவ மகாராஜன் என்னும் பெயரைச் சூட்டி நிர்வாகத்தில் பங்குபெறும் வாய்ப்பையும் அளித்தான். மோட்டுப்பல்லியில் வாணிகஞ் செய்துகொண்டிருந்த வெளிநாட்டு வாணிகர்களுக்குப் பாதுகாப்பளிப்பதாக வாக்களித்து அவர்களுக்கு ஒரு பட்டயத்தையும் வழங்கினான். ஜடாவர்ம சுந்தரபாண்டியன் தெலுகுச் சோடர்களோடு செய்த போர்களையும் அவற்றின் விளைவாக அவர்களுடைய பேரரசன் கணபதிக்கும் சுந்தரனுக்கும் ஏற்பட்ட பகைமையையும் நாம் முன்னரே கூறினோம். ஜடாவர்மன் திரும்பிப் போனபின் திக்கண என்னும் புலவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சோட திக்கனுடைய மகன் மனுமசித்தியை எதிர்த்துக் கலகஞ் செய்த உள்ளூர்ப் பகைவர்களிடமிருந்து அவனைக் காத்து, அவனை நெல்லூர் அரியணையில் கணபதி உறுதியாக அமர்த்தினான். போர்த்தொழிலில் மிகவும் விருப்பமுடைய காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனும் கணபதியின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான்.

கணபதிக்குப்பின் அவனுடைய மகள் ருத்திராம்பாள் பட்டத்துக்கு வந்தாள். அவளுடைய ஆட்சியின் தொடக்கத்தில் கோப்பெருஞ்சிங்கனும் ஏனைய சிற்றரசர்களும் செய்த கலகங்களால் அவளுக்குத் துன்பம் நேர்ந்தது. ஆனால் அவையெல்லாவற்றையும் ருத்திராம்பாளிடம் உண்மையாயிருந்த காயஸ்தத் தலைவன் அம்பதேவன் அடக்கினான். அதன்பின் யாதவ அரசன் மகாதேவன் காகதிய நாட்டின்மீது படையெடுத்ததையும் அதன் விளைவுகளையும் பற்றி நாம் முன்பே கூறியிருக்கிறோம். மகாதேவன் இறந்த பிறகும் யாதவர்கள் காகதீயர்மீது கொண்டிருந்த பகைமையைத் தொடர்ந்தார்கள். அதனால் ஏற்பட்ட மோதல்களில் ருத்திராம்பாளின் பேரனை பிரதாபருத்திரதேவன் தன் போர்த்திறனைக் காட்டிப் புகழ் பெற்றான். அவனுக்குச் சுமார் 1280-ல் 'யுவராஜப்' பட்டம் சூட்டப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அம்பதேவன் கலகம் செய்தான். அவனுக்கு ஹொய்சளரும் யாதவரும் துணை புரிந்தனர். ஆனால் இளவரசன் பிரதாபருத்திரன் அந்தக் கலகத்தை 1291ஆம் ஆண்டிற்குள் அடக்கினான்.

1295-ல் ருத்திராம்பாள் இறந்தபின் இளவரசன் இரண்டாம் பிரதாபருத்திரதேவன் பட்டத்திற்கு வந்தான். அவன் 1326 வரையில் ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவனுடைய தளபதிகளுள் ஒருவன் குந்தளநாட்டின்

மீது படையெடுத்துப் பல இடங்களைக் கைப்பற்றினன். அவற்றுள் ஆத்வானி (ஆதோனி), ராயச்சூர் ஆகிய கோட்டைகள் முக்கியமானவை. அவற்றிலிருந்த யாதவப் படைகளைத் துரத்தி விட்டு, அந்தத் தளபதி குந்தள நாட்டைக் காகதீய ஆட்சிக்குள் சேர்த்தான். பிரதாபருத்திரன் நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைத்தான். தன்னுடைய ராஜ்யத்தை அவன் 77 பகுதி களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு 'நாயக்கன்' பொறுப்பில் விட்டான்; அந்த நாயக்கர் அனைவரையுமே பத்ம நாயக்க வகுப்பிலிருந்து தெரிந்தெடுத்தான்; நாயக்கர்களுக்கு நிர்வாகத்தில் உதவிசெய்த அரசு அலுவலர்களில், தள்ள வேண்டியவர்களைத் தள்ளிவிட்டு அவர்களுக்குப் பதிலாகத் திறமையும் நேர்மையும் உடையவர்களை நியமித்தான். இந்தப் புதிய நிர்வாகமுறை நல்ல பயனைத் தந்தது. பிற்காலத்தில் முஸ்லிம்களை எதிர்ப்பதில் பெரும் பங்கு பெற்ற காப்பைய நாயக் கனைப் போன்ற புகழ்பெற்ற நாயக்கர்கள் தோன்றுவதற்குப் பிரதாபருத்திரனுடைய நிர்வாகச் சீர்திருத்தம் உதவியது. இதே நிர்வாக முறையைப் பிற்காலத்தில் விஜயநகர அரசர்கள் தங்கள் தேவைக்கு ஏற்றவாறு மாற்றியமைத்துக்கொண்டார்கள்.

பதின்மூன்றும் நூற்றுண்டு முழுவதும் அதற்குப் பின்னரும் கங்கர்கள் தொடர்ந்து கலிங்கத்தில் ஆட்சிசெய்து வந்தார்கள். அனந்தவர்ம சோடகங்கனுடைய பேரனை மூன்றும் ராஜராஜன் காலத்தில்தான் (1198–1211) கலிங்கத்தின்மீது முதல் முஸ்லிம் படையெடுப்பு நிகழ்ந்தது. 1205-ல் ஜாஜ நகர்மீது இக்தியார்—உத்-தீன் முகமது-இ-பக்தியார் கில்ஜி அனுப்பிய முகமதியப் படைதோல்வியுற்றுத் திரும்பியது ராஜராஜனுக்குப்பின் பட்டத் துக்குவந்த மூன்றும் அனியக பீமன்காலத்தில் 1211க்கும் 1224க்கும் இடையில், வங்காள முஸ்லிம்கள் ஒரிசாவைத் தாக்குவதற்குச் செய்த முயற்சியும் தோல்வியடைந்தது. அனியக பீமன் காகதீய கணபதியோடும் போர்செய்தான். அவனுடைய படைகள் காஞ்சீபுரம் வரையிலும் முன்னேறின. அவை சீரங்கம் வரை யிலும் சென்றிருக்கக்கூடும் என்பது தோன்றுகிறது. அவனுக் குப்பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் முதலாம் நரசிம்மன் (1238–1264) வங்காள முஸ்லிம்கள்மீது மூன்று முறை படையெடுத்தான். மூன்று முறையும் அவனே வென்றுன் என்று சொல்ல இயலாது. 1306 முதல் 1328 வரையில் ஆட்சிசெய்த இரண்டாம் பானுதேவனுல் உலூக்கான் தலைமையில் வந்த துக்ளக் படையெடுப்பை எதிர்த்து நிற்க இயலவில்லை. தோல்வி யடைந்த பானுதேவன் பல யானைகளை உலூக்கனுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. மூன்றும் பானுதேவன் ஆட்சிக் காலத்தில்

(1352–1378) பிரோஸ் துக்ளக் ஒரிசாவின்மீது படையெடுத்தான். தோல்வியடைந்த பானுதேவன் பிரோஸ் துக்ளக்கின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு சமாதானம் செய்துகொண்டான். நான்காம் நரசிம்மன்தான் (1378–1414) கங்கவமிசத்துக் கடைசிப் பெரிய அரசன், அவன் காலத்தில் மாளவத்தில் ஆட்சிசெய்த முஸ்லிம் மன்னன் ஒரிசாவின்மீது படையெடுத்தான். ஆனால் அவன் அதில் எந்தவிதமான பயனையும் அடைந்ததாகத் தெரியவில்லை. மிக நீண்டகாலம் ஆட்சி செய்துவந்த கங்கவம்சம் நான்காம் பானுதேவனோடு (1414–1432) முடிவடைந்தது. அவன் பிள்ளையில்லாமல் இறந்தபோது அவனுடைய சேனைத் தலைவன் கபிலேசுவர கஜபதி கலிங்க நாட்டின் அரியணையேறினான்.

இப்போது மார்க்கபோலோ தென்னிந்தியாவைப் பற்றிக் கூறும் செய்திகளைப் பார்ப்போம். அவர் 'இடைக்காலப் பயணிகளில் இளவரசர்' என்று புகழ்பெற்றவர். அவர் தென்னிந்தியாவில் பல மாதம் தங்கிப் பல செய்திகளைத் தெரிந்துகொண்டார். வெளிநாட்டார் தென்னிந்தியாவை மா'பார் என்று வழங்கினார்கள். மா'பார் என்பது அரபு மொழிச் சொல். அது தோணித்துறை அல்லது படகுப் பயணப்பாதை என்று பொருள்படும். அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளின் வணிகர்களும் பயணிகளும் அடிக்கடி வந்திறங்கிய மேற்கடற்கரைப் பகுதிக்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. அந்தக் காலத்துக் காலவரிசைச் செய்திக் கோவை ஒன்றை எழுதிய முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் 'மா'பார், குலம் (கொல்லம்) என்னும் இடத்திலிருந்து நிலவர் (நெல்லூர்) என்னும் இடம் வரையிலும் நீண்டிருந்தது' என்று கூறுகிறார். பாண்டி நாட்டின் முக்கியமான துறைமுகமும் வாணிக நிலையமும் ஆகிய காயலைப் பற்றி மார்க்கபோலோ பின்வருமாறு கூறுகிறார்: 'காயல்பட்டினத்தின் உரிமையாளனை அரசனுக்கு ஏராளமான செல்வமிருக்கிறது. அவன் விலையுயர்ந்த சில அணிமணிகளைப் பூண்டிருக்கிறான்; மிக ஆடம்பரமாக வாழ்கிறான்; தன்னுடைய நாட்டை நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சி செய்கிறான்; தன்னுடைய நாடு தேடி வருகிற வணிகர்களுக்கும் வெளிநாட்டாருக்கும் அன்பான ஆதரவும் சலுகையும் அளிக்கிறான். அதனால் அவர்கள் காயல்பட்டினத்துக்கு வருவதை மிகவும் விரும்புகிறார்கள்.' அவர் மேலும் கூறுவதாவது: 'மேற்கில் ஹார்மாஸ், கிஸ், ஏடன், அரேபியா முதலிய நாடுகளிலிருந்து வருகிற கப்பல்கள் அனைத்தும் இந்தத் துறைமுகத்திற்குத்தான் வருகின்றன. அவற்றில் குதிரைகளும் வேறுபல வாணிகப் பொருள்களும் நிறைய வருகின்றன.

அதனால், சுற்றிலுமுள்ள ஊர்களிலிருந்து பெருந்திரளான மக்கள் காயலுக்கு வருகிறார்கள். எனவே, அங்குப் பெருவாணிகம் நடைபெறுகிறது.' நாட்டினுடைய செல்வத்தில் பெரும்பகுதி குதிரை வாங்குவதில் விரயமாயிற்று என்று மார்க்கபோலோ கூறுகிறார். இந்தச் செய்தியை அந்தக் காலத்திலேயே இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம் ஆசிரியர்கள் உறுதி செய்கிறார்கள். தென்னிந்தியாவின் தட்ப வெப்பநிலை குதிரைகளுக்கு ஏற்றதாக இல்லை என்றும், தென்னிந்தியர்களுக்குக் குதிரையைப் பராமரிக்கும் வேலையில் போதுமான பயிற்சி இல்லை என்றும், அதனால் ஆண்டுதோறும் புதிய குதிரைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதாய் இருந்ததென்றும் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். மிகப் பழங்காலத்திலிருந்தே பாண்டி நாடு முத்துச் சலாபத்திற்குப் பேர்போனது. அதைப் பற்றி மார்க்கபோலோ எழுதி வைத்துள்ள விவரங்கள் சரியாக இருக்கின்றன. மேலும், முத்துச் சலாபத்தினால் பாண்டிய மன்னனுக்கு நல்ல வருவாய் கிடைத்ததென்றும் அவர் கூறுகிறார். 'அரை "சாகியோ"வுக்கு அதிகமான எடையுள்ள முத்தைத் திருட்டுத்தனமாய்க் கொண்டுபோனாலொழிய, யாரும் அதனைப் பாண்டி நாட்டுக்கு வெளியில் எடுத்துச் செல்ல இயலாது' என்று அவர் கூறுகிறார். அரசனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான மெய்காவலரைப் பற்றி மார்க்கோபோலோ மிக விவரமாக எழுதுகிறார். அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து மன்னனைக் காப்பதாக ஆணையிட்டு உறுதி கூறியிருந்தவர்கள். பொதுமக்கள் மிகக் குறைந்த ஆடைகளை அணிந்திருந்ததைக் கண்டு வியந்த மார்க்கபோலோ அவர்களுடைய ஆடையின்மையைச் சிறிது மிகைப்படுத்திக் கூறுகிறார். மேலும், தையல்காரர்களே அங்கு இல்லை என்றும் அவர் கூறுகிறார். அது தவறான செய்தியென்பதை மார்க்கபோலோ தென்னிந்தியாவுக்கு வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே செதுக்கப் பெற்ற பொறிப்புகள் தையல்காரர்களைக் குறிப்பிடுவதன் வாயிலாக நாம் அறிகிறோம். உடன் கட்டையேறும் பழக்கத்தையும், மரண தண்டனையடைந்த குற்றவாளிகள் தங்களை ஏதாவதொரு தெய்வத்திற்குப் பலியிட்டுக் கொள்வதற்கு இசைவு பெற்றதையும் மார்க்கபோலோ குறிப்பிடுகிறார். பின்வரும் அவருடைய கூற்றுகள் விசித்திரக் கவர்ச்சியுடையனவாய் இருக்கின்றன. 'இந்த நாட்டு மக்கள் தங்கள் வீடு முழுவதும் சாணியைப் போட்டு தேய்க்கிறார்கள். உயர்ந்தவர் தாழ்ந்தவர், அரசர் பிரபுக்கள் உட்பட இந்த நாட்டு மக்கள் அனைவருமே தரையின் மீதுதான் அமர்கிறார்கள். ஆண் பெண் அனைவரும் ஒரு நாளைக்கு இரு முறை தங்கள் உடலை நீரால் கழுவுகிறார்கள், அவ்வாறு செய்யாத

வர்களைப்பற்றி, நாம் பேட்டரின்களைப் பற்றி நினைப்பது போலவே இந்த நாட்டு மக்களும் நினைக்கிறார்கள். உண்பதற்கு அவர்கள் தங்கள் வலக்கையையே பயன்படுத்துகிறார்கள். நீர் பருகும்போது அவர்கள் பாத்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள். சப்பிக் குடிக்காமல் அவர்கள் பாத்திரங்களைத் தூக்கி வாயில் நீரை ஊற்றிக் கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர்க்குச் சொந்தமான பாத்திரத்தில் நீர் பருகுகின்றனர். ஒருவர் குடிக்கும் பாத்திரத்தை இன்னொருவர் பயன்படுத்துவதில்லை. குற்ற வாளிகள் பெற்ற தண்டனையை நிறைவேற்றுவதில் அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள். அது போலவே, மதுவருந் தாமலிருப்பதிலும் அவர்கள் கண்டிப்பாக இருக்கிறார்கள். உண்மையில், அவர்கள் குடிகாரர்களையும் மாலுமிகளையும் பிணையாளாக ஏற்றுக் கொள்வதில்லை. அதனை ஒரு விதியாகவே செய்திருக்கிறார்கள். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத வனைச் சுற்றிலும் ஒரு கோடு போட்டு அதனைத் திருப்பித் தரும் வரையிலும் அல்லது அதற்கேற்ற பிணையம் காட்டும் வரையிலும் அவன் அதனைத் தாண்டக் கூடாது என்று கடன் கொடுத்தவன் வற்புறுத்தும் பழக்கத்தை மார்க்கபோலோ குறிப்பிடுகிறார். உறுப்பமைதியியலிலும் (சாமுத்திரிகம்) சோதிடத்திலும், மாந்திரிகத்திலும் வல்லவர் இருந்தனர் என்றும் அவர்களிடம் ஆலோசனை பெறுவதற்கு மக்கள் மிகுந்த ஆவலுடையவர்களாய் இருந்தார்கள் என்றும் அவர் கூறுகிறார். கோயில்களைக் கண்ட மார்க்கபோலோ அவற்றைத் திருமடங்களென்றும், அவற்றின் திருப்பணிக்காகப் பல இளம் பெண்கள் ஒதுக்கி வைக்கப் பட்டார்கள் என்றும் அவர் கூறுகிறார். (தேவதாசிகளுக்குப் பொட்டுக் கட்டும் வழக்கத்தை இது குறிக்கிறது.) பச்சைக் கருப் பூரம் முதலிய நறுமணப் பொருள்களையும் சுண்ணும்பையும் கலந்து வெற்றிலை போட்டுக் கொள்ளும் பழக்கம் மிகப் பரவலாக இருந்தது என்றும் அவர் கூறுகிறார். சிலந்தியும் ஏனைய பூச்சி களும் கடிப்பதிலிருந்து தப்புவதற்காகப் பெரிய மனிதர்களும் பிரபுக்களும் கூரையிலிருந்து தொங்கிய பிரப்பம் படுக்கைகளில் உறங்கினார்கள் என்றும் பொது மக்கள் தெருவில் படுத்துறங்கி னார்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

சிங்களத்தில் கிடைத்த மணிக் கற்களையும், ஆதாம் சிகரத்தைப் பற்றித் தாம் கேள்விப்பட்ட கட்டுக் கதைகளையும் மார்க்கபோலோ குறிப்பிடுகிறார். ஆதாமினுடைய தலைமயிரிலும் பற்களிலும் சிலவற்றைப் பெறுவதற்காக குப்ளாய்கான் 1284-ல் சிங்களத்திற்கு ஒரு தூதுகுழுவை அனுப்பிய செய்தியை மார்க்கபோலோ எழுதி வைத்திருக்கிறார். கிறிஸ்துவத் திருத்

தூதர் புனித தாமசைப் பற்றித் தாம் கேள்விப்பட்ட கதைகளையும் திருமயிலைக்கருகில் அவர் மரணமடைந்ததைப் பற்றிய செய்திகளையும் அவர் விவரமாக எழுதி வைத்திருக்கிறார். ஆந்திர நாட்டில் ருத்திராம்பாள் என்ற பெண்மணி அரசு புரிந்தாளென்றும் அவள் சமயத்திற்கு ஏற்றபடி நடக்கும் புத்திக்கூர்மை உடையவள் என்றும் கூறுவதோடு, அவளுடைய நாட்டில் வைரத்தைத் தோண்டியெடுப்பதற்காகக் கையாளப்பட்ட பலவேறு முறைகளையும் அவர் விவரிக்கிறார். மேலும் அவர் 'இந்த நாட்டில் மிக உயர்ந்ததும் மிக மெல்லியதும் ஆகிய துணி நெய்யப்படுகிறது. அதன் விலையும் மிக உயர்ந்ததாக இருக்கிறது. உண்மையில் அந்தத் துணி சிலந்தி வலையைப் போல தோன்றுகிறது. அந்தத் துணியை உடுத்துவதற்கு விரும்பாத அரசனோ அரசியோ இந்த உலகத்திலேயே இல்லை. இந் நாட்டு மக்கள் வளர்க்கும் ஆடுகள் உலகத்திலேயே மிகப் பெரியவை. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் இங்கு ஏராளமாக இருக்கின்றன' என்றும் குறிப்பிடுகிறார்.

கொல்லத்தில் யூதர்களும் கிறிஸ்துவர்களும் வாழ்ந்தார்களென்றும் கொல்லத்தின் அரசன் யாருக்கும் கப்பங் கட்டவில்லை என்றும் மார்க்கபோலோ கூறுகிறார். மிளகும் அவுரியும் அங்கு ஏராளமாக விளைந்தன என்றும் அவற்றை வாங்குவதற்காக வணிகர்கள் சீனா, அரேபியா, லெவான்டு ஆகிய நாடுகளிலிருந்து வாடிக்கையாக வந்தார்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவதாவது: 'அவர்களிடம் மக்காச் சோளம் இல்லை; ஆனால், அரிசி இருக்கிறது. அவர்கள் குடிக்கும் மதுவை அவர்கள் ஒற்றைத் தடிமரத்து (தென்னை, பனை) சர்க்கரையிலிருந்து செய்து கொள்கிறார்கள். ஆஹா, அது மிக நல்ல மது! மிக விரைவில் போதையூட்டுகிறது! மக்களுக்குத் தேவையான வேறு பொருள்கள் எல்லாம் அவர்களிடம் ஏராளமாக இருக்கின்றன. அவற்றின் விலையும் மலிவாக இருக்கிறது.'

'எலி' ராஜ்யத்தில் மிளகும் இஞ்சியும் ஏனைய நறுமணப் பொருள்களும் ஏராளமாகக் கிடைத்தன என்று மார்க்கபோலோ கூறுகிறார். ஆனால், இன்னலுக்குள்ளான எந்தக் கப்பலாவது கரைக்கு வந்தால் அதனை உள்ளூர் மக்கள் பிடித்து, அதிலிருந்த சரக்குகள் எல்லாவற்றையும் கொள்ளையடித்து விடுவார்கள். மலபார்க்கரை முழுவதிலும் கடற்கொள்ளைக்காரர் பலர் இருந்தனர். 'கிழக்கேயிருந்து வருகின்ற கப்பல்கள் தாமிரத்தை நிறைவு செய்யும் பளுவாக ஏற்றி வருகின்றன. அவை பட்டாடைகளையும் செருப்பையும், பொன்னையும், வெள்ளியையும், கிராம்பு

இலாமிச்சை முதலிய நறுமணப் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு வருகின்றன. அவற்றிற்கு இங்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அவற்றிற்குப் பதிலாக இந்த நாட்டுப் பொருள்களை வாங்கிக் கொண்டு அந்தக் கப்பல்கள் திரும்புகின்றன.'

## BIBLIOGRAPHY

R. G. Bhandarkar: 'Early History of the Dekhan' (Bombay Gazetteer, I, ii, 1894)

H. W. Codrington: 'Short History of Ceylon' (London 1929)

J. D. M. Derrett: 'The Hoysalas' (Oxford University Prees, 1957)

J. F. Fleet: 'Dynasties of the Kanarese Districts' (Bombay Gazetteer, I, ii, 1896)

K. A. N. Sastri: 'Colas, Vols. II' (Madras, 1936)

—: 'Foreign Notices of South India' (Madras, 1939)

—: 'The Pandyan Kingdon' (London, 1929)

### ஹொய்சளர் (1022-1342)

1. நிருபகாமா (1022-1047)
2. வினயாதித்தியன் (1047-1098)
3. எறயங்கன் (1063-1100)

4. முதலாம் வல்லாளன் (1100–1110) | 5. விஷ்ணு வர்த்தனன (1110-1152) | உதயாதித்தியன்

6. முதலாம் நரசிம்மன் (1152–1173)
7. இரண்டாம் வல்லாளன் (1163–1220)
8. இரண்டாம் நரசிம்மன் (1220–1238)
9. சோமேசுவரன் (1233–1267)

10. மூன்றும் நரசிம்மன் (1254-1292) | ராமநாதன் (1254–1295)

11. மூன்றும் வல்லாளன் (1291–1342) | விசுவநாதன் (1295–1300)

12. நான்காம் வல்லாளன்

## காகதீயர்

1. முதலாம் பெட்டன் (1000–1030)
2. முதலாம் புரோலன் (1030–1075)
3. திரிபுவன மல்ல இரண்டாம் பெட்டன் (1075–1110)
4. இரண்டாம் புரோலன் (1110–1158)
5. முதலாம் பிரதாப ருத்திரன் (1158–1196)
6. மகாதேவன் (1196–1199)
7. கணபதி (1199–1262)

மைலாம்பாள்

8. ருத்திராம்பாள் (1262–1296)

கணபாம்பாள்

மும்மடாம்பாள் + மகாதேவன்

9. இரண்டாம் பிரதாபருத்திரன் (1295–1326)

# 11. பாமினியரசும் விஜயநகரின் தோற்றமும்

தக்காணத்தின்மீது முதல் கில்ஜி படையெடுப்பும் தேவகிரி தோல்வியும்—பின்னைய படையெடுப்புகள்—மாலிக் கபூர்—ஹொய்சள பாண்டிய நாடுகளின்மீது படையெடுத்தல்—இந்துக்களின் எதிர்ப்பு—கம்பிலி ராஜ்யம்—பாண்டிய உள்நாட்டுப் போரும் துக்ளக் படையெடுப்பும்—யாதவ காகதிய ராஜ்யங்களின் அழிவு—பஹாவுதீன் கர்ஷஸ்ப்பின் கலகமும் அதன் விளைவுகளும்—கம்பிலியின் வீழ்ச்சி—விடுதலை இயக்கம்—காப்பைய நாயக்கனும் மூன்றும் வல்லாளனும்—ஹரிஹரனும், புக்கனும்—வித்யாரண்யர்—விஜயநகரத் தோற்றம்—மதுரைச் சுல்தானியமும் மூன்றும் வல்லாளனும்—1346 வரையில் விஜயநகரின் வளர்ச்சி.

பாமினி ராஜ்யம் தோன்றுதல்—முதலாம் அலாவுதீன் பஹமன்ஷா—முதலாம் முகமது—முஜாஹிது—தாவூது—இரண்டாம் முகமது—கியாசுதீன்—பிரோஸ்—இரண்டாம் அலாவுதீன் அகமது—ஹுமாயூன்—நிஜாம்ஷா—மூன்றும் முகமது—மாமூது—பாமினி ராஜ்யத்தின் வீழ்ச்சி—மாமூதின் நான்கு மக்களுடைய ஆட்சி.

பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் டில்லி சுல்தானியம் நிறுவப்பட்டது. அதிலிருந்து ஒரு நூற்றுண்டு வரைக்கும் அதன் கவனம் முழுவதும் வடஇந்தியாவின்மீதே நிலைத்து நின்றது. தக்காணத்தையும் அதற்கும் தெற்கிலிருக்கும் நாடுகளையும் வென்று தமக்குக் கீழ்ப்படியச் செய்யவேண்டும் என்ற எண்ணம் முதல் முதலில் கில்ஜிவமிச அரசர்களுக்குத்தான் தோன்றியது. ஆனால், முதன்முதலில் தக்காண ராஜ்யம் ஒன்றின்மீது நடைபெற்ற முஸ்லிம் படையெடுப்பு முறையாக நிகழ்ந்த அரசு படையெடுப்பு என்று கூறமுடியாது. அது பாதியளவு அரசாங்கப் படையெடுப்பாயும், பாதியளவு தனியாள் ஒருவன் படையெடுப்பாயும் இருந்தது. அது மறைவாகத் திட்டமிட்டுத் திடீரென நிகழ்ந்த படையெடுப்பு. டில்லி சுல்தானுக இருந்த ஜலாலுதீனுடைய மருமகன் கர்ஷஸ்ப் மாலிக் (பிற்காலத்தில் அலாவுதீன் என்று பெயர் பெற்ற சுல்தான்) தன் மனைவி தன்னைத் தக்கவாறு மதித்து நடக்கவில்லையென்று நினைத்தான். அதனுல் சினமுற்ற

அவன் அவனைத் தண்டிக்க விரும்பினான். அவ்வாறு செய்வதற்கு முன், ஜலாலுதீனையும் அவனுடைய மக்களையும் எதிர்ப்பதற்குத் தேவையான செல்வத்தையும், வலிமையையும் பெறுவது அவசிய மாயிற்று. முதலில் அவன் மாளவத்தின் மீது படையெடுப்பதற்கு ஜலாலுதீனுடைய இசைவைப் பெற்றான். ஆனால், உண்மையில் அவன் மாளவத்திற்குத் தெற்கில் வெகுதொலைவு சென்று, தன் படையை வேகமாக நடத்தி, 1296 பிப்ரவரியில், திடீரென்று யாதவத்தலைநகரான தேவகிரியைத் தாக்கினான். அப்போது யாதவப்படைகள் தெற்கில் வெகு தொலைவில் போரிட்டுக் கொண்டிருந்தன. எனவே, முஸ்லிம் படையின் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியாத யாதவ மன்னன் ராமதேவன் ஒரு வார முற்றுகைக்குப்பின் சமாதானம் செய்துகொண்டான். அவன் அளவற்ற செல்வத்தையும், யானை குதிரைகளையும் கொடுத்தது மட்டுமன்றித் தன்னுடைய பெண்மக்களுள் ஒருத்தியையும் அலாவுதீனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட ராமதேவன் மகன் சிங்கணன் முஸ்லிம்களை எதிர்க்கும் நோக்கத்துடன் தெற்கேயிருந்து விரைவாகத் திரும்பி வந்தான். ஆனால் அவன் வந்து சேர்வதற்குள் சமாதானம் ஏற்பட்டுவிட்டது. ராமதேவன் முஸ்லிம்களின் பாதுகாப்பில் இருந்தான், எனவே, சிங்கணனும் (தாற்காலிகமாக வேனும்) முஸ்லிம்களுக்குப் பணியவேண்டியதாயிற்று. ராமதேவன் தன்னுடைய ராஜ்யத்தை மீண்டும் பெற்றான். அவனும், அலாவுதீனும் வாழ்நாள் முழுதும் நண்பர்களாக இருப்பதாக ஆணையிட்டுக் கூறினர். தேவகிரியிலிருந்து அலாவுதீன் கொண்டுபோன செல்வம் அவன் டில்லி சுல்தான் ஆவதற்குப் பெரிதும் உதவியது. வெகு விரைவில் அவன் ஜலாலுதீனைக் கொன்றுவிட்டு டில்லி யரியணை ஏறினான்.

சுல்தானாகப் பதவியேற்றபின் அலாவுதீன் தன் படைகளைத் தக்காணத்தின்மீது பலமுறை அனுப்பி அதன் செல்வத்தைக் கொள்ளையடித்தான். அங்குத் தன்னுடைய ஆட்சியை நிறுவுவதில் அவன் ஆர்வம் காட்டவில்லை. 1303–1304-ல் அவன் தன்னுடைய படையை வங்காளத்தின் வழியாக வாரங்கல்மீது அனுப்பினான். அந்தப் படை மாலிக் பக்ருதீன் ஜூனா (பிற்காலத்தில் முகமது பின் துக்ளக் என்று பெயர் பெற்றவன்) தலைமையில் சென்றது. ஆனால், அந்தப் படை வாரங்கலை அடைவதற்கு முன்பே தெலுங்கர்படை அதனைத் தடுத்து நிறுத்தித் தோல்வியுறச் செய்து துரத்தியது. அந்தத் தோல்வியால் டில்லி சுல்தானியத்தின் மதிப்புத் தக்காணத்தில் மிகவும் குறைந்து போயிற்று. அதனால் ஊக்கமடைந்த சிங்கணன் டில்லி சுல்தா

னுக்குத் தன் தந்தை கட்டுவதாக வாக்குறுதியளித்திருந்த கப்பத்தைக் கட்டாமல் நிறுத்திவிட்டு, சுல்தானுடைய படைகளிடம் அகப்பட்டு கொள்ளாமல் இருப்பதற்காகத் தேவகிரிக்கு ஓடிவந்த குஜராத்து மன்னனுக்கும் அவனுடைய மகளுக்கும் அடைக்கலம் தந்தான். சுல்தானிடம் கொண்டிருந்த உண்மை நட்பினுலோ ஆழ்ந்த அரச தந்திரத்தின் விளைவாகவோ ராமதேவன் தன் மகனுடைய நடவடிக்கைகளை வெளிப்படையாகக் கண்டித்து, முஸ்லிம் ஆதிக்கத்தைக் காலங்கடத்தாமல் மீண்டும் நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு அலாதீனுக்குச் செய்தியனுப்பினுன். அவனும் தன்னுடைய தனியன்புக்குப் பாத்திரமான மாலிக் கபூர் என்னும் அடிமையின் தலைமையில் உடனே (1307-ல்) ஒரு படையை விரைந்தனுப்பினுன். தேவகிரிக்கருகில் நடந்த சண்டையில் சிங்கணன் தோற்றோடினுன். மாலிக் கபூர் தேவகிரியைச் சூறையாடியபின், யாதவ ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டான். அதன்பின் அவன் ராமதேவனையும் அவனுடைய குடும்பத்தினரையும் சிறைபிடித்து, டில்லிக்குக் கொண்டு போனுன். ஆனுல், அலாவுதீன் ராமதேவனை மிகவும் அன்பாக வரவேற்று, அவனைத் தன் பக்கத்திலேயே ஆறு மாதம் வைத்திருந்தபின் ஏராளமான பரிசுகளுடன் அவனைத் தேவகிரிக்குத் திருப்பியனுப்பினுன். ராமதேவன் மீண்டும் தேவகிரியின் அரசனுனன். இப்போது அவனுடைய ராஜ்யத்தில் முஸ்லிம்கள் குஜராத்தில் கைப்பற்றிய சில பகுதிகளும் சேர்ந்திருந்தன. சுல்தானுடைய தாராள குணம் அவனுக்குப் பல நன்மைகளைத் தந்தது. ராமதேவன் சாகும் வரையில் அலாவுதினிடம் உண்மையாய் இருந்தான். அலாவுதீனுடைய தக்காணப் படையெடுப்புகளில் ராமதேவன் அவனுக்குப் பெரிதும் உதவினுன்.

பின்னர், 1309-ல், அலாவுதீன், முன்னர் ஏற்பட்ட மானக்கேட்டைத் துடைக்கும் நோக்கத்துடன், மாலிக் கபூரின் தலைமையில் ஒரு படையை வாரங்கல் மீது செலுத்தினுன். மாலிக் கபூர் முதலில் தேவகிரிக்குச் சென்றுன். அங்கு அவனுக்கு ராமதேவன் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான். அதன்பின் மாலிக் கபூர் யாதவ ராஜ்யத்தைக் கடந்து, தெலுங்கு நாட்டில் புகுந்து, விரைவாக முன்னேறி, 1310ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வாரங்கலுக்கு அருகில் சென்றுவிட்டான். வாரங்கலின் கோட்டைக்கு இரு சுவர்கள் இருந்தன. மாலிக் கபூர் அதனை முற்றுகையிட்டான். முற்றுகை ஒரு மாதம் நீடித்தது. வெளிச்சுவரை முஸ்லிம் படைகள் தாக்கிப் பிடித்துக் கொண்டன. அதனுல் உள்கோட்டையில் மக்கள் கூட்டம்

அதிகமாகிவிட்டது. எனவே, பிரதாபருத்திரன் மாலிக் கபூரோடு சமாதானப் பேச்சைத் தொடங்கினன். முடிவில், ஏராளமான செல்வத்தையும் பல யானை குதிரைகளையும் கொடுக்கவும், ஆண்டுதோறும் சுல்தானுக்குத் திறை செலுத்தவும் பிரதாபருத்திரன் ஒப்புக்கொண்டான். மாலிக் கபூர் திறைப் பொருள்களோடும், கொள்ளைப் பொருள்களோடும் 1310 ஜூன் மாதத்தில் டில்லிக்குத் திரும்பினன். அங்கு அவனுக்குச் சுல்தான் பெருமைமிக்க வரவேற்பளித்தான்.

அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் மாலிக் கபூர் மீண்டும் தக்காணத்தின்மீது படையெடுத்தான். இந்த முறை அவன் துவார சமுத்திரத்தையும் மா'பாரையும் (மிகத் தெற்கிலிருந்த ஹொய்சள பாண்டிய ராஜ்யங்களை) வெல்லும் நோக்கத்தோடு கிளம்பினன். மீண்டும் மாலிக் கபூர் தேவகிரியைத் தன் படையெடுப்பின் மையமாக்கினன். அங்கு அவனுக்கு ராமதேவன் எல்லா உதவிகளையும் செய்தான். முன்பு ஒரு முறை ஹொய்சள மன்னன் மூன்றும் வல்லாளன் யாதவ ராஜ்யத்தின் மீது படையெடுத்துச் சில இடங்களைப் பிடித்துக்கொண்டான். ஆதலால் ராமதேவன் அவனுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினன். அப்போது குலசேகரனுடைய மக்களுக்குள் ஏற்பட்ட சச்சரவினல் பாண்டிநாடு குழப்ப நிலையில் இருந்தது. முன்பு குலசேகரன் தன்னுடைய ராஜ்யத்தின்மீது படையெடுத்துப் பிடித்துக்கொண்ட பகுதிகளை மீட்க விரும்பிய வல்லாளன் பாண்டி நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைத் தன்னுடைய நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் அந்த நாட்டின்மீது படையெடுத்தான். அவன் தெற்கே போகும் வரையில் காத்திருந்த மாலிக் கபூர் ஹொய்சள நாட்டின்மீது தன் படையைச் செலுத்தினன். எதிர்ப்பார் எவருமே இல்லையென்று சொல்லக்கூடிய நிலையில் முன்னேறிய முஸ்லிம் படை ஹொய்சள நாட்டை விருப்பப்படி சூறையாடிக் கொண்டு சென்று துவாரசமுத்திரத்தையடைந்தது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் வல்லாளன் தன் தலைநகருக்கு வேகமாய் திருப்பினன். ஆனல் அங்கு வந்தபின் முஸ்லிம் படையை எதிர்த்துப் போரிடுவது இயலாதென்று அவன் அறிந்தான். எனவே, போர்செய்ய வேண்டுமென்று விரும்பிய தன் தளபதிகளுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாமல், அவன் டில்லி சுல்தானுக்கடங்கிய சிற்றரசனுக (ஜிம்மியாக) இருக்க ஒப்புக்கொண்டு, மாலிக் கபூருக்குத் தன் செல்வத்தையும் யானை குதிரைகளையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான்.

பத்துப் பதினைந்து நாள் துவார சமுத்திரத்தில் தங்கிய மாலிக் கபூர் மா'பாரின் மீது தன் படையைச் செலுத்தினான். வல்லாளன் அவனுடன் சென்று, பீடபூமியிலிருந்து சமவெளிக்கு இறங்கும் வழியில் இருந்த மலைப்பாங்கான பகுதியில் அவனுக்கு வழிகாட்டி உதவினான். பாண்டிய அரசகுமாரர்கள் தங்களுக்குள் பகைமை கொண்டிருந்தாலும் முஸ்லிம் படையை எதிர்ப்பதில் ஒன்று திரண்டார்கள். அவர்கள் அந்தப் படையை ஆங்காங்கே நிறுத்தித் தாக்கித் தொல்லை கொடுத்தார்கள். நெருங்கிக் கைகலந்தால் முஸ்லிம்கள் அவர்களை வென்றுவிடக் கூடும். கோட்டைக்குள் அடைந்து கொண்டால் எதிரிகள் அதனை எளிதில் கைப்பற்றி விடுவார்கள். எனவே, அவ்வாறு செய்வதை அவர்கள் தவிர்த்தார்கள். மாலிக் கபூர் முதலில் வீரபாண்டியனுடைய தலைநகரான் பீர்தூல்மீது தன் படையைச் செலுத்தினான். அது உறையூருக்கு அருகில் இருந்தது. தலைநகர் எதிரிகள் கையில் அகப்படுவதற்கு முன்னரே வீரபாண்டியன் தப்பியோடிவிட்டான். அப்போது மழை பெய்ததால் மாலிக் கபூருக்கு மேலும் தொல்லையுண்டாயிற்று. எனினும், வீரபாண்டியன் [1]கண்டூருக்கு ஓடிவிட்டான் என்று கேள்விப்பட்ட மாலிக் கபூர் மழையைப் பொருட்படுத்தாது அவனைத் துரத்திக் கொண்டு சென்றான். போகும்வழியில், பாண்டியர் நூற்றிருபது யானை மீதேற்றிச் சென்ற பெருஞ்செல்வத்தை அவன் கைப்பற்றினான். அவன் கண்டூரையடைந்து அதனைத் தாக்கிக் கைப்பற்றிய பின்னும் வீரபாண்டியனைக் கண்டுபிடிக்க இயலவில்லை. அதனால், அவன் முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் மர்ஹத்புரி என்று எழுதிவைத்துள்ள காஞ்சிபுரத்திற்குச் சென்று, அங்கிருந்த கோயில்களின் தூய்மையைக் கெடுத்து, அவற்றைக் கொள்ளையடித்தான். அதன்பின் அவன் பீர்தூலுக்குக் திரும்பினான். அங்கிருந்து அவன் மதுரையைத் திடீரென்று தாக்கத் திட்டமிட்டான். அப்போது அங்கு அரசனாக இருந்த சுந்தரபாண்டியன் அதனையறிந்து, தன்னுடைய செல்வம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு குடும்பத்தோடு மதுரையிலிருந்து கிராமப்புறத்துக்குச் சென்றுவிட்டான். அதுவரையில் ஒதுங்கியிருந்த சுந்தரபாண்டியனுடைய சிற்றப்பன் விக்கிரமபாண்டியன் அந்த நேரத்தில் வெளியே வந்து, பாண்டியப் படைகளுக்குத் தலைமை தாங்கி, முஸ்லிம் படைகளை எதிர்த்து, அவற்றைக் கடுமையாகத் தாக்கித் தோல்வியுறச் செய்தான். அதனால், மாலிக் கபூர் பின்னடைந்தான். ஆனால், அவன் வீரபாண்டியனிடம் கைப்பற்றிய பெருஞ்செல்வத்தைக் காப்பாற்றி டில்லிக்குக் கொண்டு

[1] கண்டூர் எங்கிருந்தது என்று தெரியவில்லை.

போவதில் வெற்றிபெற்ருன். அவன் 1311 அக்டோபரில் டில்லியை அடைந்தான். அங்கு அவன் மூன்ரும் வல்லாள னுடைய மகனை சுல்தான்முன் நிறுத்தி, அவனுடைய தந்தை முஸ்லிம் படைகளுக்குச் செய்த பேருதவியைப் பாராட்டிப் பேசிஞன். அவனை அன்பாக நடத்திய சுல்தான் பின்னர் அவனை ஊருக்குத் திருப்பியனுப்பினர். அத்துடன் வல்லாளனுடைய ராஜ்யத்தையும் அவனுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான். மா’பார்ப் படையெடுப்பு ஒரு வெறுந்தாக்குதலாக முடிந்தது. அவ்வளவாக வெற்றியுள்ள தாக்குதலென்றும் அதனைக் கருத இயலாது. அதனுல், நிலேயான விளைவு ஒன்றும் ஏற்படவில்லே. ஆனுல், தென்னிந்தியாவின் செல்வத்தில் ஒரு பெரும்பதியை மாலிக் கபூர் கொண்டுபோய் விட்டானென்பது உண்மை. ‘அறுநூற்றுப் பன்னிரண்டு யானைகள், தொண்ணூற்ருருயிர மணங்கு பொன், பல பெட்டி நிறைய அணிகள், முத்துக்கள், இருபதாயிரம் குதிரைகள்’ ஆகியவற்றை மாலிக் கபூர் கொண்டு போனுன் என்று பர்னி கூறுகிருர்.

சுமார் ஓராண்டுக்குப்பின், 1312-ல், ராமதேவன் இறந்து போனுன். அதன்பின் அவன் மகன் சிங்கணன் தேவகிரிக்கு அரச னுஞன். அவன் சுல்தானிடம் கொண்டிருந்த பகைமை அனை வரும் அறிந்ததே. அதனுல் சுல்தான் தேவகிரியைப் பிடித்துத் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவர விரும்பி, அதற்காக ஒரு படையை மாலிக் கபூரின் தலைமையில் அனுப்பினுன். அந்த வேலேயை மாலிக் கபூர் மிகவும் எளிதில் நிறைவேற்றினுன். சிங்கணன் போர் செய்யாமலே ஓடிப்போனுன். முஸ்லிம் ஆட்சியில் மக்களுக்கு எந்தவிதத் துன்பமும் உண்டாகாது என்று காட்டும் முறையில் மாலிக் கபூர் நிதானமாக நடந்துகொண்டான். பாராட்டத்தக்க விவேகத்தோடு அவன் நிர்வாக முறைகளை ஒழுங்குபடுத்தினுன். ஆனுல், ஒரு விஷயத்தில் மட்டும் அவ னுடைய மனம் இளகவில்லே. அவன் குடிமக்கள் வேண்டு கோளுக்குச் செவிசாய்க்காமல்கோயில்களை இடித்துஅவற்றுக்குப் பதிலாக மசூதிகளைக் கட்டினுன். அவன் தேவகிரியிலேயே ஒரு பெரிய மசூதியைக் கட்டி, அதற்குச் சுல்தானுடைய விருப்பத்திற் கேற்ப, அவனுடைய பெயரையே வைத்தான். எனினும், யாதவ ராஜ்யத்தின் பல பகுதிகள். முஸ்லிம் ஆட்சியை ஏற்க மறுத்து விட்டன. கம்பிலி ராஜ்யத்தில் ஆட்சி செய்துவந்த சிங்கைய நாயக்கனும் அவனைவிடப் புகழ் பெற்ற அவனுடைய மகன் கம்பிலி நாயக்கனும் கம்பிலி ராஜ்யத்தின் தன்னுரிமையை விளம் பரப்படுத்தினுர்கள். இந்தப் புதிய ராஜ்யத்தில் பெல்லாரி, ராயச்சூர், தார்வார் ஆகிய மாவட்டங்களும் கம்பிலி, கும்மட்டா

ஹோசதுர்க்கம் (ஆனகொண்டி?) ஆகிய மூன்று முக்கியமான கோட்டைகளும் இருந்தன. அவை மூன்றும் துங்கபத்திரை நதிக்கரையில் இருந்தன. மாலிக் கபூர் கம்பிலிமீது படையெடுத்துச் சென்றான். ஆனால், அங்கு நடந்த சண்டையில் யாருக்கும் வெற்றி தோல்வி ஏற்படவில்லை. இன்னொரு முறை படையெடுப்பதற்குள் அவன் டில்லிக்குத் திரும்பவேண்டியதாயிற்று. அங்கு அலாவுதீன் மரணத்துக்கும் (1316) குதுப்உதீன் முபாரக்ஷா அரியணையேறுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த அரசியல் புரட்சியில் மாலிக் கபூர் உயிரிழந்தான்.

அதே புரட்சியின் விளைவாகத் தேவகிரியில் நிறுவப்பெற்றிருந்த முஸ்லிம் ஆட்சியும் தானாகவே முடிவடைந்தது. அதற்குக் காரணம் கபூர் தேவகிரியில் விட்டுச்சென்ற தன்னுடைய தளபதியைத் திருப்பியழைத்துக்கொண்டதுதான். அதனால், ராமதேவனுடைய மருமகன் ஹரப்பாலதேவன் தேவகிரியில் இந்து ஆட்சியை மீண்டும் நிறுவினான். ஆனால், அரியணையேறிய சிறிது காலத்தில், 1318-ல், தேவகிரியை மீண்டும் கைப்பற்றும் நோக்கத்துடன் முபாரக்கில்ஜி தன்னுடைய தளபதியும் தன்னுடைய தனிப்பற்றுக்குரிய அடிமையும் ஆன குஸ்ருகான் தலைமையில் ஒரு படையை நடத்திக்கொண்டு தென்திசை சென்றான். தேவகிரியைக் கைப்பற்றுமுன் முஸ்லிம் படைகள் கடுமையாகச் சண்டையிட நேர்ந்தது. ஹரப்பாலதேவன் சண்டையில் காயமடைந்து சிறைபட்டான். அவனை முபாரக் கொன்றுவிட்டான். 'அவன் உயிரோடு தோலுரிக்கப்பட்டான்' என்று பர்னி கூறுகிறார். மழைக்காலம் தொடங்கிவிட்டதால் முபாரக் உடனே டில்லிக்குத் திரும்ப இயலவில்லை. வேறுவழியில்லாமல் அங்கேயே தங்கநேர்ந்த முபாரக், தேவகிரியின் ஆட்சிமுறையைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டான். மாலிக் யாக்லாக்கி என்பவன் தேவகிரியின் ஆளுநனாக நியமிக்கப்பட்டான். யாதவ ராஜ்யத்தின் பலவேறு பகுதிகளிலும் ஆளுநனுக்குக் கீழ்ப்பட்ட நிர்வாக அதிகாரிகளும், வரிவசூல் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டார்கள். ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் படைகள் நிறுத்திவைக்கப்பட்டன. ஹொய்சளத் தலைநகரான துவாரசமுத்திரத்தில் ஒரு படையை நிறுத்தி வைப்பதற்காகச் செய்த முயற்சி தோல்வியுற்றது. 1318 ஆகஸ்டில் முபாரக் டில்லிக்குத் திரும்பியபோது தேவகிரியில் குஸ்ருகானை விட்டுச் சென்றான். வாரங்கல் அரசனான இரண்டாம் பிரதாபருத்திரன் அலாவுதீன் இறந்தபிறகு டில்லிக்குச் செலுத்தவேண்டிய திறையை நிறுத்திவிட்டான். அதனால், அதனை வசூல் செய்வது குஸ்ருகான் வேலையாயிற்று. அவன் அந்தப் பணியை எளிதில்

நிறைவேற்றினன். அவன் வாரங்கல்மீது படையெடுத்து, இரண்டாம் பிரதாபருத்திரன் செலுத்தவேண்டிய கப்பம் முழுவதையும் வசூல் செய்துகொண்டு, மீண்டும் சுல்தானுடைய மேலாதிக்கத்தை அவன் ஏற்குமாறு செய்தான்.

டில்லிக்குத் திரும்பிய குஸ்ருகான் விரைவிலேயே மீண்டும் தக்காணத்துக்கு வரவேண்டியதாயிற்று. மாலிக் யாக் லாக்கி தன்னைச் சுயேச்சை பெற்ற அரசன் என்று விளம்பரப்படுத்தி, ஷம்சுதீன் என்னும் பட்டப்பெயரை வைத்துக்கொண்டு, தன்னுடைய பெயரிலேயே நாணயங்களை அடித்து வெளியிடத் தொடங்கினன். ஆனல், அவனுடைய சோம்பலையும் ஒழுக்கக் கேட்டையும் கண்ட பிரபுக்கள் அவனைச் சிறைபிடித்துக் குஸ்ருகானிடம் ஒப்படைத்து விட்டார்கள். அவனுடைய காலையும் கையையும் கட்டி டில்லிக்கு அனுப்பிவிட்டுக் குஸ்ருகான் தேவகிரியிலிருந்து தெற்கே சென்றான்.

1311-ல் மாலிக் கபூர் டில்லிக்குத் திரும்பிச் சென்றான். அதன்பின்னரும் வீரபாண்டியனும் சுந்தரபாண்டியனும் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். வீரபாண்டியனுடைய எதிர்ப்பைச் சமாளிக்கமுடியாத சுந்தரபாண்டியன் முஸ்லிம்களுடைய துணையை நாடினன். அவர்களும் துணைபுரிய இசைந்தார்கள். ஆனல், அவர்கள் போதுமான அளவில் அவனுக்கு உதவி செய்யாததால், அவனுக்கு அதனல் பயனென்றும் ஏற்படவில்லை. 1312 வரையில் சுந்தரபாண்டியனுக்கு அடங்கிய சிற்றரசனய் இருந்த திருவிதாங்கூர் மன்னன் ரவிவர்ம குலசேகரன் பாண்டிய ராஜ்யத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதன்மீது படையெடுத்து, வடக்கே காஞ்சீபுரம் வரையில் வந்துவிட்டான். அவனேடு வீரபாண்டியன் சேர்ந்துகொண்டதால், சுந்தரபாண்டியன் காகதீய மன்னன் இரண்டாம் பிரதாபருத்திரனுடைய துணையை நாடினன். அவன், 1317-ல் ஒரு பெரிய படையை நெல்லூர் ஆளுநனை முப்பிடி நாயக்கனுடைய தலைமையில் அனுப்பினன். முப்பிடி நாயக்கன் ரவிவர்மகுலசேகரனையும் வீரபாண்டியனையும் தோல்வியுறச் செய்து, முன்னவனைத் தன்னுடைய நாட்டுக்குத் திரும்புமாறு செய்து, சுந்தரபாண்டியனுக்கு வீரதவளபட்டணத்தில் (பீர்தூல்) முடிசூட்டினன். அதன்பின் குஸ்ருகானின் படையெடுப்பு நிகழ்ந்தது. பாண்டிய மன்னன், வழக்கம்போலத் தலைநகரைக் காலிசெய்துவிட்டு, தன்னுடைய செல்வம் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, தன் குடும்பத்துடன் கிராமப்புறத்திற்குச் சென்றுவிட்டான். தன்னுடைய மதம் தனக்குக்

காப்பாக இருக்கும் என்று ஒரு முஸ்லிம் வணிகன் மதுரையிலேயே தங்கியிருந்தான். ஆனால், குஸ்ருகான் அவனுடைய செல்வம் அனைத்தையும் சூறையாடிக்கொண்டு அவனை அவமானப்படுத்தி விட்டான். மானக்கேடு தாங்கமுடியாத வணிகன் தற்கொலை செய்துகொண்டான். அப்படியும், குஸ்ருவின் படையெடுப்பு வெற்றிபெறவில்லை. படைகளின் இடம்பெயர்வை மழை தடை செய்தது. மேலும், அவனே சுல்தானுக்கு எதிராகக் கலகஞ் செய்ய நினைத்தான். அதனையறிந்த அவனுடைய ஆட்கள் அவனை எதிர்த்தார்கள். அதனால், அவன் அவர்களிடம் பணிய வேண்டியதாயிற்று. இறுதியில் அவர்கள் அவனுக்கு விலங்கு பூட்டி டில்லிக்குத் தூக்கிச்சென்றார்கள்.

டில்லியில் நடந்த அரசியல் கலகத்தின் விளைவாகக் கில்ஜி வமிச ஆட்சி முடிவடைந்துவிடத் துக்ளக் வமிச ஆட்சி தொடங்கியது. அந்த நேரத்தில் இரண்டாம் பிரதாபருத்திரன் தன்னை மீண்டும் முழு உரிமை பெற்ற அரசனாக விளம்பரப்படுத்திக் கொண்டான். அவனை மற்றச் சிற்றரசர்களும் பின்பற்றினார்கள். மராத்திய நாட்டில் டில்லி சுல்தானியத்தின் ஆளுநனாக இருந்த ஒருவன் ஆட்சிசெய்த பகுதியிலும் விடுதலை இயக்கம் தலை தூக்கியது, அவையெல்லாவற்றையும் கண்ட கியாஸ் உதீன் துக்ளக் தென்னிந்தியாவிலிருந்த இந்து ராஜ்யங்கள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றித் தன்னுடைய ஆட்சியைக் குமரிமுனை வரையிலும் பரப்பத் தீர்மானித்தான். முதலில் அவன் தன்னுடைய மகனும் தனக்குப்பின் அரசனாகும் உரிமை பெற்றவனும் ஆன உலூக்கான் தலைமையில் வாரங்கல்லின்மீது ஒரு படையை அனுப்பினான். வழக்கம்போல அந்தப் படை தேவகிரி வழியாகச் சென்று, தெலிங்கானாவுக்குள் நுழைந்தவுடன் எதிர்ப்பட்ட இடங்கள் அனைத்தையும் சூறையாடிக் கொண்டும் வழியிலிருந்த கோட்டைகள் எல்லாவற்றையும் வளைத்துப் பிடித்துக்கொண்டும் வாரங்கலைநோக்கி முன்னேறிற்று. பிரதாபருத்திரன் தன் படைகளோடு வாரங்கல் கோட்டைக்குள்ளே அடைந்துகிடந்தான். அந்தக் கோட்டை நல்ல அரண் பெற்றதாகவும் ஏராளமான உணவுப் பொருள்களை உடையதாகவும் இருந்தது. உலூக்கான் வாரங்கலை முற்றுகையிட்டான். முற்றுகை ஆறு மாதம் நீடித்தது. இதற்குள் முஸ்லிம் படைகளுக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டது. உலூக்கானுடைய தளபதிகள் அவனுக்கு எதிராகக் கிளம்பி பிரதாபருத்திரனுடன் பேரம்பேசத்தொடங்கினார்கள். அவர்கள் திரும்பிப் போவதற்குப் பிரதாபருத்திரன் இசைந்தான். அவ்வாறு அவர்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் திரும்பிச்

சென்ற பிறகு பிரதாபருத்திரன் எஞ்சிருந்த சிறிய முஸ்லிம் படைமீது பாய்ந்து அதனைத் தோல்வியடையச் செய்து துரத்தினான். தோற்றுப்போன உலூக்கன் தன்னுடைய சிறிய படையுடன் தேவகிரிக்குத் திரும்பிப் போகத் தொடங்கினான். ஆனால், பிரதாபருத்திரன் அவன் பின்னேயே சென்று அவனுக்குத் தொல்லை கொடுத்தான். கலகஞ்செய்து முன்னால் சென்ற முஸ்லிம் படையுடன் உலூக்கான் பேரம் பேசி, தன்னுடைய படைக்கும் பிரதாபருத்திரன் படைக்கும் இடையில் அந்தப் படை வருமாறு ஏற்பாடு செய்தான். அதன்பின் தேவகிரிக்குச் செல்வது எளிதாக இருக்குமென்று அவன் நம்பினான். போகும் வழியில் முஸ்லிம் படையின் இன்னொரு பிரிவை அவன் சந்தித்தான். அந்தப் பிரிவு மஜிர் அபு ரிஜா என்ற தளபதியின் தலைமையில் கொட்கிர் கோட்டையைக் கைப்பற்றும் பயனில்லாத முயற்சியில் ஈடுபட்டிருந்தது; மஜிர் உலூக்கானிடத்தில் நட்புறவுடன் நடந்துகொண்டான். கலகஞ்செய்த தளபதிகளைச் சமாளிப்பதற்கு உலூக்கானுக்குத் துணைபுரிவதாக அவன் வாக்களித்தான். ஆங்காங்கு இருந்த ஜமீன்தார்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலகஞ்செய்த முஸ்லிம் படைகளைத் தாக்கி, அவற்றின் தலைவர்களைப் பிடித்து, சுல்தானிடம் அனுப்பவேண்டுமென்று மஜிர் செய்தியனுப்பினான். அதன்பின் அவன் உலூக்கானோடு தேவகிரிக்குச் சென்றான். கலகஞ்செய்த முஸ்லிம் போர்வீரர்களை அடக்குவதற்கு அவன் கையாண்ட முறை நல்ல பயன் தந்தது. அவர்களிற் பலர் சண்டையிட்டு மடிந்தனர்; பலர் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டனர்; வேறு சிலர் சிறைபிடிக்கப்பட்டு டில்லிக்கு அனுப்பப்பட்டனர். அங்கே அவர்களுக்கு சுல்தான் மரண தண்டனையளித்தான்.

இவ்வாறு முஸ்லிம் படையெடுப்பை முறியடித்ததால் மிகவும் மகிழ்ந்துபோன பிரதாபருத்திரன் தன்னுடைய படைகள் கலைந்து செல்வதற்கு அனுமதிகொடுத்துவிட்டு, தலைநகரில் திரட்டி வைத்திருந்த உணவுப் பொருள்களையும் பரவலாக வெளியே அனுப்பி விட்டான். இனிமேல் எப்போதுமே தன்னுடைய நாட்டின்மீது முஸ்லிம்கள் படையெடுக்கமாட்டார்களென்று அவன் முழுதும் நம்பினால் எவ்வாறு நடப்பானோ அவ்வாறுதான் அவன் நடந்தான் என்பதை அவன் செயல்கள் காட்டின. ஆனால், கியாசுதீன் அவ்வாறு நினைக்கவில்லை. தெலிங்கானாவைப் பிடிக்கும் முயற்சியில் அவனுடைய மகன் அடைந்த தோல்வி அந்த நாட்டைப் பிடிக்கவேண்டும் என்ற அவனுடைய எண்ணத்திற்கு உரமூட்டியது. அதனால், அவன் தேவகிரிக்கு மேலும் ஏராளமான படை வீரர்களை அனுப்பினான்.

அவை உலூக்கான் தலைமையில் மீண்டும் காகதீய ராஜ்யத்தின் மீது சென்றன. அந்த ராஜ்யத்தின் மேற்கெல்லையில் இருந்த பீடாரையும், போதன் முதலிய வேறுபல கோட்டைகளையும் உலூக்கான் பிடித்துக்கொண்டான். அதன்பின் வாரங்கலையும் அவன் முற்றுகையிட்டான். அவையெல்லாவற்றையும் பிரதாப ருத்திரன் எதிர்பார்க்கவில்லை. எனினும், அவன் ஐந்து மாதம் தாக்குப்பிடித்தான். அதற்குள் நகரில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதால், அவன் சமாதானம் செய்துகொள்ள விரும்பினன். அதன் விளைவாக, 1323-ல், அவன் தன்னையும் தன் குடும்பத்தினரையும் உலூக்கான் கையில் ஒப்படைத்துவிட்டான், உலூக்கான் அவர்களைத் தக்க பாதுகாப்போடு டில்லிக்கு அனுப்பினன். ஆனல், வழியில் பிரதாபருத்திரன் தற்கொலை செய்துகொண்டான். உலூக்கான் வாரங்கல்லைக் கொள்ளை யடித்து அதனை அழித்தான். ராஜ்யத்தின் ஏனைய பகுதிகளி லிருந்த இந்துச் சிற்றரசர்கள் பெரும்பாலும் சண்டையிடாமலே பணிந்து போனர்கள். எதிர்ப்புக் கிளம்பிய சில பகுதிகளில் மட்டும் உலூக்கான் போர் செய்து அவர்களை அடக்கினன்.

உலூக்கான் மா'பாருக்கும் ஒரு படையை அனுப்பினன். அந்தப் படை மா'பாரை வென்றது. அதனல் அது டில்லி சுல்தானுடைய ஆட்சியின்கீழ்ச் சிறிது காலம் இருந்தது. பாண்டிய மன்னன் பராக்கிரமதேவனை முஸ்லிம்கள் சிறை பிடித்து டில்லிக்குக் கொண்டுபோனர்கள். 1326-ல் முகமது பின் துக்ளக் தேவகிரியை டில்லி சுல்தானியத்தின் தலைநகராக்கிய போதும் மா'பார் டில்லி சுல்தானியத்தில் ஒரு மாகாணமாகவே கருதப்பட்டது. கங்கர்களுடைய ஆட்சிக்குட்பட்ட ஓரிசா ராஜ்யத்திலிருந்த ஐஜ் நகரின்மீது உலூக்கான் மீண்டும் ஒரு முறை படையெடுத்தான். அவனுடைய நோக்கம் அந்த நகரை வெல்வது என்று சொல்வதைவிட வாரங்கல்லின் அந்தப் பக்கத்து எல்லையைப் பாதுகாப்பதுதான் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும்.

எனவே, முகமதுபின் துக்ளக் டில்லி சுல்தானக அரியணை யேறிய சமயத்தில் தக்காணத்தின் பல பகுதிகள் டில்லி சுல்தானி யத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தன. தேவ கிரியும் வாரங்கலும் சுல்தானிய அலுவலர்களின் உறுதியான கட்டுப்பாட்டில் இருந்தன. தொலைவிலிருந்த மா'பாருக்கும் ஓர் அரசப் பிரதிநிதி அனுப்பப்பட்டான். புதிதாக வென்ற நாடு களில் சுல்தானியத்தின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதும் சுல்தானிய ஆதிக்க எல்லையை மேலும் விரிவுபடுத்துவதும்

அவனுடைய பணிகள். சுயேச்சையான அரசர்களின் ஆட்சியின் கீழ் இன்னமும் இருந்த இந்து ராஜ்யங்களுள் துவார சமுத்திரமும் கம்பிலியும் முக்கியமானவை. கம்பிலி நாட்டின் புகழ் பெற்ற அரசனான கம்பிலிதேவன் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஹொய்சள அரசன் மூன்றாம் வல்லாளனுக்கும் யாதவ அரசன் ராமதேவனுக்கும் நடந்த போர்களில் தன்னுடைய பேரரசனான ராமதேவனுக்குத் துணை புரிந்ததன் மூலம் ஒரு வலிமை வாய்ந்த அரசன் என்று பெயர் பெற்றான். தக்காணத்தில் முஸ்லிம் ஆதிக்கம் வளர்வதை எதிர்ப்பதற்கு அவன் எப்போதும் தவறியதில்லை. அவன் அண்டை ராஜ்யங்களான துவார சமுத்திரத்தோடும் வாரங்கலோடும் கொண்டிருந்த பகைமை அவனுடைய வலிமையின் வளர்ச்சிக்குப் பெருந் தடையாய் இருந்தது. எனினும், அவன் ஒரு பெரிய ராஜ்யத்தை நிறுவுவதில் வெற்றிபெற்றான். அவனுடைய ராஜ்யத்தில் இன்றைய அனந்தப்பூர், சித்தலதுர்கம், ஷிமோகா, ராயச்சூர், தார்வார், பெல்லாரி ஆகிய மாவட்டங்களெல்லாம் அடங்கியிருந்தன. அவனுடைய ராஜ்யத்துக்கும் டில்லிப் பேரரசின் மாகாணமாயிருந்த மராத்திய நாட்டிற்கும் இடையில் கிருஷ்ணா நதி எல்லையாக இருந்தது. சுல்தானுக்குத் திறை செலுத்த வேண்டுமென்று டில்லியிலிருந்து வந்த ஆணையை அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதற்குமாறாக, குல்பர்காவுக்கு அருகில் சாகர் என்னுமிடத்தில் ஆளுநனாக இருந்தவனும், முகமதுபின் துக்ளக்கின் நெருங்கிய உறவினனாக இருந்தவனும், அவன்மீது ஏதோ காரணத்தால் பகைகொண்டு டில்லி சுல்தானியத்தின் அரசுரிமை தனக்கே கிடைக்கவேண்டுமென்று கூறிக் கலகஞ் செய்தவனும் ஆகிய பஹாவுதீன் கர்ஷஸ்ப் என்பவனோடு இனிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் பேச்சு வார்த்தை தொடங்கினான். கர்ஷஸ்ப் தொடங்கிய கலகத்தை அடக்குமாறு குஜராத் ஆளுநன் மாலிக்ஜாடாவையும் தேவகிரி ஆளுநன் மஜீர் அபு ரிஜாவையும் சுல்தான் பணித்தான். அதன் விளைவாக, கோதாவரிக் கரையில் நடந்த ஒரு சண்டையில் சுல்தானியப் படைகளிடம் கர்ஷஸ்ப்பின் படைகள் படுதோல்வியடைந்தன. கர்ஷஸ்ப் சாகருக்கு ஓடிவிட்டான். சுல்தான் படைகள் அவனை அங்கும் துரத்திக்கொண்டு சென்றன. அதனால், அவன் மிக விரைவில் தன் பெண்டு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கம்பிலிக்கு ஓடி அங்கு அடைக்கலம் புகுந்தான். அதற்குள் சுல்தானே நேரில் போரை நடத்துவதற்காகத் தேவகிரிக்கு வந்து சேர்ந்தான். அங்கு அவன் கர்ஷஸ்ப் கம்பிலியில் அடைக்கலம் புகுந்த செய்தியைக் கேள்விப்பட்டான். எனவே, தன் வலிமையை மதிக்காது தன்னுடைய எதிரிக்கு

அடைக்கலமளித்த இந்து அரசன் கம்பிலித்தேவனை அடக்குவது சுல்தானுடைய முக்கிய வேலையாயிற்று.

ஆனால், அந்த வேலை அவன் எதிர்பார்த்ததைவிடக் கடுமையாய் இருந்தது. முஸ்லிம்கள் இரண்டு முறை படையெடுத்தும் வலிமைமிக்க கும்மட்டாக் கோட்டையைக் கைப்பற்ற முடியாமல் திரும்பினார்கள். ஆனால் மூன்றும் முறை மாலிக் ஜாடாவின் தலைமையிற் சென்ற படை வெற்றிபெற்றது. கும்மட்டா வீழ்ந்தது. கம்பிலித்தேவன் ஆனகொண்டி (ஹோசதுர்க்கம்) என்னும் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டான். அதனை சுல்தானுடைய படைகள் எல்லாப் பக்கத்திலும் வளைத்துக் கொண்டன. உணவுப் பொருள்கள் தீர்ந்துபோனதால், கோட்டைக்குள்ளிருந்தவர்களால் முற்றுகையை ஒரு மாதத்திற்கு மேல் எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆனால், அதற்குள் கம்பிலித் தேவன் கர்ஷஸ்ப்வையும் அவனுடைய குடும்பத்தினரையும் துவாரசமுத்திரத்திற்கு அனுப்பி, அவர்களுக்குக் காப்பளிக்குமாறு மூன்றும் வல்லாளனை வேண்டிக்கொண்டான், கம்பிலித் தேவன் ஒரு வீரனுக்குரிய உறுதியோடும் மன உரத்தோடும் தன்னுடைய முடிவை எதிர்நோக்கி நின்றான். தான் போர் செய்து மடிவதற்கு உறுதி பூண்டுவிட்டதாக அவன் தன்னுடை குடும்பப் பெண்களுக்கு அறிவித்து, அவர்கள் முஸ்லிம்கள் கையில் சிக்கிக் கொள்வதற்கு மாறாகத் தீக்குளிப்பது சிறந்தது என்று அவர்களுக்கு ஆலோசனையும் கூறினான். அவர்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு தீக்குளித்தார்கள். அமைச்சர்கள், பிரபுக்கள் ஆகியவர்களுடைய மனைவிகளும் பெண்மக்களும் அரச குடும்பப் பெண்களைப் பின்பற்றி உயிர் நீத்தார்கள். அதன் பின் கம்பிலித்தேவனும் அவனுடைய படை வீரர்களும் கோட்டைக்கு வெளியே வந்து, எதிரிகளின்மீது பாய்ந்து, அவர்களுள் பலரைத் தங்கள் வாளுக்கிரையாக்கியபின் விழுப்புண் பட்டு வீழ்ந்தார்கள். கம்பிலித்தேவனுடைய உறை திணித்த தலை வெற்றிச் சின்னமாக சுல்தானுக்கு அனுப்பப் பட்டது. ஹோசதுர்க்கத்தைச் சுற்றிலும் இருந்த பகுதிகளை டில்லியின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக அந்தக் கோட்டையில் ஒரு முஸ்லிம் படை நிறுத்தப்பட்டது (1327).

பஹாவுதீனைப் பிடிக்கும் நோக்கத்துடன் ஹொய்சள ராஜ்யத்தின்மீது படையெடுப்பதற்கு மாலிக்ஜாடா ஆயத்தம் செய்தான். எவனோ ஒரு முஸ்லிம் கலகக்காரனுக்கு அடைக்கலமளிப்பதன்மூலம் தன்னுடைய நாட்டையும் பதவியையும் ஆபத்துக்குள்ளாக்குவதற்கு மூன்றும் வல்லாளன் விரும்பவில்லை.

மேலும், அந்த முஸ்லீமைத் தன்னிடம் அனுப்பிய கம்பிலித் தேவனுடன் அவன் என்றுமே நட்பாக இருந்ததில்லை. எனவே, பஹாவுதீன் தன்னுடைய அவைக்கு வந்ததும் வல்லாளன் அவனைப் பிடித்து மாலிக்ஜாடாவிடம் அனுப்பிவிட்டு டில்லி சுல்தானியத்தின் மேலாதிக்கத்தையும் ஏற்றுக்கொண்டதாக அறிவித்து விட்டான். அதனால் மிகவும் மகிழ்ந்த மாலிக்ஜாடா தேவகிரிக்குத் திரும்பிப் போய்விட்டான்.

கம்பிலியின் வீழ்ச்சிக்குப்பின் சிறிது காலம் முகமது-பின்-துக்ளக் தேவகிரியிலேயே தங்கித் தலைநகரை மாற்றும் வேலையை முடிக்கும் பணிகளில் ஈடுபட்டான். அன்றியும் புனவுக்கு அருகிலிருந்த கந்தியானு (சிம்மகட்) என்னும் வலிமைமிக்க கோட்டையை எட்டுமாத முற்றுகைக்குப் பின் சுல்தான் கைப்பற்றினன். அந்தக் கோட்டைத் தலைவனயிருந்த கோலி வமிச இந்து அரசன் நாக நாயக்கன் சுல்தானுக்குப் பணிந்தான். சுல்தான் அவனை மரியாதையாக நடத்தினன். கோட்டையில் தன்னுடைய படைகளை நிறுத்தியபின் சுல்தான் டில்லிக்குத் திரும்பினன். 1324-க்கும் 1335-க்கும் இடைப்பட்ட காலத்தில் தக்காணமும் தென்னிந்தியாவும் சேர்ந்த தென்னடு முழுவதுமே டில்லிப் பேரரசின் ஆட்சியில் இருந்தது என்று முஸ்லிம் வரலாற்றுசிரியர்கள் பொறுத்துக்கொள்ளத்தக்க உயர்வுநவிற்சியோடு எழுதி வைத்திருக்கிறர்கள். அந்த நாட்டில் தேவகிரி, டிலிங், கம்பிலி, துவார சமுத்திரம், மா'பார் என்று ஐந்து மாகாணங்கள் இருந்தன. சில ஆசிரியர்கள் ஜஜ் நகரையும் (ஒரிஸா) சேர்த்து ஆறு மாகாணங்கள் என்று கூறுகிறர்கள். ஆனல், அதனை நாம் ஒத்துக் கொள்வது கடினம். மாகாணம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆளுநன் (நயிப்) இருந்தான். அவனுக்குதவியாக ராணுவத் துணைவன், கொத்வால் ஆகியவர் இருந்தனர். ராணுவத் துணைவன் மாகாணப் படைகளின் தலைவன். கொத்வால் மாகாணத் தலைநகரின் காவலன். தேவகிரியைத் தவிர ஏனைய இடங்களில் சுல்தானுடைய அதிகாரம் உறுதியாக நிறுவப்பட்டிருந்தது என்று சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக, துவாரசமுத்திரம் பெயரளவில்தான் டில்லியின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தது. அந்த ராஜ்யத்தின் மக்களுள் மிகப் பெரும்பாலோர்—முக்கியமாக, கிராமங்களில் இருந்தவர்கள்—புதிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவேயில்லை. ராஜ்யத்திலிருந்த விளைநிலங்கள் எல்லாவற்றையும் சுல்தான் இக்தாக்களாகப் பிரித்து முஸ்லிம் தலைவர்களுக்கு வழங்கினன். 'இக்தா' என்றல் ராணுவ நிலமானியம் என்று பொருள்படும். அவ்வாறு நிலமானியம் பெற்ற தலைவர்கள் குறிப்பிட்ட ஒரு

தொகையைக் கருவூலத்திற் கட்டுவதோடு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள படை வீரர்களையும் வைத்திருக்க வேண்டும். 'இக்தா' முறையினால் அமைதியும் நிர்வாகமும் சீர்குலைந்தன. முஸ்லிம் ஆதிக்கத்தை மக்கள் எதிர்க்கத் தொடங்கியவுடன் அந்த உறுதியற்ற ஆட்சியமைப்பும் தூள்தூளாக நொறுங்கி விழுந்தது. அந்த எதிர்ப்பும் விரைவிலேயே கிளம்பியது.

முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து தக்காணத்தை விடுவிப்பதற்காகத் தோன்றிய இயக்கம் 1329-ல் முகமது-பின்-துக்ளக் டில்லிக்குத் திரும்பியவுடனே தொடங்கிவிட்டது என்று கூறலாம். மக்கள் முஸ்லிம் ஆட்சியை என்றுமே விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும், அந்த நேரத்தில் சைவ சமயம் மறுமலர்ச்சி பெற்றிருந்தது. அந்த வலிமையான மறுமலர்ச்சியின் செல்வாக்கு ஆட்பட்டிருந்த பொதுமக்களும் அவர்களுடைய தலைவர்களும் முஸ்லிம்கள் தங்களுடைய கோயில்களை அழிப்பதையும், அவற்றின் புனிதத் தன்மையை அவமதிப்பதையும், வழிவழி வந்த தங்களுடைய பழக்கவழக்கங்களும் மரபுகளும் சீர்கேடுறுவதையும் பார்த்துக்கொண்டு கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்க விரும்பவில்லை. புதுச் சைவ சமயத்தைப் பின்பற்றியவர்கள் சைவமே சமயமென்றும் சிவனே கடவுளென்றும் முழு மனத்துடன் நம்பினார்கள். ஏனைய கோட்பாடுகளைப் பின்பற்றியவர்களை அவர்கள் பாவிகள் (கடவுள் நம்பிக்கையற்றவர்கள்) என்று கூறிப் பழித்து வெறுத்தார்கள். மேலும், சிவ பக்தர் அனைவரும் எல்லா வகையிலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்று அவர்கள் நம்பியது மட்டுமன்றி, அந்தச் சமத்துவத்தைக் கடைப்பிடித்தொழுகுவதும் அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. எனவே, புதிய சைவம் இஸ்லாத்தோடு போட்டியிடுவதற்கு எல்லா வகையிலும் தகுதி பெற்றிருந்தது தக்காணத்தின் பல பகுதிகளில் துக்ளக் ஆட்சி வேரூன்ற முடியாமற் போனதற்கு அந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் பயனாக அரசியல் துறையில் ஏற்பட்ட புத்தூக்கம் ஒரு முக்கிய காரணமாயிற்று. கோயில் மானியங்களும் அறக்கட்டளைகளும் முஸ்லிம் ஆட்சியில் ஒழிக்கப்பட்டுவிட்டன. சுல்தானும் அவன் கீழிருந்த மாகாண ஆளுநர்களும் குடியானவர்களையும் தொழிலாளர்களையும் கசக்கிப் பிழிந்து பணம் திரட்டினார்கள். இத்தகைய இழப்புகளால் பொதுமக்களுக்குண்டான சினம் விடுதலை இயக்கம் மேலும் வலிமையடைவதற்கு உதவியது. அவ்வியக்கத்தின் தலைவர்களுள் புரோலைய நாயக்கனும் அவனுடைய உறவினன் காப்பைய நாயக்கனும் முக்கியமானவர்கள். (காப்பைய நாயக்கன் பெயரை முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள்

கன்ஹய நாயக்கன் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்களைவிடக் கீழ்ப்படியிலிருந்த வேறு எழுபத்தைந்து நாயக்கர்கள் அவர்களுக்குத் துணைநின்றார்கள் என்று மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அடன்கி, கொண்டவீடு ஆகிய இடங்களில் ரெட்டி ராஜ்யத்தை நிறுவிய புரோலயவேமன் அவர்களுள் முக்கியமானவன். 1331-க்குள்ளோ அதற்குச் சிறிது பின்னரோ வடக்கே மகாநதியிலிருந்து தெற்கே நெல்லூரிலுள்ள குண்டலகம்மா வரையிலும் இருந்த கடற்கரைப் பகுதி முழுவதும் முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அந்த இடங்களிலிருந்த இந்துத் தலைவர்கள் மக்கள் வாழ்க்கையைப் பழைய மரபுகளின்படி மீண்டும் நெறிப்படுத்தும் பணியைத் தொடங்கினார்கள். அதே சமயத்தில் சோமதேவன் என்பவன் மேற்குத் தெலுங்கு நாட்டு இந்துக்களைத் திரட்டி, கம்பிலியில் ஆளுநனாக இருந்த மாலிக் முகமது என்னும் முஸ்லிம் ஆட்சித் தலைவனை எதிர்த்தான். தான் பண்டைச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்தவனென்று சோமதேவன் கூறிக்கொண்டான். அவனுடைய வழியில் வந்தவர்களே பிற்காலத்தில் விஜயநகரத்தில் ஆட்சி செய்த அரவீடு அரசர்கள். கர்நூலை அடுத்த பகுதி அவனுடைய வலிமை மையமாக இருந்தது. அதனால் அவன் ஆனகொண்டி, ராயச்சூர், முடுகல் ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றுவது எளிதாயிற்று. ஹொய்சள அரசன் மூன்றாம் வல்லாளனும் முஸ்லிம் மேலாதிக்கத்தை உதறிவிட்டுக் கம்பிலி மாகாணத்தின்மீது படையெடுத்தான். மாலிக் முகமதுவால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 'இந்த நாட்டு மக்கள் என்னை எதிர்க்கிறார்கள். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்னும் நிலைமை தோன்றிவிட்டது. என் பக்கம் யாருமே இல்லை. குடிமக்கள் என்னுடைய கோட்டையை வளைத்துக் கொண்டார்கள். உணவுப் பொருள்கள் உள்ளே வர வழி இல்லை. யாரும் வரிச் செலுத்துவதும் இல்லை.' இந்தச் செய்திகளை மாலிக் முகமது சுல்தானுக்கு அனுப்பியதாக நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார். முன்னர் நடந்த போரில் உயிர் துறந்த கம்பிலித் தேவனுடன் தொடர்புடைய யாரேனும் ஒருவர் சென்றாலொழியக் கம்பிலியில் அமைதியை நிலைநாட்டுவது இயலாது என்று சுல்தானுடைய அமைச்சர்கள் கருதினார்கள். அதனால், சுல்தான் ஹரிஹரனையும் அவனுடைய தம்பி புக்கனையும் கம்பிலிக்கு அனுப்பினான். அவ்வாறு செய்வதற்கு முன் அவர்கள் தன்னிடம் உண்மையாக இருக்க வேண்டுமென்று அவன் வாக்குறுதி பெற்றுக்கொண்டான்.

ஹரிஹரனும் புக்கனும் சங்கமன் என்பவனுடைய மக்கள். அவர்களோடு பிறந்தவர்கள் இன்னும் மூவர் இருந்தனர்.

முதலில் அவர்கள் இரண்டாம் பிரதாபருத்திரனிடம் அலுவல் பார்த்தார்கள். 1323-ல் வாரங்கலை முஸ்லிம்கள் பிடித்துக் கொண்டபின் அவர்கள் கம்பிலிக்குச் சென்றார்கள். ஆனால், 1327-ல் கம்பிலியும் வீழ்ந்தபோது, அவர்களை முஸ்லிம்கள் சிறைபிடித்து டில்லிக்கு அனுப்பினார்கள். அங்கு அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவியதால் சுல்தான், அவர்களை நல்லபடி நடத்தினான். மாலிக் முகமதுவுக்குப் பதிலாகக் கம்பிலியின் ஆட்சியை ஏற்று, இந்துக் குடிமக்களின் கலகத்தை அடக்குவதற்காகச் சுல்தான் மீண்டும் அவர்களைக் கம்பிலிக்கு அனுப்பினான். அவர்கள் கம்பிலியை அடைந்தபின் உண்மையில் என்ன நடந்தது என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அதைப்பற்றி முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கூறும் செய்தி இந்து மரபுவழிச் செய்திக்கு மாறாக இருக்கிறது. ஆனால், சுல்தானுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான அவர்கள் மிக விரைவில் இஸ்லாம் மதத்தைக் கைவிட்டு, மீண்டும் இந்து மதத்திற் சேர்ந்துகொண்டார்களென்றும், டில்லி சுல்தானின் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்கு மாறாகப் புதியதோர் இந்து ராஜ்யத்தை நிறுவினார்களென்றும், அந்த ராஜ்யந்தான் பின்னர் வலிமைமிக்க விஜயநகரப் பேரரசாக வளர்ந்தது என்றும் இரு சாராரும் ஒருங்கே ஒத்துக்கொள்கின்றனர்.

ஹரிஹரனும் புக்கனும், முதலில் சுல்தானிடம் உண்மையாகத்தான் நடந்துகொண்டார்கள். ஆனகொண்டிக் கோட்டையோடு முன்னர் அவர்களுக்கிருந்த தொடர்பு அவர்களுடைய வேலையை எளிதாக்கியது. எனினும், அவர்கள் முஸ்லீம் மதத்தைத் தழுவியிருந்தது சில குடிமக்களை அவர்களுக்கு எதிராகக் கிளப்பிவிட்டது. ஆனால், அவர்கள் கடைப்பிடித்த சமரச முயற்சிகளின் விளைவாக மக்களின் எதிர்ப்புணர்ச்சி மறைந்தது. அவர்கள் வன்முறையைத் தவிர்த்தார்கள்; இன்றியமையாச் சமயங்களில் மட்டும் அதனைக் கையாண்டார்கள். குத்தியும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளும் முதலில் ஹரிஹரனுடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டன. ஆனால், மூன்றாம் வல்லாளன்மீது ஹரிஹரன் தொடுத்த போர் அவ்வளவாக வெற்றி பெறவில்லை. அதன்பின் ஹரிஹரனும் புக்கனும் வித்தியாரணியரைச் சந்தித்தார்களென்றும், அவருடைய போதனையின் பயனாக அவர்கள் மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்பினார்களென்றும், இஸ்லாத்துக்கு எதிராக இந்து மதத்தை ஆதரிக்கும் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்களென்றும் இந்து மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. ஹரிஹரன் மீண்டும் வல்லாளனோடு போர்

தொடுத்தான். அதில் அவன் பெற்ற வெற்றி அவன் மேலும் பல போர்களைச் செய்வதற்கும், தான் வென்ற நாடுகளை இணைத்துத் தனக்குச் சொந்தமான ராஜ்யம் ஒன்றை நிறுவுவதற்கும் தேவையான ஊக்கத்தையும் வாய்ப்பையும் அவனுக்கு அளித்தது.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற முக்கியமான அரசியல் மாறுதல் தென்னிந்தியாவில் துக்ளக் ஆதிக்கத்தின் அழிவுக்கு முன்னோடியாயிற்று. மா'பார் ஆளுநனான ஜலாலுதீன் ஹாசன்ஷா, முகமது பின் துக்ளக்கிடம் உண்மையாயிருந்த ஊழியர்களைக் கொன்றுவிட்டு, தான் முழு உரிமை பெற்ற சுல்தான் என்று விளம்பரப்படுத்தி, தங்க நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் தன்னுடைய பெயரிலேயே அடித்து வெளியிடத் தொடங்கினான். (1333–34), அந்தக் கலகத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட முகமது பின் துக்ளக் ஒரு படையுடன் வாரங்கலுக்குச் சென்றான். ஆனால் அங்குத் தோன்றிய தொத்து நோய் ஒன்று அவனுடைய படை வீரர்களுள் பெரும்பாலாரின் உயிரைக் குடித்துவிட்டது. சுல்தானையும் அந்த நோய் தீண்டி விட்டது. எனவே, தன் முயற்சியில் எத்துணையும் வெற்றி யடையாமலே அவன் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. அதனால், தென்னிந்தியாவில் முன்னரே மங்கியிருந்த டில்லி சுல்தானியத்தின் மதிப்பு அடியோடு அழிந்தது. சுல்தானும் தொத்து நோயால் மாண்டு போனான் என்ற ஒரு பொய் வதந்தியின் விளைவாக முன்னரே தோன்றியிருந்த குழப்பம் அதிக மாயிற்று. அதனால், இந்து முஸ்லிம் ஆகிய இருவகைக் கலகக் காரர்களும் மேலும் ஊக்கமடைந்தார்கள்.

புரோலைய நாயக்கன் இறந்த பின் அவன் உறவினனான காப்பைய நாயக்கன் புரோலையன் தொடங்கிய பணியைத் தொடர்ந்து நடத்தினான். அமீர்களும், அவர்களுடைய அடிமை களும், நாடு முழுவதும் பரவலாக வாழ்ந்துவந்த முஸ்லிம் வணிகர்களும், இஸ்லாத்தைத் தழுவிய இந்துக்களும் இந்து ஆட்சியையும் இந்து 'தர்மத்தையும்' தக்காணத்தில் மீண்டும் நிலைநாட்டும் முயற்சிக்குப் பெருந்தடையாயிருப்பார்கள் என் பதைக் காப்பையன் உணர்ந்தான். அதனால் அவன் மிகவும் எச்சரிக்கையாகத் தன் வேலையைச் செய்தான். அப்போது தென்னிந்தியாவில் இருந்த இந்து அரசர்களுக்குள் மிகவும் வலிமை வாய்ந்தவனான மூன்றாம் வல்லாளனோடு காப்பையன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். வல்லாளன் தன்னுடைய ராஜ்யத்தின் வட எல்லையைப் பலப்படுத்தித் தேவகிரியிலிருந்து

படையெடுப்பு நிகழ்ந்தால் அதனை எதிர்ப்பதற்குத் ஆயத்த மாயிருந்தான். தெலிங்கானுவில் முஸ்லிம் ஆதிக்கத்தைக் களைவதில் முனைந்திருந்த காப்பையனுக்குத் துணையாக அவன் ஒரு படையை அனுப்பினுன். அந்தப் படையின் துணையுடன் காப்பையன் வாரங்கல் ஆளுநனை மாலிக் மக்புலை வென்ருன். மாலிக் மக்புல் தேவகிரிக்கு ஓடி, அதன் பின் அங்கிருந்து டில்லிக்கு ஓடிப்போனுன் (1336). அதனுல் தெலிங்கானுவில் முஸ்லிம் ஆதிக்கம் அழிந்தது. அதற்குப் பிறகு மிக விரைவில் வல்லாளனும் காப்பையனும் சேர்ந்து மா'பாரின் வடபகுதியான தொண்டை மண்டலத்தின் மீது படையெடுத்து, கோட்டை களிலிருந்த முஸ்லிம் படைகளைத் துரத்திவிட்டு, அந்த நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை அங்கே பரம்பரையாக ஆண்டுவந்த சம்புவராய மரபின் வழித் தோன்றல் ஒருவனிடம் ஒப்படைத் தார்கள். ஏனைய இடங்களிலும் இந்து அரசுகள் தோன்றின. கொப்புல வமிசத்தைச் சேர்ந்த பித்தாபுர அரசர்கள் கோதாவரியி லிருந்து கலிங்கம் வரையிலிருந்த கடற்கரைப் பகுதியில் தங்கள் ஆட்சியை நிறுவினுர்கள். ஸ்ரீசைலத்திலிருந்து வங்கக் கடல் வரையில் இருந்த பகுதியில் கொண்டவீடு ரெட்டிகள் ஒரு சிற்றரசை நிறுவினுர்கள். ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கின்ற நலகொண்டா மாவட்டத்து மலைப் பகுதியில் ராஜகொண்டாவை மையமாகக் கொண்ட ஒரு சிறு ராஜ்யத்தை வெலமர்கள் நிறுவினுர்கள். இவ்வாறு மராத்திய மாகாணந் தவிர, தக்காணத்தின் ஏனைய பகுதிகள் எல்லாமே துக்ளக் ஆட்சியை உதறிவிட்டன. மா'பாரில் ஒரு பாதி முஸ்லிம் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது. இன்னெரு பாதியில் ஆட்சி செய்த முஸ்லிம் அரசன் டில்லி சுல்தானை எதிர்த்துக் கலகஞ் செய்தவன்.

இவ்வாறு தக்காணத்தின் எல்லாப் பகுதிகளிலும் தொடங்கிய முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம் ஹரிஹரனையும் புக்கனையும் சிந்தனையில் ஆழ்த்திவிட்டது. அவர்கள் முகமது பின் துக்ளக்கிடம் கொண்டிருந்த ராஜ பக்தி நாளடைவில் குறைந்து போயிற்று. தங்களுடைய நாட்டுக்கும் வழிவழி வந்த தங்களுடைய பழமையான மதத்திற்கும் ஏனைய இந்துக்களைப் போலத் தொண்டாற்ற வேண்டும் என்னும் விருப்பம் அவர்களுடைய உள்ளத்தில் தோன்றியது. அது இயல்பே. ஆனுல், அந்த விருப்பம் நிறைவேறுவதற்கு ஏற்ற மிகச் சிறந்த வழியை அவர்கள் கண்டதுதான் நமக்கு வியப்பளிக்கிறது. அவர்கள் வித்தியாரணியரைக் கண்டார்கள். வித்தியாரணியரும் அவர்களை அறிந்தார். சமயத் துறையிலும் மெய்யுணர்வுத்

துறையிலும் அந்த நாளில் மிக உயர்ந்த இடத்தை வகித்த வித்தியாரணியரைப் போன்ற புனிதரால்தான் முஸ்லிம் மதத்தைத் தழுவியிருந்த ஹரிஹரனையும் புக்கனையும் மீண்டும் இந்து மதத்திற் சேர்த்துக் கொள்ளவும், அவ்வாறு அவர்கள் சேர்ந்து கொண்டதை ஏனைய இந்துக்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்யவும் இயலும். எனவே, தங்கள் உள்ளத் தூண்டுதலுக்கு ஏற்றவாறு நடப்பதற்குத் தங்களுக்கிருந்த ஒரே வழி வித்தியாரணியரைக் கண்டவுடன் தங்கள் முன்னுல் விரிந்து கிடப்பதை ஹரிஹரனையும் புக்கனும் கண்டார்களென்று நாம் கூறலாம். இவ்வாறு, டில்லி சுல்தானுடைய நம்பிக்கைக்குரிய துணைவர்களும் அவனுடைய ஆட்சியை மீண்டும் நிறுவுவதற்காகத் தக்காணத்திற்கு வந்தவர்களும் ஆகிய ஹரிஹரனும் புக்கனும் பண்டை இந்துப் பண்பாட்டை முஸ்லிம் தாக்குதலினின்றும் காக்கும் பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அதனை நிறைவேற்றுவதற்காக அவர்கள் விஜயநகர ராஜ்யத்தை நிறுவினுர்கள். அது பிற்காலத்தில் பெரும்புகழ்பெற்று வரலாற்றுச் சிறப்புடைய மிகப் பெரியஇந்து ராஜ்யங்களுள் ஒன்ருய் விளங்கியது. இது ஒரு வியத்தகு வரலாற்றுத் திருப்பம்.

முதலில் சுல்தானுக்காகக் கம்பிலி ராஜ்யத்தைக் கைப்பற்றிய சங்கம சகோதரர், அதே முறையில் இன்னும் பல இடங்களையும் கைப்பற்றியபின், இந்து மதத்திற்கு மீண்டு, தங்களுடைய சுயேச்சையை விளம்பரப்படுத்தி ஆனகொண்டிக்கு எதிரில் துங்கபத்திராநதிக் கரையில் தென்னிந்தியாவில் புதியதொரு நகரை நிறுவி அதற்கு விஜய நகர் (வெற்றி நகரம்), வித்யா நகர்[1] (கல்வி நகரம்) என்ற வளஞ்சான்ற பெயர்களைக் கெடுத்தார்கள். அந்த நகரில், 1336 ஏப்ரல் 18ஆம் நாளன்று, அங்கே எழுந்தருளியிருக்கும் இறைவனுன விருபாட்சன் முன்னிலையில், இந்துமத வழக்காறுகளின்படி முதலாம் ஹரிஹரன் முடிசூடிக் கொண்டான். கிருஷ்ணு நதிக்குத் தெற்கிலுள்ள எல்லா நாடுகளும் இறைவன் விருபாட்சனுக்கே உரியவை என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஹரிஹரன் தன்னுடைய ராஜ்யத்தை விருபாட்சனுடைய பிரதிநிதி என்ற முறையில் ஆட்சிசெய்யத் தொடங்கினுன். அரசின் ஆணைகளுக்கெல்லாம் விருபாட்சன் பெயரில் கையொப்பமிட்டு அவற்றை உறுதிப்படுத்தும் முறையை ஹரிஹரன் கையாண்டான். அவனுக்குப் பின்வந்த அரசர்களும் அந்த முறையைத் தொடர்ந்து பின்பற்றினுர்கள்.

[1] இந்தப் பெயர் இந்த வரலாற்று நிகழ்ச்சிகளில் வித்தியாரணியர் வகித்த முக்கிய இடத்தைக் குறிக்கிறது.

தொண்டை மண்டலத்தில் சம்புவராய ஆட்சியை ஏற்படுத்துவதற்காக வல்லாளன் எடுத்த நடவடிக்கையால் அவனுக்கும் மதுரையில் புதிதாக முஸ்லிம் ஆட்சியை நிறுவியிருந்த அரசனுக்கும் பகை மூண்டது. அதனால் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை நடந்துகொண்டே இருந்தது. அதன் விளைவாக வலிமை இழந்த ஹொய்சள ராஜ்யத்தை விஜயநகர அரசர்கள் கைப்பற்றித் தங்களுடைய ஆட்சிக் கீழ்க் கொண்டு வருவது எளிதாயிற்று. மதுரையில் ஜலால் உதீன் ஹாசன்ஷா ஐந்தாண்டு ஆட்சி செய்த பின், 1340-ல் கொலை செய்யப்பட்டான். அவனுக்குப் பின் அவனுடைய அமீர்களில் ஒருவனான அலாவுதீன் உடாஜி பட்டத்துக்கு வந்தான். அவன் போரில் மிகவும் விருப்பமுடையவன். அதனால், அவன் வல்லாளனோடு போர் செய்வதற்கு ஆயத்தம் செய்தான். வல்லாளன் 1340-ல் திருவண்ணாமலைக்கு வந்து தன் படையுடன் காத்திருந்தான். உதாஜியின் படை 1341-ல் வல்லாளனை எதிர்த்தது. அப்போது நடந்த சண்டையில் உதாஜி வெற்றி பெற்றான். ஆனால், அதே சமயத்தில் எவனோ ஒருவன் எய்த அம்பு அவனைக் கொன்றுவிட்டது. அதனால் வல்லாளன் தன் தோல்வியை வெற்றியாக மாற்றினான். அதனுடன் மதுரையில் முஸ்லிம் ஆட்சி முடிவுற்றது என்று தோன்றியது. பிரபுக்கள் உதாஜியின் மருமகனை சுல்தானாக்கினார்கள். ஆனால், அவன் அவர்களுக்கு மனநிறைவளிக்காததால் அவனைக் கொன்றுவிட்டார்கள். அதன் பின் பட்டத்துக்கு வந்த கியாசுதீன் தம்கனி ஒரு ரத்தவெறி பிடித்த அரக்கன். ஆனால் அவன் திறமையற்றவனென்று சொல்லமுடியாது. அதற்குள் முஸ்லிம் படைகளை ஒரு போர்க்களத்தில் சந்தித்துத் தோல்வியுறச் செய்த வல்லாளன் கியாசுதீன் அரியணையேறிய சமயத்தில் கண்ணனூர்க் கொப்பக் கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தான். முற்றுகை ஆறுமாதம் நடந்தது. அதன் முடிவில் வல்லாளன் மிகவும் முட்டாள்தனமாக நடந்து தன்னுடைய முடிவுக்குத் தானே காரணமானான். கோட்டைக்குள்ளிருந்த முஸ்லிம்கள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கியபோது, தாங்கள் சரணமடைவதுபற்றிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்குமுன் மதுரையிலிருந்த சுல்தானைக் கலந்தாலோசிப்பதற்கு வல்லாளனுடைய இசைவை வேண்டினார்கள். அந்த முட்டாள் அதற்கிசைந்தான். கியாசுதீனுக்குச் செய்தி எட்டியதும் அவன் 4000 போர் வீரர்களுடன் (அப்போதிருந்த நிலையில் அவன் அதைவிடப் பெரிய படையைத் திரட்ட முடியவில்லை) கண்ணனூர்க் கோட்டைக்கு விரைந்தான். தன் பாசறைமீது நிகழ்ந்த எதிர்பாராத தாக்குதலை வல்லாளனால் சமாளிக்க முடியவில்லை. சின்னபின்னமாகக் சிதறியோடிய

இந்துக்களைத் துரத்திக்கொண்டு சென்ற நசிருதீன் (கியாசுதீனுடைய தம்பி மகன்; பின்னர் மதுரைச் சுல்தான் ஆனவன்) ஒரு முதியவனைக் கண்டு அவனைக் கொல்லப்போகும் தருணத்தில், அவன்தான் வல்லாளன் என்று அவனுடைய அடிமைகளுள் ஒருவன் சொன்னதைக் கேட்டு அவனைச் சிறைபிடித்துக் கொண்டுபோய் கியாசுதீன்முன் நிறுத்தினன். கியாசுதீன் அவனை முதலில் நல்லபடியாகவே நடத்தி அவனிடமிருந்த செல்வத்தையும், யானை குதிரைகளையும் பெற்றுக்கொண்டான். அதன்பின் அவன் வல்லாளனைக் கொன்று, அவனுடைய தோலை உரித்து, அதனுள் வைக்கோலைத் திணித்து, அதனை மதுரை நகரின் மதிற்சுவரில் மாட்டிவைத்தான். 1342-ல் அதனை அதே இடத்தில் கண்டதாக இபன்படூடா எழுதிவைத்திருக்கிருர்.

மூன்ரும் வல்லாளனுக்குப்பின் அவனுடைய மகன் நான்காம் விருபாட்ச வல்லாளன் பட்டத்துக்கு வந்தான். அவன் 1343-ல் முடிசூடிக்கொண்டான் என்ற செய்தியைத் தவிர அவனைப் பற்றி நமக்கு வேருென்றும் தெரியாது; ஏனெனில், புதிதாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருந்த விஜயநகர ராஜ்யம் மிக விரைவில் அதனை விழுங்கிவிட்டது. மூன்ரும் வல்லாளன் உயிரோடிருந்தபோதே புக்கன் பெனுகொண்டாவைப் பிடித்துக் கொண்டான். அவனுடைய துன்பியல் முடிவுக்குப்பின் ஹொய்சள ராஜ்யத்தின் பிற பகுதிகளைப் பிடிப்பது புக்கனுக்கு எளிதாயிற்று. 1334ஆம் ஆண்டின் இடையில் அவன் ஹோசபட்டணத்திற்கும் ஹரிஹருக்கும் அருகிலிருந்த பகுதியில் தன்னுடைய அதிகாரத்தை உறுதியாக நிலைநாட்டிவிட்டான். ‘ஹொய்சள வமிசத்திற்குச் சொந்தமாயிருந்த நிலவட்டம் அவனுடைய கையில் பூண்ட அணிகலன் போல’ ஆயிற்று. மேற்குக் கடற்கரையிலிருந்த துளுநாடும் விரைவில் விஜயநகர ஆட்சிக்குள் வந்தது. அந்த நாட்டை மூன்ரும் வல்லாளன் வென்று ஹொய்சள ராஜ்யத்திற் சேர்த்திருந்தான். ஆனல், அவனுடைய ஆட்சியின் இறுதியில் துளுநாடு மீண்டும் தன்னுரிமை பெற்றது. ஆனல், 1345ஆம் ஆண்டிலோ அதற்குச் சற்று முன்னரோ அது விஜயநகர மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டது. விஜயநகரம் நிறுவப்பெற்றபின் ஒரு பத்தாண்டுக் காலத்தில் சங்கம சகோதரர் அண்டை நாடுகளை வென்று தங்களுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்தும் வேலையில் ஈடுபட்டார்கள். பாதாமி 1340ஆம் ஆண்டிலேயே விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதியாகிவிட்டது.

புதிதாகத் தோன்றியிருந்த முஸ்லிம் ஆபத்தை வெற்றியுடன் எதிர்க்கவேண்டுமானல் தக்காணத்திலிருந்த பல்வேறு இந்து

ராஜ்யங்களின் வலிமையனைத்தையும் ஒன்றுதிரட்டவேண்டு மென்பதையும், அவை ஒன்றோடொன்று பொருதுகொண் டிருக்கும் நிலைமைக்கு முடிவுகண்டு அவையெல்லாவற்றையும் ஒரு பேரரசின் ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டுமென்பதையும் உணர்ந்த ஹரிஹரன் அந்த வேலையில் தீவிரமாக ஈடுபட்டான். அவன் அரசனாக முடிசூட்டிக்கொண்ட பத்தாண்டுகளுக்குள் அந்த முயற்சியில் பெரு வெற்றியடைந்தான். 1346-ல் சங்கம சகோதரர் ஐவரும் அவர்களுடைய முக்கிய உறவினர்களும் துணைவர்களும் இந்துமதத்தில் ஒப்பற்ற உயர்நிலை வகித்த வித்தியாரண்யருடைய பீடமாகிய சிருங்கேரி மடத்தில் ஒன்று கூடி, அரபிக்கடலுக்கும் வங்கக்கடலுக்கும் இடையிலிருந்த எல்லா நாடுகளையும் தன்னுடைய ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்திருந்த விஜயநகரப் பேரரசின் வெற்றி விழாவினை (விஜயோத்சவத்தை) வித்தியாரணியருடைய முன்னிலையில் கொண்டாடினார்கள்.

ஆனால், அடுத்த ஆண்டிலேயே (1347) தக்காண முஸ்லிம் சுல்தானியம் தோன்றியது. அதனால் தென்னிந்திய இந்துப் பண்பாட்டுக்கு இஸ்லாம் மதத்தினால் ஏற்பட்ட ஆபத்து மிகவும் நெருங்கி வந்துவிட்டது மட்டுமன்றி அது நிலையான பேராபத் தாகவும் மாறியது. எனவே, ஹரிஹரனும் அவன் உடன் பிறந்த வர்களும் தங்களுடைய பணியைத் தக்க சமயத்தில்தான் தொடங்கியிருந்தார்கள். இன்னுஞ் சிறிது காலங் கடந்திருந்தால் அந்த ஆபத்தை அவர்கள் தடுக்கமுடியாத நிலை எற்பட்டிருக்கக் கூடும். இப்போது நாம் பாமினி சுல்தானியத்தின் தோற்றத் தையும் வரலாற்றையும் கவனிப்போம். இதற்கு மேற்பட்ட விஜய நகர வரலாற்றினை அடுத்த அதிகாரத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

முகமதுபின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் கிளம்பிய பல்வேறு கலகங்களின் விளைவாக அவனுடைய பேரரசு சிதைந்தது. அந்தச் சிதைவின் பயனாக பாமினி ராஜ்யம் தோன்றியது. தௌலதாபாத்து மாகாணத்தில் வருவாய்த்துறை அலுவலர் பலர் இருந்தனர். அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து சுல்தானிடம் அலுவல் பார்த்தவர்கள். அமீர் என்பது அவர்களுடைய அலுவல் பெயர். ஒவ்வோர் அமீரும் நூறுநூறு போர்வீரரை வைத்திருக்கவேண்டும். அதனால் அவர்களை நூற்றுவர் தளபதி என்று சொல்லலாம். முகமது பின் துக்ளக் விதித்திருந்த அளவுக்குமீறிய வரிகளை வசூலிப்பதற்கு அவர் களால் முடியவில்லை. அவர்கள் டில்லிக்கு அனுப்பிய தொகை, சுல்தான் எதிர்பார்த்த அளவுக்கு மிகவும் குறைந்திருந்தது. அதனால் சுல்தான் அவர்கள்மீது ஐயங்கொண்டான். சுல்தா

னுடைய ஆணைக்கு இணங்க தௌலதாபாத் ஆளுநன் அந்த அமீர்களைப் பாதுகாப்புடன் புரோச்சுக்கு அனுப்பினான். அண்டை மாகாணமாகிய மாளவத்திலிருந்த அமீர்களைச் சுல்தான் இரக்கமின்றிக் கொன்றுவிட்டான் என்ற செய்தி அவர்கள் காதுக்கு எட்டியிருந்தது. தங்களையும் அந்த நிலைக்கு ஆளாக்கிக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. எனவே, முதல்நாள் பயணத்தின் இறுதியில் அவர்கள் கலகஞ்செய்து, தௌலதாபாத்துக்குத் திரும்பிவந்து, அங்கிருந்த வலிமையற்ற ஆளுநனைச் சிறையிலடைத்துவிட்டு, தங்களுக்குள் ஒருவனும் ஆப்கானிய நாட்டிலிருந்து வந்திருந்தவனும் ஆகிய இஸ்மாயில் முக் என்பவனை நசிருதீன்ஷா என்ற பட்டப்பெயருடன் தக்காணத்தின் அரசன் என்று விளம்பரப்படுத்தினார்கள். ஆனால், புரோச்சில் தங்கியிருந்த முகமதுபின் துக்ளக் ஒரு படையுடன் தௌலதாபாத்துக்கு வந்து, கலகக்காரர்களைத் தோல்வியடையச் செய்து, அவர்களை தௌலதாபாத்துக் கோட்டையில் அடைத்து, வெளியில் காவல்போட்டுவிட்டான். எனினும், கலகக்காரர்களுள் சிலர் ஜாபர்கான் என்று வேறு பெயருடைய ஹாசன் கங்கு என்பவனுடைய தலைமையில் குல்பர்காவுக்குத் தப்பியோடிவிட்டார்கள். அவ்வாறு தப்பியோடியவர்களுள் இஸ்மாயிலினுடைய சகோதரர்களும் இருந்தார்கள். சுமார் மூன்று மாதத்திற்குள் ஹாசன்கங்கு ஒரு கணிசமான படையைத் திரட்டிவிட்டான். அந்தப் படையில் காப்பைய நாயக்கனுடைய போர் வீரர் சிலரும் இருந்தனர். தான் திரட்டிய படையுடன் ஹாசன் பீடாருக்குச் சென்றான். அதற்குள் குஜராத்தில் கிளம்பிய ஒரு கலகத்தை அடக்குவதற்காக முகமது பின் துக்ளக் அங்கே சென்றுவிட்டான். சுல்தான் விட்டுச்சென்றிருந்த படையின் தலைவனைக் கொன்றபின், ஹாசன் அந்தப் படையையும் எளிதில் தோல்வியுறச் செய்தான். அதன்பின் அவன் தௌலதாபாத்திற்குச் சென்றான். அங்கிருந்த சுல்தானுடைய போர்வீரர்கள் தௌலதாபாத்துக் கோட்டையின் முற்றுகையைக் கைவிட்டு மாளவத்திற்கு ஓடிவிட்டார்கள். முதுமையெய்தியவனும் கடுமையாக உழைக்க விரும்பாதவனும் ஆகிய நசிருதீன் இஸ்மாயில்ஷா தொல்லை மிகுந்த தக்காணத்தின் அரசன் என்ற பதவியிலிருந்து விலகிக் கொண்டு, அதனை ஹாசனுக்கு அளித்துவிட்டான். ஹாசன் 1347 ஆகஸ்டு மூன்றாம் நாள் அபுல்முசபர் அலாவுதீன்பஹமன்ஷா என்ற பட்டப் பெயருடன் தக்காணத்தின் அரசனென்று தன்னை விளம்பரப்படுத்தினான். பாரசீக நாட்டில் இருந்த இஸ்பண்டியர் என்பவனுடைய மகனான பஹமா என்ற வீரனுடைய மரபில் வந்தவனென்று அவன் தன்னைப் பற்றிப் பெருமையாய்க் கூறிக் கொண்டான். (அந்த பஹமனுடைய வரலாற்றில் புராண

இயல்புகள் பல இருக்கின்றன.) ஆனால், கங்கு என்ற பார்ப்பன னுடைய அடிமையாய் இருந்த ஹாசன் அந்தப் பார்ப்பனனுடைய நினைவாக கங்குபஹமன் (கங்குபிராஹ்மன்) என்னும் பெயரை வைத்துக்கொண்டானென்று பெரிஷ்டா கூறுகிறார்.

சுல்தான் அலாவுதீன் பஹமன்ஷா பதினோராண்டு ஆட்சி செய்தபின் 1358 பிப்ரவரியில் இறந்தான். தன்னுடைய ராஜ்யத் தின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கு ஏற்ற சண்டைகளிலும் சமா தானப் பேச்சு வார்த்தைகளிலும் அவனுடைய ஆட்சிக் காலத் தின் பெரும்பகுதி கழிந்தது. தொடக்கத்தில் பிரபுக்களுடைய கடுமையான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டியதாயிற்று. அவர்களுள் பலர் டில்லி சுல்தானிடம் பற்றுடையவர்கள்; வேறு சிலர் அவ்வாறு காட்டிக் கொண்டவர்கள். சமயத்திற்கேற்ற வாறு வன்முறையையும் மென்முறையையும் கலந்து கையாண்டு, சில ஆண்டுகளுக்குள் அவன் தன்னுடைய நிலைமையை வலிமை யாக்கிக் கொண்டான். வாரங்கல் காப்பைய நாயக்கனும் கௌலாஸ் கோட்டையை பஹமன் ஷாவுக்குக் கொடுத்துவிட்டு அவனுக்குத் திறை செலுத்தவும் ஒப்புக் கொண்டான். 1349ஆம் ஆண்டிலேயே பஹமன்ஷா விஜயநகரப் பேரரசைத் தாக்கிக் கரைச்சூர் என்னும் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டான். ஐந்தாண்டுக்குப் பின் தன் உறவினனான மதுரைச் சுல்தானுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு பஹமன்ஷா மீண்டும் விஜய நகரப் பேரரசைத் தாக்கினான். அப்போது துங்கபத்திரா நதி வரையிலிருந்த எல்லாப் பகுதிகளையும் பிடித்துக்கொண்டா னென்று முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர், ஆனால், முதலாம் ஹரிஹரன் தொடக்கத்தில் நடந்த ஒரு சண்டையில் பஹமன்ஷாவை வென்றான் என்று இந்துக்கள் கூறுகிறார்கள். அது எப்படி யிருந்தாலும், அலாவுதீன் சாகும்போது அவனுக்கு ஒரு பரந்த ராஜ்யம் இருந்ததென்பதை நாம் அறிகிறோம். அத னுடைய எல்லை கடற்கரைவரையில் நீண்டிருந்தது. கோவா, தபோல் ஆகிய துறைமுகங்கள் அந்த எல்லைக்குள் இருந்தன. கிழக்கில் அது பொங்கிர் வரையில் பரவியிருந்தது. வடக்கிலும் தெற்கிலும் பென்கங்காவும் கிருஷ்ணாவும் முறையே அதன் எல்லை களாயிருந்தன. ஹாசன்ஷாவை ஒரு முஸ்லிம் அரசனென்று கலிபா ஏற்றுக்கொண்டான். அவனுடைய நாணயங்களிற் காணப்படும் 'இரண்டாம் அலெக்சாண்டர்' என்னும் பொறிப்பு மேலும் பல நாடுகளை வெல்லவேண்டும் என்ற அவனுடைய திட்டங்களைக் குறிக்கிறது. அவன் குல்பர்காவைத் தன் தலைநகர மாக்கி அதிற் பல அழகிய கட்டடங்களைக் கட்டினான். அவன் தன்னுடைய ராஜ்யத்தை நான்கு மாகாணங்களாகப் பிரித்து

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆளுநனை நியமித்தான். அவை குல்பர்கா, தௌலதாபாத், பீடார், பேரார் என்பவை.

அவனுக்குப்பின் அவனுடைய மூத்த மகன் முதலாம் முகமது பட்டத்திற்கு வந்தான் (1358-1377). அவன் தளராத முயற்சியும் முறையாகச் செயல்படும் நிர்வாகத் திறனும் பெற்றவன். அவன் வகுத்த ஆட்சிமுறை அவனுக்குப்பின் நெடுங்காலம் நிலைத் திருந்தது. பிற்காலத்திலிருந்த ராஜ்யங்களும் அந்த ஆட்சிமுறை யின் தன்மைகளிற் பலவற்றைக் கடைப்பிடித்தன. அவன் தனக்குத் துணையாகப் பீஷ்வா உட்பட்ட எட்டு அமைச்சர் களை நியமித்தான். மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் தந்ததன் மூலம் மாகாண நிர்வாக அதிகாரத்தைப் பன்முகப்படுத்தினான். அரசன் திறமையுடையவனாகவும் அடிக்கடி சுற்றுப்பயணம் செய்பவனாயும் இருந்தவரையில் அந்த ஆட்சிமுறை உண்மையி லேயே நற்பயன் தருவதாய் இருந்தது. ஆனால், இறுதியில் அது பாமினி ராஜ்யத்தின் சிதைவுக்குக் காரணமாயிற்று. அவன் தன்னுடைய மெய்காப்பாளர் படையை நான்கு இடைமாற்றுப் பிரிவுகளாகச் செய்து, ஒவ்வொரு பிரிவும் நந்நான்கு நாள் முறைபோட்டுக்கொண்டு பணியாற்ற வேண்டுமென்று விதித் தான். அவன் ஆறலைகள்வர்களை அழித்து நாட்டின்பெருவழிகளைக் காத்தான்; 20,000 கொள்ளைக்காரர்களைக் கொன்றபின்னரே பெரு வழிகள் கள்ளர் பயமில்லாதவை என்று அவன் மனநிறை வடைந்தான். குல்பர்காவிலுள்ள பெரிய மசூதி 1367-ல் கட்டி முடிக்கப்பட்டது. இந்தியாவிலுள்ள மசூதிகளுள் குல்பர்கா பெரிய மசூதி ஒன்றில்தான் திறந்த முற்றம் இல்லை. 'அதனுடைய வீறார்ந்த தோற்றமும் பெருந்திட்பமும் மனத்தில் ஆழ்ந்து பதிகின்றன' என்று அதனைப்பற்றி அறிந்தவர் கூறுகின்றனர். முதலாம் முகமதுவின் தாயார் மெக்காவுக்குச் சென்றதன் விளை வாக அவன் ஒரு முஸ்லிம் அரசனென்று கலிபா ஏற்றுக் கொண்டான் (கலிபா அப்போது மற்றவர் கைப்பாவையாய் இருந்தான் என்பது வேறு கேள்வி.)

முகமது, தெலிங்கானாவோடும் விஜயநகரோடும் போர் செய் தான்; தௌலதாபாத்தில் கிளம்பிய ஒரு கலகத்தை அடக்கினான். கௌலாஸ் கோட்டையைத் திருப்பித் தருமாறு காப்பைய நாயக்க னும், ராயச்சூர் ஆற்றிடை நிலத்தைத் திருப்பித்தருமாறு புக்க னும் முகமதுக்குச் செய்தியனுப்பினார்கள். (அந்த இரண்டு பகுதி களும் அலாவுதீன் பஹமன்ஷா கைப்பற்றி பாமினி ராஜ்யத் தோடு இணைத்தவை.) தங்கள் வேண்டுகோளுக்கு முகமது இணங்காவிட்டால், டில்லி சுல்தானோடு சேர்ந்து அவன்மீது

நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர்கள் அச்சுறுத்தினர்கள். ஆனால், முகமது உடனே மறுமொழி தரவில்லை. செய்தி கொண்டு வந்த தூதர்களைப் பதினெட்டு மாதம் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டு போருக்கு ஆயத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டான். அந்த வேலை முடிந்ததும் அவன் ஒரு செருக்குமிக்க மறுமொழியை அனுப்பினன். தன்னுடைய 'கீழாட்கள்' தான் பட்டத்திற்கு வந்தபோது வழக்கமாகச் செலுத்தவேண்டிய திறையைச் செலுத்தத் தவறிவிட்டதற்குரிய விளக்கத்தை உடனே அளிக்கவேண்டுமென்றும், அப்போது செய்த குற்றத்திற்கு ஈடாக அவர்கள் தங்களிடம் இருந்த யானைகள் எல்லாவற்றின்மீதும் பொன்னையும் அணிமணிகளையும் வேறு செல்வங்களையும் ஏற்றி அனுப்பவேண்டு மென்றும் முகமது சொல்லியனுப்பினன். அதைக் கேட்டு வெகுண்டெழுந்த காப்பைய நாயக்கன் தன்னுடைய மகன் விநாயகதேவன் (அவன் பெயர் நாகதேவனென்று சிலர் கூறுகின்றனர்) தலைமையில் ஒரு படையை கௌலாஸ் கோட்டையைக் கைப்பற்ற அனுப்பி வைத்தான். அந்தப் படையில் புக்கன் அனுப்பிய 20,000 குதிரை வீரர்களும் இருந்தார்கள். ஆனால், பஹதூர்க்கான் விநாயக தேவனைத் தோல்வி யடையச் செய்தபின்பு தன் படைகளை வாரங்கலை நோக்கி ஏவினன். அங்கு அவன் 1,00,000 தங்க ஹூன்களையும் 26 யானைகளையும் பெற்றுக்கொண்ட பிறகே தெலிங்கானவிலிருந்து வெளியேறினன். அதன் விளைவாகக் காப்பைய நாயக்கனுக்கும் முகமதுக்கும் பகைமை முற்றியது. அதனல் அவ்வப்போது போரும் மூண்டது. எடுத்துக்காட்டாக, 1362-ல் குல்பர்காவில் விற்பதற்காகக் குதிரைகளை ஓட்டிக் கொண்டுபோன வணிகர்களை விநாயகதேவன் மடக்கிக் குதிரைகள் அனைத்தையும் தனக்கே விற்குமாறு அவர்களை வற்புறுத்தி, அவற்றை வாங்கிக்கொண்டான் என்ற செய்தி முகமதுக்கு எட்டியது. அவன் உடனே ஒரு படையொடு சென்று, விநாயக தேவனைப் பிடித்துக் கொன்றுவிட்டு, தெலிங்கானவிற்கு மிகுந்த சேதத்தை விளைத்தான். அவனுக்கும் அந்தச் சண்டையினல் பெருஞ்சேதம விளைந்தது என்பது உண்மையே.

முகமதுக்கு வேறு சில இன்னல்களும் நேர்ந்தன. இவன் தெலுங்கானவின்மீது படையெடுத்துச் சென்றிருந்த சமயத்தில் அவனுடைய உறவினனும் தௌலதாபாத்து ஆளுநனுமான பஹரம்கான் மசந்தரனி கலகஞ் செய்தான். அவன் காப்பைய நாயக்கனேடு சேர்ந்துகொண்டதுமன்றித் தனக்குத் துணைசெய்ய ஒரு படையை அனுப்புமாறு டில்லி சுல்தான் பிரோஸ் துக்ளக்கையும் வேண்டிக்கொண்டான். ஆனல் டில்லியிலிருந்து

அவனுக்கு உதவி வரவில்லை. முகமது ஒரு படையை தௌலதா பாத்தின்மீது செலுத்திவிட்டு மீண்டும் தெலிங்கானவுக்குச் சென்ருன். வாரங்கலையும் கோல் கொண்டாவையும் அவன் முற்றுகையிட்டான். காப்பைய நாயக்கன் காட்டுக்கு ஓட வேண்டியதாயிற்று. கோல் கொண்டா நகரையும் பல யானை களையும் ஏராளமான பொன்னையும் கொடுத்ததுமன்றி அவன் முகமதுக்கு அடங்கி நடக்கும் சிற்றரசனுக இருப்பதற்கும் ஒப்புக் கொண்ட பின்னரே சமாதானம் ஏற்பட்டது. மேலும், அவன் பைங்நீல ரத்தினம் பதித்த ஓர் அரியணையையும் முகமதுக்குக் கொடுத்தான். அந்த அரியணை முதலில் முகமதுபின் துக்ளக்குக் காகச் செய்யப்பட்டது. 1365 மார்ச்சு 21ஆம் நாளன்று முகமது அதன்மீது அமர்ந்து, குல்பர்கா நகரில் ஒரு பெரிய வெற்றி விழாவைக் கொண்டாடினன். அந்த விழாவில் அவன்முன் ஆடியும் பாடியும் அவனை மகிழ்வித்த கலைஞர்களுக்கு விஜய நகரக் கருவூலத்திலிருந்து பணங் கொடுக்கவேண்டுமென்றும், அதற்கான காசோலையை அனுப்புமாறும் முகமது தன் அலுவலர்க்கு ஆணையிட்டான். அவனுடைய அமைச்சர்கள் அவனை எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவில்லை. அந்த முட்டாள்தனமான ஆணையை அப்படியே நிறைவேற்றவேண்டு மென்று அவன் வற்புறுத்தினன் என்று பெரிஷ்டா கூறுகிருர். அந்தக் காசோலையை எடுத்துக்கொண்டு விஜயநகருக்குச் சென்ற ஊழியனைப் புக்கன் (பெரிஷ்டா அவன் பெயரைக் கிருஷ்ணராயன் என்று எழுதி வைத்திருக்கிருன்) கழுதைமேல் ஏற்றி ஊர்வலஞ்செய்தபின், ஒரு படையை நடத்திக்கொண்டு துங்கபத்திரா நதியைத் தாண்டி, முடுகலைப் பிடித்துக்கொண் டான். அதையறிந்து மிகவும் சினங்கொண்ட முகமது தன்னுடைய படை சிறியதாயிருக்கிறதே என்றும் பாராமல் உடனே முடுகல் மீது சென்ருன். புக்கன் எதிரிகளோடு போரிட்டு நாட்டைக் காக்கும் பணியைக் காலாட் படைகளிடம் விட்டுவிட்டுத் தன் குதிரைப் படையோடு பின்வாங்கி ஆதோனிக்குச் சென்று விட்டான். பாதுகாப்பில்லாத கிராம மக்களை முகமது தன் விருப்பம்போல் கொன்று ஊர்களைச் சூறையாடியபின் மழைக் காலத்தைக் கழிப்பதற்காக முடுகலுக்குச் சென்ருன். அவனுடைய மீதிப் படை வீரர்களும் அங்குச் சென்று அவனேடு சேர்ந்துகொண்டார்கள். அதன்பின் அவன் ஆதோனியை நோக்கிச் சென்ருன். 1367ஆம் ஆண்டின் தொடக் கத்தில் துங்கபத்திரைக்குத் தெற்கில் கௌத்தல் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் முஸ்லிம் படை வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்கு முஸ்லிம்களுடைய பீரங்கிப் படையும் குதிரைப் படையும் பெரிதும் காரணமாயின. விஜயநகர பீரங்கிப் படை

மிகவும் காலந்தாழ்த்திச் சண்டையில் இறங்கியது. அதன் தலைவனும் சண்டையில் இறந்துபோனான். அந்தச் சண்டையில் இரு தரப்பினரும் பீரங்கிகளைப் பயன்படுத்தினார்களென்றும், பொதுவாக, ஐரோப்பியரும் துருக்கியரும் பீரங்கிகளைக் கையாண்டார்களென்றும் பெரிஷ்டா மிகவும் தெளிவாகக் கூறுகிறார். தன்னுடைய தோல்விக்குப்பின் புக்கன் மூன்று மாதம் முகமது கையில் அகப்படாமல் இருந்தான். அதன்பின் அவன் தன்னுடைய தலைநகரில் ஒளிந்துகொண்டான். அவ்வளவு பெரிய நகரை முற்றுகையிடுவதற்குப் போதுமான படை வலிமையில்லாத முகமது நோய்வாய்ப்பட்டதாகப் பாசாங்கு செய்து பின்வாங்கினான். அப்போது புக்கன் வெளியே வந்து சண்டையிட்டான். ஆனால் அவன் போர் வீரர்கள் பலரையும் ஓரளவு செல்வத்தையும் இழந்தபின் மீண்டும் தன்னுடைய தலைநகருக்குள் புகுந்துகொண்டான். அதன்பின் முகமது விஜய நகரத்தின் ஆட்சியிலிருந்த மக்கள் அனைவரையும் கொலை செய்யப் போவதாய் அறிவித்து அவ்வாறே செய்யவும் தொடங்கினான். தன்னுடைய காசோலையில் குறித்த பணத்தை விஜய நகர அரசன் செலுத்தும் வரையிலும் அந்தக் கொலைத் தொழிலை நிறுத்தப் போவதில்லை என்றும் அவன் அறிவித்துவிட்டான். இறுதியில் புக்கன் பணத்தைத் தருவதற்கு இசைந்தான். சண்டையும் நின்றது. ஆனால், அதற்குள் நான்கு லட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். அவர்களில் பத்தாயிரம் பார்ப்பனப் புரோகிதரும் இருந்தனர். அந்தப் படுகொலையால் இருதரப்பினரும் பேரதிர்ச்சியடைந்தார்கள். இனிமேல் போர் வீரர்களைத் தவிர ஏனைய மக்களைக் கொல்வதில்லை என்று அவர்கள் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அந்த உடன்படிக்கை சில சமயங்களில் மீறப்பட்டது உண்மைதான். ஆனால், இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நெடுங்காலம் நிலைத்திருந்த பகைமையினால் அடிக்கடி நடந்த சண்டைகளின் கடுமையையும் கொடுமையையும் குறைப்பதற்கு அந்த உடன்படிக்கை ஓரளவு உதவியது.

முகமது விஜயநகரத்தோடு செய்த போர்களைப் பற்றிப் பெரிஷ்டா கூறுவதை அப்படியே நாம் நம்பிவிடக்கூடாது. முதல்போருக்கு பெரிஷ்டா பின்வரும் காரணத்தைக் கூறுகிறார். முகமது ஏராளமான தங்க நாணயங்களை அடித்து வெளியிட்டானும். பாமினி ராஜ்யத்திலிருந்த இந்து வணிகர்கள் அண்டை நாடுகளில் ஆட்சி செய்த இந்து அரசர்களுடைய தூண்டுதலின் பேரில் அவையெல்லாவற்றையும் உருக்கித் தங்கமாக்கி வைத்துக்கொண்டார்களாம். அதனால், முகமது விஜய

நகரின்மீது போர் தொடுத்தானும். இந்தக் கதையை நாம் எப்படி நம்புவது? இரண்டாம் போரைப்பற்றி எழுதும்போது, விஜயநகர அரசன் பெயரைக் கிருஷ்ணராயன் என்று எழுதி யிருப்பது மட்டுமன்றி, போஜ்மல் என்னும் படைத்தலைவன் ஒருவனைப் பற்றியும் பெரிஷ்டா எழுதியிருக்கிறார். அத்தகைய படைத் தலைவன் ஒருவன் இருந்தான் என்பதற்கு எந்தவிதமான வரலாற்றுச் சான்றும் கிடையாது. மேலும், இரண்டாம் போரின் இறுதியில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி பாமினி விஜய நகர ராஜ்யங்களுக்கிடையில் கிருஷ்ணாநதி எல்லையாக இருக்க வேண்டுமென்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர் என்று பெரிஷ்டாவே கூறுகிறார். அதனால், கிருஷ்ணா துங்க பத்திரா ஆறுகளுக்கிடையிலிருந்த நிலப்பகுதி தங்களுக்கே சேர வேண்டும் என்று விஜயநகரத்தார் கொண்டாடிய உரிமையை முகமது ஏற்றுக்கொண்டான் என்பது தெளிவு. பெரிஷ்டா சொல்லுகிறவாறு பாமினிப் படைகளே எல்லாச் சண்டை களிலும் வெற்றி பெற்றிருந்தால் மேலே சொன்ன உடன்படிக்கை ஏற்பட்டிருக்க இயலாது.

விஜயநகரப் போர் முடிந்தபின் முகமது தௌலதாபாத்துக் கலகத்தை எளிதில் அடக்கிவிட்டான். பஹரம்கான் தௌலதா பாத்திலிருந்து ஓடிவிட்டான். அவனை முகமதுவின் படைகள் குஜராத் எல்லை வரையில் துரத்திக்கொண்டு சென்றன.

முகமதுவின் குணநலன்களைப் பற்றிப் பெரிஷ்டா உயர்வாக எழுதுகிறார். புறச் சமயத்தாரைக் கொடுமைப்படுத்துவது பெரிஷ்டாவைப் பொறுத்தவரையில் பாராட்டுக்குரிய செயல் என்றே கூறலாம். ஆனால், 'மதக் கோட்பாடுகளுக்குப் புறம்பாக வாழ்ந்ததால்' முகமது இறந்துபோனான் என்று புர்ஹானி மா' அசிர் என்னும் வரலாற்று நூலின் ஆசிரியர் கூறுகிறார். அவன் அதிகமாகக் குடித்தான் என்பது இந்தக் கூற்றின் பொருளாக இருக்கலாம். முகமதுவின் ஆட்சிக் காலத்தில் பாமினி ராஜ் யத்தின் உள்நாட்டு விவகாரங்கள் அனைத்தையும் சைபுதீன் கோரி என்பவன் கவனித்துக் கொண்டான். அவன் முதல் சுல்தான் ஆட்சிக் காலத்திலிருந்து ஐந்தாம் சுல்தான் ஆட்சிக் காலத்தின் இறுதிவரையிலும் அந்த வேலையைச் செய்துவந்தான். ஆறும் சுல்தான் பட்டத்திற்கு வந்தபோது அவன் இறந்து போனான். அவனுக்கு அப்போது வயது நூறுக்கு மேலிருக்கும்.

முகமதுவுக்குப்பின் அவனுடைய மூத்த மகன் முஜாஹிது பட்டத்துக்கு வந்தான். அவன் விஜயநகரத்துக்குச் சொந்தமான

ஒரு நிலப்பகுதியைக் கேட்டான். விஜயநகர அரசன் மறுத்ததன் பேரில் அவன் அந்த ராஜ்யத்தின் மீது படையெடுத்தான். புக்கன் சண்டையைத் தவிர்த்து அங்குமிங்கும் செல்வதன் மூலம் பாமினிப் படைகள் சோர்வுறுமாறு செய்தான். இறுதியில் அவன் தன் தலைநகருக்குள் சென்றுவிட்டான். முஸ்லிம் படைகள் அந்த நகரை முற்றுகையிட்டன. வெளியரண் வீழ்ந்தது. எனினும் அதன்பின் நடந்த சண்டையில் முஸ்லிம் படைகள் பெருந் தோல்வியடைந்தன. அதன்பின் அவை ஆதோனிக் கோட்டையை ஒன்பது மாதம் முற்றுகையிட்டன. அதனால், எவ்விதப் பயனும் ஏற்படாததால் முஸ்லிம்கள் விஜயநகரத்தோடு சமாதானஞ் செய்து கொண்டார்கள். தன் சிற்றப்பனை தாவூத்கான் விஜயநகர முற்றுகையைத் திறமையாக நடத்த வில்லை என்று முஜாஹிது அவனைக் கண்டித்தான். அதனால் சினங்கொண்ட தாவூத்கான் செய்த சதியால் முஜாஹிது 1378 ஏப்ரல் 15ஆம் நாள் கொலையுண்டான். அதன்பின் தாவூத் கானே அரசனானன். ஆனால் முஜாஹிதின் உடன் பிறந்தாள் தன் சகோதரன் கொலைக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் செய்த சதியால் ஒரு மாதத்திற்குள் தாவூத்கான் கொலை யுண்டான். அதன்பின் முதலாம் அலாவுதீனுடைய கடைசி மகனுடைய மகனை இரண்டாம் முகமது பட்டத்துக்கு வந்தான்.

இரண்டாம் முகமது மதநம்பிக்கை மிகுந்தவன். அவன் அமைதியையும் கவிதையையும் மிகவும் விரும்பினான். அவன் பாரசீகக் கவிஞர் ஹபீசுக்குப் பெரும் பரிசில் அனுப்பி அவர் தன்னுடைய அவைக்கு எழுந்தருளவேண்டுமென்று அழைப்பு விடுத்தான். அதனை ஏற்றுக்கொண்டு கப்பலேறி இந்தியாவுக்குப் புறப்பட்ட ஹபீஸ் பாரசீக வளைகுடாவில் ஏற்பட்ட புயல் ஒன்றைக் கண்டு அஞ்சிப் பயணத்தைத் தொடர மறுத்து விட்டார். 1387–க்கும் 1395க்–கும் இடையில் பாமினிராஜ்யத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின்போது தன்னுடைய குடிமக்களில் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இரண்டாம் முகமது உதவியளித்தான். அச் செயலின்மூலம் அவனுடைய தீய குணம் வெளிப்பட்டது. அவன் 1397 ஏப்ரல் மாதத்தில் காய்ச்சல் கண்டு இறந்தான். அவனுக்குப்பின் அவனுடைய மூத்த மகன் கியாசுதீன் பட்டத்துக்கு வந்தான். நல்லது கெட்டது தெரிந்து நடக்கும் அறிவு அவனுக்கில்லை. ஆனால் அவன் மிகவும் பிடிவாத குணமுள்ளவன். மேலும், அவனுக்கு அப்போது பதினேழு வயதுதான் ஆகியிருந்தது. அவன்மீது சினங்கொண்ட துகல்சின் என்னும் துருக்கிய அடிமை இரண்டு மாதத்துக்குள் (1397 ஜூன்) அவனை அரியணையிலிருந்து இறக்கி

அவன் கண்ணையும் குத்திவிட்டான். அதன்பின் அவனுடைய ஒன்றுவிட்ட தம்பி ஷம்சுதீன் தாவூத் என்பவனை துகல்சின் அரியணையேற்றி, இளைஞனை அவனுக்குப் பதிலாகத் தானே ஆட்சியை நடத்தினான். முதலாம் அலாவுதீனுடைய பேரர்களும் இரண்டாம் முகமதின் மருமக்களும் ஆகிய பிரோஸ் என்பவனும் அவனுடன் பிறந்த அகமது என்பவனும் அரச மரபினர் ஓர் அடிமைக்கு அடங்கியிருப்பதை விரும்பவில்லை. அதனால், அவர்கள் துகல்சின்னைப் பதவியிலிருந்து அகற்ற முயன்றார்கள். முதலில் அவர்களுடைய முயற்சி தோல்வியடைந்தபொதெனினும் பின்னர் 1397 நவம்பரில் அவர்கள் அரண்மனைக்குள்ளிருந்த துகல் சின்னையும் ஷம்சுதீன் தாவூதையும் பிடித்துச் சிறையிலடைத்து விட்டார்கள். அதன்பின் பிரோஸ், தாஜுதீன் பிரோஸ்ஷா என்ற பட்டத்துடன் பாமினி அரசனானான்.

பிரோஸ் நல்ல உடல்வலிமையும் அறிவாற்றலும் உடையவன் பாமினியரசர்களுள் அவனே தலைசிறந்தவன் என்று பெரிஷ்டா கருதுகிறார். புர்ஹானி மா' அசிரின் ஆசிரியர் அவனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்: 'அவன் நல்லவன். நடுவுநிலை கோடாதவன்; பரந்த மனம் படைத்தவன், அவன் திருக் குரானைப் படியெடுப்பதன் மூலம் பெற்ற வருவாயில் வாழ்க்கை நடத்தினான். அவனுடைய குடும்பப் பெண்கள் துணிகளுக்குப் பூவேலை செய்வதன் வாயிலாக வந்த வருவாயில் வாழ்க்கை நடத்தினார்கள்.' ஆனால் இந்தக் கூற்றுகள் உயர்வு நவிற்சியின்பாற் பட்டவை என்று நாம் நினைக்கலாம். நாளடைவில் அவனுடைய குணம் சீர்கேடடைந்த தென்பதில் ஐயமில்லை. அவன் அதிக மாகக் குடித்தான். பெண்களுடைய தொடர்பு அளவுக்கு மீறியதால் அவனுடைய உடல் வலிமை குறைந்தது. அவன் பீமா நதிக்கரையில் பிரோசாபாத் என்னும் புதிய நகரை நிர்மாணித்து, அங்கிருந்த தன்னுடைய மாளிகையின் அந்தப் புரத்தில் பலவேறு நாடுகளைச் சேர்ந்த 800 பெண்களை வைத் திருந்தான். அவனுக்குப் பல மொழிகள் தெரியுமென்றும் தன்னுடைய காமக் கிழத்திகளிடத்தில் அவரவர்களுடைய தாய் மொழியிலேயே உரையாடினான் என்றும் சிலர் கூறுகின்றனர். அவன் தன்னுடைய தம்பி அகமதை முதலமைச்சனாக்கினான். நிர்வாகத் திறமை மிக்க பிரோஸ் ஆட்சியை ஒழுங்காக நடத்தினான். முக்கியமான பதவிகளுக்குப் பார்ப்பனரை நியமிக்க அவன் தயங்கவில்லை.

1398-ல் இரண்டாம் ஹரிஹரன் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுத்தான். அதே சமயத்தில் கிருஷ்ண

நதியின் வடகரையில் ஓர் இந்து வீரன் தலைமையில் கோலி மரபினர் பாமினி ஆட்சியை எதிர்த்துக் கலகஞ் செய்தனர். பிரோஸ் அந்தக் கலகத்தை விரைவில் அடக்கினான். ஆனால், பேராரிலிருந்தும் தௌலதாபாத்திலிருந்தும் பிரோஸுக்குத் துணைபுரிய வந்த படைகள், அதற்குள் பேராரின்மீது படையெடுத்திருந்த கெர்லா நாட்டுக் கோண்டு அரசனுடன் போர் செய்வதற்காகத் திரும்பிப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், கிருஷ்ணா நதியை நோக்கி முன்னேறிய பிரோஸிடம் 12,000 குதிரைவீரர் மட்டும் இருந்தனர். கிருஷ்ணா நதியின் தென் கரையில் முகாமிட்டிருந்த ஹரிஹரனிடம் மிகப் பெரிய படை இருந்தது. ஆனால் அது அமைப்பு நலன் அற்றதாக இருந்தது. எனினும்,போருக்குத் ஆயத்தமாய்க் காத்திருந்த அந்தப் படை எதிர்க்கரையிலிருக்கும்போது கிருஷ்ணா நதியைக் கடந்து சென்று அதனைத் தாக்குவது கடினமானது என்பதை பிரோஸ் உணர்ந்தான். அதனால், குவாசி சிராஜுதீன் எடுத்துக்கூறிய சூழ்ச்சிக்கு பிரோஸ் இணங்கினான். சிராஜுதீனும் அவனுடைய நண்பர் சிலரும் ஊரூராகச் சுற்றித் தங்கள் ஆடல் பாடல்களால் வயிறு வளர்க்கும் கூத்தர் போல் மாறுவேடம் பூண்டு எதிரிகளின் முகாமுக்குச் சென்றார்கள். சில நாள்களில் அவர்கள் சிறந்த கூத்தர்கள் என்ற பெயரைப் பெற்றார்கள். அதன்பின் அவர்கள் ஹரிஹரனுடைய மகன் முன்னிலையில் ஆடுவதற்கு இசைவு பெற்றார்கள். உருவிய வாளோடு நடனமாடிக் கொண்டிருந்த போது அவர்கள் திடீரென்று அரசகுமாரன்மீது பாய்ந்து அவனைக் கொன்றுவிட்டார்கள். அதனால் விஜயநகரப் பாசறையில் உண்டான பெருங் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரோஸ் எதிர்ப்பின்றிக் கிருஷ்ணா நதியைக் கடந்துவிட்டான். ஹரிஹரன் தன்னுடைய மகன் சடலத்தைத் தூக்கிக்கொண்டு விஜய நகருக்கு ஓடினான். பிரோஸ் அவனைத் துரத்திக் கொண்டு போய் ஏராளமான மக்களைச் சிறைபிடித்தான். அவர்களுள் 10,000 பார்ப்பனரும் இருந்தனர். ஆனால் ஒரு பெருந் தொகையை மீட்புப் பணமாகப் பெற்றுக்கொண்டு சிறைப்பட்டவர்களுக் கெல்லாம் பிரோஸ் விடுதலையளித்தான். அதன்பின் பிரோஸ் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தை குல்பர்கா மகாணத்திலிருந்து பிரித்து அதற்கென்று ஒரு ராணுவ ஆளுநனை நியமித்தான்.

அதன்பிறகு பிரோஸ் மிக விரைவில் நரசிங்க ராஜன் ஆட்சியிலிருந்த கெர்லா நாட்டின்மீது படையெடுத்தான். நரசிங்கன் பிரோஸுக்கு 40 யானைகளையும் ஏராளமான பொருளையும் தன் மக்களுள் ஒருத்தியையும் கொடுத்துச் சமாதானம் செய்து கொண்டான். 1401-ல் பிரோஸ் ஏராளமான பரிசில்களோடு

ஒரு தூதுக்குழுவைத் தைமூரின் அவைக்கு அனுப்பினான். அதனால் மகிழ்ந்த தைமூர் தக்காணத்தையும் மாளவத்தையும் குஜராத்தையும் பிரோஸுக்கு அளித்துவிடுவதாக ஓர் ஆணை பிறப்பித்தான். அதனால் அச்சமுற்ற மாளவ குஜராத் அரசர்கள் இரண்டாம் ஹரிஹரனோடு தற்காப்பு உடன்படிக்கை செய்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார்கள். அப்போது ஹரிஹரனும் பிரோஸுக்குத் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டு அவனை வெற்றியுற எதிர்த்தான். வடக்கிலிருந்து படையெடுப்பு நிகழக்கூடுமென்று அஞ்சிய பிரோஸ் ஹரிஹரனோடு மோத விரும்பவில்லை. ஹரிஹரன் 1404-ல் இறந்து போனான். அவனுக்குப் பின் அரியணையேறிய அவனுடைய மகன் முதலாம் தேவராயன் 1406-ல் பாமினி ராஜ்யத்தோடு போர் தொடங்கினான். முடுகலில் இருந்த ஒரு பொற்கொல்லனுடைய மகளின் அழகில் மயங்கிய தேவராயன் அவளை வன்முறையில் கைப்பற்றுவதற்காகச் செய்த முயற்சி தோல்வியடைந்ததால் சினங்கொண்டு முடுகலுக்கு அருகிலிருந்த சில கிராமங்களைத் தாக்கிச் சூறையாடினான். தன்னுடைய ராஜ்யத்தின்மீது நடந்த அந்தத் தாக்குதலால் வெகுண்டெழுந்த பிரோஸ் விஜயநகரத்தின்மீது படையெடுத்துத் தலைநகரைத் தாக்கினான். ஆனால் அவன் போரில் காயமடைந்தான். அதனால், அவன் சிறிது தொலைவில் அரண் மிக்க முகாம் ஒன்றை அமைத்துக்கொண்டு, அங்கே தங்கி, விஜயநகருக்குத் தெற்கில் ஆதோனி வரையில் இருந்த நாடு முழுதும் வென்று சூறையாடுமாறு தன் தளபதிகளுக்குக் கட்டளையிட்டான். தேவராயன் சுல்தானுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவனோடு சமாதானஞ் செய்து கொண்டான். அந்த நிபந்தனைகளின்படி, அவன் தன் மகள் ஒருத்தியை பிரோஸுக்கு மணமுடித்துவைத்து அவளுக்குச் சீதனமாக பங்காப்பூரையும் கொடுத்துவிட்டான். மேலும், அவன் ஏராளமான முத்தையும், பெரும் பொருளையும், 50 யானைகளையும், ஆடல் பாடலில் வல்ல 2000 சிறுவர் சிறுமியரையும் பிரோஸுக்கு இழப்பீடாக அளித்தான். தேவராயன் மகளுக்கும் பிரோஸுக்கும் உரிய ஆடம்பரத்துடன் திருமணம் நடந்தது. ஆனால், பிரோஸை வழியனுப்பும்போது தேவராயன் நகருக்கு வெளியில் போதுமான தொலைவு அவனுடன் செல்லாததால் அவன் கோபமடைந்தான். அதனால் இருவரும் கோபத்தோடு பிரிந்தனர். அந்தப் போருக்குக் காரணமாயிருந்த முடுகல் பொற்கொல்லனுடைய மகளை பிரோஸ் தன் மகன் ஹாசன்கானுக்கு மணமுடித்து வைத்தான். பொற்கொல்லன் மகளுடைய கதையை பெரிஷ்டா ஒருவர் மட்டுமே கூறுகிறார். ஏனைய ஆசிரியர்களுக்கு இந்தச் செய்தி தெரியாது போலும்!

1412-ல் மஹூர் மாகாண ஆளுநர் பிரோஸூக்கு எதிராகக் கலகஞ் செய்தான். அதனால், பிரோஸ் கொண்டுவானுமீது படையெடுத்தான். ஆனால், கலகத்தை அடக்காமலே பிரோஸ் ஊருக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. ஏறக்குறைய அந்தச் சமயத்தில்தான் ஜமாலுதின் ஹூசேனி என்னும் முஸ்லிம் புனிதர் பிரோஸின் தம்பி அகமது அரசனுவான் என்று வருவதுரைக்கும் முறையில் கூறினர். அதனால் பிரோஸ் தன் தம்பிமீது ஐயமுறத் தொடங்கினன். இரண்டு அடிமைகள் பிரோஸின் தனிப் பற்றுக்குப் பாத்திரமானர்கள். அவர்களுக்கு பிரோஸ் அயினுல் முல்க், நிஜாமுல் முல்க் என்னும் பட்டங்களை வழங்கினன். 1417-ல் பிரோஸ் தெலிங்கானுமீது படையெடுத்து, ராஜமகேந்திரவரத்தில் ஆட்சிசெய்த காட்டைய வேம ரெட்டியைச் சண்டையிற் கொன்று, தெலிங்கானவைக் கீழ்ப் படியச் செய்தான். அதன்பின், விஜயநகர அரசன் கைப்பற்றி யிருந்த பங்கல்மீது பிரோஸ் 1420-ல் படையெடுத்தான். பங்கல் முற்றுகை ஈராண்டு நீடித்தது. இறுதியில் பாமினிப் பாசறையில் தோன்றிய கொள்ளை நோயால் ஏராளமான வீரர்கள் மாண்டு போனர்கள். அதனால் விஜயநகரப் படைகள் பெரு வெற்றி பெற்றன. பிரோஸ் தன்னுடைய ராஜ்யத்தின் கிழக்கு தெற்கு மாவட்டங்களை எதிரிகள் கையில் விட்டுவிட்டுப் பின்வாங்கினன். அந்தத் தோல்வியால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து பிரோஸ் மீள வில்லை. அதனால் ராஜ்ய நிர்வாகத்தைத் தன்னுடைய தனிப் பற்றுக்குப் பாத்திரமான இரண்டு அடிமைகளிடம் ஒப்படைத்து விட்டு, பிரோஸ் தனக்குத் தெரிந்த அளவில் இறையன்புக்குரிய செயல்களில் ஈடுபட்டுத் தன் காலத்தைக் கழித்தான்.

அடிமைகளின் உயர்வு அகமதுக்கு ஆபத்தாக முடிந்தது. அதனால் அவன் உற்ற நண்பர் சிலருடனும் பாஸ்ராவிலிருந்து வந்திருந்த வணிகன் ஒருவனுடனும் சேர்ந்து தலைநகரிலிருந்து ஓடி, கல்யாணிக்கு அருகில் தன் முகாமை அமைத்துக் கொண்டான். பாஸ்ரா வணிகன் கலப் ஹாஸனுடைய ஆலோசனையை அகமது ஏற்றுக்கொண்டு, தானே அரசன் என்று விளம்பரப்படுத்தினன். அதைக் கேள்வியுற்ற பிரோஸ் தன்னுடைய படைகளை அகமதுக்கு எதிராக அனுப்பினன். ஆனல், அகமது அந்தப் படைகளைத் தோல்வியுறச் செய்து, அவற்றைத் துரத்திக் கொண்டு தலைநகருக்குச் சென்றன். நோய்வாய்ப்பட்டிருந்த பிரோஸால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவனுடைய படையும் அகமது பக்கம் சேர்ந்து கொண்டது. அதன்பின் பிரோஸ் தன் பதவியிலிருந்து விலகித் தன்னுடைய இரு மக்களையும் (ஹாசன் கான், மூபாரக்

கான்) அகமது கையில் ஒப்படைத்துவிட்டான் (1422 செப்டம்பர்). பிரோஸ் சில நாள்களில் இறந்து போனான். அவனை அகமதின் ஆட்கள் நஞ்சு கொடுத்தோ கழுத்தை நெரித்தோ கொன்றுவிட்டனர் என்று சிலர் கருதுகின்றனர்.

அகமது 1422 முதல் 1435 வரையில் ஆட்சி செய்தான். தான் அரசனாகப் போவதை முன்கூட்டியே சொல்லியும் தனக்கு இன்னல் நேர்ந்த பல சமயங்களில் அறிவுரை கூறியும் தனக்கு உதவிய முஸ்லீம் புனிதருக்கு அகமது பெருஞ் செல்வத்தையளித்தான். பாஸ்ரா வணிகன் போன்ற தன்னுடைய நண்பர்களுக்குப் பணமும், பட்டமும், பதவியும் கொடுத்தான். மாகாண ஆளுநர் ஒவ்வொருவரும் தத்தம் தலைமையில் 2000 படை வீரர்களை வைத்திருக்க வேண்டுமென்று அகமது ஆணையிட்டான். அவனுடைய படையில் அதற்குமேல் வீரர் இல்லையென்று நாம் நினைத்துவிடக்கூடாது.

தன்னுடைய அண்ணன் ஆட்சியில் நேர்ந்த தோல்விக்குப் பழி வாங்குவதற்காக அகமது விஜயநகர ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். அப்போது விஜயராயன் விஜயநகர அரசனாயிருந்தான். துங்கபத்திரைக் கரையில் நடந்த சண்டைக்குப் பின் முஸ்லீம் படைவீரர்கள் விஜயநகர ஆட்சியிலிருந்த ஊர்களைப் படுநாசத்திற்குள்ளாக்கினார்கள். இரக்கம் என்பது எள்ளளவும் இல்லாமல் அவர்கள் போர் வீரர் மட்டுமன்றி எதிர்ப்பட்ட எல்லாரையுமே கொன்றார்கள்; ஏராளமான மக்களைச் சிறை பிடித்து அடிமையாக்கினார்கள்; கோயில்களை இடித்தார்கள்; பசுக்களைக் கொன்றார்கள்; பசுவதை அந்தச் சண்டையில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகவே இருந்தது.

1423 மார்ச்சு மாதத்தில் ஒருநாள் வேட்டையாடச் சென்ற அகமது ஒரு மானைத் துரத்திக்கொண்டு மிகுந்த தொலைவு போய் விட்டான். அவனுடைய மெய்காப்பாளர்கள் பின்தங்கி விட்டார்கள். அந்தச் சமயத்தில் அவனை இந்துக் குதிரை வீரர் சிலர் பார்த்து விட்டனர். அவனை அவர்கள் கைப்பற்றுமுன் அவனிடம் மிகவும் உண்மையாக இருந்த அப்துல்காதிர் என்பவன் தலைமையில் முஸ்லிம் படைவீரர்கள் வந்து அவனைக் காப்பாற்றினார்கள். சமயத்தில் உதவிய அப்துல்காதிருக்கு அகமது 'கான்ஜஹான்' என்னும் பட்டத்தையளித்து அவனை பேரார் ஆளுநனாகவும், அவனுடன் பிறந்தான் அப்துல்லட்டீபுக்கு 'கான் ஆஜம்' என்னும் பட்டத்தையளித்து அவனை பீடார் ஆளுநனாகவும் நியமித்தான். அவனைக் காப்பதற்காக நடந்த

சண்டையில் வில் அம்பு தரித்த வெளிநாட்டுக் குதிரை வீரர்கள் பெரும் பங்கு பெற்றூர்கள். அதிலிருந்து அவர்கள் பாமினிப் படையில் ஒரு சிறந்த இடத்தை வகித்தார்கள். விஜயராயன் திறை நிலுவையைச் செலுத்த ஒப்புக்கொண்ட பின்னரே சண்டை நின்றது. அதற்காக அவன் ஒரு மிகப் பெருந் தொகையை அகமதுக்குக் கொடுத்தான். அகமது திரும்பிப் போனபோது விஜயராயனுடைய மகன் தேவராயன் அவனைக் கிருஷ்ணாநதி வரையிற் சென்று வழியனுப்பினான். அகமது ஏராளமான போர்க் கைதிகளைத் தன்னுடன் கொண்டுபோனான். அவர்களுள் மிகத் திறமை வாய்ந்த இரண்டு பார்ப்பனக் கலைஞர்களும் இருந்தார்கள். அவர்கள் இருவரும் இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஒருவன் பிற்காலத்தில் பேரார் சுல்தானானான். அவன்தான் தன்னுரிமை பெற்ற பேரார் ராஜ்யத்தின் முதல் சுல்தான். இன்னொருவனுடைய மகன் அகமது நகரில் நிஜாம் ஷாஹி வமிசத்தை நிறுவினான்.

1423, 1424 ஆகிய ஈராண்டுகளிலும் மழை பெய்யாததால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அகமது ஒரு குன்றின்மீது அமர்ந்து, எல்லாருடைய முன்னிலையிலும், மழை தரவேண்டும் என்று இறைவனை வேண்டினான். மழையும் வந்தது. அவனுடைய விண்ணப்பத்துக்கு இறைவன் செவிசாய்த்தான் என்று நம்பிய குடிமக்கள் அவனை ஒரு புனித முஸ்லிமாகக் (வாலியாக) கருதினார்கள். ஆனால், அந்தப் புனிதத் தன்மை அவன் மீண்டும் போர் செய்வதைத் தடுக்கவில்லை. 1424ஆம் ஆண்டின் இறுதியில் அவன் தெலிங்கானாமீது படையெடுத்து, வாரங்கலைக் கைப்பற்றி, அதனுடைய அரசனைக் கொன்றான்; அந்த ராஜ்யத்தின் ஏனைய பகுதிகளைக் கைப்பற்றும் பணியை அகமது பீடார் ஆளுநன் கையில் விட்டுவிட்டு ஊர் திரும்பினான். அவனும் அந்தப் பணியை நிறைவேற்றினான். அதனுடன் அந்த இந்து ராஜ்யம் மறைந்தே போயிற்று. பாமினி ராஜ்யத்தின் எல்லை கீழைக்கடற்கரை வரையில் நீண்டது.

அகமது 1425-ல் மஹூர்மீது படையெடுத்தான். அங்கு அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாது கலகஞ் செய்து கொண்டிருந்த அரசனை மன்னித்து விடுவதாகக்கூறி அகமது அவனைத் தன்னிடம் அழைத்து, திடீரென்று அவன்மீது பாய்ந்து அவனையும் அவனுடன் வந்திருந்த 6000 போர்வீரர்களையும் கொன்றுவிட்டான். அதன்பின் அகமது கொண்டுவானாவுக்குள் புகுந்து, எல்லிச்பூரில் ஓராண்டு தங்கி, கவில்கர், நர்நலா என்னும் கோட்டைகளைப் புதுப்பிக்கும் வேலையில் ஈடுபட்டான்.

தைமூர் தன்னுடைய தமையனுக்குக் கொடுத்திருந்த மாளவத்தையும் குஜராத்தையும் வெல்வதற்கு அந்தக் கோட்டைகள் உதவுமாதலால், அந்தப் படையெடுப்புக்கு ஆயத்தம் செய்யும் முறையில் அவற்றைப் புதுப்பித்தான். அதே நோக்கத்தோடு அவன் கான்டேஷ் ராஜ்யத்தோடும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். சிறிய ராஜ்யமாகிய காண்டேஷ்மீது மாளவம், குஜராத் ஆகிய இரு ராஜ்யங்களும் மேலாதிக்க உரிமை கொண்டாடின. மாளவ அரசன் ஹூஷாங்ஷாவும் சும்மா இருக்கவில்லை. பாமினி சுல்தானுக்கு அடங்கிய சிற்றரசனை கெர்லா நாட்டு நரசிங்கராஜனைத் தன்னுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அவன் 1422ஆம் ஆண்டிலேயே செய்து விட்டான். 1428-ல் அவன் நரசிங்கனிடம் திறைபெறுவதற்காகக் கெர்லாவின்மீது படையெடுத்தான். நரசிங்கன் அகமதின் துணையை நாடினான். அகமது அவனுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு எல்லிச்பூருக்குத் தன் படையுடன் சென்றான். ஆனால், ஹூஷாங்ஷா கெர்லாக் கோட்டையின் முற்றுகையைத் தொடர்ந்து நடத்தினான். புறச்சமயத்தவன் ஒருவனுக்கு உதவி செய்வதற்காக சகோதர முஸ்லிம் அரசன் ஒருவனை எதிர்த்துப் பொருவது நியாயந்தானா என்னும் ஐயம் அகமது மனத்தில் தோன்றியது. இறுதியில் அவன் நரசிங்கனுக்கு உதவி செய்யாமல் திரும்பிப்போய்விட்டான். அகமது போர்புரிவதற்கு அஞ்சித் திரும்பிப் போகிறான் என்று தவறாக நினைத்த ஹூஷாங்ஷா ஒரு கணிசமான படையுடன் அவனைத் துரத்திக் கொண்டு போனான். ஆனால், அகமது ஹூஷாங்கைத் தபதி நதியின் கரையில் கடுமையாகத் தாக்கித் தோல்வியுறச் செய்தான். ஹூஷாங்கின் முகாமிலிருந்த பொருள்கள் அனைத்தையும் அவனுக்குச் சொந்தமான 200 யானைகளையும் மட்டுமன்றி அவனுடைய அந்தபுரத்து மங்கையரையும் அகமது கைப்பற்றிக் கொண்டான். புறமுதுகிட்டோடிய ஹூஷாங்கை நரசிங்கன் மாளவத்திற்குள் துரத்திக் கொண்டு போனான். அதே சமயத்தில் அகமது கெர்லாவுக்குப் போனான். திரும்பிவந்த நரசிங்கன் அகமதுவை மிகவும் மரியாதையாக நடத்தி அவனுக்குத் தேவையான வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொடுத்தான், அதற்குப்பிறகு அகமது தான் கைப்பற்றிய பெண்களைத் தக்க பாதுகாப்போடு ஹூஷாங்குக்குத் திருப்பியனுப்பி விட்டான்.

ஊர் திரும்புகையில் பீடாரில் சிலகாலந் தங்கினான். அந்த ஊரின் தட்பவெப்ப நிலையும், அது அமைந்திருந்த இடமும் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டன. அதனால் அவன் அங்கிருந்த பழைய கோட்டையின் அருகில் ஒரு புதிய நகரைக்கட்டி அதற்கு

அகமதாபாத்—பீடார் என்று பெயரிட்டான். அதனைத் தன்னுடைய ராஜ்யத்தின் புதிய தலைநகராக்கி, 1429-ல் அவன் அங்குக் குடியேறினன். ஏறக்குறைய அதே சமயத்தில் அவனுடைய மூத்தமகன் அலாவுதீன் அகமது காண்டேஷ் அரசன் நசிர்கானுடைய மகளை மணந்துகொண்டான். 1430-ல் அகமது ஒரு காரணமுமின்றித் தன் படைகளை குஜராத்மீது செலுத்தினன். அப்போது முதலாம் அகமது குஜராத்தின் அரசனயிருந்தான். தக்காணப் படை இருமுறை தோற்றது. பம்பாய்த் தீவிலிருந்த மஹிம் என்னும் இடத்தைப் பிடிப்பதற்காகத் தக்காணப்படை அதனைத் தாக்கியது. அதிலும் அதற்கு வெற்றி கிட்டவில்லை. மாருக, அது பேரிழப்புக்குள்ளாயிற்று. எனினும், அகமது பாமினி சண்டையை நிறுத்தவில்லை. பாமினிப் படைக்கு எவ்விதப் பயனும் உண்டாகவில்லையெனினும், அவை 1431ஆம் ஆண்டிலும் குஜராத்தின் தென் எல்லையில் சண்டை செய்துகொண்டுதான் இருந்தன. 1432-ல் அகமது தன்னுடைய சகோதரியின் மகன் ஷெர்கான் தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து அரியணையைக் கைப்பற்ற விரும்புகிருன் என்று ஐயப்பட்டதால் அவனைக் கொன்றுவிட்டான். தொடக்கத்தில் தன்னுடைய தமையனைத் தள்ளிவிட்டு அரசனுகுமாறு அகமதைத் தூண்டியவர்களுள் ஷெர்கானும் ஒருவன்.

குஜராத் போரால் அகமது தன்னுடைய வலிமையை இழந்துவிட்டான் என்பதை உணர்ந்த மாளவ அரசன் ஹுஷாங் கெர்லாவைக் கைப்பற்றி நரசிங்கனைக் கொன்றுவிட்டான். அந்தப் பழியைத் துடைப்பதற்காக அகமது தன் படையுடன் வடதிசை சென்ருன். ஆனல், நசிர்கான் தலையீட்டால் அகமதும் ஹுஷாங்கும் சமாதானம் செய்துகொண்டனர். அந்தச் சமாதானம் அகமதுக்குச் சாதகமானது என்று சொல்லமுடியாது. கெர்லா மாளவ அரசனுல் அளிக்கப்பட்ட ராணுவ நிலமானியமாகக் கருதப்படவேண்டும் என்பதையும் பேராரின் ஏனைய பகுதிகள் பாமினி ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இருக்கவேண்டுமென்பதையும் அகமது ஏற்றுக்கொண்டான். அதன்பின் அகமது தெலிங்கானவிலிருந்த சில சிறிய தலைவர்களை ஒறுத்து, தன்னுடைய மக்களுள் ஒருவனுடைய ஆட்சியிலிருந்த அந்த மாகாணத்தில் அமைதியை நிலைநாட்டினன் (1434–45). அவன் 1435-ல் தன்னுடைய அறுபத்து நான்காம் வயதில் இறந்தான். அகமதுவின் இயல்புக்கும் அவனுடைய தமையன் பிரோஸின் இயல்புக்கும் வேறுபாடிருந்தது. கல்வியறிவு நிறையப் பெற்றிருந்த பிரோஸின் இயல்பில் ஓரளவு ஐயுறவு மனப்பான்மையும் கலந்திருந்தது. ஆனல், அகமது குருட்டு நம்பிக்கையும் ஓரளவு

மதவெறியும் உடைய முசல்மான். எனவே, அவன் நீள் முடி வளர்த்த முசல்மானியர் யாரைக் கண்டாலும் அவரைப் 'புனிதர்' என்று நம்பக்கூடிய இயல்புடையவன். ஆனால், அகமதுக்குக் கல்வியறிவும், சொன்னயம் பொருள்நயமும் முற்றிலும் பிடிக்காதவை என்று நாம் கருத முடியாது. அவனுடைய வேண்டுகோளின் பேரில், குரசனிலில் இஸ்பராயின் என்னும் இடத்தில் வாழ்ந்த ஆசரீ என்னும் கவிஞர் 'பாஹமன்நாமா' என்னும் நூலை எழுதினார். அது பாமினியரசர் வரலாற்றைச் செய்யுள் நடையில் கூறும் நூல். அது இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. வேறு நூல்களில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள சில செய்யுள்களைப் பார்க்கும்போது பாஹமன்நாமா, ஷாநாமாவை முன்மாதிரியாகக் கொண்டு எழுதப்பெற்ற நூலெனினும் அதனுடைய தரம் ஷாநாமாவின் தரத்திற்கு மிகவும் குறைந்தது என்பது தெரிகிறது. அகமது இறப்பதற்கு முன்னரே ஆசரீ தன்னுடைய சொந்த ஊருக்குப் போய்விட்டார். எனினும், அவர் 1462-ல் இறக்கும் வரையில், பாமினி வரலாற்றைத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்தார். அதன்பின்னும் அந்த வமிசத்தின் ஆட்சிக்காலத்தின் இறுதிவரையிலும் நடந்த நிகழ்ச்சிகளை ஏனைய புலவர்கள் ஒழுங்காக எழுதி ஆசரீயின் நூலோடு சேர்த்துக்கொண்டிருந்தார்கள். பாமினி ராஜ்யத்தில் சிவில் அலுவல்களிலும் ராணுவப் பதவிகளிலும் முறையாக நியமிக்கப்பட்ட துருக்கியர், அரேபியர், பாரசீகர், முகலாயர் ஆகிய வெளிநாட்டினர் பலர் இருந்தனர். அவர்களுக்கும் உள்ளூர் முஸ்லிம்களுக்கும் (தக்காணிகளுக்கும்) இடையில் போட்டியும் பகையும் வளரத்தொடங்கின. உள்ளூர் முஸ்லிம்களோடு ஆப்பிரிக்க நீக்கிரோக்களும், ஆப்பிரிக்க ஆண்களுக்கும் இந்தியப் பெண்களுக்கும் பிறந்த முஸ்லிம்களும் சேர்ந்து கொண்டார்கள். குஜராத் போரில் ஏற்பட்ட தோல்விகளுக்கு உள்ளூர் முஸ்லிம்களின் கோழைத்தனந்தான் காரணமென்று வெளிநாட்டினர் குற்றஞ் சாட்டினர். அவ் விருதரப்பினரும் அடிக்கடி சச்சரவிட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் பல சமயங்களில் நெருங்கிக் கைகலந்து சண்டையிடவும் முற்பட்டார்கள்; சில சமயங்களில் படுகொலைகளும் நடந்தன. வெளிநாட்டினர் பொதுவாக ஷியாப் பிரிவைச் சேர்ந்தவர்கள்; உள்நாட்டினர் சுன்னிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அந்த வேறுபாட்டால் தோன்றிய மனக்கசப்பு அவர்களுடைய பகைமையை மேலும் வளர்த்தது. அந்தப் பகைமையும் அதனால் ஏற்பட்ட சண்டைகளும் பாமினி ராஜ்யம் மட்டுமன்றி அதற்குப் பின் தோன்றிய தக்காண முஸ்லிம் ராஜ்யங்களும் வலிமையிழந்து சிதைந்து போவதற்கு முக்கிய காரணமாயின.

'புனித' அகமதுக்குப்பின் அவனுடைய மூத்தமகன் இரண்டாம் அலாவுதீன் பட்டத்துக்கு வந்தான் (1436–58). அவன் வெளிநாட்டினரைத் தன் 'சுற்றமாக' (அணுக்க அலுவலராக) வைத்துக்கொண்டான். அதனால் உள்ளூர் முஸ்லிம்கள் மிகவும் பொருமை கொண்டார்கள். அதன் விளைவாக அவனுக்குப் பல இன்னல்கள் நேர்ந்தன. அவன் விஜயநகர அரசன் இரண்டாம் தேவராயனிடம் திறை பாக்கியை வசூலித்து வருமாறு தன்னுடைய தம்பி முகமதை அனுப்பினான். அவனும் அப்பணியைச் செய்து முடித்தான். அந்த வெற்றியால் செருக்கடைந்த முகமது ஆட்சி அதிகாரத்தில் தனக்கும் சரிபங்கு கொடுக்கவேண்டுமென்றும், தவறினால் ராஜ்யத்தில் பாதியைத் தனக்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும் தன் தமையனிடம் கேட்டான். அதனால் உண்டான சண்டையில் அவன் தோற்றான். எனினும், அலாவுதீன் அவனை மன்னித்து ராயச்சூர் ஆற்றிடை நிலத்துக்கு அவனை ஆளுநனாக நியமித்தான். அதன்பின் அவன் தன் தமையனிடத்தில் உண்மையாக நடந்து கொண்டான்.

1437-ல் அலாவுதீன் கொங்கணத்தின் சில பகுதிகளை வென்றான். சங்கமேசுவரத்தில் ஆட்சிசெய்த அரசன் தன் மகளை அவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். அவனுடைய மூத்தமனைவி காண்டேஷ் அரசன் நசிர்கானுடைய மகள் என்பதை நாம் முன்பு கூறினோம். அலாவுதீன் அவளைவிட இரண்டாம் மனைவியைத்தான் உயர்வாக நடத்தினான். அதனால் சினமடைந்த நசிர்கான் பேரார்மீது படையெடுத்து, அங்கிருந்த அரசு அலுவலர் பலரைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு, ஆளுநன் கான்ஜஹானை நர்நலக் கோட்டையில் அடைத்துவிட்டான். அந்தச் சமயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் நசிர்கானுடன் சண்டைக்குச் செல்லக்கூடாதென்றும் உள்ளூர் முஸ்லிம்கள் அலாவுதீனுக்கு ஆலோசனை கூறினார்கள். ஆனால், அப்போது தௌலதாபாத் ஆளுநனாக இருந்தவனும் வெளிநாட்டு முஸ்லிம்களின் தலைவனாக இருந்தவனும் ஆகிய மாலிக்–உட்–டுஜர்–கலப்–ஹாஸன்–பாஸ்ரி என்பவன் தனக்கு வெளிநாட்டார் மட்டும் அடங்கிய ஒரு படையைக் கொடுத்தால், தானே சென்று காண்டேஷ் அரசனை வெல்வதாய் உறுதிகூறினான். அலாவுதீன் அதற்கிசைந்தான். சொன்னவாறே பாஸ்ரி பெருவெற்றியடைந்து திரும்பினான். அதனால் வெளிநாட்டினர் கை ஓங்கியது. அவர்கள் சுல்தானுடைய அரியணைக்கு வலப்பக்கத்தில் நிற்கும் பெருமையைப் பெற்றார்கள். உள்ளூர் முஸ்லிம்கள் இடப்பக்கம் நிற்க வேண்டிய தாழ்வை எய்தினார்கள்.

அதற்கிடையில் இரண்டாம் தேவராயன் தன்னுடைய படையின் பிரிவுகள் அனைத்தையும் ஒழுங்காகத் திருத்தியமைத்து அதனுடைய வலிமையையும் திறமையும் பெருக்கினான். அதன் பின், 1443-ல், அவன் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுத்து, முடுகலைக் கைப்பற்றியபின் ராயச்சூர், பங்காப்பூர் ஆகிய கோட்டைகளை முற்றுகையிட்டு, பீஜப்பூர், சாகர் ஆகிய இடங்கள் வரையிலிருந்த ஊர்கள் எல்லாவற்றையும் சூறையாடினான். ஆனால், அலாவுதீன் தன் படையுடன் வந்ததும் தேவராயன் முடுகலுக்குத் திரும்பிச் சென்றுவிட்டான். ராயச்சூர் பங்காப்பூர்க் கோட்டைகளை வளைத்திருந்த படைகளைப் பாஸ்ரி தோல்வியுறச்செய்து துரத்தினான். அதன்பின் மூன்று மாதக் காலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மூன்று சண்டைகள் நடந்தன. முதற் சண்டையில் இந்துக்களும் இரண்டாம் சண்டையில் முஸ்லிம்களும் வெற்றிப் பெற்றார்கள். மூன்றாம் சண்டையில் தேவராயனுடைய மூத்தமகன் உயிரிழந்தான். இந்துப்படை பின்வாங்கி முடுகலுக்கு ஓடியது. சண்டையில் முக்கியமான முஸ்லிம் படைத் தலைவர் இருவரை தேவராயன் சிறைபிடித்து முடுகலில் அடைத்துவிட்டான். அவர்களை விடுதலை செய்யாவிட்டால் இரண்டு லட்சம் இந்துக்களைக் கொல்லப்போவதாக அலாவுதீன் சொல்லியனுப்பினான். அதைக் கேட்டவுடனே தேவராயன் சுல்தானுடன் சமாதானம் செய்துகொண்டு அவனுக்கு ஒழுங்காகத் திறை செலுத்துவதாகவும் வாக்குறுதியளித்தான்.

வயதாக வயதாக அலாவுதீன் தன் குணநலன்களை இழக்கத் தொடங்கினான். இன்பக்களியாட்டத்தில் எல்லையின்றி ஈடுபட்டதால் அவனுக்கு ஆட்சியைச் சரியானபடி கவனித்துக்கொள்ள நேரமில்லாமற் போய்விட்டது. அந்த நிலையை உள்ளூர் முஸ்லிம்கள் வெளிநாட்டினர் கட்சியை அழிப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டனர். 1446–47-ல் அலாவுதீன் கொங்கணத்தின் மீது தன் படையைச் செலுத்தினான். பாஸ்ரி அந்தப் படைக்குத் தலைமை தாங்கிப் போருக்குச் சென்றான். ஆனால், உள்ளூர் முஸ்லிம்கள் சங்கமேசுவர அரசனோடும் இன்னோர் இந்து அரசனோடும் சேர்ந்து செய்த சதியின் பயனாகச் சுல்தானுடைய படை தோற்றது. மேலும், பாஸ்ரி உள்பட ஏராளமான வெளிநாட்டினர் கொலையுண்டனர். எஞ்சியவர்கள் புனாவுக்கு அருகில் சாக்கன் கோட்டையில் ஒன்றுகூடினார்கள். ஆனால், அவர்கள் சுல்தானுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று பொய்க் குற்றஞ் சாட்டிய உள்ளூர் முஸ்லிம்கள் அவர்களைக் கொன்று விடுவதற்கு அலாவுதீனுடைய இசைவைப் பெற்றார்கள். அதன்பின் நடந்த

ஒருவிருந்தில் உள்ளூர் முஸ்லிம்கள் ராணுவ உயரதிகாரிகளாயிருந்த வெளிநாட்டினர் அனைவரையும் கொன்றுவிட்டார்கள்; மேலும், 1200 சையதுகளையும், வேறு 1000 வெளிநாட்டினரையும் ஏராளமான குழந்தைகளையும் கொன்றுவிட்டு, வெளிநாட்டினரின் உடைமைகளையும் மனைவிகளையும் பெண்மக்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். வெளிநாட்டினருள் மிகச் சிலரே உயிர் தப்பினர். அவர்களுள் காசிம்பெக் என்பவனும் இன்னும் இரண்டு ராணுவ அதிகாரிகளும் உண்மையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்தி அலாவுதீனுக்கு எட்டுமாறு செய்தனர். கழிவிரக்கத்தால் மனங்கரைந்த அலாவுதீன் உள்ளூர் முஸ்லிம் தலைவர்களைக் கொன்றுவிட்டு அவர்களுடைய குடும்பங்களின் செல்வ முழுவதையும் பறிமுதல் செய்தான். காசிம்பெக் தௌலதாபாத் ஆளுநன் ஆனான். அவனுடைய தோழர் இருவரும் உயர்பதவி பெற்றனர். வெளிநாட்டினர் மீண்டும் உயர்வடைந்தனர். சுல்தான் குடிப்பழக்கத்தைக் கைவிடவேண்டுமென்றும் உள்ளூர் முஸ்லிம் அலுவலர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்றும் 1451-ல் இஸ்பராயின் கவிஞர் ஆசரீ ஒரு கடிதம் எழுதினார். இரண்டையும் செய்த சுல்தான் அதன் பின் அரசு அலுவல்களில் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

1453-ல், காலில் அடிப்பட்டதால் சுல்தான் சிறிது காலம் அரண்மனையை விட்டு வெளியில் வரவில்லை. அதனால் அவன் இறந்து போனான் என்ற வதந்தி பரவத்தொடங்கியது. தெலிங்கானா ஆளுநன் சிக்கந்தர், சுல்தானுக்கெதிராகக் கலகஞ் செய்தான். பேரரசின்மீது படையெடுக்குமாறு மாளவ அரசன் முதலாம் மாமூதைத் தூண்டிவிட்ட சிக்கந்தர், தன்னுடைய படையுடன் போருக்குச் சென்று 1456-ல் அவனோடு சேர்ந்து கொண்டான். உண்மையிலேயே சுல்தான் இறந்து போனான் என்று நம்பியிருந்த மாமூது, அவனே தன் படையுடன் போர்க்களம் புகுந்ததைக் கண்டதும், மாளவத்துக்குத் திரும்பிப் போய் விட்டான். சிக்கந்தரையும் அவனுடைய தந்தையையும் ஒரு முற்றுகைக்குப்பின் மாமூது கவான் என்பவன் வென்று சிறை பிடித்தான். (கவான் அப்போதுதான் முன்னுக்கு வந்து கொண்டிருந்த வெளிநாட்டினன்.) ஆனால் சுல்தான் அவர்களை மன்னித்துவிட்டான்.

அலாவுதீன் 1458-ல் இறந்தான். அவன் குடிப்பழக்கமுடையவனாக இருந்தாலும் தன் குடிமக்கள் குடிக்கக்கூடாதென்று கடுமையான ஆணை பிறப்பித்திருந்தான். அவன் பீடாரில் ஓர்

இலவச மருத்துவமனையை நிறுவினான். நீண்ட மதச் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் இந்துக் கோயில்களை இடித்து அங்குக் கிடைத்த பொருள்களால் மசூதிகளைக் கட்டுவதிலும் அவன் தன் பக்தியை வெளிப்படுத்தினான். அவன் இறப்பதற்கு முன்பே தன் மூத்த மகன் ஹுமாயூன் தனக்குப்பின் அரசனாக வேண்டுமென்று அறிவித்துவிட்டான்.

ஹுமாயூன் (1458–1461) மிகவும் கொடியவனென்று பெயர் பெற்றவன். அவன் இழைத்த கொடுமைகள் அவனுக்கு 'ஜலிம்' (கொடுங்கோலன்) என்னும் பெயரைத் தந்தன. அவனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவனுடைய தம்பி ஹாசன்கானை அரசனாக்குவதற்குச் சில உயர் அதிகாரிகள் முயன்றார்கள். ஆனால் ஹுமாயூன் அந்த முயற்சியை முறியடித்தான். அதனால் அம் முயற்சியில் ஈடுபட்ட பலர் கொல்லப்பட்டனர்; சிலர் சிறைப்பட்டனர்; ஒரு சிலர் தப்பியோடினர். ஹுமாயூன் ஹாசன்கானுடைய கண்ணைக் குத்திச் சிறையிலடைத்துவிட்டான். ஹுமாயூன் வெளிநாட்டினருக்குச் சலுகை காட்டினான். மாமூது கவானை அவன் ராஜ்யத்தின் அனுக்க முதல்வனாயும் (மாலிக் நயிப்) பீஜப்பூர் ஆளுநனாயும் நியமித்தான். உள்ளூர் முஸ்லிம்களை ஹுமாயூன் அரசு அலுவலிலிருந்து அறவே நீக்கிவிடவில்லை. அவனுடைய ஆட்சியில் இரண்டு கலகங்கள் நடந்தன. தெலிங்கானாவில் சிக்கந்தர்கானும் அவனுடைய தந்தை ஜலால்கானும் கலகஞ்செய்தார்கள். சுல்தானும் அவனுடைய அமைச்சனும் தெலிங்கானாவுக்குச் சென்றிருந்த போது தலைநகரிலேயே ஒரு கலகம் நடந்தது. சுல்தான் இரண்டு கலகங்களையும் அடக்கினான். ஆனால், அவற்றை அடக்குவதற்கு அவன் கையாண்ட முறைகள் இரக்கமற்ற நிகழ்ச்சிகளுக்குப் பேர்போன பாமினி ராஜ்யத்தின் வரலாற்றிலேயே யாரும் கண்டிராத அளவு கொடுமையும் வெறித்தனமும் நிறைந்தவை. அவனுடைய அமைச்சன் மாமூது கவான் திறமை மிக்கவன். அவனுடைய மனைவி மக்துமாஜஹான் அறிவாற்றல் மிக்கவள், (தன்னுடைய கணவன் இறந்தபின் தன்னுடைய இளவயது மக்களுக்காக ஆட்சிபுரிந்தபோது அவள் திறமை பெரிதும் வெளிப்பட்டது.) ஆனால், ஹுமாயூனுடைய கொடுமையைத் தவிர்ப்பதற்கு அவர்களாலும் இயலவில்லை. இறுதியில் அவனுடைய இரக்கமற்ற செயல்களால் சலித்துப் போயிருந்த அவனுடைய பணியாட்கள் அவன் குடிமயக்கத்திலிருந்தபோது, 1461 செப்டம்பரில், அவனைக் கொன்றுவிட்டார்கள். அந்தச் செய்தி கேட்ட அவனுடைய குடிமக்கள் துன்பம் நீக்கப் பெற்றதாய்ப் பெருமூச்சு விட்டார்கள்.

ஹுமாயூனுக்குப்பின் அவனுடைய மகன் நிஜாம்ஷா பட்டத்துக்கு வந்தான். அப்போது அவனுக்கு எட்டு வயதுதான் ஆகியிருந்தது. அதனால், குவாஜா ஜஹான் என்று பட்டப் பெயர் பெற்ற மாலிக்ஷா துருக்கன், மாமூது கவான் ஆகியவர்களுடைய துணையோடு ஹுமாயூனின்மனைவி ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தினாள். அவளுடைய ஆட்சியின் வலிமையைக் குறைத்து மதிப்பிட்ட தெலிங்கானா, ஒரிசா ஆகியவற்றின் இந்து அரசனும் மாளவத்தரசன் முதலாம் மாமூதும் பாமினி ராஜ்யத்தின்மீது படையெடுத்தார்கள். தலைநகராகிய பீடாரிலிருந்து இருபது கல் தொலைவில் இந்துப் படையைச் சந்தித்த பாமினிப்படை அதனை வென்று துரத்தியது. ஆனால், மாளவ அரசனைத் தோல்வியுறச் செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. கந்தர் என்னுமிடத்தில் பாமினிப் படையைத் தோல்வியடையச் செய்தபின், முதலாம் மாமூது தலைநகரை முற்றுகையிட்டான். அதனால் அரசி மக்துமாஜஹான் தன் மகனை அழைத்துக்கொண்டு பிரோசாபாத்துக்குச் சென்றுவிட்டாள். பாமினி ராஜ்யத்தின் துணைக்கு வருமாறு குஜராத் அரசன் மாமூது பெகராவை மாமூது கவான் வேண்டிக் கொண்டான், குஜராத் அரசன் அதற்கு இணங்கினான். பாமினிப் படையும் குஜராத் படையும் ஒன்று சேர்ந்து முதலாம் மாமூதின் படையைப் பின்பக்கமிருந்து தாக்க ஆயத்தம் செய்தன. அதனால் முதலாம் மாமூது பின் வாங்கிச் சென்றான். ஆனால், அடுத்த ஆண்டில் மாளவப்படை மீண்டும் பாமினி ராஜ்யத்தின்மீது படையெடுத்தது. அப்போதும் குஜராத் அரசன் பாமினிராஜ்யத்திற்கு உதவ முன் வந்ததால், மாளவப்படை தௌலதாபாத்தைத் தாண்டி வரமுடியாமல் திரும்பியது.

1463-ஜூலை 30ஆம் நாள் இளவயது சுல்தான் திடீரென்று இறந்து போனான். அதனால் அவன் தம்பி மூன்றாம் முகமது அரசனானான். அப்போது அவன் வயது ஒன்பதுதான். முன் போலவே, அவனுடைய தாயும், கவானும், குவாஜா ஜஹானும் சேர்ந்து ஆட்சியை நடத்தினார்கள். ஆனால் குவாஜா ஜஹானுடைய பேராவல் முன்பிருந்த ஒற்றுமையைக் குலைத்தது. ராஜ்யத்தின் எல்லையில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல அலுவல்களைக் கவனிக்குமாறு குவாஜாஜஹான் கவானைக் கேட்டுக்கொண்டதால் கவான் தலைநகருக்குத் திரும்பி வரமுடியாத நிலைமை ஏற்பட்டது. அவன் ஏறக்குறையத் தலைநகரிலிருந்து வெளியேற்றப்பட்டான் என்றே கருதலாம். அதனால், குவாஜா ஜஹான் மீது ஐயமுற்ற அரசி அவன்மீது ராஜதுரோகக் குற்றஞ்சாட்டி, அவனைக் கொல்வதற்கு ஆணை பிறப்பிக்குமாறு தன் மகனைக் கேட்டுக்

கொண்டாள். அவனும் அவ்வாறே செய்தான். அதன்பின் அவன் கவானைத் தலைநகருக்கு அழைத்து, அவனுக்கு அமீர்-உல்-உமரா - என்னும் தலைமைப் பதவியைக் கொடுத்தான். அவள் அரசனுக்குச் சிறந்த கல்விப் பயிற்சியளிப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டாள். அரசனுக்கு வயது பதினைந்தானதும் அரசி ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டாள். அவள், இறக்கும் வரையில் அரசனுடைய அன்பையும் மதிப்பையும் பெற்று வாழ்ந்தாள்.

1467-ல் பாமினிப் படைகள் கெர்லாமீது சென்றன. கெர்லா, மாளவத்தரசன் முதலாம் மாமூதின் மேலாதிக்கத்தில் ஒரு ராணுவ மானியமாய் இருந்தது. அந்தப் படையெடுப்பால் பாமினி ராஜ்யத்துக்கு எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. புனித அகமது காலத்தில் இருந்ததைப் போலவே கெர்லா மாளவத்தின் மேலாதிக்கத்தில் தொடர்ந்து இருந்தது. இன்னும் பிஜப்பூர் ஆட்சிப் பொறுப்பை வகித்த மாமூது கவான் கொங்கணத்து இந்து அரசர்கள்மீது படையெடுத்தான். பாமினியரசர்கள் கொங்கணத்தை என்றுமே தங்கள் ஆட்சியின்கீழ் முற்றமுழுக்கக் கொண்டு வந்ததில்லை. கடற்படை வைத்திருந்த கெல்மா (விசால்கர்)அரசனும் சங்கமேசுவர அரசனும் புனிதயாத்திரையை மேற்கொண்ட முஸ்லிம்களுக்கும் வாணிகத்திற்காக இந்தியாவுக்கு வந்த முஸ்லிம்களுக்கும் துன்பம் இழைப்பதைத் தடுக்கவேண்டுமென்பது கவானுடைய கொங்கணப் படையெடுப்பின் முக்கிய நோக்கம். நிதானமான முயற்சியும், கணக்காகக் கையாண்ட வன்முறையும், கையூட்டும் சேர்ந்து கவானுக்குப் பல வெற்றிகளைத் தேடித்தந்தன. இறுதியில் விஜயநகரப் பேரரசின் முக்கியத் துறைமுகமாகிய கோவாவைக் கவான் கைப்பற்றினான். கோவா வெற்றி மிகவும் முக்கியமானது. அது பாமினி ராஜ்யத்தோடு நிரந்தரப் பகை கொண்டிருந்த விஜயநகரப் பேரரசுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஓர் அருஞ்செயல். அன்றியும், மேற்குக் கடற்கரை வாணிகத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் மெக்காவுக்குப் போகும் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கும் கோவா வெற்றி பாமினியரசுக்கு வாய்ப்பளித்தது. மாமூது கவான் தலைநகரை விட்டு நீங்கி ஏறக்குறைய மூன்றாண்டு கழித்து, 1472-ல் மீண்டும் தலைநகருக்குத் திரும்பினான். அங்கு அவனுக்கு மிகப் பெருமையான வரவேற்புக் கிடைத்தது.

மாமூது கவான் திரும்பி வருவதற்கு முன்னரே ஓரிசாவில் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டியைப் பற்றிய செய்தி பீடாருக்கு

வந்திருந்தது. கபிலேசுவர கஜபதி இறந்தபின், அவனுடைய மூத்த மகன் ஹம்பர் (ஹம்வீரன்) என்பவனுக்கும் இன்னெரு மகன் மங்கல் (புருஷோத்தம கஜபதி) என்பவனுக்கும் அவர் களில் யார் அரியணை யேறுவது என்பதுபற்றிச் சச்சரவு ஏற்பட்டது. ஹம்பர் தனக்குத் துணைபுரியுமாறு மூன்ரும் முகமதுவை வேண்டிக்கொண்டான். விஜயநகரத்திலிருந்து புனித அகமது கொண்டுவந்திருந்த பார்ப்பன இளைஞர் இருவரில் ஒருவனுன மாலிக்ஹாசனை ஒரு படையுடன் முகமது ஒரிசாவுக்கு அனுப்பினுன். ஹாசன் மங்கலை வென்று ஹம்பரின் நியாயமான உரிமையை நிலைநாட்டினுன். இந்த உதவியை மறவாத ஹம்பர் பிற்காலத்தில் ராஜமகேந்திரவரம், கொண்டவீடு ஆகிய இடங் களில் ஆட்சி செய்த ரெட்டிகளைத் தோல்வியடையச் செய்த முயற்சியில் முகமதுக்கு உதவிசெய்தான். மாலிக்ஹாசன் தலைநகருக்குத் திரும்பியபோது அவன் செய்த தொண்டு உரிய பாராட்டுப்பெற்றது. ஆனுல், புருஷோத்தமன் விரைவில் ஹம்பரை வென்று ஒரிசாவின் அரசனுனுன். அவனுக்கு அடங்கிய சிற்றரசனுகக் கிமடி என்னுமிடத்தில் ஆட்சி செய் வதற்கு ஹம்பர் இணங்கினுன்.

இப்போது பாமினியரசு முதல்முதலாக மேலைக் கடலுக்கும் கீழைக் கடலுக்கும் இடையிலிருந்த நிலப்பகுதி முழுவதையும் தன்னுள் கொண்டிருந்தது. ராஜ்யத்தில் நான்கு மாகாணங்கள் இருந்தன. பிஜப்பூரை உள்ளடக்கிய குல்பர்காவிலும் தௌலதாபாத்திலும் வெளிநாட்டினரான மாமூது கவானும் யூசுப் அடில்கானும் ஆளுநராக இருந்தனர். தெலிங்கானுவில் மாலிக் ஹாசனும் பேராரில் இன்னெரு பார்ப்பன இளைஞனை பதுல்லா இமதுல் முல்க் என்பவனும் ஆளுநராக இருந் தனர். அவர்களிருவரும் உள்ளூர் முஸ்லிம்கள். இவ்வாறு உயர் பதவிகளை வெளிநாட்டார், உள்ளூரார் ஆகிய இரு தரப்பினரும் சமமாகப் பெற்றனர். பதுல்லா வெளி நாட்டாரோடு இனிய தொடர்புடையவன். ஆனுல் மாலிக் ஹாசன் அப்படியில்லை. மாமூது கவானைக் கட்சி வேறுபாடு பாராட்டாதவன் என்று கூறலாம். வெளிநாட்டினருக்கு யூசுப் தலைவனுய் இருந்தான். அவனைச் சுற்றியிருந்த ஏராளமான வெளிநாட்டார் உதவியுடன் அவன் வடகொங்கணம் முழுவ தையும் வெல்லும் பணியை முடித்தான். அதனுல் அவனுக்கு ஹாசன் பெற்ற மதிப்பைவிட பெருமதிப்புக் கிடைத்தது. எனவே ஹாசன் வெளிநாட்டாரை மேலும் அதிகமாக வெறுக்க லானுன்.

1742ஆம் ஆண்டின் இறுதியில் கோவாவை மீட்டு விஜய நகரப் பேரரசோடு சேர்க்குமாறு விஜயநகர அரசன் விருபாட்சன், பெல்காம் அரசனையும் பங்காப்பூர் அரசனையும் வற்புறுத்தினான். மூன்றாம் முகமதுவும் மாமூது கவானும் பங்காப்பூர்மீது படையெடுத்துக் கோட்டையை வளைத்துக் கொண்டார்கள். அப்போது அந்த நாட்டின் அரசனாயிருந்த பிர்க்கனன் முற்றுகையைச் சிறிது காலம் சமாளித்தபின் சரணடைந்தான். முகமது அந்த நாட்டையும் தன்னுடைய ராஜ்யத்தில் சேர்த்து, மாமூது கவான் பொறுப்பிலிருந்த மாகாணத்தில் ஒரு பகுதியாக்கினான். அதன்பின் மிக விரைவில் முகமதுவின் தாய் பாசறையிலேயே இறந்துபோனாள். அவள் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிய பிறகும் அவளுடைய அறிவுரையை முகமது ஏறக்குறைய ஒவ்வொரும் நாளும் கேட்டு வந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பீடாரில் புதைப்பதற்காக அவளுடைய உடலை அங்கு அனுப்பிவிட்டு மூன்றாம் முகமது மாமூது கவானுடைய விருந்தாளியாகத் தங்கினான். முகமதுவின் தாய் கவானை ஒரேசீராக எப்போதும் ஆதரித்து வந்தாளாகையால் அவளுடைய சாவினால் ஏற்பட்ட துன்பத்தை முகமதுவைக் காட்டிலும் கவான் அதிகமாக உணர்ந்தான் என்று கூறலாம்.

சுமார் 1476-ல் கொண்டவீடு நகரக் குடிமக்கள் கொடுங்கோலனான முஸ்லிம் ஆளுநனை எதிர்த்துக் கலகஞ் செய்து, அவனைக் கொன்றுவிட்டு, அந்த நகரை ஒரிசா நாட்டுப் பிரபுக்களுள் ஒருவனான ஹமீர் என்பவனிடம் ஒப்படைத்தார்கள். அவன், முன்னர் ஒரிசா நாட்டின் அரசுரிமைக்காகப் புருஷோத்தமனோடு போட்டியிட்ட ஹம்பர் (ஹம்வீர்) என்பவனுடைய மகனான தட்சிண கபிலேசுவர குமார ஹம்வீர மஹாபாத்ரன்தான் என்பதில் ஐயமில்லை. அவனைத்தான் முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் ஹமிர் என்று குறிப்பிடுகிறார்கள். முஸ்லிம்கள் கைப்பற்றிக் கொண்ட தன்னுடைய நாட்டை மீட்கும் தருணம் வந்துவிட்டதென்று புருஷோத்தமனுக்கு ஹமிர் சொல்லியனுப்பினான். அதற்கிணங்கப் புருஷோத்தமன் தெலிங்கானாவின்மீது படையெடுத்து மாலிக்ஹாசனை ராஜமகேந்திரவரக் கோட்டையில் முற்றுகையிட்டான். அதைக் கேள்விப்பட்ட முகமது ராஜமகேந்திரவரத்துக்கு விரைந்து சென்று புருஷோத்தமனைத் தாக்கினான். புருஷோத்தமன் முற்றுகையைக் கைவிட்டு ஒரிசாவுக்குத் திரும்பினான். அவனை முகமது அங்கே துரத்திக் கொண்டு சென்றான். புருஷோத்தமன் சுல்தானுக்குப் பல யானைகளையும் ஏராளமான வேறு பரிசில்களையும் தந்து சமாதானஞ் செய்துகொண்டான் (1478). கொண்ட வீட்டுக்

கோட்டையில் ஒளிந்திருந்த ஹமிர் இறுதியில் சுல்தானிடம் சரணடைந்தான். சுல்தான் அவனைக் கொல்லாமல் விட்டு விட்டான். முகமது, கொண்டவீடு நகரிலிருந்த பெரிய கோயிலை இடித்துவிட்டு, அவ்விடத்தில் ஒரு மசூதியைக் கட்டி, தன் கையாலேயே பார்ப்பனப் புரோகிதர்களைக் கொன்று, அந்தத் 'திருப்பணிக்காக' காஜி என்னும் பட்டத்தையும் பெற்றான்.

முகமது மூன்றாண்டுக்கு மேல் தெலுங்கானாவில் தங்கி அங்கே தன்னுடைய ஆட்சியை உறுதியாய் நிறுவினான். புதிதாக வென்ற நாடுகளையெல்லாம் தெலிங்கானாவோடு சேர்த்ததால் அந்த மாகாணம் மிகப் பெரிதாகப் போய்விட்டது. அதனால் நிர்வாகத் திறன் குறைந்தது. எனவே, முகமது அதனைக் கிழக்குத் தெலிங்கானா மேற்குத் தெலிங்கானா என்று இரண்டாகப் பிரித்து, அவற்றிற்கு ராஜமகேந்திரவரத்தையும் வாரங்கலையும் முறையே தலைநகர்களாக்கினான். இந்தச் சீர் திருத்தம் மாமூது கவான் திட்டமிட்டிருந்த பொது நிர்வாகச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாகும். ஆனால் முழுத் தெலிங்கானா வுக்குச் ஆளுநன் ஆகவேண்டுமென்று நினைத்திருந்த மாலிக் ஹாசனுக்கு அது ஏமாற்றத்தை அளித்தது. அதனால் அவன் மாமூது கவானை ஒழித்துவிடத் தீர்மானித்தான். அப்போது கிழக்குக் கர்நாடகம் விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதனை அரசப் பிரதிநிதி சாளுவ நரசிம்மன் ஆண்டு வந்தான். புருஷோத்தமன் தெலிங்கானாவின்மீது படையெடுத்த போது சாளுவ நரசிம்மன் அவனுக்குத் துணை செய்தான். அதனால் முகமது கிழக்குக் கர்நாடகத்தின்மீது படையெடுக்க விரும்பினான். மாலிக் ஹாசனும் உடன் வருவதாய்ச் சொன்னான். அதற்கு முகமது இசைந்ததால், பேரார் மாகாணத்தில் மஹூர் மாவட்டத்தில் ராணுவ மானியத்தலைவனாயிருந்த அகமதுவை வரவழைத்து, அவனை மாலிக் ஹாசனுக்குப் பதிலாக ராஜமகேந்திரவரத்தில் விட்டுவிட்டு, முகமதும் ஹாசனும் கிழக்குக் கர்நாடகத்தின்மீது படையெடுத்துச் செல்வது என்று முடிவு செய்யப்பட்டது. அகமது மாலிக் ஹாசனுடைய மகன். தந்தையைவிடப் போர்த் திறமை மிக்கவன். கர்நாடகப் படையெடுப்புத் தொடங்கியது. கொண்டபள்ளி பாமினியப் படையின் தலைமை முகாமாற்று. அங்கு முகமது தன் மகன் மாமூதை மாமூதுகவானோடு விட்டுவிட்டுத் தானே படையை நடத்திச் சென்று, மிகத் துணிவுடன் காஞ்சீபுரத்தைத் தாக்கி, அங்கே செல்வச் செழிப்புடன் விளங்கிய கோயில்களைக் கொள்ளையடித்துப் பல புரோகிதர்களையும் கொன்றான். இந்த நிகழ்ச்சியை வர்ணிக்கும் முஸ்லிம் வரலாற்றாசிரியன் அதனுடைய

விளைவுகளைப்பற்றி ஒரேயடியாய்ப் புகழ்கிறான். பாமினிப் போர் வீரர்கள் 'நகரையும் அதிலிருந்த கோயில்களையும் தரை மட்டமாக்கிப் புறச் சமயச் சின்னங்கள் அனைத்தையும் அழித் தார்கள்' என்று அவன் எழுதி வைத்திருக்கிறான். கொண்ட பல்லிக்குத் திரும்பிய வழியில் நரசிம்மனுடைய படைகள் முகமதுவின் படைகளைத் தாக்கிக் கொள்ளைப் பொருள்களில் பலவற்றை மீட்டன. ஆனால், முகமது மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றும் முயற்சியில் வெற்றி பெற்றான்.

கொண்டபள்ளியில் தங்கியிருந்த மாமூது கவான் தான் திட்ட மிட்ட நிர்வாகச் சீர்திருத்தப் பணியைச் செய்துமுடித்தான். பாமினி ராஜ்யம் நான்கு தரப்புகளாகப் (மாகாணங்களாக) பிரிக் கப்பட்டிருந்தது என்பதை நாம் முன்னரே கண்டோம். நாளடைவில் அவற்றின் பரப்பு மிகவும் பெருகிவிட்டது. அதனால், கவான் அவை ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரித் தான். அவ்வாறு பிரிக்கப்பட்ட எட்டு மாகாணங்களுக்கும் தனித்தனி ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதே சமயத்தில் தரப்தார்களின் (ஆளுநர்களின்) அதிகாரமும் மிகவும் குறைக்கப் பட்டது. 'ஒவ்வொரு மாகாணத்திலும் பல பகுதிகள் அரச னுடைய சொந்தச் செலவுகளுக்குத் தேவையான பொருளைத் திரட்டுவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டன. அவற்றை நிர்வகிப் பதற்காக அரசனே மாவட்டத் தலைவர்களை நியமித்தான்.' மேலும் மாகாண ஆளுநனிடம் அவனுடைய மாகாணத்திலிருந்த ஒரே ஒரு கோட்டை மட்டும் ஒப்படைக்கப்பட்டது. ஏனைய கோட்டைக ளெல்லாம் 'அரசனுடைய தனி ஆணையால் நியமனம் பெற்றுத் தலைநகரக் கருவூலத்திலிருந்து சம்பளம் பெற்ற இராணுவ அதிகாரிகள், போர் வீரர்கள் ஆகியவர்களுடைய பொறுப்பில் விடப்பட்டன.' மாகாண ஆளுநர்கள் அரசனுக்கு எதிராகக் கலகஞ்செய்வதை இந்தச் சீர்திருத்தம் முழுதும் தடை செய்யும் என்று கூற முடியாதெனினும், இனிமேல் அவர்கள் கலகஞ் செய்வது அவ்வளவு எளிதன்று என்பது தெளிவு. மூன்றாவ தாக, போர்வீரர்களை வைத்திருப்பதற்காக ராணுவத் தலைவர் களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித் தொகை உயர்த்தப்பட்டது. ஆனால், மேற்பார்வையும் கட்டுப்பாடும் முன்னைவிடக் கண்டிப் பாயின. போர்வீரரின் எண்ணிக்கை குறைந்தால் அந்தக் குறைவுக்கேற்ற விகிதப்படி உதவித் தொகையும் குறைந்தது. இறுதியாக விளைநிலங்களைச் சரியாக அளந்து நிலவரியைத் திட்டவட்டமாகக் கணக்கிடுவதற்காக நிலவரி வசூல் நிர்வாகத் துறையையும் கவான் சீர்திருத்தியமைத்தான். எட்டு மாகாணங் களுள் ஐந்தில் ஆளுநராக இருந்த உள்ளூர் முஸ்லிம்கள்

இந்தச் சீர்திருத்தங்களைச் செய்த மாமூது கவானை மிகவும் வெறுத்தார்கள்.

உள்ளூர் முஸ்லிம்கள் கவான்மீது கோள்சொல்லும் வேலையைத் தொடங்கினார்கள். அரசனிடம் அவனைப்பற்றிப் பல பொய்க் கதைகளைக் கூறினார்கள். அவனுடைய முத்திரையைத் திருடி, அதனை ஒரு வெற்றுக் காகிதத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்து, தக்காண மக்கள் முகமதுவினுடைய கொடுங்கோலாட்சியாலும் இடையீடில்லாத குடிப் பழக்கத்தாலும் சலித்துப்போய் அவனை வெறுப்பதாகவும், அதனால் பாமினி ராஜ்யத்தின்மீது படையெடுத்து வரவேண்டுமென்றும் ஒரிசாவின் அரசனுக்குக் கவான் எழுதியதுபோல ஒரு போலிக் கடிதத்தை அவர்கள் அந்தக் காகிதத்தில் எழுதி, அதனை ஒரிசா அரசனிடம் சேர்ப்பதற்காக எடுத்துக்கொண்டு போன ஆளை அவர்கள் வழிமறித்து அந்தக் கடிதத்தைப் பறித்து வந்ததாய் அரசனிடம் கூறிக் கடிதத்தையும் அவனிடம் கொடுத்தார்கள். சுல்தான் உடனே தன்னை வந்து காணுமாறு கவானுக்குக் கட்டளையிட்டான். சுல்தானிடம் கவான் போகக்கூடாதென்றும் அவன் குஜராத்துக்கு ஓடிவிட வேண்டுமென்றும் அவனுடைய நண்பர்கள் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் கவான் சுல்தான் முன்போய் நின்றான். ராஜத்துரோகக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால் அதற்குரிய தண்டனை யாதென்று கவானிடம் சுல்தான் கடுமையாகக் கேட்டான். மரண தண்டனைதான் அதற்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனை என்று கவான் சிறிதும் தயங்காமல் கூறினான். உடனே சுல்தான் கள்ளக்கடிதத்தைக் கவானுக்குக் காட்டினான். முத்திரை தன்னுடையதுதான் என்று ஒப்புக் கொண்ட கவான் கடிதத்தைத் தான் எழுதவில்லை என்று சொன்னான். ஆனால், அதனைக் காதில் வாங்கிக்கொள்ளாத சுல்தான் கவானை அதே இடத்தில் கொன்று விடும்படி தன்னுடைய அபிசீனிய அடிமை ஜௌஹார் என்பவனுக்கு ஆணையிட்டான். ஆணை நிறைவேறியது (1481 ஏப்ரல் 5). முப்பத்தைந்தாண்டுக் காலம் பாமினி அரசர்களுக்கு மாறாத ஆர்வத்துடன் தொண்டு செய்த கவான் இறந்தான். அவனுடைய திறமை அவனை அரசியல் மேதை என்ற நிலைக்கு உயர்த்தியது. மேலும், அவன் குன்றாத ராஜபக்தியுடையவன். பாமினி அரசர்களுக்குத் துணைசெய்த அலுவலர் அனைவரிலும் அவனிடந்தான் அந்த இரண்டு இயல்புகளும் ஒருங்கே இருந்தன. அவன் கொலையுண்டான்! அவனுடைய சொந்த வாழ்க்கை எளிமையானது; பிறர் பழிக்காத தன்மையுடையது. அவன் பரந்த மனப்பான்மையும் ஒப்புரவும் கல்வியறிவும் பெற்றவன். வெளி

நாட்டு முஸ்லிம்களுக்கும் உள்நாட்டு முஸ்லிம்களுக்கும் இருந்த பகையை அவன் தணிக்க முயன்றான். ஆனால் மாலிக்ஹாசனுடைய மாறாத காழ்ப்பு அந்த முயற்சிக்குத் தடையாக இருந்தது.

மாமூது கவானுடைய பாசறையை சுல்தானுடைய போர் வீரரும் பொதுமக்களும் சூறையாடினார்கள். அவனைப் பின் பற்றியவர்களும் ஏனைய 'வெளி நாட்டினரும்' பாடி வீட்டிலிருந்த யூசுப் அடில்கானிடம் ஓடிவிட்டார்கள். கவானுடைய செல்வமெல்லாம் எங்கே என்று அவனுடைய கருவூலத் தலைவனை சுல்தான் கேட்டபோது, அவையெல்லாவற்றையும் கவான் அறப் பணிகளில் செலவழித்து விட்டான் என்று அவன் சொன்னான். மேலும், சுல்தான் கவானை அநியாயமாகக் கொலைசெய்துவிட்டதாக அவன் குற்றஞ்சாட்டி, கவானுடைய குற்றத்தை மெய்ப்பிக்குமாறு அவன் சுல்தானுக்குச் 'சவால்' விட்டான். குறைந்த பட்சம் ஒரிசா அரசனுக்குக் கடிதம் கொண்டுபோனதாகச் சொல்லப்பட்ட ஆளையாவது காட்ட இயலுமா என்று அவன் சுல்தானைக் கேட்டான். அதன் பின்னரே சுல்தான் உண்மையை உணர்ந்தான். கவானுடைய உடலைத் தக்க மரியாதையுடன் புதைப்பதற்காக அதனை அவன் பீடாருக்கு அனுப்பினான். வெளிநாட்டார் அனைவருமே இப்போது அரசனிடத்தில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். அவன் எந்த நேரத்திலும் தங்களுக்குத் தீங்கிழைக்கக்கூடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். அன்றியும் உள்ளூர் முஸ்லிம்களுள் நல்லவர்களாயிருந்தவர்களும் அரசனை அணுகாமல் ஒதுங்கினார்கள். அவனுடைய அவைக்கும் பாசறைக்கும் சென்று அவனைக் காணும் பழக்கத்தை அவர்கள் கைவிட்டார்கள். எப்போதாவது அவனைக் காண நேர்ந்தாலும் தொலைவிலிருந்தே சலாம் செய்வதோடு அவர்கள் அமைந்தார்கள்.

கவானைக் கொல்லச் சூழ்ச்சி செய்த உள்ளூர் முஸ்லிம்களைத் தவிர அரசனுக்குத் துணைசெய்வார் வேறு யாரும் இலர் என்ற நிலையேற்பட்டது. அதனால், அவர்களைத் தண்டிக்க விரும்பிய அரசன் அதற்கு மாறாக அவர்களைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டான். மாலிக்ஹாசன் ராஜ்யத்தின் அணுக்க முதல்வன் ஆனான். அவனுடைய மகன் அகமது தௌலதாபாத்து ஆளுநன் ஆனான். அந்தப் பதவியை அதுவரையில் வகித்து வந்த யூசுப், மாமூதுகவான் முன்பு பெற்றிருந்த ராணுவமானியமான பெல்காம், பீஜப்பூர் ஆகிய பகுதிக்குச் சென்றுவிட்டான். யூசுப் அடில்கானைச் சமாதானஞ்செய்வதற்காக முகமது பெல்கா

முக்குச் சென்ருன். அப்போது விஜயநகர அரசன் கோவாவைத் தாக்குவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாய் அவன் கேள்விப்பட்டான். அந்த அபாயத்தைத் தவிர்ப்பதாகத் தானே ஒரு படையை நடத்திச்செல்ல அவன் விரும்பினுன். ஆனுல், பிரபுக்கள் அவனேடு செல்ல மறுத்துவிட்டார்கள். அதனுல் அந்த வேலையை யூசுப் அடில்கானிடம் விட்டுவிட்டு, அவன் பிரோசாபாத்துக்குத் திரும்பிச் சென்று, தனக்கு ஏற்பட்ட மானக்கேட்டைக் குடி மயக்கத்தில் மறக்க முயன்ருன். தன்னுடைய இளவயது மகன் மாமூது தனக்குப் பின் அரசனுக வேண்டுமென்று அவன் முறையாக விளம்பரப்படுத்தினுன். இறுதியில், 1482 மார்ச்சு 22ஆம் நாள் அவன் இறந்துபோனுன். அனுவக்கு அப்போது இருபத்தொன்பது வயதுதான் ஆகியிருந்தது. தன்னை மாமூதுகவான் கொலை செய்வதாகக் கதறிக்கொண்டே அவன் உயிர்விட்டான்.

பாமினி அரசர்களுள் பிரோஸுக்கு அடுத்தபடியாக முகமதுதான் கல்விகேள்விகளில் மிகவும் சிறந்தவன் என்று பெரிஷ்டா கூறுகிருர். அவன் வீரமும் ஊக்கமும் மிகுந்த அரசன்; போரில் வல்லவன். அவனுக்குத் திறமையுடைய அமைச்சர் பலர் இருந்தனர். அவர்களுள் மாமூது காவான் தலைசிறந்தவன். ஆனுல், அவன் பெரிய குடிகாரன். குடியே அவனுக்கு முதற் பகையாயிருந்தது. குடி மயக்கத்தில் அவன் ஆராயாது செய்த செயல்கள் அவனுடைய பெருமைக்கு ஊறுவிளைவித்தன. அவன் இளவயதிலேயே இறப்பதற்கும் குடியே காரணமாயிற்று. பாமினி வமிசத்தில் அரசன் என்ற பெயரைத் தாங்கும் தகுதிபெற்றவர்களுள் அவனே கடைசியானவன். அவனுக்குப்பின் ஐவர் பாமினி ராஜ்யத்தை ஆண்டார்கள். ஆனுல், அவர்களெல்லாருமே பழிபாவங்களுக்கு அஞ்சாத அமைச்சர்களுடைய கைப்பாவையாக இருந்தவர்கள்.

மூன்ரும் முகமதுவின் மகன் மாமூது தன் பன்னிரண்டாம் வயதில் அரியணை யேறினுன். முடிசூட்டு விழாவை அற்பமான முறையில் மாலிக்ஹாசன் நடத்தினுன். பிரபுக்கள் வேண்டுமென்று அந்த விழாவிற்குப் போகாமலிருந்து விட்டார்கள். யூசுப் அடில்கான் புதிய அரசனைக் கண்டு தன் மரியாதையைத் தெரிவித்துக்கொள்வதற்காகக் கோவாவிலிருந்து பீடாருக்கு வந்தான். ஆனுல், தலைநகரில் ஐயுறவும் சூழ்ச்சியும் மலிந்திருப்பதையும் தன்னுடைய ஆட்களுக்கும் உள்ளூர் முஸ்லிம்களுக்கும் நேருக்கு நேர் நடந்த சண்டைகளையும் கண்ட யூசுப் பிஜப்பூருக்குத்

திரும்பிவிட்டான். தலைநகரில் மாலிக்ஹாசன் தன்னிகரற்று விளங்கினான். மாலிக் ஹாசனுடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதற்காக இளைஞனான சுல்தான் அவனை ஆள் வைத்துக் கொல்ல முயன்றான். ஆனால், அந்த முயற்சி தோல்வியடைந்தது. அதிலிருந்து மாலிக் ஹாசனுடைய கட்டுப்பாடு மேலும் கண்டிப்பாயிற்று. அரசன் தானாக எதையும் செய்ய முடியாத சிறைக் கைதியைப் போலிருந்தான் என்பதை அனைவரும் அறிந்தனர். மாலிக்நயிப் பதவிவகித்த மாலிக்ஹாசனுடைய ஆணைகளை மாகாண ஆளுநர்கள் புறக்கணிக்கத் தொடங்கினார்கள். எடுத்துக்காட்டாக, 1486–ல் தெலிங்கானா ஆளுநன் கலகஞ் செய்தான். அன்றியும், கோவாவிலும் சாக்கனிலும் கலகங்கள் நடந்தன. அவற்றிற்கு யூசுப் அடில்கான் ஆதரவளித்தான். மாலிக் ஹாசன்மீது தனக்கிருந்த வெறுப்பை அரசன் விரைவிலேயே எல்லாருக்குந் தெரிகிற வகையில் வெளியிட்டான் அதனால், மாலிக் ஹாசன் கருவூலத்தைக் கைப்பற்றி ராணுவத்தைத் தன் பக்கம் இழுத்துக்கொள்ளும் நோக்கத்துடன் பீடாருக்குச் சென்றான். பீடார் நகரின் ஆளுநனான தில்பசந்துகான் அவனைச் சிறைசெய்து, அரசனுடைய ஆணைக்கு இணங்க, அவனுடைய கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டான். அதனால் நாடு எவ்வகையிலும் நன்மை பெற்றதாகத் தெரியவில்லை. இன்னுஞ் சிறிது காலத்துக்கு முன்பே அவன் ஒழிந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். அரசன் பீடாருக்குத் திரும்பியதும், மட்டுமீறிய குடியிலும் சிற்றின்பத்திலும் ஆழ்ந்து, அரசியல் விவகாரங்களில் கவனஞ் செலுத்தாமல் காலத்தைக் கழித்தான். 1487 நவம்பரில் உள்ளூர் முஸ்லிம்கள் அவனை அரசபதவியிலிருந்து நீக்குவதற்குச் சதிசெய்தார்கள். ஆனால் வெளிநாட்டினர் தலையிட்டு அந்தச் சதியை முறியடித்தனர். அதன் விளைவாக உள்ளூர் முஸ்லிம்களும் ஆப்பிரிக்கர்களும் கொன்று குவிக்கப்பட்டார்கள். அந்தப் படுகொலை மூன்றுநாள் நீடித்தது.

1490-ல், மாலிக்ஹாசனுடைய மகனான மாலிக் அகமது நிஜாம் உல்முல்கின் தூண்டுதலின் பேரில் பிஜப்பூர் ஆளுநன் யுசுப் அடில்கானும் பேரார் ஆளுநன் பதுல்லா இமதுல் முல்கும் நிஜாமுல்கோடு சேர்ந்து, பீடாரின் மேலாதிக்கத்தை உதறிவிட்டுச் சுயேச்சை பெற்ற அரசர்களாகத் தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டார்கள். அவர்களைப் பின்பற்றிக் கோல்கொண்டா ஆளுநன் குதுப் உல்முல்கும் பீடார் ஆளுநன் பரீதுல்முல்கும் 1512–ல் தங்களுடைய சுயேச்சையை அறிவித்தார்கள். இவ்வாறு தான் அமகதுநகர் (நிஜாம் ஷாஹி), பிஜப்பூர் (அடில்ஷாஹி), பேரார் (இமத்ஷாஹி), கோல்கொண்டா (குதுப்ஷாஹி),

பீடார் (பரீத்ஷாஹி) ஆகிய ஐந்து முஸ்லிம் அரசுகள் தக்காணத்தில் தோன்றின. தன்னுடைய தந்தையைக் கொல்வித்த அரசனை ஒழிக்க வேண்டும் என்ற எண்ணம் அகமதுக்கு இருந்ததென்றும் அதனால்தான் அவன் அரசனுடைய மேலாதிக்கத்தை உதறித் தள்ளினன் என்றும் கூறுவது பொருத்தமாக இருக்கும். ஆனால் அந்தந்தச் சமயத்தில் தனக்குப் பிடித்த அமைச்சன் கையில் மாட்டிக்கொண்டு, அவன் ஆட்டுவித்தபடி யெல்லாம் ஆடிய அரசனுடைய மேலாதிக்கத்தில் இருப்பதற்கு விரும்பாததே மற்றவர்கள் முழு உரிமை பெற்ற ராஜ்யங்களை நிறுவுவதற்குக் காரணமாயிருந்தது. அகமது நகரும் பிஜப்பூரும் பேராரும் சுயேச்சை பெற்றபோது பீடாரில் காசிம்பரீத் என்பவன் மாமூதின் அமைச்சனாய் இருந்தான். அவன் கையில் மாட்டிக்கொண்ட சுல்தான் முன்பு எப்போதும் இல்லாத அளவு வலிமையற்றவனாய் இருந்தான். அதனால், 1490ஆம் ஆண்டிலிருந்தே பீடாரும் சுல்தானுடைய ஆதிக்கத்தை உதறிவிட்டது என்று கருதும் வரலாற்றாசிரியர்களும் இருக்கிறார்கள்.

தங்களுடைய சுயேச்சையை விளம்பரப்படுத்திய மாகாண ஆளுநர்களை மீண்டும் மைய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் காசிம் பரீத் முதலில் பிஜப்பூர்மீது படையெடுத்தான். அதே சமயத்தில் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுப்பதன்மூலம் பிஜப்பூரைத் தாக்குமாறு அப்போது விஜயநகர ஆட்சியாளனாயிருந்த (அரசனாக அன்று) நரச நாயக்கனைக் காசிம் தூண்டினன். அகமது ஷாவும் தனக்குத் துணை புரிவானென்று காசிம் எதிர்பார்த்தான். ஆனால் அகமது அவ்வாறு செய்யவில்லை. யூசுப் காசிமை ஒரு சண்டையில் தோல்வியுறச் செய்தான். பாமினி அரசனுக்கு அடங்கிய தலைவனாய்க் கோவாவில் ஆட்சிபுரிந்த பஹதூர் கிலானி குஜராத்துக்கு எதிராகக் கடற்கொள்ளையில் ஈடுபடுவதாய் குஜராத் அரசன் மாமூது பெகரா 1493-ல் பாமினி அரசனிடம் புகார் செய்தான். கிலானியை அடக்கும் முயற்சியில் யூசுப், அகமது, பதுல்லா ஆகிய மூவரும் காசிமுக்குத் துணைபுரிந்தனர்; ஏனெனில், குஜராத் அரசன் தக்காணத்தின்மீது படையெடுப்பதைத் தடுப்பதில் அவர்கள் எல்லோருக்குமே அக்கறை இருந்தது. கிலானி கொல்லப்பட்டான். அவனுடைய மானிய நிலங்கள் அயினுல் முல்க் கனானி என்பவனுக்குத் தரப்பட்டன. அவன் யூசுப் அடிலின் வலிமையை எதிர்த்துநின்று சமாளிக்கும் ஆற்றலுடையவன் என்று காசிம் கருதியதால்தான் அவன் மற்றவர்களை விட்டுவிட்டு அவனைத் தெரிந்தெடுத்தான்.

பீடாரில் பெயரளவில் மாமூது அரசனாக இருந்தான். அப்போது நடந்த சூழ்ச்சிகள், கலகங்கள், கட்சிச் சண்டைகள் ஆகியவற்றைப்பற்றி விவரமாக எடுத்துக்கூறுவது தேவையில்லை. 1504-ல் காசிம் பரீது இறந்தான். அவனுக்குப் பதிலாக அமீர் அலி பரீது அமைச்சனானான். அவனுடைய அதிகாரம் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளுக்குட்பட்டது. எனினும், அவன் அரசனைத் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தான்; தன்னிடமிருந்து விடுதலை பெறுவதற்கு அவன் செய்த முயற்சிகள் எல்லாவற்றையும் தோல்வியடையுமாறு செய்தான். மாமூது 1518 டிசம்பரில் இறந்தான். அவனுக்குப்பின் அவனுடைய நான்கு மக்கள் ஒருவர்பின் ஒருவராக அரியணை யேறினார்கள். 1. அகமது (1518-21), 2. அலாவுதீன் (1521): அலிபரீதின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுவதற்காக இந்த அலாவுதீன் செய்த முயற்சியின் விளைவாக அவன் முதலில் பதவியிலிருந்து இறக்கப்பட்டான்; பின்பு சிறைசெய்யப்பட்டான்; அதன்பின் கொல்லப்பட்டான். 3. வலியுல்லா (1521-24): மூன்றாண்டு பெயரளவில் அரசனாய் இருந்தபின் இவனுக்கும் அலாவுதீனுக்கு நேர்ந்த கதியே நேர்ந்தது. 4. கலிமுல்லா: இவன் பாபரின் துணையை நாடி அவனுக்கு ஒரு தூதனை அனுப்பினான். தன்னைப் பிடித்து வைத்திருந்த அலிபரீதிடமிருந்து தன்னை விடுவித்துத் தன்னுடைய ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தால் தௌலதாபாத், பேரார் ஆகிய மாகாணங்களை பாபருக்குக் கொடுத்துவிடுவதாகக் கலிமுல்லா சொல்லியனுப்பினான். அதற்குப் பாபரிடமிருந்து மறுமொழி வரவில்லை. ஆனால், அலிபரீதுக்கு அந்த ரகசியம் தெரிந்துவிட்டது. கலிமுல்லா 1527-ல் பிஜப்பூருக்கு ஓடினான். ஆனால் அங்கு அவனுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கவில்லை. அதனால் அவன் அகமது நகருக்குப் போனான். விரைவில் அவன் அங்கே மாண்டுபோனான். புதைப்பதற்காக அவனுடைய உடல் பீடாருக்கு அனுப்பப்பட்டது.

இவ்வாறு பாமினி ராஜயம் அழிந்தது. அதனுடைய இறுதி யாண்டுகள் நம்முடைய மனத்தைக் கவர்வனவாக இல்லையென்பது தெளிவு. பாமினி வமிசத்தில் 18 அரசர்கள் இருந்தார்கள். அவர்களுள் மிகப்பலர், ஏறக்குறைய எல்லாருமே, குடிகாரர்களாயும் காமக்களியாட்டத்தில் கண்மூடித்தனமாக மூழ்கியவர்களாயும் இருந்தார்கள். சுயநலக்காரர்களும், புறங்கூறுவோரும், காட்டிக் கொடுப்போரும் அவர்களைச் சுற்றமாகச் சூழ்ந்திருந்தார்கள். கட்சிப் பகையும் பூசலுமே அரசவையின் முக்கிய இயல்புகளாய் இருந்தன. பல சமயங்களில் அவை மிகக் கொடூரமான தவறுகளுக்குக் காரணமாயின. எடுத்துக்காட்டாக,

மாமூது கவானுடைய கொலையைக் கூறலாம். அரசர்களுள் சிலர் மதவெறியர்கள். இந்த அரசர்களுள் யாருக்குமே இந்துக் குடிமக்களிடத்தில் உண்மையான பரிவு இருந்ததில்லை. நீர்ப்பாசனத் துறையிலும் பயிர்த்தொழில் துறையிலும் சில நல்ல காரியங்களை பாமினி அரசர்கள் செய்தார்கள். அவர்களுடைய வருவாயைப் பெருக்குவதே அந்தச் செயல்களின் நோக்கமெனினும், அவற்றால் குடிமக்களுக்கும் சிறிது நன்மை உண்டாயிற்று. பீடாரில் சிறிது காலம் (1470—74) தங்கியிருந்த அதனேசியஸ் நிகிடின் என்னும் ருசிய வணிகர் பின்வருமாறு எழுதி வைத்திருக்கிறார்; 'இந்த நாட்டில் அளவுக்கு மீறிய மக்கள் வசிக்கிறார்கள். கிராமப்புற மக்கள் பெருந்துன்பத்தில் உழல்கிறார்கள், ஆனால், பிரபுக்கள் செழிப்புடையவர்களாகவும் இன்பவாழ்வினை இடையீடின்றித் துய்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். வெள்ளிப் பல்லக்கில் ஊர்ந்து செல்லும் அவர்களுக்கு முன்னால் பொற்கலன் பூட்டிய 20 போர்ப் புரவிகளும், பின்னால் 300 குதிரை வீரர்களும், 500 காலாட்களும், 10 பந்தம் ஏந்திகளும், 10 பாடகர்களும், கொம்பூதிகளும் செல்வது வழக்கம்.' போர் வீரர்களும் அவர்களுடைய தலைவர்களும் கிராமங்களின் குருதியை உறிஞ்சினார்கள். அதனால் மக்கள் அடைந்த துன்பம் சொல்லுந்தரமன்று. ஆனால், அவர்கள் குறைகளைக் கேட்பவர் யாரும் இல்லை. அண்டையிலிருந்த இந்து ராஜ்யங்களோடு—முக்கியமாக, விஜயநகரத்தோடு—செய்த போர்களில் அருவருப்பூட்டும் கொடுமைகள் இழைக்கப்பட்டன. சில சமயங்களில் நூற்றுக்கணக்கான இந்துக்கள் இஸ்லாம் மதத்திற்கு 'மாற்றப்பட்டனர்.' ஏராளமான வெளிநாட்டார்—பாரசீகர், துருக்கியர், அரேபியர், முகலாயர்—வாணிகஞ் செய்வதற்கும் அரசு அலுவலில் சேர்வதற்கும் தக்காணத்துக்கு வந்து, அங்கேயே குடியேறி, உள்ளூர்ப் பெண்களோடு வாழ்ந்தார்கள். அப்படியிருந்தும் குடிமக்களிற் பெரும்பாலார் இந்துக்களாகவே இருந்தார்கள். முன்னாள் 'ஐதராபாத்து மாநிலத்தில்' முஸ்லிம்களின் தொகை என்றுமே நூற்றுக்குப் பதினைந்து விழுக்காட்டுக்குமேல் இருந்ததில்லை.

பாமினி சுல்தான்கள் நல்ல அமைப்புடைய பல கோட்டைகளைக் கட்டினார்கள். குல்பர்காவிலும் பீடாரிலும் இன்று இருக்கின்ற முக்கியமான பழங் கட்டடங்களெல்லாம், அவர்களும் அவர்களுடைய அமைச்சர்களும் கட்டியவை. அவற்றின் கட்டடக் கலை இயல்புகளை 16ஆம் அதிகாரத்தில் 'கலை' என்னும் தலைப்பில் விளக்குவோம்.

பாமினி ராஜ்யத்தின் அழிவுக்குப்பின் தோன்றிய ஐந்து முஸ்லிம் ராஜ்யங்களின் வரலாற்றை விவரமாகக் கூற வேண்டிய

தேவையில்லை. விஜயநகரத்தின் வரலாற்றைக் கூறுகின்ற அடுத்த அதிகாரத்தில் விஜய நகரத்தோடு அவற்றுக்கு அவ்வப் போது ஏற்பட்ட தொடர்புகளைமட்டும் கூறுவதோடு அமை வோம். அந்த ஐந்து ராஜ்யங்களில் கோல்கொண்டாவும் பீஜப் பூரும் மிகமுக்கியமானவை. மற்றவற்றைவிட அவை அதிகநாள் இருந்தவை. முகமது காசிம் என்பவர் தம்முடைய புகழ்பெற்ற வரலாற்று நூலை 1580 முதல் 1626 வரையில் ஆட்சி செய்த பிஜப்பூர் சுல்தான் இரண்டாம் இப்ராஹிம் என்பவனுடைய வேண்டுகோளின்படி எழுதினார். ஆனால், முகமது காசிம் என்னும் பெயரைவிட அவருடைய குடும்பப் பெயரான பெரிஷ்டா என்பதுதான் உலகுக்கு நன்றாகத் தெரிந்த பெயர்.

## BIBLIOGRAPHY

J. Briggs : 'History of the Rise of the Muhammadan Power in India' (Ferishta), Vol. II, pp. 283-559 (Calcutta, 1909)

Sir Wolseley Haig : 'The Kingdom of the Deccan, 1347–1436' Cambridge History of India, Vol. III)


J.S. King: 'The History of the Bahmani Dynasty' (London, 1900)

H. K. Sherwani: 'Mahmud Gawan' (Allahabad, 1942)


J. Somasekhara Sarma : 'A Forgotten Chapter of Andhra History' (Madras, 1945)

N. Venkataramanayya : 'The Early Muslim Expansion in South-India' (Madras, 1942)

## பாமினி அரச வமிசம்


1. அலாவுதீன் பஹமன்ஷா
(1347–58)
2. முதலாம் முகமது
(1358–77)
4. தாவூது
(1378)
அகமதுகான்
மாமூதுகான்
5. இரண்டாம் முகமது
(1378–97)
3. முஜாஹிது
(1377–78)
பத்கான்
முகமது சஞ்சை
மகள் + பிரோஸ்
மகள் + அகமது
6. கியாசுதீன்
(1397)
7. ஷம்சுதீன்
(1397)
8. பிரோஸ்
(1397–1422)
9. அகமது
(1422–1435)

பாமினி அரச வமிசம் (தொடர்ச்சி)



# 12. விஜயநகரப் பேரரசு

*முதலாம் ஹரிஹரன்—முதலாம் புக்கன்—மதுரை சுல்தானியத்தின் முடிவு—இரண்டாம் ஹரிஹரன்—விஜயநகர அரசு எல்லை விரிவடைதல்—பாமினி ராஜ்யத்துடன் தொடர்புகள்—விருபாட்சன்—இரண்டாம் புக்கன்—முதலாம் தேவராயன் — ராமச்சந்திரன் — விஜயராயன்—இரண்டாம் தேவராயன்—ரெட்டிகள் கஜபதிகள் ஆகியவர்களுடன் தொடர்புகள்—அப்துர் ரஜாக்—பாமினிப் போர்கள்—இரண்டாம் விஜயராயன்—மல்லிகார்ஜுனன்—பேரரசின் வலுக்குறைவு—ஒட்டர் வலிமை பெருகுதல்—உண்மையுள்ள சிற்றரசர்கள்—இரண்டாம் விருபாட்சன்—சாளுவ நரசிம்மன்.*

*சாளுவ நரசிம்மன் செய்த போர்கள்—இம்மடி நரசிம்மனும் நரசநாயக்க துளுவனும்—வீரநரசிம்மன்.*

*வீரநரசிம்மன் ஆட்சியில் நடைபெற்ற கிளர்ச்சிகளும் சண்டைகளும்—கிருஷ்ண தேவராயன்—அவனுடைய பெருமையும் அருஞ் செயல்களும் — அச்சுதராயன் — போர்ச்சுகீசியர் வருகை—மதுரை நாயக்கர்கள் வலிமையடைதல்—முதலாம் வேங்கடன்—சதாசிவன்—ராமராஜன்—தெற்கு ராஜ்யங்களோடும், போர்ச்சுகீசியரோடும், முஸ்லிம் ராஜ்யங்களோடும் அவன் வைத்துக்கொண்ட தொடர்புகள்—ரட்சசி தங்கடி—விஜய நகரத்தின் அழிவு.*

*திருமலை—முதலாம் சீரங்கன்—இரண்டாம் வேங்கடன்—புத்தெழுச்சி டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் வருதல்—இரண்டாம் வேங்கடனுக்குப் பின் ஏற்பட்ட உள்நாட்டுப் போரும் குழப்பமும்—இரண்டாம் சீரங்கன்—ராமதேவன்—மூன்றும் வேங்கடனும் மூன்றும் சீரங்கனும்—கர்நாடகப் பேரரசின் முடிவு.*

*பேரரசின் அரசியலமைப்பு, நிர்வாக முறை, ராணுவ அமைப் பாண்மை.*


விஜயநகரத்தின் தோற்றத்தையும், 1346ஆம் ஆண்டுக்குமுன் அது பெற்ற வளர்ச்சியையும், சங்கமனுடைய மக்களாகிய ஹரிஹரன், புக்கன் முதலிய ஐவர்களுடைய கூட்டு முயற்சிகளையும் பற்றிய சில செய்திகளைச் சென்ற அதிகாரத்திற் கண்டோம். பாமினி ராஜ்யத்திற்கும் விஜயநகர ராஜ்யத்திற்கும் ஏற்பட்ட தொடக்க மோதல்களைப்பற்றிய சில செய்திகளையும் அந்த மோதல்கள் அவ்விரு ராஜ்யங்களையும் நிறுவிய அரசர்களுடைய

காலத்திலேயே தொடங்கின என்ற செய்தியையும் கூறினோம். விஜயநகரப் பேரரசின் அடுத்த முந்நூறாண்டு வரலாற்றை இந்த அதிகாரத்தில் கூறுவோம். இஸ்லாத்தின் தாக்குதல்களை எதிர்த்து ஏறக்குறைய முந்நூறாண்டுக்காலம் இந்து நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்த பெருமையை விஜயநகரப் பேரரசு பெற்றது. விஜயநகர அரசர்களின் அருஞ்செயல்களே தென்னிந்தியாவின் அரசியல், இலக்கியம், கவின்கலைகள் ஆகிய துறைகளில் இந்தியாவின் பண்டை மரபுகள் அழிந்துபோகாமல் இருப்பதற்குக் காரணமாயின. முழு அரசியல் உரிமையுடன் திகழ்ந்த இந்தத் தென்னிந்தியாவின் புகழ்மிக்க வரலாற்றில் விஜயநகரப்பேரரசின் வரலாறுதான் இறுதி அதிகாரம் என்று கூறலாம்.

பேரரசை நிறுவிய முதலாம் ஹரிஹரன் அதனுடைய நிர்வாக முறையை உருவாக்குவதிலும் பெருந்தொண்டாற்றினான். காகதீய நிர்வாக முறையைப் பின்பற்றிய ஹரிஹரன், ராஜ்யத்தை 'ஸ்தலங்கள்' என்றும் 'நாடுகள்' என்றும் பிரித்து, பல பார்ப்பனர்களைக் 'கர்ணம்' என்ற அலுவற் பெயருடைய பதவிகளில் அமர்த்தினான். அதற்குமுன் அந்தப் பதவிகளைப் பொற்கொல்லரும் வெலமர்களும் வகித்தார்கள். அவன் கொடை மாவட்டங்களிலிருந்த பல தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றினான். அவனுடைய ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த பொறிப்புகள் பல நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றுள் மிகவும் பிற்பட்டவை 1357ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. எனவே, அந்த ஆண்டில்தான் அவனுடைய ஆட்சி முடிவடைந்திருக்க வேண்டுமென்று நாம் கருதலாம். இறப்பதற்கு முன்னரே அவன் தன் உடன் பிறந்தவர்களுள் மிகவும் திறமைவாய்ந்தவனான புக்கனே தனக்குப்பின் அரசனாக வேண்டுமென்று விளம்பரப்படுத்திவிட்டான். உண்மையில், 'அரியணையின் ஆதார'மான புக்கன் குத்தியில் தன் தலைநகரை நிறுவித் தன் தமையன் ஹரிஹரனோடு 1346ஆம் ஆண்டிலிருந்தே கூட்டாட்சி நடத்தி வந்தான்.

தனியரசன் என்ற முறையில் புக்கனுடைய ஆட்சி சரியாக, இருபதாண்டுக்காலம், அதாவது 1377-ஆம் ஆண்டுவரையில் நீடித்தது. அவன் 1374ஆம் ஆண்டில் சீனாவுக்கு ஒரு தூதுகுழுவை அனுப்பினான் என்ற செய்தியை மிங்வமிசத்தினருடைய ஆண்டுவகை வரலாற்றின் மூலம் நாம் அறிகிறோம். இதுவே வெளிநாட்டுத் தொடர்புத்துறையில் புக்கன் செய்த மிகக் குறிப்பிடத்தக்க செயல். உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரையில், பாமினி சுல்தான்களாகிய முதலாம் முகமது, முஜாஹிது ஆகியவர்களுடன் புக்கன் செய்த போர்களே மிக முக்கியமான

செய்திகள். அப் போர்கள் அடிக்கடி நடந்தன என்பதையும், அவற்றால் விஜயநகர ராஜ்யத்திற்குப் பெருஞ் சேதம் விளைந்தது என்பதையும் நாம் சென்ற அதிகாரத்திற் கூறினோம். 1378ஆம்




**விஜயநகரப் பேரரசு காலத்திய தென்னிந்தியா**

ஆண்டில் இரண்டாம் முகமது குல்பர்கா அரியணை ஏறிய பின்னர் அவ்விரு ராஜ்யங்களுக்குமிடையில் சிறிது காலம் அமைதி நிலவியது. புதிய சுல்தான் அமைதியை விரும்பியவன்.

புக்கனுடைய மகன் கம்பணன் மதுரை சுல்தானியத்தை அழித்தமை, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது புக்கனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே கம்பணன் பேரரசின் தென்பகுதிக்கு அரசப்பிரதிநிதியாக இருந்தான். புகழ்பெற்ற தளபதிகளான கோபணனும் மங்குசாளுவனும் ஆட்சித்துறையில் அவனுக்குத் துணைபுரிந்தார்கள். கம்பணன் முதலில் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய பகுதிகளில் ஆட்சிசெய்துவந்த சாம்புவராயர்கள்மீது தன் கவனத்தைச் செலுத்தினான். அவர்களை அடக்கியபின் அவன் மதுரைமீது படையெடுப்பதற்கு அவர்களுடைய துணையையும் பெற்றான். மதுரையைப் பிடிப்பதற்குக் கம்பணன் செய்த போரைப்பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. ஆனால், அவனுடைய மனைவி கங்காதேவி எழுதிய 'மதுரா விஜயம்' (மதுரை வெற்றி) என்னும் வடமொழிச் செய்யுள் நூலில் அவனுடைய மதுரைப் போரைப்பற்றிய செய்திகள் காப்பிய இயல்புகளுடன் தரப்பட்டிருக்கின்றன. சாம்புவராயர்களை அடக்கியபின் கம்பணன் காஞ்சீபுரத்தில் தங்கியிருந்தபோது முஸ்லிம் ஆட்சியில் பாண்டிநாடு அடைந்திருந்த இரங்கத்தக்க நிலையை அந் நாட்டுத் தெய்வம் அவனுக்கு எடுத்துக்கூறியது மட்டுமன்றி அகத்தியன் அனுப்பிய வாள் ஒன்றினையும் அவனுக்குக் கொடுத்ததாக அவன் கனவு கண்டான் என்று மதுரா விஜயம் கூறுகிறது. அந்த வாள் பாண்டிய அரசின் சின்னம். அதனைக் கையிலேந்தி அரசோச்சும் தகுதியைப் பாண்டியர்கள் இழந்துவிட்டார்கள், பாண்டியர்கள் தங்கள் நாட்டை முஸ்லிம் ஆட்சியிலிருந்து மீட்க முடியாத நிலையில் இருந்ததால்தான் கம்பணன் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வரலாற்று நிகழ்ச்சி கி.பி. 1365-ல் இருந்து 1370-க்குள் நடைபெற்றது. முஸ்லிம்களின் படையெடுப்புகள் நிகழ்ந்த காலத்தில் அவர்கள் கையில் அகப்படாமல் இருப்பதற்காகச் சீரங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்ட ரங்கநாதனுடைய உருவச்சிலை 1371ஆம் ஆண்டில் மீண்டும் சீரங்கத்தில் நிறுவப்பட்டது. கம்பணன் 1374-ல் இறந்தான்.

இவ்வாறு முதலாம் ஹரிஹரன் தொடங்கிய பணியை முதலாம் புக்கன் தொடர்ந்து செய்துவந்தான். தென்னிந்தியாவின் பலபகுதிகள் அவனுடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டன. பேரரசு பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. 'ராஜ்யங்களை' அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரர்களோ பேரரசரின் நம்பிக்கைக்கும் தனிப்பற்றுக்கும் பாத்திரமான தளபதிகளோ ஆட்சி செய்தார்கள். உதயகிரி ராஜ்யம் (நெல்லூர், கடப்பை),

பெனுகொண்ட ராஜ்யம் (பெல்லாரி, அனந்தப்பூர், வடமைசூரின் சிலபகுதிகள்) முல்வாயி ராஜ்யம் (மைசூரின் சில பகுதிகள்; சேலம், தென்னார்க்காடு), அரக ராஜ்யம் அல்லது மலகராஜ்யம் (பனவாசி, சந்திரகுத்தி, கோவா), துளு ராஜ்யம் அல்லது பரகூர் மங்களூர்ராஜ்யம் ஆகியவைகளும் தெற்கிலிருந்த கம்பீரராஜ்ய மும் ஏனைய ராஜ்யங்களும் மேலே கூறியவாறு விஜயநகரப் பேரரசின் எல்லைகளுக்குள்ளிருந்த சிறிய ராஜ்யங்கள்.

முதலாம் புக்கனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் ஹரிஹரன் பட்டத்துக்கு வந்தான். அவன் 1377 முதல் 1404 வரையில் இருபத்தேழாண்டு ஆட்சி புரிந்தான், அவன் விஜய நகரப் பேரரசின் ஆதிக்கத்தைத் தென்னிந்தியா முழுவதிலும் நிலைநாட்டினான். மாதவரின் உடன் பிறந்தவரும் மிகவும் புகழ் பெற்றவருமாகிய சாயணச்சாரியர் ஹரிஹரனுடைய முத லமைச்சரா யிருந்தார். ஹரிஹரன் தன்னுடைய சிற்றப்பன் பெரியப்பனுடைய மக்களுக்குப் பதிலாகத் தன்னுடைய மக்களையே மாகாண ஆளுநர்களாக நியமித்தான். அவ்வாறுதான் தேவராயன் உதயகிரி ஆளுநன் ஆனான். சற்றுத் தள்ளிய உறவினர்கள் மாகாண ஆளுநர்களாயிருந்தால் அவர்களுக்கு அரச பதவியின்மேல் ஆசை தோன்றக்கூடும். அது பேரரசின் சிதை வுக்குக் காரணமாகலாம். அத்தகையதொரு நிலை ஏற்படாமல் தடுப்பது ஹரிஹரனுடைய நோக்கம். ராஜகொண்டாவில் ஆட்சி செய்துவந்த வெலம அரசன் அனுப்பொட்டன் சுமார் 1369-ல் தெலிங்கானாமீது படையெடுத்துக் காப்பைய நாயக்கனை வென்று கொன்றுவிட்டான். அதனால் தெலிங்கானாவின் அரசியல் நிலைமையில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டது. அனுப்பொட்டன் பாமினியரசர்களோடு நட்புறவு கொண்டிருந்தான். எனவே, அனுப்பொட்டனுடைய வலிமையின் பெருக்கத்தால் கொண்ட வீட்டுக்கும் விஜயநகருக்கும் அபாயம் நேரக்கூடும். இரண்டாம் ஹரிஹரனுடைய மகன் இளவரசன் இரண்டாம் புக்கன் 1390ஆம் ஆண்டின் இறுதிக்குள் வாரங்கல்மீது இருமுறை படை யெடுத்தான். ஆனால், அப் படையெடுப்புகளால் முடிவான விளைவுகள் ஏற்படவில்லை. ஏழாண்டுக்குப்பின் அவன் பங்கலைக் கைப்பற்றினான். தலைநகரத்திலிருந்து எட்டியிருந்த அந்த ஊரில் ராணுவ தளத்தை அமைத்துக்கொண்டு தெலிங்கானாமீது படையெடுப்பது எளிதாயிருந்திருக்கும். ஆனால், விரைவிலேயே அவன் பங்கலை யிழந்துவிட்டான்.

விஜயநகரப் பேரரசின் எல்லை வேறு திசைகளிலும் விரிவடைந்தது. வடமேற்கில் முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்த

கோவா, சால், தபோல் ஆகிய துறைமுகங்களும் கரப்பட்டினமும் விஜயநகர ஆட்சிக்குள் வந்தன. சிறிதுகாலம் கிருஷ்ணா நதி விஜயநகரப் பேரரசின் வடஎல்லையாக இருந்தது. கொண்ட வீட்டு ரெட்டிகளின் ஆட்சியிலிருந்த கர்நூலும் நெல்லூரும்—குண்டூரின் சில பகுதிகளுங்கூட விஜயநகர ஆட்சிக்குள் வந்தன (1382–1385). தென்னகத்திலும் விஜயநகரப் பேரரசின் ஆட்சி வலிமையடைந்தது. இளவரசன் விரூபாட்சன் தென்னகத்தின் மீது படையெடுத்து அங்கு விஜயநகர ஆதிக்கத்தை வலுப் படுத்தியதோடு இலங்கைக்கும் சென்று அதனையும் விஜய நகருக்குத் திறை செலுத்துமாறு செய்தான். இவ்வாறு விஜய நகரப் பேரரசின் வலிமை பெருகுவதற்கு பாமினியரசன் இரண்டாம் முகமதுவினுடைய இயல்புகளும் அவன் இறந்தபின் அதிகார ஆவல் மிக்க துருக்கிய அடிமை துகல்சிங் செய்த சூழ்ச்சி களின் பயனாக பாமினி ராஜ்யத்தில் தோன்றிய குழப்ப நிலையும் ஓரளவேனும் காரணமாயிருந்தன என்று நாம் உறுதியாகக் கூறலாம். 1398–99-ல் விஜயநகருக்கும் பாமினி ராஜ்யத்துக்கும் மீண்டுமொரு கடுமையானபோர் தொடங்கியது. அதில் வெற்றி பெற்ற பிரோஸ் இரண்டாம் ஹரிஹரனுடைய படைகளைக் கிருஷ்ணா நதிக்கரையிலிருந்து தலைநகர் வரையில் துரத்திக் கொண்டு சென்று இந்துக்களுள் மிகப்பலரைப் படுகொலை செய்தான். தான் கைப்பற்றிய ஏராளமான போர்க்கைதிகளுக்கு ஈடாக ஒரு மிகப்பெருந் தொகையை மீட்புப் பணமாகப் பெற்ற பின்னரே அவன் போரை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டான். அதற்குப்பின் இருதிறத்தாரும் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட உடன்படிக்கை இரண்டு ராஜ்யங்களின் எல்லைகளும் போருக்கு முன்பிருந்தது போலவே இருக்கவேண்டும் என்றும், ஒருவர் மற்றவருடைய குடிமக்களைத் துன்புறுத்தாமலிருக்க வேண்டுமென்றும் தெளிவற்ற கூறுகளைக் கொண்டதாயிருந்தது. அந்தச் சமயத்தில் தக்காணத்தின் பலபகுதிகளிலும் தோன்றிய பஞ்சம் மக்களுடைய துன்பத்தை மேலும் பெருக்கியது. இரண் டாண்டுக்குப்பின் மாளவ சுல்தானும் குஜராத் சுல்தானும் ஹரிஹரனோடு சேர்ந்துகொண்டதால் அவன் பாமினி சுல்தா னுக்குச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டிருந்த திறையைச் செலுத்தாமல் நிறுத்திவிட்டான்.

1404ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இரண்டாம் ஹரிஹரன் இறந்தபோது அவனுடைய மக்களுள் கடுமையான அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது. அரியணையைக் கைப்பற்றுவதில் முதலில் விரூபாட்சன் வெற்றி பெற்றான். ஆனால், விரைவில் இரண்டாம் புக்கன் அவனைத் தள்ளிவிட்டுத் தானே அரியணையேறி இரண்

டாண்டு ஆட்சி செய்தான் (1405-6). இறுதியில் முதலாம் தேவராயன் புக்கனைத் தோல்வியடையச்செய்து தானே அரியணையேறி, 1406 நவம்பர் 5ஆம் தேதியன்று தன் முடி சூட்டு விழாவை நடத்தினான்.

இரண்டாம் புக்கனும் தேவராயனும் விஜயநகரத்தில் புதிய சுவர்களையும் கோபுரங்களையும் கட்டியதோடு வெளியரண்கள் பலவற்றையும் கட்டி விஜயநகரத்தை மிகவும் விரிவுபடுத்தினார்களென்று போர்ச்சுகீசிய வரலாற்றுப் பதிவாளர் நூனிஸ் எழுதிவைத்திருக்கிறார். ஆனால், அவர்கள் செய்த மிகப்பெரிய செயல் துங்கபத்திரை நதியில் ஓர் அணைகட்டி, அதிலிருந்து பதினைந்து கல் தொலைவிலிருந்த விஜயநகரத்தை இணைப்பதற்கு ஓர் உயர்மட்டக் கால்வாயை வெட்டியதுதான்' என்று சூவல் கூறுகிறார். பழைய நகரத்தின் பலபகுதிகளில் இப்போதிருக்கின்ற விளைநிலங்களுக்குப் பாசன வசதி வருகிற கால்வாய்தான் புக்கனும் தேவராயனும் வெட்டிய கால்வாய் என்பது உண்மையாயிருந்தால், அவர்களுடைய செயல் மிகவும் வியக்கத்தக்க அருஞ் செயல் என்று சூவல் மேலும் கூறுகிறார். மலையடிவாரத்திலுள்ள கெட்டியான பாறையைப் பல கல் நீளம் பிளந்து அந்தக் கால்வாயின் ஒரு பகுதி வெட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிற் காணக்கிடக்கின்ற மிகவும் குறிப்பிடத்தக்க நீர்ப்பாசனத் திட்டங்களுள் இந்த அணையையும் கால்வாயையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சூவல் கூறி வியப்படைகிறார்.

தேவராயனுடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே விஜய நகருக்கும் பாமினி ராஜ்யத்துக்கும் போர் மூண்டது. முடுகலில் இருந்த ஓர் அழகிய பெண்ணின்மீது தேவராயன் கொண்ட ஆசைதான் அந்தப் போருக்குக் காரணமென்று பெரிஷ்டா கூறுகிறார். ஆனால், இந்து ராஜ்யமாகிய விஜயநகரத்தோடு ஒரு ஜிஹாதைத் (புனிதப்போரை) தொடங்கவேண்டுமென்று பிரோஸ் விரும்பியதுதான் அந்தப் போருக்குக் காரணமாயிற்றென்று வேறு சிலர் எழுதிவைத்திருக்கின்றனர். போர் முதலில் பிரோஸுக்குப் பாதகமாயிருந்ததெனினும், இறுதியில் தேவராயன் செய்துகொண்ட உடன்படிக்கை அவனுடைய மதிப்புக்குப் பெரிதும் ஊறுவிளைக்கக்கூடியதாயிருந்தது. விஜயநகரிலிருந்து அரபிக்கடலுக்குச் செல்லும் முக்கியமான வழியிலிருந்த ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பங்காப்பூரை தேவராயன் பிரோஸுக்குக் கொடுத்துவிட்டதுமட்டு மன்றித் தன்னுடைய மக்களுள் ஒருத்தியையும் சுல்தானுக்கு மணமுடித்து வைத்தான்.

அந்த நேரத்தில் கொண்டவீட்டு ரெட்டிகள் தேவராயனுக்கு எதிராகக் கிளம்பினார்கள். அவர்கள்பிரோஸுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது. எனவே, அந்த நேரத்தில் கிடைத்த வாய்ப்பை அவர்கள் பயன் படுத்திக்கொண்டு, உதயகிரியைத் தாக்கி, விஜயநகர ஆட்சியி லிருந்த சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அந்தப் பகுதிகள் 1413-ல்தான் மீண்டும் விஜயநகர ஆட்சிக்குள் வந்தன.

கிருஷ்ணாவுக்கும் கோதாவரிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆட்சி செய்துவந்த தெலுகுச்சோட மன்னன் ஆனதேவன் என்பவனும் பிரோஸுடன் நட்புறவு கொண்டிருந்தான். அந்த உறவால் நிகழக்கூடிய தீங்கைத் தடுப்பதற்காகத் தேவராயன் அப்போது ராஜமகேந்திரவரத்தில் ஆட்சி செய்தவனும் ஆனதேவ னுடைய மைத்துனனும் ஆகிய காட்டைய வேமன் என்னும் ரெட்டியரசனுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, இருவரும் சேர்ந்து ஆனதேவனைத் தாக்கினார்கள். 1415-ல் தொடங்கிய அந்தப் போர் முதலில் ஆனதேவனுக்குப் பாதகமா யிருந்தது. ஆனால், விரைவில் பிரோஸ் ஆனதேவனுக்குத் துணை செய்தான். பின்னர் நடந்த சண்டையில் காட்டைய வேமன் உயிர்துறந்தான். தேவராயனுடைய படைகளும் தோல்வி யடைந்தன. அதன் விளைவாக பிரோஸ் தெலிங்கானாவின்மீது தன்னுடைய மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினான். ஆனால், தேவராயன் பங்கலைப்பற்றிப் பிரோஸின் போக்குவரத்துத் தொடர்புக்கு இடையூறுண்டாக்கினான். அதன்பின் அந்த நகரம் ஈராண்டு முற்றுகைக்கு உட்பட்டது. பாமினி அரசனோடு நட்புறவு கொண்டிருந்த ராஜகொண்டா வெலமர்கள் தேவராயனோடு சேர்ந்துகொண்டார்கள். அதனால் பாமினி யரசனுடைய வலிமை குறைந்தது. அன்றியும், அப்போது தோன்றிய கொள்ளைநோய் பாமினிப் படைகளின் வலிமையை மேலுங் குறைத்தது. இந்தச் சாதகமான நிலையில் தேவராயன் பாமினிப் படைகளைத் தோல்வியுறச்செய்து மிகப்பெரிய வெற்றி பெற்றான் (1419). ராஜமகேந்திரவரத்து ரெட்டிகள் மீண்டும் வலிமை வெற்றார்கள். இறந்துபோன காட்டைய வேமனுடைய தளபதி அல்லாடன் என்பவன் அவர்களுக்குத் தலைமைதாங்கி, காட்டையனுடைய மகன் குமாரகிரியை ராஜமகேந்திரவரத்தின் அரசனாக்கினான். ஆனால், கொண்டவீட்டைத் தேவராயனும் ராஜகொண்டா வெலமர்களும் தமக்குள் பங்குபோட்டுக் கொண்டார்கள். அதனால், அந்த ராஜ்யம் அழிந்தது. இந்தப் பல்வேறு போர்களிலும் சண்டைகளிலும் தேவராயனுடைய மகன் வீர விஜயராயனும் அவனுடைய அமைச்சன் லட்சுமீதரனும் அவனுக்குப் பெருந்

துணையாயிருந்தார்கள். தேவராயனைக் கொல்வதற்காக நடந்த ஒரு சதியில் லட்சுமீதரன் தேவராயனைக் காப்பாற்றினான் என்றும் சிலர் கூறுகின்றனர். 1422-ல் தேவராயன் இறந்தபின் அவனுடைய மகன் ராமச்சந்திரன் சில மாதம் அரசனாய் இருந்தான். அதன்பின் வீர விஜயராயன் அரசனானான். தேவராயனுடைய ஆட்சியில் இறுதி ஆண்டுகளில் விஜயநகரத்துக்கு வந்த இத்தாலியன் நிக்கலோ காண்டி அந்த நகரத்தைப் பற்றி எழுதிவைத்த வருணனை நமக்குக் கிடைத்திருக்கிறது.

வீர விஜயராயன் எத்தனை ஆண்டுகள் ஆட்சிசெய்தான் என்பது சரியாகத் தெரியவில்லை. அதைப்பற்றிப் பலர் பல விதமாகக் கூறுகிறார்கள். உறுதியாகச் சொல்ல முடியா விட்டாலும், அவன் சுமார் ஐந்தாண்டுகள் ஆட்சி செய்தான் என்று நாம் கருதலாம் (1422–6). அவன் குறிப்பிடத்தக்க செயல் எதனையும் செய்யவில்லை என்று நூனிஸ் கூறுகிறார். அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் இரண்டாம் தேவராயன் வீர விஜயராயனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அரசியல் நிர்வாகத்தில் பங்குபெற்றிருந்தான் என்று கருதலாம். பாமினி ராஜ்யத்திற்கும் விஜயநகரத்துக்கும் வழிவழி வந்த பகைமை வீர விஜயன் காலத்திலும் தொடர்ந்தது. எனவே, பாமினி அரசன் அகமது ஷா விரைவிலேயே வீர விஜயனோடு போர்தொடுத்து, அவனுடைய படைகளை வென்று, போர் வீரரல்லாத ஏராளமான மக்களையும் கொன்று குவித்தான். இருதரப்புப் படைகளும் துங்கபத்திரைநதிக் கரையில் மோதின. விஜயனுடைய பாசறை ஒருநாள் வைகறையில் எதிர்பாராத தாக்குதலுக்குட்பட்டது. விஜயன் வேகமாகத் தப்பியோடி ஒரு கரும்புத் தோட்டத்தில் ஒளிந்துகொண்டான். அவனை அங்கே கண்ட முஸ்லிம் வீரர்கள் அவன் ஒரு சாதாரணத் தொழிலாளி என்று நினைத்தார்கள். அதே நேரத்தில் பாமினிப் படைகள் வெற்றிபெற்றுவிட்டன என்று அவர்கள் கேள்விப் பட்டார்கள். அதனால், அவர்கள் அந்தத் 'தொழிலாளி'யைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களுடைய நண்பர்களுடன் போய்ச் சேர்ந்துகொண்டார்கள். அதன்பின் அகமது ஷா பாதுகாப்பற்ற கிராமங்களைத் தாக்கி எதிர்ப்பட்ட மக்கள் எல்லாரையும் கொன்றான். 'இரக்கத்தை இதயத்திலிருந்து அறவே அகற்றிவிட்ட அகமதுஷா இருபதாயிரம் இந்துக்களைக் கொன்றபின் மூன்று நாள் ஓரிடத்தில் தங்கி, தான் செய்த அருஞ்செயலைக் கொண்டாடியபின் மீண்டும் அந்தத் திருப்பணியைத் தொடங்குவான். இவ்வாறு ஏராளமான மக்களைக் கொன்றது மட்டுமன்றி அவன் கோயில்களை அழித்து, விக்கிர

கங்களை உடைத்து, பார்ப்பனக் கல்லூரிகளை அழித்து மகிழ்ந்தான். விஜயன் பாமினி அரசனுக்குச் செலுத்த வேண்டிய திறை நிலுவைகள் அனைத்தையும் செலுத்திய வரையில் அந்தப் படுகொலை நிற்கவில்லை. மேலும், அவன் கல்வி கேள்விகளிற் சிறந்த பார்ப்பனர் உட்படத் தன் குடிமக்கள் பலரை அகமது ஷா சிறைபிடித்துச் செல்வதற்கும் விஜயன் உடன்பட்டான். அதன் பின்னரே சண்டை நின்று சமாதானம் ஏற்பபட்டது.

விஜயனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் தேவராயன், சுமார் 1426-ல் அரசன் ஆனான். தேவராயன் 'கஜபெட்டக்காரா' என்னும் பட்டப்பெயரை வைத்துக் கொண்டான். கஜபெட்டக்காரன் என்னும் தொடர் 'யானை வேட்டைக்காரன்' என்று பொருள்படும். அவன் யானையை யொத்த வலிமையுடைய பகையரசர் பலரை வென்றவன் என்று அணியிலக்கண மரபுப்படி அத் தொடருக்குப் பொருள் கொள்ள வேண்டுமென்று சிலரும், யானை வேட்டையில் மிகவும் விருப்ப முள்ளவன் என்று சொற்பொருள் கொள்ளுதலே பொருத்தமாக இருக்குமென்று வேறு சிலரும் கருதுகின்றனர். அஞ்சாநெஞ்ச னை பெத்த கொமட்டி வேமன் 1420-ல் இறந்தபின் கொண்டவீடு ராஜ்யம் வலிமையிழந்து அமைப்பாண்மையற்ற நிலையில் இருந்தது. அந்த ராஜ்யத்தை 1428ஆம் ஆண்டுக்குள் தேவராயன் வென்று விஜயநகர ஆட்சியில் இணைத்துவிட்டான். அதன்பின் தேவராயன் கஜபதி மரபினர் ஆட்சியிலிருந்த ஒரிசா ராஜ்யத்தின் மீது தன் கவனத்தைத் திருப்பினான். தேவராயன் கொண்ட வீட்டைக் கைப்பற்றியதால் அவனுக்கும் கஜபதியின் மேலா திக்கத்திலிருந்த சிற்றரசர்களுக்கும் பகை ஏற்பட்டிருக்கலாம். அதன் காரணமாகத் தேவராயன் ஒரிசாவின்மீது படை யெடுத்தான் என்று நாம் கருதலாம். ஆனால், போர் தொடங்கு வதற்குள் ராஜமகேந்திரவரத்து அல்லாடரெட்டி தலையிட்டு அமைதியை ஏற்படுத்தினான். அதன்பின் வெகு விரைவில் அல்லாடரெட்டி இறந்துபோனான். அவனுக்குப்பின் வந்த அவனுடைய மக்கள் அல்லய வேமனும் வீரபத்திரனும் தங்க ளுடைய தந்தையைப் போலவே கலிங்கத்தோடு பகைமை பாராட்டுவதன்மூலம் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளும் பொதுவான நடைமுறைக் கோட்பாட்டைப் பின்பற்றி னார்கள். 1435ஆம் ஆண்டில் கபிலேஸ்வரன் என்பவன் கலிங்கத்தின் அரியணை ஏறினான். அவன் ஆற்றல் மிகுந்த அரசன். எனவே, அவன் ராஜமகேந்திரவரத்தின்மீது படை யெடுத்தான். அரசியல் துறையிலும் திருமண உறவுகளின்

வாயிலாகவும் விஜயநகர அரசர்களோடு தொடர்புகொண்டிருந்த ராஜமகேந்திர ஆட்சியாளர்கள் கபிலேஸ்வர கஜபதியின் படையெடுப்பைச் சமாளிப்பதற்கு இரண்டாம் தேவராயனுடைய துணையை நாடினார்கள். அவனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஒரு படையுடன் சென்று கபிலேஸ்வர கஜபதியை வென்று துரத்தினான். ராஜமகேந்திரவரத்திற்கு ஏற்பட்ட ஆபத்து அப்போது நீங்கியது. ஆனால், இரண்டாம் தேவராயன் இறந்தபின் கபிலேஸ்வரன் ராஜமகேந்திரவரத்தைப் பிடித்துக்கொண்டான்.

தேவராயன் சேரலத்தின்மீதும் படையெடுத்தான். கொல்லத்தரசனும் ஏனைய சிற்றரசர்களும் அவனுக்குப் பணிந்தார்கள். ஆனால், கோழிக்கோட்டில் ஆட்சி செய்துவந்த ஜாமரின் முழு உரிமைபெற்ற அரசனாகவே இருந்தான். அந்தச் சமயத்தில் தென்னிந்தியாவுக்கு வந்திருந்த அப்துர் ரஜாக் என்னும் பெயருடைய பாரசிகத் தூதர், ஜாமரின் தேவராயனுடைய மேலாதிக்கத்திலிருந்த அரசர்களுள் ஒருவன் அல்லன் எனினும் அவன் தேவராயனிடம் மிகுந்த அச்சங்கொண்டிருந்தான் என்றும், பாரசிகத் தூதரைக் காலதாமதமின்றித் தன்னிடம் அனுப்புமாறு தேவராயன் விடுத்த கடிதத்தைக் கண்டவுடனே அவன் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்தான் என்றும் கூறுகிறார். தென்னிந்தியா முழுவதும் தேவராயனுடைய ஆதிக்கத்திலிருந்தது என்பதற்கு அப்துர் ரஜாக் சான்று பகர்கிறார். தேவராயனுடைய ராஜ்யம் இலங்கையிலிருந்து குல்பர்கா வரையிலும், வங்காளத்திலிருந்து (ஒரிசாவிலிருந்து) மலபார் வரையிலும் பரவியிருந்தது என்று அவர் எழுதிவைத்திருக்கிறார். தேவராயனுக்குக் கொல்லம், இலங்கை, பழவேற்காடு, பெகு, டெனசரிம் முதலிய நாடுகள் திறை செலுத்தின என்று நூனிஸ் உறுதியாகக் கூறுகிறார்.

பாமினி ராஜ்யத்துக்கும் விஜயநகர ராஜ்யத்துக்கும் வழிவழி வந்த பகை தேவராயன் காலத்திலும் தொடர்ந்தது. 1436ஆம் ஆண்டில் இரண்டாம் அலாவுதீன் பாமினி யரியணை ஏறியவுடனே, விஜயநகர அரசன் செலுத்தவேண்டிய திறை நிலுவையை வசூல்செய்வதற்காகத் தன் உடன்பிறந்தான் முகமதுவை ஒரு படையுடன் அனுப்பினான். தேவராயன் ஒரு பெருந்தொகையை அவனுக்குச் செலுத்தினான். பாமினிப் படைகளோடு விஜயநகரப் படைகள் எப்போது போர் செய்தாலும் தோல்வியே கண்டன. பாமினிப் படைகளின் வெற்றிக்குரிய காரணங்களைக் கண்டுபிடிப்பதற்கும் அந்த நிலைமையை மாற்றுவதற்கேற்ற வழிவகைகளை ஆராய்வதற்கும் தேவராயன் தன்னு

டைய பிரபுக்களோடு கலந்து பேசினான். அந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக முஸ்லிம்களையும் விஜயநகரப் படைகளிற் சேர்த்துக்கொள்வதென்றும், அவர்களுடைய மதக்கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு முழு உரிமை தருவதென்றும் அவன் முடிவு செய்தான். மேலும், 'தன்னை அவர்கள் தலை தாழ்த்தி வணங்கும்போது அவர்களுடைய மதக்கோட்பாடுகளுக்கு எதிராக நடக்கும் பாவத்தை அவர்கள் செய்யாமலிருப்பதற்காக'த் தன்னுடைய அரியணைக்கு முன்னால் திருக்குரான் பிரதி ஒன்றை வைப்பதற்கு ஏற்பாடுசெய்தான். அன்றியும், இந்துப் போர்வீரர்களுக்கு நல்ல பயிற்சி—முக்கியமாக வில் வித்தையில்—அளிப்பதற்கும் தேவராயன் ஏற்பாடு செய்தான். இவ்வாறு சீர்திருத்தத்திற் குட்பட்ட விஜயநகரப் படை முன்பிருந்ததைவிட அதிகத் திறமை பெற்ற படையாக விளங்கியது.

1443-ல் அப்துர் ரஜாக் கோழிக்கோட்டில் இருந்தபோது இரண்டாம் தேவராயனுடைய சகோதரர்களுள் ஒருவன் அவனைக் கொல்லும் நோக்கத்துடன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான் என்று கூறுகிறார். ஆனால், அந்தச் சதி வெற்றி பெறவில்லை. உடல் நலமில்லை என்று காரணங்கூறி, தேவராயன் அந்த விருந்துக்குப் போகாமல் நின்றுவிட்டான். ஆனால், விருந்துக்குச் சென்றிருந்த பல பிரபுக்கள் உயிரிழந்தார்கள். அந்தச் சதியைப் பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் பாமினி சுல்தான் இரண்டாம் அலாவுதீன் நன்றாக அறிந்திருந்தான் என்பது தோன்றுகிறது. ஏனெனில், அதன்பின் விஜயநகரில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவன் ஏழு லட்சம் வராகனைத் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று தேவராயனுக்குச் சொல்லியனுப்பினான். தேவராயன் அந்தத் தொகையைக் கொடுப்பதற்கு மறுத்ததுமன்றி ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின் மீது படையெடுத்தான். தொடக்கத்தில் அவனுக்கு நல்ல வெற்றி கிடைத்தது. முதலில் தேவராயன் முடுகலைக் கைப்பற்றினான். அதன்பின் அவன் ராயச்சூரையும் பங்காப்பூரையும் முற்றுகையிட்டுப் பிஜப்பூர் வரையிலிருந்த நாடு முழுவதையும் அழித்தான். ஆனால், பாமினிப் படைகள் விரைவில் புத்துரம் பெற்று, விஜயநகரப் படைகளோடு போர்செய்து, தேவராயனை முடுகல் வரையில் பின்வாங்குமாறு செய்தன. அதன்பின் மூன்று சண்டைகள் நடந்தன. கடைசிச் சண்டையில் தேவராயனுடைய பெரிய மகன் இறந்தான். அவனுடைய படைகள் முடுகல் கோட்டைக்குள் ஓடி ஒளிந்துகொண்டன. ஆனால், பாமினி தளபதிகளில் முக்கியமான இருவர் தேவராயன் கையில் அகப்

பட்டுக்கொண்டனர். அந்தத் தளபதிகளை விடுதலை செய்து என்னிடம் ஒப்படைக்காவிட்டால் இந்துக்கள் எல்லாரையும் மொத்தமாகக் கொலைசெய்யப் போவதாகப் பாமினி சுல்தான் அச்சுறுத்தினன். வேறுவழியின்றி, தேவராயன் அந்தத் தளபதிகளை விடுதலை செய்துவிட்டான்.

தேவராயன் பல கட்டடங்களைக் கட்டினன்; புலவர்களை ஆதரித்தான். அவனே கல்வி கேள்விகளில் வல்ல நூலாசிரியன். கற்றறிந்தவர்கள் செய்த வாதங்களுக்குப் பலமுறை வெற்றியுறுமாறு அவன் தலைமை தாங்கினன் என்று நாம் அறிகிறோம். புகழ் பெற்ற டிண்டிம குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்தான வித்துவானும் (அரசவைப் புலவர்) ஸ்ரீநாதர் என்னும் தெலுங்குக் கவிஞரும் ஒருமுறை வாதிட்டனர். ஸ்ரீநாதரே சிறந்தவர் என்று தீர்ப்புக் கூறிய தேவராயன் அவருக்குக் 'கனகாபிஷேகம்' செய்து வைத்தான்.

1446 மே மாதத்தில் தேவராயன் இறந்தான். அவனுடைய நீண்ட ஆட்சி வளமான ஒன்று என்று பொதுவாகக் கூறலாம். அவனுக்குப்பின் இரண்டாம் விஜயராயன் அரசன் ஆனன். வெகுவிரைவில் தேவராயனுடைய மகன் மல்லிகார்ஜுனன் அரியணை ஏறினன். அவனுடைய முடிசூட்டுவிழா 1447 மே மாதத்திற்கு முன் நடைபெற்றது.

மல்லிகார்ஜுனன் வலிமையற்றவன், நிர்வாகத் திறமையில்லாதவன். அதனல் அவன் அரியணையேறிய காலந்தொட்டு ராஜ்யத்தில் உட்பூசலும் நலிவும் குழப்பமும் ஏற்பட்டன. இந்த நிலை நாற்பதாண்டுகளுக்கு மேல் நீடித்தது. இறுதியில் போர்த் திறனும் அரசதந்திரத் திறனும் ஒருங்கே பெற்ற சாளுவ நரசிம்மன் விஜயநகரப்பேரரசின் வலிமையையும் பெருமையையும் மீண்டும் நிலைநாட்டினன். அந்த இடைக்காலம் கிளர்ச்சிகளும் மனநிறைவின்மையும் நிறைந்ததாக இருந்தது. பழைய அரச வமிசத்தினர்க்கு எதிர்ப்பு மிகுந்தது. அவர்களுள் பலர் கொலை செய்யப்பட்டனர். மல்லிகார்ஜுனனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் வெலமர்களுடைய தலைநகரான ராஜகொண்டாவை பாமினிப் படைகள் கைப்பற்றிக்கொண்டன. அதனல், வெலமர்கள் கர்நூல் மாவட்டத்தில் 'வெலுகொடு' என்னும் இடத்தைத் தங்கள் தலைநகராக்கிக் கொண்டார்கள். அதன்பின் ராஜகொண்டாவின் அண்மையிலிருந்த பகுதிகளில் ஆட்சிசெய்த சிறிய தலைவர்கள் பேரரசுக்குத் தொல்லைகொடுக்கத் தொடங்கினர்கள். அதனல் நாட்டில் அமைதி குலைந்தது, பேரரசின்

வலிமையும் குன்றியது. அந்த நிலையைத் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக்கொண்ட இரண்டாம் அலாவுதீனும் கபிலேஸ்வர கஜபதியும் விஜயநகரின்மீது படையெடுத்து அதனை முற்றுகையிட்டார்கள். ஆனால், அந் நகரம் 'வெற்றிநகரம்' என்னும் தன்னுடைய பெயருக்கேற்ப முற்றுகையை நெடுநாள் சமாளித்தது. எனவே, எதிரிகள் குறிப்பிடத்தக்க வெற்றி எதனையும் அடையாமல் திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று.

ஆனால், கபிலேஸ்வரன் போரைத் தொடர்ந்து நடத்தினன். அவனுக்குத் தெலிங்கானவிலிருந்த வெலமத் தலைவர்களும் க்ஷத்திரியத் தலைவர்களும் துணைபுரிந்தனர். அவன் 1454-க்குள் ராஜமகேந்திரவரத்தையும் கொண்டவீட்டையும் கைப்பற்றிக் கொண்டான். அவன் ஸ்ரீசைலம் வரையிலுமுள்ள பகுதிகளை வென்றான். அவன் வென்ற இடங்களில் கர்நூல் மாவட்டத்தின் பெரும்பகுதி அடங்கியிருந்தது. அவனுடைய மகன் ஹம்பர், மாமூது கவானை வென்று வாரங்கலைக் கைப்பற்றினன். 1461-ல் ஹுமாயூன் இறந்தபின், ஹம்பர் பீடாரையும் வென்றான். அதன்பின் கபிலேஸ்வரன் உதயகிரியைப் பிடித்துக்கொண்டது மட்டுமன்றி, விஜயநகரப் பேரரசின் தென்மாகாணங்களுட்பட்ட காஞ்சீபுரத்தையும் திருச்சிராப்பள்ளியையும் வென்றான் (1463).

இவ்வாறு ஒட்டப் பேரரசு அதற்கு முன்னும் பின்னும் இல்லாத அளவு விரிவடைந்தது. அதனுடைய செல்வாக்கு கங்கை முதல் காவிரி வரையில் பரவியது. தெலுங்கு மாவட்டங்கள் ஒரிசாப் பேரரசின் எல்லைக்குள் சென்றுவிட்டன என்பதும் சிலகாலம் அவை ஒரிசாவின் ஆட்சியிலேயே இருந்தன என்பதும், வரலாற்றுண்மைகள். ஆனால், தென்னகம் விஜய நகரப் பேரரசின் ஆட்சியில்தான் இருந்தது. தென்னகத்தின் மீது நிகழ்ந்த ஒரிசாப் படையெடுப்பு ஒரு திடீர்த் தாக்குதல். வெற்றியுறுமாறு தாக்கியபின் ஒரிசாப் படைகள் வந்த வேகத் திலேயே திரும்பியும் போய்விட்டன. விஜயநகரப் பேரரசின் ஆட்சியிறைமையை அந்தப் பேரரசின் பிரபுக்கள் காப் பாற்றினார்கள். அவர்கள் வலிமையும் திறமையும் பெற்றவர்கள் அவர்கள் பேரரசின் எல்லைக்குள்ளிருந்த மாகாணங்களை ஏறக் குறையச் சுயேச்சையாக ஆண்டு வந்தார்கள். பெயரளவில் மட்டும் அவர்கள் மல்லிகார்ஜுனனுடைய மேலாதிக்கத்தில் இருந்தார்கள். அத்தகைய பிரபுக்களுள் சாளுவகோபதிம்மன் ஒருவன். அவனுக்குத் திருமலை தேவமகாராஜன் என்ற வேறு பெயரும் இருந்தது. அவன் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளின் ஆளுநனக இருந்தான். அவனை ஒத்த

சிறப்புடைய இன்னொரு பிரபுவான சாளுவ நரசிம்மன் பேரரசின் மையப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் ஆட்சி செய்து வந்தான். அவனுக்குத் துளுவ வமிசத்தைச் சேர்ந்த திறமை மிக்க வீரன் ஈஸ்வரன் பெருந்துணையாயிருந்தான். மல்லிகார்ஜுனன் 1465 ஜூனுக்கும் அக்டோபருக்கும் இடையில் இறந்துபோனான்.

அவனுடைய மகன் ராஜசேகரன் அப்போது குழந்தையாய் இருந்தான். எனவே, இரண்டாம் தேவராயனுடைய தம்பி பிரதாப தேவராயனுடைய மகன் இரண்டாம் விரூபாட்சன் விஜயநகர அரசன் ஆனான். அவன் விஜயநகர அரியணை ஏறுவதற்குமுன் பல ஆண்டுகள் பெனுகொண்டாவின் ஆட்சியாளனாய் இருந்தான். அவன் தீயொழுக்கம் உடையவனென்றும் மதுமயக்கத்திலும் மாதர் மையலிலும் எப்போதும் ஆழ்ந்து கிடந்தான் என்றும் நூனிஸ் எழுதிவைத்திருக்கிறார். எனவே, அவன் காலத்தில் கோவா, சால், தபோல் போன்ற பேரரசின் பல பகுதிகளை முஸ்லிம்கள் கைப்பற்றிக்கொண்டார்கள் என்பது நமக்கு வியப்புத் தரவில்லை. மைய அரசின் அதிகாரம் தொடர்ந்து குறைந்துகொண்டே போயிற்று. வலிமைமிக்க மாகாண ஆளுநர்களுடைய முயற்சிகளே பேரரசு அடியோடு சிதைந்து போகாமல் காத்தன. சந்திரகிரி 'ராஜ்யத்தின்' ஆட்சியாளனான சாளுவ நரசிம்மன் என்பவனே அவர்களுள் மிகவும் சிறப்புவாய்ந்தவன். 1463-ல் ஒட்டர்கள் படையெடுத்தபோது அவனுடைய ஆட்சியிலிருந்த 'ராஜ்யத்தின்' சில பகுதிகளை அவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். எனவே, இப்போது அவன் கஜபதியின்மீது போர் தொடுத்து, உதயகிரியை முற்றுகையிட்டு, அதனைக் கைப்பற்றிக்கொண்டான் (1470). அவன் தமிழகத்தில் நடந்த ஒரு கலகத்தை அடக்கினான். அதன்பின் கபிலேஸ்வரனுடைய ஒரிசாவில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவன் பேரரசின் கிழக்கு மாவட்டங்களிலிருந்த ஒரியர்களைத் தோல்வியுறச்செய்து துரத்திவிட்டு, கோதாவரி நதிவரையில் இருந்த பகுதிகளைத் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்தான். கொண்டவீடும் மசூலிப்பட்டினமும் 1477-க்குள் அவனுடைய கைக்குள் வந்தன. பாமினி சுல்தான் மூன்றாம் முகமதுவின் துணையுடன் புருஷோத்தமனைத் துரத்திவிட்டு ஒரிசாவின் அரியணையைக் கைப்பற்றியிருந்த ஹம்பருக்கு எதிராகச் சாளுவ நரசிம்மன் இப்போது புருஷோத்தமனுக்கு உதவ முயன்றான் என்று தோன்றுகிறது. அதனால், நரசிம்மனும் புருஷோத்தமனும் பாமினியரசனுடைய பகையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. பின்னர் நடந்த சண்டைகளைப் (1478–81) பற்றி நாம் சென்ற அதிகாரத்திலேயே கூறியிருக்கிறோம். காஞ்சீபுரத்தைத்

திடீரென்று தாக்கி அங்கே கிடைத்த ஏராளமான கொள்ளைப் பொருள்களுடன் மீண்டுகொண்டிருந்த சுல்தானை வழிமறித்து அந்தப் பொருள்களுள் பெரும்பகுதியை மீட்ட பெருஞ் சிறப்பு துளுவ தளபதி ஈஸ்வரனைச் சேரும்.

இரண்டாம் விருபாட்சன் 1485 வரையில் ஆட்சிசெய்தான். அந்த ஆண்டின் இடையில் அவனுடைய மூத்தமகன் அவனைக் கொன்றுவிட்டான். ஆனால், அவர் அரியணையேற விரும்பாமல் தன்னுடைய தம்பி படியராவ் (பிரவுததேவராயன்) என்பவனுக்கு முடிசூட்டி வைத்தான். தன்னை அரியணையேற்றிய தன்னுடைய தமையனைக் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்ததுதான் புதிய அரசன் செய்த முதல்வேலையாய் இருந்தது. அதன்பின் அவன் மதுபானத்திலும் மாதர் மையலிலும் ஆழ்ந்துவிட்டான். அதனால், அரசியல் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கு அவனுக்கு நேரமில்லாமல் போய்விட்டது. பேரரசைக் காப்பாற்ற வேண்டுமானால் பழைய அரச வமிசத்தை அழித்துவிட்டுத் தானே அரியணை யேறுவதைத்தவிர வேறுவழியில்லை என்பதை சாளுவ நரசிம்மன் உணர்ந்தான். எனவே, விஜயநகரின்மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றுமாறு அவன் தன்னுடைய தளபதியான நரசநாயக்கனுக்கு ஆணையிட்டான். அந்தப் படையெடுப்பின் இறுதி நிகழ்ச்சிகளை நூனிஸ் விளக்கமாக எழுதிவைத்திருக்கிறார். அந்த வர்ணனை ஒரு சொல்லோவியமாகத் திகழ்கிறது. நரசிம்மனுடைய தளபதி மாநகரின் வாயிலையடைந்தபோது அவனை எதிர்ப்பதற்கு அங்கே யாரும் இல்லை. பின்னர் அவன் அரச மாளிகைக்குள் நுழைந்தான். அங்கும் அவனை யாரும் தடுக்கவில்லை. அதன்பின் அவன் அரசனுடைய அந்தப்புரத்துக்குச் சென்று பெண்கள் சிலரையும் கொன்றான். அப்போதும் அவனை ஒருவரும் எதிர்க்கவில்லை. இறுதியில் அரசன் என்ற பெயருடன் மாளிகையிலிருந்த கோழை ஓடிவிட்டான். அதன்பின் நரசிம்மன் 'அரச பதவிக்கு உயர்த்தப்பட்டான்' (1486). இவ்வாறு நூனிஸ் எழுதிவைத்திருக்கிறார்.

இவ்வாறு அடாவழியில் நரசிம்மனும் அவனுடைய ஆட்களும் விஜயநகர அரியணையைக் கைப்பற்றியதன் மூலம் பேரரசின் அழிவைத் தடுத்தார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும், நரசிம்மன் அரியணை யேறியதைப் பலர் எதிர்த்தார்கள். அவ்வாறு எதிர்த்த தலைவர்களை அடக்குவதற்காக நரசிம்மன் பெரு முயற்சி செய்யவேண்டியதாயிற்று. கடப்பை மாவட்டத்திலிருந்த பெரனிபாடு என்னும் இடத்தில் ஆட்சிசெய்துவந்த சம்பட்டர்களும் மைசூரின் அருகில் உம்மத்தூர் என்னுமிடத்தில்

ஆட்சிசெய்துவந்த பாளையக்காரர்களும் வேறு சிலரும் நரசிம்மனை எதிர்த்துக் கலகஞ்செய்தார்கள். அவர்களோடு போர்செய்து அவர்களை அடக்குவதற்கு நரசிம்மன் தன் காலத்தையும் வலிமையையும் ஏராளமாகச் செலவழித்தான். இறுதியில் அவர்கள் அவனுடைய ஆட்சியை ஏற்றுக்கொண்டார்கள் என்பது உண்மைதான். ஆனால், அந்த நேரத்தில் பேரரசுக்கு வெளியாரால் உண்டான ஆபத்துகளைத் தடுப்பதற்கு நரசிம்மனால் முடியவில்லை. அவ்வாறு பேரரசுக்கு ஆபத்து விளைவித்தவர்களுள் புருஷோத்தமன் ஒருவன். மூன்றும் முகமது இறந்தபின் பாமினி ராஜ்யத்துக்கு நேர்ந்த பலக்குறைவைப் பயன்படுத்திக்கொண்ட புருஷோத்தம கஜபதி கிழக்குக் கடற்கரையில் ஒரிசாவுக்கும் (நெல்லூரிலுள்ள) குண்டலக்கம்ம நதிக்கும் இடையிலிருந்த எல்லா நாடுகளையும் 1489ஆம் ஆண்டுக்குள் பிடித்துக் கொண்டான். இறுதியில் அவன் உதயகிரி வரையில் வந்து அதனையும் முற்றுகையிட்டான். முற்றுகையை நீக்குவதற்காக நரசிம்மன் செய்த முயற்சி படுதோல்வி யடைந்தது. கஜபதி அவனை வென்று சிறைபிடித்தான். உதயகிரிக் கோட்டையையும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளையும் கஜபதிக்குக் கொடுக்க ஒப்புக்கொண்ட பின்னரே கஜபதி அவனை விடுதலை செய்தான்.

இரண்டாம் விருபாட்சன் காலத்தில் பேரரசு, மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களை இழந்துவிட்டது; அதனால் விஜயநகரக் குதிரைப் படைக்கு இன்றியமையாத குதிரை வாணிகம் சீர் குலைந்தது. நரசிம்மன் துளுவநாட்டை வென்று, ஹொனவர், பட்டக்குலா (பட்கல்), மங்களூர் ஆகிய துறைமுகங்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டிற் கொண்டுவந்ததன் மூலம் குதிரை வாணிகம் மீண்டும் நடைபெறுவதற்கு வழிசெய்தான். 'ஆர்மஸ், ஏடன் ஆகிய இடங்களிலிருந்து தன்னுடைய ராஜ்யத்திற்குக் குதிரைகளைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து, அவற்றைக் கொண்டுவந்த வணிகர்கள் கேட்ட விலையைக் கொடுப்பதற்கு நரசிம்மன் இசைந்ததால், அந்த வணிகர்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது' என்று நூனிஸ் கூறுகிறார். அன்றியும், அவன் தன்னுடைய படைகளின் வீரத்தையும் போர்த் திறமையையும் உயர்த்துவதற்கேற்ற நடவடிக்கைகளையும் எடுத்தான்.

உதயகிரித் தோல்விக்குப் பின் அவன் நீண்டநாள் உயிர் வாழவில்லை. 1491-ல் அவன் இறப்பதற்கு முன் இளைஞர்களான தன்னுடைய இரு மக்களையும் தன்னிடம் மிகுந்த பற்றுடனும் உண்மையுடனும் நடந்து வந்த நரசநாயக்கனிடம் ஒப்படைத்

தான். அந்த நரச நாயக்கன் துளுவ வமிசத்து ஈஸ்வரனுடைய மகன். அரச குமாரர்களுள் மூத்தவனை திம்மபூபனை நரசன் முதலில் அரியணையேற்றினன். ஆனல், நரசனுக்குப் போட்டியா யிருந்தவர்களுள் ஒருவனை திம்மராசன் என்பவன் திம்மபூபனைச் சூழ்ச்சியால் கொன்றுவிட்டான். அதனல் அவனுடைய தம்பி இம்மடி நரசிம்மன் அரசனனன் (1491). ஆனல், அரசியல் அதிகாரம் முழுவதையும் நரசநாயக்கன் தன்னுடைய கையி லேயே வைத்துக்கொண்டான். மேலும், அவன் அரசர்க்குரிய நடையுடை பாவனைகளைக் கைக்கொண்டது மட்டுமன்றிச் சாளுவ அரச மரபுக்குரிய பட்டப்பெயர்களையும் சூடிக்கொண்டான். அதனல் அரசனுக்கும் அவனுக்கும் பிணக்கு ஏற்பட்டது. தன்னுடைய அண்ணன் சாவுக்குக் காரணமாயிருந்த திம்ம ராசனைத் தண்டிக்குமாறு இம்மடி நரசிம்மனை நரசநாயக்கன் கேட்டுக்கொண்டான். ஆனல், இம்மடி நரசிம்மன் அவ்வாறு செய்ய மறுத்தது மட்டுமன்றி திம்மராசனிடம் அன்பாகவும் நடந்தான். அதனல் நரசநாயக்கனுக்கும் அரசனுக்கும் ஏற்பட்ட பிணக்கு மேலும் அதிகமாயிற்று. அந்த மன வேறு பாடு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போனதால், நரச நாயக்கன் விஜயநகரத்தை முற்றுகையிடுவதற்காகப் பெனு கொண்டாவிலிருந்து ஒரு படையை நடத்திக்கொண்டு வந்தான். அதனல், அச்சமடைந்த இம்மடி நரசிம்மன் திம்மராசனுக்கு மரண தண்டனையளித்து நரசநாயக்கனேடு சமாதானஞ் செய்துகொண்டான். அதன்பின் நரசநாயக்கன் அரசனைப் பெனுகொண்டாவுக்குக் கொண்டுபோய் அங்கு அவனை மிகக் கடுமையான கண்காணிப்பில் வைத்துவிட்டான். அதனை இரண் டாம் அடாவழி அரசுரிமைப் பறிப்பு என்று கூறலாம். அதனல் நரசநாயக்கனுக்கு எதிர்ப்புக் கிளம்பியது. அந்த எதிர்ப்பால் ஏற்பட்ட தொல்லைகளைச் சமாளிப்பது நரசனுடைய ஏனைய வேலைகளுக்கு இடையூருயிற்று. இவ்வாறு பல தொல்லைகளுக் கிடையில் நரசன் பன்னிரண்டு பதின்மூன்ருண்டுகள் அரசன் என்ற பட்டத்தைச் சூடிக்கொள்ளாமலே அரசு அதிகாரங்கள் அனைத்தையும் வகித்து வந்தான்.

தனக்கு எதிராகக் கலகஞ்செய்து தன்னுடைய ஆட்சியி லிருந்து விலகிவிட்ட ராயச்சூர், உதயகிரி ஆகிய கோட்டைகளை மீண்டும் கைப்பற்றி, அவற்றை விஜயநகரப் பேரரசின் எல்லைக்குள் கொண்டு வருவதற்குத் தனக்கு நேரமில்லாமற் போய்விட்டதால், அவற்றை மீட்கும் பணியை நரச நாயக்கனிடம் ஒப்படைத்துவிட்டுச் சாளுவ நரசிம்மன் இறந்தான். பிஜப்பூரில் முழு உரிமை பெற்ற அரசனுக அப்போது ஆட்சி செய்துகொண்

டிருந்த யூசுப் அடில்கானைத் தாக்குவதற்கு நரச நாயக்கன் ஒப்புக் கொண்டால் அவனுக்கு ராயச்சூர், முடுகல் ஆகிய கோட்டை களைக் கொடுத்து விடுவதாக பாமினி அமைச்சன் காசிம் பரீது 1492–93-ல் பேரம் பேசினன். அதற்கிணங்கிய நரசநாயக்கன் தன்னுடைய படையை ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது போக்கினன். அந்தப் படை 'துங்கபத்திரை நதியைக் கடந்து முடுகல், ராயச்சூர் ஆகிய ஊர்கள் வரையிலுமிருந்த நாடுகளைச் சூறையாடி அழித்தன' என்று பெரிஷ்டா கூறுகிறர். அதே சமயத்தில் காசிம் பரீதின் தூண்டுதலின்பேரில் தன்னைத் தாக்கிய வேறு பகைவர்களேயும் சமாளிக்க வேண்டியிருந்ததால் அடில்கான் விஜயநகரப் படைகளை உடனடியாக எதிர்க்கும் நிலையில் இல்லை. ஏனைய பகைவர்களைத் தோல்வியுறச்செய்து துரத்தியவுடனே அடில்கான் விஜயநகரப் படைகளை எதிர்க்கத் தொடங்கினன். அதனல் நரச நாயக்கன் புதிதாகத் தான் வென்ற நாடுகளை அடில்கானின் தாக்குதலினின்று காக்க வேண்டியதாயிற்று. ஆனல், அடில்கான் தன்னுடைய முயற்சி களில் வெற்றியடையவில்லை. அவன் தோல்வியடைந்து, துங்க பத்திரை நதிக்கு வடக்கில் ஆதோனிக்கு அருகிலிருந்த மன்வீ என்னும் கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்தான். அதன்பின் அவன் நரச நாயக்கனுக்குப் பணிந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து, சமாதான உடன்படிக்கையைப்பற்றிப் பேசுவதற்காக நரசநாயக்கனை அழைத்தான். நரசனும் அதற்கிணங்கி அங்கே போனன். ஆனல், அடில்கான் அவனைத் திடீரென்று தாக்கி அவனுடனிருந்த எழுபது பிரபுக்களைக் கொன்றுவிட்டான். அதனல் விஜயநகரப் படை ஓடிவிட்டது. அடில்கான் வெற்றி பெற்றன். எனினும், ராயச்சூர் ஆற்றிடை நிலம் 1502ஆம் ஆண்டு வரையிலும் விஜய நகரத்தின் ஆட்சியிலேயே இருந்தது. அந்த ஆண்டில் மாமூதுவின் ஆலோசனைப்படி பாமினிப் பிரபுக்கள் ஒரு ஜிஹாதைத் (புனிதப் போரை) தொடங்கினர்கள். அதன் விளைவாக ராயச்சூர், முடுகல் ஆகிய கோட்டைகள் உட்பட ராயச்சூர் ஆற்றிடை நிலம் முழுவதும் யூசுப் அடில்ஷா வின் ஆட்சிக்குள் சென்றுவிட்டது.

1463–4-ல் கபிலேஸ்வர கஜபதி தென்னுட்டைத் தாக்கிய பிறகு, பேரரசின் தென்பகுதியில் ஆளுநர்களா யிருந்தவர்கள் மைய அரசின் ஆதிக்கத்தை உண்மையிலேயே மதித்து அதற் கடங்கி நடந்தார்களென்று சொல்ல முடியாது. தலைநகரத்தின் அருகிலிருந்த பகுதிகளில் தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்டும் பணியில் ஈடுபட்டிருந்த சாளுவ நரசிம்மன் தன்னுடைய கவனத்தைத் தென்னுட்டுப் பக்கம் திருப்ப முடியாத நிலையிலிருந்

தான். காவிரியாற்றுக்குத் தெற்கிலிருந்த மாகாணங்கள் அவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டன என்று உறுதியாகக் கூற முடியாது. 1496ஆம் ஆண்டிலோ அதற்குச் சிறிது முன்னரோ நரச நாயக்கன் தன்னுடைய படைகளுடன் தென்னாட்டுக்குச் சென்று அங்குக் கொடுங்கோலாட்சி செய்து கொண்டிருந்த அரசு அலுவலர்களை அடக்கினான். அவ்வாறு அடக்கப்பட்டவர்களுள் திருச்சி, தஞ்சை ஆளுநனாகவிருந்த கோனேட்டிராஜனும் ஒருவன். சீரங்கத்திலிருந்த வைணவர்கள் அவன்மீது பல புகார்களைக் கூறினார்கள். அதனால்தான் அவனை அடக்கி நெறிப்படுத்த வேண்டியது நரச நாயக்கனுடைய கடமையாயிற்று. அதன்பின் நரசன் ஆங்காங்கே சிற்றரசர்களாக ஆட்சிசெய்துகொண்டிருந்த சேர சோழர்களையும்; மதுரையில் ஆட்சிசெய்துகொண்டிருந்த மானபூஷனையும் அடக்கி அவர்களெல்லாம் விஜய நகரத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தான். அதனால் கன்னியாகுமரி வரையிலிருந்த தென்னகம் முழுவதும் விஜயநகரப் பேரரசின் எல்லைக்குள் வந்தது. அதன்பின் நரசன் காவிரியாற்றின் குறுக்கே ஒரு பாலத்தை யமைத்து சீரங்கப்பட்டணத்தைத் தாக்கினான். அதனை யாண்டுவந்த ஹயூண வமிச அரசன் நஞ்சராஜன் நரசனுக்குப் பணிந்தான். அதன்பின் நரசன் மேற்குக் கடற்கரையிலிருந்த பல இடங்களை வென்று கோகர்ணம் வரையிலும் தன் படையை நடத்திச் சென்றான் (1497). அதனுடன் அந்த நீண்ட படையெடுப்பு வெற்றியுற முடிந்தது.

நரச நாயக்கன் தன்னுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் கஜபதியோடு மீண்டும் மோதினான். முப்பதாண்டு ஆட்சி செய்தபின் புருஷோத்தமன் 1496-ல் இறந்தான். அதன்பின் அவனுடைய மகன் பிரதாபருத்திரன் அரசன் ஆனான். சுமார் 1499-ல் அவன் விஜயநகரப் பேரரசின் தென் பகுதியைத் தாக்கினான். அந்தத் தாக்குதலைச் சமாளிப்பதற்கு நரசன் ஆயத்தமாயிருந்தான். இரு திறத்தாரில் யாரும் வெற்றியடைந்தனர் என்று சொல்ல முடியாத நிலையில் போர் முடிந்தது. அதனால், கஜபதி ராஜ்யத்தின் தெற்கெல்லை முன் போலவே கிருஷ்ணா நதியின் தென்கரையோடு நின்றுவிட்டது.

நரச நாயக்கன் 1503-ல் இறந்தான். தன்னுடைய தலைவன் சாளுவ நரசிம்மன் தொடங்கிய பணியில் தொடர்ந்து ஈடுபட்டதோடு பேரரசுக்குப் புதிய வலிமையையும் தேடித் தந்த மனநிறைவோடு அவன் இறந்திருக்க வேண்டும். பேரரசின் பரந்த பகுதிகள் பலவற்றிலும் அதனுடைய ஆதிக்கத்தை உறுதியாக

நிலைநாட்டி, படைகளின் அமைப்பாண்மையையும் சீர்திருத்திய சிறப்பு அவனைச் சேரும். அவனுடைய திறமைமிக்க மகன் கிருஷ்ணதேவராயன் காலத்தில் விஜயநகரப் பேரரசு பெற்ற பெருமைக்கு நரச நாயக்கனுடைய ஆட்சி அடிப்படையாக இருந்தது என்று நாம் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

நரசன் இறந்தவுடனே அவன் வகித்துவந்த பதவியை அவனுடைய மூத்த மகன் வீர நரசிம்மன் என்ற இம்மடி நரச நாயக்கன் வகிக்கத் தொடங்கினான். சட்டப்படி அரசனாக இருந்த இம்மடி நரசிம்மன் தானாகவே அரசாள்வதற்குப் போதிய வயதை அடைந்திருந்தான். எனினும், அவன் இன்னும் பாது காக்கப்பட்ட நிலையிலேயே இருந்தான். இறுதியில், 1505-ல், அவன் கொலைசெய்யப்பட்டான். அதன்பின் சிறிது காலத்தில் வீர நரசிம்மன் விஜயநகர அரியணையேறினான். இவ்வாறு அவன் அந்தப் பேரரசில் ஆட்சிசெய்த மூன்றும் அரச மரபான துளுவ வமிசத்தைத் தொடங்கினான். நரச நாயக்கனுடைய சாவுக்குப் பின் 'நாட்டிலிருந்த தலைவர்கள் அனைவரும் கலகஞ் செய்தார்கள்' என்று நூனிஸ் கூறுகிறார். அதன்பின் நடந்த கொலையும் அடாவழி அரசுரிமைப் பறிப்பும் வீர நரசிம்மனுடைய நிலைமை மேலும் கடினமாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவன் ஆட்சிசெய்த ஆண்டுக் காலம் முழுதும் கலகங்களை அடக்குவதற் காக அவன் செய்த சண்டைகளிலேயே ஏறக்குறையக் கழிந்து விட்டதென்று கூறலாம். அப்படி அவன் செய்த சண்டைகள் அனைத்திலுமே அவன் வெற்றி பெற்றான் என்று சொல்வதற்கும் இல்லை. யூசுப் அடில்கான் தன்னுடைய ஆட்சியெல்லையைத் துங்கபத்திரை நதிக்குத் தெற்கே நீட்டுவதற்கு மீண்டும் விரும்பி, அந் நதியைக் கடந்து அவன் கர்நூலை முற்றுகையிட்டான். அரவீடு வமிசத்தைச் சேர்ந்த ராமராஜனும் அவனுடைய மகன் திம்மனும் வீரநரசிம்மனுக்குத் துணைநின்று, அடில்கானுடன் பொருது, அவனைப் பின்னடையச் செய்தது மட்டுமன்றி, அவனைத் துரத்திக்கொண்டு சென்று தோல்வியுறவும் செய்தார்கள். விஜய நகர அரசனுக்குத் துரோகம்செய்த ஆதோனித் தலைவனை அவர்கள் வென்று துரத்திவிட்டு ஆதோனியைக் கைப் பற்றினார்கள். இறுதியில், அவர்கள் செய்த உதவிக்காக வீர நரசிம்மன் அவர்களுக்கு ஆதோனியையும் கர்நூலையும் ராணுவ மானியமாகக் கொடுத்தான்.

இதற்கிடையில் உம்மத்தூரிலும் சீரங்கப்பட்டணத்திலு மிருந்த ஹியூணத் தலைவர்கள் விஜயநகரத்துக்கெதிராகக் கலகம் செய்தார்கள். வீரநரசிம்மன் தலைநகரைத் தன் தம்பி கிருஷ்ண

ராயனுடைய பொறுப்பில் விட்டுவிட்டுத் தன் படையுடன் தெற்கே சென்று உம்மத்தூரை முற்றுகையிட்டான். மூன்று மாதம் முயன்றும் உம்மத்தூரைக் கைப்பற்ற முடியாததால், அவன் முற்றுகையைக் கைவிட்டுவிட்டு, சீரங்கப்பட்டணத்தின் மீது படையெடுத்தான். அங்கும் அவன் வெற்றி பெறவில்லை. ஆனல், துளு நாட்டில் அவன் சில சிறு வெற்றிகளை யடைந்தான். அப்போதுதான் மேற்குக் கடற்கரையில் தங்கள் வாணிக நிலையங்களை நிறுவிக்கொண்டிருந்த போர்ச்சுகீசியர்களுடன் அவன் நட்புறவான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டான். தன்னுடைய போர் வீரர்களுக்கு நல்ல பயிற்சியை அளிப்பதற்கும் தன்னுடைய குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகளைப் பெறுவதற்கும் போர்ச்சுகீசியர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையில் அவன் கண்ணனூரிலிருந்த ஆல்மீடாவிடம் ஒரு தூதுகுழுவை அனுப்பினன். ஆனல் பட்கல் என்னுமிடத்தில் ஒரு கோட்டை கட்டுவதற்கு இசைவு கோரி ஆல்மீடா விடுத்த வேண்டுகோளுக்கு வீரநரசிம்மன் எவ்வித மறுமொழியும் தரவில்லை. பிரபுக்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு வரையறைக் குட்பட்ட இருவர் போராட்ட முறையை ஊக்கியதன் வாயிலாகவும் வாட்போர்த் திறனுக்கு அழகிய பெண்களைப் பரிசு கொடுத்ததன் வாயிலாகவும் வீர நரசிம்மன் தன் மக்களுடைய போர் விருப்பையும் திறமை யையும் வளர்க்க முயன்ருன்.

வீரநரசிம்மன் கோவாவைப் பிடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டான். கோவாவிலிருந்த முஸ்லிம் ஆளுநன் விஜயநகரத் தரசனேடு போரிட்டுக்கொண்டிருந்தான் என்று இத்தாலியப் பயணி வர்த்தமா என்பவன் எழுதி வைத்திருக்கிருன் (1506). ஆனல், அந்த முயற்சியில் வீரநரசிம்மன் வெற்றி பெற்ருனு என்பது தெரியவில்லை. உம்மத்தூரை மீண்டும் தாக்குவதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்த சமயத்தில், 1509-ல், அவன் இறந்து போனன். ராமேஸ்வரம், சீரங்கம், கும்பகோணம், சிதம்பரம், ஸ்ரீசைலம், காஞ்சீபுரம், காளஹஸ்தி மகா நந்தி, கோகர்ணம் முதலிய தென்னிந்தியக் கோயில்கள் பலவற்றிற்கு அவன் அளித்த தாராளமான கொடைகளை அவனுடைய ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த பொறிப்புகள் குறிப் பிடுகின்றன. தன்னுடைய எட்டு வயது மகன் தனக்குப் பின் அரசனுக வேண்டுமென்று விரும்பியதால், அவன் மரணப் படுக்கையிலிருந்தபோது, கிருஷ்ணதேவராயனுடைய கண்களைப் பிடுங்கிவிடுமாறு தன்னுடைய அமைச்சன் சாளுவதிம்மனைக் கேட்டுக்கொண்டதாயும், சாளுவதிம்மன் ஒரு பெண் ஆட்டின்

இரு கண்களைக் கொண்டுவந்து அவை கிருஷ்ணதேவராய னுடைய முகத்திலிருந்து பிடுங்கப்பட்ட கண்கள் என்று காட்டிய தாயும் நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார். ஆனால், அந்த ஒன்று விட்ட உடன் பிறந்தார்களுக்குள் பகைமையிருந்தது என்று காட்டுவதற்கு எவ்விதச் சான்றும் இல்லை. மேலும், தனக்குப்பின் அரியணையேறுவதற் குரியவன் கிருஷ்ணதேவராயன்தான் என்று வீரநரசிம்மனே அவனைத் தெரிந்தெடுத்ததாக உள்ளூர் மரபுவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிருஷ்ணதேவராயனுடைய முதற் பொறிப்பில் குறிக்கப் பட்டுள்ள தேதி 1509 ஜூலை 26 என்பது. அதற்குப்பின் இரு வாரங்கழித்து அவன் கிருஷ்ண ஜயந்தியன்று முடிசூடிக் கொண்டான். அரசன் திருமாலின் அவதாரம் என்ற எண்ணத்தை உண்டாக்குவது அதன் நோக்கம். கிருஷ்ணதேவராயனுடைய ஆட்சிக் காலம் 'விஜயநகரத்தின் மிகச் சிறந்த காலம்; அப்போது அந்தப் பேரரசின் படைகள் சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றன. அந்தக் காலத்தில் தலைநகரம் மிகச் செழித்த வளமுடையதாயிருந்தது'. கிருஷ்ணதேவராயன் அரியணையேறிய போது அவனுக்கு இருபது இருபத்தைந்து வயதிருக்கும். அரியணையேறிப் பத்தாண்டுக்குப்பின் கிருஷ்ணதேவராயனைப் பார்த்த பேயிஸ் பின்வருமாறு கூறுகிறார்: 'அரசன் நடு உயரமும் சிவப்பு நிறமும் அழகிய தோற்றமும் உடையவன். அவன் சிறிது தடித்திருக்கிறான் என்றே கூறவேண்டும். அவனுடைய முகத்தில் அம்மை வடுக்கள் இருக்கின்றன. குடிமக்கள் தம்முடைய அரசனைக் கண்டு எவ்வளவு அதிகமாக அஞ்சக்கூடும் என்று நாம் கருதலாமோ அவ்வளவு அதிகமாக அவனைக் காணும் மக்கள் அஞ்சுகிறார்கள். அதுபோலவே அவன் எல்லா வகையிலும் குறை பாடற்றவனாக இருக்கிறான். அவன் இனிய இயல்புடைய வனாகவும், எப்போதும் களிமகிழ்வார்ந்தவனாகவும் இருக்கிறான். அவன் வெளிநாட்டாரை வரவேற்று அவர்களை மதித்து நடக் கிறான். அவர்கள் எந்த நிலையில் இருப்பவர்களாயினும் அவர் களுடன் இனிமையாகப் பேசி அவர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் விசாரிக்கிறான். அவன் ஒரு பெரிய அரசன்; நீதி நெறி வழுவாதவன்; ஆனால், அவனுக்குத் திடீர் திடீரென்று அடக்க முடியாத கோபம் வந்துவிடும்.' அவன் கடுமையான உடற்பயிற்சியின் மூலம் தன்னுடைய உடல் வலிமையைக் காத்துக் கொண்டான். குதிரையேற்றத்தில் அவன் வல்லவன்; காண்போர் களிக்கும் கம்பீரமான தோற்ற முடையவன்; தானே போர்க்களம் புகுந்து தன் போர் வீரர் களுக்குத் தலைமை தாங்கி நடத்துவதில் விருப்பமுடையவன்;

ஆபத்தைக் கண்டு அஞ்சாத வீரமும் தளராத ஊக்கமும் உடையவன். தன்னுடைய போர் வீரர்கள் எல்லாரிடத்திலும் அவன் அன்புடையவன்; அவர்கள் நலத்தில் எப்போதும் கவன முடையவன். ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும் காயமடைந்த வர்களைப் பார்த்து அவர்களுக்குத் தேவையான மருத்துவத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு அவன் தவறமாட்டான். அவனை அனைவரும் மதித்து அவனிடம் அன்பு பாராட்டினார்கள். பேயிஸ் கூறுவதைப் போல, அவன் 'எல்லாரிடமும் நட்பும் நயமுடைய வனும் எல்லா வகையிலும் குறைபாடற்றவனும்' இருந்தான்.

கிருஷ்ணதேவராயன் பட்டத்துக்கு வந்த சமயத்தில் பேரரசின் நிலைமை மனநிறைவு தருவதாய் இல்லை. விஜய நகரத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கலகஞ் செய்த உம்மத்தூர்த் தலைவன் மைசூரின் பெரும் பகுதிக்கு உரிமை கொண்டாடினான். பேரரசின் வடகிழக்கு மாவட்டங்கள் ஒரிசாவின் ஆதிக்கத்தில் இருந்தன. விஜயநகரத்தின்மீது வெளிப்படையாய்ப் பகைமை பாராட்டிய பிரதாபருத்திரன் அந்த ராஜ்யத்தை வலுச் சண்டைக்கு இழுப்பதற்கும் தயாராய் இருந்தான். பாமினி ராஜ்யம் நடைமுறையில் ஐந்து சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து விட்டது என்பது உண்மைதானெனினும் முஸ்லிம்களுடைய பகைமை எவ்வகையிலும் குறைந்திருந்தது என்று சொல்ல இயலாது. முக்கியமாக, பிஜப்பூர் சுல்தான் விஜயநகரின் மீது கடுமையான பகை கொண்டிருந்தான். அதே சமயத்தில் புதிதாக இந்தியாவுக்கு வந்திருந்த போர்ச்சுக்கீசியர்களுடைய வலிமையை யும் கிருஷ்ணதேவராயன் கவனத்தில் கொள்ள வேண்டிய தாயிருந்தது. அவர்கள் இந்தியாவின் கடல் வழிகளையும் மேற்குக் கடற்கரையில் நடைபெற்ற கடல் வாணிபத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதிலும், 'உள்நாட்டு அரசுகளோடு, லாபமுள்ள அரசியல் தொடர்புகளை ஏற்படுத்து வதிலும் முனைந்திருந்தார்கள். எனினும், பத்தே ஆண்டுகளுக்குள் கிருஷ்ணதேவராயன் விஜயநகரத்தின் ஆதிக்கத்தை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உறுதியாக நிலைநாட்டிவிட்டான். அவனுடைய பரந்த ராஜ்யத்தில் அவனை எதிர்க்க நினைப்பவர் யாரும் இலர், அதிக மனக்குறையுடையவர்களும் இலர் என்ற நிலையை அவன் உண்டாக்கினான். போர்ச்சுகீசியர்களும் அவனுக்கு நண்பரானார்கள்.

முதலில், அவன் பாமினிப் படைகளோடு போரிட வேண்டி யிருந்தது. ஒவ்வோராண்டும் விஜயநகர ராஜ்யத்தின்மீது ஜிஹாத் நடத்துவது என்று 1501-ஆம் ஆண்டில் சுல்தான் மாமூது

தீர்மானித்ததற்கிணங்க முக்கியமான பாமினிப் பிரபுக்கள் பீடாரில் ஒன்றுகூடி அவனுடைய தலைமையில் விஜயநகர ராஜ்யத்தின்மீது 1509ஆம் ஆண்டிலும் படையெடுத்தார்கள். ஆனால், முன்னைய ஆண்டுகளைப் போல நாட்டைச் சூறை யாடவும் அழிக்கவும் இந்த ஆண்டு முடியாதென்பதை அவர்கள் விரைவில் உணர்ந்தார்கள்.

[1]திவானி என்னும் நகர்வரையில் முன்னேறிய முஸ்லிம் படைகளைக் கிருஷ்ணதேவராயன் வழிமறித்து, அவற்றோடு போர்செய்து, அவற்றைக் கடுமையாகத் தாக்கித் தோல்வியுறச் செய்தான். சுல்தான் குதிரையிலிருந்து விழுந்து கடுமை யான காயமடைந்தான். அவன் விரைவில் குணமடையாததால் அவன் தலைமையில் வந்த பிரபுக்கள் 'பூசல், சண்டை ஆகிய பாயைச் சுருட்டிக் கொண்டு' பீடாருக்குத் திரும்பினார்கள். தோற்றுப் பின்வாங்கிய படைகளைக் கிருஷ்ணதேவராயன் துரத்திக்கொண்டு சென்றான். அவ்வாறு துரத்தப்பட்ட படைகளை நடத்திச் சென்றவர்களுள் ஒருவனை யூசுப் அடில்கான் கோவில்கொண்டா என்னும் கோட்டைக்கருகில் திரும்பிநின்று கிருஷ்ணதேவராயனை எதிர்த்தான். ஆனால், அப்போது நடந்த சண்டையில் அவன் உயிரிழந்தான். அதன்பின் கோவில்கொண்டா வைத் தம் வசப்படுத்திக்கொண்டு கிருஷ்ணதேவராயன் தன் தலைநகருக்குத் திரும்பினான்.

இந்தச் சண்டையின் தொடக்கத்தில் கிருஷ்ண தேவராய னுக்கு உதவி செய்வதாயும், அதற்குக் கைம்மாறாகக் கோழிக் கோட்டு ஜாமரினை எதிர்ப்பதற்குத் தனக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் போர்ச்சுகீசிய ஆளுநனான ஆல்புகர்க் கிருஷ்ண தேவராயனுக்குச் சொல்லியனுப்பினான். மேலும், அராபிய பாரசிகக் குதிரைகளைக் கிருஷ்ணதேவராயனுக்கே விற்பதாயும் பிஜப்பூருக்கு விற்கப் போவதில்லை என்றும் ஆல்புகர்க் வாக்களித் தான். குதிரை வாணிகத்தின் தனியுரிமையைப் பெறுவதில் கிருஷ்ணதேவராயன் பெரு விருப்புடையவனா யிருந்தா னெனினும் ஆல்புகர்க்குக்கு அவன் உடனே மறுமொழி அனுப்ப வில்லை. அதன்பின் ஆல்புகர்க் பிஜப்பூர் சுல்தானுடைய ஆட்சியி லிருந்த கோவாவைத் தாக்கினான். போர் பல மாதங்கள் நடந்தது. பிஜப்பூர் படைகளும் போர்ச்சுகீசியப் படைகளும் மாறிமாறி அடைந்த வெற்றி தோல்விகளின் விளைவாகக் கோவா பலமுறை கைம்மாறியது. இறுதியில் 1510ஆம் ஆண்டின் கடைசியில்,

1 இந்நகர் எங்கிருந்ததென்று தெரியவில்லை.

ஆல்புகர்க் கோவாவைக் கைப்பற்றி அங்கே போர்ச்சுகீசிய ஆட்சியை நிறுவினன். அதற்குப் பிறகு பட்கலில் கோட்டை கட்டுவதற்கு இசைவு கோரி முன்னர் ஆர்மீடா விடுத்த வேண்டு கோளை ஆல்புகர்க் கிருஷ்ணதேவராயனுக்கு மீண்டும் விடுத்தான். அதற்குக் கிருஷ்ணதேவராயன் இணங்கினன்.

சிறிய அளவில் நிகழ்ந்த இந்தத் தொடக்கப் போர் களுக்குப்பின் கிருஷ்ணதேவராயன் தன் தலைநகரில் சிலகாலந் தங்கித் தன்னுடைய படைகளைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டான். அதுவரையில் பண்ணைக்குடியுரிமை முறையைச் சார்ந்து அமைப்பாண்மை யற்றிருந்த விஜயநகரப் படையை ஒரு சிறந்த போர்ப்படையாய்க் கிருஷ்ணதேவராயன் மாற்றினன். அதன்பின், பிஜப்பூர் சுல்தானுக்கும் பாமினி சுல்தானுக்கும் ஏற்பட்டிருந்த பூசலின் விளைவாக பிஜப்பூர் அடைந்திருந்த வலிமையற்ற நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கிருஷ்ண தேவராயன் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுத்து, ராயச்சூர்க் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். இதற் கிடையில் யூசுப் அடில்கான் இறந்து விட்டானதலால் அவனுடைய இளவயது மகன் இஸ்மாயில் அடில்ஷா பிஜப்பூருக்கு அரசனுக இருந்தான். ஆனல், அவன் பெயரளவில்தான் அரசனு யிருந்தான். அதிகாரம் முழுவதும் கமால்கான் கையிலிருந்தது. அவனே பிஜப்பூர் அரசனுக வேண்டுமென்று சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். கிருஷ்ணதேவராயன் போர்ச்சுகீசியருடன் நட்புறவான தொடர்பு கொண்டிருந்தா னென்பதையும் கமால்கான் அறிந்திருந்தான். எனவே, இந்த முறை விஜய நகரப்படைகளைப் பிஜப்பூர்ப் படைகள் வலிமையாக எதிர்க்க வில்லை. இஸ்மாயில் அடில்ஷாவின் தாயாருடைய தூண்டுதலின் பேரில் 1511-மே மாதத்தில் கமால்கான் கொலை செய்யப்பட்டான். அதனல், கமால்கானின் நண்பர்களாயிருந்த பாரசிகப் பிரபுக் களும் குராசனிப் பிரபுக்களும் கோபங்கொண்டு கிளர்ச்சி செய்தார்கள். இந்த நிலையில் பிஜப்பூர்ப் படைகளினுடைய எதிர்ப்பின் தரம் மேலுங் குறைந்தது. எனவே, கிருஷ்ண தேவராயன் ராயச்சூரைக் கைப்பற்றிய பின்னர், குல்பர்காவின் மீது படையெடுத்து, மாமூதைக் காவலில் வைத்துவிட்டு, அரசியலதிகாரம் முழுவதையும் தன் கையிலேயே வைத்திருந்த அமைச்சன் அமீர் பரீதை வென்று, குல்பர்காவைப் பிடித்துக் கொண்டான். அங்கிருந்து அவன் பீடாரின்மீது தன் படைகளைச் செலுத்தினன். சிறிது கால முற்றுகைக்குப்பின் அவன் பீடாரைக் கைப்பற்றி, மாமூதை விடுதலை செய்து, 'யவன (முஸ்லிம்) ராஜ்யத்தை நிறுவியவன்' என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டான்.

அதே சமயத்தில் கிருஷ்ணதேவராயன் தன்னுடைய ஏனைய பகைவர்களான உம்மத்தூர் அரசனோடும் ஒரிசா அரசனோடும் பொருது கொண்டிருந்தான். 1509ஆம் ஆண்டில் பாமினிப் படைகளைத் தோல்வியடையச் செய்து துரத்திய சிறிது காலத்திற்குள் கிருஷ்ணதேவராயன் உம்மத்தூர்மீது படையெடுத்தான். வீர நரசிம்மனுடைய ஆட்சியின் இறுதியாண்டுகளிலிருந்தே உம்மத்தூர்கங்கராயன் விஜயநகர ஆதிக்கத்துக்கு எதிராகக் கலகஞ் செய்து கொண்டிருந்தான் என்பதை நாம் முன்பே பார்த்தோம். கிருஷ்ணதேவராயன் முதலில் கங்கராயன் கைப் பற்றியிருந்த பெனுகொண்டாவைத் தாக்கினான். அந்த வலிமை பொருந்திய கோட்டையைப் பிடித்தபின் கிருஷ்ணதேவராயன் உம்மத்தூரையும் கங்கராயனுடைய தலைநகராயிருந்த சிவசமுத்திரத்தையும் தாக்கினான். சிவசமுத்திரம் வீழ்வதற்கு ஓராண்டுக்கு மேல் பிடித்தது. அங்கிருந்து தப்பியோடிய கங்கராயன் காவிரியில் மூழ்கி இறந்து போனான். சிவசமுத்திரத்தை விஜய நகரப்படைகள் தரைமட்டமாக்கின. கங்கராயன்மீது கிருஷ்ண தேவராயன் தொடுத்த போர் 1510 ஆகஸ்டில் தொடங்கி 1512-ன் இறுதியில் முடிந்தது. இவ்வாறு தான் வென்ற புதிய பகுதிகளைக் கிருஷ்ணதேவராயன் ஒரு புதிய மாகாணமாக்கி அதற்குச் சீரங்கப்பட்டணத்தைத் தலைநகராக்கினான். புதிய மாகாணத்திற்குச் சாளுவ கோவிந்தராயன் முதல் ஆளுநனாக நியமிக்கப்பட்டான். அந்த மாகாணத்தின் உள்ளூராட்சி மூன்று உள்ளூர்த் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களுள் ஒருவன்தான் புகழ்பெற்ற பெங்களூர் கெம்பே கவுடன்.

சாளுவ நரசிம்மனுடைய காலத்திலிருந்தே பேரரசின் கீழ்க் கடற்கரை மாவட்டங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டிருந்த ஒரிசா அரசனோடு கிருஷ்ணதேவராயன் அரியணையேறிய சிறிது காலத்திற்குள்ளாகவே போர் தொடங்கினான். ஆனால், கங்க ராயனோடு தொடங்கிய போர் வெற்றியுடன் முடிந்த பிறகுதான் இந்த மூன்றும் முனைப்போரைக் கிருஷ்ணதேவராயன் உண்மை யான ஊக்கத்துடன் நடத்தினான். 1513-ல் உதயகிரியை முற்றுகை யிடுவதற்காகக் கிருஷ்ணதேவராயன் ஒரு படையை அனுப்பினான். விரைவில் கிருஷ்ணதேவராயனே நேரிற்சென்று போரை நடத்தினான். குன்றின் மீதிருந்த கோட்டையை அடைவது முடியாத காரியமாயிருந்ததால் கிருஷ்ணதேவராயன் பாறைகளை வெட்டிப் புதிய பாதைகள் பலவற்றைப் போட்டான். அந்தப் பாதைகளின் வழியாக அவனுடைய படைகள் ஏறிச் சென்று கோட்டையை அடைந்தன. இவ்வாறு முற்றுகை

தொடங்கி ஒன்றரை யாண்டுக்குப்பின் விஜயநகரப் படைகள் உதயகிரியைப் பிடித்தன.

தலைநகருக்குத் திரும்புகிற வழியில் கிருஷ்ணதேவராயனும் அவனுடைய மனைவிகளான திருமலா தேவியும் சின்ன தேவியும் திருப்பதிக்குச் சென்று வேங்கடனை வணங்கித் தங்களுடைய நன்றிக் கடனைச் செலுத்தினார்கள் (1514 ஜுலை). மேலும், அவன் உதயகிரியிலிருந்த அழகிய பாலகிருஷ்ண விக்கிரகம் ஒன்றை எடுத்துக்கொண்டுபோய் விஜயநகரில் எழுந்தருளச் செய்தான். வியாசராயர் என்ற ஞானி புதிய பாடல்களை இயற்றி அந்த நன்னிகழ்ச்சியைப் பாராட்டினார். இவ்விரு செயல்களும் கிருஷ்ணதேவராயனுடைய கடவுள் பக்திக்குச் சான்று தருகின்றன. உதயகிரியை முற்றுகையிலிருந்து விடுவிப்பதற்குப் பிரதாபருத்திரன் செய்த முயற்சி தோல்வியடைந்தது. அவனுடைய படைகளை விஜயநகரப் படைகள் கொண்டவீடு வரையிலும் துரத்திச்சென்றன. போகும் வழியிலிருந்த சிறிய கோட்டைகள் எல்லாவற்றையும் விஜயநகரப் படைகள் கைப்பற்றிக்கொண்டன. சில கோட்டைகள் தாமாகவே பணிந்தன. எதிர்த்து நின்ற கோட்டைகள் எளிதில் கைப்பற்றப் பட்டன. இவ்வாறு வெற்றிமேல் வெற்றி பெற்ற விஜயநகரப் படைகள் கடைசியில் கொண்டவீட்டை வளைத்துக்கொண்டன. அந்த முற்றுகையை முதலில் சாளுவ திம்மராசன் முன்னின்று நடத்தினான். அதன்பின் கிருஷ்ணதேவராயனே தன் படைகளுக்குத் தலைமை தாங்கினான். கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் கஜபதியின் ஆட்சியிலிருந்த மாவட்டங்களில் கொண்டவீடு மிக முக்கியமான கோட்டையாய் இருந்ததால் அது படை வலிமை மிக்கதாக இருந்தது. மேலும், ஒரிசா ராஜ்யத்தின் முக்கியமான தலைவர்கள் பலர் அதற்குள்ளிருந்து காவல் புரிந்தனர். முற்றுகை பல மாதங்கள் தொடர்ந்து நடந்தது. கோட்டைக்குள்ளிருந்த பலர் உணவின்றி இறந்து போனார்கள். அதன்பிறகுதான் விஜயநகரப் படைகள் மதிற்சுவர்களின் மீதேறிக் கோட்டைக்குள் நுழைந்து, அங்கிருந்த வீரர்களைத் தோல்வியுறச் செய்து, கோட்டையைப் பிடிக்க முடிந்தது. ஒரியப் பிரபுக்கள் பலரும், கஜபதியரசனுடைய மனைவியும் அவனுடைய மகன் ஒருவனும் சிறை பிடிக்கப்பட்டு விஜயநகருக்கு அனுப்பப்பட்டார்கள்.

கொண்டவீடு மாவட்டத்தின் நிர்வாகப் பொறுப்பை சாளுவ திம்மனிடம் ஒப்படைத்து விட்டுக் கிருஷ்ணதேவராயனும் அவன் மனைவிமாரும் அமரேஸ்வரரை வழிபடுவதற்காக அமராவதிக்குச் சென்றார்கள். அங்கிருந்து அவர்கள் ஸ்ரீசைலத்துக்குச் சென்று,

மல்லிகார்ஜுனரை வழிபட்டு, அந்தக் கோயிலுக்கு மிகத் தரமான கொடைகளை அளித்தபின் தலைநகருக்குத் திரும்பினார்கள்.

அதன்பின் வெகு விரைவில் அவன் தன் படைகளோடு மீண்டும் போர்க்களம் புகுந்தான். தலைநகரிலிருந்து விஜயவாடா வுக்குத் தன் படைகளை நடத்திச் சென்று, அந்த நகரைப் பிடித்து, அதனைத் தன் முன்னேற்றத் தளமாக்கிக்கொண்டான். அவன் மனம், போரிலேயே ஈடுபட்டிருந்ததெனினும், விஜய வாடாவுக்குப் போகும் வழியில் அகோபலத்தில் நின்று நரசிம்மனை வழிபடுவதற்குத் தன்னுடைய நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தான். விஜயவாடாவுக்கு வடமேற்கில் சிறு தொலைவி லுள்ள கொண்டபள்ளியின்மீது கிருஷ்ணதேவராயன் தன் கவனத்தைத் திருப்பினான். அது உயர்ந்த மதில்களையும் நல்ல காவலையும் பெற்ற ஒரு வலிமைமிக்க கோட்டை. அதனைக் கிருஷ்ணதேவராயன் முற்றுகையிட்டான். முற்றுகையை நீக்கு வதற்காகப் பிரதாபருத்திரன் அனுப்பிய படையைக் கிருஷ்ண தேவராயன் கிருஷ்ணா நதியின் கரையில் மறித்துத் தோல்வி யடையச் செய்தான். முற்றுகை இரண்டு மாதங்கள் நீடித்த பின் கோட்டை வீழ்ந்தது. அதன்பின் கிருஷ்ணதேவராயன் தெலிங்கானாவில் இருந்த வேறு பல கோட்டைகளையும் கஜபதி யின் மேலாதிக்கத்தில் இருந்த நலகொண்டா, வாரங்கல் மாவட்டங்களின் பல பகுதிகளையும் கைப்பற்றினான்.

இவ்வாறு தெலிங்கானா முழுவதும் விஜயநகர ஆட்சிக்குள் வந்தது. அதன்பின் கலிங்கம் என்ற பெயருக்குரிய நாட்டின் மீது கிருஷ்ணதேவராயன் படையெடுத்து ராஜமகேந்திரவரத்தை யும் வேறு பல நகரங்களையும் கைப்பற்றினான். விஜயநகரப் படையின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு கஜபதி ஓரளவு முயன்றான். ஆனால், விஜயநகரப் படை வழியிற் கண்ட ஊர்கள் அனைத்தையும் அழித்துக்கொண்டே பொட்னூர் சிம்மாத்திரி வரையிலும் வெற்றியுடன் முன்னேறியது. அந்த இடத்தில் கிருஷ்ணதேவராயன் ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டி விட்டு ராஜமகேந்திரவரத்தின் வழியாய்த் தன்னுடைய தலைநகருக்குத் திரும்பினான் (1516). ஆனால், அவனுடைய படைகள் கலிங்க நாட்டுக்குள் மேலும் முன்னேறி, அந்த நாட்டின் தலைநகரான கட்டாக்கை அடைந்தன. அதனால் பேராபத்துக்குள்ளான பிரதாபருத்திரன் சமாதானஞ் செய்து கொள்ள விரும்பித் தன் மகளைக் கிருஷ்ணதேவராயனுக்கு மண முடித்து வைத்தான். கிருஷ்ணதேவராயனும் மிகத் தாராள மனத்துடன் நடந்துகொண்டான். கிருஷ்ணா நதிக்கு வடக்கி

லிருந்த ஊர்கள் அனைத்தையும் அவன் கஜபதிக்கே திருப்பிக் கொடுத்துவிட்டான்.

கிருஷ்ணதேவராயனுடைய ஓரிசாப் படையெடுப்பு பதினாறும் நூற்றாண்டு இந்திய வரலாற்றிலேயே மிகச் சிறந்த படையெடுப்புகளுள் ஒன்று என்று கூறலாம். அவன் அந்தப் படையெடுப்பை நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் இஸ்மாயில் அடில்கான் ராயச்சூர்க் கோட்டையை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான். அதனை மீட்பதற்காகக் கிருஷ்ணதேவராயன் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது 1520-ல் படையெடுத்தான். அந்தப் படையெடுப்பைப்பற்றிய செய்திகளை நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார். இந்த முறை இரண்டிலொன்று பார்த்து விடுவதென்ற முடிவுடன் கிருஷ்ணதேவராயன் ஒரு பெரும் படையுடன் அடில்ஷாவை எதிர்ப்பதற்குச் சென்றான். அந்தப் படையில் 'போர் வீரர்களுடன் சென்ற பரிவாரத்தையும் சேர்த்தால் சுமார் பத்து இலட்சம் பேர் இருந்தார்கள்.' அன்றியும் அந்தப் படையில் ஐந்நூறு யானைகளும் இருந்தன. கிருஷ்ண தேவராயன் ராயச்சூருக்குக் கிழக்கில் தன் பாசறையை அமைத்துக்கொண்டு அந்தக் கோட்டையை முற்றுகையிட்டான். இஸ்மாயில் ஒரு வலிமைமிக்க படையுடன் கிருஷ்ணா நதியைக் கடந்து, ஐந்து கல் முன்னேறி, ராயச்சூருக்கு ஒன்பது கல் தொலைவில் தன் பாசறையை அமைத்துக்கொண்டான். அவனுடைய படையில் ஏராளமான குதிரை வீரர்கள் இருந்தார்கள். ஐயத்திற்கிடமில்லாத விளைவைத் தரவிருந்த அந்த முக்கியமான சண்டை 1520 மே மாதம் 19ஆம் நாளன்று நடந்தது. விஜயநகரப் படைகள் முன்னே சென்று பிஜப்பூர்ப் படைகளை நேரடியாகத் தாக்கின. அந்த வேகத்தைத் தாங்க முடியாத பிஜப்பூர்ப் படைகள் பின்னடைந்து சென்றன. ஆனால், அந்த நேரத்தில் பிஜப்பூர்த் துப்பாக்கிப் படை தன்னுடைய வேலையைத் தொடங்கியது. தோளோடு தோள் நெருங்கி அடர்த்தியாக முன்னேறிக்கொண்டிருந்த விஜயநகர வீரர்களில் ஏராளமான பேர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார்கள். அதனால், அவர்கள் பின்னடைந்தார்கள். பிஜப்பூர் வீரர்கள் அவர்களைத் துரத்திக்கொண்டுவந்து கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது இரண்டாம் அணிக்குத் தலைமை தாங்கி நின்றிருந்த கிருஷ்ணதேவராயன் தன்னுடைய குதிரை மீதேறி எஞ்சியிருந்த தன் படைகள் அனைத்தையும் முன்னேறித் தாக்குமாறு கட்டளையிட்டான். அந்த மூர்க்கமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத பிஜப்பூர்ப் படைகள் சின்னா பின்னமாகச் சிதறியோடின. அவற்றை விஜயநகர வீரர்கள்

தணியாத கடுமையுடன் கிருஷ்ணுநதி வரையிலும் துரத்திக் கொண்டு சென்ருர்கள். இவ்வாறு கிருஷ்ணதேவராயன் தனக்கு நேரவிருந்த தோல்வியைப் பெரு வெற்றியாய் மாற்றினுன். அடில்ஷாவின் பாசறையை விஜயநகர வீரர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அடில்ஷா தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்றபடி ஒரு யானை மீதேறி ஓடிவிட்டான். சண்டையில் விஜயநகர வீரர்கள் ஏராளமான பொருள்களைக் கைப்பற்றினுர்கள். இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற கிருஷ்ணதேவராயனுடைய நோக்கமும் நிறைவேறியது. அந்தச் சண்டைக்குப் பின் இஸ்மாயில் அடில்கான் கிருஷ்ண தேவராயனுடைய பெயரைக் கேட்டாலே அஞ்சினுன். அதனுல் சாகும் வரையிலும் அவன் கிருஷ்ணதேவராயனேடு போர் செய்ய முடியவில்லை. விரைவில் கிருஷ்ணதேவராயன் ராயச் சூரைப் பிடித்துக் கொண்டான். அந்தக் கோட்டையைக் கைப் பற்றுவதற்குக் கிறிஸ்டோவ் டி பிகரேதோ என்பவன் தலைமையில் சண்டை செய்த போர்ச்சுகீசிய வீரர் சிலர் பேருதவியாக இருந் தார்கள். மதில் மீதிருந்து சண்டையிட்ட முஸ்லிம் போர் வீரர் பலரை அவர்கள் தங்கள் துப்பாக்கியால் 'ஒவ்வொருவராகக் குறிபார்த்துச் சுட்டு வீழ்த்தினுர்கள்.' அதனுல் மதிற்சுவர்களை யடைந்து அவற்றைத் தகர்த்தெறிவது விஜயநகர வீரர்களுக்கு எளிதாயிற்று. தலைநகரில் நடந்த அடுத்த மகாநவமி விழாவில் போர்ச்சுகீசியத் தலைவனுக்குக் கிருஷ்ணதேவராயன் தனிப் பெருமையளித்துப் பாராட்டினுன்.

பலரும் புகழ்ந்து பாராட்டிய இந்த வெற்றி பல முக்கியமான அரசியல் விளைவுகளுக்குக் காரணமாயிற்று. வெற்றிப் பெரு மிதத்திலிருந்த கிருஷ்ணதேவராயன் மிகுந்த செருக்குடன் நடக்கத் தொடங்கினுன். தோற்றுப்போன இஸ்மாயில் அடில்ஷாவுக்கு வேண்டுமென்றே எரிச்சலூட்டும் வகையில் அவன் நடந்தான். அவனிடமிருந்து வந்த தூதனை ஒரு மாதம் காத்திருக்கச் செய்தபின், இஸ்மாயில் அடில்ஷா நேரில் வந்து வளைந்து வணங்கித் தன் காலை முத்தமிட்டால் தான் அவனிட மிருந்து கைப்பற்றிய ஊர்களையும் கோட்டைகளையும் அவனுக்குத் திருப்பித் தர முடியும் என்று சொல்லியனுப்பினுன். விஜயநகரத்தின் படை வலிமை வளர்வதால் தங்களுக்கு நேரக் கூடிய ஆபத்தை உணர்ந்த முஸ்லிம் சுல்தான்கள் நாளடைவில் தங்களுக்குள்ளிருந்த பிணக்குகளைத் தீர்த்துக்கொண்டு தங்க ளுடைய பொதுப் பகைவரான விஜயநகரத்தாரை எதிர்ப்பதற்கு ராயச்சூர்ச் சண்டை வழிகோலியது. இறுதியாக, ராயச்சூர் வெற்றியால் மேற்குக் கடற்கரையிலிருந்த போர்ச்சுகீசியர்

பயனடைந்தனர். 'போர்ச்சுகீசியர்களுடைய வாணிகம் முழுவதும் இந்துக்களுடைய ஆதரவையே சார்ந்திருந்ததால், கோவாவின் உயர்வும் தாழ்வும் விஜயநகரத்தில் ஆட்சி செய்த மூன்றும் அரச மரபினருடைய உயர்வு தாழ்வுகளோடு தவிர்க்க முடியாதவாறு பிணைந்திருந்தன. அவர்கள் உயர்ந்தபோது கோவாவும் உயர்ந்தது. அவர்கள் வீழ்ந்தபோது கோவாவும் வீழ்ந்தது.'

கிருஷ்ணதேவராயனோடு உடன்படிக்கை செய்வதற்காக இஸ்மாயில்ஷா விஜயநகருக்கு அனுப்பியிருந்த அசத்கான் லாரி என்னும் வஞ்சகனுடைய சூழ்ச்சியின் விளைவாக 1523-ல் கிருஷ்ணதேவராயன் மீண்டுமொரு முறை பிஜப்பூர்மீது படையெடுத்தான். விஜயநகர ராஜ்யத்தின் வடக்கெல்லையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடில்கான் அல்லது அவனுடைய தாயார் கிருஷ்ணதேவராயனைச் சந்திப்பதற்கு இணங்கியிருப்பதாய் அசத்கான் சொன்னதை நம்பிய கிருஷ்ணதேவராயன் அங்குச் சென்றான். ஆனால், அங்கே அவ்விருவருள் ஒருவரும் வரவில்லை. அதனால் சீற்றமடைந்த கிருஷ்ணதேவராயன் அவர்களுக்கு ஒரு நல்ல பாடங் கற்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் குல்பர்காவுக்குச் சென்று அதனைத் தரை மட்டமாக்கினான். மேலும், அவன் பிரோசாபாத், சாகர் ஆகிய கோட்டைகளையும் கைப்பற்றிக்கொண்டு, தன்னுடைய படையைப் பிஜப்பூர் வரையில் நடத்திச் சென்று, அந்த நகரத்திற் சிறிது காலந் தங்கி, அதற்கு மிகுந்த சேதம் விளைத்துவிட்டுத் திரும்பினான். குல்பர்காவில் சிறைப்பட்டிருந்த மாமூது பாமினியின் மக்களை விடுவித்து, அவர்களுள் மூத்தவனை அரசனாக்கிவிட்டு, மற்றவர்களை விஜயநகருக்கு அழைத்துவந்து, அவர்களை மிகவும் அன்பாக நடத்தினான். இவ்வாறு பாமினி சுல்தானியத்துக்குப் புத்துயிரூட்டுவதற்காக இந்து அரசனான கிருஷ்ணதேவராயன் செய்த முயற்சி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பே இல்லை. மேலும், பாமினி ராஜ்யத்தின் சிதைவுக்குப்பின் தோன்றியிருந்த ஐந்து முஸ்லிம் ராஜ்யங்களின் சுல்தான்களும் கிருஷ்ண தேவராயனுடைய முயற்சியை வெறுத்தார்கள். எனவே, அவர்கள் விஜயநகரத்தின்மீது கொண்டிருந்த பகை மேலும் வளர்ந்தது.

கிருஷ்ணதேவராயன் உயிரோடிருந்தபோதே தன்னுடைய ஆறு வயது மகனை அரசனாக்கித் தான் மந்திரிப் பதவியை வகித்தான் என்று நூனிஸ் எழுதி வைத்திருக்கிறார். கிருஷ்ணதேவராயன் தன் மகன் திருமலைராயனுக்கு இளவரசப் பட்டம் சூட்டியதைத்தான் நூனிஸ் இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார் என்று

நாம் கருதவேண்டும். அந்த நிகழ்ச்சி 1524ஆம் ஆண்டில் நடை பெற்றிருக்கவேண்டும்; ஏனெனில், அந்த ஆண்டில் திருமலை ராயனுடைய பெயரில் வெளியிடப்பெற்ற பொறிப்புகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. முடிசூட்டுவிழா எட்டு மாதம் நடந்த தென்றும் அந்தச் சமயத்தில் திருமலைராயன் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனான் என்றும் நூனிஸ் கூறுகிறார். திருமலைராயன் பெற்ற உயர்வால் முதலமைச்சன் சாளுவ திம்மனுடைய பதவியும் அதிகாரமும் தாழ்ந்துவிட்டதால் அவனுடைய மகன் இளவரசனுக்கு நஞ்சு வைத்துவிட்டான் என்றும், அதனால்தான் இளவரசன் இறந்துபோனான் என்றும் நூனிஸ் மேலும் கூறுகிறார். உண்மையையறிந்த கிருஷ்ணதேவராயன் அமைச் சனைத் தன்னுடைய அவைக்கு வரச்சொல்லி, அனைவர் முன்னிலை யிலும் அவன் செய்த கோழைத்தனமான குற்றத்தை எடுத்துக் கூறி, அவனையும் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் சிறையில் அடைத்துவிட்டான். அவனுடைய அவையிலிருந்த போர்ச்சுகீசியர் சிலர் அந்த வேலையில் அவனுக்கு உதவி செய்தார்கள். திம்மனுடைய மக்களுள் ஒருவன் சிறையிலிருந்து தப்பியோடியபோது, அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கிவிட்டு, மீண்டும் அவனைச் சிறையில் தள்ளிவிட்டார்கள். அவனோடிருந்த மற்றக் கைதிகளுடைய கண்களும் பிடுங்கப் பட்டன.

அடில்ஷா தான் இழந்த நாடுகளை மீட்பதற்காக மீண்டும் ஒரு முயற்சி செய்தான். ஆனால் கிருஷ்ணதேவராயன் தன் படைகளுடன் புறப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனே அவன் திரும்பியோடிவிட்டான். அதன்பின் கிருஷ்ணதேவராயன் பெலகாம்மீது படையெடுப்பதற்கு ஆயத்தஞ் செய்தான். அப் போது பெலகாம் அடில்ஷாவின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால் கிருஷ்ணதேவராயன் திடீரென நோய்வாய்ப்பட்டு விரைவில் இறந்துபோனான் (1529). இறப்பதற்குமுன் அவன் தன் ஒன்று விட்ட தம்பி அச்சுதராயனைத் தனக்குப்பின் அரசனாக நியமித்தான்.

கிருஷ்ணதேவராயன் ஒப்புயர்வற்ற போர்த் திறமை பெற் றிருந்தது மட்டுமன்றி அரசியல் நயத்திறத்திலும் நிர்வாகத் திறமையிலும் மிக உயர்ந்த இடத்தை வகித்தான். அது போலவே, கவின்கலைகளிலும் அவன் மிகவும் ஈடுபாடு கொண் டிருந்ததால் அவற்றிற்குப் பேராதரவு தந்தான். வெளிநாட்டி லிருந்து வந்த பலர் விஜயநகரத்தின் பேரழகையும் கம்பீரமான தோற்றத்தையும் கண்டு உள்ளக் கிளர்ச்சியடைந்தனர்.

அதனல், அவர்கள் அதனைப் பலவாறு புகழ்ந்து வியந்து பாராட்டினர்கள். அந்த நகரத்தின் செல்வச் செழிப்பையும், அதனுடைய போர் வலிமையையும், அங்கு நடைபெற்ற விழாக் களையும், அதற்கரசனயிருந்த கிருஷ்ணதேவராயனுடைய வீரத் தையும் அவர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டி யிருக்கிருர்கள். அவர்களுடைய வர்ணனைகளைப் படிப்பது நமக்கு உள்ளத்தில் மிகுந்த எழுச்சியைத் தருகிறது. தென்னிந்தியா முழுவதும் கிருஷ்ணதேவராயனுடைய ஆட்சியில் இருந்தது. பங்காப்பூர், கெர்சப்பா, பட்கல் முதலிய இடங்களில் ஓரளவு சுதந்திரமாக ஆட்சிசெய்து வந்த சிற்றரசர்கள் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். பேரரசு அவனுடைய நேர் ஆட்சியி லிருந்தபோதிலும், அதனுடைய பலவேறு மாகாணங்களிலும் ஆளுநர்களாய்ப் பணியாற்றிய தளபதிகள் நடைமுறையில் ஏறக் குறையச் சுயேச்சையாகவே தங்களுடைய ஆட்சியை நடத்தி வந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள காலாட் படையினர், குதிரைப் படையினர், யானைப் படையினர் ஆகியவர் களைக் கொண்ட ஒரு படைப் பிரிவை எந்த நேரத்திலும் ஆயத்த நிலையில் வைத்திருக்கவேண்டும். அன்றியும், அவர்கள் மையக் கருவூலத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையை ஒழுங்காகச் செலுத்தவேண்டும். அவ்விரு நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அவர்கள் நடந்துகொண்ட வரையில் மைய அரசு அவர்கள் அதிகாரத்தில் தலையிடாது. அத்தகையதோர் ஆட்சி முறை திறமையாக நடைபெற வேண்டுமானல், மன்னவன் மக்கள் அனைவருடைய மதிப்பையும் பெறுகிற வகையில் நடந்து கொள்ளவேண்டும். அயராத உழைப்பாற்றலும், சாமர்த்தியமும் உடையவனயிருப்பதோடு தன் கடமைகளை ஆற்றுவதில் மிகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். கிருஷ்ணதேவராயன் அந்த இயல்புகள் எல்லாவற்றையும் உடையவனு யிருந்தான். அதனல் அவனுடைய ஆட்சிக் காலத்தில் அவனுடைய பரந்த ராஜ்யத்தின் அந்தப் பகுதியிலும் குழப்பமோ, அமைதிக் குலைவோ ஏற்படவே இல்லை. அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன். அவனே ஒரு கவிஞன். 'ஆமுக்த மால்யதா' என்னும் கவிதை நூல் அவன் எழுதிய ஒன்று என்று சொல்லப்படுகிறது. அரசன் கடைப் பிடித்த ஆட்சிமுறையின் அடிப்படைக் கொள்கைகளின் விளக்கமும் அந்த நூலில் ஏனைய செய்திகளோடு இடம் பெறுகிறது. புகழ்மிக்க தெலுங்குக் கவிஞர் அல்லசானி பெத்தன அரசவைக் கவிஞராக இருந்து கிருஷ்ணதேவராயனுடைய அவைக்கு அணி செய்தார். தகுதியறிந்து பரிசில் வழங்கும் அவனுடைய வள்ளன்மை நாடு முழுதுமிருந்த தலைசிறந்த புலவர் பலரை அவனுடைய அவைக்கு ஈர்த்தது. அதனல் அவனுடைய

புகழ் மேலும் மேலும் ஓங்கியது. 'அவனுடைய சமயப்பற்றும் மதக் காழ்பின்மையும் ஏனைய துறைகளில் அவனடைந்த புகழுக்கு ஒத்த புகழை அவனுக்கு அளித்தன. அவனுக்கு வைணவத்தில் மிகுந்த பற்று இருந்தது என்பது உண்மையேயெனினும், இந்து மதத்தின் ஏனைய பிரிவுகளையும் அவன் சமமாக மதித்து நடந்தான். சண்டையில் தோற்றுபோன பகைவர்களிடம் அவன் காட்டிய கருணையும், போரிற் கைப்பற்றிய ஊர்களில் வாழ்ந்த மக்களிடம் அவன் காட்டிய ஒப்புரவும், குடிமக்களையும் சிற்றரசர்களையும் அவன்பால் ஒருங்கே ஈர்த்த அவனுடைய போர்த்திறமையும், வெளிநாட்டுத் தூதர்களிடத்தில் அவன் வழக்கமாகக் காட்டிய அன்பும் அவர்களுக்களித்த இனிய வரவேற்பும், அவனுடைய வீறுர்ந்த தோற்றமும், அவனுடைய கண்ணியமான தூய வாழ்க்கைக்கு அறிகுறியாயிருந்த அவனுடைய இனிய இயல்பும் பண்பட்ட பேச்சும், குடிமக்களுடைய நலனில் அவனுக்கிருந்த பேரார்வமும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் கோயில்களுக்கும் பார்ப்பனர்க்கும் அளித்த மாபெரு மானியங்களும் தென்னிந்திய அரசர்கள் அனைவரிலும் அவனே தலைசிறந்தவன் என்பதை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.'

கிருஷ்ணதேவராயன் பல கட்டடங்களைக் கட்டி, தலைநகரின் வசதியையும் அழகையும் பெருக்கினான். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவன் விருபாட்சர் கோயிலில் ஒரு பழைய கோபுரத்தைப் பழுது பார்த்ததோடு ஒரு புதிய கோபுரத்தையும் கட்டினான், 1513-ல் கிருஷ்ணசாமி கோயிலொன்றைக் கட்டி உதயகிரியிலிருந்து எடுத்துக்கொண்டுவந்த பாலகிருஷ்ண விக்கிரகத்தை அதில் எழுந்தருளச் செய்தான் என்பதை நாம் முன்பே கண்டோம். கோவாவில் ஆளுநர் முதல்வர் (கவர்னர் ஜெனரல்) இசைவின் பேரில், அங்கிருந்த போர்ச்சுகீசியப் பொறியியல் வல்லுநன் ஒருவனை விஜயநகரத்துக்கு வரவழைத்து அவனுடைய உதவியால் விஜயநகரத்தைச் சுற்றியிருந்த புன்செய் நிலங்களின் பாசன வசதியைக் கிருஷ்ணதேவராயன் பெருக்கினான். தலைநகரின் தென்புறத்தில் அழகிய புறநகர் ஒன்றை நிர்மாணித்து, அதற்குத் தன்னுடைய தாயாரான நாகலா தேவியின் நினைவாக நாகலாபுரம் என்று பெயரிட்டான். அந்த நகரத்திற்குத் தேவையான தண்ணீர், புதிதாகக் கட்டப்பட்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வந்தது. அந்தத் தொட்டியை விஜயநகரத்திற்குத் தாம் சென்றிருந்தபோது கட்டிக்கொண்டிருந்தார்கள் என்று பேயிஸ் கூறுகிறார். நதிக்கரையிலிருந்த விட்டலசாமியின் கோயிலுக்குக் கிருஷ்ணதேவராயன் புதிய ஒப்பனை செய்தான். விஜயநகரக் கட்டடக் கலையின் 'ஒப்பனை நயவளத்தினுடைய

உச்ச நிலையை' அந்தக் கோயிலில் நாம் காண்கிறோம். அந்தக் கோயிலை அழகுபடுத்தும் பணி கிருஷ்ணதேவராயன் இறந்த பின்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. 1565ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் விஜயநகரத்தைத் தகர்த்தெறியும் வரையிலும் அந்த வேலை தொடர்ந்து நடந்ததென்று நாம் கருதலாம். கிருஷ்ணசாமி கோயிலின் தென்மேற்குக் கோணத்திற்கருகிலிருந்த ஒரு பாறையைச் செதுக்கி உருவாக்கிய மிகப் பெரிய நரசிம்மச் சிலை கிருஷ்ணதேவராயன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கடைசித் தொல்பொருட் சின்னங்களுள் ஒன்றாக இருக்கிறது (1528). அது பல சிதைவுகளுக்குள்ளாகியபோதிலும் விஜயநகரத்தின் இடிபாடுகளில் நம் கவனத்தைப் பெரிதும் கவருகின்ற ஒரு கலைச்சின்னமாக இன்னும் திகழ்கிறது.

அச்சுதராயனுடைய அவையில் சிறிது காலந் தங்கியிருந்த நூனிஸ், புதிய அரசன் தீயொழுக்க முடையவனென்றும், கொடுங்கோலனென்றும், நேர்மையும் தைரியமும் அற்றவனென்றும், நாட்டின் குடிமக்களும் தலைவர்களும் அவனுடைய தீய குணத்தையும் நடத்தையையும் மிகவும் வெறுத்தார்களென்றும் எழுதி வைத்திருக்கிறார். அச்சுதன் உண்மையில் அவ்வளவு கெட்டவன் என்று தோன்றவில்லை. கிருஷ்ணதேவராயனுக்குச் சொந்த மகன் ஒருவன் இருந்தபோதிலும், அச்சுதராயனே தனக்குப் பின் அரசனாக வேண்டுமென்று அவனைத் தெரிந்தெடுத்தான். எனினும், அவன் அரியணையேறியபோது (1529) அவனுடைய நிலைமை கடினமாகத்தான் இருந்தது. அச்சுதராயனையும் மற்ற அரசகுமாரர்களையும் நாட்டின் அமைதி கெடக்கூடாது என்ற காரணத்துக்காகக் கிருஷ்ணதேவராயன் சந்திரகிரிக் கோட்டையில் அடைத்து வைத்திருந்தான். கிருஷ்ணதேவராயன் இறந்தவுடனே அவனுடைய பதினெட்டு மாதக் குழந்தையே அரசன் என்று ராமராயன் விளம்பரப்படுத்தினான். ஆனால், அந்தக் குழந்தையின் பெயரில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ராமராயன் செய்த சூழ்ச்சியைச் சாளுவ வீர நரசிம்மன் தகர்த்து, அச்சுதராயன் சந்திரகிரியிலிருந்து வருகிற வரையிலும் விஜயநகர அரியணையைக் காலியாக வைத்திருந்தான். வேறொருவனை அரியணையேற்றுவதற்கு ராமராயன் செய்த முயற்சியைத் தடைசெய்யும் நோக்கத்துடன், அச்சுதராயன் சந்திரகிரியிலிருந்து திரும்பி வருகிற வழியில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதலில் திருப்பதியிலும் பின்னர்க் காளத்தியிலுமாக இருமுறை முடிசூடிக் கொண்டான்.

கிருஷ்ணதேவராயன் இறந்துபோனான் என்று கேள்விப்பட்ட உடனே விஜயநகரத்தின் பகைவர்களெல்லாம் அந்தப் பேரரசைத்

தாக்கத் தொடங்கினர்கள். இஸ்மாயில் அடில்கான் மீண்டும் ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது படையெடுத்து ராயச்சூரையும் முடுகலையும் பிடித்துக் கொண்டான். அந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்ப்பதற்கு அச்சுதராயன் எவ்வித முயற்சியும் செய்வதற்கு முன்னரே அது முடிந்து விட்டது. (அச்சுதராயனுடைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இந்த ஒன்றைத் தவிர வேறு எதையும் நூனிஸ் எழுதி வைக்கவில்லை என்று கூறலாம்.) அதே சமயத்தில் கஜபதியரசன் மேற்கொண்ட படையெடுப்புத் தோல்வியடைந்தது. அதுபோலவே, கொண்டவீட்டைக் கைப்பற்றுவதற்காகக் கோல்கொண்டா சுல்தானுன குதுப்ஷா செய்த முயற்சியும் தோல்வியடைந்தது.

இறுதியில் அச்சுதராயன் விஜயநகரத்தை யடைந்தபோது, ராமராயனேடு சமாதானஞ் செய்துகொண்டு, இருவரும் சேர்ந்து ஆட்சியை நடத்துவதென்ற ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டான். அதனுல் சினமடைந்த சாளுவ வீர நரசிம்மன் தலைநகரத்திலிருந்து நீங்கித் தெற்கே சென்று, உம்மத்தூர் அரசனேடும் திருவடிராஜ்ய (தென் திருவிதாங்கூர்) அரசனேடும் சேர்ந்து கொண்டு, அச்சுதனுக்கு எதிராகக் கலகஞ் செய்தான். அச்சுதன் ஒரு படையுடன் தென்னுட்டுக்குச் சென்ருன். அதற்கு அவனுடைய மைத்துனன் சலகராஜு திருமலை தலைமை தாங்கினுன். அந்தப்படை பொருநை யாற்றின் கரைவரையிலும் வெற்றியுடன் முன்னேறி, அங்கே ஒரு வெற்றிக்கம்பத்தை நாட்டி விட்டு மீண்டது. கலகக்காரர்களால் இழப்புக்குள்ளாகிய பாண்டிய மன்னனை அச்சுதன் மீண்டும் அரசனுக்கினுன். அவன் தன் மகளை அச்சுதனுக்கு மணமுடித்து வைத்தான். அச்சுதராயனுடைய படை, சாளுவ வீர நரசிம்மனையும் அவனுடைய துணைவர்களையும் தோல்வியுறச்செய்தது மட்டுமன்றி, அவர்களைச் சிறை பிடித்து, ஸ்ரீரங்கத்தில் தன்பாசறையை அமைத்து அங்கே தங்கியிருந்த அச்சுதராயனிடம் கொண்டு வந்தது. அச்சுதராயன் உம்மத்தூர் வழியாகத் தலைநகருக்குத் திரும்பினுன். வழியிலிருந்த சிற்றரசர்கள் அவனுக்குப் பணிந்து அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

அதன்பிறகு சிறிது காலத்தில் கிருஷ்ணதேவராயனுடைய மகன் இறந்துபோனுன். அதனுல் ராமராயனுடைய வலிமை குறைந்தது. அதிலிருந்து அச்சுதனுடைய போக்கும் மாறியது. எப்போதும் சச்சரவுக்குக் காரணமாயிருந்த ராயச்சூர் ஆற்றிடை நிலத்தின்மீது அச்சுதராயன் படையெடுத்து, கிருஷ்ணுநதி வரையிலிருந்த பீஜப்பூர் நாடுகளைத் தன்னுடைய அதிகாரத்

திற்குப் பணியுமாறு செய்தான். அதனால் அவனுடைய நிலைமை மேலும் வலிவடைந்தது. இந்த வெற்றிக்கு அப்போது பீஜப்பூர் அடைந்திருந்த வலுக்குறைவு பெரிதும் உதவியது. 1534ஆம் ஆண்டில் இஸ்மாயில் அடில்கான் இறந்துபோனான். அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவனுடைய மகன் மல்லுஅடில்கானை மக்கள் விரும்பவில்லை. தகாவழிப் பேர்போன அசத்கான் லாரியின் தூண்டுதலின் பேரில் பிரபுக்கள் மல்லுஅடில்கானை எதிர்த்துக் கலகஞ் செய்தார்கள். அதனால் வலிமை யிழந்திருந்த மல்லு அச்சுதராயனுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு சமாதானம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

அதற்குப்பின் அச்சுதராயனுடைய ஆட்சியின் வரலாறு தெளிவற்றதாக இருக்கிறது. 1536–37-ல் குத்தியில் ஏற்பட்ட ஒரு கலகத்தை அச்சுதன் அடக்கிய பிறகு அவன் தன்னுடைய அலுவலர்களோடு திருப்பதிக்குப் போனான். இதற்கிடையில் ராமராயன் தன்னுடைய அதிகாரத்தையும் வலிமையும் பெருக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். பழைய ஊழியர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவன் தன்னுடைய உறவினரையும் நண்பரையும் நியமித்தான். 1535-ல் பீஜப்பூர் சுல்தானியத்தின் அரியணையேறிய புதிய சுல்தானான இப்ராஹிம்அடில்கான் பதவியிலிருந்து நீக்கிய 3000 முஸ்லிம் போர்வீரர்களை ராமராயன் விஜயநகரப் படையில் சேர்த்துக்கொண்டான். இவ்வாறு தன் வலிமையைப் பெருக்கிக்கொண்டபின் அவன் திருப்பதியிலிருந்து தலைநகருக்குத் திரும்பிக் கொண்டிருந்த அச்சுதனை வழிமறித்து, அவனைப் பிடித்துச் சிறையிலடைத்துவிட்டு, தானே அரசன் என்று விளம்பரப்படுத்தினான். ஆனால், பிரபுக்கள் அவன் அரசனாவதை எதிர்த்தார்கள். அதனால் அவன் அச்சுதனுடைய சிற்றப்பன் மகனான சதாசிவனை அரசனாக்கி, அவனுடைய பெயரில் ஆட்சியை நடத்தினான். அதன் பின்னர்ப் பேரரசின் தென்பகுதியில் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதற்காக ராமராயன் தலைநகரை விட்டுச் செல்ல வேண்டியதாயிருந்தது. போனபோது தன்னுடைய நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமான ஓர் ஊழியனிடம் அச்சுதனை ஒப்படைத்துவிட்டு ராமராயன் ஒரு படையுடன் தென்றிசை சென்றான். அந்தப் படையெடுப்பில் அவன் முழுவெற்றி யடையவில்லை. மேலும், அவன் எதிர்ப்பார்த்ததற்குமேல் அந்தப் படையெடுப்பு நீடித்தது. அதற்கிடையில் அவன் நம்பிக்கை வைத்திருந்த ஊழியன் அச்சுதனை விடுவித்துவிட்டுத் தானே முதலமைச்சன் என்று விளம்பரப்படுத்திவிட்டான். ஆனால், விரைவிலேயே சலகராஜு திருமலை அவனைக் கொன்றுவிட்டு அவன் வகித்த அதிகாரத்தைத் தானே வகிக்கத்

தொடங்கினன். தென்னாட்டுக் கலகக்காரர்களோடு சமாதானஞ் செய்துகொள்வதற்கு ராமராயன் இந்த நிகழ்ச்சிகளைப் பயன் படுத்திக்கொண்டு தலைநகருக்குத் திரும்பினன்.

பட்ட காலிலேயே படும் என்றபடி விஜயநகர ராஜ்யத்துக்கு மேலும் பல தொல்லைகள் நேர்ந்தன. நாம் மேலே கண்ட நிலையைப் பயன்படுத்திக் கொண்ட இப்ராஹிம்அடிகல்கான் விஜயநகரத் தின்மீது படையெடுத்து அதனை முற்றுகையிட்டான். பீஜப் பூரைக் கிருஷ்ணதேவராயன் அழித்ததை மனத்தில் வைத்திருந்த இப்ராஹிம் நாகலாபுரத்தை யழித்துத் தரைமட்டமாக்கினன். தமக்குள் யாரேனும் ஒருவனேடு இப்ராஹிம் சேர்ந்து கொள்ளக் கூடும் என்று அச்சுதராயன், ராமராயன் ஆகிய இருவருமே அஞ்சினர். அதற்கிடையில், வஞ்சகனை அசத்கானுடைய சூழ்ச்சியால் அகமது நகர சுல்தான் பீஜப்பூர்மீது படை யெடுத்தான். ராமராயன், அச்சுதராயன் ஆகிய இருவருடனும் இப்ராஹிம் ஒரேசமயத்தில் சமாதானப் பேச்சைத் தொடங் கினன். அச்சுதனே விஜயநகர அரசனுக இருப்பதென்றும் ராமராயன் தன்னுடைய ஆட்சிக் கடங்கியிருந்த பகுதியில் அச்சுத னுடைய தலையீடின்றி ஆட்சிபுரியலாம் என்றும் முடிவு செய்யப் பட்டது. தன்னுடைய தொண்டுக்காக இப்ராஹிம் ஏராளமான செல்வங்களைக் கைம்மாருகப் பெற்றுக் கொண்டு தன்னுடைய ராஜ்யத்துக்குத் திரும்பினன். அவனுடைய உதவியால் ஏற்பட்ட ஒப்பந்தம் 1542-ல் அச்சுதன் இறக்கும் வரையிலும் நடை முறையில் இருந்தது.

உள்நாட்டுக் கலகங்களாலும், வெளியார் படையெடுப் பாலும்,ராமராயனுடைய சூழ்ச்சியாலும் அச்சுதனுடைய ஆட்சிக் காலம் முழுவதுமே இன்னல் நிறைந்ததாக இருந்தது. வாணிகம் பல இடையூறுகளுக் குள்ளாகியது. எல்லாச் சாலைகளிலும் ஆறலை கள்வர் இருந்ததால் புனிதத் தலங்களுக்குச் செல்ல விரும்பிய மக்கள் பெருந்துன்பத்துக் குள்ளானர்கள். இவ்வாறு நேர்ந்த பலவேறு இன்னல்களையும் சமாளிப்பதற்கு அச்சுதன் தைரியமாக முயன்றன். நூனிஸூம் ஏனையோரும் எழுதிவைத் துள்ளபடி அவன் அவ்வளவு மட்டரக அரசனல்லன். அவர்கள் அவனுடைய இயல்புகளை மிகவும் குறைவாக மதிப்பிட்டார்கள். அவனைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்டு எழுதப்பட்ட 'அச்சுதராயாப்புதயம்' என்னும் அணிநலமிக்க வடமொழிச் செய்யுள் நூலொன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. அது அச்சுதன் உயிரோடிருந்தபோதே அவனுடைய அரசவைப் புலவன் ராஜநாத டிண்டிமன் என்பவனல் எழுதப்பட்டது.

அச்சுதனைப் பற்றிய வரம்பு கடந்த புகழுரைகள் அந்த நூலில் மலிந்து கிடக்கின்றன என்பது உண்மைதான். எனினும், பொது வாகக் காணமுடியாத மிக உயர்ந்த இயல்புகளை அச்சுதன் பெற்றிருந்தான் என்பதை அந்த நூலைப் படிக்கும் நாம் உணரத்தான் செய்கிறோம்.

அதற்கிடையில், அச்சுதனுடைய ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும், போர்ச்சுகீசியர் தங்களுடைய ஆட்சியைத் தென்னிந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் நிலை நாட்டிக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய வாணிகத்தைக் காத்துக் கொள்வதற்குத் தேவை என்று தோன்றிய எல்லா இடங்களிலும் அவர்கள் கோட்டைகளைக் கட்டினார்கள். விஜய நகரப் பேரரசோடு நட்புறவாக இருப்பதுபோல அவர்கள் காட்டிக்கொண்டார்களெனினும், கோழிக்கோட்டு ஜாமரி னுடனும் விஜயநகரத்தின் சிற்றரசர்களுடனும் அவர்கள் அடிக்கடி பொருது கொண்டே யிருந்தார்கள். 'இந்தியர்களைப் படுகொலை செய்வதும் அவர்களுடைய ஊர்களைச் சூறையாடு வதும், அவர்களுடைய செல்வங்களைக் கொள்ளையடிப்பதும் தங்க ளுக்குக் கடவுள் தந்த உரிமை என்று அவர்கள் நினைத்தார்கள் போலும்! நயமாக மழுப்பிப் பேசாமல் உண்மையைக் கூறவேண்டு மானால், இந்தியாவுக்கு வந்த போர்ச்சுகீசியர் வரலாறு ஒரே அட்டூழிய மயமாக இருக்கிறது'. தங்களுடைய கைகளுக் கெட்டிய செல்வச் செழிப்புடைய கோயில்கள் அனைத்தையுமே கொள்ளையடிப்பதில் அவர்கள் பெருவிருப் புடையவர்களா யிருந் தார்கள். அவர்களுடைய வேட்டைக் கரங்களிலிருந்து திருப் பதியும் தப்பவில்லை (1545).

நாகம நாயக்கனுடைய மகன் விஸ்வநாத நாயக்கன்தான் மதுரையில் புகழ்பெற்ற நாயக்க மரபினர் ஆட்சியைத் தொடங்கி யவன் என்று அவனுடைய வழித்தோன்றல்கள் கருதினார்கள். அச்சுதன் தென்னாட்டின்மீது படையெடுத்தபோது விஸ்வநாத னும் அவனுடன் சென்று சாளுவவீர நரசிம்மன், திருவடி, முதலிய வர்களை அடக்குவதற்காக விஜயநகரப்படைகள்செய்த போர்களில் பெரும் பங்கு ஏற்றான் என்றும் இறுதியில் அச்சுதன் அவனை மதுரையின் ஆளுநனாக நியமித்திருக்க வேண்டுமென்றும் நாம் கருதலாம். அவன் 1533 முதல் 1542-ல் அச்சுதன் இறக்கும் வரையில் மதுரையின் ஆளுநனாக இருந்தான். அதன்பின் வேறொருவன் அந்தப் பதவியை வகித்தான். நாகமன்தான் சுயேச்சை பெற்ற மதுரை நாயக்க மரபினர் ஆட்சியை நிறுவினான் என்பதற்குச் சான்றேதும் இல்லை. அந்த வேலையை

அவனுக்குப்பின் அவனுடைய மகன் கிருஷ்ணப்பன் செய்திருக்கக் கூடும் என்று கருதலாம்.

அச்சுதராயனுக்குப் பின் அவனுடைய மகன் முதலாம் வேங்கடன் அரசன் ஆனான். ஆனால், அவன் அப்போது இளைஞனாக இருந்ததால் அவனுடைய மாமன் சலகராஜு திருமலை அவனுக்குப் பதிலாக ஆட்சியை நடத்தினான். அதனைப் பிரபுக்கள் எதிர்த்தார்கள். ஆனால் சலகராஜு அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. வேங்கடனுடைய தாய் வரதாதேவி தன் உடன் பிறந்தானுடைய நோக்கத்தில் ஐயங்கொண்டு அவனை அடக்குவதற்காக அடில்கானுடைய துணையை நாடினாள். அடில்கான் விஜயநகர ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். ஆனால் திருமலை அவனை வழியிலேயே கண்டு பேசி, அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து, அவனைத் திரும்பிப் போகுமாறு செய்தான். அதற்கு எதிராக, ராமராயன் குத்தியில் சிறையிருந்த சதாசிவனை விடுவித்து, அவனே அரசன் என்று விளம்பரப்படுத்தி, அவனுக்குத் துணை செய்யுமாறு அடில்கானுக்கு வேண்டுகோள் விடுத்தான். அதனை விரும்பி யேற்றுக் கொண்ட அடில்கான் விஜயநகரின்மீது படையெடுத்தான். அதற்கிடையில், மிகவும், குழப்பமடைந்திருந்த தலைநகரக் குடிமக்கள் திருமலையே தங்களுடைய அரசன் என்று விளம்பரப் படுத்திவிட்டார்கள். திருமலை அடில்கானை எதிர்த்துப் போர் செய்து பெரு வெற்றி பெற்றான். தோல்வியடைந்த அடில்கான் திரும்பிச் சென்றுவிட்டான். தனக்குப் போட்டியே இல்லாமல் செய்துவிடும் நோக்கத்துடன், முதலாம் வேங்கடனை மட்டுமன்றி அரச குடும்பத்தினர் அனைவரையும் திருமலை கொலைசெய்து விட்டான். அதன்பின் அவனுடைய கொடுங்கோன்மையின் வேகத்தைத் தாங்க முடியாத பிரபுக்கள் மீண்டும் அடில்கானுடைய துணையை நாடினார்கள். அவனும் வந்தான். ஆனால், அவனுடைய மட்டுமீறிய செருக்கைக் கண்டு பிரபுக்கள் அவன் மீது மிகுந்த சினமும் வெறுப்பும் அடைந்தார்கள். அதனால் தன்னுடைய உயிருக்கே ஆபத்து நேரலாம் என்று அஞ்சிய அடில்கான் திரும்பிப் போய்விட்டான். இறுதியில், சதாசிவனுடைய பெயரில் ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் ராமராயன் போரில் இறங்கினான். முதலில் அவன் பெனுகொண்டாவைக் கைப்பற்றினான். அதன்பின் அவன் திருமலையைப் பல சண்டைகளில் தோல்வியுறச் செய்து இறுதியில் துங்கபத்திரையின் கரையில் நடந்த சண்டையில் அவனை வெட்டி வீழ்த்தினான். பின்னர், அவன் தலைநகருக்குச் சென்று, 1543-ல் சதாசிவனுக்கு முடிசூட்டினான்.

முதல் ஏழெட்டு ஆண்டுகாலம் சதாசிவன் ஒருவனே அரசனுயிருந்தான். ஆனுல் அரசியலதிகாரம் முழுதும் ராமராயன் கையிலேயே இருந்தது. நாளடைவில் ராமராயன் அரசர்க்குரிய பட்டப்பெயர்களை வைத்துக்கொண்டதோடு, சதாசிவனைக் கடுமையான காவலில் வைத்துவிட்டான். எனினும், ராம ராயனும் அவனுடன் பிறந்தவர்களான திருமலையும் வேங்கடாத் திரியும் 'ஆண்டுக்கொரு முறை சட்டப்படி அரசனுயிருந்த சதாசிவனைக் கண்டு அவனே தங்கள் தலைவன் என்று காட்டிக் கொள்ளும் வகையில் அவன் முன் விழுந்து வணங்கிவிட்டு வந்தார்கள்.'

ராமராயன் பழங்குடிப் பிரபுக்களுள் பலரைக் கொன்று விட்டுத் தன்னுடைய குடும்பத்தினரைத் தலைமைப் பதவிகளுக்கு நியமித்தான் என்று பெரிஷ்டா கூறுகிருர். இந்தச் செய்தியை மற்றவர்கள் எழுதி வைத்திருக்கிற குறிப்புகளும் பொறிப்புகளும் உறுதிசெய்கின்றன. முஸ்லிம்கள் பலரை ராமராயன் தன் னுடைய படையிற் சேர்த்துக்கொண்டான். இரண்டாம் தேவராயன் காலத்திலேயே அந்தப் பழக்கம் தொடங்கிய தென்பது உண்மைதான். ஆனுல், அப்போது விஜயநகரப் படையில் சேர்க்கப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை சிறிதா யிருந்தது. மேலும், அப்போது அவர்களுக்கு முக்கியமான பதவி எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனுல், ராமராயன் அந்தப் புத்தி சாலித்தனமான கோட்பாட்டைப் பின்பற்ருமல் முஸ்லிம்களையும் முக்கியமான பதவிகளில் அமர்த்திஞன். அதனுல் விஜயநகர ராஜ்யத்தின் உள்நாட்டு விவகாரங்களை நெருங்கிக் கவனித்து, அவற்றைப் பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கு அவர் களுக்கு வாய்ப்பேற்பட்டது. மேலும், தக்காண முஸ்லிம் ராஜ்யங்களின் விவகாரங்களில் தலையிடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் அவன் தலையிட்டு அவற்றுக்குள் பகை மையை மூட்டிவிட்டான். அவ்வாறு செய்வதன் மூலம் அவற்றின் வலிமையைக் குறைப்பதற்கும் தன்னுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்வதற்கும் அவன் முயன்ருன். ஆனுல், முஸ்லிம் அரசர்கள் ராமராயனுடைய சூழ்ச்சியை உணர்ந்து, தங்களுக்குள் ளிருந்த பகையை மறந்து, விஜயநகரத்திற் கெதிராக ஒன்று திரண்டார்கள். ராமராயன் போட்ட தப்புக் கணக்குக்குரிய தண்டனையை அவன் அடைந்தான். அவன் முஸ்லிம் ராஜ்யங் களுக்கெதிராகச் செய்த சூழ்ச்சியின் நேர்விளைவுதான் ரட்சசி - தங்கடி (தலைக்கோட்டை) சண்டை.

சதாசிவராயனுக்கு முடிசூட்டிய சிறிது காலத்துக்கெல்லாம் ராமராயன் மீண்டும் தன் படையுடன் தென்திசை செல்ல

வேண்டியதாயிற்று. அரசியலதிகாரம் முழுவதும் அவன் கையிலிருப்பதைக் கண்ட அவனுடைய எதிரிகள் அவன்மீது பொறாமை கொண்டார்கள். சந்திரகிரிக்குத் தெற்கிலிருந்த பகுதிகள் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தன. அவர்கள் ராமராயனுடைய ஆதிக்கத்தை எதிர்த்துக் குழப்பமுண்டாக்கினார்கள். தென்னாட்டில் திருவிதாங்கூரின் ஆட்சியாளர்கள் மீண்டும் கலகஞ் செய்து, விஜயநகரத்தின் மேலாதிக்கத்தில் கயத்தாற்றில் ஆட்சிசெய்துவந்த பாண்டிய மரபினரை அங்கிருந்து துரத்திவிட்டார்கள். அப்போது தமிழகத்திலிருந்த ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்களுக்குத் தூய பிரான்ஸிஸ் ஸேவியர் தலைவராய் இருந்தார். அவரும் அவருடைய தோழர்களும் சேர்ந்து, மன்னார் வளைகுடாவின் முத்துச் சலாபக் கரையிலிருந்த பரதவர்களைத் தங்களுடைய மதத்திற்கு மாற்றியதோடு நில்லாமல், விஜயநகரக் குடிமக்களாக இருப்பதற்கு மாறாக அவர்கள் போர்ச்சுகீசிய அரசின் குடிமக்களாக மாறிவிடுவது நல்லதென்று அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் முஸ்லிம் வணிகர்களுடைய கொள்ளை ஆதாய வேட்டையிலிருந்தும் இந்து ஆளுநர்களுடைய கொடுங்கோன்மையிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம் என்றும் பாதிரிகள் சொல்லிக்கொடுத்தார்கள். பிரான்ஸிஸ் மடத்துறவிகளும் ஏசு சங்கப் பாதிரிமார்களும் கடற்கரை யூர்களிலிருந்த இந்துக் கோயில்களை இடித்துவிட்டு அங்கெல்லாம் மாதா கோயில்களைக் கட்டும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டார்கள். அதே சமயத்தில் கோவாவின் போர்ச்சுகீசிய ஆளுநன் காஞ்சீபுரத்துக் கோயில்களைக் கொள்ளையடிப்பதற்கு ஆயத்தஞ் செய்து கொண்டிருந்தானென்ற செய்தியும் பரவியது. பேரரசின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே ஆட்சி செய்துவந்த சிற்றரசர்கள் தங்களுக்குள் அடிக்கடி சச்சரவிட்டுக்கொண்டதும் அவர்கள் போர்ச்சுகீசியர்களோடு அரசியல் பேரம் பேசிக் கொண்டிருந்ததும் நாட்டில் முன்னரே இருந்த குழப்பத்தை அதிகமாக்கின.

தென்னாட்டிலிருந்த குழப்பத்தைப் போக்கி அமைதியை நாட்டுவதற்காக ராமராயன் தன்னுடைய சிற்றப்பன் மகன் சின்னத்திம்மனை ஒரு பெரும் படையுடன் அனுப்பினான். சின்னத்திம்மன் முதலில் கலகக்காரர்களின் வசத்திலிருந்த சந்திரகிரியை மீட்டான். அதன்பின் அவன் சோணாட்டிற்குள் நுழைந்து புவனகிரியைத் தாக்கிக் கைப்பற்றினான். பின்னர் அவன் கடற்கரை யோரமாகவே சென்று, காவிரியைக் கடந்து, நாகூரை யடைந்தான். அங்கே கத்தோலிக்கர்களுடைய அடாத செயலால் சிதைந்துபோயிருந்த ரங்கநாதர் கோயிலை அவன்

புதுப்பித்தான். அதன்பின் அவன் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஆட்சி செய்துவந்த உள்ளூர்த் தலைவர்களை அடக்கி அவர்கள் செலுத்தவேண்டிய திறை நிலுவையை வசூல் செய்தான். பின்னர் அவன் இன்னும் தெற்கே சென்று, கயத்தாற்றுக்கும் தூத்துக்குடிக்கும் அரசனாயிருந்த பெட்டம் பெருமாளின் செருக்கையடக்கி, பாண்டியன் இழந்த நாட்டைக் கைப்பற்றி, அவனை மீண்டும் பதவியில் அமர்த்தினான். அங்கிருந்து அவன் மேற்கே திரும்பி, திருவிதாங்கூரில் ஆட்சி செய்த 'ஐந்து திருவடி'களின் படைகளைத் தோவாளைக் கணவாயில் சந்தித்துத் தோல்வியுறச் செய்து துரத்தினான். பின்னர் அவன் திருவிதாங்கூரின் ஏனைய பகுதிகளின்மீது படையெடுத்து, அவற்றை ஆட்சிசெய்த அரசனை வென்றபின், அவனை நல்ல விதமாக நடத்தி, முன்னர் அவனுடைய ஆட்சியிலிருந்த நாடுகளில் பெரும்பாலானவற்றை அவனுக்கே திருப்பிக் கொடுத்தான். திருவனந்தபுரத்தில் பத்மநாப சாமியை வழிபட்டபின் அவன் குமரி முனைக்குச் சென்று, அங்கே ஓர் வெற்றிக் கம்பத்தை நாட்டிவிட்டுத் தான் வென்ற நாடுகள் அனைத்தையும் தான் செய்த போர்களில் தமக்குப் பேருதவி செய்த தன் தம்பி விட்டலனுடைய பொறுப்பில் விட்டு விட்டுத் தலைநகருக்குத் திரும்பினான்.

போர்ச்சுகீசியர்களுக்கும் ராமராயனுக்கும் இருந்த தொடர்புகள் எப்போதுமே நட்புறவாயிருந்தன என்று சொல்ல முடியாது. 1542-ல் மார்ட்டின் அல்பான்சோ டி சௌசா கோவாவின் ஆளுநனாகப் பதவியேற்ற பின் அத் தொடர்புகள் மேலும் சீர்கேடுற்றன. அவன் கோவாவுக்கு வந்துசேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம் பட்கல் துறைமுகத்தைத் தாக்கிக் கொள்ளையடித்தான். சோழமண்டலக் கரையில் அவன் எத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தானென்பதை நாம் மேலே கண்டோம். அவனுக்குப்பின் கோவாவின் ஆளுநனை ஜோவோ டி காஸ்டிரோவுடன் 1547-ல் ராமராயன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன் பயனாக, விஜயநகரம் குதிரை வாணிகத்தின் தனியுரிமையைப் பெற்றது. அதன்பின் 1558ஆம் ஆண்டு வரையில் ராமராயனுக்கும் போர்ச்சுகீசியர்களுக்கும் இடையில் நட்புறவும் அமைதியும் நிலவின. அந்த ஆண்டில் ராமராயன் திடீரென்று, சேன்தோமைத் தாக்கினான். சேன்தோமிலிருந்த ரோமன் கத்தோலிக்கர்கள் இந்துக் கோயில்கள் பலவற்றை அழித்துவிட்டார்கள் என்று அவனுக்குப் பல முறையீடுகள் வந்திருந்தன. மேலும், சேன்தோம் குடிமக்கள் மிகவும் பணக்காரர்களென்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான்.

அதனால் அவன் ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்த நினைத்தான். சேன்தோமைத் தாக்குவதன் மூலம் அவன் தன்னுடைய மதத்தைக் காப்பது மட்டுமன்றி, அங்கிருந்த செல்வத்தில் ஒரு பகுதியை யடைந்து தன் கருவூலத்தை நிரப்புவதற்கும் விரும்பினான். சேன்தோமைக் கைப்பற்றியபின் அவன் நூறாயிரம் பகோடாவைத் திறையாகக் கேட்டான். அதில் ஒரு பாதியை உடனே செலுத்தவேண்டுமென்றும் மறுபாதியை ஓராண்டிற்குள் செலுத்தவேண்டும் என்றும் அவன் நிபந்தனை விதித்தான். மறுபாதி செலுத்தப்படும் வரையில் தன்னிடம் பிணையாக வைத்துக்கொள்வதற்காக சேன்தோமின் குடிமக்களுள் மிகவும் முக்கியமான ஐந்துபேரை அவன் தன்னுடன் அழைத்துக்கொண்டு போனான். சேன்தோமுக்கு உதவி வாராமல் தடுப்பதற்காக ராமராயன் தன்னுடைய சிற்றப்பன் மகன் விட்டலராயனை அதே சமயத்தில் கோவாவின்மீது படையெடுக்கச்செய்தான். இக்கேரித் தலைவன் சங்கண்ண நாயக்கன் அந்தப் படையெடுப்பில் விட்டலராயனுக்குத் துணைபுரிந்தான். போர்ச்சுகீசியருக்கு இவ்வாறு பல இடையூறுகள் நேர்ந்தாலும் அவர்கள் மலபார்க் கரையில் கொள்ளையடிப்பதையும் சூறையாடுவதையும் நிறுத்தவில்லை.

ராமராயன் தக்காண முஸ்லிம் ராஜ்யங்களின் விஷயத்தில் கடைப்பிடித்த தவறான கோட்பாடுதான் ரட்சசி—தங்கடிச் சண்டைக்குக் காரணமாயிற்று என்று நாம் முன்பு கூறினோம். அவன் அந்த ராஜ்யங்களோடு வைத்துக்கொண்ட தொடர்புகளையும் ரட்சசி தங்கடிச் சண்டைக்குக் காரணமாயிருந்த தொடர் நிகழ்ச்சிகளையும் பற்றி இப்போது நாம் விவரமாகக் கூறுவோம். பிஜப்பூரும் அகமதுநகரும் 1542–43-ல் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்படி பிஜப்பூர் சுல்தான் விஜயநகரத்தின் விஷயத்தில் தன்னுடைய உசிதப்படி நடந்துகொள்ளலாமென்றும் அதில் அகமது நகர் தலையிடாதென்றும் அதுபோலவே பீடாரின் விஷயத்தில் அகமது நகர சுல்தான் தன்னுடைய உசிதப்படி நடந்துகொள்ளலாமென்றும் அந்த விஷயத்தில் பிஜப்பூர் தலையிடாதென்றும் இரு சுல்தான்களும் ஒப்புக்கொண்டார்கள். அதன்பின் இப்ராஹிம் அடில்ஷா விஜயநகர ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். ஆனால், கேலடித் தலைவன் சதாசிவ நாயக்கன் இப்ராஹிமை வென்று துரத்தினான். பீடாருக்குச் சொந்தமான கல்யாணிக் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு 1548-ல் ராமராயன் பர்ஹான் நைஜாம் ஷாவுக்குத் துணைசெய்தான். பர்ஹான் 1553-ல் இறக்கும் வரையில் கல்யாணிக் கோட்டை அவன் வசத்திலேயே இருந்தது. அவனுடைய மகன்

ஹூஸேன் நைஜாம்ஷா கோல்கொண்டா சுல்தானுகிய இப்ராஹிம் குதுப்ஷாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, பிஜப்பூர் மீது படையெடுத்து, 1557-ல் குல்பர்காவை முற்றுகையிட்டான். இப்ராஹிம் அடில்ஷா தனக்குத் துணை செய்யுமாறு ராமராயனை வேண்டிக்கொண்டான். ராமராயனும் உடனே தன் படையுடன் சென்றுன். ஆனுல் அவன் போர் செய்து ரத்தஞ்சிந்த விரும்ப வில்லை. எனவே, அவன் அப்போது மாறுபட்டிருந்த எல்லா சுல்தான்களையும் அழைத்து, பீமா நதியும் கிருஷ்ணு நதியும் கூடுகிற இடத்தில் ஒரு மாநாடு கூட்டினுன். அந்த மாநாட்டில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பயனுக, பரஸ்பர உதவி பாது காப்பு உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன்படி, அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளுள் யாதேனும் ஒன்று வன்முறைத் தாக்குதலுக் குட்பட்டால், ஏனைய நாடுகள் ஒன்று சேர்ந்து, அவ்வாறு தாக்குதலைத் தொடங்கிய நாட்டை எதிர்க்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இந்த நாளில் அந்த ஒப்பந்தத்தைக் 'கூட்டுப்பிணைய ஒப்பந்தம்' என்று கூறுவர்.

இந்த நால்வர் மாநாட்டிற்குச் சிறிது காலத்திற்குப்பின் இப்ராஹிம் அடில்ஷா இறந்துபோனுன். அவனுக்குப்பின் அவனுடைய இளவயது மகன் அலி அடில்ஷா பட்டத்துக்கு வந்தான். பிஜப்பூருக்கும் விஜய நகரத்துக்கும் இருந்த இனிய தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அலி அடில்ஷா வழக்கத்திற்கு மாறுன செயல் ஒன்றைச் செய்தான் என்று பெரிஷ்டா கூறுகிறுர். அவன் பட்டத்துக்கு வந்த சிறிது காலத்திற்குள் ராமராயனுடைய மக்களுள் ஒருவன் இறந்து போனுன். அதற்காகத் தன் வருத்தத்தைத் தெரி வித்துக்கொள்ள விரும்பிய அலி விஜயநகருக்கே நேரில் சென்றுன். அங்கு அவன் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கப் பட்டான். ராமராயனுடைய மனைவி அவனைத் தன் தத்துப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டாள். மூன்றுநாள் விஜயநகரில் தங்கியபின் அலி பிஜப்பூருக்குப் புறப்பட்டான். அப்போது ராமராயன் அவனை நகருக்கு வெளியிற் சென்று வழியனுப்ப வில்லை. 'அந்த அவமதிப்பை அலி தன் மனத்தில் நிரந்தரமாக வைத்துக்கொண்டான்.' தன்னுடைய நட்பைப்பெறுவதற்காகச் சுல்தான் இவ்வளவு பணிவாக நடக்கிறுனென்றுல் அவனுடைய வலிமை மிகவும் குறைந்திருக்கவேண்டுமென்று ராமராயன் எண்ணினுன் போலும்.

நால்வர் கூட்டுப் பிணைய ஒப்பந்தத்தை முதலில் மீறியவன் ஹுஸேன்நைஜாம் ஷாவே. அவன் 1560-ல் பிஜப்பூர்மீது படை

யெடுத்தான். அலி விஜயநகருக்கு ஓடி ராமராயனுடைய துணையை நாடினன். ராமராயனும் துணைபுரிய இசைந்தான். மேலும், ஒப்பந்தப்படி கோல்கொண்டா சுல்தான் இப்ராஹிம் குதுப்ஷாவும் பீஜப்பூரின் துணைக்கு வரவேண்டுமென்று ராமராயன் கூறினன். அவன் விருப்பமில்லாமலேயே அதற் கிணங்கினன். ஆனால், கூட்டாக வந்த படைகளைக் கண்ட வுடனே நைஜாம்ஷா பின்னடைந்து தன்னுடைய ராஜ்ய எல்லைக்குள் சென்றுவிட்டான். கல்யாணியைக் காக்கும் பொறுப்பைத் தன்னுடைய இந்துத் தளபதிகளில் ஒருவனை போப்பால் ராஜிடம் நைஜாம்ஷா ஒப்படைத்தான். கூட்டுப்படை களுள் ஒரு பகுதியைக் கல்யாணி முற்றுகைக்காக விட்டுவிட்டு, அடில்ஷாவும் ஏனையோரும் அகமது நகரத்தின்மீது சென்றார்கள். கூட்டுப்படைகள் நைஜாம்ஷாவை ஜம்கெட் என்னுமிடத்தில் தோல்வியுறச் செய்தன. புறமுதுகிட்டு ஓடிய அவனைக் கூட்டுப் படைகள் தௌலதாபாத் வரையில் துரத்திச்சென்றன. இனிமேல் எதிர்த்துநிற்க முடியாதென் றுணர்ந்த நைஜாம்ஷா கல்யாணியை அலி அடிம்ஷாவுக்குக் கொடுத்துச் சாமாதானம் செய்துகொண்டான். அதனால் அடில்ஷா ராமராயனுக்கு மிகவும் கடமைப்பட்டவன் ஆனன். அதன்பின் ராமராயன் பீடாரின்மீது படையெடுத்து பரீதுஷாவைத் தோல்வியடையச் செய்தான். அதனால் ராமராயன் செய்யும் போர்களில் அவனுக்குத் துணை புரிவதற்குப் பரீதுஷா இசைந்தான்.

ராமராயன் முதலில் கோல்கொண்டா சுல்தான் குதுப்ஷா வின் அவையில் ஓர் அலுவலனகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவன். எனவே, அந்த ராஜ்யத்தின் உள்நாட்டு நிலையைப்பற்றி அவன் நேரடியாக அறிந்திருந்தான். அன்றியும், அந்த ராஜ்யத்தின் பிரபுக்களுள் பலர் அவனுடைய நண்பர்களா யிருந்தார்கள். இப்ராஹிம் குதுப்ஷா, கோல்கொண்டாவின் அரசனுவதற்கு முன், தன்னுடைய சகோதரனுடைய சீற்றத்தி லிருந்து தப்புவதற்காக விஜயநகருக்கு ஓடி வந்து அடைக்கலம் புகுந்தான். பின்னர், 1550-ல், அவன் சகோதரர் இறந்த பிறகு ராமராயன் அவன் கோல்கொண்டாவின் அரசனுவதற்குத் துணை புரிந்தான். அதனால், தொடக்கத்தில் இப்ராஹிம் குதுப்ஷாவும் ராமராயனும் நண்பர்களா யிருந்தார்கள். ஆனால், நாளடைவில் அவர்களுடைய தன்னலப் பற்றுகள் அவர்களுடைய நட்புறவைச் சிறிது சிறிதாகத் தேய்க்கத் தொடங்கின. அதனால் அகமது நகருக்கெதிராகப் போர்செய்வதற்கு ராமராயன் அழைத்த போது இப்ராஹிம் குதுப்ஷா அரை மனத்துடன்தான் இசைந்தான். பின்னர், அவன் பிஜப்பூருக் கெதிராக வெளிப்

படையாகவே பகைமை பாராட்டி, அகமது நகருடன் சேர்ந்து கொண்டு, கல்யாணியை முற்றுகையிட்டான். அதனால் கல்யாணியைக் காப்பதற்கு ராமராயன் சென்றான். அதே சமயத்தில் கோல்கொண்டா ராஜ்யத்தின் தென் மாவட்டங்களின்மீது படையெடுக்குமாறு ராமராயன் தன்னுடைய தம்பி வேங்கடாத்திரிக்கு ஆணையிட்டான். அதனால் குதுப்ஷாவும் நைஜாம்ஷாவும் கல்யாணி முற்றுகையைக் கைவிட்டுப் பின்னடைந்தார்கள். ராமராயன், நைஜாம்ஷாவைத் துரத்திச் சென்றான்; அடில்ஷா குதுப்ஷாவைத் துரத்திச் சென்றான். விஜயநகரப் படைகள் மீண்டும் அகமதுநகரை முற்றுகையிட்டன. ஆனால், அண்மையிலிருந்த ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டதால் விஜயநகரப் படைகள் பின்னடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னடையும்போது அவற்றிற்குச் சேதமும் ஏற்பட்டது. அடில்ஷாவிடம் தோல்வியடைந்த குதுப்ஷா பல தொல்லைகளுடன் தன் தலைநகருக்குத் திரும்பினான். வேங்கடாத்திரியின் படையெடுப்பால் அங்கே மிகுந்த குழப்பம் ஏற்பட்டிருந்தன. விரைவில் ராமராயனும் அகமது நகரிலிருந்து திரும்பி, கோல்கொண்டாமீது சென்றான். அவனுடைய கவனத்தை வேறுபக்கம் திருப்பும் நோக்கத்துடன் குதுப்ஷா கொண்ட, வீட்டைத் தாக்கினான். அனால் அங்கும் அவன் தோல்வியே கண்டான். அதன்பின் அவனுடைய நாட்டை விஜயநகரப் படைகள் சூறையாடி அங்கிருந்த முக்கியமான எல்லாக் கோட்டைகளையும் கைப்பற்றிக் கொண்டன. இறுதியில், சுமார் 1563-ல், கோவில் கொண்டா, கணபுரம், பங்கல் ஆகிய நகர்களை ராமராயனுக்குக் கொடுத்துக் குதுப்ஷா சமாதானஞ் செய்து கொண்டான். அந்தப் போர் விஜயநகருக்கும் கோல்கொண்டாவுக்கும் இடையில் இருந்த பிளவை அதிகமாக்கியது. முஸ்லிம் ராஜ்யங்களின் தோல்விக்கும் மானக்கேட்டுக்கும் மீண்டும் மீண்டும் காரணமாயிருந்த இந்து ராஜ்யமான விஜயநகரத்தை அழித்தே தீர்வது என்று இப்ராஹிம் குதுப்ஷா உறுதி பூண்டான். முஸ்லிம் ராஜ்யங்களிலிருந்து சென்ற தூதர்களையும் ராமராயன் உரிய மதிப்புடன் நடத்தவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தங்களுக்குள் ஒற்றுமையில்லாதது ராமராயனுக்குச் சாதகமாயிருந்தது என்பதை முஸ்லிம் அரசர்கள் உணர்ந்தார்கள். விஜயநகரப் படைகளின் தாக்குதலால் ஏனைய முஸ்லிம் அரசர்களைவிட அதிகமாக இழப்புக்குள்ளாகியிருந்த இப்ராஹிம் குதுப்ஷாவும் ஹுசேன் நைஜாம்ஷாவும்தான் விஜயநகரத்திற்கு எதிராக முஸ்லிம் கூட்டணியை உருவாக்குவதற் கேற்ற

முயற்சியைத் தொடங்கியவர்களென்று நாம் கருதலாம். அகமது நகரத்தின்மீதும் கோல்கொண்டாமீதும் படையெடுத்தபோது விஜயநகரப் போர்வீரர்கள் முஸ்லிம்களுக்குப் புனிதமான இடங்களையழித்தும் முஸ்லிம் குடிமக்களைக் கொன்றும் இன்னும் பலவகையிலும் இழைத்த தீமைகள் ராமராயன்மீது முஸ்லிம் சுல்தான்கள் கொண்ட வெறுப்புக்கும் பகைமைக்கும் முக்கியமான காரணமாக இருந்தன என்று பெரிஷ்டா உறுதியாகக் கூறுகிருர். அகமது நகரத்திற்கும் பிஜப்பூருக்கும் ஏற்பட்ட அரசியல் கூட்டுறவு திருமண உறவுகளால் வலிமைபெற்றது. ஹுசேன் நைஜாம்ஷாவின் மகள் சாந்துபீபியை அடில்ஷாவும், அவனுடைய தங்கைகளில் ஒருத்தியை ஹுசேனுடைய மூத்தமகனும் மணந்து கொண்டார்கள். அந்த இரு திருமணங்களும் ஒன்ருகவே நடந்தன. அந்தத் திருமணங்கள் நடந்து முடிந்த சிறிது காலத்திற்குள் புனிதப் போருக்குத் தேவையாள ஆயத்தங்கள் தொடங்கின. தக்காண முஸ்லிம் சுல்தான்கள் ஐவருமே ராமராயனை எதிர்த்துப் போரிட்டார்களென்று இந்து வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. ஆனல், முஸ்லிம் வரலாற்ருசிரியர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புகளில் பேரார் சுல்தானுடைய பெயர் இடம்பெறவில்லை. வஞ்சகனை அலி அடில்ஷா இறுதி வரையிலும் இரு தரப்பினரிடத்திலும் நட்புறவாக இருப்பதாகவே காட்டிக் கொண்டான். கடைசியாக, முஸ்லிம் படைகள் பிஜப்பூர்ச் சமவெளியில் ஒன்று திரண்டு, 1564ஆம் ஆண்டின் இறுதியில், தென்திசை நோக்கி அணிவகுத்துச் சென்றன.

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடக்கவிருந்த மிகப் பெரும்போர் விரைவில் தொடங்கப்போகிறதென்பதை உணர்ந்த ராமராயன் 1564ஆம் ஆண்டு விஜயதசமியன்று (செப்டம்பர் 15) தன்னுடைய பிரபுக்களிடம் அந்தச் செய்தியைச் சொல்லி, இருக்கிற படைகள் அனைத்தையும் காலங்கடத்தாது ஒன்று திரட்டுமாறு ஆணையிட்டான். பல வரலாற்ருசிரியர்கள் இந்தச் சண்டையைப் பற்றிய குறிப்புகளை எழுதியிருக்கிருர்கள். அதிற் கலந்து கொண்ட போர் வீரர்களின் எண்ணிக்கையைப் பற்றி அவர்கள் எழுதியுள்ள குறிப்புகளை நாம் அப்படியே நம்பிவிட இயலாது. எனினும், அந்தச் சண்டையில் இரு தரப்பிலும் மிகப் பெருந்தொகையினரான போர்வீரர்கள் கலந்துகொண்டார்களென்பதில் ஐயமில்லை. 1564 டிசம்பர் 26ஆம் நாளன்று முஸ்லிம் படைகள் கிருஷ்ணுநதிக்கு அருகிலுள்ள தலைக்கோட்டை என்னும் அரண் பெற்ற சிறிய நகரத்தை யடைந்தன. ராமராயன் மிகத் தைரியமாகவும் தன்னுடைய வலிமையில் மிகுந்த நம்பிக்கை யுடையவனுகவும் இருந்தான். எதிரிகள்

கிருஷ்ணாநதியைக் கடக்காதவாறு காவல் புரிவதற்காகப் பல வகைப் போர்வீரர்களையும் கொண்ட ஒரு வலிமை மிக்க படையைத் தன் தம்பி திருமலையின் தலைமையில் அவன் முதலில் அனுப்பினான். அதன்பின் அவன் தன்னுடைய இன்னொரு தம்பி வேங்கடாத்திரியை அனுப்பினான். இறுதியில், எஞ்சியிருந்த படைகளுடன் அவன் தானே சென்றான். இந்துப் படைகள் கிருஷ்ணாநதியின் தெற்கில் முகாமிட்டிருந்தன. முஸ்லிம் படைகள் அந்நதியின் இரு கரையிலும் பாசறை அமைத்திருந்தன. இறுதிச் சண்டையைப் பற்றியும் அதற்குமுன் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் ஒருசார்பான குறிப்புகளைப் பலர் எழுதிவைத்திருக்கின்றனர். ஆனால், அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நடந்தது நடந்தவாறே இப்போது எழுதுவது மிகவும் கடினம். இறுதிச் சண்டை நடந்த களம் கிருஷ்ணா நதியின் தென்கரையில் இருந்தது. ஆனால், அந்த நதியின் வடகரையில் ஒன்றுக்கொன்று பத்துக் கல் தள்ளியிருந்த ரட்சசி என்னும் கிராமமும் தங்கடி என்னும் கிராமமும் தலைக்கோட்டையைவிடப் போர்க்களத்துக்கு அருகிலிருந்ததால் அந்தச் சண்டையைத் தலைக்கோட்டைப்போர் என்று சொல்லாமல் ரட்சசி - தங்கடிப் போர் என்று வரலாற்றாசிரியர் சிலர் கூறுகின்றனர்.

இருதரப்புப் படைகளும் ஒரு மாதகாலம் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. அப்போது பூர்வாங்கமான பலப் பரீட்சைகள் பல நடந்தன. அத்தகைய பரீட்சை ஒன்றில் நைஜாம் ஷாவும் குதுப்ஷாவும் கடுமையான தோல்வி யடைந்தார்கள். அதனால் எதிரிகளை ஏமாற்றுவதற்கு ஏற்ற ஏதாவது தந்திரத்தைக் கையாள்வது இன்றியமையாதது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். வலிமைமிக்க ராயனோடு சமாதானஞ் செய்துகொள்ள விரும்புவதாக அவர்கள் நடித்து, அதற்குரிய பேச்சுவார்த்தைகளையும் அவர்கள் தொடங்கினார்கள். அதே சமயத்தில் அவர்கள் அடில்ஷாவுடன் பேசி, அவனுடைய இரண்டுங்கெட்டான் நிலையைக் கண்டித்து, அவனுடைய துணையை உறுதியாக்கிக் கொண்டார்கள். ராமராயனுடைய படையிலிருந்த முஸ்லிம் தளபதிகளுடனும் அவர்கள் ரகசியத் தொடர்பு கொண்டிருக்கக் கூடும். எல்லா ஆயத்தங்களும் முடிந்த பிறகு, போலித் தாக்குதல் ஒன்றின் மூலம் அவர்கள் எதிரிகளின் கவனத்தை வேறு பக்கம் திருப்பிவிட்டு, கிருஷ்ணா நதியைக் கடந்து, இந்துப் படைகளின்மீது பெருந்தாக்குதல் ஒன்றைத் தொடங்கினார்கள். எதிர்பாராது நிகழ்ந்த அந்தத் தாக்குதலைக் கண்டு மனந் தளராமல் ராமராயன் அதனைச் சமாளிப்பதற்குரிய வகையில் தன் படைகளை அணிவகுத்து நிறுத்தினான். இறுதிச் சண்டை

1565 ஜனவரி 23ஆம் நாள் நடந்ததென்று பெரிஷ்டாவும் சூவலும் சொல்கிறார்கள். ராமராயனும் அவன் உடன் பிறந்தார் இருவரும் சண்டையில் கலந்து கொண்டார்கள். தன்னுடைய முதுமையையும் பாராது ராமராயன் ஒரு சிவிகையில் அமர்ந்து போர்த்திற நடவடிக்கைகளை இயக்கினான். அவன் மைய அணிக்குத் தலைமை தாங்கினான். அந்த முனையில் அவனுடைய படைகளை ஹுசேன் நைஜாம் ஷாவின் தலைமையிலிருந்த படைகள் எதிர்த்தன. திருமலையின் தலைமையில் போர் செய்த இடப்புற அணியை அலி அடில் ஷாவின் தலைமையில் இயங்கிய பிஜப்பூர்ப் படைகள் எதிர்த்தன. வலப்புற அணிக்கு வேங்கடாத்திரி தலைமை தாங்கினான். அதனை ஆமதாபாத்-பீடார் சுல்தான் கோல்கொண்டா சுல்தான் ஆகியவர்களுடைய தலைமையிலிருந்த படைகள் எதிர்த்தன. நன்றாகச் சண்டை செய்த விஜயநகரப் படைகள் முதலில் வெற்றி பெற்றன. ஆனால், ராமராயனுடைய இரு முஸ்லிம் தளபதிகள் திடீரென்று எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும் எழுபது எண்பதாயிரம் வீரர்களுக்குத் தலைமை தாங்கியவர். அதன்பின் ஏற்பட்ட நிலைமையைச் சீசர் பிரடரிக் பின்வருமாறு விவரிக்கிறார் :

'இரு தரப்புப் படைகளும் மோதின. ஆனால், சண்டை சிறிது நேரத்தில் முடிந்துவிட்டது. அது நான்கு மணி நேரங்கூட நீடிக்கவில்லை. சண்டை மும்முரமாக நடந்துகொண்டிருந்த நேரத்தில் அந்த இரண்டு துரோகிகளும் தங்களுடைய போர் வீரர்களுடன் திடீரென்று தங்கள் அரசனுக்கு எதிராகத் திரும்பி விட்டார்கள். அதனால் ஏற்பட்ட பெருங் குழப்பத்தைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் அடைந்த விஜயநகரப் படைகள் களத்தை விட்டு ஓடத்தொடங்கின.'

ராமராயன் நைஜாம் ஷாவின் கையில் மாட்டிக்கொண்டான். அவன் உடனே ராமராயனுடைய தலையை வெட்டி, அதனை ஓர் ஈட்டியின் முனையில் மாட்டி, இந்துப் போர் வீரர்கள் அனைவரும் பார்க்குமாறு உயர்த்திப் பிடித்தான். அதனைக் கண்டு களத்தை விட்டு ஓடிய இந்துப் போர்வீரர்களைத் துரத்திக்கொண்டு போன முஸ்லிம் படையினர் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொன்றனர். இந்துப் படைகளில் பெருங்குழப்பம் ஏற்பட்டது. திரும்பி நின்று போர் புரிவதற்கும் தலைநகரைக் காப்பதற்கும் எவ்வித முயற்சியையும் யாரும் செய்யவில்லை. தலைநகருக்குச் செல்லும் வழி திறந்து கிடந்தது. தோற்றுப்போன செய்தி யோடு போர்க்களத்திலிருந்து மனமுடைந்து திரும்பிய போர்வீரர்

களும் அரசகுமாரர்களுமே தலைநகரத்திற்குள் முதலில் நுழைந்தார்கள். தலைநகரத்தின் குடிமக்கள் எக்கேடு கெட்டாலும் சரியென்ற முறையில் திருமலை கருவூலத்திருந்த செல்வங்கள் அனைத்தையும் வாரி, 1550 யானைகளின்மீது ஏற்றிக்கொண்டு, சிறையிலிருந்த அரசன் சதாசிவராயனுடனும் அரச குடும்பத்தைச் சேர்ந்த மகளிருடனும் தப்பியோடி விட்டான்.

வெற்றிபெற்ற முஸ்லிம் படைகள் விஜயநகருக்குள் நுழைவதற்குள், திருடர்களும் காடுவாழ் மக்களும் கூட்டங் கூட்டமாக அந்த நகருக்குள் நுழைந்து, அங்கு வாழ்ந்த ஆகூழில்லா மக்களைத் துன்புறுத்தி, அவர்களுடைய வீடுகளையும் கடைகளையும் கொள்ளையடித்தார்கள். அதன்பின் முஸ்லிம் போர் வீரர்கள் வந்தார்கள். 'அவர்கள் நகர மக்களைத் தங்கள் வாளால் வெட்டி வீழ்த்தினார்கள்; வீடுகளுக்குத் தீ வைத்தார்கள்; கோடரியும் கடப்பாரையும் கொண்டு கட்டடங்களை இடித்துத் தகர்த்தார்கள்; எத்தனையோ நாள் இந்த நாசவேலையை அவர்கள் தொடர்ந்து செய்தார்கள். 'இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்று குவித்தவக் கூற்று' என்று மக்கள் அச்சத்தினாலும் துன்பத்தினாலும் ஒரு நாளைக்கு எத்தனையோ முறை செத்துப் பிழைத்தார்கள், மீண்டும் சாவதற்கு! உலக வரலாற்றில் இத்தகையதொரு நாசவேலையை யாரும் எங்கும் எப்போதும் கண்டிருக்க இயலாது' என்று கூறலாம். அது எவ்வளவு பெரிய நகரம்! எவ்வளவு அழகானது! எவ்வளவு வீறுர்ந்தது! அதை நாம் நேற்றுத்தான் கண்டு களித்தோம். அந்தோ! இன்று அது அழிந்து வீழ்ந்துவிட்டது. நேற்று அந்த நகரத்தில் மக்கள் பொங்கி வழிந்தார்கள். பல்வேறு தொழில்களிலும் அவர்கள் பரபரப்பாக ஈடுபட்டார்கள். செல்வச் செழிப்பில் அந்த நகரம் செம்மாந்து நின்றது. ஆனால், இன்று அழிந்துவிட்டது! ஐயகோ, எவ்வளவு கம்பீரமான நகரம் எவ்வளவு விரைவில் அழிந்துவிட்டது! வெறி பிடித்த விலங்கு போன்ற பகைவர்கள் அதனை இன்று பிடித்து, பல்லாயிரக் கணக்கான மக்களைப் படுகொலை செய்து, கட்டடங்களை எல்லாம் இடித்துத் தகர்த்து விட்டார்கள். அந்த வெறிச்செயலை, கொலைச் செயலை, பலநாள் தொடர்ந்து நடந்த அந்த மிருகத் தனத்தை, அந்தப் பயங்கரமான அழிவு வேலையை விவரிக்கச் சொற்களும் உளவோ?' அந்த அழிவிலிருந்து விஜயநகரம் மீளவேயில்லை. அதனைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று திருமலை சிறிது காலத்திற்குப்பின் முயன்றான். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை.

திருமலை பெனுகொண்டாவிற் குடியேறி, வலிமைமிக்க படையொன்றினை மீண்டும் உருவாக்கப் பல வகையிலும் முயன்றான். பணத்தட்டுப்பாடு சமாளிக்க முடியாமல் போனபோது, போர்ச்சுகீசிய வாணிகர்களிடமிருந்து அவன் பல குதிரைகளை வாங்கிக் கொண்டு, அவற்றுக்குப் பணங் கொடுக்க மறுத்துவிட்டான். விஜயநகரக் குடிமக்கள் ராமராயனுடைய மகன் திம்மன் என்ற பெத்த திருமலைதான் பகர ஆளுநனாக (அதாவது, சதாசிவராயன் பெயரில் ஆட்சிபுரிபவனாக) இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். திருமலை விஜயநகரை விட்டுவிட்டுப் பெனுகொண்டாவிற் குடியேறியதற்கு அதுவும் ஒரு முக்கியமான காரணமாக இருந்தது. நாட்டில் அமைதியின்மையும் குழப்பமும் ஆறாண்டு நிலவின. அதன் பிறகுதான் திருமலை தானே அரசனென்று அரியணையேற முடிந்தது. பயிற்சியும் அனுபவமும் உடைய சிவில் நிர்வாக அலுவலர்களைத் தள்ளிவிட்டு ராமராயன் தன்னுடைய உறவினர்களை உயர்பதவிகளில் அமர்த்தினான் என்பதை நாம் முன்பு கண்டோம். அந்தத் தவறான கோட்பாட்டின் தீய விளைவுகள் ராமராயனுடைய துன்பங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாயின. நாட்டின் பல பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. குற்றஞ் செய்வோர் எண்ணிக்கையும் குற்றங்களும் அதிகரித்தன. பாளையக்காரர்கள், கொள்ளைக் கூட்டத்தினர் ஆகியவர்களுடைய கொடுமை மிகுந்தது. மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களிலிருந்த நாயக்கர்களுடைய ஆட்சி, நடைமுறையில் முழு உரிமையுடைய ஆட்சியாக மாறியது இந்தக் காலத்தில்தான் என்று கூறலாம்.

பேரரசுக்கு இத்தகையதொரு பெருங்கேடு நேர்ந்த பின்னரும் பெத்த திருமலைக்குப் புத்தி வந்ததாகத் தெரியவில்லை. அவன் தன்னுடைய சிற்றப்பனுக்கு எதிராகத் தனக்கு உதவி செய்யுமாறு அலி அடில்ஷாவை வேண்டினான். அவன் முதலில் விஜயநகருக்குச் சென்று பின்னர்ப் பெனுகொண்டாவை முற்றுகையிடுவதற்கு ஒரு படையை அனுப்பினான். ஆனால், சவரம் சென்னப்பநாயக்கன் என்ற திறமை மிக்க தளபதியின் தலைமையில் சண்டையிட்ட பெனுகொண்டாவை அடில்ஷாவின் படைகள் பிடிக்க முடியவில்லை. திருமலை இப்போது நைஜாம் ஷாவின் துணையை நாடினான். நைஜாம் ஷா பிஜப்பூர்மீது படையெடுத்தான். அதனால், அடில்ஷா தன்னுடைய நாட்டைக் காப்பதற்காக விஜயநகரிலிருந்து திரும்பினான் (1567). விரைவில், பிஜப்பூரைத் தாக்குவதற்காக நைஜாம் ஷாவும் குதுப்ஷாவும் திருமலையை அழைத்தார்கள். அவனும் அதற்கிசைந்தான். ஆனால், அடில்ஷா முஸ்லிம் அரசர்களோடு சமாதனஞ் செய்து

கொண்டு, திருமலையை எதிர்த்து, 1568-ல், அவனுடைய நாட்டைத் தன் முழுவலிமையுடனும் தாக்கி, ஆதோனியை முற்றுகையிட்டு, பெனுகொண்டாவிலிருந்து ஆதோனிக்கு உதவி போய்ச் சேராமல் தடுப்பதற்காகப் பெனுகொண்டாவுக்கும் ஒரு படையை அனுப்பினான். பெனுகொண்டா அடில்ஷாவின் படையை எதிர்த்து மீண்டும் சமாளித்தது. ஆனால், ஆதோனி வீழ்ந்துவிட்டது.

இத்தனை இன்னல்களுக்கிடையிலும் திருமலை விஜயநகரப் பேரரசின் பெரும்பகுதியைத் தன்னுடைய ஆதிக்கத்திலேயே வைத்திருந்தான். தென்னாட்டு நாயக்கர்களுடைய புதிய நிலையை அவன் வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லையெனினும், நடைமுறையில் அதனை ஏற்றுக்கொண்டு, அவர்களைத் தன்னுடைய நண்பர்களாக்கிக் கொண்டான். மைசூரில் ஆட்சிசெய்த வாடியார்களும், வேலூர், கேலடி ஆகிய இடங்களில் ஆட்சி செய்த நாயக்கர்களும் இன்னும் பேரரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டவர்களாகவே இருந்தார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் வழங்கிய மண்டலங்களின் நிர்வாகத்தைப் பொதுவாக மேற்பார்வை செய்வதற்கும் பேரரசின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் தனித்தனி அரசப் பிரதிநிதிகளைத் திருமலை நியமித்தான். தெலுங்கு நாட்டுக்குப் பெனுகொண்டாவைத் தலைநகராக்கி அதற்குத் தன் மூத்த மகன் ஸ்ரீரங்கனை அரசப் பிரதிநிதியாக நியமித்தான்.

கன்னட நாட்டுக்குத் தன் இரண்டாம் மகன் ராமனை அரசப் பிரதிநிதியாக நியமித்து, ஸ்ரீரங்கப்பட்டணத்தை அந் நாட்டின் தலைநகராக்கினான்; தமிழகத்துக்குச் சந்திரகிரியைத் தலைநகராக்கி அங்குத் தன் கடைசி மகன் வேங்கடபதியை அரசப்பிரதிநிதியாக நியமித்தான். அவன் 'நலிவுற்ற கர்நாடகப் பேரரசுக்குப் புத்துயிரூட்டியவன்' என்னும் பட்டப் பெயரை வைத்துக் கொண்டு 1770ஆம் ஆண்டில் பேரரசனாக முடிசூடிக்கொண்டான். ஆனால், அப்போதே அவன் முதுமை யெய்தியவனாயிருந்தான். அதனால், அவன் சிறிது காலம் ஆட்சிசெய்தபின் அரச பதவியைத் துறந்துவிட்டான் என்பது தெரிகிறது. அதனால் அவனுடைய மூத்த மகன் ஸ்ரீரங்கன் 1572-ல் அரசன் ஆனான். பேரரசின் எல்லைகள் சுருங்கிவிட்டன. எனினும், அது புத்துயிர் பெற்று, மீண்டுமொரு நூற்றாண்டு நிலைத்து நின்றதற்குத் திருமலையின் முயற்சியே காரணமாயிற்று.

சதாசிவனுடைய கதி என்னவாயிற்று என்று நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. அவனைத் திருமலையின் மக்களுள் ஒருவன்

கொலைசெய்துவிட்டானென்று 1567-ல் சீசர் பிரடரிக் கேள்விப் பட்டார். ஆனால், அது புதிய அரவீடு அரச மரபினரை விரும் பாத பகைவர்கள் கட்டிவிட்ட கதையாக இருக்குமென்று நாம் கருதலாம். சதாசிவன் பணிவணக்கமான இயல்புடையவன். அவனால் யாருக்கும் தீங்கு நேராது என்பதை அனைவரும் அறிந் திருந்தனர். எனவே, அவனைக் கொலை செய்ய வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது. அவன் சிறையிலேயே வாடி இறுதி யில் இயற்கை மரணத்தை எய்தினான் என்று நினைப்பது பொருத்த மாக இருக்கும். 1576ஆம் ஆண்டு வரையில் வெளியிடப்பெற்ற பொறிப்புகளில் அவனுடைய பெயரை நாம் காண்கிறோம்.

திருமலை 1578 வரையில் உயிரோடிருந்தானெனினும் அவனுடைய மகன் முதலாம் சீரங்கன் 1572ஆம் ஆண்டிலிருந்தே அரசனாக இருந்தான். பேரரசின் வலிமையை மீண்டும் நிலை நாட்டும் பணியை அவன் தொடர்ந்து செய்தான். ஆனால், அந்த முயற்சிக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. அன்றியும், முஸ்லிம் அரசர்களுள் இருவர் பேரரசின்மீது மீண்டும் படையெடுத்துச் சில பகுதிகளைப் பிடித்துக்கொண்டனர். 1576-ல் அலி அடில்ஷா ஆதோனியிலிருந்து ஒரு படையை அனுப்பிப் பெனுகொண்டாவை முற்றுகையிட்டான். தன்னுடைய தலைநகரைக் காக்கும் பணி யைத் திறமைமிக்க தளபதி சென்னப்பனிடம் ஒப்படைத்துவிட்டு சீரங்கன் கருவூலத்திலிருந்த செல்வங்களை எடுத்துக்கொண்டு சந்திரகிரிக்குச் சென்றுவிட்டான். முற்றுகையைச் சென்னப்பன் மூன்றுமாதம் சமாளித்தான். அதற்குள் சீரங்கன் கோல் கொண்டா சுல்தானுடைய துணையை நாடினான். அவனும் துணைக்கு வர இசைந்தான். அன்றியும், சீரங்கனே பெனு கொண்டாவுக்கு ஒரு படையை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தான். மேலும், அடில்ஷாவினுடைய இந்துத் தளபதிகளுள் ஒருவனைச் சீரங்கன் தன்பக்கம் இழுத்துக் கொண்டான். அந்த நடவடிக்கைகளின் விளைவாகச் சென்னப்பன் 1576 டிசம்பர் 21ஆம் நாள் அடில்ஷாவை வென்றான். அதனால், அடில்ஷா பிஜப்பூருக்குத் திரும்பிப்போய்விட்டான். ஆனால், அடுத்த மூன்றாண்டுகளுக்குள் இப்ராஹிம் குதுப்ஷா சீரங்கனோடு அண்மையில் செய்துகொண்ட உடன்படிக்கையைப் புறக் கணித்துவிட்டு விஜயநகரப் பேரரசின்மீது படையெடுத்தான். சீரங்கனை வெறுத்த பிரபுக்கள் சிலரோடு குதுப்ஷா ரகசிய ஒப்பந் தம் செய்திருக்கக்கூடும் என்று நினைக்க இடமிருக்கிறது. எனவே, அவர்கள் கொடுத்த தகவலின்பேரில் அவன் தக்க சமயம் பார்த்துப் பேரரசின்மீது தன் தாக்குதலைத் தொடங்கினான் என்று நாம் நினைக்கலாம். கோல்கொண்டா சுல்தானுடைய

சேனையில் பதவி வகித்த முரஹரிராவ் என்னும் மராட்டியப் பார்ப்பனன் அஹோபலத்திலுள்ள செல்வமிகுந்த நரசிம்மர் கோயிலைக் கொள்ளையடித்தது மட்டுமன்றி விஜயநகருக்குச் சொந்தமான பல ஊர்களையும் சூறையாடி அவற்றைக் கைப் பற்றிக்கொண்டான். ஆனால், அந்த ஊர்கள் எல்லாவற்றையும் விஜயநகரப் படைகள் பின்னர் மீட்டுக்கொண்டன.

கோல்கொண்டா சுல்தான், மீண்டும் படையெடுத்து, கொண்ட வீட்டுக்கு அருகிலிருந்த பகுதியைத் தாக்கினான். விஜயநகரப் படைகளுக்கும் கோல்கொண்டா படைகளுக்கும் வினுகொண்டா, கொண்டவீடு, சந்திரகிரி ஆகிய கோட்டைகளுக்கு அருகில் போர் நடந்தது. அந்தக் கோட்டைகள் அனைத்தையும் சீரங்கன் கைப்பற்றிக் கொண்டதாக அவனுடைய பொறிப்புகள் கூறுகின்றன. எனினும், உண்மையில் இப்ராஹிம்தான் பல வெற்றிகளைப் பெற்றுப் பல ஊர்களைப் பிடித்துக்கொண்டான். என்பது தெரிகிறது. அவ்வாறு அவன் அப்போது கைப்பற்றிய பகுதிகளை விஜயநகரம் பின்னர் மீட்கவேயில்லை. சீரங்கன் வெற்றி பெறாததற்குப் பல காரணங்கள் இருந்தன. பேரரசு நடைமுறையில் பல பகுதிகளாகப் பிரிந்து போயிருந்தது. அவனுடைய சகோதரர்கள் அவனுக்குத் துணைபுரியவில்லை. பிரபுக்களுக்குள் பல கட்சிகள் இருந்தன. அதனால், அவர்கள் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொண்டிருந்தனர். மேலும், அவர்களுள் பலர் முஸ்லிம் அரசர்களோடு ரகசியத் தொடர்பும் வைத்திருந்தனர். அதனால் பேரரசின் வலிமை குறைந்து போய் விட்டது. சீரங்கன் 1585-ல் பிள்ளையில்லாது இறந்துபோனான். அப்போது அவனுடைய கடைசித் தம்பி வேங்கடன் அரசனானான். திருமலையின் ஆட்சிக்காலத்தில் வேங்கடனுடைய தமையனான ராமன் சீரங்கப்பட்டணத்தின் அரசப்பிரதிநிதியாய் இருந்தான். என்பதை நாம் முன்பு கண்டோம். அவனுக்கு ஆண் மக்கள் இருவர் இருந்தார்கள். ஆனால், அவர்கள் இளவயதினராய் இருந்தார்கள். அப்போதிருந்த நிலையில் முதிர்ச்சியும் ஆற்றலும் உடைய ஒருவன் அரசனாக இருப்பது இன்றியமையாததாக இருந்தது. எனவே, பிரபுக்கள், ஜக்கராயன் என்பவன் தலைமையில் கூடி வேங்கடனையே அரசனாக்குவது என்று முடிவு செய்தார்கள். அவனும் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே திறமையாக ஆட்சி புரிந்தான். அவன் 1585-86-ல் தன்னுடைய முடிசூட்டு விழாவை நடத்தினான். அவன் ஆட்சி செய்த இருபத் தெட்டு ஆண்டுக் காலத்தில் பேரரசின் வலமும் வளமும் புத்துயிர் பெற்றன. விஜயநகரத்துக்குத் தீராத தொல்லையாயிருந்த தக்காண முஸ்லிம்களுடைய படையெடுப்புகளைத் தன் படை

வலிமையால் அவன் சமாளித்தான்; உள்நாட்டுக் கலகங்களை அடக்கி அமைதியை நிலைநாட்டினான்; நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கினான்.

சீரங்கன் காலத்தில் கோல்கொண்டா அரசன் கைப்பற்றிக் கொண்ட ஊர்களை மீட்கும் பணியில் வேங்கடன் முதலில் தன் கவனத்தைச் செலுத்தினான். கோல்கொண்டா அரசன் இப்ராஹிம் 1580ஆம் ஆண்டில் இறந்துபோன பிறகு அவனுடைய மகன் முகமது அலி குதுப்ஷா பட்டத்துக்கு வந்தான். வேங்கடன் குலி குதுப்ஷாவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு கொண்டவீட்டுப் பகுதியில் இருந்த மக்களைத் தூண்டிவிட்டான். எதிர் நடவடிக்கையில் ஈடுபட்ட குலி குதுப்ஷா, கர்நூல் மாவட்டம் முழுவதையும் கடப்பை, அனந்தப்பூர் மாவட்டங்களின் சில பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டு பெனுகொண்டாவையும் முற்றுகையிட்டான். அப்போது வேங்கடன் குலியுடன் சமாதானப் பேச்சைத் தொடங்கினான். தான் பெற்ற வெற்றிகளால் மனநிறைவடைந்த குலி பெனுகொண்டாவின் அண்மையிலிருந்த பகுதியினின்று திரும்பிப் போய்விட்டான். போரில் இவ்வாறு கிடைத்த தளர்வு நேரத்தை வேங்கடன் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டான். நீண்ட முற்றுகையைச் சமாளிப்பதற்கு ஏற்றவாறு பெனுகொண்டாவை ஆயத்தம் செய்துகொண்டபின், வேங்கடன் மீண்டும் முஸ்லிம்களை எதிர்த்தான். மீண்டும் பெனுகொண்டாவை முற்றுகையிட்டபோது குலி தன் பிழையை உணர்ந்தான். அவனை வேங்கடன் தோல்வியுறச்செய்தான். அப்போது மழை தொடங்கிவிட்டதால், கிருஷ்ணா நதியில் வெள்ளம் வந்து, தான் திரும்பிப் போவதற்குரிய வழியை அடைத்துவிடக்கூடும் என்பதை உணர்ந்த குலி, தான் புதிதாக வென்ற பகுதிகளை நிர்வாகம் செய்வதற்கான சில ஏற்பாடுகளை அவசரமாகச் செய்துவிட்டுத் திரும்பிப் போய்விட்டான். வேங்கடன் விரைவிலேயே குத்தியைக் கைப்பற்றிக்கொண்டு கண்டிக்கோட்டையை முற்றுகையிட்டான். அந்த முற்றுகையை விலக்குவதற்காகக் கொண்டவீட்டிலிருந்து வந்த ஒரு படையை வேங்கடன் வழி மறித்துத் தோல்வியுறச்செய்து சிதறியோடப் பண்ணினான். இன்னொரு கோல்கொண்டா படை ருஸ்தம்கான் என்பவனுடைய தலைமையில் வந்தது. அதனை வேங்கடன் பெண்ணையாற்றின் கரையில் வழிமறித்துத் தாக்கித் தோல்வியடையச்செய்து சின்னா பின்னமாக்கினான். கண்டிக்கோட்டை வீழ்ந்தது. அதன்பின் வேங்கடன் வேறுபல கோட்டைகளையும் கைப்பற்றிக்கொண்டு கோல்கொண்டாப் படைகளைக் கிருஷ்ணாநதிக்கப்பால் விரட்டி-

யடித்தான். பின்னர்க் குலி கிருஷ்ணு நதியையே விஜயநகர ராஜ்யத்தின் எல்லையாக ஏற்றுக்கொண்டான். இன்னுங் கிழக்கேயிருந்த உதயகிரியும் 1589ஆம் ஆண்டுக்குள் வேங்கடனுடைய ஆட்சிக்குள் வந்தது. ஆனுல், கொண்டவீட்டுப் பகுதி இன்னும் கோல்கொண்டாவின் ஆட்சியிலேயே இருந்தது. உள்நாட்டில் உண்டான குழப்பம் கோல்கொண்டாமீது மேலும் செல்ல முடியாமல் வேங்கடனைத் தடுத்தது.

வேங்கடன் அரசனுன பின்னரும் பிரபுக்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கொண்டது மட்டுமன்றி அவ்வப்போது வேங்கடனையும் எதிர்த்துக் கலகஞ்செய்தார்கள். அவர்களை அடக்குவதில் வேங்கடனுடைய நேரமும் ஆற்றலும் விரயமாயின. எடுத்துக்காட்டாக, தம்மைய கவுடன் கோலாரில் கலகஞ்செய்தான். அவனை வேங்கடன் விரைவில் அடக்கி அவனிடம் திறையும் வசூல் செய்தான். ஆனுல், அதைவிடப் பெரிய கலகமொன்று இப்போது கொடைமாவட்டங்கள் என வழங்கும் ராயலசீமையில் ஏற்பட்டது. அங்கே நந்தல கிருஷ்ணம ராயனும் இன்னுஞ் சில பிரபுக்களும் சேர்ந்து 1597–98-ல் வேங்கடனை எதிர்த்தார்கள். வேங்கடன் கிருஷ்ணம ராயனை ஜம்புலமடகு என்னுமிடத்தில் தோல்வியுறச்செய்தான். அதன் பின் கிருஷ்ணம ராயன் நந்தல (நந்தியால்) கோட்டையில் ஒளிந்து கொண்டான். வேங்கடன் அந்தக் கோட்டையை முற்றுகையிட்டான். முற்றுகை மூன்று மாதம் நீடித்தபின் கிருஷ்ணம ராயன் வேங்கடனுக்குப் பணிந்தான். அவனை வேங்கடன் சந்திரகிரிச் சிறையிலடைத்து விட்டான். கிருஷ்ணம ராயன் சாகும்வரையிலும் சிறையிலேயே இருந்தான். ராமராயனுடைய சகோதரனுன வேங்கடபதியின் பேரன் கண்டனவோலு கோபால ராஜு என்பவனும் இன்னும் சில பிரபுக்களும் செய்த கலகத்தைத் தன்னிடம் உண்மையாக நடந்துகொண்ட தளபதிகளின் உதவியோடு வேங்கடன் அடக்கினுன். பின்னர்க் கலகக்காரர்களின் உடைமைகளை எடுத்துத் தனக்கு உதவி செய்த தளபதிகளுக்கு வழங்கினுன். தமிழகத்திலும் வேங்கடனுக்கு எதிராகக் கலகங்கள் தோன்றின. வேலூரிலிருந்த லிங்கம நாயக்கன் அந்தக் கலகங்களுக்குத் தலைமை தாங்கினுன். பெரும்பேட்டுச் சீமை (செங்கல்பட்டு, மதுராந்தகம்) 'அமரத்தை' (ராணுவ மானியத்தை) வேங்கடன் வெலுகோட்டி கஸ்தூரி ரங்கப்பனுடைய மகன் யாச்சம நாயுடு என்பவனுக்குக் கொடுத்தான். லிங்கமனுடைய வலிமையைக் குறைப்பதற்கு அவன் உதவுவான் என்று வேங்கடன் எதிர்பார்த்தான். லிங்கம நாயக்கனுக்கு அடங்கிய நாகன் என்பவனுடைய ஆட்சியிலிருந்த

முக்கியமான ராணுவ நிலையமான உத்திரமேரூரை யாச்சம நாயுடு கைப்பற்றிக்கொண்டான். அப்போது லிங்கம நாயக்கன் தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்த கோட்டைத் தலைவர்கள் மட்டுமன்றி, செஞ்சி தஞ்சாவூர் மதுரை ஆகிய இடங்களிலிருந்த நாயக்கர்களையும் தன்னுடைய துணைக்கு அழைத்தான். மறுமலர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த பேரரசின் வலிமையைக் குறைப்பதற்கு அவர்களும் ஆர்வமாகவே இருந்தார்கள். அவர்களெல்லோரும் சேர்ந்து, ஒரு பெரும் படையைத் திரட்டி, நாகனுடைய மைத்துனனான தாவுல பாப்ப நாயுடு என்பவன் தலைமையில் 1601ஆம் ஆண்டில் உத்திரமேரூர்மீது செலுத்தினார்கள். ஆனால், யாச்சமன் அஞ்சவில்லை. தன்னுடைய தம்பி சிங்கனுடைய துணையோடு அவன் தன்னைத் தாக்க வந்த படையை எதிர்த்தான். பின்னர் நடந்த சண்டையில் பாப்பன் உயிரிழந்தான். ஏனையோருள் பலர் களத்திலிருந்து ஓடிவிட்டனர்; மற்றவர்கள் சிறைப்பட்டார்கள். இவ்வாறு தன் முயற்சியில் முழு வெற்றியடைந்த யாச்சமனை வேங்கடன் பெரிதும் பாராட்டினான். ஆனால், லிங்கனும் அவனுடைய கூட்டாளிகளும் தங்களுடைய முயற்சியைக் கைவிடவில்லை. வேங்கடன் லிங்கனை வேலூருக்கு அருகில் தோல்வியடையச் செய்த பின்னர்ச் சோனாட்டிற்குச் சென்று, அங்கு நடந்த சண்டையிலும் கலகக்காரர்களை வென்றுவிட்டு, காவிரியைக் கடந்து சென்று, மதுரை நாயக்கனுடைய நாடுகளைச் சூறையாடினான். இவ்வாறு வேங்கடன் தொடர்ந்து பெற்ற வெற்றிகளால் தமிழகத்தில் தோன்றிய கலகங்களின் அடிப்படை தகர்ந்தது. கலகக்காரர்கள் வேங்கடனுக்கு அடங்கிப் போனார்கள். ஆனால், லிங்கன்மட்டும் பணியவில்லை. வேலூர்க் கோட்டையின் வலிமையில் அவனுக்கு மிகுந்த நம்பிக்கையிருந்தது. சிறிது காலத்தில் அந்தக் கோட்டையையும் வேங்கடன் கைப்பற்றித் தன்னுடைய ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான். லிங்கன் தன்னுடைய பதவியையும் உடைமைகளையும் இழந்தான்.

1565ஆம் ஆண்டுக்குப்பின் பேரரசின் வட மாவட்டங்களின் மீது முஸ்லிம்கள் மீண்டும் மீண்டும் படையெடுத்ததால் அந்தப் பகுதியிலிருந்த கிராமங்களே ராஜ்யத்தின் ஏனைய பகுதிகளைவிட மிகுந்த சேதத்துக்கும் துன்பத்துக்கும் உள்ளாயின. அவை மீண்டும் வளம் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதில் வேங்கடன் தன் கவனத்தைப் பெரிதும் செலுத்தினான். தன்னுடைய நிலங்களிற் பயிரிட இசைந்த குடியானவர்களுக்கு அவன் பயிரிடும் உரிமை, செலுத்தவேண்டிய கடமை முதலிய

விஷயங்களில் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டான். பிரபுக்களும் அரசனைப் பின்பற்றினார்கள். அதனால், அவர்கள் விதித்த எளிய நிபந்தனைகளால் மனமுவந்த குடியானவர்கள் தங்களுடைய வழக்கமான தொழிலில் முன்போலவே ஈடுபட்டார்கள். வலிவிழந்து கொண்டிருந்த கிராம சபைகளுக்கு அவன் தன்னுடைய ஆதரவையளித்து அவை முன்போல் செயல்படுவதற்கு உதவினான். விருப்பு வெறுப்பின்றி நடுவுநிலையோடு நீதி வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அவன் எடுத்தான். வேங்கடன் அரசனானபோது பேரரசு சிதைந்துவிடும் நிலையில் இருந்தது. ஆனால், சுமார் முப்பதாண்டுகள் அவன் செய்த ஆட்சியின் பயனாக அந்த அழிவு நேராமல் காத்தான். அவன் 1614-ல் இறக்குமுன் தன் அண்ணன் மகன் சீரங்கனைத் தனக்குப்பின் அரசனாக நியமித்தான்.

வேங்கடனுடைய ஆட்சிக் காலத்தில்தான் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் தங்களுடைய வாணிக நிலையங்களை நிறுவினார்கள். 1605-ல் டச்சுக்காரர்கள் கோல்கொண்டா சுல்தானுடன் தொடர்பு கொண்டு நைஜாம்பட்டினத்திலும் மசூலிப்பட்டினத்திலும் தங்களுடைய வாணிக நிலையங்களை நிறுவினார்கள். 'நறுமணச் சரக்கை வழக்கமாக வாங்கிய மேனாட்டு மக்கள் மிகவும் விரும்பியவையும் பலகாலம் அவர்கள் வாங்கிப் பயன்படுத்திப் பழகியவையும் ஆகிய வாணிகப் பொருள்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டுமானால், கீழ்க் கடற்கரையில் இன்னுஞ் சற்றுத் தெற்கிலிருந்தவையும் இந்து ராஜ்யத்திற்குச் சொந்தமானவையும் ஆகிய சில இடங்களில் தங்கள் நிலையங்களை நிறுவவேண்டுமென்பதை 'டச்சுக்காரர்கள் விரைவில் உணர்ந்தார்கள். எனவே, தெக்ணபட்டினத்தில் (சென் டேவிட் கோட்டை) ஒரு வாணிக நிலையத்தை நிறுவுவதற்கு அவர்கள் 1608-ல் செஞ்சி நாயக்கனுடைய இசைவைப் பெற்றார்கள். இரண்டாண்டுகளுக்குப்பின் அவர்கள் பழவேற்காட்டில் ஒரு வாணிக நிலையத்தைத் தொடங்குவதற்கும் தனியுரிமையோடு அங்கு வாணிகம் செய்வதற்கும் வேங்கடன் இசைவு தந்தான். சேன்தோமிலிருந்த போர்ச்சுகீசியர்கள் பழவேற்காட்டைத் தாக்கக்கூடும் என்று டச்சுக்காரர்கள் அஞ்சினார்கள். அதனால், வேங்கடனுடைய பட்டத்தரசி பழவேற்காட்டில் ஒரு கோட்டையைக் கட்டத் தொடங்கினாள். அந்த வேலை விரைவில் முடியாததால் டச்சுக்காரர்களே தங்களுடைய செலவில் கோட்டையைக் கட்டிமுடித்துவிட்டார்கள். அது அவர்களுக்கு மிகவும் நல்லதாகப் போயிற்று. வேங்கடன் இறந்த பிறகு விஜயநகரப் பேரரசில் உள்நாட்டுக்

கலகங்களும் குழப்பமும் ஏற்பட்டன. அப்போது பழவேற்காட்டுக் கோட்டை டச்சுக்காரர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளித்தது. 1611-ல் ஆங்கிலேயர் பழவேற்காட்டில் இறங்குவதற்குச் செய்த முயற்சி தோல்வியடைந்தது. ஆனால், மிக விரைவில் அவர்கள் நைஜாம்பட்டினத்திலும் மசூலிப்பட்டினத்திலும் வாணிகம் தொடங்கினார்கள். வேங்கடன் இறக்கும் தருவாயிலிருந்தபோது அவர்கள் வேலூருடன் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் பயன் தரவில்லை. ஆனால், 1621-ல் அவர்கள் டச்சுக்காரர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் பயனாக அவர்களும் பழவேற்காட்டில் வாணிகம் செய்யலாம் என்று டச்சுக்காரர் ஏற்றுக்கொண்டனர். ஆனால், விரைவிலேயே ஆங்கிலேயர்கள் தங்கள் வாணிக நிலையத்தை முதலில் பழவேற்காட்டுக்குச் சிறிது வடக்கிலிருந்த ஆர்மகானுக்கு மாற்றி இறுதியில், 1639–40-ல், மதராசுக்கும் மாற்றிக்கொண்டார்கள். 1620-ல் டேனிஷ்காரர்கள் தரங்கம்பாடியில் தங்கள் வாணிக நிலையத்தை நிறுவினார்கள்.

இரண்டாம் வேங்கடனுக்குப் பல மனைவிகள் இருந்தார்கள். ஆனால் அவனுக்கு ஆண்பிள்ளை இல்லை. அவனுடைய மனைவிகளுள் ஒருத்தி தன்னுடைய சேடி ஒருத்தியின் பிள்ளையை இரவல் வாங்கி அதனைத் தன் பிள்ளை என்று சொல்லி வளர்க்கத் தொடங்கினாள். அந்த மோசடியை அறிந்த வேங்கடன் அவள் மீதிருந்த விருப்பத்தால் அதை அறிந்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால், நிலைமை மேலும் மோசமாவதைத் தடுக்கும் நோக்கத்தோடு அவன் தன் தமையன் ராமனுடைய மகன் சீரங்கனைத் தனக்குப் பின் அரசனாக நியமித்தான். ஆனால், வேங்கடனுடைய மகன் என்று சொல்லி அவனுடைய மனைவிகளுள் ஒருத்தி வளர்த்துவந்த பிள்ளையும் இருந்ததால் நிலைமை சிக்கலாகியது. சீரங்கனும் அவ்வளவாகத் திறமையும் விவேகமும் உடையவனல்லன். அவன் நிலங்களையும் பணத்தையும் அணிமணிகளையுந் தனக்குத் தருமாறு பிரபுக்களை வற்புறுத்தியதோடு விவேகமற்ற முறையில் அரசு அலுவலர்களையும் நியமித்தான். அதனால் பல பிரபுக்கள் அவனை வெறுத்தார்கள். பிரபுக்களுக்குள் இரு கட்சிகள் ஏற்பட்டன. வேங்கடனுடைய தனிப்பற்றுக்குப் பாத்திரமாயிருந்த மனைவியின் உடன்பிறந்தான் கொப்பூரி ஜக்கராயனைத் தலைவனாகக் கொண்ட கட்சி, வேங்கடனுடைய 'மகனை' ஆதரித்தது. இன்னொரு கட்சி வெலுகோட்டியாச்சம நாயக்கனுடைய தலைமையில் சீரங்கனை ஆதரித்தது. ஜக்கராயன் தன்னுடைய துணைவர்களான திம்மநாயக்கன், மகராஜன் ஆகியவர்களின் உதவியோடு சீரங்கனையும் அவ

னுடைய குடும்பத்தினர் அனைவரையும் பிடித்துச் சிறையில் அடைத்துவிட்டு, வேங்கடனுடைய 'மகனை' அரசனுக்கி, பிரபுக் களிற் பலரைத் தன்வசப்படுத்தி, அவனுக்கு அரச மரியாதை காட்டுமாறு செய்தான். ஆனால், யாச்சமன் ஜக்கராயனை எதிர்த்துநின்று தன் கட்சிக்குத் துணைதேடத்தொடங்கினன். ஒரு வண்ணனுடைய உதவியால் அவன் சீரங்கனுடைய இரண்டாம் மகன் ராமனைச் சிறையிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்திக் கொண்டு வந்தான். சுரங்கம் ஒன்றின் வழியாகச் சீரங்கனைக் கடத்திக்கொண்டு வருவதற்காக அவன் செய்த முயற்சி தோற்றது. அதன்பின் சீரங்கன் மேலுங் கடுமையான காவலில் வைக்கப்பட்டான். ஜக்கராயன் இல்லாத நேரத்தில் வேலூர்க் கோட்டையிலிருந்த காவலர்களைக் கொலைசெய்து விடுமாறு கோட்டைத் தலைவனுயிருந்த இதி ஒபலேசனை யாச்சமன் தூண்டி விட்டான். அவனும் அவ்வாறே செய்தான். காவலர் கொலை யுண்ட செய்தியைக் கேட்டவுடன் யாச்சமன் வந்து கோட்டை யைக் கைப்பற்றிக் கொள்வது என்பது அவர்கள் செய்து கொண்ட ஏற்பாடாக இருந்தது. ஆனால், அந்தச் செய்தியை முதலிற் கேள்விப்பட்ட ஜக்கராயன் வேலூருக்கு வேகமாய்த் திரும்பி வந்தான். அதனால் யாச்சமனுடைய திட்டம் நிறைவேற வில்லை. அதன்பின், சீரங்கனையும் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் கொன்றுவிடுவதுதான், சூழ்ச்சிகளைத் தவிர்ப் பதற்கு ஒரே வழியென்று நினைத்த ஜக்கராயன் அவ்வாறே செய்து விட்டான். சீரங்கன் பட்டத்துக்கு வந்து அப்போது நான்கு மாதங்களே ஆகியிருந்தன.

அந்தப் படுகொலையைக் கேள்விப்பட்ட மக்கள் பேரதிர்ச்சியும் வெறுப்பும் அடைந்தார்கள். அதனால் அவர்கள் ஜக்கராயனையும் அவனுடைய துணைவர்களையும் மிகப் பெரிதும் வெறுத்தார்கள். சீரங்கனுடைய குடும்பத்தில் தப்பிப் பிழைத்தவன் ராமதேவன் ஒருவன்தான். மக்கள் அவனிடம் மிகுந்த பரிவு காட்டினார்கள். தன்னுடைய முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளால் ராம தேவனுடைய உயிரைக் காத்த யாச்சமன் அவனையே அரசன் என்று விளம்பரப்படுத்தினன். அதன்பின் ஒரு நீண்ட உள் நாட்டுப்போர் தொடங்கியது. அது பேரரசின் எல்லாப் பகுதி களிலும் பரவியது. யாச்சமன் ஒரு சண்டையில் ஜக்கராயனைத் தோல்வியுறச் செய்தான். அதனால் அவன் நாட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போனன். நெல்லூர் மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியில் அவனுக்குச் சொந்தமாக இருந்த கொப்பூரி நிலங்களையும் செல்வங்களையும் யாச்சமன் கைப்பற்றிக் கொண்டான். ஆனால் ஜக்கன் சளைக்கவில்லை. மதுரை

நாயக்கன் முத்துவீரப்பன், செஞ்சி நாயக்கன் கிருஷ்ணப்பன் ஆகியவர்களின் துணையுடன் ஜக்கராயன் மீண்டும் யாச்சமனை எதிர்த்தான். யாச்சமன் தஞ்சாவூருக்குச் சென்று ரகுநாத நாயக்கனுடைய துணையைப் பெற்றான். ஜக்கராயனும் அவர்களுடைய துணைவர்களும் தங்கள் படைகளுடன் திருச்சிக்கருகில் திரண்டார்கள். யாச்சமன் வேலூரிலிருந்து தன்னுடைய படையை நடத்திச் சென்றான். வழியில் ரகுநாத நாயக்கன் அவனுடன் சேர்ந்துகொண்டான். கல்லணைக் கருகிலுள்ள தோப்பூர் என்னுமிடத்தில் இரு திறத்தாரும் கைகலந்தனர். ஜக்கராயனும் அவனுடைய துணைவர் பலரும் சண்டையில் உயிரிழந்தார்கள். அவனுடைய படைகள் சிதறியோடின. யாச்சமன் முழுவெற்றி பெற்றான் (1616). இத்தனை தொல்லைகளுக்கும் காரணமாயிருந்த வேங்கடனுடைய 'மகன்' சிறைபிடிக்கப்பட்டான். கிருஷ்ணப்ப நாயக்கன் செஞ்சியைத் தவிர ஏனைய கோட்டைகளை இழந்தான். அவற்றை மீட்பதற்காக அவன் செய்த முயற்சி இன்னுமொரு தோல்வியில் முடிந்தது. அவனும் சிறைப்பட்டான். ஆனால், அதனுடன் உள்நாட்டுப் போர் முடியவில்லை. ஜக்கராயனுடைய தம்பி எதிராஜன் முயற்சியும் பிரபுக்களுள் ஏற்பட்ட பூசலும் போர் நீடிப்பதற்குக் காரணமாயின. இறுதியில், 1619-ல் வேங்கடனுடைய 'மகன்' இறந்தான். அதன்பின் ராமதேவன் எதிராஜனுடன் சமாதானஞ் செய்துகொண்டு அவனுடைய மகளையும் மணந்துகொண்டான். அதனால் ராமதேவன் கர்நாடகத்தின் அரசன் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டான். ஆனால், மதுரை நாயக்கன் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எதிராஜன் தன் மருமகனுக்கு முழு ஆதரவும் தந்தான். அதுபோலவே, ரகுநாத நாயக்கனும் அவனுக்குத் தன்னுடைய ஆதரவைத் தந்து, விடாப்பிடியாக அவனை எதிர்த்த தலைவர்கள் அனைவரையும் அடக்கி, பேரரசின் மேலாதிக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தான். ஆனால், ராமதேவன் எதிராஜனுடன் சமாதானஞ் செய்துகொண்டது யாச்சமனுக்குப் பிடிக்கவில்லை. எதிராஜனுக்குச் சொந்தமானதும் பழவேற்காட்டை உள்ளடக்கியதுமாகிய கொப்பூரி நாடு முழுவதையும் கைப்பற்றிக் கொள்வதற்கு யாச்சமன் திட்டமிட்டிருந்தான். ஆங்காங்கே நடந்த பல சண்டைகளுக்குப்பின் பேரரசின் எஞ்சியிருந்த பகுதிகளில் ராமதேவனுடைய மேலாதிக்கம் 1629ஆம் ஆண்டுக்குள் ஒருவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது. செஞ்சி நாயக்கனும் தன்னுடைய பகையை மறந்து, ராமதேவனுடைய மேலாதிக் கத்தை ஏற்றுக்கொண்டு, அவனுடைய நண்பனானான். யாச்சமனுடைய துணைவர்களும் அடக்கப்பட்டனர். பழவேற்காடும்

அதற்கருகிலிருந்த பகுதிகளும் மீண்டும் எதிராஜன் உடைமை யாகிப் பேரரசின் எல்லைக்குள் வந்தன. இவ்வாறு பதினைந்து ஆண்டுகள் நடந்த பூசல்களுக்குப் பின் ராமதேவன் ஓரளவு வெற்றிபெற்றான்.

மேலே கண்ட உள்நாட்டுப் போர் பிஜப்பூருக்கு நல்ல வாய்ப்பாக முடிந்தது. பிஜப்பூர் சுல்தான் எவ்வளவோ காலமாக மேற்குத் தெலுங்கு நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தான். அந்த ஆசை கடைசியில் நிறைவேறியது. 1619-20-ல் அவன் அப்துல் வஹாப்கான் என்பவன் தலைமையில் ஒரு படையை அனுப்பிக் கர்நூலைத் தாக்கச் செய்தான். கர்நூல் கோட்டைத் தலைவன் கோபாலராஜன் பிஜப்பூர்ப் படைகளைக் கடுமையாக எதிர்த்தான். அவனுக்குக் கோல்கொண்டாவும் துணைபுரிந்தது, சண்டையில் தோற்றுப்போன அப்துல் வஹாப்கான் கோபாலராஜனுடன் சமாதானஞ் செய்துகொண்டு திரும்பிப்போனான். ஆனால், அதனால் நிரந்தர அமைதி ஏற்படவில்லை. அவன் 1624-ல் மீண்டும் படையெடுத்துவந்து கர்நூலைத் தாக்கினான். கர்நூலின் அண்மையிலிருந்த நண்பர்கள் கோபாலராஜனுக்குத் துணை புரிந்தார்கள். எனினும் பிஜப்பூர்ப் படைகள் வெற்றிபெற்றன. கோபாலராஜன் கோட்டையைக் கைவிட்டுவிட்டு ஓடிப்போனான். உள்நாட்டுப் போரினால் தொல்லைக்குட்பட்டிருந்த ராமதேவனால் கோபாலராஜனுக்குத் துணைபுரிய முடியவில்லை. மேலும், இருபத் தெட்டே வயதான ராமதேவன் 1630-ல் இறந்து போனான். அதனால், கர்நூல் பிஜப்பூரின் ஆட்சிக்குள் நிரந்தரமாகச் சென்று விட்டது.

ராமதேவனுக்கு மகனுமில்லை; உடன்பிறந்தாரு மில்லை. எனவே, அவன் 1565ஆம் ஆண்டில் தலைக்கோட்டைச் சண்டையில் உயிர்துறந்த ராமராயனுடைய பேரன் பெத்த வேங்கடனைத் தனக்குப்பின் அரசனென்று நியமித்திருந்தான். ஆனால், ராம தேவனுடைய பெரியப்பன் திம்மராஜன் அரசுரிமை தனக்கே சேரவேண்டுமென்று கூறி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான். அதனால், மூன்றும் வேங்கடன் தன் சொந்த ஊரான ஆனகொண்டியை விட்டு வெளியே வரமுடியவில்லை. செஞ்சியும், தஞ்சாவூரும் மதுரையும் வேங்கடனை ஆதரித்தன. திம்மனுக்கு யாரும் துணை செய்யவில்லை. அவன் அடாவழியில் அரசுரிமை யைப் பறித்துக் கொண்டவன் என்று மக்கள் பொதுவாகக் கருதினார்கள். அப்படியிருந்தும் ராஜ்யத்துக்கு அவனால் தொல்லை ஏற்படத்தான் செய்தது. அதனால், தோன்றிய உள்

நாட்டுப் போர் 1635-ல் அவன் இறக்கும் வரையிலும் நடந்தது. தொடக்கத்தில் திம்மன் சில வெற்றிகளைப் பெற்ருன். ஆனுல், மூன்ரும் வேங்கடனுடைய தம்பியாகிய சென்ன வேங்கடனுடைய மகன் சீரங்கன் தன்னுடைய பெரியப்பன் சார்பில் போரில் இறங்கினுன். அவனுக்குப் பழவேற்காட்டிலிருந்த டச்சுக்காரர் களும் துணை புரிந்தார்கள். சண்டையில் தோற்றுப்போன திம்மன் வேங்கடனுடைய உரிமையை ஏற்றுக்கொண்டான். ஆனுல், அவன் வென்ற இடங்களில் சிலவற்றை அவனே வைத்துக்கொள்வதற்கு இசைவுபெற்ருன். அதன்பின்னும் அவன் தொல்லை கொடுத்ததால், செஞ்சி நாயக்கன் அவனை 1635-ல் போரில் வென்று கொன்றுவிட்டான். அதன்பின் நாட்டில் அமைதி ஏற்பட்டது. வேங்கடன் வேலூருக்குச் சென்று அங்கேயே குடியேறிவிட்டான். இதற்கிடையில் பிஜப்பூர் சுல்தான் பெனுகொண்டாவைத் தாக்கினுன். அதனைக் காக்கும் பொறுப்பை வேங்கடன் கொண்டி நாயக்கனிடம் ஒப்படைத்தான். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் பேரரசு சிதைந்து போகும் வரையிலும் கொண்டி நாயக்கன் பெனுகொண்டாவைப் பகைவர் கைப்பற்ருதவாறு பார்த்துக்கொண்டான்.

செஞ்சி நாயக்கனிடம் வேங்கடன் தனிப்பற்று வைத்திருந்தா னென்று நினைத்த தஞ்சாவூர் மதுரை நாயக்கர்கள் வேங்கடனைச் சிறை பிடிப்பதற்குச் சூழ்ச்சி செய்தார்கள். அவர்களுடைய சதியாலோசனை வெளிப்பட்டு விட்டதால் போர் மூண்டது. ஆனுல், விரைவிலேயே ஏதோ ஒரு வகையான சமாதானம் ஏற்பட்டது. தொடக்கத்தில் தன் பெரியப்பனுக்குப் பெரிதும் துணைசெய்த சீரங்கன் என்ன காரணத்தாலோ அவனுக்கு எதிராகப் பிஜப்பூர் சுல்தானுடன் சேர்ந்துகொண்டான். அதனுடன் நில்லாமல் அவன் முதலில் 1638ஆம் ஆண்டிலும், பின்னர் 1641ஆம் ஆண்டிலும் தன்னுடைய பெரியப்பன்மீது படையெடுக்குமாறு பிஜப்பூர் சுல்தானைத் தூண்டிவிட்டான். முதற் படையெடுப்பின் போது பிஜப்பூர்ப் படைகள் பெங்க ளூரை முற்றுகையிட்டன. வேங்கடன் வேறு வழியில்லாமல் ஒரு பெருந் தொகையைப் பிஜப்பூர் சுல்தானுக்குக் கொடுத்து 1639ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சமாதானஞ் செய்து கொண்டான். அந்த ஆண்டின் இறுதியில் தென்னகத்து நாயக் கர்கள் அனுப்பிய படைகளின் துணையோடு வேங்கடன் முஸ்லிம் படைகளை எதிர்த்து ஓரளவு வெற்றியடைந்தான். அதனுல் முஸ்லிம்கள் சிறிது காலம் அவனுடைய ராஜ்யத்தைத் தாக்குவதை நிறுத்தி வைத்தார்கள். ஆனுல், அவர்கள் மீண்டும் 1641-ல் படையெடுத்தார்கள். ரந்துலாக்கான் என்பவன்

தலைமையில் வந்த அந்தப் படையுடன் சீரங்கனும் வந்தான். வழியிலிருந்த சில கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு அவர்கள் வேலூரின்மீது தங்கள் படைகளைச் செலுத்தி, அங்கிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் தங்கள் பாசறையை அமைத்துக்கொண்டார்கள். அப்போதும் தென்னகத்து நாயக்கர்கள் வேங்கடனுக்குத் துணைபுரிந்ததால் வேலூர் பகைவர் கையில் சிக்காமல் தப்பியது.

கர்நாடகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்த கோல்கொண்டா சுல்தான் ஒரு படையை அனுப்பி, கீழைக் கடற்கரையில் இந்து ராஜ்யத்திற்குச் சொந்தமான எத்தனை இடங்களைப் பிடிக்க முடியுமோ அத்தனை இடங்களையும் பிடிக்குமாறு கட்டளையிட்டான். அந்தச் சமயத்தில் விஜயநகரப் பேரரசின் ஆயுள் முடிந்துகொண்டிருந்தது. அதன் இறுதிக்காலம் நெருங்கிவிட்டதென்பதை ஏறக்குறைய எல்லோருமே உணர்ந்தனர். நெல்லூரின் தென்கோடியில் ஆர்மகானுக்குத் தலைவனுயிருந்த வெலுகோட்டித் திம்மனும், மதராஸ், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களுக்குத் தலைவனுயிருந்த தாமெர்ல வேங்கடனும் கோல்கொண்டாப் படையை எதிர்த்தார்கள். ஆனுல், அவர்களால் கோல்கொண்டா படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. மூன்றும் வேங்கடன் தன்னுடைய தலைநகராகிய வேலூரிலிருந்து ஓடிச் சித்தூர் மாவட்டத்தில் நாராயணவரத்துக்கு அருகிலுள்ள காட்டில் ஒளிந்து கொண்டான். அங்கு அவன் 1641 அக்டோபர் 10ஆம் நாளன்று இரங்கத்தக்க நிலையில், உதவுவார் யாருமின்றி இறந்துபோனுன்.

மூன்றும் வேங்கடனுக்குக் குழந்தையில்லாததால் அவனுக்குத் துரோகம் செய்த அவனுடைய தம்பி மகன் சீரங்கனே அரசனுனுன். வேங்கடன் மலைக்காட்டில் மரணப் படுக்கையில் இருக்கிறுன் என்று கேள்விப்பட்ட சீரங்கன் பிஜப்பூர்த் தளபதியிடமிருந்து நழுவித் தன்னுடைய முன்னோர்களின் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காக்கப் போவதாக விளம்பரப்படுத்திக்கொண்டான். பின்னர், 1642 அக்டோபர் 29ஆம் நாள், அவன் அரச பதவியில் தன்னை அமர்த்திக் கொண்டான். ஆனுல், எதிர்க்கட்சியில் சேர்ந்துகொண்டு அவனிழைத்த தீமையை, அவனே அரசன் ஆனபின் சமாளிப்பது எளிதாக இல்லை. தாமெர்ல வேங்கடன், செஞ்சிக் கிருஷ்ணப்ப நாயக்கன் போன்ற பிரபுக்கள் பலர் அவனை எதிர்த்தார்கள். ஆனுல், முஸ்லிம் அரசர்க்கிடையில் இருந்த பொருமை சிறிது காலம் அவனுக்கு உதவியாக இருந்தது. அதனுல், அவன் பிஜப்பூர்

சுல்தானுடைய உதவியோடு, 1644 ஜனவரியில், கோல்கொண்டா படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து, அவை உதயகிரியைத் தாண்டி வாராதவாறு செய்தான். அந்த வெற்றியின் விளைவாக அவன் சிறிது வலிமை பெற்றுஞுதலால், தென்னக நாயக்கர்களிடம் பெருந் தொகைகளைக் கேட்கவும், அவற்றை வசூலிக்கவும் அவனால் முடிந்தது. அவ்வாறு வசூலான பணத்தைத் தனக்கு உதவிசெய்த பிஜப்பூர் சுல்தானுக்குக் கைம்மாருக அவன் கொடுத்தான். மதுரை நாயக்கனும் செஞ்சி நாயக்கனும் மீண்டும் கலகஞ் செய்தார்கள். இன்னுமொரு கோல்கொண்டா படை பழவேற்காடு வரையில் எதிர்ப்பின்றி முன்னேறியது. சீரங்கனால் அதைத் தடுக்க இயலவில்லை. ஆனால், பழவேற்காட்டுக் கோட்டையிலிருந்த டச்சுத் தலைவன் அப் படையை வென்று துரத்தினான். செஞ்சி நாயக்கன் கோல்கொண்டா படையுடன் சேர்ந்து கொள்ளக்கூடும் என்று அஞ்சிய சீரங்கன் அவனோடு சமாதானஞ் செய்துகொண்டான். பின்னர், அவன் கோல்கொண்டா படையை எதிர்த்து வெற்றிபெற்று அதனை நெல்லூர் மாவட்டத்தின் வடக்கிலுள்ள கண்டுக்கூர் வரையிலும் துரத்திக் கொண்டு சென்றான். ஆனால், பிஜப்பூரும் கோல்கொண்டாவும் தமக்குள் உடன்படிக்கை செய்துகொண்டதால் அந்த இரு ராஜ்யங்களின் படைகளும் ஒன்றுகூடின. அவற்றின் கூட்டு வலிமையை எதிர்த்து நிற்க இயலாத சீரங்கன் தன் படைகளுடன் பின்வாங்கினான். அதன்பின், கோல்கொண்டாவின் தளபதி மீர் ஜும்லா, கர்நூல் வழியாக வேலூரின்மீது படையெடுப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்தான். அந்த நேரத்தில் கோல்கொண்டா சுல்தான் போரை நிறுத்துமாறு மீர் ஜும்லாவுக்குத் திடீரென்று கட்டளையிட்டான். மேலும், அவன் பிஜப்பூர் சுல்தானுக்கு இழப்பீடும் கொடுத்தான். அவ்வாறு அவன் நடந்துகொண்டதற்கு அவன் சீரங்கனோடு மறைவாகச் செய்துகொண்ட ஏதோ ஓர் உடன்படிக்கைதான் காரணமென்று நாம் கருதலாம். அதனால், முஸ்லிம்கள் படையெடுக்கக்கூடும் என்ற அச்சத்திலிருந்து சீரங்கனுக்குச் சிறிது காலம் விடுதலைக் கிடைத்தது. ஆனால், விரைவிலேயே தென்னகத்து நாயக்கர்கள் மதுரைத் திருமலை நாயக்கனுடைய தலைமையில் ஒன்றுகூடிக் கலகஞ் செய்து, பிஜப்பூர் சுல்தானுடைய உதவியை நாடினார்கள். அவனும் வேலூர்மீது தன் படையொன்றை முஸ்தாபாக்கான் தலைமையில் அனுப்பினான். தென்னகத்து நாயக்கர்கள் கலகத்தை அடக்குவதற்காகத் தன் படையுடன் சென்றிருந்த சீரங்கன் தன்னுடைய தலைநகரைக் காப்பதற்காகத் திரும்பி வந்தான். அதே சமயத்தில் கோல்கொண்டா படைகளும் வினுகொண்டா, உதயகிரி ஆகிய

கோட்டைகளின்மீது பாய்ந்தன. இவ்வாறு பல திசைகளி லிருந்தும் வந்த அபாயத்தைச் சமாளிக்க இயலாத சீரங்கன் இந்து ராஜ்யத்தையும் மதத்தையும் கோயில்களையும் பார்ப்பனர்களையும் அழிவினின்று காப்பதற்குத் தனக்கு உதவுமாறு தன்னுடைய குடிமக்களைக் கடைசியாக வேண்டிக்கொண்டான். அந்த வேண்டுகோள் தென்னகத்து நாயக்கர்களின் காதுகளில் விழுந்த தாகவே தெரியவில்லை. மேலும், கர்நாடகத்தைக் கைப்பற்றி அதனைத் தமக்குள் பங்கிட்டுக் கொள்ளுமாறு கோல்கொண்டா வையும் பிஜப்பூரையும் முகலாயப் பேரரசன் கேட்டுக் கொண் டிருந்தான். 1645 டிசம்பரில் தன்னுடைய மேலாதிக்கத்திலிருந்த நாயக்கர்களிடமே தோல்வியடைந்த சீரங்கன் வேலூருக்குத் திரும்பிச் சென்றான். தளபதிகள் தங்களுக்குள் ஏற்பட்ட வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பிஜப்பூருக்குப் போய்விட்டதால் பிஜப்பூர்ப் படையெடுப்பினால் ஏற்பட்ட துன்பம் சிறிது காலத்திற்குக் குறைந்தது. ஆனால் கோல் கொண்டா படைகள் சும்மா இருக்கவில்லை. மீர்ஜம்லாவின் தலை மையில் முன்னேறிய கோல்கொண்டா போர்வீரர்கள் நெல்லூர், கடப்பை ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளைப் பிடித்துக் கொண்டார்கள். அதற்குள் பிஜப்பூரிலிருந்த முஸ்தாபாக்கானும் திரும்பிவந்து வேலூரைத் தாக்குவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போதுதான் இந்துக்கள் அனைவருக்குமே ஆபத்து நேரப்போகிறதென்பதை நாயக்கர்கள் உணர்ந்தார்கள். அப்படியும், மதுரை நாயக்கன் மற்ற நாயக்கர்களுடன் சேராமல் ஒதுங்கியே நின்றான். வேலூரைக் காத்து நின்ற போர்வீரர் களைப் பேணுவதற்குத் தேவையான பணம் கையில் இல்லாமற் போனதாலும் பணம் திரட்டுவதற்கு வேறு எந்த வழியும் இல்லாமற் போனதாலும் சீரங்கன் வேலூர்க் கோட்டையி லிருந்த மகளிரின் நகைகளையும் திருப்பதிக் கோயிலின் செல்வங் களையும் பயன்படுத்தினான். வேலூர்க் கோட்டைக்கு வெளியில் நடந்த ஒரு சண்டையில் சீரங்கன் ஒரு சிறு வெற்றி பெற்றான். ஆனால், அவனுடைய துணைவர்கள் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொண்டு அவனைக் கைவிட்டுவிட்டுக் கோட்டைக்குள் சென்று விட்டார்கள். அதனால், தான் பெற்ற சிறு வெற்றியால் சீரங்கன் பெரும்பயன் ஒன்றும் அடையவில்லை. அதன்பின் விரிஞ்சிபுரத்தில் 1646 ஏப்ரல் 4ஆம் நாள் ஒரு பெருஞ் சண்டை நடந்தது. அதில் மைசூர், மதுரை, தஞ்சாவூர் ஆகியவற்றின் ஆட்சியாளர்கள் சீரங்கனுக்குத் துணை செய்தார்களெனினும் பிஜப்பூர்ப் படைகளே வெற்றி பெற்றன. அதன்பின் முஸ்தாபாக்கான் வேலூரை முற்றுகையிட்டான். அதற்குள் கோல்கொண்டா படைகள் கீழைக்கடற்கரையில் பழவேற்காடுவரையி லிருந்த

எல்லா ஊர்களையும் பிடித்துக்கொண்டனர். அப்பொழுதும் டச்சுக்காரர் கோல்கொண்டாவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. இறுதியில், முஸ்லிம் படைகளை மேலும் எதிர்த்து நிற்க முடியாதென்பதை உணர்ந்த சீரங்கன் வேலூரை விட்டுவிட்டுத் தஞ்சாவூருக்குப் போய் அங்கு அடைக்கலம் புகுந்தான். 1652ஆம் ஆண்டுக்குள் கர்நாடகம் முழுவதும் முஸ்லிம் ஆட்சிக்குள் சென்றுவிட்டது. மதுரையும் மைசூரும் அதனைத் தடுக்க இயலவில்லை. 1649-ல் தஞ்சாவூரும் பிஜப்பூருக்குப் பணிந்தது. (அதற்குச் சிறிது முன்னரே செஞ்சி பணிந்து விட்டது.) அதன்பின் சீரங்கன் மைசூரில் அடைக்கலம் புகுந்து, வேலூரில் பெயரளவில் அரசு வீற்றிருந்தான். கேலடித் தலைவர் களின் துணையோடு வேலூரை மீட்க வேண்டுமென்று அவன் எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால், அந்த எண்ணம் வெறும் பகற்கனவாக முடிந்தது. இறுதியில், சுமார் 1672-ல், சாவு வந்து அவனுடைய துன்பத்தினின்று அவனுக்கு விடுதலை யளித்தது.

கர்நாடகத்தின் வீழ்ச்சி இந்து ஆட்சியின் வீழ்ச்சியாகிவிட்டது என்று கூற முடியாது. பிஜப்பூர்ப் படைகள் கர்நாடகத்தைக் கைப்பற்றி, அதனைச் சூறையாடி, சீரங்கனை மைசூரில் அடைக் கலம் புகுமாறு செய்துகொண்டிருந்த அதே சமயத்தில், சிவாஜி தன்னுடைய வெற்றிமிகுந்த வாழ்க்கையைத் தொடங்கிக் கொண்டிருந்தான். அவன் 1674-ல் சத்திரபதி என்று முடிசூடிக் கொண்டான். அதற்கு ஈராண்டுக்கு முன்வரையிலும் சீரங்கன் உயிரோடிருந்தான். மதுரையும் மைசூரும் சுயேச்சையுடைய இந்து ராஜ்யங்களாகவே பதினேழாம் நூற்றாண்டின் இறுதி வரையில் மட்டுமன்றிப் பதினெட்டாம் நூற்றாண்டையும் தாண்டி நின்றன.

எனினும், தோற்றத்திலிருந்து மூந்நூறாண்டுகளுக்கு மேல் நிலைத்து நின்ற கர்நாடக-விஜயநகரப் பேரரசு பதினேழாம் நூற்றாண்டின் இடையில் அழிந்துவிட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அந்த நீண்டகாலம் முழுவதிலும் அது தன்னுடைய வட எல்லையிலிருந்த முஸ்லிம் ராஜ்யங்களோடு தொடர்ந்து போர் செய்து கொண்டிருந்தது; மதுரை சுல்தானி யத்தை அழித்தது; தென்னகத்தின்மீது முஸ்லிம்கள் படை யெடுக்காமல் தடுத்தது. இந்துக்கள் சிலர் முஸ்லிம் அரசர் களுடைய அலுவலர்களாய் இருந்தார்களென்பதும் முஸ்லிம்கள் சிலர் இந்துப் படையில் போர்வீரர்களாய்ப் பணியாற்றினார்க ளென்பதும் உண்மையே. அன்றியும், இந்து அரசர்களுக்கும் முஸ்லிம் அரசர்களுக்கும் இடையில் சில அரசியல் கூட்டணிகள்

ஏற்பட்டன என்பதும் இந்து முஸ்லிம் அரச மரபுகளுக்கிடையில் பல திருமண உறவுகள் ஏற்பட்டன என்பதும் உண்மையே. ஆனாலும், பாரத நாட்டின் பரம்பரைப் பண்பாட்டுக்கும் அமைப்புகளுக்கும் கடைசிப் புகலிடமாயிருந்த தென்னிந்தியா முஸ்லிம்களின் கையில் விழாமல் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு நிறுவப்பட்ட விஜயநகரப் பேரரசின் வரலாற்று அடிப்படை இயல்பை அந்த அரசியல் கூட்டணிகளும் திருமண உறவுகளும் மாற்றிவிடவில்லை யென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். சாயனர் தலைமையில் அமைந்த அறிஞர் குழுவினர் எழுதிய வேத விளக்கவுரையும் தென்னிந்தியாவிலிருந்த முக்கியமான கோயில்களுள் ஏறக்குறைய எல்லாவற்றிலுமே விஜயநகரப் பேரரசர்கள் கட்டிய மனங்கவரும் புதிய கட்டடங்களும் அந்த இந்துப் பேரரசின் பெருமைக்குரிய நினைவுச் சின்னங்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. போர்ச்சுகீசியர்களும் ஏசு சங்கப் பாதிரிமார்களும் தென்னிந்திய மக்களைக் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்ற முயன்றார்கள். அதனால் அவர்கள் விஜயநகரப் பேரரசர்கள் அவர்களுடைய மேலாதிக்கத்திலிருந்த சிற்றரசர்கள் ஆகியவர்களுடைய வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார்கள். அவ்வரசர்களுடைய எதிர்ப்பின் விளைவாகக் கிறிஸ்துவ மதம் அதிகமாகப் பரவாமல் நின்றுவிட்டது.

இப்போது பேரரசின் ஆட்சியில் நடைமுறையிலிருந்த அரசியல், நிர்வாக, ராணுவ முறைகளைப் பற்றிச் சில செய்திகளைக் கூறிய பின்னர் இந்த அதிகாரத்தை முடித்துக் கொள்ளலாம். அரசுரிமை கொள்கையளவில் பரம்பரையாக வந்தது என்பது உண்மையே. ஆனால், பேரரசு கடுமையான பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருந்தது. ஒரு பக்கத்தில் முஸ்லிம் ராஜ்யங்களின் பகைமையாலும் இன்னொரு பக்கத்தில் சிற்றரசர்களுடைய முரண்பாட்டாலும் தோன்றிய இன்னல்களைச் சமாளிப்பதற்கு அது எந்த நேரத்திலும் ஆயத்த நிலையில் இருக்கவேண்டும். அதனால், அந்தப் பேரரசின் அரியணையில் அமர விரும்பியவர்கள் உண்மையிலேயே அரச தந்திரத் திறனும் போர்த் திறனும் மிகுதியாகப் பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்பது இன்றியமையாத தாயிற்று. எனவே, திறமையற்ற அரசர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டோ சிறையில் அடைத்துவிட்டோ, அதிகார விருப்பமும் திறமையும் வாய்ந்த அமைச்சர்கள் தாங்களே அரியணையேறியதும், அடாவழி அரசுரிமைப் பறிப்பால் மும்முறை புதிய அரசு மரபுகள் ஆட்சியைக் கைப்பற்றியதும், அந்தச் சமயங்களில் பிரபுக்கள்

இரு கட்சியாகப் பிரிந்து அரசுரிமைக்குப் போட்டியிட்டவர்களை ஆதரித்ததும் நமக்கு வியப்பைத் தரவில்லை. ஆனால், விஜய நகரப் பேரரசில் உண்டான கட்சிப் பூசல்களால் விளைந்த வெறுப்பும் பகையுணர்ச்சியும் பாமினி ராஜ்யத்திலும் அதற்குப் பின் வந்த ஐந்து முஸ்லிம் ராஜ்யங்களிலும் உண்டான வெறுப்பை யும் பகையுணர்ச்சியையும் போல அவ்வளவு கடுமையானவை அல்ல என்று பொதுவாகக் கூறலாம். ஒரு சிலரைத் தவிர ஏனைய தலைவர்களெல்லாரும் பேரரசில் அவ்வப்போது தோன்றிய உள் நாட்டு அரசியல் நிலை தங்களுக்குப் பிடிக்காமலிருந்தாலும், கலகத்தில் ஈடுபட்டு அந் நிலையை மாற்ற முயல்வதைவிட, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் அதனை ஏற்றுக்கொள்வது நல்லது என்று கருதி அதன்படியே இயன்ற வரையில் நடந்தார்கள்.

அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்கென அமைச்சரவை ஒன்றிருந்தது. அரசனும் அந்த அவையை அடிக்கடி கலந் தாலோசித்தான். எனினும், அமைச்சரின் ஆலோசனையை அவன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கட்டாயமில்லை. தன்னுடைய விருப்பம்போலும் தனக்கு மிகவும் பிடித்த தனி மனிதர்களுடைய ஆலோசனையின்படியும் நடப்பதற்கு அவனுக்கு முழு உரிமை யிருந்தது. ஆட்சியதிகாரம் அனைத்தையும் தன் கையிலேயே குவித்து வைத்திருக்கிற அமைச்சனும் அரசன் அவனை விரும்புகிற வரையில்தான் அமைச்சனா யிருக்கலாம். அரசன் நினைத்தால், அவனை எப்போது வேண்டுமானாலும் பதவியிலிருந்து நீக்கி விடலாம்; அவனுக்கு எத்தகைய தண்டனையை வேண்டுமானாலும் தரலாம். தன்னுடைய மகனைச் சாளுவ திம்மன் கொலைசெய்து விட்டான் என்று கருதிய கிருஷ்ணதேவராயன் அவனுக்களித்த தண்டனையை நாம் அறிவோம்.

அரசன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாம் என்பது அந்தக் காலத்து வழக்கம். அன்றியும் அவன் தனக்கும் தன் மனைவிகளுக்கும் பணிவிடை செய்ய ஏராளமான பணிப்பெண்களையும் அரண்மனையில் வைத்திருந் தான். அவர்கள் எல்லாருக்கும் வசதி மிகுந்த தனித்தனி அறைகள் இருந்தன. அரசனுடைய அந்தப் புரத்தைத் தக்க முறையில் வைத்திருப்பதற்கு அரண்மனை வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கணிசமான பகுதி செலவாயிற்று. அரச குமாரர்கள் அவர்களுடைய திறமைக்கேற்ற நிர்வாகப் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். அரியணையேறுவதற்கு யாதேனும் ஒரு வகையில் உரிமையுடைய அரசகுமாரர்களுடைய நடமாட்டத்தைக்

கட்டுப்படுத்தி அவர்களுக்குக் காவல் போடுவதும் உண்டு. கிருஷ்ணதேவராயனைப் போன்ற வலிமை மிக்க அரசர்கள் அவ்வாறு செய்தார்கள்.

மைய அரசின் அலுவல்களைக் கவனிப்பதற்குப் பல நிர்வாகத் துறைகளிருந்தன. அரண்மனைக் கருகிலேயே நல்ல அமைப் பாண்மையுடைய தலைமைச் செயலகமும் இருந்தது. தலைநகரில் இரண்டு கருவூலங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று சிறியது; மற்றது பெரியது. சிறிய கருவூலம் அன்றாட நடைமுறை வரவு செலவுகளைக் கவனித்துக்கொண்டது. பெரிய கருவூலத்தில் ஏராளமான செல்வங்கள் கையிருப்பாக வைக்கப்பட்டிருந்தன. அந்தச் செல்வங்களை மேலும் மேலும் பெருக்குவதற்கு ஒவ்வோர் அரசனும் விரும்பினான். 'யாரும் காணமுடியாதவாறு அந்தக் கருவூலத்தைப் பூட்டி முத்திரை வைத்து விடுவார்கள்' என்றும், 'மிகுந்த பணத்தட்டுப்பாடு ஏற்பட்டாலொழிய அதனை அரசன் திறக்கமாட்டான்' என்றும் பேயிஸ் எழுதிவைத்திருக்கிறார்.

அரசனுக்குச் சொந்தமான விளைநிலங்கள், மகாநவமி விழாவின்போது சிற்றரசர்களும் மாகாண ஆளுநர்களும் செலுத்திய திறை, பேரரசின் பல துறைமுகங்களிலும் இறக்கு மதியும் ஏற்றுமதியும் ஆன வாணிகப் பொருள்களின் மீது விதிக் கப்பட்ட துறைமுக வரி, சுங்கவரி ஆகியவைகள் அரசனுடைய வருமானத்தின் முக்கிய ஆதாரங்களாயிருந்தன. வரியைப் பண மாகவும் கட்டலாம், பண்டமாகவும் கட்டலாம். விளைநிலங்கள் சரியானபடி அளக்கப்பட்டன. நிலத்தின் பரப்புக்கும், அதனுடைய தரத்துக்கும், அதில் விளைந்த தானியத்துக்கும், அதனுடைய அளவுக்கும் ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டது. நன்செய் நிலத்திற்கும் புன்செய் நிலத்திற்கும் வரி விகிதங்கள் வேறுபட்டன. குடியானவர்கள் ஆறிலொரு கடமையை அரசனுக்குச் செலுத்தவேண்டுமென்பதுதான் மரபெனினும், பல சமயங்களில் அவர்கள் அதைவிட அதிகமாகவே செலுத் தினார்கள். சில சமயங்களில் முழு விளைவில் பாதியை அவர்கள் வரியாகச் செலுத்தினார்கள். கோயில்களும் கற்றறிந்த பார்ப் பனர்களும் விதிக்கப்பட்ட அளவுப்படி நிலவரியில் தங்களுக்குரிய பாகத்தை எடுத்துக்கொள்ளலாம். வீட்டுவரி, தொழில்வரி, பல வகைப்பட்ட இசைவாணைக் கட்டணங்கள், வாணிகப் பொருள்களின் இடம்பெயர்வு வரி, சந்தை வரி, நீதி மன்றங்கள் விதித்த குற்றத்தொகை முதலியவை ஏனைய வருவாய் ஆதாரங் களாயிருந்தன. மேலே சொன்ன வரிகளுள் பலவற்றை வசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டது. மாகாணங்கள் மைய

அரசின் நேர் ஆட்சியிலிருந்த பகுதிகள் ஆகிய இரண்டிலுமே இந்த ஏலமுறை கடைப்பிடிக்கப்பட்டது. எனவே, வரிச்சுமை மிகவும் அதிகமாகவும் கொடுமையாகவும் இருந்ததென்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது.

அரண்மனைப் பராமரிப்பு, போர் வீரர்கள் பராமரிப்பு, அறக் கட்டளைகள் ஆகியவை முக்கியமான செலவினங்கள். அரச னுடைய வருவாயை நான்கு சமபாகங்களாகப் பிரித்து, ஒரு பாகத்தை அரண்மனைக்கும் அறக்கட்டளைகளுக்கும் ஒதுக்க வேண்டுமென்றும், இரண்டு பாகங்களை ராணுவப் பராமரிப்புக்கு ஒதுக்கவேண்டுமென்றும், எஞ்சிய பாகத்தை கையிருப்புக் கருவூலத்திற் சேர்த்துவிட வேண்டுமென்றும் கிருஷ்ணதேவ ராயன் ஒரு கொள்கையை வகுத்தான். அஃதொரு குறிக்கோளே தவிர, உண்மை நடைமுறை அப்படித்தான் இருந்ததென்று சொல்ல இயலாது. அது அவ்வப்போது தோன்றிய நிலைமையைப் பொறுத்ததாயிருந்தது.

இந்து ராஜ்யங்களுக்குள் யாதேனும் ஒன்றை ராணுவ ராஜ்யம் என்று சொல்லக்கூடுமானால் அது விஜயநகரமாகத்தான் இருக்கும். ஏனைய இந்து ராஜ்யங்களைவிட விஜயநகர ராஜ்யந்தான் இந்த இயல்புகளை மிகுதியாய்ப் பெற்றிருந்தது. பேரரசன், நிலையான ஒரு பெரிய சேனையை வைத்திருந்தான். அதில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவை இருந்தன. 'போர் வீரர்கள் நான்கு மாதத்திற்கொருமுறை சம்பளம் வாங்கினார்கள்' என்றும், 'போர் வீரர்களுக்குச் சம்பளந் தருவதற்காக மாகாண வருவாய்மீது காசோலை தரும் முறை ஒருபோதும் கையாளப்படவில்லை' என்றும் அப்துர் ரஜாக் எழுதி வைத்திருக்கிறார். அதனால், மைய அரசின் கருவூலத்திலிருந்தே சம்பளம் நேராகத் தரப்பட்டது என்பது தெளிவு. மேலும், பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் ராணுவ மானியங்கள் ஏராளமாக இருந்தன. அந்த மானியங்களுக்கு நாயக்கர்கள் என்று வழங்கிய ராணுவ தளபதிகள் அதிகாரிகளாய் இருந் தார்கள். தங்களுடைய மானியத்திலடங்கிய ஊர்களில் வரி வசூல் செய்வதற்கும், அவற்றின் நிர்வாகத்தை நடத்துவதற்கும் அவர்கள் அதிகாரம் பெற்றிருந்தார்கள். அதற்குக் கைம்மாறாக அவர்கள் ஒரு குறிப்பிட எண்ணிக்கையுள்ள யானைப்படை குதிரைப்படை, காலாட்படை ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும். செய்தி கிடைத்தவுடனே அந்தப் படைகள் பேரரசின் நிலைப்படையோடு சேர்ந்து போர்க்களம் புகுவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். அத்தகைய நாயக்கர்கள் இருநூறு

பேருக்கு மேல் இருந்தார்களென்று நூனிஸ் குறிப்பிடுகிறுர். வில்வித்தை, வாள்வித்தை முதலியவற்றில் பயிற்சியளிப்பதற் கெனத் தனியாக நடத்தப்பட்ட ராணுவப் பள்ளிகள் இருந்தன. அந்தப் பள்ளிகளிற் பயிற்சி பெற்றவர்கள் பேரரசின் சேனையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். பீரங்கிப் படையில் வெளி நாட்டினரே இருந்தனர் என்று பொதுவாகக் கூறலாம். பாசறையைத் தெருக்களும் திறந்த வெளிகளும் கொண்ட இயங்கும் நகரம் என்று சொல்லலாம். போர் வீரர்களோடு ஏராளமான பரிவாரத்தாரும் சென்றனர். அவர்கள் சண்டையிற் கலந்து கொள்ளாதவர்கள். போர் வீரர்களுடைய இயக்கத்திற்கு அவர்கள் ஓரளவு தடையாகத்தான் இருந்தார்கள். ஆனல், படைகளோடு பரிவாரமும் செல்வது அந்தக் காலத்தில் பொது வழக்காக இருந்தது. நாட்டைக் காக்கும் பணியில் கோட்டைகள் முக்கியமான இடத்தை வகித்தன. கோட்டையை எவ்வாறு முற்றுகையிடுவது, எதிரிகள் கோட்டைக்குள் நுழையாமல் எவ்வாறு தடுப்பது என்பன போன்ற கலைகளில் அந்தக் காலத்துப் போர்வீரர்கள் நல்ல பயிற்சி பெற்றிருந்தார்கள். அப்போது நடந்த சண்டைகளில் எதிரிகளின் கோட்டைகளை முற்றுகை யிடுவதென்பது அடிக்கடி நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்தது. ராயர்கள் பல துறைமுகங்களையும் இலங்கையின் சில பகுதி களையும் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்தார்களாதலால் அவர்களிடம் ஒரு கப்பற்படையும் இருந்திருக்கவேண்டும். ஆனல், அதனுடைய அமைப்பாண்மை எத்தகையது, அதில் எத்தனை கப்பல்களும் மாலுமிகளும் வீரர்களும் இருந்தார்கள் என்பன போன்ற தெளிவான செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை.

மாகாண ஆட்சி அவ்வப் பகுதியினுடைய முன்னைய வரலாற்றின் அடிப்படையில் அமைந்தது. தமிழகத்திலும் மேற்குக் கடற்கரையிலும் பழைய அரச மரபினரே ஆட்சி செய்ய அனுமதிக்கப் பெற்றனர். அவர்கள் பேரரசனுக்குப் பணிந்து அவனுக்குரிய திறையைச் செலுத்தினுர்கள். பேரரசன் நியமித்த உயர் அதிகாரிகளின் பொது மேற்பார்வையில் அந்தச் சிற்றரசர்கள் ஆட்சி செய்தார்கள். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே அந்த மேற்பார்வைப் பதவிகளில் அமர்த்துவது பொது வழக்கமா யிருந்தது. தெற்கில் பாண்டியரும் திருவடி மரபினரும் மேற்கில் கெர்சப்போ, கர்க்கல் முதலிய பகுதிகளில் ஆட்சி செய்தவர்களும் மேலே கூறிய முறையில்தான் செயல் பட்டார்கள். தமிழகம் சோழர் காலத்தில் இருந்ததைப் போலவே வளநாடு, நாடு, கூற்றம் என்னும் நிர்வாகப் பகுதிகளை உடையதாயிருந்தது. அதுபோலவே, சோழர் காலத்துக் கிராம

நிர்வாகமும் விஜயநகரப் பேரரசர்களின் காலத்தில் அழியாமல் காக்கப்பெற்றது. கிராம சபைகள் முன்போலவே செயல் பட்டன. தெலுங்கு நாட்டிலும், கன்னட நாட்டிலும் விஜய நகரப் பேரரசர்கள் குறைபாடற்ற முறையில் உருவாக்கி யிருந்த கிராம நிர்வாக முறைகளைத் தமிழகத்தின்மீது அவர்கள் சுமத்தவில்லை. ஆனால், கிராம சபையின் நிர்வாக அதிகாரிகள் மைய அரசுடனும், அதனுடைய பிரதிநிதிகளுடனும் அதிகமாக இணைக்கப்பெற்றதால் சபையின் தன்னாட்சியுரிமை மிகவும் சுருங்கிப் போயிற்று. நிர்வாகப் பிரிவுகளின் பெயர் களும், அவற்றின் நிர்வாகத்தை நடத்திய அலுவலர்களின் பெயர்களும் அவ்வப் பகுதியின் வழக்கிற்கேற்ப மாறியிருந் தாலும், மைய அரசினால் நியமிக்கப்பெற்ற மாகாண ஆளுநர் அனைவருமே அவ்வப் பகுதியிலிருந்த ராணுவ முக்கியமுடைய கோட்டைகளின் ராணுவத் தலைவர்களாய் இருந்தார்கள். சாதாரணமான 'சிவில்' அலுவலர்கள் அந்தப் பதவிக்கு நியமிக்கப் பெறவில்லை. மாகாணங்கள் அல்லது ராஜ்யங்களின் எல்லைகள் அவ்வப்போது தோன்றிய நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாறிக்கொண்டே இருந்தன. பேரரசின் வடவெல்லையிலிருந்த பகுதிகள் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கு இடையில் அடிக்கடி கைம்மாறிக் கொண்டே இருந்ததால், அவற்றின் எல்லைகளும் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தன. ஆளுநர்களும் நாயக்கர் களும் ஊரில் இல்லாதபோது, அவர்களுடைய ராணுவ மானியங்களை அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் ஆட்சி செய்தார்கள். இன்றைய வேவுத்துறையின் பணியை அன்று முறையாக அமைக்கப்பெற்ற ஒற்றர் படை கவனித்துக் கொண்டது. பேரரசின் அலுவற் பதவிகளில் அமர்ந்திருந்த ஊழியர்களுடைய செயல்களையும் அண்டை நாட்டு அரசர்களின் செயல்கள் சூழ்ச்சிகள் திட்டங்கள் முதலியவற்றையும் ஒற்றர்கள் வேவு பார்த்து அவ்வப்போது அரசனுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். எல்லைகளிலிருந்த கோட்டைத் தலைவர்கள் எல்லாரும் பொதுவாக அரசனுடைய நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்களாகவே இருந்தார்கள். பிரபுக்கள் தலைநகருக்குச் சென்று அரசனைக் காணவேண்டுமென்ற விதியிலிருந்து எல்லைக் கோட்டைத் தலைவர்களுக்கு விலக்களிக்கப்பட்டது. காவற் படை (போலிஸ்) தேவையான அளவு திறமையுடன் பணி யாற்றியது. எங்காவது திருடு போய்விட்டால் காவற்படை யினர் திருடுபோன பொருளை மீட்டுத்தரவேண்டு மென்பதும், தவறினால் அந்தப் பொருளுக்குரிய பணத்தை அவர்களே கொடுத்துவிட வேண்டுமென்பதும் விதி. காடுவாழ் மக்களால் இன்னல் ஏற்படலாம் என்று எதிர்பார்த்த பகுதிகளில் பாளையக்

காரர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் துணைவர்கள் பலர் இருந்தனர். பாளையக்காரர்களுக்கும் அவர்களுடைய துணைவர்களுக்கும் தேவையான வருவாயைத் தருவதற்காக அரசன் ஜாகீர் என்ற நிலக்கொடைகளைப் பாளையக்காரர் களுக்கு அளித்தான். தெருக்காவலர்கள் இரவில் 'ரோந்து' சுற்றினார்கள். தலைநகரத்திலிருந்த காவற்படை மிகத் திறமை யாய்ப் பணியாற்றியதென்று அப்துர் ரஜாக் போன்ற வெளி நாட்டினர் பாராட்டியுள்ளனர்.

படிப்படியாய் அமைந்து பணியாற்றிய நீதி மன்றங்கள் குடிமக்களுக்கு நீதி வழங்கின. பேரரசனுடைய சபைதான் மீயுயர் மேல் முறையீட்டு நீதிமன்றமாக இருந்தது. சில நீதி மன்றங்கள் இயங்கு மன்றங்களாய்ப் பணியாற்றின. உரிய அலுவலர்கள் எங்கெங்கு முகாமிட்டனரோ ஆங்காங்கு வழக்குகள் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பெற்றது. சட்ட நுணுக்கங்களில் ஐயம் தோன்றியபோது யாக்ஞவல்கியருடைய ஸ்மிருதியும் பராசர ஸ்மிருதிக்கு மாதவர் எழுதிய பாஷியமும் தனிச் சிறப்புடைய மேற்கோள்களாகப் பயன்பட்டன. சிறு குற்றங்களையும், சாதி விதிகளையும் வாணிக விதிகளையும் மீறிய வர்கள்மீது சுமத்தப்பெற்ற குற்றங்களையும் முதலில் கிராம நீதி மன்றங்களும் சாதிச் சங்கங்களும் வாணிகச் சங்கங்களும் விசாரித்தன. அத்தகைய வழக்குகள் அரசு அலுவலர்கள் நடத்திய நீதி மன்றங்கள் வரையில் போவது அரிதென்று கூறலாம். மானிடச் சான்று கிடைக்காதபோது கடவுளை நம்பிய கடுஞ்சோதனை முறையை நீதி மன்றங்கள் சான்றாக ஏற்றுக் கொண்டன. பலவகைப்பட்ட தண்டனைகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் கைகால்களை வெட்டுதல், கழுவேற்றுதல், யானையை விட்டு மிதிக்கச் செய்தல் போன்ற தண்டனைகள் இந்தக் காலத்தில் வாழும் நமக்கு மிகக் கொடுமையாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் தோன்றும்.

இந்து அரசியல், சமுதாய முறைகளை முஸ்லிம்கள் அழித்து விடாமல் காப்பது தங்களுடைய கடமையென்ற தெளிந்த உணர் வுடன் விஜயநகரப் பேரரசர்கள் தங்கள் ஆட்சியை நடத்தி னார்கள். அவர்கள் முஸ்லிம்களோடு செய்த போர்களில் பலமுறை தோல்வி கண்டார்க ளெனினும், மேலே சொன்ன கடமையை நிறைவேற்றுவதில் அவர்கள் பெரு வெற்றி கண்டார்கள். இன்றைய தென்னிந்திய சமுதாய அமைப்பு வட இந்திய சமுதாய அமைப்பினின்றும் பலவகைகளில் குறிப்பிடத் தக்க அளவு வேறுபட்டிருக்கிற தென்பதும், தலைமுறை

தலைமுறையாக வந்த உயர்தனிச் சிறப்புடைய சிற்பிகள் உருவாக்கிய ஒப்பற்ற கலையழகுடைய பல பெரிய கோயில்கள் இன்றைக்கும் தென்னிந்தியாவை அணி செய்கின்றன என்பதும், இந்து முஸ்லிம் 'பிரச்சினை' நடைமுறையில் தென்னிந்தியாவில் இல்லையென்பதும் விஜயநகரப் பேரரசர்கள் செய்த முயற்சிகளின் வெற்றிக்கு ஓரளவு சான்று பகர்கின்றன.

## BIBLIOGRAPHY

T. V. Mahalingam: 'Adminstration and Social Life under Vijayanagar' (Madras, 1940)

—: 'South Indian Polity' (Madras, 1955)

—: 'Tirumalaideva Maharaya' (Proceedings, Ninth All-India Oriental Conference 1937, pp. 827–32 Trivandrum, 1940)

K. A. N. Sastri and Venkataramanayya: 'Further Sources of Vijayanagar History' (Madras, 1947)


R. Satyanatha Aiyar: 'History of the Nāyaks of Madura' (Madras, 1924)

R. Sewell: 'A Forgotten Empire' (London, 1924)

N. Venkataramanayya: 'Studies in the History of the Third Dynasty of Vijayanagar' (Madras, 1935)

V. Vriddhagirisan: 'The Nāyaks of Tanjore' (Annamalainagar, 1942).

I. சங்கம வமிசம்



- முதலாம் தேவராயன் (1406–1422)
  - ராமச்சந்திரராயன் (1422)
  - முதலாம் விஜயராயன் (1422-26)?
    - பிரவுத தேவராயன் அல்லது இரண்டாம் தேவராயன் (1422–26)
      - ?இரண்டாம் விஜயராயன் (1446–7)
      - மல்லிகார்ஜுனன் (1447–65)
        - ராஜசேகரன் (1466)
    - பிரதாப தேவராயன்
      - இரண்டாம் விருபாட்சன் (1465–85)
        - ?
        - பிரவுதராயன் (1485)

## II. சாளுவ வமிசம்


- குண்டன்
  - சாளுவ நரசிம்மன் (1486–91)
    - திருமலை அல்லது திம்மன்
    - தம்மராயன் அல்லது இம்மடி நரசிம்மன்
  - திம்மன்

## III. துளுவ வமிசம்

- ஈஸ்வர நாயக்கன்
  - நரச நாயக்கன்
    - வீரநரசிம்மன் (1505–9)
    - கிருஷ்ணதேவ ராயன் (1509–29)
      - திருமலாதேவி + அலிய ராமராயன்
      - திருமலை
    - அச்சுததேவராயன் (1529–42)
      - முதலாம் வேங்கடன்[1] (1542)
    - ரங்கன்
      - சதாசிவன் (1542–76)

[1] முதலாம் வேங்கடனுக்கும் சதாசிவனுக்கும் இடையில் வேங்கடனுடைய தாய்வழி மாமன் சாளுக்கிய திருமலை என்பானுடைய ஆட்சியும் சில மாதங்கள் நடைபெற்றது.

## IV. அரவீடு வமிசம்


அரவீட்டி புக்கன்
ராமராஜன்
சீரங்கன்
(அலிய) ராமராஜன் + திருமலைதேவி—
கிருஷ்ணதேவராயனுடைய மகள்
(1542–65)
திருமலை
(1570–72)
வேங்கடாத்திரி
பெத்த
திருமலை
சீரங்கன்
முதலாம் சீரங்கன்
(1572–85)
ராமன்
இரண்டாம் வேங்கடன்
(1586–1614)
பெத்தவேங்
கடன் அல்லது
மூன்றும் வேங்கடன்
(1630-41)
சென்ன
வேங்கடன்
திருமலை (திம்மராஜன்)
இரண்டாம் சீரங்கன்
(1614)
ராமதேவராயன் (1618–30)
சீரங்கன்
மூன்றும் சீரங்கன் (கண்டனவோலு
கோபாலராஜனுடைய தத்துப்பிள்ளை)
(1642–9) 1672 வரையில் உயிரோடிருந்தான்.
கண்டனவோலு
கோபால ராஜன்

# கலைச்சொற்கள்

## அ

| | | |
|---|---|---|
| அகத்திய நட்சத்திரம் | — | Canopus |
| அகல் உலகக் குடிமகன் | — | Cosmopolitan |
| அகழ்வு | — | Excavation |
| அகில் | — | Almug |
| அஞ்சனக் கல் | — | Antimony |
| அடாவழி அரசுரிமைப் பறிப்பு | — | Esurpation |
| அடுக்களைச் சிற்றாள் | — | Scullion |
| அடுக்களைப் பாத்திரம் | — | Utensil |
| அடுக்கியல் படிவு ஆய்வு | — | Stratigraphy |
| அடுக்குப் பாறை | — | Gneiss |
| அடையாளத் தொளையிட்ட நாணயங்கள் | — | Punch-marked coins |
| அண்டப் படைப்புக் கோட்பாடு | — | Cosmolgy |
| அண்டப் பிறப்புக் கோட்பாடு | — | Cosmogony |
| அத்வைதம் | — | Monism |
| அம்பாரி | — | Hourdah |
| அரசகுமாரன் | — | Prlnce |
| அரசியலமைப்பு | — | Polity |
| அரசியல் ஒருமைப்பாடு | — | Political unity |
| அரசியல் நயத்திறம் | — | Diplomacy |
| அரிதாரம் | — | Orpiment |
| அரிவாள் | — | Sickle |
| அரைக் கச்சை | — | Girdle |
| அவுரி | — | Indigo |

ஆ

ஆக்க அமைவு — Composition
ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவத்தில் இலையுதிர்கிற — Deciduous
ஆண்டுப் பதிவுகள் — Annals
ஆதாரம் — Source
ஆயிரக்கால் மண்டபம் — Pillared Mandapam
ஆய்வுக் கட்டுரை — Treatise
ஆய்வுப் பயணி — Explorer
ஆவணக் காப்பாளர் — Record keeper
ஆற்றல் பரிசோதனை — Tour-de-force
ஆற்று நீர் பாய்ந்து ஏரியாய் நீர் கோத்து நிற்கும் இடம் — Inundation lake
ஆற்றுப் புகுமுகம் — Creek
ஆஸ்டிரேலிய இன மக்களின் ஆதி முன்னோர் — Proto-Australoid type

இ

இடக்கிடப்பியல் — Topography
இடைகழி — Aisle
இடைக்கூடம் — Ante-chamber
இடைத்துறை நிலம் — Doab
இணை நீள் பக்க அலகு — Parallel-sided blade
இணைப்புப் பஞ்சுறை — Quilt
இயற்கை இயல்புகளை அவை உள்ளபடியே சித்திரித்தல் — Naturalism
இயற்கை நீர்க்கால் — Dyke
இயற்கை மலை முழைஞ்சு — Rockcavern
இரும்புக் கட்டி — Iion slag
இரும்புக் கலவை சார்ந்த — Ferruginuous
இலக்கியம் — Literature
இலாமிச்சை — Spikenard
இளம் பச்சையான ரத்தினக் கல் — Beryl
இளவரசன் — Prince (heir apparent)
இனத்துக்குரிய — Ethnic
இன மரபியல் — Anthrodology

ஈ

ஈட்டி — Spear

உ

| | | |
|---|---|---|
| உடைவாள் | — | Dagger |
| உட்குழிவான | — | Concave |
| உட்சட்டை | — | Doublet |
| உத்தரக்கைம் மரம் | — | Pile |
| உப்பங்கழி | — | Back waters |
| உப்பு நீர்த்தேக்கம் | — | Lagoon |
| உருவ நேர்படி | — | Replica |
| உருவரை | — | Design |
| உலக்கை | — | Pounder |
| உளி | — | Chisel |
| உள்ளார்ந்த | — | Inherent |

ஊ

| | | |
|---|---|---|
| ஊசுதண்டு | — | Trapeze |

எ

| | | |
|---|---|---|
| எழுத்தர் | — | Scribe |
| எறிவேல் | — | Gavelin |

ஏ

| | | |
|---|---|---|
| ஏரி போன்ற உப்பு நீர்க்கழி | — | Lagoon |
| ஏலக்காய் | — | Cardamon |
| ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதிகளுக்கு அப்பாற்பட்டவர் | — | Outcastes |

ஐ

| | | |
|---|---|---|
| ஐயுறவு வாதம் | — | Scepticism |
| ஐரோப்பியப் பழம் பொற்காசு | — | Ducat |

ஒ

| | | |
|---|---|---|
| ஒப்பனைக் கும்பம் | — | Vase |
| ஒப்பனைப் பட்டை | — | Frieze |
| ஒப்பனை மாதிரி | — | Pattern |
| ஒப்புக்கொள்ளப்பட்ட மேம்பாடு உடைய | — | Classical |
| ஒடுங்கிய நீள் விளிம்பு | — | Ledge |
| ஒரு பொருள் பற்றிய நூல் | — | Monograph |
| ஒற்றைத்தடி மரம் | — | Palm |

ஓ

ஓதம் பொங்கும் கழிமுகம் — Estuary
ஓவியம் — Painting

க

கடலோரப் பகுதி — Littoral
கடலோரம் — Strand
கடல்மீது கவிந்து நிற்கும்
செங்குத்தான பாறை — Cliff
கடவுட் கோட்பாடு பற்றிய — Theistic
கடவுள் தந்த உரிமை — Divine Right
கடற்கழி — Inlet
கடற் கூம்பு — Inlet
கடற் கூம்பு — Creek
கட்டடக் கலை — Architecture
கட்டமைப்புக் கோயில் — Structural Temple
கட்டளை — Edict
கட்டுக் கால்வாய் — Aqueduct
கண்காணிப்பாளர் — Steward
கதம்பம் — Farrago
கதிரறுக்கும் கருவி — Harvester
கதைப்பாட்டு — Ballad
கப்பல் தங்குதுறை — Roadstead
கயிறு கட்டிய எறிபடை — Harpoon
கரந்துறை பாட்டு — Acrostic poem
கருங்கல் வடிவம் போன்ற — Granatoid
கருங்காலி — Rosewood
கருவூல அதிகாரி — Treasurer
கலப்புலோகம் — Potin
கலைத்துறைப் புறவாய்மை — Realism
கலைப்படைப்பு — Composition
கலைப்பண்புக் கூறு — Motif
கல்லியம் சார்ந்த — Lithic
கல்வெட்டு — Epiqraph
கல்வெட்டு — Stone Insciption
கவிகை மாடம் — Dome
கவிகை மாடப் பொது அறை — Vaulted hall
கவின் கலை — Art
கவின் கலை இலக்கியம் — belles lettres

கழஞ்சு — Molucca
கழிமுக நடுவரங்கம் — Delta
கற்கிடைக் கல்லறை — Dolmen
கற்குவியற் கல்லறை — Cairn
கன்னன் — Brarier

கா

காட்சி மாடம் — Pavilion
காயல் — Backwaters
காரை — Mortar
காலவரிசைச் செய்திக் கோவை — Chronicle
காலவரிசை முறை — Chornology
கால் நடைத் தீவனமாகப் பயன்படும் புல்வகை — Sweet Cloevr
காவி — Ochre

கி

கிடைநிலை — Horizontal
கிண்ணி — Bowl

கு

குங்குலியம் — Storax
குடியேற்றம் — Colonisation
குடுவை — Vase
குடைவரைக் கூடம் — Rock-cut hall
குத்துவாள் — Poignard
குந்தாலி — Pick
குரல் நாள அதிர்வொலி பில்லா மெய்யெழுத்து — Unvoiced Consonant
குழவி — Pounder
குழைமக் கலைகள் — Plastic Arts
குறை நிரப்பு — Eke

கூ

கூட்டரசு — Confederacy
கூட்டிணைவு — League
கூட்டியல் பண்பாடு — Composite Culture
கூட்டுப்பிணைய ஒப்பந்தம் — Colleative Security Pact

கூட்டொருமைப் பண்பாடு — Culture Complex
கூர்வளைவான அலகுடைய — Beaked
கூழாங்கற் கருவிகள் — Pebble tool facies

கை

கைக்கோடரி — Chopper
கைப்பிடிக் குள்ளிருக்கும் உளியின் பகுதி — Tang
கைவினைக் கழகம் — Craft guild

கொ

கொட்டாப்புளி — Mallet
கொடு வரிப்பாறை — Sehist
கொள்ளையடிக்கிற — Predatory

கோ

கோங்கு — Iron wood

ச

சக்கிமுக்கிக் கல் — Flint
சக்கிமுக்கிக் கல் போன்ற படிகக்கல். — Chert
சட்டத் தொடர்பான — Juristic
சம இடைவெளிகளில் நிறுத்தப்பட்ட தூண்களின் வரிசை — Colonnade
சமகால இணைவு — Synchronism
சமய உட்பிரிவு — Schism
சமயச் சார்பற்ற — Secular
சமுதாயப் படிநிலை — Status
சம்மட்டி — Hammer
சரளைக்கல் — Gravel
சரிகைத் துணி — Brocade
சரிவு வாட்டம் — Gradient

சா

சாசனம் — Inscription
சாபம் — Imprecation
சாமை — Millet

சி

சிங்கோனு — Chinchona
சிம்பு — Flake
சிம்புக் கற்கருவிகள் — Flake Tool Facies
சிவப்புச் சாயம் செய்ய உதவும் வேர் — Cheyroot
சிவப்பு, மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுடைய மணி வகை — Jaspar
சிற்பக் கலை — Sculpture
சிற்றரசன் — Feudatory
சிற்ருறு — Stream
சிறு குன்று — Knoll
சிறு கொம்புடைய மான் — Nilghai
சிறு கோளம் — Spherule
சிறு தேவதைகள் — Godlings

சீ

சீரமைப்பு — Rationalisation

சு

சுடுமண் பேழை — Sarcophagus
சுத்தி — Hammer
சுரண்டு கருவி — Scraper
சுரண்டு வரிப் பொறிப்பு — Graffiti
சுல்தானியம் — Sultanate
சுவர்ச் சித்திர ஒப்பனை — Mural frescos
சுவர் தாங்கி — Buttress
சுவரில் திட்பக் குறைவு உண்டு பண்ணும் பக்க உட்சாய்வு — Off-set
சுற்றுப் பார்வை — Survey
சுற்றுமேடை வழி — Gallery

சூ

சூத்திரம் — Aphorism

செ

செதுக்கு கருவி — Burin
செந்தாளகம் — Realgar

செப்புப் பட்டயம் — Coper plate grant
செம்புக் கற்காலம் — Chalco-lithic age
செவ்வகில் — Cedar
செவ்வந்திக்கல் — Amethyst
செவ்வண்ண இரும்பகக் களிமண் — Laterite
செவ்விறந்த விரை நீரோட்டம் — Rapids

சே

சேரிமொழி — Patois

த

தட்டையான அடிப்பாக முடைய சீன மரக்கலம் — Junk
தட்பவெப்ப நிலை — Climate
தண்டாயுதம் — Mace-head
தத்துவம் — Philosophy
தமரூசி — Awl
தர அளவுப்பாடு — Standardisation
தளர்வுறழ்வான மெய் யெழுத்து — Soft Consonant
தன்னாட்சி — Autonomy

தா

தாழ்வாரம் — Verandah
தாழி — Jar
தாளிப்பனை — Talipot

தி

திசைமொழி — Patois
திணைநிலத்துக்குரிய உயிரினத் தொகுதி — Fauna
திரிசூலம் — Trident
திருக்கோயிலில் கவிகைக் கூரையுள்ள அரைவட்ட ஒதுக்கிடம் — Apse
திருக்கோயிலில் நடுக் கூடம் — Nave
திருச் சின்னம் — Relic

திருத்தப்பட்ட மூலபாடம் — Recension
திருத்தூதர் — Apostle
தினை — Millet

துا

துணைநதி — Tributary
துப்பாக்கி வீரன் — Musqueteer
துருத்திக் கொண்டிருக்கிற — Protruding
துவைதம் — Dualism
துறவிமட உணவுக் கூடம் — Refectory

தூ

தூணின் அடிக்கட்டு (அடிப் புடைப்பு) — Base
தூண் தலைப்புறுப்பு — Capital
தூதர் — Ambassador

தே

தேய்த்துப் பளபளப்பாக்கிய — Burnished
தேய்த்து வழவழப்பாக்கிய — Polished

தொ

தொடர் உருவகம் — Allegory
தொடுகுழி — Grave
தொப்பி — Headpiece
தொல்பொருட் சின்னம் — Monument
தொல்பொருளியல் — Archaeology
தொல்பொருள் இல்லாப் பாளம் — Sterile Layer
தொல்லெழுத்துக் கலை — Palaeography

ந

நறுமணத் தைலம் — Unguent
நறுமணப் பொருள் — Spice

நா

நார்மடி — Linen

நி

| | | |
|---|---|---|
| நியதிவாதம் | — | Determinism |
| நிருவாகம் | — | Administration |
| நில அடுக்கியல் ஆய்வு | — | Stratigraphy |
| நில அடுக்கு | — | Terrace |
| நில அடுக்குப் படிவம் | — | Strata |
| நில இயல் | — | Geography |
| நிலக்கூம்பு | — | Promontory |
| நிலவாகை | — | Cassia |

நீ

| | | |
|---|---|---|
| நீண்டு வளைந்த அலகு | — | Aquiline |
| நீரடி மணல்திட்டு | — | Sand bank |
| நீர்பிரிமேடு | — | Water-shed |
| நீலச் சாயலுடைய வெண்ணிற மணிக்கல் | — | Chalcedony |
| நீளப் பாங்கான | — | Longitudinal |

நு

| | | |
|---|---|---|
| நுண்கற் கருவி | — | Microlith |

நூ

| | | |
|---|---|---|
| நூற்றுக்கால் மண்டபம் | — | Pillared Mandapam |

நெ

| | | |
|---|---|---|
| நெல் மணி எடை | — | Grain |

நே

| | | |
|---|---|---|
| நேர்குத்தான சாய்வு | — | Scarp |

நோ

| | | |
|---|---|---|
| நோக்கெல்லை | — | Scope |

ப

| | | |
|---|---|---|
| பகர ஆளுநர் | — | Regent |
| பக்க மலைகள் | — | Spurs |
| பக்க வரைகள் | — | Spurs |
| பஞ்சமர் | — | Outcastes |

படிகக்கல் — Quartz; Quartzite
படிகப்பாறை — Rock Crystal
படிக்கல் — Trap rock
படியடுக்கு வரிசை மேடை — Gallery
படைவீரர் மெல்லுடை — Tunic
பதக்க உருவப்படம் — Medallion
பண்ணைக் குடியுரிமையாளன் — Feudatory
பலதெய்வ வழிபாடு — Pantheon
பழங்கற்காலம் — Palaeolithic Age
பழங்கற்காலத்தின் பிற்பகுதி — Upper Palaeolithic Age
பழங்கற்காலத்தின் முற்பகுதி— Lower Palaeolithic Age
பழைய அரேபியத் தங்க நாணயம் — Dinar
பன்மை வாதம் — Pluralism

பா

பாயிரம் — Prologue
பாளம் — Block
பாறை ஒதுக்கிடம் — Rock Shelter
பாறைக் கட்டடக் கலை — Rock Architecture

பி

பிதுக்கம் — Projection
பித்தளை அல்லது செம்பு செதுக்கும் கலை — Chalcography
பிரச்சினை — Problem
பிரதிநிதி — Legate
பிரபத்தி — Surrender
பிரமம் — Absolute
பிறை வடிவமான — Crescent
பின்னணியுரை — Colophon

பீ

பீடம் — Plinth

பு

புகுமுக மண்டபம் — Porch
புடை பெயர்ப்புச் சுங்கவரி — Transit Duty
புடைப்பியல் — Relief

புடைப்பியல் செதுக்கோவியம் — Relief (Sculpture)
புட்பராகம் — Topaz
புதர் — Scrub
புதிய பதிப்பு — Redaction
புதுக் கற்காலம் — Neolithic Age
புதை படிவம் — Fossil
புதை மேட்டுச் சவக்கிடை — Barrow
புறக்குழிவான — Convex
புறச் சமயி — Infidel
புறச் சமயி — Pagan
புறவொட்டு — Accretion
புனிதச் சடங்கு — Sacrament
புனிதப் புலவர் — Poet Saint
புனிதர் — Saint

பூ

பூண் — Shoe

பெ

பெருங்கல் — Megalith

பே

பேரரசன் — Emperor
பேரரசு — Empire

ம

மங்கிய சிவப்பு நிறமுள்ள நேர்த்தியான மணி வகை — Carnelian
மடத்தில் ஒதுங்கிய அறை — Cell
மணிமுடி — Diadem
மண்டா — Harpoon
மண்ணியல் (மண்ணூல்) — Geology
மண்பாண்டத் தொழில் — Ceramics
மதிலுள் அமைந்த உயர் மேடை — Rampart
மத்தியதரைக் கடலின் ஆதி முன்னோர் — Proto-Mediterranean Type
மரகதம் — Emerald
மரபுக் கூறு — Strain

மரபு சார்ந்த — Philogenetic
மரபொழுங்கு — Order
மனிதனைத் தின்னும் அரக்கி — Ogress

மா

மான் கொம்பு — Antler

மு

முகப்பு — Facade
முகப்புரை — Prasasti
முடிவுரை — Epilogue
முன்கால் எலும்பு — Tabia
முன் பிதுங்கிய — Protruding

மூ

மூச்சொலி கலந்த மெய்யெழுத்து — Aspirated Consonant
மூடு முன்றில் — Portico
மூதுரை — Maxim

மெ

மெய்யுணர்வு — Philosophy
மென்றுகில் — Muslin

மே

மேட்டுச் சமவெளி — Table land
மேலாதிக்கம் — Suzerainity

ர

ரஷிய நாணயம் — Kopeki
ராணுவ மானியம் — Feif
ராஜ தந்திரம் — Diplomacy

ல

லவங்கப்பட்டை — Cinnamon

வ

வடிகால் — Drainage
வணிகக் குழுத் தலைவர் — Aldermen

| | | |
|---|---|---|
| வரலாறு | — | History |
| வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட | — | Prehistoric |
| வரிப்பள்ளக் கருக்கள் | — | Fluted Cores |
| வலம் வரல் | — | Circumambulation |
| வழிபாட்டிடம் | — | Sanctuary |
| வழிபாட்டுத் தொடக்க வாசகம் | — | Invocation |
| வழி வழி உடைமை | — | Heirloom |

வா

| | | |
|---|---|---|
| வாணிகச் சங்கம் | — | Merchants' Guild |
| வாதம் | — | Polemics |
| வாயிலோன் | — | Usher |
| வாய்ச்சி | — | Adze |
| வார்ப்புருவுக்கான படிவம் | — | Die |

வி

| | | |
|---|---|---|
| வில்வளைவான விதானங் கவிந்துள்ள வழி | — | Archway |

வீ

| | | |
|---|---|---|
| வீரத் திருத்தகை | — | Knight |

வெ

| | | |
|---|---|---|
| வெட்டு கத்தி | — | Cleaver |
| வெண்கலச் சிலை | — | Bronze |
| வெண்ணிறப் பருத்தித் துணி | — | Calico |
| வெளிச் சாதி | — | Exterior Caste |
| வெளிப்பாடு | — | Manifestation |

# பொருட்குறிப்பு அகராதி

## அ


அகத்தியர், 105, 110, 114, 115-118, 122-125, 192, 416
அகநானூறு, 184
அகமது - பாமினியரசன், 387, 388, 407
அகமது ஷா-பாமினி யரசன், 388
அகஸ்டஸ்—ரோமானியப் பேரரசர், 222
அகால வருஷன்-லாட்டா மன்னன், 254
அகோலா, 154
அக்கல நிம்மதி-பாண்டிய அரசி, 251
அசகம், 112
அசோகர், 114,132, 137-141, 148
அசோகர் கல்வெட்டாணைகள், 113, 140
அசோகர் - தக்காணத்தில் அசோகர் ஆட்சிக்குட்பட்ட பகுதி, 140, 141
அசோகர் பாறைக் கல்வெட்டாணைகள், 137
அசோகர் பொறிப்புகள், 140, 141, 183
அசோகவர்மன்-காஞ்சி மன்னன், 140
அச்சுதராயன்-விஜயநகர அரசன், 450–453
அச்சுத விக்கந்தன்-களப்பிர மன்னன், 228
அஞ்சி-சங்ககாலக் குறுநில மன்னன், 195
அண்டிரன்- ,, 192
அதிகரணம்-நீதி மன்றம், 264
அதியமான்-சங்க காலக் குறுநில மன்னன், 138, 189, 195, 196, 247, 308
அதிராசேந்திரன்-சோழ மன்னன், 296
அத்திரம்பாக்கம்-வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் இருப்பிடம், 94
அத்தி வர்மன்-கந்தார மன்னன், 172
அந்துவன்-சங்ககால மன்னன், 192, 194
அபராந்தம், 153
அபராஜிதன்-பல்லவ மன்னன், 252, 273, 274
அபுல் பெதா-அரேபிய நூலாசிரியர், 47
அபுஜைது ஹசன்-அரேபியப் பயணி, 46, 47
அப்தூர் ரஜாக்-பாரசிகத் தூதர், 51, 423, 424, 485
அப்துல் காதர்-பாமினி அலுவலன், 388
அப்துல் வஹாப்கான், 476
அப்பண்ணன் - ஹொய்சாளப் படைத்தலைவன், 333
அப்பர்-சைவப் புனிதர், 236
அமராவதி, 4, 156, 440
அமலானந்தர் - வடமொழி நூலாசிரியர், 343
அமிதசாகரர் – சமணத் தமிழ் இலக்கண நூலாசிரியர், 228
அமிர்த்த மங்கலம்-வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் இருப்பிடம், 90
அமீர் ஆலி பரீது-பாமினியமைச்சன், 408, 438

அமோக வருஷன்-முதலாம், 250, 253-255, 275
அமோக வருஷன்-இரண்டாம், 277
அமோக வருஷன்-மூன்றும், 278
அம்ப தேவன்-காயஸ்தச சிற்றரசன், 344, 345
அம்பாக் கணவாய், 60
அம்மன்-முதாலம் கிழக்குச் சாளுக்கிய மன்னன், 277
அம்மன்-இரண்டாம் கிழக்குச் சாளுக்கிய மன்னன் 278, 279
அம்ரேலி, 92
அரசியலமைப்பு:-
சோழர் காலத்தில், 314-322
பல்லவர் காலத்தில், 260-263
பொது இயல்புகள், 257-259
விஜயநகர ஆட்சியில், 481-489
அரசூர்-பாண்டியர் பாசறை, 273
அரிகுல கேசரி-சோழ அரச குமாரன், 277
அரிகேசரி பராங்குச மாறவர்மன்-முதலாம் பாண்டிய மன்னன், 139, 244
அரிகேசரி மாறவர்மன்-பாண்டிய மன்னன், 239
அரிக்கமேடு, 43, 144, 189, 221
அரிசில்-போர்க்களம், 252
அரிக்கலூர்-மலேமுழைஞ்சு, 144
அரிஞ்செயன்-சோழ மன்னன், 280
அரியாக்கே, 152
அருண்மொழி வர்மன், 281
அரேபியர், 241
அரேபியா, 350
அர்கரு, 221
அர்த்த சாஸ்திரம், 135
அலகாபாத்துத் தூண்-கல்வெட்டு, 165
அலாவுதீன் உதௌஜி (மதுரை) 373
அலாவுதீன் கில்ஜி, 353, 354, 355, 359
அலாவுதீன் (முதலாம்) பஹமன் ஷா பாமினி யரசன், 376, 377
அலாவுதின் (இரண்டாம்) அகமது ஷா பாமினியரசன் 391
அலாவுதீன்-பாமினியரசன், 408
அலி அடில்ஷா-பிஜப்பூர் சுல்தான், 458-461, 463, 465-467
அலிபின் அஜ-உல்லா டபடபாய்-முஸ்லிம் நூலாசிரியர், 39
அல்பரூனி-அரேபிய நூலாசிரியர், 47
அல்லாட ரெட்டி-படைத்தலைவன், 420, 422
அவந்தி சுந்தரி கதாசாரம், 256
அவனி சிம்மன் (சிம்மவிஷ்ணு) 235
அவனிநாரணம்-குளம், 252
அனங்க பீமன்-மூன்றும் கலிங்க மன்னன், 344, 346
அனட்டோலியா. 102
அனந்தபாலன்-மேற்குச் சாளுக்கியப் படைத்தலைவன், 302
அனந்தவர்மச் சோடகங்கன்-கிழக்குக் கங்க மன்னன், 299, 300, 346
அனபோதான்-வெலமத் தலைவன், 417
அனுராதபுரம் 238, 282, 297
அனூபம், 153
அஜந்தா, 5, 173
அஜவர்மன்-கடம்ப மன்னன், 178, 180
அஸ்மக நாடு-112, 126

## ஆ

ஆகவ மல்ல தைலப்பரசன்-ராஷ்டிரகூடப் பிரபு, 279
ஆட்டன் அத்தி-(சேர இளவரசன்), 199
ஆதவானி-கோட்டை, 346
ஆதன்-சேர அரசன், 188, 189
ஆதாரங்கள்:-
இலக்கியம், 34
நாணயங்கள், 30, 34
பயணிகளின் குறிப்புகள், 53
பொறிப்புகள், 21, 30
ஆதிச்ச நல்லூர், 89, 92, 93

ஆதித்திய சோழன்-முதலாம், 273, 276, 313
ஆதித்திய சோழன்-இரண்டாம், 280, 281, 315
ஆதோனி-கோட்டை, 380, 466
ஆதிமந்தி-கரிகாலன் மகள், 199
ஆந்திர நாட்டு அகழ்வுகள், 85
ஆந்திர நாணயங்கள், 154, 155
ஆந்திர பிரித்தியர், 148
ஆபீலகன்-சாதவாகன மன்னன், 150
ஆபீரர், 5, 159
ஆபீர வாசுசேனன்-ஆபீர அரசன், 159
ஆப்பாயிகன்-கலகத் தலைவன், 234
ஆமணன்-யாதவ மன்னன், 343
ஆயிரத்தளி, 333
ஆய் அண்டிரன்-சங்க காலக் குறுநில மன்னன், 192, 193, 244, 247. 340
ஆய் எயினன்-சங்க காலச் சிற்றரசன், 196
ஆரல்வாய் மொழி-கணவாய், 60
ஆரிய சக்கரவர்த்தி-பாண்டிய நாட்டு அமைச்சன், 339
ஆர்மஸ், 429
ஆர்மீனிய இனத்தவர்-வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள், 95, 97, 98, 102
ஆர்மீனியா, 102
ஆலங்கானம்-போர் நிகழ்ந்த இடம், 201
ஆலுபஸ் (தென் கன்னடத்து), 234
ஆல்புகர்க், 437
ஆல்பைன் மலை, 98
ஆலூர் மூலங்கிழார், 226
ஆலூர் முற்றுகை, 202
ஆழ்வார்கள், 8
ஆன கொண்டி, 365, 368, 369, 372, 476
ஆனந்த கோத்திர அரசர்கள், 172
ஆனைமலை, 60, 95
ஆஸ்டிரலாயிடு இனமக்கள், 95
ஆஸ்டிரிக் இனமக்கள், 88
ஆஸ்திரேலியா ஆசிய மொழிகள், 100
ஆஸ்திரேலியா இனத்தின் ஆதிமுன்னோர், 96

இ

இசுப்பு இரப்பன், 314
இசாமி-முஸ்லிம் வரலாற்றாசிரியன், 38
இசோ தபிர், 313
இச்சுவாகு வமிசம், 5, 159, 160
இடவை, 247, 272
இட்டார் பஹார், 80
இந்திர பட்டாரகன்-விஷ்ணு குண்டின மன்னன், 171, 172
இந்திர வர்மன்-கங்க மன்னன், 172
இந்திரன்-மூன்றும் ராஷ்டிரகூட மன்னன், 277
,, நான்காம் ,, 280
,, ராஷ்டிரகூட அரச குமாரன், 250
இந்தோ ஆரிய மொழிகள், 99-101
இந்தோ சீனா, 4, 6, 24, 88, 131, 170
இந்தோனேஷியா, 4
இபன் பதூதா-மூர்ப் பயணி, 47, 374
இப்ராஹிம் அடில்கான், 450, 451, 457, 458
இப்ராஹிம்-இரண்டாம் பிஜப்பூர் சுல்தான், 40, 410
இம்மடி நரசிம்மன், 430
இமய வரம்பன்-சேர மன்னன், 189
இரணிய வர்மன், 244
இரவி கொற்றன், 341
இலக்கியம்-வரலாற்றுக்கு ஆதாரமாக இருப்பது, 34, 35
இலங்கை, 4, 5, 22, 44, 127
இல்வலன், 115
இளஞ்சேட் சென்னி, 203
இளந் தத்தன்-தமிழ்ப் புலவர், 202

இறையனார் அகப்பொருள், 36, 185
இறையனார் அகப் பொருள் உரை, 123
இஸ்பண்டியர், 376
இஸ்பராயின் ஆசரி-பாரசீகக் கவிஞர், 392, 395
இஸ்மாயில் அடில்ஷா, 438, 442-445
இஸ்மாயில் முக், 376

ஈ

ஈரான், 91, 98
ஈஸ்வரன்-துளுவப் படைத் தலைவன், 427, 428

உ

உக்கிரசேனன்-பாலக்கா, 165
உக்கிரப் பெருவழுதி -பாண்டியன், 185
உச்சங்கி, 296
உட்டுஹூர்-ஆந்திரம், 85, 88
உதயகிரிக் கோட்டை, 416, 417, 420, 426, 427, 429, 439, 470
உதயச் சந்திரன்-பல்லவப் படைத் தலைவன், 244
உதயன்- நான்காம்- சிங்களம், 275
உதயணன்-சபர அரசன், 244
உதியஞ் சேரல்-சேரன், 191
உத்தம சோழன், 281
உத்தரமேரூர், 471
உபேந்திரன்-பரமார மன்னன், 277
உம்மத்தூர், 428, 433, 434, 439, 449
உலூக்கான், 346
உல்லி, 94, 104
உறையூர், 192, 203, 204

எ

எகுவல சாந்தமூலன்-இச்சுவாகு மன்னன், 160
எக்கோஜி, 26
எரகுடி, 22
எருவர், 96
எலமைட்டு 102, 103
எலி, 45, 350
எல்லிச்பூர், 389, 390
எல்லோரா, 7, 246, 248
எறயன்-கங்க மன்னன், 254
எறயங்கன், ஹொய்சாள, 296, 301

ஏ

ஏடன், 129, 429

ஐ

ஐங்குறு நூறு, 184
ஐதராபாத் அகழ்வு, 85
ஐத்திரேய ஆரணியகம், 111
ஐத்திரேய பிராமணம், 111
ஐஹோல், 6, 28, 233

ஒ

ஒடோரிக், 50

ஓ

ஓரி, 194

ஔ

ஔவையார், 195, 196, 200

க

கக்கலன்-சேதியரசன், 275
கக்கலர், 101
கங்கராயன், 439
கங்கர்கள்-கங்கவாடி, 180-182 287, 296
கங்கர்கள்-கலிங்கம், 253, 264
கங்கர்கள்-மைசூர், 234, 240, 244, 245
கங்கவர்மன்-கடம்ப மன்னன், 177, 178
கங்கவாடி, 180-182, 250, 255, 282, 292
கங்குபஹமன், 377
கங்கை கொண்ட சோழபுரம், 9,272, 287, 296

கங்கைய சாஹினி, 344
கசப்பன்-லங்கை மன்னன், 275, 285
கடபா, 100
கடம்ப நாணயங்கள், 33
கடம்ப மன்னர்கள், 5, 23, 160, 162, 173, 178, 233
கடிகை, 243
கடுங்கோன்-பாண்டியன், 185, 235, 239
கட்டாக், 441
கணபதி-காகதீய மன்னன், 312, 313
கணைக்கால் இரும்பொறை-சேர வேந்தன், 203
கண்டரன்-ஆனந்த கோத்திர மன்னன், 172
கண்டராதித்தியன் - சோழ மன்னன், 280, 281, 326
கண்டலா கணவாய், 59
கண்டூர், 357
கண்ணகி, 190, 191
கண்ணனூர்க் கொப்பம், 336, 373
கதாயுத்தா, 37
கந்திவிலி, 82
கபிலர், 193, 194
கபிலேஸ்வர கஜபதி, 399, 423, 426, 427, 429
கமரா, 221
கமால்கான், 438
கம்பவர்மன்-பல்லவ அரச குமாரன், 252, 274
கம்பில தேவன், 358, 364, 365
கம்புஜம், 287
கயவாகு-லங்கை மன்னன், 187
கராச்சி, 81
கரிகாலன், 7, 197, 199, 213, 214
கருணாகரத் தொண்டைமான், 299
கருதபில்லன்-உஜ்ஜைனியரசன், 151
கருவூர், 196
கரைச்சூர், 377
கர்கதீய நாணயங்கள், 33
கர்க்கன்-இரண்டாம் ராஷ்டிரகூடன், 280
கர்க்கன்-லாட்டா மன்னன், 253
கர்ணன்-சாதவாகன மன்னன், 154
கர்நூல், 79
கர்ஷஸ்ப் மாலிக், 353
கலிங்கம், 112, 132, 139, 140, 150, 170, 183, 234, 246, 257
கலிங்கத்துப்பரணி, 37, 300
கலிங்காதிபதிகள், 170
கலிதிண்டி-போர்க்களம், 289
கலித்தொகை, 184
கலிமுல்லா-பாமினியரசன், 408
கல்யாணி, 288, 290, 294, 309
கல்யாணிச் சாளுக்கியர்கள், 10, 271, 280, 309
கழுகுமலை, 144
கழுமலம்-போர்க்களம், 203
கழுவுள், 195
களப்பிரர், 5, 227, 228, 235, 238
களவழி, 203, 212, 213
கள்ளர், 97
கன்னரதேவன்-சோழ அரச குமாரன், 276 277
கன்ஹன்-சாதவாகன மன்னன், 149
கன்ஹேரி, 22, 152, 158

கா

காகதீய அரசர்கள், 11, 12, 272, 289, 309, 312, 330, 333, 335, 339, 345, 352
காகுஸ்தவர்மன்-கடம்பர் மன்னன், 175
காசிம் பரீத், 407, 408, 431
காசிம் பெக், 395
காசைட், 102
காஞ்சி (காஞ்சிபுரம்), 165, 230, 235-243
காடர், 95, 96
காடவராயர், 335
காட்டைய வேம ரெட்டி, 387, 420
காண்டேஷ், 233, 391, 393
காத்யாயனர், 112, 113, 125
காந்தளூர், 282
காபாலிகர், 227

கரப்பைய நாயக்கன், 367, 370
காப்ரா பஹார்-பாறை ஓவியம், 89
காமுண்டன், 262
காம்போஜம் (கம்போடியா) 300
காயங்குளம், 45
காயல் (பட்டினம்) 64, 347
காரவேலன்-கலிங்க மன்னன், 132, 142, 148, 150
காரி, 194
கார்டன், 82, 91
கார்டன் சைல்டு, 91, 93
கார்லே, 22, 158
காலகர்-சமண முனிவர், 151
கால்டுவெல், 102
காவிரி, 7, 10, 61, 65, 69, 70
காவிரிப் பட்டினம், 64, 198, 221
காவில்கர்-கோட்டை, 389
காளகஸ்தி, 274, 434, 448
காளிதாசர், 150, 175
கான் ஜஹான், 393
காஸ்மாஸ்-வெளிநாட்டுப் பயணி, 43, 44

கி

கியாஸ் உதீன்-பாமினியரசன், 387
கியாஸ் உதீன் தம்கனி, 373, 374
கியாஸ் உதீன் துக்ளக், 361, 362
கிராமபோஜகன், 261
கிருஷ்ண நதி, 18, 61, 65, 69, 70, 154, 156, 157
கிருஷ்ணப்ப நாயக்கன், செஞ்சி, 475, 477, 478, 479
கிருஷ்ணவர்மன்-கங்க மன்னன் 179
கிருஷ்ணவர்மன்-கடம்ப மன்னன் 178, 179
கிருஷ்ணன்-யாதவ மன்னன், 342
கிருஷ்ணன்-முதலாம் ராஷ்டிர கூடன், 248
கிருஷ்ணன்-இரண்டாம் ராஷ்டிர கூடன், 254, 255, 275, 276, 277
கிருஷ்ணன்-மூன்றும் ராஷ்டிர கூடன், 89, 256, 276-279
கிழக்குக் கடற்கரை மலைகள், 74
கிழக்குக் கடற்கரை வர்ணனை, 73
கிழக்குச் சாளுக்கிய நாணயங்கள், 32
கிழான் 261
கிறித்துவ இடக்கிடப்பியல், 43

கீ

கீர்த்திவர்மன் - பாதாமிச் சாளுக்கியன், 180, 233.

கு

குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை, 196
குடுமியாமலை - பொறிப்பு, 29
குட்டுவன் - சேரன், 189
குணகவிஜயாதித்தியன் - கிழக்குச் சாளுக்கிய மன்னன், 254, 275
குணபரன், 236
குதுப் உல் முல்க் - கோல்கொண்டா, 406
குத்தி, 294, 414, 450, 453, 469
குத்புதீன் முபாரக், 359
குந்தவை, 283
குந்தளம், 133, 159, 174
குப்ளாக்கான், 45, 48, 349
குமரி, 221
குமார கம்பணன், 416
குமார கிரி, 420
குமார குப்தன், 175
குமார விஷ்ணு - முதலாம் பல்லவ மன்னன், 164
குமாரில பட்டர், 8
கும்பகோணம், 210, 244
குர்க்கு, 100
குர்ஜரர் - மாளவம், 234, 246, 275
குலசேகரன் - பாண்டியன், 305, 306

குலோத்துங்கன் - முதலாம், 11, 37, 293, 295, 303, 305, 314, 327, 338
குலோத்துங்கன் - இரண்டாம், 37, 304
குலோத்துங்கன்-மூன்றும், 302, 331, 332, 344
குல்பர்கா, 13, 376, 377 - 379, 380
குவலாலா, 180
குவாஜா ஜஹான், 397
குவாஜி சிராஜுதின், 385
குறும்பர், 96
குறும்பன்-சாதவாகனமன்னன், 154
குனலம் - போர்க்களம், 234
குன்றத்தூர் - வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் இருப்பிடம், 90
குஜராத், 79, 82, 233, 341, 376
குஸ்ரு - இரண்டாம், 237
குஸ்ருகான், 359, 360

கூ

கூடல் சங்கமம் - போர்க்களம், 242

கெ

கெர்லா, 390, 398

கே

கேரள புத்திரர், 137
கேரள மஹாத்மியம், 228
கேரளோற்பத்தி, 34, 228

கை

கைலாசநாதர் கோயில் - காஞ்சி, 242, 245

கொ

கொங்கணக் கரை, 72
கொங்கணஸ்த பிராமணர், 99
கொங்கணி வர்மன் - கங்க மன்னன், 180, 181
கொங்கு, 138, 189, 229, 244, 245
கொங்குதேச ராஜாக்கள் சரித்திரம், 34
கொச்சி - பெருங்கற்கள், 90
கொடுங்குன்றம், 193
கொட்கிர் - கோட்டை, 362
கொட்டிகன் - ராஷ்டிரகூடன், 279
கொண்டபள்ளி, 402, 441
கொண்ட வீடு, 368, 399, 400, 426, 427, 440
கொண்ட வீட்டு ரெட்டிகள், 368, 377
கொண்டுவானு, 387, 389
கொப்பம் - போர்க்களம், 291
கொப்பூரி ஜக்கராயன், 473 - 475
கொரூரா (வஞ்சி) 196
கொலனு, 75, 299
கொல்சி, 221
கொல்லம், 256, 341, 350, 423
கொல்லம் ஆண்டு, 256
கொல்லாபுரம், 291
கொல்லிமலை, 194, 229
கொள்ளிப்பாக்கை, 284, 290
கொற்கை, 64, 201

கோ

கோகர்ணம், 434
கோசர், 138, 142
கோச்சடையன் - பாண்டியன், 244
கோட்டம், 262
கோட்டா - ராஜஸ்தான், 79
கோட்டாறு - போர்க்களம், 298
கோண்டு - திசைமொழி, 100
கோதாவரியாறு, 66, 67, 89
கோபணன், படைத்தலைவன், 416
கோப்பெருஞ் சிங்கன், காடவ மன்னன், 11, 333, 337, 345
கோப்பையன் - ஹொய்சாளப் படைத்தலைவர், 333
கோலி, 4
கோல்கொண்டா, 114, 380, 479
கோல்கொண்டா கடற்கரை, 74, 75

கோவர்த்தன மார்த்தாண்ட வர்மன், 314
கோவலன், 187, 191, 201
கோவா, 233, 377, 398, 418, 427, 434, 438, 444, 447, 456, 457
கோவிந்தவர்மன் - விஷ்ணு குண்டின அரசன், 171, 172
கோவிந்தன்-இரண்டாம் ராஷ்டிர கூடன், 249
கோவிந்தன்-மூன்றும் ராஷ்டிர கூடன், 249, 250
கோவிந்தன்-நான்காம் ராஷ்டிர கூடன், 277
கோவிந்தன்-புரட்சித் தலைவன், 234
கோவிஜய ஸ்கந்த சிஷ்ய விக்கிர வர்மன்-பல்லவன், 243
கோவூர்கிழார், 202, 209

கௌ

கௌடில்யர், 113, 135, 191
கௌதமி கோதாவரி, 66
கௌதமி பலஸ்ரீ, 153
கௌதமி புத்திர சாதகர்ணி-சாதவாகன மன்னன், 153, 158
கௌதமி புத்திரன் - வாகாடக இளவரசன், 174
கௌத்தல் - போர்க்களம், 380

ச

சகர், 147, 151, 152, 156, 174
சக்திவர்மன் - முதலாம் கிழக்குச் சாளுக்கியன், 283, 286
சக்திவர்மன் - இரண்டாம் கிழக்குச் சாளுக்கியன், 291
சக்கராயுதன், 250
சங்க காலம் :-
அரசர்கள், 186, 208
அரசியலமைப்பு, 129, 188
அரசு, 207, 208
இலக்கியம், 184, 189
கலப்புப் பண்பாடு, 204
காலநிர்ணயம், 187
சமயம், 225, 227
சமுதாய வாழ்க்கை, 188, 206
சேரமன்னர், 7, 8, 186, 196, 197-199, 202, 203
சோழமன்னர், 78, 197, 199, 202
தமிழக அரசுகள், 187
திருமணம், 205
நிலமும் மக்களும், 206
பாண்டியர், 200
வாணிகம், 210, 219, 224
சங்க காலத்துக்குப் பின் இருண்ட காலம், 5
சங்கண்ண நாய்க்கன், 457
சங்க தேவன் - சோதிடர், 342
சங்கம வமிசம், 368
சங்கமேஸ்வரம் - அரசன், 393, 394, 398
சங்கரர், 8, 256
சங்கனக் கல்லு, 85
சங்கராம விஜயோத்துங்க வர்மன் - ஸ்ரீவிசயம், 287
சங்கை - ராஷ்டிரகூட அரச குமாரி, 252
சதாசிவராயன், 450, 453, 454, 464, 465, 466
சத்திய புத்திரர், 138
சத்தியாசிரயன் - மேற்குச் சாளுக்கியன், 279, 286
சந்தவர்மன் - சாலங்காயன மன்னன், 169
சந்திரகிரி-கோட்டை, 448, 467
சந்திரகுப்த மௌரியன், 134, 135
சந்திரகுப்தன் - இரண்டாம் குப்தப் பேரரசன், 151, 174, 175
சந்திர பானு, 337
சந்திர வல்லி, 43, 177
சபரர், 111
சபர்மதி நதி, 79
சமணம், 5, 6, 144, 162, 226, 229, 235, 255
சமுத்திரகுப்தன், 165, 168, 170, 174
சர்வசேனன்-வாகாடகன், 173, 176
சர்வதரிசன சங்கிரஹம், 16
சலகராஜு திருமலை, 449, 450, 453,
சவரா - மொழி, 100
சஹியாத்திரி, 274

சா

சாகர் தீவு, 151
சாக்கியர், 256
சாஞ்சி, 156
சாதகர்ணி - இரண்டாம், 149, 150
சாதகர்ணி-சாதவாகனன், 149, 150
சாதவாகன-
அரசர்கள், 4, 149, 154
நாணயங்கள், 32
வமிசம், 148, 155
சாதவாகனர்-
அரசியலமைப்பு, 154
காலம், 155
சமயம், 158
சமுதாயம், 155
சாதிகள், 155
வாணிகம், 157
சாந்திவர்மன்-
கடம்பன், 178
சாந்து பீபீ, 461
சாமிமகா சேனர், 163
சாமுண்டராசன் - சாளுக்கியப் படைத்தலைவன், 291
சாம்பல் நதி, 79
சாம்புவராயர், 335, 371, 373, 416
சாயனர், 16, 417
சாயர் புரம், 81
சாருதேவி - பல்லவ அரசி, 164
சாலங்காயனர், 5, 168, 171
சாலியூர், 219
சாலை - போர்க்களம், 298
சால், 418, 427
சாளுக்கிய - அரசர்கள், 6, 29, 172, 179, 230, 233, 246, 256, 263, 265
சாளுக்கிய நாணயங்கள், 32
சாளுக்கிய பல்லவப் போர், 231, 236, 241
சாளுக்கிய வரலாறு - இலக்கியச் சான்றுகள், 37
சாளுவ கோபதிம்மன், 426, 434
சாளுவதிக்கமன் - யாதவப் படைத்தலைவன், 343
சாளுவதிம்மராசன், 440, 445
சாளுவ நரசிம்மன், 401, 427 - 429, 439
சாளுவ வீரநரசிம்மன் 439, 448, 449, 452
சாளுவமங்கு, 416
சாணூர், 90
சான்தோம், 457

சி

சிக்கந்தர்கான், 396
சிகிரியா, 5
சிங்கணன், யாதவன், 354, 355
சிங்கணன் - ஹொய்சாளப் படைத்தலைவன், 336
சிங்கராலி, 79
சிங்கன்பூர் - பாறை ஓவியம், 89
சிங்கைய நாயக்கன்,358
சிதம்பரம், 331, 334, 337, 338, 434
சித்தல துர்க்கம், 140
சித்தபுரம், 21
சித்தாந்த சிரோமணி, 342
சித்திரமாயன், 243, 244
சித்தூர்கா-ராஜஸ்தான், 79
சித்பவன்--பார்ப்பனர், 61
சிந்துநதிப் பள்ளத்தாக்கு, 97
சிந்து நதிப் பள்ளத்தாக்குச் செப்பேடுகள், 25-27
சிந்து நதிப் பள்ளத்தாக்குப் பொறிப்புகள் கூறும் செய்திகள், 24, 28, 29
சிமுகன்-சாதவாகனன், 149
சிம்மவர்மர்மன்-கங்கன், 181
சிம்மவர்மன்-பல்லவன், 164, 181
சிம்மவர்மன்-முதலாம் பல்லவன், 166, 167, 235
சிம்மவர்மன்-இரண்டாம் பல்லவன், 167
சிம்மவிஷ்ணு பல்லவன், 25. 167, 235, 238, 255
சியால்க்B, 91
சியோனி–மாளவம், 88
சிரவண பெல்கோலா, 135
சிருங்கேரி, 375
சிலப்பதிகாரம், 137, 187, 191, 199, 229
சிவதத்தன்-ஆபீரன், 159

சிவமாரன்-இரண்டாம் கங்கன், 250
சிவாலிக் மலை, 79
சிறுபாணாற்றுப் படை, 203
சின்ன தேவி, 440
சின்னத்திம்மன், 455
சின்னமனூர், 200

சீ

சீரங்கம், 303, 331, 333, 337, 338, 416, 432, 434, 449
சீரங்கம் கோயில் ஒழுகு, 34
சீரங்கன் - முதலாம் விஜய நகர மன்னன். 466–468
சீரங்கன் - இரண்டாம் விஜய நகர மன்னன், 472–474
சீரங்கன்-மூன்றும் விஜயநகர மன்னன், 477, 479–481
சீலபட்டாரிகை, 266
சீலமகாதேவி, 249
சீனு, 41, 43–45, 130, 350, 414

சு

சுங்கர்கள், 149, 150
சுட்டுகள், 5, 159, 160, 162, 163
சுத்த நிபாதா, 112
சுந்தர சோழன் செய்த போர்கள், 281
சுந்தர பாண்டியன், 336, 339, 357, 360
சுந்தரம் பிள்ளை-பேராசிரியர், 18, 19
சுந்தரமூர்த்தி நாயனர், 193 256
சுபன்சி–சீன நூல், 45
சுமாத்திரா, 131
சுமேரியா, 103, 104
சுல்தான் அபுல் முசபர் அலா வுதீன், 376
சுல்தான் அபுல் முசபர் பஹ மன்ஷா, 375
சுவர்ணகிரி, 141
சுனஹ்செப தேவராட்டன், 111

சூ

சூடாமணி விஹாரம், 284

செ

செங்கணன், 203
செங்கல்பட்டு, 90
செங்குட்டுவன்–சேரன், 187, 189, 191, 203
செங்கோட்டை–கணவாய், 60
செங்கோ–சீனப்படைத் தலை வன், 45
செஞ்சி, 475–479, 481
செஞ்சுகள், 96
செப்ரோலு, 283
செம்மாங்குகள், 95
செம்பியன் மாதேவி, 280
செம்பொன்மாரி–போர்க் களம், 298
செரைக் கலா, 81
செல்வக் கடுங்கோ வாழி யாதன், 192, 194

சே

சேதியரசர்கள், 344
சேந்தமங்கலம், 334, 337
சேந்தன்–பாண்டியன், 256
சேய்–சேரன், 197, 201, 218
சேரமன்னர்கள், 186–188, 191, 196–199, 201, 203, 228, 229, 255, 256, 274, 313, 340, 341
சேரமான் பெருமாள், 255, 256
சேனன்–முதலாம், சிங்கள மன்னன் 247, 253
சேனன்–இரண்டாம், சிங்கள மன்னன் 253

சை

சைலேந்திரர், 284
சைவம், 8, 172, 236, 237

சொ

சொபட்மா, 221
சொப்பாரா, 140
சொரத்தூர், 312

சோ

சோடஇக்கன், 335

சோமதேவன்-அரவீடு வமிசத்தினன், 368
சோமேஸ்வரன் - முதலாம் மேற்குச், சாளுக்கியன், 288, 294, 296
சோமேஸ்வரன் - இரண்டாம் மேற்குச் சாளுக்கியன், 288, 294, 296
சோமேஸ்வரன் - மூன்றும் மேற்குச் சாளுக்கியன், 303, 309
சோமேஸ்வரன் - நான்காம் மேற்குச் சாளுக்கியன், 89
சோமேஸ்வரன் - ஹொய்சாளன், 288, 294
சோழ அரச பரம்பரை, 314, 316
சோழ அரசர்கள், 7, 12, 26, 28, 30, 31, 33, 197-199, 201-203, 215, 216, 223, 225, 270-273, 276, 277, 280-291, 293-309, 312-315, 320-322, 344
சோழ-அரண்மனை,316
சோழ-நாணயங்கள்,33
சோழ-நிர்வாக அமைப்பு 319, 321
சோழ - நீதிமன்றங்கள், 320, 321
சோழமண்டலக்கரை, 64,65
சோழமண்டலக்கரை - வர்ணனை, 76
சோழ வரலாறு - இலக்கியச் சான்றுகள், 35-37
சோழர் காலத்தில் கிராமத் தன்னாட்சி, 319
சோழர் காலத்தில் மக்கள் நிலை, 320-322
சோன் பள்ளத்தாக்கு - பாறை ஓவியம், 89
சோஹான் (கற்கருவிகள்), 79

சௌ

சௌஜ-குவா-சீன நூலாசிரியர், 45

ஞா

ஞானேஸ்வரர் - மராத்தியப் புனிதர், 344

ஞி

ஞிமிலி, 196

டா

டாலமி-கிரேக்க நில நூலாசிரியர், 42, 157, 188, 192, 196

டு

டுவார்ட்டே பார்போசா - போர்ச்சுக்கீசியப் பயணி, 52

டெ

டெமிட்ரியஸ் - இந்தோ கிரேக்க அரசன், 162

த

தகடூர், 189, 195
தகடூர் யாத்திரை, 196
தகரம், 157
தக்காணத்தில் முஸ்லிம் எதிர்ப்பு இயக்கம், 364, 375
தக்காணப் பீடபூமி, 1-7
தக்காண - ஆறுகள், 64-71
தக்காணம் - இயற்கையமைப்பு 61-93
தக்குவ-பா, 252
தக்கோலம் - போர்க்களம், 273
தஞ்சாவூர், 272, 331, 481
தடிகைபாடி, 282
தட்சிண கபிலேஸ்வர குமார ஹம்வீர மஹாபாத்ரன் - அரசகுமாரன், 400
தண்டி - வடமொழிப் புலவர், 256
தந்தி துர்க்கன் - ராஷ்டிரகூடன், 246, 248, 256
தந்தி வர்மன்-பல்லவ மன்னன், 248, 251

தந்தி வர்மன் - ராஷ்டிர கூடன், 246, 248, 251
தபதிநதி, 71, 89
தபோல், 377, 418, 427
தமியா, 88
தமிழ்நாடு, 5
தமிழ் நாடு அரசுகளின் கூட்டிணைவு, 142
தமிழ் நாடு அரசுகள் - அசோகர் கல்வெட்டில், 138
தமிழ் நாடு-இலக்கியம், 4
தமிழ் நாடு-மொழி, 3
தம்மைய கௌடன், 470
தரிசா பள்ளி, 313
தருதவாடி, 279, 309
தர்மபாலன்-வங்காளம், 249
தர்மமகாராஜாதி ராஜர், 264
தலைக்கோட்டை ரட்சசி - தங்கடி, 454-462
தலையாலங்கானம் - போர்க்களம், 197
தன்னடம்-போர்க்களம், 290

தா

தாமிரபரணி, 70
தாமோதரசேனன் – வாகாடக மன்னன், 175
தாமோதர வர்மன் - ஆனந்த கோத்திர மன்னன், 172
தாம்லுக், 44
தாரா, 289
தாராசுரம், 272
தாரா வருஷன் - சக்கர கூடத்து, 289, 292
தாஊத்கான் - பாமினியரசன், 383
தால குண்டம்-பொறிப்பு, 28
தாணர்நவன் - கிழக்குச் சாளுக்கிய மன்னன், 278, 279, 283
தானிய கடகம், 157, 283

தி

திக்கண, 345
திண்டிஸ், 220
திரசிப்பூர், 85, 89
திம்மபூபன், 430
திம்மராசன், 430
திரமிளம், 102
திராவிடம், 3, 96, 93-103, 105
திராவிடம் - தொன்மையும் மொழிகளும், 3, 96, 98
திராவிடம் - தோற்றம், 102, 103, 105
திராவிடம்-பண்பாடு, 19
திராவிடம் - பண்பாட்டு இயைபுகள், 98, 100-102
திரிபுவனை, 272
திரிபுராந்தகன் - சிற்றரசன், 344
திரிம்பகம்-கணவாய், 59
திரிச்சிராப்பள்ளி, 426
திருநெல்வேலி, 81, 82
திருப்புறம்பியம், 273
திருமங்கையாழ்வார், 199, 248
திருமலாதேவி, 440
திருமலை தேவமகாராஜா, 426
திருமலை - முதலாம் விஜய நகரத்து அரசன், 453, 454 462, 463, 465
திருமுக்கூடல்-பொறிப்பு, 27
திருமுடிக்காரி, 194
திருவண்ணாமலை, 373
திருவதிகை, 242
திருவல்லம் - போர்க்களம், 276
திருவிடைவாயில் - பொறிப்பு 29
திருவிதாங்கூர், 2
திருவேந்திபுரம்-பொறிப்பு, 28
திரைகூடகர், 5
தில்பசந்துகான், 406
திவாகர சேனன் - வாகாடக அரசகுமாரன், 175
திவானி, 437

தீ

தீபகற்ப இந்தியா - அரங்கங்கள், 73-75
தீபகற்ப இந்தியா-ஆற்றுக்கழி முகநாடு, 62-64
தீபகற்ப இந்தியா - இயற்கையமைப்பு வடிகால், 64-65

தீபகற்ப இந்தியா - துறை முகங்கள், 73-74
தீபகற்ப இந்தியா - மழையும் தாவரங்களும், 62-64

**து**

துகல்சின், 383, 418
துக்கமாற எறயப்பன், 242, 249
துங்கபத்திரை நதி, 10, 68
துர்விநீதன் - கங்க மன்னன், 7, 234, 238
துருவன் - முதலாம் ராஷ்டிர கூடன், 249, 265
துருவன் - முதலாம் லாட்டா மன்னன், 254
துருவன் - இரண்டாம் லாட்டா மன்னன், 254
துவார சமுத்திரம், 11, 343, 356, 357, 359, 364, 365
துளுவ ஈஸ்வரன், 427, 430
துளுவ நாடு, 374

**தூ**

தூத்துக்குடி, 82

**தெ**

தெலுங்குச் சோட நாணயங்கள், 33
தெலுங்குச் சோடர், 7, 11
தென்ளாறு, 251, 272
தென்னாப்பிரிக்கா — நுண் கற் கருவிகள், 82
தென்னிந்திய அகழ்வுகள், 83
தென்னிந்திய இனங்கள், 94
தென்னிந்திய மொழிகள், 99
தென்னிந்திய வரலாறு— கவனம் பெருமை, 1
தென்னிந்திய வரலாற்றின் முக்கியமான காலப் பிரிவுகள், 135, 154
தென்னிந்தியப் பண்பாட்டு வளர்ச்சி, 78
தென்னிந்தியா ஆரியமயமாதல், 4, 19
தென்னிந்தியாவுக்கும் கீழை நாடுகளுக்கும் கடல் வழித் தொடர்பு, 128, 129
தென்னிந்தியாவுக்கும் மேலை நாடுகளுக்கும் கடல் வழித் தொடர்பு, 127, 128

**தே**

தேவகர் - உத்திரப் பிரதேசத்தில், 79
தேச போஜகன், 263
தேவகிரி, 354, 366
தேவசேனன் - வாகாடக மன்னன், 176
தேவவர்மன் - சாலங்காயன மன்னன், 168

**தை**

தைமூர், 386, 390
தைலன்-இரண்டாம் மேற்குச் சாளுக்கியன், 9, 280, 272
தைலன் - மூன்றும் மேற்குச் சாளுக்கியன், 310, 311

**தொ**

தொண்டி, 207
தொண்டை நாடு, 274
தொண்டை மண்டலம், 140, 251, 273
தொண்டைமான், 195
தொண்டைமான் இளந்திரையன், 199
தொல்காப்பியம், 123, 124
தொழுதூர், 334
தொனூர், 284

**தோ**

தோசாலி, 140

**தௌ**

தௌலதாபாத், 378, 379, 382, 385
தௌளி, 140, 141

**த்**

த்ரிம்லே, 102

### ந

நகரம், 261
நக்கீரர், 200
நசிருதீன், 374, 376
நசிர்கான், 391, 393
நச்சினார்க்கினியர், 122, 199
நத்தத்தனார், 204
நந்தர், 132
நந்தல கிருஷ்ணராயன், 470
நந்தி கணமா, 82
நந்தி கிராமம், 244
நந்திவர்மன்—முதலாம் சாலங்காயன மன்னன், 169
நந்திவர்மன் இரண்டாம் சாலங்காயான மன்னன், 169
நந்திவர்மன் - இரண்டாம் பல்லவன், 162
நந்திவர்மன் - மூன்றும் பல்லவன், 163
நரச நாய்க்கன்-விஜய நகரம், 407
நரசிம்மன் - முதலாம் கிழக்குக் கங்கன், 346
நரசிம்மன் - நான்காம் கிழக்குக் கங்கன், 347
நரசிம்மன் - முதலாம் ஹொய்சாளன், 310
நரசிம்மன்-இரண்டாம் ஹொய்சாளன், 333
நரசிம்மன் - மூன்றும் ஹொய்சாளன், 338
நரசிம்மவர்மன் - முதலாம் பல்லவன், 237
நரேந்திர மிருகராஜன் - இரண்டாம் விஜயாதித்தன், 250
நரேந்திரசேனன் - வாகாடகன், 175
நர்மதை நதி, 71, 89
நலங்கிள்ளி, 202
நல்லசித்தன், 313
நல்லியக்கோடன், 204
நவநந்ததேரா, 133
நவுரா, 220
நளர், 233
நற்றிணை, 184
நன்னன், 196

### நா

நாகபட்டன் - இரண்டாம் குர்ஜான், 250
நாகபாணன் - சக அரசன், 152
நாகப்பட்டினம், 284
நாகம நாய்க்கன், 366
நாகர், 160
நாகலாதேவி, 447
நாகனிகா, 149
நாகார்ஜுன கொண்டா, 4, 79, 85, 86
நாசிக், 22
நாடு, 262
நாட்டுக்கோன், 263
நாணயம் - வகைகள், 30, 31, 33, 34
நார்டிக் இனம், 99
நானே காட, 149

### நி

நிக்கலோ காண்டி, 51
நிக்கிடின், 51, 409
நிரவதியபுரம், 276
நிருபதுங்கன் - பல்லவன், 252, 253, 273, 274
நிருபதுங்கன் — ராஷ்டிரகூடன், 253
நிலவர், 347
நிஜாம் ஷா—பாமினியரசன், 397
நிஷும்பசூதினி, 272

### நீ

நீலகிரி, 89

### நூ

நூனிஸ், 53, 419 - 423 - 427, 429, 433, 435, 442, 444, 445, 448, 449, 451, 486

### நெ

நெக்ரிட்டோ, 94
நெடுங்கிள்ளி, 202
நெடுஞ்செழியன், 200, 201, 202, 218

நெடுஞ்சேரலாதன், 188
நெடுநல் வாடை, 218
நெடுமான் அஞ்சி, 195
நெட்டூர்-போர்க்களம், 307
நெவ்சா–அகழ்வு, 87

நொ

நொலம்பபாடி, 282, 309
நொலம்பாதி ராஜன்-முதலாம், 254

ப

பக்கேரே - பாண்டிய நாட்டுத் துறைமுகம், 220
பக்தி இயக்கம், 8
பங்கல், 417
பங்காப்பூர்க் கோட்டை, 419
பட்டக அமோக வர்ஷன்—மூன்றும் ராஷ்டிரகூடன், 277
படியராவ், 428
பட்டக்குலா, 429
பட்டடக்கல், 6, 233
பட்டிப் ரோலு, 22, 142, 143
பட்டினப்பாலை, 197 - 199, 210, 214, 218
பணம்–நாணயம், 31
பண்டரங்கன் — கிழக்குச் சாளுக்கியப் படைத் தலைவன், 275
பண்டையா, 42
பதுல்லா இமதுல் முல்க், அரசன், 399, 406, 407
பதிற்றுப்பத்து, 184, 187, 191,
பத்திரபாகு-சமண முனிவர், 134
பத்தினி, 190, 191
பத்துப்பாட்டு, 184, 197, 199, 200, 203
பத்ம தங்கம் - நாணயம், 31, 33
பந்தர் - சேர நாட்டுத் துறை முகம், 219
பம்ப பாரதம், 37
பரசுராமன், 110
பரசுராமன்-கட்டுக் கதை, 119
பரணர், 189, 190
பரமேஸ்வர வர்மன் - முதலாம் பல்லவன், 240, 241
பரமேஸ்வர வர்மன்-இரண்டாம் பல்லவன், 242
பரம்பிக் குளம், 95
பராக்கிரம தேவன்–பாண்டியன், 365
பராக்கிர பாகு-லங்கை அரச குமரன், 334
பராக்கிரம பாகு - முதலாம் லங்கை மன்னன், 305, 307
பராக்கிரம பாகு - இரண்டாம் லங்கை மன்னன், 337
பராக்கிரம பாகு - மூன்றும் லங்கை மன்னன், 339
பராக்கிரம பாண்டியன்-(உள் நாட்டுப் போர்), 305
பராசரஸ்மிருதி, 16
பராந்தக சோழன் - முதலாம், 10, 30, 274, 277, 303
பராந்தக சோழன் - இரண்டாம், 280, 315
பராந்தக வீரநாராயணன் பாண்டியன், 251, 253, 274, 299, 305, 314
பரிபாடல், 184
பரீதுல் முல்க்-பீடார் சுல்தான், 406
பரீதுஷா, 459
பர்தாவோ-நாணயம், 31
பர்தெளசி, 38
பர்னி-முஸ்லீம் வரலாற் றுசிரியர், 358, 359
பலிட்டா - துறைமுகம், 221
பல்லவ வமிசம்—கிராம வாழ்க்கை, 264-266
பல்லவ வமிசம் - தோற்றம், 162
பல்லவ வமிசம்-நிர்வாகம், 162, 167
பல்லவ வமிசம் - பாண்டியப் போர், 238, 239, 244-252
பல்லவ வமிசம் - மன்னர்கள், 7, 25, 162, 168, 179, 181, 235, 252, 255, 264, 265
பல்லவ வமிசம் - வரலாறு-இலக்கியச் சான்று, 37
பல்லவராயன், 305
பல்யாக சாலை முதுகுடுமி, 200

பவதத்தவர்மன் - நளமன்னன், 175
பழங்கற்காலம், 79, 80
பழையன் மாறன், 196
பனம்பாரனார், 123, 124
பனவாசி, 233, 284, 310, 311
பஸ்டார், 233
பஹமன்நாமா-வரலாறு, 392
பஹமன் - பாரசீக நாட்டுப் புராண வீரன், 376
பஹரம் கான் மசந்த ராணி—தௌலதாபாத் ஆளுநர், 379, 382
பஹல் அகழ்வு, 87
பஹாவுதீன் கர்ஷஸ்ப் - சாகர் ஆளுநன், 364, 366
பஹ்லவர், 152, 156

பா

பாங்கேசன்-ராஷ்டிரகூடப் படைத் தலைவன், 254
பாஞ்சால தேவன், 280
பாடலிபுத்திரம், 134, 140
பாணர்கள், 237, 276, 278
பாணினி, 112, 126
பாண்டிக் கோவை, 36
பாண்டிய ஆதிக்கம் பரவுதல், 11
பாண்டிய கவாடம், 136
பாண்டிய மன்னர், 185, 197, 198, 200, 218, 235, 239, 245, 246, 251, 253, 255, 269, 274, 280, 305, 314, 331-339, 357, 363
பாண்டியர்-மதுரையில் முஸ்லிம் ஆட்சி, 356-363
பாதப்பன்-கிழக்குச் சாளுக்கிய அரச குமாரன், 278
பாதாமி, 6, 116, 231, 237, 374
பாதாமியின் வீழ்ச்சி, 6, 116, 231, 232, 237, 364
பாபிலோன், 129
பாமினி சுல்தான்களின் நாணயங்கள், 34
பாமினி ராஜயம்-அரசர்கள், 14, 38
பாமினிராஜ்யம்-இறுதிக்காலம், 468
பாமினி ராஜ்யம்-கட்சிப் பூசல், 408
பாமினி ராஜ்யம் - தோற்றம், 375
பாமினி ராஜ்யம் - மதிப்பீடு, 408-410
பாமினி ராஜ்யம்-விஜயநகரத்தோடு தொடர்பு, 377-381
பாமினி வரலாறு - இலக்கியச் சான்றுகள், 38-40
பாயல நம்பி-சாளுக்கியப் படைத் தலைவன், 283
பாரி, 192-194
பாரிகாஜா, 152, 157
பாலஸ்தீனம், 83, 85, 91, 93
பாலாசிகம், 177, 179
பாவரி, 112, 126
பாழி, 196
பானுதேவன்-இரண்டாம் கிழக்குக் கங்க மன்னன், 346
பாஸ்கர ரவிவர்மன்-சேரன், 314
பாஸ்கரச்சாரியர் - வானூல் வல்லுநர், 342
பாஹியான்-சீனப் பயணி, 43

பி

பிக்லிஹல்-ஆந்திரம், 85, 89
பிட்சு-பயணி, 53
பிட்டிகன்-ஹொய்சளமன்னன், 301
பிட்டேனிக்கர், 141
பிமென்டா-பயணி, 53
பிம்பிரி-கணவாய், 59
பிரச்சினோத்தர ரத்தின மாலிகா, 255
பிரபந்தங்கள்-அவற்றின்பயன், 36, 37
பிரதாப ருத்திரன்-காகதீயன், 343, 356, 359-363, 436, 440, 441
பிரதிஷ்டானம், 148
பிரமகிரி-வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் இருப்பிடம், 84, 86, 88, 90

பிரமன்-படைத் தலைவன், 311
பிரவரசேனன்-முதலாம் வாகாடகன், 173, 174, 176
பிராமி எழுத்து, 21, 22, 141
பிராமிப் பொறிப்புகள்-தென்னிந்தியாவில், 143
பிராஹுி, 100, 103
பிரித்திவி சேனன்-வாகாடகன், 174
பிரித்திவீபதி - முதலாம் மேற்குங் கங்கன், 273
பிரத்திவீபதி-இரண்டாம் மேற்குக் கங்கன், 274
பிரித்திவி வியாக்கிரன்-நிஷாதச் சிற்றரசன், 244
பிரிஹத் கதாகோசம், 135
பிரிஹத்பலாயன வமிசம், 23, 161, 162
பிரெட்ரிக் சீசர்-வெளிநாட்டுப் பயணி, 53, 463, 467
பிரோசாபாத், 384, 397
பிரோஸ் ஷா-பாமினி யரசன், 384-388
பிரோஸ் துக்ளக்-சுல்தான், 379
பில்லமன்-யாதவ மன்னன், 311, 312
பில்ஹணன்-வடமொழிப் புலவர், 300
பிளினி, 42, 158
பிஜ்ஜலன்-காலசூரித் தலைவன், 310
பிஷ்ட புரம், 234

பீ

பீம சலுக்கி-கிழக்குச் சாளுக்கிய அரச குமாரன், 250
பீமன்-முதலாம் கிழக்குச் சாளுக்கிய மன்னன், 275
பீமா நதி, 67
பீர் தூல், 357

பு

புகார், 207, 210, 218, 226
புக்கன்-முதலாம், 368, 371, 374, 380, 381, 383, 413, 416
புட், 80, 82
புட்டு உஸ்ஸலதின், 38
புதுக் கற்காலம், 84, 86
புதுக் கோட்டை, 90
புதுச்சேரி, 188, 221
புத்தமதம், 4, 5, 137, 144, 158, 162, 164, 226, 229, 231
புத்தயாங்குரன்-பல்லவ அரச குமாரன், 164
புத்தராஜன்-காலசூரி, 233
புத்தவர்மன்-பல்லவ அரச குமாரன், 164, 167
புந்தரர், 111
புந்தூர்-போர்க்களம், 290
புரி-பம்பாய் அருகில், 234
புருஷோத்தம கஜபதி, 399, 427, 429, 432
புரோலன்-முதலாம் காகதீயன், 289
புரோலன் - இரண்டாம் காகதீயன், 310
புரோலைய நாயக்கன், 367, 370
புரோலைய வேமன், 368
புர்ஜஹோம் - வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்கள் இருப்பிடம், 85, 87
புர்ஹான்-இ-மா அசிர், 39
புலிகேசன்-முதலாம் பாதாமிச் சாளுக்கியன், 29, 179, 231
புலிகேசன்-இரண்டாம் பாதாமிச் சாளுக்கியன், 28, 172, 233, 234, 236, 237, 238 256, 263, 265
புலிகேசன்—ஜெயசிம்ம வர்மனின் மகன், 241
புலிந்தர், 111
புலுமாயி-இரண்டாம் சாதவாகனன், 153
புலையர், 95
புல்லலூர்-போர்க்களம், 236
புவனைக்கபாகு-முதலாம் சிங்கள மன்னன், 339
புறநானூறு, 184, 190, 194

பூ

பூதுகன்-இரண்டாம் கங்க மன்னன், 276, 278

பூமகன்-சகமன்னன், 152
பூலர், 24
பூவிக்கிரமன், 240

பெ

பெஞ்சமின்-டியூடெலா - யூதப் பயணி, 41, 48
பெட்டன்-காகதீய அரசன், 289
பெட்வா, 79
பெண்ணுகடம்-போர்க் களம், 246
பெண்ணையாறு, 273
பெத்த கொமட் வேமன், 422
பெத்த திருமலே, 462, 463
பெத்தவேகி, 168
பெத்தவேங்கடன், 476
பெரம்பலூர்-போர்க்களம், 334
பெரிப்ளஸ், 42, 153, 188, 220, 223
பெரிஷ்டா-முஸ்லிம் வரலாற்று சிரியன், 39, 40, 377, 382, 384, 386, 405, 410, 419, 454, 458, 461, 463
பெருங்கல், 92
பெருஞ்சேரல் இரும்பொறை, 194, 195
பெருந்தேவனுர்-தமிழ்ப்புலவர், உரையாசிரியர், 185
பெரும்பேர், 89
பெருவங்கூரு - போர்க்களம், 276
பெருவளநல்லூர்-போர்க் களம், 240
பெர்சிப்போலிஸ், 103
பெல்லாரி-அகழ்வு, 85
பெனுகொண்டா, 465, 466, 467
பெஷாவர், 81

பே

பேயிஸ்-போர்ச்சுக்கீசியப் பயணி, 53, 435, 436, 484
பேராசிரியர், 123

பை

பைத்தான், 148

பொ

பொகுட்டெழினி, 195
பொத்தி, 196
பொத்தியார், 209
பொதுக்கா, 221
பொய்கையார், 203
பொலனருவா, 282, 297
பொற்களம், 90
பொன் நாணயம்-ஹூன் நாணயம், 31
பொன்னமராவதி, 331

போ

போதன், 363
போதாயனர், 113
போர்காட், 59
போர்ச்சுக்கீசியப் பயணி, 5?, 435, 436, 447, 484
போர்னியோ, 6, 24
போஜர், 141, 149, 150
போஜன்-முதலாம் குர்ஜர மன்னன், 275
போஜன்-மாளவத்து மன்னன், 285

ம

மகதம், 126
மகதை, 337
மகர நாடு, 333
மக்து மாஜ ஹூசன்-பாமினியரசி, 396
மகா கூடம், 233
மகாதேவ மலே, 88
மகாதேவன்-காகதீயன், 140
மகாதேவன்-யாதவன், 343
மகா நதி, 246
மகா நந்தி, 434
மகா வம்சம், 140
மகா ஜனம், 262
மகேந்திர மங்கலம், 334
மகேந்திரவர்மன்-முதலாம் பல்லவன், 7
மகேந்திர வர்மன்-இரண்டாம் பல்லவன், 240
மக்கள் இனங்கள்-தென்னிந்தியாவில், 94-99

மங்களூர், 429
மங்களேசன்-பாதாமிச் சாளுக்கியன், 233
மங்கி, 254
மங்கோலியர், 99
மசூதி-அரேபியப் பயணி, 46
மசூலிப்பட்டினம், 427, 473
மணிகிராமம், 341
மணிமங்கலம், 237
மணிமேகலை, 122
மண்டலம், 262
மதுகாமார்நவன் - கலிங்க மன்னன், 286
மதுரை, 13, 127, 137
மதுரைக் காஞ்சி, 200
மதுரை சுல்தானியத்தின் வீழ்ச்சி, 416
மதுரைச் சுல்தானிய நாணயங்கள், 33, 370
மதுரைச் சுல்தானியம், 416
மதுரைத் தல வரலாறு, 34
மத்த விலாசம்-வட மொழி நாடகம், 256, 264
மத்திய தரைக் கடலினத்தின் ஆதி முன்னோர், 96, 97
மத்திய தரைக் கடற்பகுதி, 91, 93
மந்திரி மண்டலம், 264
மயிலாப்பூர், 350
மயூரசர்மன் - கடம்பன், 177, 178
மரந்தை, 189
மராட்டியர், 3
மலப்பிரபா, 233
மலேசியா, 170
மலையடிக் குறிச்சி, 239
மலையமான், 194
மலையாளக் கரை, 72
மல்லிகார்ஜுன தேவர் கோயில் - பாதாமி, 237
மல்லு அடில்கான், 450
மழகொங்கம், 245
மனு, 111
மனுமசித்தி, 245
மஹிந்தன்-அசோகர் மகன், 140
மஹிந்தன் - நான்காம் லங்கை மன்னன், 281
மஹிந்தன்-ஐந்தாம் லங்கை மன்னன், 282
மஹிபாலன் - முதலாம் பிரதிஹார மன்னன், 277
மஹியாறு, 79
மஹிஷ மண்டலம், 140
மஹீ, 246, 279

மா

மாங்குடி கிழார், 200
மாதவன், 16, 417
மாதவன் - முதலாம் கங்க மன்னன், 181
மாதவன் - இரண்டாம் கங்க மன்னன், 181, 182
மாதவ வர்மன் முதலாம் விஷ்ணு குண்டின அரசன், 171
மாதவ வர்மன் - இரண்டாம் விஷ்ணு குண்டின அரசன், 171, 172
மாதாரி புத்த ஈஸ்வர சேனன், ஆபீரன், 159
மாத்திரர் - கலிங்கத்து, 170
மாந்தரஞ்சேரல் இரும்பொறை, 197
மாபார், 358, 363, 366, 370
மாமல்லபுரம், 8, 235
மாமூது - பாமினியரசன், 405
மாமூது - முதலாம் மாளவத்து மன்னன், 395
மாமூது - கவான், 396, 404, 405
மாமூலனார், 133
மாரசிம்மன்-கங்க மன்னன், 279
மார விஜய துங்கவர்மன், 284
மார்க்க போலோ - வெனிஸ் பயணி, 41, 48, 49
மாலகொண்டா, 144
மாலிக் அகமது நிஜாம் உல்முல்க், 406
மாலிக் கபூர், 339, 356, 359
மாலிக் பக்ருதீன் ஜுனா, 354
மாலிக் மக்புல், 371
மாலிக் முகமது - கம்பிலி ஆளுநன், 368
மாலிக் யாக்லாக்கி, 359
மாலிக் ஜாடா, 365

மாலிக் ஷாதுருக், 397
மாலிக் ஹசன், 399
மாவளத்தான், 202
மாளவிகாக்னிமித்திரம், 150
மாறவர்ம அவனி சூளாமணி - பாண்டியன், 239
மாறவர்ம குலசேகரன் - பாண்டியன், 338, 339
மாறவர்ம சுந்தர பாண்டியன் - 331, 333, 334
மாறவர்ம சுந்தரபாண்டியன்- இரண்டாம், 335
மாறவர்ம இராஜசிம்மன்-முதலாம் பாண்டியன், 244
மாறவர்ம இராஜசிம்மன், இரண்டாம் பாண்டியன், 274
மானபூஷணன், 432
மானவர்மன் - சிங்கள அரச குமாரன், 237
மானிய கேட்டா (மால்கெத்) 6
மானுவேல் பராடாஸ் - போர்ச்சுக்கீசியப் பயணி, 53
மாஸ்கி, 22, 85

மி

மித்திர போஜன் - குர்ஜரன், 254
மிரிகேசவர்மன், கடம்பன், 178, 179
மிரினலவதி, 282
மிர்சாப்பூர், 79
மின்னகரம், 152

மு

முகமது குலி குதுப்ஷா, 469
முகமது - முதலாம் பாமினி யரசன், 378, 382, 414
முகமது - இரண்டாம் பாமினி யரசன், 383, 415
முகமது - மூன்றும் பாமினி யரசன், 397, 400, 401, 405
முகமது பின் துக்ளக், 363, 369, 370, 375, 376
முசிறி - துறைமுகம், 207, 220
முஞ்சன் - மாளவத்து, 282
முடிகொண்ட சோழபுரம், 333
முடுகல், 368, 424
முடுகூர்-337
முண்டா மொழிகள், 100
முதுதன், 261
முத்தரையர், 272
முபாரக் கில்ஜி, 359
முப்பிடி நாயக்கன், 360
முரஹரிராவ், 468
முருகன் - தெய்வம், 93, 226
முஜாஹிது - பாமினி யரசன், 383, 414
முஸ்லிம் வரலாற்ருசிரியர்கள், 38, 39

மூ

மூட்டிபர், 111

மெ

மெகஸ்தனிஸ், 42, 136

மே

மேற்குக் கடற்கரை, 72, 74
மேற்குத் தொடர்ச்சி மலை, 57, 60

மை

மைசூர் அகழ்வுகள், 86

மொ

மொகஞ்சோதாரோ, 96

மோ

மோகூர், 142, 190
மோரியர், 142

மௌ

மௌரியப் பேரரசு, 22, 142, 147
மௌரியர், 22, 133, 134
மௌரியர்-கொங்கணத்து, 234
மௌரியர்-தென்னிந்தியப் படையெடுப்பு, 143

ய

யசகர்ணதேவன், 297
யசோதர்மன், 176

யவனர், 152, 156, 187, 207, 218, 220
யனமடலம் - கோட்டை, 283

**யா**

யாக்ஞவல்கியர், 12, 488
யாச்சம நாயுடு, 470, 471, 473, 475
யாதவ மன்னர், 11, 12, 296, 311, 341, 342, 343, 345, 354, 358

**யு**

யுவான் சுவான், 228, 238

**யூ**

யூசுப் அடில்கான், 399, 405, 407, 431, 433, 438

**யோ**

யோனதம்மரகிதர், 140

**ர**

ரகசியாதிகிரித்தம், 263
ரங்கபடாகா - பல்லவ அரசி, 266
ரங்பூர், 83, 89
ரட்சசி தங்கடி - போர், 454, 457, 462
ரணதீர பாண்டியன், 244
ரவிவர்ம குலசேகரன் - சேரன், 340, 360
ரவிவர்மன் - கடம்பன், 178, 179
ரஜூலமந்தகிரி, 22

**ரா**

ராசமல்லன் - முதலாம் கங்கன், 253, 278
ராதிகர், 141, 149, 150
ராமச்சந்திரன் - விஜயநகரம், 421
ராமச்சந்திரன் - யாதவன், 343
ராமதேவன் - யாதவன், 354 - 356, 364
ராமதேவராயன், விஜயநகரம், 475 - 476
ராமநாதன் - ஹொய்சாளன், 338 - 340, 343
ராமப்பையன் அம்மானை, 35
ராமராயன் - விஜயநகர், 443, 448 - 451, 453 - 463
ராமேஸ்வரம், 434
ராயக்கோட்டைச் செப்பேடுகள், 243
ராயச்சூர், 140, 284, 286, 346, 368, 394, 424, 431, 438, 442, 449
ராயல்சீமை, 228, 231
ராய்கார், 89
ராஜகொண்ட, 371, 420, 425
ராஜசிம்மன் - பல்லவன், 241, 242, 266
ராஜசிம்மன் - முதலாம் பாண்டியன், 245
ராஜசிராவிதம், 264
ராஜமகேந்திரன் - சோழ அரசகுமாரன், 292
ராஜராஜ சோடகங்கன், 299
ராஜராஜ சோழன்-முதலாம், 9, 26, 281 - 283, 298, 314, 315
ராஜராஜசோழன்-இரண்டாம், 304, 306
ராஜராஜசோழன் - மூன்றும், 28, 331 - 335, 346
ராஜராஜ மும்முடிச் சோழன், 299
ராஜராஜன் கங்கன், 293
ராஜாதித்தியன் - சோழ அரசகுமாரன், 276, 278
ராஜாதிராஜ சோழ - முதலாம், 285, 288 - 291
ராஜாதிராஜ சோழன் - இரண்டாம், 304, 307, 313
ராஜூல மந்தகிரி, 22
ராஜேந்திர சோழன்-முதலாம், 9, 271, 275, 284, 298
ராஜேந்திர சோழன் - இரண்டாம், 291, 292
ராஜேந்திர சோழன்-மூன்றும், 335, 338
ராஷ்டிரகூட மன்னர்கள் 6 - 8, 270, 279, 281
ராஷ்டிரகூட வரலாறு-இலக்கியச் சான்றுகள், 37

ரி

ரிஷபதத்தன் - சகமன்னன், 155

ரு

ருத்திர சாதகர்ணி - சாதவாகனன், 154
ருத்திர சேனன் - முதலாம் வாகாடகன், 174
ருத்திர சேனன் - இரண்டாம் 174
ருத்திர தாமன் - சகமன்னன், 153
ருத்திரப் புருஷதத்தன் - இச்சுவாகு மன்னன், 161
ருத்திரன் - காகதீயன், 312
ருத்திராச்சாரியார், 29
ருத்திராம்பாள் - காகதீய அரசி, 343, 344, 345, 350
ருஸ்தம்கான், 469

ரே

ரேநாடு, 7
ரேவதித்தீவு, 233
ரேவா, 80, 88
ரேவா - ராஷ்டிரகூட அரசகுமாரி, 246

ரோ

ரோமானியப் பேரரசு, 5, 222
ரோமானிய நாணயங்கள், 32, 222, 223

ல

லங்கை, 4, 8, 22, 43, 44, 113, 127, 133, 140, 187, 223, 235, 238, 247, 250, 339, 418, 423
லங்கை அரசர்கள், 187, 237, 238, 247, 253, 275, 281, 282, 285, 294, 297, 298, 305, 308, 337, 339
லங்கைகள், 66
லட்சுமீதரன்-தேவராயன், 421

லா

லாங்நாஜ், 82, 83
லாட்டா, 6, 238, 250, 253, 285

லி

லிங்கமநாய்க்கன், 471

லெ

லெயிடன் பட்டயம், 25

லை

லைசியர், 102

லோ

லோக விபாகம்-சமண நூல், 165
லோத்தால்-குஜராத்தில், 89, 95
லோபா முத்திரை, 114, 118

வ

வக்கிரிகலா, 295, 298
வசிட்ட கோதாவரி, 66
வஞ்சி, 196, 204
வட்டெழுத்து, 25
வத்சராஜன் - குர்ஜர மன்னன், 249
வத்நகர் - வரலாற்றுக்கு முற்பட்ட காலமக்கள் இருப்பிடம், 94
வம்ப மோரியர், 142
வரகுண பாண்டியன்-முதலாம், 246, 247
வரகுண வர்மன் - இரண்டாம் பாண்டியன், 253, 272, 273
வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியிருப்புகள் - தென்னிந்தியாவில் அகழப்பட்டவை, 88, 94
வராகன் - நாணயம், 31
வர்த்தெமா - இத்தாலியப் பயணி, 52, 434
வலி உல்லா - பாமினியரசன், 408
வல்லாளன் - முதலாம் ஹொய்சள அரசன், 301
வல்லாளன், இரண்டாம் ஹொய்சள அரசன், 308, 312, 331, 341, 351
வல்லாளன் - மூன்றும் ஹொய்சள அரசன், 340, 344, 351, 356, 358, 365, 374

வல்லாளன் - நான்காம் ஹொய்சள அரசன், 351, 374
வல்லே டெல்லா - இத்தாலியப் பயணி, 53
வஜ்ரஹஸ்தன்-மூன்றும், கிழக்குக் கங்கன், 292

வா

வாகாடகர் போர், 5, 173, 177
வாகைப் பறந்தலை - போர்க்களம், 198
வாசித்தீ புத்த ஸ்ரீ சாந்த மூலன் - இச்சுவாகு மன்னன், 160
வாதாபி கொண்டான், 237
வாதாபி-புராணக் கதை, 105, 115
வாரங்கல், 354, 359, 361, 363

வி

விக்கிரம சோழன், 299, 302, 303
விக்கிரம பாகு - முதலாம்-சிங்கள மன்னன், 285, 288
விக்கிரம பாண்டியன், 308
விக்கிரமாங்கதேவ சரிதம், 37
விக்கிரமாதித்தியன்-உஜ்ஜைனி, 152
விக்கிரமாதித்தியன் - முதலாம் பாதாமிச் சாளுக்கியன், 239, 256, 263, 265
விக்கிரமாதித்தியன் - இரண்டாம் பாதாமிச் சாளுக்கியன், 241, 256
விக்கிரமாதித்தியன்-ஐந்தாம் மேற்குச் சாளுக்கியன், 285
விக்கிரமாதித்தியன் - ஆறும் மேற்குச் சாளுக்கியன், 11, 294, 300, 303, 309, 315
விக்கிரமேந்திரன், 171
விக்ஞானேஸ்வரன், 300
விச்சி, 196
விட்டலன், விஜயநகரப் படைத் தலைவன், 456
விட்டலராயன், 457
விதிசா, 150
வித்தியா நகரம், 372
வித்தியாரணியர், 369-371
விநாயக தேவன், 379
விந்திய சக்தி, வாகாடகன், 286
வியலூர், 190
விருத்தி பல்லவாதி ராஜன்-பல்லவ அரசகுமாரன், 242
விரூபாட்ச வல்லாளன் - நான்காம், 374
விரூபாட்சன்-முதலாம், 418
விரூபாட்சன்-இரண்டாம், 427-429
விழிஞம்-போர்க்களம், 247, 298
வினயாதித்தியன்-பாதாமிச் சாளுக்கியன், 240
வினயாதித்தியன் - ஹொய்சாளன், 296
விஜயநகர அரசர்கள், 368, 393, 400, 407, 417
விஜயநகர அரசர் ஆட்சியில் கிராமத் தன்னாட்சி, 17
விஜயநகர அரசின் காலத்தில் இந்து சமுதாயம், 15
விஜயநகர அரசின் முன்னேற்றம், 369
விஜயநகர நாணயங்கள், 33
விஜயநகர வரலாறு-இலக்கியச் சான்றுகள், 37
விஜயநகரத்தின் தொடக்க வளர்ச்சி, 374
விஜயநகர், 1, 14, 15, 374, 375, 413, 417, 419, 428, 430, 443, 444
விஜயநகர் நிறுவப்படுதல், 374
விஜயபாகு - முதலாம் - சிங்கள மன்னன், 295, 297, 298
விஜயபுரம், 157
விஜயராகதேவன் - சேரன், 313
விஜயராயன்-முதலாம் விஜயநகர மன்னன், 388
விஜயன்-சாதவாகனன், 154
விஜயாதித்தியன்-பாதாமிச் சாளுக்கியன், 241
விஜயாதித்தியன் முதலாம் கிழக்குச் சாளுக்கியன், 248
விஜயாதித்தியன் இரண்டாம் கிழக்குச் சாளுக்கியன், 250, 253

விஜயாதித்தியன்-ஏழாம்சாளுக்கியன், 289, 292
விஜயாதித்தியன் - தொடக்க வளர்ச்சி, 374
விஜயாலய சோழன், 8, 272, 273
விஜிகிஷு, 259
விஷ்ணு குண்டின அரசர்கள், 171, 172, 235, 236, 257
விஷ்ணு கோபன்-பல்லவன், 165, 167
விஷ்ணு வர்த்தன விஜயாதித்தியன் - ஏழாம் கிழக்குச் சாளுக்கியன், 289
விஷ்ணு வர்த்தனன்-பாதாமிச் சாளுக்கியன், 234, 236
விஷ்ணு வர்த்தனன் - நான்காம் கிழக்குச் சாளுக்கியன், 249, 250
விஷ்ணு வர்த்தனன் - ஹொய்சாளன், 301, 302, 309
விஷ்ணு வர்மன்-கடம்பன், 179
விஸ்வநாதன் - ஹொய்சாளன், 340
விஸ்வநாத நாய்க்கன், 452
விஸ்மாத்திரர், 111

வீ

வீங்காவல்லி-போர்க்களம், 254
வீசனன், 342
வீர கூர்ச்சன்-பல்லவன், 163
வீரக்கல், 207
வீர சோடன், 299
வீரதவளபட்டணம், 360
வீரபாண்டியன், 280, 306, 339, 357
வீரபுரி சதாத்தன் - இச்சுவாகு, 161
வீரப் பெருமாள் - சிங்கள மன்னன், 399
வீரமாதேவி-சோழ அரசகுமாரி, 277
வீரரவி உதயமார்த்தாண்ட வர்மன்-சேரன், 336
வீரராகவ சக்கரவர்த்தி, 341
வீர ராஜேந்திர சோழன், 27, 292-295

வெ

வெண்ணி-போர்க்களம், 198
வெண்பி-போர்க்களம், 245
வெலமர், 371, 420, 425, 426
வெலனுன்டிச் சோடன், 303, 344
வெளிநாட்டுப் பயணிகள்-அரேபியர், 46, 47
வெளிநாட்டுப் பயணிகள்-ஐரோப்பியர், 48, 50
வெளிநாட்டுப்பயணிகள்-சீனர், 43, 46
வெளிநாட்டுப் பயணிகள்-ரோமானியர், 42, 43
வெள்ளூர்-போர்க்களம், 275

வே

வேங்கடன், முதலாம், 453
வேங்கடன், இரண்டாம், 468-472
வேங்கி, 231, 248, 250, 254, 271, 276, 277, 283, 284, 286, 289
வேங்கிச் சாளுக்கியர், 7, 10, 168, 231, 250, 254, 271, 275, 277, 283, 284, 286, 288-297
வேணாடு, 247, 307
வேதாந்த கல்பதரு, 343
வேலூர்ப் பாளையம், 163
வேள்விக்குடி, 200

வை

வைகுந்தப் பெருமாள் கோயில், 243
வைடூரியம், 43
வைதும்பர், 276, 278, 283
வைஜயந்தி-பனவாசி, 157, 177

ஜ

ஜடாசோட பீமன்-தெலுங்குச் சோடச் சிற்றரசன், 283
ஜடாவர்ம குலசேகரன்-பாண்டியன், 308, 331
ஜடாவர்ம சுந்தரபாண்டியன், 336, 339, 345

ஜடில பராந்தக நெடுஞ்சடையன்-பாண்டியன், 246
ஜதிங்கராமேஸ்வரம், 21
ஜமல் காரி, 81
ஜமாலுதீன் ஹூசேனி-முஸ்லிம் புனிதர், 387
ஜம்செட், 459
ஜம்புலிமடகு, 470
ஜயதுகி-யாதவ மன்னன், 312, 341, 342
ஜலால் உதீன் கில்ஜி, 353, 354
ஜலால் உதீன் ஹசன் ஷா, 370, 373
ஜலால்கான், 396
ஜனநாதன், 292
ஜஞசிரயன், 172

ஜா

ஜாபர்கான் – பஹமனி ராஜ்யத்தை நிறுவியவன், 376
ஜாமரின்-கள்ளிக் கோட்டை, 423, 452
ஜாவா, 6, 24, 131
ஜான்சி, 79
ஜாஜநகர், 346, 363

ஜெ

ஜெகதகமல்லன்-இரண்டாம் மேற்குச் சாளுக்கிய மன்னன், 309
ஜெகதகமல்லன்-மூன்றும் மேற்குச் சாளுக்கிய மன்னன், 310
ஜெகதிபாலன், 288
ஜெயகேசி - இரண்டாம் கடம்ப மன்னன், 296, 311
ஜெயசிம்மன் - இரண்டாம் மேற்குச் சாளுக்கியன், 285, 286
ஜெயசிம்மன் மூன்றும் மேற்குச் சாளுக்கியன்
ஜெயசிம்ம வர்மன்-பாதாமிச் சாளுக்கிய இளவரசன், 238, 421
ஜெயநந்தி வர்மன்-பாணச் சிற்றரசன், 246
ஜெயந்த வர்மன் - பாண்டியன், 239
ஜெயபல்லவாதிராஜன் - பல்லவ அரசகுமாரன், 242
ஜெயவர்மன்-பரிஹத் பலாயன கோத்திர மன்னன், 562

ஜொ

ஜொய்னர், 82, 85

ஜோ

ஜோவோ டி காஸ்டிரோ, 456

ஜௌ

ஜௌகடா, 140
ஜௌஹர்-அபிசீனிய அடிமை 403

ஹ

ஹபீஸ்-பாரசீகம், 383
ஹமிர், 400, 401
ஹம்பர், 399, 426
ஹரப்பாலதேவன் - யாதவ அரசன், 359
ஹரப்பா காலம், 83, 88
ஹரிசேனன், 135
ஹரிசேனன்-வாகாடக அரசன், 176
ஹரிவர்மன்-கடம்ப மன்னன், 179, 180
ஹரிஹரன் - முதலாம் விஜயநகர மன்னன், 371, 372, 377, 414, 416
ஹரிஹரன்-இரண்டாம் விஜயநகர மன்னன், 384, 386, 417, 418,
ஹர்ஷீயகன்-பரமார மன்னன், 279
ஹர்ஷ தேவன்-சந்தல மன்னன், 277
ஹர்ஷவர்த்தனன், 6
ஹர்ஷன், 234
ஹஸ்தி போஜன், 176
ஹஸ்திவர்மன் - சாலங்காயன மன்னன், 168, 169

ஹா

ஹாசன் கங்கு, 376

ஹாசன் கான்-பாமினி அரச குமாரன், 386
ஹாசன் கான்-பாமினி அரச குமாரன், 387, 396
ஹாத்தி - கும்பாப் பொறிப்பு, 142
ஹாலன்-சாதவாகன மன்னன், 150

ஹி

ஹிப்பாலஸ்-எகிப்திய மாலுமி, 221

ஹு

ஹுசேன் நைஜாம்ஷா, 458
ஹுமாயூன் - பாமினி, 396, 397
ஹுன், பொன் நாணயம், 22
ஹுஷங்ஷா-மாளவத்து, 390

ஹெ

ஹெராக்லிஸ், 42, 113, 136

ஹே

ஹேமாத்திரி - யாதவ அமைச்சன், 343

ஹை

ஹைமண்டார்ப், 100, 105, 106

ஹொ

ஹொய்சாள அரசர்கள், 11, 12, 296, 301, 302, 309, 311, 312, 330, 338, 339, 345, 356, 364
ஹொய்சாளர்கள்-துவார சமுத்திரத்து முஸ்லிம்களிடம் தோல்வி, 364, 365
ஹொ சதுர்க்கம் - கோட்டை, 359, 365

க்ஷ

க்ஷம்சுதீன்-கலகத் தலைவன், 360
க்ஷம்சுதீன்-தாஹுத் - பாமினியரசன், 284
க்ஷாநாமா, 28, 292

ஸ்

ஸ்கந்த சிஷ்யன்-பல்லவன், 164
ஸ்கந்த வர்மன்-சாலங்காயனன், 169
ஸ்கந்தவர்மன் - பல்லவன், 163, 164, 181
ஸ்ட்ராபோ, 42, 188
ஸ்தம்பபுரி, 254
ஸ்தல புராணங்கள், 25

ஸ்ரீ

ஸ்ரீ சந்திரன் -சாதவாகனன், 154
ஸ்ரீ சாதகர்ணி-சாதவாகனன், 149, 150
ஸ்ரீசைலம், 246, 271, 434
ஸ்ரீ பவனம், 250
ஸ்ரீ புருஷன், 245, 249
ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன்- பாண்டியன், 247, 251, 253, 265
ஸ்ரீ யக்ஞ சாதகர்ணி-சாதவாகனன், 153, 154
ஸ்ரீ வல்லபன்-கொடை, 314
ஸ்ரீ வல்லபன்-சிங்கள மன்னன், 206
ஸ்ரீ விஜயம்-பேரரசு, 9

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 16 | கொண்டிருந்தால், | கொண்டிருந்ததால் |
| 11 | 23 | வட பகுதில் | வட பகுதியில் |
| 14 | 8 | மத வெறியிலும் | மது வெறியிலும் |
| 15 | 8 | படைத் திறமையும் | படை திறமையும் |
| 15 | 32 | ஏசு | ஏசு சங்கப் |
| 18 | 24 | இப்போது செய்திகளைப் | இப்போது ஆரியர்க்குப் புறம்பான செய்திகளைப் |
| 21 | 23 | அளவிலே | அளவிலேயே |
| 35 | 37 | ஒருகிணைந்ததன் | ஒருங்கிணைந்ததன் |
| 41 | 2 | இந்து முஸ்லிம் | இந்தோ முஸ்லிம் |
| 44 | 32 | குறிப்புகளிற் காணும் | குறிப்புகளில் அவருடைய |
| 45 | 34 | படையெடுப்புக்காக | இத்தொடர் தேவையில்லை |
| 49 | 33 | பெருந்தன்மையானமை | பெருந்தன்மையானவை |
| 52 | 25 | பிரான்ஸிஸ் கோ | பிரான்ஸிஸ்கோ |
| 53 | 6 | ஏறக்குறைய (1520–22) | (ஏறக்குறைய 1520-22) |
| 53 | 7 | குறிப்புகளும் | குறிப்புகள் |
| 53 | 9 | குறிப்புகளும் | குறிப்புகள் |
| 53 | 18 | பிட்ச்சும் | பிட்சும் |

| | | | |
|---|---|---|---|
| 53 | 22 | வின்ஸ்சோட்டலும் | வின்ஸ் சோட்டனும் |
| 53 | 22 | ஆகியோர் | இச்சொல் தேவையில்லை |
| 53 | 29 | ஷோராவும் | ஷோரரும் |
| 53 | 30 | ஆகியவர்களும் | இச்சொல் தேவையில்லை |
| 54 | 15 | கடிதங்களில் | கடிதங்கள் |
| 55 | 17 | மெய்க்கல் | மைக்கல் |
| 56 | 20 | ஆயிரல் | ஆயிர |
| 59 | 8 | திரிம்பக் | திரிம்பகக் |
| 72 | 3 | தொடக்க நாள் | தொடக்கக் |
| 74 | 19 | கூடலூரையும் | கடலூரையும் |
| 76 | 11 | வெட்ப | வெப்ப |
| 79 | 18 | வெட்டுக் கத்தி | வெட்டு கத்தி |
| 80 | 1 | இருந்ததோ | இருந்ததா |
| 80 | 7 | லெவலாய்சியின் | லெவலாய்சியன் |
| 84 | 26 | கற்கருவி காலத்திலிருந்து | கற்கருவிக் காலத்திலிருந்து |
| 85 | 23 | படிகக் கற்பாறை | படிக்கற்பாரை |
| 85 | 39 | நுண் கருவிகளையும் | நுண் கற்கருவிகளையும் |
| 86 | 36 | படிகக் | படிக் |
| 87 | 34 | பொருள்களான | பொருள்களாலான |
| 94 | 32 | நீக்ரோக்களினும் | நீக்ரோக்களுள் |
| 96 | 22 | மத்தி தரைக்கடல் | மத்திய தரைக்கடல் |
| 102 | 32 | டோமியாவிலும் | டேமியாவிலும் |
| 112 | 28 | இதனல் | இச்சொல் தேவையில்லை |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 113 | 11 | கௌடியர் | கௌடில்யர் |
| 114 | 25 | மனிதனுகவே | மனிதராகவே |
| 115 | 5 | அகத்தியரும் | அகத்தியர் |
| 123 | 37 | வலிமையாக | வலிமையாக வேரூன்றி விட்டதால் அந்தக் கருத்தை மறுப்பதற்கு மாருக |
| 125 | 24 | இறந்திருப்பதற்கும் | வளர்ந்ததற்கும் |
| 125 | 28 | கிளப்பியதும் | கிளம்பியதும் |
| 126 | 33 | திசையா | திசையாய் |
| 127 | 27 | வடக்கிற்கு | வழக்கிற்கு |
| 128 | 15 | அரசனேடு | அரசன். அவனேடு |
| 128 | 36 | நறுமன | நறுமண |
| 134 | 17 | சமய மரபு செய்திகள் | சமய மரபுவழிச் செய்திகள் |
| 145 | 12 | ஒன்று, இரட்டுவதே | ஒன்று, ஒற்று இரட்டுவதே |
| 148 | 22 | ஆட்சியைப் பற்றித் | ஆட்சியையும் பற்றித் |
| 150 | 21 | பெருஞ்சேனைய | பெருஞ்சேனையை |
| 152 | 27-28 | (ஏறக்குறையக் கி. பி. 80-104) | இத்தொடர் தேவையில்லை |
| 153 | 19 | சந்த வாகன | சாதவாகன |
| 157 | 16 | கல்யாணி, | கல்யாணி. |
| 157 | 24 | இருந்தார்கள். | இருந்தார். |
| 161 | 33 | அந்தக் காலத்தில் | ஆனல், அந்தக் காலத்தில் |
| 173 | 6 | பத்தில் | சத்தில் |

| | | | |
|---|---|---|---|
| 176 | 17 | சுமார் (480–515) | (சுமார் 480-515) |
| 176 | 11 | தம் | தன் |
| 183 | 17 | பொருள்களைத் | பொருளைத் |
| 189 | 6 | பாசறையிலே | பாசறையிலேயே |
| 189 | 21 | சேரன் | சேரல் |
| 191 | 23 | கௌடியல்யர் | கௌடில்யர் |
| 193 | 15 | கொடுக்கிலாதனைப் | கொடுக்கிலாதானைப் |
| 198 | 24 | சாய்ந்து விட்டான் | சாய்த்து விட்டான் |
| 205 | 6 | கொடுத்தக் கதையும் | கொடுத்த கதையும் |
| 215 | 19 | அந்த காலத்து | அந்தக் காலத்து |
| 215 | 28 | புலவன் | புரவலன் |
| 215 | 36 | தங்கியவர்களாக இல்லை | தங்கியதில்லை |
| 217 | 4 | எந்தெந்தச் சந்தத்திலும் | எந்தெந்த இடத்திலும் |
| 217 | 24 | கழுங்கும் | கழுஞ்சும் |
| 218 | 36 | தீக் குறிப்பைப் | தீக் குறியைப் |
| 222 | 8 | எப்போதும் | எப்போது |
| 222 | 36 | ஆச்சுமைட்டுகள் | ஆக்சுமைட்டுகள் |
| 223 | 6 | வாணிகம்......மிக | வாணிகம் அவ்வளவு விரிவானதன்று. அதற்கு முற்பட்ட காலத்தில் இந்தியாவுக்கும் ரோமுவுக்கும் நடைபெற்ற வாணிகம் மிக |
| 223 | 16 | வாணிகம் | வாணிகம், |
| 231 | 21 | ராயல்சீமா | ராயலசீமா |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 238 | 1 | வழியிலேயே முயன்ருர்கள் | வழியிலேயே செல்ல முயன்ருர்கள் |
| 239 | 15 | வலிமைப் பெற; | வலிமை பெற |
| 250 | 10 | சந்திகுப்தனேடும் | சந்திரகுப்தனேடும் |
| 259 | 5-6 | ஐயவோல், ஐந்நூறு | ஐயவோல் ஐந்நூறு |
| 265 | 21 | உரிமைப் பெற்ற | உரிமை பெற்ற |
| 270 | 7 | தர்க்கன் | கர்க்கன் |
| 270 | 10 | தைவன் | தைலன் |
| 273 | 18 | மோதின | மோதின. |
| 284 | 35 | அரசர்களுக்குள் | அரசுகளுக்குள் |
| 286 | 28-30 | அதன்பின் அந்தப் படை விஜயாதித்தனைப் பல சண்டைகளில் தோல்வியுறச் செய்து, நாட்டைப் பிடித்து, ராஜராஜனுக்குக் கொடுத்து விட்டது. | இந்த வாக்கியம் தேவையில்லை |
| 294 | 27 | ஆளும் | ஆரும் |
| 299 | 6 | தூது குழு | தூதுக்குழு |
| 303 | 5 | நெருங்கிணைந்து | ஒருங்கிணைந்து |
| 306 | 31 | இல்லாமல் | இயலாமல் |
| 310 | 4 | கால சூரியத் | கால சூரித் |
| 310 | 8 | அப்போதிருந்த | அப்போதிருந்து |
| 312 | 27 | ஆண்டுகளாகப் பல்லவனை | ஆண்டுகளாக வல்லாளனை |
| 313 | 21 | காகதிய தலைநகர் | காகதீயத் தலைநகர் |

| | | | |
|---|---|---|---|
| 320 | 17/18 | வருமானத்தில்......பொது | வருமானத்தில் இடம்பெற்றது. இவ்வாறு குடிமக்கள் அனைவரும் செலுத்திய பொது |
| 320 | 18 | குறிப்பிட்ட......சில | குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தாங்கள் மேற்கொண்ட குறிப்பிட்ட சில |
| 330 | 3 | ஆட்கொண்டது. | ஆட்டங்கண்டது |
| 333 | 21 | சிறைபட்டாள் | சிறைப் பட்டாள் |
| 341 | 23 | வரலாறு | வரலாற்றுச் செய்திகள் |
| 357 | 23 | மின்னும் | பின்னும் |
| 359 | 15 | ஆனால், அரியணையேறிய | ஆனால், அவன் அரியணையேறிய |
| 363 | 5 | அவையெல்லாவற்றையும் | அந் நிகழ்ச்சிகளுள் எதனையும் |
| 367 | 13 | செல்வாக்கு | செல்வாக்குக்கு |
| 368 | 29 | வரிச் | வரி |
| 372 | 9 | ஹரிஹரனையும் | ஹரிஹரனும் |
| 373 | 11 | உடாஜி | உதாஜி |
| 376 | 37 | பஹமர் | பஹமன் |
| 389 | 10 | பார்ப்பனக் கலைஞர் | பார்ப்பன இளைஞர் |
| 390 | 37 | தட்ப வெட்ப | தட்ப வெப்ப |
| 394 | 14 | வெற்றிப் பெற்றார்கள் | வெற்றி பெற்றார்கள். |
| 395 | 21 | அடிப்பட்டதால் | அடிபட்டதால் |
| 396 | 38 | துன்பம் நீக்கப் | துன்ப நீக்கம் |
| 398 | 2 | அவன் | அவள் |
| 398 | 3 | கொடுத்தான் | கொடுத்தாள். |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 398 | 3 | அவள் | அவன் |
| 398 | 5 | மேற்கொண்டாள். | மேற்கொண்டான். |
| 400 | 1 | 1742 | 1472 |
| 401 | 7 | தெலுங்கானாவில் | தெலிங்கானாவில் |
| 401 | 17 | வுக்குச் | வுக்கும் |
| 401 | 33 | பாமினியப் | பாமினிப் |
| 406 | 33 | நிஜாமுல்கோடு | நிஜாமுல் முல்கோடு |
| 416 | 30 | ரங்கநாதனுடைய | ரங்கநாதருடைய |
| 420 | 22 | பங்கலைப் பற்றிப் | பங்கலைக் கைப்பற்றிப் |
| 421 | 6 | ஆட்சியில் | ஆட்சியின் |
| 421 | 38 | தொடங்குவான் | தொடங்குவான்.' |
| 422 | 6 | விஜயன் | இச்சொல் தேவையில்லை |
| 424 | 29 | மீது | மீதும் |
| 425 | 2 | என்னிடம் | தன்னிடம் |
| 425 | 18 | வெகு விரைவில் | ஆனால், வெகு விரைவில் |
| 426 | 17 | தென் மாகாணங்களுட்பட்ட | தென் மாகாணங்களில் |
| 428 | 7 | அவர் | அவன் |
| 428 | 8 | (பிரவுத தேவராயன்) | பிரபுட தேவராயன் |
| 432 | 19 | ஹயூண | ஹியூண |
| 433 | 18 | நிலைமை | நிலைமையை |
| 433 | 20 | ஆண்டுக் காலம் | ஆறு ஆண்டுக் காலம் |

| | | | |
|---|---|---|---|
| 434 | 21 | தன் மக்களுடைய | தன் குடிமக்களுடைய |
| 436 | 8 | நட்பும் நயமுடைய | நட்பு நயமுடைய |
| 436 | 28 | அரசுகளோடு | அரசுகளோடு' |
| 437 | 19 | கோல்கொண்டா | கோவில் கொண்டா |
| 437 | 20 | தம் | தன் |
| 441 | 1 | தரமான | தாராளமான |
| 446 | 30 | அந்தப் | எந்தப் |
| 450 | 31 | போன போது | அதனால் |
| 452 | 30 | சாளுவ வீர நசிம்மன், திருவடி | சாளுவ வீரநரசிம்மன் திருவடி |
| 455 | 32 | நாட்டுவதற்காக | நிலை நாட்டுவதற்காக |
| 458 | 16 | கூட்டுப் பிணைய ஒப்பந்தம் | 'கூட்டுப் பிணைய ஒப்பந்தம்' |
| 459 | 5 | விருப்பமில்லாமலேயே | விருப்பமில்லாமலே |
| 459 | 30 | சகோதரர் | சகோதரன் |
| 460 | 16-17 | ஏற்பட்டிருந்தன. | ஏற்பட்டிருந்தது. |
| 467 | 4 | பணிவணக்கமான | பணி விணக்கமான |
| 469 | 8 | அலி | குலி |
| 472 | 27 | தெக்ணபட்டினத்தில் | தெக்ஞபட்டினத்தில் |
| 479 | 32 | விடுதலைக் கிடைத்தது. | விடுதலை கிடைத்தது. |
| 481 | 11 | வேலூரில் | பெல்லூரில் |
| 487 | 19 | இந்துக்களுக்கு | இந்துக்களுக்கும் |
| 492 | 6 | Esurpation | Vsurpation |
| 492 | 15 | Hourdah | Howdah |
| 493 | 29 | Antthrodology | Anthropology |
| 494 | 14 | Gavelin | Javelin |
| 496 | 2 | பில்லா | யில்லா |

215451